# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறுவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978, மார்ச் 27, 28, 29, 30, 31, மற்றும் ஏப்ரல் 1

(தொகுதி XVII—எண்கள் 1 முதல் 6 வரை)

©
தமிழ்நாடு அரசு
1979

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 1]

SD
1211,31 N78
N79.17
122123

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

(தொகுதி XVII—எண்கள் 1 முதல் 6 வரை.)

## உள்ளடக்கம்

### திங்கட்கிழமை, 1978 மார்ச் 27.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. | v |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் .. | vi—xiv |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—43 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 43—67 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் வண்டியில் தமிழில் செய்தி அறிவிக்கப் படுவது குறித்து .. .. | 67 |
| (ஆ) மருத்துவத் துறை பற்றிய வினாக்கள் எடுத்துக்கொள்ளப் படாதது குறித்து .. | 68 |

பக்கங்கள்

## திங்கட்கிழமை, 1978 மார்ச் 27—தொடர்ச்சி.


3. கவன ஈர்ப்பு—

திருமருதல், நன்னிலம் ஒன்றியங்களில் அமைக்கப்பெற்ற மக்கள் குழுவில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் அளிக்கப்படாமை குறித்தும், நன்னிலம் ஒன்றியக் குழுவில் முன்னாள் ஒன்றியத் தலைவருக்கு இடம் அளிக்கப் படாதது குறித்தும் .. .. 69—72

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு .. 72

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு. 73

5. அறிவிப்பு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவு .. 73

6. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும், .. .. .. 73—182

(அ) கோரிக்கை எண் 21—மீனளம்

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்.

(இ) கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 182—183




பக்கங்கள்

## செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 28


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 247—285

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து .. .. .. 285—286

(ஆ) பேரவைத் தலைவர் அவைக்கு வருகை தராதது குறித்து .. 286

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

மத்திய அரசு சிவில் விமானப் போக்கு வரத்து இலாகாவில் அலுவல்கள் இந்தியில் நடைபெற வேண்டும் என்று கூறப்படுவதும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து .. 287—295

4. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர் திரு. ர. ஜெபமணி வெளியில் தாக்கப்பட்டதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி குறித்தும், அவருக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பது குறித்தும் .. 295

(ஆ) கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம் குறித்து அரசு அறிக்கை அளிப்பது குறித்து .. .. .. 299

5. கவன ஈர்ப்புகள்—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, விருகாவூர் மற்றும் சுற்றிய கிராமங்களில் கோமுகி நதியில் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராததால், விவசாயிகள் பாதிப்பு குறித்து .. 296

பக்கங்கள்

## செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 28—தொடர்ச்சி.


கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) குடியாத்தம் நகரில், போதுமான அளவு மின்சாரம் இல்லாமையால், இரண்டு பஞ்சாலைகளும் சில தொழில்களும், சரிவர நடக்காததால் 'லே—ஆப்' வாங்கும் நிலை இருப்பதால், தொழிலாளர் பாதிப்பு குறித்து. 297—298

6. அறிக்கை அளித்தல்—

சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது, இரண்டாவது அறிக்கைகள் அளித்தல் .. .. .. .. 299

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன் வடிவு .. .. 300

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலை (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு .. .. 300

8. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 7—சட்டமன்றம்—தொடர்ச்சி.
(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள் } 300—358

(இ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் } 359—379

(ஈ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு
(உ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு } 380—400,

(ஊ) கோரிக்கை எண் 25—சின்கோனா
(எ) கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை } 404—440,
(ஏ) கோரிக்கை எண் 56—காட்டு வள முலதனச் செலவு } 442—468




பக்கங்கள்

## செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 28—தொடர்ச்சி.


9. அமைச்சரின் அறிக்கைகள்—

(அ) கவியரசு கண்ணதாசன் அவர்கள் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை .. 358

(ஆ) சித்த மருத்துவக் குழுவில் திரு. மாசிலாமணி அவர்கள் இடம் பெறுவது குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை .. .. 358

10. தன்னிலை விளக்கம்—

தன் மதுரை சுற்றுப்பயணம் பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுடைய குற்றச்சாட்டிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் விளக்கம்.. 400—404

11. உரிமைப் பிரச்சினை—

உறுப்பினர் திரு. துரைமுருகன் பேரவைத் தலைவர் தீர்ப்பை குறை கூறி குறிப்பிட்டது குறித்து .. 441

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. 468—471


## புதன்கிழமை, 1978 மார்ச் 29


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 545—582

2. உரிமைப் பிரச்சினை—

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத்துறை உதவி இயக்குநர் மீது எழுப்பப்பட்ட பிரச்னை .. .. .. .. 582—608

3. அறிக்கை அளித்தல்—

வடாற்காட்டிலிருந்து சென்னைக்கு வரும் நெல், அரிசி பொறுத்தவரையில் வர்த்தக லெவி வசூலிக்க வேண்டாமென எடுத்த முடிவு குறித்து உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை .. .. 608—609

பக்கங்கள்

**புதன்கிழமை, 1978 மார்ச் 29—தொடர்ச்சி.**


4. கவன ஈர்ப்புகள்—

(அ) அம்பத்தூர் "ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா" தொழிற்சாலை கதவடைப்பு குறித்து .. 609—611

(ஆ) கொடைக்கானல் மலைப்பகுதியில் வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பெற்ற "குப்ர ஜோதி" என்ற விதைக்கிழங்கு பெரும்பகுதி பழுதானதால் விவசாயிகள் நட்டம் குறித்து .. 611—613

5. அரசினர் சட்டமுன் வடிவு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தை கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு. 613

6. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்— ..

(அ) கோரிக்கை எண் 12-1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. 614—620, 622—671

(ஆ) கோரிக்கை எண் 41-இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. ..
(இ) கோரிக்கை எண் 42-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. .. ..
(ஈ) கோரிக்கை எண் 43—பல்வகை } 672

(உ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. 673

(ஊ) கோரிக்கை எண் 48—ஜமீன்தாரர்களுக்கு இழப்பீடு .. 673—674




பக்கங்கள்

**புதன்கிழமை, 1978 மார்ச் 29—தொடர்ச்சி.**


7. தன்னிலை விளக்கம்—

திரு. ரகுமான்கான் பேச்சை ஒரு நாளேட்டில் தவறாகப் போட்டிருப்பதாக நிதியமைச்சர் கூறியது குறித்து ரகுமான்கான் அவர்கள் விளக்கம் .. 620—621

8. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன் வடிவு .. .. .. 673

(ஆ) 1977-78 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியக் கோரிக்கைகளை முன்மொழிய ஆளுநரின் பரிந்துரை .. .. .. 674

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண் 3 சட்டமுன் வடிவு .. .. .. 686

(ஈ) 1970-71 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை முன்மொழிய ஆளுநரின் பரிந்துரை .. .. .. 687

(உ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு .. .. .. 694

9. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு .. .. .. 673—674

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு .. .. .. 686

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு .. .. 694

பக்கங்கள்

புதன்கிழமை, 1978 மார்ச் 29—தொடர்ச்சி.


10. 1977-78ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு .. .. .. 674—686

11. 1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு .. .. .. 687

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. 695


வியாழக்கிழமை, 1978 மார்ச் 30


1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் திரு. நிவர்த்தி வெங்கடசுப்பையா அவர்கள் மறைவு குறித்து .. .. .. .. 707

2. வினாக்கள்—விடைகள் 708—734

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) ஓர் உறுப்பினர் சிறையிலிருந்து முன்னதாக விடுதலையாகி விட்டதாக் தவறாக அறிவிக்கப்பட்டதாக கூறப்படுவது குறித்து .. .. 734—735

(ஆ) இராணிப் பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது பற்றி எழுப்பப்பட்ட பிரச்சினை மீது பேரவைத் தலைவரின் அறிவுரை. 738

4. தகவல் கோரல்—

(அ) நெல்லை மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோய் பரவுவது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து .. 735

(ஆ) உறுப்பினரல்லாத ஒருவர் பேரவைக்குள் வந்தது குறித்து. 739—742




பக்கங்கள்

வியாழக்கிழமை, 1978 மார்ச் 30—தொடர்ச்சி.


5. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) 'தினமலர்' நாளேட்டின் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை மீது தீர்ப்பு .. .. .. 735—736

(ஆ) 'மக்கள் குரல்' நாளேடு மீது எழுப்பப்பட்ட பிரச்சினை மீது தீர்ப்பு .. .. .. 736—737

(இ) திரு. க. சுப்பு அவர்கள் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை மீது தீர்ப்பு .. .. .. 737

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்கள் சாப்பிடுவதற்காக, சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தட்டுக்கள் வழங்கப்பட்டதாக ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது குறித்தும், அது தொடர்பான மற்ற விவரங்கள் குறித்தும் .. 756—761

6. பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை தவறு நேரு வண்ணம் வெளியிடுவதன் அவசியத்தை வலியுறுத்தி, பத்திரிகைகளுக்கு பேரவைத் தலைவர் அறிவுறுத்த வேண்டுகோள் .. .. .. .. 739

7. அறிக்கை அளித்தல்—

ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தம் செய்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அளித்த அறிக்கை .. .. 740

8. கவன ஈர்ப்பு—

ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி, கொடுமுடி வட்டாரங்களில் மின்சார மோட்டார்களின் 'காயில்கள்' போதிய மின் அழுத்தம் இல்லாமையால் கருகினதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து .. 740—741

பக்கங்கள்

வியாழக்கிழமை, 1978 மார்ச் 30—தொடர்ச்சி.


9. அரசினர் தீர்மானம்—

உரிமைக் குழு, சட்டவிதிகள் குழு, அரசு உறுதிமொழிக்குழு, மற்றும் அவைக் குழு ஆகிய குழுக்களின் உறுப்பினர்கள் 31-3-79 வரை அக்குழுக்களில் பணியாற்றுவது குறித்து .. .. .. .. 742

10. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/78).. 743—756

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு 761—845

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு 845—846

11. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் 846


வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31


1. வினாக்கள்—விடைகள் .. .. 847—878

2. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது குறித்து .. 878

(ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள், அரசால் அறிவிக்கப்பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து .. .. 879—880, 881

(இ) ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட வினாக்களை எடுத்துக் கொள்வது குறித்து.. 880




பக்கங்கள்

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31—தொடர்ச்சி.


தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்கு தரப்பட்ட சாப்பாட்டுத் தட்டுகள் பற்றி எழுப்பப்பட்ட பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பட்டிருக்கும்போது மேலதிகாரிகள் அப்பள்ளி ஆசிரியர்களை அச்சுறுத்துவதாகக் கூறப்படுவது குறித்து .. .. .. 880—881

3. ஒழுங்குப் பிரச்னைகள்—

(அ) சட்ட மன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தை கூட்டுவது குறித்து 878—879, 881

(ஆ) உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப்படியை திராவிட முன்னேற்றக்கழகம் வாங்கப் போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும், அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், அந்தக் கூடுதல் படியையும் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து .. .. 893—894

4. உரிமைப் பிரச்னைகள்—

(அ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் பொருள் குறித்து மேலவையில் முதலில் விவரம் அறிவித்தது குறித்து எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.. 882

(ஆ) திரு க. சுப்பு மீது எடுக்கப்பட்ட பிரச்சினைமீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. .. 882—884

(இ) எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து .. 909—916

பக்கங்கள்

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31—தொடர்ச்சி.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்—
மாதவரம் 'விர் கிளாஸ்' நிறுவனம் கதவடைப்பு செய்தது குறித்து .. 885—888

6. கவன ஈர்ப்புகள்—
(அ) சென்னைத் துறைமுகத் தொகுதி வள்ளுவர் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து .. 888—889
(ஆ) மன்னார்குடி ஜெயலஷ்மி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடிவிட நிர்வாகிஅளித்துள்ளநோட்டீசும் அதனல் மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் இடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து .. .. 890—892

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள்(இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு .. .. .. 892—893
(ஆ) 1978ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) .. 895—905, 916—974

8. அறிவிப்புகள்—
(அ) 1978ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்டமுன்வடிவு .. 895
(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் .. 975

9. அமைச்சரின் அறிக்கை—
தென்னார்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில சாலைகளைச் சீரமைக்கும் பணி பற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை. 906—909

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 976



பக்கங்கள்

சனிக்கிழமை, 1978 ஏப்ரல் 1

1. வினுக்கள்—விடைகள்— 977—989

2. ஒழுங்குப் பிரச்னை—
வினாப்பட்டியலில் உள்ள வரிசை எண்களில் உள்ள மாற்றம் குறித்து .. 989—1015

3. உரிமைப் பிரச்னை—
பன்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் தவருன குற்றச்சாட்டுக்களை சாட்டியது குறித்து .. .. .. ..10 5—1019

4. தன்னிலை விளக்கம்—
(அ) பன்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து, தாம் சாட்டிய குற்றச்சாட்டுக்கள் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அளித்த விளக்கம் .. .. ..1019—1023
(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் சாட்டிய குற்றச் சாட்டுக்கள் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த விளக்கம் .. .. ..1024—1031

5. கவன ஈர்ப்பு—
உளுந்தூர் பேட்டை தாலுக்கா செங்குறிச்சி கிராமத்தில் தீ விபத்தினல் ஏற்பட்ட சேதம் குறித்து ..1031—1033

6. அறிக்கை அளித்தல்—
பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் .. .. .. 1034

7. அறிவிப்புகள்—
(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு .. 1034
(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு .. .. 1065

பக்கங்கள்

சனிக்கிழமை, 1978 ஏப்ரல் 1

8. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன்வடிவு ..1034—1035

(ஆ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 12/78). 1035—1044

(இ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/78) .. ..1044—1065

(உ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78) ..1086—1099

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..1099—1100

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களை சுட்டும் எனினும், சட்டமுன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்டமுன்வடிவுகளும் ''சட்டமுன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றங்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின்கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசை தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது:

| | | |
|---|---|---|
| அ | .. | அறிக்கை |
| அ.றிவி. | .. | அறிவிப்பு |
| அ.வி. | .. | அரைமணி விவாதம் |
| கு.வி. | .. | குறுகிய கால விவாதம் |

| | | |
|---|---|---|
| பொ.வி. | .. | பொது விவாதம் |
| ஆ.உ. | .. | ஆளுநர் உரை |
| உ.பி. | .. | உரிமைப் பிரச்னை |
| ஒ.பி. | .. | ஒழுங்குப் பிரச்னை |
| க.ஈ. | .. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | .. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.மு.வ. | .. | சட்ட முன்வடிவு |
| ஆ.த. | .. | ஆளுநரிடமிருந்து தகவல் |
| அ.நி. | .. | அறிமுக நிலை |
| ஆ.நி. | .. | ஆய்வு நிலை இந்நிலையில், 1. ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம், 2. ஆய்வுக்/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். 3. சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம். 4. ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம், 5. ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன |
| பிரி.ஆ | .. | பிரிவுவாரியாக ஆய்தல் |
| நிறை(தீ) | .. | நிறைவேற்றல் தீர்மானம் |
| நிறை | .. | நிறைவேற்றல் |
| ச.பே. | .. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | .. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | .. | தகவல் கோரல் |
| த.வி. | .. | தன்னிலை விளக்கம் |
| தீ. | .. | தீர்மானம் |
| உ.தீ. | .. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | .. | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | .. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | .. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | .. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | .. | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பத்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மது விலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அற நிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில், நிறுவனங்கள், பூமி தானம்- கிராமதானம் முன்னாள் இராணுவத்தினர்; சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணி, சிறப்பு சிறு பாசனத் திட்ட வேலை உட்பட சிறு பாசனங்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை சிங்கோனா உட்பட காடுகள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்ப வியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்கு வரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சிர்திருத்த நிர்வாகம்.

13 மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)— Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)— Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)— Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)— Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)— Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Tourism*)— Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees and Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn, Handlooms and Khadi and Village Industries.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்ட மன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஹானர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனபன் நம்பியார், பி. ஏ.

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி. எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

எஸ்டேட் அதிகாரி

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. .. | பெண்ணாகரம். |
| 5 | அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாசாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. .. | குன்னூர் (செ.வ.). |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) .. | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 | அருணாசலம் திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 13 | அர்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன் திரு. க. .. .. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு. தி. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. எம். .. .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமசாமி, திரு. கே.என்.கே. .. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ்.ஜே. | சோளிங்கர். |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 31 இராமசாமி. திரு. டி. .. .. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. .. | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) .. | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என். .. | ஹோசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. .. | தல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. .. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு. க. .. | பரமக்குடி (செ.வ.). |
| 42 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 44 உமாநாத், திரு. ரா. .. .. | நாகப்பட்டினம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. .. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) .. | திருநெல்வேலி. |
| 47 எத்திராஜ், திரு. கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. .. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். .. .. | பூம்புகார். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 52 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. க. .. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 55 கபாலி, திரு. டி. கே. .. | மயிலாப்பூர். |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. .. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. .. | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை. மு. | திருவாரூர் (செ.வ.). |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை .. | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. .. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) .. | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. .. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.). |
| 72 கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 74 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டியூர் (செ. வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) .. | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. வி. கே. .. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. ... | முசிறி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 79 கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 81 கோவிந்தன், புலவர் கா. .. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. .. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். .. .. | மதுரை கிழக்கு. |
| 84 சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 85 சண்முகம். திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. ஆர். . .. | திருத்தணி. |
| 87 சண்முகம், திரு. கூத்தகுடி, ச. | திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. .. .. | பெரணமல்லூர். |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. .. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) .. | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபநாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.). |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. .. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. .. | குளத்தூர் (செ. வ.). |
| 104 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 108 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 114 சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 115 சுப்பிரமணியன், திரு. ஒ. .. | சிவகங்கை. |
| 116 சின்னசேலம் சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ. மு. .. | மானாமதுரை (செ. வ.). |
| 118 சுப்பிரவேலு, திரு. கே. .. | சீர்காழி (செ. வ.). |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, திருமதி. .. | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார் கோவில் (செ. வ.). |
| 122 சுவாமிதாஸ், திரு. அ. .. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 126 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர் (செ. வ.) |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ. வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஒ. ப. .. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி |
| 134 சௌந்திரராஜன், திருச்சி. திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேலு, திரு. ர. ச. .. | வால்பாறை (செ. வ.). |
| 138 தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம்.. |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணம்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ. வ.) |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்.) .. | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்க தலைமைக் கொறடா) | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தீ.சு. .. | பார்க்டவுன், சென்னை |
| 156 நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர். |
| 162 பரமசிவம் திரு. மொ. .. | வானூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 163 பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிசாமி, திரு. சொ. ந. .. | அவினாசி (செ. வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 பாண்டியன், திரு. பி.எச். .. | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ. வ.). |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 173 பானுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ. வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ. வ.) |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி. பி. எம். | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ. வ.). |
| 180 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 181 பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) .. | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ.). |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) .. | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு. சி. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்.. | (நியமன உறுப்பினர்). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. | பட்டுக்கோட்டை. |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | வேதாரண்யம். |
| 194 முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி. |
| 195 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 196 முத்துசாமிகரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 197 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 198 முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர். |
| 199 முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி, (செ.வ.). |
| 200 முனிரத்தினம், திரு. எஸ். .. | கும்மிடிபூண்டி. |
| 201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்) | தாம்பரம், சென்னை. |
| 202 மூக்கையா தேவர், திரு. பி. கே. | உசிலம்பட்டி. |
| 203 யூசப், திரு. யா. சை. மு. .. | ராதாபுரம். |
| 204 ரகுமான்கான், திரு. ஏ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 206 ரகோத்துமன், திரு. கோ. .. | முகையூர். |
| 207 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 ரசாக், திரு. எம். எம். எ. | கடையநல்லூர். |
| 209 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 210 ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில். |
| 211 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 ராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.). |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல் (செ. வ.). |
| 216 ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ. வ.). |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 லத்தீப், திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி. |
| 219 வடிவேலு, திரு. கே. .. | கரூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 220 வரதராஜன், திரு. என். ... | திண்டுக்கல். |
| 221 வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 223 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 224 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ. | ஒட்டபிடாரம் (செ. வ.) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர் . | செங்கல்பட்டு |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெபமணி, திரு. ர. .. .. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. .. | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டாறு. |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்— அமைச்சர்.
3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்— அமைச்சர்.
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5 திரு. வி.பி. இராமன்— தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது
கூட்டத் தொடர்

(தொகுதி XVII எண்கள் 1 முதல் 6 வரை)

பக்கங்கள்

அ


அகதிகள்—

இலங்கை, நெய்வேலி டவுன்ஷிப் விவசாயப் பண்ணையில் பணிபுரிபவர்கள் .. .. 55—56

அண்ணாமலை, திரு. எம்.—

அரூரிலிருந்து சென்னைக்கும், பெங்களூருக்கும் விரைவுப் பேருந்து விடுதல் .. .. 30

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

தேர்தல்கள் .. .. .. .. .. } 301
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் .. } 301
தலைமையிடப் பணியாளர்கள் .. .. } 301

வேலைவாய்ப்பு, அரிசனங்களுக்கு ஒதுக்கீடு .. 576—578

அணைகள்—

பார்க்க நீர்ப்பாசனம்

அப்புனு கவுண்டர், திரு. கா—

ஜுடிசியல் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, தர்மபுரியில் ஏற்படுத்துதல் .. 714

அம்பிகாபதி, திரு. மு.—

ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளாதது குறித்து (த.கோ) .. .. 878

கால்நடை மருத்துவக் கல்லூரி, விவசாயப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தல் .. 39

காவலர் குடியிருப்புகள் .. .. .. 57

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அம்பிகாபதி, திரு. மு.—தொடர்ச்சி.

- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் — கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. 932—936
- சோழன் போக்குவரத்துக் கழகம், வருமானம் .. 58
- தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால்வழங்கு சங்கம், பால் விநியோகம் .. .. 872—877
- நிலங்கள் ஆக்ரமிப்பு, தனியார் வாடகை வசூலித்தல், புதுக்கோட்டை மாவட்டம் .. 266
- பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு, மன்னார்குடி 259
- புகையிலை பயிரிடுதல், தஞ்சை மாவட்டம் .. 62
- மரவள்ளி, கடலை, கரும்பு பயிரிடும் பரப்பளவு .. 62
- மன்னார்குடி பாமணி-உரமணி ஆலையில் பணி புரியும் தொழில் நுட்பப் பணியாளர்கள் .. 60
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - மீனளம் .. .. .. ..
  - நுகர் பொருள் வழங்கல் .. ..
  - பல்வகை மூலதனச் செலவு .. .. } 121—126
- ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப்பள்ளி, மன்னார்குடி—மூடிவிடுதல் .. .. .. .. 7
- ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப்பள்ளி மன்னார்குடி—மூடிவிடுதல் (க. ஈ.) .. .. .. 890, 891—892

அமிர்தராஜ், திரு. இரா—

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - மீனளம் .. .. .. ..
  - நுகர்பொருள் வழங்கல் .. ..
  - பல்வகை மூலதனச் செலவு .. .. } 92—95

அரங்கநாதன், திரு. மு—

- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. .. 898—905, 934, 935, 965, 974



பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அரங்கநாயகம், திரு. செ.—

- ஆஸ்தான கவிஞர் திரு. கண்ணதாசன் நியமனம் (அ) .. .. .. .. .. 358
- ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி, மன்னார்குடி—மூடிவிடுதல் (க. ஈ. அ.) .. .. 890—891, 892

அரசு அச்சகம்—

- வடார்க்காடு மாவட்டத்தில் கிளை .. .. 50

அரிசனங்கள்—

- சோழன் பேட்டை, வீட்டு மனைகள் வழங்குதல் 43—44
- மலைவாழ் மக்கள் மேம்பாடுத் திட்டம், தருமபுரி மாவட்டம் .. .. .. .. .. 578—580
- வீடுகள் (தெ. மா) .. .. .. .. 998—1002
- வேலை வாய்ப்பு, ஒதுக்கீடு .. .. .. 576—578

அழகர்சாமி, திரு. சோ—

- கிராம வங்கிகள், துவக்கம் .. .. .. 558—562
- கூட்டுறவு, கல்வி நிதி, அபிவிருத்தி நிதி, மொத்தத் தொகை .. .. .. .. .. 720
- சமூகநலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடை துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 595—596
- நிலவள வங்கிக் கடன்கள், திருப்பிச் செலுத்துதல் 853—855
- பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1051—1053
- மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1077—1078
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 615, 645—649
  - காட்டுவளத் துறை .. .. ..
  - காட்டுவள மூலதனச் செலவு .. ..
  - கூட்டுறவு .. .. .. ..
  - சின்கோனா .. .. .. ..
  - பத்திரப்பதிவு .. .. .. .. } 457—458

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அறிக்கை அளித்தல்—

சட்டவிதிகளின் ஆய்வுக்குழு (முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கை) .. .. .. 299

பொதுக் கணக்குக் குழு .. .. .. 1034

வெள்ள நிவாரணப்பணி (தெ. மா.) பற்றி எதிர்க் கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டுக்கு போக்கு வரத்துத் துறை அமைச்சர் பதில் .. 906

அன்பழகன், திரு. க—

சமூகநலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 587—588, 590—592, 601—603, 608

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. 953, 961—962, 972—973

ஆ

ஆசிரியர்கள்—

அரசு உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. 66

தமிழ் ஊக்க ஊதியம் .. .. .. 260

புதுக்கோட்டையிலிருந்து திருச்சிக்கு மாறுதல் .. 48—49

புலவர் பட்டம் பெற்றவர்கள் பணியில் அமர்த்தப்படுதல் .. .. .. .. .. 45

விடுதி, சென்னையில் கட்டுதல் .. .. 572—573

ஆதிசுவாமி, திரு. இரா—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 660—663

ஆலயங்கள்—

விருத்தகிரீஸ்வரர், ஊழியர்க்குக் குடியிருப்பு, விருத்தாசலம் .. .. .. .. 57



பக்கங்கள்.

ஆ—தொடர்ச்சி.

ஆறுமுகம், திரு. இல.—

உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் இடிந்தது, செத்தி லிங்க மடம் .. .. 6

ஆறுமுகம், திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

சட்டமன்றம்,
தேர்தல்கள்,

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். .. .. 359—364

ஆறுமுகம், திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

நுகர் பொருள் வழங்கல்
பலவகை மூலதனச் செலவு .. .. 74, 76, 77
மீனளம்

வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள், சேலம் .. 575—576

ஆஸ்தானக் கவிஞர்—

திரு. கண்ணதாசன், நியமனம் (அ) .. 358

இ.

இயற்கை சீற்றங்கள்—

புயல்-வெள்ளம்—

சேதமடைந்த கால்நடைகள் .. .. 66

சிதம்பரம்-வட்டம், சேதமடைந்த ஏரிகள் .. 65

வெண்ணாற்றில் சேதம் .. .. .. 64

**பக்கங்கள்**

இ—தொடர்ச்சி:


இரங்கற் குறிப்பு—

நிவர்த்தி வெங்கட சுப்பையா, திரு. .. 707

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

அம்பத்தூர் ' ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா ' தொழிற்சாலை, கதவடைப்பு (க. ஈ. அ.) .. 610—611

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. 895—896, 951—952, 953, 954, 955—958, 958—959, 962—963, 969, 971, 972

'' வீர் க்ளாஸ் '', மாதவரம், கதவடைப்பு (ஓ. தீ) 887

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

ஒத்திவைக்கப்பட்ட வினாக்களை எடுத்துக்கொள்வது குறித்து (த. கோ.) .. .. .. .. 880

மருத்துவத் துறை பற்றிய வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாமை குறித்து. .. .. 68

**இராதா, திரு. எஸ். ஆர்.—**

பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பை குறை கூறி திரு. துரைமுருகன் குறிப்பிட்டது குறித்து. (உ. பி.) .. .. .. 441

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
சட்டமன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. 307—317, 368

வினாப்பட்டியலில் வரிசை எண் மாற்றம் .. 989

வெள்ளநிவாரணப்பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (உ. பி,) .. 909, 1016, 1017




இ—தொடர்ச்சி:

**பக்கங்கள்**


**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

சமூகநலத் துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 596—598, 599—601, 603—606

**இராமச்சந்திரன், திரு. ச—**

உளுந்தூர் பேட்டை தொகுதி கிராமங்களில் கோமுகி நதியின் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராமை, விவசாயிகள் பாதிப்பு (க. ஈ.) .. 296

குடியாத்தத்தில் போதிய மின்சாரம் இன்மை, தொழில்களும் ஆலைகளும் சரிவரநடைபெறுமை, தொழிலாளர் பாதிப்பு (க. ஈ.) .. 297—298

சமூகநலத் துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 584, 588—590

செங்குறிச்சி (தெ. மா.) தீ விபத்து (க.ஈ.அ.) 1032—1033

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. 959—961, 973—974

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டமுன்வடிவு .. .. .. .. 72, 1086—1087

வள்ளுவர் நகரில் (சென்னை துறைமுகம் தொகுதி) ஏற்பட்ட தீ விபத்து (க. ஈ. அ.) .. 888, 889

வெள்ள நிவாரணப்பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (த. வி.) 1029—1031

**இராமச்சந்திரன், செஞ்சி திரு. ந. —**

செஞ்சி வட்டத்தில் பொதுப்பணித் துறை பிரிவு அலுவலகம் .. .. .. .. .. 67

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராமசாமி, திரு. எஸ். ஜே.—**

கரும்பு, விலை, வினியோகம் .. .. .. 1004—1008

கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம் விவசாயிகளுக்கு போனஸ், .. .. .. 249

வடாற்காடு மாவட்டம் .. 248

சென்னை நகர ஓட்டல்களை விரிவுபடுத்த கடன் மனு செய்தவர்கள் .. .. .. .. 46

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

சட்டமன்றம், தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. 335—339

**இராமலிங்கம், திரு. செ.—**

விவசாயக்கடன், ரிசர்வ் வங்கி அளித்த தொகை 990—992

**இராஜா முகமது, திரு. கே.—**

சமுகநலத் துறை அமைச்சர், மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 584

**இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

சட்டமன்றம்,

தேர்தல்கள்,

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. 303—307

**இளங்கோவன், திரு. கோ.—**

அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் .. 66

புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள், பணியில் அமர்த்தப்படுதல் .. .. .. .. 64





பக்கங்கள்

ஈ

**ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி.—**

விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியுடன் சில பகுதிகளை இணைத்தல் .. .. .. .. 267

உ

**உச்சி, திரு. கே.—**

திரையரங்குகளிலிருந்து கிடைக்கும் வரி .. 44

உணவு தானியங்கள்—

நெல்-கொள்முதல், தென் ஆற்காடு மாவட்டம் .. 545—549

நெல் வர்த்தக லெவி வசூல் (அ.) .. .. 608—609

'ஜனதா' கடைகள், திறக்கும் திட்டம் .. .. 565—567

உணவு விடுதிகள்—

'அமுதம்' உணவு விடுதிகள், இயங்கும் முறை .. 562—565

**உத்திராபதி, திரு. பொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

மீனளம், நுகர் பொருள் வழங்கல், பலவகை மூலதனச் செலவு 76

**உமாநாத், திரு. ரா.—**

கால்வாய்கள், நாகையில் பாதுகாக்கப்படாமை .. 256

குழாய்க் கிணறுகளுக்கான கடன்கள் .. .. 855—858

'தினமலர்' நாளிதழ் ஊழியர் வேலை நிறுத்தம் .. 61

நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. .. .. .. .. .. 864

நாகப்பட்டினம்-வேளாங்கண்ணி சாலை, பேருந்து வசதி .. .. .. .. .. .. 729

மத்திய அரசு சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவின் அலுவல்கள் இந்தியில் நடைபெறல், பதட்ட நிலை (ஒ.தீ.) .. .. 287—294

மின்சாரம், விநியோகத்தில் கோளாறு .. 553—557

பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.

**உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- நுகர் பொருள் வழங்கல்
- பல்வகை மூலதனச் செலவு
- மீனளம் } 109—114

**உரிமைப்பிரச்னை—**

பார்க்க: 'தலைவர்', ''குறிப்புரைகளும், தீர்ப்புரைகளும்''

ஊ

**உள்ளாட்சிகள்—**

**ஊராட்சிகள்—**
- கல்லல், கணக்குகள் தணிக்கை .. .. .. 2
- தென்னை வளர்ப்பது குறித்து .. .. .. 8—11
- தேவங்குடி, ஊழல் புகார் .. .. .. 16—19
- மாயூரம் புறநகர் பஞ்சாயத்து, பெயர் மாற்றல் .. 265

**ஒன்றியங்கள்—**
- சாலைப் பணியாளர்கள், கீரபாளையம், நிரந்தரமாக்குதல் .. .. .. .. .. 11—16
- தர்மபுரி மாவட்டம், பிரித்தமைத்தல் .. .. 865—866
- நாகப்பட்டினம், பிரித்தமைத்தல் .. .. 864

**பேரூராட்சி—**
- அவிநாசி, நகராட்சியாக உயர்த்துதல் .. .. 866—867
- விக்கிரமசிங்கபுரம், சிலபகுதிகளை இணைத்தல் .. 267

**நகராட்சிகள்—**
- பள்ளிகள், விவரம் .. .. .. .. 50
- முன்னாள் திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட ஊழியர்களுக்கிருந்த சலுகைகள் .. 867—868

**மாநகராட்சிகள்—**
- சென்னை, பள்ளிகள் விவரம் .. .. .. 59—60





பக்கங்கள்.

எ

**எட்மண்ட், திரு. க. உரோ.—**
- சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) .. .. 583
- நெல், வர்த்தக லெவி வசூல் (அ.) .. .. 608—609
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
  - காட்டுவளத்துறை
  - காட்டுவள மூலதனச் செலவு
  - கூட்டுறவு
  - சின்கோனா
  - பத்திரப்பதிவு } 380, 381, 382, 384, 385, 387, 435, 436, 437, 439, 450—465
  - மீனளம்
  - நுகர்பொருள் வழங்கல்
  - பல்வகை மூலதனச் செலவு } 73, 75, 76, 152—181

ஏ

**ஏடுகள்—**
- பேரவைமுன் வைக்கப் பெற்றவை .. .. 182—183, 468—471, 695, 846, 976, 1099—1100

**ஏரிகள்— பார்க்க: நீர்ப்பாசனம்**

**ஏற்றுமதி—**
- நூக்குமரம் .. .. .. .. .. 988—989

ஒ

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**
- மத்திய அரசு சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவின் அலுவல்கள் இந்தியில் நடைபெறல், பதட்ட நிலை .. .. .. .. 287—294
- ''வீர் க்ளாஸ்'' மாதவரம், கதவடைப்பு .. 885—888

பக்கங்கள்.

ஒ—தொடர்ச்சி.

**ஒழுங்குப் பிரச்னைகள்—**

கூடுதல் ஈட்டுப்படி, தொலை பேசிக்கான படி வாங்குதல் .. .. .. .. .. 893—894

சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கட்சிக் கூட்டம் கூட்டுவது .. .. .. .. 878—879

விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள்பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் முதல் அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளது குறித்து .. .. 285

வினாப்பட்டியலில் வரிசை எண் மாற்றம் .. 989

க

**கடன்கள்—**

குழாய்க் கிணறுகள் போடுவதற்காக .. .. 855—858

நிலவள வங்கிக் கடன்கள், திருப்பிச் செலுத்துதல் 853—855

**கணேசன், திரு. எஸ்.—**

அடையாறு, கரை உயர்த்துதல் .. .. 984—986

ஆசிரியர்களுக்கு விடுதிகள், சென்னை நகர் .. 572—573

கல்லூரிகள், புயலால் பாதிக்கப்பட்டவைகளுக்கு உதவி .. .. .. .. .. 862—864

காவல் நிலையங்களில் கம்பியில்லாத் தந்தி வசதி .. 63

கைத்தறித் துணி ஏற்றுமதி, பரிசு .. ..1010—1013

சின்கோனா உற்பத்திக் கழகம் .. .. .. 717

'தமிழரசு', சில விவரங்கள் .. .. .. 44

நூக்குமர ஏற்றுமதி .. .. .. .. 988—989

புயல் வெள்ளத்தால் சேதமடைந்த கால்நடைகள் விவரம் .. .. .. .. .. 66

மனநோய் மருத்துவமனைகள், விவரம் .. .. 53

மாதிரிப் பள்ளிகள், விவரம் .. .. .. 52

ரூபாய் இரட்டிப்புக் குற்றங்கள், நடவடிக்கை .. 53

ஹோசூர் கால்நடைப் பண்ணையில் குதிரை வளர்த்தல் .. .. .. .. .. 63



பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

**கரியமாணிக்கம், அம்பலம். திரு. கரு. இராம.—**

கல்வி, வேலைவாய்ப்பளிக்கும் முறை .. .. 859—862

நடமாடும் நீதிமன்றங்கள் இயங்குதல் .. .. 49

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சட்டமன்றம்
தேர்தல்கள்
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள் } 364—368

**கருணாநிதி, திரு. மு.—**

கூடுதல் ஈட்டுப்படி தொலை பேசிக்கான படி வாங்குதல் (ஒ.பி.) .. .. .. .. 894

சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) .. 583—584, 598—99

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 629, 630, 638, 651, 670

வெள்ள நிவாரணப் பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (உ.பி.). 1017—1019

வெள்ள நிவாரணப் பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (த.வி.). 1019—1023

**கல்லூரிகள்—**

ஆசிரியர்கள் சம்பளம், பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரை .. .. .. .. 262

கரந்தை புலவர் கல்லூரிக்கு மானியம் .. .. 51

கருத்தராவுத்தர் கல்லூரி, உத்தமபாளையம், நிர்வாகம் 1013—1015

கால்நடை மருத்துவக் கல்லூரி, விவசாயப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தல் .. .. .. 39

தொழிற்கல்விக் கூடம் (பாலிடெக்னிக்), தர்மபுரியில் நிறுவுதல் .. .. .. .. 722—724

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

கல்லூரிகள்—தொடர்ச்சி

தொழில் நுட்பக் கல்லூரி கன்யாகுமரி மாவட்டம், தொழில் பிரிவுகளை அதிகரித்தல் .. .. 1—2

புயலால் பாதிக்கப்பட்டவைகளுக்கு உதவி .. 862—864

ஷிப்ட் முறைக் கல்வி (சேலம்) .. .. .. 264

கல்வி—

எட்டாம் வகுப்பில் பொதுத் தேர்வு .. .. 721—722

வேலைவாய்ப்பளிக்கும் முறை .. .. 859—862

கவன ஈர்ப்புகள்—

அம்பத்தூர் 'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' தொழிற்சாலை, கதவடைப்பு .. .. 609—611

உளுந்தூர்ப் பேட்டை தொகுதி கிராமங்களில் கோமுகி நதியின் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராமை, விவசாயிகள் பாதிப்பு .. .. 296

குடியாத்தத்தில் போதிய மின்சாரம் இன்மை, தொழில்களும், ஆலைகளும் சரிவர நடைபெறுமை, தொழிலாளர் பாதிப்பு .. 297—298

'குப்ரஜோதி' கிழங்கு, கொடைக்கானலில் விவசாயிகள் பாதிப்பு .. .. .. 611—613

செங்குறிச்சி, தென்னாற்காடு மாவட்டம், தீவிபத்து 1031—1033

மக்கள் குழுக்களில் தி. மு. க. வுக்கு இடம் அளிக்கப்படாமை .. .. .. .. 69—72

வள்ளுவர் நகரில் (சென்னை துறைமுகத் தொகுதி), ஏற்பட்ட தீ விபத்து .. .. .. 888—889

ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி, மன்னார் குடி, மூடிவிடுதல் .. .. .. .. 890—892

காடுகள்—

மொத்தப் பரப்பளவு திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. 54—55

கால்நடைகள்—

ஹோசூர் பண்ணையில் குதிரை வளர்ப்பு .. 63



பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

காவல் துறை—

காவல் நிலையங்களுக்கு கம்பியில்லா தந்தி வசதி 63

காளிமுத்து, திரு. கா.—

மக்கள் குழுக்களில் தி. மு. க. வுக்கு இடம் அளிக்கப்படாமை (க. ஈ.) .. .. .. 69—72

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1066
1081—1086

கிட்டப்பா, திரு. என்.—

அரிசனங்களுக்கு சோழன் பேட்டையில் வீட்டு மனைகள் வழங்குதல் .. .. .. 43

அனல் மின் நிலையத் திட்டம், தூத்துக்குடி .. 551—553

ஊராட்சிகளில் தென்னை வளர்ப்பது குறித்து. 8

எட்டாம் வகுப்பில் பொதுத் தேர்வு .. 721

கரந்தைப் புலவர் கல்லூரிக்கு மானியம் .. 51

கிராம வங்கிகள், துவக்கம் .. .. 558—562

செவிலியர் பயிற்சி நடைபெறும் இடங்கள் .. 43

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், அபிவிருத்தித் திட்டம் .. .. .. 569—573

தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் .. 260

தென்னை, பனை பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்தில் அமைத்தல் .. 46

தொழிற் பயிற்சிப் பள்ளி, திருவெறும்பூர், தேர்வில் முறைகேடுகள் .. .. 5

நகராட்சி உயர்நிலைப்பள்ளி, மாயூரம் .. 724

பனைப் பொருட்கள், ஏற்றுமதி .. .. 47

மாயூரம் புறநகர் பஞ்சாயத்து, பெயர் மாற்றல் 265

மினி பஸ்கள், தஞ்சை மாவட்டத்தில் விடுவது 868—870

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காட்டு வளத்துறை
காட்டு வள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு
} 383

'அனதா' கடைகள், திறக்கும் திட்டம் .. 565—567

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

**கிராமத் தொழில்கள்—**

தஞ்சை மாவட்டத்தில் தென்னை, பனைப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல். 46

பனைப் பொருட்கள், ஏற்றுமதி .. .. 47

**கிருஷ்ணன், திரு. பி.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச்செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு
} 407—410

**கிருஷ்ணன், திரு. ரா.—**

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு .. .. .. .. 1071—1077

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டமுன்வடிவு .. .. .. 1096—1099

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு
} 461

**குடிநீர்—**

திட்டம், கருங்கல், கப்பியறை பஞ்சாயத்துக்கள் 574—575

**குழந்தைவேலு திரு. ப.—**

'குப்ரஜோதி' கிழங்கு, கொடைக்கானலில் விவசாயிகள் பாதிப்பு (க. ஈ. அ.) .. 611—613

**குழுக்கள்—**

சட்டவிதிகள் ஆய்வுக்குழு அறிக்கை .. 299

பொதுக் கணக்குக் குழு அறிக்கை .. 1034

மக்கள் குழுக்களில் தி. மு. க. வுக்கு இடம் அளிக்கப்படாமை (க.ஈ.) .. .. 69—72

**குளங்கள்**—பார்க்க: நீர்ப்பாசனம்.





பக்கங்கள்

க— தொடர்ச்சி.

**கூட்டுறவு—**

சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கு யூனியன், முறைகேடுகள் .. .. .. .. 708—710

நிதி—கல்வி நிதி, அபிவிருத்தி நிதி, மொத்தத் தொகை .. .. .. .. 720—721

வங்கிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் .. .. 717—720

விவசாயக் கடன், ரிசர்வ் வங்கி அளித்த தொகை 990—992

**கைத்தறி—**

துணி ஏற்றுமதி, பரிசு .. .. ..1010—1013

**கோதண்டராமன், திரு. வி. கே.—**

கார் திருடு, வழக்குகள் விவரம் .. .. 48

குடியாத்தத்தில் போதிய மின்சாரம் இன்மை, தொழில்களும் ஆலைகளும் சரிவர நடைபெருமை, தொழிலாளர் பாதிப்பு (க.ஈ.) .. 297—298

நிலத்தில் நுண் சத்துக்கள் ஆராய்ச்சி செய்தல் 31

பீடித் தொழிலாளர்கள், மருத்துவ வசதி .. 268

வடார்க்காடு மாவட்டத்தில் அரசு கிளை அச்சகம் 50

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 615, 631—638 670

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு
} 380, 386

தேர்தல்கள்
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்
} 302

வெளிப்புற சினிமா படப்பிடிப்புக்கான கூட்டணங்கள் .. .. .. .. .. 56

ஜி. எஸ். இண்டஸ்டிரியல் தொழிற்சாலை, கோவில்பட்டி, விபத்து .. .. .. .. 51

பக்கங்கள்

க—தொடர்ச்சி.


**கோபாலன், திரு. போ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காட்டுவளத் துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு } 416—420

**கோவிந்தராசன், திரு. சி.—**

கூடுதல் ஈட்டுப்படி, தொலைபேசிக்கான படி வாங்குதல் (ஒ.பி.) .. .. .. 893—894

சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கு யூனியன், முறைகேடுகள் .. .. .. 708

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978 .. } 923—927, 963, 964, 965

தேவங்குடி ஊராட்சி, ஊழல் புகார் .. 16

நெல் கொள்முதல், தென் ஆற்காடு மாவட்டம் 545—549

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
மீன்வளம்
நுகர்ப்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு } 74,7

**கோவிந்தன், புலவர் கா.—**

அம்பத்தூர் 'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' தொழிற்சாலை, கதவடைப்பு (க.ஈ.) .. 610

**கோவிந்தன், திரு. மு. ரெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நுகர்ப் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு
மீன்வளம் } 119—12




பக்கங்கள்

ச


**சங்கரய்யா, திரு. என்.—**

சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) .. 592

**சட்டம்-ஒழுங்கு—**

கார் திருடு, வழக்குகள் விவரம் .. .. 48

ரூபாய் நோட்டு இரட்டிப்புக் குற்றங்கள் 53—54

**சட்ட முன்வடிவுகள்—**

அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு 1978(அறி.) 613

கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978 (ச.அ.நி.) 892—893

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978 :
ஆளுநர் இசைவு .. .. .. 895
ஆ. நி. .. .. 895—965
பிரி. ஆ. (தீ) .. 966—972
நிறைவேற்றல் .. .. ... 972—974
நிறைவேற்றம் .. .. 974

நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப் படுத்தல்) சட்ட முன்வடிவு, 1978 (ச.அ.நி.) 300

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1978 (அறி.) .. .. .. .. 673

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1978 ஆளுநர் இசைவு .. .. .. 673

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1978 (அறி.) .. .. .. .. 686

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1978 ஆளுநர் இசைவு .. .. .. 686

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1978 (அறி.) .. .. .. .. 694

பக்கங்கள்

ச— தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு 1978, ஆளுநர் இசைவு .. .. .. 694

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/78), 1978
நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு, எண் 20/78), 1978.
நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/78), 1978.
மேலவை செய்தி .. .. .. } 975

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 (ச. அ.) 299

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (அ. நி.) .. .. 72

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (ஆய்வு) 1978.. .. 1086

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. .. 1065—1086

ஆளுநர் செய்தி .. .. .. 1065

ஆய்வு .. .. .. .. 1066—1085

பிரிவுவாரி ஆய்வு .. .. .. 1086

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 ஆளுநர் செய்தி.. 73

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 (அ.நி.) .. 73

வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1978, (ஆளுநர் இசைவு), 1044
அறிமுகம் .. .. .. .. 1035

சண்முகம் திரு. ஏ. ஆர்.—

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978. 897—898





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சண்முகம் திரு. கூத்தக்குடி. ச.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு
சட்டமன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள். .. } 328—335

சண்முகம், திரு. ப. உ.—

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978. } 935, 947—951, 959

பொதுக் கணக்குக் குழு, அறிக்கை அளித்தல். 1034

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 653—660
மீனளம்
நுகர்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு .. } 143—152, 173—175

சதாசிவம், திரு. செ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காட்டுவளத் துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு .. } 193—398, 461

சமரசம், டாக்டர் கே.—

ஊராட்சி ஒன்றியங்கள், தர்மபுரி மாவட்டம், பிரித்தமைத்தல் .. 865—866

மலைவாழ் மக்கள் மேம்பாடுத் திட்டம், தருமபுரி மாவட்டம் .. .. 578—580

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு .. .. 1091—1092

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
சட்டமன்றம்
தேர்தல்கள்
மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள். } 323—328

பக்கங்கள்

ச— தொடர்ச்சி


**சரஸ்வதி, செல்வி பி. டி.—**

- சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) 587

**சவுந்தரராஜன், திரு. ரெ. வீ.—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
  - இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். .. .. .. 614
  - காட்டுவளத் துறை, காட்டுவள மூலதனச் செலவு, கூட்டுறவு, சின்கோனா, பத்திரப்பதிவு .. .. } 383, 398
  - தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். } 301—302
  - நுகர்பொருள் வழங்கல், பல்வகை மூலதனச் செலவு .. மீனளம் } 77, 96-102

**சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—**

- சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978. 965
- பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு .. .. .. } 1045—1047, 1062—1064
- மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு .. .. .. 1087—1091
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - காட்டுவளத் துறை, காட்டுவள மூலதனச் செலவு, கூட்டுறவு, சின்கோனா, பத்திரப்பதிவு .. .. .. 439
- விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள் குறித்து கொள்கை விளக்க குறிப்பில் முதலமைச்சர் கருத்து தெரிவித்துள்ளது குறித்து .. .. .. .. 285
- விளையாட்டு வீரர்கள், ஊக்குவித்தல் .. 996—989




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சாலைகள்—**

- அம்மாபேட்டை சாலை, நெடுஞ்சாலைத் துறை ஏற்பு .. .. .. .. 581
- பள்ளியக்கிரகாரம்-நீடாமங்கலம் சாலை, பணி நிலை .. .. .. .. 581—582

**சிவசாமி, திரு. செ.—**

- பள்ளியிறுதித் தேர்வு, மாணவர்களுக்கு பரிசு 995—996
- மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு .. .. 1039—1040
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
  - காட்டுவளத்துறை, காட்டுவள மூலதனச் செலவு, கூட்டுறவு, சின்கோனா, பத்திரப்பதிவு .. .. .. } 382, 383, 385, 420—429, 459
- வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு
  - நுகர் பொருள் வழங்கல், பலவகை மூலதனச் செலவு மீனளம், .. . 75

**சின்கோனா—**

- உற்பத்திக் கழகம் .. .. .. 717

**சின்னராசு, திரு. க. இரா.—**

- தொழிற் கல்விக் கூடம் (பாலிடெக்னிக்), தர்மபுரியில் நிறுவுதல் .. .. .. 722

**சுந்தரராஜ் திரு. நா.—**

- பேருந்துகளில் இன்வாய்ஸ் எழுதுவதை நிறுத்தல் 281
- உறுப்பினர் திரு. ர. ஜெபமணி தாக்கப்பட்டதாக பத்திரிகைச் செய்தி, போலிஸ் பாதுகாப்பு, (த. கோ.) .. .. .. .. 295
- பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. 1047—1049

**சுந்தரம், திரு. ப.—**

- விவசாயிகள், கரும்புக் கட்டணத்தை உயர்த்தல் 283

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியம், திரு. ஒ.—

கல்லல் பஞ்சாயத்து கணக்குகள், தணிக்கை. 2

மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு .. .. .. 1092—1095

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு .. } 381—439, 448—450

நுகர்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு
மீனளம் .. .. 74

சுப்பிரமணியம், திரு. கே. ஜெ.—

செண்பகத்தோப்பு அணைத் திட்டம், நிறைவேற்றப்படாமை .. .. .. 711

சுப்பிரமணியம், திரு. சின்னசேலம் மா.—

அம்மாபேட்டை சாலை, நெடுஞ்சாலைத் துறை ஏற்பு .. .. .. .. 581

அரிசனங்களுக்கு வீடுகள் (தெ. மா.) .. 998—1002

கரும்பு விவசாயிகளுக்கு பணம் நிலுவை, சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு 1008—1009

கல்லூரிகள், ஷிப்ட் முறைக் கல்வி (சேலம்) 264

சுப்பிரமணியன், திரு. வ. மு.—

கிருதமால் நதி. சீரமைப்பு .. 986—988

கௌரவ நீதிபதிகள், மீண்டும் நியமித்தல் 715

மானாமதுரை துணை தாலுகாவை, தாலுகாவாக உயர்த்துதல் .. .. .. .. 3—4

சுப்பிரமணியம், பாக்கூர் திரு. சு—

உத்தரமேரூர் பேரூராட்சி மருத்துவ மனையை வட்ட மருத்துவ மனையாக மாற்றுதல் 47



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பு, திரு. க.—

சுப்பு, திரு. க-வின் மீது எழுப்பப் பட்ட பிரச்சினை (உ. பி.) .. .. .. 883, 884

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல். கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978 897

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. .. 1066—1072, 1084

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு .. .. .. .. .. 6160—1 72, 1084

''விற்கிளாஸ்'' மாதவரம், கதவடைப்பு (ஒ, தி.) 885—887

சுப்புலட்சுமி, திருமதி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு,
காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு .. .. .. 445—448

சுவாமிதாஸ், திரு. அ.—

தமிழ்நாட்டில் இறைவைப் பாசனம், விவரம் .. 254

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு .. .. .. } 381, 389, 383, 3841, 411—42

சட்ட மன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். .. .. } 302—308

சுற்றுலா—

சென்னை நகரில் ஓட்டல்களை விரிவுபடுத்த கடன் மனுச் செய்தவர்கள் .. .. 46

பக்கங்கள்

ச—தொடர்ச்சி

**செல்லப்பா, திரு. அ.—**

பள்ளியக்கிரகாரம் — நீடாமங்கலம் சாலை, பணிநிலை. .. .. .. .. 581—582

**செல்வராசன், திரு. அ.—**

வள்ளுவர் நகரில் (சென்னை துறைமுகத் தொகுதி) ஏற்பட்ட தீ விபத்து. (க. ஈ.) .. .. 888, 889

**செல்வராஜ், திரு. மு.—**

நெய்வேலி டவுன்ஷிப் விவசாயப் பண்ணையில் பணி புரியும் இலங்கை அகதிகள், விவரம் .. 55

விருத்தகிரீஸ்வரர் ஆலய ஊழியர்க்குக் குடியிருப்பு விருத்தாசலம் .. .. .. .. 54

**சொக்கலிங்கம், திரு. ஜி —**

வரவு-செலவுத் திட்டம். 1978-79. வாக்கெடுப்பு :

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. 614

**சோமசுந்தரம், திரு. ஒ.ப.—**

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு

காட்டுவளத்துறை
காட்டு வள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு .. .. } 389—392

**சௌந்தரபாண்டியன், திரு. பெ.—**

அரிசனநலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு 1978. .. 613

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

காட்டு வளத்துறை
காட்டு வள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப் பதிவு .. .. } 444

**சௌந்திரராஜன், திரு. திருச்சி. ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. 638—644



பக்கங்கள்

ஞ

**ஞானசிகாமணி, திரு. தே.—**

முன்னாள் திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப் பட்ட நகரமன்ற ஊழியர்களுக்கு இருந்த சலுகைகள் .. .. .. 867—868

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

காட்டுவளத்துறை
காட்டு வள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு .. .. } 404—407

நுகர் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு .. .. } 10—109
மீனளம்

த

**தலைவர்—**

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் காட்டப்பெறும் பொருட்கள்—

ஓர் உறுப்பினர் பேசும்போது தட்டு, சட்டை போன்ற பொருட்களை 1978, மார்ச் 30 ஆம் தேதி அவையில் கொண்டு வந்து, முன் அனுமதியின்றி காட்டியதை தலைவர் கண்டித்ததோடு கீழ்க்கண்டவாறு தீர்ப் பளித்தார்.

"சபையில் ஏதாவது பொருட்களை காண்பிக்க வேண்டுமென்றால் என்னிடம் காண்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும். இனிமேலாவது உறுப்பினர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள் -

திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்தபோது "தலைவரின் ஒருதலைப்பட்சமான தீர்ப்பு ஒழிக" என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது குறித்து தலைவர் அளித்த குறிப்புரையாவது :

த—தொடர்ச்சி.

**தலைவர்**—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

அவையில் பயன்படுத்தப் பெறும் சொற்கள்—தொடர்ச்சி.

"உறுப்பினர்கள் அனைவருக்கும் வெளி நடப்பு செய்வதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது. தே நேரத்தில் இந்த சபையின் கண்ணியம் காக்கப்படும் வகையில் அவர்கள் வார்த்தைகளை உபயோகப் படுத்த வேண்டுமென்ற மரபு இருக்கிறது. அந்த மரபினை திரு. துரைமுருகன் அவர்கள் மீறி, வெளிநடப்பு செய்கின்ற நேரத்தில் 'தலைவரின் ஒருதலைப்பட்சமான தீர்ப்பு ஒழிக' என்று சப்தமிட்டுக் கொண்டே சென்றார். அவர் இந்த சபையின் நடவடிக்கைளில் கலந்து கொண்டு, எப்படிப் பேசினார், எப்படி சபையிலே நடந்துகொண்டார் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அவர் கூறிய வார்த்தைகள் அப்படியே இருக்கட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்." .. 440

"தெரியாது" என ஓர் மூல வினாவிற்கு அமைச்சர் அளித்த பதில் குறித்து ஆட்சேபம் எழுந்தபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"ஆம், அல்லது இல்லை என்று விடையளிக்கலாமே தவிர, 'தெரியாது' என்று சொல்வது சரியல்ல." .. .. 873

**உரிமைப் பிரச்சினைகள்**—

**உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மீது**—

அவையிலே ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அவரைப் பார்த்து திரு. க. சுப்பு குறிப்பிட்ட சில வார்த்தைகள் அவை உரிமை மீறிய செயலாகும் என சில உறுப்பினர்களால் 1978, மார்ச் 17 ஆம் நாள் எழுப்பப்பெற்ற உரிமைப் பிரச்சினைகளுக்கு தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு அளித்தார்:



த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள்மீது—தொடர்ச்சி.

"இப்பிரச்சினை அவையில் எழுப்பப்பட்டபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் முதல் நாள் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமிக்கும் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். எனவே, அதனை ஏற்றுக் கொண்டு எழுப்பப்பட்ட பிரச்சினை மீது மேற்கொண்டும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இதை அவை ஏற்கும் என நம்புகிறேன்" .. .. .. 731

தலைவரைப் பார்த்து திரு. க. சுப்பு குறிப்பிட்ட சில வார்த்தைகள் அவை உரிமையை மீறிய செயலாகும் என 1978, மார்ச் 23 ஆம் நாள் எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்:

"அவைத் தலைவர் தீர்ப்புக்கு மாசு கற்பிக்கும் வகையிலோ அல்லது கண்ணியக் குறைவாகவோ அல்லது அவைத் தலைவரின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்று குறிப்பிடுவதோ, அல்லது அவைத் தலைவர் வழங்கும் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதோ இதுபோன்ற வேறு முறைகள் அவையின் கண்ணியத்தைக் காப்பதாகாது என்றும், இம்மாதிரி நடவடிக்கைகள் கண்டிக்கப்படத்தக்கவை என்றும் பல்வேறு

த—தொடர்ச்சி.

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மீது—தொடர்ச்சி.

முன்மாதிரித் தீர்ப்புகள் உள்ளன. இவைகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அன்று நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து இனிமேல் இவ்வாறு நிகழ்ச்சி நடைபெறுது என்று தெரிவித்தால் இப்பிரச்சினையை இத்தோடு விட்டு விடலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்'' .. .. .. 882—883

திரு. க. சுப்பு அவர்கள் தாம் சொன்னதை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்ததால், இப்பிரச்சினை இதோடு விடப் பெறுவதாக குறிப்புரைத்தார். .. .. .. .. 884

உறுப்பினர் திரு. துரைமுருகன் மீது—

''துணைத் தலைவரின் தீர்ப்பு ஒழிக'' என்று எதிர்க்கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்த போது கூறிய வார்த்தைகள் தலைவரின் தீர்ப்புக்கு களங்கம் கற்பிப்பதாக உள்ளது என்றும், அதனை உரிமைக் கு··வுக்கு அனுப்பவேண்டும் எனவும், ஓர் உறுப்பினர் கேட்டதற்கிணங்க, தலைவர் அந்தப் பிரச்சினையை உரிமைக் கு''விற்கு அனுப்புவதாக அறிவித்தார்.

உடனே வேறு ஒரு உறுப்பினர் எழுந்து, அந்தப் பிரச்சினை குறித்து எந்தவிதமான தீர்மானமோ, எழுத்து மூலமான அறிவிப்போ கொடுக்காமல், வாயாலேயே மட்டும் கூறியிருப்பது சரியானதுதானு எனக் கேட்டபோது, தலைவர் கீழ்க் கண்டவாறு தீர்ப்பளித்தார் :





த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

உறுப்பினர் திரு. துரைமுருகன் மீது—தொடர்ச்சி.

''சபைக்கு வெளியே நடந்த நிகழ்ச்சிகளையும் அல்லது இதற்கு முன்னுலே நடந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டுச் சொல்லும்போது எழுதிக் கொடுக்க வேண்டும். ஆனல் சபைக்குள்ளே இதைப் போன்ற பிரச்சினைகள் வரும் போது உடனடியாக உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ருல் எழுத்து மூலமாக அல்லாமல் வாய் மூலமாகவும் சொல்லலாம். அதை உரிமைக்குழுவிற்கு அனுப்புகிற உரிமை சபையினுடைய தலைவருக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' .. 441

'பள்ளி மாணவர்களுக்கு வழங்கப் பெற்ற தட்டுக்கள்' என சில தட்டுக்கள் 1978, மார்ச் 30-ம் தேதி உறுப்பினரால் காண்பிக்கப்பட்டது குறித்து நீண்ட சர்ச்சை எழுந்துபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''தட்டுக்களை என்னிடம் காட்டாமல், எனக்குத் தெரிவிக்காமல் அவைக்குள் இதைக்கொண்டு வந்தது, காட்டியது தவறு. அந்தத் தட்டு உண்மையாகவே அந்தப் பள்ளியின் தட்டுதான் என்று முதலிலேயே தெரிந்திருக்க வேண்டும். பிறரைக் காயப் படுத்தக்கூடிய வகையில் உள்ள தட்டு போன்றவற்றை இந்த அவைக்குள் கொண்டுவரக் கூடாது.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி:

உறுப்பினர் திரு. துரை முருகன் மீது—தொடர்ச்சி.

பேரவை முன்னவர் அவர்கள் இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று விரும்பினால் உரிமைக் குழுவுக்கு அனுப்புவதில் ஆட்சேபணை இல்லை. அதற்குரிய தீர்மானத்தை முன்மொழியலாம்'' .. .. 755

பின்னர் உரிமைத் தீர்மானம் முன்மொழியப் பெற்று நிறைவேறியது

இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது .. .. 758

எதிர்க்கட்சித் தலைவர் மீது—

பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகள் பற்றிய விவரங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு அரசின்மீது களங்கத்தை உண்டாக்க வேண்டும் என்று தவறான தகவல்களை இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளது, அவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் 1978, ஏப்ரல் 1 ஆம் நாள் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினர். இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவரும் தம்முடைய கருத்தைத் தெரிவித்தார். தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''இதன்மீது எனது தீர்ப்பு பின்னால் அறிவிக்கப்படும்''* .. .. 1019

ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுக்கப் பெற்றிருக்கும் ஓர் பொருள் பற்றி மேலவையில் விவரம் அளித்தது குறித்து அவையில் 1"-3-1978 ஆம் நாள் எழுப்பப்பெற்றிருந்த உரிமைப் பிரச்சினை குறித்து தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :

* 1978, ஏப்ரல் 7 ஆம் நாள் தீர்ப்பளித்தார்.





த— தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

எதிர்க்கட்சித் தலைவர்மீது—தொடர்ச்சி.

''அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில கோட்பாடுகளுக்கு இணங்க சட்டமன்றத்தில் இரு அவைகளும் சம உரிமைகள் பெற்றவை. ஒரு அவையில் நடைபெறும் நிகழ்ச்சி குறித்து அது சரியா, தவறா என்பது பற்றி, அந்த அவையிலன்றி வெளியிலே அது சரியா, தவறா என்ற பிரச்சினைகளோ நடவடிக்கைகளோ எடுக்கக்கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 194 (2) வது விதியின்கீழ் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒரு அவையின் நடவடிக்கை பற்றி மற்றொரு அவையில் உரிமைப் பிரச்சினை எழுப்புவதும் மரபு அல்ல என்று பல்வேறு தீர்ப்புகள் உள்ளன. அவ்வாறு நிகழுமாயின் உடனுக்குடனே அந்த அந்த அவைத் தலைவர்கள் மற்ற அவையின் உரிமையைப் பாதுகாப்பது வழக்கம்.

எனவே மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.'' .. .. .. 882

சமூக நலத்துறை அமைச்சர் மீது—

அவையில் சொல்லப் பெற்ற குற்றச்சாட்டு ஒன்றிற்கு அமைச்சர் தன்னிலை விளக்கம் அளிக்கும்போது, குற்றச்சாட்டைக் கொண்டு வந்த உறுப்பினரின் ஆலோசனைப்படிதான் தாம் அந்தக் காரியத்தைச் செய்ததாக அரசுத்துறை அலுவலர் ஒருவரால் கொடுக்கப்பெற்ற கடிதம் ஒன்றினை அவையில் படித்துக் காட்டியதன் மூலம் தமக்கு களங்கம் ஏற்படுத்தி இருப்பதோடு, தம்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

சமூகநலத்துறை அமைச்சர் மீது—தொடர்ச்சி

கடமையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையை உண்டாக்கியிருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் உரிமைப்பிரச்சினை ஒன்றை 1978, மார்ச் 29 ஆம் தேதி எழுப்பினார்.

இதுபற்றி உறுப்பினர், கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோரது கருத்துக்களைக் கேட்டறிந்தபின், தம்முடைய தீர்ப்பு பின்னால் அறிவிக்கப் பெறும் எனத் தலைவர் குறிப்புரைத்தார்* .. .. .. 582—608

''தினமலர்'' நாளேட்டின் மீது—

குறிப்பிட்ட ஒரு பிரச்சினை மீது வெளிநடப்பு செய்த கட்சிகளோடு சேர்ந்து வெளிநடப்பு செய்துள்ள ஓர் கட்சியின் பெயர் மட்டும் விடப்பட்டிருப்பது குறித்து, 1978 மார்ச் 11-ஆம் தேதி தினமலர் நாளேட்டின் மீது எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை குறித்து பத்திரிகை ஆசிரியரிடம் இருந்து வந்த கடிதத்தைப் படித்துக் காட்டி விட்டு தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்:

''சூழ்நிலை காரணமாகத் தவறு ஏற்பட்டுள்ளது என்றும் அதற்காக வருத்தமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் மட்டும் விடுபடக் கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டதென்று தெரியவில்லை, ஆயினும், அவர்கள் உள்நோக்கம் இல்லை என்றும், வருத்தமும் தெரிவிப்பதால் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதி, இத்துடன் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். .. 735—736

*1978 ஏப்ரல் 6 ஆம் தேதி தலைவர் தீர்ப்பளித்தார்.



லவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

''மக்கள் குரல்'' நாளேட்டின் மீது—

அன்னியர் ஒருவரைப் பேரவைக்கு தாம் அழைத்து வந்ததாக பேரவையில் தலைவர் குறிப்பிட்டதாக மக்கள் குரல் நாளேட்டில் வந்துள்ள செய்தி குறித்து 15-3-1978-ஆம் நாளன்று ஓர் உறுப்பினரால் எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் தீர்ப்பளிக்கையில் பத்திரிகை ஆசிரியரிடம் இருந்து வந்த கடிதத்தை அவைக்குப் படித்துக் காட்டி விட்டு கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

''தவறுக்கு வருத்தம் தெரிவித்தும், இனி இம்மாதிரி தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வதாகவும் எழுதி இருப்பதை ஏற்றுக் கொண்டு, இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம்.'' 736—737

ஒழுங்குப் பிரச்சினைகள்—

தம்முடைய தொகுதியில் கொண்டாடப் பெற்ற அரசுவிழா ஒன்றினுக்கு தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அதில் கலந்து கொள்ள தமக்கு அழைப்பு அனுப்பாதது பற்றி ஓர் உறுப்பினர் 21-3-1978 அன்று எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு 30-3-1978 அன்று தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

''இது உறுப்பினர் தொகுதி பற்றியது. இப்பேரவை சம்பந்தப் பட்டது அல்ல. எனவே, பேரவைத் தலைவர் இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. இருந்தாலும் அரசாங்க நிகழ்ச்சிகளில் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்களை அழைப்பது நல்லது என்ற நோக்கத்தோடு, பேரவைத் தலைவர் என்ற முறையில், எந்தெந்தத் தொகுதிகளிலே அரசாங்க

பக்கங்கள்

த—தொடர்ச்சி.


தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

நிகழ்ச்சிகள் நடக்கிறதோ அங்கேயெல்லாம் மக்கள் பிரதிநிதிகளை அழைப்பது தான் மரபு, நியாயம் என்பதை என்னுடைய அறிவுரையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.'' .. 738

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வழங்க முன் வந்துள்ள சில சலுகைகளை. சில கட்சியினர் ஏற்கப் போவதில்லை என பத்திரிகையில் அறிவிப்பு செய்துள்ளது குறித்து பிரச்சினை எழுப்பப் பெற்ற போது தலைவர் அளித்த குறிப்புரை யாவது:

''Any person entitled to any salary or allowances under this Act may relinquish a whole or any portion thereof.

சம்பளமோ, படியோ வாங்குவதும், வாங்காததும் உறுப்பினர்கள் பிரியம். இதற்கு ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.'' .. 894

சட்ட மன்றக்கட்சி அலுவலகத்தில், அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டலாமா என்ற ஓர் ஒழுங்குப் பிரச்சினையை 1978 மார்ச் 31-ஆம் தேதி ஓர் உறுப்பினர் எழுப்பிய போது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:

''சட்டமன்ற கட்சி அலுவலகத்தில் கட்சியினுடைய கூட்டத்தைக் கூட்டலாமா வேண்டாமா என்பதற்கு விதிகள் தெளிவாக இல்லை. இரண்டாவது. கட்சியின் தலைவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாக் கட்சிகளிலும் நடைபெறுகின்றன. ஆகவே அதைப்பற்றி விதிகளை தெளிவாக ஏற்படுத்தித் தருவார்களானால் பிறகு, அதைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறேன்.'' .. 879




பக்கங்கள்

த—தொடர்ச்சி.


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—

மத்திய அரசு சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவில் அலுவல்கள் இந்தியில் நடைபெற வேண்டும் என்று கூறப்படுவதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து—

மாண்புமிகு நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 295

மாதவரம் 'வீர் கிளாஸ்' நிறுவனம் கதவடைப்பு செய்தது குறித்து—

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது. .. 885—888

தன்னிலை விளக்கம்—

அமைச்சர் அளித்த தன்னிலை விளக்கத்தின் மீது கருத்துக்கள் சொல்வது மரபு இல்லை. .. 401

தாம் சம்பந்தப்பட்டதற்கு ஓர் உறுப்பினர் தன்னிலை விளக்கம் அளிக்கலாம். இன்னொருவரைப் பற்றிச் சொல்லக் கூடாது. .. 803, 805

நடைமுறைகள்—

உரிமைப் பிரச்சினை—

எழுப்புதல்—

''ஏற்கெனவே நடந்த விஷயமாக இருந்தால் கண்டிப்பாக 'ரிட்டன் நோட்டீஸ்' கொடுத்து விட்டுத்தான் எழுப்ப முடியும், அது விதி, நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சி பற்றி உரிமைப் பிரச்சினை எழுப்புவது என்றால் நோட்டீஸ் கொடுத்து விட்டு பிறகு

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

எழுப்புதல்—தொடர்ச்சி.

தான்எழுப்ப முடியும், இன்று, அவையில், இப்போது நடந்த நிகழ்ச்சி என்றால் without notice you can raise. அதோடு அமைச்சர் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மென்ட் மீது, அவர்கள் கொடுத்ததற்குப் பிறகு உடனடியாக எந்த விதமான டிஸ்கஷன் அல்லது கேள்விகள் கேட்க இந்த அவையில் உரிமை கிடையாது. அனுமதியும் கிடையாது. .. 911

விவாதம்—

ஒழுங்குமுறை—

அவையில் உறுப்பினர்கள் விதிகளையும் மரபுகளையும் கடைப் பிடிக்க வேண்டும். .. 438

மரபுகளை மீறிப் பேச எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது. .. 439

குற்றச்சாட்டு—

"தனிப்பட்டவர்களைப் பற்றி குற்றச் சாட்டைச் சொல்லும் போது ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. ஆதாரம் இருந்தாலும் தலைவரிடம் காட்டி விட்டுத்தான் பேச வேண்டும்." .. 437, 765

பொறுப்பேற்றுக்கொண்டு குற்றச் சாட்டுகளைச் சொல்ல வேண்டும். 434, 437

வெளியே பேசிக் கொள்கிறார்கள் என்று சொல்லி குற்றஞ் சாட்டிப் பேசுவது சரியல்ல. .. 343







த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டு—தொடர்ச்சி.

தலைவர் தீர்ப்பு குறித்து—

தீர்ப்பு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று எந்த உறுப்பினரும் தலைவரைக் கட்டுப்படுத்த முடியாது. 438

பேசும் முறை—

தலைவரின் அனுமதி இல்லாமல் யாரும் பேசக்கூடாது. .. 761

வினாக்கள்-விடைகள்—

துணை வினாக்கள்—

சுருக்கமாகக் கேட்க வேண்டும், .. 25, 271, 272, 284

நேராக (Direct) போட வேண்டும். .. 708

மூலக்கேள்வியை ஒட்டி இருக்க வேண்டும். .. .. 19, 256, 284, 725, 732

தகவல் கோரல்—

உறுப்பினர் திரு. ர. ஜெபமணி தாக்கப்பட்டதான பத்திரிகைச் செய்தி, போலீஸ் பாதுகாப்பு. 295

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம்—அரசு அறிக்கை .. .. 299

தன்னிலை விளக்கம்—

மதுரை சுற்றுப்பயணம் பற்றி திரு. ரகுமான் கான் குற்றச்சாட்டுக்கு சமூக நலத்துறை அமைச்சர் அளித்த விளக்கம் .. 400—404

வெள்ள நிவாரணப் பணி பற்றி எதிர்க்கட்சி கூறிய குற்றச்சாட்டு குறித்து .. .. .. 1019-1023

தனசேகரன், திரு. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மீனளம் .. }
நுகர்பொருள் வழங்கல் .. } 102—106
பல்வகை மூலதனச் செலவு .. .. }

பக்கங்கள்

த— தொடர்ச்சி.

**தாமரைக்கனி, திரு. இரா.—**

வீட்டு வசதித் திட்டம், திருவில்லிபுத்தூர் (இ. மா) .. .. .. .. 247

**தாழ்த்தப்பட்டோர்—**

மாணவர்களுக்கு உதவித்தொகை .. ..1002—1004

**திரை அரங்கு(கள்)—**

வரி விவரங்கள் .. .. .. 44

**திரைப்படம்—**

வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணங்கள் .. 56

**தீர்மானங்கள்—**

பார்க்க: ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

**துரை கலியமூர்த்தி, திரு.—**

கிணறுகள், தென்னாற்காடு மாவட்டம், மின் இணைப்பு கொடுத்தல் .. .. .. 858—859

சாலைப்பணியாளர்களை கிராமப்பஞ்சாயத்தில் நிரந்தரமாக்குதல் .. .. .. 11

சிதம்பரம் வட்டம்—

ஒன்றிய பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை .. 65

தென்னார்க்காடு மாவட்டத்தில் மினி பஸ்கள் .. 62

பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பாளையங் கோட்டையில் அமைத்தல் .. .. 7

மருதூர் கிராமம் வடிகால் வசதி பாதிப்பு .. 59

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

மீனளம்
நுகர்பொருள் வழங்கல் .. } 74, 75

பல்வகை மூலதனச் செலவு .. 710

வீராணம் ஏரி, பாசன நிலங்கள் விவரம் .. 64

வெள்ளத்தால் சேதம் 65

வெள்ளாற்றில் சேதமடைந்த ஏரிகள் ..

**துரை கோவிந்தராசன், திரு.—**

கூட்டுறவு வங்கிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் .. 717

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
இந்து சமய அறக்கட்டளைகள், சட்ட நிர்வாகம் 622—627



பக்கங்கள்

த— தொடர்ச்சி.

**துரை முத்துச்சாமி, திரு.—**

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம், அரசு அறிக்கை (த. கோ.) .. 299

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் வண்டியில் தமிழில் செய்தி அறிவிக்கப்படுவது குறித்து (த. கோ.) .. 67

திருமணமாகாத உறுப்பினர்கள் ரயில் பிரயாணச் சலுகையைப் பயன்படுத்துவது குறித்து (த. கோ.) .. .. .. .. 879

விரைவுப் பேருந்துகள், புகார்ப் புத்தகம் .. 275

வேலூர்-திருச்சி வழி மூங்கில்துறைப்பட்டு தடங்களில் விரைவுப் பேருந்து விடுவது குறித்து .. 29

**துரைமுருகன், திரு.—**

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு .. 1036—1038

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காட்டு வளத் துறை. ..
காட்டு வள மூலதனச் செலவு. ..
கூட்டுறவு. .. .. ..
சின்கோனு. .. .. ..
பத்திரப்பதிவு .. .. ..
} 433—439

**துலுக்காணம், திரு. வ.—**

உளுந்தூர்ப்பேட்டை தொகுதி கிராமங்களில் கோமுகி நதியின் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராமை, விவசாயிகள் பாதிப்பு (க. ஈ) .. 296

செங்குறிச்சி (தெ. மா.), தீ விபத்து (க. ஈ.) .. 1032, 1033

**தைலப்பன், திரு. டி. எம்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காட்டுவளத் துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப் பதிவு .. .. ..
} 387—389

**தொழிற்சாலைகள்—**

இந்துஸ்தான் எக்யூப்மென்ட் மானுபாக்சரர்ஸ், சிங்காநல்லூர் .. .. .. .. 728—729

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தொழிலாளர்கள்—
இன்சூரன்ஸ் திட்டம், உடுமலைப்பேட்டை .. 272
'தினமலர்' நாளிதழ் ஊழியர் வேலை நிறுத்தம். 61
பீடித் தொழிலாளர்கள், மருத்துவ வசதி .. 268
மன்னார்குடி பாமணி உரமணி ஆலையில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்கள் .. .. 60—61

ந

நடராசன் திரு. ஆ.—
இந்துஸ்தான் எக்யூப்மெண்ட் மானுபாக்சரர்ஸ், சிங்காநல்லூர் .. .. .. .. 728
திருப்பூரில் வீட்டுமனைப் பட்டா அளித்தல் .. 4
மதுக்கரை உயர்நிலைப்பள்ளி, கட்டடத் திட்டம். 573—574

நல்லதம்பி, திரு. தீ. சு.
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978 .. 942—945
963

நாராயணசுவாமி முதலியார் திரு. கே.—
கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1978. .. 892, 893

நிதி அலுவல்கள்—
வரவு-செலவுத் திட்டம்—1978-79 வாக்கெடுப்பு :
இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 614—671
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு,
ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் } 672—673
இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்
ஜமீன்தார்களுக்கு இழப்பீடு 384—467
காட்டுவளத் துறை .. .. .. 385—476
காட்டுவள மூலதனச் செலவு .. .. 381—467
கூட்டுறவு .. .. .. .. .. 300—378
சட்டமன்றம் .. .. .. .. .. 382—467
சின்கோனா .. .. .. .. .. 301—379
தேர்தல்கள் .. .. .. .. .. 380—466
பத்திரப்பதிவு .. .. ..



பக்கங்கள்

ந— தொடர்ச்சி.

நிதி அலுவல்கள்— தொடர்ச்சி

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு— தொடர்ச்சி.
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் .. .. .. 301—379
மீனளம், நுகர்பொருள் வழங்கல் பல்வகை மூலதனச் செலவு .. .. .. 73—182

கூடுதல் மானியக்கோரிக்கை. 1977-78, வாக்கெடுப்பு:
ஆளுநர் செய்தி .. .. .. 674
இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.
எழுதுபொருள்-அச்சுத்துறை .. ..
கதர் .. .. .. } 674—686
கல்வி .. .. ..
காட்டுவளத்துறை .. .. ..
காட்டுவள மூலதனச் செலவு .. ..
கால்நடை வளர்ப்பு .. .. ..

காவல் துறை
கூட்டுறவு
கைத்தறியும் நெசவுத் தொழிலும் ..
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
சாலைகளும், பாலங்களும் .. ..
சாலைப்போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச்செலவு } 674—686
சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் .. ..
சிறைச்சாலைகள் .. .. ..
சின்கோனா .. .. ..

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்
தொழில்கள் .. .. ..
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு
தேர்தல்கள் .. .. ..
நகர்ப்பகுதி மேம்பாடு .. .. ..
நிலவரித்துறை .. .. .. } 674—686
நீதி நிர்வாகம் .. .. ..
நுகர்பொருள் வழங்கல் .. .. ..
பல்வகை .. .. ..
பல்வகை மூலதனச் செலவு .. ..

பக்கங்கள்

ந—தொடர்ச்சி

நிதி அலுவல்கள்—தொடர்ச்சி

கூடுதல் மானியக்கோரிக்கை 1977-78 வாக்கெடுப்பு— தொடர்ச்சி

பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்
பாசனம்
பொது சுகாதாரம்
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச்செலவு—கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் } 674 - 686

மருத்துவம்
மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்
மாநில ஆயத் தீர்வை
மாநில சட்டமன்றம்
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
வேளாண்மை
ஜமீன்தார்களுக்கு இழப்பீடு } 674—686

மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை 1970—71 வாக்கெடுப்பு:

ஆளுநர் செய்தி .. .. .. .. 687

எழுதுபொருள் அச்சுத்துறை
ஒய்வூதியங்கள்
ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்
கதர்
கல்வி
காட்டுவளத்துறை } 687—693

சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள் முதலியன
சிறைச்சாலைகள்
நீதி நிர்வாகம்
பஞ்சத்துயர் தணிப்பு
பல்வகை
பொது சுகாதாரம் குறித்த மூலதனச்செலவு
பொதுப்பணிகள்—உதவிமானியங்கள்
பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் } 687—693





பக்கங்கள்

ந— தொடர்ச்சி

நிதி அலுவல்கள்—தொடர்ச்சி

மிகைச்செலவிற்கான மானியக்கோரிக்கை 1970-71—
வாக்கெடுப்பு – தொடர்ச்சி.

மருத்துவம்—

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்.
தலைமையிடப் பணியாளர்கள்
மாநிலச் சட்டமன்றம்
மாவட்ட நிர்வாகம்— பல்வகை
மீனளம்
மோட்டார் வண்டி வரிச்சட்டங்கள்
நிர்வாகம் } 687—693

வளாண்மை—

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 687—693

ிர்வாகம்—

செஞ்சி வட்டத்தில் பொதுப்பணித் துறை பிரிவு அலுவலகம். .. .. .. .. 67

மானாமதுரை துணை தாலூகாவை, தாலூகாவாக உயர்த்துதல் .. .. .. .. 3—4

ிலங்கள்—

அரிசனங்களுக்கு சோழன் பேட்டையில் வீட்டு மனைகள் வழங்குதல் .. .. .. 43—44
ஆக்கிரமிப்பு தனியார் வாடகை வசூலித்தல், புதுக்கோட்டை மாவட்டம் .. .. 266
திருப்பூரில் வீட்டு மனைப்பட்டா அளித்தல் .. 4—5

ீக்கங்கள்—

757, 758,
759, 760,
761
764, 765
800,
875, 1029

பக்கங்கள்

ந—தொடர்ச்சி

நீதி மன்றங்கள்—

கௌரவ நீதிபதிகள், மீண்டும் நியமித்தல் .. 715—716

சப்கோர்ட் தென்காசியில் அமைப்பது குறித்து .. 5

நடமாடும் நீதிமன்றங்கள் இயங்குதல் .. 49—50

ஜுடிசியல் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு தர்மபுரியில் நிறுவுதல் .. .. .. 714—715

நீர்ப்பாசனம்—

இறைவைப் பாசனம், விவரம் .. .. 251

மருதூர் கிராமம் வடிகால் வசதி பாதிப்பு .. 59

அணைகள்—

ஆலந்துறையாறு திட்டம், கன்னியாகுமரி மாவட்டம் .. .. .. .. .. 557—558

கௌசிகா, அர்ஜுனு ஆறுகளின் குறுக்கே .. 850—856

குப்பநத்தம் திட்டம் .. .. .. .. 851—853

செண்பகத்தோப்பு திட்டம், நிறைவேற்றப்படாமை 711—713

ஆறுகள்—

அடையாறு, கரை உயர்த்துதல் .. .. 984—986

ஊற்றுகள்—

நீரூற்றுகள், கண்டுபிடிப்பு .. .. .. 980—984

ஏரிகள்—

வீராணம், பாசன நிலங்கள் விவரம் .. .. 710—711

கால்வாய்கள்—

குமரி மாவட்டத்தில், நவீனப்படுத்துதல் . 848—850

நாகையில் பாதுகாக்கப்படாமை .. .. 256





பக்கங்கள்

ந—தொடர்ச்சி

நீர்ப்பாசனம்—தொடர்ச்சி

குளங்கள்—

அய்யன்குளம், பழனி, மராமத்து செய்தல் .. 713

சாம்பக்குளம் (க.மா.) பரப்பளவு .. .. 977—978

நதிகள்—

கிருதமால்நதி, சீரமைப்பு .. .. .. 986—988

வரதாமா நதி, அணைக்கட்டுப்பணிகள் .. 847—848

நூலகங்கள்—

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், அபிவிருத்தித் திட்டம் .. .. .. 569—572

ப

பண்ணை சேதுராம் திரு. கே.—

குப்ரஜோதி, கிழங்கு, கொடைக்கானலில் விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) .. .. 611,613

பல்கலைக்கழகங்கள், புதியவை ஏற்படுத்துதல் .. 992—994

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1072-1074

பத்திரிக்கைகள்—

'தமிழரசு', சில விவரங்கள் .. .. .. 44

பல்கலைக் கழகம்—

புதியவை ஏற்படுத்துதல் .. .. .. 992—994

பழனிச்சாமி திரு. சொ. ந.—

அவிநாசி பேரூராட்சி, நகராட்சியாக உயர்த்துதல் 866—867

பழனிமுத்து திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காட்டுவனத்துறை
காட்டுவன மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு 384

பக்கங்கள்

ப— தொடர்ச்சி

பழனியப்பன் திரு. அ. ப.—

முந்திரி உற்பத்தியும் தொழில் வளர்ச்சியும் .. 567—569

பழனிவேல் திரு. என்.—

அய்யன்குளம் கண்மாய், பழனி, மராமத்து செய்தல் .. .. .. .. .. 713

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1049-1050

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு .. .. .. .. 1038-1039

வரதமாநதி அணைக்கட்டுப் பணிகள் .. .. 847—848

பள்ளிகள்—

உயர்நிலை, அருமனை .. .. .. .. 979—980

உயர்நிலை, சித்தலிங்கமடம் கட்டிடம் இடிந்தது குறித்து .. .. .. .. .. 6

சிதம்பரம் வட்டம், ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை .. .. .. .. 65—66

சென்னை மாநகராட்சி, விவரம் .. .. .. 59—60

தொழிற்பயிற்சிப் பள்ளி, திருவெறும்பூர், தேர்வில் முறைகேடுகள் .. .. .. .. .. 5—6

நகராட்சி, விவரம் 50

நகராட்சி உயர்நிலைப்பள்ளி, மாயூரம் .. 724—726

பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டையில் அமைப்பது குறித்து. 7—8

மதுக்கரை உயர்நிலைப்பள்ளி, கட்டடத்திட்டம் 573—574

மாதிரிப் பள்ளிகள், விவரம் .. .. .. 52

ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி, மன்னார்குடி, மூடுவது குறித்து 7

ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி, மன்னார் குடி, மூடிவிடுதல் (க. ஈ.) .. .. .. 890—892

பால் வளம்—

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் வழங்கு சங்கம், பால் விநியோகம் .. .. ..876—877





பக்கங்கள்.

ப—தொடர்ச்சி.

பாலங்கள்—

உப்பனாற்றின் குறுக்கே அமைத்தல் .. .. 871

குழித்துறை ஆற்றின் குறுக்கே அமைத்தல் .. 872

சோனநதியின் குறுக்கே .. .. 1009—1010

பாலன் திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு—

இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் 616—620

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு .. ..
சின்கோனா
பத்திரப்பதிவு } .. .. .. 386

வரவு-செலவுத் திட்டம், 1978-79. வாக்கெடுப்பு:

தேர்தல்கள்
மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. .. } .. 301

பிற்பட்டோர்—

மாணவர்களுக்கு உதவித் தொகை .. 1002—1004

புருஷோத்தமன் திரு. து.—

'அமுதம்' உணவு விடுதிகள், இயங்கும் முறை .. 562—565

பெரியசாமி திரு. ரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

இந்து சமய அறக்கட்டளைகள்-சட்ட நிர்வாகம் 627—632

பெருமாள் திரு. ரா. கு.—

அணை

கௌசிகா, அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே 850—851

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978- .. .. 922—923

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


**பொன்னுரங்கம் திரு. ப.—**

பாலம், உப்பனாற்றின் குறுக்கே .. .. 871

புதுமனைக்குப்பம் பகுதி மீனவர், குடிசைகளிலிருந்து வெளியேற்றல் .. .. .. .. 761

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

நுகர்பொருள் வழங்கல் .. ..
பல்வகை மூலதனச் செலவு .. ..
மீனளம் .. .. .. } 78—92, 163.

**பொன்னையன் திரு. சி.—**

பொதுவிற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1978 1044—1045

(பிரிவு வாரியாக ஆய்வு) .. .. 1059—1065

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. 1035—1036

(பிரிவு வாரியாக ஆய்வு) .. .. 1042—1044

மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு 1978 (அ.நி.) .. .. 73

வெள்ளநிவாரணப் பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (அறி) 906

வெள்ளநிவாரணப்பணி பற்றி எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து (த.வி.) 1024—102[illegible]

போக்குவரத்து—

இரயில்வே—

துரித வண்டிகள், கோவை—திருவனந்தபுரம்.. .. 580—581

கழகங்கள், சோழன் வருமான விபரங்கள் .. 58—59

நிர்வாகச் செலவுகள், அதிகரிப்பது குறித்து .. 19—29

பேருந்துகளில் இன்வாய்ஸ் எழுதுவதை நிறுத்தல் 281

மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை இழப்பு .. 277

மினி பஸ்கள், தஞ்சை மாவட்டத்தில் விடுதல் 868—870

மினி பஸ்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் விடுதல். 62—63

விரைவுப் பேருந்து—

அரூரிலிருந்து சென்னைக்கும், பெங்களூருக்கும் விடுதல் .. 30—31

விரைவுப் பேருந்து, புகார்ப் புத்தகம் .. 275

வேலூர்-திருச்சி வழி மூங்கில்துறைப்பட்டு தடங்களில் விடுதல் .. .. .. .. 29—30




பக்கங்கள்

ம


**மணிமாறன் திரு. மா.—**

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர், மாணவர்களுக்கு உதவித்தொகை .. .. 1002—1004

நீரூற்றுகள், கண்டுபிடிப்பு .. .. .. 980—984

மக்கள் குழுக்களில் தி. மு. க. வுக்கு இடம் அளிக்கப்படாமை (க.ஈ.) .. .. .. 69

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காட்டுவளத் துறை
காட்டுவள மூலதனச்செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு } 427—430

மருத்துவம்—

சித்த மருத்துவக் குழு, உறுப்பினர் நியமனம் (அ.நி.) .. .. .. 358

செவிலியர் பயிற்சி நடைபெறும் இடங்கள் .. 43

மருத்துவமனைகள்—

உத்திரமேரூர் பேரூராட்சி மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மாற்றுதல் .. 47—48

மனநோய் மருத்துவமனை, விவரம் .. .. 53

**மனோகரன், திரு. கி.—**

கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம், அரசு அறிக்கை, (த.கோ.) .. 299

சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத்துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) 607—608

சித்த மருத்துவக் குழு உறுப்பினர் நியமனம் (அ) 858

நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்) முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1978 (அ.நி.) 300

நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு, 1978 (அ.நி.) .. .. .. .. .. 673—674

நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1978 (அ.நி.) 686

நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1978 (அ. நி.) .. .. .. 694

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்ட முன்வடிவு, 1978, (அ.நி.) .. .. .. .. .. 299—300

மத்திய அரசு சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவின் அலுவல்கள் இந்தியில் நடைபெறல், பதட்டநிலை. (ஒ.தீ.) .. .. 291—295

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சட்டமன்றம்
தேர்தல்கள்
மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள் .. } 300, 301, 369—378

மாணவர்கள்—

பள்ளியிறுதித் தேர்வு, பரிசு 995—996

மாணிக்கம் திரு. சி.—

காடுகள் பரப்பளவு, திருச்சி மாவட்டம் .. .. 54

மார்க்கபந்து, திரு. ரா.—

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல், சட்ட முன்வடிவு, 1978 .. 945—947

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. 1042

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காட்டுவளத் துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு .. .. .. ..
சின்கோனா .. .. .. ..
பத்திரப்பதிவு .. .. .. } 381, 385, 440, 443—445

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—

சமூக நலத் துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ.பி.) .. .. . 593—594

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978 .. 897, 920-922



பக்கங்கள்

ம— தொடர்ச்சி

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—தொடர்ச்சி

போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவு அதிகரிப்பது குறித்து. .. .. .. 19

புதுக்கோட்டையில் பணிபுரியும் ஆசிரியர்கள், திருச்சிக்கு மாறுதல் .. .. .. 48

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு .. .. .. 1040—1041

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

நுகர் பொருள் வழங்கல் .. ..
பலவகை மூலதனச் செலவு .. ..
மீனளம் .. .. .. .. } 135—143

மின்சாரம் —

அனல் மின் நிலையத்திட்டம், தூத்துக்குடி .. 551—553

பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு, மன்னார்குடி. 259

விநியோகத்தில் கோளாறு, திருச்சி .. 553—557

மீனளம் :—

புதுமனைக்குப்பம் பகுதி மீனவர், குடிசைகளிலிருந்து வெளியேற்றல் .. .. .. 716—717

மீனவர், புத்தன்துறை .. .. .. 549—550

மீனாட்சிசுந்தரம் திரு. மா.—

திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளி ஆசிரியர்கள், ஒரு பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும்போது அச்சுறுத்துவதாகக் கூறப்படுவது குறித்து (த. கோ.) .. } 880—881

முத்தையா, திரு. இரா. —

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

சட்டமன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள்,
தலைமையிடப் பணியாளர்கள். . } 34

பக்கங்கள்

ய

யூசுப் திரு. யா. சை. மு.—

ஆலந்துறையாறு அணைத்திட்டம், கன்னியாகுமரி மாவட்டம் .. 557 – 558

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு;—

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப்பதிவு .. } 425 – 427

ர

ரகுமான்கான், திரு. ஏ. —

கருத்தராவுத்தர் கல்லூரி, உத்தமபாளையம், நிர்வாகம் .. 1013—1015

கல்லூரி ஆசிரியர் சம்பளம், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரை .. 262

சமூக நலத் துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 582, 584-587

நிதியமைச்சர் கூறியது குறித்து, தன்னிலை விளக்கம் .. 621

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு .. 1085

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு

சட்டமன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. } 339—346

ரகுராமன், திரு. வீ —

வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு

நுகர்பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு ..
மீனளம் . } 77

ரகோத்தமன், திரு. கோ. —

சோன் நதியின் குறுக்கே பாலம் .. .. 1009—1010



பக்கங்கள்

ர—தொடர்ச்சி

ரசாக், திரு. எம். எம். ஏ. —

சப்கோர்ட் தென்காசியில் அமைப்பது குறித்து .. 5

ரமணி, திரு. மு. —

தொழிலாளர்கள் இன்சூரன்ஸ் திட்டம், உடுமலைப் பேட்டை .. .. .. .. .. 272

பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பை குறை கூறி திரு. துரைமுருகன் குறிப்பிட்டது குறித்து .. 441

மாணவர்களுக்கு பேருந்து கட்டணச் சலுகை, இழப்பு .. .. .. .. .. 277

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு

நுகர் பொருள் வழங்கல்
பலவகை மூலதனச் செலவு .. ..
மீனளம் } 76

ராமதாஸ், திரு, பி. —

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு,
காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப் பதிவு .. .. .. .. } 398 —400

ல

லத்திப், திரு எம். ஏ. —

சமூக நலத் துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது (உ. பி.) .. 594—595

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978. .. 936 942 953—963

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1055—1059

வரவு செலவு திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் 615, 649 653

காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனா
பத்திரப் பதிவு .. .. .. .. } 382, 384, 885

பக்கங்கள்

ல—தொடர்ச்சி

லத்தீப், திரு. எம் ஏ—தொடர்ச்சி

வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—தொடர்ச்சி
சட்டமன்றம்,
தேர்தல்கள்,
மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமை
யிடப் பணியாளர்கள் .. .. .. 346—358, 373

வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நுகர் பொருள் வழங்கல்
பலவகை மூலதனச் செலவு .. .. 75, 126-135
மீனளம்

வ

வங்கிகள் —

கிராம வங்கிகள், துவக்கம் .. .. .. 558—562

வரதராஜன், திரு. என் —

பட்டினப்பாக்கம் குடியிருப்புகள், சென்னை, வாடகை .. .. .. .. .. 726

வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
சட்டமன்றம்
தேர்தல்கள்,
மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமை
யிடப் பணியாளர்கள் .. .. .. 317—323

வாசன், திரு. சீ. மு. —

கிராமவங்கிகள், துவக்கம் .. .. .. 558—562

சென்னை மாநகராட்சிப் பள்ளிகள், விவரம் .. 59
நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் விவரம் .. 50

நிலத்தில் நுண்சத்துக்கள் ஆராய்ச்சி செய்தல் .. 31

வாரியம் —

வக்ப் —

கருத்தராவுத்தர் கல்லூரி, உத்தமபாளையம், நிர்வாகம் .. .. .. .. .. 1013—1015



பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

விபத்துக்கள் —

தீ, வள்ளுவர் நகரில் (சென்னை துறைமுகத் தொகுதி) ஏற்பட்டது குறித்து .. .. 888—889

ஜி. எஸ். இண்டஸ்டிரியல் தொழிற்சாலை, கோவில்பட்டி, விபத்து .. .. .. 51—52

விவசாயம் —

கரும்புக் கட்டணத்தை உயர்த்தல் .. .. 283
கரும்பு விலை, வினியோகம் .. .. .. 1004—1008
தஞ்சை மாவட்டத்தில் புகையிலை பயிரிடுதல் .. 62
நிலத்தில் நுண்சத்துக்கள் ஆராய்ச்சி செய்தல் .. 31—38
மரவள்ளி, கடலை, கரும்பு பயிரிடும் பரப்பளவு .. 62
முந்திரி உற்பத்தியும், தொழில் வளர்ச்சியும் .. 567—569
விவசாயிகளுக்கு நெல்விதை கொடுத்தல் .. 39—43
கிணறுகள், தென்னாற்காடு மாவட்டம், மின் இணைப்பு கொடுத்தல் .. .. .. 858—859
கூட்டுறவு கடன், ரிசர்வ் வங்கி அளித்த தொகை 990—992
கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு போனஸ், மதுராந்தகம் .. .. .. 249
கூட்டுறவு சர்க்கரை விவசாயிகளுக்கு போனஸ், வடஆற்காடு மாவட்டம் .. .. .. 248
விவசாயிகளுக்கு பணம் நிலுவை, சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு .. .. .. 1008—1009

விளையாட்டு —

வீரர்களை ஊக்குவிக்க திட்டம் .. .. .. 996—998

வின்சென்ட், திரு. மி.—

தொழில் நுட்பக் கல்லூரி, (க.மா.) தொழில் பிரிவுகளை அதிகரித்தல் . .. .. 1
சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கட்சிக்கூட்டம் கூட்டுவது (ஒ.பி) .. .. 878—879
சாம்பக்குளம் (க.மா.) பரப்பளவு .. 977—978
நீர்ப்பாசனக் கால்வாய்கள், குமரி மாவட்டம், நவீனப்படுத்துதல் .. .. 848—850
மீனவர், புத்தன் துறை .. .. 549—550

பக்கங்கள்

வ— தொடர்ச்சி

வின்செனட், தில், மீ.—தொடர்ச்சி
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காட்டுவளத்துறை
காட்டுவள மூலதனச்செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு } 430—433 434, 435, 440,

விஜயராகவன் திரு. பொ—
குடிநீர்த் திட்டம், கருங்கல் கப்பியறை பஞ்சாயத்துக்கள் .. .. 574—575
சட்டவிதிகளின் ஆய்வுக்குழு முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை அளித்தல். .. 299
நீர்ப்பாசனக் கால்வாய்கள் குமரி மாவட்டம், நவீனப்படுத்துதல் .. .. 848—850

வீட்டுவசதி—
காவலர் குடியிருப்புகள், விவரம் .. 57
திட்டம், திருவில்லிபுத்தூர் (இ.மா) .. 247
பட்டினப்பாக்கம் குடியிருப்புகள், வாடகை .. 726—727
விருத்தகிரீஸ்வரர் ஆலய ஊழியர்கள், விருத்தாசலம் .. .. .. 57
**வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள், சேலம் ... 575—576**

வீரப்பன் திரு. ஆர். எம்.—
வரவுசெலவு திட்டம்,1978–79, வாக்கெடுப்பு—
இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.. 614, 616, 663—671
காட்டுவளத் துறை
காட்டு வள மூலதனச் செலவு
கூட்டுறவு
சின்கோனு
பத்திரப்பதிவு .. .. } 459

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு திரு. வி.—
விரைவு இரயில் வண்டிகள், கோவை— திருவனந்தபுரம் .. .. .. 580—581



பக்கங்கள்

வ – தொடர்ச்சி

வெள்ளைச்சாமி, திரு. அ.—
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்— கழிவுநீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978. .. 928—929

வேணு கோபால். திரு. த.—
குப்பநத்தம் அணைத்திட்டம் .. .. 851—853
வரவு செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காட்டுவளத்துறை .. .. .. ..
காட்டுவள மூலதனச் செலவு .. ..
கூட்டுறவு .. .. .. .. ..
சின்கோனு .. .. .. .. ..
பத்திரப்பதிவு .. .. .. } 380
விவசாயிகளுக்கு நெல்விதை கொடுத்தல் .. 39

வேலைவாய்ப்பு—
அரிசனங்களுக்கு ஒதுக்கீடு .. .. 576—578

ஜ

ஜான் வின்சென்ட், திரு. மு.—
வரவு செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு
நுகர்பொருள் வழங்கல் .. ..
பல்வகை மூலதனச் செலவு ..
மீனளம் .. .. .. } 114—119

ஜெயவேலு, திரு. எம். ஏ.—
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்— கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு, 1978. .. 91 —919
மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டமுன்வடிவு— .. ..1095—1096

ஜேம்ஸ். திரு. ஜே
அருமனை உயர்நிலைப்பள்ளி— .. .. 979—980
உறுப்பினர் திரு. ர. ஜெபமணி தாக்கப்பட்டதான பத்திரிகைச் செய்தி போலீஸ் பாதுகாப்பு. .. 295
சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால்நடைத் துறை உதவி இயக்குநர் மீது .. 592—593

பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி

ஜேம்ஸ் திரு, ஜே.—தொடர்ச்சி

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–கழிவு நீர் அகற்றல் சட்டமுன்வடிவு, 1978 .. 929—932, 966—967

பாலம், குழித்துறை ஆற்றின் குறுக்கே .. 872

பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு . 1053—1055

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு..1078—1081, 1085

மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு .. ..1041—1042

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-

நுகர் பொருள் வழங்கல்
பல்வகை மூலதனச் செலவு
மின்னளம்
} 164,166

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1978 மார்ச், 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி.**

*குறுகிய கால வினா 8—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி (Industrial Training Institute)-ல் 'Trades' அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் 5,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வருவது அரசுக்குத் தெரியுமா? இப்படி 5,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வருவதில், டிராப்ட்ஸ்மேன் 16, மோட்டார் மெக்கானிக்ஸ் 16, ஒயர்மேன் 26, எலக்ட்ரோ பிளேட்டர்ஸ் 16, ஃபிட்டர் 28, வெல்டர் 24 என்று 126 பேர்கள்தான் எடுக்கப்படு கிறார்கள். ஆதலால் இன்னும் 250 பேர்களையாவது அதிகமாக இந்த ஆறு 'டிரேட்ஸ்'-ஆம் எடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று மட்டும் குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் தற்போது இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம் மத்திய அரசினரால் 1-11-1956 ஆம் ஆண்டு

மாநில அரசுக்கு மாற்றப்பட்ட பயிற்சி நிலையங்களில் ஒன்று. இப்பயிற்சி நிலையத்தில் 272 கைவினைஞர்களுக்கு கீழ்க்காணும் பொறியியல் தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. வரைபட வரைவாளர் (பொது) 32, மின்முலாம் பூசுதல் 32, கம்மியர் (மோட்டார் வாகனங்கள்) 32, பொருத்துநர் 64, பற்ற வைப்போர் (காஸ் மற்றும் மின்சாரம்) 48, மின் கம்பியாளர்கள் 64, ஆக மொத்தம் 272. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு மேலாகவே இருக்கிறது.

### கல்லல் பஞ்சாயத்து கணக்குகள்.

* குறுகிய கால வினா 9—திரு. ஒ. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லல் பஞ்சாயத்துக் கணக்குகள் பல ஆண்டுகளாக தணிக்கை செய்யப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) அப்படியெனில், அதற்கான காரணங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஒ. சுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பஞ்சாயத்துக் கணக்குகள் பல ஆண்டுகளாகத் தணிக்கை செய்யப்படாமல் இருப்பதைப்பற்றிய விவரத்தைக் கேட்டிருக்கிறேன். ஏற்கனவே வந்த ஒரு குறுகிய கால வினாவிற்கு, அந்தப் பஞ்சாயத்திலுள்ள ஒரு எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டை வேறொரு பஞ்சாயத்துக்கு விற்றுவிட்டதாகத் தகவல் கேட்டு, அதற்குப் பதில் சொல்லும்பொழுது அதை வாடகைக்குக் கொடுத்திருப்பதாக அன்றையதினம் அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி வாடகைக்கு கொடுப்பது சட்டபூர்வமாக சரியா? அப்படிக் கொடுத்திருந்தால் இவர்கள் கணக்கில் வரவு வைத்திருக்கிறார்களா? நரியங்குடி பஞ்சாயத்தில் கணக்கு எழுதி இருக்கிறார்களா? இது நடைமுறைச் சாத்தியமானதுதானா? அப்படியென்றால் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இந்த முறை வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மூலக் கேள்வி தணிக்கையைப் பற்றியது. தணிக்கை முறையாக இதுவரையில் நடந்திருக்கிறது. முன்பு கேட்ட குறுகிய கால வினாவிற்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.



### மானாமதுரை துணை தாலூகா.

* 668 வினா—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மானாமதுரை துணைத் தாலுகாவை, தாலூகாவாக உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. வ. மு. சுப்பிரமணியன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மானாமதுரை துணைத் தாலூகா ஆறு பிர்க்காக்களைக் கொண்டது. பரப்பளவும் தாலூகா அந்தஸ்துக்கு உள்ளதாக இருக்கிறது. அதனால் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தக் கோரிக்கை நெடு நாட்களாக இருக்கின்ற காரணத்தால் இதற்கு தாலூகா அந்தஸ்து கொடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவரவர்களே, மானாமதுரை துணைத் தாலூகாவை தாலூகாவாக ஆக்க வேண்டுமென்று 1976-77-ல், இதை முழுமையான வட்டமாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு இருந்து தள்ளி வைக்கப்பட்டது. அதற்கான காரணம் நிதிநிலை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு துணை வட்டத்தை முழுமையான வட்டமாக மாற்றுவதற்கு, ஒரு தாசில்தார், ஒரு தலைமைக் கணக்கர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர், மூன்று கடைநிலை ஊழியர்கள் ஆக இத்தனை பேர்கள் தேவை. ஆகையினாலே மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்புள்ள கோப்பு முதல்வரவர்களுக்கு சுற்றுக்கு அனுப்பப்பட்டபொழுது, முதல்வர் அவர்கள் அக்கோப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :—

'இது பெரிய பிரச்னையை உருவாக்குவதாக அமையும். எனவே, பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பின் ஆராய்ந்து விவாதித்து முடிவு செய்யலாம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : துணை தாலுகாவை முழு தாலுகாவாக உயர்த்தும்போது, அது எந்த அடிப்படையில்? ஜனத்தொகை அடிப்படையிலேயா அல்லது விஸ்தீரணத்தைப் பொறுத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : எந்த அடிப்படையில் என்பதைப்பற்றிய குறிப்பு இல்லை. ஆனல், மாருக எல்லாத் துணை மாவட்டங்களையும் முழுமையான வட்டங்களாகப் படிப்படியாக மாற்றியமைக்க 1971-ல் அரசு கொள்கை அளவில் முடிவெடுத்தது. அப்பொழுது இந்த மாநிலத்தில் 43 துணை வட்டங்கள் இருந்தன. 1973-74 ஆம் ஆண்டில் 4, 1974-75 ஆம் ஆண்டில் 7 துணை வட்டங்கள் முழுமையான வட்டங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. எந்த அடிப்படையில் தரம் உயர்த்தப்பட்டது என்பதற்கு தனிக் கேள்வி போடக் கேட்டுக்கொள்கிறேன்.

## திருப்பூரில் வீட்டுமனைகள் ஒப்படை.

* 669 வினு—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தாசில்தார் அலுவலகத்தில் 1 நவம்பர் 1977 முதல் இன்றுவரை கொடுக்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) 1 நவம்பர் 1977 முதல் இன்றுவரை ஏதேனும் பட்டா திரும்பப் பெறப்பட்டுள்ளதா?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : (அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி முதல் 1978 பிப்ரவரி முதல் வாரம் வரையில் 410 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருப்பூரில் கடந்த நவம்பர் மாதத்தில், ஒரு பட்டாவைத் திருப்பி வாங்கி இருக்கிறார்கள், தாசில்தார் அவர்கள். எனவே, அதுபற்றி தகவல் அமைச்சரிடத்தில் இருந்தால் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. கி. மனேகரன் : கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் 1977-ஆம் ஆண்டு, நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1978 பிப்ரவரி வரையில் 410 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. நடராசன் : பட்டா ஏதேனும் திரும்பப் பெறப்பெற்றதா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : நவம்பர் 1977 முதல் இன்று வரை ஏதேனும் பட்டா திரும்பப் பெறப்பட்டதா என்று கேள்வி. பதில் இல்லை.

## தென்காசியில் சப்-கோர்ட்.

* 670 வினு—திரு. எம். எம். ஏ. ரசாக் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், தென்காசியில் சப்-கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :

(a) Yes.

(b) The proposal is under the consideration of the Government.

## திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளி.

* 671 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொழிற்பயிற்சிப் பள்ளியில் (Industrial Training Institute) 10-7-1977 மற்றும் 11-7-1977 அன்று நடைபெற்ற தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளதுபற்றி அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[1978 மார்ச் 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) மற்றும் (ஆ) எந்தவிதமான முறைகேடுகளும் நிகழவில்லை.

### சித்திலங்கமடம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

* 672 வினா—திரு. இல. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், திருநாவலூர் தொகுதியில் உள்ள சித்திலங்கமடம் என்ற கிராமத்தில் பொதுப்பணித் துறையில் 1973-74-ல் கட்டப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் ஒரு வருடத்திற்குள் இடிந்து விழுந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) இப் பழுதடைந்த கட்டடத்தினை சீர் செய்வதற்கு ரூ. 27,600-க்கான மதிப்பீட்டை விழுப்புரம் பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : 1973-74-ல் கட்டப்பட்டு இடிந்து விட்டது என்பதுதான் இந்தக் கேள்வியினுடைய எண்ணமாக இருக்கிறது. ஆகவே, யார் கான்ட்ராக்ட் எடுத்தது? யார் இப்படிப்பட்ட நிலையை உண்டாக்கினார்கள்? அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நெடுஞ்சாலை கிராமப்பணி தலைமைப் பொறியாளரிடம் இப்பள்ளிக் கட்டடம் விழுவதற்குக் காரணம், இதற்கு பொறுப்பாளர்கள் யார் என்பதைப்பற்றி ஓர் விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்னார் 18-3-1978 அன்று ஓர் நேர்முகக் கடிதத்தின் மூலம் நினைவுறுத்தப்பட்டிருக்கிறார்.



1978 மார்ச் 27]

### மன்னார்குடியிலுள்ள நடுநிலைப் பள்ளி.

* 673 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் உள்ள ஜெயலக்ஷ்மி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடி விடுவதாக அதன் நிர்வாகி அறிவித்துள்ளாரா?

(ஆ) அந்தப் பள்ளியை எடுத்து நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) மன்னார்குடி நகரமன்றம் இப்பள்ளியை எடுத்து நடத்துவதற்கு அறிவுரை வழங்குவது பரிசீலனையில் இருக்கிறது.

### பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

* 674 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.10)

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பாளையங்கோட்டையிலே, சுற்றுப்புற வட்டாரத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைத்தால் நல்லதாக இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அதை அரசுக்கும் மனுவாக அனுப்பி இருக்கிறார்கள். அதே நிலையிலே இன்று யூனியன் தலைமையிடமாக அமைப்பதற்குக் குறிப்பு இருக்கிறது. அதற்காக உடனடியாக இதைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 27

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அங்கே பெண்களுக்கான ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஊராட்சிகளில் தென்னை வளர்ப்பு.

* 675 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களுக்கு தென்னை வளர்ப்புக்காக உதவித் தொகை ஏதேனும் வழங்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு ஆணை 1062, நாள் 18-6-1977-ல் ஊராட்சித் தோட்டங்களைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 700 வீதம் 1977-78-க்கு ஒதுக்கப் பட்டுள்ளது. மாவட்ட அளவில் மொத்தத் தொகையையும் மாவட்ட ஆட்சியர் தேவையுள்ள ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் தென்னை பராமரிப்பும் அடங்கும்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏராளமான தென்னந்தோப்புகள் நாசமாகி இருப்பதாலே, இந்த ஒதுக்குதல் நார்மலாக இருக்கக் கூடிய ஒதுக்குதலாக இருக்கும்படி, அங்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்குவதற்கு சீக்கிரமாக அந்த தென்னந்தோப்புகள் வரு வதற்கு பைனான்சியல் அசிஸ்டன்ஸ் ஏதாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது பொதுவாக ஒதுக்கப்பட்ட ஒன்று. வெள்ளத்திலே பாதிக்கப் பட்டவைகளுக்கு ஒதுக்குகின்ற விவரம் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்களில் உள்ள அந்தத் தோட்டங்களில் ஊர மகிழ்ச்சியாகவும், மணமாகவும் இருப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரு சந்தன மரம் அளிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய



1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உத்தேசம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளிலே தென்னை வளர்ப்பது பயனுள்ள திட்டமாகும். அந்த அடிப்படையில் எல்லாச் சாலைகளிலும் கண்டிப்பாக தென்னை மரம் வளர்க்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டு அதற்கு உதவித் தொகை வழங்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பொதுவாக தோட்டப் பராமரிப்பு என்கிற வகையிலேதான் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதிலே 2/3 பாகம் அரசு மானியமாகவும், 1/3 பாகம் ஒன்றிய நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன. தென்னங்கன்றுகள் நடப்பட்டு அதைப் பராமரிக்க ஆகும் செலவு இதிலிருந்து வழங்கப்படுகிறது. எல்லாச் சாலைகளிலும் அமைப்பதற்கான குறிப்பு இதிலே இல்லை.

திரு. செ. வீ. சவுந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் தென்னங் கன்றுகள் சகாய விலையில் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. இவை எத்தனை வருடங்களில் பலன் தரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தென்னை எத்தனை வருடத்தில் பலன் தருமோ அத்தனை வருடத்திற்கு பலன் தரும்.

திரு. டி. பி. எம். பெரியசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காபி, டீ போன்றவைகளுக்கு போர்டு இருப்பதைப் போல தென்னைக்கும் ஒரு போர்டு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைக்கு உத்தேசம் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு காலங்களில் நட்டது 100 பட்டுப்போனது 101 என்று இருந்ததாகச் சொல்லப்பட்டது. அந்த நிலை மாறி நல்ல முறை யிலே அந்த மரங்களை வளர்ப்பதற்கும், செழிப்பாகப் பராமரிப்ப தற்கும் அரசு மேலும் பணம் ஒதுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச்சு 27

அதுமட்டுமல்ல. ஆள் தாண்டா தென்னை ஆயிரம் இருந்தால் அரசனும் அஞ்சுவான் என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கேற்ப ஒன்றியங்களின் பொருளாதாரத்தைப் பெருக்கும் வகையில் அதை ஊக்குவிக்க அரசு ஏதேனும் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், ஒன்றியங்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கும்தான் இந்த நடவடிக்கை.

**திரு. அ. க. அரங்கநாதன் :** தலைவரவர்களே, வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட தென்னங்கன்றுகளைப் பாதுகாப்பதற்காக மானியம் கொடுத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துப் பகுதிகளிலும் இவ்வாறு பாதுகாக்கப்பட வகை செய்யப்பட்டு இருக்கிறதா? கொய்யா, ஈச்சன், சாத்துக்குடி போன்றவைகளும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கு மானியம் கொடுக்க திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, இது பொதுவாக தோட்டப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை என்று குறிப்பிட்டேன். பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பற்றித் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த தென்னை வராத இடங்களில் புளிய மரம் நல்ல பலனை அளிக்கும். முன்பெல்லாம் பஞ்சாயத்துகளுக்கு புளியமரம் நடுவதற்கு உதவி அளிக்கப்பட்டு வந்தது. அதேமாதிரி புளியமரம் பராமரிக்கப்படுவதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஒவ்வொரு பகுதியிலும் எத்தகைய மரங்கள் பலன் அளிக்குமோ, அத்தகைய மரங்களை பராமரிக்கத்தான் இத் தொகை வழங்கப்படுகிறது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, பழத்தோட்டம் அமைப்பதற்காக ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தாலும், அந்தப் பழத்தோட்டங்கள் ஊராட்சிகளில் இல்லை என்றால், அந்த ஊராட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?



1978 மார்ச்சு 27]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஆங்காங்குள்ள ஊராட்சித் தலைவர் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, தி.மு.க. ஆட்சியில் மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டன. இந்த ஆட்சியில் அப்படி வெட்டப்படாமல் தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, மரமோ, கிளையோ எதையும் வெட்டக் கூடாது என்பது இந்த அரசின் கொள்கை.

**கீரபாளையம் ஒன்றியத்தில் உள்ள சாலைப்பணியாளர்கள்.**

*** 676 வினா—திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில், ரோடு வேலை செய்யும் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஊராட்சி ஒன்றியங்களில் சாலை வேலை செய்யும் பணியாளர்களை (கேங் மஸ்தூர்) நிரந்தரமாக்கும் திட்டம் ஏற்கனவே அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. துரை கலியமூர்த்தி :** தலைவரவர்களே, கீரபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் ரோடு வேலை செய்யும் பணியாளர்கள் 5-6 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் வேலை நிரந்தரம் இல்லை. சிதம்பரம் வட்டத்திலுள்ள மற்ற ஊராட்சிகளிலும் இதே நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஒன்றியங்களில் 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக பணி செய்கின்ற பணியாளர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் கீரபாளையம் ஒன்றியத்திற்கும் பொருந்தும்.

[1978 மார்ச்சு 27

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்றவர்கள் பலர் நிரந்தரப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். எஞ்சிய பணியாளர் களையும் நிரந்தரப்படுத்த திட்டம் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** எஞ்சி இருப்பவர்கள் எத்தனை ஆண்டுகாலம் பணிபுரிந்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவரவர்களே, அரசு காண்டி ராக்ட் முறையில் எந்த வேலையையும் செய்யக் கூடாது என்ற கொள்கையை அறிவித்து இருக்கிறது. இப்போது ரோடு வேலைகள் பூராவும், பஞ்சாயத்து யூனியன் கீழ் உள்ள ரோடு உள்பட, இன்று காண்டிராக்ட் முறையில் விடப்படுகிறது. இந்த வேலைகள் நிரந்தரமான வேலைகள். ஆகவே, அந்தப் பணியாளர் கள் அத்தனை பேரையும் நிரந்தரமாக்க பரிசீலனை என்று சொல் வதற்குப் பதிலாக—பரிசீலனை என்று ஆண்டுகணக்கில் இழுத்துக் கொண்டு போகாமல், அந்த வேலைகள் காண்டிராக்ட் முறையில் நடத்தப்படுவதால் உடனடியாக அவர்களை நிரந்தரமாக்க முடிவு செய்து, முதலில் ஒரு பகுதியினரையாவது நிரந்தரப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதைத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஆண்டுக்கணக்குப் பார்த்து அவர்கள் எத்தனை ஆண்டுகாலம் பணியாற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் அவர்களை நிரந்தரமாக்க முடியும். இல்லாவிட்டால் அதிலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படும் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். ஆகவே, முதலில் எந்த அளவிற்குப் பணியாளர்களை நிரந்தரமாக்க முடியுமோ அந்த அளவிற்குப் பணியாளர்களை நிரந்தரமாக்க அரசு முயற்சி எடுத்து இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா:** துணைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்கள் 10 ஆண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றினால்



1978 மார்ச்சு 27]

அவர்களை நிரந்தரமான தொழிலாளர்கள் என்று மாற்ற அரசு உத்தேசித்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 10 ஆண்டுகாலம் என்பது மிகவும் அதிகம். பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் இப்படிப்பட்ட ரோடு வேலை செய்கிறவர்கள் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை வேலை நீக்கம் செய்வதும், மறுபடியும் வேலைக்கு வைப்பதும் என்று வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த 10 ஆண்டு என்பதை 5 ஆண்டு என்று அறிவித்து, அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அதுவும் கூட அரசின் பரிசீலனையில் இருக்கிறது. 10 ஆண்டுகாலம் பணியாற்றிக்கொண்டு இருப்பவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது ஏறத்தாழ முடிந்த முடிவு. 5 ஆண்டுகாலம் பணியாற்று கிறவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கருத்துருவை ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பி இருக்கிறார். அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

(முற்பகல் 9-20.)

**திரு. து. ராமசாமி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங் களிலே பாதை வேலை செய்கின்ற 'காங்க் கூலி' களில் பலர் எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பாஸ் செய்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் கல்வித் தகுதியைக் கருத்திற் கொண்டு, ஜூனியர் அஸிஸ்டன்ட், அட்டன்டர் போன்ற பதவிகளுக்கு ஆள் நியமனம் செய்யப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமைக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, கல்வித் தகுதி பற்றி விண்ணப்பித்தால் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது 10 ஆண்டு காலம் பணியாற்றியவர்களைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மின்வாரியத்தில் 3 ஆண்டு காலம் பணியாற்றியிருந்தால் அவர்கள் நிரந்தரமாக்கப் படுகிறார்கள். அதைப்போல முனிசிப்பாலிட்டியில் 3 ஆண்டு காலம் பணி செய்தவர்கள் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். 10 ஆண்டு காலம் என்பது மிகப் பெரிய அநீதி அல்லவா. ஆகவே,

[1978 மார்ச்சு 27

டிஸ்டிரிக்டுக்கு டிஸ்டிரிக்ட் வித்தியாசம் இல்லாமல், வேலை செய்கின்ற இடத்தில் வித்தியாசம் இல்லாமல் 3 ஆண்டு காலம் பணியாற்றியவர்களை உடனடியாக நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: அநீதி அல்ல. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முத்துசாமி**: தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தற்காலிகமாக எத்தனைபேர், நிரந்தரமாக எத்தனை பேர் ரோடு வேலை செய்கிறார்கள்? ஆட்களை நியமிக்கும் போது ஒரு குறிப்பிட்ட விதியைப் பின்பற்றாமல் அவரவர் இஷ்டத்திற்கு நியமிக்கிறார்கள். அந்த நிலை இல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலம் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? 10 ஆண்டு காலம் வேலை செய்தவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எத்தனை பேர் என்ற விவரம் இல்லை. பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை ஆண்டு காலம் பணியாற்றியவர்கள் நிரந்தரமாக்கப் படுவார்கள் என்பது கேள்வி. அதுபற்றி பொதுவாக ஆராய்ந்து, பொதுவான முறையில் முடிவு செய்யப்படும்.

**திரு. அ. செல்லப்பா**: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ரோடு வேலை செய்பவர்கள் 7 ஆண்டு, 8 ஆண்டு பணியாற்றியும் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதுகுறித்து புகார் வந்திருக்கிறதா? புகார் வந்திருந்தால் அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: புகார் அல்ல; கோரிக்கை வந்திருந்தால் பரிசீலனை செய்யலாம்.



1978 மார்ச்சு 27]

**திரு. செ. சிவசாமி**: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் ரோடு வேலை செய்கிறவர்களை சேர்மன் இரண்டு பேர், கமிஷனர் இரண்டுபேர், சூப்பர்வைசர் இரண்டுபேர் என்று அவரவர் வீடுகளில் எடுபிடி கூலிகளாக வைத்துக்கொள்கிறார்கள். அந்தமுறை நிவர்த்தி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஒன்றியத்தில் அப்படி இருக்கிறது என்று சொன்னால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம். மொத்தமாகச் சொன்னால் முன்னாள் ஒன்றியத் தலைவர்களுக்கு ஆத்திரம் வரும். ஏதாவது குறைபாடு இருந்தால் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

**டாக்டர் கே. சமரசம்**: தலைவரவர்களே, 10 ஆண்டுக்குமேல் பணியாற்றியவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேல் டெம்பரரி ஒர்க் செய்கிறவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இத்தனை ஆண்டுக்குள் நிரந்தரமான பதவி அவர்களுக்கு அளிக்கப்படும் என்று அரசு நிச்சயம் செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: எண்ணிக்கை விவரம் இல்லை. எவ்வளவு இருந்தாலும் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்பது திட்டம்.

**திரு. என். பழனிவேல்**: தலைவரவர்களே, யூனியன் சாலைப் பணியாளர்கள் 10 ஆண்டுக் காலம் டெம்பரரியாக இருந்ததற்குப் பின்னால் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற இந்தச் சட்டம் எந்த அரசு காலத்தில் கொண்டு வரப்பட்டது? அதுபற்றி இந்தப் புதிய அரசு ஏதாவது பரிசீலனை செய்ததா? அல்லது தேவையில்லை என்று கருதி அப்படியே போட்டுவிட்டதா? அமைச்சரவர்கள் 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்று சொன்னார்கள். தொழிலாளர்களுடைய வயிற்றுக்கும் இந்த விரல் வீக்கத்திற்கும் என்ன சம்பந்தம்? ஆகவே அவர்களுடைய வயிற்றுப் பிரச்னையைக் கணக்கிட்டுப்பார்த்து, எத்தனை ஆண்டுகளுக்குள் அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: தலைவரவர்களே, எப்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது, எந்த அரசின் காலத்தில் என்று கேட்கிறார்கள். ஆளும் கட்சிதான் மாறும்;

அரசாங்கம் நிரந்தரமாக இருக்கும். இந்த அரசு 10 ஆண்டு காலம் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கருதுகிறது. இது அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனை, அவர்களுடைய வயிற்றுப் பிரச்சனை என்பதைத் தெரிந்துதான் அரசு இந்த முடிவை எடுக்க விரும்புகிறது.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் அடிப்படைச் சம்பளம் 18 ரூபாய் இருப்பது அரசுக்குத் தெரியுமா? உதாரணமாக மன்னார்குடி, கும்பகோணம் நகராட்சிகளில் 18 ரூபாய் அடிப் படைச் சம்பளம் இருப்பதை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மன்னார்குடி நகராட்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். விவரம் அறிந்து, பதில் சொல் கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிரந்தரமில்லாத இந்தத் தொழிலாளர்களுக்குப் பண்டிகைக் காலங்களில் அட்வான்ஸ் தொகை ஏதேனும் கொடுக்கப்படுமா? மற்ற அரசு அலுவலர்கள் போன்றோருக்கு பண்டிகைக் காலங் களில் அட்வான்ஸ் தொகை வழங்கப்படுவதுபோல் இவர் களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிரந்தரமாக்கப்பட்டவர்களுக்குத்தான் அதற் குரிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. நிரந்தரமாக்கப் படாதவர்களுக்கு அவர்களுக்குரிய சலுகைகள் மட்டும்தான் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தேவங்குடி பஞ்சாயத்து.

* 677 **வினா—திரு. சி. கோவிந்தராசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் உள்ள தேவங்குடி பஞ்சாயத்தில் நடைபெற்ற ஊழல் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) இதைப்பற்றி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் புகார்கள் வந்திருக்கின்றன.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர் இவற்றை விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

**திரு. சி. கோவிந்தராசன்:** பேரவைத் துணைத் தலைவரவர் களே, 1977-ஆம் ஆண்டு நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவம் குறித்து, இந்தப் புகார். பஞ்சாயத்துத் தலைவர் ரோடு போடுவது என்று சொல்லியும் பைப் போடுவது என்று சொல்லியும் பணத்தை சாங்ஷன் செய்து பிறகு ரோடும் போட வில்லை பைப்பும் அமைக்கவில்லை. இது சம்பந்தமாக புகார் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை விசாரிக்கப் படாததற்குக் காரணம் யாது? ஆண்டு ஒன்றாகியும் இதுவரை விசாரிக்காததற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் தவறுகள் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 24-10-77 அன்றும் 7-11-77 அன்றும் ஏறத் தாழ 11 குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புகார்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆட்சித் தலைவர் வட்டார வளர்ச்சி அதிகாரியைப் பணித் துள்ளார்.

**திரு. சி. கோவிந்தராசன்:** பேரவைத் துணைத் தலைவரவர் களே, அந்தப் பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய பெருவாரியான உறுப்பினர்கள் கையெழுத்துப்போட்டு அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டும் அங்குள்ள தாசில்தாரோ அல்லது ஆர். டி. ஓ.வோ கவனம் செலுத்தவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் புகார்கள் குறித்து விசாரிக்குமாறு வட்டார வளர்ச்சி அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஆகவே, புகார்கள்தான் வந்திருக்கின்றன. அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்குமேயானால் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, புகார் என்னவென்று தெரியவில்லை. அதைக் கொஞ்சம் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே 11 புகார்கள் வந்திருக்கின்றன. அது ஒரு பெரிய புராணம் ! (சிரிப்பு)

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பதினொரு புகார்கள் அத்தனையும் பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டியதில்லை. அட்லீஸ்ட் நேச்சர் ஆஃப் தி சார்ஜஸ் என்ன என்பதையாவது சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் புகார்கள் பணம் கையாடல், பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியது சம்பந்தப்பட்டது.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துக்கள் என்பது தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் ஆகின்றன. பொதுவாக பொதுமக்களுக்கு பஞ்சாயத்துத் தலைவரிடம் நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அவர்கள் பொதுமக்களுடைய பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள் என்ற உணர்வு அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு என்று தனி ஆடிட் டிப்பார்ட்மென்ட் ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிடவில்லை. சில கிராமப்





பஞ்சாயத்துக்களில் அப்படி ஏற்பட்டிருக்குமானால் அதில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவறுகளை எடுத்துக்காட்டி கண்டனம் தெரிவிக்கின்ற உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால் தவறுகளை விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மருதாசலம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் குறிச்சி பஞ்சாயத்துத் தலைவர் மீது பல்வேறு புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் பல தவறுகளைச் செய்திருக்கிறார். அவர்மீது அப்படி ஏதாவது மனு வந்திருக்கிறதா ? அது குறித்து நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே, இதுபற்றியே கேள்விகளைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மனுக்கள் அங்கே வந்திருக்கின்றனவா என்பது தெரியவில்லை. அப்படி வந்திருந்தால் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவு

* 678 **வினா—திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாக அதிகாரிகளின் எண்ணிக்கையும், அவர்களுக்கு வசதிகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றதை அரசு அறியுமா ?

[1978 மார்ச் 27

(ஆ) ஆம் எனில், இதில் மாற்றம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) மற்றும் (ஆ) போக்குவரத்துப் பணிகளைத் திறம்பட மேற்பார்வையிடவும் பராமரிக்கவும் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு போதிய அளவிற்குத் தான் உள்ளது. அதிகாரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட வசதிகளில் எதுவும் அதிகப்படுத்தப்படவில்லை.

(முற்பகல் 9-30)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அதிகாரிகளின் அதிகரிப்பால் ஏற்பட்ட அதிகச் செலவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதிகாரிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை, அளவிற்கு உட்பட்டுத்தான் இருக்கிறது என்றுதான் கூறினேன். போக்குவரத்துக் கழகங்கள் துவங்கப்பட்டதிலிருந்து, பேருந்துகளின் எண்ணிக்கை 3,305 என்றிருந்தது. இப்போது 5097 ஆக உயர்ந்திருக்கிறது, அலுவலர்கள் எண்ணிக்கை 148-ல் இருந்து 265 ஆக உயர்ந்திருக்கிறது. அனைத்துப் பேருந்து போக்குவரத்துக் கழகங்களிலும் பேருந்து ஒன்றுக்கு 7.5 நபர் என்ற விதத்தில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. உமாநாத்:** இந்த நிர்வாகச் செலவு சம்பந்தமாகவும் அதிகாரிகள் நியமனம் சம்பந்தமாகவும் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு அபிப்ராயம் இருக்கிறது. பி. டபிள்யூ டி. யில் இருந்து டெப்யூட் செய்யப்படுகிற ஆபீஸர்கள் ட்யூட்டி செய்யும் போது போக்குவரத்துத்துறை சம்பந்தமாக அவர்களுக்கு தொடர்பு இல்லாததன் காரணமாக எபிஷியன்ஸி பாதிக்கப்படுவதோடு கூட செலவும் அதிகமாகிறது. ஆகவே அதற்குப் பதிலாக டிராபிக் செக்ஷனில் இருப்பவர்களை ப்ரமோட் செய்து போட்டால் எபிஷியன்ஸியும் அதிகமாகும், செலவும் குறையும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா அல்லது செய்யப் போகிறீர்களா ?



1978 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையா:** டெக்னோக்ராட்ஸ், பொறியியல் வல்லுனர்கள் பொறுப்பில் மேற்பார்வைக்கு விடப்படுமானால் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான முறையில் இயங்க இயலும் என்ற அடிப்படையில் இவ்வாறு இயங்கி வருகிறது. அவை சிறப்பாகத்தான் இயங்குகின்றன.

**திரு. மி. வின்சென்ட்:** போக்குவரத்துக் கழக நிர்வாக அதிகாரிகள் ரயில்மூலம் வருவதைத் தடுத்து போக்குவரத்துக் கழக துரித வண்டிகள் வழி பயணம் செய்து மக்களுக்கு முன் மாதிரியாக இருக்கவும், அவர்கள் நேரிடையாகச் சென்று குறைகளைக் கேட்டறியவும் அறிவுறுத்தப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரிதுப் பேருந்துகளின் வருவாயைப் பெருக்க பல நடவடிக்கைகள் எற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** போக்குவரத்துக் கழகங்களில் மேல் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாகவும், கீழ் மட்ட அதிகாரிகள் எண்ணிக்கை, செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் போன்றவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதால் நிர்வாகச் செலவு அதிகரித்து வருகிறது. அதோடு கூட இந்த செக்கிங் இன்ஸ்பெக்டர்களால் லீக்கேஜ் செக் செய்யப்பட்டு கண்டுபிடிக்கக்கூடியவைகள் கூடக் குறைந்து காணப்படுகிறது. ஆகவே மேல் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் போன்றவர்களைக் கூடுதலாக நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மேல் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைப்போமானால் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் குறைவால் ஏற்படுகிற குறைபாடுகள் மேல் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் வாயிலாக ஏற்படும். செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த எற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. நா. சுந்தரராஜ்:** முன்பு தனியார்களிடம் பேருந்துகள் இருந்தபோது ஏற்பட்ட செலவைவிட அரசு அவைகளை எடுத்துக் கொண்ட பிறகு சம்பள விகிதங்கள் ஏற்றப்படவில்லை என்று சொன்னார்கள். பாண்டியன் போக்குவரத்து கழகத்தில்,

ஏற்கனவே இருந்த அமைப்பில் அதன் ஜெனரல் மானேஜரின் சம்பளம் என்ன? இப்போது பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தின் ஜெனரல் மானேஜர் வாங்கும் சம்பளம் என்ன? அதுபோன்று பணியாளர்கள் சம்பள விகிதங்கள் ஏறியிருக்கிறதா என்று தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தனியாரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட போது, முன்னர் இருந்த சம்பள விகிதங்கள் பற்றிய குறிப்பு இல்லை. தற்போது ரூ. 1,300.

**திரு. மு. அம்பிகாபதி:** இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் சட்ட விதிக்கு உட்பட்டமுறையில், அந்த நார்ம்ஸ் அடிப்படையில் 7.5 அடிப்படையில் அங்கே தொழிலாளர்கள் இருக்கிறார்களா? அதிகாரிகள் எண்ணிக்கை என்ன? தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** போக்குவரத்துப் பணியாளர்களில், ஓட்டுநர்கள் 2.5 என்ற விதத்திலும், நடத்துனர்கள் 2.5 என்ற விதத்திலும், அலுவலர்கள் 2.5 என்ற விதத்திலும் உள்ளனர். நிர்வாகப் பிரிவில் உள்ளடக்கிய மேற்பார்வைப் பணியாளர்கள் பேருந்து ஒன்றுக்கு 0.8 என்றிருக்கிறது. டெக்னிக்கல் ஸ்டாப் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா:** இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் சில ஆண்டுகளுக்கு முன்னால் பல்வேறு நிர்வாக அதிகாரிகளுடைய அறைகள் ஏர்கண்டிஷனாக மாற்றப்பட்டிருக்கிறது. சாதாரணமாக அமைச்சர்கள், தமிழக தலைமைச் செயலாளர் அவர்கள் அறைகூட ஏர்கண்டிஷன் செய்யப்படாத நிலையில் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் ஏர் கண்டிஷன் அறைகளில் உட்காருவது என்பது பொதுமக்களுக்கு அவர்கள் பாடுபடுவார்கள் என்று சொல்வதற்கு சரியாக இருக்காது. ஆகவே உடனடியாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்க முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பு அளிக்கப்பட்ட வசதிகளைப் பறிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை, வசதிகளைக் கொடுக்கின்ற அதே நேரத்தில் அவர்கள்



சிறப்பான பணிகளை ஆற்ற வேண்டும் என்று தான் இந்த அரசு எதிர்பார்க்கிறது. அந்தமுறையில் சிறப்பாக பணிகள் நடந்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** துணைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்து கழகங்கள் பல்வேறு கழகங்களாக இருப்பதால் அதிகமான அளவில் அதிகாரிகளின் எண்ணிக்கை இருப்பதால் செலவு அதிகமாக ஆகிறது என்று அரசு கருதுகிறதா? அதிகாரிகள் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்தில் வொர்க் ஷாப் போன்ற வகைகளில் பணியாளர்கள் அதிகமாக இல்லை என்ற நிலைமையும் இருந்து வருவதால், பல்வேறு கழகங்களாக இருப்பதால் சீரான முறையில் வேலைகள் நடைபெறவில்லை என்பது உண்மையா? இந்த முறையில் போக்குவரத்து கழகங்கள் தனித் தனியாக இருப்பதால் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவது போன்ற விஷயங்களில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அனைத்து போக்குவரத்துக் கழகங்களையும் ஒன்றாகச் சேர்க்கும் எண்ணம் அரசினிடத்தில் இல்லை. பல்வேறு கழகங்களாக இருந்தால் தான் திறமையாக செயல்பட முடியும் என்று அரசு கருதுகிறது. அந்த முறையில் தான் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பணியாளர்களைப் பொறுத்தவரையில் டெக்னிக்கல் ஸ்டாஃப் அதிகமாகத்தான் இருக்கிறார்கள். குறைவாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக பணிகள் எதுவும் நின்று விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்து அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கும் போது, போக்குவரத்து கழகங்களிலுள்ள அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமையை இந்த அரசு திரும்பப்பெறாது என்று தெரிவித்தார்கள். ஆனால் எத்தனையோ உரிமைகள் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டிருந்த உரிமைகள் கூட கடந்த காலத்தில் பறிக்கப்பட்டிருந்தன. இப்போது புதிய அரசு ஏற்பட்ட பின்னால் இப்படிப்பட்ட அதிகமான செலவுகளை செய்து கொண்டிருக்கும்

அதிகார வர்க்கத்திவரிடமிருந்து இந்த அதிகாரத்தை திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு என்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதிகாரிகளிடமிருந்து அதிகாரங்களைத் திரும்பிப் பெற வேண்டுமென்று சொல்லுகிறாரா அல்லது வசதிகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொல்லுகிறாரா என்று தெரியவில்லை. அளிக்கப்பட்ட வசதிகளைத் திரும்பப் பெறுவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, 'டாப் ஹெவி அட்மினிஸ்ட்ரேஷன்' என்று சொல்லப்படுகின்ற முறையில் இந்த போக்குவரத்துக் கழகங்களில் அதிகமான அதிகாரிகள் இருக்கிறார்கள். போக்குவரத்து மானேஜர்கள், அஸிஸ்டன்ட் மானேஜர்கள், அவர்களுக்கு கீழே டெக்னிக்கல் மானேஜர்கள், இப்படி பல விதமான மானேஜர்கள் இப்படி அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, இதன் காரணமாக இவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளும் அதிகமாகி செலவும் அதிகமாகிக்கொண்டே போகிறது, இதுதான் டாப் ஹெவி அட்மினிஸ்ட்ரேஷன், எக்கச்சக்கமாக செலவு செய்யப்படுகிறது. இந்த காரணமாகத்தான் செலவை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுமா என்ற நியாயமான கேள்வி கேட்கப்படுகிறது. இதற்கு அரசாங்கத்தினிடத்தில் என்ன பதில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உயர்மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் நிர்வாகப் பணிகளுக்கும் இருக்கிறார்கள், அதோடு வொர்க் ஷாப் பணிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள். 7.5 என்ற 'நார்ம்ஸ்-ன்' படி தான் இப்போது பணியாளர்கள் இருந்து வருகிறார்கள். இவர்களிடமிருந்து நல்ல முறையில் வேலை வாங்குவதற்குத்தான் அரசு பல திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போக்குவரத்துக் கழகங்களின் மானேஜர்களாக இருப்பதால்; நடைமுறை[illegible] கடைப்பிடிக்க முடிவதில்லை என்று



சொல்லப்படுகிறது. இந்த நிலையை மாற்றி தொழில் நுட்ப என்சினியர்களையே மானேஜர்களாக நியமித்தால் நன்றாக இருக்கும். போக்குவரத்துக் கழகங்களில் இப்படிப்பட்ட உயர் அதிகாரிகள் இருப்பதால்தான் அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும், செலவு அதிகமாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களில் கீழ்மட்ட அதிகாரிகளை மேல் அதிகாரிகள் அவர்கள் இஷ்டப்படி நடத்துகிறார்கள் என்றும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டும். இத்தனைக்கும் எப்படி அமைச்சர் பதில் சொல்ல முடியும், தயவுசெய்து இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மாற்றி தொழில் நுட்ப வல்லுனர்களை போக்குவரத்துக் கழகங்களின் மேலதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒரே ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் தவிர பிற அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் பொறியியல் வல்லுநர்கள்தான் மேற்பார்வையாளராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துத் துறையில் உள்ள அதிகாரிகள் ஏர்-கண்டிஷன்ட் அறை வைத்திருப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கப் போவதில்லை என்று சொல்வது பணியாளர்களிடையே சில சிரமங்களை உண்டுபண்ணும். பணியாளர்களுடைய கோரிக்கைகள் வரும்போது அவற்றையெல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அதிகாரிகளுக்கு நிறைய செலவு செய்யப்படுவதை பரிசீலனை செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டே இதைப்பற்றி பரிசீலிக்கலாம். சாதாரணத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்றெல்லாம் கேட்கும்போது, அதிகாரிகளுக்கு ஏர்-கண்டிஷன் அறை தேவைதானா என்று அரசு ஆய்வு செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 27

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறினேன். முன்பே அளிக்கப்பட்ட வசதிகளே தவிர, சலுகைகள் அல்ல என்று கூறினேன். போக்குவரத்துத் துறையிலே பல வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்ற, அந்த வகையிலே செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறினார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 7 போக்குவரத்துக் கழகங்களில் 5 போக்குவரத்துக் கழகங்கள் ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கி வந்ததிலிருந்து மீண்டு, லாபத்தில் இப்போது இயங்கிக்கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை நிர்வாக அதிகாரிகளின் கூட்டத்தில் கலந்து, ஆவன செய்ய முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அவசர நிலை அமுலில் இருந்தபோது, பல்வேறு வழித்தடங்களில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் நிறுத்தப் பட்டன. ஆனால் நல்ல வசூல் வந்தது அந்த வழித்தடங்களில். இப்போது இந்த அரசு நிறைய பஸ்களைவிட யோசித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அத்தகைய வழித்தடங்களில் பஸ்கள் விடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறினேன், முன்பே நல்ல யோசனைப்படி இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; போக்குவரத்துக் கழகங்களில் டெக்னிகல் ஸ்டாப் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்துப் பிரிவில் ஒரு பேருந்துக்கு எத்தனை டெக்னிகல் ஸ்டாப் அப்படி இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?



1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக 7 போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த டெக்னிகல் ஸ்டாப் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறினேன். இந்த விரைவுப் பேருந்துப் பிரிவில் எவ்வளவு பேர்கள் என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுத்த வசதிகள் திரும்பப் பெறப்படமாட்டாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். There are வசதிகள் All kinds of வசதிகள் இருக்கின்றன. ஏர்-கண்டிஷன் வசதி என்பது அம்மாதிரியான வசதி என்று நான் கருதவில்லை. அரசாங்கமும் அவ்வாறு கருதுவதற்கு நியாயமில்லை. சிம்பிள் லைப் அட்மினிஸ்ட்ரேஷன் இருக்க வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இதே தொழிலில் ஏராளமான பஸ் பாசஞ்சர்களின் லைப்களை கையில் வைத்துக் கொண்டு, இரவும் பகலும், சம்மர், ஹீட் ஆகியவைகளில் எல்லாம் டிரைவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் அதிகாரிகளோ ஏர்-கண்டிஷனில் வேலை செய்கிறார்கள். இப்போது இந்த வேலையை நிர்வாக அதிகாரிகள் எந்த வசதியில்லாமல் வேலை செய்ய முடியாதா. வெள்ளைக்காரன் காலத்தில் ரெயில்வேயில் இத்தகைய ஏ. சி. வசதி, ஸ்பெஷல் கோச் வசதிகள் எல்லாம் இருந்தன. அம்மாதிரி வசதிகள் இம்மாதிரி வேலைக்குத் தேவையில்லை என்று சொல்லி, சுதந்திரம் வந்த பிறகு இவையெல்லாம் எடுத்து விட்டார்கள். அம்மாதிரிப் பிரச்னையாக இதைக் கருதி, டிரைவர்கள் இம்மாதிரி வேலை செய்யும்போது இந்த ஏர்-கண்டிஷன் வசதியைக் குறைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய இந்த அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன் ? மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு பதில் அளித்துவிட்டேன்.

[1978 மார்ச் 27

**திரு. நாச்சிமுத்து கவுண்டர் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது மேட்டூர் வட்டத்தில் மானேஜராக இருந்து வருபவரை கர்நாடக தனியார் பஸ் அதிபர்கள், தொழிலாளர்கள் அடித்து விட்டார்கள். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் இல்லை. தகவலை உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களானால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, சமீப காலத்திலே குறிப்பாக பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே பேருந்தை ஓட்டுகின்றவர்கள் வண்டி டிப்போவுக்கு வந்தால், இன்னென்ன ரிப்பேர்கள் செய்ய வேண்டுமென்று எழுதிக் கொடுத்தால்தான் அங்குள்ள டெக்னிகல் அதிகாரிகள் அதை ரிப்பேர் செய்கிறார்கள் என்று தெரிகிறது. கடந்த காலத்தில் பஸ் டிப்போவுக்கு வந்தால் அந்தந்த உயர் அதிகாரிகள் உடனடியாக அதைச் சோதித்து என்னென்ன ரிப்பேர்கள் செய்யவேண்டுமென்ற நிலை இருந்தது. இப்போது டிரைவர் எழுதிக் கொடுத்தால்தான் ரிப்பேர் செய்வது என்ற நிலைமை இருக்கிறது. எனவே, அதை உடனடியாக மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் கூறுகின்ற அந்த ரிப்பேர்களையும், அதோடு என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் இந்த அதிகாரிகள் பரிசோதனை செய்து பார்த்து, உடனடியாக அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஏற்கனவே பணிக்கப் பட்டிருக்கிறார்கள்.

**திரு. பி. ராமதாஸ் :** துணைத் தலைவர் அவர்களே, டெக்னிகல் ஸ்டாப் அதிகம் இருந்தும், பழுதடைந்த வண்டிகள் பழுது பார்ப்பதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. அதைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் தாமதம் இல்லை என்று கூறிக்கொள்ளுகிறேன்.



1978 மார்ச் 27]

**திரு. சி. ஆறுமுகம் :** நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ் டிரைவர்களுக்கு அதுவும் குறிப்பாக டீசல் வண்டிகளாக இருப்பதால் சூடு அதிகமாகி கால்கள் கறுத்துவிடுகின்றன. அவர்களுடைய நலன் கருதி அங்கு ஃபேன் வைக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

## வேலூர்-திருச்சிராப்பள்ளி பேருந்துப்பணி.

*** 679 வினா—திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர்-திருச்சிராப்பள்ளி வழி மூங்கில்துறைப்பட்டு ஆகிய மார்க்கங்களில் தொலைதூர விரைவு வண்டி அல்லது எல். எஸ். எஸ். வண்டி விடும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. துரை முத்துசாமி :** ஏதாவது புதிதாக ஒரு தடம் போக்குவரத்துத் துறையில்விட வேண்டுமென்று சொன்னால் ஆய்வு செய்ய வாய்ப்பில்லை என்ற பதிலைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள்—அமைச்சராக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், எந்த விதத்தில், எங்கு எப்படி ஆய்வு செய்கிறார்கள் ? அதிகாரிகள் அங்கு வரும்போது சட்டமன்ற உறுப்பினர்கள், அங்குள்ள முக்கியஸ்தர்களோடு கலந்து ஆலோசிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூருக்கும் திருச்சிக்கும் இடையே பெரம்பலூர், உளுந்தூர் பேட்டை, மடப்பட்டு, திருக்கோயிலூர், திருவண்ணாமலை, போளூர் வழியாக தினசரி இரண்டு விரைவுப் பேருந்துகள் நான்கு தடவைகள் சென்று வருகின்றன.

திருச்சிக்கும் திருவண்ணாமலைக்கும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினரால் இரண்டு மாவட்டப் பேருந்துகள் ஓட்டப்பட்டு வருகின்றன. இத்தடம் பெரம்பலூர், தொழுதூர், வேப்பூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு வழியாக இயக்கப்படுகிறது.

திருவண்ணாமலைக்கும், வேலூருக்கும் போளூர் வழியாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகமும், தனியார் பேருந்துகளும் போதுமான அளவு இயங்கி வருகின்றன. இந்நிலையில் திருச்சிக்கும் வேலூருக்கும் மூங்கில்துறைப்பட்டு வழியாக விரைவுப் பேருந்துகள் இயக்க வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை முத்துசாமி :** ஆய்வு செய்கிறோம் என்று சொல்லுகிறார்களே, எங்கு எப்படி ஆய்வு செய்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** போக்குவரத்துக் கழகங்களில் ஆய்வு செய்வதற்காக டிராபிக் எஞ்சினியரிங் செல் என்ற பிரிவு இருக்கிறது. 'ஆக்குபன்சி ரேஷியோ' என்பதை அனுசரித்து அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுகிறது.

## அரூரிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

* 680 வினா—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூரிலிருந்து பெங்களூருக்கும், சென்னைக்கும் விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இல்லை.

**திரு. எம். அண்ணாமலை :** அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு வட்டப் பகுதிகளும் ரயில் போக்குவரத்தற்ற பகுதியாகும். அங்குள்ள பெரும்பான்மையான சிறு வியாபாரிகள் சென்னை பெங்களூர் போன்ற பெருநகரங்களுக்குச் சென்று வியாபாரம் செய்வதில் பெரும் சிரமம் இருக்கிறது. ஆகவே, சென்னையிலிருந்தும் பெங்களூரில் இருந்தும் அரூர் வழியாகப் பேருந்து விட்டால் நல்ல வசூல் ஆவதோடு அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் அபிலாஷையையும் பூர்த்தி செய்ததாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா ?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அரூருக்கும், பெங்களூருக்கும் இடையே உள்ள தூரம் 175 கிலோ மீட்டரே இருக்கும் காரணத்தால் விரைவுப் பேருந்து விட இயலாது. தற்சமயம் தினசரி அரூர் வழியாகக் கோவையிலிருந்தும், சென்னையிலிருந்தும் இரண்டு விரைவுப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. இது தவிர அண்ணா போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மாவட்டப் பிரிவும் முறையே சேலத்திலிருந்து அரூர் வழியாக திருவண்ணாமலைக்கும், திருவண்ணாமலையிலிருந்து சென்னைக்கும் சாதாரணப் பேருந்துகளை இயக்கி வருகின்றன. எனவே, விரைவுப் பேருந்து தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அரூருக்கும் பெங்களூருக்கும் இடையே பேருந்து விடுவது பரிசிலனையில் உள்ளது.

## *Micro-nutrition contents in soils.*

* 621 Q.—THIRU S. M. VASAN & THIRU V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether any research into the availability of Micro-nutrition in the soils in Tamil Nadu has been undertaken in recent times; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) 1970 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட ஆராய்ச்சிகள் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :

(1) பயிர்களில் நுண்சத்துக்கள் குறைவாய் தோன்றும் அறிகுறிகளைக் கண்டறிதல்.

(2) பயிர்களுக்குத் தேவையான நுண் சத்துக்களின் அளவுகளை அறுதியிடல்.

(3) முக்கிய பயிர்களுக்கு நுண் சத்துக்களால் தீங்கு ஏற்படாத வரம்பைக் குறிப்பிடல்.

(4) நுண் சத்துக்கள் அடங்கிய மண்ணிலும் பயிர்களிலும் மீண்டும் நுண் சத்துக்களை ஊட்டும்பொழுது அம்மண்ணும் பயிரும் அச்சத்துக்களை ஏற்கும் தன்மையை அறிதல்.

[1978 மார்ச் 27

(5) தமிழகத்தில் நுண் சத்துக்கள் பற்றாக்குறையாக உள்ள பகுதிகளைக் கண்டறிதல்.

(6) பல்வகை பயிரிடும் முறைகளால் நிலத்திலிருந்து நுண் சத்துக்கள் நீக்கப்படும் அளவுகளை அறிதல்.

(7) தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் ஏற்கனவே சேகரித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் பயிர் நுண் சத்துக்களின் பற்றாக்குறையை நீக்கும் ஆராய்ச்சியில் ஈடு பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த மண் சத்தை ஆராய்ச்சி செய்ததிலே தமிழ்நாட்டிலேயே வட ஆற்காடு மாவட்டத்திலேதான் நல்ல அருமையான சாயில் இருக்கிறது என்றும், அந்தக் காரணத்தால் அங்கு உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருள் தரமானதாக, சத்தானதாக இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

[முற்பகல் 9-50]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உண்மைதான்.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே வனத்துறை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஏராளமாக கற்பூர மரங்களைப் பயிரிடுவதால் அந்தப் பகுதியிலே உள்ள மண்ணின் ஊட்ட சத்தும், ஈரப் பசையும் குறைந்துள்ளது என்பது உண்மையா ? அப்படியானால் அதற்கு மாற்று ஏற்பாடு ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மண் பரிசோதனைகள் மூலமாக குறிப்பாக நீலகிரி மாவட்டத்திலே உள்ள உதகமண்டலத்திலே புதிதாக Atomic Spectro-Photo Meter கருவியைப் பயன்படுத்தி மண்ணின் தன்மைகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அதன்மூலப் மண்ணின் தன்மைகளை ஆராய்ந்து எந்த எந்த உர வகைகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பின அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1978 மார்ச் 27]

**திரு. எம். எம். ஏ. ரசாக் :** துணைத் தலைவர் அவர்களே, அண்மையிலே ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட பாதிப்பினால் மண்ணில் சத்து குறைந்துவிட்டது. ஆகவே, மண்ணில் சத்தை அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ? இப்போது கேரளத்திலே தென்னைக்கு கருகு நோய் என்ற நோய் வந்திருக்கிறது. அந்த நோய் இப்போது கன்னியா குமரி மாவட்டத்திலே உள்ள தென்னைகளுக்கும் பரவியிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட கேள்வி புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே மண் அரிப்பின் காரணமாக மண்ணிலே சத்துக் குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளை வேளாண்மைத் துறை மேற்கொண்டிருக்கிறது. வில்ட் டிசீஸ், எனப்படும் கருகல் நோய் தென்னையில் ஏற்பட்டு உள்ளது பற்றி இண்டியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சுரல் ரிசர்ச், ஐ.சி.ஏ.ஆர்., இன்றைக்கு அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மி. வின்செண்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண் வளப் பாதுகாப்புக்கு என்ன என்ன உரங்கள் தேவைப்படு கின்றன ? விவசாயிகளுக்கு எவ்வளவு உரங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மண்ணுக்குத் தேவை, என். பி. கே. அதாவது நைட்ரஜன், பாஸ்பேட், பொட்டாஷ் ஆகிய சத்துக்கள் முக்கிய மாகத் தேவைப்படுகின்றன. அதற்காக இந்த ஆண்டில் மட்டும் எந்த ஆண்டிலேயும் பயன்படுத்தாத அளவிற்கு இந்த ஆண்டிலே அதிகமாக உரம் 2.7 லட்சம் டன் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மனிதனுக்கு எப்படி அவன் நல்ல திடகாத்திரமாக உயிர் வாழ்வதற்குப் பல சத்துக்கள் தேவைப்படுகின்றனவோ—எந்த ஒரு சத்து குறைந்தாலும் சில வியாதிகள் ஏற்படுகின்றதோ—அதைப்போன்று உணவு உற்பத்தி

செய்வதிலே கூட இயற்கையாக, உரங்கள் தேவையில்லாமலே, இயற்கையாக சில சத்துக்கள் மண்ணில் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி. அப்படி இருக்கும்பொழுது தஞ்சை மாவட்டத்தைவிட வட ஆற்காடு மாவட்டம்தான் உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே முன்னணியில் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது அங்கே விவசாயிகளுக்குச் சகல துறைகளிலேயும் உதவிகள் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரையிலே வட ஆற்காடு மாவட்டம், குறிப்பாக நெல்லைப் பயிரிடுவதிலேயும் விளைச்சலை அதிகரிப்பதிலேயும் முன்னாலே இருக்கிறது. அதே நேரத்திலே மொத்த விளைச்சலிலே நான்கில் ஒரு பங்கு நெல்லை விளைவிக்கின்ற பெருமையையும் அந்த மாவட்டம் தேடிக் கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான வசதிகளை எப்போதுமே செய்வதற்கு இந்த அரசும் வேளாண்மைத் துறையும் காத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் :** பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பகுதிகளிலே நுண்சத்து குறைந்திருப்பதற்குக் காரணம் தொடர்ந்து ஒரே பயிரை நிலத்தில் பயிரிடுவது என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல; அதிகமான அளவு பயிர் செய்வதாலேயும் சத்துக் குறைந்து விடுகிறது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அதற்காக என்ன செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராப் ரொட்டேஷன் எனப்படும் பயிர்ச் சுழற்சி இல்லாத நிலையிலும், அதிகப் பயிர்களை விளைவிப்பதாலும் மண்ணின் சத்து குறைந்து கொண்டே வருகிறது. அதற்காகத்தான் மண் பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்தி, இதுவரையிலும் ஏறத்தாழ 10,000 மண் பரிசோதனைகளைச் செய்திருக்கிறோம். அதன் மூலமாக எந்தெந்த சத்துக்கள் எந்தெந்த நிலங்களில் குறைந்திருக்கிறதோ அந்தச் சத்துக்கள் குறைந்த மண்ணுக்குத் தேவையான உரத்தைப்பற்றி வேளாண்மைத் துறை மூலமாக



அவர்களுக்குச் சொல்லி அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் விளைச்சலை அதிகமாக்குவதற்கான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிலத்திற்குத் தேவையான தழைச் சத்துக்களை உற்பத்தி செய்ய முந்தைய அரசு விதை வாங்கவும், விதைத்துக் காவல் பார்ப்பதற்கும், உற்பத்தி செய்வதற்கும் ஆகும் செலவில் மூன்றில் இரண்டு பங்கை அரசாங்கம் மானியமாகக் கொடுத்து வந்ததை இந்த அரசு மீண்டும் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வி அரசினுடைய கவனத்திலே இருக்கிறது.

**திரு. கி. பெ. காத்தமுத்து :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள விவசாயிகளின் நிலங்களில் என்னென்ன சத்துக்கள் குறைகின்றன என்பதை விவசாய இலாக்காவின் மூலமாக ஆராய்ந்து, அப்படி என்னென்ன சத்துக்கள் குறைந்திருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் என்னென்ன உரங்களை இட வேண்டுமென்று அரசாங்கம் சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மண் பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்துவதன் முக்கிய நோக்கமே, மண்ணின் வளத்தை ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் விவசாயப் பெருங்குடி மக்கள் உரத்தை உபயோகிப்பதற்கான வழிவகைகளைச் சொல்வதுதான் மண் பரிசோதனை நிலையங்களின் வேலை. இப்பொழுது 13 மண் பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன. அதுபோக 3 மொபைல் யூனிட்டுகளும் இருக்கின்றன. அதன்மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லி கொண்டிருக்கிறார்கள்.

**திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நீர்வளம் அதிகமாக இருந்தும் மகசூல் குறைவாக இருப்பதை அரசு அறியுமா? அந்தப் பகுதியில் உள்ள

[1978 மார்ச் 27

வண்டல் மண் அடித்துச் செல்லப்படுகிறது என்று சொல்லப் படுகிறது, அதுதான் அந்த நிலைமைக்குக் காரணமா? இதுபற்றி ஆராயப்பட்டிருக்கிறதா? அப்படி ஆராய்ச்சி செய்திருந்தால் அதன் முடிவு என்ன என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. அதற்கான ஆராய்ச்சிப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவரவர்களே, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்குச் சென்ற ஆண்டு உரம் வழங்கப்பட்டிருப் பதாக அமைச்சர்கள் சொன்னார்கள். பல கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு உரக் கிடங்குகள் இல்லாததால் அந்தச் சங்கங் களுக்கு உரங்கள் வழங்கப்படாமல் பக்கத்திலுள்ள சங்கங்களுக்கு வழங்கப்பட்டதை அரசு அறியுமா? எல்லாக் கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கும் உரங்கள் வழங்கும் நிலைமை உண்டாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கொ. சின்னசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'இன்டோ-ஜெர்மன் விஸ்கோஸ்' நிறுவனத்திலிருந்து வரும் கழிவுப் பொருட்கள் பவானி சாகர் டேமிலுள்ள தண்ணீரிலே கலந்து அந்த டேம் தண்ணீரின் காரணமாக நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமாக இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதி யிலுள்ள மண்வளம் பாதிக்கப்படுவதோடு, அங்குள்ள மக்களுக்குப் பல நோய்கள் வரும் என்ற பீதியும் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் அறிவார்களா? அப்படி அறிந்திருந்தால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்குமாறு மாண்புமிகு அமைச்சரவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக்கூடியது போன்ற 'இந்திய ஜெர்மானிய வெஸ்ட் கோஸ்ட் திட்டம்' என்று எந்தவொரு திட்டமும் இல்லை. ஆனால் 'இந்தோ-ஜெர்மன் நீல்கிரிஸ் டெவலப்மெண்ட் ப்ராஜக்ட்' என்ற திட்டம் தான் இருந்து, அதுவும்கூட 'வேலிடிக்டரி ஃபங்ஷன்' முடிந்து விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லக் கூடிய திட்டம் இருந்தால் அதை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'சோற்றால் மடை அடைத்த சோழவளநாடு, நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் திருநாட்டில்' மேலும் பல மண் வள ஆராய்ச்சி நிலையங்களைத் தொடங்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வேண்டிய அளவுக்கு மண் வள பரிசோதனை நிலையங்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கொ. சின்னசாமி:** நான் கூறியது, விஸ்கோஸ் நிறுவனத்தைப்பற்றி—குறிப்பிடுகிறேன். அது அமைச்சருக்குச் சரியாகக் காதில் விழவில்லையென்பது காரணமாக இருக்கலாம். ஆகவே, மேட்டுப்பாளையம் அருகிலே உள்ள விஸ்கோஸ் நிறுவனத்தைப்பற்றி நான் குறிப்பிடுகிறேன். அந்த நிறுவனத் திலிருந்து வெளிவரும் கழிவுப் பொருள் நேரடியாக பவானி சாகர் தண்ணீரிலே கலந்து மண் வளத்துக்குப் பாதகம் ஏற்படுத்து வதாகப் புகார்கள் அனுப்பியுள்ளார்கள். அந்த நீரில் கழிவுப் பொருளை கலப்பதால் உண்மையிலே விவசாயம் பாதிக்கப் படுகிறது. அதன் காரணமாக, விவசாயிகள் பெரிதும் பீதி அடைந்திருக்கிறார்கள். அதுபற்றி அமைச்சரிடம் கேட்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, விஸ்கோஸ் நிறுவனத்தின் மூலமாக வெளிவரும் கழிவு நீர் ஆற்றிலே கலக்கப்பட்டு அந்தத் தண்ணீரைப் பாய்ச்சு வதன்மூலம் விவசாயப் பெருங்குடி மக்களின் விளைச்சல் பாதிக்கப் படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். பாதிக்கப்படுவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பூச்சிக் கொல்லி மருந்துகள் உபயோகம்.

* 622 வினா—**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் அமெரிக்காவில் நடந்த பூச்சிக் கொல்லிகள் சோதனைகள் மூலம் "வெட் கிரவுண்ட் மெக்கோ" பயன்படுத்துவதால் கெடுதல்களை தவிர்க்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த முறை தமிழ்நாட்டில் அமுல் படுத்தப்பட உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:**

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பூச்சிக் கொல்லிக்காகப் போடப்படுகிற மருந்துகள் அத்தனையையும் இந்தப் பூச்சிகள் ஆகாரமாகக் கொண்டு, அவற்றைச் சாப்பிட்டுப் பெருத்துக் கொண்டிருக்கின்றன. அதை ஒழிப்பதற்கு அமெரிக்காவிலே மிகுந்த அளவு பரிசோதனை செய்து ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகத் தெரிய வந்தது. அதை அறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அமெரிக்காவுக்குச் சென்று நேராகவே தெரிந்து கொண்டுவந்து, தமிழ்நாட்டில் அதை அமுல் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகளை பூச்சிகளைக் கொல்லத் தான் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அந்த மருந்துகளைச் சாப்பிட்டு பூச்சிகள் பெருத்துக் கொண்டிருக்கின்றன என்ற





அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே இல்லை. ஆனாலும், பூச்சிகளைக் கொல்வதற்குண்டான வீரிய மருந்துகள் தமிழகத்திலேயே கிடைக்கின்றன. அந்த மருந்துகளின் மூலமாகப் பூச்சிகளைக் கொல்ல முடியும். மேலும் "வெட் கிரவுண்ட் மெக்கோ" என்று அமெரிக்காவிலே ஏதோ கண்டுபிடித்ததாக, முத்துசாமி கரையாளர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டம் இந்த அரசுக்கு இதுவரையிலும் வரவில்லை. அந்தத் திட்டத்தைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி இந்த அரசுக்கு எடுத்துக் கூறுவார்களானால், உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** அப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்று எனக்குத் தெரிய வந்தது. அதனால், அதை நான் கேள்வி மூலம் தெரியப்படுத்தினேன். அதுபற்றிய திட்டத்தை நானே நான் நேரில் கொண்டு வந்து தருகிறேன்.

### சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

* 681 வினா—**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியை கோவையில் உள்ள விவசாய பல்கலைக் கழகத்துடன் சேர்த்துள்ள காரணம் என்ன?

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பாக இருந்ததைப் போலவே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:**

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### நெல் விதைகள் வழங்கல்.

* 682 வினா—**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் 1 ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் உள்ள விவசாயிகளுக்கு முதல் ரக நெல் விதைகள் கொடுக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

* 183-184-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 27

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தீவிர நெல் சாகுபடி திட்டத்தின்கீழ் விதை விநியோகிப்பதில் சிறு விவசாயிகள் பெரு விவசாயிகள் என்று பாகுபாடின்றி, 1 ஏக்கரும் அதற்கும் குறைவாக உள்ள விவசாயிகளுக்கும் சான்றிதழ் பெற்ற விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை முதல் ரகத்திற்கு—சன்ன ரகத்திற்கு—ஃபர்ஸ்ட் சார்ட் விலை நிர்ணயிக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு இருக்கிறதே? அது உண்மையா? அதுபற்றி அரசு அறியுமா? ஆம் எனில், அரசு விலை நிர்ணயம் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி விதைகளைப் பொறுத்தது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, சில பஞ்சாயத்து யூனியன்களிலே கொடுக்கப்படக்கூடிய விதைகள், முளைக்காத விதைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, முளைக்காத விதைகளை எந்த டிப்போக்களின் மூலமாகக் கொடுத்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே சான்றிதழ் பெற்ற விதைகளைத் தனி அதிகாரிகளின் மூலமாக இந்த சான்றிதழ்களைக் கொடுத்து, அதன் மூலமாகத் தரமான விதைகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகப் புதியத் திட்டங்களை இந்த அரசு உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்.)

திரு. மு. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு அரசு விதைப்பண்ணைகளின் மூலம் தரமான விதைகளைக் குறைந்த விலையில் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1978 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன்படிதான் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, இனிமேல் என்னை சேலம் ஆறுமுகம் என்று கூப்பிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் தரமான நல்ல விதைகளைக் கொடுக்கவில்லை என்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. எனவே எதிர்காலத்தில் தரமான நல்ல விதைகளை இந்த அரசு கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல, தரமான நெல் விதைகளுக்கு சிலருடைய குடும்பங்களில் உள்ளவர்களின் பெயர்களை வைத்துள்ளார்களே அதை நீக்கி, விஞ்ஞானிகளின் பெயர்களை வைத்து நல்ல விதைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இதுபற்றி இந்த மன்றத்திலே சொல்லியாகிவிட்டது, 'நீக்கி விடுகிறோம்' என்று.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தரமான நல்ல விதைகளைக் கொடுக்கின்ற திட்டத்தைத்தான் இந்த அரசு அமல் படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் தனிப்பட்ட அரசியல் தலைவர்களுடைய பெயர்களை நெல்லுக்கும் புல்லுக்கும் இருந்தாலும் அவைகளை எல்லாம் நீக்க வேண்டும் என்றும், எந்த ஆராய்ச்சிப் பண்ணைகள் மூலமாக இந்த நெறிகள் கண்டுபிடிக்கப் படுகின்றனவோ, அந்த ஆராய்ச்சிப் பண்ணையின் பெயரோ அல்லது அந்த அறிஞரின் பெயரையோதான் வைக்க வேண்டும் என்று இந்த அரசு கட்டளையிட்டுள்ளது.

திரு. கூ. ச. முருகேசன்: துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்திலே முன்னேற்றம் காட்டும் இந்த அரசு, இந்தத் தீவிர அரசு, விதைகளை விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 27

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, மானியமாக எப்போதும் கொடுக்கின்ற திட்டம் இந்த அரசிடம் இல்லை. ஆனால் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியமாக விதைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, விதை கொடுப்பதில் நீலகிரி மாவட்டத்தில் கோசு விதைகளைக் கொடுத்தார்கள். அந்தக் கோசு விதையிலும் கடுகு விதையைக் கலந்து கொடுத்தார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா? அப்படி விற்றவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, கலந்து விற்றதுபற்றி இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, திருச்சி மாவட்டத்தில் வழங்கப்பட்ட சில விதைகள் தரமாக இல்லை என்று விவசாயிகள் அதுபற்றி புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். என்ன காரணத்தினால் அப்படித் தரம் இல்லாத விதைகள் கொடுக்கப்பட்டன என்பதை அரசாங்கம் பரிசீலிக்கும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் இறந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புல்லுக்கும் நெல்லுக்கும் பெயர் வைக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். நெல்லுக்கு வேண்டுமானால் வைக்கட்டும், புல்லுக்கு வைக்க வேண்டாம்.



1978 மார்ச் 27]

இந்த நெல் விதைகள் எங்கே வாங்கப்படுகின்றன? என்ன முறையில் தயாரிக்கப்படுகின்றன? வாங்கிய விதைகள் சரியாக முளைப்பதில்லை. எனவே அதைப் புதிதாக மாற்றி அமைத்து நல்ல முறையில் வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, விதைகள் விவசாயிகளிடத்தில் இருந்தும் பெறப்படுகின்றன. அதே நேரத்தில் விதைப் பண்ணைகள் மூலமும் இங்கே உற்பத்தி செய்கின்றோம். ஓராண்டுக்கு 9,500 டன் நெல் விதைகள் தேவைப்படுகின்றன. இது குறைந்தபட்சமாக 9,500 டன். இந்த விதைகளை எல்லாம் விதைப் பண்ணைகள் மூலமும், வெளியிலே உள்ள விவசாயிகளிடமிருந்தும் மார்க்கட் ரேட் பிளஸ் 25 காசு என்ற கணக்கிலே வாங்கப்பட்டு, அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்.

296 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செவிலியர்களுக்கான பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே நடத்தப்படுகின்றன ?

**விடை—**

விவர அறிக்கை ** அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

### சோழன்பேட்டையில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

297 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், சோழன்பேட்டை பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களில் எத்தனை பேருக்கு இதுவரை குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன ?

---

** 185—186—ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 மார்ச் 2

விடை—

சோழன்பேட்டையில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 30 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

## திரை அரங்குகளிலிருந்து கிடைக்கும் வரி.

298 வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள திரை அரங்குகள் எத்தனை?

(ஆ) அவற்றின் மூலம் அரசுக்கு கிடைக்கும் வரித் தொகை எவ்வளவு?

விடை—

(அ) தமிழ் நாட்டில் 31—3—1977 அன்று 1,427 திரை அரங்குகள் இருந்தன.

(ஆ) இவற்றின் மூலம் 1976-77 ஆண்டில் ரூ. 2127.83 இலட்சம் வரித் தொகையாகக் கிடைத்துள்ளது.

## 'தமிழரசு' வெளியீடு.

299 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செய்தித்துறையால் வெளியிடப்படும் 'தமிழரசு' இதழ் எத்தனை பிரதிகள் வெளியிடப்படுகின்றன?

விடை—

தமிழில் அச்சிடப்படும் 'தமிழரசு' இதழ் மாதமிரு முறை வெளியிடப்படுகின்றது. ஆங்கிலத்தில் அச்சிடப்படும் 'தமிழரசு' இதழ் மாதம் ஒருமுறை வெளியிடப்படுகின்றது. தமிழில் அவ்விதழ் ஒவ்வொரு முறையும் சராசரியாக 35,500 பிரதிகள் வெளியிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் அவ்விதழ் மாதந்தோறும் சராசரியாக 2,600 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.



1978 மார்ச் 27]

## புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள்.

300 வினா—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலவர் கல்லூரியில் பயின்று தேர்சி பெற்றுக் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினையும் முடித்த தமிழாசிரியர்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் பணியில் அமர்த்தப்படுகின்றனரா?

(ஆ) ஆம் எனில், கடந்த பத்தாண்டுகளில் பணியில் அமர்த்தப்பட்டோர் தொகை என்ன?

விடை—

(அ) மதுரை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் புலவர் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்று பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினையும் முடித்த தமிழாசிரியர்கள் தமிழாசிரியர்களாகப் பணியிலமர்த்தப்படுகிறார்கள்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் நேரடியான நியமனம் (Direct Recruitment) மூலம் நிரப்பப்படுவது இல்லை. ஏற்கனவே மாநகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களில் தமிழாசிரியர் பதவிக்குரிய தகுதிகளை பெற்றவர்களுக்குப் பதவி உயர்வு (Promotion) அளிப்பதன் மூலம் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. ஏற்கனவே பணிபுரிபவர்கள் தனியாகத் தேர்வு எழுதி தமிழாசிரியர் பதவிக்குரிய தகுதிகளைப் பெறுகின்றனர். அவர்களுடைய பதவி உயர்வைக் கருத்தில் கொண்டுதான் இம்முறை செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரை கலைக் கல்லூரியில் தமிழில் பட்டம் பெற்றவர்கள் 3 பேர்களும் தமிழ்க் கல்லூரியில் வித்வான் பட்டம் பெற்றவர்கள் 32 பேர்களும் தமிழாசிரியர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டனர்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை இவ்வினாவிற்கு இடமில்லை.

## ஓட்டல்களை விரிவுபடுத்தக் கடன்கள்.

301 வினா—திரு. என். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976 ஆம் ஆண்டு முதல் இதுவரை சென்னை நகரத்தில் உள்ள ஓட்டல் அதிபர்கள், ஓட்டல்களை விரிவுப்படுத்த அல்லது புதிதாகக் கட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் கடன் கோரி மனுச் செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை பேர்களுக்கு முறையே எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(இ) ஐந்து நட்சத்திரம் அல்லது மூன்று நட்சத்திர ஓட்டல்களுக்கு மட்டுமே கடன் வழங்க வேண்டும் என்ற விதிமுறை ஏதேனும் உள்ளதா?

விடை—

(அ), (ஆ) (இ): ஓட்டல்களை விரிவுப்படுத்த அல்லது புதிதாகக் கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடன் வழங்குவதில்லை.

## தென்னை, பனைப் பொருட்கள் தயாரிப்பு.

302 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தென்னை, பனை மரங்களின் மூலம் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு ஏற்றுமதிப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு எண்ணியுள்ளதா?

விடை—

இல்லை.



## பனைப்பொருட்கள் ஏற்றுமதி.

303 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுகளுக்கு பனைப்பொருள்களை மாநில பனைத் தொழில் இணையம் ஏற்றுமதி செய்துள்ளதா?

(ஆ) சமீபகாலங்களில் எந்தெந்த நாடுகளுக்கு என்னென்ன பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தும்புவை "கூட்டுறவு தும்பு" என்ற வணிகப்பெயரில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், அயாலாந்து, மால்டா, இந்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், மேற்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்யா, கனடா, ஆஸ்திரேலியா, ஜோர்டான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

முன் மாதிரியாக, பனந்தும்பு, புருசுகளும், பனஞ்சர்க்கரையும் பதப்படுத்தப்பட்டு, டின்களில் அடைக்கப்பட்ட நுங்கும், குவைத், ஹாலந்து, கலிபோர்னியா ஆகிய நாடுகளுக்கு சிறிய அளவில் அனுப்பப்பட்டுள்ளது.

## உத்திரமேரூர் பேரூராட்சி மருத்துவ மனை.

304 வினா—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் பேரூராட்சியில் உள்ள மருத்துவமனையை வட்ட மருத்துவ மனையாக மாற்றவும், உத்திரமேரூர் தொகுதியில் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறப்பதற்கும், செயற் குறிப்புகள் அரசு பரிசீலனையில் உள்ளனவா?

விடை—

உத்திரமேரூரில் அரசு மருத்துவமனை ஏதும் இல்லாததால் மருத்துவ மனையை வட்ட மருத்துவமனையாக மாற்றும் கேள்வி எழவில்லை. மேலும், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது என்ற அரசின் கொள்கைக்கேற்ப, உத்திரமேரூர் வட்டாரத்தில் 20-3-1958-ல் ஒரு ஆரம்பச் சுகாதார,

நிலையம் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. ஆகையால் உத்திரமேரூர் வட்டாரத்தில் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் திறப்பதற்கு இயலாது. மற்றும் உத்திரமேரூர் தொகுதியில் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம் திறப்பதற்கு செயற்குறிப்புகள் ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

**கார் திருடு வழக்குகள்.**

305 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1957 முதல் 1977 வரையில் கார் திருடு குற்ற வழக்குகள் எத்தனை போடப்பட்டுள்ளது ?

(ஆ) அவை பற்றிய விவரம் யாது ?

விடை—

(அ) 94.

(ஆ) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| 1. தொரப்பட்ட வழக்குகள் | 94 |
| 2. தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள் | 84 |
| 3. விசாரணையில் உள்ள வழக்குகள் | 5 |
| 4 விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் | 4 |
| 5. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு | 1 |

**புதுக்கோட்டையில் பணிபுரியும் ஆசிரியர்கள்.**

306 வினா—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் பணிபுரியும் ஆசிரியர்களை தங்கள் சொந்த மாவட்டமான திருச்சி மாவட்டத்திற்கு விருப்ப மாற்றம் (Optional transfer) கோரி எவ்வளவு ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்து உள்ளார்கள் ?

(ஆ) எத்தனை ஆசிரியர்களுக்கு விருப்ப மாற்றம் அளிக்கப்பட்டது?

(இ) எத்தனை ஆசிரியர்களுக்கு விருப்ப மாற்றம் அளிக்கப்படவில்லை ?



(ஈ) மேற்படி மாற்றங்களைப் பற்றி அரசாங்கம் புதிய உத்தரவு ஏதாவது பிறப்பிக்கப்பட்டதா ?

(உ) சீனியாரிடி அடிப்படையில் ஆசிரியர்களைத் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றுதல் அளிப்பது போல திருச்சி மாவட்டத்திற்கும் அந்த அடிப்படையில் மாற்றம் அளிக்கப்படுமா ?

விடை—

(அ) 70 (ஆ) 18 (இ) 52 (ஈ) இல்லை.

(உ) 'பி' பிரிவு பணியிடங்கள் காலி ஏற்படும்போது மாறுதல்கள் முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்பட்டு வருகிறது.

**சென்னை, நடமாடும் நீதிமன்றத்தில் பதிலான வழக்குகள்.**

307 வினா—திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடமாடும் கோர்ட் வண்டிகள் சென்னையில் எத்தனை இயங்கி வருகின்றன ?

(ஆ) அவைகளில் இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) தண்டனை வழங்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) புதிய குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (Criminal Procedure Code 1973) அமுலுக்கு வருவதற்கு முன்பு அதாவது 1—4—1974-க்கு முன்பு ஒரே ஒரு போக்குவரத்து நடமாடும் கோர்ட் வண்டி இயங்கி வந்தது. 1—4—1974 முதல் 31—3—1976 வரை இவ் வண்டி இயங்குவது நிறுத்தப்பட்டது. மீண்டும் 1—4—1976 முதல் நடமாடும் கோர்ட்டுகள் தொடங்கப் பெற்று மூன்று போக்குவரத்து நடமாடும் கோர்ட் வண்டிகள் 23—9—1977 வரை இயங்கி, மீண்டும் அவைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர, பொதுச் சுகாதார விதிகள் மீறிய குற்றங்களை விசாரிக்கும் பொருட்டு இரண்டு நடமாடும் கோர்ட் வண்டிகள் 6—11—1976 முதல் இயங்கத் தொடங்கி; 18—11—1977-ந் தேதிக்கு பிறகு அவைகளும் நிறுத்தப்பட்டன. தற்போது எந்த நடமாடும் கோர்ட் வண்டியும் இயங்கவில்லை.

(ஆ) 1-1-1974 முதல் 18-11-1977 வரை 1,02,722 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(இ) 1,02,074 பேர்கள்.

(*a*) Prior to coming into force of the new Criminal Procedure Code, 1973 i.e., prior to 1st April 1974 only one Traffic Mobile Court Van was in operation. The Mobile Court ceased to function from 1st April 1974 to 31st March 1976. They again stated functioning with effect from 1st April 1976 and three Mobile Court Vans were in operation upto 28th September 1977 and they were suspended subsequently. Besides these two Mobile Court Vans were in operation from 6th November 1976 to 18th November 1977 to deal with civic offences. After 18th November 1977 operation of these Vans were also suspended. At present none of the Mobile Court Vans is in operation.

(*b*) From 1st January 1974 to 18th November 1977 1,02,722 cases were filed.

(*c*) 1,02,074 persons.

### வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு கிளை அச்சகம்.

308 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு அச்சகத்தின் கிளை ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

**விடை—**

இல்லை.

### நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்.

309 வினா—திரு. சீ. மு. வாசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) இதில் எத்தனை பள்ளிகளை அரசு நேரடி நிர்வாகத்தில் கொண்டு வந்துள்ளது ?

**விடை—**

(அ) 143.

(ஆ) 17.



### தஞ்சை கரந்தைப் புலவர் கல்லூரி

310 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை கரந்தையில் உள்ள புலவர் கல்லூரிக்கு அரசு எந்தெந்த வகையில் மானிய உதவியளித்து வருகிறது ?

**விடை—**

தஞ்சை கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றும் அங்கீகரிக்கப்பட்டப் பணியாளர்களுக்கு (ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும்) வழங்கும் ஊதியத்தில் 100 விழுக்காடும், சம்பளம் அல்லாத பிற அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் 80 விழுக்காடும் அரசு மானிய உதவியாக அளித்து வருகிறது.

### கோவில்பட்டி ஜி. எஸ். இண்டஸ்ரியல் தொழிற்சாலை.

311 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியிலுள்ள ஜி. எஸ். இண்டஸ்ட்ரியல் என்ற தீப்பெட்டி தொழிற்சாலையில் 28—6—1977 தேதி, 14 வயது சிறுவன் ஒருவனுடைய வலது கை முழுசாக பட்டை வெட்டும் (பீலிங்) இயந்திரத்தில் வெட்டப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) இச்சிறுவன் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி அல்ல. இவன் தொழிற்சாலையில் பணிபுரியும் தனது சகோதரருக்கு உணவு கொண்டுவருவதற்காகவும், கழிவு மரத்துண்டுகளை வாங்குவதற்காகவும் வந்தான். விபத்து ஏற்பட்டவுடன் ஜி. எஸ்., தீப்பெட்டித் தொழிற்சாலை நிர்வாகம் அச்சிறுவனை உள்ளூரிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து மருத்துவ உதவி அளித்தது. இச்சிறுவனுக்காக அந்த நிர்வாகம் ரூ. 1,500

செலவு செய்தது. மேலும் இச்சிறுவனுக்கு 1,500 ரூபாய் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சிறுவனுக்கு தற்போது அத்தொழிற்சாலையின் நிர்வாகத்தினரால் நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் ஊதியத்தில் வேலையளிக்கப்பட்டுள்ளது. காப்பி முதலியவற்றைக் கொண்டு வருவதற்காக இச்சிறுவனின் பணி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## மாதிரிப் பள்ளிகள்

312 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை மாதிரி பள்ளிகள் இருக்கின்றன ?

(ஆ) அதை எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா ?

**விடை—**

(அ) நான்கு, அவையாவன :—

பள்ளிக்கல்வி இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் முன்மாதிரிப் பள்ளிகள் :

(1) புதுக்கோட்டை மாணவர்கள் மாதிரிப்பள்ளி, புதுக்கோட்டை.

(2) டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் மாணவிகள் மாதிரிப்பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை-5.

கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்பார்வையில் இயங்கும் மாதிரிப்பள்ளிகள் :

(1) சைதாப்பேட்டை அரசினர் ஆடவர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிடம் இணைந்துள்ள மாணவர்கள் மாதிரிப் பள்ளி.

(2) சென்னை வெலிங்டன் சீமாட்டி மகளிர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியுடன் இணைந்துள்ள மாணவிகள் மாதிரிப் பள்ளி.

(ஆ) தற்போது இல்லை.



## மன நோய் மருத்துவ மனைகள்

313 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை மனநோய் மருத்துவ மனைகள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநோய் மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

**விடை—**

(அ) ஒன்று சென்னையில் இருக்கின்றது.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## ரூபாய் இரட்டிப்புக் குற்றங்கள்

314 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 ஆண்டுகளில் இம்மாநிலத்தில் ரூபாய் இரட்டிப்பு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுள் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்க அரசு மேற்கொண்ட முயற்சி என்ன ?

**விடை—**

(அ) 101 பேர்கள்.

(ஆ) 20 பேர்கள்.

(இ) அப்பாவிகளும் பேராசையுடையவர்களும் இம்மாதிரியான காரியங்களில் விரும்பத்தகாத சக்திகளால் கவரப்பட்டு விடுகிறார்கள். இம்மாதிரி நிகழ்ச்சிகள் கவனத்திற்கு வந்த உடனே வழக்குகள் பதிவு செய்து புலனாய்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இது தவிர, பொதுமக்களும் செய்தித்தாள்கள் மூலமாக இம்மாதிரியான செயல்களுக்கு இலக்காகாமல் இருக்க

எச்சரிக்கப்படுகிறார்கள். இது சம்பந்தப்பட்ட காரியங்களில் காவல்துறை விழிப்புணர்ச்சியுடன் இருந்து வருகிறது. எங்காவது குறிப்பிட்ட கூட்டம் இம்மாதிரியான காரியங்களில் செயல்படுவதாகத் தெரிந்தால், உடனே அவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

### *Forest areas in Tiruchirappalli district.*

315 Q.—THIRU C. MANICKAM: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(*a*) the details of the forest area available in Trichy district; and

(*b*) the steps taken to improve the forests in Trichy?

*Answer*—

| | |
|---|---|
| (*a*) Reserved Forests ... ... ... | 65,965 hectares |
| Reserved Lands ... ... ... | 8,620 hectares |
| Total ... | 74,585 hectares |

(*b*) of the above area, 10,773.30 hectares have been transferred to Tamil Nadu Forest Plantations Corporation, Trichy. Rest of the area is with the Tamil Nadu Forest Department.

In the area available with Forest Department, action has been taken to raise plantations over 1,200 hectares during 1977–78. During 1978–79, plantations would be raised over an area of 1,905 hectares.

The Tamil Nadu Forest Plantations Corporation has raised Plantations over 182.44 hectares during 1977–78 and it has proposed to raise plantation over an area of 300 hectares during 1978–79.

விடை—

| | |
|---|---|
| ஒதுக்கக் காடுகள் | 65,965 ஹெ. |
| ஒதுக்கு நிலங்கள் | 8,620 ஹெ. |
| மொத்தம் | 74,585 ஹெ |





(ஆ) 74,585 ஹெக்டேர்களில் 10,773.30 ஹெக்டேர்கள் பரப்பளவு காடுகள், தமிழ் நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. மீதியுள்ள காடுகள் தமிழ் நாடு வனத் துறையிடம் இருக்கின்றன. தமிழ் நாடு வனத் துறையிடம் உள்ள காடுகளில் 1,200 ஹெக்டேர் பரப்பில் 1977-78 ஆம் ஆண்டில் தோட்டங்கள் வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் 1,905 ஹெக்டேர் பரப்பளவுள்ள காடுகளில் தோட்டங்கள் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

தமிழ் நாடு வனத் தோட்டக் கழகம் 1977-78 ஆம் ஆண்டில் 182.44 ஹெக்டேர் பரப்பளவு காடுகளில் தோட்டங்கள் வளர்க்க நடவடிக்கை எடுத்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 300 ஹெக்டேர் பரப்பளவு காடுகளில் தோட்டங்கள் வளர்க்க திட்டமிட்டுள்ளது.

### விவசாயப் பண்ணை, நெய்வேலி டவுன்ஷிப்

316 வினா—திரு. மு. செல்வராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி டவுன்ஷிப்பில் உள்ள விவசாய பண்ணையில் இலங்கை தமிழர்கள் (அகதிகள்) வேலை பார்க்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

(இ) தினசரி கூலி எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 542 இலங்கை அகதிகளின் குடும்பங்கள் நெய்வேலி டவுன்ஷிப்பில் உள்ள விவசாயப் பண்ணையில் குடியமர்த்தப் பட்டிருக்கின்றார்கள். ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகின்றது.

(இ) கடுமையான வேலை கொடுக்கப்படும் ஒவ்வொரு ஆண் பணியாளருக்கும் தினசரி கூலியாக ரூபாய் ஐந்து கொடுக்கப்படுகிறது. சாதாரண வேலை கொடுக்கப்படும் ஒவ்வொரு பெண் பணியாளருக்கும் தினசரி கூலியாக ரூபாய் 3.50 கொடுக்கப் படுகிறது.

(*a*) Yes.

(*b*) There are 542 families of Sri Lanka repatriates at State Farms Corporation in Neyveli Township. Two members in each family are being given employment in the State Farms Corporation.

(*c*) Each male labourer who is given heavy labour is paid Rs. 5 per day and each female labourer who is employed for light labour is paid Rs. 3.50 per day.

### படப் பிடிப்புகளுக்கான கட்டணங்கள்

317. வினா—திரு. வி. கே. கோதண்டராமன : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் சினிமா படம் எடுக்க அரசு கட்டணம் வசூலிக்கிறது ?

(ஆ) எந்த அடிப்படையில் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது ?

(இ) வருட வருமானம் எவ்வளவு ?

விடை—(அ) தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறையைச் சார்ந்த நீர்ப்பாசன அணைக்கட்டுகள், அவைகளைச் சுற்றியுள்ள பூங்காக்கள் ஆற்றின் கரையோரங்கள், கூவம் நதி, அண்ணா நீச்சல் குளம், நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் உள்ள பொது இடங்கள், மற்றும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான கட்டடங்கள், மெரினா கடற்கரையை உள்ளிட்ட பொது இடங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் படப்பிடிப்பு நடத்திட கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) அரசு ஆணை எண். 727-பொதுப்பணித்துறை, நாள் 7—5—1977-ன்படி நாளொன்றுக்கு ரூ. 250 விதம் படப்பிடிப்பிற்காக வசூலிக்கப்படுகிறது.

(இ) 1977 ஆம் ஆண்டில் படப்பிடிப்பின் மூலம் கிடைத்த வருமானம் மொத்தம் ரூ. 18,250 ஆகும்.



### விருத்தகிரீஸ்வரர் ஆலயம், விருத்தாசலம்.

318 வினா—திரு. மு. செல்வராஜ்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் பணிபுரியும் கடைநிலை ஊழியருக்கு குடி இருப்புக்காக வீடுகள் கட்டப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எவ்வளவு பேர் குடியேறி உள்ளனர் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

### காவலர் குடியிருப்புகள்.

319 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள காவலர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) காவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) எதிர்காலத்தில் கட்டப்படுகின்ற வீடுகள் வசதிமிக்கதாக கட்டுவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

விடை—

(அ) காவலர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. காவலர்கள் கிரேட்—1 | 4,355 |
| 2. காவலர்கள் கிரேட்—2 | 32,313 |

(ஆ) இதுவரை 6,730 காவலர்களுக்கு குடியிருப்புகள் அளிக்கப்பட்டது.

(இ) தற்பொழுது கட்டப்படும் வீடுகளே வசதிமிக்கதாக உள்ளதால் இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 மார்ச் 2.

## சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

320 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1974-75, 1975-76, ஆண்டு வரவு-செலவு நிகர லாப விபரம் என்ன?

(ஆ) எத்தனை வழித் தடங்களில் எவ்வளவு பேருந்துகள் ஓடுகின்றன?

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1974-75, 1975-76 ஆண்டு வரவு-செலவு நிகர இலாப விபரம்:

| | 1974-75 (ரூ. லட்சத்தில்) | 1975-76 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| மொத்த வரவு .. | 727.48 | 859.66 |
| தேய்மானம் தவிர மற்ற மொத்த செலவு .. | 702.61 | 894.64 |
| மொத்த இலாபம்/ இழப்பு(+) .. | 24.87(—) | 34.98 |
| தேய்மானம் .. | 53.68 | 67.82 |
| நிகர இழப்பு (—) | 28.81 (—) | 102.80 |

(ஆ) வழித்தடங்களில் ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை:

| | 31ம் மார்ச் 1975 அன்றைய நிலை | 21ம் மார்ச் 1976 அன்றைய நிலை |
|---|---|---|
| 1) வழித்தடங்கள் | 281 | 281 |
| 2) பேருந்துகள் ரூட் பேருந்துகள் | 402 | 418 |
| உதிரிப்பேருந்துகள் | 49 | 60 |
| பயன்படுத்தாத பேருந்துகள் | 11 | 43 |
| மொத்தம் | 462 | 521 |



1978 மார்ச் 27]

குறிப்பு: 1974-75-ல் நிகர இழப்பு ரூ. 27.64 இலட்சமாக இயக்குநர் அறிக்கையிலும், 28.81 இலட்சமாக இலாப நட்டக் கணக்கிலும் இருக்கிறது. இந்த வித்தியாசத்திற்கு காரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1974-75-ல் மொத்த வருமானம் பேருந்துகளை விற்றதன் மூலம் கிடைத்த 6,852 ரூபாய் உள்ளடக்கியதாகும். இது மூலதன வைப்புக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இயக்குநரின் அறிக்கையில், இயக்கும் செலவு ரூ. 1,09,800 காப்பு நிதிக்கு செலுத்தப்பட்டது சேர்க்கப்படவில்லை. இது அந்த வருடத்தின் வரவு-செலவு கணக்கில் சேர்க்கப்பட்டது.

## மருதூர் கிராம நிலங்களுக்கு வடிகால் வசதி

321 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், மருதூர் கிராமத்தின் தென்புறம் உள்ள நிலங்களின் வடிகால் வசதி பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், திட்டை வாய்க்கால் மூலம் நண்டு ஓடையில் வடிய செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

## *Schools run by Madras Corporation.*

322 Q.—THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) the total number of Boys, Girls and Co-Educational Institutions run by the Madras Corporation; and

(b) the number of High Schools, Elementary Schools and other Institutions thereof?

விடை—

(அ) சென்னை மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 86,569

[1978 மார்ச் 27

| | |
|---|---|
| சென்னை மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் | 86,465 |
| சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் | 14,543 |
| சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவிகள் | 14570 |

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் (அ) சிறுவர்களுக்கு என்றும் சிறுமிகளுக்கு என்றும் தனித்தனியே தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி நடைபெற வில்லை. ஒரு பாலாருக்கு மட்டும் என்று மாணவ, மாணவியர் களைச் சேர்த்துக் கொள்வதில் பாகுபாடு காண்பிக்கப்படுவதில்லை. ஆனால் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, மாணவர் களுக்கென 10 பள்ளிகளும், மாணவிகளுக்கென 14 பள்ளிகளும் இருபாலாரும் சேர்ந்து பயில்வதற்கு 10 பள்ளிகளும் உள்ளன.

(ஆ) 1. சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை—34.

2. சென்னை மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி கள்—351.

3. மதிய உணவு மையங்கள்—4.

இதைத்தவிர தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளோடு சேர்ந்துள்ள 6 பாலர் பள்ளிகளும் நடைபெறுகின்றன. ஆனால் தனியாக எதுவும் பாலர் பள்ளிகள் இம்மாநகராட்சியினால் நடத்தப்படவில்லை.

**மன்னார்குடி பாமணி உரமணி ஆலைகளில் தொழில் நுட்பப் பணியாளர்கள்**

323 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தைச் சேர்ந்த பாமணி உரமணி ஆலை, மன்னார்குடி டிராக்டர் பணிமனை ஆகிய வற்றில் தொழில் நுட்ப பிரிவில் பணியாற்றுவோர் எத்தனை பேர்?



1978 மார்ச் 27]

**விடை—**

பாமணி உரமணி ஆலையின் தொழிற்நுட்ப பிரிவில் 130 பேரும், மன்னார்குடி டிராக்டர் பணிமனையில் 16 பேரும் பணியாற்றுகின்றனர்.

**"தினமலர்" நாளிதழ் தொழிலாளர்கள்.**

324 வினு—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில், திருச்சிராப் பள்ளியிலிருந்து வெளிவரும் "தினமலர்" நாளிதழ் நிறுவனத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏதும் நடந்ததா?

(ஆ) அதற்கான காரணம் யாது?

(இ) இந்தத் தகராறினைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

Ans:

(a) Yes.

(b) As a protest against the transfer of one Thiru S. P. Rajaiah, the workmen went on stay-in-strike from 10th October 1977.

(c) The Labour Officer and Deputy Commissioner of Labour, Tiruchirappalli took up conciliation immediately. Subsequently further discussions were held before the Joint Commissioner of Labour, Madras and as a result, a selltment was reached on 24th December 1977.

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) திரு. எஸ். பி. இராஜையா என்பவரை மாற்றல் செய்ததைக் கண்டித்து 10—10—1977 ஆம் நாள் முதல் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் தொடங்கினர்.

(இ) திருச்சிராப்பள்ளியிலுள்ள தொழிலாளர் நல அதிகாரியும், தொழிலாளர் நல ஆணையரும் உடனடியாக இதில் சமரசம் செய்து வைக்க முற்பட்டனர். பின்னர், சென்னையிலுள்ள தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் மேலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதன்விளைவாக 24—12—1977 ஆம் நாளில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

[1978 மார்ச் 27

**தஞ்சை மாவட்டத்தில் புகையிலை பயிரிடல்.**

325 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் புகையிலை எத்தனை ஏக்கரில் பயிரிடப் படுகிறது ?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் 610 ஹெக்டேர்களில் புகையிலை பயிரிடப்படுகிறது.

**மரவள்ளிக்கிழங்கு முதலியன பயிரிடப்படும் அளவு.**

326 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மரவள்ளிக்கிழங்கு, கடலை, கரும்பு ஆகியவை பயிரிடும் பரப்பளவு முறையே எத்தனை ஏக்கர் ?

விடை—

தமிழ்நாட்டில் மரவள்ளிக்கிழங்கு, கடலை, கரும்பு ஆகியவை பயிரிடப்பட்ட பரப்பளவு (1975-76) :

| | |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | 1,25,125 ஏக்கர் |
| கடலை | 23,36,762 ஏக்கர் |
| கரும்பு | 3,20,860 ஏக்கர் |

1976-77-க்கான புள்ளிவிவரம் இன்னும் இறுதியிடப்படவில்லை.

**தென் ஆற்காடு மாவட்டத்தில் மினி பஸ்கள்.**

327 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் 30—6—1977-க்கு முன் மினி பஸ்கள் எத்தனை ஓடியது ?

(ஆ) புதியதாக எத்தனை மினி பஸ் விடப்பட்டது ?



1978 மார்ச் 27]

விடை—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் மினி பஸ்கள் ஓட்டுவதற்கு உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. ஆனால் 30—6—1977-க்கு முன்னர் உரிமம் வழங்கப்பட்டு, 12 தடங்களில் ஜீப் வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

(ஆ) 30—6—1977-க்குப் பின்னர், 3 தடங்களில் ஜீப் வண்டிகள் ஓட்டுவதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளன.

**ஹோசூர் கால்நடைப் பண்ணை.**

328 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூரில் உள்ள கால்நடை பராமரிப்புப் பண்ணையில் குதிரைகளை வளர்க்கும் திட்டமொன்று அரசிடம் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதற்கான திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

**காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி வசதி.**

329 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை காவல் நிலையங்களுக்கு கம்பியில்லாத் தந்தி வசதி செய்யப்பட்டிருக்கிறது ?

(ஆ) இன்னும் எத்தனைக்கு திட்டம் அரசிடம் உள்ளது ?

விடை—

(அ) 640.

(ஆ) இல்லை.

**சேத்தியாத்தோப்பு, புவனகிரியில் வெள்ளச் சேதம்.**

330 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1978 மார்ச் 27

(அ) சிதம்பரம் வட்டம், வெள்ளாற்றில் சேத்தியாத்தோப்பு புவனகிரிக்கு இடையில் வடகரையில் ஆற்றில் வெள்ளம் கொண்டதின் காரணமாக வெள்ளச் சேதம் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எத்தனை கிராமங்கள் பாதிக்கப்பட்டன?

விடை—

(அ) சிதம்பரம் வட்டம், வெள்ளாற்றின் வடகரையில் சேத்தியாத்தோப்பு மற்றும் புவனகிரிக்கு இடையில் வெள்ளம் ஏற்பட்டதின் காரணமாக உண்டான வெள்ளச் சேதத்தின் மதிப்பு ரூ. 53,500 ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(ஆ) வெள்ளத்தினால் கீழ்க்கண்ட பதினெட்டு கிராமங்கள் பாதிக்கப்பட்டன :—

(1) மஞ்சக்கொல்லை.
(2) சீயப்பாடி.
(3) புவனகிரி உடையூர்.
(4) கிளாவடி நத்தம்.
(5) வத்தராயன் தெத்து.
(6) கஸ்பா ஆலம்பாடி.
(7) வடக்கு திட்டை.
(8) தென் கிருஷ்ணபுரம்
(9) தென் திட்டை.
(10) மேல் புவனகிரி.
(11) மேல் மணக்குடி.
(12) சுத்துக்குழி.
(13) மிராளூர்.
(14) கீழ் புவனகிரி.
(15) வண்டராயன்பட்டி
(16) அலிசிக்குடி.
(17) பூதராயன்பேட்டை.
(18) ஆதிவராக நத்தம்.



1978 மார்ச் 27]

331 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை ஏரிகள் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தால் உடைத்துக் கொள்ளப்பட்டன?

(ஆ) எதிர்காலத்தில் உடைப்பு ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சிதம்பரம் வட்டத்தில் 11 (பதினொன்று) ஏரிகள் உடைத்துக் கொண்டன.

(ஆ) பாசன அமைப்புகள் ஒவ்வொரு ஆண்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது. தவிர, ஆற்றங்கரையில் ஏற்படும் உடைப்பினால் குளங்கள் உடைபடாமல் இருக்க, தென்னாற்காடு மாவட்டத்தில் ஆறுகளுக்கு வெள்ளத் தடுப்புக்கரை அமைப்பதற்குத் தேவையான நில ஆய்வு வேலைகள் மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## சிதம்பரம் வட்டத்திலுள்ள ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள்.

332 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்திலுள்ள ஐந்து ஒன்றியங்களிலும் புதிய பள்ளி கட்டடங்களுக்காக 1977-78-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) பள்ளி கட்டடங்களுக்கு பழுது வேலைகளுக்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு?

விடை—

(அ) சிதம்பரம் வட்டத்திலுள்ள ஐந்து ஒன்றியங்களிலும் புதிய பள்ளிக் கட்டடங்களுக்காக, 1977-78 நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை.

(ஆ) பள்ளிக் கட்டடங்களுக்கு பழைய வேலைகளுக்காக சிதம்பரம் வட்டத்தில் 1977-78 ஆம் ஆண்டு ஒதுக்கிய தொகை பின்வருமாறு—

| | ரூ. |
|---|---|
| 1. காட்டுமன்னார் கோவில் | 26,000 |
| 2. குமராட்சி | 5,000 |
| 3. கீரபாளையம் | 10,000 |
| 4. புவனகிரி | 14,000 |
| 5. பரங்கிமலை | 12,000 |
| மொத்தம் | 67,000 |

### புயல், வெள்ளத்தின்போது கால்நடை இறப்பு.

333 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளச் சேதத்தில் இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

23,000 கால்நடைகள் (ஆடுகளையும் சேர்த்து).

### அரசு உயர்நிலைப் பள்ளிகள்

334 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உயர்நிலைப்பள்ளிகளில் (A-Wing) ஏ-விங்கைச் சேர்ந்தவை எத்தனை? (B-Wing) பி-விங்கைச் சேர்ந்தவை எத்தனை?

விடை—

| | |
|---|---|
| அரசு (ஏ. விங்) உயர்நிலைப் பள்ளிகள் | 448 |
| அரசு (பி விங்) உயர்நிலைப்பள்ளிகள் | 1,472 |



### செஞ்சி வட்டத்தில் பொதுப்பணித் துறையின் பிரிவு அலுவலகம்.

335 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில் பொதுப் பணித்துறையின் பிரிவு அலுவலகம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10.10]

### 2. தகவல் கோரல்.

### (அ) தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் வண்டியில் தமிழில் செய்தி அறிவிக்கப்படுவது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, சென்ற வாரத்தில் நான் எழுப்பிய பிரச்சினைக்கு தென்னிந்திய ரயில்வேயிலிருந்து தகவல் வந்து இருக்கிறது. சென்னையில் இருந்து டெல்லிக்குச் செல்லும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ஸில் தமிழிலும் செய்திகள் அறிவிக்கப்படுகிறது என்று செய்தி வந்து இருக்கிறது. அரசுக்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ரயில்வே துறை சம்பந்தமான எந்த விவரங்களையும் பாராளுமன்றத்திலே கேட்டுப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் வந்து இருந்தால் அவர் தனிப்பட்ட முறையில் கூட எழுதி இருக்கலாம். அதற்கு அவருக்குப் பதில் வந்திருக்கலாம். இதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

## (ஆ) மருத்துவத்துறை பற்றிய வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

* திரு. இரெ. இராசமாணிக்கம்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷ சார். மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளை எல்லா 11-ம் தேதி எடுத்துக்கொள்வதாக சபையில் அறிவிக்கப்பட டிருந்தது. ஆனால் அது ஒத்திவைக்கப்பட்டது. இன்று தேதி 27 16 நாள் ஆகியும் அந்த ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் எடுத்து கொள்ளப்பட்டு, பதில் அளிக்கப்படவில்லை. சபையின் கூட்ட முடிய இருக்கிறது. சபைக்கு வந்த கேள்விகள் என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மருத்துவத் துறை பற்றிக் கேட்கிறார்கள். அமைச்சரிடமிருந்து பதில் வந்த பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, அமைச்சரிடமிருந்து பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். கேள்விப் பட்டியலை அவையில் வைக்கிறபோது அமைச்சரிடமிருந்து பதில் வருவதற்கு முன்பே வைக்கப்பட்டு விட்டதா? அப்படியானால் செயலகம் அந்தத் தவறை செய்து விட்டதா? செய்து இருக்க முடியாது. நீண்டகால அனுபவம் உள்ள செயலகம் அப்படிப்பட்ட தவறை நிச்சயமாகச் செய்து இருக்க முடியாது. ஆகவே, பதில் வந்த பிறகுதான் கேள்விப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. அது ஒத்திவைக்கப்பட்டது. அப்படி ஒத்திவைக்கப்பட்டது எப்போது எடுத்துக்கொள்ளப் படும் என்பதுதான் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினருடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் இன்று வரவில்லை. அவர் வந்தபிறகு எடுத்துக் கொள்ளப்படும் என்ற பொருளிலே சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: அமைச்சருடைய பதில் வந்த பிறகுதான் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்கள். அதற்கு இதுதான் பொருள் என்றால், சபாநாயகரே சொல்லும்போது அந்த



## 3. கவன ஈர்ப்பு

**(அ) திருமருகல், நன்னிலம் ஒன்றியங்களில் அமைக்கப்பெற்ற மக்கள் குழுவில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் அளிக்கப்படாமை குறித்தும், நன்னிலம் ஒன்றியக் குழுவில் முன்னாள் ஒன்றியத் தலைவருக்கு இடம் அளிக்கப்படாதது குறித்தும்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41 ஆவது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. மா. மணிமாறன் அவர்கள் கொண்டு வருவார்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, "திருமருகல், நன்னிலம் ஒன்றியங்களுக்கு அமைக்கப்பெற்ற மக்கள் குழுவில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் அளிக்கப்படாமை குறித்தும், நன்னிலம் ஒன்றியத்திற்கு அமைக்கப்பெற்ற குழுவில் முன்னாள் ஒன்றியத் தலைவருக்கு மேற்படி குழுவில் இடம் அளிக்கப்படாமை குறித்தும்" என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மக்கள் குழு அமைப்பது பற்றி பிறப்பித்துள்ள 10-2-1978 நாளிட்ட அரசு ஆணை எண் 209-ன் படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் மக்கள் குழு அமைக்கப்பட வேண்டும். இக்குழுவின் தலைவர் உட்பட 12 உறுப்பினர்களுக்கு மேற்படாத அளவினர் இடம் பெறுவர். கோட்ட வளர்ச்சி அலுவலர் இக்குழுவின் தலைவராவார். கோட்டாட்சித் தலைவர் இக்குழு உறுப்பினர்களில் ஒருவராக இருப்பார். அப்பகுதியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இக்குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவர். இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அந்த ஒன்றியத்தைச் சேர்ந்தவர்களாய் பொதுவாழ்வில் நற்பணி

குற்றச்சாட்டுகளேனும் முன்னர் ஏற்பட்டிருக்கவும் கூடாது அல்லது இப்போது எழுப்பப்பட்டு விசாரணையில் இருக்கவும் கூடாது.

இக்குழுக்களில் உறுப்பினர்கள் அரசியல் கட்சி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. ஆகவே, ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு இடம் அளிக்கப்படவில்லை என்ற புகாருக்கு இடமில்லை. தவிர, நன்னிலம், திருமருகல் ஒன்றியங்கள் பொறுத்தவரையில் இப்பகுதிகளுக்கான சட்டமன்றப் பேரவை அங்கத்தினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. மணிமாறன் நன்னிலம், திருமருகல் ஆகிய ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சர்குணம், முன்னாள் ஒன்றியத் தலைவர், உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அரசாணையின்படி இக்குழுக்களில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள் அவசியம் உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும் என்பதில்லை. தவிர நன்னிலம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் மீது புகார்கள் சாட்டப்பட்டுள்ளது. ஆகவே, அவரை இக்குழுவில் நியமிக்கவில்லையெனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார்.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்சி ரீதியாக உறுப்பினர்களை நியமிப்பதில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் 4 பேர், 5 பேர் இருக்கிறார்கள். அதைப்போல ஒரு ஒன்றியக் குழுவில் உறுப்பினராக இருக்கிறவர் இன்னொரு ஒன்றியத்திலும் உறுப்பினராக இருக்கிறார். அதற்குக் காரணம் இந்த இரண்டு ஒன்றிய ஓட்டர் லிஸ்டிலும் அவர் தன்னுடைய பெயரைப் பதிவு செய்திருக்கிறார். அப்படி இரண்டு ஒன்றியத்திலும் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டு, இரண்டு ஒன்றியக் குழுக்களிலும் அங்கம் வகிக்கிறார்கள்.

நன்னிலம் ஒன்றியத் தலைவர் மீது ஏதோ புகார் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்தவிதமான புகாரும் இல்லை. ஒரே ஒரு குற்றம் அவர் செய்தது. அது என்னவென்றால் மிசா சட்டத்தின்



கீழ் கைது செய்யப்பட்டார். ஆனால் மிசா சட்டத்தின்கீழ் கைதானவர்கள் எல்லாம் இன்றைக்கு பெரிய பெரிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். பாவம், நன்னிலம் ஒன்றியத் தலைவருக்கு ஒன்றியக் குழுவில் அங்கம் வகிக்கத் தகுதியில்லை என்கிறார்கள். அவர் மிசாவில் கைதானார் என்பதைத்தவிர வேறு எந்தத் தவறும் செய்யவில்லை. அப்படியே ஏதாவது தவறு செய்திருக்கிறார் என்று அரசுக்குத் தெரிந்தால் அதை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவர்கள் சொன்னமாதிரி அவர்மீது எந்தவிதமான தவறும் இல்லை என்றால் பரிசீலனை செய்வதில் அரசுக்கு சங்கடம் இல்லை. ஆனால் அவர்மீது வேறு சில குற்றச்சாட்டுகள் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். நன்னிலம் ஒன்றியப் பெருந்தலைவர் மிசாவில் கைது செய்யப்பட்டார் என்பதற்காக குழுவில் இடம் பெறச் செய்யவில்லை என்பது சரியல்ல. கான்ட்ராக்ட் சம்பந்தப்பட்ட புகார்கள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர். அதோடு, ஊராட்சி ஒன்றியத்தைக் கலைப்பதற்கு முன்னால் ஒன்றியக் கூட்டங்களை ஒழுங்காக நடத்தவில்லை என்றும், ஒன்றியக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒழுங்காகச் செயல்படுத்தவில்லை என்றும் புகார்கள் இருக்கின்றன. இப்படிப்பட்டப் புகார்களின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டபோது நன்னிலம் ஒன்றியமும் கலைக்கப்பட்டு, தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் புகார்களின் அடிப்படையில்தான் அவர் குழுவில் இடம் பெறவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

மற்ற ஒன்றியங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் ஒன்றியத் தலைவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். கஞ்சை, வலங்கைமான், கும்பகோணம், செம்பனார் கோயில், திருமருகல், தலைஞாயிறு, சேதுபவசத்திரம் ஆகிய ஒன்றியங்களில் திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் ஒன்றியத் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. மா. மணிமாறன் :** தலைவரவர்களே, நன்னிலம் ஒன்றியத்தின் முன்னாள் பெருந் தலைவர்மீது எந்தவிதமான குற்றமும் இல்லை. அந்த ஒன்றியத்தைக் கலைப்பதற்கு முன் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. குறிப்பாக, ஒன்றியத் தீர்மானங்களை ஆர்வத்தோடு நிறைவேற்றி செயல் பட்டார். அவருடைய பெருமுயற்சியால் சிறப்பாகச் செயல்பட்ட ஒன்றியங்களில் நன்னிலம் ஒன்றியமும் ஒன்று. அவர்மீது அப்படி ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்திருக்கிறார் என்று சொல்லி, நடவடிக்கையும் எடுக்காமல், அவருக்கு ஒன்றியக் குழுவில் இடமளிக்காமல் இருப்பது எந்தவகையிலும் சரியல்ல. குழுவில் அங்கம் வகிக்க அனுமதி அளிக்க வேண்டும் அல்லது அவர் தவறு செய்திருந்தால் உடனடியாக அவர்மீது நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவர்மீது வேறு பல புகார்கள், கான்ட்ராக்ட் சம்பந்தப்பட்ட புகார்கள் எல்லாம் இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் இல்லாமலிருந்தால் உரிய நடவடிக்கை எடுப்பதில் அரசுக்கு ஆட்சேபனை இல்லை.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1978 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.





(முற்பகல் 10-20)

5. அறிவிப்பு

**தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

6. 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 21—மீனளம்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,25,70,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டை முகத்துவாரம் அன்னங் கோயில் என்ற இடத்தில் மீன்பிடி போட்கள் (Boats) வருடத்தில் 4, 5 மாதம் உள்ளே வரத் தடைப்படுவதைத் தவிர்க்க முகத்துவாரத்தை ஆழப்படுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 21—மீன்வளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,25,70,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, இராமேஸ்வரம் அருகே இரால் அதிகம் கிடைப்பதால் அங்கு இரால் வளர்ப்பு நிலையம் ஆரம்பிக்கும் விஷயம் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 21—மீன்வளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,25,70,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளை சுமுகமாகத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசை வற்புறுத்துவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 21—மீன்வளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,25,70,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, எறு, மீன், நண்டு முதலியவைகளுக்கு அவசர நிலை காலத்தில் மத்திய அரசால் விதிக்கப்பட்ட வரியை நீக்குவது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,25,70,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முகவை மாவட்டம், திருப்பாலைக்குடி, மோர்ப்பண்ணை முதலிய கடலோரப் பகுதிகளில் விசைப்படகுக்காரர்கள் நாட்டுப்படகுக் காரர்களின் மீது நடந்துகொள்ளும் அத்துமீறிய சம்பவங்கள் குறித்தும் பாதுகாப்பு கொடுப்பது குறித்தும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,25,70,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: To discuss about the growing clashes between the country boat owners and the mechanised boat fishermen in the State,

I move—

"that the allotment of Rs. 2,25,70,000 under Demand No. 21—Fisheries, be reduced by Rs. 100"

### (ஆ) கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ.5,19,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிதம்பரம் நகரத்தில், கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் சரியான முறையில் கொடுக்கப்படாததால் அதற்கு குழு அமைத்து சரியான முறையில் கொடுக்கச் செய்ய வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,19,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1978 மார்ச் 27

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, நியாயவிலைக் கடைகள் 500 குடும்பங்களுக்கு ஒன்று வீதம் ஏற்படுத்தப்படாமல் ஆயிரமும் அதற்கு மேலும் குடும்பங்கள் ஒரு கடையில் பொருள் வாங்க வேண்டியுள்ளதால் ஏற்பட்டு வருகிற கஷ்டங்கள் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,19,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. மு. ஆறுமுகம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும், நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்துவதைப்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,19,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு அறிவித்த விலையில் நெல் கொள்முதலுக்கு உரிய ஏற்பாடுகள் செய்ய அரசு தவறியது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,19,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (இ) கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. க. உரெ. எட்மண்ட் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீமானத்தை முன்மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,57,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"



1978 மார்ச் 27]

**திரு. வீ. ரகுராமன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாய பின்தங்கிய மக்கள் அதிகமாக வாழும் இந்த நாட்டில் அவர்களுடைய குறைந்த பட்ச முன்னேற்றத்திற்கு கால்நடை வளர்ப்புக்கு மானியம் அளித்து ஒவ்வொரு பின்தங்கிய விவசாயக் குடும்பங்களுக்கு ஆடு, மாடு வளர்க்க மானியத்தை அளிக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக்கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,57,23,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக பாதுகாப்பு நலன், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி, மத்திய நில வளவங்கி ஆகியவைகள் குறித்து விவாதிக்க—

"மானியக்கோரிக்கை எண். 57 பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,57,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவதிகை அணைக்கட்டிலிருந்து பிரிந்து நெல்லிக்குப்பம் வழியாகச் செல்லும் பாசனத்திற்கான வாய்க்காலை தூர் எடுத்து மராமத்து செய்வது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,57,23,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. ARUMUGAM: To discuss the need to encourage co-operative fishing farms in this State.

I move—

"that the allotment of Rs. 9,57,23,000 as per Demand No. 57—Miscellaneous Capital Outlay, be reduced by Rs. 100/-"

மாண்புமிகு திரு. க. உபெ. எட்மண்ட் பேரவை துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் எடுக்கப்பட்டிருக்கிற மீனளம் அதைப்போல நுகர்பொருள் வழங்கல் இன்னும் பல்வகை மூலதனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது ஏற்கனவே அரசின் கருத்து அச்சிடப்பட்டு புத்தகமாக * மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை முழுமையாகப் படித்து இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற கருத்திற்கு பின்னால் அரசின் சார்பில் என்னுடைய கருத்தைச் சொல்ல இருக்கிறேன் என்பதைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துச்சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய உணவு அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற இந்த மீனளத் துறை மானியத்தின்மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இங்கே என் மூலமாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடருக்கும் இந்தப் பட்ஜெட் கூட்டத் தொடருக்கும் இடையே நடைபெற்ற சச்சரவுகள், தகராறுகள் பற்றி நாடு நன்கு அறியும். ஆனால் இதுபோன்ற சச்சரவுகளும் தகராறுகளும் இதுநாள் வரையில் அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி அல்லது அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியானாலும் சரி அந்தக் காலங்களில் எல்லாம் ஏற்படாத அளவிற்கு இப்படிப்பட்ட ஒரு சச்சரவு இந்த ஒன்பது மாத காலத்தில் ஏற்பட்டதை நாம் நன்கு அறிவோம்.

இதற்கு என்ன காரணம், யார் காரணம்? அதற்குரிய பதிலை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாக இரத்தினச் சுருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்

* 187-246 ஆம் பக்கங்களில் இணைப்புகள் III, IV ஆக அச்சிடப் பெற்றுள்ளன.





கிறார்கள். சென்னை துறைமுகத்தில் அண்மையில் இரண்டு மீன்பிடி டிராலர்களை, மெக்ஸிகன் ட்ராலர் வெள்ளோட்ட விழாவில் பேசுகிறபோது நமது முதல் அமைச்சர் அவர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்டு அதையொட்டியே இந்தக் கருத்தை வைத்து அடுத்து நான் மானியத்திற்கு வர இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். விசைப்படகு ஓட்டுகிறவர்கள் அல்லது விசைப்படகு சொந்தக்காரர்கள், கட்டுமரத்தை ஓட்டுகிற மீனவர்கள் ஆகிய இருவரிடை நாம் விரும்பாத, நாகரீக உலகம் ஏற்காத வகையில் போராட்டம் நடைபெற்று வருகிறது." நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். "அண்ணன் தம்பிகளாக உள்ளவர்கள் சண்டை சச்சரவு செய்து கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்கள். இப்படி மோதல் ஏற்படுத்தி சண்டையைத் தூண்டிவிட்டு அதன் மூலமாக ஆதாயம் தேடுபவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்பவர்களுக்கு இனி தமிழகத்தில் இடம் இல்லை. அப்படி போராட்டம் நடத்தச் செய்து தன்னை உயர்த்திக்கொள்ள நினைப்பவர்கள் பெரியவர்களும் அல்ல மனிதர்களும் அல்ல" என்று வெகு அழகாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மெக்ஸிகன் ட்ராலர் வெள்ளோட்ட விழாவில் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள், அந்த மனிதர்கள் யார் என்பதை. போலீஸ் துறையும் அதிலும் குறிப்பாக, சிறப்பாக சி.ஐ.டி. இலாகா, இந்திய துணைக் கண்டத்திலேயே திறமை மிக்க போலீஸ் இலாகாவை வைத்துக்கொண்டிருக்கிற நம் அரசால் கண்டுபிடிக்க முடியவில்லையா என்பதை நான் இந்த நேரத்தில் ஐயமாக எழுப்ப விரும்புகிறேன்.

ஒன்றை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன் கடந்த அக்டோபர், நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியும் கண்டிராத அந்தக் காட்சி, அந்த கோர சம்பவம் சென்னையில் நடைபெற்றது. அந்தச் சம்பவத்தில் 40-க்கு மேற்பட்ட விசைப்படகுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கட்டுமரத் தொழிலாளர்கள். உடல் உழைப்பால் பாடுபட்டு உழைத்து உண்டுவந்த

[திரு. ப. பொன்னுரங்கம்] [1978 மார்ச் 27

அம்பலவாணன் என்ற தொழிலாளி துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாக்கப்பட்டிருக்கிறார். இதுவேறு எந்தக் காலத்திலும் நடைபெறாத ஒரு நிகழ்ச்சி. ஆனால் இப்போது நடைபெற்றிருப்பதற்கு நான் அரசின்மீது குறை சொல்கிறேன். அரசுக்குத் தகவல்கள் தருகிறவர்கள் யார், தரப்படுகிற செய்திகள் உண்மையானவைதானா என்று சீர்தூக்கிப் பார்ப்பதற்கான குறை இருக்கிறது என்பது என்னுடைய கருத்தாகும்.

நடைபெறாத ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இதுவரையில் நடைபெறாத சம்பவம். அதைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் கடந்த திங்கள் என்று கருதுகிறேன், பழவேற்காடு என்ற பகுதியில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவத்தைப்பற்றி பலருக்கு, உறுப்பினர்கள் பலருக்கு தெரிந்திருக்குமோ இருக்காதோ, காரணம் பத்திரிகைகளில் **வரவில்லை**. பழவேற்காடில் 247-க்கு மேற்பட்ட **படகுகள்—** மன்னிக்க வேண்டும், படகுகள் என்றால் விசைப்படகுகள் என்று தவறாகக் கருதிவிடாதீர்கள்—நாட்டுப் படகுகள் ; நாட்டுப் படகுக்காரர்கள் சொன்னதைச் சொல்லியாக வேண்டும்.

(முற்பகல் 10-30)

ஆற்றை மட்டும் நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இந்த நாட்டுப் படகுக்காரர்கள். கட்டுமரக்காரர்களை விட நாட்டுப் படகுகாரர்கள் கனிந்த நிலையிலே இருக்கிறார்கள். விசைப் படகுக்காரர்கள் அதைவிட ஓரளவு நல்ல நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்காக நான் வாதாட வரவில்லை. இந்த நிலையில் 247 நாட்டுப் படகுகள் நாசப்படுத்தப்படுகின்றன. வலைகள் நாசப்படுத்தப் படுகின்றன. யாரால்? கட்டுமரத் தொழிலாளர்களால். கட்டுமரத் தொழிலாளர்களால் நாசபடுத்தப்பட்டது என்று சொல்லுகிறார்கள்.

ஏன் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்று பார்க்கின்றபோது தான் உண்மை புலப்படுகிறது. கடலில் மீன் பிடித்துத் தொழில் நடத்துகின்ற கட்டுமரப் படகுக்காரர்கள் ஆற்றில் மீன் பிடிக்கப் போனார்கள். ஆற்றிலே மீன் பிடித்து தொழில் நடத்த வேண்டிய நாட்டுப் படகுக்காரர்கள் கடலுக்கு வரக்கூடாது. அதேபோன்று கட்டுமரப் படகுக்காரர்கள் ஆற்றிற்குப் போகக் கூடாது. இந்த நிலையில் கட்டுமரத் தொழிலாளர்கள் மீன்பிடிப்பதற்காக ஆற்றுக்கு



1978 மார்ச் 27] [திரு. ப. பொன்னுரங்கம்]

வருகிறார்கள். ஆற்றில் தொழில் செய்கிறார்கள். சர்ச்சை வருகிறது. ஊரார் பார்த்து இதில் சமரசம் ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். இந்த நாட்டுப் படகு வைத்துக் கொண்டிருப்பவர்கள் மூன்று ஊருக்குச் சொந்தக்காரர்கள். அதேபோன்று கட்டுமரப் படகு வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஆறு, ஏழு ஊருக்குச் சொந்தக்காரர்கள். இப்படி ஒன்பது, பத்து ஊரிலுள்ள படகுக்காரர்களுக்கு இடையே பழவேற்காடு பகுதியில் ஒரு சர்ச்சை வருகிறது. இப்படிப்பட்ட சர்ச்சை இப்போதுதான் வருகிறதா, இதற்கு முன்னால் வந்திருக்கிறதா என்றால் வெள்ளைக்காரன் காலத்திலேயே ஆற்றில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் கடலில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் சர்ச்சை நடந்திருக்கிறது. அதே மாதிரி இப்போதும் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட சர்ச்சையெல்லாம் அன்றாடம் தீர்க்கக்கூடிய சர்ச்சை.

ஆனால், அப்போதெல்லாம் இப்படிப் படகுகளை நாசப் படுத்துவது, வலைகளை நாசப்படுத்துவது எல்லாம் கிடையாது ; ஏதோ தாக்குறைவான வார்த்தைகளினால் ஒருவருக்கொருவர் வைது கொள்வார்கள். பின்னால் சமரசத்திற்கு வந்து கொள்வார்கள் ; அதையும் மீறிப் போனால் போலீஸ் ஸ்டேஷனில் போய் தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் இங்கே என்ன நடந்திருக்கிறது ? ஒரு கூட்டத்தை கூட்டுவதற்காக ஓரிருவர் சென்னையிலிருந்து செல்லுகிறார்கள். சென்னையிலிருந்து சென்றவர்கள் சமாதானம் செய்து வைக்கவில்லை. ஒரு தேதியை குறிப்பிட்டு, பின்னால் அந்தத் தேதியிலும் கூட்டத்தை கூட்டவில்லை. பின்னால் அடுத்த மாதம் தேதி குறிப்பிடப்படுகிறது. அதற்காக ஒரு இடமும் குறிப்பிடப் படுகிறது. பின்னால் அங்குள்ள மைனாரிட்டி படகுக்காரர்கள், கூட்டம் கூட இருக்கின்ற இடத்தைப் பற்றி எங்களுக்குப் பயமாக இருக்கிறது, நாங்கள் அங்கே வருவதற்கு அஞ்சுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இதில் யார் சம்பந்தப் பட்டிருந்தார்கள் என்பதை அப்புறம் சொல்லுகிறேன்.

பின்னால் இவர்கள் பாதுகாப்பைத் தேடி திருப்பாலைவனம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லுகிறார்கள். அங்கேயுள்ள அதிகாரி நானே சமாதானம் செய்து வைக்கிறேன், இதற்கு வரலாறே இருக்கிறது என்று சொல்லி சமாதானம் செய்து வைக்கிறார். பின்னால் கட்டுமரத் தொழிலாளர்களும் தங்கள் கட்டுமரத்தோடு திரும்புகிறார்கள், ; நாட்டுப் படகுக்காரர்

களும் வீட்டுக்குச் செல்லுகிறார்கள். அடுத்த ஒரு வாரம் கழித்து ஒரு சர்ச்சை ஏற்படுகிறது. என்னவென்றால் போலீஸ் ஸ்டேஷனுக்கு மீண்டும் வரக்கூடாது என்று சொல்லிவிட்டு திரும்பியவர்கள், திடீரென்று அங்குள்ள நாட்டுப் படகுக்காரர்கள், தாக்கப்படுகிறார்கள். நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்தப் பகுதி ஆளும்கட்சிக்கு நல்ல செல்வாக்கு இருக்கின்ற பகுதி. அங்கு பெரும்பான்மையான நாட்டுப் படகுக்காரர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள். சொல்லப்போனால் 100-க்கு 90 பேர் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் திடீரென்று தாக்கப்படுகிறார்கள்.

இன்னொரு விநோதம் என்னவென்றால், அந்தப் பகுதியிலுள்ள ஆளும் கட்சியின் அமைப்பாளருடைய வீடும் தாக்கப்படுகிறது. அந்த அளவு ஏற்படுவதற்கு என்ன காரணம்? அதை இந்த அமைச்சரவை கண்டுபிடித்தாக வேண்டும். சென்னையிலிருந்து சென்றவர்கள், தங்கள் தலைமையில் செல்வாக்குடன் கூட்டம் நடத்தாமல் இவர்கள் எப்படி போலீஸ் ஸ்டேஷனை அணுகினார்கள்; இவர்களை ஒரு கை பார்க்கிறேன் என்று எதிர்தரப்பார் திட்டம் போட்டு செய்த செயல்தான் இது என்று எனக்கு வந்துள்ள தகவல். உண்மையை கண்டுபிடிப்பது உங்கள் வேலை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. முத்தையா தலைமை.)

அடுத்து, சென்னையிலுள்ள கட்டுமரத் தொழிலாளர்கள் இதைச் செய்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். அவர்கள் உழைத்துப் பிழைக்கின்றவர்கள். அவர்கள் இப்படிப்பட்ட ஈனத்தனமான தொழிலில் இறங்க மாட்டார்கள். அவர்கள் உழைப்பால் வாழ்கின்றவர்கள். ஆனால் அவர்களில் ஒரு சிலரைப் பயன்படுத்திக்கொண்டு, இங்கே ஓரிருவர், இன்னும் சொல்லப் போனால், ஆளும்கட்சி தங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள்தான் இத்தகைய சர்ச்சைக்குக் காரணமாக இருக்கின்றார்கள் என்று அங்கெல்லாம் கோடிட்டு காட்டப்படுகிறது.

இந்தியாவில் பிறந்த ஒரு பிரஜை எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் எந்தத் தொழிலையும் செய்யலாம். இந்த மாநிலத்தில் பிறந்த ஒருவன் ஒரிசாவுக்கும் செல்லலாம், கேரளத்திற்கும் செல்லலாம், மேற்கு வங்காளத்திற்கும் செல்லலாம்; எந்த மாநிலத்திற்கும் சென்று எந்தத் தொழிலையும் செய்யலாம்.





ஆனால் இங்கே ஒரு விநோதம் நடைபெறுகிறது. சென்னையிலே இருக்கின்ற, தமிழகத்திலே பிறந்த இந்த மீனவன் பக்கத்தில் இருக்கின்ற தென் ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்று தொழில் செய்ய முடியாது என்பது. இதுதான் மிக வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், அங்கே இருந்து ஒரு கடிதம் வருகிறது. இங்கே இருக்கின்ற படகுச் சொந்தக் காரர்களுக்கு, அந்தப் பகுதி படகுச் சொந்தக்காரர்கள் கடிதம் எழுதுகிறார்கள். என்ன எழுதுகிறார்கள் தெரியுமா? 'இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை, என்ன விஷயம் என்பது தெரிந்த விஷயம்தான்' என்று எழுதுகிறார்கள். என்ன சூழ்நிலை? அதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இப்படி எழுதியுள்ளதைப்பற்றி நான் விசாரித்தேன். அப்படி விசாரித்த நேரத்தில், இங்கே இருக்கின்ற படகுச் சொந்தக் காரர்கள்; இந்தச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இங்கேயிருந்து இன்லண்டு கடிதம் மூலம் பயமுறுத்தப்படுகிறார்கள். எப்படி தெரியுமா? சென்னையிலே இருந்து கடலூருக்கு வருகின்ற படகோடு, உங்கள் படகும் சேர்த்து கொளுத்தப்பட வேண்டுமா? என்று பயமுறுத்தப்படுகிறார்கள். முதல்வர் அவர்கள் குறிப்பிட்டபடி சென்னையிலே சில பெரிய மனிதர்கள் இந்தச் சூழ் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தக் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு தலைவராகப் பார்க்கிறார்கள். அந்த முறையில் இவர்கள், இந்த நபர்கள் இங்கிருந்து கடிதம் எழுதி அங்குள்ள தலைவருக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் அச்சத் தாலே இந்தத் தீர்மானத்தைப் போட்டு அனுப்புகிறார்கள். இந்த வேதனைக்குரிய, பரிதாபத்துக்குரிய நிலைமை இன்றிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலேகூட ஒரு வரம்பை, அமைச்சர் அவர்கள் மெத்தச் சிரமப்பட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த மூன்று மைல் தூரம் என்பதிலே, சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதிலே, இந்த வரம்பை நிர்ணயிப்பதிலே அமைச்சர் அவர்கள் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; நானும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1978 மார்ச் 27

அதுமட்டுமல்ல, அவர்கள் வெளிப்படையாகவே சொன்னதாக ஒரு பஞ்சாயத்துத் தலைவர் என்னிடம் சொன்னார்கள். "நீங்கள் இதை எப்படியாவது தீர்த்து வைத்தால் போதும். இது ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. நம்முடைய சகோதரர்களை இப்படி ஒருவருக்குள் ஒருவர் அடித்துக் கொள்கிறார்களே". என்றெல்லாம் சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படி இருக்கின்ற இந்த ஆட்சியிலே, இத்தகைய உள்ளம் படைத்த இந்த ஆட்சியிலே, இங்கேயிருந்து மூன்று மைல்களுக்கு இந்தப் படகுக்காரர்கள் வரக்கூடாது என்று சொல்லப்படுகிறது. யாருக்கு? அனைவருக்கும் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஆனால் என்ன வேடிக்கை? ஒரு பகுதியினர் மட்டும் இந்த மூன்று மைல்களுக்குள் போகலாம். ஆனால், மற்றப் பகுதியினர் இந்த மூன்று மைல்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். நான் குறிப்பிட்டே சொல்கிறேன். சென்னையில் இருக்கின்ற 27 படகுகள் இந்த மூன்று மைல்கள் பாகத்திற்குள் போகலாம். மற்றப் படகுகள் போகக் கூடாது. என்னய்யா காரணம் என்று கேட்டால், முதல்வர் அவர்கள் சொன்னார்கள் அல்லவா? "இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தித் தலைவராகப் பார்க்கிறார்கள்" என்று. அந்தத் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ள சங்கத்திற்கு கட்டுப்பட்டுள்ள விசைப்படகுக்காரர்களுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. நான் இப்படிப் பேசுகின்றபோது, அருள்கூர்ந்து நான் படகுக்காரர்களுக்கு வாக்காலத்து வாங்கிப் பேசுவதாக கிஞ்சித்தும் சந்தேகப்படக் கூடாது. என்னுடைய நிலைமை என்னவென்றால், தாழ்ந்த, கீழ் நிலையிலே உள்ளவர்கள், க்ஷீண திசையிலே உள்ளவர்கள், பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருக்கின்றவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றபோது, நான் கட்டுமரக்காரர்களுக்குக் குறுக்கே நிற்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. அவர்கள் சமுதாயத் துறையில், பொருளாதாரத் துறையில், சகலத் துறையிலும் உதவி செய்யப்பட வேண்டியவர்களே தவிர, படகுக்காரர்களுக்காக நான் வாதாடுகிறேன் என்று எண்ணக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னையில் ஒரு சம்பவம். கடந்த திங்கள் என்று கருதுகிறேன். வலையைக் கிழித்தார்கள், எனவே படகை மடக்கினோம் என்றால் பரவாயில்லை. மகாபலிபுரத்திலே பத்து



1978 மார்ச் 27] [திரு. ப. பொன்னுரங்கம்]

மைல் தூரத்திலே இருந்து ஒரு படகு மீன் பிடித்துக்கொண்டு வருகிறது. அங்கே இன்னொரு படகுக்காரர் மீன் பிடிக்கிறார். இவர் அந்தப் படகுக்காரரை எதிர்த்து மடக்குகிறார். அப்படி மடக்கி, அந்தப் படகுக்காரர் பிடித்துக் கொண்டு வருகிற மீன், இறால் போன்றவைகளை அதிலே இருந்து எடுத்து இவர்கள் விற்கிறார்கள். இதை யார் இப்படிச் செய்தார்கள் என்று பார்த்தால், இந்தத் தலைவர் இருக்கிறாரே, அதாவது முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் இந்தக் குழப்பத்தை விளைவிக்கின்ற தலைவர் என்று சொன்னார்களே, அந்தத் தலைவரின் உறவுக்காரர்களில் ஒருவர் இதைச் செய்திருக்கிறார்.

[முற்பகல் 10-40]

அவர் தலைமையில் நால்வர். நான் சொல்லுவது பொய் அல்ல. என். 2 போலீஸ் ஸ்டேஷனில் தயவுசெய்து விசாரித்துப் பாருங்கள். இது உண்மையா, பொய்யா என்று தெரியும். ஆக, அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. கடந்த திங்களில் கூட நடந்திருக்கிறது. உங்கள் பார்வைக்கு வராமல் இருக்கலாம். ஒரு விநோதம்—ஆந்திராவுக்குச் சென்று, மீன் பிடித்துவரும் படகைத் தமிழ்நாட்டு எல்லையில் நிறுத்தியதோடு, அந்தப் படகு காணாமல் போய்விட்டதோ என்று தேடிச் சென்ற படகையும் பிடித்து, இரண்டு படகையும் பிடித்து ரேட் பேசியிருக்கிறார்கள், ரேட் வாங்கியிருக்கிறார்கள். அதற்குத் தலைமை யார் என்றால் முதல்வர் சொன்ன குழப்பத்தில் வளர்ந்த தலைவர்தான்.

இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ்நாட்டில் இருப்பதை, குறிப்பாக சென்னையில் இருப்பதை என்றால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இதனால் வெறுப்படைந்த சிலர் குறிப்பிட்ட இடத்தில் சென்னையில் கலெக்டர் ஆபீசில் அமர்ந்து சனிக்கிழமை முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். கோரிக்கைகளுக்குள்ளே செல்ல விரும்பவில்லை. அதற்கும் செவி சாய்க்கக்கூடிய இப்படிப்பட்ட தலைவர்கள் இருப்பதால் உங்களுக்கும் தலைவலி, முதலமைச்சர் அவர்களுக்கும் தலைவலி. நான் வெளிப்படையாகவே சொல்லுகிறேன்—உங்கள் பெயர் வீணாக இழுக்கப்படுகிறது. நான் கண்டித்தேன். உண்மையிலேயே சொல்லுகிறேன், இதய சுத்தியோடு சொல்லுகிறேன், நான் கண்டித்துச் சொன்னேன், கீழான எண்ணங்களில் விமர்சிப்பது நியாயம் அல்ல என்று

சொல்லி அமைச்சர்களின் உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன். தயவுசெய்து அவர்கள் விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்.

அமைச்சர் அவர்கள் ஏற்கனவே வாதிட்டார்கள். பல்வேறு சந்தாப்பங்களில் வாதிட்டார்கள். இந்தத் தகராறுகள், சச்சரவுகளுக்கெல்லாம் காரணம், திராவிட முன்னேற்றக் கழக அரசு மீனவர் அல்லாதாருக்குப் படகை வழங்கிவிட்டது என்று சொன்னார்கள். நானும் அந்தச் சமயத்தில் எழுந்தேன்; அமைச்சர் அவர்கள் நீங்கள் மானியம் வரும்போது அதுபற்றிப் பேசுங்கள் என்று சொன்னார்கள். நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்—1969-ல் இருந்து 1976 வரை வழங்கப்பட்ட படகுகள் மீனவர்கள் அல்லாதாருக்கு வழங்கப்பட்டன என்று நிரூபிக்கப்படுமானால் நான் எந்தத் தண்டனைக்கும் உள்ளாகத் தயாராக இருக்கிறேன்.

இன்னொரு விவரத்தையும் சொல்ல விரும்புகிறேன். தகவல் இல்லாத காரணத்தால் அந்த ஆதாரமற்ற சர்ச்சையில் அவர்கள் இறங்குகிறார்கள். கலைஞர் ஆட்சியில், எங்கள் தலைவர் ஆட்சியில் எந்தவித விண்ணப்பமும் இதற்காக வரவேற்கப்படவில்லை. 1968 ஏப்ரல் மாதத்தோடு விண்ணப்பங்கள் வருவது நிறுத்தப்பட்டு விட்டது. 1968 ஏப்ரல் வரை வந்த விண்ணப்பங்களில் இருந்து அதிலே உள்ள மீனவர்களைத் தேர்ந்தெடுத்து 1976 வரை படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வேறு விவகாரங்களில் தகவல் தரலாம். அதுவும் தெரியும். அதற்கும் ஆதாரம் சொல்லத் தயாராக இருக்கிறேன். உங்கள் வாதம் உண்மையின் அடிப்படையில் இல்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலைக்கு வர ஆசைப்படுகிறேன். இன்றையதினம் மீனளத் துறைக்காக 2,25,70,000 ரூபாய்க்கு அமைச்சர் அவர்கள் மானியத்தைக் கோரியிருக்கிறார்கள். இதிலே ஒவ்வொரு ரெஃபரன்சும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. அப்படி இருக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆனால் நீங்கள் தந்திருக்கிற பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில் 1978-79-க்கு ஸ்டேட்மெண்ட் ஒன்று, இரண்டு, மூன்றிலேயும் தந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கே 2,25,70,000 ரூபாய் நிதி





கோருகிறீர்கள், ஆனால் இந்த மூன்று ஸ்டேட்மெண்டிலேயும் சேர்த்து 2,94,28,000 ரூபாய் என்று தந்திருக்கிறீர்கள். இந்த வித்தியாசம் ஏன் வருகிறது? எது உண்மை? இது உண்மையா அல்லது அது உண்மையா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே ஒரு கணக்கைத் தந்திருக்கிறார்கள். மீனளத்திற்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். முதலிலே 1 கோடியே 43 லட்சம் ரூபாய், அதற்குப் பிறகு மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடனாகவும், உதவியாகவும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய், தமிழ் நாடு மீனள வளர்ச்சி நிறுவனத்திற்கு 92 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் ஆக மொத்தம் 2,38,29,000 என்று இதிலே கணக்கு வருகிறது. அடுத்து ஒருபடி மேலே போய்ப் பார்க்கிறோம். வீடு கட்டும் திட்டத்திற்காக 1 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது 3 கோடியே 38 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் என்று கணக்கு வருகிறது. இது 2,94,28,000 ரூபாய்தான் வருகிறது. ஆனால் நீங்கள் கோருவது 2,25,70,000 ரூபாய். இதில் எது உண்மை? எனக்குக் குழப்பத்தை உண்டாக்குகிறது, எதைப் பார்த்து பேசுவது என்று எனக்குப் புரியவில்லை.

ஒரு கோடி ரூபாய் மீனவர்களுக்கு வீடு கட்டுவதற்காக என்று ஒதுக்கி இருக்கிறார்கள், நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். போன ஆண்டு ஒதுக்கவில்லை என்று எங்களுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னபோது உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அப்போது இந்த அவையில் இல்லை, ஆனால் பொறுமைமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்போடு பதில் சொன்னார்கள், என்ன தெரியுமா? அரிசன வீடு கட்டும் தொகையோடு அது சேர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். நான் துருவித் துருவிப் பார்த்தேன். அது இல்லை. மன்னிக்கவும். அப்படிப் பார்க்கும்போது, இப்போது ஒதுக்கியிருக்கிறார்கள் இந்த ஒரு கோடி ரூபாய் உண்டா இல்லையா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

நீங்கள் இங்கே தந்திருக்கிறீர்களே இந்த பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே இதைப்பற்றி ஒன்றுமே இல்லை. இதிலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1978 மார்ச் 27

நான் அதையும் படித்துக் காட்ட ஆசைப்படுகிறேன். மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு 1975 ஆம் ஆண்டில் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து இரண்டு கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியதில்

" The construction programme at Poompuhar and Vanagiri has been completed at a total cost of Rs. 63.54 lakhs. As regards scheme for construction of 5,000 houses, 2,622 houses have been constructed. Out of the remaining houses, Government in their Order No. 117, Forests and Fisheries, dated 9th February 1977 have sanctioned 1,185 houses at a cost of Rs. 56,07,250 during the year 1976–77. The construction programme has been taken up and 41 houses have so far been completed. This programme will be continued during 1978–79 also. "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கவர்னர் ஆட்சியின்போது 56 லட்சத்திற்கு தொகை ஆயிரத்து சொச்சம் வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த கவர்னர் ஆட்சி போகின்ற வரையில், ஏன் நீங்கள் இந்தப் பட்டியலைத் தருகின்ற வரையில் கட்டி முடிக்கின்ற வீடுகள் எத்தனை தெரியுமா?

(முற்பகல் 10.50)

நாற்பத்து ஒன்று. ஆனால் அதற்கு முன் கழக ஆட்சியில், என் தலைவன் கலைஞர் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டது எத்தனை தெரியுமா? 2,622. ஆக, நீங்கள் போட்டிருக்கின்ற பட்டியலைப் பார்த்தாலும்கூட, இதற்குமுன் கடந்த பட்ஜெட்டிலே ஒதுக்கிய தொகையை மீனவர்களுக்குக் கட்டுவதற்காக நிச்சயமாகப் பயன்படுத்தவில்லை என்ற பயங்கரமான குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன். அதற்குரிய ஆதாரத்தை நான் இங்கே படித்துக் காட்டுகிறேன். அந்த அடிப்படையிலே இங்கே சொல்லப்படுகிறது.

" Of this 5,000 houses, construction of 2,622 houses was sanctioned and the construction has been completed . Out of the remaining number of houses, Government have accorded sanction in 1977 for construction of 1,185 houses, Government have accorded sanction in 1977 for construction of 1,185 houses at a cost of Rs. 56,07,250. Out of these 1,185 houses, 41 houses have



1978 மார்ச் 27] [திரு. ப. பொன்னுரங்கம்]

been completed and the remaining houses are under various stages of construction. This programme will be continued during 1978–79 also. "

This programme will be continued during 1978–79 also. எந்த ப்ரோக்ராம்? ஆயிரத்துச் சொச்சம் கட்டப்படாமல் இருக்கிறதே, அதை 1978-79-க்குத் தொடர்ந்து செய்யப் போகிறீர்களா? ஆனால் அதற்கிடையில் கவர்னர் ஆட்சியில் சேங்ஷன் செய்து மிச்சமானதைக் கட்டப் போகிறீர்களா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** Programme will be continued என்றால் அர்த்தம் That programme will be continued என்பது பொதுவான பொருள்

அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்குவது என்றுதான் பொருளே· தவிர பழைய பாக்கியுள்ள கட்டடங்களைக் கட்டுவதற்காகத் தொடரும் என்பது பொருள் அல்ல.

**திரு. ப. பொன்னுரங்கம்:** In addition to— என்று அப்படி ஒரு சொற்றொடர் சேர்த்திருந்தால் இந்தச் சந்தேகம் வந்திருக்காது.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** ப்ரோக்ராம் என்றாலே அதுதான் பொருள். அதற்குமேல் இன்னொரு வார்த்தையைச் சேர்க்க முடியாது.

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவரவர்களே, This programme என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் இதையொட்டி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். This programme என்றால் ஆளுநருடைய ஆர்டர்மீது வந்தது. அப்படியென்றால் கடந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதற்கான ஜீ. ஓ. வை எங்கே காணோம்? ஏன் காணோம்?

மேலும் நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தலைவரவர்களே, நாமெல்லாம் கட்டுமர மீனவர்களைப்பற்றி வேகமாகப் பேசுகிறோம். எதிர்க் கட்சியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் திரு. அம்பிகாபதி அவர்களும், திரு. உமாநாத் அவர்களும், நாங்களும் சேர்ந்து கட்டுமர மீனவர்களைப் பற்றி

[திரு. ப. பொன்னுரங்கம்] [1978 மார்ச் 27

வேகமாகப் போகிறோம். மீனவர்களில் அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் கட்டுமர மீனவர்கள்தான், அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்குச் செய்யப்படும் சலுகைகள் இந்த பட்ஜெட்டின் மூலம் என்ன என்று ஆராய்ந்தால் அவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல், அவர்களது ஏழ்மை நிலைமைக்குத் தகுந்தாற்போல், அவர்களது க்ஷணித்த நிலைமைக்குத் தகுந்தாற்போல் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அதில் இன்னொரு விநோதம் என்னவென்றால் செய்யாததைச் செய்தேன் என்று காட்டியிருக்கிறார்கள். அதையும் நான் படித்துக் காட்டுகிறேன்.

'*Performance Budget for* 1978–79' -இல் என்ன போடப் பட்டிருக்கிறது என்றால்

"In order to assist the fishermen owning catamarans and **country crafts,** insulated boxes are being supplied to them under loan-*cum*-subsidy basis to enable them to bring their catches of quality fish and prawns in fresh condition. In board **motors** are also being supplied to them on loan-*cum*-subsidy basis to mechanise their crafts in order to increase the catch efforts" என்று போடப்பட்டிருக்கிறது.

கட்டுமரக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் ஏதோ வழங்கிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள், நானும் பார்க்கிறேன், "விசாரித்தேன், எங்கும் வழங்கியதாகத் தகவல் இல்லை. 'Are being supplied' என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், எந்தக் கட்டுமரக்காரர்களுக்காவது எந்த மாவட்டத்திலாவது 'இன்சுலேடட் பாக்ஸ்' வழங்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சில விஷயங்களைப் புரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். Performance Budget for 1978–79 இனிமேல்தான் Perforr செய்யவேண்டுமே தவிர, செய்ததைப்பற்றியல்ல.

It is performance Budget for 1978–79, that is the year to come.

**திரு. ப. பொன்னுரங்கம் :** 'Are being supplied' என்றால் என்ன அர்த்தம் என்று சொல்லுங்கள்.



1978 மார்ச் 27] [திரு. ப. பொன்னுரங்கம்]

மேலும், நான் இன்றொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய உணவுத்துறை அமைச்சரவர்கள், மீன்வளத் துறை அமைச்சரவர்கள், கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் ரூ. 5,000 மானியமும், ரூ. 5,000 கடனும் மீனவர்களுக்கு கடலிலே தொழில் செய்யும்போது இறந்துவிட்டால் கொடுப்பதாக சொல்லி, அதை உறுதிப்படுத்த, ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கிறேன், இந்த உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறேன் என்று அரிய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தொழில் செய்யச் சென்று இறந்தவர்களுக்குத்தான் நிதி அல்லது மானியம் என்று இருந்ததை, ஒருபடி மேலே சென்று, நாங்கள் இயற்கையிலே இறந்தவர்களுக்கு, மீனவர்களுக்கு, உதவி செய்ய ரூ. 10 இலட்சம் நிதி திரட்ட உத்தேசித்திருக்கிறோம். அந்த உத்தேசம் கைகூடும் என்று எண்ணுகிறோம், அதைச் செய்ய இருக்கிறோம் என்று—வெளியிலே சொல்லியிருந்தால் கூட நான் கேட்க மாட்டேன்—இதே மாமன்றத்தில், அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நான் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், அது உங்களுடைய புத்தகத்தில் எந்தப் பக்கத்திலேயிருக்கிறது ? எங்குமில்லை. என்ன காரணம் ? 10,000 போலீசை எடுப்பது போலவா ? 16,000 நியாயவிலைக் கடைகளைத் திறப்பதைப் போலவா ? இதுவும், அருள்கூர்ந்து அதைச் செய்வீர்களா, இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, கடந்த கூட்டத் தொடரில் நமது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எனக்கு உடன்பாடானது அல்ல. நான் உடனே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்தேன். எனது தலைவர் கையைக் காட்டியதால் நான் அமர்ந்து விட்டேன். இப்பொழுது தயவு செய்து விளக்க வேண்டுகிறேன். கடந்த கூட்டத் தொடரில், 'ரிஸ்கியூ போட்ஸ்' வாங்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்பொழுதும் அறிவித்திருக்கிறார்கள். கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் விலை என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதன் விலை ரூ. 5 இலட்சம் என்றிருக்கிறது. ஆனால் அமைச்சர் பேசும்பொழுது, ரூ. 10 இலட்சம் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** குறிப்பிலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு ரிஸ்கியூ போட்ஸ், என்று—குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** நீங்கள் பேசியதையே காட்டுகிறேன், கவர்ன்மென்ட் ரெக்கார்ட்சிலிருந்து. பிறகு, நேரில் கொடுக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒன்றே ஒன்று அமைச்சருக்கு வேண்டுகோள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் இருக்கிற 'பரதர்' என்பவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பதாக எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். மீனவர்களை—பரதர்களை—அப்படி தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருப்பது உண்மையோ, என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அது உண்மையாக இருந்தால், இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மீனவர்களை அந்தப் பட்டியலில் சேர்த்து, அந்தச் சலுகையை மீனவ நண்பர்களுக்கு அளிக்கக் கூடாதா, செய்ய பரிசீலிக்குமா என்று அறிய விரும்பி, இந்த உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

[முற்பகல் 11-00]

***திரு. இரா. அமிர்தராஜ் :** சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் மீனளம், நுகர்பொருள் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற ஆறு கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே பன்னெடுங்காலமாக நாட்டுப் படகுக்காரர்களுக்கும் இயந்திரப் படகுக்காரர்களுக்கும் ஏற்பட்டு வந்த தகராறுகளை சமீபத்திலே என்னுடைய தொகுதிக்கு விஜயம் செய்கிற நேரத்திலே இரண்டு சாராரையும் அமைச்சர் நேரிலே அழைத்துப் பேசி, அந்தத் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைத்தமைக்காக நான்





நாட்டுப் படகுக்காரர்களின் சார்பாகவும், ஏழை எளிய மீனவர்களின் சார்பாகவும் எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது சாலச் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மணப்பாடு கிராமத்தில் 100 குடியிருப்பு வீடுகள் கட்டித் தருவதாக அன்றையதினம் விஜயம் செய்த அமைச்சர் அவர்கள் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். அந்தக் குடியிருப்புகளை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புன்னக்காயல், தாமிரபரணி ஆறு கடலிலே கலக்கின்ற இடத்தில், அந்த முகப்பில் அடிக்கடி மணல் திட்டுகள் ஏற்படுவதால் அவர்களுடைய தொழில் பாதிக்கிறது. அதனால் நாட்டுப் படகுக்காரர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்குகின்ற நிலையும் ஆபத்தும் அடிக்கடி ஏற்படுகிறது. இதுபற்றி பல ஆண்டுகளாக அரசுக்கு எடுத்துச் சொல்லியும், நடவடிக்கை எடுக்காததால் இப்படிப்பட்ட மணல் திட்டுகள் ஆண்டுதோறும் ஏற்பட்டு அவர்களுடைய தொழிலுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மண் திட்டுகளை அகற்றுவதற்கு நல்ல உத்தரவினை அறிவிக்குமாறு இந்த மீனவ சமுதாயத்தினருடைய சார்பிலும், மக்கள் சார்பாகவும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நுகர் பொருள் வாணிபக் கழகம் திட்டத்தினைப் பொறுத்தமட்டில் இந்த அரசுக்கு செயற்கை சூழ்வினைகள் ஏற்பட்ட போதிலும், எல்லாவற்றையும் விட இயற்கையின் சீற்றத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பலவிதமான இடைஞ்சல்கள், புயல் வெள்ளத்தினால் ஏற்பட்டது. விளைந்து கிடந்த நெல் மணிகள் எல்லாம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. அரிசி ஆலைகள் இயங்க முடியாத அளவுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அப்படிப்பட்ட கிராமங்களுக்கும் உணவு தானியங்கள் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை இருந்தும், தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு உணவு தானியங்கள் நியாயமான விலையில் சீராகக் கிடைக்கும் வகையில் செயலாற்றி வந்த புரட்சித் தலைவர் அரசையும், இந்தப்

பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பாராட்டிப் பேசுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, நெல்லுக்குக் கொள்முதல் விலையை நிர்ணயிக்கின்ற பொறுப்பு மத்திய அரசு தன்னிடம் வைத்திருக்கிறது. கொள்முதலும், வினியோகமும் செய்கின்ற பொறுப்பு மட்டும் மாநில அரசு தன்னிடம் வைத்திருக்கின்றது. ஆனால் விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பையும் மாநில அரசிடம் இருக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, நம்முடைய பகுதியிலே விளைகின்ற உணவு தானியங்கள் எந்த அளவுக்கு விளைகிறது, இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் செலவுகள், அவர்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் தமிழகத்திலே இருப்பவர்களுக்குத்தான் தெரியுமே தவிர, மத்தியிலே உள்ளவர்களுக்குத் தெரிய நியாயம் இல்லை. ஆகவே, விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பு மாநில அரசுக்குத்தான் இருக்க வேண்டும்.

விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை நிர்ணயம் மத்திய அரசு செய்யாததால் மாநில அரசு விவசாயிகளிடம் இருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யவில்லை. இதனால் வெளிச் சந்தையில் கட்டுப்படியாகின்ற விலையில் விவசாயிகள் தங்களுடைய உணவு தானியங்களை விற்கவும், வாங்கவும் முழு சுதந்திரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தங்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் நல்ல விலைக்கு விற்றுக்கொள்வது அவர்களுக்கு உதவியாக இருக்கிறது.

நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களின் விலையில் உயர்வு ஏற்படுகின்றது. தேவையையும் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு விளைச்சல் இருந்தாலும் கூட விளைகின்ற நிலக்கடலை போன்றவைகளுக்குப் போக்குவரத்துக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால், நம் நாட்டில் விளைகின்ற நிலக்கடலை வட மாநிலங்களுக்கு, மகாராஷ்டிரம், வங்காளம் போன்ற இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதனால் இங்கு நிலக்கடலை மற்றும் உணவு தானியங்கள் விலை அதிகமாக ஏறுகிறது. அதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, போக்குவரத்துக் கட்டுப்பாடு ஏற்படுத்த மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும், ஒப்புதல் தர மறுத்தால் எப்படியாவது இந்த





நிலையைத் தடை செய்தால்தான் விலையைக் கட்டுப்படுத்த முடியும். எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், சேமிப்புக் கிடங்கு நிறுவனமும், ஒவ்வொரு தாலூக்கா அளவிலும், ஒவ்வொரு சேமிப்புக் கிடங்கு வீதம் நிறுவ வேண்டும். விவசாயிகளிடம் குறைந்த வாடகை பெற்றுக்கொண்டு, மேற்படி கிடங்குகளில், விளைப் பொருள்களைப் பாதுகாத்து வைக்க வேண்டும். இப்படிச் செய்தால், உணவு தானியம் பாதுகாக்கப்படுகிறது. பூச்சி, புழுக்களினால் ஏற்படும் நஷ்டம் தடுக்கப்படுகிறது. நல்ல விலை வரும்பொழுது விற்கவும் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு அந்த வகையில் விற்பதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கவும் வழி இருக்கும். மேலும் இப்படிச் சேமித்து வைக்கப்பட்ட தானியங்களின் மீது, குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்குக் கடன் அளிக்க வேண்டும். இப்படிச் செய்வதால், விவசாயிகள் அறுவடை முடிந்ததும் அவசரம் அவசரமாக விற்று, தாங்கள் அதிக வட்டிக்கு வாங்கிய கடனை அடைக்கின்ற கஷ்டமான நிர்ப்பந்தமான நிலை இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிச் செய்வதால், ஆண்டுக்கு எவ்வளவு உணவு தானியம் விளைகிறது, எவ்வளவு சேமிக்கப்படுகிறது என்பதை அறியவும், புள்ளி விவரம் சேகரிக்கவும் வாய்ப்பு வசதி இருக்கும்.

இப்படிச் சேமிப்புக் கிடங்குகளில் விவசாய உணவுப் பொருள்கள் சேமித்து வைக்கப்படுவதால் தேவையான நேரத்தில் விவசாயிகள் அவற்றை விற்கவும், அதன் காரணமாக இடைத்தரகர்கள் அடிக்கும் கொள்ளை லாபமும் தவிர்க்கப்பட முடியும். அதேபோல் நுகர் பொருள் வாணிபக் கழகங்கள் சேமிப்புக் கிடங்குகள் போன்றவைகளில் பொது மக்களும் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும். தற்போது அரசு அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே நடைபெறுகிற காரியங்கள் என்ன என்று நமக்குத் தெரியாமல் போகிறது. ஆகவே, பொதுமக்களும் நியமிக்கப்படுவார்களானால் அந்தக் குறைபாடு தவிர்க்கப்பட முடியும், என்ன காரியங்கள் நடைபெறுகின்றன என்பது அரசுக்கும் தெரிய வரும் என்று தெரிவித்து, நிறைவு பெறுகிறேன்.

[1978 மார்ச் 27

* திரு. ரெ. வீ. சவுந்திராஜன்: பேரவை மாற்றுத் தலைவர்களே, மீனளம், நுகர்பொருள் வழங்கல், பல்வகை ஆகிய மானிய கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மீனளம் பொறுத்தவரையில் கடல் மீன், உள் நாட்டு மீன் என்று இரண்டு விதங்களில் மீன் பிடி தொழில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் மக்களுக்கு மீனும் ஒரு முக்கிய உணவுப்பொருளாக இருக்கிறது. இந்தக் கடல் மீன் பிடி தொழில் வருஷம் பூராவும் நடக்கும். இயந்திரப்படகு, நாட்டுப் படகு, கட்டுமரப் படகு முதலியவற்றால் மீன் பிடிக்கப்பட்டு, மீன் பிடி தொழில் நடைபெற்று வருகிறது. தற்சமயம் கூட இரண்டு மெக்சிகன் டிராலர்ஸ், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக, குறிப்பாக இரால் மீன் பிடிப்பதற்காக வாங்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய பெயர்கள், 'தஞ்சை' 'நெல்லை' என்று வைக்கப்பட்டு இருக்கிறது. 'தஞ்சை' என்ற பெயர் வைத்திருப்பதிலே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

சாதாரணமாக, கடல் மீன் விற்பனை நிலையங்கள் நகரங்களில் தான் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கிராமங்களில் கடல் மீன் அடிக்கடி யாரும் பார்த்துக் கூட இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, கிராமங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் நல்ல மீன் கிடைக்க நல்லதொரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்கள் பகுதிக்கு இன்று காலை அல்லது மாலை பிடித்த மீனைத்தான், மறு நாள் ஐஸ் வைத்துக் கொண்டு வருகிறார்கள். அது துர்நாற்றம் அடிக்கிறது. அதைத்தான் விற்பனை செய்கிறார்கள். ஆகவே, அதைத் தடுக்க நல்ல மீன் கிராமங்களில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும், முக்கியமான நல்ல மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, மிக மோசமான மீன் வகைகள் தான் மக்களுக்குப் பயன்படும் வகையில் விற்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, நல்ல மீனும் விற்பனை செய்ய அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



78 மார்ச் 27] [திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்]

விசைப்படகு, நாட்டுப்படகு தகராறு பற்றி எல்லோரும் பசுகிறார்கள். ஒரு காலத்தில் கை ரிக்ஷா இருந்தது. அதை ழித்து சைக்கிள் ரிக்ஷாவாகக் கொண்டு வந்தோம். அந்த சக்கிள் ரிக்ஷாவிற்கும் இப்போது இன்ஜின் வைத்து ஓட்டலாம் ன்ற முறையில் யோசனை செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, கட்டுமரம், நாட்டுப்படகு, விசைப்படகு என்ற வித்தி ாசம் இல்லாமல் இருக்க, எல்லாப் படகுகளுக்கும் இயந்திரங் ளைப் பொருத்தி, இயந்திரப் படகுகளாக எல்லாவற்றையும் ாற்றிவிட்டால், எந்தத் தகராறுகளும் வாாது. ண்ணெண்ணெயில் ஓடும் புதுமாதிரி இன்ஜின்களைக் கூட ாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மண்ணெண்ணை ன்ஜின்களை சாதாரண நாட்டுப் படகுகளில் பொறுத்தி அதைப் யன்படுத்தும் முறையில் ஏற்பாடு செய்தால், எந்தத் கராறுகளும் வாாது என்பதை மீண்டும் கூறிக் கொள்ள ரசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-10)

உள்நாட்டு மீன்களைப் பொறுத்தவரையில் சாத்தனூர், வானிசாகர், திருமூர்த்திநகர், ஆளியாறு, அமராவதி போன்ற ர்த்தேக்கங்களில் அதிகப்படியாக மீன்கள் பிடிக்கப்பட்டு ிற்பனை செய்யப்படுகின்றன. என்று சொல்லப்படுகிறது. அது ண்மைதான். உட்பகுதிகளில் நீர்த் தேக்கங்கள் இருப்பதால் வைகளில் அதிகமான மீன்கள் வளர்க்கப்பட்டு, அவைகளைப் பிடித்து விற்பனை செய்கிறார்கள். கிராமங்களில் ஆற்றில் ண்ணீர் வரும்போது தான் மீன் பிடிக்கிறார்கள். குளங்களைப் பொறுத்தவரையில் குளத்தில் தண்ணீர் வற்றும்போதுதான் மீன் பிடிக்கப்படும். அதனால் ஒரு ஆண்டில் ஒருசில மாதங்கள் ட்டும்தான் உள்நாட்டில் மீன் பிடிக்கப்படும் நிலை இருக்கிறது.

குளங்களை எடுத்துக் கொண்டால், அங்கே பல தகராறுகள் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கு ஒப்படைத்த மாதிரி தான் இதுவும் இருக்கிறது. புறம்போக்கு நிலத்தை ஒப்படைத்துவிட்டோம் என்பார்கள்; ஆனால் அது எங்கே எப்படி இருக்கிறது என்று தெரியாது. கண்டுபிடித்து, அதை பஞ்சாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்போனால் கேஸ் வரும். வழக்காடுவதற்கு பஞ்சாயத்திடம் நிதிவசதி கிடையாது. அதைப்போல சில குளங்களை பஞ்சாயத்து எடுத்திருக்கிறது. ஆனால் மெயின்டனன்ஸ்தான் பஞ்சாயத்துக்கு; அனுபவிப்பது

[திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்] [1978 மார்ச் 27

வேறொருவர். பஞ்சாயத்துக்கு அந்தக் குளங்களின் மூலம் லாபமும் வராது. ஃபிஷரீஸ் ரைட் ஒருவருக்கு, மெயின்டனன்ஸ் பஞ்சாயத்துக்கு. அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் எல்லாக் குளங்களையும் பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைத்து விட்டால், மீன்கள் வளர்த்து, விற்பதன் மூலம் அதிலிருந்து கிடைக்கும் லாபம் மீனவர்களுக்குச் சேரும்; அவர்கள் தொழில் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்திற்கும் ஓரளவு வருமானமும் கிடைக்கும்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடலிலே மீன் பிடிகின்ற மீனவர்களுக்கு செய்துகொடுக்கின்ற வசதிகளைப் போல் கிராமங்களிலிருக்கும் மீனவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும். கிராமங்களிலும் ஏராளமான மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்க இடம் இல்லை. ஆகவே, கடல் மீனவர்களுக்காக இருக்கும் வீடு கட்டும் திட்டத்தை கிராமங்களிலிருக்கும் மீனவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாங்குவது பற்றி, மோட்டா ரகம் 90 ரூபாய், நடுத்தரம் 95 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மோட்டா ரகம், நடுத்தரம் என்றாலே இன்னொரு ரகம் இருக்கிறது என்று பொருள்; ஆகையால் இந்த இரண்டு ரகத்தைத் தவிர, முதல் ரகம் ஒன்று இருக்கிறது. அந்த முதல் தரம் நெல்லுக்கு அதிக விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், அது நெற்களஞ்சியம். அங்கே 117 இடங்களில்தான் கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் பல விவசாயிகள் தங்களுடைய நெல்லை குறிப்பிட்ட கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுச் செல்ல முடியாமல் இருக்கிறது. ஆகையால் சிறு வியாபாரிகள் அந்த விவசாயிகளிடமிருந்து தங்கள் இஷ்டம் போல் விலையைக் குறைத்தோ அல்லது அதிக எடைபோட்டோ வாங்கும் நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால் கொள்முதல் நிலையங்களை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 27] [திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்]

அரசு அறிவிப்பில் கொள்முதல்—விற்பனை கணக்குகளைக் குறிப்பிட்டு நஷ்டக் கணக்கைக் காட்டியிருக்கிறார்கள். பொது மக்களுக்கு சௌகரியம் செய்கிற நேரத்தில் லாப—நஷ்டத்தைப் பார்க்காமல், நஷ்டம் ஏற்பட்டாலும் அதனால் பொதுமக்களுக்கு ஏற்படுகிற சௌகரியத்தைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் சாதாரணமாக இப்போது கொள்முதல் செய்யும் பல இடங்களில் 58 கிலோ எடுத்துவிட்டு, 3 கிலோவைக் குறைத்து, 55 கிலோவுக்குத்தான் பணம் கொடுக்கிறார்கள். இதுபற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறோம். 3 கிலோ என்பதற்குப் பதில் ஒரு கிலோ ஈரம், பதர் போன்றவைகளுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். ஈரம், பதருக்காக ஒரு கிலோ குறைத்துவிட்டு கிரயம் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நெல் கொள்முதலில் அந்த முடிவைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். குறுவை நெல் 68 கிலோ, 69 கிலோ விதம் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் நிலையங்களில் எடுக்கப்பட்டது. ஆனால் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா கொள்முதல் நிலையங்களில் 59 கிலோ வீதம் எடுத்தார்கள். ஆகையால் இதுமாதிரி குறைபாடுகள் இல்லாமல் கொள்முதல் நிலையங்கள் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்பதை அவ்வப்போது பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீனியைப்பற்றி அடுத்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஜீனி முன்பு எப்படி விநியோகிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். முன்பு வருமான அடிப்படையில்தான் விநியோகிக்கப்பட்டது. ரூ. 300 வரை வருமானம் இருந்தால் 2 கிலோவும், ரூ. 300-க்கு மேல் 500 வரை 2 கிலோவிலிருந்து 5 கிலோ வரையிலும், ரூ. 500-க்கு மேல் வருமானம் இருந்தால் 5 கிலோ, 6 கிலோ என்றும் இருந்தது.

[திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்] [1978 மார்ச் 27

ஆனால், இப்போது நபருக்கு 425 கிராம் என்ற அளவில் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு ஜீனி விநியோகம் செய்வதால் பல இலட்சக்கணக்கான மக்கள் நன்மை பெறுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது எந்தவிதத்தில் நன்மை என்பது எனக்குப் புரியவில்லை. இந்தத் திட்டத்தினால் கிராம மக்கள் எல்லோரும் நன்மை அடைகிறார்கள் என்று சொல்கிறார்கள். கிராம மக்கள் நன்மை அடைய வேண்டியதுதான். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. இன்னும் சொல்லப் போனால் நகரத்திலே சுத்தமான பால் கிடைக்கிறது. அது கிராமங்களில் கிடைப்பதில்லை. ஆனால், இந்த ஜீனியை வாங்கி அந்த கிராம மக்கள் எந்தவகையில் பயன் அடைகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை. இப்போது எல்லோருக்கும் வித்தியாசம் பார்க்காமல் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராம மக்களுக்குக் கிடைப்பதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், உண்மையாக தேவைப்பட்டவர்களுக்குக் குறைந்துவிட்டது. அவர்களுக்குத் தேவையான ஜீனி கிடைப்பதற்கு வேறு ஏதாவது முறையிலேயாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது நமது அத்தியாவசியப் பொருள்களான மிளகாய், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு ஆகிய எல்லாம் விலை அதிகமாக இருக்கின்றன. நியாயமான விலையில் விநியோகிப்பதற்காக நியாயவிலைக் கடைகளை கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் திறக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதேமாதிரி எல்லா மாவட்டங்களிலும் நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் இவ்வாறு சொல்கிறேன் என்பதை விளக்க விரும்புகிறேன். சூப்பர் மார்க்கெட் இருப்பது தெரியும். சூப்பர் மார்க்கெட்டிலே வாங்குகின்ற அதே சாமான்களை அதைவிட விலை குறைவாக வெளி மார்க்கெட்டிலே வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை.

ஏதோ பஞ்சாயத்து யூனியனில் ஆடிட் அப்ஜெக்ஷன் இல்லை என்பதற்காகத்தான் பல சாமான்களை சூப்பர் மார்க்கெட்டில் வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையைக் கொண்டுதான் அது ஓடிக்கொண்டிருக்கிறது. சூப்பர் மார்க்கெட்டிலே மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையிலே சாமான்களைக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்பதுதான் அடிப்படையான நோக்கம். ஆனால், உண்மை நிலை என்னவென்றால் வெளிமார்க்கெட்டை விட அங்கே விலை அதிகமாக விற்கப்படுகிறது.



1978 மார்ச் 27] [திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்]

அடுத்து, எங்கள் பகுதியிலே சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. அது முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் கூடப் பாராட்டப்பட்டது. அங்கே வெளியிலே விற்பதை விட எல்லாச் சாமான்களும், ஜவுளியானாலும் சரி, மற்ற மளிகைச் சாமான்களானாலும் சரி, ஷாப் சாமான்களானாலும் சரி குறைந்த விலையில் கிடைத்து வந்தது. ஆனால், இப்போது அதே பண்டகசாலையில் இருப்பதை விட வெளியே விலைகள் குறைவாக இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பது புரியவில்லை. இது மிகவும் பழமை வாய்ந்த பண்டகசாலையாக இருப்பதால் இது நல்ல முறையிலே இயங்க அமைச்சரவர்கள் பரிசிலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விலைப்பட்டியல். விலைப்பட்டியல் எல்லாக் கடைகளிலும் போட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். உண்மையிலேயே அது அவசியம்தான். ஆனால், எல்லாக் கடைகளிலும் இப்படிப்பட்ட விலைப்பட்டியல் போட்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. ஆகவே, சாமான்களுக்குரிய விலைப்பட்டியல் பொது மக்களுடைய பார்வையில் வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அவ்வப்போது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கோதுமை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கோதுமை ஒரு கிலோ ரூ. 1.40 என்று விற்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோதுமை உணவைச் சாப்பிடுவதற்கு கிராம மக்கள் தயங்குகிறார்கள். அதற்கு தேவையான அளவு விளம்பரம் இல்லை. அது நல்ல சத்துணவு என்பது மக்களுக்கு புரியும்படிச் செய்ய வேண்டும். அரிசியின் விலை ஒரு கிலோ ரூ. 1.60 ஆனால்,

[திரு. செ. வ். சவுந்திரராஜன்] [1978 மார்ச் 27

**கோதுமையின்** விலை ரூ. 1.40 தான். ஆகவே, கோதுமையின் **தன்மை** அதன் அவசியம் பற்றி மக்களுக்குப் புரியும்படி இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11.20]

*** திரு. ந. தனசேகரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு, மீனளத்துறை அமைச்சர் அவர்கள் கோருகிற மானியக் கோரிக்கைகளின் அடிப்படையில் அதனை வரவேற்று எனது உள்ளக் கருத்துக்களையும் அதோடு இணைத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் சில வார்த்தைகள் கூற விழைகிறேன்.

இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தமிழகத்திலே நடைபெற்று முடிந்த இன்னல்கள் ஏராளம் என்றாலும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு அதிகப்படியான மீனவப்பெருங்குடி மக்கள் ஆதரவற்ற நிலையில் அன்றையதினம் இருந்த போது நாங்கள் இருக்கிறோம் உங்களுக்காக என்று கூறுகிற அளவிற்கு மீனளத்துறை அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர் பெருமக்களும் இந்த மீனவக் குடி மக்களுக்காக பல நன்மைகளை உடனடியாகச் செய்தது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அதே நேரத்தில் உணவு வழங்கு துறையைப் பொறுத்த மட்டில் தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்படாத அளவில் எந்தச் சந்தர்ப்பத்திலும் யாரும் உணவிற்காக் பாதிக்கப்படாத அளவில் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அன்றையதினம் இருந்த ஒரு இக்கட்டான நிலையை சரிவர சமாளித்ததை உள்ளபடியே இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். மீனளத் துறையைப் பொறுத்தவரையில் என் தொகுதியாகிய தூத்துக்குடியில் செயற்கை முத்து உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகயிருக்கிற காரணத் தால் அங்கு செயற்கை முத்து உற்பத்தி செய்யக்கூடிய கூடத்தினை தூத்துக்குடியில் அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த முத்துக்களை செய்வதற்கான பயிற்சிபெற்ற அநேக பயிற்சியாளர்கள் அந்தத் தூத்துக்குடி வட்டாரத்தில் வேலை



1978 மார்ச் 27] [திரு. ந. தனசேகரன்]

வாய்ப்பு இல்லாமல் இருந்துவருகிற காரணத்தால் அரசு தயவு செய்து அந்த செயற்கை முத்து உற்பத்தி செய்யக்கூடிய கூடத்தை தூத்துக்குடியில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முத்துக் குளிப்பது என்பது வெகு நாட்களாகியும் கூட இன்னும் அடுத்த முறை முத்துக் குளிக்கக்கூடிய ஒரு முயற்சியை அரசு மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி விரைவில் தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதற் கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சங்கு குளிக்கும் தொழிலைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் அரசாங்கத்தின் நிலைமை ஒரு தர்மசங்கடமான நிலையாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொண்டாலும்கூட தமிழ் நாட்டில் தூத்துக்குடி பகுதியில் சங்கு குளிக்கும் அந்த தொழிலாளர்களுக்கு தடை ஏற்படுத்தியிருப்பதை, கனிராஜபுரம் போன்ற பகுதிகளில் தடையை நீக்கி லைசென்ஸ் முறை மூலம் சங்கு குளிக்கும் முறை இருந்ததை நீக்கி சங்கு குளிக்கும் தொழிலை அரசுடைமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் அந்தச் சங்குகளைக் கொண்டு வந்து சங்கு பாங்க் என்று ஏற்படுத்தி அதில் வைத்து அதை விற்று முடித்த பிறகு எற்கனவே அவர்கள் பெற்ற பணம் போக மீதிப் பணத்தைப் பெறக்கூடிய அளவிற்கு அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்ன விலை கொடுத்தாலும் அவர்கள் சரியான முறையில் அரசோடு ஒத்துழைக்கக்கூடிய நிலை இல்லாததால், அவர்களையே பங்குதாரர் களாக ஆக்கி சங்கு பாங்க் என்ற முறையில் ஒன்றை ஏற்படுத்தினால் தூத்துக்குடியிலுள்ள சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் இந்த அரசை வாழ்த்தக்கூடிய அளவிற்கு அதை வரவேற்பார்கள்.

அடுத்து, மீன் விற்பனை செய்வதில் மீன் விற்கிற வண்டிகள் மூலமாக மார்க்கெட் அல்லது கடைகளில் உள்ள மீன்களை விற்பது என்பதை வரவேற்பதோடு கூட, மூன்று சக்கர வண்டிகள் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு ஊரிலும் மீன் விற்பனை செய்யக்கூடிய வகையில் வண்டிகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறால் மீன் போன்றவைகளை ஏற்றுமதி

செய்வதில் தனியார்களிடம் விட்டுவைப்பதை அனுமதிக்காது அரசுத்துறை மூலம் இரால் மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இரால் மீன் ஏற்றுமதியை தேசியவுடமை ஆக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு இன்றையதினம் மெக்ஸிகோ விலிருந்து வாங்கியிருக்கிற இரண்டு ட்ராலர்களுக்கு, ஒன்றுக்கு தஞ்சை என்றும் மற்றொன்றுக்கு நெல்லை என்றும் பெயரிட்டிருப்பதை உள்ளபடியே நான் நெல்லை மாவட்டத்தை சார்ந்தவன் என்ற காரணத்தாலும், அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தாலும் நெல்லை மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு இந்த அரசு இந்தச் சலுகை அளித்ததை உள்ளபடியே நெல்லை மாவட்டத்திலுள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் வரவேற்று பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்தில் உணவு வழங்கு துறையைப் பற்றி சொல்லும்போது, நெல்லின் விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்தில் இருப்பதால், நெருக்கடி காலங்களில் நெல்லை கொள்முதல் செய்யும்போது இந்த மாநிலத்தின் தேவைகளுக்கேற்ப நெல்லின் விலையை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. ஆகவே இதற்கான அதிகாரம் மாநில அரசினிடத்தில் இருக்க வேண்டும் என்பதை கூறிக்கொள்கிறேன். மாநில அரசிடம் இதற்கான அதிகாரம் இருக்குமானால், அவ்வப்போது இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப நெல்லின் விலையை நிர்ணயிக்கக்கூடிய நிலைமை உருவாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசி ஆலை அதிபர்களிடமிருந்து லெவி நிர்ணயம் நெல் பெறக் கூடிய நிலைமையைப்பற்றி ஓரளவு அரசு பரிசீலித்து, இந்த லெவி முறையை அடியோடு நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோன்றுதான் எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை போன்றவற்றிலும், கடலை எண்ணெய் போக்குவரத்து செய்வதில் கட்டுப்பாடு செய்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்க



வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலை ஏற்படுமானால் சமையல் எண்ணெய் போன்றவற்றுக்கு விலையை நிர்ணயித்து கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்பு கிடங்குகள் ஒவ்வொரு தாலுகாவிலும் ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏற்படக் கூடிய சூழ்நிலையிருந்தால் விவசாயிகள் தங்கள் தானியங்களை வைத்துக் கொள்வதற்கும், மேலும் ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு தானியங்கள் இருக்கிறது என்பதை அரசு தெரிந்து கொள்வதற்குமான ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் கடல் திட்டுகளில், நுரைக் கற்கள், சல்லிக்கற்கள் இருக்கின்றன. இதற்கு முன்னால் இருந்த அரசின் காலத்தில், இந்தத் திட்டுகளிலுள்ள கற்களை ஒரு டன்னுக்கு இரண்டரை ரூபாய் கொடுத்து வாங்கி, அந்த சல்லிக் கற்களை டன் ஒன்றுக்கு 150 ரூபாய் வைத்து, தாழையூத்து சிமிண்ட் பாக்டரிக்கும், ஆலங்குளம் சிமிண்ட் பாக்டரிக்கும் சப்ளை செய்து கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருந்தார்கள். பின்னால் கற்களை எடுத்துச் செல்லக்கூடாது என்ற தடையுத்தரவு பிறப்பிக் கப்பட்டது. இப்போது அதிகாரிகள் மூலமாக அதற்கான அனுமதி வழங்கப்பட்டு வருவதாக தெரிகிறது... (இச்சந்தர்ப்பத்தில்—மின்சாரத்தடை ஏற்பட்டதால்—ஒலிபெருக்கி வேலை செய்யவில்லை) இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான மோசடி நடந்து கொண்டிருந்தது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு டன் 2½ ரூபாய்க்கு வாங்கி அதை டன் ஒன்றுக்கு 150 ரூபாய் என்ற வகையில் விற்று கொள்ளை லாபம் அடிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதோடு, இதில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை மீன்வளத் துறையோடு இணைத்து அவர்களுக்கு சொசைட்டி என்ற முறையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி அந்தத் தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெற ஒரு ஏற்பாட்டை செய்து கொடுக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ந. தனசேகரன்] [1978 மார்ச் 27

எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த ஆட்சி காலத்தில் சங்குகள் எடுக்கப்பட்டு கோ-டவுனில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வைக்கப்பட்ட சங்குகள் எல்லாம் உருப்படியாக வைக்கப் பட்டிருக்கிறதா, முன்னால் குறிப்பிட்ட சைஸ்-வின் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற ஐயப்பாடு தூத்துக்குடி பகுதியிலுள்ள மக்களிடையே ஏற்பட்டிருப்பதால், கோ-டவுனில் உள்ள சங்குகள் எல்லாம் சரியாக வைக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றி விசாரிக்க ஒரு விசாரணை கமிஷன் வைக்கவேண்டுமென்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகமும், சேமிப்பு கிடங்குகள் முதலியவற்றுக்கு டைரக்டர்களாக இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே என்ன நடக்கிறது என்பதெல்லாம் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெரியாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு அமைப்புகளிலும் டைரக்டர்களாக மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்களை நியமிக்க வேண்டும் என்று கூறி, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி கூறி அமருகிறேன், வணக்கம்.

* திரு. தே. ஞானசிகாமணி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் உணவு, மீன்வளம் ஆகிய மானியங்களின் மீது எங்கள் கட்சியின் சார்பாக ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதலில், உணவைப் பற்றி இங்கு பல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகள் மூலம் உணவு வினியோகம் செய்யப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நியாயவிலைக் கடைகள் இரண்டு மூன்று மாவட்டங்களில் மட்டும் அமலாக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் இந்த நியாய விலைக் கடைகள் தமிழகம் முழுவதும் திறக்கப் படவேண்டும் என்பது எங்களது அபிப்பிராயம்.

அப்படி திறப்பது மட்டுமல்ல, இந்தக் கடைகளில் அரிசியோடு மற்ற பொருட்களையும், அதாவது மனிதனுக்கு அன்றாடத் தேவையான மற்றப் பொருட்களையும் இந்த நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்க வேண்டும். அப்போதுதான்



1978 மார்ச் 27] [திரு. தே. ஞானசிகாமணி]

அடிக்கடி விலைவாசி உயருவதின் காரணமாக, நாட்டிலுள்ள மக்களின் குறிப்பாக தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் சீராக அமைய முடியும், இதனால் அடிக்கடி ஏற்படுகின்ற நெருக்கடியையும் தவிர்க்க முடியும்.

[முற்பகல் 11.30]

ஆகவே, இந்த அரசு அத்தகைய பொருட்கள் அத்தனையும் இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்ய வேண்டுமென்று நான் முதலாவதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, நெல் விலைக்கும், அரிசி விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது, இந்த வித்தியாசம் தவிர்க்கப்பட வேண்டும். அரிசி, நெல், தானியம் போன்றவைகளை வாங்கி ஸ்டாக் வைக்கும்போது நஷ்டம் ஏற்படுவதாக குறிப்பு இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நஷ்டங்களைத் தவிர்க்க வேண்டும். இதிலே நஷ்டம் ஏற்படுகிறது, அதனாலே இந்த விலையைச் சற்று உயர்த்த வேண்டியிருக்கிறது என்று சொல்லி, அதை மக்கள்மீது சுமத்தக்கூடாது என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நெல்லை விலைக்கு எடுக்கும்போது, ஈரப்பு என்று சொல்லி விலை குறைக்கப்படுகிறது. அப்படிக் குறைப்பதன் காரணமாக, விவசாயிகள் இந்த நெல்லை நியாய விலைக்குக் கொடுக்க அஞ்சுகிறார்கள். ஆகவே, இதையும் கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்து, இந்த நாடு பூராவிலும் நியாய விலைக் கடைகளின் மூலமாக பொருட்கள் வினியோகம் செய்யும்போது, விலைவாசி ஓரளவுக்கு கட்டுப்படும்.

இதுபோல் எங்கள் மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவிலே நியாய விலைக் கடைகளில் எல்லாம் அரிசி கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது குடும்பத்திற்கு 6 கிலோ அரிசி மட்டும் கொடுக்கப்படுகிறது. இதனால் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, முன்னாலே கொடுத்ததுபோல் ஒரு நபருக்கு வாரத்திற்கு 2 கிலோ வீதம் மலையோரப் பகுதி, கடலோரப் பகுதி, மற்றுமுள்ள இடங்களிலே உள்ள மக்களுக்குக் கொடுத்தால் வாய்ப்பாக இருக்கும். அதுவும் நல்ல அரிசியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மீனளத்தைப்பற்றி இதிலே குறிப்பிட்டிருப்பதில், விசைப்படகுக்காரர்களுக்கும், கட்டுமரக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற தகராறு பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இது சென்னையிலே மட்டும் அல்ல. தமிழகம் பூராவிலும் உள்ள கடலோரப் பகுதிகளில் ஏற்படுவதுதான். அதற்கு இந்த சர்க்கார் சில வழிவகைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி வழிவகை செய்யும்போது, முத்தரப்பு கமிட்டி ஏற்படுத்தி அவைகளைப் பைசல் செய்வது என்பது தங்களுடைய கொள்கையாக அரசு அறிவித்திருக்கிறது. இது நல்ல கொள்கை என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இந்த முத்தரப்பு கமிட்டி என்பது மேல் மட்டத்தில் அல்லாமல், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் முத்தரப்புக் கமிட்டியை ஏற்படுத்தினால் அந்தக் கமிட்டியின் மூலம் இரு தரப்புகளுக்கும் இடையே உள்ள தகராறுகள் எல்லாம் சிறந்த முறையிலே தீர்க்கப்பட வழி ஏற்படும். இதுபோன்ற தகராறுகள் ஏற்படும் போது, இந்த இரு தரப்புகளிலுமே உள்ள ஒருசிலரால்தான் இந்தத் தகராறுகளே ஏற்பட்டிருக்கிறது. இவைகள் தவிர்க்கப்படவேண்டும். அப்படித் தவிர்க்கப்படுவதற்கு, இன்றைக்கு உள்ள முறையிலே சில மாற்றங்களைக் கையாண்டால் இது தவிர்க்கப்பட முடியும்.

ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த சர்க்கார் மீன்பிடித் தொழிலை ஆரம்பித்திருக்கிறது. இதை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். இப்படி ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் இந்தத் தொழில் அரசாங்கத் துறையிலே நடக்க வேண்டும்.

அதுபோலவே, கிராமங்களிலே அணைக்கட்டுகள், குளங்கள், ஏரிகள், குட்டைகள் எல்லாம் இருக்கின்றன. அங்கேயெல்லாம் ஏராளமான மீன்கள் வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை நாம் அதிகரிக்க வேண்டும். எங்கள் ஜில்லாவில் 3 பெரிய அணைக்கட்டுகள், அதாவது சிற்றாறு, பேச்சுப்பாறை, பெருஞ்சாணி ஆகிய அணைக்கட்டுகளில் மீன் வளர்க்கப்படுகின்றது. ஆனால், இதிலே விசேஷம் என்னவென்றால், இலாகாவினர் அங்கே சென்று மீன் பிடிக்கும்போது. அவர்களுக்கு 10, 15 ரூபாய்க்குத்தான் மீன் கிடைக்கிறது. இதிலே அவர்களுக்குப் போதுமான வருமானம்





கிடைக்கவில்லை. எனவே, அங்கே ஏராளமான மீன்கள் இருக்கின்றன. ஏராளமாக மீன்கள் கிடைக்கக்கூடிய முறையிலே, தற்போதுள்ள முறையை மாற்றி, நல்ல முறைகளைக் கையாள வேண்டும்.

அதுபோல், இந்த விசைப் படகுக்காரர்களுக்கு சில சலுகைகள் இருக்கும்போது, கட்டுமரக்காரர்களுக்கு எவ்விதமான சலுகைகளும் இல்லை. எனவே, அவர்களுக்கு வலை, கட்டுமரங்கள் வாங்குவதற்கு கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு முறையிலோ சலுகைகள் கொடுக்க வேண்டும். மேலும், நமது மாநிலத்திலே இப்போது பல்வேறு சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. இருந்தாலும், இரண்டு துறைமுகங்கள்தான் மீன்பிடித் துறைமுகங்களாக இருக்கின்றன. ஒன்று, தூத்துக்குடி, மற்றொன்று சென்னை. பல்வேறு துறைமுகங்களிலே இந்த மீன்பிடித் துறைமுகங்களாக ஆக்கும் வாய்ப்பில்லாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நவீன மீன்பிடித் துறைமுகங்களாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் கடலோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய மீனவப் பெண்கள் அதிகமாக வலை பின்னும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் முதல் ஒன்றரை ரூபாய் வரை கூலி கிடைக்கும். தற்போது மணவாளக்குறிச்சி என்ற இடத்தில் வலை பின்னும் இயந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது தொடங்கப்பட்டால் பெருவாரியான ஏழை மீனவப் பெண்களுக்கு வேலைக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே, தற்காலிகமாகவாவது அதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்: தலைவர் அவர்களே, இன்றைய தமிழக உணவு நிலைமை மிகச் சீராகவும், சிறப்பாகவும் இருப்பதைக் கண்டு நாம் எல்லாம் உள்ளபடியே மெத்த மகிழ்ச்சியை அடைகிறோம்.

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளக் கொடுமையால் நாடு பெரும் பற்றாக்குறையில் வாடும் என்று எதிர்பார்த்தவர்கள் எல்லாம், பசியும், பட்டினியும் கோரத்

தாண்டவமாடும் என்று எண்ணியவர்கள் எல்லாம், இந்த அரசை மக்கள் எல்லாம் ஒருசேரத் தூற்றுவார்கள் என்று எண்ணியவர்கள் எல்லாம் வியக்கத்தக்க அளவிலே இந்த அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து உணவு நிலைமையைச் சீராக வைத்ததற்காகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கும் அவர்களுடைய விளைச்சல் பெருகி யிருக்கிறது. விவசாயிகளின் உணவு தானியங்களைச் சரியான விலையில் ஏற்றுக்கொள்ள நூற்றுக்கணக்கான அரசாங்க கொள்முதல் நிலையங்களை அரசு திறந்து வைத்துள்ளதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. மேலும், மோட்டா ரக நெல்லுக்கு குவின்டாலுக்கு 90 ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்திருப்பதை உள்ளபடியே மனமுவந்து பாராட்டுகிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், விவசாயிகளுக்கு நெல் விலையை உயர்த்திக் கொடுக்க இந்த அரசு மத்திய அரசோடு போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மத்திய அரசாங்கம் ஒரு குவின்டாலுக்கு மூன்று ரூபாய்தான் உயர்த்திக் கொடுத்ததே தவிர, மேற்கொண்டு அவர்களால் கூட்டித்தர முடியவில்லை. ஆனால் நமது புரட்சித் தலைவர் அவர்கள் அதையும் மீறி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உதவியினால் மோட்டா ரக நெல்லுக்குக் குவின்டாலுக்கு 90 ரூபாய் என்று உயர்த்தியதைத் தமிழகத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள், பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எண்ணிப் பார்க்கிறேன். அன்றைய உணவு நிலைமை எப்படி இருந்தது, அரிசி விலை எவ்வளவு ஏறியிருந்தது என்று எண்ணிப் பார்க்கிறேன். அந்த விலையைக் கட்டுப்படுத்த எல்லா விவசாயிகளிடத்திலும் முதலில் லெவியை வசூலித்தார்கள். பிறகு வியாபாரிகளிடத்தில் லெவியை வசூலித்தார்கள். பிறகு ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போகும் போது லெவியை வசூலித்தார்கள். அப்போதும் கட்டுப்படுத்த முடியாமல் மாவட்டத்திற்குள்ளே தாலுக்காவிற்குள்ளேயே





நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினார்கள். அப்படியும் விலையைக் கட்டுப்படுத்தினார்களா என்றால் இல்லை. பிறகு வியாபாரிகளின் மொத்த உரிமத்தையும் பறித்து அவர்களுடைய சுதந்திரத்தையும் பறித்தார்கள்.

**திரு. அ. செல்லப்பா :** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். ஆளும் கட்சி உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழக அரசை ஒப்பிட்டுப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு நெல்லுக்கு அதிக விலை கொடுத்ததா அல்லது தற்போதுள்ள அரசு நெல்லுக்கு அதிக விலை கொடுத்ததா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) :** அவர் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசவில்லை.

**திரு. கே. ஜே. உய்யக்கொண்டான் :** நெல்லுக்கு அதிக விலை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை. பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட போது அது நீக்கப்பட்டுவிட்டது. பிறகு சம்பந்தா சம்பந்தம் இல்லாதபோதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரட்சித் தலைவரைப் பார்த்து 'நீங்கள் நெல் விலையை உயர்த்திக் கொடுக்கிறேன் என்று சொன்னீர்களே, எப்போது ஏற்றித் தரப் போகிறீர்கள், எப்போது கொடுக்கப் போகிறீர்கள் ?' என்று கேட்டார்கள். நீங்கள் கொடுத்துக் கொண்டிருந்ததைவிட அதிகமான விலை உயர்த்திக் கொடுக்கப் போகிறேன் என்று சொல்லி அதையும் நிரூபித்துக் காட்டியவர் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.40)

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் என்று சொன்னார்கள் ....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) :** ஒவ்வொரு நேரத்திலேயும் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்று தான் சொல்கிறார், ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை, அமருங்கள்.

[1978 மார்ச் 27

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** ஒரு விளக்கம் சொல்கிறேன். 100 ரூபாய், 105 ரூபாய் என்ற அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1974 ஆம் ஆண்டில் இருந்து கொடுத்துக் கொண்டு வந்தது. அதைத்தான் அவர்களும் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் இருந்த நிலையைக் கட்டுப்படுத்தி விலையைக் கட்டுப்படுத்தினார்களா என்றால் இல்லை. மொத்த வியாபாரிகளுடைய உரிமங்களைப் பறித்து அரசாங்கமே விலையைக் கட்டுப்படுத்தினார்களா என்றால் கட்டுப்படுத்தவில்லை. ஆனால், இன்றைக்கு ஒரு மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டத்திற்கு தாராளமாக எடுத்துச் செல்லக்கூடிய அனுமதி வழங்கப்பட்டு வியாபாரிகளுக்கு உரிமங்களைக் கொடுத்து இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து ஒரே சீரான விலையை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்

கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதன் மீது குற்றஞ்சாட்டிப் பேசிய மதிப்பிற்குரிய ப. உ. சண்முகம் குறிப்பிட்டார்கள், அரியானாவிலிருந்தும், பஞ்சாபிலிருந்தும் அதிகமான விலையைக் கொடுத்து நெல்லை வாங்கிக் கொண்டு வந்தார்கள். அந்த விலையை இங்கே இருக்கிற விவசாயிகளுக்குக் கொடுத்து இங்கே வாங்கி இருந்தால் தமிழகத்திலே உள்ள விவசாயிகள் பலன் அடைந்திருப்பார்கள் என்ற குற்றச்சாட்டை எழுப்பினார்கள். அவருக்கு நான் இந்த நேரத்திலே பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த குறுவைப் பயிர் நெல்லை நீண்ட நாட்களுக்கு இருப்பு வைத்துக் கொள்ள ஏதுவாக இல்லாததால், புயலாலும், வெள்ளத்தாலும் அதிகமான அளவிற்கு தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டதால் பொது மக்களுக்கு விநியோகம் செய்யத்தக்க வகையிலே முன்னெச்சரிக்கையாக இருப்பு வைத்திருக்க வேண்டும் என்ற அளவிலே இந்த அரசு அரியானாவிலிருந்தும் பஞ்சாபிலிருந்தும் வாங்கியிருக்கிறதே தவிர வேறல்ல; நெல் தரம் இல்லாத நெல்



1978 மார்ச் 27] [திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்]

என்று குற்றஞ்சாட்டினார், நெல் தரம் உள்ள நெல் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு முறை உணவு நிலைமை சீராக இல்லாத நேரத்திலே கேழ்வரகு வெளி மாநிலங்களிலிருந்து ஒரு கிலோவுக்கு 2 ரூபாய் விலை கொடுத்து வாங்கி வந்தது. ஆனால் 2.10 க்கு தருகிறோம் என்று விளம்பரம் செய்தார்கள், ஆனால் யாரும் வாங்க முன்வரவில்லை. ஆனால் படிப்படியாகக் குறைத்து ஒரு ரூபாய்க்கு விற்றார்கள், சட்ட மன்ற உறுப்பினர்களே மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன், ஏறக்குறைய அதனால் 4, 4½ கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் அரியானாவிலிருந்தும் பஞ்சாபிலிருந்தும் வாங்கிக் கொண்டு வந்து பல லட்சக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்பட்டது என்று குற்றச்சாட்டை அவர் எழுப்பியதால்—பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்காக குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து இருப்பு வைத்ததன் காரணமாக—ஒரு குற்றச்சாட்டை எழுப்பியபோது இந்தக் குற்றச்சாட்டை என்றால் சொல்லாமல் இருக்க முடியாது.

மேலும் இன்னொன்றையும் அவர் கூறினார். டெண்டர் வைத்து வாங்கினார்களா என்று கேட்டார். அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொழுது டெண்டர் பெறப்பட்டு நெல், அரிசி வாங்குவது இல்லை என்பதால் டெண்டர் இல்லாமல் வாங்கி வரப்பட்டது. அதுபோலத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் ஒன்றிரண்டு முறை டெண்டர் இல்லாமலேயே சாக்குகள் வாங்கி வந்து வைத்தார்கள், விற்பனை செய்தார்கள் என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் உணவு அமைச்சரவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகரத்திற்கு, செங்கற்பட்டிலேயிருந்து லெவி இல்லாமல் அரிசி நடமாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதைப் போல வடார்க்காடு மாவட்டத்திலிருந்தும் லெவி இல்லாமல் சென்னை மாநகரத்திற்கு அரிசி நடமாட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் சென்னை மாநகர மக்கள் மேலும்

பத்து காசு, 20 காசு என்று குறைவாக வாங்கத்தக்க அளவிலே சூழ்நிலைகள் அமையும் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விருப்பப்படுகிறேன்.

அடுத்து, எனது தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வாலாஜா தாலுக்காவிலிருந்து ஆற்காடு தாலுக்காவாகப் பிரிந்து சுமார் ஏழாண்டுக் காலம் ஆகிறது. இப்படி ஏழாண்டுக் காலமாகியும் படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் என்னைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. என்னுடைய ஆற்காடு தாலுக்கா பிரிந்த பிறகு வாணியம்பாடி தாலுக்காவும் பிரிந்தது. அவர் இங்கு பேச்சாற்றல் மிக்கவராக இருக்கின்ற காரணத்தினால் அவருடைய தாலுக்காவிற்கு தாலுக்கா அலுவலகம் புதிதாகக் கட்டப்பட்டு விட்டது. தாலுக்கா மருத்துவமனை கட்டப்பட்டு விட்டது. ஆனால் நான் தாலுக்காவுக்கு என்று தனியாக இடம் கேட்டேன். ஒரு மாதத்திற்கு முன்புதான் பயிற்சிப் பள்ளியை எடுத்துக் கொண்டோமே தவிர புதிதாக இந்த அரசோ அல்லது இதற்கு முன் இருந்த அரசோ எதுவும் செய்யவில்லை. எனவே படுக்கை வசதியுடன் கூடிய ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தித் தருமாறு பெரிதும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் ஏழு மினி பஸ்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் சில கிராமங்களை இணைக்கும் வகையில் மேலும் மினி பஸ்களை விட வேண்டுமென்றும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவைகளை உடனடியாகச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மீனளம், நுகர்பொருள் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் சுமார் ஒரு இலட்சம் ஏழைப் பெண்கள் மீன்பிடி வலை பின்னல் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் அங்கே மணவாளக் குறிச்சியிலே இயந்திரத்தின் மூலம் மீன் பிடி வலையைப் பின்னுகின்ற காரணத்தினால் கிட்டத்தட்ட இந்த வலை பின்னுகின்ற தொழிலை நம்பி வாழ்கின்ற ஒரு இலட்சம் ஏழைப் பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகையால் அரசு தலையிட்டு ஒரு இலட்சம் பெண்களுக்கு நல்ல முறையிலே வாழ்வளிக்க வேண்டுமென்று என்னைத்தில் இயந்திரங்களின் மூலம் வலை பின்னுவதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கட்டுமரத்தில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும், விசைப் படகுகளில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே அநேக நேரங்களில் தகராறுகள் ஏற்பட்டு அதன் மூலம் பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுவதால் அரசு அதற்கு நல்ல முறையிலே அணுகி அவர்களின் மத்தியில் சமாதானம் ஏற்படும் வகையிலே தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பிடிக்கப்படுகின்ற மீன்களை அடுத்த மாநிலத்தில் பதப்படுத்தி, அடுத்த மாநிலத் துறைமுகங்களில் ஏற்றுமதி செய்வதைத் தடுத்து, இங்கேயே பதப்படுத்தி இங்குள்ள துறைமுகங்களில் ஏற்றுமதி செய்தால் நமது மாநிலத்திற்குக் கணிசமான அளவு வருமானம் கிடைக்கும், இலாபமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் சில வார்டுகள் பிரிவினையின் கீழ் சுமார் 2,000 அல்லது 3,000 ஜனங்கள் கொண்ட ஒவ்வொரு ஊரிலும் அங்கே சென்று அரிசி விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். டவுன் பஞ்சாயத்துக்களில் முறைப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், கிட்டத்தட்ட எனது தொகுதியில் ஆறு பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 17 பெரிய கிராமங்கள் இருக்கின்றன, ஏராளமான மக்கள் டவுன் பஞ்சாயத்துக்களின் தலைநகரங்களுக்கு கிட்டத்தட்ட இரண்டு, இரண்டரை மைக்

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1978 மார்ச் 27

தூரம் நடந்து வந்து அரிசி வாங்க வேண்டியிருப்பதாலும், மற்ற உணவுப் பண்டங்களை வாங்க வேண்டியிருப்பதாலும் காலதாமதம் ஆவதாலே அங்கே வருகின்ற நேரத்திலே உணவுப்பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

[முற்பகல் 11-50]

ஆகையால், அந்தந்தப் பெரிய ஊர்களில், கிட்டத்தட்ட 1,000 ஜனத்தொகைக்கு மேற்பட்ட ஊர்களில் எல்லாம் அங்கே சென்று அந்த உணவுப் பொருள்களை வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

1976-77-ல், 1977-78-ல் அநேக ஊராட்சி மன்றத் தலைவர்கள் உணவுதானியங்களை டி. என். சி. எஸ். சி.-யிலேயிருந்து எடுத்து, இதுவரை அதற்கான பணம் கட்டவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஊர்களில் பல மாதங்களாக உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. பணம் கட்டாத ஊராட்சி மன்றத் தலைவர்கள்மேல் நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு உடனடியாக உணவுதானியங்கள் வழங்க வேண்டும். இல்லையென்றால், கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக, கூட்டுறவு ஸ்டோர்கள் மூலமாக, அங்கே உணவுப் பண்டங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில ஊராட்சி மன்றத் தலைவர்கள் சரியானபடி பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, எங்கள் நாங்குநேரி ஊராட்சி மன்றத்தில் கூட, சரியானபடி, கட்ட வேண்டிய காலத்தில், கட்ட வேண்டிய தொகை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலிருந்து பணம் கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ளவர்கள் டி. என். சி. எஸ். சி. நிர்வாகத்தினரைக் கேட்டு, ஏற்கனவே கட்டியுள்ள ஊராட்சி மன்றங்களைத் தவிர்த்து, மன்றத் தொகை கட்டாத ஊராட்சி மன்றத் தலைவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கிராமங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் உணவு தானியங்கள் வழங்கப்படுகின்றன. ஏழை, எளிய மக்கள் காலை 9 மணிக்கு வேலைக்குச் சென்று மாலை 4, 5 மணிக்குத்



1978 மார்ச் 27] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

திரும்புகிறார்கள். அதனால், இடைக் காலத்தில் அவர்கள் தங்களுக்கு வேண்டிய தேவையான உணவுப் பொருள்களை வாங்க முடியாத நிலை இருக்கிறது. அதோடு, அங்கே பல நேரங்களில் கடை அடைக்கப்பட்டு விடுகிறது. அது மட்டுமல்ல, வாரத்திலே ஒரு நாள் அல்லது இரண்டு தினங்கள்தான் அங்கே உணவுப் பொருள்களை வழங்குகிறார்கள். ஆகவே, ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற நாட்களில் உணவுப் பொருள்களை வழங்க வேண்டுமென்றும், காலை 8 மணி முதல், மாலை 5 மணி வரை உணவுப் பொருள்களை வழங்கினால், ஏழை, எளிய மக்கள் உணவுப் பொருள்களை வாங்க வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சில நேரங்களில், டி.என்.சி.எஸ்.சி. மூலமோ அல்லது சம்பந்தப்பட்ட ரைஸ் மில்லில் இருந்தோ எடுத்து வரும் அரிசியோ, கோதுமையோ, அவைகளின் எடை மிகவும் குறைவாக இருக்கின்றது. இதனால், கடை நடத்துபவர்கள் மிகவும் நஷ்டம் அடைய வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஆகையால், கிட்டங்கியிலிருந்து எடுப்பதை விட ஒரு பைசா, இரண்டு பைசா கூடுதலாக வைத்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே, இந்த உணவுப் பொருள்களை வழங்குகின்ற நேரத்தில், எடை குறையாத வகையில், எடையைச் சரியாகப் போட்டு, வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அநேக நேரங்களில் நாம் எடுக்கும் அரிசி கட்டியாகி, அதோடு ஒருவித வீச்சம் இருக்கின்றது. ஆகையால் அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி, ரைஸ் மில்களில் அரைக்கும் அரிசியை நன்றாக உலர்ந்த பின் மூட்டைகளில் கட்ட வேண்டுமென்று உத்தரவிடுவதோடு, அதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்து அங்கே ரைஸ் மில்களில் செக் பண்ணுவதன் மூலமாக, தவறும் ஆலைகளை மூட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் பொருட்களை தேவைப்படும் நேரங்களில் விற்க முடியாமல் கஷ்டப்படும் சமயங்களில், இடைத் தரகர்களால் கொள்ளை அடிக்கப் படுகிறார்கள். நேரா நேரத்திலே நெல்லை விற்க முடியாத நிலை

ஏற்படுகிற காரணத்தால், அரசு அதற்காக ஏதாவது முயற்சி எடுத்து நெல்லை விற்பனை செய்ய வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், குறிப்பிட்ட நேரத்திலே நெல்லை விற்க முடியாத காரணத்தால், அவர்களுக்கு வேளாவேளைக்குப் பணம் கிடைப்பதில்லை. ஆகவே, வேறு சில வழிகளில், அரசு இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில், ஆண்டுக்காண்டு மழை இருக்காது. ஆனால், இந்த ஆண்டு செழிப்பான மழை பெய்ததின் காரணமாக, தண்ணீர் நிரம்ப இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் இருக்கிற மணிமுத்தாறில் தண்ணீர் 80 அடிக்கு மேல் தேங்கி திருப்திகரமான நிலையிலிருக்கிறது. 80 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கியிருக்கிற மணிமுத்தாறின் பிரதான கால்வாயில், அதிலும் பின்தங்கிய வட்டமாகிய நாங்குநேரி வட்டாரத்திலே இப்பொழுது 80 அடிக்கு மேலுள்ள 23 அடி தண்ணீரைத் திறந்து விடுவார்களானால், இரண்டாம் போகச் சாகுபடிக்கு, கிட்டத்தட்ட 240 குளங்கள் பயன் அடையும். அப்படி, பயன் அடைந்தால், மூன்று, நான்கு மாதங்கள் அரிசி விநியோகம் செய்யக்கூட தாராளமாக அரிசி கிடைக்கும். ஆகவே, ஏழை, எளிய விவசாயிகள் மீது கருணைகூர்ந்து இரண்டாம் போக சாகுபடிக்கான பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏராளமான கடைகளை அமைத்துவிட்டதாக அரசின் சார்பில் கூறுகிறார்கள். ஆனால், அநேக கிராமங்களில் இன்னும் கடைகள் அமைக்கப்படவில்லை. மக்கள் சீனி மற்றும் பொருள்களை வாங்கக் கஷ்டப்படுகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக நடத்துகின்ற கடைகளில் அரிசி மட்டும்தான் விநியோகம் செய்கிறார்கள். கோதுமையும் சேர்த்துக் கொடுக்கிறார்கள். அந்த ஊராட்சி மன்றங்களில் விநியோகம் செய்யப்படுகின்ற கடைகளில் அனைத்துப் பொருள்களையும் சீனி உட்பட வழங்கினால் பொதுமக்களுக்கு நன்மையாக இருக்கும். இப்போது மூன்று ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு கோஆபரேடிவ் சொசைட்டி இருக்கிறது. அதை அந்தந்த ஊராட்சி மன்றங்களிலேயே வைத்து விநியோகிக்கின்ற





வகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மீன்வளம் சிவில் சப்ளை நுகர் பொருள் மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. மு. செ. கோவேந்தன்:** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனது கருத்துக்களைக் கூறுவதற்கு தங்கட்கு எனது நன்றியினை உரித்தாக்கி, எனது கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

என்னைச் சட்ட பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து இங்கு அனுப்பியுள்ள பேராவூரணித் தொகுதியில் சுமார் 25 மீனவக் கிராமங்கள் உள்ளன. அங்கு தெற்கு வடக்காக சுமார் 16 மைல் நீளம் கடலாக எல்லை வகுக்கப்பட்டுள்ள பகுதி மீனவர்களோடு இரண்டறக் கலந்து இருக்கிற காரணத்தினாலே இருக்கின்ற நிலையினை நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்ற பல ஆண்டுகளாக கடலோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள விசைப் படகு நாட்டுப் படகு பிரச்சனையில் முன்னாள் அரசு நேரடிக் கவனம் செலுத்தத் தவறியது. ஆனால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் தானே நேரடியாக இப் பிரச்சனையில் தலையிட்டு சுமுகமான சூழ்நிலை ஏற்பட முனைந்துள்ளார்கள். அவர்களது முயற்சிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலுக்குச் செல்லும்பொழுது விபத்தில் இறப்பவர்களுக்கு இந்த அரசு ரூ. 10,000 வழங்குவதை மீனவ மக்கள் மகிழ்வோடு ஏற்று, இந்த அரசினைப் பாராட்டிப் போற்றுகின்றனர்; தொகுதி மக்களோடு நானும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒரு ஆண்டிற்கு ஒரு கூட்டுறவு நாணய சங்கத்திற்கு ரூ. 10,00,000 (பத்து லட்சம்) வரையில் கடன் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் சேர்த்து மிகக் குறைந்த அளவே கடன் வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு அளிப்பது போலவே மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் அதிக அளவு கடன் வழங்க வேண்டுகிறேன்.

[திரு. மு. ரெ. கோவேந்தன்] [1978 மார்ச் 27

மீனவர்கள் தங்களுடைய வலைகளைப் பழுது பார்ப்பதற்கும், புதிய வலைகள் தயார் செய்வதற்கும் புதிதாக நைலான், பருத்தி நூல்கள் இல்லாது இருந்து வருகின்றனர். இந்நிலை மாற அரசு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடனுடனும் மானியத்துடனும் நைலான், பருத்தி நூல்கள் வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பேராவூரணித் தொகுதி மீனவர்கள் பிடித்து வரும் இறால் மற்றும் மீன்களைத் தனிப்பட்ட வியாபாரிகளே விலைக்கு வாங்குகின்றனர். இதனால் மீனவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. ஆகவே அரசே மல்லிப்பட்டனத்தில் ஒரு குளிர்பதன நிலையத்தினை (பிரிசிங் பிளான்ட்) ஏற்படுத்தி மீனவர்களிடம் இறால் போன்ற மீன்களை நேரடியாகக் கொமுதல் செய்து மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன்.

தஞ்சை மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம் தற்பொழுது தஞ்சையில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகம் கடற்கரைப் பகுதிகளில் இல்லாத காரணத்தால் சரியான விளம்பரம், விற்பனை இல்லாது சம்மேளனத்தையே மீனவ மக்கள் மறந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாற கடற்கரைப் பகுதி முக்கிய ஊராகிய மல்லிப்பட்டனத்தில் இந்தச் சம்மேளன அலுவலகத்தைத் திறக்க வேண்டும். அல்லது சம்மேளனத்தில் கிளை அலுவலகத்தையாவது மல்லிப்பட்டனத்தில் துவக்க வேண்டுகிறேன்.

பேராவூரணித் தொகுதி மீனவர்கள் இரவுக் காலங்களில் திசையறிந்து சிறப்பாகத் தொழில் செய்ய சரபோந்திர ராசன் பட்டினம் மனோரா அருகில் ஒரு கலங்கரை விளக்கம் அமைத்திட ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

மல்லிப்பட்டினத்தில் நடந்து வரும் மீன்பிடி துறைமுக வேலையை வெகு விரைவில் முடித்துத் தர வேண்டுகிறேன். பேராவூரணித் தொகுதியில் கடற்கரை ஊர்களாகிய ஏரிப்புற கரை, கீழத்தோட்டம், மல்லிப்பட்டினம், சம்பைப்பட்டினம் ஆகிய ஊர்களில் ஊருக்கும் கடலுக்கும் போய்வர பயன்படுத்தப் படும் கால்வாயை அகலப்படுத்தி ஆழப்படுத்தி வெட்டித் தர வேண்டுகிறேன்.



[திரு. மு. ரெ. கோவேந்தன்] [1978 மார்ச் 27

(நண்பகல் 12-00)

இந்த ஆண்டு முடிவுக்குள் அந்தோணியார்புரம், பிள்ளையார் திடல், செண்பக மகாதேவி பட்டினம், சோமநாதன் பட்டினம், அடைக்கத்தேவன், செந்தலை சம்பைப்பட்டினம், புதுப்பட்டினம், சின்னமனை, சேதுபாவா சத்திரம் போன்ற ஊர்களுக்கு மீனவர் குடியிருப்புக்களைக் கட்டித் தர வேண்டுகிறேன்.

ஏரிப்புற கரை, கீழத்தோட்டம், அந்தோணியார்புரம், மல்லிப்பட்டினம், அடைக்கத்தேவன், சோமநாதன் பட்டினம் போன்ற கிராமங்களில் புயல் பாதுகாப்பிடங்கள், சமுதாய நல மன்றக் கட்டிடங்களைக் கட்டி தர வேண்டுகிறேன்.

பேராவூரணித் தொகுதியில் சின்னமனை கிராமத்தில் முழுவதும் மீனவ மக்கள் சுமார் 100, 150 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமம் முழுவதும் வேதாரணியம் தேவஸ்தானம் கோவிலுக்குச் சொந்தமானது. இப்பகுதி மீனவ மக்கள் பயன்பெற அவர்களுக்கு அவர்களுடைய உபயோகத்தில் இருந்து வரும் நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கி பட்டாச் செய்து தரக் கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணித் தொகுதி கழுமங்குடா காரங்குடா ஆகிய கிராமங்களில் மீனவர்கள், அரசு புறம்போக்கு, தனியார் நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு இந்த நிலங்களைப் பட்டாச் செய்து தர வேண்டுகிறேன்.

மீனவக் கிராமங்களுக்கு மீன்துறை மானியத்தின் மூலம் செய்து தரப்பட்ட இணைப்புச் சாலைகள் மிகவும் பழுதுபட்டு ஊராட்சிகளின் நிதிநிலை காரணமாகப் பராமரிக்கப்படாமல் இருந்து வருகின்றன. இச்சாலைகளை மீன்துறை மூலம் மறுபடியும் செப்பனிட்டுத் தரக் கேட்டுக் கொண்டு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனளம் பற்றிய இந்த கோரிக்கையில் அடிக்கடி தொடர்ந்து சட்ட மன்றத்திலே நாங்கள் கூறுகின்ற கடல் வளம் இன்னும் பெருக்கப்பட வேண்டும். தமிழகத்தில் இதைப் பெரிய ஆதாரமான செல்வமாக மாற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறிக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற அறிக்கையில் இந்தியாவில் இருக்கின்ற கடற்கரையில் மொத்த நீளத்தில் கிட்டத்தட்ட 17.5 சதவிகிதம் தமிழகத்திலே இருக்கிறது. ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு கடற்கரை தமிழகப் பகுதியிலே இருக்கிறது. இவைகளில் நாம் கிட்டத்தட்ட 2,59,000 டன்கள் ஒரு ஆண்டிற்கு மீனை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற விவரம் இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதிலும் முக்கியமான விஷயம், கடலிலும் சரி, உள்நாட்டிலும் சரி மீன் வளர்ச்சி மூலமாக வாணிபத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வரும் காலத்தில் நாம் அத் திட்டத்தினை செயல்படுத்த வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தக் கடற்கரையில் 4,80,000-க்கு மேற்பட்ட மீனவர்கள் நேரடியாக அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்த மீனவர்களைச் சார்ந்து சுமார் 20 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பதைப் போல மீனவர்களுக்குக் கடல் சொந்தம், யார் அந்தக் கடலில் உழைக்கின்றார்களோ. அவர்களுக்குக் கட்டுமரங்கள் மட்டுமல்ல, விசைப் படகுகளும் கொடுக்க வேண்டும். கூட்டுறவு முறையில், நவீன முறையில் மீன் பிடிப்பதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்த நடைமுறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

படகுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பட்டியலைப் பார்த்தால் செட்டியாருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நாடாருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி பலதரப்பட்டவர்களுக்கு, மீனுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாத சில சைவர்களுக்கும் படகு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மீனே சாப்பிடாதவர்களுக்கு படகு எதற்கு? நேரடியாகக் கடலில் சென்று. மீன் பிடிப்பவர்களுக்கு படகுகள்





அளிக்கப்படுவதோடு, நவீன மீன்பிடி துறைமுகங்களை சென்னை, நாகப்பட்டினம், கோட்டைபட்டினம், கொளச்சல், புன்னக்காயல், கிழக்கரை, தொண்டி, தூத்துக்குடி போன்ற இடங்களிலும் அமைக்க வேண்டும்..

கடலில் இருக்கும் மீன் பிடிப்பதோடு மட்டுமல்லாமல், முத்து, கடலில் கிடைக்கும் சங்கு இவற்றையும் கொண்டு வருவதற்கு உரிய பொருள்களையும் கொண்டு வரச் செய்து, கடல் வாணிபத்தை மிகவும் சிறந்த முறையில் உருவாக்கினால், ஓராண்டில் கிட்டத்தட்ட ஆயிரத்தில் இருந்து, ஆயிரத்து ஐநூறு கோடி வரைக்கும் வருமானம் பெற முடியும் என்பதை நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மீனளம் என்கிறபோது கடலிலே இருக்கிற மீனும் சரி, உள் நாட்டிலே இருக்கிற மீனும் சரி, அது மக்களுக்கு ஒரு சத்துணவு. மேற்கு வங்காளத்தில் ஒவ்வொரு வீட்டின் கொல்லைப்புறத்திலும் மீன் வளர்க்கப்படுகிறது. அதை அங்கே ஒரு கலையாக வைத்திருக்கிறார்கள். மக்களுக்கு மீன் ஒரு பிரதான உணவு. அந்த உணவை கடலிலே இருந்தும், உள்நாட்டிலே இருந்தும் உற்பத்திச் செய்து. மக்களுக்கு நியாயவிலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சரியான சட்டம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் வருகிறபோது விசைப்படகுகள் நீண்ட நெடுந்தூரத்திற்கு அப்பால் போய் மீன்பிடிக்க வேண்டும்; அதற்குத்தான் விசைப்படகுகள் வழங்கப் படுகின்றன; சாதாரண நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில் அதாவது 3 மைல்களுக்கு இப்பால் மீன்பிடிக்கப் பயன்படுகின்றன பாக் ஜலசந்தியில் விசைப்படகுகாரர்கள் மீன்பிடிக்க அறவே அனுமதிக்கப்படக் கூடாது என்று அந்தச் சட்டம் வர வேண்டும்.

கடற்கரையில் வாழும் மீனவர்கள் புயல் என்றாலும் அங்குதான் தாக்கும். மழை என்றாலும் அங்குதான் தாக்கும். வெள்ளம் என்றாலும் அங்குதான் தாக்கும். அவர்களுக்கு வீடு கட்ட ஒதுக்கியிருக்கும் பணம் போதாது. மீனவர்கள் வசிக்கும்

பகுதிகளில் புயல், மழை இவற்றைப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கும் நவீன கருவிகளை அமைக்க வேண்டும். புய வீசினால், அல்லது பெருமழை பெய்தால் மீனவர்கள் பாதுகாப்பா வசிக்க பெரிய பராமரிப்பு இல்லங்களை அமைக்க வேண்டும். மீனவ பிள்ளைகளுக்கு அந்த பிராந்தியத்தில் கல்வி நிலையங்கள் அமைத்து அவர்களுக்கு சத்துணவு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஒரு மீனவனாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திரைப்படத்தில் நடித்தார்கள்; படகோட்டி என்பது அந்த திரைப்படம். அதிலே, "கடல்மேல் செல்ல வைத்தான், எங்களை கண்ணீரில் மூழ்க வைத்தான்" என்ற பாடல் வருகிறது அதைப்போல இன்றைக்கு ஏதோ பிழைப்புக்குப் போனான் என்று இல்லாமல் இந்தத் தேசத்தின் உணவைத் தேடப்போகும் படை என்பது உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய சகலவிதமான வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நுகர்பொருள் வாணிபக் கழகம். அதற்கு ஒதுக்கியிருக்கிற பணம் 5 கோடியே சொச்சம். அந்தப் பணம் போதாது. கடந்த பட்ஜெட்டிலே தமிழ்நாடு பூராவும் 16,000 நியாயவிலைக் கடைகள் திறப்போம் என்றோம். இராமலிங்க அடிகள் சொன்னார்கள், "கடை விரித்தோம் கொள்வாரில்லை" என்று, நாமும் கடைகளைத் திறந்தோம்; சரக்கு இல்லை; மூடிவிட்டோம் என்று இருக்கக் கூடாது. கடைகளைத் திறந்தோம்; கொள்முதல் செய்தோம்; சரக்கு இருக்கிறது என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதுவும் திருநெல்வேலி, இராமநாதபுரம் மட்டும் என்றில்லாமல் தமிழ்நாடு முழுவதும் நெல், கடலை அனைத்தையும் கொள்முதல் செய்து, வேண்டிய அளவு கிராமங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறந்து விநியோகிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் 26—3—1978 அன்று கடலை விவசாயிகள் மாநாடு நடந்தது. 80 கிலோ உடைத்த கடலை கொண்ட ஒரு மூட்டை 400 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரியிருக்கிறார்கள். அதைப்போல கடலைக்கு நியாயவிலை கொடுக்க வேண்டுமென்பதற்காக பட்டுக்கோட்டையிலும் இந்த மாநாடு



நடத்தியிருக்கிறார்கள். உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நியாயவிலை இல்லை; வாங்கிச் சாப்பிடுகின்ற மக்களுக்கும் நியாயவிலைக்குக் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட நிலையில் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது; செயற்கை பற்றாக்குறை தோற்றுவிக்கப்படுகிறது. அதைத் தடுக்க வேண்டும். அதற்கு இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தை விரிவுபடுத்தி, அதன்கீழ் இருக்கக்கூடிய நவீன அரிசி ஆலைகளை இன்னும் நவீனமாகச் செய்து, உணவுப் பண்டங்கள் முழுவதையும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருக்கக் கூடிய அறிவுபடைத்த விஞ்ஞானிகள் தவிட்டிலிருந்து அருமையான சோப்பு தயாரிப்பதற்கான பொருளைச் செய்வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் தவிட்டிலிருந்து, உமியிலிருந்து எடுக்கக்கூடிய எண்ணெய் போன்ற பொருள்களைக் கொண்டு; அவைகளை சோப்பு போன்ற பொருட்களைத் தயாரிக்கும் மூலப் பொருட்களாகப் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை விரைவிலே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

பல்வகை மூலதனச் செலவுக்கு ரூபாய் 9 கோடி சொச்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் அயல் நாடுகளிலிருந்து வருகின்ற குறிப்பாக பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து அகதிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் சீர்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. குறிப்பாக மன்னார்குடி அண்ணா காலனி என்னும் காலனியில் புயலால் பாதிக்கப்பட்ட வீடுகள் இன்னும் சீர்படுத்தப்படாத நிலை இருக்கிறது.

அடுத்து, அயல் நாடுகளிலே இருந்து வருகின்றவர்கள் என்ன தொழில் அவர்கள் அங்கே செய்து வந்தார்களோ அந்தத் தொழில்தான் தமிழகத்திற்கு வந்த பின்னும் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்தவர்களுக்கு பஞ்சாலையிலும் பஞ்சாலையில் வேலை செய்தவர்களுக்கு

1978 மார்ச் 27] [திரு. மு. அம்பிகாபதி]

தேயிலைத் தோட்டத்திலும் வேலை கொடுக்கப்படுகின்ற காரணத்தினால் நிறையப் பேர் வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியேறுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தார்களோ அந்த அடிப்படையில் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கென ஒரு பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அனைத்துப் பொருள்களையும் அரசே கொள்முதல் செய்து விநியோகிக்க வேண்டும்.

இலங்கை, பர்மா முதலிய இடங்களிலிருந்து வந்த அகதிகளுக்கு அவர்கள் எந்தத் தொழிலைச் செய்தார்களோ அந்தத் தொழிலையே அளிக்கும் நடைமுறையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, விவாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற இந்த மானியங்களைக் குறித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டு மக்களுக்கு மிக இன்றியமையாத முக்கியமான பங்கீட்டு முறை பற்றிய மானியம் இன்றைக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. உற்பத்தி எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு முறையான பங்கீடும் முக்கியம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அவசியப் பொருட்களுடைய உற்பத்தி குறைந்தால் நாட்டிலே பற்றாக்குறை ஏற்பட்டு பொருளாதாரச் சீர்கேடுகள் ஏற்படும். அதே மாதிரியாக உற்பத்தி செம்மையாகச் செய்யப்பட்டு அந்த அத்தியாவசியப் பொருட்களை நாம் நியாயமான முறையில் சமூக நீதியின் அடிப்படையில் பங்கீடு செய்யாவிட்டால் அதனால் சமூக ஏற்றத் தாழ்வுகள் மட்டுமல்ல, சமுதாயத்தில் சிக்கல்கள் மட்டுமல்ல, பொருளாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுவதற்கு வழி ஏற்படும் என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

ஆகவே பங்கீட்டுத் துறையைச் சேர்ந்த இந்தத் துறை செம்மையாகச் செயல்பட்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் பொருள்கள் உரிய முறையில் போய்ச் சேருவதற்கும் உரிய



[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 27

நிலையில் கிடைப்பதற்கும் வழி வகைகளை வகுக்கக்கூடிய அந்த நெறி முறைகளை நிர்வகிக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பிலே இருக்கிறவர்கள் அந்தப் பொறுப்பினை விவேகத்தோடும், நேர்மையோடும், நியாய உணர்வோடும், சமுதாய நீதி, சமூக நீதி, பொருளாதார நீதி இவற்றுடன் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நியாய உணர்வோடும் நிறைவேற்றுவார்களேயானால் இன்றைக்கு நாட்டிலே நாம் பார்க்கின்ற பல சமுதாயப் பொருளாதாரச் சீர்கேடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அரிசி உற்பத்தியைப் பொறுத்த அளவில், கோதுமை உற்பத்தியைப் பொறுத்த அளவில், மற்ற உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பொறுத்த அளவில் இந்த ஆண்டு இந்திய பூபாகத்தில் அபரிமிதமான உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்று நமக்குச் செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக பஞ்சாப் மாநிலத்திலும், ஹரியானா மாநிலத்திலும் உற்பத்தி இந்த ஆண்டு எந்த அளவுக்கு இருக்கிறது என்று சொன்னால் சேமிப்புக் கிடங்குகளிலே யெல்லாம் இடம் போதவில்லை என்ற அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாநிலத்திலே இருக்கின்ற பள்ளிக்கூடக் கட்டிடங்களிலும், கல்லூரிக் கட்டிடங்களிலும், மற்ற பொது நிர்வாகங்களுடைய கட்டிடங்களிலும் இன்னும் சொல்லப்போனால் விமான தளங்களிலேயும் கூடத் தேக்கி வைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவ்வளவு அபரிமிதமான உற்பத்தி அங்கே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த உற்பத்தியை என்ன செய்வது; எப்படி அதை டிஸ்போஸ் செய்வது என்பது இப்போது ஒரு பிரச்சினையாக உருவாகியிருக்கிறது என்றும் அங்கே சொல்லப்படுகிறது. மேற்கு வங்காளத்திலும், உத்தரப்பிரதேசத்திலும் அதிகமாக ஏற்பட்டிருக்கிற உற்பத்தியை, உணவுத் தேக்கத்தை குறைப்பதற்காக விவசாயத் தொழிலாளர்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் உணவுப் பொருள்களையே கூலியாகக் கொடுத்து இரண்டு மில்லியன் டன் உணவு தானியங்களை அவர்கள் தேக்கத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. நாட்டிலே நல்ல

1978 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

விதத்தில் உணவு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு திருப்தி ஏற்பட்டாலும் இந்த உணவு உற்பத்தி காரணமாக அது தமிழ் நாடாக இருந்தாலும் சரி அல்லது மற்ற மாநிலங்களாக இருந்தாலும் சரி அதிகமான உணவுப் பொருள்கள் மார்க்கெட்டுக்குக் கொண்டுவரப்பட்டு அதனுடைய விலைகளில் அபரிமிதமான சரிவுகள் ஏற்படுமானால்' அது 'விவசாயப் பெருங்குடி மக்களை எவ்வளவு பாதிக்கும் என்ற ஒரு பிரச்னையைக் கூட மாநில மத்திய அரசுகள் சமாளிக்க வேண்டிய கட்டாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம்.

இந்தச் சூழ்நிலையில்தான் அரசு கொள்முதல் திட்டங்களை வகுக்க வேண்டும். கொள்முதல் திட்டங்களோடு விலை நிர்ணயக் கட்டுப்பாடுகளையும் முறையாக நிறைவேற்ற வேண்டும். அதே மாதிரியாக பதுக்கல்கள் ஏற்படாமல்—பதுக்கல்களை எப்படியெல்லாம் நாம் தடுக்க வேண்டும் என்பதைப் பற்றிய திட்டங்களையும் சட்டங்களையும் நாம் வைத்திருக்கிறோமே அந்தச் சட்டங்களை செம்மையாக முறைப்படுத்தி நடத்துவதில், அதைச் செயல்படுத்துவதில் அரசு முனைப்போடு செயல்பட வேண்டும். எல்லா மக்களுக்கும் உணவு கிடைக்கிறது என்பது நமக்கு இருக்கிற ஒரு திருப்தியாக இருந்தாலும், உணவை யார் உற்பத்தி செய்கிறார்களோ அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய தொழிலை செம்மையாக மீண்டும் தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்கு உரிய முறையில் விலை கிடைக்க வேண்டும் என்பதிலும் கூட நாம் அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தி அதிகமாகி விட்டாலும், அதை ஏற்றுமதி செய்யக் கூடாது என்ற ஓர் உணர்வு இருந்து வருகிறது. அந்த உணர்வின் அடிப்படையில்தான் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகையினால் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யக் கூடாது என்ற உணர்வின் அடிப்படையில் மத்திய மாநில அரசுகள் செயலாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் இருக்கிற உணவுப் பொருள்களை நாம் எப்படிச் சேமித்து வைகக் வேண்டும், அப்படிச் சேமித்து வைக்கிற உணவுப் பொருள்களை எவ்வளவு நாம் சேமித்து வைத்தால் மார்க்கெட் நிலவரங்களை ஒரு கட்டுக்



1978 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

கோப்பிற்குள் வைக்க முடியும், விலைகள் அதிகமாகக் குறைந்து விடாது விவசாயப் பெருங்குடி மக்களை அடிப்படையில் பாதிக்கப் படாமல் காப்பாற்ற வேண்டும். என்ற ஒரு பெர்ஸ்பெக்டிவ் அஸெஸ்மென்டை எடுத்திருக்க வேண்டும்.

அடுத்து, இப்போது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அபரிமிதமான உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்று. அப்படி அபரிமிதமான உற்பத்தி ஏற்படுவதன் விளைவாக சில சமுதாயப் பொருளாதார விளைவுகளும் ஏற்படும். அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற குறிப்பையும் அரசு நமக்குத் தந்திருந்தால் அதனால் நமக்கு ஒரு தெளிவு ஏற்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, அதிக உற்பத்தி, அதிகத் தேக்கம் ஏற்படுகிறது என்றால் அதில் மிகப் பெரிய ஆபத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, அதிகமாக ஏற்பட்டிருக்கிற தேக்கத்தை முறையாகத் தேக்கி வைத்து அதை எந்தக் காலத்தில் எப்போது பயன்படுத்தலாம் என்ற முறையில், எப்படிச் செய்தால் போர்ஸஸ் கண்ட்ரோலில் இருக்கும் என்பதையெல்லாம் கவனத்தில் வைத்து நாம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என் கடமை என்று நான் நினைக்கிறேன்.

இப்போது அரசாங்கம் கொடுக்கிற லெவி கொள்முதல் இன்றைக்குள்ள பிரத்தியட்ச நிலைக்கு ஒத்து இருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு முறைகளை அனுஷ்டித்து அரசாங்கம் இன்றைய சூழ்நிலையில் யாரிடத்திலிருந்து கொள்முதல் எவ்வளவு பெற்றால் அது நீதிக்கு உட்பட்டு இருக்கும் என்று அறிந்து பிரத்தியட்ச நிலைக்கு ஒப்ப இன்று மேற்கொண்டிருக்கிற கொள்முதல் லெவி முறையை நான் பாராட்டுகிறேன். அந்த முறையை பரீட்சார்த்தமாக அரசு ஏற்றுக்கொண்டு இன்று நடத்துகிறது. அதிலேயிருக்கிற குறைபாடுகள் என்ன என்று இனிமேல்தான் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே இன்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 27

[பிற்பகல் 12-20]

குறிப்பாக, இன்றைக்கு சமுதாயத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொன்னால், அந்தக் குறைபாடுகள் இருப்பதற்கு காரணம், பங்கீட்டு முறை தான். அதோடு சமுதாயத்திலுள்ள இடைத் தரகர்கள், சமுதாயத்திற்குத் தேவைப்படும் பொருள்களை பதுக்கல் செய்து கொள்ளை லாபம் அடிக்கின்ற சமுதாய துரோகிகள், இவர்கள் எல்லாம் பங்கீட்டு முறையில் தலையிட்டு, நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களை அத்தியாவசியமான பொருட்களை நுகர்வோர்களுக்கு நல்ல முறையில், உரிய முறையில், உரிய விலைக்குக் கிடைக்காமல் செய்து, அவற்றையெல்லாம் பதுக்கல் செய்து கொள்ளை லாபம் அடித்தும், கொள்ளை லாபம் அடிப்பதோடு மட்டுமல்ல, கலப்படம் செய்தும், நாட்டில் செயற்கையாக பஞ்சத்தையும் பற்றாக்குறையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நாட்டில், உற்பத்தியாகின்ற பொருட்கள் சரியான முறையில் மக்களுக்குக் கிடைப்பதில்லை.

எனவே அரசு, உற்பத்தியில் கவனம் செலுத்துவதைப்போல் பன்மடங்கு இப்படிப்பட்டவர்களை கண்காணிப்பதற்கு தனது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான் பருப்பு வகைகள்; இங்கே அதிகமாக உற்பத்தியாவதில்லை. வடபுலத்திருக்கின்ற மாநிலங்களிலிருந்து தான் வரவேண்டியிருக்கிறது.

அதே போன்றுதான் எண்ணெய் பொருட்களும் வரவேண்டியிருக்கின்றன.

எனவே இதில் அடிக்கடி தேக்கங்கள் ஏற்படுகின்றன. இந்தத் துறைகளில் பெரிய வியாபாரிகள் அதிகமான அளவில் பொருட்களை பதுக்கல் செய்து, மார்க்கெட்டை தங்களுடைய கண்ட்ரோலில் வைத்துக்கொண்டு நுகர்வோருக்கு எளிதாகக் கிடைக்காத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

இது சம்பந்தமாக மத்திய அரசின் அமைச்சர் மோகன் தாரியா அவர்கள் ஒரு குறிப்பை அறிவித்திருந்தார்கள். 24 பதுக்கல்காரர்கள் மீது, சி.பி.ஐ. நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்



1978 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

பட்டுள்ளது என்ற குறிப்பினைத் தந்திருந்தார்கள். தமிழ் நாட்டில் இந்த 24 நபர் மீதான இன்வெஸ்டிகேஷன் நடந்து வருகிறது, அவர்கள் மீது விசாரணை இருந்து வருகிறது என்று பின்னாலும் தெரிவிக்கப்பட்டது. யார் இந்த 24 பேர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இந்த 24 வர்த்தக சூதாடிகள் யார், இந்தச் சமுதாய துரோகிகள் யார், சமுதாய மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் இந்த 24 பேர்கள் யார், இவர்கள் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரிந்தால் அவர்களை இந்த நாட்டு மக்கள் இனம் கண்டுகொள்ள முடியும்.

ஆகவே இந்த 24 பேர்களினுடைய பெயர்களை அரசு அறிவிக்க வேண்டும் என்று சென்ற முறையும் கேட்டேன். இன்றைக்கும் நமது மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏதோ சி. பி. ஐ. நிறுவனத்தால் இந்த பெயர்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறதோ. அதனால்தான் இந்த அரசுக்கு அந்தப் பெயர்கள் கிடைக்கவில்லையோ என்பதை தயவுசெய்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமுதாயம் இப்படிப்பட்டவர்களை இனம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

சர்க்கரை விநியோகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சில கட்டுப்பாடுகளை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறது. சில குறிப்பிட்ட அளவுகளைத்தான் நமக்குத் தருகிறார்கள். இப்போது நிலைமை என்னவென்றால் கிராமப் புறங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. கிராமப்புறங்களில் எல்லோருக்கும் கார்டு கிடைப்பதில்லை. பலருக்கும் கார்டுகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கிராமத்தில் இருக்கின்றவர்கள் 100-க்கு 99 பேர்கள் சர்க்கரை வாங்குவதில்லை. கிராமங்களில் சர்க்கரை விநியோகத்திற்காக யார் நியமிக்கப்படுகிறார்களோ அவர்கள், கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தால், அதிலுள்ளவர்கள், கிராமத்திலுள்ள ஒன்றும் தெரியாத மக்களிடத்தில், பாமர மக்களிடத்தில் அந்தக் கார்டுகளை ஒட்டு மொத்தமாக—ஒரு கார்டுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் விலை என்று வாங்கிக் கொண்டு, அந்தக் கார்டுகளுக்கெல்லாம் கணக்கு எழுதி, அதிலுள்ள சர்க்கரையை எல்லாம் கள்ள மார்க்கட்டில் அதிக விலை

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 27

வைத்து விற்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. . . (குறுக்கீடு). . உங்கள் மாவட்டத்தில் இருக்கிறதோ இல்லையோ, எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில்—பல பகுதிகளில்—காட்டுப் பகுதிகளாக இருக்கின்ற பல பகுதிகளில் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் திருத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கார்டு வழங்குவதை எடுத்துக் கொண்டால், சென்னையில் எனக்கு வீடு இருக்கிறது. கடந்த ஐந்து வருடங்களாகக் கார்டு கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதுவரை எனக்குக் கார்டு கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு இந்தத் துறை செம்மையாக நடைபெறுகிறது என்று தெரிகிறது. ஏதோ சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்றோ அல்லது 2,000 ரூபாய் அளவுக்கு வருமானம் இருக்கிற காரணத்திலோ என்னவோ கார்டு தராமல் விட்டுவிட்டார்கள். இப்போதும் வக்கீல் தொழில் புரிந்து கொண்டு வருகின்ற நான் நியாய விலைக் கடையில் போய் நின்றுதான் பொருட்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஐந்து வருடமாக ஒரு கார்டுக்கு திருப்பித் திருப்பி எழுதிக் கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கே கார்டு கிடைக்கவில்லை. என்னைப் பற்றிப் பேசுவதை விட்டுவிடுகிறேன். என்னைப் பற்றி கவனிக்கா விட்டாலும், மக்களையாவது அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீனளத் துறையைப் பொறுத்தவரையில், கட்டுமரக்காரர்களுக்கும், பவர் டிராலர்ஸ்-க்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இதைப் பற்றிய செய்தி அடிக்கடி பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது. இது நீடித்துக் கொண்டிருப்பது நல்லதல்ல. ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கட்டுமரம் வைத்திருந்தாலும், விசைப் படகு வைத்திருந்தாலும் அவர்கள் ஒரே மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இப்படிச் சகோதரர்களாக வாழ வேண்டியவர்களுக்குள் அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்படுவது நல்லதல்ல. இவர்கள் எல்லோரும் ஒரே சமுதாயத்தினர், கடலில் சென்று அபாயகரமான தொழிலில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கின்ற இந்த நிலைக்கு என் ஆளானார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.



1978 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். எனவே, இதற்கான ஒரு சட்டத்தைப் போட்டு, அவர்களிடையே நல்ல ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படுத்த இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

'நெல்லை', 'தஞ்சை' என்ற இரண்டு டிராலர்கள் வாங்கப்பட்டு, ஆழ்கடல் மீன் பிடிப்பதற்காக ஏற்பாடுகள் செய்திருக்கின்ற நேரத்தில், சிறிய அளவில் மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய முறையில் நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையில் அரசே கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட ஒரு மார்க்கெட்டிங் பெசிலிடியை நாம் அவர்களுக்குச் செய்து கொடுத்தால், இந்த இடைத் தரகர்கள் இடையிலே வந்து லாபத்தைக் கொண்டு செல்லும் நிலைமையைத் தவிர்க்கலாம். ஆகவே எந்தெந்த வகையிலே இந்த அரசே இதைக் கொள்முதல் செய்யலாம் என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்நாட்டு மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தால், எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே உள்நாட்டு மீன் நிறையக் கிடைக்கும். எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரே ஒரு பெரிய அணைக்கட்டு இருக்கிறது. அதுதான் சாத்தனூர் அணைக்கட்டு, அதிலே உள்ள தண்ணீர் தென் ஆற்காடு மாவட்டத்திற்குச் செல்வதாக இருந்தாலும். அதிலே கிடைக்கக் கூடிய மீனாவது வட ஆற்காடு மாவட்டத்திற்குப் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும். அங்கே அவைகள் விற்பனை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்; விநியோகம் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். கொஞ்சம் விலை கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை. அதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்து, அங்குள்ள மக்களுக்கு இந்தச் சத்துணவு கிடைக்கச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, அந்தப் பகுதியிலே உள்ள ஏழை மக்கள் சிக்கட்டியாக இருக்கிறார்கள். வயிறு பெருத்தவர்களாக இருக்கிறார்கள் அவர்களுக்கு அங்கே போதிய சத்துணவு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 27

கிடைக்கவில்லை. இந்தச் சத்துணவாவது அவர்களுக்கு அங்கே சற்று குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும். எனவே, இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக, எங்கள் பகுதியிலே பனங்காட்டுப் பாசன ஏரி, நாயக்கன் ஏரி போன்ற ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகள் எல்லாம் மிகவும் செம்மையாக, வெயிற் காலத்திலும் தண்ணீர் வற்றாமல் இருக்கக்கூடிய ஏரிகளாக இருக்கின்றன. ஆனால், அந்தப் பஞ்சாயத்துக்கள் அந்த ஏரிகளிலே மீன் பிடிப்பதில்லை. அப்படிப் பிடிப்பதாக இருந்தாலும், யாருக்காவது கொடுத்து, அவர்கள் அந்த மீன்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். எனவே, அங்கே மீன்வளத் துறையே அதற்கான திட்டம் தயாரித்து, அங்குள்ள கிராமப் பகுதி மக்களுக்கு, காட்டுப் பகுதி மக்களுக்கு, வைட்டமின் இல்லாமல் இருக்கின்ற மக்களுக்கு, வைட்டமின் ஏ, பி, சி என்றால் என்னவென்றே தெரியாமல் இருக்கின்ற மக்களுக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும். ஆகவே, அந்த ஊரிலே அப்பேர்ப்பட்ட ஊரிலே உங்கள் சக்தியைக் காட்டி, அங்குள்ள ஜனங்களுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் காட்டி, அங்குள்ள ஏழை எளிய மக்கள் நல்ல பயன் பெறக்கூடிய வழியைச் செய்யுங்கள் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்த சங்கு, முத்து குளிக்கின்றவர்கள் ரொம்பவும் ஏழைகளாக இருக்கின்றார்கள். அவர்கள் கடலுக்குள்ளே மூழ்கி, தங்கள் உயிரையே பணயம் வைக்கின்ற அளவிலே இந்தப் பணியிலே ஈடுபடுகின்றார்கள். இவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், பெரியபட்டணத்தில் இருக்கிறார்கள். இப்படி இவர்கள் பாடுபட, யாரோ ஒருவர் அதை எடுத்துக் கொண்டு போகக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, இதைக் கொஞ்சம் முறைப்படுத்தி, அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோல், தமிழ்நாட்டிலே அக்குவேரியம் என்று இருக்கிறது. பம்பாயிலுள்ள அக்குவேரியத்தைப் பார்த்துவிட்டு இந்த அக்குவேரியத்தைப் பார்த்தால், இது அக்குவேரியம்தானா



78 மார்ச் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

ன்காட்சி சாலை தானா என்று ரொம்ப வேதனைக்குரியதாக ருக்கிறது. எனவே, இந்த அக்குவேரியத்தைக் கொஞ்சம் ட்ராக்டிவாக, எல்லோரும் வந்து பார்க்கக்கூடிய அளவிற்கு, ண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி எல்லோரும் வந்து ர்க்கக்கூடிய அளவிற்கு, இங்கே வருகின்ற உல்லாசப் ரயாணிகள் எல்லாம் வந்து பார்த்துப் போகக்கூடிய அளவிற்கு ந்த அக்குவேரியத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் காண்டு, இந்த அளவிற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு ன்றி கூறி, முடிக்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் வர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ங்கே ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த றிக்கையிலே கொள்முதல் சம்பந்தமாக அவர்கள் கையாளுகின்ற ழிமுறைகள், கொள்கைகளைப் பற்றி விரிவாகக் றியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.30)

அதிலே அரசுக்கு ஆறு லட்சம் டன் உணவு கொள்முதல் ஆக வண்டும், பொது விநியோகத்திற்காக. ஆனால் இதுவரை காள்முதல் செய்யப்பட்டது ஒரு லட்சம் டன் கூட இல்லை. ன் இவ்வளவு குறைந்த அளவிலே கொள்முதல் செய்யப் ட்டிருக்கிறது என்பதை அரசு கவனிக்க வேண்டும். லெவி றையில் மாற்றம் ஏற்படுத்தியதால் குறைந்த அளவுதான் அரசு காள்முதலுக்குத் தானியம் கிடைக்கும் என்பது உண்மை. ஆனால் அரசு வெளி மார்க்கெட்டில் தானியத்தை வாங்குவது என்ற டிவை எடுத்து இருக்கிறது. இரண்டாவது ரக நெல்லையும், கார்ஸ் வெரைட்டி நெல்லையும் வாங்குவது என்ற முடிவை டுத்து இருக்கிறார்கள். வெளி மார்க்கெட்டில் ஏன் திகமான அளவுக்கு நெல்லைக் கொள்முதல் செய்ய முடியவில்லை? றிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு வியாபாரிகள் 0 கிலோ கொண்ட மூட்டையை 52 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அரசுத் தரப்பில் 59 கிலோ மூட்டைக்கு என்று வைத்து 54 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். அப்படி இருக்கிறபோது விவசாயிகள் ான் தனியாரிடத்தில் கொடுக்கிறார்கள்? ஏன் விவசாயிகள் ம்முடைய அரசு பர்சேசிங் சென்டரில் கொண்டு வந்து

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்

கொடுக்கவில்லை. இதிலே உள்ள கோளாறு என்ன? இ முன்னால் அரசு மூட்டைக்கு 61 கிலோ என்று வைத்திருந்தார் விவசாயிகளின் கோரிக்கைகளின் பேரில் அரசு கோரிக்கை ஏற்று 59 கிலோ என்று உத்தரவிட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கு மகிழ்ச்சி. ஆனால் தனியாரிடத்தில் 52 ரூபாய் கொடுக்கிறவர்கள் அரசு வாங்குகிற இடங்களில் அதிகமான கொடுத்தும் ஏன் அதிகமாக நெல்லைக் கொண்டு வ கொடுக்கவில்லை என்று பார்த்தால் அங்கு கொண்டு வரு நெல்லை ஏதோ ஒரு காரணம் கூறித் திருப்பிவிடுகிறார்கள் எ சொல்லப்படுகிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

விவசாயிகள் பத்து மூட்டை கொண்டு வந்து அதிலே ஐந் மூட்டையைத் திருப்பி எடுத்துக் கொண்டு போவதை வி இரண்டு ரூபாய் குறைவாக இருந்தாலும் தனியாரிடமே கொடுத் விடலாம் என்று கருதுகிறார்கள். தனியாரிடத்தில் விற் சுலபமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

இன்றைக்கு அரசாங்கம் கொள்முதலைப் பரவலாக ஏற்படு விரிவாகக் கொள்முதல் செய்தால் அரசுக்குத் தேவைய 6 லட்சம் டன் நெல்லையும் அங்கேயே கொள்முதல் செய்ய முடி இந்த வருஷம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை கொஞ் விளைச்சல் குறைவு; ஆனால் தமிழகத்தில் ஒட்டுமொத்த விளைச்சல் அதிகரித்திருக்கலாம். எப்படி இருந்தாலும் தஞ் மாவட்டத்தில் 5 லட்சம் டன் மார்க்கட்டபிள் சர்ப்ளஸ் இருக் தஞ்சை மாவட்டத்தில் அரசு கொள்முதல் விலை, வெளி மார்க் விலையை விட 2 ரூபாய் அதிகமாக இருப்பதால், மாவட்டத்திலுள்ள மார்க்கெட் விலையைச் சொல்லுகிறே பரவலாக பர்சேசிங் சென்டர்களை அதிகப்படுத்தி கொள்முதல் செய்ய முன்வர வேண்டுமென்று கேட கொள்கிறேன்.

நெல்லைப் பொறுத்தவரை விவசாயிகளுக்குக் கட்டுப்படி விலை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்க இருந்து வருகிறது. மத்திய சர்க்காருக்கு இந்தக் கோரிக்கை மாநில சர்க்கார் அனுப்பியிருப்பதாகக் கூறுகிறார்கள். மத்தி அரசு பல ஆண்டுகளாகவே எவ்வளவு கோரிக்கை அனுப்பினாலும் கூட அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.



1978 மார்ச் 27] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஆனால் கோதுமையைப் பொறுத்தவரை கொஞ்சம் அதிகமான விலை கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கோதுமைக்கு அட்னால் 100 ரூபாய் இருந்தது, தற்போது 10 ரூபாய் அதிகப்படுத்தி 110 ரூபாய் குவிண்டாலுக்குக் கொடுத்திருக் கிறார்கள். கோதுமைக்கு குவிண்டாலுக்கு 10 ரூபாய் ஏற்றியிருக்கிறார்கள். ஆனால் நெல்லுக்கு கோர்ஸ் வெரைட்டிக்கு இந்ரூபாய்தான், 70 ரூபாயிலிருந்து 74 ரூபாய் என்ற அளவுக்குத் தான் ஏற்றியிருக்கிறார்கள். நெல்லைப் பொறுத்தவரை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நெல் சாகுபடி கட்டுப்படியானதல்ல இன்றைக்கு இருக்கிற விலையில். சாகுபடிச் செலவிற்கும் நெல் விலைக்கும் இன்றைக்குச் சம்பந்தமே இல்லை. ஆகவே நியாயமான விலை கொடுத்தால்தான் விவசாயிகள் உற்சாகமாக நெல் உற்பத்தியிலே பங்கெடுத்துக் கொள்ள முடியும். ஆகவே, நியாயமான விலையை விவசாயிகளுக்கு உத்திரவாதம் செய்து கொடுப்பதற்கு அரசு எல்லா வகையான முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

இப்போது இரண்டாம் தர நெல் மட்டும்தான் அரசு கொள்முதல் செய்கிறது. 95 ரூபாய் என்று அறிவித்து விட்டார்கள். ஆனால் ஒன்றாவது ரக நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை. அதற்குப் பிறகு பைன் வெரைடி இருக்கிறது. சூப்பர் பைன் வெரைட்டி இருக்கிறது. அது வேண்டாம், ஆனால் ஒன்றாவது ரக நெல்லுக்கு அதிகமான விலை நிர்ணயம் செய்து வாங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

அடுத்ததாக, கடலையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டார்கள். கடலை வேவசாயம் ஏதோ அதிகப்படியான வருமானம் விவசாயிகளுக்குக் கிடைப்பதாகக் கருதப்படுகிறது வெளியிலே. ஆனால் ஆண்டுதோறும் ஏற்படுகிற நிலைமைகளைக் கருத்திலே கொண்டு கணித்துப் பார்த்தால் 5 ஆண்டுகளிலே ஒரு முறைதான் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது, பாக்கி 4 ஆண்டுகளில் சரியான விலை கிடைக்கவில்லை. இன்றைக்கு கடலை மார்க்கட்டிலே வந்தாகிவிட்டது. சீஸன் ஆரம்பமாகிவிட்டது. விலை இன்றைக்கு ரூ. 250-லிருந்து 240 வந்து 230-க்கு வந்துவிட்டது. ஆனால் வியாபாரிகள் 200, 210-க்கு உட்பட்டுத்தான் விலைக்கு

வாங்குவார்கள். இதனால் அதைப் பயிர் செய்யக்கூடி விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவில் அதனால் எவ்வளவு பெரிய சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பன சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மத்திய அரசு கடலைக்கு ப்ளோர் பிரைஸ் என் நிர்ணயித்திருக்கிறார்கள் விலை, அதற்கும் உற்பத்திச் செலவிற்கு சம்பந்தமே இல்லை. உற்பத்திச் செலவு ஒரு குவின்டாலுக் எவ்வளவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டு ஒரு குவின்டாலுக்கு மிகக் குறைந்த விலை தான் நிர்ணயித்திரு கிறார்கள். இது போதாது, 250 ரூபாயாவது ஒரு குவிண்டாலுக்கு நிர்ணயித்தால் ஒழிய அவர்களுக்குக் கட்டுபடி ஆகாது. விவசாயிகள் தலையிலே கையை வைத்து அழ வேண்டிய நிலைதான் இருக்கிறது. அரசு சிந்திக்க வேண்டும்.

கரும்புக்குப் போதிய விலை கிடைக்கவில்லை என்ற கோரிக்கையும் வந்திருக்கிறது. அருணா சுகர் பேக்டரியில் அவர்களுக்குப் போதிய விலை கொடுக்காததால் விவசாயிகள் கரும்பை வேறு பயிராக்கிக் கொடுக்க அனுமதி கேட்டிருப்பதாகத் தெரிகிறது. இது உங்கள் துறைக்குச் சம்பந்தம் இல்லையென்றாலும் விவசாயத் துறை சம்பந்தப்பட்டது, விவசாயத் துறை அமைச்சரும் இங்கே இருக்கிறார், அவர்களுக்கு உற்பத்திச் செலவு, நவீன கருவிகள், மற்றும் உர வகைகள் வாங்குகிற செலவு இவைகளையெல்லாம் கணக்குப் பார்த்தால் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது.

மத்திய சர்க்கார் லெவி சர்க்கரை விலையை 15 காசுகள் ஏற்றி விட்டார்கள். கரும்பு விவசாயிகளுக்குச் சர்க்கரை உற்பத்தியாளர்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காக, கூட்டுறவு ஆலைகள் கொடுக்கின்ற விலையை தனியார் ஆலைகள் கொடுக்க மறுக்கிறார்கள். தனியார் துறையால் ஏன் அது முடியவில்லை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்களுக்குப் போதுமான விலை கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.





அடுத்து, சர்க்கரை விநியோகம் பற்றி ஒரு புதிய கொள்கையை அறிவித்து இருக்கிறார்கள். அதாவது நபர் ஒன்றுக்கு 450 கிராம் என்று தான் கொடுக்கிறார்கள். அதிலே பெரிய சிரமம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கிராமப் புறங்களிலே பெரிய புகார் எதுவும் கிடையாது. அந்த அந்த சொஸைடிகளிலே போதிய இருப்பு இருக்கிறது, அதிகமாக டுபடவில்லை என்று தான் ஒன்றிரண்டு சொஸைடிகளிலே தெரிகிறது நான் விசாரித்தபோது. அந்த வகையிலே தவறுகள் டைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கார்டு விநியோகத்திலே தவறு இருக்கிறது, கார்டுகள் அந்தக் குடும்பங்களுக்கே கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகம், பரவலாக எல்லா இடங்களிலேயும் நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்ற கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். மாநிலம் பூராவும் ஒரே நேரத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை என்றாலும் பரவலாக விரைவிலே கடைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்தியாவசியப் பண்டங்கள் என்ன என்ன என்று அறிவித்து அந்தப் பண்டங்கள் எல்லாம் அந்தக் கடைகளிலே கிடைப்பதற்கு, நிரந்தரமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒருசில சமயங்களிலே போதிய சாமான்கள் வெளியிலே கிடைக்கும். பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லாதபொழுது சிரமம் இருக்காது. ஆனால் சில சமயங்களிலே தட்டுப்பாடு உடனடியாக வரும், அப்பொழுது நாம் திணறக் கூடாது.

[பிற்பகல் 12-40]

ஆகவே, அந்த நியாய விலைக் கடைகளைப் பரவலாக ஏற்படுத்து வதற்கான முயற்சியை அரசு செய்தாலும் இன்னும் விரிவாக எல்லாயிடங்களிலேயும் நியாய விலைக் கடைகளைத் திறக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்தியாவசியப் பண்டங்கள் என்பது என்னென்ன என்பதை அறிவிக்க வேண்டும். அந்தப் பண்டங்கள் அந்தக் கடைகளில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்,

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 27

இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், நியாய விலைக் கடைகளின் மூலமும் அரிசி விநியோகிக்கப்படுகிறது. கரூர் பகுதியிலிருந்து எனக்கு ஒரு புகார் வந்திருக்கிறது. அவர்களுக்கு, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அரிசி ஒரே நாற்றம் உள்ளதாக இருக்கிறது, எனவே விற்க முடியவில்லை, அந்த அரிசி அப்படியே அங்கே தேங்கிப் போய் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் பணம் கொடுத்து வாங்கியாகிவிட்டது. ஆனால் விற்க முடியவில்லை. மக்கள் யாரும் அந்த அரிசியை வாங்குவதற்குத் தயாராக இல்லை. அப்படி மக்கள் வாங்கத் தயாராக இல்லையென்றால் அந்த அரிசியை என்ன செய்வது? இதைப்பற்றிப் பரிசீலனை செய்து அரிசியைத் திரும்ப எடுத்துக்கொள்ள வேண்டும். இது ஆந்திராவிலேயிருந்து நமக்கு வந்த அரிசி என்று சொல்கிறார்கள். ஆனால் எங்கேயிருந்து வந்தது என்பது எனக்குத் தெரியாது, அவர்களுடைய ரிப்போர்ட்டில் அப்படி இருக்கிறது. எனவே, நாம் அரிசி வாங்கும்பொழுதும், அதைப் பதப்படுத்தி வைக்கும்பொழுதும் போதிய கவனம் செலுத்த வேண்டும், அவைகளைச் சேமித்து வைப்பதிலும் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பெரும் பொறுப்பையேற்று நடத்தும் பெரிய தொழில் நிறுவனம். பெரிய பொறுப்பு அது சேமிப்பை ஒழுங்காகக் கவனிக்கவில்லை என்றால் பெரும் நஷ்டம் வந்துவிடும். பிறகு என்ன நிலைமை வந்துவிடும் என்றால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை மோசம், எல்லாமே நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது, இதை மூடிவிடுங்கள் என்று வெளியிலே உள்ள மக்கள் கோரிக்கை போடும் நிலைமைக்கு வந்து விடும். அந்த நிலைமை வரக்கூடாது. எனவே, நியாய விலைக் கடைகள் மூலமாகச் சாமான்கள் கிடைக்க ஏற்பாடு செய்யும் நேரத்தில், அந்தப் பொருட்களை, தானியங்களைப் பாதுகாக்கும் விஷயத்திலேயும் சரியப கவனம் செலுத்த வேண்டும். கோடவுன் வசதி போதாது. ஆறு ஏழு இலட்சம் டன்கள் கொள்ளாதல் செய்ய வேண்டு வைத்திருக்கிறோம். ஆனால் அவைகளைச் சேமித்து வைப்பதற்கான கோடவுன் வசதிகள் ரொம்பக் குறைவாக இருக்கிறது. இதை மிகவும் அதிகமாக விஸ்தரிக்க வேண்டும் 80,000 டன்னை வைக்க ஏற்பாடு செய்வதாக, புதிய கோடவுன்களைக்



1978 மார்ச் 27] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

கட்டுவதாகச் சொல்கிறார்கள். அந்த கோடவுன் வசதிகளெல்லாம் அதிகரிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் சரியான முறையிலே பொருட்களைச் சேமித்து வைக்க முடியும்.

அரிசியாக ஆக்கி வைப்பதால், அரிசி கெடுவதற்கு வாய்ப்பு இருப்பதால் போதிய கவனம் செலுத்தப்படாத காரணத்தினால் அரிசியிலே இம்மாதிரியான நாற்றம் வருகிறது. ஆந்திராவிலிருந்து வருகின்ற அரிசியிலே மட்டும்தான் நாற்றம் வருகிறது என்று அர்த்தம் இல்லை. இங்கே உற்பத்தி செய்யப்படும் அரிசியிலும் நாற்றம் இருக்கிறது. ரேஷன் அரிசி என்றாலே நாற்றம் என்று பெயர். நியாய விலைக் கடைகள் மூலம் சர்க்கார் போடுகின்ற அரிசி என்றாலே அதிலே நாற்றம் இருக்கும்போல் தெரிகிறது. ஏன் அந்த நிலைமை வருகிறது?

நான் கருதுவது என்னவென்றால், அப்பொழுதைக்கப்பொழுது 15 நாட்கள், 20 நாட்களுக்குத் தேவையான அளவுக்கு அரிசி இருப்பு வைத்துக் கொண்டு மீதி நெல்லை அளித்து நெல்லாகவே வைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது. நெல்லை அளித்து வைத்துக் கொண்டால் கெடுவது இல்லை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு நன்றாக இருக்கிறது. சில குடும்பங்களில் ஒரு வருஷத்திற்குத் தேவையான நெல்லை அளித்து வைத்துக் கொள்வார்கள். தேவைப்படும்பொழுது அரைத்துக் கொள்வார்கள். அப்பொழுது கெடாது. அரிசியாக இருந்தால் கெட்டுவிடும். எனவே, இப்படிச் செய்ய முன் வருவதில் அது நடைமுறைச் சாத்தியமா என்று அரசு ஆலோசிக்க வேண்டும். இது என்னுடைய கருத்து, சஜஷன். இதைச் செய்ய முடியுமா என்று பார்த்து, நிமென்று தேவையிருந்தால் அரிசியாக அரைத்து உடனே தள்ளி விடலாம், அரிசி கெடாது. இதை எப்படிச் செய்வது, செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, மீன்துறையைப் பொறுத்தவரையிலே நாட்டுப் படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் இடையே உள்ள சண்டை ஓயவே இல்லை. இது மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இதை எப்படியாவது தீர்க்க

வேண்டும். ஏனென்றால் பல இலட்சக்கணக்கான மக்கள் வறுமையிலே உழலும் மக்கள், கடலோரங்களிலே உள்ள மக்கள், மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மக்கள், அந்த மக்கள் இப்படி விசைப் படகுக்காரர்கள், நாட்டுப் படகுக்காரர்கள் என்று சண்டையிட்டுக் கொண்டிருந்தால் எப்படி வாழ்வது என்பதை நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

அது சம்பந்தமாகச் சட்டம் கொண்டு வரப்போவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். பல்வேறு ஒப்பந்தங்கள் செய்யப் பட்டதாக அவையிலே அறிவித்தார்கள். அந்த ஒப்பந்தங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகிறதா என்று தெரியவில்லை. நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால் என்ன காரணம்? அதை நிறைவேற்ற யார் மறுக்கிறார்களோ அவர்கள் மீது ஏன் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை? அப்படி நடவடிக்கை எடுத்து அதை ஒடுக்க வேண்டாமா?

இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இதில் காலந்தாழ்த்திக் கொண்டே போக முடியாது. இதில் இன்னும் மோசமான நிலை வந்த பிறகு நாம் கவனம் செலுத்துவதைவிட உடனடியாகக் கவனம் செலுத்தியாக வேண்டும். நாட்டுப் படகுக்காரர்கள் விசைப் படகுக்காரர்களை வந்து பிடித்துக் கொண்டு தினந் தோறும் பணம் கேட்கிறார்கள் என்று புகார் வருகிறது. தினந் தோறும் எங்கள் படகுகளை அவர்கள் நடுக்கடலில் பிடித்துக் கொண்டு, ரூ. 2,000 கொடு, ரூ. 3,000 கொடு என்று பணம் கேட்கி றார்கள். இது ஒரு தரப்பினுடைய வாதம். இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை யென்றாலும், அப்படிச் சொல்லப் படுவதில் உண்மை இருக்கிறதா என்பதை விசாரிக்க வேண்டும். அப்படி நாட்டு படகுக்காரர்களே செய்தாலும் தவறு. ஆனால், எங்கள் பகுதியில் விசைப்படகுக்காரர்கள் செய்கிறார்கள் என்று தான் கூறப்படுகிறது. இதையெல்லாம் தீர்க்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

கன்னியாகுமரியிலே இயந்திரத்தின் மூலம் வலை பின்ன, தொழிற் சாலை வைக்க தனியார் லைசென்ஸ் பெற்றிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அப்படிச் செய்தால், கையால் வலை பின்னுகிறவர் களுக்கு வேலை கிடைக்காமல் போகும். ஏற்கெனவே, அவர்கள்





வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள்; கிடைப்பதோ மிக்க குறைந்த ஊதியம், அந்த ஊதியமும் கிடைக்காத அளவுக்கு, மெஷின்களை வைத்து வலையைப் பின்ன லைசென்ஸ் கொடுத்தால் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை, ஏற்படும்? வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகமாகும். பிறகு அது ஒரு பெரிய பிரச்னையை ஏற்படுத்தும். பின்னால் போராட்டமும் ஏற்படும். அதைத் தீர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு ஏற்படும். இப்பொழுது, இயந்திரத்தில் வலை தயாரிக்க லைசன்ஸ் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு மீனவர்கள் வீட்டு வசதிக்காக, எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடு) ரூ. 1 கோடி, சென்ற ஆண்டை விடக் குறைவு. மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதோடு, புயல் காலத்திலே, தங்குவதற்கு ஷெல்ட் டர்ஸ் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, புயல் அடிக்கிற காலத்திலே பாதுகாப்பாக ஒதுங்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. ப. உ. சண்முகம்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் கருத்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற முறை நான் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்பொழுது அரியானா, பஞ்சாப், ஒரிசா, பீகார் போன்ற மாநிலங்களில் வாங்கிய நெல், அரிசியைப் பற்றிக் குறிப்பிட்டேன். அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள், நெல்லும் வாங்கி யிருக்கிறார்கள், அரிசியும் வாங்கியிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். நான் குறிப்பிட்டு விட்டு பேசியபொழுது குற்றச் சாட்டாகக் கூடச் சொல்லவில்லை, அதிக விலை கொடுத்து வாங்கி யிருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் அந்த விலை கொடுக்க முடியவில்லை, தமிழ்நாட்டில் கொடுத்திருக்கலாம் என்று நான் சொன்னேன். தமிழ்நாட்டிலே குறுவை நெல்லை வாங்குங்கள்; அந்த விலை கொடுத்து என்று சொல்வதற்கு நான் அவ்வளவுதூரம் நெஞ்சிலே ஈரம் இல்லாமல் போனவன் அல்ல. அரசுக்கு எப்படியும் ஆபத்து

உண்டாக்க வேண்டுமென்று கருதி, அத்தகைய அபாயகரமான யோசனையை நான் சொல்லவும் இல்லை, சொல்லவும் மாட்டேன். தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை யென்ற கருத்தினை அப்பொழுது நான் தெரிவித்தேன்.

அப்பொழுது நான் தெரிவித்த இன்னொரு கருத்துகூட, வாங்கப்பட்ட, அரிசி, நெல் இவைகளை யெல்லாம் புரோக்கர்களை வைத்து வாங்கியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வாங்கவில்லையென்ற தகவலும் நான் தந்தேன், அதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, வாங்கப்பட்ட சிறு தானியங்கள், சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவைகள் இதே போல் வாங்கப்பட்டது என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். ஃபெடரேஷன் மூலமாகத் தான் வாங்கப்பட்டது என்று எனக்கு நினைவு. அப்பொழுது உணவு அமைச்சராக இருந்தவர் நான் அல்ல. இருந்தாலும் அது பற்றி அமைச்சரவையிலே பேசும்பொழுது, ஃபெடரேஷன் மூலமாகத் தான் வாங்க வேண்டுமென்று முடிவெடுத்து வாங்கப்பட்டது என்று நினைக்கிறேன். இல்லை, இந்த முறையில்தான் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால் இந்த முறை தவறு என்று சொல்கிற நான் அப்பொழுது வாங்கிய முறை சரி என்று வாதாட மாட்டேன். அதுவும் தவறு என்றுதான் சொல்வேன். எனவே, அதிலே கருத்து மாறுபாடு இருக்க நியாயம் இல்லை.

சென்ற கூட்டத் தொடருக்குப் பின்பு, சென்னையிலே பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த உணவு அமைச்சரவர்கள் பேசும்பொழுது, உணவுப் பொருளை அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறோம் என்று ப. உ. சண்முகம் அவர்கள் சட்டமன்றத்தில் சொன்னார்கள். அப்பொழுது புள்ளி விவரம் இல்லை. இப்பொழுது இருக்கிறது, அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலையில்தான் பஞ்சாபிலிருந்தும் அரியானாவிலிருந்தும் வாங்கியிருக்கிறோம். ஆனால், கொண்டு வர வழிச்செலவு கூடுதலாக ஆகியிருக்கிறது. அதுதான் கூடுதலாகியிருக்கிறது. அரசு நிர்ணயித்த விலையில்தான் வாங்கியிருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னதாக பத்திரிகையிலே செய்தி வந்தது.





(பிற்பகல் 12-50)

அந்த நேரத்திலே எனக்குத் தகவல் இல்லை, பிறகுதான் தகவல் கிடைத்தது என்று அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையிலே படித்தேன். உண்மை என்று நான் நம்புகிறேன். அப்படி அந்த விலைக்குத்தான் வாங்கினீர்களா என்று நானும் விசாரித்தேன். இல்லை என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். எப்படி என்று கேட்டால் ஒரு ஆள், அவர் மீது அரசு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்குப் போட்டிருக்கிறார்கள்; ஒப்பந்தம் செய்து கொண்ட விலைக்கு அரிசி கொடுக்கவில்லை என்று வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கைப் பற்றிய விவரம் அரசாங்கத்திற்குத் தெரியும், ஏனென்றால் அரசாங்கம்தான் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறது. அப்படி ஒப்பந்தப்படியான விலைக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லும்போது, என்ன விலைக்கு கொடுக்கவில்லை என்று இந்த அரசு வழக்குப் போட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே தெரிவித்தால் நான் சொன்னது எவ்வளவு தூரம் உண்மை என்பது புலனாகும். இந்த வழக்கை ஒரு உதாரணமாக எடுத்துச் சொல்லுகிறேனே தவிர, வேறு காரணத்திற்காக அல்ல.

இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளை நான் படித்துப் பார்த்தேன். அதிலே மத்திய அரசு நடுத்தர ரக அரிசியைக் கிடங்கிலே இருந்து கொடுக்கிறது. அந்த நடுத்தர அரிசியினுடைய விலை 152 ரூபாய் என்றும் அரசாங்கம் நாம் விற்கின்ற விலை என்ன வருகிறது என்று சொல்லும்போது 173 ரூபாய் என்றும் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள், நடுத்தர அரிசிக்கு. வித்தியாசம் ஏறத்தாழ 21 ரூபாய் வருகிறது. நடுத்தர அரிசி புட் கார்ப்பரேஷன் குடோனிலே இருந்து கிடைக்கின்ற விலை 152 ரூபாய், என்று அரசாங்கம் கொடுத்திருக்கிற புத்தகத்திலே 19-வது பக்கத்திலே இருக்கிறது.

ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் விநியோகிக்கக்கூடிய அரிசியினுடைய அடக்க விலை 173 ரூபாய். 21 ரூபாய் கூடுதலாக இருக்கிறது. ஒரு வேளை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம், மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குத்தான் வாங்குகிறார்கள். நாங்கள் கூடுதலாக நெல்லுக்கு விலை கொடுக்கிறோம். ஆகையினால் வித்தியாசம் அதிகமாக வருகிறது என்று சொல்வார்களானால்,

அந்த வித்தியாசத்தைப் பொறுத்த மட்டில் 13 ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே எவ்வளவு என்று பார்க்கும் போது 21 ரூபாய் வித்தியாசம் வருகிறது. யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று நான் சொல்லமாட்டேன். இது எப்படிச் சுற்றிவந்தாலும் அரசாங்கக் கணக்குத்தான் வந்து கொண்டிருக்குமே தவிர, வேறு வழியே கிடையாது.

பொதுவாக அன்று உணவுத் துறையை நான் ஏற்றிருந்த காலத்திலேயும் சரி, இப்போதும் அதுதான் சரியாக இருக்கும் என்று நம்பிக்கையோடு சொல்கிறேன், இந்த உணவுத் துறையிலே கார்ப்பரேஷன் மொத்த லாபம் ஓராண்டுக்கு 60 லட்சம், 50 லட்சம் அல்லது 10 லட்சம் 15 லட்சம் என்று லாபம் வரும், அமைச்சர் வேண்டும் என்றால் கணக்கை எடுத்துப் பார்த்துக் கொள்ளட்டும். இந்த லாபம் நெல் வியாபாரம் அரிசி வியாபாரத்திலே வருகிற லாபமே தவிர, வேறு அல்ல. மற்றவற்றிலே லாபம் வருவது கிடையாது. இதிலே வருகிற லாபம்தான். பச்சை உண்மை, ஒத்துக் கொள்கிறேன். ஒரு வேளை இது சரியில்லை என்று எனக்குத் தெரிவிப்பார்களானால் நான் ஒத்துக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். இதுதான் உண்மை. இந்த லாபம் வருவது தவறு என்று சொல்ல மாட்டேன். அரசுக்குத்தான் வருகிறது. ஆனால் லாபமே வரவில்லை என்று புள்ளிவிவரத்தைத் தவறாகத் தருவது சரியல்ல என்பது என்னுடைய கருத்தாகும்.

நெல் வாங்குகின்றபோது இப்போது விவசாயிகளிடத்தில் 5 சதவீதம் கட்டு போட்டு அவர்களிடம் வாங்குகிறார்கள். சாதாரணமாக வாங்கி விட்டு அதைக் கோடவுனுக்குக் கொண்டு வந்து ஆலைக்கு அனுப்பினால் 5 சதவீதம் காய்ந்து விட்டது, ஆகவே உங்களுக்கு கட்டு மூலம் வரும் நெல் கொடுக்க முடியாது என்று ஆலை அதிபர்களுக்குச் சொல்கிறோம். ஆனால் கோடவுனுக்கு வராமல் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து ஆலைக்கு அனுப்பினால், ஆலைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்படித்தானே உத்தரவு இதுவரை இருந்தது. இப்போது அந்த உத்தரவை மாற்றியதற்கு என்ன காரணம்? அப்படி ஆலை முதலாளிகளுக்கு வாதாடுகிறீர்களா என்று கேட்டால் நான் திருப்பிக் கேட்பேன் விவசாயிகளை ஏமாற்றுகிறீர்களா என்று கேட்டால் சங்கடமாக இருக்கும். நான் ஆலைக்காரர்களுக்காக வாதாடவில்லை. ஒ



ஆண்டு கணக்கு முடிந்து செட்டில் ஆன பிறகு பைனல் பில் எல்லாம் முடிந்த பிறகு, இப்போது 5 சதவிகிதம் ஈரப் பசைக்காக என்று சொல்லி, அவர்கள் பணமெல்லாம் கொடுத்தாகிவிட்டது என்ற காரணத்தால், பாங்க் காரன்டியை ரிலீஸ் பண்ணாமல் ஒரு அதாரிட்டியை வைத்து சொத்துக்களை ஜப்தி செய்யுங்கள் என்று உத்தரவு கொடுப்பது என்பது எந்த வகையிலே நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே இத்தகைய தவறான உத்தரவுகளை கீழே இருக்கும் அதிகாரிகள் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அது அமைச்சரின் கவனத்திற்கு, அரசின் கவனத்திற்கு வராமல் இருந்து இருக்கலாம். சற்று நேரத்திற்கு முன்பு கூட நான் அமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டு இருந்தேன், எனக்குத் தகவல் தாருங்கள், விசாரிக்கிறேன் என்று சொன்னார்கள். நான் வேண்டுமானால் எழுதிக்கொடுக்கிறேன். உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்தில் பரவலாக பாதிக்கப்பட்டு இருக்கும் பெரும்பாலான சிறிய ஆலைக்காரர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரையைப் பற்றி மத்திய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று 3-4 மாதங்களுக்கு முன்பு பத்திரிக்கையில் பரவலாக செய்தி அடிபட்டது. சீக்கிரம் முடிவு எடுக்கப் போகிறார்கள். சர்க்கரை ஆலைகளுக்கு ஆபத்து வருகிறது. லெவி சர்க்கரை விலை குறையப் போகிறதா அல்லது அரசாங்கம் போட்டு இருக்கும் எக்சைஸ் வரி குறையப்போகிறதா என்று பத்திரிக்கையில் ஜோஸ்யம் எழுதிக் கொண்டிருந்த நேரத்தில், திடீரென்று உத்தரவு வந்தது, சர்க்கரை கட்டுப்பாடு ரத்து செய்யப்பட மாட்டாது என்று உத்தரவு போட்டு விட்டு, 2.15 ரூ. என்று இருந்த லெவி சர்க்கரை ரூ. 2.30 என்று விற்கப்படும், அந்த 15 பைசா அப்படியே ஆலைக்காரர்களுக்குக் கொடுக்கப்படும், அந்த 15 பைசா மட்டுமல்லாது இன்னும் 5 பைசா சேர்த்து 20 பைசா தரப்படும் என்று கொடுத்து இருக்கிறார்கள்.

அந்த உத்தரவை போடும் அதிகாரம் நமக்கு இல்லை. ஆகவே, நான் மாநில அரசின் மீது குறை சொல்லவில்லை. தனிப்பட்ட சர்க்கரை ஆலை அதிபர்களுக்காக நான் வாதாடவில்லை. ஆனால்

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 27

சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டு இருப்பது உண்மை. சர்க்கரை ஆலையைப் பொறுத்தமட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, ஏற்கனவே ஆட்சிக் கட்டத்தில் இருந்த நேரத்தில், மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம், சர்க்கரை ஆலைகள் முழுவதையும் தேசியமயமாக்க வேண்டும். அந்தக் கொள்கையில் மாறுபாடு இல்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டால் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அரசு ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். அந்த பெருத்த நஷ்டத்திற்கு எல்லாம் என்ன காரணம்? கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிக்கு அதிக விலை கிடைக்கவில்லை என்ற வருத்தம், அரசாங்கம் போட்டு இருக்கும் வரி அதிகம், ஆலைகளுக்கு வரும் லாபம் முழுவதும் குறைந்து விட்டது என்று அவர்களுக்கு வருத்தம்.

கூட்டுறவுத் துறையில் இருக்கும் சர்க்கரை ஆலைகள் அடுத்த ஆண்டு சர்க்கரை ஆலையை ஓட்டுவார்களா என்ற சந்தேகம் வருகிற அளவிற்கு நிலைமை போய்விட்டது. முன்பெல்லாம் ஆலைகளுக்குப் பதிவு செய்துவிட்டு கரும்பைக் கொடுக்காமல் போய் விட்டார்கள் விவசாயிகள் என்று ஆலைகள் வழக்குப் போட்டதை மறந்து விடவேண்டும். ஆனால் இப்போது 11 மாதம், 15 மாதம் என்று கரும்பை வைத்துக் கொண்டு ஆலைக்காரர்கள் கரும்பை எடுக்கவில்லையே என்று விவசாயிகள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆலைக்காரர்கள் மீது விவசாயிகள் வழக்குப் போட முடியவில்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஆகவே, ஏமாந்தவர்கள் விவசாயிகள், பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் எந்த வழியாக நாம் கார்களிலே சென்றாலும் பார்க்கலாம் ஆங்காங்கு சர்க்கரை ஆலைகள் கரும்பை எடுக்கா காரணத்தால் விவசாயிகள் வெல்லம் காய்ச்சும் பரிதாபக மான காட்சியைப் பார்க்கலாம். வெல்லத்தின் விலையும் இடு வீழ்ந்து விட்டது. விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கு பெருத்த நஷ்டத்தோடு இதுவும் நஷ்டம். இதைத் தவிர்க் வேண்டும். இதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசாங்கத்திற் ஏதாவது அதிகாரம் இருக்கிறதா என்றால், கிடையாது. வி



1978 மார்ச் 27] [திரு. ப. உ. சண்முகம்]

நிர்ணயம் செய்யும் அதிகாரம் உண்டா, இல்லை 635-35 என்று நிர்ணயிக்கும் அந்த அதிகாரம் உண்டா, கிடையாது. ஒரு அதிகாரம் இருந்தது. அதையும் எடுத்துக் கொண்டு விட்டது என்பதைக் காணுகிறபோது வருத்தப்படுகிறேன்.

மாநில சுயாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்டும் இந்தக் காலத்தில் போய், சர்க்கரையை விநியோகிக்க ஒரு மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படிருந்த அதிகாரத்தையும் மத்திய அரசு பறித்துக் கொண்டு விட்டது என்பது துரதிருஷ்டவசமானது. இதற்கு முன்பு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் சர்க்கரையை விநியோகிக்கும் உரிமை மாநில அரசாங்கத்திற்குக் கொடுத்து, ஹோட்டல் அதிபர்களுக்குக் கொடுக்காதீர்கள், உபயோகிக்கின்ற மக்களுக்கு, சொந்தமாக தங்கள் உபயோகத்திற்குப் பயன் படுத்துகிற அந்த மக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்ற முறையில் லெவி சர்க்கரை அளிக்கப்பட்டது. அந்த ஒரு நிபந்தனையைப் போட்டுத் தான் கொடுத்தார்கள்.

ஆனால், இப்போது போடப்பட்டு இருக்கும் உத்தரவின்படி எங்கே வாழ்கிற ஆளாக இருந்தாலும் 425 கிராம் சர்க்கரைதான் கொடுக்கப்பட வேண்டும் என்று உத்திரவு போட்டு விட்டு, அந்த சர்க்கரையைப் பரவலாகக் கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தக் குறிப்பிலே கூட குறிப்பிட்டு இருக்கிறார்கள். நகர்புறத்தில் சர்க்கரை கொடுக்கப்படும் அளவு குறைந்து விட்டதால், அதிருப்தி வளர்ந்து இருக்கிறது.

(பிற்பகல் 1-00)

இது உண்மை. நான் மிகப் பணிவோடு ஒன்றை அரசுக்கும் இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிராமப் புறத்திலே இருக்கிறவர்கள் ஏற்கெனவே கொடுத்த சர்க்கரையையே வாங்க முடியாத காரணத்தால் ஓட்டல்களிலும் மற்ற இடங்களிலும் கள்ள வியாபாரத்தில் விற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதையே வாங்க முடியாதபோது இந்தக் கூடுதல் சர்க்கரையை கிராமங்களில் கொண்டுபோய் கொடுத்தால் அவர்களால் எப்படி வாங்கமுடியும்? இதிலே நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதில் நியாயமில்லை.

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 27

ஏமாற்ற வேண்டாம். கிராமங்களில் அதிகமாக சர்க்கரை கொடுப்பதன் மூலம் கள்ள வியாபாரத்திற்கு வழிவகுக்கிறதே தவிர நிச்சயமாக அவர்களுக்கு நியாயம் வழங்குவதாகாது.

புள்ளிவிவரம் கொடுக்கிறோம். நூற்றுக்கு 51 பேர் இன்றைக்கு வறுமைக்கோட்டுக்கு கீழே இருக்கிறார்கள். அதை ஒப்புக் கொண்டிருக்கிறது இந்த அரசு. எந்தக் கிராம மக்களும் சர்க்கரை இல்லையே என்று அழுது கொண்டிருக்கவில்லை. வாழ்க்கையில் முன்னேற முடியவில்லையே, கை, கால் கடுக்க உழைக்கிறோமே, அந்த உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை; சோற்றுக்கு வழியில்லையே என்றுதான் கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள் தவிர கிராமத்திலே நாற்று நடுகிற அல்லது களை எடுக்கிற எந்தப் பெண்ணும் அல்லது மற்ற மற்ற தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறவர்களும் சர்க்கரை இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு தவறு செய்துவிட்டோமோ என்ற ஒரு யூகத்தை வைத்துக் கொண்டு, 65 கோடி மக்கள் வாழும் இந்தியத் துணைக் கண்டத்தில் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்று பாரதி பாடிவிட்டானே, அப்படியானால் எல்லோருக்கும் சர்க்கரை வழங்க வேண்டுமே என்று சொன்னால், 425 கிராம் சர்க்கரையை ஒவ்வொரு குடும்பத்திலும் வாங்குகிறார்களா? வாங்குகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா 425 கிராம் சர்க்கரையை வாங்குவதாக இருந்தால் அதை அவர்கள்தான் உபயோகப்படுத்துகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

425 கிராம் சர்க்கரையை எல்லோரும் வாங்கி உபயோகிக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வதாக இருந்தால், அவர்களுக்கு அந்த வாங்கும் சக்தி இருக்கிறது என்று நீங்கள் ஒப்புக் கொண்டால் நூற்றுக்கு 51 பேர் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, அதை எப்படி ஏற்றுக்கொள்வது? அந்த வாங்கும் சக்தி கிராம மக்கள் அனைவருக்கும் இருக்கிறது என்றால் அவர்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிறவர்கள் என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது; அது ஒரு சரியான வாதமும் ஆகாது.

மத்திய அரசு இந்த உத்திரவைப் போட்டிருக்கிறது. நான் மாநில அரசின் மீது குறை சொல்லவில்லை. மத்திய அரசு இதைச் செய்ய வேண்டுமென்று மாநில அரசை வற்புறுத்தியிருக்



1978 மார்ச் 27] [திரு. ப. உ. சண்முகம்]

கிறது. மத்திய அரசு மாநில அரசின் உரிமையைப் பறித்திருக்கிறது. அதுவும் இந்த நேரத்தில், மாநில சுயாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று பேசுகின்ற இந்த நேரத்தில். 19,500 டன் சர்க்கரையை மாநில அரசிடம் கொடுத்து, 4½ கோடி மக்களுக்கும் அதை விநியோகிக்கின்ற உரிமை பெற்றிருக்கிற மாநில அரசின் பொறுப்பில் தலையிடுவதைப் பார்க்கும்போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மாநில அரசுக்கே விநியோகிக்கின்ற பொறுப்பு இருக்க வேண்டும்; அதை மத்திய அரசு கொடுத்திருக்க வேண்டும்; அந்த உரிமையைக் கொடுக்காதது-- மத்திய அரசின் உத்திரவு தவறானது.

அதைப்போல கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளில் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள். கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஒரு விலை. கட்டுப்படியாகும் விலை கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னாலும் சொன்ன விலைகூட கரும்புக்கு கிடைக்கவில்லை என்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. அரசு அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இருக்கிற தகராறு எப்போது தீரப்போகிறது, எப்போது ஓயப்போகிறது? துப்பாக்கிச் சூடு. இது அடிக்கடி நடக்கத்தான் வேண்டுமா? இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் இல்லையா? இரு தரப்பினருக்கும் சமரசம் செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் ஆசைப்படுகிறோம் தவிர, ஒரு தரப்பினரை ஆதரித்து, ஒரு தரப்பினரை அழிக்க வேண்டுமென்ற எண்ணம், அந்த ஆசை எங்களுக்கு இல்லை. இருவருக்கும் மோதுதல் இல்லாமல் தவிர்க்க வேண்டும்; அவர்களிடையே சமரசம் செய்து வைக்க வேண்டும். இருவருமே சுமுகமாக இருக்க வேண்டும்; அதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்தில் உணவுக் கொள்கையில் வியாபாரிகள் மீது போட்ட லெவி முறை இப்போது ஆலை அதிபர்கள் மீது போடப்பட்டிருக்கிறது. லெவியை யார் மீது போட்டாலும், அது அரசாங்கத்தின் கொள்கை, தவறு என்று நான் சொல்லவில்லை. லெவி முறை மாறியிருந்தாலும் விவசாயிகளுக்கு சங்கடம் இல்லாமல் இருக்க வேண்டும்; சிறு விவசாயிகள் பாதிக்கப்படாமல்

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 27

இருக்க வேண்டும். இப்போதைய நிலைமையைப் பார்த்தால் சிறு விவசாயிகளின் நிலைமைதான் மிகவும் சங்கடமாக இருக்கிறது. அவர்கள் டி. எஸ். ஓ. வீட்டு வாசலிலே போய் * * * போல் காத்து நிற்க வேண்டியிருக்கிறது; அவர்களை அந்த அதிகாரிகள் அப்படி காக்க வைக்கிறார்கள். நாமெல்லாம் வெட்கப்படக் கூடிய அளவுக்கு தவறுகள் நடக்கின்றன. அவைகளை வெளியே சொல்ல முடிய வில்லை. அத்தகைய தவறுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

இன்றைக்கு T.S.O., D.S.O., போன்ற அதிகாரிகள் மட்டத்திலே பல தவறுகள் நடக்கின்றன நான் எல்லா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு. ஆகவே தவறு நடக்கின்ற நேரத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கொண்டு வருகின்றவர் யார் என்று பார்க்காமல் தவறு நடந்திருக்கிறதா? அது உண்மையா, இல்லையா என்று மட்டும் ஆராய்ந்து பார்த்து அதற்கு யார் பொறுப்பு என்பதனை அறிந்து இந்த அரசு அவ்வாறு தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்க எடுத்து தண்டிக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே அரசின் சார்பில் வைக்கப்பட்டிருக்கின்ற மீனள மானியக் கோரிக்கையின் மீது ஏறத்தாழ 12 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய நல்ல கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைத்ததற்கு அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலை அரசு சார்பிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். . . . . குறுக்கீடு . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: என்னவென்று சொல்லுங்கள்.

<u>திரு. பொ. உத்திராபதி:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர்கள் எல்லாரும் வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்தோம். அது பற்றி விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 மார்ச் 27]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகுதான் வெட்டுத் தீர்மானம் பற்றிச் சொல்வது வழக்கம்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u>: மீனளத்துறையினுடைய பல்வேறு முன்னேற்றகரமான திட்டங்களைப் பற்றி அரசு சார்பில் இந்த அவையிலே வைத்திருக்கின்ற பல்வேறு குறிப்புகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நிறைவைத் தந்திருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

ஒவ்வொரு ஆண்டும் மீனளத் துறையில் எந்த அளவிற்கு படிப்படியாக முன்னேற்றங்களைச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசு இந்தத் துறையை வளப்படுத்துகின்ற நல்ல நோக்கத்தோடு இந்த ஆண்டும் அறிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல முறையிலே அறிவார்கள்.

பொதுவாக மீனளத் துறையின் மீது தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பல்வேறு உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பொன்னுரங்கம் அவர்களும், மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களும் இன்றையதினம் மீனவர்கள் மத்தியிலே எழுந்திருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி மிக வருத்தத்தோடு இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இந்த மானியத்தின் மீது தன்னுடைய விவாதத்தை ஆரம்பித்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் இதுவரை நடைபெறாத சம்பவங்களாக அமைந்திருக்கின்றன என்று இங்கே குறிப்பிட்டார்கள்.

இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையிலே அறிந்து வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுவதற்கு முன்னாலே கூட தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் தமிழகத்தினுடைய கடலோரப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் கட்டுமரத் தொழிலாளர்

களுக்கும் விசைப் படகு உரிமையாளர்களுக்கும் மத்தியில் இப்பேர்ப்பட்ட சச்சரவுகள், தகராறுகள் நீண்டநெடுங்காலமாக நடந்து வந்திருக்கிறது என்பதை அப்போது மறுத்தாலும் இப்போது மாண்புமிகு திரு. பொன்னுரங்கம் தலையினை ஆட்டி அதனை வரவேற்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இங்கே சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. இந்த அளவுக்கு இங்கே நடந்திருக்கிறது என்று தான் சொன்னேன்.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் இந்த அவையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்தில் கூட என்னுடைய மாவட்டமாகிய நெல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இப்பேர்ப்பட்ட தகராறுகள் எல்லாம் நடைபெற்று பல விசைப் படகுகள் கட்டுமரத் தொழிலாளர்களால் தீயிட்டு கொளுத்தப் பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையிலே அதற்கான காரணங்கள் என்ன என்பது பற்றியும் இவற்றைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று எண்ணிப் பார்ப்பது இந்த நேரத்தில் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விசைப் படகுகள் மீனவர்கள் அல்லாதாருக்கு வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த அரசின் எண்ணம் எல்லாம், விசைப்படகுக்காரர்கள் மத்தியிலேயும் கட்டுமரத் தொழிலாளர்கள் மத்தியிலேயும் இப்பேர்ப்பட்ட தகராறுகள் வருவதற்குண்டான காரணமே விசைப் படகுகளைப் பெற்றவர்கள் உண்மையிலேயே கடலில் சென்று மீன் பிடிக்கிறவர்களாக இல்லாமல் விசைப் படகுகளை வாங்கிக் கொள்கிறவர்கள் கரையிலேயே இருக்கவும் அந்தப் படகுகளை சம்பளத்திற்கு நியமிக்கப்பட்ட மீனவர்கள் செலுத்துவதால் தான் இப்பேர்ப்பட்ட தகராறுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதில் இந்த அரசுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.





வேண்டும் என்று முடிவு செய்திருப்பது நல்ல கருத்தாக அமையுமா என்பதையும் இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் தொழிலில் ஈடுபட்டிருக்காமல். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் படகுகள் வழங்கலாம் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்வதென்றால், அதை செயல் படுத்துகின்ற நேரத்தில், தமிழகத்தின் கடற்கரையில் இருக்கின்ற 40 ஆயிரம் கட்டுமரங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எந்த விதமான விசைப் படகுகளையும் நம்பியிராமல்—கட்டுமரங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எந்த அளவுக்கு முன்னேற முடியும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன் . . . .

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும், நான் மீண்டும் குறுக்கிடுவதற்காக. நான் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்று வைத்துக்கொள்ளுங்கள், உதாரணத்திற்காக எனக்கு 50 வயதுக்குமேல் ஆகிறது. கடலில் போய் தொழில் செய்ய முடியாது, அதே நேரத்தில் என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. அதிலிருந்து படகை வாங்கி சிலரை வேலைக்கு வைத்து மீன்பிடித் தொழிலை நடத்திக் கொண்டிருந்தால் அதில் என்ன தவறு இருக்க முடியும். வேறு இடத்தில் சம்பளம் வருகிறது என்றால், வருமானம் வருகிறது, ஆகவே உங்களுக்குப் படகு தர முடியாது என்று சொன்னால் அந்த வாதத்தை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் மீனவ சமுதாயத்தில் இருந்தாலும், கடலில் இறங்க வேண்டும், அப்படியிருந்தால் தான் அவர்களைப் படகு கொடுப்பதற்கு ஏற்றுக் கொள்ள முடியும் என்று சொல்வது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கின்ற அளவில் இந்த அரசு இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலில் ஈடுபட்டிருப்பவர்

அந்தத் தொழிலைச் செய்கிறவர்களா என்பதில்தான் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே திரு. பொன்னுரங்கம் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன நேரத்தில், அவர்களுடைய அரசின் கருத்து, எண்ணம் அவர்களுக்கு நியாயமாக இருக்கலாம், ஆனால் அந்த நியாயத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவோடு சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. திரு. பொன்னுரங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது தன்னையும், அமைச்சர் அவர்களையும் நாங்கள் எல்லாம் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுப்பதாகத் தெரிகிறது. அதை மறுக்கிறாரா அல்லது ஏற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர், பேராசிரியர் அவர்கள் என் கருத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்காக நான் உண்மையில் மெத்த வருத்தப் படுகிறேன். திரு. பொன்னுரங்கம் அவர்களும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான், நானும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவன் தான். நான் இந்த அவையில் வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு சமுதாயத்தைச் சேர்ந்திருப்பது வேறு, ஈடுபட்டுக் கொண்டிருக்கிற தொழில் என்பது வேறு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரை முருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, விசைப்படகு வழங்குகின்ற விஷயத்தில், இதனுடைய ஓனராக இருப்பவர் கூட கடலில் போக வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர், ஒரு படகை வைத்துக் கொண்டு நான்கு கூலி ஆட்களை வைத்துக் கொண்டு இந்தத் தொழிலைச் செய்யக் கூடாது என்று சொல்லி-





சொல்லிவிட்டால் நல்லது, மீனவ சமுதாயத்தினரைத் தவிர மற்றவர்களுக்குத் தர மாட்டோம் என்று சொல்லிவிட்டால், ஓரளவுக்கு இதைப் புரிந்து கொள்ள முடியும். அமைச்சர் இப்போது சொல்வது, கடலில் சென்று தொழில் செய்கின்றவர்களுக்கு மட்டும் தான் படகு வழங்கப்படும் என்று சொல்வது எந்தவிதத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேராசிரியர் அவர்கள் கேட்டது சரியல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் தான், நானும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவன் தான். ஆனால் இருவரும் வேறுவிதமான தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடும். மாண்புமிகு பொன்னுரங்கம் என்ன தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் நான் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருந்தவன். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்திருந்தாலும் வேறுபட்ட தொழிலிலும் ஈடுபட்டிருப்பது உண்டு.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். மீன்பிடித் தொழிலில் இல்லாதவர்களுக்கும் படகு வழங்கினால் என்ன, இந்தத் தொழிலில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு படகுகள் வழங்கினால் என்ன என்பதை திரு. துரைமுருகன் அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஒன்றை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இன்னொரு தொழிலில் ஈடுபாடு கொண்டிருந்தால்—அரசாங்க நிறுவனங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ பணி செய்து கொண்டு, அதன் மூலம் வருமானத்தையும் பெற்றுக் கொண்டு இருக்கின்றவர்கள், மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்குப் படகுகள் வழங்குவது என்பது நல்ல கருத்தாக அமையாது என்று அரசாங்கம் சொல்வது சரியா என்பதையும், அதே நேரத்தில் இதே தொழிலில் ஈடுபட்டு காலாகாலத்திற்கும் கட்டுமரத்தையே வைத்துக் கொண்டு வாழ்கின்றவர்களுக்கு விசைப்படகுகளைக் கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே விசைப்படகுகள் வழங்க

1978 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

ஆகவேதான், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் இனிமேல் வழங்கப்பட இருக்கிற விசைப்படகுகள் நேரடியாகக் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிற மீனவர்களுக்கு மாத்திரம்தான் கொடுக்க முடியும், கொடுக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு மிகத் தெளிவாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மீனவர்களுக்குத்தான் இப்பேர்ப்பட்ட விசைப் படகுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றை பணிவன்போடு கொண்டுவர விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மீனவர்கள் என்று யாரைக் கருதியதோ அந்த கருத்துக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீனவர்கள் என்று யாரை கருதுகிறதோ அந்தக் கருத்துக்கும் அடிப்படையிலே பாரதூர வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் இந்த அவையில் எடுத்துக் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவ சமுதாயத்தில் பிறந்தவர்கள் எல்லாம் சமுதாயத்தின் அடிப்படையில் அல்லது ஜாதியின் அடிப்படையில் மீனவர்களாக இருக்க முடியுமே தவிர தொழிலில் அவர்கள் மீனவர்களா என்று இந்த அரசு கொஞ்சம் சந்தேகத்தோடு பார்க்க வேண்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. அம்பிகாபதி அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே சொன்னார்கள், விசைப்படகுகளை நாடார்களும் வைத்திருக்கிறார்கள். செட்டியார்களும் வைத்திருக்கிறார்கள். சைவ உணவு அருந்துபவர்களும் வைத்திருக்கிறார்கள் என்று ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அந்தக் கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்வதற்குத் தயாராயில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். யார் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் உண்மையிலேயே மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களா,



1978 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அரசு திட்டவட்டமாக, மிக உறுதியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் இன்றையதினம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தகராறுகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று இந்த அரசு பூரணமாக நம்புகின்றது . . .

**திரு. மு. அம்பிகாபதி**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டுமே படகுகள் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பேசும்போது, இந்தத் தொழிலில் ஈடுபடாத செட்டியார்கள், இதில் ஈடுபடாத நாடார்கள், சைவத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் எல்லாம் படகைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத்தான் வலியுறுத்தி சொன்னேன். அமைச்சர் அவர்கள் இப்போது இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு மட்டும்தான் படகுகள் வழங்கப்படும் என்று சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முடிவில் திடமாக இருந்தால் தான் இப்பேர்ப்பட்ட சர்ச்சைகளை கடலோரப் பகுதிகளில் தவிர்க்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மேலும் இப்படிப்பட்ட சர்ச்சைகள் வருவதற்கு இன்னொரு காரணம் இருப்பதாக இந்த அரசு கருதுகிறது. பொதுவாக விசைப்படகு பெற்றவர்கள் மூன்று மைல்களுக்கு அப்பால் கடலில் சென்று மீன் பிடிக்க வேண்டும் என்று ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டிருந்தும், மீனளத் துறை இதற்காக ஒரு முடிவு எடுத்து அந்த முடிவை அரசாங்கம் உத்தரவாக ஏற்கனவே பிறப்பித்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். ஆனால் எந்த அளவிற்கு

(பிற்பகல் 1.20)

இன்றையதினம் மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுள்ள விசைப் படகுக்காரர்கள் இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

இன்றையதினம் மீனவச் சமுதாயத்திலே, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விசைப்படகுக்காரர்களுக்கும், நாட்டுப்படகு, கட்டுமரத்தைக் கொண்டு மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற தகராறு எல்லாம் இந்த மீன்பிடிக்கும் இடத்தைப் பொறுத்ததே தவிர, தொழிலைப் பொறுத்ததல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணரக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவேதான், இதை அவர்கள் கடைப் பிடிக்க வேண்டுமென்று இந்த அரசு இன்றைய தினம் அவர்களுக்கெல்லாம் உத்தரவிட்டிருக்கிறது.

பல்வேறு சந்தர்ப்பங்களிலே இப்பேர்ப்பட்ட தகராறுகள் நடைபெறுகின்ற காலத்திலும்கூட, கட்டுமர அல்லது நாட்டுப் படகு தொழிலாளர்களிடமிருந்து வருகின்ற கோரிக்கைகள் எல்லாம், விசைப்படகுக்காரர்கள் நாங்கள் மீன் பிடிக்கின்ற இடத்திலே அவர்கள் மீன் பிடிக்கின்றார்கள். ஆகவே, விசைப் படகுக்காரர்களால் நாங்கள் கடலிலே போட்டுள்ள வலை சேதப்படுத்தப்படுகிறது, கட்டுமரம் போன்றவைகள் சேதமடைகின்றன, இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்றால், விசைப் படகுக்காரர்கள், அதன் சொந்தக்காரர்கள் கடலிலே 3 மைல்களுக்கு அப்பால் சென்று மீன் பிடிக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு இடத்திலேயும் இருக்கின்ற கட்டுமரத் தொழிலாளர்களும், நாட்டுப்படகுத் தொழிலாளர்களும் வலியுறுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, இப்பேர்ப்பட்ட நியதிகளையெல்லாம் விசைப் படகுக்காரர்கள் கடைப்பிடிப்பார்களானால், நிச்சயமாக இப்பேர்ப்பட்ட தகராறுகள், சர்ச்சைகள் எல்லாம் குறைந்துபோகும் என்பது மாத்திரமல்ல, இவைகள் அறவே இல்லாமல் போகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். அந்த அடிப்படையிலேதான் இந்த அரசாங்கம், இந்தத் துறையிலே மிகவும் கவனமாக, இப்பேர்ப்பட்ட தகராறுகளையெல்லாம் தவிர்க்கின்ற முறையிலே





இன்றையதினம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது, ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆண்டுதோறும் மீனவர்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியது, இந்த அரசு அப்படி ஒதுக்கவில்லை என்ற ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல் ஆண்டுதோறும், ஒவ்வொரு கோடி ரூபாய் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கிக் கொண்டு வருகிறது, இந்த ஆண்டும் அவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

41 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொன்னார்கள். நாங்கள் கொடுத்துள்ள புத்தகத்தில் 25-வது பக்கத்தில் படித்துப் பாருங்கள். மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 41 என்பது மீனவர்களின் வீடுகள் எண்ணிக்கை அல்ல. 41 மீனவர்களுக்கான குடியிருப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 41 மீனவர்களுக்கான குடியிருப்புகளில் ஏறத்தாழ 2,137 வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரும்பகுதி கட்டப்பட்டு, இன்னும் கட்ட வழியிருக்கிறது, பாக்கியிருக்கிறது. இதைத் தவிர, இந்த ஆண்டும் மேலும் ஒரு கோடி ரூபாய் வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே இருப்பதைத்தான் சொன்னேன். இங்கே, ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் 41 வீடுகள் என்றுதான் இருக்கிறது. 41 அவுசஸ் என்றுதான்

இருக்கிறது, வில்லேஜஸ், ஆம்லெட்ஸ் என்றில்லை. அது மட்டுமல்லாமல், நீங்கள் 1977-78 ஆம் ஆண்டிலே, இந்த 9 மாதகாலத்திலே எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறீர்கள் என்பதற்கான புள்ளிவிவரங்களைத் தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-78-ல் வழக்கம்போல் ஒரு கோடி ரூபாய் வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1977-78-ல் 28—2—1978 முடிய கட்டப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 2,964. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையிலே உள்ள இடங்களை மாத்திரம் சுற்றிப் பார்த்துவரக் கூடாது. தமிழகத்திலே மீனவர்கள், சென்னையிலே இருந்து கன்னியாகுமரி வரையிலே கடலோரப் பகுதிகளிலே இருக்கிறார்கள். ஆங்காங்கே அவர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டிலே ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயிலே, கடந்த மாதம் 28 ஆம் தேதி முடிய மாத்திரம் 2,964 வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்றன.

இன்னும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை (அண்டர் கன்ஸ்ட்ரக்ஷன்) 843 ஆகும். ஆகவே, வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன; கட்டப்படவில்லை என்று சொல்வது நியாயமல்ல என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அளவுக்கு மீன் வளத் துறையைப் பொருத்தமட்டில் இந்த அரசாங்கம் என்னென்ன ஏற்பாடுகளை, நடவடிக்கைகளை, முன்னேற்றங்களைச் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசும்போது உள்நாட்டில் மீன்பிடித் தொழிலை வளர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு ஏற்கனவே செய்து கொண்டிருக்கிறது. மீன் கிடைக்காத பகுதிகளில் நியாயமான விலையில், குறைந்த விலையில் தரமுள்ள மீன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் ஏற்பாடு செய்கிற அளவில் இந்த ஆண்டு தமிழகம்





முழுவதும் ஏறத்தாழ 900 மீன் விற்பனை நிலையங்களைத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிப்பதற்கு மீன்வளத் துறை வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அந்தக் கடைகள் எல்லாம் கூடிய விரைவில் திறக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன்வளத் துறையைப் பற்றி என்னுடைய குறிப்பில் அவ்வளவு விளக்கங்களையும் கொடுத்திருக்கும் காரணத்தாலும், நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தாலும் மீன்வளத் துறையைப் பற்றி இந்த அளவோடு நிறுத்திக்கொண்டு உணவு மானியக் கோரிக்கை பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு கையாண்ட கொள்கைக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கையாள்கிற கொள்கைக்கும் வேறுபாடு உண்டு, படகு வழங்குவதில் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கண்ணை மூடிக் கொண்டு படகுகளை வழங்கவில்லை. 'ஆக்சுவல் பிஷர்மென் மீனவர் தலைவர்களைக் கொண்ட சொசைடிகளில், அந்தந்த குப்பங்களில் இருப்பவர்களுக்கு அவர்கள் மீனவர்கள் என்று சர்ட்டிபிகேட் கொடுத்தால் அதைக் கொண்டுதான் அந்த சர்டிபிகேட்டைக் கொண்டுதான் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, கலைஞர் காலத்திலும் சரி, ஏன் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் படகுகள் வழங்கப்பட்டன. அதுதான் அப்போது முறையாகக் கையாளப்பட்டது. நீங்கள் எந்த முறையைக் கையாளப் போகிறீர்கள்? எப்படி படகுகளைத் தரப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** நான் இவ்வளவு விளக்கமாகச் சொன்ன பிறகும் திரு. பொன்னுரங்கம் அவர்களுக்குச் சந்தேகம் தீரவில்லை என்று கருதுகிறேன். சமுதாயத்தின் அடிப்படையில் நிச்சயமாக படகுகளை வழங்க இந்த அரசு தயாராக இல்லை. இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மீன்பிடி தொழிலில் அவர்களே நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்களா என்று பார்த்து நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் இந்த அரசு படகுகளை வழங்கும். இந்தத் தொழிலில்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1978 மார்ச் 27

ஈடுபடாதவர்களுக்கு இந்த அரசு படகுகளை வழங்கத் தயாராக இல்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சான்றிதழ் பெற்றால் போதும்; அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்றையதினம் படகுகளை வழங்கியது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அன்றைய தினம் இருந்த அரசு எடுத்த முடிவைக் குறை கூற நான் தயாராக இல்லை. அன்றையதினம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குப் படகுகள் வழங்கப்பட வேண்டுமென்ற முடிவை எடுத்தது. அதன்படி சான்றிதழ் பெற்றவர்களுக்குப் படகுகளை வழங்கினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்ற சான்றிதழைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்காமல் அந்தத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் படகுகள் வழங்க முடிவு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1.30)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மீனளத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் இதுவரையிலும் வலைகளை காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்ற முறையிலே பின்னிக் கொண்டிருக்கிறார்கள், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அரசாங்கம் அந்த வலைகளைப் பின்னுவதற்காக மெஷின் வாங்கி அதன் மூலமாக செய்வதற்காக அந்த லைசென்சை ஒருவருக்கு கொடுத்ததன் காரணமாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற அந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக லோன் கொடுப்பதற்காகவும் இந்த அரசாங்கம் சிபாரிசு செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே, அதை இந்த அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய வகையில் அந்த வலைகளை அவர்களே பின்னுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமா?



1978 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இயந்திரங்களால் மீனவர்களுக்கு வேண்டிய மீன்பிடி வலைகளைத் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக சில தனிப்பட்ட நபர்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த அனுமதியைக் கொடுத்து இருப்பது தமிழக அரசு அல்ல, அந்த அனுமதியைக் கொடுத்தது மத்தியிலே இருக்கின்ற ஜனதா அரசு தான் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் அனுமதியைக் கொடுத்ததற்குப் பிறகு தமிழக அரசினுடைய வரம்புமுறையில் அதைக் கேட்டதால் அதற்கான அனுமதியை ஏற்கனவே வழங்கியிருக்கிறது.

அதற்குப் பின்னர் குமரி மாவட்ட மீனவர்களின் மத்தியிலே கொந்தளிப்பு ஏற்பட்டு அவர்கள் தொடர் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்ற காரியங்களிலே ஈடுபட்டு, அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தால், மீன் வலை தயாரிப்பதை குடிசைத் தொழிலாக செய்து கொண்டிருக்கின்ற மீனவச் சமுதாயத்தினர் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தை கவனத்திற்குக் கொண்டுவந்ததற்குப் பிறகு அதை இந்த அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் வாதத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், நாம் வேண்டுமென்றால் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரம்பிக்கிற தொழிற்சாலை நிறுத்திவிட்டாலும். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாக்கெடுப்பு முடியும் வரை பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** ஆனால் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக பல்வேறு நபர்களுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கர்நாடக மாநிலத்திலே இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலே வழங்கப்பட்டிருக்கிறது.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 மார்ச் 27

இங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு இருக்கிற அச்சம் எல்லாம் இயந்திரங்கள் மூலமாகச் செய்யப்படுகின்ற மீன்பிடி வலைகள் அதிகமாகத் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தால் கையினால் தயாரிக்கப்படுகிற வலைகளுக்கு அதிக கிராக்கி இருக்காது, அதன் காரணமாக தம்முடைய தொழில் நசித்துப் போகும் என்ற அச்சம் இருக்கிறது, அதிலே நியாயம் இருக்கிறது, அதிலே தவறில்லை. ஆனால் அந்த முறையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்காமல் நிறுத்தி விடுவோமானால் மற்ற மாநிலங்களிலிருந்து அப்படித் தயாரிக்கப்படுகின்ற வலைகள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விற்பனைக்கு வராது என்பதுதான் என்ன நிச்சயம்? அப்படி விற்பனைக்கு வந்தால் எப்படி அரசு அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற குமரி மாவட்டத்திலே உள்ள மக்களும் இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஜனதா அரசு அனுமதி வழங்கியது என்று கூறினார்கள். அந்த லைசென்ஸ் பெற்றவர்கள் நேரடியாக டெல்லிக்குச் சென்று பெற்றார்களா அல்லது இந்த அரசாங்கம் சிபாரிசு செய்ததின் பேரில் டெல்லி அரசாங்கம் அனுமதி வழங்கியதா? பல்வேறு மாநிலங்களிலே இதுபோன்று அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குடிசைத் தொழில்களைப் பாதிப்பதாக அது அமைவதால்—இப்போது மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற தொழில் கொள்கையின் அடிப்படையிலே குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருப்பதால்—ஏற்கனவே இந்தத் தொழில் குடிசைத் தொழிலாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறபோது அது பாதிக்கப்படும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து மத்திய அரசாங்கம் இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த அரசு தெரிவித்தால் அதுபற்றி மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்யுமே. ஆகவே அதற்கு ஆவன செய்வார்களா?



1978 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும். உணவுத் துறை மானியத்தின்மீது ஏறத்தாழ 10 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர்கள் உணவுத்துறை பற்றி எழுப்பிய பல்வேறு பிரச்னைகளுக்கு மட்டும் பதில் சொல்லி முடித்துக் கொள்வது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்குக் காரணம், வருகின்ற ஓராண்டுக்கு உணவுத் துறை எந்தெந்த முறைகளிலே செயல்பட இருக்கிறது என்பதைப் பற்றித் தெளிவான விஷயங்களெல்லாம் ஏற்கனவே உறுப்பினர்களுக்குப் புத்தகமாக அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களில் அநேகமாகப் பல உறுப்பினர்கள் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட 16,000 நியாய விலைக்கடைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போல காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கின்ற மதிப்பிற்குரிய திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள், விவசாயிகளுக்கு கொள்முதல் விலையை இன்னும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும், அதற்கு இந்த அரசு ஈடுபாடு கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே அவர்களுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்பதில் இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. அதைத்தான் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு இன்னும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகிறது.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் ஒன்றை மிக அழகாகச் சொன்னார்கள். நீண்ட நாட்களாக விவசாயிகளிடத்தில் இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது. இதற்கு முன்பு இருந்த மத்திய அரசாங்கம் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர்கள் சொன்னது, அவர்கள் ஆட்சிக்காலத்தில், தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 மார்ச் 27

விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அப்படிப்பட்ட நியாயமான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்பதை இந்த அவையிலே அவர்கள் சுட்டிக்காட்டியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்

இங்கே ஜனதா கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இருக்கிறார்கள். ஒரு கருத்தை நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்குக் கோதுமைக்கு குவிண்டாலுக்கு 110 ரூபாய் கொடுக்கிறார்கள், என் நெல்லுக்கு மட்டும் 77 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று நம்முடைய திரு. மாரிமுத்து அவர்கள் பேசினார்கள். அவர்கள் ஆட்சியிலேயிருந்த காலத்தில் செய்ய முடியாத காரியத்தை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இப்பொழுது செய்து தருவார்கள். தர வேண்டுமென்றும், அதை இந்த அரசாங்கத்தின் சார்பாக மத்திய அரசாங்கத்தில் அவர்கள் வலியுறுத்த வேண்டுமென்றும் நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த அடிப்படையிலே மத்திய அரசாங்கம் முன்வருமேயானால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலே விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுப்பதில் எந்தவிதமான மாறுபாடும் இந்த அரசாங்கத்திற்கு இருக்காது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்த அவையிலே சொல்லும்பொழுது, பல்வேறு குற்றச்சாட்டுக்களை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நேரத்தில் எடுத்துச் சொன்னதாகச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை இப்பொழுதும் வலியுறுத்துகின்ற வகையிலேதான் அவர்கள் இந்த அவையிலே பேசினார்கள் என்று நான் அரசின் சார்பிலே எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.



1978 மார்ச் 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அண்மையிலே வெளிமாநிலங்களிலிருந்து இந்த அரசாங்கம் அரிசி, நெல்லை வாங்குவது என்று முடிவெடுத்து, அதன்பேரில் பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களிலேயிருந்து இந்த அரசுக்குத் தேவையான நெல்லை நாம் வாங்கிய நேரத்தில் பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்ற குற்றச் சாட்டை . . . . .

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தவறுகள் நடைபெற்றிருக்கின்ற என்று நான் குற்றச்சாட்டு சொன்னதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னேனே தவிர, ஏதோ குற்றச் சாட்டை வைத்துக்கொண்டு தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்லவில்லை. அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்பது என்னுடைய வாதம்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு அதிக விலை கொடுத்து வாங்கியதாக ஒரு குற்றச்சாட்டை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசும்பொழுது இங்கே இந்த அவையிலே சொன்னார்கள். இன்னொரு குற்றச்சாட்டையும் சொன்னார்கள். டெண்டர் முறை அப்பொழுது கடைப்பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப் போலவே, வாங்கப்பட்டிருக்கின்ற நெல்லில் தரம் மிகவும் மோசமான நெல்லாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்திலே பேசும்பொழுது கூறினார்கள். இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நேரத்தில் விலை அதிகமாகக் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். விலை அதிகமாகக் கொடுத்து வாங்கப்படவில்லை. மாநில அரசாங்கம் என்ன விலை நிர்ணயித்ததோ அந்த விலைக்குத்தான் அரிசி வாங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதிலே அவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், அதைப்பற்றி என்னிடத்தில் கேட்டால் அதற்கான விளக்கத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்புள்ள உணவு அமைச்சர் என்ற வகையில், எதிர்க்கட்சி வரிசையிலிருந்து குற்றச்சாட்டைக் கொண்டுவந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கு நான கொடுக்கின்ற விளக்கமெல்லாம், எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசு அநியாயமாக, அதிகமாக விலை கொடுத்து வாங்கவில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால், நாம் எவ்வளவு அரிசி வாங்கியிருக்கிறோம் என்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஏறத்தாழ 1 இலட்சம் டன் அரிசி நாம் வாங்கியிருக்கிறோம்—நெல்லாகவும் வாங்கியிருக்கிறோம், அரிசியாகவும் வாங்கியிருக்கிறோம். எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலே வாங்கி இருக்கிறோம் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். காரணம், அவர்களும் உணவு அமைச்சராக இருந்தவர்.

(பிற்பகல் 1.40)

நாம் வெளி மாநிலத்திலேயிருந்து வாங்கிய நேரம், குறுவை அறுவடை நேரம். குறுவை நெல்லை, இந்த அரசாங்கம் வாங்க வேண்டுமென்று நான் சிபாரிசு செய்ய மாட்டேன், அந்த அளவு இந்த அரசு நஷ்டப்பட வேண்டுமென்ற கருத்தை நான் சொல்ல மாட்டேன் என்று இந்த அவையிலே தெரிவித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே வெளிமாநிலத்திலேயிருந்து வாங்கி கையிருப்பு வைத்திருக்கிற காரணத்தாலேதான் இன்றையதினம் அரிசியினுடைய விலை வெளிச்சந்தையிலே எந்த அளவு குறைந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் உணவு நிலைமை எப்படி இருக்குமோ என்று நாங்களெல்லாம் பயந்து கொண்டிருந்த நேரம். தமிழகத்திலே வீசிய புயலாலே, வெள்ளத்தாலே, தஞ்சை மாவட்டமே பாதித்த நிலை, இந்த அவையிலே உள்ள எல்லோருக்கும் தெரியும். அதோடு, மத்திய அரசு ஒரு முடிவை எடுத்த காரணத்தாலே, இந்திய துணைக் கண்டத்தை ஒரே உணவு மண்டலமாக ஆக்கிய காரணத்தினால் இந்த மாநிலத்





திலிருந்து நெல்லும் அரிசியும் வெளி மாநிலங்களுக்குப் போய் விடுமோ என்ற அச்சம் இருந்தும்கூட. அப்பேர்ப்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க அரசு முன்னெச்சரிக்கையாக கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் அந்த நேரத்தில் இந்த அரிசி வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டது என்று நான் சொல்லும்போது அதை மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அதைப் போல், சென்ற முறை ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். சிறு தானியத்தைப் பொறுத்தமட்டில் இந்த அரசு பல தவறுகளைச் செய்திருக்கிறது என்று சொன்னார்கள் . . . . .

**திரு. ப. உ. சண்முகம்** : நான் அன்று பேசிய பேச்சை, குறிப்பேட்டை வேண்டுமானால், பார்க்கவேண்டும். இந்த அரசு என்ற வார்த்தையை நான் போடவில்லை. எச்சரிக்கையாக வார்த்தைகளை அளந்து நான் போட்டேன். மீண்டும் சொல்கிறேன், தவறு எப்படி நடந்தது என்றுதான் நான் கேட்டேனே தவிர, இந்த அரசு என்று நான் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்** : இந்த அரசை நான் குறிப்பிடவில்லை என்று இப்பொழுது அவர்கள் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால், அன்றையதினம் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்பொழுது மிகவும் —தந்திரமாக என்று சொல்லமாட்டேன்— சாதுரியமாக தவறு நடந்திருக்கிறது என்று சொன்னீர்கள், பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. பத்திரிகையாளர்களுக்கும் அதைப் படிக்கின்ற மக்களுக்கும் ஏற்படுகின்ற எண்ணம் என்னவென்றால், ஏதோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, முதல்வர் புரட்சித் தலைவர் அரசு, அப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்களோ என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சந்தேகத்தை நீக்க வேண்டுமென்று, அந்தச் சந்தேகத்தை அகற்ற வேண்டுமென்று, அந்தச் சந்தேகத்தைத் தீர்க்க வேர்ண்டுமென்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன், அதனைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆக, நடைபெற்ற தவறுகள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே

நடைபெறவில்லையென்று சொன்னதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அரசின் மீது குற்றம் சொல்லவேண்டுமென்ற எண்ணம் இல்லாவிட்டாலும், ஒருவேளை அதிகாரிகளையாவது களங்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உறுப்பினருக்கு இருந்ததோ என்னவோ தெரியவில்லை. ஆனால், தவறு நடந்திருந்தால், இந்த அரசு நிச்சயமாக தவறு என்று சொல்லும், அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக—அரசு—ஆட்சியில் தவறுகள் நடைபெறவில்லையென்றால், அதையும் இந்த அவையிலே எங்கள் அரசின் சார்பிலே துணிந்து சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். காரணம், அப்பேர்ப்பட்ட அதிகாரிகள்தான் இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிலேயும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தவறுகள் ஏற்படுமோ என்ற எண்ணம் வெளியிலே ஏற்படுமோ என்ற சந்தேகம் எழலாம். ஐயப்பாடும் அச்சமும் நாட்டிலே ஏற்படுவது இயற்கை. ஆகவே, தெளிவுபடுத்திச் சொல்கிறேன், நடைபெற்றவைகள் தவறு என்று கருதினாலும் தெளிவாகச் சொல்கிறேன், நடைபெற்ற தவறுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயோ, குடியரசுத் தலைவர் ஆட்சியிலேயோ நடைபெற்றிருக்கலாமே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிச்சயமாக, அப்பேர்ப்பட்ட தவறுகள் நடக்காது ; நடக்கவும் விடமாட்டோம் என்று நான் இந்த நேரத்திலே உறுதியாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்கிறேன், அவர்கள் சொன்ன தவறுகள் எல்லாம் தவறுகள் அல்ல. அதிகாரிகள் அரசினுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று, அதிகாரிகள் நியாயமான முறையில். நேர்மையான முறையில், அன்றைய தினம் அதைச் செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரையைப் பற்றி ஒரு குற்றச்சாட்டை மான்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்....





**திரு. ப. உ. சண்முகம் :** சிறு தானியங்களைவிட்டு சர்க்கரைக்குப் போவதற்கு முன்னாலே ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தவறு செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை வழக்கம்போல் சாட்டிவிட்டு போவது முறையல்ல. என்ன தவறு செய்தாலும் அதற்குரிய பரிகாரத்தைத் தேடிக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அன்றையதினம் வாங்கி வைக்கப்பட்ட சிறு தானியம் ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் அப்படியே வைத்து மக்கிப் போவதற்குப் பின்னாலே, சலித்துவிட்டு கடைசியில் டெண்டர் கூடக் கேட்காமல் மைசூரிலே உள்ள ஒரு வியாபாரியைக் கூப்பிட்டு இந்த விலைக்கு எடுத்துப்போ என்று தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சொன்னேன். அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தது என்று கூடச் சொல்லவில்லை. அப்போது இருந்த அரசாங்கம் உத்தரவு போட்டது என்று நான் சொன்னேன். அந்த உத்தரவைப் போட்டவர்களே அதிகாரிகள். அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை இருந்தால் காப்பாற்றட்டும். நான் அதிகாரிகளைக் குறை சொல்லாமல் வேறு யாரைக் குறை சொல்லட்டும் ? இந்திரா காந்தியையா ? இங்கே இருக்கிறவர்கள் போட்ட உத்தரவுதான். அப்போது கண்டித்துப் பேசினேன். உண்மைதான், சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** அதிகாரிகளை காப்பாற்றவேண்டும் என்ற அக்கறை எனக்கு இல்லை. இங்கே அரசின் உத்தரவை சிரமேற்கொண்டு பணி புரிகிற அதிகாரிகளை குறை கூறுவது எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதிகாரிகளைக் காப்பாற்றவேண்டிய அக்கறையும் எனக்கில்லை. நிச்சயமாக அந்த அவசியமும் எனக்கு ஏற்படாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 மார்ச் 27

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. ச. அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். லட்சக்கணக்கான டன் சிறுதானியங்கள் பயனற்றுப் போய்விட்டன, சேதமாகிப் போய்விட்டது, நாசமாகிப் போய்விட்டது, என்கின்ற பயங்கரமான குற்றச்சாட்டை அன்றையதினம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அதை எந்தச் சூழ்நிலையிலே வாங்கினார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

1975 ஆம் ஆண்டு விளைச்சல் தமிழகத்திலே மிகவும் குறைவாக இருந்து, அரிசியினுடைய விலை எதிர்பாராத வகையில் விஷம் போல ஏறிச்சென்ற நேரத்தில் சிறு தானியங்களை நாட்டு மக்களுக்கு வினியோகம் செய்ய நல்லமுறையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபட்டுக் கொண்டது என்பதில் சந்தேகம் இல்லை. குற்றச் சாட்டாகவும் சொல்லவில்லை. அன்றைய தினம் ஏறத்தாழ 2 லட்சம் டன் சிறு தானியங்கள் வாங்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டது. அதிகாரிகள் எந்த அளவுக்கு திறமையாக அதைச் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வந்திருக்கக்கூடிய எவ்வளவு பெரிய இழப்பை அவர்கள் தவிர்த்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

1975 ஆம் ஆண்டு அரசு—திராவிட முன்னேற்றக் கழக அரசு—ஏறத்தாழ 2 லட்சம் டன் சிறுதானியம் வாங்கவேண்டும் என்ற முடிவை எடுத்தாலும் அதிகாரிகள் வாங்கியது ஏறத்தாழ 67,803 டன் சிறு தானியம் மாத்திரம்தான், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கி இருக்கிறார்கள். ரூ. 2.10-க்கு ஆரம்பத்திலே விற்க ஆரம்பித்து கடைசியிலே 75 ஆம் ஆண்டு இறுதியில் ஒரு கிலோ சிறு தானியம்—சோளத்தை—ஒரு ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே போல கேழ்வரகு போன்ற சிறு தானியங்களை வாங்கிய விலையை விட மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டியிருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதனால் இழப்பு ஏற்பட்டது என்று கூட ஒரு உறுப்பினர் இங்கே சொன்னார்கள். இதிலே எந்தவிதமான இழப்பும் அன்றையதினம் ஏற்படவில்லை.



1978 மார்ச் 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அதைப்போல தனிப்பட்ட வியாபாரிக்கு, கர்நாடக மாநிலத்திலே உள்ள வியாபாரிகளுக்கு விற்றதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒரு குற்றச்சாட்டை அன்றையதினம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசுகையில் எடுத்து சொன்னார்கள். கர்நாடக மாநிலத்திலே மட்டுமல்ல.. மொத்தம் ஏறத்தாழ 281 வியாபாரிகளுக்கு அது விற்கப்பட்டது. கர்நாடக மாநிலத்தில் அதை இரண்டு வியாபாரிகளுக்கு மாத்திரம்தான் கொடுக்கப்பட்டது. மீதி தமிழகத்திலே உள்ள 279 வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டது.

அதுமட்டுமல்ல. அரசாங்கம் என்ன விலையை நிர்ணயம் செய்ததோ அந்த விலைக்கே விற்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து, அந்த நிபந்தனையை அவர்கள் ஏற்றுக்கொண்ட பின்னாலேதான் அன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற வியாபாரிளுக்குத்தான் விற்றார்களே தவிர கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்களுக்கு விற்றதாக குற்றச் சாட்டு சொல்வது சரியல்ல.

(பிற்பகல் 1-50)

**திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அமைச்சர் தந்த விளக்கத்திற்குப் பிறகு நான் அதைத் திருத்திக்கொள்கிறேன். ஆனால் அன்று நான் பேசிய பேச்சில் தொடர்பு—தஞ்சாவூர் அரிசி வியாபாரம் பற்றிக் குற்றம் சாட்டும்போது, டெண்டர் 3 முறை, 4 முறை கோரப்பட்டது. ஆனால் கடைசியாக டெண்டர்களை எடுத்துக்கொள்ளாமல், அதிகாரிகள் தனியாகப் பேசி, அதிக விலைக்கு விற்றார்கள். அதுவே ஊழல் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது சிறு தானியங்களை விற்க டெண்டரே கோராமல் அரசாங்கமே ஒரு விலையை நிர்ணயித்து விற்றது என்பது என் குற்றச்சாட்டு.

அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குத்தான் அதிகாரிகள் விற்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். நன்றி. மைசூரிலிருந்து வந்த வியாபாரிக்கு அல்ல, தஞ்சாவூரில் இருந்து வந்த வியாபாரிக்குத் தான் விற்றோம் என்று அமைச்சர் சொன்னார்கள். அதுவும் தவறு தான். அதை தமிழ் நாட்டிலேயே விற்றார்கள் என்றாலும் அதுவும் தவறு தான். தவறு தான் என்று அமைச்சர் ஒப்புக் கொண்டார்கள், நானும் ஒப்புக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** வாங்கிய விலைக்கு மிகவும் குறைந்த விலைக்கு விற்காமல் இருக்க வேண்டுமேயானால், அந்த சிறு தானியங்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் ஏற்படும் இழப்பு தடுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு விலையை நிர்ணயித்து அந்த விலைக்குக் கூடுதலாக அவர்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்று விற்று இருக்கிற நேரத்தில், இதில் இத்தகைய ஒரு பெரிய குற்றச்சாட்டு சொல்லவேண்டியது அந்த அளவிற்கு நியாயம் தான் என்று முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. ப. உ. சண்முகம்:** எந்த அளவிற்கு முன்னாள் உணவு அமைச்சர் சொன்னது நியாயம் என்பதை இன்னாள் உணவு அமைச்சர்தான் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டெண்டர் கோரப்பட்டு விற்றது ஊழல் என்று சொல்லிவிட்டு, டெண்டர் கோராமல் விற்றது எவ்வளவு நியாயம் என்பதை இன்னாள் உணவு அமைச்சர்தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதேபோல் சர்க்கரையைப் பொறுத்தவரையில் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது பொதுமக்கள் மத்தியில் எப்படித் தெரிகிறது என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசினார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று ஏழு மாதம் ஆகவில்லை, அதற்குள்ளே சர்க்கரையில் ஒரு பெரிய ஊழல் ஏற்பட்டு இருக்கிறது என்று. அன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது நான் பதில் சொல்ல வாய்ப்பு இல்லை. நான் பேசிய பிறகு நீங்கள் பேசினீர்கள். நீங்கள் பேசிய பிறகு, அதற்குப் பதில் சொல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து இருந்தால் அதைத் தெளிவுபடுத்தியிருப்பேன்.

அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் தான் பேசினார்கள். அதற்கு இரண்டு நாள் விவாதம் நடந்தது. அப்போதே நான் அதிகாரிகளிடத்தில் இருந்து தகவல் அறிந்து தங்களுக்கு பதில் அளித்து இருக்கமுடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்த விவரங்களை நான் கொடுத்து



இருந்தேன். இருப்பினும் அவர்களுக்கு நேரம் இல்லாததால் அவற்றைக் கூற முடியவில்லை. அதனால் தான் நான் அவற்றிற்கு இப்போது பதில் சொல்ல விரும்புகிறேன்.

சர்க்கரையில் நடைபெற்ற ஊழல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெறவில்லை. அப்படி தவறு நடைபெற்றது என்று சொன்னால், அதை தவறு என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதினால், அந்தத் தவறு நடந்தது குடியரசுத் தலைவர் ஆட்சியில். அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெறவில்லை. குடியரசுத் தலைவர் ஆட்சியில் கூட அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று சொல்வதற்கு இல்லை. அன்றையதினம் மத்திய அரசாங்கம் உத்தரவு போட்டு இருந்தது. இவ்வளவு சர்க்கரையை தமிழக அரசாங்கம் இன்ன விலையில் வாங்க வேண்டும், இன்ன விலைக்கு விற்க வேண்டும் என்று போட்டு இருந்தார்கள். ஆகவே. அந்தச் சர்க்கரையை தமிழக அரசாங்கம் வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அதிகாரிகள் அந்த உத்தரவை செயல்படுத்த வேண்டிய நிலையில் இருந்தார்கள். அந்த சர்க்கரையை வாங்குகின்ற நேரத்தில் சர்க்கரை வெளிச்சந்தையில் விலை குறைந்து விட்ட காரணத்தால் அன்றையதினம் அந்த இழப்பு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

அதையெல்லாம் நான் விளக்கவேண்டிய அவசியம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசும்போது அன்றையதினம் இந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்று சொல்லி இருப்பார்கள் என்றால் இந்த அளவிற்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது.

நீங்கள் பேசும்போது பொதுவாகச் சொன்னீர்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடந்து இருக்கிறது என்று சொன்ன உடனே நாட்டிலே இருக்கும் மக்களும், பத்திரிகையாளர்களும் கூட ஒரு வேளை இந்தத் தவறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்று இருக்குமோ, அந்தத் தவறுகள் எல்லாம் எதிர்க் கட்சிகள் முன்னாள் அமைச்சர்கள் சுட்டிக்காட்டுகிறார்களே என்று ஐயப்பாடு கூட நாட்டிலே உள்ள மக்களுக்கு ஏற்பட்டு இருக்கும் என்ற காரணத்தால், இன்றைய தினம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அந்தத்

தவறுகள் எங்கள் ஆட்சியில் நடைபெறவில்லை. அந்தத் தவறை அதிகாரிகளும் செய்யவில்லை. தேவையான, நிர்ப்பந்தமான சூழ்நிலையில் அவைகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பட்ட தவறுகள் புரட்சித்தலைவர் தலைமையில் அமைந்துள்ள அரசில் நிச்சயமாக நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், எல்லா மக்களுக்கும் நிறைவளிக்கும் வகையில், அந்த அளவிற்கு உணவு நிலைமைகள் நம்பிக்கை தருவதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 16,000 கடைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆரம்பிக்க வேண்டும், ஆரம்பிக்க வேண்டும் என்று இங்கே சொன்னார்கள். நெல்லை மாவட்டத்திலே ஏறத்தாழ 443 கடைகள் இன்றையதினம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைப்போல முகவை, மதுரை மாவட்டங்களிலே இருக்கிற கிராமங்களில் நியாய விலைக் கடைகளை ஆரம்பிப்பதற்கு கூட்டுறவுத் துறை தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உணவு வழங்கு துறை மூலம் சேலம், தர்மபுரி மாவட்டங்களில் கூட அப்பேர்ப்பட்ட நியாயவிலைக் கடைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகள் என்றால் அங்கு பல்வேறு அத்தியா வசியப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்ற நிலையிலே இந்த அரசு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அரசு எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் கொள்முதல் செய்து, விற்பனை செய்ய வேண்டும் என்ற அறிவுரையைச் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட நடவடிக்கையை ஒரு அரசு ஏற்று நடத்த முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் அவைகளை வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் அத்தியாவசியப் பண்டங்கள் விலையை தேவைக்கு அதிகமான அளவில் அல்லது மக்களால் வாங்க முடியாத அளவுக்கு உயர்த்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசின் கடமை. அதனால்தான் மிகவும் அத்தியா வசியமான பண்டங்களான அரிசி, கோதுமை, சர்க்கரை





போன்றவைகளை விற்பனை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுத் திருக்கிறது. அதை நிறைவேற்றி வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் அரிய கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் ஒவ்வொன்றிற்கும் [illegible] நான் பதில் சொல்ல முடியாவிட்டாலும்—அதற்கு நேரமில்லை—அவைகளை எல்லாம் பரிசீலித்து, நல்ல ஆலோசனைகளாக ஏற்றுக்கொண்டு, செயல்படுத்த வேண்டிய தக்க நேரத்தில் அவை செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவைகளை வலியுறுத்தாமல், அவற்றை எல்லாம் திரும்பப்பெற்று, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் பேசும்போது கடினமான ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி விட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். * * * என்பது அந்த வார்த்தை * * * போல அதிகாரிகளிடம் போய் காத்து நிற்கவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த வார்த்தையை தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக நீண்டநேரம் அதிகாரிகளிடம் காத்து நிற்கவேண்டியிருக் கிறது என்ற முறையில் சேர்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்**: மாண்புமிகு உறுப் பினர் திரு. ப. உ. ச. அவர்கள் கூறும்போது சிறுதானியங்களுக்கு டெண்டரே இல்லாமல் கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். டெண்டர் கேட்டு, 19 முறை பத்திரிகைகளிலே கூட விளம்பரம் கொடுக்கப்பட்டது அவர்களுக்கே தெரியும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப் பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசும்போது * * * என்று குறிப்பிட்ட வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1978 மார்ச் 27

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அயோத்தியா குப்பம் மீனவர் குடியிருப்பில் குடியிருக்கும் மக்களுக்கு கிட்டத்தட்ட ஒரு பகுதி குடியிருப்புக்கு மின்சாரவசதி செய்து தரப்பட்டுள்ளது. மிகப் பெரும்பகுதிக்கு, பல கோரிக்கைகள் வைக்கப்பட்டும் இன்னும் மின்சாரவசதி செய்து தரப்படவில்லை. எல்லாப் பகுதிக்கும் மின்சார வசதி செய்துதர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (திரு. இரெ. இராசமாணிக்கம் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். இந்த விவரங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஒரு கேள்வி எழுதிக் கொடுங்கள்; பதில் சொல்லி விடுவார்கள்.

**திரு. மு. அரங்கநாதன்:** இன்னும் ஒன்றைமட்டும் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் (மணியடிக்கப்பட்டது) சொல்லும்போது, சில கோரிக்கைகளை வைத்து, கலெக்டர் ஆபீஸ் முன்னால் மீனவக் குடும்பத்தைச் சார்ந்த தாய்மார்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு உடனடியாகப் பரிகாரம் காண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** துணைத் தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்க அனுமதியுங்கள். தஞ்சை மாவட்டத்தில் நான் ஒரு விவசாயி என்ற முறையிலே கேட்கிறேன். சென்ற கூட்டத் தொடரில் கூட அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகிற குறுவை நெல் மட்டமான நெல், மோசமான நெல் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் தான் இன்றும் சொல்கிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி செய்ய வேண்டுமா வேண்டாமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி என்பதால் இதைக் கேட்கிறேன்.



1978 மார்ச் 27]

(பிற்பகல் 2.00)

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடவேண்டிய பருவத்தில் குறுவையினை நடவேண்டியதுதான். பயிர்செய்யவேண்டிய காலத்தில் பயிர் செய்துதான் ஆகவேண்டும். குறுவையிலே அறுவடை செய்யப்பட்ட நெல்லை அரசாங்கம் வாங்கி சேமித்து நீண்டகாலத்திற்கு வைத்து அதை பின்பு வழங்குவது என்பது முடியாத காரியம் என்றுதான் சொன்னேனே தவிர மிகவும் மோசமான அரிசி என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இனிமேல் வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 21-க்கு திருவாளர்கள் துரை கலியமூர்த்தி, சி. கோவிந்தராசன், மு. ஆறுமுகம், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

“மானியக் கோரிக்கை எண். 21 — மீனவளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,25,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

அடுத்த கோரிக்கை எண் 35-க்கு திருவாளர்கள் துரை கலியமூர்த்தி, கு. ரமணி, மு. ஆறுமுகம், பொ. உத்திராபதி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

[1978 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,19,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

அடுத்த கோரிக்கை எண். 57-க்கு திருவாளர்கள் வி. ரகுராமன், ரே. வி. சவுந்திரராஜன் சி. கோவிந்தராசன், மு. ஆறுமுகம் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.—

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,57,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

324. மகளிர்க்கான அரசு பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில் ரொட்டி தயாரித்தல், தின்பண்டம் செய்தலில் பட்டைய வகுப்பிற்கென அனுமதியளிக்கப் பெற்றுள்ள முதுநிலை ஆசிரியர், செய்முறை விளக்குநர், ரொட்டி தயாரிப்பவர் ஆகிய பதவிகளை தேர்வாணை கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பது குறித்த



[1978 மார்ச் 27

19-1-1978 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு- ) 83 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

325. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1974-75 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைக் குறிப்பும் ஆதாய—விரயக் கணக்கும் [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 58/1962)-31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*169. கோரிக்கை எண். 8 தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1978—79 (ஆங்கிலம், தமிழ்).

*170. மின்வளம் பற்றிய 1978-79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

*171. கூட்டுறவுத் துறையின் 1978-79 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*172. கோரிக்கை எண் 6.—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*173. கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

174. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (296 முதல் 335 வரை).

## இணைப்பு I

[. . . 39-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 681-க்கான விடையைக் காண்க.]

(அ) & (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் -6-1971 முதல் ஏற்படுத்தப்பட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் அமைப்பு முறைப்படி, வேளாண்மைக் கல்லூரி மட்டுமல்லாது கால்நடை மருத்துவம், மனையியல், மீன்வளம், வனஇயல் கல்லூரிகளும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அடங்கலாம்.

* 23-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் கருத்து அரசின் ஆய்வில் இருந்து வந்தது. முதற்படியாக, கால்நடை மருத்துவக் கல்லூரியின் பாடத் திட்டங்கள் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன. கால்நடை மருத்துவக் கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் ஒருங்கிணைந்த அங்கமாக ஆக்கப்படவேண்டுமென்று அக்கழகம் கேட்டுக்கொண்டு வந்தது. கால்நடை மருத்துவக் கல்லூரியை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முழு அங்கமாக ஆக்கப்படாத வரையில் கால்நடை இயல் வளர்ச்சி அடைய வாய்ப்பில்லை எனவும், தனித்து இயங்குவது நன்மையை விட தீமையையே பயக்கும் எனவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு பரிந்துரைத்தது. மற்ற மாநிலங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அந்தந்த வேளாண்மை பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது போல இம்மாநிலமும் அம்முறையினைப் பின்பற்ற வேண்டுமென அக்குழுவும் மத்திய அரசும் வலியுறுத்தி வந்துள்ளன.

ஒருங்கிணைந்தால் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் உதவித் தொகையை முழுமையாகப் பெற இயலும் என்று தெரிவித்துள்ளது. ஆகவே அரசு, கால்நடை மருத்துவக் கல்லூரியும் மற்றும் அதனைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையங்களும் 1-12-1976 முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றி அதன் ஒருங்கிணைந்த அங்கமாக செயல்பட உத்திரவிட்டுள்ளது. இத்தகைய மாற்றத்தினால் கால்நடைக் கல்விக்கு சுதந்திரமும், ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அதிக வாய்ப்பும் இருக்கும். பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசுப் பிரதிநிதிகள் கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான நிதி வசதிகள் கிடைக்கச் செய்வதுடன் அப்பணிகள் விரிவடையவும், வளர்ச்சியடையவும் கவனித்துக் கொள்வர்.

மேற்கூறிய காரணங்களினால் முன்பு இருந்ததைப் போல கால்நடை மருத்துவக் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் மீண்டும் இணைக்கும் உத்தேசம் இல்லை.





## இணைப்பு II

[43-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 296க்கான விடையைக் காண்க.]

### செவிலியர் பயிற்சி நிறுவனங்கள்

| நிறுவனங்களின் பெயர் | இடங்கள் |
|---|---|
| 1. அரசினர் பொது மருத்துவமனை | 60 |
| 2. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை | 60 |
| 3. கஸ்தூரிபாகாந்தி மருத்துவ (மகளிர் குழந்தைகள்) மனை | 10 |
| 4. அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை | 60 (ஜூலை 1977 -லிருந்து) |
| 5. தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தஞ்சை | 20 |
| 6. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் | 15 |
| மொத்த இடங்கள் .. | 225 |

### தனியார் நிறுவனங்கள்

| | |
|---|---|
| 1. சைல்டு ஜிசஸ் மருத்துவமனை, திருச்சி | 20 |
| 2. செயின்ட் ஜோசப் மருத்துவமனை, திண்டுக்கல் | 20 |
| 3. சேக்ரட் ஹார்ட் மருத்துவமனை, தூத்துக்குடி | 10 |
| 4. கிறிஸ்டின் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர் | 120 |
| 5. சசுடர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை | 20 |
| 6. சி. எஸ். ஐ. மருத்துவமனை, ஈரோடு | 20 |
| 7. சி. எஸ். ஐ. மருத்துவமனை, நெய்யூர் | 20 |
| 8. காத்தரின் பூத் மருத்துவமனை, நாகர்கோவில் | 20 |
| 9. கிறிஸ்டின் மிஷன் மருத்துவமனை, மதுரை | 20 |
| 10. சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை, திருப்பத்தூர் | 15 |
| 11. கல்யாணி மருத்துவமனை, சென்னை .. .. | 6 (ஒரு வருடமாக மூடப்பட்டுள்ளது) |
| **மொத்த இடங்கள்** .. | 291 |

[1978 மார்ச் 27

பொது செவிலியர்களுக்கான பயிற்சி மூன்று ஆண்டுகளில் முடிந்த பின்னர் கீழ்க்கண்ட 6 மாத மகப்பேறு உதவியாளர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

| அரசினர் நிறுவனங்கள் | இடங்கள் |
|---|---|
| 1. அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை | 50 |
| 2. அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை | 80 |
| 3. அரசினர் ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை | 14 |
| 4. அரசினர் ராஜாமிராஸ்தார் மருத்துவமனை தஞ்சாவூர் | 20 |
| 5. அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை | 40 |
| மொத்த இடங்கள் .. | 204 |

செவிலிய மாணவர்கள் அரசினர் பயிற்சி நிறுவனத்தில் தேர்வு பெற்ற பின்னர் மகப்பேறு பயிற்சிக்கான பின்வரும் தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறார்.

| தனியார் நிறுவனங்கள் | இடங்கள் |
|---|---|
| 6. சைல்டு ஜீசஸ் மருத்துவமனை, திருச்சி | 20 |
| 7. செயின்ட் ஜோசப் மருத்துவமனை, திண்டுக்கல் | 20 |
| 8. சேக்ரட் ஹார்ட் மருத்துவமனை, தூத்துக்குடி | 10 |
| 9. கிறிஸ்டின் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர் | 120 |
| 10. ஸ்கூடர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை | 20 |
| 11. சி. எஸ். ஐ. மருத்துவமனை, நெய்யூர் | 20 |
| 12. சி.எஸ்.ஐ. மருத்துவமனை, மதுரை | 20 |
| 13. காத்தரின் பூத் மருத்துவமனை, மதுரை | 20 |
| 14. கிறிஸ்டின் ரெய்லி மருத்துவமனை, சென்னை | 30 |
| 15. கிறிஸ்டின் மிஷன் மருத்துவமனை, மதுரை | 20 |
| 16. கல்யாணி மருத்துவமனை, சென்னை | 10 |
| மொத்தம் .. | 310 |



[1978 மார்ச் 27

## இணைப்புகள் III

[78ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மீன்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79.

முன்னுரை :—

ஆழ்கடலின் அளப்பரிய செல்வங்கள் உலகெங்குமுள்ள மனித இன நல்வாழ்விற்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. முப்புறமும் சூழ்ந்துள்ள கடல் செல்வத்தோடு கூட எண்ணற்ற வற்றாத ஆறுகள் உள்ளிட்ட நன்னீர் செல்வமும் அடங்கிய பேறினைப் பெற்றது இந்தியநாடு. இந்தியாவின் மொத்த கடற்கரை நீளத்தில் 17·5 சதவீதம் அளவுள்ள 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை உடையது தமிழ்நாடு. மேலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு நீர்ப்பரப்பில் 15 சதவீத அளவுள்ள 3·51 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள்நாட்டு நீர் நிலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. தற்போது, தமிழகத்தின் மொத்த ஆண்டு கடல் மீன் உற்பத்தி 2,59,000 டன்கள். இது இந்தியாவின் கடல் மீன் உற்பத்தியில் 18·63 சதவீதமாகும். அவ்வாறே தமிழகத்தின் தற்போதைய உள்நாட்டு மீன் உற்பத்தி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 18·29 சதவீதமாகும். தமிழகத்திலிருந்து 1976-ம் ஆண்டில் ஏற்றுமதியான கடல் மீன் உணவுப்பொருட்களின் மதிப்பு ரூ. 24·16 கோடி. இது நமது நாட்டின் மொத்த கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியில் 13·43 சதவீதமாகும்.

1907-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இம்மாநில மீன்துறை இந்நாட்டிலுள்ள பிற நிறுவனங்களைவிடத் தொன்மையானது. பலவித வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதின் விளைவாக கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தி கணிசமான அளவு உயர்ந்துள்ளது. 1977-78-ம் ஆண்டின் இறுதியில் கடல் மீன் உற்பத்தி 2·75 இலட்சம் டன்னுகவும் உள்நாட்டு மீன்உற்பத்தி 1·75 இலட்சம் டன்னுகவும் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நோக்கங்கள் :—

மீன்வள அபிவிருத்தித் திட்டங்கள் மீன்துறையினுலும், மீன்வளர்ச்சிக் கழகத்தினுலும் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன.—

1. தமிழ்நாட்டில் மேலும் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளம் ஆகியவைகளைப் பெருக்குதல்.

[1978 மார்ச் 27

2. மீன்வளப்பெருக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு அதன் அடிப்படை தொடர்புள்ள தொழிற்தேவை வசதிகளை உருவாக்குதல்.

3. சிறுமீன்பிடிக் கலன் கருவிகளின் மீன்பிடித்திறனைப் பெருக்கி சீரிய முறையில் மீன்பிடிப்பு நடத்தத் தேவையான உதவிகளை அளிப்பதன் மூலம் ஏழை மீனவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த முக்கியத்துவம் அளித்தல்.

4. மீன்வளப்பெருக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அதன்மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்க பொருள் உதவி நிறுவனங்களின் நிதி உதவியைப் பெருமளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தி ஊக்குவித்தல்.

5. ஆழ்கடலில் மீன்பிடிக்கும் மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கையை பெருக்குதல்.

6. இறால் உற்பத்தியைப் பெருக்க, உவர்நீர் இறால் வளர்ப்பினை பெரிய அளவில் கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளல்.

7. தற்போதுள்ள மீனவர் கூட்டுறவு நிறுவனங்களைச் சீர்படுத்தி வலிவுள்ளவைகளாக்குதல்.

8. மீனவர்களுக்கு அடிப்படை நல்வாழ்வு வசதிகளை அமைத்துத்தருதல்.

9. மீன் விற்பனையை முறையாக வழிப்படுத்தி மீன் உண்ணும் பொதுமக்களுக்கு நியாய விலையில் அதனை கிடைக்கச் செய்தல்.

10. (மொத்தம், சில்லரை) விற்பனை நிலையங்களை விரிவு படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துதல்.

சாத்தியக்கூறுகள்:—ஆறுவது திட்டக்கால இறுதியில் ஆண்டொன்றுக்கு கடல் மீன் வளம் 4 இலட்சம் டன்னுகவும், உள்நாட்டு மீன்வளம் 2.50 இலட்சம் டன்னுகவும் உயர்ந்திடச் செய்வது நமது நோக்கம் ஆகும். இந்த உற்பத்தி அளவை எய்திட முக்கிய பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் செயல் முறைகளுக்கான சாத்தியக்கூறுகள் வருமாறு :—

1. ஆழ்கடல் மீன்பிடிப்பு.—தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினுல் பெறப்பட்ட இரண்டு மெக்ஸிகன் இறால் பிடிப்பு டிராலர்களான "தஞ்சை", "நெல்லை" ஆகியன விரைவில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும். தமிழகத்தில் ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டங்களை எதிர்காலத்தில் விரிவாக மேற்கொள்ள இது ஒரு முதல் முயற்சி.



1978 மார்ச் 27]

ஆழ்கடல் மீன் பிடிப்பைப் பொறுத்தமட்டில் நமது நோக்கமாவது, பெரிய மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி மீன் உற்பத்தியைப் பெருக்குவதாகும்.

2. சிறுமீன்பிடித் தொழில்.—சிறுமீன் பிடித்தொழில் மேற்கொள்ளும் மீனவர்கள்பக்கம் அதிக கவனம் செலுத்தவும் அதிக உற்பத்தி வேண்டி அவர்களின் தொழில் திறமையைப் பெருக்கிடவும் முக்கியத்துவம் தரப்படும். அவர்களுக்கு தாராளமாக பொருள் உதவி கொடுத்து மீன்பிடிக் கருவிகள் வாங்கவும் நாட்டுப் படகுகளில் உள்–வெளி இயந்திரங்களைப் (out-board and in-board motors) பொருத்தி அவற்றினை இயந்திரமயமாக்கவும், மீன்பிடி வலைகளை நவீனப்படுத்தவும் வழிமுறைகள் மேற்கொள்ளுவதன் மூலமும் இதனை செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எங்கெல்லாம் சாத்தியக்கூறுகள் உள்ளனவோ அங்கெல்லாம் உவர்நீர் மீன் வளர்ப்பினை பெருமளவில் மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) சிறு கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டம்.—நாட்டுப் படகு மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் தொழில் நலம் கெடாமல் இருக்குமாறு கணக்கிட்டு தேவையான அளவிற்கு மட்டுமே நமது கடற்பகுதியில் சிறிய இயந்திர மீன்பிடிப் படகுகளை கூடுதலாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். சிறிய இயந்திர மீன்பிடிப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

"இறால்" மீன்பிடிப்பு முயற்சி அளவுக்கு மீறி நடைபெறுவதன் காரணமாக அடிக்கடி மீனவர் பிரிவினர்களிடையே மோதல் ஏற்படுவதைத் தடுக்கவும், கடலில் உள்ள இதர மீன்வளத்தை முற்றிலும் பயன்படுத்தவும் மாற்று மீன்பிடிப்பு முறைகளைப் பின்பற்ற உதவித் தொகையும் மான்யமும் வழங்கப்படும்.

(4) உள்நாட்டு மீன்பிடிப்பு.—உள்நாட்டு மீன் வளத்தை பெருக்குவதற்கான சாத்தியக்கூறுவது அனைத்து நீர்நிலைகளிலும் நீண்ட பருவ நீர்நிலைகளிலும் பெருமளவில் விட்டு வளர்க்கத் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதாகும். கூட்டுவகை மீன் வளர்ப்பு மற்றும் நவீன முறை

மீன் வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ளுவதிலுள்ள நன்
மைகளை மீன் பண்ணையாளர்களும், மீன் வளர்ப்பில் விருப்ப
முள்ளவர்களும் ஏற்று நடத்திட தொழில் நுட்ப வழிமுறை
கள் அளிக்கப்படும். மேலும், பல மாவட்டங்களிலும்
மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்தி மீன்
பண்ணையாளருக்கு பயிற்சியும் வழிமுறைகளும் அளிக்கப்
படுவதன் மூலம் எல்லா உள்நாட்டு நீர்நிலைகளிலும் மீன்
வளம் பெருக வழி வகுக்கப்படும்.

நன்னீர் இருல்களை (FRESH WATER PRAWN) தகுந்த குளங்
களிலும் மற்றைய உள்நாட்டு நீர்நிலைகளிலும் வளர்க்க
6 ஆவது திட்ட காலத்தில் சிறப்பான கவனம் செலுத்தப்
படும்.

(5) <u>உவர்நீர் மீன்வளர்ப்பு</u>.—தமிழகத்தில் உவர்நீர் மீன்
வளம் பெருக்க 6 ஆவது திட்டத்தில் அதிக கவனம் செலுத்
தப்படும். "மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவன"
அமைப்பு முறைகளைப் போன்று உவர்நீர் மீன் பண்ணைகளை
பெருக்கிட பொருத்தமான நீர்நிலைகள் தேர்வு செய்யப்படும்.

(6) <u>மீன்பிடித் தொழிலுக்கான அடிப்படை வசதிகள்</u>.—
ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் பெருகிவருவதால் தனியார்
துறையிலும், மீன் பதனிடும் அமைப்புக்கள் நிறைய ஏற்பட்டு
வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போதுள்ள மொத்த மீன்
பொருள் பதனிடும் வசதிகள் கீழ்வருமாறு :—

| | |
|---|---|
| அரசுத் துறையின்கீழ் (பனிப் பொறி குளிர்சாதன நிலையங்கள்) .. .. .. .. .. | 36 |
| தனியார் துறையின்கீழ் (பதனப்படுத்தும் நிலையங்கள்) .. .. .. .. .. | 28 |
| மொத்தம் .. | 64 |

பெரிய மீன்பிடித் துறைமுகப் பகுதிகளான சென்னை
மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலும், சிறிய மீன்பிடி
இறங்கு துறைகளான இராமேசுவரம், மல்லிப்பட்டிணம்.
மண்டபம், கோடியக்கரை முதலிய இடங்களிலும் தமிழ்நாடு
மீன் வளர்ச்சிக் கழகத்தினால் மீன் பதனிடும் வசதிகள்



உருவாக்கப்படும். நமது மாநிலத்தில் பிடிபடும் மீன்
மற்றும் இருல்களைப் பதப்படுத்தத் தேவைக்கேற்ப பதன
நிலைய வசதிகளை ஏற்படுத்துவது நோக்கமாகும். மீன்களைக்
கரையேற்றவும் தங்குவதற்கு வேண்டியதுமான சிறிய படகுத்
துறைகள் மேலும் பல இடங்களில் அமைக்கப்படும்.
அத்தகைய இடங்களில் அடித்தளப் பணிக்கூடங்களும்,
பராமரிப்பு நிலையங்களும் அமைக்கப்படும்.

(7) <u>விற்பனை</u>.—மீன் விற்பனையைப் பொறுத்தமட்டில்,
மீன் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் சிறிய சில்லரை
மீன் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும் திட்டத்தை மேற்
கொள்ளும். அதனால் சுமார் ஆயிரம் பேருக்கு வேலை
வாய்ப்பினை அளிக்க முடியும். இதற்கான நிதி உதவியை
அகதிகள் முன்னேற்ற வங்கியிடமிருந்தும் பெறமுடியும்.

(8) <u>சமூக—பொருளாதாரத் திட்டம்</u>.—மீனவ சமுதாயத்
தில் எளிய நிலையில் உள்ளவர்கள் கடன் சுமையால் பெரிதும்
துன்பப்படுகின்றனர். கடன் தருபவர்களில் பெரும்பான்
மையானோர் இடைத்தரகர்கள். இவர்களின் சுரண்டலி
லிருந்து ஏழை மீனவர்களைக் காக்கத் தகுந்த நிவாரண நட
வடிக்கை எடுக்க அரசு கருதியுள்ளது. அவசியமானால்
இக்குறிக்கோள் வெற்றி பெற தகுந்த கடன் நிவாரணச்
சட்டமும் நிறைவேற்றப்படும்.

மீனவர் கிராமங்களில் அடிப்படைத் தேவைகளான
குடிநீர் வசதி, இணைப்புச்சாலை வசதிகள், வீட்டு வசதிகள்
போன்றவை அளிக்கப்படும்.

(9) <u>கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மீன்வள வளர்ச்சி</u>.—
தற்போது மாநிலத்திலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்
பெரும்பாலும் கடன் வழங்கும் சங்கங்களாகவே இயங்கி
வருகின்றன. இச் சங்கங்களை புனரமைத்து, வலிவுள்ளவை
களாக்கி மீன் உற்பத்தி, மீன் விற்பனை ஆகியவற்றை அடிப்
படையாகக் கொண்டு சிறந்து இயங்கச் செய்வதற்குத்
திட்டமிடப்பட்டுள்ளது. மீன் பிடித் தொழிலில் உண்மை
யாகவே ஈடுபடும் மீனவர்கள் மட்டும்தான் இச் சங்கங்களில்
இடம்பெறுமாறு பார்த்துக் கொள்ளப்படும். இவ்வாறு
இடைத்தரகர்களும், மீனவரல்லாதவர்களும் இந் நிறுவனங்
களிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(10) <u>நிறுவனங்களின் நிதியுதவி</u>.—மீன்வளம் தொடர்
பான வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் நிதித் தேவை
கள் குறிப்பாக அரசிடமிருந்தே இதுகாறும் பெறப்பட்டு
வருகிறது. மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு
மட்டும் தமிழ்நாட்டில் துரிதமான மீன்வளப் பெருக்கம்

காண இயலாது. இந்த இலட்சியத்தின் அடிப்படையில் 1974-ல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் உருவாக்கப் பட்டது. வேளாண்மை மறுநிதி வள்ர்ச்சிக் கழகம், தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி பெற்று, படகு கட்டுதல், படகு இயக்குதல், மீன் விற்பனை, மீன் பதனிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மீன் வளர்ச்சிக் கழகம் திட்டங்களை உருவாக்கி வருகிறது. இவ்வாறு அரசு உதவியுடன்கூட நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து அதிக அளவு நிதியுதவி பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி எடுத்து வருகிறது.

மேற்சொன்ன குறிக்கோள்களைக் கருத்திற்கொண்டு 1978–79-ம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டம் வரையப்பட்டுள்ளது. செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:—

ஐந்தாவது திட்ட காலத்திற்கான மீன்துறையின் செலவினம் இறுதியாக ரூ. 13,42·00 இலட்சமாக அறுதியிடப் பட்டது. இதன்கீழ், ஐந்தாவது திட்ட காலத்தில் முதல் நான்கு ஆண்டுகளில் செய்யப்பட்ட செலவினங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | மத்திய அரசு உதவியுடன். | மத்திய அரசு பிணைப்பு உதவியுடன். | மொத்தம். |
|---|---|---|---|
| | (செலவினம் ரூபாய் இலட்சத்தில்) | | |
| முதலாவது ஆண்டு 1974–75. | 1,78.05 | 8.91 | 1,86.96 * |
| இரண்டாவது ஆண்டு 1975–76. | 2,59.42 | 9.47 | 2,68.89* |
| மூன்றுவது ஆண்டு 1976–77. | 2,11.82 | 5.42 | 2,17.24 * |
| நான்காவது ஆண்டு 1977–78. | 2,24.36 † | 11.14 | 2,35.50 † |
| | | மொத்தம் .. | 9,08.59 |

* மீன் துறையின் செல்வினம்.

† தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்தால் மீனவர் வீட்டு வசதிக்கென ஒதுக்கப்பட்ட செலவினம் ரூ. 100.00 இலட்சம் உள்பட.

‡ நிதி ஒதுக்கீட்டின் விவரம்.



1. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்—(அ) நிதி.—நிறுவன வங்கிகளின் நிதி உதவியைக் கொண்டு வர்த்தக நோக்குள்ள மீன்துறைத் திட்டங்களை முனைந்து செயல் படுத்தும் பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974-ம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாள் துவங்கப்பட்டது. படகு கட்டுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல், ஆழ்கடல் மீன் பிடித்தல், மீன்களைப் பக்குவம் செய்தல், விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல் ஆகியன மீன்வளர்ச்சிக் கழகத்தின் பணிகளாகும். இக்கழகத்தின் பொறுப்பில் ஒப்புவிக்கப் பட்ட திட்டங்களைச் செயல்படுத்தவும் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் தமிழக அரசு இக்கழகத்திற்கு கீழே கண்டுள்ளபடி 1974–75 முதல் 1977–78 வரை ரூ. 382.73 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.

| வரிசை எண்ணும் ஆண்டும். | பங்குத் தொகை முதலீடு. | இயந்திர மய மாக்கும் திட்டம். | மெக்சிகோவிலிருந்து கன டிராலர் இறக்குமதி. | முறை களுக்கு மான கடன்கள். | மேம்பாடு திட்டங் கள். | மூலதன மான்யம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1974-75 .. | 50.00 | 35.22* | .. | 30.00 | .. | .. | 115.22 |
| 1975-76 .. | 25.00 | 55.00* | 12.95 | .. | .. | .. | 92.95 |
| 1976-77 .. | .. | 8.32* 25.40† | 1.27 | 15.00 | 26.00 | .. | 75.99 |
| 1977-78 .. | .. | 18.50* 40.00† | .. | 23.27 | 3.00 | 13.80 | 98.57 |
| மொத்தம் .. | 75.00 | 182.44 | 14.22 | 68.27 | 29.00 | 13.80 | 382.73 |

* விடு தொகை. † வட்டி மான்யம்.



(அ) இயந்திரமயமாக்கும் திட்டம்.— மீன் துறையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு படகு கட்டும் நிலையங்களிலும் (அதாவது சென்னையில் இரண்டு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினத்தில் ஒன்று மற்றும் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள மண்டபத்தில் ஒன்று) இக்கழகம் படகு கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. 1974-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் இக்கழகம் 425 இலட்சம் ரூபாய் மதிப்பில் 480 படகுகளை கட்டி முடித்துள்ளது. மேலும், முடிக்கப்பட்ட இந்தப் படகுகளை மீனவர்களுக்கு முதற் கட்டத்தில் பல்வேறு நிதி நிறுவனங்களின் கடன் உதவி மூலமும் இரண்டாவது கட்டத்தில் கழகத்தின் தவணைத்திட்டத்தின் மூலமும் வழங்கப்பட்டன. முதல் 500 படகுகளின் மொத்தக் கடன் மீதான வட்டியை 100 சதவீத மான்யமாக வழங்க தமிழக அரசு முன்வந்துள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் மறு நிதி உதவியுடன் மூன்றாவது கட்டமாக வழங்கவுள்ள படகுகளுக்கு தமிழக அரசு முதலீட்டில் 10 சதவிகிதமும் முதலீடு மான்யமாக கொடுக்க உள்ளது. இக்கட்டத்தின் கீழ் கட்டி வழங்கவுள்ள 235 படகுகளுக்கு கூட்டுறவு நிலவள வங்கி மூலம், செலவினத்தில் 80 சதவிகிதம் கடன் உதவியாகப் பெறப்படும்.

(இ) நீர்த்தேக்கங்களின் மீன் அபிவிருத்தி.—மீன் விற்பனை திட்டத்தை கழகம் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட ஐந்து நீர்த்தேக்கங்களை 1977-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் மீன்துறையின் கண்காணிப்பிலிருந்து மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன :—

1. சாத்தனூர்.
2. பவானிசாகர்.
3. திருமூர்த்தி நகர்.
4. ஆலியார்.
5. அமராவதி.

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள 225.00 டன் எடையுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஈ) உள்நாட்டில் மீன் விற்பனை.—பொது மக்களுக்கு தரமான மீன்களை நியாய விலையில் விற்பனை செய்யும் பொருட்டு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சென்னை நகரத்தில் 8 மீன் விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது. 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை 9.6 டன் எடையுள்ள

உள்நாடு மற்றும் கடல் மீன்கள் இந்த விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேற்கொண்டு இது போன்று மேலும் ஆறு மீன் விற்பனை நிலையங்களை சென்னை நகரத்தில் திறக்க கழகம் உத்தேசித்துள்ளது. புறநகர்ப் பகுதியில் வட ஆற்காடு மாவட்டத்தில் இரு மீன் விற்பனை நிலையங்களும், கோயமுத்தூர் மாவட்டத்தில் மூன்று விற்பனை நிலையங்களும் நீர்த்தேக்கத்தின் மீன்களை சில்லரை விலையில் விற்பனை செய்யும்பொருட்டு திறக்கப் பட்டுள்ளன. 1978-ம் ஆண்டு ஜூன் திங்களுக்குள், மேலும் 6 மீன் விற்பனை நிலையங்களை சென்னை நகரில் கழகம் திறக்கும்.

(உ) <u>அகதிகளுக்கான வங்கியிலிருந்து உதவிபெற்று, கமிஷன் அடிப்படையில் அகதிகள் மூலம் மீன் விற்பனை மேற்கொள்ளுதல்</u>.—இதுபோன்ற மீன் விற்பனை நிலையங்களை பல கட்டங்களில் அகதிகளுக்கான வங்கியிலிருந்து நிதி உதவி பெற்று சுமார் 750 சில்லரை மீன் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு முழுவதிலும் திறக்க கழகம் உத்தேசித்துள்ளது. 18 மாத காலங்களில் 1,000 அகதிகளுக்கு வேலை அளிக்க இத்திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு மீன் விற்பனை நிலையத்திற்கு ஒரு நபர் வீதம் 750 நபர்கள் 750 விற்பனை நிலையங்களில் கமிஷன் முறையிலும் எஞ்சியுள்ள 250 நபர்கள் விற்பனைக்கு மீன்களை சேகரிப்பதற்கும் மற்றும் சில்லரை வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவார்கள். இத்திட்டத்தின்கீழ் கழகம் எல்லா மீன் விற்பனை நிலையங்களுக்கும் மீன்களை வழங்கும். வழங்கப்பட்ட இந்த மீன்களை மேற்படி விற்பனை நிலையங்களில் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படும். இதன்மூலம் மீன் விற்பனை நிலையங்களிலுள்ள அகதிகள் விற்பனை செய்யப்பட்ட மொத்த விலையில் கமிஷன் பெறுவார்கள்.

(ஊ) <u>மீன்தூள்</u>.—தற்பொழுது கழகத்தின் கீழுள்ள மண்டபம் மீன்தூள் உற்பத்தி நிலையத்தில் தயாராகும் மீன்தூள் விலை மலிவான மீன்களிருந்து தயாரிக்கப்படுவதாகும். இது பிராணிகளுக்கு சிறந்த உணவாகும். மீன்தூள் உற்பத்தியின் விவரம் கீழ்வருமாறு:—

1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 1977-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய உற்பத்தி செய்யப்பட்ட மீன்தூள் விபரம்:

| அளவு (டன்னில்). | விலை. ரூ. |
|---|---|
| 95.60 | 1,91,200 |



1978-79-ம் ஆண்டில் நிறுவன நிதி மூலம் மீன்தூள் உற்பத்தியை 1,500 டன்களாக உயர்த்த ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கழகத்தின் இத்திட்டம் மண்டபம் மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் மீன்தூள் தயாரிக்க மீன் வாங்குவதன் மூலம் தற்போதுள்ள இடைத் தரகர்களை நீக்குவதற்கு வகை செய்கிறது. 60 சத வீதத்திற்கு மேலாக புரத சத்து அடங்கியுள்ள இந்த மீன்தூள் விற்பனைக்கு வெளிநாட்டில் அதிக தேவை ஏற்பட்டுள்ளது.

(எ) <u>பனிப்பொறி மற்றும் உறைய வைப்பு நிலையங்கள்</u>.—

1. பிடிக்கப்படும் மீன்களையும் இறால்களையும் பதப் படுத்துவதற்கு உதவியாக கழகத்தின் கீழுள்ள எண்ணூர், தூத்துக்குடி, மண்டபம் முதலிய இடங்களில் உள்ள பனிப்பொறி நிலையங்களில் 572 டன் எடையுள்ள பனிக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டது.

2. கழகத்தின் கீழுள்ள குளிர் அறை நிலையங்களில் ஏற்றுமதி செய்பவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் உதவியாக 187 டன்கள் மீன் மற்றும் இறால் கெடாமல் காக்கும் வசதி செய்யப்பட்டது.

3. மெக்ஸிகன் டிராலர்கள் செயல்படத் துவங்கியபின் அவைகளின் மூலம் பிடிபடும் மீன்கள் மற்றும் இறால்களை பக்குவப்படுத்தி - ஏற்றுமதி செய்வதற்கு கழகம் திட்டமிட்டுள்ளது.

4. உள்நாட்டுத் தேவைக்கான இறால் நியாய விலையில் கிடைக்கச்செய்யவும், அதிக அளவில் பதப்படுத்துவதற்கும் இம்மாநிலத்திலிருந்து பதப்படுத்தாத இறால் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிபெற தேவையான கட்டுப்பாடு விதிகள் வகுக்கப்படும்.

(ஏ) <u>ஆழ்கடல் மீன்பிடிப்பு</u>.—ரூ. 80.00 இலட்சம் மதிப்புள்ள 23.5 மீட்டர் நீளமுள்ள இரண்டு டிராலர்கள் மெக்சிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த டிராலர்கள் விரைவில் மீன்பிடிப்புப் பணியை துவக்கும். கிடைக்கும் இறாலை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தனது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பதன நிலையங்களில் பதனப்படுத்தி வெளிநாடுகளுக்கு தனது பெயரில் ஏற்றுமதி செய்யும். பிடிக்கப்படும் ஏராளமான மீன் சில்லறை மீன் விற்பனைத் திட்டத்தை விரிவாக்குவதற்கு உதவி செய்யும்.

(ஐ) வெளிப்புறம் இயங்கும் இயந்திரங்களை வாங்கி வழங்கும் திட்டம்.—கட்டு மரங்களை இயந்திரமயமாக்கி சிறு அளவில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு கழகம் 200 வெளிப்புறம் இயங்கும் இயந்திரங்களை ஜப்பான் நாட்டிலிருந்து வாங்கி கட்டுமரங்கள் சொந்தமாக உள்ள மீனவர்களுக்கு, தவணை முறையில் வழங்க உத்தேசித்துள்ளது.

(ஒ) 1978–79-ம் ஆண்டிற்கான திட்டங்கள்.—1978–79-ம் ஆண்டில் கழகத்திற்கு வழங்கப்படும் தமிழக அரசின் நிதியாகிய ரூ. 92.39 இலட்சத்திற்கான செயல் திட்டங்கள் பின்வருமாறு:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | படகுகள் விநியோகத்தின் வீடுத் தொகையாக | 25·57 |
| 2 | வட்டி மானியம் (முதல் இரண்டு கட்டத்தில் வழங்கப்படும் படகுகளுக்கு). | 34·00 |
| 3 | மூலதன மானியம் (மூன்றுவது கட்டத்தில் வழங்கப்படும் படகுகளுக்கு). | 28·82 |
| 4 | அபிவிருத்தித் திட்டங்களுக்கு .. | 4·00 |
| | மொத்தம் .. | 92·39 |

## மீன்துறையின் திட்டங்கள்.

### 1. கடல் மீன் பிடிப்பு—

(அ) சங்கு குளிப்பு.—1971-ம் வருடத்தில் திருநெல்வேலி மாவட்டத்தைத் தவிர தமிழ்நாட்டின் மற்றைய கடலோரத்தில் சங்கு குளிக்கும் கொள்கையை தமிழக அரசு மாற்றி அமைத்தது. இதன்படி வருடத்திற்கு ரூ. 10 உரிமக் கட்டணம் செலுத்தி சங்கு குளிக்கும் உரிமை பெறுபவர்கள் அவர்கள்



எடுக்கும் சங்குகளை அவர்களது விருப்பம்போல் விற்கலாம். இந்த உரிமம் முறையினுல் சங்கு குளிப்பவர்களின் சமூகப் பொருளாதார நிலை முன்னேற்றம் அடையாததால் முன்பு இருந்தவாறே சங்கு குளிக்கும் உரிமையை அரசுடைமையாக்கி சங்குகளை அரசின் மூலம் விற்கும் முறை கொண்டு வரப்பட்டது.

சங்கு குளிப்பவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு சங்குகளின் அளவிற்கு ஏற்றவாறு கொள்முதல் விலையை உயர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது. சங்கு எடுப்பும், விற்பனையும தனியார் யாரும் மேற்கொள்ளாதவாறு அரசாங்கமே மேற்கொள்ளும் வகையில் தகுந்த சட்டமியற்றவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கட்டுமரங்களை இயந்திரமயமாக்குதல்.—கட்டுமரங்களில் இயந்திரங்களைப் பொருத்தி அதன்மூலம் சிக்கன முறையில் மீன்பிடிக்கும் திட்டம் சில காலமாக மீன்துறையின் பரிசீலனையில் இருந்து வந்தது. 12 குதிரை சக்தி வாய்ந்த மண்ணெண்ணெயினுல் இயக்கப்படும் வெளிப்புறம் பொருத்தும் இரு இயந்திரங்கள் ஜப்பான் நாட்டிலிருந்து வெகுமதியாக பெறப்பட்டன. இவைகளை உபயோகித்து அதன்மூலம் சோதனையின் முடிவுகளை கண்டறிந்த பின்னர் நாட்டு மீன்பிடி கலன்களின் மூலம் மீன்பிடிப்பினை அதிகப்படுத்த இதுபோன்ற இயந்திரங்களை அதிக அளவில் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை கழகம் எடுத்து செயல்படுத்தும்.

(இ) ஆழ்கடல் மீன்பிடிப்பு.—சமீபத்தில் இந்திய அரசு வெளிநாட்டிலிருந்து 60 டிராலர்களை இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதன் தொடர்பாக மேற்படி டிராலர்களை இறக்குமதி செய்ய ஆர்வம் காட்டும் தனியார் மற்றும் இதர நிறுவனங்களுக்கு தகுந்த முறையில் விண்ணப்பங்களை அனுப்பவும் அதற்கேற்ற விவரங்களை வழங்கியும் மீன் துறை உதவி செய்தது. இதன் பயனாக தமிழ்நாட்டிலிருந்து 4 விண்ணப்பதாரர்கள் வெளிநாட்டிலிருந்து டிராலர்களை இறக்குமதி செய்வதற்கு தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) அளவை.—4-வது ஐந்தாண்டுத் திட்டம் வரை கீழ்க்கண்ட இடங்களில் அண்மைக்கடல் மீன்பிடிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன :—

1. சென்னை,
2. கடலூர்
3. இராமேசுவரம் மற்றும்
4. கன்னியாகுமரி

மேலும் ஐந்தாவது திட்ட காலத்தில், தஞ்சை மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்தில் மேலும் ஓர் அண்மைக்கடல் மீன் பிடிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. ஐந்தாவது திட்டக் காலத்தில் கூடுதலாக 9 படகுகள் மேற்கண்ட எல்லா அண்மைக்கடல் மீன்பிடிப்பு நிலையங்களுக்குச் சேர்க்கப் பட்டன.

பல்வேறு மீன்பிடி இடங்கள், மீன்பிடி காலங்கள் இவைகளைக் கண்டறிய மேற்படி மீன்பிடிப்பு நிலையங்கள் மூலம் அண்மைக்கடலில் அளவை மேற்கொள்ளப்பட்டது. தங்களுக்குத் தெரிந்த ஒரே இடத்தில் மீன்பிடிப்பதைத் தவிர்த்து, வெவ்வேறு இடங்களில் மீனவர்கள் தங்கள் மீன்பிடிப்பை மேற்கொள்வதற்கு இவ்வளவைகள் உதவும்.

1977–78-ம் ஆண்டில் மேலும் ஒரு 50' படகு கன்னியாகுமரி மீன்பிடி அளவாய்வு நிலையத்திற்கும் ஒரு 43½' படகு மல்லிப்பட்டினம் மீன்பிடி அளவாய்வு நிலையத்திற்கும் வழங்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்து வரும் 6-வது திட்ட காலத்தில் மேற்கண்ட அளவை நிலையங்களில் தகுந்த நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டு அளவைப் பணியை சீராகவும், திறமையுடனும் செயல்படுத்தப்பட உள்ளது.

(உ) மீன்பிடிப்பில் மாற்று முறைகளை கையாளுதல்.—இறால்களைப் பிடிப்பதற்காக பெரும்பாலும் டிரால்வலைகளையே மீனவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மீனவர்கள் பல்வேறு மீன்பிடிப்பு முறைகளை மேற்கொள்ளும்பொருட்டு மீனவர்களுக்கு பல்வேறு வலைகளான பர்ஸ்-ஸீன் வலை, செவுஸ் வலை, கல்லா கூடுகள் முதலியவைகளை வாங்குவதற்கு ஊக்குவிப்பு உதவி செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென 1978–79-ம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவினம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றால் இருக்கும் மீன்வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(ஊ) பராமரிப்பு வசதிகள்.—மீன்பிடி இயந்திரப் படகுகளை இடைவிடாமல் உபயோகப்படுத்தும்பொருட்டு இத்துறையின் மூலம் முக்கியமான மீன்பிடி இடங்களில் அடித்தளப் பணிமனைகளும், பராமரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது திட்ட காலத்தில் கடலூர் மற்றும் தூத்துக்குடியில் உள்ள நிலையங்கள் அடித்தள பணிமனைகளாக



பெரிய பழுதுகளைச் சரிபார்க்கும் வசதிகளுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் இரண்டு பராமரிப்பு நிலையங்கள் மல்லிப்பட்டினம் மற்றும் பரங்கிப்பேட்டையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(எ) மன்னார்வளைகுடா அருகில் மண்டபத்தில் நீர்நிலை இயல் அளவை மேற்கொள்ளுதல்.—மன்னார்வளைகுடாவின் அருகில் மண்டபத்தில் உள்ள மீன்பிடி படகு தங்குமிடத்திற்குச் செல்லும் கால்வாயில் மிகவும் மோசமான அளவில் மண் சேர்ந்து விட்டதால் இந்தக் கால்வாயை தூர்வார வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தூர்வாரும் பணியைத் தொடங்கும் முன்பு இக்கால்வாயைச் சீரமைக்கும்பொருட்டு, மேற்படி நீர்நிலை இயல் அளவை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் உள்ள கடல்நீர்நிலை இயல் அளவு ஆய்வாளர் மேற்படி அளவையை மேற்கொள்ள ஒப்புக்கொண்டு அவர்களுடைய 1977–78-ஆம் ஆண்டு அளவாய்வு திட்டத்தில் இந்த அளவை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த அளவை நிறைவேறுவதற்குத்தக்கபடி ரூ. 6.50 இலட்சம் செலவு செய்யப்படும். இந்த அளவை முடிந்தபிறகு, படகுகள் செல்லும் கால்வாயை தூர்வாரி ஆழப்படுத்தி மீன்பிடி கலன்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஏ) மீன்பிடி இயந்திரப் படகுகளை பதிவு செய்தல்.—1953-ன் மீன்பிடி இயந்திரப் படகுகளை பதிவு செய்து உரிமம் வழங்க வகை செய்ய தமிழ்நாடு சிறு துறைமுகம் மற்றும் கலன்கள் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசிதழில் 14–2–78 அன்று ஓர் அறிவிப்பு, ஆலோசனை மற்றும் மறுப்பு ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் தெரிவிக்குமாறு பிரசுரிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலம் முடிந்தபிறகு, தேவையான திருத்தம்பற்றி பரிசீலிக்கப்படும்.

## 2. உள்நாட்டு மீன்வளம்.

(1) தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்.—1977–78 இறுதியில் நன்னீர் மீன் உற்பத்தி 1.75 இலட்சம் டன் அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆறாவது திட்ட இறுதியில் 2.50 இலட்சம் டன் மீன் உற்பத்தி அளவு எட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன் உற்பத்தியானது தரமான மீன்குஞ்சுகளை தேவையான அளவிற்கு உற்பத்தி செய்வதை பொருத்தே அமைந்துள்ளது. மாநிலத்திலுள்ள மீன் வளர்க்கக் கூடிய எல்லா நீர்நிலைகளிலும் இருப்பு செய்ய 1050 இலட்சம் மீன்குஞ்சுகள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில், 400 இலட்சம் மீன்குஞ்சுகள் இயற்கை நீர் நிலைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. தூண்டும் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து 1976-77 ஆம் ஆண்டில் 200 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் மீன்குஞ்சு உற்பத்தி மேலும் பெருக்கப்படும். மீன் குஞ்சு உற்பத்தித் திட்டத்தின் கீழ் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிவரையிலும் 12 தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் இம்மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்டன. ஐந்தாவது திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு மாவட்டத்தில் செம்பரபாக்கத்திலும், தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளியிலும், மதுரை மாவட்டத்தில் பாலார்-பொரந்தலாற்றிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையிலும், சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையிலும் மேலும் இத்தகைய நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1978-79-ல் மதுரை மாவட்டத்தில் மஞ்சலாற்றில் மேலும் ஒரு தூண்டும் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன்குஞ்சு நாற்றங்கால் வசதிகளை மேலும் அமைக்கும் தொடர் திட்டங்களின் பணிகள் பவானிசாகர், கிருட்டிணகிரி, மேட்டூர் அணை, லால்பேட்டை, மஞ்சளார், வைகை அணை ஆகிய இடங்களிலும் அவ்வாறே 1977-78-ல் அனுமதிக்கப்பட்ட விதமான ஆளியாறு, திருமூர்த்தி நகர், சாத்தனூர் அணை ஆகிய இடங்களிலும் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகின்றன. 1978-79-ல் மேலும் மீன்குஞ்சு நாற்றங்கால் வசதிப் பணிகள் லால்பேட்டை, பவானிசாகர் ஆகிய இடங்களில் நடைபெறுவதோடு தஞ்சாவூரில் ஓர் நீர் ஏற்றும் குழாய்க்கிணறு வசதியும் மேற்கொள்ளப்படும்.

பெருமளவில் மீன்குஞ்சுகளுக்கான சிமிண்ட் நாற்றங்கால் வசதிகள் அமைப்பதிலுள்ள இடையூறுகளான இட வசதிகள், மராமத்துப் பணிகளுக்கான அதிகச் செலவு ஆகியவற்றைக்கருதி, தூண்டும் முறை மீன்குஞ்சு உற்பத்தியை சோதனைபூர்வமாக மேற்கொள்ள மடக்கப்படக்கூடியதும் மிதப்பதுமான நாற்றங்கால் வசதிகளை, தேர்ந்தெடுக்கப்படும் குறிப்பிட்ட இடங்களில் அமைக்க 1978-79-ல் ரூ.53,000



செலவு அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்முறை வெற்றி பயக்குமானல் நாற்றங்கால் வசதியின்றி மீன்குஞ்சுகளை வளர்ப்பதிலுள்ள இடையூறுகள் நீங்க உதவியாக இருக்கும்.

(2) <u>நீர்த்தேக்க மீன்வளம்.</u>—இம்மாநிலத்தில் மீன்வளப் பெருக்கம் ஏற்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் அனைத்தையும் மீன் துறை மீன்குஞ்சுகளை இருப்பு செய்யவும், மீன்களைப் பிடிக்கவும் மேற்கொண்டது. தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து தீவிர தொழில்நுட்ப முயற்சிகளை மீன்துறை மேற்கொண்டதன் விளைவாக சில நீர்த்தேக்கங்களான மேட்டூர், சாத்தனூர், அமராவதி ஆகியவற்றில் மீன்பிடிப்பு மிக உயர்ந்துள்ளது. இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 1,500 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 1977-78ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னனியர்று அணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முறையாக மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மீன்பிடிப்பை மேற்கொள்ள 1978-79ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நீர்த் தேக்கங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:—

1. மருதாநதி நீர்த்தேக்கம்.
2. கடானு நீர்த்தேக்கம்.
3. மேல் ஆளியாறு நீர்த்தேக்கம்.
4. சின்னறு நீர்த்தேக்கம்.
5. குடகனுறு நீர்த்தேக்கம்.
6. பெருமாள் ஏரி.

(3) <u>மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம்.</u>—உள்நாட்டு மீனவர்களையும், மீன்வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ளவர்களையும் பயிற்றுவித்து அவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு ஹெக்டேர் நன்னீர் பரப்பைத் தந்து அவர்கள் மீன்குஞ்சு இருப்பு, வளர்ப்பு, பிடிப்பு ஆகியன மேற்கொள்ளச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுபோன்ற நிறுவனம் தஞ்சாவூரில் செயல்படுகிறது. இந்த நிறுவனம் 55 மீன் பண்ணையாளர்களைப் பயிற்றுவித்து கூட்டு இன மீன்வளர்ப்பினை அவர்கள் மேற்கொள்ள 89 குளங்கள் அடங்கிய 100 ஹெக்டேர் நீர்நிலைகளை அவர்களுக்கு ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இந்திய அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டு மேலும் 52 பண்ணையாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுக்கு 100 ஹெக்டேர் நன்னீர் பரப்பு ஒதுக்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு 1977-78-ல் ரூ. 4.50 இலட்சம் அனுமதியளித்துள்ளது. 1978-79-ல் தஞ்சை மீன் பண்ணையாளர் வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து செயல்படும்.

[1978 மார்ச் 27

இதுபோன்ற மீன்பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனங்கள் 1978–79ஆம் ஆண்டில் மேலும் பல மாவட்டங்களில் அமைக்கப்படும்.

(4) கழிமுக மீன்வளர்ப்பு.— இறால்களின் விற்பனை விலையும், ஏற்றுமதியும் அதிகரித்துக்கொண்டே செல்வதால் இறால் மற்றும் மடவை இவற்றின் உற்பத்தியை கழிமுக நீர்ப்பரப்பில் பெருக்குவதற்காக மேற்கொண்டுள்ள முறைகள் முக்கியத்துவம் அடைந்து வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள ஏறக்குறைய 80,000 ஹெக்டேர் கழிமுகம் மற்றும் முகத்துவார நீர்ப்பரப்பில், சுமார் 27,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு இறால் மற்றும் இதர கழிமுக மீன்கள் வளர்க்க பயன்படுத்தப்படலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. பழவேற்காட்டில் இறால் வளர்ப்பு திட்டம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டது. கோவளத்தில் ரூ. 4.24 இலட்சம் செலவில் ஒரு கழிமுக நீர் மீன் பண்ணை 1977–78-ல் அமைத்திட அரசு ஒப்புதலளித்தது. இப்பண்ணை 1978–79-ல் செயல்படத் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கழுவேலி மற்றும் அடையாறு ஆகிய இடங்களில் மீன் பண்ணைகளைக் கட்டி, படகுகள் மற்றும் மீன்பிடிச் சாதனங்களை வாங்கி இறால் உற்பத்தியினைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான ரூ. 3.56 இலட்சம் செலவினத்தை 1978–79-ஆம் வருடாந்திர திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியுடன் ரூ. 16.52 இலட்சம் செலவில் ஒரு பெரிய கழிமுக நீர் மீன்பண்ணையை தென்னாற்காட்டிலுள்ள கிள்ளையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. கழிமுக நீர் பண்ணைகளில் குறிப்பாக இறால்களை உற்பத்தி செய்வதும் அதனால் இத்திட்டங்களின் பொருளாதார நன்மையினை மீனவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே அடிப்படை நோக்கமாகும். மீனவர்கள் ஒரு ஹெக்டேர் பரப்புள்ள கழிமுக மீன் பண்ணைகளை நிறுவவும் அவற்றைப் பராமரிக்கவும் தேவையான பயிற்சியையும் நிதி உதவியையும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய பயிற்சி அளிப்பதற்காக ரூ. 1.92 இலட்சம் 1978–79 ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) பனிப்பொறிகளும் குளிர்பதன நிலையங்களும்.— மீனவர்கள் மீன்களைப் பதனப்படுத்தி விற்பனை செய்ய உதவும் வகையில் மாநிலத்திலுள்ள எல்லா முக்கிய மீன் கரைசேரும் இடங்களில், மீன்துறை இதுகாறும் 36 பனிப்பொறிகளையும், குளிர் அறைகளையும் அமைத்துள்ளது.



1978 மார்ச் 27]

1978–79-ல் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஒய்யாளிக்குப்பத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பெரியதாழையிலும் சிறிய பனிப்பொறிகள் நிறுவப்படும்.

4. அடிப்படை வசதிகள் பெருக்கத் திட்டங்கள்.— இந்நாட்டில் பெருகிவரும் மீன்பிடி தொழிலின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழ்நாட்டில் தேவைப்படும் பல்வேறு மீன்பிடிதொழில் வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படை வசதிக்கான தேவைகளை முறையாக அறியவும், அளவிடவும் அதற்கேற்ப தேவைப்படும் அடிப்படை வசதிகளை மிகக் குறுகிய காலவரையில் பெருக்கவும் தகுந்த திட்டங்களை பரிந்துரைக்க கடல் உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முன்னாள் இயக்குநர் திரு. [illegible]கே. சிதம்பரம் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. இக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

5. பயிற்சி.— ஆண்டொன்றிற்கு குறைந்தது 200 படகுகள் என்ற எண்ணிக்கையில் பெருகிவரும் இயந்திரப்படகுகளை இயக்கவும் பராமரிக்கவும் தேவையான பயிற்சிபெற்ற மீனவர்களை உருவாக்குவதற்காக கீழ்க்கண்ட இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை .. | கடல் மீனவர் பயிற்சி நிலையங்கள். |
| 2. | கடலூர் .. | |
| 3. | நாகப்பட்டினம் .. | |
| 4. | மண்டபம் .. .. | |
| 5. | தூத்துக்குடி .. | |
| 6. | குளச்சல் .. .. | |
| 7. | மேட்டூர் .. | உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம். |

ஆறாவது திட்டத்திலும் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெறும்.

மீன்பிடிப்புத் துறையில் சிறப்பான பயிற்சியை பெறுவதற்காக மீன்துறை அதிகாரிகள் மத்திய அரசு நிறுவனங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். இந்த பயிற்சி திட்டம் தொடர்ந்து நடைபெறுவதற்கு 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. ஆராய்ச்சி.—ஆரம்ப காலத்திலிருந்தே மீன்துறையின் முக்கிய பணியாக மீன்வள ஆராய்ச்சி இருந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள அநேக மீன்வள ஆராய்ச்சி நிலை

யங்கள் அவை இருக்கும் இடங்களின் சூழ்நிலைகள் பற்றிய முக்கிய பிரச்சினைகளையும் உள்நாட்டு மீன்களைப் பற்றியும், நன்னீர் உயிரியல், தொழில் நுட்பவியல், கடல் உயிரியல் பற்றியும் ஆராய்ச்சி செய்து வருகின்றன. மாநில மீன் துறை ஆராய்ச்சிக் குழு இந்த ஆராய்ச்சி நிலையங்களின் பணியை ஆய்வு செய்து இந்நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் மேற்கொள்ளவேண்டிய ஆராய்ச்சிப் பணிகளை வகுத்துத் தருகிறது. சமீப காலமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு மற்றும் கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக் கழகம் ஆகியவற்றின் பொருளாதார உதவியுடன் இந்த ஆராய்ச்சி நிலையங்களில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) மலிவு விலை மற்றும் கழிவு மீன்களை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்துதல் பற்றிய ஆராய்ச்சி.

(2) ஏற்றுமதியாகும் உலர்ந்த மீன்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி.

(3) செயற்கை முறையில் முத்துக்களை உற்பத்தி செய்தல் பற்றிய ஆராய்ச்சி.

(4) உவர் நீர் மீன்வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி.

(5) கலப்பு இன மீன்வளர்ப்பின் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்தல் பற்றிய ஆராய்ச்சி.

ஆறாவது திட்டத்தில், ஆராய்ச்சியினால் ஏற்படும் பலன்களை உடனடியாக முன்னேற்ற பணிகளில் செயல்படுத்தக் கூடிய புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. விரிவாக்கம்.—மீன்களைக் கெடாமல் பாதுகாத்தல், மீனவர்களுக்கு பயிற்சி, மீன்வளர்ப்பு நுணுக்கங்கள் பற்றி மீனவர்களுக்கு பிரச்சாரம் செய்தல் ஆகியவை மீன்துறை விரிவாக்கப் பிரிவின் நோக்கமாகும். மத்திய அரசின் பொருளாதார உதவியுடன் தூத்துக்குடியிலும் மற்றும் சென்னையில் மீன்துறை அலுவலகத்திலும் விரிவாக்கப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மீன்துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மீனவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக இந்த விரிவாக்க பிரிவுகள் ஆறாவது திட்ட காலத்திலும் செயல்படும். மேலும் ஒரு விரிவாக்கப் பிரிவை கோயம்புத்தூரில் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதலை சமீபத்தில் அளித்துள்ளது.



8. மீனவர் நலத் திட்டங்கள்.—மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருதல், குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி அளித்தல் மற்றும் சமுதாயக் கூடங்களை கட்டித் தருதல் ஆகியவை மீனவர் நலத் திட்டங்களில் அடங்கும். 1975–76-ம் ஆண்டில் கடலோர மீனவர் குடும்பங்களுக்கு வீடுகளை கட்டித் தருவதென்று தீர்மானித்து முதல் கட்டமாக 5,000 வீடுகளைக் கட்ட அரசு ஒப்பளித்தது. இத் திட்டத்தின் கீழ் 1976–77-ம் ஆண்டு முடிய 3,807 வீடுகளைக் கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டு 41 மீனவர் குடியிருப்புகளில் 2,137 வீடுகள். கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இதில் எஞ்சியுள்ள 1,669 வீடுகளுடன் கூட 1,890 வீடுகளை 1977–78-ம் ஆண்டில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. இந்தத் திட்டத்தை 1978–79-ம் வருடத்திலும் சீரமைத்த முறையில் வீடுகள் கட்டுவதைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. மீட்புக் கலன்கள்.—மீன் பிடிப்புக்கு கடலில் சென்ற கலன்கள் மற்றும் அதிலுள்ள மீனவர்கள் இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்படும்போது மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக 1977–78-ம் வருடத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் இரண்டு மீட்புக் கலன்கள் வாங்குவதற்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இந்தக் கலன்களைக் கட்டும் பணி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு இவை 1978–79-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. மீனவர்களுக்கு நிவாரண உதவி.—கடலில் மீன் பிடிக்கும்போது இறக்கும் மீனவரின் குடும்பத்திற்கு மானியமாக ரூ. 1.000 இதுவரை வழங்கப்பட்டு வந்தது. இத்துடன் வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சேதங்கள் ஏற்படும்போது சிறிதளவு பொருளாதார உதவி, மீன்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மீனவர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்துள்ளது. மேற்கண்ட நிவாரண முறைகளை பரிசீலனை செய்து அவை போதுமானதாக இல்லை என்பதால் புதியதொரு நிவாரணத் திட்டத்தை செயல்படுத்த அரசு தீர்மானித்தது. அதன்படி "மீனவர் நலம் மற்றும் நிவாரண நிதி" என்ற நிதியினை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. கடலில் மீன் பிடிக்கும்போது இறந்த மீனவரை நம்பியுள்ள விதவை மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உடனடியாக ரூ. 5,000 வழங்குவதுடன் இவர்களின் குடும்ப

மறுவாழ்விற்காக ரூ. 5,000 வரையிலும் வழங்கப்படும். இந்தப் புதிய நிவாரண நிதியிலிருந்து கீழ்க்கண்ட உதவிகள் அளிக்கப்படும்.

(1) இறந்த மீனவரின் பிள்ளைகள் மீன்துறை சம்பந்தப்பட்ட ஏதாவது தொழிற் கல்வியிலோ அல்லது வேலை வாய்ப்பு பயிற்சியிலோ படித்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குதல் ; மற்றும்

(2) வெள்ளம், புயல் மற்றும் தீ விபத்தினுல் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தேவையான உணவு, உடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்.

11. கூட்டுறவு சங்கங்களுக்கு உதவி.— கடந்த ஆண்டுகளைப் போலவே 1978–79-ம் ஆண்டிலும் ரூ. 1 இலட்சம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீன்பிடி சாதனங்கள் வாங்கவும், பழைய வலைகளை புதுப்பிக்கவும், ஏற்கனவே வாங்கியுள்ள கடன்களை திருப்பிச் செலுத்தவும் நீண்ட கால மற்றும், குறுகிய காலக் கடன்கள் இதிலிருந்து வழங்கப்படும். போதிய நிதி வசதி அளிப்பதன் மூலம் இந்த கூட்டுறவு சங்கங்கள் புனரடைந்து மீன் விற்பனையை மேற்கொள்ளும் திட்டம் 1978-79-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குத் தேவையான ரூ. 2.12 இலட்சத்தை பங்கு முதலீடாக அரசு வழங்கும். இந்த திட்டத்தினை செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான மேற்பார்வை செலவுக்கு ரூ. 0.88 இலட்சம் அரசு வழங்கும். அரசு வழங்கும் இந்த முதலீட்டினைப் பெற்ற மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் இந்திய ரிசர்வு வங்கி வழங்கும் கடனுதவி பெற்று அந்த விற்பனை திட்டத்திற்குத் தேவையான கலன்களையும் கருவிகளையும் வாங்கமுடியும். மேலும் ஊர்திகள் மற்றும் குளிர்பதன இயந்திரங்களை வாங்குவதற்குத் தேவையான பொருளுதவியை தேசியக் கூட்டுறவு முன்னேற்ற கழகத்திலிருந்து பெறமுடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனைச் சங்கங்கள் இத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக சுமார் ரூ. 18·00 இலட்சங்கள் பொருளுதவியாகப் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. மத்திய அரசு ஆதரவுள்ள திட்டம்—(1) மீன்பிடி துறைமுகங்களையும் மற்றும் இறங்குதுறை வசதிகளையும் மேம்படுத்தும் திட்டம்.—இயற்கையின் சீற்றத்தினுல் ஏற்படும்





புயல், சுழற் காற்று இவைகளினுல் ஏற்படும் கடல் கொந்தளிப்பிலிருந்து இயந்திர படகுகளை பாதுகாக்கவும், அவைகளை நிறுத்தி வைக்கவும், பிடித்த மீன்களை இறக்கவும் மத்திய அரசின் உதவியோடு தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் துறைமுகங்களையும், இறங்குதுறை வசதிகளையும், மீன் துறை ஏற்படுத்தியுள்ளது.

| வரிசை எண்ணும் இடமும். | | பணியின் வகை. |
|---|---|---|
| 1 கடலூர் | .. | சிறிய மீன்பிடித் துறைமுகம். |
| 2 நாகப்பட்டினம் | .. | கப்பல்துறை மேடை. |
| 3 மண்டபம் .. | .. | கரைச் சுவர். |
| 4 இராமேஸ்வரம் | .. | 'T' வடிவ இறங்குதுறை. |
| 5 தூத்துக்குடி .. | .. | பெரிய மீன்பிடி துறைமுகம் (9 அடி அமிழ் அளவு). |

ஐந்தாவது திட்டத்தில் கீழ்க்கண்ட கூடுதல் வசதிகள் செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

| | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1 தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரையில் 'T' வடிவ இறங்குதுறை. | 14·40 |
| 2 தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினத்தில் 'T' வடிவ இறங்குதுறை. | 10·60 |
| 3 சென்னையில் பெரிய மீன் பிடி துறைமுகம். | 668.00 (சென்னை துறைமுக கழகம் கட்டி வருகிறது). |

மேற்கண்ட மூன்று வேலைகளும் 1978–79-ம் வருடத் திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியா குமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் ரூ. 200 இலட்சத்தில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் வருங் காலத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான வரைபடங்களும் மதிப்பீடுகளும் பெங்களூரிலுள்ள முன் வரைவாய்வுக்குழுவின் ஏற்புபெற்ற பிறகு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. ஒப்புதல் கிடைத்த பின். இந்த பணி மேற்கொள்ளப்படும்.

இதைத்தவிர தமிழ்நாட்டின் கடலோரத்தில் இயந்திர படகுகளை நிறுத்துவதற்கும் பிடித்த மீன்களை இறக்கு வதற்கும் தேவையான வசதிகளைக் கட்டிக் கொடுக்க 15 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகு, இந்த வேலைகள் வரும் வருடங் களில் செயல்படுத்தப்படும். நார்வே அரசின் உதவியைப் பெற்று, மீன்களை இறக்குவதற்கும், படகுகளை நிறுத்து வதற்கும் தேவையான (சுமார் 40) மிதக்கும் இறங்கு துறைகளை (floating jetty) அமைப்பதற்கான சாத்திய கூறுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(2) மீன்பிடி தொழில் அடிப்படை (Infrastructural facilities) வளர்ச்சித் திட்டம்.—கடலோர மீனவ கிராமங்களில் மீன்பிடி தொழில் அடிப்படை வசதிகளை பெருக்கும் திட்டங்களுக்கு நிதி உதவி செய்ய (ரூ. 28 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்கு 75 சத விதம் மானியம்) மத்திய அரசு முன்வந்துள்ளது. இந்த உதவியை பயன்படுத்திக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள பழையாறு மற்றும் இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள வாலிநோக்கம் ஆகிய இடங்களில் மீன்பிடி தொழிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பெருக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டங் களை இந்த இரண்டு கிராமங்களிலும் செயல்படுத்த ஆகும் மொத்த செலவான ரூ. 52·045 இலட்சத்தை (பழையாறு ரூ. 28·00 இலட்சம் மற்றும் வாலிநோக்கம் ரூ. 24·045 இலட்சம்) வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டங்களை செயல்படுத்த மாநில துறைமுகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டங்களின் கீழ் சாலைகள், குடிநீர் வசதிகள், மீன்பதப்படுத்தும் நிலையங்கள், பனிக்கட்டி நிலையங்கள், பழுதுபார்க்கும் நிலையங்கள், மீன் ஏல நிலையங்கள், சமூகக் கூடங்கள், மின்சாரம் வழங்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகள் முதலியன அமைக்கப்படும்.

## மத்திய அரசு நேரடித் திட்டம்.

### மலைப் பிரதேச வளர்ச்சித் திட்டம்.

மலைப்பிரதேச வளர்ச்சித் திட்டத்தின் கீழ், உதக மண்டலத்திலுள்ள வில்சன் மீன்பண்ணையில் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையம், பரிசோதனைச்சாலை மற்றும் பண்டகசாலை முதலியவைகட்டி முடிக்கப்பட்டன.



வில்சன் மீன் பண்ணையிலுள்ள மீன் வளர்ப்புக் குளங்களை புதுப்பிக்கும் பணி 1978-ம் வருடத்தில மேற்கொள்ளப் படும். இத் திட்டத்தினை செயல்படுத்த ரூ. 2·00 இலட்சம் இந்த ஆண்டில் மத்திய அரசு நேரடித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. மலைப்பிரதேச வளர்ச்சித் திட்டத் தின் கீழ், மத்திய அரசின் ஒப்புதலோடு ரூ. 1·65 இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் ஒரு மீன் காட்சிசாலை கட்டப்படும்.

### புயல் நிவாரணம்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் 1977, நவம்பர் 12-ம் நாள் அடித்த புயலினால் அதிக அளவு பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்களும் அவர்களின் குடும்பத்தினரும். கடலோரத் தில் மீனவர்கள் குடியிருப்பதால் இப்புயலினால் அவர்கள் சொல்லமுடியாத துயரத்தில் ஆழ்ந்ததோடல்லாமல் அவர்களின் மீன் பிடித்தொழிலுக்கு தேவையான படகுகள், கட்டுமரங்கள், வலைகள் மற்றும் தங்களுடைய வீட்டு உடமைகளையும் இழந்தனர். இவர்களின் இக்கட்டான நிலையினைக் கண்ட மீன்துறை உடனடியாக நிவாரணப் பணிகளை அதிக அளவி மேற்கொண்டது. வெள்ளத் தினால் சூழப்பட்ட மீனவர்களுக்கும் அவர்களது குடும்ப பத்தினருக்கும் உணவுப்பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்தினருக்கும் 5 கிலோ அரிசி வீதம் மொத்தம் 250 டன்கள் அரிசி விநியோகிக்கப்பட்டது. மீனவர்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலை நடத்துவதற்குத் தேவையான கருவிகளையும் கலன்களையும் வாங்குவதற்குத் தேவையான பணத்தில் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. இப்பணிக் காக, தமிழக அரசு ஒப்புதலளித்த மொத்த செலவினம் ரூ. 1, 32,39,000 ஆகும்.

முடிவுரை.—மேலே சுருக்கமாக கூறப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மீன்பிடிதொழிலை விரைந்து பெருக்கு வதற்கு உருவாக்கப்பட்டனவாகும். இடைத் தரகர்களின் சுரண்டல் இல்லாமல் மீனவர்கள் சொந்தமாகவே மீன்பிடிப்பதற்குத் தேவையான கலன்களையும் கருவி களையும் பெறவேண்டும் என்பது மற்றொரு முக்கிய குறிக்கோளாகும். வர்த்தக நோக்குடன் ஆரம்பிக்கப் படும் திட்டங்களில் சில தமிழ்நாடு மீன்வளத்துறையினால் செயல்படுத்தப்படுவதால் அரசாங்கத்திற்கு ஏற்படும் நிதி

வசதி பற்றிய பிரச்னை கணிசமான அளவு குறைக்கப்
படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களை வலிமைப்படுத்தும்
திட்டமும் 1978-79-ம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளது.
மின் உற்பத்தியைப் பெருக்கவும் ஏற்றுமதியை அதிகரிக்
கவும் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நட
வடிக்கைகளினால் தமிழகம் மின் உற்பத்தியில் இந்தியா
வில் ஒரு சிறந்த இடத்தை பெறும் என்பதில் எனக்கு
நம்பிக்கையுண்டு.

## இணைப்பு IV

[78-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

தமிழகத்தில் உணவு நிலைமை

கோரிக்கை 35. மற்றும் கோரிக்கை 57 ஆகியவை மீதான குறிப்பு

### I. அரிசி நிலைமை

இந்த அரசு 1977-ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாளன்று
பொறுப்பேற்றது. 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில்
மத்திய அரசின் ஆணையையொட்டி அனைத்திந்திய உணவுக்
கொள்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. 1977
அக்டோபர் முதல்நாள் முதற்கொண்டு, நெல், அரிசி, நடமாட்
டத்தைப் பொறுத்த வரையில், நாடு முழுவதும் ஒரே உணவு
மண்டலமாக இயங்கும் என்று மத்திய அரசு ஆணையிட்டது.
இப்புதிய சூழ்நிலைக்கு ஏற்ப, தமிழகத்தில் உணவுக் கொள்
கையில் தேவையான மாற்றங்கள் செய்யப் பட்டன. இப்புதிய
கொள்கையின் விளைவாகத் தமிழகத்திற்கு பாதிப்பு எதுவும் ஏற்
படாமல் கண்காணித்துக் கொண்டுள்ளது. உணவுத் துறையில்
இந்த அரசின் முக்கிய சாதனையாக அமைந்தது. சென்ற
ஆண்டு இறுதியில், தமிழகத்தில் வரலாறு அறியாத அளவு
வெள்ளத்தாலும், புயலினாலும், கடுமையான பாதிப்பும் பெரும்
நட்டமும் ஏற்பட்டன. எதிர்பாராத இந்த சோதனைக்கும்
ஈடு கொடுத்து, தமிழகத்தின் உணவு நிலைமையில் தட்டுப்
பாடோ, மித மிஞ்சிய விலை உயர்வோ, ஏற்பட்டு விடாமல்
உணவு நிலைமையைச் சீராகச் சமாளித்துள்ளது, தமிழக அரசின்
உணவுக் கொள்கை, பொது நலனுக்கு உகந்த முறையிலும்,
எதிர்ப்பாராத நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும்,
வகுக்கப்பட்டுள்ளது என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

#### நாடு முழுவதும் ஒரே மண்டலம்

2. 1976-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் நாள் முதற்
கொண்டு, ஆந்திரம், கர்நாடகம், புதுச்சேரி ஆகிய பகுதிகள்
சேர்ந்தும், கேரளம் நீங்கலாகவும், அமைக்கப்பட்ட தென்
உணவு மண்டலத்தில், தமிழகம் இணைக்கப்பட்டிருந்தது. 1977-ம்
ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் நாள் முதற்கொண்டு, நாடு
முழுவதும் ஒரே உணவு மண்டலமாயிற்று, இந்த முடிவை



எடுப்பதற்கு முன்பு, மத்திய அரசு தமிழக அரசைக் கலந்து
கொள்ளவோ, தமிழக அரசு தன் கருத்தைத் தெரிவிக்க
வாய்ப்பு அளிக்கவோ இல்லை. கோதுமையைப் பொறுத்த
வரையில், நாட்டிலிருக்கும் மிகக் கணிசமான கையிருப்பு
அளவுக்கு, நெல்லைப் பொறுத்தவரையில் இல்லை
என்பதை மனதிற்கொண்டு, இப்புதிய கொள்கையின்
விளைவாகத் தமிழகம் பாதிக்கப்படக் கூடும் என்ற அச்சத்
தையும் தன்னிறைவு நிலையில் இருந்த மாநிலம் பற்றாக்குறை
மாநிலமாகிவிடக்கூடும் என்ற அபாயத்தையும், தமிழக
அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியது. தமிழகத்தில்
பெரும்பாலும் புழங்குவது புழுங்கல் அரிசி, கேரளத்திலும்
மக்கள் பெரிதும் பயன்படுத்துவது புழுங்கல் அரிசியையே.
அண்டை மாநிலமான ஆந்திராவில் தயாரிக்கப்படுவது, பெரும்
பாலும் பச்சரிசி. இந்நிலையில், தமிழகத்தில் தயாரிக்கப்படும்
புழுங்கல் அரிசி, தேவை அதிகமாகவும் வாங்கும் சக்தி அதிக
மாகவும் உள்ள கேரள மாநிலத்திற்கு சென்றுவிட்டால், தமிழ
கத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலைகள் உயரக் கூடும் என்ற
அச்சம் ஏற்பட இடம் இருந்தது. கேரளத்திற்கு தமிழகத்திலி
ருந்து செல்லும் அரிசிக்கு ஈடுசெய்ய, ஆந்திராவிலிருந்தும் மற்ற
மாநிலங்களிலிருந்தும் பச்சரிசிதான் அதிகம் கிடைக்கக்கூடிய
வாய்ப்பு இருந்த காரணத்தினால், தமிழக மக்களின் புழுங்கல்
அரிசித் தேவைகளை நிறைவு செய்வதில் இடர்ப்பாடு ஏற்
படக் கூடாதென்ற கவலை தமிழக அரசுக்கு இருந்தது.
இவற்றை மத்திய அரசுக்கு தமிழக அரசு எடுத்துக் கூறி
தமிழகம் தனி உணவு மண்டலமாக இயங்க வேண்டுமென்றும்
அது சாத்தியமில்லாவிடில், முன்பு போலவே, கேரளம் நீங்
கலாக, மற்ற பகுதிகள் சேர்ந்த தென் மண்டலத்தில் இணைக்
கப்பட்ட முறை தொடர வேண்டுமென்றும் வற்புறுத்தியது.
அனைத்திந்திய கொள்கை அடிப்படையில் செய்யப்பட்டுள்ள
இந்த முடிவினால், தமிழகத்திற்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாம
லிருக்க, தேவையான அளவு மத்திய அரசிடமிருந்து அரிசி
ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய அரசு தந்த உறுதி
மொழியின் பேரிலும், இப்புதிய கொள்கையின் பலனாக விவ
சாயிகளுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட நலன்கள்
தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்ற கவலை
யிலும், மாநில அரசு மத்திய அரசின் ஒரே உணவு மண்டலக்
கொள்கையைச் செயல்படுத்த முன் வந்துள்ளது.

3. சென்ற நான்கு மாத அனுபவத்தில், ஒரே உணவு
மண்டலம் அமைத்த பின்பு, அண்டை மாநிலங்களிலிருந்து
தமிழகத்திற்கு அரிசி வரத்து குறைந்துள்ளது தெளிவாகிறது.
தென் உணவு மண்டல அமைப்பில். அக்டோபர் 1976 முதல்
1977-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் நாள் வரை ஆந்திரா
விலிருந்து 59,000 டன்களும், கர்நாடகத்திலிருந்து 7,000 டன்
களும், ஆக 66,000 டன்கள் அரிசி தமிழகத்திற்கு வந்தன.
இவ்வாண்டு அக்டோபர் 1977 முதல் 1978-ம் ஆண்டு பிப்ரவரி

மாதம் 19-ம் நாள் வரை, ஆந்திரத்திலிருந்து 37,000 டன்களும், கர்நாடகத்திலிருந்து 3,500 டன்களுமே வந்துள்ளன—வட மாநிலங்களிலிருந்து வந்துள்ள சுமார் 10,000 டன்களையும் சேர்த்து மொத்தம் 51,000 டன்களே, சென்றாண்டு வந்த 66,000 டன்களுக்கு எதிராக வந்துள்ளன.

4. நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக அமைக்கப்படும் என்று அறிவித்த அதே நேரத்தில், பொது விநியோக முறை தொடர்ந்து நடத்தப்படும் என்பது மட்டுமல்லாமல், விரிவாக்கப்படும் என்றும் மத்திய அரசு அறிவித்தது. உற்பத்தியாளர் உற்பத்தி செய்ய உற்சாகம் அளித்து, வர்த்தகர்கள் வாணிபம் செய்யச் சுதந்திரம் தந்து, நுகர்வோர் வாங்கிப் பயன்படுத்த வசதி செய்து, இந்தச் சுதந்திரமான பொருளாதார நடவடிக்கையில் அரசு குறுக்கிடாது என்ற சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டால், கட்டுப்பாடு நீக்கக் கொள்கை முற்றிலும் பொருத்தமானதாக இருக்கும். ஆனால், ஒரே உணவு மண்டலம் என்ற கொள்கையை அறிவித்துவிட்டு, அதே நேரத்தில், பொதுவிநியோகமுறை, தொடர்ந்து நடத்தப்படும் என்பது மட்டுமல்லாமல், விரிவாக்கப்படும் என்று அறிவித்த கொள்கையின் பின்னணியில், சில கொள்கை முரண்பாடுகளும் நிர்வாகச் சிக்கல்களும் ஏற்படும் என்பதை தமிழக அரசு எடுத்துக் காட்டியது. ஆயினும், அனைத்திந்தியக் கொள்கையைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கான சூழ்நிலையை அமைப்பதில், மாநில அரசு தனக்கு உரிய பங்கை செய்ய முன்வந்துள்ளது:

## கொள்முதலின் இன்றியமையாமை

5. பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றால், கொள்முதலைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றாகிறது. கொள்முதல் நடத்துவதென்றால், ஓரளவு கட்டுப்பாடுகளைச் செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது. கொள்முதல் செய்வதற்கு மூன்று வழிகள் நமக்கு உள்ளன. விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யலாம். இவ்வாறு கொள்முதல் செய்யும்போது, விவசாயிகள் தங்கள் உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசுக்கு கொள்முதல் விலைகளில் கொடுப்பதைக் கண்காணிக்கச் சில கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டியிருக்கும். கொள்முதலுக்கு நெல்லை அளந்த பின்புதான், உபரி நெல்லை வெளிச் சந்தையில் விற்க அனுமதிக்க வேண்டியிருக்கும். மேலும் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்வதால், நடைமுறையில் விவசாயிகளுக்குப் பல இன்னல்களும் இடர்ப்பாடுகளும் ஏற்பட இடமுண்டு. விவசாயிகளுக்கு இலாபகரமான கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டுமென்ற கருத்தை தமிழக அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்திக் கூறியிருந்த போதிலும், மத்திய அரசு நாம் எதிர்பார்த்த அளவு, கொள்முதல் விலையை உயர்த்தவில்லை. இவற்றை





எல்லாம் மனதிற் கொண்டுதான், விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வது இச்சூழ்நிலையில் விவசாயிகளின் நலனுக்கு உகந்தது அல்ல என்ற முடிவுக்கு தமிழக அரசு வந்தது.

6. கொள்முதல் செய்வதற்கு மற்றொரு முறை, வர்த்தக லெவி. மாநிலம் முழுவதும் மொத்த வியாபாரிகள் தாங்கள் வாங்கும் நெல், அரிசியில் ஒரு பகுதியை அரசுக்கு கொள்முதல் விலைகளில் கொடுத்து விட வேண்டுமென்று நிர்ணயிப்பது இந்த முறை. 1976-ம் ஆண்டு அக்டோபர் 15-ம் தேதி முதற்கொண்டு 1977-ம் ஆண்டு அக்டோபர் 16-ந் தேதிவரை வர்த்தக லெவி முறையைப் பின்பற்றி, கொள்முதல் தமிழகத்தில் செய்யப்பட்டு வந்தது. அப்போது, மொத்த வியாபாரிகள் தாங்கள் வாங்கிய நெல், அரிசியில், 40 சதவீதத்தை அரசுக்கு லெவியாகக் கொடுத்து விட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மாநிலம் முழுவதும் வர்த்தக லெவி முறையைப் பின்பற்றுவது என்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் நெல், அரிசி, நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிவரும். உபரி மாவட்டங்கள், பற்றாக்குறை மாவட்டங்கள் என்ற பாகுபாடு செய்யாமல், எல்லா மாவட்டங்களிலும் வர்த்தக லெவி விதித்தால் குறிப்பாக பற்றாக்குறை மாவட்டங்களில் விலைகள் ஏறி விடுவதற்கும், அதனால் பொதுமக்களின் நலன் பாதிக்கப்படுவதற்கும் இடமுண்டு. மேலும், 1976-ம் ஆண்டில் வர்த்தக லெவியைச் செயல்படுத்தியபோது ஏற்பட்ட அனுபவம் நமக்கு ஊக்கம் அளிக்கக்கூடியதாக இல்லை. சொந்தத் தேவைக்காக மநிலமெங்கும் தடையின்றி நெல், அரிசியை எடுத்துச் செல்லலாம் என்று விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு இருந்த சலுகையை வர்த்தகர்களில் ஒரு பகுதியினர் தவறாகப் பயன்படுத்தி, வர்த்தக லெவி திட்டத்திற்கே குந்தகம் ஏற்படுத்தினர் என்பதையும் நடைமுறையில் நாம் கண்டோம். இதையெல்லாம் மனதிற்கொண்டுதான், வர்த்தக லெவி முறை மூலமாகவே கொள்முதல் செய்தது இச்சூழ்நிலைக்கு ஏற்றதல்ல என்று அரசு கருதியது.

## தற்போதைய கொள்முதல் முறை

7. ஆலைகள் மீது லெவியை விதித்துக் கொள்முதல் செய்வது, மூன்றாவது வழி. இத்திட்டத்தின்படி நெல், அரிசி மொத்த வியாபார உரிமம் பெற்றுள்ள பெரிய ஆலைகளும், ஊறல், உலர்த்தல் ஆகியவற்றிற்கு வசதி பெற்றுள்ள ஆலைகளும் மாதம் 150 டன் நெல்லும், அதற்கு மேற்பட்டும், அரைப்பதற்கு வசதி பெற்றுள்ள ஆலைகளும் தாங்கள் உற்பத்தி செய்யும் அரிசியில் 20 சதவீதம் அரசுக்கு லெவியாக, அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளில் செலுத்த வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருதி, கூலிக்கு அரைவை செய்யும் சிறிய ஆலைகளுக்கு இந்த லெவி திட்டத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மற்ற பெரிய ஆலைகளும், விவசாயிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் கூலிக்கு அரைவை செய்யலாமென்றும், அந்த அரைவைக்குத் தனியாக கணக்கு வைத்துக்கொண்டு, அதற்கு லெவி தரவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஏறக்குறைய 14,700 அரிசி ஆலைகளில், 9,000-க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் முழுவதும் கூலி அரவை செய்யும் சிறிய ஆலைகள் என்று கருதப்பட்டு லெவி திட்டத்திலிருந்து விலக்கு பெற்றுள்ளன. இவ்வாறு ஒட்டு மொத்தமாக விலக்கு அளிப்பது கொள்முதலுக்குக் குந்தகமாக அமையும் என்ற அச்சம் இருந்தபோதிலும், ஆலை லெவி திட்டத்தைச் சாக்காகக் காட்டி, விவசாயிகளுக்கு இடைஞ்சலோ, சிரமமோ, ஏற்பட இடம் தரக்கூடாதென்ற கவலையில், அரசு இந்த விலக்கை அளித்துள்ளது.

8. கூட்டுறவு அமைப்புகள் மலிவு விலைகளில் அரிசியை விற்க வசதி செய்வதற்காக அவை நெல்லை தங்கள் சொந்த அரைவை ஆலைகளிலோ, குத்தகைக்கு எடுத்து தாங்களே இயக்கும் ஆலைகளிலோ, அரைவை செய்தால், அந்த அரைவைக்கு லெவியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

9. ஆலைகள் மீது விதிக்கப்படும் லெவிக்கு மேலாக உபரி மாவட்டங்களாகிய தஞ்சை, வட ஆற்காடு, தென் ஆற்காடு செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கு மட்டும், நெல்லுக்கு 20 சதவிதமும், அரிசிக்கு 10 சதவிதமும், லெவி விதிக்கப் படுகிறது. இந்த உபரி மாவட்டங்களிலிருந்து நெல்லும் அரிசியும் அளவுக்கு மீறி வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, அதன் காரணமாக அந்த மாவட்டங்களில், தட்டுப்பாடு ஏற்பட்டு விலைகள் உயர்ந்து விடக்கூடாது என்ற கவலையில், அந்நிலைமை உருவாவதைத் தடுக்க, இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளது. அதே சமயத்தில் நெல் விளைச்சலே இல்லாத சென்னை நகருக்குப் போதிய வரத்தை உறுதிப்படுத்த, நெல், அரிசி, போக்குவரத்துக்கு, செங்கல்பட்டு மாவட்டமும், சென்னை நகரும் ஒரு தொகுதியாகக் கருதப்பட்டுள்ளன. சென்னை நகருக்குள் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்படும் நெல், அரிசிக்கு, இந்த வர்த்தக லெவி கிடையாது.

10. தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், கைக்குத்தல் கூட்டுறவு சங்கங்கள் முதலியவைகளும் மலிவு விலையில் அரிசி வழங்க வகை செய்வதற்காக உபரி மாவட்டங்களிலிருந்து, வர்த்தக லெவி கொடுக்காமல் நெல், அரிசியை எடுத்து வர, தனி அனுமதிகளை உணவுத்துறை ஆணையர் அளிக்கலாமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

11. இதுதான் தமிழக அரசு இப்பொழுது பின்பற்றி வரும் கொள்முதல் லெவிமுறை.



12. தமிழகத்தில், பொது விநியோக முறையின்கீழ், விநியோகம் செய்வதற்கு ஆண்டுக்கு ஆறு லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. இந்த அளவில் விநியோகம் நடத்துவதற்கு வசதி செய்ய, சேமிப்பாக எப்போதும் ஒரு லட்சம் டன் அரிசி கையிருப்பில் இருப்பது அவசியம். ஆகவே, ஆண்டுக்கு ஏழு லட்சம் டன்கள் அரிசியைச் சேகரிக்கும் நோக்கத்துடன் கொள் முதல் திட்டங்கள் வகுக்க வேண்டும்.

13. பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற கொள்கை மத்திய அரசினுல் வலியுறுத்தப்பட்டு மாநில அரசினுலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சூழ்நிலையில், தொடர்ந்து கொள்முதல் செய்வது அவசியமாகிறது. விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாத முறையிலும், வெளிச் சந்தையில் விலைவாசிகள் ஏறிவிடாமல் கண்காணிக்கும் வகையிலும், தமிழக அரசு கொள்முதல் முறையை வகுத்துள்ளது.

விவசாயிகள் நலனுக்கு உகந்த முறை

14. விவசாயிகளிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்யும் முறை, இப்போது கைவிடப்பட்டுள்ளது. முன்பு ஒவ்வொரு மாவட்டமும் தனித் தொகுதியாகப் பாவிக்கப்பட்டு, அந்த மாவட்டங்களை விட்டு நெல்லும், அரிசியும் எடுத்துச் செல்லப்படுவதற்கு தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இப்போது அத்தடைகள் நீக்கப்பட்டு விட்டன. 1974–75-ம் ஆண்டு வரை, தனியார், நெல், அரிசியில், மொத்த வியாபாரம் செய்வதன்மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்நிலையில் விவசாயிகள் தங்கள் நெல் முழுவதையும் அரசுக்கே விற்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டிருந்தது. இப்போது இத்தடையும் நீக்கப்பட்டு தனியார் நெல், அரிசியில், மொத்த வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். சில்லறை வர்த்தகர்களும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இச்சூழ்நிலையில், விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் நெல்லில், தங்கள் தேவைக்கு வேண்டியதைத் தவிர, உபரி முழுவதையும் வர்த்தகர்களுக்கு இலாபகரமான விலையில் விற்பதற்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தமிழக அரசின் புதிய கொள்முதல் முறை, விவசாயிகளின் நலனுக்குப் பெரிதும் உகந்ததாக அமைந்துள்ளது தெளிவாகும்.

வர்த்தகர்களுக்கு வசதியான முறை

15. வர்த்தக லெவியைப் பொறுத்த வரையிலும் கூட 1976-ம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் வர்த்தக லெவி விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அது நான்கு உபரி மாவட்டங்களில் மட்டும்தான் விதிக்கப்பட்டுள்ளது. முன்பு மாநிலம் முழுவதும் மொத்த வியாபாரிகள் வாங்கிய நெல் அரிசியின் மீது 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டிருந்தது. இப்போதோ, உபரி மாவட்டங்களை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கு மட்டும்தான், அதுவும் நெல்லாக

1978 மார்ச் 27]

இருந்தால் 20 சதவீதமும் அரிசியாக இருந்தால் 10 சதவீதமும், லெவி விதிக்கப்படுகிறது. பற்றுக்குறை மாவட்டங்களுக்குள் தனியார் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படும் நெல், அரிசிக்கு, வர்த்தக லெவி விதிக்கப்படவில்லை. உபரி மாவட்டங்களில்கூட, அந்த மாவட்டங்களுக்குள்ளாக விற்கப்படும் நெல், அரிசிக்கு, வர்த்தக லெவி கிடையாது. உபரி மாவட்டங்களை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல்லு அரிசிக்குத்தான், வர்த்தக லெவி. அதுவும் முன்பு இருந்ததிற்கு பாதிக்கும் குறைவான அளவில், விதிக்கப்படுகிறது. ஆகவே புதிய லெவி முறையின் கீழ், பொது மக்கள் நலனுக்கு உகந்த முறையில் பணியாற்ற வர்த்தகர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டு, அவர்கள்மீது முன்பிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன என்பதும், இந்த கொள்முதல் முறையினால் வர்த்தகர்களும் பலனடைய வாய்ப்புள்ளது என்பதும் தெளிவாகும். மேலும், வெளிச்சந்தையில் அரிசி புழக்கம் பரவலாக இருக்க வசதி செய்யும் வகையில், தனியார் வியாபாரிகளுக்கு நெல், அரிசி, வியாபாரம் செய்ய தாராளமாக உரிமங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. தவிர, மொத்த வணிகர்கள் தாங்கள் உரிமம் பெற்ற மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களிலும் நெல், அரிசி வாங்க மேற்சான்றுகள் வாங்க வேண்டியிருந்த நிலையை மாற்றி, அவர்கள் மாநிலமெங்கும் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நடைமுறைக்கேற்ற ஆலை லெவித் திட்டம்

16. ஆலை லெவியைப் பொறுத்த வரையில் கூட, ஆலைகள் மீது அதிக சுமை ஏற்படாத வகையிலே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆலை லெவித் திட்டம் என்பது, தமிழக அரசினால் புதிதாகக் கொண்டு வரப்பட்டது அல்ல. தமிழகத்திலே முன்பு 1962-63ல், இத்திட்டம் செயல் படுத்தப் பட்டு வந்தது தான். மேலும் மற்ற மாநிலங்களில் பெரும்பாலானவற்றில் ஆலை லெவித் திட்டம்தான் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஆலை லெவி 50 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் 20 சதவீதம்தான் விதிக்கப்பட்டுள்ளது. கூலி அரைவை செய்யும் சிறிய ஆலைகளுக்கு முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பெரிய ஆலைகளும் கூலிக்கு அரைவை செய்யலாமென்றும், அதற்கு லெவி செலுத்த வேண்டியதில்லை என்று சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

17. ஆலைகளில் செய்யப்படும் நெல் அரைவை மூன்று வகையானது. மொத்த வியாபார உரிமம் பெற்றுள்ள ஆலை அதிபர்கள் வியாபாரத்திற்காகத் தாங்கள் வாங்கிய நெல்லை அரைவை செய்து கொள்வது, ஒரு வகை. இவர்கள் லெவி விதிக்கப்படுவது முற்றிலும் அவசியமானதும், பொருத்தமானதுமாகும். மொத்த வியாபார உரிமம் பெற்றுள்ள ஆலைகள் இந்த லெவியைச் செலுத்துவதில் எந்தவிதச் சிரமமும்பட நியாயம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழ்



[1978 மார்ச் 27

நாட்டில் விதிக்கப்பட்டுள்ள 20 சதவீத ஆலை லெவி, மற்ற பல மாநிலங்களில் விதிக்கப்பட்டுள்ள 50 சதவீத ஆலை லெவியைவிட, மிகவும் குறைவானதாகும். மேலும் தமிழ் நாட்டிலேயே 1976-ம் ஆண்டு வர்த்தக லெவி முறையின் கீழ், 40 சதவீத லெவி விதிக்கப்பட்டிருந்தது. இப்போது ஆலைகள்மீது விதிக்கப்பட்டுள்ள லெவி 20 சதவீதம்தான்.

18. சொந்தமாக ஆலை இல்லாத, ஆனால் மொத்த வியாபார உரிமம் பெற்றுள்ள வியாபாரிகள், தங்கள் நெல்லை மற்ற ஆலைகளுக்குக் கொண்டுவந்து அரைத்துக் கொள்வது, இரண்டாவது வகை. இவர்கள் தங்கள் நெல்லை ஆலைகளுக்கு அரைவைக்குக் கொண்டு வருகின்றார்கள் என்றும், ஆலைக்காரர்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு அரைவை செய்து கொடுக்கின்றனர் என்றும், ஆகவே இந்த வகை அரைவையைப் பொறுத்த வரையில் லெவியை அவர்களிடமிருந்து பெற்று அரசுக்குச் செலுத்துவதில் சிரமம் இருக்கிறதென்றும், ஆலை அதிபர்கள் முறையிட்டனர். இதில் சிக்கலுக்கோ ஐயப்பாட்டுக்கோ இடமில்லாமல் நிலைமையைத் தெளிவு படுத்துவதற்காக, நெல்லை ஆலைக்கு அரைவைக்கு கொண்டு வரும் மொத்த வியாபாரிகள், அரைவையாகும் அரிசியில் 20 சதவீதத்தை லெவியாகச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளவர்கள் என்பதையும், இந்த லெவி அரிசியை அந்த வியாபாரிகளிடமிருந்து அரசின் சார்பில் பெற்றுத்தரும் பொறுப்பு ஆலை அதிபர்களைச்சாரும் என்பதையும், தெளிவுபடுத்தி 1977-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் நாள் அரசு தெளிவான ஆணை பிறப்பித்துள்ளது. ஆலைக்கு அரைவைக்கு நெல் கொண்டு வரும் வியாபாரிகள் அதற்குண்டான லெவியைச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பது இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த வியாபாரிகளிடமிருந்து லெவியைப் பெற்று அரசுக்குச் செலுத்துவதில் ஆலை அதிபர்களுக்கு எந்தவிதமான சிரமமுமில்லை.

19. விவசாயிகள் தங்கள் சொந்த நெல்லை கூலிக்கு அரைவை செய்ய ஆலைகளுக்குக் கொண்டு வருவது, மூன்றாவது வகை. பொதுவாக, இத்தகைய கூலி அரைவை சிறிய ஆலைகளில்தான் நடைபெறுகிறது. கூலி அரைவை செய்யும் சிறிய ஆலைகளுக்கு லெவி திட்டத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆலை லெவி திட்டத்தின் பயனாக, விவசாயிகளின் சொந்தத் தேவைக்கான அரைவைக்கு இடைஞ்சல் ஏற்பட எந்தவிதமான நியாயமும் இல்லை. மொத்த வியாபாரம் செய்யும் பெரிய ஆலைகள் கூட, விவசாயிகளின் நெல்லைக் கூலிக்கு அரைவை செய்வது தடுக்கப்படவில்லை. அதற்குத் தனியாகக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு லெவி செலுத்தவேண்டியதில்லையென்று தெளிவாக்கப்பட்டுள்ளது. சில்லறை வர்த்தகர்களுக்காக கூலி அரைவை செய்யப்படும் அரிசிக்கும் லெவி கிடையாது. ஆகவே, ஆலைகளுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல், இந்த ஆலை லெவி திட்டம் மிகுந்த அனுதாபத்துடன் வகுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகும்.

1978 மார்ச் 27]

20. விவசாயிகளுக்கோ, வர்த்தகர்களுக்கோ, ஆலை அதிப களுக்கோ, எந்தவித சிரமமும் இடைஞ்சலும் இல்லாம நடைமுறையில் சாத்தியமான, பொது நலனுக்கு ஏற் நியாயமான முறையில், தமிழகத்தின் நற்போதையக் கொ முதல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதை உணர்ந்து ஆ லெவி திட்டத்திற்கு, ஆலை அதிபர்களும், வர்த்தகர்களும் மு ஒத்துழைப்பு அளிக்க முன்வருவார்கள் என்று அரசு எதிர்பா கின்றது.

21. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள ஆலை லெவி திட்ட தின் கீழ், 1977 அக்டோபர் 17-ம் நாள் முதற்கொண்டு 197 பிப்ரவரி 21-ம் நாள் முடிய, 25,000 டன்கள் அரிசிக்குப் குறைவாகவே கொள்முதல் செய்ய முடிந்துள்ளது. உபரி மாவட்டங்களை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கு, விதிக்கப்படும் வர்த்தக லெவி திட்டத்தின் கீழ் 35,000 டன்கள் அரிசிதான் கொள்முதல் செய்ய முடிந்துள்ளது இவ்வளவு அனுதாபமாக லெவி திட்டம் வகுக்கப்பட்டுள் போதிலும், இதற்குப் பல எதிர்ப்புகளும் ஏய்ப்புகளு தொடர்ந்து இருந்து வருகின்றன என்பது வருந்தத்தக்கது. நு வோரின் நலனைக் கருதி, பொது விநியோக முறையைத் தொட நடத்துவதற்காக, வகுக்கப்பட்டுள்ள இந்த கொள்முதல் திட்டத்தின் பொது நல நோக்கத்தை உணர்ந்து, இதை வெற்றி கரமாக நடத்திக் கொடுக்க வர்த்தகர்களும் ஆலை அதிபர்களு முன்வருவார்களென்று நம்புகிறோம்.

22. இந்த லெவி திட்டத்தின் மற்றொரு சிறப்பான அம்சம், சில்லறை வியாபாரிகளுக்கு இதிலிருந்து முழுவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது என்பதாகும். மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் சில்லறை வியாபாரிகள் லெவி எதுவும் செலுத்த வேண்டியதில்லை. மேலும், சில்லறை வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து நெல்லையோ அரிசியையோ வாங்கக் கூடாதென்றும், மொத்த வியாபாரிகளிடமிருந்துதான் வாங்கவேண்டுமென்றும், முன்பு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த நிபந்தனையும் நீக்கப்பட்டு, சில்லறை வியாபாரிகள் தாங்கள் வர்த்தகம் செய்ய சான்றிதழ் பெற்றுள்ள மாவட்டத்திற்குள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கிக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் வெளிச்சந்தையில் விலைகள் நயமாக இருக்கவேண்டுமென்பதற் காக, இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கைகள்

23. தமிழகத்தில் பொது விநியோக முறையின்கீழ் விநியோகம் செய்வதற்கு, மாதம் ஐம்பதாயிரம் டன்கள் அரிசி தேவை என்ற அடிப்படையில், ஆண்டுக்கு ஆறு இலட்சம் டன்கள் அரிசி தேவைப்படுகிறது. 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து



1978 மார்ச் 27]

1975-ம் ஆண்டு மார்ச்சு வரை 4.07 இலட்சம் டன்களும், 1975-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 1976-ம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை 4.29 இலட்சம் டன்களும், 1976-ம் ஆண்டு ஏப்ரல் மாதத் திலிந்து 1977-ம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை 7.16 இலட்சம் டன்களும், 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 4.10 இலட்சம் டன்களும், பொது விநியோக முறையின்கீழ் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ஆண்டுக்கு ஆறு இலட்சம் டன்கள் விநியோகம் செய்யும் திட்டத்தை நடத்துவதற்கு நம்முடைய கையிருப்பில் எப் பொழுதும் ஒரு இலட்சம் டன்கள் இருக்க வேண்டும். ஆகவே, மொத்தம் ஏழு இலட்சம் டன்களை சேகரிக்க நாம் திட்டம் வகுக்க வேண்டும். லெவி கொள்முதல் திட்டத்தின் கீழ் சுமார் இரண்டு இலட்சம் டன்கள் கிடைக்குமென்று நாம் கணக்கிட்டிருந்தோம். 1977-ம் ஆண்டு அக்டோபரிலிருந்து 1978-ம் ஆண்டு பிப்ரவரி 20-ந் தேதி வரை, சுமார் 60,000 டன்கள்தான் லெவிக் கொள் முதலின் மூலம் நமக்குக் கிடைத்துள்ளன. ஆகவே, லெவி கொள்முதல் திட்டத்தின் கீழ் நாம் எதிர்பார்ப்பதிலேயே பெரும் துண்டு விழும். இதுபோக, ஐந்து லட்சம் டன்களை நாம் சேகரிக்க வேண்டியிருக்கும். மத்திய அரசிடமிருந்து கணிசமான ஒதுக் கீட்டை நாம் கோரியுள்ளோம். ஆனால் இதில் ஒரு பெரும் சிக்கல் உள்ளது. மத்திய அரசின் கையிருப்பில் இருப்பது பெரும்பாலும் பச்சரிசியே. நம்முடைய மாநிலத்தில் பொது விநியோக முறையின் கீழ் தேவைப்படுவது, புழுங்கல் அரிசி. இது போதுமான அளவு மத்திய அரசிடம் இல்லை. 1977-ம் ஆண்டு அக்டோபர் முதற்கொண்டு 1978-ம் ஆண்டு பிப்ரவரி முடிய, மத்திய அரசு நமக்குச் சுமார் 4 இலட்சம் டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்ய முன்வந்த போதிலும், இதில் பெருமளவு பச்சரிசியாக இருந்த காரணத்தினாலும், புழுங்கல் அரிசியில் கூட, நம்முடைய மாநில மக்களுக்குத் தேவைப்படும் தரத்திற்கேற்ப பெரும் பகுதி அமையாத காரணத்தினாலும், நாம் 1·2 இலட்சம் டன்கள் புழுங்கல் அரிசியையும், 10,000 டன்கள் பச்சரிசியையும்தான், எடுக்க முடிந்தது. 1978-ம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நாம் இரண்டு இலட்சம் டன்கள் அரிசி எடுக்க முடியுமென்றும், லெவி கொள்முதலின் மூலம் இரண்டு இலட்சம் டன்கள் நமக்குக் கிடைக்குமென்றும், நாம் கணக்கிட்டால் கூட, நம்முடைய தேவைகளில் இரண்டு முதல் மூன்று இலட்சம் டன்கள் துண்டு விழும், இதைக் கருதித்தான், முன்னெச்சரிக்கையாக, வெளி மாநிலங்களிலிருந்து வெளிச்சந்தை அடிப்படையில் கணிசமான அளவு நெல், அரிசி, வாங்கி, கையிருப்பில் வைத்துக்கொள்ள, தமிழக அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆணையிட்டது. அதன் பேரில், 1977-ம் ஆண்டு அக்டோபருக்குப் பின்பு, சுமார் 1·2 இலட்சம் டன்கள் அரிசிக்குச் சமமான நெல்லையும், புழுங்கலரிசியையும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்க ஏற்பாடு செய்தது. மத்திய அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலை

களுக்கு மேல் கொடுக்காமல், அந்தந்த மாநிலங்களில், நெல் தனியார் வியாபாரிகளிடமிருந்து வாங்கப்பட்டது. அரிசியைப் பொறுத்தவரையிலும்கூட, நெல்லை வாங்கிய விலைக்கு ஏறக்குறைய சமமான விலைகளில்தான், அரிசி வாங்கப்பட்டுள்ளது. 1977-ம் ஆண்டு அக்டோபரில் திடீரென நாடு முழுவதும் ஒரே மண்டலமாக அமைக்கப்பட்ட நிலையிலும், அக்கொள்கையின் விளைவுகள் எவ்வாறு அமையுமென்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையிலும், தமிழகத்தின் பொது விநியோக முறையில் முறிவு எதுவும் ஏற்பட்டுவிடாமல் காக்க, முன்னெச்சரிக்கையாக நம் கையிருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இப்பொழுது நிலைமை சீராகியுள்ளதால், வெளி மாநிலங்களிலிருந்து வாங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறு வாங்கியதாலும், மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள ஒதுக்கீட்டைக் கொண்டும், நாம் தமிழகத்தில் லெவி கொள்முதல் மூலம் பெற்றுள்ள அரிசியைக் கொண்டும், தமிழகத்திலேயே சம்பா பருவத்தில் வெளிச்சந்தை விலைகளில் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கும் திட்டத்தை 1978 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து செயல்படுத்துவதாலும், நம்முடைய கையிருப்பு நிலைமையைச் சீராக்கிக்கொள்ள முடிந்தது. 1978-ம் ஆண்டு பிப்ரவரி முதல் நாளன்று, பொது விநியோக முறையின் கீழ் சுமார் ஐந்து மாத விநியோகத்திற்கு வேண்டிய அரிசி நம்மிடம் உள்ளது. முன்னெச்சரிக்கையாக தமிழக அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் பலனாகத்தான் நம் கையிருப்பு திருப்திகரமாக இருப்பதோடு, அதன் காரணமாக, வெளிச்சந்தை விலைகள் ஏறிவிடாமல் நிதானப்படுத்தக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

<u>கொள்முதல் விலை:</u>

24. 1976–77-ம் ஆண்டுக்கு கொள்முதல் விலை மோட்டா ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 74 ஆக மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதை குவிண்டாலுக்கு ரூ. 90 ஆக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்தது. கொள்முதல் விலைகளைப் பற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் பொறுப்பை ஏற்றுள்ள அனைத்திந்திய விவசாய விளை பொருள்கள் விலைவாசி ஆணைக் குழுவிடம் அதிகாரிகள் மட்டத்தில் இந்தக் கருத்து வற்புறுத்தப்பட்டது. தென் மண்டல உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக உணவு அமைச்சராலும் இக்கருத்து மத்திய உணவு அமைச்சரிடமும் வலியுறுத்தப்பட்டது. ஆயினும், விவசாய விளை பொருள்கள் விலைவாசி ஆணைக் குழு பரிந்துரைத்ததற்கு ஏற்ப, முன்பு குவிண்டாலுக்கு ரூ. 74 என்றிருந்த கொள்முதல் விலையை 1977–78-ம் ஆண்டுக்கு ரூ. 77 என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இந்த விலைகள் நாடு முழுவதற்கும் பொருந்தும் என்றும், இதற்கு மேலாக எந்த மாநிலமும் தன்னுடைய சொந்த நிதிப் பொறுப்பிலிருந்தும்கூட, போனசாகவோ, கூடுதல்



தொகையாகவோ, அதிக விலை கொடுக்கக் கூடாதென்றும், மத்திய அரசு தெளிவாக்கியுள்ளது. இதைத் தமிழகமும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

25. மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகள் நமக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கின்றபோதிலும், கொள்முதலில் முன்பிருந்த நிலைமைக்கும் இப்பொழுதுள்ள நிலைமைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை நாம் மறந்து விடக்கூடாது. முன்பு விவசாயிகளிடமிருந்து கட்டாயமாகக் கொள்முதல் செய்யப்பட்டது. இப்பொழுது அந்த நிலை இல்லை. முன்பு விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை தங்கள் மாவட்ட வர்த்தகர்களுக்குத்தான் விற்கவேண்டிய நிலை இருந்தது. இப்பொழுது வெளி மாவட்ட வர்த்தகர்களும் வாங்க வசதி செய்யப்பட்டுள்ளது. முன்பு நெல்லிலும் அரிசியிலும் தனியார் மொத்த வியாபாரம் செய்ய தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அந்தத் தடையும் நீக்கப்பட்டுவிட்டது. சில்லறை வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல் வாங்குவது தடை செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது இத்தடையும் நீக்கப்பட்டுள்ளது. இவற்றின் பலனாக விவசாயிகள் தங்கள் உபரி நெல் முழுவதையும் இலாபகரமான விலையில் வெளிச் சந்தையில் விற்றுக்கொள்ள முழுச் சுதந்திரம் பெற்றுள்ளார்கள்.

<u>விவசாயிகள் அதிக விலைபெற வாய்ப்பு:</u>

26. இந்த புதிய சூழ்நிலையின் பலனாக, பொதுவாக விவசாயிகளுக்கு நல்ல இலாபகரமான விலைகள் வெளிச்சந்தையில் கிடைத்து வருகின்றன. இந்நிலைமையை மேலும் உறுதிப்படுத்த, மோட்டா ரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ. 90 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை குவிண்டாலுக்கு ரூ. 95 என்ற விலையிலும் விவசாயிகளிடமிருந்து வெளிச்சந்தை வியாபார அடிப்படையில் நேரடியாக வாங்க ஏற்பாடுகள் செய்யுமாறு, தமிழக அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆணையிட்டுள்ளது. இப்புதிய திட்டம் 1978-ம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 117 நேரடி வாங்கும் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிறுவியுள்ளது. மாநிலத்தின் மற்ற பகுதிகளையும் சேர்த்து மொத்தமாக 263 நிலையங்கள் இதுவரை திறக்கப்பட்டுள்ளன. இவற்றில், விவசாயிகள் மோட்டா ரக நெல்லை குவிண்டால் ரூ. 90 என்ற விலையிலும், நடுத்தர ரக நெல்லை குவிண்டால் ரூ. 95 என்ற விலையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்றுக்கொள்ளலாம். இந்த நடவடிக்கையை விவசாயப் பெருமக்கள் பெரிதும் வரவேற்றுள்ளது அரசுக்கு உற்சாகம் அளிக்கின்றது. இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி மாத இறுதி வரை, 13,000 டன்களுக்கு மேலாக நெல் வாங்கப்பட்டுள்ளது.

## பொது விநியோக அரிசியின் விற்பனை விலைகள்:

27. பொது விநியோக முறையின் கீழ் அரிசியின் சில்லறை விற்பனை விலைகள், மோட்டா ரகத்திற்கு கிலோ ரூ. 1.60 ஆகவும், நடுத்தர ரகத்திற்கு ரூ. 1.60 ஆகவும், சன்ன ரகத்திற்கு ரூ. 1·85 ஆகவும், இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மிகச் சன்ன ரக அரிசியின் விலை கிலோ ரூ. 2.25 ஆக இருந்ததை 1977 நவம்பர் முதல் கிலோ ரூ. 2.00 ஆகக் குறைத்துள்ளோம். இப்பொழுதுள்ள சில்லறை விற்பனை விலைகளிலேயே, அரசுக்குப் பெருமளவு நட்டம் ஏற்படுகின்றது என்ற போதிலும், இந்த விலைகளை மேலும் குறைக்க இடமுண்டு என்ற கருத்து பரவலாகக் கூறப்படுகிறது. இதை நாம் ஆராய்ந்து உண்மை நிலையைக் காணவேண்டும். 1947-ல் தமிழகத்தில் பொது விநியோக முறை இயங்கத் தொடங்கிய காலம் முதற்கொண்டே, அரிசியின் சில்லறை விற்பனை விலை, நெல்லின் கொள்முதல் விலையை விட இரண்டு மடங்கு உயர்வாக, தொடர்ந்து இருந்து வந்துள்ளது. நடுத்தர ரக நெல்லின் விலை ரூ. 78 ஆக இருந்தபொழுது நிர்ணயிக்கப்பட்ட சில்லறை விற்பனை விலையாகிய கிலோ ரூ. 1·60 தான், நடுத்தர ரக நெல்லின் கொள்முதல் விலை ரூ. 81 ஆக இப்பொழுது உயர்த்தப்பட்ட பின்பும், சில்லறை விற்பனை விலை உயர்த்தப்படாமல், தொடர்ந்து வருகிறது. ஒரு குவின்டால் அரிசியைத் தயார் செய்வதற்கு $1\frac{1}{2}$ குவின்டால் நெல் தேவைப்படுகிறது. ஒரு குவின்டாலின் நெல் விலை ரூ. 81 என்றால், ஒரு குவின்டால் அரிசியை தயார் செய்யத் தேவையான $1\frac{1}{2}$ குவின்டால் நெல்லுக்கு விலை ரூ. 121.50 ஆகிறது நெல்லைக் கொள்முதல் செய்யும் இடத்திலிருந்து சேமிப்பு கிடங்குகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதன் பின்பு அரைவை செய்யும் மானட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அரிசி தயார் ஆன பின்பு, ஆலையிலிருந்து, அதை விநியோகம் செய்யப்பட வேண்டிய மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். கொள்முதல், உபரி மாவட்டங்களில் தான் பெருமளவு நடக்கின்றது. விநியோகம், பெரிதும் பற்றாக்குறை மாவட்டங்களில் நடக்கின்றது. ஆகவே, அந்தந்த மாவட்டங்களில் கொள்முதலாகும் நெல்லை அந்தந்த மாவட்டங்களிலேயே விநியோகம் செய்வதென்பது சாத்தியமில்லை. மேலும் நம் மாநிலத்தில், அரைவை ஆலைகள் பெரும்பாலும் ஒரு சில மாவட்டங்களில் குவிந்து கிடக்கின்றன. குறுவை நெல்லை தஞ்சை மாவட்டத்தில் அரைப்பதில்லை. ஆகவே, அரைவைக்காக வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதன் பயனாக நெல்லை அரைவைக்கு எடுத்துச் செல்லும்போது ஒரு கட்டத்திலும், அரிசியை விநியோகத்திற்கு எடுத்துச் செல்லும்போது இன்னொரு கட்டத்திலும், போக்குவரத்துச் செலவை ஏற்கவேண்டியுள்ளது. நெல்லை இருப்பில் வைக்க சாக்குக்குச் செலவாகிறது. ஈர நெல்லைப் பிடிப்பதால் சாக்குகள் பழுதடைந்து விடுவதால், அரிசியை சேமித்து வைப்பதற்காகும் புது சாக்குகளுக்கான செலவையும் ஏற்க வேண்டியுள்ளது. நம்முடைய மாநிலத்தில் கொள்முதல் செய்யக்கூடிய முக்கியப் பருவங்கள், குறுவைப் பருவமும், சம்பாப் பருவமும் ஆகும்.



ஆண்டு முழுவதற்கும் தேவையான நெல்லை அந்த பருவங்களில் நாம் வாங்கிக் கொண்டு, நெல்லை சேமித்து வைக்க வேண்டும். சேமிப்புச் செலவை, குறைந்தது, ஆறு மாதங்களுக்கு ஏற்க வேண்டியுள்ளது. இதற்கான சேமிப்புச் செலவையும், சேமிப்பு கிடங்குகளுக்கு வாடகையையும், செலுத்த வேண்டும். மேலும், ஒரு இலட்சம் டன்கள் நடுத்தர ரக நெல்லை வாங்கி அரிசியை தயார் செய்வதற்கு ஆகும் செலவு 16.89 கோடி ரூபாய் ஆகும். 7 இலட்சம் டன்களை வாங்குவதென்றால் இதற்காகும் செலவு 118.23 கோடி ரூபாய் ஆகும். இதை நாம் ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெறுகிறோம். ரிசர்வ் வங்கிக்கு 12 சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும். 118 கோடி ரூபாய்க்கு வட்டி மட்டும் 6 மாதங்களுக்கு 7.08 கோடி ரூபாய் ஆகின்றது, பொது விநியோகம், மாநிலமெங்கும் பரவிக்கிடக்கும் பற்பல கிராமங்களில் நடக்கின்றது. மாவட்ட சேமிப்பு கிடங்குகளிலிருந்து இந்த கிராமங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும். அங்கு சில்லறைக் கடை நடத்தும் நிறுவனங்களுக்கு, சில்லறை விற்பனைக் கழிவாக ஒரு குவின்டால் அரிசிக்கு ரூ. 4 தருகிறோம். இதுவே போதாது என்றும், இதனால் நட்டம் ஏற்படுகின்றது என்றும், சில்லறைக் கடைகளை நடத்தும் பல கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கின்றன. இவ்வளவு பெரிய நிர்வாக ஏற்பாடுகளைச் செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, நிர்வாகச் செலவுக்காக, 2 விழுக்காடு தான் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுத் துறையில் மற்ற வர்த்தக நிறுவனங்கள் நிர்வாகச் செலவுக்காக ஒதுக்கியுள்ள செலவுடனும், தனியார் வியாபாரிகள் நிர்வாகச் செலவுக்காகவும் லாபத்துக்காகவும் ஒதுக்கும் தொகையுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த 2 விழுக்காடு மிகக் குறைவாகும், இதைத் தவிர லாபத்திற்காகத் தனியாக ஒதுக்கீடு எதுவும் செய்யப்படுவதில்லை, இந்த செலவுகளையெல்லாம் சேர்க்கும் பொழுது, நடுத்தர அரிசியின் அடக்க விற்பனை விலை கிலோ ரூ. 1.73 ஆகிறது. அடக்க விலை ரூ. 1.73 ஆகின்றபோதிலும், சில்லறை விற்பனை விலை ரூ. 1.60 ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

28. மேலும் நமக்குத் தேவைப்படும் ஏழு இலட்சம் டன்களில், ஒரு பகுதி தான் கொள்முதல் விலைகளில் கிடைக்கின்றது, ஒரு பகுதியை நாம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறோம். மத்திய அரசு நடுத்தர ரக அரிசியைத் தன்னுடைய மத்திய கிடங்குகளிலிருந்து குவின்டாலுக்கு ரூ. 152 என்ற விலைக்குத் தருகிறது. இதையும் நாம் சேமித்து வைத்து, சில்லறை விற்பனைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வதற்கான செலவை ஏற்கவேண்டியுள்ளது, இந்த அரிசியை கிலோ ரூ. 1.60 என்று விற்பதில் பொதுவாக லாபம் இல்லை. ஆனால் சேமிப்புக் காலம் நீண்டு விட்டால், நட்டமும் ஏற்படும். மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் ஒதுக்கீட்டைத் தவிர, நாம் நம்முடைய கையிருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, கொள்முதல் விலைகளுக்கு மேலான விலைகளைக் கொடுத்து தமிழகத்தில் வெளிச் சந்தையில்

வாங்குகிறோம். இத்திட்டத்தின்கீழ், நாம் தமிழகத்தில் இப்பொழுது விவசாயிகளிடமிருந்து மோட்டா ரக நெல்லை குவின்டாலுக்கு ரூ. 90 என்ற விலைக்கும், நடுத்தர ரக நெல்லை குவின்டாலுக்கு ரூ. 95 என்ற விலைக்கும், வாங்கி வருகிறோம். இந்த விலைகளைக் கொடுத்து வாங்கும் நெல்லுக்கு, அரிசியின் அடக்க விலை மோட்டா ரகத்திற்கு கிலோ ரூ. 1·89 ஆகவும், நடுத்தர ரகத்திற்கு கிலோ ரூ. 1.97 ஆகவும், அமைகிறது.

29. நாம் இப்பொழுது விநியோகத்திற்காகச் சேகரிக்கும் அரிசியில் மிகக் குறைவான பகுதிதான் கொள்முதல் விலைகளில் கிடைக்கிறது. ஒரு பகுதி மத்திய அரசிடமிருந்து கிடைக்கிறது. இரண்டையும் சேர்த்து மொத்தமாக இப்பொழுது நிர்ணயிக்கப் பட்டுள்ள விலைகளில் விற்பதிலேயே நமக்கு நட்டம் ஏற்படுகிறது. பெரும் பகுதியை நாம் கொள்முதல் விலைகளுக்கு மேலான வெளிச் சந்தை விலைகளைக் கொடுத்துதான் வாங்குகிறோம். இதில் நமக்குக் கணிசமான நட்டம் ஏற்படுகிறது. இந்த மூன்று வழிகளிலும் நாம் நெல்லைப் பெறுவதால் தான் நாம் பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்த முடிகிறது. நாம் சில்லறை விற்பனை விலையை நிர்ணயிக்கும்பொழுது, இந்த மூன்று வழிகளில் நெல்லை சேகரிப்பதற்காக நமக்கு ஆகும் செலவையும் மனதிற் கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் நிர்ணயித்துள்ள சில்லறை அரிசி விற்பனை விலை, கொள்முதல் விலைகள் அடிப்படையில் கணக்கிட்டாலே, நமக்கு இலாபகரமாக இல்லை. இந்த உண்மைகளைச் சீர்தூக்கி ஆராயும்பொழுது, பொது விநியோக முறையின்கீழ், இப்பொழுது நிர்ணயித்துள்ள விலைகளால் அரசுக்குப் பெரிதும் நட்டம் ஏற்படுகிறது என்பது தெளிவாகும். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வர்த்தக கணக்கியல் நிபுணர் ஒருவரிடம் இக்கணக்குகள் ஒப்படைக்கப் பட்டு, செலவினங்களை ஆராய்ந்து, சில்லறை விற்பனை விலையைக் குறைப்பதற்கு வழி உண்டா என்று பரிந்துரை செய்யுமாறு அரசுக் கேட்டுக் கொண்டது. அந்த நிபுணரும் கணக்குகளைப் பரிசீலித்து சில்லறை விற்பனை விலைகளைக் குறைப்பதற்குச் சிறிதும் வாய்ப்பு இல்லையென்று ஆராய்ந்து அறிந்து கூறியுள்ளார்.

## II கோதுமை, சர்க்கரை விநியோகம்.

### கோதுமை:

30. தமிழ்நாட்டில் அரிசியுடன் பொது விநியோக முறையின்கீழ் கோதுமையும் வழங்கப்படுகிறது. மத்திய அரசு கோதுமையை குவின்டால் ரூ. 125 விலைக்கு ஒதுக்கீடு செய்கிறது. இதை மத்திய அரசின் மத்திய கிடங்குகளிலிருந்து எடுத்து, சேமித்து வைத்து, கிராமங்களில் இருக்கும் விநியோக நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும் செலவை எல்லாம் ஏற்றுக்கொண்டு, கிலோ ரூ. 1·40க்என்ற விலையில் விற்கின்றோம்.





31. தமிழகத்தில் கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கம், நாம் விரும்பும் அளவுக்கு இன்னும் பரவவில்லை. அரிசித் தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலங்களிலும், சிறு தானியங்களின் விலைவாசிகள் ஏறுமுகமாக உள்ள காலங்களிலும்தான், பொது மக்கள் பொதுவாக கோதுமையைப் பயன்படுத்துகின்றனர். 1974-75-ம் ஆண்டுகளில் அரிசித் தட்டுப்பாடு இருந்த நேரத்தில், மாதம் சராசரி 20,000 டன்களுக்கு மேற்பட்ட அளவில் கோதுமை விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைப்பதை முன்னிட்டும், சிறு தானியங்களின் விலைளும் நிதானமாகவே உள்ளதை முன்னிட்டும், பொது விநியோக முறையின்கீழ் மாதம் சுமார் 3,000 முதல் 4,000 டன்கள் கோதுமைதான் விநியோகமாகி வருகிறது. சத்துணவு அடிப்படையில், அரிசியை மட்டுமே நம்பியிராமல், அன்றாட உணவில் அரிசியையும் கோதுமையும் சேர்த்துப் பயன்படுத்துவது உடல் நலனுக்கு உகந்தது என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து, கோதுமையை மேலும் அதிக அளவில் பயன்படுத்த முன் வருவது நல்லது. குறிப்பாக கிராமங்களில் கோதுமையை அன்றாட உணவில் பயன்படுத்தும் பழக்கத்தைப் பரப்புவதில், பொதுநல சேவை நிறுவனங்களும் மகளிர் சேவை நிறுவனங்களும் பெரிதும் உதவக்கூடும்.

32. குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்படும் கோதுமைக்கு இப்போது உச்சவரம்பு எதுவும் இல்லை. ஒரு குடும்பம் எவ்வளவு கோதுமையை வாங்க விரும்புகிறதோ, அந்த அளவுக்குத் தருவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வசதியையும், கோதுமையின் விலை பொதுவாக அரிசியின் விலைக்குக் குறைவாக இருப்பதையும் பயன்படுத்திக் கொண்டு, கோதுமையைப் பயன் படுத்தும் பழக்கத்தைத் தமிழக மக்கள் விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

33. கோதுமைப் பொருட்களைப் பொறுத்தவரையில், எல்லா விநியோகக் கட்டுப்பாடுகளும், விலைக் கட்டுப்பாடும், 1976-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதற்கொண்டு, மத்திய அரசினால் நீக்கப்பட்டு விட்டன. இப்போது ரவை, மைதா போன்ற கோதுமைப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. கட்டுப்பாடு இருந்த நேரத்தில் நிலவி வந்த விலைகளே பொதுவாக இப்போதும் நிலவி வருகின்றன.

34. தமிழ்நாட்டில் கோதுமை அரைவை ஆலைகள் 30 இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்த அரைவைத் திறன் மாதத்திற்கு 67,000 டன்களுக்கு மேற்பட்டதாகும் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்த ஆலைகளுக்கு, மாதம் ஒன்றுக்கு சுமார் 9,000 டன் கோதுமைதான் மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டு வந்தது. இப்போதோ, ஆலைகள் தங்கள் அரைவைத் திறன் முழுவதையும் பயன்படுத்தும் வகையில், ஆலைகளின் அரைவைத் திறனுக்கு ஏற்ப, கோதுமை ஒதுக்கீடு செய்யும் நிலையில் நாம் உள்ளோம். இந்த அரைவை ஆலைகளுக்கு

ஒதுக்கப்படும் கோதுமையும் குவின்டால் ரூ. 125 என்ற விலையில்தான் ஒதுக்கப்படுகிறது.

லெவி சர்க்கரை விநியோக முறை:

35. நம் நாட்டில் 1976-77-ம் ஆண்டு 48·4 இலட்சப் டன்கள் சர்க்கரை உற்பத்தியாயிற்று. தமிழ்நாட்டில் 20 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 9 தனியார் ஆலைகளும், 11 கூட்டுறவு ஆலைகளுமாகும். தமிழ்நாட்டிலுள்ள ஆலைகளின் மொத்த சர்க்கரை உற்பத்தி, 1976-77-ம் ஆண்டில் 3·22 இலட்சம் டன்களாக இருந்தது. மத்திய அரசின் கொள்கைப்படி, நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 65 சதவீதம் லெவி சர்க்கரையாகக் கருதப்பட்டு, பொது விநியோக முறையின்கீழ் விநியோகிக்கப்படுகின்றது. இந்த விநியோகத்திற்கு நாடு முழுவதும், 1978 பிப்ரவரி இறுதிவரை நிர்ணயிக்கப் பட்டிருந்த விலை, கிலோ ரூ. 2.15 ஆகும். மார்ச்சு முதல் நாளிலிருந்து இந்த விலையை கிலோ ரூ. 2·30 ஆக, நாடு முழுவதும், மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இந்த விநியோகத்திற்கு 1977 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு சுமார் 13,550 டன்கள் லெவி சர்க்கரையை மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கியிருந்தது.

36. 1977-ம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு லெவி சர்க்கரை விநியோகத்தில் ஓர் அடிப்படை மாற்றம் செய்தது. அதுவரை இருந்த முறையின்படி, நகரவாசிகளுக்கு அதிக அளவு சர்க்கரையும், கிராமவாசிகளுக்குக் குறைவாகவும், வழங்கப்பட்டு வந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு குடும்பத்தின் மாத வருவாயின் அடிப்படையில் சர்க்கரை விநியோகம் செய்யப் பட்டு வந்தது. நகர்ப்புறங்களில் மாதம் ரூ. 300 வரை வருமான முள்ள குடும்பங்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரையும், ரூ. 301 முதல் ரூ. 499 வரை வருமானமுள்ள குடும்பங்களுக்கு 2 முதல் 4 கிலோ வரையிலும், ரூ. 500-ம் அதற்கு மேலும் வருமான முள்ள குடும்பங்களுக்கு 5 முதல் 6 கிலோ வரையிலும், கொடுக்கப்பட்டு வந்தது. கிராமங்களில் ஒரு குடும்பத்திற்கு மாதம் 1 கிலோ அளவில் விநியோகம் செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வந்தன. இருந்த போதிலும், தமிழகத்திற்கு மத்திய அரசின் ஒதுக்கீடு 13,550 டன்கள் அளவில்தான் அமைந்திருந்த காரணத்தினால் கிராமப்புற விநியோகம் அவ்வளவு சீராக நடக்கவில்லை. கிராமங்கள், நகரங்கள் என்ற பாகுபாடு செய்யாமல் அனைவருக்கும் ஒரே சீராகவும், ஆளுக்கு மாதம் 425 கிராம் சர்க்கரை என்ற அடிப்படையிலும், லெவி சர்க்கரை விநியோகம் செய்ய வேண்டுமென்று, மத்திய அரசு ஒரு புதிய கொள்கை முடிவை எடுத்துள்ளது. இதை 1978-ம் ஆண்டு சனவரி மாதம் முதற்கொண்டு, தமிழகம் செயல்படுத்தி வருகிறது.



37. இப்புதிய முறையின்கீழ், நகரவாசிகளுக்கு இதுவரை கிடைத்துவந்த சர்க்கரை குறைந்துவிட்டது என்ற அதிருப்தி எழுந்துள்ளது உண்மையே. நகரவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சர்க்கரையைக் குறைக்காமல், அதே அளவு கிராமவாசிகளுக்கு உயர்த்தித் தருவது என்றால், அந்த அடிப்படையில் விநியோகம் செய்வதற்குப் போதுமான லெவி சர்க்கரை, நாடு மொத்தத்திலும் கிடையாது. ஆகவே, இருக்கின்ற லெவி சர்க்கரை ஒதுக்கீட்டை வைத்துக்கொண்டு, கிராமவாசிகளுக்கும், நகர்ப்புற மக்களுக்கும், ஒரு சீரான விநியோகம் செய்யவேண்டுமென்ற கொள்கையின் பயனாக, இதுவரை நியாயம் வழங்கப் பெறாத பல இலட்சக்கணக்கான கிராம மக்களுக்கு நன்மை கிட்டும் என்ற அடிப்படையில், மத்திய அரசின் கொள்கையைத் தமிழக அரசு ஏற்று செயல்படுத்தி வருகிறது. இப்புதிய முறையின்கீழ், தமிழகத்திற்கு மத்திய அரசு செய்துள்ள ஒதுக்கீடு, மாதம் 19,500 டன்கள். தமிழகத்திலுள்ள மக்கள் தொகை கணக்கின்படி ஆளுக்கு 425 கிராம் சர்க்கரை கொடுப்பதற்குக் கூட, இந்த ஒதுக்கீடு போதாது என்பதை இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறது. ஆயினும், மத்திய அரசின் வசம் உள்ள லெவி சர்க்கரையின் அளவு ஒரு வரம்புக்கு உட்பட்டதாலும், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப் படையாகக் கொண்டு இந்த ஏழு ஆண்டுகளில் மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கிட்டு, நாடு முழுவதும் பொருந்தக்கூடிய சில பொதுவான நியதிகளுக்கு ஏற்ப, மத்திய அரசு ஒதுக்கீட்டை நிர்ணயித்துள்ளதாலும், தமிழகத்திற்கு இப்போது செய்யப்படும் 19,500 டன்கள் ஒதுக்கீட்டிற்கு மேலாக, லெவி சர்க்கரை ஒதுக்கீடு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

38. இந்தப் புதிய கொள்கையின் பயனாக, இலட்சக்கணக்கான கிராம மக்கள் நன்மை பெறுவார்கள் என்பதை உணர்ந்தும், வெளிச் சந்தையில் சர்க்கரை விலை சென்ற ஆண்டு இருந்ததை விட மிகக் கணிசமாகக் குறைந்துள்ளது என்பதை மனதிற்கொண்டும், சமுதாய நீதியின் அடிப்படையில் வகுக்கப் பட்டுள்ள இப்புதிய கொள்கையைச் செயல்படுத்த, பொது மக்கள் ஒத்துழைப்பார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

39. இதுவரை குடும்பத்தின் அடிப்படையிலும், வருமானத்தின் அடிப்படையிலும், சர்க்கரை வழங்கப்பட்டு வந்ததால், ஒன்றாயிருந்த குடும்பங்களைக்கூடப் பிரித்து, தனித்தனியாகக் காட்டும் போக்கும், உண்மையில் கிடைத்து வந்த வருமானத்திற்கு மேலாக அதிக வருமானம் காட்டும் போக்கும், காணப் பட்டன. இப்போது ஆளுக்கு 425 கிராம் என்ற அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுவதால், குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது என்று கூறி, சர்க்கரை ஒதுக்கீட்டை உயர்த்தவேண்டுமென்று கோரும் போக்கு பரவலாகக் காணப் படுகிறது, நியாயமான அளவுக்கு அந்தக் கோரிக்கை ஏற்றுக்

கொள்ளப்படும் என்ற போதிலும், சமுதாய நலனுக்கு உகந்த முறையில் வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொதுநல நோக்குள்ள பொது மக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும், தற்காலிக வசதி பெறுவதற்காக தவறான புள்ளிவிவரங்கள் காட்டும் போக்கு சமூக விரோதப் போக்கு என்பதைத் தாங்களும் உணர்ந்து, மற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டுமென்றும், அரசு கேட்டுக்கொள்ள விரும்புகிறது.

40. முன்பு கிராமப் பகுதிகளில் சர்க்கரை விநியோகம் அவ்வளவு சீராக நடக்காத காரணத்தினால் விநியோகப் பொறுப்பை ஏற்றிருந்த சில நிறுவனங்கள், சில இடங்களில் கிராமங்களுக்குச் சர்க்கரையை எடுத்துச் செல்லாமலே, வெளிச் சந்தையில் விற்றுவந்த ஒழுங்கீனத்திற்கு இடம் ஏற்பட்டிருந்தது. இப்புதிய முறையில் கிராம மக்கள் அனைவருக்கும் ஆளுக்கு மாதம் 425 கிராம் சர்க்கரை ஒதுக்கப்படுகின்ற காரணத்தினால் இத்தவறுக்கு இடம் ஏற்படாதென்று நாம் எதிர்பார்க்கலாம். எந்தக் கிராமத்திலாவது விநியோகம் ஒழுங்காக நடைபெறாவிடில் இதை உடனடியாக மேலதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கிராம மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மண்ணெண்ணெய்

41. மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 33,000 கிலோ லிட்டர் அளவில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. தனியார் வியாபாரிகள் மூலமாகவும் இப்போது விநியோகம் செய்யப்படுகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் விநியோக விலைகளுக்கு உச்ச வரம்பு லிட்டர் ரூ. 1,31 முதற்கொண்டு ரூ. 1,41 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு கலால் வரியை அண்மையில் உயர்த்தியதன் விளைவாக, மாநில அரசு விற்பனை வரியைக் குறைத்துள்ள போதிலும், மண்ணெண்ணெய்யின் சில்லறை விற்பனை விலை இரண்டு பைசா அளவுக்கு உயர்ந்துள்ளது. மாநிலத்தில், மண்ணெண்ணெய் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது.

III விலைவாசிகள் நிலைமையும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளும்.

42. 1977-78 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் விலைவாசிகள் பொதுவாக நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்ததைவிடக் குறைவாகவே இருந்தன. வெளிச் சந்தையில் அரிசியின் விலை மிகவும் நிதானமாகவே இருந்தது. சன்ன ரக புழுங்கல் அரிசியின் சராசரி விலை 1977 பிப்ரவரியில் ரூ. 1.99 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் ரூ. 1·72 ஆகக் குறைந்தது. நடுத்தர புழுங்கல் அரிசியின் விலையும் 1977 பிப்ரவரியில் சராசரி ரூ. 1·85 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 1·61 ஆகக் குறைந்தது. சோளம் மற்ற சிறு தான்யங்களின் விலைகள் சென்ற ஆண்டு இருந்த நிலையிலேயே ஏறக்குறைய



நிதானப்பட்டுள்ளன. பருப்பு வகைகளில் மட்டும் சென்ற ஆண்டைவிட கணிசமான விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. பருப்பு வகைகளில் தமிழகம் பற்றாக்குறை மாநிலமாகும். வெளி மாநிலங்களில் உற்பத்தி நிலையங்களில் விலைவாசிகள் உயர்வதற்கு ஏற்ப, இங்கு சில்லறை விற்பனை விலைகளும் உயர்ந்துவிடுகின்றன. தமிழகத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைத் துறை தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. துவரம் பருப்பின் விலை 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 3·89 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 4·65 ஆக உயர்ந்தது. உளுத்தம் பருப்பின் விலை 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 3·53 ஆக இருந்தது, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ 3.71 ஆக உள்ளது. கடலைப் பருப்பின் விலை 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 1.89 ஆக இருந்தது 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 2.86 ஆக உயர்ந்துவிட்டது. வெளி மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளை மொத்தமாக வாங்கி, அதிக இலாபமின்றி விற்பதன் மூலம் வெளிச்சந்தை விலைகளை நிதானப்படுத்தும் முயற்சியை, அரசு சார்பு நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

43. எண்ணெய் வகைகளைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு இருந்த விலைகளைவிட இந்த ஆண்டு விலைகள் குறைவாகவே உள்ளன. 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 10.99 ஆக விற்ற கடலை எண்ணெயின் விலை, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 7.60 ஆகக் கணிசமாகக் குறைந்தது. நல்லெண்ணெயின் விலையும் 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 10.95 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் ரூ. 9.54 ஆகக் குறைந்துள்ளது. தேங்காய் எண்ணெயின் விலை, 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 14.46 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 13 ஆகக் குறைந்துள்ளது.

44. வெளிச்சந்தை சர்க்கரையின் விலை மிகக் கணிசமாக குறைந்துள்ளது. 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 4:33 ஆக விற்ற சர்க்கரை, இப்பொழுது கிலோ ரூ. 3 அளவில் விற்கிறது. தனியாவின் விலையும் 1977 பிப்ரவரியில் கிலோ ரூ. 6.95 ஆக இருந்ததற்கு மாறாக, 1978 பிப்ரவரியில் கிலோ ரூ. 5.34 ஆக குறைந்துள்ளது. மிளகாய் வற்றலின் விலைகள் சென்ற ஆண்டை விடச் சிறிது ஏறி, இப்பொழுது மீண்டும் இறங்கு முகமாக உள்ளன.

45. 1977 ஆம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளம், புயல் ஆகியவற்றின் காரணமாக விலைவாசிகளில் ஏற்பட்டு இருக்கக்கூடிய மிதமிஞ்சிய உயர்வு, அரசு எடுத்த விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகப் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டு, சாதாரண பருவ நிலைக்குரிய மாறுதல்களுக்குள் அடங்கி, பொதுவாக நிதானப்படுத்தப்பட்டுள்ளன என்று துணிந்து கூறலாம்.

விலை உயர்வு தடுப்பு நடவடிக்கைகள்.

46. உணவுப்பொருட்கள். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றின் வர்த்தகம் இப்போது பெரும்பாலும் தனியார் வர்த்தகர்களின் கையில்தான் இருக்கிறது. இப்பொறுப்பை அரசே முழுமையாக ஏற்றுக் கொண்டுநடத்துவது என்பது, இன்றுள்ள சூழ்நிலையில், நடைமுறை தேவைக்கு சாத்தியமானது அல்ல. அதே சமயத்தில், மக்களின் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசிகள் மிதமிஞ்சி உயர்ந்து விடுவதைக் கண்டு அரசு வாளாவிருக்க முடியாது. ஆகவேதான், பொது நலனுக்கு உகந்த முறையில், வர்த்தகர்கள் சுதந்திரமாக வாணிபம் செய்ய வசதி செய்துதரும் அதே நேரத்தில், விலைவாசிகள் மீது விழிப்பாக கண்காணிப்பைத் தொடர்ந்து செலுத்தி வருவது இந்த அரசின் கொள்கையாக அமைந்துள்ளது.

47. வெளி மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய பருப்பு வகைகள், சில எண்ணெய் வகைகள் போன்றவற்றின் விலைகள், உற்பத்தியாகும் மாநிலங்களில் நிலவும் மொத்த விலைகளையொட்டி அமைவது இயல்பே. ஆயினும், மொத்த விற்பனை விலைகளுக்கும் சில்லறை விற்பனை விலைகளுக்குமிடையே பெருத்த வேறுபாடு காணப்படும் போக்கு பரவி வருகிறது. இன்றியமையாப் பொருட்களை முடக்கி, செயற்கையாகத் தட்டுப்பாடு ஏற்படுத்தி விலைவாசிகளை அளவுக்கு மீறி உயர்த்தும் வியாபாரச் சூதாட்டத்தை அரசு அனுமதிக்க முடியாது. இந்த நோக்கத்தில்தான் வர்த்தகர்கள் எவ்வளவு கையிருப்பு வைத்துக் கொள்ளலாமென்ற உச்சவரம்பை சில பொருட்களுக்கு நிர்ணயிக்கும் ஆணைகளையும், கையிருப்பு, விற்பனை விலை ஆகியவற்றைப் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்ற விலை அறிவிப்பு ஆணைகளையும், அரசு செயல்படுத்தி வருகின்றது. தட்டுப்பாடுகளைச் செயற்கையாக ஏற்படுத்தாமலும், இயல்பாக ஏற்படும் பற்றாக் குறைகளைப் பயன்படுத்தி விலைவாசிகளை அளவுக்கு மீறி உயர்த்தி விடாமலும், சீராகவும், பொதுநல நோக்குடனும் வாணிபம் செய்வது, பொது நலனுக்கு மட்டுமல்ல, வர்த்தகர்களினுடைய சொந்த நலனுக்கும் உகந்தது என்ற அடிப்படை உண்மையை வர்த்தகர்கள் உணர்ந்து தாமாகவே சில சுய கட்டுப்பாடு முறைகளை ஏற்று இயக்குவதே, இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு வழியாகும். நம் மாநிலத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள் இதில் பெரும் பங்கு ஆற்றக் கூடும். மிளகாய், எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள் போன்ற முக்கியப் பொருட்களைப்பொறுத்த வரையில், அவற்றின் வாணிபத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள், தாங்களாகச் சுயக்கட்டுப்பாடு குழுக்களை அமைத்துக் கொண்டு, எல்லா வர்த்தகர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சில பொதுவான நியதிகளை வகுத்து, நிலைமைக்கு ஏற்ப அவர்களுக்கு அறிவுரை கூறி, வியாபாரத்தை நெறிப்படுத்திச் செல்வது இன்றைய சூழ்நிலையில் பெரிதும் அவசியமாகும். இதுபோன்ற வர்த்தகப் பண்டகக் குழுக்கள்



(Commodities Boards) மேல் நாடுகளில் வர்த்தகர்கள் நிறுவனங்களாலேயே மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியை நம் மாநிலத்து வர்த்தக நிறுவனங்களும் மேற்கொள்வது பலன் தரும் என்று நான் கருதுகிறேன். இந்த ஆலோசனையை ஏற்று, நம் மாநிலத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள், முக்கியமான பண்டங்களுக்கு வர்த்தகப் பண்டக் குழுக்களை அமைக்க முன்வரவேண்டுமென்று, உணவு அமைச்சர் என்ற முறையில் நான் அவர்களுக்கு அழைப்பு விடுக்க விரும்புகிறேன். வர்த்தகத் துறையில் நீண்ட அனுபவமும், நிபுணத்துவமும், பொது நலனில் நாட்டமும் கொண்ட வர்த்தக நிறுவனங்கள் இந்த ஆலோசனையைச் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பார்களென்று நம்புகின்ற நேரத்தில், அரசின் சார்பில், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும், ஆலோசனைகளைக் கூறவும், ஆதரவு அளிக்கவும், அரசு முன்வரும் என்றும் உறுதி கூற விரும்புகிறேன்.

48. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் வர்த்தகர்களின் சுயக்கட்டுப்பாடு மிக முக்கியமானது என்பதை வலியுறுத்தும் நேரத்தில், இந்த இன்றியமையாத பொருட்களின் விநியோகப் பொறுப்பை பொதுச் சார்புடைய நிறுவனங்களாகிய கூட்டுறவு அமைப்புகள், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் போன்ற நிறுவனங்கள், மேலும் விரிவான முறையில் ஏற்றுக் கொள்வதும், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயனுள்ள ஒரு வழியாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், இப்பொறுப்பைப் பெருமளவில் ஏற்க வழி வகுப்பது இந்த அரசின் முக்கிய நடவடிக்கையாக அமையும்.

<u>நியாய விலைக் கடைகள்.</u>

49. இந்த அடிப்படையில்தான் தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் திறக்கும் திட்டத்தை அறிவித்துள்ளோம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலத்தில் ஏற்கெனவே கூட்டுறவு அமைப்புகளால் நடத்தப்படும் 6,818 சில்லறை விற்பனைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் நடத்தப்படும் 833 சில்லறை விற்பனைக் கடைகளும், ஊராட்சிகள், கிராமக் குழுக்கள், ஆகியவற்றால் நடத்தப்படும் 915 கடைகளும் இயங்கி வருகின்றன. இந்த 8,566 கடைகளில், ஏறக்குறைய 6,000 கடைகள் கிராமங்களில் இயங்கி வருகின்றன. பொதுவிநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை ஆகியவற்றை மட்டும் விநியோகித்து வரும் இக்கடைகளில், பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் போன்ற மற்ற இன்றியமையாப் பொருட்களையும் விற்பதற்கு ஏற்பாடு செய்வது முதல் நடவடிக்கையாகும். இதற்கு

முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாநிலம் முழுவதும் நடத்தும் 833 கடைகள் அனைத்தும் இதுபோன்ற இன்றியமையாப் பொருட்கள் விற்கும் பல பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டு விட்டன. கூட்டுறவுத் துறையில் நடக்கும் கடைகளையும் பலபொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கெனவே கிராமங்களில் இயங்கிவரும் கடைகளுக்கு மேலாகப் புதிதாக 440 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் திறக்கப்படுகின்றன. மதுரை, முகவை மாவட்டங்களிலும் புதிய கடைகளைத் திறக்கும் பொறுப்பைக் கூட்டுறவுத் துறை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் அனுபவத்தைக்கொண்டு மற்ற மாவட்டங்களில் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

## விறகுக் கடைகள்.

50. சென்னை நகரில் விறகுக்கட்டைகளின் விலை சென்ற சில மாதங்களாக உயர்ந்து விட்டதைத் தடுக்கும் பொருட்டு, வனத் துறையும், உணவுத் துறையும் இணைந்து செயல்பட்டு, வனத் துறையிலிருந்து நேரடியாக விறகைப்பெற்று, பொது மக்களுக்கு நயமான விலையில் விற்பதற்காக நியாய விலை விறகுக்கடைகளைத் திறக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், சென்னை நகரில் ஏற்கெனவே 20 கடைகள் திறக்கப்பட்டு விட்டன. இவற்றில் விறகுக் கட்டையின் விலை, வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையை விட, ஏறக்குறைய குண்டுக்கு ஒரு ரூபாய் குறைவாக உள்ளது. இம்முயற்சியைச் சென்னை நகர மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இதை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

51. இது தவிர, அவ்வப்போது ஏற்படும் விலைவாசி உயர்வுகளைத் தடுப்பதற்காக, உணவுத்துறை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட வர்த்தகப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். காய்கறிகளின் விலைகள் சென்னை நகரத்தில் பெரிதும் உயர்ந்து விட்டதைக் கட்டுப்படுத்தும் வகையில் காய்கறி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக. இந்த வர்த்தகர்களின் சங்க ஆதரவிலேயே, நயமான விலையில் காய்கறிகள் விற்பதற்கு, நியாய விலைக் காய்கறி விற்பனைக் கடைகள் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காய்கறிகளின் விலைகள், சென்ற இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் நிலவிவந்ததைவிட, மிகக் கணிசமாகக் குறைந்துள்ளன.

52. பருவ நிலைமைகளின் விளைவாக விளைச்சலில் ஏற்படும் பாதிப்புகள், இயல்பாகவே சில மாதங்களில் ஏற்படும் தட்டுப்பாடுகள் இவை மட்டுமல்லாமல், பொதுவாக நாட்டின் பொரு-



ளாதாரக் கொள்கைகள், விலைவாசிகளைப் பெரிதும் பாதிக்கின்றன. இவற்றிற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நீண்ட கால நோக்குடன் பலமுனைப்பட்ட நடவடிக்கைகள் தேவை. மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட அளவு, வர்த்தகர்களின் ஒத்துழைப்புடன், நுகர்வோர் நலன் பாதிக்கப்படாத வகையில் இப்பிரச்னைக்குத் தீர்வு காண இந்த அரசு விழிப்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

## வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்:

53. அரிசி, கோதுமை, சிறு தானியங்கள் போன்ற உணவுப் பொருட்களும் சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களும் நுகர்வோருக்கு நியாயமான விலைகளிலும் தட்டுப்பாடு இல்லாமலும் கிடைப்பதற்கு, இப் பொருட்களின் வியாபாரத்தை ஒழுங்குபடுத்த கீழ்க்கண்ட ஆணைகள் தற்போது அமலில் உள்ளன :—

(1) தமிழ்நாடு நெல், அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(2) தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(3) தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968.

(4) நிலக்கடலை, நிலக்கடலைப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(5) வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

(6) தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1962.

(7) தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

(8) பருப்பு, எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் (இருப்பு கட்டுப்பாடு) ஆணை, 1977 (மத்திய அரசின் ஆணை).

54. இவ்வாணைகளின்படி மொத்த வியாபாரிகள் ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படவேண்டிய உரிமம் பெற வேண்டும். சில்லறை வியாபாரிகள், ஒரு முறை சில்லறை விற்பனைச் சான்றிதழ் பெற்றால் போதும். அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு வகைகள் ஆகியவற்றில் வர்த்தகம் செய்யும் மொத்த வியாபாரிகள் இருப்பு வைத்துக்கொள்ள உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது. பொருட்களைப் பதுக்கி, விற்பனையை முடக்கி, செயற்கையாகத் தட்டுப்பாடு ஏற்படுத்தி, விலைகளை உயர்த்தும் போக்கைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த உச்ச வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில, மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஆணைகள். சில, மத்திய அரசின் ஒப்புதலுடன், மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ள ஆணைகள். பொது நலனுக்கு உகந்த

[1978 மார்ச் 27

முறையிலும் வர்த்தகர்களுக்குத் தேவையற்ற இடர்ப்பாடுகள் ஏற்படாத வண்ணமும் இந்தக் கட்டுப்பாடு ஆணைகள் செயல்படுத்தப்படுகின்றன.

55. மேற்கண்ட ஆணைகளைத் தவிர, தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்புக்கள், விலைகளை அறிவித்தல், கணக்கு வைத்தல்) ஆணை, 1977-ம் அமலில் உள்ளது. இந்த ஆணையின் கீழ், உணவு தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய், சோப்பு வகைகள், குழந்தை உணவுகள், தேயிலை, காப்பி, தீப்பெட்டி, பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் போன்ற இன்றியமையாப் பொருட்களில் வர்த்தகம் செய்பவர்கள், தங்கள் வர்த்தக இடத்தில் பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும் முறையில், அப்பொருட்களின் இருப்பு, அடக்க விலை, விற்பனை விலை ஆகியவற்றைக் காட்டும் அறிவிப்புப் பலகைகளை வைத்திருக்க வேண்டும்.

உணவு புலனாய்வுத் துறையின் பணி :

56. உணவுத் துறையில் அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப, உணவுத் தானியங்கள், இன்றியமையாப் பொருட்கள் தொடர்பான வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளை செம்மையாகச் செயல்படுத்துவதைக் கண்காணிப்பது உணவு புலனாய்வுத் துறையின் முக்கிய பொறுப்பு ஆகும். 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சீரமைக்கப்பட்ட இந்துறையில் மொத்தம் 338 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

57. குறிப்பாக, இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகள் அறிவித்தல், கணக்கு வைத்தல்) ஆணையை அமலாக்குவதில் உணவு புலனாய்வுத் துறை முக்கிய கவனம் செலுத்தியது. பதுக்கலை தடுக்கவும், கட்டுப்பாடு ஆணைகளை மீறிய நடவடிக்கைகளை கண்டு பிடிக்கவும், இந்த துறை விழிப்பாக பணியாற்றியது. 1977-ம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழும் பாதுகாப் விதிகளின் கீழும், விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு ஆணைகளை மீறியதற்காக 680-க்கு மேற்பட்ட வழக்குகள் நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்டன. இவற்றில் 500-க்கு மேற்பட்ட வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 11 வழக்குகளில் தான் நீதி மன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

58. 2,500 டன்களுக்கு மேல் அரிசியும், 1,300 டன்களுக்கு மேல் நெல்லும் உள்பட, 62·13 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பண்டங்கள் பல்வேறு கட்டுப்பாடு உத்தரவுகளை மீறியதற்காக கைப்பற்றப்பட்டன.

59. நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக அமைக்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில், தமிழ்நாடு அரசு வகுத்துள்ள புதிய உணவுக் கொள்கையை செயல்படுத்துவதிலும், அரிசி ஆலைகளை மேற்பார்வை செய்து கணக்குகளை தணிக்கை செய்வதிலும், லெவி ஏய்ப்பு இல்லாமல் கண்காணிப்பதிலும், கையிருப்புக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்புகளை அமல்படுத்துவதிலும், உணவு புலனாய்வுத் துறை உன்னிப்பாக செயலாற்றி வருகிறது



1978 மார்ச் 27]

60. பொது மக்கள் நலனுக்காக வகுக்கப்பட்டுள்ள ஆணைகளை திறமையாக செயலாற்றுகின்ற நேரத்திலே, வர்த்தகர்களுக்கு தேவையற்ற இடைஞ்சல்களும் இன்னல்களும் ஏற்படாமல் கண்காணித்து, பல்வேறு கட்டுப்பாடு உத்தரவுகளையும், சட்ட உணர்வுக்கு உட்பட்டும் பொதுநல உணர்வுக்கு உகந்த முறையிலும், இத்துறை செயலாற்றி வருகிறது.

## IV. அரிசி அரைவை ஆலைகள்.

61. தமிழ்நாட்டில் மொத்தம் 14,762 அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. இவைகளில் 5,800 ஆலைகள் மொத்த வியாபாரம் செய்யும் பெரிய ஆலைகள். மற்றவை விவசாயிகளுக்கும் சில்லறை வணிகர்களுக்கும் கூலி அரைவை செய்யும் சிறிய ஆலைகள். அரைவை செய்யப்படும் அரிசியின் தரத்தை உயர்த்தவும், நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியின் அளவை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், அரிசி ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு, அரிசி ஆலை கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் 1970-ஆம் ஆண்டில் உத்தரவிட்டது. நெல்லைத் தனியாகப் பிரிக்கும் இயந்திரக்கருவி, நெல்லை சுத்தப்படுத்தும் கருவி, இரப்பர் உருளைகள் ஆகியவற்றைப் பொருத்துவதே, ஆலைகளை நவீன மயமாக்கும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். இத்திட்டத்தின்படி நெல்லின் உமியை நீக்குவதற்கு ஹல்லர்களைப் பயன்படுத்தாமல், மெருகு ஏற்றுவதற்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

62. ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் உள்ள ஆலைகளும் ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகளும் 1975-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்று 1970-ம் ஆண்டில் மத்திய அரசு அரிசி ஆலைக்கட்டுப்பாடு உத்தரவில் திருத்தங்களைச் செய்தது. பின்னர் ஆலைகளை நவீனமயமாக்குவதற்கு மேலும் இரண்டு ஆண்டுகாலம் அவகாசம் அளிக்கப்பட்டது. தேவையான இயந்திரங்கள் கிடைப்பதில் சங்கடங்கள் உள்ளதெனவும், அவற்றின் விலைகளும் அதிகமாக இருப்பதாகவும், ஆலை அதிபர்களிடமிருந்து முறையீடுகள் வந்ததையொட்டி, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, நவீன இயந்திரங்கள் பொருத்துவதற்குக் கால அவகாசம் கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது :—

ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர்/ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகள் —

| ஏற்கெனவே இயங்கும் ஆலைகள். | கால அவகாசம். |
|---|---|
| 1973-ம் ஆண்டு வரை உரிமம் வழங்கப்பட்ட ஆலைகள். | 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை. |
| 1973-ம் ஆண்டிற்கு பின்னர் உரிமம் வழங்கப்பட்ட ஆலைகள். | 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை. |

[1978 மார்ச் 27

புதிய ஆலைகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டுமென்ற விதியும் தளர்த்தப்பட்டுள்ளது. 30-4-1977-க்கு முன் உரிமத்திற்காக விண்ணப்பம் செய்த ஆலைகளைப் பொருத்தவரை, ஆலைகளின் நிர்மாண வேலை இறுதிக் கட்டத்திலோ, இயந்திரங்கள் பொருத்தப்பட்ட நிலையிலோ இருந்தால், அவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமம் வழங்கலாம் என்று 12—7—1977-ல் உத்திரவிடப்பட்டது.

ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகள் :

சமீபத்தில் மத்திய அரசு அளித்துள்ள விளக்கங்களின்படி ஏற்கனவே இயங்கிவரும் ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்த 6—9—1981 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

63. ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட புதிய ஆலைகளைப் பொறுத்தவரை, உரிமம் பெறுமுன் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற விதியையும், கிராமப்புறங்களில் அமைக்கப்படும் ஆலைகளைப் பொறுத்தவரை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இந்த ஆலைகள் 15 குதிரை வேகத்திற்கு மேற்படாததாக இருக்க வேண்டும். இந்த ஆலைகளில் ஊறல், அவியல், உலர்த்தல் ஆகிய வசதிகள் இருக்கக்கூடாது. கூலி அரைவைக்கு கொண்டு வரப்படுகின்ற நெல்லை இவை அரைக்க வேண்டும். இப்படிப்பட்ட புதிய ஆலைகளுக்கு, உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலம் வரை நவீன இயந்திரங்கள் பொருத்த அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

64. தமிழக அரசு வன்மையாக வலியுறுத்திய பரிந்துரைகளின் பேரில், மத்திய அரசு இந்த சலுகைகளை அளித்துள்ளது. நம் மாநிலத்தில் உள்ள அரைவை ஆலைகள் செய்த முறையீடுகளைப் பரிசீலித்து நவீன இயந்திரங்களைப் பொருத்த கால அவகாசத்தை மேலும் நீடிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு தமிழக அரசு மீண்டும் பரிந்துரை செய்துள்ளது,

| ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் ஆலைகள், ஷெல்லரும்/ஹல்லரும் பொருத்தப்பட்ட ஆலைகள். | பரிந்துரைக்கப்பட்ட கால அவகாசம். |
|---|---|
| 1973க்கு முன்னரோ பின்னரோ உரிமம் பெற்று ஏற்கனவே இயங்கி வரும் ஆலைகள் எல்லாவற்றிற்கும். | 1980 ஏப்ரல் முடிய. |

| ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் ஆலைகள், ஷெல்லரும்/ஹல்லரும் பொருத்தப்பட்ட ஆலைகள். | பரிந்துரைக்கப்பட்ட கால அவகாசம். |
|---|---|
| 30—4—1977-க்கு முன்பு மனுச் செய்து கொள்ளப்பட்டு கட்டிட வேலை. இயந்திரங்களை அமைத்தல் முடிந்த நிலையில் உள்ளவை. | உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் |
| நகரப் பகுதிகளில் ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட புதிய ஆலைகள். | உரிமம் வழங்கப்பட்ட நாள் முதல் இரண்டு ஆண்டுகள். |



1978 மார்ச் 27]

மேற்கண்ட பரிந்துரைகள் மத்திய அரசின் ஆய்வில் உள்ளன.

65. ஆலைகள் நவீன இயந்திரங்களைப் பொருத்துவதால் தொடக்கத்தில் கூடுதல் செலவு ஆகும் என்றாலும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவு குறைந்தது 2 சதவிகிதம் அதிகமாகும் என்ற காரணத்தினாலும், ஆலைகளின் அரைவைத் திறனும் அரிசியின் தரமும் அதிகரிக்கும் என்ற காரணத்தினாலும் நாளடைவில் இந்த நடவடிக்கை ஆலைகளின் நலனுக்கே உகந்ததாக அமையும். மேலும், இப்பொழுது உள்ள ஆலைகளில் கையாளப்படும் அரைவை முறைகளினால் ஏற்படும் கணிசமான அளவு சேதாரத்தைத் தடுப்பது. நம் நாட்டின் உணவுப் பொருளாதாரப் பின்னணியில் மிக முக்கியமான நடவடிக்கை ஆகும். இத்திட்டத்தின் பொதுநல அம்சங்களைக் கருதி, நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கு ஆலை அதிபர்களுக்கு தேவைப்படும் தொகையைக் கடனாக வழங்க முன்வருமாறு வங்கிகளுக்கு மத்திய அரசு அறிவுரை கூறியுள்ளது. ஆலைகளை நவீன மயமாக்கும் திட்டத்தின் நன்மைகளை விளக்குவதற்கும், செய்முறை நிருபணங்கள் நடத்தவும், ஆலை அதிபர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் கூறவும், நம் மாநிலத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில், மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் நிறுவி உள்ளது. ஆலைகளை நவீனமாக்குவது தொழில் ரீதியாக தங்களுக்கும் நல்லது என்பதை ஆலை அதிபர்கள் உணர்ந்து சொந்த நலனையும் நாட்டு நலனையும் இணைத்துப் போற்றத்தக்க வகையில் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அளிக்க முன்வருவார்கள் என்று அரசு நம்புகிறது.

## V. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

66. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1-7-1972 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசின் கொள்முதல் கொள்கைகளுக்கு ஏற்ப, நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்து, நெல்லை அரிசியாக்கி, பொது விநியோக முறையின் கீழ் ஆயிரக்கணக்கான விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு ஏற்பாடு செய்வது இக்கழகத்தின் முக்கிய பொறுப்பாகும். 1972-ம் ஆண்டு முதற்கொண்டு 1975-ம் ஆண்டு வரை, சட்டப் பூர்வமான கொள்முதல் முறை நடந்து வந்தது. அந்த ஆண்டுகளில் அரசின் கொள்கைக்கேற்ப, கொள்முதலை வெற்றிகரமாக நடத்தும்

பணியில் இக்கழகம் முனைந்து ஈடுபட்டது. 1—7—1972 முதற் கொண்டு 1973 மார்ச்சு வரையில் 4,000 அரிசி டன்களுக்குச் சமமான நெல்லையும் 1973-74-ம் ஆண்டில் 1·40 இலட்சம் அரிசி டன்களுக்குச் சமமான நெல்லையும், 1974-75-ம் ஆண்டில் 1·16 இலட்சம் டன்களையும், 1975–76-ல் 8·49 இலட்சம் டன்களையும் இக்கழகம் கொள்முதல் செய்தது. 1976ம் ஆண்டு மார்ச்சு முதற்கொண்டு சட்ட பூர்வமான கொள்முதல் முறை நிறுத்தப்பட்டது. 30—9—1976 வரை விவசாயிகள் தாமாக விரும்பி அளிக்க முன்வந்த நெல் மட்டும் கொள்முதல் விலைகளில் வாங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1·28 இலட்சம் அரிசி டன்களுக்குச் சமமான நெல் வாங்கப்பட்டது. 15—10—1976 முதல் வர்த்தக லெவி மூலம் கொள் முதல் செய்யப்பட்டது. இம்முறையின் கீழ் 1976 அக்டோபர் முதற்கொண்டு 1977 செப்டம்பர் வரை 1.74 இலட்சம் டன்கள் அரிசிக்குச் சமமான நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1977-ம் ஆண்டு அக்டோபர் 17-ம் தேதி முதற்கொண்டு ஆலைகள் மீது லெவி முறையும், உபரி மாவட்டங்களில் வர்த்தக லெவி முறையும் செயல்பட்டு வருகின்றன. இம்முறையின் கீழ், 1978 பிப்ரவரி 21 தேதி வரை, ஆலைகள் லெவியின் மூலம் 25,000 அரிசி டன்களையும் வர்த்தக லெவியின் மூலம் 35,000 அரிசி டன்களையும் இக்கழகம் கொள்முதல் செய்துள்ளது.

67. இக் கொள்முதலைத் தவிர, அரசின் ஆணையின்படி நெல்லையும், அரிசியையும் வெளிச் சந்தையில் வாங்கும் பொறுப்பையும் இக்கழகம் ஏற்று நடத்தி வருகிறது. நாடு முழுவதையும் ஒரே மண்டலமாக மத்திய அரசு அறிவித்த புதிய சூழ்நிலைக்கு ஏற்ப, பொது விநியோக முறைக்குத் தேவையான கையிருப்பை பலப்படுத்துவதற்காக, 1977-ம் ஆண்டு இறுதியில் வாணிபக்கழகம் மற்ற மாநிலங்களிலிருந்து 1·2 இலட்சம் அரிசி டன்களுக்குச் சமமான நெல்லையும், அரிசியையும் வாங்க ஏற்பாடு செய்தது. பல ஆண்டுகளாக வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி, அரசிற்கு மிகச் சாதகமான விலைகளில், மிகத் தரமான நெல்லும், அரிசியும் வாங்கப்பட்டன.

68. 1976 ஆம் ஆண்டுக்குப் பின் சட்டபூர்வமான கொள்முதல் முறை கைவிடப்பட்ட பின்பும், மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்குக் கீழாக வெளிச்சந்தை விலைகள் சரிந்தால் அந்நிலையில், விலை ஆதரவுத் திட்டமாக விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன், மத்திய அரசின் கொள்முதல் விலைகளில் நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கும் பொறுப்பையும் இக்கழகம் ஏற்றுக்கொண்டது. 1977ஆம் ஆண்டு குறுவையின்போது, இத் திட்டத்தின் கீழ் தஞ்சையில் மட்டும் 55 நேரடி வாங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டு, அவற்றின் மூலமாக 1,161 டன்கள



தான் வாங்க முடிந்தது என்பது, வெளிச்சந்தையில் விவசாயிகளுக்கு கொள்முதல் விலைகளை விட இலாபகரமான விலைகள் கிடைத்து வந்தன என்பதற்குச் சான்றாகும்.

69. வெளிச்சந்தையில் விவசாயிகளுக்கு இலாபகரமான விலைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதற்கொண்டு தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாகச் நெல்லை வாங்குவதற்காக 263 நேரடி வாங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பொது விநியோக முறைக்குப் பெரிதும் தேவைப்படும் மோட்டா ரக நெல்லும், நடுத்தர ரக நெல்லும் இந்த நேரடி வாங்கும் நிலையங்களில், முறையே குவிண்டால் ரூ. 90·95 என்ற விலைக்கு வாங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 1978 பிப்ரவரி முதல் நாள் முதற்கொண்டு பிப்ரவரி இறுதிவரை 13,000 டன்களுக்கு மேலான நெல் வாங்கப்பட்டுள்ளது.

70. அனைத்திந்திய உணவுக் கொள்கையையொட்டி மாநில அரசின் உணவுக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்பவும், வெளிச்சந்தையில் நிலவும் சூழ்நிலைக்கேற்பவும், விவசாயிகளுக்குப் பாதுகாப்பாகவும்; அதே சமயத்தில் நுகர்வோர் நலனைக் காக்கவும், பொது விநியோக முறை திறமையாக தொடர்ந்து செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முனைப்பாக மேற்கொண்டு வருவது மேற்சொன்ன விவரங்களிலிருந்து தெளிவாகும்.

71. பொது விநியோக முறைக் கடைகளைத் தனியார் நடத்த அனுமதிக்கக்கூடாதென்று மாநில அரசு 1974 ஆம் ஆண்டு இறுதியில் மேற்கொண்ட முடிவிற்கேற்ப, சில்லறை விநியோகக் கடைகளைத் திறக்கும் பொறுப்பையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டுள்ளது. தொடக்கத்தில் 36 கடைகளை நடத்தி வந்த வாணிபக் கழகம், இப்பொழுது சென்னை நகரில் உள்ள 176 கடைகள் உட்பட, மாநிலம் முழுவதும், மொத்தம் 833 கடைகளை நடத்தி வருகின்றது. இவை தவிர, நெல்லை மாவட்டத்தில் கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் திறக்கும் திட்டத்தின்கீழ் 440 புதிய கடைகள் வாணிபக் கழகத்தால் திறக்கப்படுகின்றன.

72. கொள்முதல் செய்யப்படும் நெல்லின் தரம் கெடாதவாறு சேமித்து வைத்து, தரமான அரிசியை விநியோகம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை இக்கழகம் மேற் கொண்டுள்ளது. வேளாண்மைத் துறையில் பணியாற்றும் நிபுணர்களை வாணிபக் கழகம் இப்பணியில் அமர்த்தி, நெல் கொள் முதல் செய்யப்படும் கட்டத்திலும், ஆலைகளில் அரிசியாக்கப்படும் கட்டத்திலும், கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் கட்டத்திலும், பொது விநியோகக் கடைகளுக்கு எடுத்துச் செல்லப்படும் கட்டத்

திலும், அரிசியின் தரத்தைப் பாதுகாக்க விஞ்ஞான பூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

73. சட்டபூர்வமாக விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் நடந்துவந்த நேரத்தில் 1,000-க்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளைக் கழகத்தின் முகவர்களாக அமர்த்தி, நெல்லை அரைவை செய்யும் பொறுப்பை இக்கழகம் மேற்கொண்டது. இப்போது கொள்முதல் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாறுதலையொட்டி, இந்த முகவர்களின் எண்ணிக்கை 180 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தனியார் ஆலைகளில் நெல் அரைவை செய்யப்படுவதற்கு மேலாக, நெல்லை நவீன முறையில் அரைவை செய்வதற்காக இக்கழகமே 13 நவீன அரைவை ஆலைகளை நடத்தி வருகின்றது. கூட்டுறவுத் துறையில் முன்பு நிறுவப்பட்ட இந்த நவீன ஆலைகள் வாணிபக் கழகத்தின் மேற்பார்வைக்கு வந்த பின்பு, அவற்றின் அரைவைத் திறனை அதிகரிப்பதற்கும் அரைவைச் செலவைக் குறைப்பதற்கும், அரிசியின் தரத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்போது இந்த ஆலைகள் இலாபகரமாக இயங்கி வருகின்றன.

74. இலட்சக்கணக்கான டன்களில் நெல்லைக் கொள்முதல் செய்து சேமித்து வைப்பதற்கு சேமிப்பு கிடங்கு வசதிகள் இன்றியமையாதவை. வாணிபக் கழகம் தொடங்கப்பட்ட போது, உணவு வழங்கு துறையிலிருந்து சுமார் 10,000 மெட்ரிக் டன்களைச் சேமித்து வைக்கும் அளவுக்குத்தான் கிடங்கு வசதிகள் கழகத்திற்கு மாற்றப்பட்டன. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிவில், 1·25 இலட்சம் டன்கள் சேமித்து வைக்கும் கிடங்கு வசதிகள் இக்கழகத்திற்கு சொந்தமாக உள்ளன. இது தவிர சுமார் 19,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டும் வேலை இப்போது நடந்து வருகின்றது. இன்னும் நான்கு மாதங்களுக்குள் இந்த வேலை நிறைவு பெறும்.

75. சுமார் 5 கோடி ரூபாய் செலவில் 1·60 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை 133 வட்டத் தலைமை இடங்களில் கட்டுவதற்கு வாணிபக் கழகம் ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டத்திற்காகும் மூலதனச் செலவில் 75 விழுக்காட்டை விவசாய மறு நிதி கூட்டுக் கழகத்திடமிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த நிதி கூட்டுக் கழகமும் இத்திட்டத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 1978-79 ஆம் ஆண்டில், 2 கோடி ரூபாய் செலவில் 80,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளைக் கட்டி முடிக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

76. நெல் கொள்முதலும், அரிசி விநியோகமும் இக்கழகத்தின் முக்கிய பொறுப்பாக உள்ள போதிலும், கோதுமை, லெவி சர்க்கரை ஆகிய பொருட்களின் விநியோகத்திற்கும் வெளிச்



சந்தையில் விலைவாசிகள் உயருகின்ற நேரத்தில் மற்ற இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்வதற்கும் இக்கழகம் பொறுப்பேற்றுள்ளது. தமிழகத்தின் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் கோதுமையை, மத்திய அரசின் உணவுக் கார்ப்பரேஷன் கிடங்குகளிலிருந்து எடுத்து பொது விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வது இக்கழகத்தின் பொறுப்பு. அது போலவே, பொது விநியோகத்திற்காக மத்திய அரசினால் ஒதுக்கப்படும் லெவி சர்க்கரையை மத்திய அரசு நிர்ணயிக்கும் ஆலைகளிலிருந்து—சில மாதங்களில் பிற மாநிலங்களிலுள்ள ஆலைகளிலிருந்து நமக்கு ஒதுக்கீடு தரப்படுகின்றது—எடுத்து மாவட்டங்களில் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதும் இக்கழகத்தின் பொறுப்பாகும். 1976-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கோதுமை பொருட்களின் விநியோகத்தின் மீதிருந்த கட்டுப்பாடுகளும், விலைகள் மீதிருந்த கட்டுப்பாடும் நீக்கப்பட்டதற்கு முன்பு, கோதுமைப் பொருட்களின் விநியோகத்தையும் இவ்வாணிபக் கழகமே மேற்கொண்டிருந்தது. இப்போது கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு அவற்றின் வியாபாரம் வெளிச் சந்தையில் தாராளமாக அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையில், பொது விநியோக முறையின்கீழ் இயங்கும் கடைகளுக்குத் தேவையான அளவு கோதுமைப் பொருட்களை நியமான விலைகளில், தனியார் ஆலைகளிலிருந்து பெற்று விநியோகம் செய்வதில் வாணிபக் கழகம் ஈடுபட்டுள்ளது.

77. இது தவிர, வெளிச்சந்தையில் சில பொருட்களின் விலைகளில் மிதமிஞ்சி உயர்வு காணப்படும் நேரத்தில், அவ்விலைகளைக் கட்டுப்படுத்தி, நிதானப்படுத்தும் முயற்சியாக, அவற்றின் விநியோகத்தையும் வாணிபக் கழகம் ஏற்றுக் கொள்கிறது.

78. 1976-ம் ஆண்டில் தமிழ்நாட்டில், கடலை எண்ணெயின் விலையில் மிதமிஞ்சிய உயர்வு ஏற்பட்ட சூழ்நிலையில், இவ்வாணிபக் கழகம் மேற்கொண்ட பணிகள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. குஜராத் மாநிலத்திலிருந்து 3,400 டன்கள் கடலை எண்ணெயை வாங்கவும், தமிழ்நாட்டில் வெளிச் சந்தையில் நிலவி வந்த விலைகளுக்கு மிகவும் குறைவான விலையில் விற்கவும் வாணிபக் கழகம் நடவடிக்கைகள் எடுத்தது. வெளிச் சந்தையில் கடலை எண்ணெயின் விலைகள் கிலோவுக்கு ரூ. 11-க்கும் மேலாக உயர்ந்த நேரத்தில், சென்னை நகரத்தில் கிலோ ரூ. 7·50 என்ற விலைக்கு வாணிபக் கழகம் பல மாதங்களுக்குத் தொடர்ந்து விற்பனை செய்து வந்தது. இதற்கான நட்டத்தை மானியமாக அரசு தர முன்வந்துள்ளது.

79. சிறைகள் மருத்துவமனைகள் போன்ற நிறுவனங்களுக்கு, தனியார் வர்த்தகங்கள், புள்ளி ஒப்பந்த முறையில் விற்று வந்த உணவுப் பொருட்களை, வாணிபக் கழகமே நியமான விலைகளில் விற்பனை செய்ய வேண்டுமென்று அரசு செய்த முடிவிற்கேற்ப இப்பொறுப்பையும் வாணிபக் கழகமே மேற்கொண்டுள்ளது. இதன்படி, 180 நிலையங்களுக்கு மாதம் 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்களை வாணிபக் கழகம் தொடர்ந்து பல மாதங்களாக விற்பனை செய்து வருகின்றது.

[1978 மார்ச் 27

80. இவ்வளவு விரிவான முறையில் விநியோகப் பொறுப்பை மேற்கொண்டுள்ள போதிலும், சூழ்நிலைகளில் அவ்வப்போது ஏற்படும் மாறுதலுக்கேற்ப விநியோக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பை வாணிபக் கழகம் ஏற்றுள்ள போதிலும், இதன் நிர்வாகச் செலவு, 1977—78-ம் ஆண்டில் இதன் வியாபாரத்தில் 2.9 சதவீதமே அமைந்திருந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. திறமையைப் பெருக்கவும், சிக்கனத்தைப் போற்றவும், திட்டமிட்ட நடவடிக்கைகளை முனைப்பாக எடுக்கவும், இந்த வாணிபக் கழகம் மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளின் காரணமாக, பொதுத்துறையில் மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதும், தனியார் துறையில் கிடைக்கின்ற இலாபத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போதும், மிகக் குறைவாகவே இந்த வாணிபக் கழகத்தின் நிர்வாகச் செலவு விகிதம் அமைந்துள்ளது.

81. நெல் கொள்முதலுக்கு வேண்டிய மூலதன நிதி வசதிகளை இந்த வாணிபக் கழகம், ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெறுகிறது. இதற்கு 12 சதவீத வட்டி செலுத்த வேண்டியுள்ளது. 1977—78-ம் ஆண்டில் மட்டும் 1.82 கோடி ரூபாய் வட்டியாக ரிசர்வ் வங்கிக்கு இந்த வாணிபக் கழகத்தினால் செலுத்தப்பட்டது.

82. இந்த வாணிபக் கழகம் செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டான 1972—73-ம் ஆண்டில், 5.45 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டது. அடுத்த ஆண்டான 1973—74-ல் 5·85 இலட்சம் ரூபாய் இலாபம் கிட்டியது. அடுத்த ஆண்டான 1974—75-ல் 77·20 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்தது, 1975—76-ன் கணக்குகள் வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுவினால் ஏற்கப்பட்டுள்ளன. கம்பெனி சட்டத்தின்கீழ் மத்திய அரசினால் நியமிக்கப்பட வேண்டிய தணிக்கையாளர்கள் இன்னும் நியமிக்கப்படாததால், கம்பெனி ஆடிட்டர்களின் தணிக்கை முடியவில்லை. கழகத்தின் கணக்குப்படி அந்த ஆண்டு ரூ. 51·19 இலட்சம் இலாபம் கிட்டியுள்ளது. அதுபோலவே, 1976—77-ம் ஆண்டில் 20·40 இலட்சம் ரூபாய் கிட்டியுள்ளது. 1977—78-ம் ஆண்டு சுமார் 10 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைக்குமென்று வாணிபக் கழகத்தின் மதிப்பீடுகளின்படி தெரிய வருகிறது,

83. முந்திய ஆண்டுகளில் வாணிபக் கழகம் கணிசமான அளவில், கோதுமை, கோதுமைப் பண்டங்களில் வாணிபம் செய்து வந்தது. கோதுமைப் பொருட்கள் மீது கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாலும், அரிசி தாராளமாகக் கிடைப்பதை ஒட்டி கோதுமை விற்பனை குறைந்து விட்டதாலும், வாணிபக் கழகத்திற்கு, இவற்றின் விற்பனையில் கிடைத்து வந்த இலாபமும் குறைந்து விட்டது. அரிசி விற்பனையில் ஏற்பட்ட இழப்பைச் சரிகட்ட, கோதுமை, கோதுமைப் பொருட்கள் விற்பனையில் கிடைத்த இலாபம் உதவி வந்தது. இவ்வாண்டிலிருந்து இந்த நிலை நீடிக்காது.



1978 மார்ச் 27]

84. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்திலும், 12 மண்டல அலுவலகங்களிலும் சேர்ந்து சுமார் 7,000 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். 1973—74-ம் ஆண்டில் 10 சதவீத போனசும், 1974-75-ம் ஆண்டிலும், 1975-76-ம் ஆண்டிலும் 15 சதவீத போனசும், 1976-77-ம் ஆண்டுக்கு 8·33 சதவீத போனசும் இக்கழகத்தினால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

85. கழகத்தின் கணக்குகளைக் கம்பெனி சட்டத்தின்கீழ், மத்திய அரசினால் நியமிக்கப்படும் தனியார் ஆடிட்டர்கள் தணிக்கை செய்கிறார்கள். இவ்வாறு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைத் தமிழ்நாட்டின் அக்கௌண்டென்ட்-ஜெனரல் ஆய்வு செய்கிறார். 1972—73 முதற்கொண்டு 1974—75 வரை கணக்குகள் கம்பெனி ஆடிட்டராலும், அக்கௌண்டன்ட்-ஜெனரலாலும் தணிக்கை செய்யப்பட்டு, பாதகமான விமர்சனக் குறிப்பு எதுவும் இல்லாமல் ஏற்கப்பட்டுள்ளன. 1975—76-க்குப் பின் கணக்குகள் இயக்குநர் குழுவினால் ஏற்கப்பட்டு தயாராக இருக்கின்றன. கம்பெனி ஆடிட்டர் மத்திய அரசினால் விரைவில் நியமனம் செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

86. இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, வர்த்தக முறையில் இயங்குவது அல்ல இந்தக் கழகம். கொள்முதல் கொள்கையும், விநியோகக் கொள்கையும், சில்லறை விற்பனை விலைகளும் மாநில அரசினால் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த நிர்ணயங்களுக்கு உட்பட்டே வாணிபக் கழகம் செயல்படுகின்றது. இச்சூழ்நிலையிலும் இந்த வாணிபக் கழகம் இலாபகரமாகவே இயங்கி வந்துள்ளது, பொது நலனுக்கு உகந்த முறையிலும், அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவும், வர்த்தக முறையின் நுணுக்கங்களுக்கு ஏற்பவும், இந்த வாணிபக் கழகம் திறமையாக செயலாற்றி வருகின்றது என்பதற்குச் சான்றாகும்.

## VI. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

87. தமிழ்நாட்டில் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி, விவசாயிகள், வர்த்தகர்கள், பொது விநியோகப் பொறுப்பை ஏற்றுள்ள அனைத்திந்திய உணவுக் கார்ப்பரேஷன், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் போன்ற நிறுவனங்கள் ஆகியவை தங்கள் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு விஞ்ஞான பூர்வமான வசதிகளைச் செய்து தருவது, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும். 1958-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த நிறுவனம், மத்திய அரசும் மாநில அரசும் செலுத்தியுள்ள மூலதனத்தைக் கொண்டு நடந்து வருகிறது. 1977—78 முடிய இந்த நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 2·01 கோடி ரூபாயாகும். நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 2 கோடியிலிருந்து ரூபாய் 4 கோடியாக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ளது.

88. 1—4—1974 முடிய, இந்த நிறுவனம் 53,774 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள்ள புதிய உணவு தானிய கிடங்குகளை கட்டி முடித்திருந்தது. 1978-ம் ஆண்டு பிப்ரவரியில் இந்த நி வனத்திற்குச் சொந்தமாக 1·24 இலட்சம் டன்கள் கொள்ள வுள்ள தானியக்கிடங்குகள் கட்டப்பட்டு இருந்தன. இது தவி 1978—79-ம் ஆண்டில் 20,900 மெட்ரிக் டன்கள் கொள்ளளவுள் புதிய தானிய கிடங்குகளைக் கட்டுவதற்கு திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

89. சொந்தமான இந்தக் கிடங்குகளைத் தவிர, தேற்ப அவ்வப்பொழுது வாடகைக் கிடங்குகளை இந்த அமர்த்திக் கொள்கிறது. இவற்றில், சேமிப்பு முறைகளில் யாக பயிற்சி பெற்ற விவசாய நிபுணர்களையும், அலுவலர்க கொண்டு சரக்குகளின் தரம் கெட்டுவிடாத வண்ணம், தரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

90. 1974—75 ம் ஆண்டில் 9·96 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டிய இந்த நிறுவனம், 1977-78ல் 40·64 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

91. ஒரு மணி தானியத்தைச் சேமிப்பது, ஒரு மணி தா உற்பத்திக்குச் சமம் என்னும் கோட்பாட்டிற்கு ஏற்ப, சே பொருட்களை விஞ்ஞான ரீதியில் பாதுகாத்து, உணவுப் பெ நாரத்தில் மிக மையமான சேமிப்பு அமைப்பைத் திறமை செயல்படுத்த, இந்த நிறுவனம் முனைப்பான முயற்சிகளை கொண்டுள்ளது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### திருவில்லிப்புத்தூரில் வீட்டு வசதித் திட்டம்.

* குறுகியகால வினா 10— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில் 1974—75 ஆம் ஆண்டில் வீட்டுவசதி வாரியத்தில் இருந்து ரூபாய் 4.60 இலட்சம் மதிப்பில் 60 வீடுகள் கட்ட எடுத்துக் கொண்ட திட்டம் கைவிடப்பட்டது உண்மையா ?

(ஆ) இல்லை என்றால், இந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ, ஆ) திருவில்லிப்புத்தூர் நகரம், சுண்ணாம்புக்காரத் தெரு, பள்ளிவாசல் குடிசைப் பகுதிகள் அகற்றும் திட்டத்தை ஒத்திவைப்பது என, 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம், அப்போதிருந்த அரசு தீர்மானித்தது உண்மை. அதன்படி நில ஆக்கிரமிப்புச் சட்டம் 4(1) விதியின் கீழ், குடியிருப்புகள் கட்டுவதற்குத் தேவைப்பட்ட 63 செண்டு நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பொருட்டு வெளியிட்ட அறிக்கையை 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசு விலக்கத் தீர்மானித்தது.

வெளியூர் புறங்களில் குடிசைப் பகுதிகள் அகற்றும் வேலையைப் புதுப்பிக்கும் திட்டத்தின் ஒரு அம்சமாக, திருவில்லிப்புத்தூர் பள்ளிவாசல் குடிசைப் பகுதிகள் அகற்றும் திட்டத்தையும், அதன் தொடர்பான நில ஆர்ஜித நடவடிக்கைகளையும் புதுப்பிப்பது என இவ்வரசு கருத்து கொண்டுள்ளது.

[1978 மார்ச் 28

திரு. இரா. தாமரைக்கனி : திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்ட இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள அமைச்சரவையில் உள்ள நம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன் வந்ததற்காக என் தொகுதி மக்கள் சார்பில் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் திட்ட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடியும், இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்படவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1971-ல் போட்ட திட்டம் 60 குடியிருப்புகளுக்கு ரூ. 4.82 இலட்சம். ஆனால் இப்போது ஒன்றும் நஷ்டம் இல்லை. தற்போது ரூ. 11.13 லட்சம் மதிப்பு கொண்ட 96 குடியிருப்புகள் கட்டுவதற்காக பள்ளிவாசல் குடிசைப் பகுதி அகற்றும் திட்டத்தைப் புதுப்பித்து வீட்டுவசதி வாரியம் அரசுக்கு அனுப்பியுள்ளது. நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை புதுப்பிப்பது சம்பந்தமான செயற்குறிப்புகளை வீட்டுவசதி வாரியம் இன்னும் அனுப்பவில்லையானாலும், இத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவை மிகவும் தேவையாகும். தொடர்பான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாடு முழுவதும் இந்த மாதிரி வீட்டுவசதி வாரியத்திலிருந்து திட்டம் போட்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டாமல் இருந்து விட்டார்கள் மீண்டும் திருவில்லிப்புத்தூரில் கட்டுவது போல் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எங்கெங்கே இப்படியெல்லாம் விடப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சேகரித்து கொடுத்தால் விரைவில் அவைகளுக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படும்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* குறுகிய கால வினா 11— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருவலத்தில் உள் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒ றுக்கு ரூ. 400 ஊக்க போனஸ் வழங்குவதாக வாக்குறுதி அளிக் பட்டது உண்மையா ?



978 மார்ச் 28]

(ஆ) ஆம், எனில் எத்தனை ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது? வ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். நவம்பர் 976 முதல் ஜனவரி 1977 முடிய உள்ள மாதங்களில் ரன்பட்ட நடவு செய்து 1977—78 சீசன் அறைவைக்கு வலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ப்லை செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 முன் பட்ட நடவு மானியமாக வழங்க ஆலை வாக்குறுதி அளித்துள்ளது.

(ஆ) 3674 ஏக்கர்களில் முன் பட்ட சாகுபடி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மானியத் தொகை கரும்பை அறுவடை செய்து ஆலைக்கு வழங்கிய பின்னரே வழங்கப்படு ாதலால், இதுவரை மான்யம் ஏதும் வழங்கப்படவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 அளிப்பதாக சர்க்கரை ஆலை உத்தரவாதம் அறிவித்தும் கூட— அப்படி உத்தரவாதம் கொடுத்து கரும்பு வெட்டியிருக்கிறார்கள்— ஆனால் இதுவரையில் அதைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. ஆனால் கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பி அதை ர்க்கரையாக்கி விற்றுவிட்ட பிறகும்கூட இதைக் கொடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? இனிமேலாவது உடனடியாக, ஒன்றிரண்டு மாதங்களுக்குள் கொடுப்பதற்கு வேண்டிய நட வடிக்கைகளை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நிதி நிலைமை சரியா இல்லாத காரணத்தால்தான் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. நிதிநிலை சரியானவுடன் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* குறுகிய கால வினா 12— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க் கரை ஆலையில் கரும்பு விவசாயம் செய்த விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 ஊக்க போனஸ் தொகை கொடுப்பதாகச் சொன்னதற்கிணங்க ஆலையில் எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?

[1978 மார்ச் 28

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 1977–78 ஆம் ஆண்டு அறைவைக்காக டிசம்பரில் நடப்பட்ட சி.ஓ.சி. 67–1, கோ. 62198 மற்றும் கோ. 740 ஆகிய கரும்பு ரகங்களுக்கு மட்டும் முன்பட்ட நடவு மானியத் தொகையாக விதை கரணைக்கு ஆகும் செலவில் பாதியை அதிக பட்சம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 வரை மானியமாக கொடுக்க ஆலை அறிவித்துள்ளது. மொத்தம் 1757 ஏக்கர்களுக்கு மானியம் கொடுக்கப்பட இருக்கிறது. இதனால் 919 அங்கத்தினர்கள் பயனடைவார்கள்.

**திரு. எஸ்.ஜே. இராமசாமி :** நிதி வசதி பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதே போல்தான் விவசாயிகளுக்கு நிதி பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. ஆகவே 'கடன் வாங்கி கல்யாணம்' என்று சொல்வார்கள், அதைப்போல் எங்கிருந்தாவது கடன் வாங்கியாவது முடியுமென்றால் மத்திய அரசிடமிருந்து கடன் வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய இந்த ஊக்க போனசைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பல வங்கிகளிடம் கேட்கப்பட்டுள்ளது. கடன் கிடைத்ததும் இந்த மானிய ஊக்கத் தொகை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள் அதிகப்படியாக கரும்பை உற்பத்தி செய்ய வேண்டும் என்று இந்த ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா ? அல்லது மானியமாக இப்போது அமைச்சர் அவர்கள் மானியம் என்று சொல்லி விட்டார்கள். அப்படி மானியமாக இந்தக் குறிப்பிட்ட ரக கரும்புக்கு மட்டும் என்றில்லாமல் எல்லா ரக கரும்புகள் உற்பத்திக்கும் கொடுக்கக்கூடாதா ? அப்படிக் கொடுத்தால் அதிகப்படியான அளவில் கரும்பு உற்பத்தி செய்யப்படுமே, ஆகவே எல்லா ரக கரும்புகளுக்கும் இந்த ஊக்க போனஸ் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியமாக என்று சொல்வது இந்த ஊக்க போனஸைத்தான். இதைக் குறிப்பிட்ட கரும்புக்கு என்று மட்டும் இல்லாமல் பாக்கியுள்ள எல்லாவித கரும்புகளுக்கும் ஊக்க போனஸ் கொடுத்தால் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய மண் வளத்தைப் பொறுத்து எந்தெந்த கரும்பு வகைகளை உற்பத்தி செய்தால் அதிகப்படியான விளைச்சல் இருக்கும் என்பதைப் பார்த்து அதன் அடிப்படையில் இப்படிப்பட்ட



1978 மார்ச் 28]

கரும்புகளைத் தேர்ந்தெடுத்து. அதோடு குறிப்பாக கரும்பு அரைக்கிற ஆலைகள் மூலமாகவும் அதிகாரிகள் மூலமாகவும் சிபாரிசு செய்கிறார்கள். அப்படிப்பட்ட கரும்புகளைப் போடுவதின் மூலமாக அதிகமான விளைச்சலைக் காணவும், அதே நேரத்தில் அதிகமான அளவு சாறு பிழியும் தன்மைகளையும் பார்த்து, அதற்குத் தகுந்தபடி உற்பத்தி செய்வதற்காக இப்படிப்பட்ட ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும் கரும்பு அரைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இப்படிப்பட்ட ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறது. சில ஆலைகளில் ஆறு மாதம் அல்லது பத்து மாதம் என்றில்லாமல் ஆண்டு முழுவதும் க்ரஷிங் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்படிப்பட்ட போனஸ் தரப்படுகிறது. ஆனால், இந்தப்பணம் முதலில் தரப்படுவதில்லை. அதே நேரத்தில் கட்டிங் ஆர்டரும் உரிய நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. அது மட்டுமல்ல, ஊக்க போனஸும் சரியான நேரத்தில் கொடுக்கப்படாததன் காரணமாக ஒரு வருடமாகப் பணம் முடங்கிப் போய் விடுகிறது. வட்டியும் சேர்ந்து விடுகிறது. ஆகவே, உடனடியாக இந்த மான்யத் தொகையை முதலிலேயே தருவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு ஆண்டு முழுவதும் அரைக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ சொல்லுகிறார்கள். It is a seasonal one. கரும்பு ஆண்டு என்று சொல்வதே செப்டம்பர் மாதத்தில் ஆரம்பித்து அடுத்த மே மாதம் வரை அரைவை இருப்பது வழக்கம். அப்படித்தான் அரைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்குப் பாக்கித்தொகை வரவேண்டியிருந்தாலும் உடனடியாகத் தேவைப்படுகின்ற வழிமுறைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** அமைச்சர் அவர்கள் ஆண்டு முழுவதும் கரும்பு அரைவை இல்லை என்று சொன்னார்கள். அது இடத்திற்கு இடம் மாறுபடும். ஆலைக்கு ஆலை மாறுபடும். ஆப்பக்கூடல் போன்ற இடங்களில் ஆறு மாதம் இருக்கலாம், ஆம்பூர் போன்ற இடங்களில் நான்கு மாதம், ஐந்து மாதம் என்று இருக்கும். கரும்பு அவ்வப்போது வருவதைப் பொறுத்திருக்கிறது. அது ஒன்று, இரண்டாவது, கொடுக்கப்படுகிற சப்சிடியைத் தவிர, கரும்பு கட்டிங் ஆர்டர் உரிய நேரத்தில் கொடுப்பதில்லை. இதன் காரணமாக வயலில் வேர்விட்டு ஏக்கர் ஒன்றுக்கு

10 டன் 5 டன் நஷ்டம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு அடி ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, குறிப்பிட்ட காலத்தில் கட்டிங் ஆர்டர் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். Sugar-cane year starts only from the first of October of every year. அதாவது அக்டோபர் முதல் தேதியிலிருந்து தான் 'சுகர்கேன் இயர்' ஆரம்பிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு முழுவதும் அரைவை இருக்க வேண்டும் என்பதற்காக இப்போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுவாக உற்பத்தி பெருக்கத்திற்காகக் கொடுக்கப்படுகின்ற ஊக்கத் தொகையில் பாக்கி ஏதேனும் இருந்தால் அதைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கட்டிங் ஆர்டர் 'ப்ராப்பர் டைமில்' கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9—10]

திரு. துரை முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் இப்போது டன் ஒன்றுக்கு 109 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதிகமாக டன் ஒன்றுக்கு 114 ரூபாய் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அப்படியிருந்தும், அறுவடை ஆரம்பித்து 4 மாதங்கள் ஆகியும், விவசாயிகளுக்கு அரசாங்கம் அறிவித்த இந்த விலை கொடுக்கப்படவில்லை. எனவே, உடனடியாக அது கொடுக்கப்படுமா ? டன் ஒன்றுக்கு 3 1/2 ரூபாய் என்று அரசாங்கத்தில் இருப்பதற்குப் பதில் இப்போது 7 1/2 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அது தடுத்து நிறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் அரசின் கவனத்தில் இருக்கிறது. அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, இந்தக் குறிப்பிட்ட ரக கரும்புக்கு ஊக்க போனஸ் கொடுப்பதினாலே, பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைமையிலே மாவட்டத்திற்கு



மாவட்டம், பிரதேசத்திற்கு பிரதேசம் 200 ரூபாய், 400 ரூபாய் என்ற அடிப்படையிலே ஊக்க போனஸ் என்று அறிவிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்குமானால், அந்த விவசாயிகள் மத்தியிலே ஒரு கிளர்ச்சி செய்யக்கூடிய அளவுக்கு இதைத் தூண்டி விடுவதாக இல்லையா ? ஆகவே, எல்லா ரகத்திற்கும் எல்லா இடங்களிலேயும் ஒரே விதமான ஊக்க போனஸ் கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட ரக கரும்புக்கு மட்டுமே கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பிட்ட கரும்புக்கு ஊக்க போனஸ் கொடுப்பது என்பதற்குக் காரணம், அதிக விளைச்சல் ஏற்பட்டு, அதிக உற்பத்தியாக வேண்டுமென்ற அடிப்படையிலே மட்டுமல்லாமல், விவசாயிக்கு அதிக லாபம் தரவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இவைகளுக்குத் தரப்பட்டு வருகின்றது. ஆகவே, எந்தவிதமான குறுகிய எண்ணமோ, குறுகிய நோக்கமோ இந்த அரசுக்குக் கிடையாது. ஆகவே, விவசாயிகளின் நன்மையைக் கருதித்தான் இப்படிப்பட்ட ஊக்க போனஸ் கொடுக்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சின்னசாமி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்ற பொருள்களுக்காகக் கரும்பை அரைத்து, காய்ச்சி அதைத் தயாரிப்பதற்கு பக்குவம் தெரிந்தவர்கள் கிராமங்களிலே இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியிருந்தால், விவசாயத் துறை நிபுணர்கள் மூலம் கரும்பைப் பக்குவப்படுத்திக் காய்ச்சுவதற்கு, என்ன ரக உரம் சேர்த்தால் அதை நல்ல முறையிலே எடுக்க முடியும் என்று செய்து காட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, கரும்பை ஆட்டி தகுந்த முறையிலே வெல்லம் உற்பத்தி செய்வதற்கான உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. தனிப்பட்டவர்கள் செய்யக்கூடிய வேலை இது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனையை வேண்டுமானால், அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 683.

(திரு. மு. அம்பிகாபதி, திரு. ரா. மார்க்கபந்து அகியோர் எழுந்து நின்றனர்).

திரு. மு. அம்பிகாபதி : இது முக்கியமான கேள்வி ஆயிற்றே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இந்தக் கேள்விக்கு 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்து வரும் கேள்வியில் இதைப்பற்றிக் கேட்கலாம்.

## இறவைப் பாசனத் திட்டம்.

*வினா—683. திரு. அ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் லிப்ட் இரிகேஷன் திட்டம் எங்கெங்கு செயல்படுத்தப்பட்டிருக்கிறது ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை 'லிப்ட் இரிகேஷன்' திட்டம் செயல்பட்டு வருகிறதா ?

(இ) இல்லையெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) தமிழ்நாட்டில் தற்போது எல்லா மாவட்டங்களிலும் இறவை நீர்ப்பாசனத் திட்டங்கள் பல்வேறு வகையில் இயங்கி வருகின்றன.

(ஆ) இல்லை.

(இ) சிற்றாறு பட்டணங்கால் என்னும் திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் விளாத்துறை இறவைப் பாசனத் திட்டத்தின் கீழ் பாசன வசதி பெற்ற 648.02 ஏக்கர், நிலங்கள் புதிய திட்டத்தின் கீழ் பாசன வசதி பெற்றது ; எனவே, விளாத்துறை இறவைப் பாசனத் திட்டத்தின் கீழான ஆயக்கட்டு நிலங்களை சிற்றாறு-பட்டணங்கால் ஆயக்கட்டுக்கு மாற்றுவதற்கான பிரேரணைகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, விளாத்துறை இறவை பாசனத் திட்டம் 1972 மே மாதம் முதல் முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது.

திரு. அ. சுவாமிதாஸ் : இந்த விளாத்துறை லிப்ட் இரிகேஷன் திட்டத்திற்காகப் பொருத்தப்பட்டுள்ள பம்ப் செட்டுகள் எல்லாம் தற்போது அங்கு இல்லை. அவைகளைக் கொண்டு வேறு எங்காவது லிப்ட் இரிகேஷன் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறதா? வள்ளியாற்றில் வீணாகப் போகிற தண்ணீரைத் தடுத்து நிறுத்தி அந்த பம்ப் செட்டுகளைக் கொண்டு லிப்ட் இரிகேஷன் செய்ய வழி செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதிலே பயன்படுத்தப்படும் பம்ப் செட்டுகள் வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை. டிரான்ஸ்பார்மர்கள் பல வருஷங்களாக பயன்படுத்தாமல் இருந்த காரணத்தால் மீண்டும் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலைமையில் உள்ளன. வள்ளியாற்றில் பயன்படுத்தும் உத்தேசம் இப்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறைவைப் பாசனத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டம், மாயூரம், தலைஞாயிறு பகுதியில் இறைவைப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது தற்போது சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அதனைச் சரியாக இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு ஆவன செய்ய முன்வரும்..

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்றில் அதிகத் தண்ணீர் ஆண்டு முழுவதும் வீணாகக் கடலில் சென்று சேருகிறது. அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. லிப்ட் இரிகேஷன் முறையில் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு அரசு பி.டபிள்யூ. டி.இலாக்கா மூலமாக நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது கிடைக்காத காரணத்தால் பம்ப் செட் வைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதை ஆராய்ந்து நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை என்றாலும், அரசு இதை ஆராயும்.

திரு. எம். வின்சென்ட் : பாசனத் திட்டம் அமல்படுத்தப்பட்டாலும் மேலும் ஒரு மகசூலுக்கு வகை செய்யும் வகையில் லிப்ட் இரிகேஷன் திட்டத்தைக் குமரி மாவட்டத்திற்குக் கொண்டு வர அரசு திட்டம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மீண்டும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டது. 3.3 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. இத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தும்போது ஏற்படும் நிர்வாகச் செலவை திட்டத்தினால் பயன்பெறும் விவசாயிகளே ஏற்றுக் கொள்ள வேண்டிய காரணத்தால் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டால் 710 ஏக்கர் நிலம் இருபோக விவசாயம்

செய்யும் வகையில் பாசன வசதியை அதிகப்படுத்தலாம்; கிரா
மங்களுக்குக் குடி தண்ணீர் வசதியும் ஏற்படும் என்ற தகவல் இருக்
கிறது. ஆகவே, அரசு இதைப் பற்றி ஆராயும்.

திரு. சோ. அழகர்சாமி: நெல்லை மாவட்டத்தில் வைப்பாறு
போன்ற ஆறுகளில் இந்த இறைவைப் பாசனத் திட்டத்தைச்
செயல்படுத்தினால் இரண்டு போகம் பயிரிட விவசாயிகளுக்குப்
பலன் அளிப்பதாக இருக்கும். இந்தத் திட்டம் அங்கு வேண்டு
மென்று விவசாயிகள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,
இறைவைப் பாசனத் திட்டத்தை அங்கே கொண்டு வர ஏற்பாடு
செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போது அந்த
விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. பி. ராமதாஸ்: இதுபோன்ற திட்டம் மதுரை மாவட்
டம் போடி பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு செயல்படாமல் இருப்பது
அரசுக்குத் தெரியுமா? அதனைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை
எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வி
கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றியது.

## Irrigation facilities in Nagapattinam Constituency.

*684--Q. Thiru R. UMANATH; Will the Hon. the Minister
for Public Works be pleased to state:

(a) whether the Government are aware that in Nagai Consti-
tuency, in the absence of proper irrigation channels and due to
prolonged neglect of the work of broadening and deepening
of Papanar Channel, Ettukudi Channel, Keezhayur Kuppam
Channel, Churankudi Channel, & Mettu Channel, standing
crops are destroyed every year; and

(b) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) நாகைதாலுக்காவில் பாப்பனாறு வடிகால் நேராக கடலில்
கலக்க நேர்வெட்டுத் திட்டம் ஒன்று ஆய்வில் உள்ளது. எட்டுக்
குடி வாய்க்கால் அபிவிருத்திக்கு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்



பட்டுள்ளது. குழையூர் வாய்க்கால், குப்பம் வாய்க்கால், மேட்டு
வாய்க்கால்களைப் பற்றி 1978-79 ஆண்டு விரிவான ஆய்வுகள் மேற்
கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.37,000 செலவில்
சொர்ணகுடி வடிகால் அபிவிருத்தி வேலை எடுத்துக் கொள்ளப்
பட்டு வேலை முடிந்துவிட்டது.

(முற்பகல் 9-20)

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பொதுவாக
இந்த டிபார்ட்மெண்டிலிருந்து நல்ல பதில் கிடைப்பது 'கல்லி
லிருந்து நார் உரிப்பது' மாதிரிதான். நான் அமைச்சரைச்
சொல்லவில்லை. டிபார்ட்மெண்டைச் சொல்கிறேன். இது வடி
கால் சம்பந்தப்பட்ட பிரச்னை. ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர்
தேங்கிவிடுவதால் கிராப்ஸ் பாதிக்கப்படுகிறது. அந்த வாய்க்கால்
களை அகலப்படுத்தினால், ஆழப்படுத்தினால், கிராப்ஸ்களைப் பாது
காக்க முடியும். இந்த ஆய்வு என்ற விஷயம்—கனம் அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது—1960-ல்
இருந்து. அந்த வார்த்தையை உபயோகித்துக் கொண்டு வருகி
றார்கள்.

இந்த எட்டுகுடி வாய்க்கால் பற்றி டி.டி. சி-யிலே சமீபத்திலே
எழுப்பியபோது அது ஃபைனலைஸ் ஆகிவிட்டது, ஆரம்பிக்கப்
போகிறோம் என்று சொன்னார்கள். இந்தக் கேள்வியினுடைய
ஆன்சருக்கும் அதற்கும் வித்தியாசம் கொஞ்சம் இருக்கிறது. மற்ற
வேலைகள் எல்லாம் விரைவிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று
சொல்லப்படுகிறது. இப்படி ஆய்விலே இருக்கிறது என்று சொல்
லக்கூடிய பதில் டிபார்ட்மெண்டிலே கேர்லஸ் ஆட்டிட்டியூட்—
கேஷுவல் ஆட்டிட்டியூட் இருப்பதற்கு என்ன காரணம்? அதைப்
பற்றி விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு என்ன நடவடிக்கை
எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: காவிரி வளர்ச்சிப்
பணித் திட்டத்தின் கீழ் டெல்டா முழுவதிலும் உள்ள வடிகால்
களை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வடிகால்
அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின் வடிகால்
வசதி மேம்பாடு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்
வொன்றாக கடந்த 6 ஆண்டுகளில் வடிகால்கள் அபிவிருத்தி செய்
யப்பட்டு வருகின்றன. நாகை தாலுக்காவில் பாப்பனாறு வடிகால்
தற்போது வேதாரண்யம் கால்வாயில் கலக்கிறது. இது நேராகக்
கடலில் கலக்க நேர்வெட்டுத் திட்டம் ஒன்று ஆய்வில் உள்ளது.
இத்திட்டம் அதிகச் செலவு பிடிக்கும். ஆதலால் விரிவான ஆய்வுகள்
செய்யப்பட வேண்டியிருக்கிறது என்கின்ற தகவல்கள் என்னிடத்
திலே தரப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலே வடிகால்
வசதிகளைப் பொறுத்தவரையில் படிப்படியாகக் காரியங்கள் நிறை
வேற்றப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய

[1978 மார்ச் 28

அந்தக் கேள்விக்கு சாதகமான பதிலைப் பெற்றிருக்கிறார்கள் என்று தான் கருதுகிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு விரைவில் ஆவன செய்யும்.

திரு. ரா. உமாநாத் : சாதகமான பதில் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அது இடையிலே விட்டுப் போய்விட்டது. அது டெயில் எண்ட் ஆக இருப்பதால் அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த ஏதாவது டைம் பவுண்ட் புரோகிராம் ஏற்படுத்தி, அந்த ரையட்ஸ்களுக்கு உத்திரவாதம் கொடுக்கக்கூடிய முறையிலே— கிராஷ் புரொகிராம் அல்லது டைம் பவுண்ட் புரொகிராம் மூலமாக நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு நட.வடிக்கை மேற்கொள்ளும்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, நாகைப் பகுதியிலே கால்வாய்களை ஆழப்படுத்துவதற்கும் அகலப்படுத்துவதற்கும் உள்ள நடவடிக்கை பற்றிய கேள்வி இங்கே கேட்கப்பட்டது. இதுபோன்று தமிழகத்திலே உள்ள பல்வேறு கால்வாய்கள் அகலப்படுத்தப்படாமலும், ஆழப்படுத்தப்படாமலும் அதன் காரணமாக விவசாயம் மட்டுமல்லாமல், சாலைப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அப்படியானால் இது போன்று எங்கெங்கே கால்வாய்களை ஆழப்படுத்துகின்ற, அகலப்படுத்துகின்ற பணிகள் செய்யப்பட இருக்கின்றன? பல இடங்களிலே ஆழப்படுத்தப்பட்டதாக போர்டுகள்தான் மாட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் ஆழப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கான காரணங்களையும் அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எங்கெங்கே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அங்கெல்லாம் முறையாகப் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விரிவான அடிப்படையில் இந்த வடிகால் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, படிப்படியாக நிறைவேற்றப்படுகின்றன என்று சொன்னார்கள். அந்த விரிவான திட்டம் இந்த அவை முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் இந்த அவை முன் வராது. காரணம், காவிரி நீர் பங்கீடு பிரச்னை கர்நாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தையில் இருந்து வருகிறது.



1978 மார்ச் 28]

## பருத்திக்கோட்டைக் கிராமத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

*685 வினா— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா:

(அ) மன்னார்குடி தாலுக்கா 145 பருத்திக்கோட்டை கிராமத்தில் எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டியது உள்ளது?

(ஆ) மின் இணைப்பு கொடுக்கப்படாமைக்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மன்னார்குடி, பருத்திக்கோட்டை கிராமத்தில் ஏழு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) அரசு தயாரித்துள்ள முன்னுரிமை கொள்கைப்படி மின் இணைப்புகள் வழங்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை விரைவாக அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்டர்கள் சேதம் அடைந்ததற்கு 50 ரூபாய் ரிப்பேர் செலவுக்காக வசூலிக்கப்படுகிறது. வாடகைக்கு அமைக்கப்பட்டிருக்கிற மீட்டர்களில் ரிப்பேர் ஏற்படுமானால் அதற்கு மின்சார வாரியம் தான் செலவிடவேண்டும், எப்படி பஸ்ஸிலே ரிப்பேர் வருமானால் அதிலே பயணம் செய்கின்ற பயணிகள் அதற்காக செலவிடுவது இல்லையோ அதைப்போன்று அந்த ரிப்பேர் செலவை மின்சார வாரியமே ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீட்டர் ரிப்பேர் பற்றிய விவரம் என்னிடத்தில் தற்பொழுது இல்லை. இது மின்னிணைப்பு பற்றிய கேள்வி. 75 கிணறுகளில் ஏற்கெனவே 40 கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 35 கிணறுகளில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி 8 விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் ஒரு கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கும் பணி நடைபெறுகிறது. மற்ற 7 விண்ணப்பங்களும், தற்போது அரசு தயாரித்துள்ள முன்னுரிமைப் பட்டியலின்படி கடைசி இனத்தைச் சார்ந்தவையாதலால் மாநில அளவில் உள்ள சுமார் 80,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்ட பின்னர்தான் இந்த பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்க இயலும்.

[1978 மார்ச் 28

திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் குறிப்பிட்டதைப் போல தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இதைப்போன்ற மின் இணைப்புக் கொடுப்பதில் மிக அதிக அளவில் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதற்குரிய காரணம் நிலத்தடி நீர் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்து எல்லா இடங்களுக்கும் இந்த மின்னிணைப்பு தருவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காரணம் அது மட்டுமல்ல. நம்மிடத்திலே இருக்கின்ற மனுக்கள் இரண்டேகால் இலட்சம். ஆண்டு ஒன்றுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 25,000 இலிருந்து 35,000 வரை. ஆகவே, இருக்கின்ற மனுக்களுக்கே இன்னும் ஏழெட்டு ஆண்டுகளுக்கு வேலை இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மின்னிணைப்பு கொடுக்கும்பொழுது அரசு என்ன நடைமுறைகளைக் கடைப் பிடித்து மின்னிணைப்பு கொடுக்கிறது. இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் இருப்பதாகக் கூறினார்கள். அப்படியென்றால் சிறு நில விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா? ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் கொடுக்காமல் புதியதாக மனுச் செய்பவர்களுக்கு கொடுக்கக் கூடிய முறையைக் கடைப்பிடிக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே மின் வாரியத்தினால் சேங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் ஏற்கனவே நிறைய இருக்கின்றன. ஆகையினாலே சேங்ஷன் செய்யப்பட்ட திட்டங்களுக்கு இப்பொழுது மின்சாரம் வழங்கப்படுகிறது. சிறு விவசாயிகளுக்கு அதிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம்.

*686. வினா. — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர்களாக பணிபுரியும் நிலையில் பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றும் உரிய பதவியுயர்வு கிடைக்காத நிலையில் அவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவது போல் தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கும் ஊக்க ஊதியம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ., பட்டம் மட்டும் பெற்றால் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை. அவ்வாசிரியர்கள் பி.ஏ., பட்டம்



1978 மார்ச் 28]

பி.டி. பட்டம் ஆகிய இரண்டும் பெற்றால்தான் ஊக்க உயர்வு அளிக்கப்படுகிறது. புலவர் அல்லது வித்வான் பட்டம் மட்டும் பெறும் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்க ''ஊக்க ஊதிய உயர்வு திட்டத்தின் கீழ்'' இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பி.ஏ., பி.டி., பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுவதைப் போலவே தமிழ் பயின்ற தமிழ்ப் புலவர்களுக்கும் அத்தகைய முறையினை விரிவுபடுத்த இனியேனும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.ஏ. அல்லது பி. ஓ. எல். பட்டம் பெற்று முதல் நிலை தமிழாசிரியர்களானவர்கள் எம். ஏ. பட்டம் பெற்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், எம். எட். பட்டம் பெற்றால் மற்றும் ஒரு முறை இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றது. வித்வான் அல்லது புலவர் பட்டமும், தமிழாசிரியர் பயிற்சி அல்லது செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்று முதல் நிலை அல்லது இரண்டாம்நிலை தமிழாசிரியர்களானவர்கள் பி.டி. பட்டம் பெற்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், ஏம்.ஏ. பட்டம் பெற்றால் மற்றுமொருமுறை இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படுகின்றது.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் எம்.ஏ., பட்டம் பெற்றால் அவர்களுக்கும் ஊக்க உயர்வு அளிக்கப்படுகிறது. ஆனால் வெளி சர்வகலாசாலைகளில், பட்டப்படிப்பு எம்.ஏ., படிக்கும் பொழுது அங்கே ''தேர்ட் கிளாஸ்'' டிகிரி கொடுக்கிறார்கள். நமது யூனிவர்சிட்டியில் அது கிடையாது. செகண்ட் கிளாஸ் வரையில்தான் இருக்கிறது. ஆனால் தேர்ட் கிளாஸ் பட்டதாரிகளுக்கும் ஊக்க ஊதிய உயர்வு கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. கூ. ச. முருகேசன் : துணைத் தலைவரவர்களே, நமது மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் அதிகமாக பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஊதிய விகிதத்தைப் பார்த்தால் உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் பெறுகின்ற அளவிற்குச் சம்பளம் இவர்களுக்குக் கிடையாது. அந்த நிலைமையை இந்த அரசு சரி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் செய்கின்ற வேலைக்குத்தான் சம்பளம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகள்.

*687. வினா.— திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி கல்லூரி ஆசிரியர்கள் சம்பள விகிதம், Service conditions ஆகியவைகள் குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம். 1977 செப்டம்பர் திங்களில் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் மேல் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளம் நேரடியாக அரசே தருகிற விதத்தில் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. அதைப்பற்றி பரிசீலிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கொள்கையளவில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதும் அன்றையதினம் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு அளித்த அந்த ஊதிய விகிதத்தை அரசு ஏற்றுக் கொண்டு கல்லூரி ஆசிரியர்களோடு ஒரு உடன்பாடு ஏற்கனவே ஏற்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்னும் கூட தனியார் கல்லூரிகளுக்கு அந்த திட்டத்தை நிறைவேற்ற அறிவிப்புகள் வந்ததாகத் தெரியவில்லை. எனவே, எவ்வளவு விரைவில் அதை நிறைவேற்ற அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விரைவிலே அந்த உடன்பாட்டிலே கண்டுள்ள, அறிக்கையிலே கண்டுள்ள செய்திகள்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய பரிந்துரைப்படி, கல்லூரி ஆசிரியர்களுடைய சம்பள விகிதங்கள் மாற்றப்பட்டிருப்பதாக



அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாற்றியமைக்கப்பட்ட சம்பள விகிதமும் இதற்கு முன்னால் வாங்கிய ஊதியத்துக்கும் அதிக உயர்வில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் ஊதிய உயர்வைக் கொடுப்பதன் மூலமாக ரூ. 5 கோடிவரை செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? இப்பொழுது வாங்கிக்கொண்டு வரும் சம்பளமும், அதிகமாக கொடுப்பதாகச் சொல்கிற சம்பளமும் இரண்டும் ஒரே மாதிரியாக, வித்தியாசம் இல்லாமலிருப்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நீண்ட நாள் பணியிலே இருப்பவர்களுக்கு அந்த வித்தியாசம் குறைவாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, 1976-ம் ஆண்டில் ஏற்பட்ட தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் செக்ஷன் 38(1), செக்ஷன் 21-ன் படி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அப்பீல் செய்துக்கொள்வதற்கு டிரிபியூனல் கான்ஸ்டிடியூட் செய்ய வேண்டியது அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அந்த டிரிபியூனல் போடப்பட வில்லையென்று நான் அறிகிறேன். அதற்கான காரணம் என்ன? அந்த டிரிபியூனலை உடனடியாகப் போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, பல்கலைக் கழக மானியக்குழு எத்தனை சிபாரிசுகளை பரிந்துரை செய்தது? அவைகளில், நம்முடைய அரசு எத்தனை ஏற்றுக்கொண்டது? எத்தனை நிராகரிக்கப்பட்டன? எத்தனை இன்னும் பரிசீலனையில் உள்ளன என்பதையும் அகில இந்திய அளவில் மற்ற பல்கலைக் கழக ஆசிரியர்கள் பெறுகின்ற சம்பளமும் இங்கே உள்ள பல்கலைக் கழக ஆசிரியர்கள் பெறுகின்ற சம்பளமும் ஒன்றாக இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பல்கலைக்கழக மானியக் குழு சிபாரிசு செய்த சம்பள விகிதத்தை நாம் இன்றையதினம் அமுல் நடத்தியிருக்கிறோம். கல்லூரி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தி, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேதான் இன்றைய தினம் அமுல் நடத்தப்பட்டிருக்கிறது. வேறு மாநிலங்களிலே இன்னும் அமுல் நடத்தப்படவில்லையென்ற நிலைமைகளும் இருந்து கொண்டிருக்கின்றன.

[1978 மார்ச் 28

சேலம் கலைக்கல்லூரி

*688 வினா.— திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் கலைக்கல்லூரியில் 3 ஷிப்ட் நடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள்?

(இ) இதைக் குறைத்து கல்லூரி நடக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) பகல் நேரக் கல்லூரியில் 2,480 மாணவர்களும் மாலை நேரக் கல்லூரியில் 540 மாணவர்களும்' படிக்கின்றனர்.

(இ) ஆம். எடுத்துள்ளது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, தமிழகத்திலே இதுவரை 3 கல்லூரிகள் நூற்றாண்டு விழா கண்டிருக்கின்றன. அதிலே, நான் படித்த மாநிலக் கல்லூரியும் ஒன்று. அதற்கடுத்து, நூற்றாண்டு விழா காணப்போவது சேலம் கலைக்கல்லூரி. இந்த சேலம் கலைக்கல்லூரி, தொழிற்சாலைபோல இயங்குவதாலேயும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தாலேயும், போதிய கட்டிட வசதியில்லாத காரணத்தாலும், அங்கே இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அக்கல்லூரியில் மெம்மோரியல் ஹாலும், நூலகமும் அமைக்க மானியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அடுத்த ஒராண்டுதான் பி.யு.சி. கல்லூரியிலே இருக்கப்போகிறது என்ற காரணத்தாலே. அதற்கடுத்த ஆண்டிலேயிலிருந்து அந்த நிலைமை சரிப்பட்டுவிடும். மற்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.



1978 மார்ச் 28]

மாயூரம் பஞ்சாயத்து

*689 வினா.— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் ஊராட்சி ஒன்றியம், மாயூரம் புறநகர் (ஊரக) பஞ்சாயத்தின் பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கலாமென தஞ்சை மாவட்ட அட்சியரின் 24-9-75-ம் தேதிய தாக்கிதின்படி அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 'மாயூரம்' ரெவின்யூ கிராமத்தின் பெயரை 'மயிலாடுதுறை' என்று மாற்றியமைக்க தஞ்சை மாவட்ட ஆட்சி தலைவரால் 7—11—75-ல் அனுப்பப்பட்ட செயற்குறிப்பு அப்போதிருந்த அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பஞ்சாயத்தின் பெயரை 'மயிலாடுதுறை' என மாற்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

திரு. என். கிட்டப்பா: துணைத் தலைவரவர்களே, இந்த மாயூரம் என்ற ரெவின்யூ கிராமத்தினுடைய பெயரை, மயிலாடுதுறை என்று மாற்றியமைக்க வேண்டுமென்ற குறிப்பை மாயூரம் கோட்டாட்சித் தலைவர், தஞ்சை மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களுக்கு அனுப்பிய நகல் ஒன்று என்னிடத்திலே கூட இருக்கிறது. அரசு ஏற்கனவே இதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டினார்கள். அங்கே மாயூரம் புறநகர் ஊராட்சி மன்றமும், மாயூரம் ஊராட்சி ஒன்றியமும் மாயூரம் நகராட்சியும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியிருந்தும், மயிலாடுதுறை என்று மாற்றப்படாமல் இன்னமும் இருப்பது சரியல்ல என்பதை உணர்ந்து அரசு. இனியேனும் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த கடித போக்குவரத்து வருவாய்த்துறை வாரியத்திலும் , மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இடையிலே நடந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையோடு அது தொடர்பு கொள்ளவில்லை. இருந்தாலும் ஊராட்சி ஒன்றியமும், நகராட்சி மன்றமும் இதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தகவல் கிடைத்திருக்கிறது. இது நீண்டகால கோரிக்கை. கிட்டப்பா அவர்களின் நியாயமான கோரிக்கை. நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதற்கு மயிலாடுதுறை வாழ் மக்களின் சார்பாக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல இந்த பெயர் மாற்றத்தினை

விரைந்து செயல் படுத்த, அண்மையிலே அமைச்சர் அவர்கள் மாயூரம் வந்தபோதுகூட மாயூரத்திற்கு எந்த வரம் கேட்டாலும் தரப்படும் என்று சொன்னார்கள்—இந்த வரத்தை விரைவிலே நிறைவேற்றி கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது வரம் அல்ல, நியாயமான கோரிக்கை. நிறைவேற்றித்தருவது அரசின் கடமை.

## கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து.

*690 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவர் சுல்தான் என்பவர் கடற்கரை ஓரங்களில் சிறிய கீற்றுக் கொட்டகைகளை அரசு நிலங்களில் அமைத்து வாடகையை விசைப்படகுகாரர்களிடம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சுல்தான் என்ற பெயரில் யாரும் கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவராகப் பணியாற்றவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சுல்தான் என்கின்ற நபர் அந்தப் பகுதியில் அரசாங்க நிலங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து, விசைப்படகுக்காரர்களுக்குக் கொடுப்பதாக என்னிடம் விவரங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கொடுக்கிறேன். அதன்மீது நடவடிக்கை எடுத்து அவற்றைக் காலி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சுல்தான் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர் இல்லை. அவருடைய பட்டா பூமி ஜகதாப்பட்டினம் கடற்கரை சமீபம் இருக்கிறது. இவருடைய பட்டா பூமி சர்வே எண் -169/3-ல் மூன்று சிறு ஓலைக் குடிசைகள் கட்டிக் கொடுத்திருக்கிறார். அதில் குடியிருப்பவர்கள் வாடகை எதுவும் கொடுக்கவில்லை என்று விசாரணையில் தெரிகிறது. ஆகவே நடவடிக்கை எடுக்க எந்தவிதமான காரணமும் இல்லை.



திரு. மு. அம்பிகாபதி : பஞ்சாயத்து தலைவர் அல்ல என்றாலும், அங்கே இருக்கிற தப்சு அடிக்கிற கூட்டத்தின் தலைவர் என்று சொல்லுகிறார்கள். என்னிடம் விவரம் இருக்கிறது. அங்கே நானே நேரடியாக போயிருந்தேன். அங்கே கொட்டகைக் கட்டிக் கொடுத்து வசூலித்து தானே எடுத்துக் கொள்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். நானே அந்த ஊருக்குப் போயிருந்தேன். அமைச்சருக்கு ஏதோ தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இதை மீண்டும் பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பஞ்சாயத்துத் தலைவர் என்ற பெயரிலே ஒருவர்தான் இருக்க முடியும். இவர் தலைவர் அல்ல. ஆனால் தவறுகள் ஏதோ நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவார்களானால் விசாரிக்க ஆட்சேபனை இல்லை.

## விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி.

* 691 வினா— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுராகோட்ஸ் மில் பகுதியையும் அதை ஒட்டியுள்ள பகுதியையும் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியுடன் சேர்க்குமாறு பேரூராட்சியும் சர்வகட்சியினரும் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கை மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற தலைவர், உப. தலைவர், உறுப்பினர் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கை அரசின் ஆய்வில் இன்னும் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியை ஒட்டித்தான் மதுரா கோட்ஸ் இருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தும் கூட 10 கிலோ மீட்டர் தள்ளி உள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப்போடு சேர்த்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை அனுதாபத்துடன் கவனித்து விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியோடு இணைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நகரியம் என்று ஒன்று அமைப்பதற்கே தொழிலாளர் குடியிருப்புக்கள் இருந்தால்தான் அமைக்க முடியும். ஆக மணிமுத்தாறு

நகரியம் அமைந்ததன் நோக்கமே இந்த மணிமுத்தாறுதான். உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்தும் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செயற் குறிப்பும், அதற்கான வரைபடமும் கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு சீர்தூக்கிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பீடித் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி

*692 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புகையிலை மீது வசூலிக்கும் வரிப்பணத்திலிருந்து வியாதியால் பாதிக்கும் பீடி தொழிலாளர்களுக்கு உதவி செய்வதென்ற முடிவு எந்த நிலையிலுள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மருத்துவமனைகளை திறக்குமாறும் கீழ்க்கண்ட மருத்துவ திட்டங்களை அமுல்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட இந்திய அரசு அலுவலர்களை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது :

(1) மேலப்பாளையம், முக்கூடல் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மருந்தகங்களை அமைத்தல்.

(2) வட ஆற்காட்டில் பெண்ணத்தூரில் உள்ள டி.பி. லாபரட்டோரியத்தில் பீடி தொழிலாளர்களுக்கு படுக்கைகள் ஒதுக்குதல்.

(3) இராணிப்பேட்டை, ஆற்காடு, வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் போன்ற இடங்களுக்குச் சேர்த்து நடமாடும் மருந்தகங்களை ஏற்படுத்துதல்.

[முற்பகல் 9.40]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, நமது மாநிலத்திலே இதுவரையில் எவ்வளவு பணம் வசூலாகி உள்ளது ? நமது மாநிலத்திலே வசூலாகக்கூடிய அந்தப் பணம் பரவலாக இந்த மாநிலத்திற்கே உபயோகப்படுத்தப்படுகிறதா, அல்லது அகில இந்திய ரீதியில் வசூலிக்கும் பணத்தை ஒன்று சேர்த்து பொதுவாக அதைச் செலவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா ? அதற்கான ஏற்பாடுகள் என்ன ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே அதைப்பற்றி தகவல் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அமைச்சர் அறிவித்த சலுகைகள், வசதிகள் போன்றவை புதுக்கோட்டையில் பணிபுரியும் புகையிலை தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, புகையிலையை பீடிக்காக தரும்பொழுது அதற்காக மத்திய அரசு செஸ் வசூலிக்கிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு மத்திய அரசு செலவு செய்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, புகையிலையை அவர்கள் பொட்டலமாக மடித்து விற்பனை செய்ய அனுப்புகிறார்கள். நாள் பூராவும் அவர்கள் அந்தப் பணியில் இருப்பதால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கப்பட்டு, பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் அந்த சலுகைகள், வசதிகள் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது பற்றிய தகவல் இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, குடந்தையில் அதிகமாக இருக்கும் சுருட்டுத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் இந்த செஸ் நிதி வசூலிக்கப்படுகிறது. ஆகவே, அந்த சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் இந்த வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் முயற்சி எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அது பற்றிய முறையீடு கொடுத்தால் படிப்படியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முயற்சிக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் மேலப்பாளையத்திலும், முக்கூடலிலும் மருந்தகங்கள் அமைக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மருந்தகங்கள் அமைப்பதால் பல்வேறு பகுதிகளில் இருந்து அந்த குறிப்பிட்ட இடத்திற்கு தொழிலாளர்கள் வர வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. குறிப்பாக அந்த பீடி சுற்றும் தொழிலாளர்கள் 10–20 மைல் சுற்றளவில் வேலை செய்கிறவர்கள் இப்படிப்பட்ட மருந்தகங்களுக்கு வருவதற்கு சிரமமாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையை கருத்தில்கொண்டு நடமாடும் மருந்தகங்களை ஏற்படுத்தி அதன் மூலம் அந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

[1978 மார்ச் 28

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> துணைத் தலைவரவர்களே, கான்சன்டிரேஷன் ஆப் ஒர்க்கர்ஸ், அதாவது தொழிலாளர்கள் ஒரே இடத்தில் குவிந்து இருக்கும் இடங்களில் இப்படிப்பட்ட மருந்தகங்களும், ஸ்கேட்டர்ட்டாக (பரவலாக) இருக்கும் இடங்களில் மொபைல் மருந்தகங்களும் என்ற முறையில் ஏற்பாடு செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம். எம். ஏ. ரசாக் :</u> தலைவரவர்களே, நடமாடும் மருந்தகங்கள் ஊர்தி வைக்கும்போது பீடி சுற்றும் எண்ணிக்கையைப் பொறுத்து வைக்கப்படுகிறதா? நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வைக்கப்படுகிறதா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, பீடி சுற்றுபவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அந்த ஏற்பாடு செய்து இருக்கிறோம். எந்தெந்த இடத்திற்கு உடனடியாகத் தேவை என்ற முறையீடுகள் வருமானால் மத்திய அரசு அதிகாரிகளுடன் பேசி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் :</u> தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள டி. பி. சானடோரியத்தில் பீடி தொழிலாளர்களுக்காக இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். இருக்கின்ற படுக்கைகளில் ஒதுக்குவதைப் பற்றிச் சொல்கிறார்களா, அல்லது அங்கே புதிதாக கட்டி, ஒதுக்கப்படும் புதிய படுக்கைகள் பற்றிச் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, என்னிடத்தில் இருக்கும் தகவலின்படி, இருக்கும் இடத்தில் படுக்கை ஒதுக்குவது என்பதுதான். இன்னும் காலப் போக்கில் தாம்பரத்தில் அவர்களுக்காக தனியாக வெல்பேர் பண்டில் இருந்து கட்டியிருப்பது போல் அங்கேயும் கட்டுவதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

<u>திரு. என். வரதராஜன் :</u> தலைவரவர்களே, இந்த புகையிலைத் தொழிலில் ஈடுபடுகிற தொழிலாளர்கள் கொடுமையான வியாதிகளுக்கு ஆட்படுகிறார்கள். ஆகையால் படிப்படியாகத் திட்டங்களை விஸ்தரிப்பதற்கு மாறாக அந்தத் திட்டத்தைப் போடும் போதே அரசு மருத்துவமனைகளில் ஒரு தனி யூனிட் வைத்து, திண்டுக்கல், கும்பகோணம், நாகப்பட்டினம், திருச்சி போன்ற பகுதிகளில் இருக்கிற சுருட்டுத் தொழிலாளர்களுக்கு வைத்திய உதவி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?



1978 மார்ச் 28]

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, பொதுவாக நடமாடும் மருத்துவமனைகள் மூலம் சிகிச்சை பெற்றுக் கொள்ள வசதி இருக்கிறது. இது ஸ்பெஷலாக ஏற்பாடு செய்து கொடுப்பது பற்றியது. பொருளாதார வசதியை வைத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அரிய ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

<u>திரு. எச். ஜி. ஆறுமுகம் :</u> துணைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அங்கு ஒரு தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே, தொழிலாளர் நல மருத்துவமனை என்றால் அவர்கள் இ.எஸ்.ஐ. மருத்துவமனையைப்பற்றிக் கேட்கிறார்கள். தர்மபுரி, நீலகிரி இந்த இரண்டு மாவட்டங்களிலும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லை. இது புகையிலை செஸ் நிதியை வைத்து கொடுக்கக் கூடிய வசதிகளைப்பற்றிய கேள்வி. இருந்தாலும் தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை இல்லை என்ற காரணத்தால் அங்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அடுத்து வினு 693.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> சார், நான் வெகு நேரமாக ஒரு துணைக் கேள்விக்கு முயற்சிசெய்து கொண்டிருக்கிறேன். இது முக்கியமான ஒரு பிரச்சினை. அதனால் எனக்கு அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உங்களுக்கு ஏற்கெனவே ஒரு கேள்வி கேட்க அனுமதித்திருக்கிறேன். இருந்த போதிலும் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் மருத்துவ வசதி பற்றி மட்டும்தான் கூறினார்கள். படுக்கை வசதி செய்வது அல்லது டிஸ்பென்சரி ஏற்படுத்துவது அல்லது நடமாடும் வைத்திய வசதி பற்றிச் சொன்னார்கள். ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை இந்த செஸ் நிதியிலிருந்து செயற்படுத்தும் குறிப்பு ஒன்று இருந்ததே; அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது? அதோடு, இந்த பீடித் தொழிலாளர்களின் பிரச்சினைகள்பற்றி ஆய்வு செய்வதற்கு மத்திய சர்க்கார் ஒரு தனி அதிகாரியை நியமித்து, அவர் 50,000 பீடித் தொழிலாளர்கள் இருக்கின்ற மைசூர் ஸ்டேட்டில் இருக்கிறார். 5 லட்சம் பீடித் தொழிலாளர்

[1978 மார்ச் 28

களுக்கு மேல் இருக்கக்கூடிய இந்த தமிழ்நாட்டில் அவரை இருக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? வீட்டுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக ஒவ்வொரு பீடித் தொழிலாளருக்கும் எந்த நிலையில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது அல்லது ஒதுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்வி என்று சொல்லி, ஒரு கேள்வியிலேயே இப்படி 4, 5 கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனால் எப்படி பதில் சொல்ல முடியும்? முதலிலும் அப்படித்தான் கேட்டீர்கள். கேள்வியை சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எத்தனை கேள்வி போட்டாலும் சரியான பதில் கிடைக்கமாட்டேன் என்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக் கேள்வி, புகையிலைமீது வசூலிக்கும் வரிப் பணத்திலிருந்து வியாதியால் பாதிக்கும் பீடித் தொழிலாளர்களுக்கு உதவி செய்வது பற்றியது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) பீடி செஸ்தான். புகையிலையைக் கொடுக்கும்போது மத்திய அரசு அவர்களிடமிருந்து வசூல் செய்கிறது. வியாதியைப் பற்றியது கேள்வி. நீங்கள் வியாதியை விட்டுவிட்டு, வீட்டுக்குப் போய்விட்டீர்கள். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

உடுமலைப்பேட்டையில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம்.

*693 வினா.—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இ. எஸ். ஐ. திட்டத்தின்கீழ் கோவை நகரத்தில் குடும்ப அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படுகின்ற வைத்திய, வசதி உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில் கொடுக்கப்படுவதில்லையா?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) உடுமலைப்பேட்டைப் பகுதி ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு மட்டும் முழு மருத்துவ வசதியும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதியும் தற்போது அளிக்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்களுக்கும் முழு மருத்துவ வசதி அளிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.



1978 மார்ச் 28]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, குடும்பத்திற்கு விஸ்தரிக்கப்படுவதற்கான அந்தத் திட்டத்தை படிப்படியாக குறிப்பிட்ட இடங்களுக்கு விஸ்தரிக்கப் போகிறார்களா அல்லது ஏற்கெனவே இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் வந்துள்ள பகுதிகளில் மருத்துவ வசதி கிடைக்கின்ற அந்தந்த உறுப்பினர்களுடைய குடும்பங்களுக்கு உடனுக்குடனே கிடைக்குமா அல்லது படிப்படியாகத் தான் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, படிப்படியாக நிதி ஆதாரத்தை மனதிற்கொண்டு விரிவாக்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை நகரத்திலே ஈ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகை அவர்களின் குடும்பங்களுக்கும் அளிக்கக்கூடிய நேரத்தில் தூர கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் வைத்திய வசதி செய்து கொடுக்கின்ற அடிப்படையில் மொபைல் வேன் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு பகுதியில் இவ்வாறு செய்யப்படுகிறது.

கணபதி மணியம்பாளையம், வெள்ளைக் கிணறு, துடியலூர் போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் தனியாக ஒரு மொபைல் வேன் விடுவதற்கான ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் மொத்தம் 104 டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. 9 மொபைல் சர்வீஸ்கள் இருக்கின்றன. நிதியாதாரத்தை மனதில் வைத்துக்கொண்டு மொபைல் சர்வீஸ்களை மேலும் விரிவுப்படுத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இத்தகைய மருத்துவ மனைகளில் மருத்துவர்களை போஸ்டிங் செய்தால் அவர்கள் அங்கே போய்ச் சேருவதில்லை. அவர்கள் அதிலே போய் தொண்டு செய்வதற்கு விரும்புவதில்லை. ஆகவே பொதுமக்கள் ஈ. எஸ். ஐ. என்பதை எவர் ஸ்லீப்பிங் இன்ஸ்டிட்யூஷன் என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அங்கே அவர்கள் சென்று தங்கு தடையில்லாமல் வேலை செய்வதற்குரிய முறையில் அரசு அவர்களுக்கு ஊக்கம் அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது அதை நேவர் ஸ்லீப்பிங் இன்ஸ்டிட்யூஷன் என்ற முறையில் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவ மனைகளில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன? அங்கே வசதி இல்லாததனால் அவர்கள் பெரிய பெரிய மருத்துவ மனைக்கு வரவேண்டி இருக்கிறது. பெரிய மருத்துவ மனைக்குப் போனாலும் உங்களுக்கு இங்கே வைத்தியம் இல்லை, ஈ.எஸ்.ஐ.-க்கு செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த மருத்துவமனைகளில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன? என்னென்ன வசதிகள் இல்லை? இல்லாத வசதிகளைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருந்தகங்களைப்பற்றிச் சொல்கிறார்களா, அதாவது டிஸ்பென்சரியைப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது ஹாஸ்பிட்டலைப் பற்றிச் சொல்கிறார்களா என்று தெரிந்தால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. பி. ஆறுமுகம் : ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல் பற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கான ஈ.எஸ்.ஐ. மருத்துமனைகள் மொத்தம் நான்கு இருக்கின்றன. ஒன்று அய்யனாவரத்தில் இருக்கின்றது. இன்னொன்று கே. கே. நகரில் இருக்கிறது. மற்றொன்று கோவை நகரில் இருக்கின்றது. மதுரையில் ஒன்று இருக்கிறது. அதன்வழியில் மருந்தகங்கள் மொத்தம் 104 இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைச் சொல்கிறார் என்று சொன்னால் பதில் சொல்ல உதவிகரமாக இருக்கும்.

திரு. பி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையைத்தான். ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் என்னென்ன வசதிகள் இல்லாமல் இருக்கின்றன என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எல்லா வசதிகளும் போதுமான அளவுக்கு இருக்கின்றன.





திரு. என். இட்டப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் அத்தகைய மருத்துவமனைகள் நான்கு இடங்களில் இருப்பதாகவும் அவற்றில் ஒன்று கே. கே. நகரில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். கே.கே. நகர் என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலைஞர் கருணாநிதி நகர் என்று மன மகிழ்வோடு சொல்லுகிறேன்.

## விரைவுப் பேருந்துகளில் புகார் புத்தகங்கள்.

*694 வினா திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் ஓடும் நெடுந்தூர விரைவு வண்டிகளில் பயணிகள் புகார் எதையும், Suggestion சொல்லவும Complaint Books வைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) இல்லையெனில், அவ்வாறு வைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தமிழ்நாட்டில் ஓடும் அனைத்து நெடுந்தூர விரைவு வண்டிகளிலும் பயணிகள் புகார் எழுதவும், ஆலோசனைகள் குறிக்கவும் புகார் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி : தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட அண்ணா, பெரியார் போன்றவர்கள் பெயர்களில், அரசர்கள் பெயர்களிலும் இங்கே போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன், பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் இந்தக் கழகங்கள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்படாது என்று நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபட்ட மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க பொதுமக்களிடமிருந்து வேண்டுகோள் அல்லது கோரிக்கை ஏதாவது வந்ததா? அப்படி அமைக்கிற திட்டம் இந்த அரசிடம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

1978 மார்ச் 28

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூல வினாவிற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள துணை வினாவிற்கும் தொடர்பில்லை என்றாலும், போக்குவரத்துக் கழகம் ஏதேனும் ஒன்று மேலும் அமைக்கப்படுமேயானால், கோரிக்கை எதுவும் வராவிட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை கோரிக்கையாக ஏற்று அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பாஸஞ்சேர்ஸ் க்ரீவன்ஸ் சம்மந்தமாக பாஸஞ்சேர்ஸ் கம்ப்ளெயின்ட் 'புக்கில் எழுதினாலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கை இல்லை. நீண்ட கால பழக்கத்தை வைத்துச்சொல்கிறேன். இந்த அரசு வந்த பிறகு உள்ளதைச் சொல்லவில்லை. ஆகவே நான் சொல்லவிரும்புவது, கம்ப்ளெயின்ட் புக்கில் எழுதினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுவதாக இருந்தால் அதைப்பற்றி விரிவாக எழுதுவார்கள். அதற்கான ப்ரோஸீஜர் என்ன? புக்கில் எழுதினாலும் அதிகாரிகளால் அது "இக்னோர்" செய்யப்படுகிறது என்ற நிலைதான் இருக்கிறது பாஸஞ்சர்களுக்கு புகார் எழுதியதுபற்றி பதில் வருவதில்லை. ஆகவே மைமல்டேனியஸாக டாப்அபிஷியல்ஸ் இடமிருந்து பதில் கிடைக்க என்ன ப்ரோஸீஜர் பாலோ செய்ய இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புகார், ஆலோசனைப் புத்தகத்தில் எழுதப்படுகிற புகார்கள், ஆலோசனைகள் உடனடியாக தினம் தலைமை அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க அனுப்பப்படுகிறது. தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது. ஆனால் பொதுமக்கள் புகார்களை அந்தப் புகார் புத்தகத்தில் எழுதுவதற்கு பெருவாரியாக முன்வராத நிலைஇருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் கண்ணுற்றிருக்கிறேன். பொதுமக்கள் முன்வந்து பேருந்துகளில் இருக்கிற குறைபாடுகளாக இருந்தாலும் சரி அல்லது ஓட்டுநர் அல்லது நடத்துனர். இவர்களால் ஏற்படுகிற குறைபாடுகளாக இருந்தாலும்சரி புகார் புத்தகங்களில் குறிக்க முன்வரவேண்டும் என்பதை இந்த அவைமூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : நடப்பாண்டில் எவ்வளவு பேருந்துகளில் புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன? எவ்வளவு புகார்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி தனிக் குறிப்பு இல்லை. பிறகு கூறுகிறேன்.



1978 மார்ச் 28]

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் புகார் புத்தகத்தில் எழுதக்கூடிய புகார்கள் சம்மந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் திருச்சி பேருந்து நிலையத்தில் ஒரு புகார் புத்தகத்தில் எழுதியிருந்தேன். அதற்கு, அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இதுவரையில் தெரியவில்லை. எனக்கு அதுபற்றி தகவல் வரவவில்லை. பொதுமக்களால் எழுதப்படுகிற புகார்களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அவர்களுக்கு எழுதுவதோடுகூட உடனடியாக இது சம்மந்தமான நடவடிக்கைகள் எடுக்க என்ன அமைப்புகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை நல்ல ஆலோசனை. புகார் எழுதுகிற பொதுமக்களுக்கு, நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் தகவல் அனுப்புகிற முறை கடைப்பிடிக்கப்படும்.

## பேருந்துகளில் மாணவர்களுக்கு சலுகைக்கட்டணங்கள்.

*695 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகை அளிக்கப்பட்டதால். சென்னை நகரில் மட்டும் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரித்தால் மேலும் எவ்வளவு இழப்பு ஏற்படும்?

(இ) சென்னை நகரில் பஸ் போக்குவரத்து ஊழியர்களின் குழந்தைகளுக்கு பஸ் கட்டண சலுகை அளித்ததால் ஏற்பட்டுள்ள இழப்பென்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) நடப்பு பள்ளி ஆண்டில் அதாவது ஜூலை— ஆகஸ்டு 1977 முதல் மார்ச்—ஏப்ரல் 1978 முடிய ஏற்படும் இழப்பு ரூ. 1,62,27,687.05 ஆகும்.

(ஆ) இச்சலுகையினை மாவட்டத்திலுள்ள எத்தனை மாணவர்கள் பயன்படுத்துவர் என துல்லியமாக நிர்ணயிக்க வாய்ப்பில்லாத போதும் சென்னை நீங்கலான அனைத்து

மாவட்டங்களிலும் இருக்கும் 19,65,393 மாணவர்கட்கும் இச்சலுகை நீடிக்கப்படுமாயின் மாதம் ஒன்றுக்கு தோராயமாக 5·25 கோடி இழப்பும், ஆண்டுக்கு தோராயமாக 63 கோடி ரூபாய் இழப்பும் ஏற்படும்.

(இ) நடப்பு ஆண்டுக்கு ஏற்படும் இழப்பு ரூ. 2,75,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு முழு ஆண்டிற்கு இழப்பு ரூ. 4 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : சென்னையிலே இந்தச் சலுகை மாணவர்களுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது, அனுபவிக்கிறார்கள். அதேநேரத்தில் மாவட்டங்களில் மாணவர்கள் இந்தக் கோரிக்கையைக் கேட்டு அவர்கள் நடத்திய பல போராட்டங்களும், மாவட்ட அதிகாரிகள் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்து அது நிறைவேற்றப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? குறிப்பாக கோவையில் அரசாங்கக் கலைக்கல்லூரி மாணவர்களும் மற்றக் கல்லூரி மாணவர்களும் போராடிய காலத்தில் அவர்களுக்கு சலுகைக் கட்டண ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைசெய்து அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள்?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்டேன், சென்னை மாநகரத்தில் மட்டும், இந்த சலுகை கொடுப்பதால், மாதம் ஒன்றுக்கு 29 இலட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு சென்னை மாநகரத்தில் மட்டும் மூன்று கோடி 25 லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த சலுகையை அளித்தால் ஆண்டு ஒன்றுக்கு 63 கோடி கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். அதற்கு அரசிடமும் நிதியில்லை. போக்குவரத்துக் கழகங்களிடமும் நிதி இல்லை. ஆகவே, மாவட்டங்களுக்கு இந்தச் சலுகை நீட்டிக்கப்படமாட்டாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உக்கி : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களுக்கு இந்த சலுகை கொடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப்பிரதேசத்திற்கு மட்டும், அங்குள்ள ஏழை மாணவர்களுக்கு இந்த சலுகை கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு சலுகை அமலில் இருந்து வருகிறது.



திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இந்த சலுகை பாஸ் வழங்குகின்ற நேரத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கின்ற வகையில்—முன்னால் மகளிர்க்கு என்று தனியாக குறிப்பிட்ட நேரத்தில் பஸ்கள் விடப்பட்டுக்கொண்டிருந்தன. அதே போன்று காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் கல்லூரிகள், பள்ளிகள் ஆரம்பிக்கின்ற நேரத்திலும் மாலையில் விடுகின்ற நேரத்திலும் மாணவர்களுக்கு என்று தனியாக பேருந்துகள் விட்டால் பிரச்சினையை சமாளிக்க முடியும், அவர்களுக்கும் வசதியாக இருக்கும். இதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே மாணவிகளுக்கு தனியாக பேருந்துகள் விடப்படுகின்றன. மாணவர்கள் பொதுப் பேருந்துகளில் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட் : சென்னை மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற 15 ரூபாய் பாஸ் வழங்கியிருப்பதால் மாணவர்களிடையே இது படிப்பையும் ஒழுக்கத்தையும் வளர்க்க பயன்பட்டிருக்கிறதா என்பதையும் பொதுமக்களுக்கு இதனால் தீமைகள் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இந்த பாஸ் வழங்கியிருப்பதன் நோக்கம் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்பதற்காக அல்ல. நூலகங்களுக்கு செல்ல வேண்டும் என்ற நன்நோக்கத்தோடு தான் வழங்கப்பட்டது. ஆனால், இதை மாணவர்கள் நூலகங்களுக்குச் செல்வதற்கு என்று பயன்படுத்துவதில்லை என்றும் இதை மிகையாக பயன்படுத்துகிறார்கள் என்றும் இதனால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன என்று பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. அரசு அவற்றைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, சென்னை மாநகரத்தில் மட்டும் இந்த சலுகை அளித்ததில் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரித்தால் மேலும் இழப்பு ஏற்படும் என்றும் ஆகவே, மாவட்டங்களுக்கு இந்தச் சலுகை விஸ்தரிக்கப்படமாட்டாது என்றும் சொன்னார்கள். வசதியில்லாத மாணவர்கள் கிராமங்களில் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே இங்குள்ள மாணவர்களுக்கும் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கும் பாகு-

பாடு காட்டப்படாமல் இதே சலுகை ஏன் மற்ற பகுதிகளுக்கும் தரக்கூடாது? இந்த பாகுபாடு ஏன் காட்டப்படுகிறது? அதே நேரத்தில் தனியார் பேருந்துகளிலும் மாணவர்கள் செல்வதற்கு இந்த பாஸ் முறை வழங்குவதற்கு அரசாங்கம் ஜி.ஓ. மூலம் ஏதாவது ஆணைகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்தால் ஆண்டு தோறும் 63 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும். இதை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. அதனால்தான் இதை பரிசீலிக்க முடியவில்லை. அடுத்தது, தனியார் பேருந்துகளில் இது அனுமதிக்க முடியுமா என்பதற்கு சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னைக்கே இடமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: சென்னை மாநகரத்திற்கு மட்டும் தான் இந்த சலுகை கொடுக்கப்படும் என்றும், மற்ற மாவட்டங்களுக்கு இது விஸ்தரிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவே ஒரு புதிய பிரச்னையை கிளப்பிவிட்டுவிடும் என்பது அரசுக்கு தெரியாதா? சென்னை மாநகரத்திலுள்ள மாணவர்களையும் மற்ற மாவட்ட தலைநகரங்களிலுள்ள மாணவர்களையும் இரண்டு விதமாக நடத்த முடியாது. ஆகவே, சில குறிப்பிட்ட காரணங்களைச் சொல்லி பெரிய மாவட்ட தலைநகரங்களில் மட்டுமாவது மாணவர்கள் குவிந்துள்ள அந்த இடங்களில் மட்டுமாவது இந்த சலுகையை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மாணவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை அளித்து, மற்ற மாவட்டங்களிலே உள்ள மாணவர்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்காமல் இருப்பது பாரபட்சம் காட்டுவதாக இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இதனால் பிரச்னை உருவாகாதா என்றும் கூறுகிறார்கள். இந்தப் பிரச்னையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



## Pandian Roadways Corporation Buses.

*696 Q.—Thiru N. SUNDARARAJ: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal with the Government to stop the practice of the drivers in the Pandian Roadways Corporation, writing invoice in the buses, which causes great hardship to the passengers; and

(b) if so, when will it be implemented?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் தவிர மற்றப் போக்குவரத்துக் கழகங்களில் இதுபோன்ற ஒரு முறை இல்லை. இந்த முறையின் மூலம், ஒன்று அங்கிருக்கிற கண்டக்டரின்மேல் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லை என்று பொருள்படுகிறது. இரண்டாவது, அதே நேரத்திலே இதை டிரைவர் எழுதும்போது ஏதாவது தவறு ஏற்படுமானால் அவருடைய சிந்தனை பூராவும் அதிலே இருந்து விபத்துக்கள் ஏற்படலாம்.

மூன்றாவது, சர்க்கார் பேருந்துக்கும், தனியார் பேருந்துக்கும் இருக்கக்கூடிய போட்டியில், சர்க்கார் பேருந்தில் இத்தகைய முறை இருப்பதன் காரணமாக, ஒரு குறிப்பிட்ட 25 மைல் தூரத்தை தனியார் பேருந்து ஒரு மணி நேரம் கடக்க எடுத்துக் கொண்டால், சர்க்கார் பேருந்து அந்தத் தூரத்தைக் கடக்க ஒன்றரை மணி நேரமாகிறது. இதனால், பிரயாணிகள் சர்க்கார் பேருந்தைத் தவிர்த்து, தனியார் பேருந்துகளில் செல்கின்றனர் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே, இந்த அநாகரிகமான முறையை நீக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும் ஓட்டுநர் இந்தக் குறையை நீக்க வேண்டுமென்று இதுவரை கூறவில்லை. செம்மையாக இந்த முறை அங்கு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. நடத்துனரின் மேலுள்ள ஐயப்பாட்டின் காரணமாக இந்த முறை நீடிக்கப்படவில்லை. இதனால், பயணிகளுக்கும் பலன் ஏற்படுகிறது. ஓட்டுநரிடம் இந்தக் குறிப்பு இருக்குமானால், அவருக்கு எந்தெந்த இடத்தில்

இந்தப் பயணிகளை இறக்கிவிட வேண்டுமென்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த அடிப்படையிலே தான் இந்த முறை தொடர்ந்து [illegible] வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற இந்த முறையை நீக்க வேண்டுமென்று இந்தத் துறை அலுவலர்களிடமிருந்து குறிப்பு எதுவும் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, பஸ்ஸில் எல்லோரும் ஏறி உட்கார்ந்த உடனே, ட்ரைவரும் கண்டக்டரும், ஒருவரும் பேசக்கூடாது; பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டு எழுதக் கூடிய நிலை இருக்கிறது. அப்போது யாரும் பேசாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிலைமை இல்லை. அப்படி ஒரு நிலைமை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் கூறியதுபோல், விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு போக்குவரத்துக் கழகங்களிலே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் இந்த முறை இருக்கிறது. இந்த இன்வாய்ஸை எழுதுவதற்காக டிரைவர் ஒவ்வொரு ஸ்டாப்பிலும் 5, 10 நிமிஷங்கள் வண்டியை நிறுத்த வேண்டியிருக்கிறது. பின்னர், அதைச் சரிக்கட்ட வேகமாக வண்டியை ஓட்டுகிறார். ஆக்சிடெண்ட் ஏற்படுகிறது. ஆகவே, இந்த கண்டக்டர் சொல்லி, டிரைவர் எழுதுவதிலே சிரமம் இருக்கிறது. பிரயாணிகளுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. எனவே, இதை உடனடியாக நீக்குவதற்கு முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முறையினால் டிரைவர் பலன் பெற முடிகிறது. இந்த இன்வாய்ஸ் முறையை நீக்கி, கண்டக்டரே எழுதுவது என்று சொன்னால், ஓட்டுநர் அந்தப் பலனைப் பெற முடியாமல் போக வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*697 வினா— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை ஆண்டு அறிக்கையில் அறிவித்ததைப் போல் டன் ஒன்றுக்கு ரூ. 134.50 கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிருந்து கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. சுந்தரம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டு அறிக்கைப் புத்தகத்திலே 134 ரூபாய் 50 காசு என்று சொல்லி, அட்வான்ஸ் பில்லில் 119 ரூபாய் 50 காசு என்றும், பின்னால் 127 ரூபாய் என்றும் கூறப்படுகிறது. இந்த ஆண்டு அறிக்கை என்னிடம் இருக்கிறது. தேவையானால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, அதை நான் வழங்கத் தயாராக இருக்கிறேன். எனவே, இது சம்பந்தமான குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் 134 ரூபாய் 50 காசு கொடுப்போம் என்று ஆலை அறிவித்திருந்தது உண்மை. ஆனால். அதை எந்த அடிப்படையில் ஆலை அறிவித்தது என்றால் ஆலைக்கு அதிகமான கரும்பை உற்பத்தியாளர்கள் தருவார்கள், மத்திய அரசு அறிவித்துள்ள ஊக்கத் திட்டங்கள் மூலமாக அதிக லாபம் அடைய முடியும் என்ற எண்ணங்களால் 134 ரூபாய் 50 காசு கொடுப்போம் என்று சொல்லப்பட்டது. ஆனால், ஆலை பொதுக் குழு வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிக் கூறிய காரணங்களை ஏற்றுக் கொண்ட பிறகு, ஆலையிடம் போதுமான பண வசதி இல்லை. எக்ஸைஸ் குறைந்து விட்ட பிறகு தள்ளுபடி குறைந்து விட்டதும் காரணம். அதனால்தான் ரூ. 134.50 என்பதை ரூ. 127.50 என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. அதிலே 120 ரூபாய் முதலிலும் ரூ. 7.50 'நான்-ரிபண்டபள் டெபாசிட்' என்ற வகையிலும் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : கரும்பு இனிக்கின்ற விஷயம் ஆகும். இதில் முக்கியமாக தமிழகத்தில் கடந்த ஆண்டு உற்பத்தியான கரும்பில் 29 சதம் தான் ஆலைகளுக்கு வந்திருக்கிறது. கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. சரிவர ஆலைகளுக்கும் கரும்பு கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி திருப்பத்தூர் ஆலையைப் பற்றிய கேள்வி. சுருக்கமாக மூலக் கேள்வியை ஒட்டி கேள்வி கேளுங்கள். இன்னும் மூன்று டிமாண்டுகள் இருக்கின்றன. மாலையிலும் அவை இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : திருப்பத்தூர் கூட்டுறவு ஆலையானாலும் மற்ற ஆலைகளானாலும் பொருந்தும். எந்த ஆலையாக இருந்தாலும் இந்த நிலை இருக்கிறது. எனவே, கரும்பு விவசாயிகளுக்கு அதிகமான முறையில் விலை கொடுக்கவும், ஊக்க போனஸ் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு அதிகமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அதிகமான விலை கொடுக்கப்படவில்லை. ஆனாலும் மாநில அரசு டன் ஒன்றுக்கு 125 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது வரை அதற்கான உத்தரவு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. தி. அன்பழகன் : தற்போது கொடுக்கப்படுகிற ரூபாய் 127.50 காசை மேலும் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போது அந்த உத்தேசம் இல்லை. காரணம் கட்டுப்பாடற்ற மார்க்கெட்டிலே சர்க்கரை விலை குறைந்திருக்கிறது. உலக, மற்றும் வெளி மார்க்கட்டுகளிலும் விலை குறைந்துள்ளது என்ற காரணத்தால், இப்போது இருக்கின்ற நிலைமையில் ரூபாய் 127.50 காசுக்கு மேல் கொடுக்க முடியாத சூழ்நிலை சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: வட மாநிலங்களில் கரும்பு டன் ஒன்றுக்கு 150 ரூபாய் அளவுக்குக் கொடுக்கப்படுகிற நிலை இருக்கும்போது நமது மாநிலத்தில் பல ஆண்டு காலமாக முயற்சி செய்தும் 125 ரூபாய்கூடக் கிடைக்க முடியாத துர்பாக்கியமான நிலை இருக்கிறது. இது விவசாயிகளுக்குப் பெருத்த கஷ்டத்தைத்





தருகிறது. அலங்காநல்லூர் ஆலையில் 125 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியும் 116 ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். அதற்குரிய காரணத்தை அரசு ஆராய்ந்து உரிய விலையை நிர்ணயிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் வட மாநிலங்களில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்கள், தென் மாநிலங்களைப் பொறுத்த அளவில் குறைந்த விலைதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தைப் பொறுத்த அளவில் கடந்த ஜனவரி 10, 11 தேதிகளில் நானும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், முதல்வர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் சொல்லிய கருத்து தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அந்த அளவுக்குக் வட மாநிலங்களில் அதிகமாக இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள். கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு குறைந்த விலையும், குறைவாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக விலையும் என்ற நிலை இருப்பது சரியல்ல என்று நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஆகவே இப்போது மார்ச் 1ஆம் தேதியிலிருந்து சர்க்கரையினுடைய விலையைக் கூட 15 பைசா அதிகமாகக் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, வருகின்ற நாட்களில் சர்க்கரையினுடைய விலையை அதிகமாக்கினால் கரும்புக்கு கொடுக்கப்படவேண்டிய விலையைச் சேர்த்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அலங்காநல்லூர் ஆலையைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றித் தனியாகச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்னைகள்.

### (அ). விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள்பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், சோமசுந்தரம் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது பற்றி அங்கே

சொல்லியிருக்கிறார்கள். சட்டவிதிகளுக்கு புறம்பானது என்பது பற்றிய பிரச்னையை நான் ஏற்கெனவே எழுப்பியபோது சபாநாயகர் அவர்கள் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், நான் எழுதியும் கொடுத்திருக்கிறேன், அதைப்பற்றி தீர்ப்பைத் தாங்களே வழங்கப்போகிறீர்களா அல்லது அந்தத் தீர்ப்பு எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பின்னாலே அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) பேரவைத் தலைவர் அவைக்கு வருகை தராதது குறித்து.

திரு. துரை முருகன்: துணைத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், இன்றைக்கு இங்கே சட்டமன்றத் துறை மானியம் வருகிறது. ஆகவே இது ஒரு முக்கியமான நாள். சபாநாயகர் அவர்கள் இரண்டு தினங்களாக இங்கே வரவில்லை. என்ன காரணம்? அவருக்கு வேறு எங்கேயும் நிகழ்ச்சியா? அல்லது உடல் நலம் குன்றியிருக்கிறதா? அல்லது ஏதாவது நிகழ்ச்சி இருக்கிறதா? அவைத் தலைவர் அவர்கள் வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைத் தலைவர் அவர்கள் உடல் நலம் சரியில்லாததால் கலந்து கொள்ளவில்லை. நாளைக்கு வருவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: உடல் நலமா அல்லது மன நலமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உடல் நலம் என்று ஏற்கனவே நான் சொல்லி விட்டேன். ஏன் உங்களுக்கு மனநலம் சரியில்லையா?

திரு. எஸ். ஆர். இராதா: மன நலம் என்று சொல்கிறார்கள்.



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மத்திய அரசு சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவில் அலுவல்கள் இந்தியில் நடைபெறவேண்டும் என்று கூறப்படுவதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். மத்திய அரசு சிவில் விமானம் போக்குவரத்து அமைச்சரின் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, அந்த அமைச்சரகத்தின் கீழ் உள்ள இலாகாக்களிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும், அவற்றில் வேலைகள் அனைத்திலும், தஸ்தாவேஜிகளிலும், கோப்புகளில் குறிப்புகளும் இந்தியில் தான் செய்யப்படவேண்டும் என்பதன் விளைவாக இந்தி தெரியாத ஊழியர்களுக்கு இடைஞ்சலும், ஆபத்தும் எதிர்நோக்கியுள்ளது குறித்தும் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து திரு. ரா. உமாநாத் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, இது நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் மட்டுமல்ல, இந்தி பேசாத கோடிக்கணக்கான மக்களுடைய நிகழ்கால எதிர்காலப் பிரச்னையும் இதிலே அடங்கியிருக்கிறது. மத்திய அரசினுடைய ஒவ்வொரு இலாகாவிலேயும் அபிஷியல் லாங்குவேஜஸ் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். அந்தக்கமிட்டியிலே சிவில் ஏவியேஷன், விமானப் போக்குவரத்தில் அந்த இலாகாவின் அந்த கமிட்டி சமீபத்தில் சில முடிவுகளைச் செய்திருக்கிறது. அந்த முடிவுகள் எப்படி இருக்கின்றன என்று சொன்னால், முதல் முடிவு, அவர்களுடைய இலாகாவிலும் சரி, அந்த இலாகாவிற்கு உட்பட்ட பொது நிறுவனங்களின் கோப்புகளிலும் கோப்புகளின் குறிப்புகளிலேயும் தஸ்தாவேஜுகளிலேயும் கடிதங்களிலேயும் "In the department as well as the public sector undertakings of the department" என்று எடுக்கப்பட்ட முடிவு. அது ஒன்று.

இரண்டாவதாக எடுக்கப்பட்ட முடிவு அதற்கான உயர்தர இந்தி அதிகாரியை நியமிப்பது. அது போதாது என்பதற்காக அந்தக் கமிட்டியிலே எடுக்கப்பட்ட முடிவுகள் சரியாக அமல் நடத்தப்படுகிறதா என்று மேற்பார்வையிடுவதற்காக 1,500 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை சம்பளத்திலே மேல் அதிகாரியை நியமிப்பது. கடிதத்திற்கு பதில், ஆங்கிலத்தில் முதலில்

எழுதி பிறகு இந்தியில் மொழிபெயர்ப்பதுதான் முறை. இப்
போது பர்ஸ்ட் டிராப்டே இந்தியிலே இருக்க வேண்டும் என்று
கொண்டு வருகிறார்கள், அதற்கு இங்கிலீஷ் வேண்டுமா
வேண்டாமா என்பது வேறு. "But the original draft must be in
Hindi" இந்த மாதிரி முடிவுகளை அவர்கள் எடுத்திருக்கிறார்கள்.

அதிகாரப் பூர்வமாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்தி தெரிந்த ஊழியர்களுக்குத்தான் வேலை கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 10-20]

அது அவர்களுடைய எக்ஸ்ப்ளனேஷன். அந்த எக்ஸ்ப்ள
னேஷன் உண்மை அல்ல என்பதற்கு இந்த இம்ப்ளிமென்டேஷன்
கமிட்டியின் சேர்மன் - அந்த டிபார்ட்மெண்டின் செக்ரட்டரி
—ஆர். பி. நாயக் அவர்கள் அந்தக் கமிட்டிக் கூட்டத்தில்
பேசும்பொழுது, இந்தி தெரியாத ஊழியர்களுக்கு இந்தியில்
பயிற்சி அளிக்கும் திட்டம் மிகமிக விரைவுப்படுத்தப்படவேண்டும்
என்று சொல்லியிருக்கிறார்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இந்தி தெரியாத
ஊழியர்களுக்கு அந்த டிரெயினிங் மிக மிக விரைவுபடுத்தப்பட
வேண்டுமென்று சொல்கிறார். ஆக்சலேரேட் செய்ய வேண்டு
மென்று சொல்கிறார். நான்—இந்தி எம்ப்ளாயிஸுக்கு என்று
சொல்கிறார். தெரிந்தவர்களுக்குத்தான் என்று சொன்னால்
தெரியாதவர்களுக்கு ஏன் இந்த ஏற்பாடு. எனவே, அது
உண்மையல்ல. அப்படியே இந்தி தெரிந்த ஊழியர்கள் என்று
லும், இந்தி தெரியும் என்பதால் கோப்புகளிலும், லெட்டர்
களிலும் இந்தியில் எழுதினால் இந்தி தெரியாத ஊழியர்கள்
எப்படி அதைப் படிப்பார்கள். அந்த லெட்டர்களை எப்படிப்
படிக்க முடியும். அதன் குறிப்புகளை எழுதி வைக்க முடியாது
இந்தி தெரியாதவர்கள் குறிப்பும் எழுத முடியாது. அதனால்
அவர்கள் இந்தியைக் கற்றாக வேண்டும். இல்லையென்றால் செய்ய
முடியாது. அதன் விளைவாக இந்தி பேசாத ஊழியர்கள் அந்த
டிபார்ட்மெண்டிலே தகுதியற்றவர்களாக ஆகிவிடுவார்கள்
(மணியடிக்கப்பட்டது). This is an important matter
It is affecting our fate itself. இது நம்முடைய
தலைவிதியை நிர்ணயிக்கும் விஷயமாகும். இதன் விளை
அவர்கள் தகுதியற்றவர்களாக ஆகி misfit in the Departmen
ஆக மாறிவிடுவார்கள். ஒதுக்கப்பட்டவர்களாக ஆகி விடுவா
கள், அல்லது அந்த டிபார்ட்மெண்டிலே நிலைக்க வேண்டுமென்றா
இந்தியைக் கற்றாக வேண்டும் என்ற கம்பல்ஷன் வருகிறது.





இது இப்பொழுது இருக்கும் ஊழியர்களுக்கு மட்டுமல்ல இப்படிப்பட்ட டிபார்ட்மெண்டுகளில் இந்த மாதிரி அமல் நடத்தப்பட்டால் புதிதாகச் சேர்க்கப்படும் ரெக்ரூட்ஸ்க்கு இந்தி, தெரிந்தால்தான் இடம் இருக்கும் என்ற நிலைமை வரும் அல்லது ரெக்ரூட்ஸ் செய்தால் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் அளவிற்கு, இந்தி டிரெயினிங் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் அளவிற்கு நிலைமைகள் வந்துவிடும். நேரு கொடுத்த வாக்குறுதிக்கும் இதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது.

அந்த அமைச்சகத்தின் காரியதரிசி இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். He is inciting the Hindi-knowing employees of the Department. அந்த டிபார்ட்மெண்டிலே உள்ள இந்தி தெரிந்த ஊழியர்களை இந்தக் கமிட்டியின் சேர்மன் தூண்டிவிடுகிறார். அவர் சொல்வது என்னவென்றால், தைரியத்தை மேற்கொண்டு உங்கள் வேலையை இந்தியிலேயே துவக்குங்கள். தண்ணீரில் துணிந்து குதிக்காமல் நீச்சல் கற்றுக்கொள்ள முடியாது, இந்தியில் வேலை துவக்க செய்யும் உங்கள் முயற்சி பாராட்டப்படாமல் போய்விடுமோ என்று பயப்படவோ தயங்கவோ செய்யாதீர்கள்; ஊழியர்கள் கோப்பில் தங்கள் குறிப்புகளையும், தஸ்தாவேஜு தயாரிப்புகளும் தங்களுக்குத் தெரிந்த எளிய இந்தியில் எழுதுங்கள் என்று அவர் incite பண்ணுகிறார். சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரும், அமைச்சரகச் செயலரும் மற்ற சில சீனியர் அதிகாரிகளும், தங்களுடைய வேலைகளை இந்தியில் செய்வதன் மூலம் இந்தி தெரிந்த அதிகாரிகளை இந்தியில் வேலை செய்ய ஊக்குவிக்கிறார்கள் என்று கமிட்டி கூறுகிறது. அவர்களை இந்தியிலே செய்யுங்கள் என்று தூண்டிவிடுகிறார்கள்.

ஆகவே, இப்படி ஒரு பக்கத்தில், திணிக்கப்படமாட்டாது என்ற உறுதியைக் கூறிக்கொண்டே மறுபுறத்தில் தீவிரமாக மறைமுகமாக இப்படித் தூண்டுகிறார்கள். எனக்குள்ள சந்தேகம் என்னவென்றால், அன்றாடம் மத்திய தலைவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகள், It is a smoke-screen to cover up the subtle method of forcing H ndi அதாவது திணிக்கப்பட மாட்டாது என்ற புகையைக் கிளப்பிக் கொண்டே அந்தப் புகையின் நடுவில் இந்த ஏற்பாடுகளை இப்படிச் செய்கிறார்களோ என்று நினைக்கிறேன். இதற்கு அவை முன்னவரவர்கள் பதில் சொல்லும்பொழுது கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரதமர் அவர்கள் சமீபத்தில் கோவையிலே வாக்குறுதி கொடுத்தார்கள் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று. ஆனால் அமைச்சகத்தின் முடிவுகள் வாக்குறுதிக்கு நேர்மாறாக இருக்கின்றன.

சமீபத்தில் சரண்சிங் அவர்களும், பிரதமர் அவர்களும் கலந்துகொண்ட ஒரு செமினாரில் முதலில் பிரதமர் பேசும்பொழுது சொல்லியிருக்கிறார். " There should not be Hindi fanaticism — I agree - There should not be English fanaticism either '' அப்படி யென்று சொன்னால் இந்தி திணிக்காதே என்று கூறுவது English fanaticism நேரு வாக்குறுதியை நிறைவேற்று என்றால் அது ஆங்கில வெறி என்ற பொருளில் வருகிறது. ஹோம் மினிஸ்டரும், பிரதமரும் பேசிய ஒரு கூட்டத்தில், " ஆங்கிலம் தெரிந்த இரண்டு சதவிகிதம் மட்டும் வரும் மக்களுக்காக, இந்தியைக் கைவிட முடியாது '' என்று பேசியுள்ளார். அந்தப் பொருள் என்ன வென்றால், படிப்படியாக இந்தியை நாட்டு மொழியாக்குவதைக் கைவிட முடியாது என்று கூறுகிறார் என்றுதானே அர்த்தம்.

ஆகவே அரசுக்கு நான் மீண்டும் எச்சரிக்க விரும்புவது என்ன வென்று சொன்னால், இப்படித் திணிப்பதால், இந்தி இணைப்பு மொழியாக இல்லாமல், நாட்டின் இணைப்பைச் சிதைக்கும் மொழி யாக மாறிவிடும். ஆகவே, அரசியல் சட்டத்திலிருக்கிற சகல மொழிகளும், சமமாகப் பாவிக்கப்படவேண்டும். அந்தந்த மாநில மொழிகளை வளர்க்கவும், ஆட்சி மொழியாக்கவும் மத்திய அரசு விசேஷ நிதி ஒதுக்கவேண்டும். இந்திமொழி பற்றி மக்கள் தாமாகவே முடிவு செய்யவேண்டிய விஷய மாகக் கருதப்பட வேண்டும். அதற்குக் காலம் கிடையாது. எப்பொழுது முடிவு செய்வார்களென்ற கெடு கிடையாது. இந்தி பேசாத மக்கள் ' கன்சென்ட் ', எப்பொழுது வருமோ, எந்த ஜெனரேஷனில் வருமோ நமக்குத் தெரியாது, அதுதான் காலம். ஆகவே, அதுவரைக்கும் ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர வேண்டும்.

ஆனால், மத்திய அரசு முடிவுகள் அதற்கு மாறானது. நான் அரசாங்கத்திற்குக் கூற விரும்புவது, உங்கள் மூலமாக, இதற்கு அரசாங்கம் தன் நிலையைப் பிரகடனப்படுத்தினால் மட்டும் போதாது, இந்த அவை தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் போதாது; மத்திய அரசிடம் கிளாரிஃபிகேஷன் கேட்டால் மட்டும் போதாது. ஏன் சொல்கிறேனென்றால் முன்னால் அவை முன்னவர் வாஜ்பாயி அவர்கள் கன்ஸல்ட் பண்ணி அந்த மாதிரி இல்லையென்று சில விளக்கங்களைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் இந்தநிலை. ஆகவே, இந்த அவையின் சார்பாக சர்வ கட்சி தூது கோஷ்டி டெல்லிசென்று, இந்த விஷயத்திலே சீரியஸ்ஸாக பேச்சுவார்த்தை—we must have close talk on that- நடத்துவதற்கு ஒரு கமிட்டி போகவேண்டும் (குறுக்கீடு). நான் டெல்லிக்கு 30-ந் தேதி போகிறேன்—சர்க்கார் செலவில்லாமலேயே போகிறேன்—அந்தப் பிரச்னை தனி கமிட்டி போய், நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும். இந்தி பேசக்



கூடிய எல்லோரும் பெனடிக்ஸ் என்று கூறவில்லை. அரசாங் கமும் அப்படிக் கருதாது. பெனடிக்ஸாக இருக்கக்கூடியவர் களைத் தனிமைப்படுத்துவது முக்கியமான விஷயம். இந்தி பேசக் கூடிய மக்களுக்குள்ளேயும் இந்தி பேசாத மக்களுக்குள்ளேயும் ஒற்றுமையை உண்டாக்கினால், அந்த குறிப்பிட்ட பெனடிக்ஸை ' ஐசலோட் ' பண்ணமுடியும்.

முதலமைச்சர் முன்னால் சொன்னார்கள், அதைச் சமாளிக்க இரட்டைக்குழல் துப்பாக்கி வேண்டுமென்று. நான் சொல்கி றேன், இரட்டைக்குழல் துப்பாக்கி போதாது, பீரங்கியே தேவை. நான் சொன்ன நிரந்தர சொலூஷன்தான் பீரங்கி. ஆகவே, அதைக் கணக்கில் எடுத்து, ஆல் பார்ட்டி நெகோஷியேட் பண் ணுவது சம்பந்தமாகவும், அவைமுன்னவர் அவர்கள் அதைப்பற்றிக் கூறவேண்டுமென்று கேட்டு, அதற்காக மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அருமை மாண்புமிகு உறுப்பினர் உமா நாத் அவர்கள் மிக முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். சிவில் ஏவியேஷன் அமைச் சராகப் பணிபுரியும் கௌஷிக் அவர்களும் அந்தக் கமிட்டியின் செகரட்டரியாக இருக்கிற திரு. ஆர். பி. நாயக் அவர்களும் பேசிய பேச்சை இங்கே நினைவூட்டி என்னதான் இந்தி திணிக்கப் படாது என்ற வாக்குறுதிகளை அவர்கள் வழங்கியபோதிலும் திரை மறைவில் ஒரு கூட்டம் திட்டவட்டமாக இந்தியைத் திணிப்ப தற்குத்துணிச்சலாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்று அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு பேசினார் கள். அந்தச் செய்தியை நானும் படித்துப் பார்த்தேன். அதிலே, அவர்கள் பேசியதாக வந்திருக்கிற செய்தி,

"He (Thiru R. P. Naik in his address to the Official Language Implementation Committee under his chairmanship) asked the Hindi-knowing employees to 'take courage and start doing their work in Hindi· One can not learn swimming unless one takes a plunge in to water,.''

இதை அவர்கள் தமிழிலே மொழி பெயர்த்துத் தெரிவித்தார் கள். அது மட்டுமல்லாமல், இந்தியன் ஏர்லைன்சிலேயும், ஏர் இந்தியாவிலேயும் பணி புரிகின்ற இந்தி பேசாத மக்கள் அவர் களது கதி என்ன என்பதைப் பற்றிய விளக்கத்தை டெல்லியிலே இருக்கிற நிருபர்கள் கேட்டபொழுது பத்திரிகையிலே வந்த செய்திப்படி

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 28

"Enquiries made here reveal that there is considerable resentment among the non-Hindi knowing employees and officers especially in the Indian Airlines over the pace at which the use of Hindi is being insisted upon and speeded up. The Ministry, however, claims that the Official Languages Committee which is enforcing the progressive use of Hindi is addressing itself primarily to the Hindi knowing employees. But the inevitable consequence of this will be that English will be progressively eliminated resulting in a major handicap to the non-Hindi knowing employees."

என்ற கருத்தை டெல்லி வட்டாரத்திலே இருப்பவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10–30)

இந்தச் செய்தியை இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் என்னிடம் சொல்லி, இது தமிழ்ச் சமுதாயத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கவல்ல ஒரு பெரிய பிரச்சனை என்றும், இந்தி பேசாத பகுதி மக்களின் எதிர்கால வாழ்வுக்குப் பேராபத்து உருவாகக்கூடிய ஒரு பிரச்சினை என்றும், ஆக இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே கிளப்புவதற்கு நீங்கள் எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பிறகு நான் அவருக்குச் சொன்னேன். இன்றைக்கே கிளப்பாதீர்கள் ; நான் அந்த இலாகா தொடர்புடைய அமைச்சரோடு தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு பேசியதற்குப் பிறகு, கிளப்பலாம் என்று நான் அவருக்குச் சொன்னேன்.

நேற்றைக்கு கௌசிக் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றேன், தொலைபேசி மூலம். அவர் ஒரிசா சென்றிருந்தார் என்ற செய்தி கிடைத்தது. இன்றைக்கு இங்கே வருவதற்கு 5 நிமிடத்திற்கு முன்பு நல்லவேளையாக கௌசிக் அவர்கள் கிடைத்தார்கள். நான் இந்தப் பத்திரிகைகளிலே வந்த செய்தியைப் படித்துக் காட்டினேன். இதற்கென்று ஒரு ஆபீசரை நீங்கள் போடுவதாகவும், அவருக்கு 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் வரை ஒதுக்கீடு செய்வதாகவும், இந்தியைக் கற்றே தீரவேண்டும் என்று இப்படிப்பட்ட செய்திகள் வந்திருக்கின்றன, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று சபையிலே காத்துக்கொண்டிருக்கிறது, அவருக்கு என்ன பதில் சொல்வது என்பதை நான் தெரிந்தாகவேண்டும், மத்திய மாநில அரசுகளுக்கிடையே அருமையான சூழ்நிலை, உறவு



1978 மார்ச் 28] [திரு. கி. மனோகரன்]

உருவாகின்ற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட பிரச்சினை பாதிக்கும் அல்லது உருக்குலைத்துவிடும் என்று நான் அஞ்சுகிறேன் என்று சொல்லி என்ன நடந்தது என்பது பற்றி எனக்குத் தெரிவியுங்கள் என்று சொன்னேன்.

அதற்கு அவர் சொன்ன பதில், இன்டியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் அல்லது ஏர் ஹோஸ்டுகள், இந்தியிலே கேள்வி கேட்பார்களானால் அவர்கள் இந்தியிலே பதில் சொல்வார்கள், ஆங்கிலத்திலே கேள்வி கேட்பார்களானால் அவர்கள் ஆங்கிலத்திலே பதில் சொல்வார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தித் திணிப்பு இதிலே இல்லை. அந்தக் கமிட்டியிலே நான் இருந்தேன். வேண்டுமானால் நடைபெற்ற அத்தனை விவரங்களையும் உள்ளடக்கிய குறிப்புகளை நான் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்று தெரிவித்தார்கள்.

நான் அவர்களுக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன், இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்சனை அதை ஒட்டி என்ன கருத்துக்கள் பரிமாறப்பட்டன என்பதை உங்களுக்கு எழுதி அனுப்புகிறேன் என்று அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே எனது அருமை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அந்தக் குறிப்பு வரட்டும். அந்தக் குறிப்பிலே என்னென்ன பேசப்பட்டிருக்கிறது, என்னென்ன முடிவுகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொண்டதற்குப் பிறகு, செய்தி வந்த பத்திரிகை இந்துப் பத்திரிகை என்றாலும், செய்திகளை ஒழுங்காகத் தருகிற, இலக்கணத்தை மீறாத பத்திரிகை என்றாலும், அந்தக் குறிப்புகளையும் நாம் பெற்றால், இதை விடக் கொஞ்சம் தெளிவு பிறப்பதற்கு மார்க்கம் இருக்கும் என்று நாம் நம்புகிற காரணத்தால், ஒரு நாள் அல்லது இரண்டு நாளைக்குள் உங்களுக்கு அதை அனுப்பி வைக்கிறேன் என்று கௌசிக் வாக்குறுதி வழங்கியிருக்கிறார்—அந்தக் குறிப்பு வந்ததற்குப் பிறகு மேற்கொண்டு என்னென்ன நடவடிக்கையில் ஈடுபடுவது என்பதை யோசிப்போம்.

ஒரு தூதுக்குழு போவதா, அல்லது பீரங்கிகளாக நாம் பணியாற்றுவதா, இப்படிப்பட்ட பயங்கரமான பிரச்சினைகளில் எல்லாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல், நண்பர் உமாநாத் அவர்கள் கொஞ்சம் அமைதியாக இருந்து பீரங்கியாகவும் இல்லாமல், துப்பாக்கியாகவும் இல்லாமல் கலந்து பேசுவதன் மூலம் காரியங்களைச் சாதிப்போம் என்ற உணர்வினைப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கிருக்கிற மகிழ்ச்சி எல்லாம், பயங்கரமான அளவுக்கு ஆவேசத்தோடு, நாடாளுமன்றத்திலேயும் இங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர், முதல்வராக இருந்த

கருணாநிதியும், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் நெருப்பு பொறி பறக்கப் பேசுகின்ற நேரத்திலே எல்லாம் அமைதி காத்து கொண்டிருந்த எனது அருமை நண்பர் உமாநாத் அவர்கள் இன்றைக்கு எங்களையெல்லாம் மிஞ்சுகிற அளவிலும் எங்களுக்கு எல்லாம் ஒய்வு தரும் அளவுக்கும், போராடுவது மட்டுமல்ல சிறைச்சாலை என்ன செய்யும், அது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்ற பாடலைப்பாடும் அளவுக்கு தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டிருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு நாள் காத்திருக்கக் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கலாம் என்று கூறி, இதற்காக ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின் கீழ் அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகு பேசுவது வழக்கம் அல்ல.

திரு. ரா. உமாநாத் : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் தான் தீப்பொறி பிரசங்கம் செய்தபோது எங்கள் கட்சி பேசாமல் அமர்ந்து இருந்தது என்று சொன்னர்கள். எங்கள் பார்ட்டியின் பாலிசியைப் பற்றி நான் இப்போது என்ன பேசினேனே, அதைத்தான் எங்கள் ப்ரோகிராமிலும் சரி, பாலிசி நோட்டிலும் சரி நாடாளுமன்றத்தில் நான் பேசும்போதும் சரி, அந்தப் பிரச்சனையில் கடுமையாகத்தான், அந்த கருராகத்தான் பேசினேன். இப்போது புதிது ஒன்றும் இல்லை. பீரங்கி என்பதைப் பற்றி சொன்னர்கள். இரட்டைக்குழல் துப்பாக்கி என்பதை முதலமைச்சர் அவர்கள்தான் கூறினர்கள். அதை வைத்துத்தான் நான் சொன்னேன். இரட்டைக்குழல் துப்பாக்கி போதாது பீரங்கி வேண்டும் என்று.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : போராட்டக் கருவிகளைப் பற்றி பேசுவதைப்பற்றி நிறுத்தி விடவேண்டும். நண்பர் உமாநாத் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்களது கட்சியும் இதே குறிக்கோளோடு, இதே திட்டவட்டமான நிலையில் நின்று கொண்டு தான் இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம், என்றும் சொன்னர்கள். அது உண்மையானல் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஒரு வேளை அத்தனைக்கு காரமான, தீப்பொறி பறக்க உமாநாத் அவர்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் நான் இல்லாமல் போய் இருக்கக்கூடுமோ எனக்குத் தெரியாது. அப்படிப் பேசி இருப்பார்களானல்,





நான் அவர்கள் கட்சியின் நிலை, கட்சியின் இலட்சியம் என்று இருக்குமானல், மிக்க மகிழ்ச்சியோடு உமாநாத் அவர்களின் கருத்துக்களை வரவேற்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கிறேன்.

## 4. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் திரு. ர. ஜெபமணி வெளியில் தாக்கப்பட்டதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி குறித்தும், அவருக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பது குறித்தும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இன்றைய தினம் காலைப்பத்திரிகையில் ஒரு பயங்கரமான செய்தி வந்து இருக்கிறது. தமிழக சட்ட மன்ற உறுப்பினர் பயங்கரமாகத் தாக்கப்பட்டு இருக்கிறார். அவர் வயதில் பெரியவர் என்ற காரணமாக இங்கே எல்லோரும் அவரைத் தாத்தா என்று அன்போடு அழைக்கிறோம், அவர் அந்த அளவுக்குத் தாக்கப்பட்டு, உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். அவர் மேலும் தாக்கப்படாமல் இருக்கும் பொருட்டு அவருக்குப் போலீஸ் பாதுகாப்புக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? (குறுக்கீடு) அவர் பெயர் ஜெபமணி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர் ஜெபமணி தாக்கப்பட்டதாகக் கூறினர்கள். எமர்ஜென்சி காலத்தில் சிறையில் இந்திராகாந்தியின் தூண்டுதலின் பேரில், பட்ட அடியைவிட நேற்றைய தினம் பட்டது ஒன்றும் இல்லை அங்கே தான் அடிபட்டேன், நேற்றைய தினம் அடி ஒன்றும் இல்லை என்று அவர்கள் கூறினர்கள் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அடிபடவில்லை என்று அவர் கட்சித் தலைவர் சொல்லிய காரணத்தால், இதில் பிரச்சனை ஒன்றும் இல்லை.

இப்போது, திரு. வ. துலுக்கானம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு பிரச்சனையைக் கொண்டுவருவார்கள்.

## 5. கவனஈர்ப்பு.

(அ) உளுந்தூர்ப்பேட்டைத் தொகுதி, விருகாலூர் மற்றும் சுற்றிய கிராமங்களில், கோமுகி நதியில் கிளை வாய்க்காலில் தண்ணீர் வராததால், விவசாயிகள் பாதிப்பு குறித்து.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சேர்ந்த விருகாலூர், மற்றும் சுற்றியுள்ள கிராமங் களில் விவசாயத்திற்கு கோமுகிநதியில் கிளை வாய்க்கால் மூலம் தண்ணீர் வருவது கடந்த புயல் வெள்ளம் காரணமாக அறவே நின்றுவிட்டதால் அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்பெற்றிருக்கும் நிலை குறித்து, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, விருகாலூர் அணை கோமுகி நதியின் குறுக்கே கோமுகி நீர்த்தேக்கத் தின் கீழ் உள்ள ஒன்பதாவது அணையாகும். அணையிலிருந்து இடது புறம் 1.5 கி.மீ. நீளம் ஒரு கால்வாய் செல்கிறது. இக் கால்வாயின் கீழ், விருகாலூர் கிராம எல்லையில் உள்ள 142.01 ஏக்கர் நிலங்கள் நேரடி நீர்ப்பாசனம் பெறுகின்றன. 1977ஆம் ஆண்டு நவம்பர் மாத புயல் மற்றும் வெள்ளத்தினால் இக் கால்வாயின் கரை சுமார் 40 மீட்டர் தூரத்திற்கு பாதிக்கப்பட்டு வண்டல் படிந்து தூர்ந்துவிட்டது. எனினும், இதனால் இயல்பான நீர் வரத்து பாதிக்கப்படவில்லை. தற்சமயம் ஆற்றில் தண்ணீர் வரத்து ஏதுமில்லை. தேவையான மராமத்து மதிப்பீடு ரூபாய் 3,000-க்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணி தற்போது துரிதமாக நடந்து வருகிறது. இது இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

(முற்பகல் 10-40.)

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, இன்னும் அதிக சேதமாகாமல் அந்த வாய்க்காலை ஆழப்படுத்தி, கரையைப் பலப் படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்'

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு அதை பரிசீலிக்கும்.



(ஆ) குடியாத்தம் நகரில் போதுமான அளவு மின்சாரம் இல்லாமையால், இரண்டு பஞ்சாலைகளும், சில தொழில்களும் சரிவர நடக்காததால் 'லே-ஆப்' வாங்கும் நிலை இருப்பதால், தொழிலாளர் பாதிப்பு குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், குடியாத்தம் நகரில் போதுமான அளவு மின்சாரம் இல்லாத காரணத்தினால், நக ரிலுள்ள இரண்டு பஞ்சாலைகளும் இதர சிறு தொழில்களும் வேலை நடைபெறாமல் தடைபட்டும், அரைகுறையாகவும் நடப்பதால் தொழிலாளர்கள் லே-ஆப் வாங்கும் நிலை ஏற்பட்டிருப்பதால் தொழிலும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே' பாசனக் கிணறுகளில் நல்ல நீர் வசதி இருப்பதால் விவசாயிகளின் மின் தேவை அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் 1,300 மெகா வாட்டாக இருந்த மின் தேவை இந்த ஆண்டு திடீரென்று எதிர் பாராத வகையில் 1,600 மெகா வாட்டாக உயர்ந்துள்ளது இந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக மாநிலம் முழுவதும் நிலநீர் மட்டம் உயர்ந்திருப்பதால் இறைவை நீர்ப்பாசனம் பெருமளவு அதிகரித்து ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட எல்லா பம்பு செட்டுகளும் இயங்குகின்ற நிலை ஏற்பட் டிருக்கிறது. எனவே, மின் தேவை அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு பொதுவாக உச்சவேளை மின் தேவை மிகவும் அதிகமாக இருப்பதாலும், பல துணை மின் நிலையங்களிலும் மின் அழுத்தம் குறைவாக உள்ளது.

பிப்ரவரி மாதம் 23-ம் தேதி வரையிலும் குடியாத்தம் துணை மின் நிலையத்தில் குறைந்த பட்ச மின் அழுத்தம் 8.6 கிலோ வோல்ட் ஆகவும் உயர்ந்த பட்ச மின் அழுத்தம் 12.0 கிலோ வோல்ட்டாகவும் இருந்தது. 23—2—1978- ல்குடியாத்தம் துணை மின் நிலையத்தில் உள்ள மின் மாற்றிகளில் மின் அழுத்தத்தினை சிறிது அதிகரித்து அமைக்கப்பட்டது. மேலும் 4,000 கே. வி. ஏ. ஆர். கெபாசிட்டர்களும் துணை மின் நிலையத்தில் நிறுவப் பெற்று மின் இணைப்புக் கொடுக்கப்பட்டன. இதனால் குறைந்த பட்ச மின் அழுத்தம் 9.6 கிலோ வோல்ட்டாகவும் உயர்ந்த பட்ச மின் அழுத்தம் 12.0 கிலோ வோல்ட்டாகவும் உயர்ந்தது.

இதுமட்டுமல்லாமல் குடியாத்தம் நகருக்கு மின்சாரம் வழங்கும் மின் கம்பித் தொடரினை இரண்டாகப் பிரிக்கும் வேலை முடிவடைந்து விட்டது. விரைவில் அந்த இரண்டு தொடர் களுக்கும் தனித்தனியே மின்சாரம் வழங்கப்படும். மின் அழுத்தம்

மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட காலத் திட்டங்களுக்குகாக திருவலம் துணை மின் நிலையத்தில் 25 எம்.வி.ஏ.ஆர். "சிங்கரன்ஸ் கண்டன்சர்" நிறுவும் திட்டம் 1978-ம் ஆண்டு முடிவிற்குள் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக மின் அழுத்த நிலைமை இப் பகுதிகளில் பெருமளவில் சீர்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இரண்டு மாதத்திற்கு முன்னால் இருந்தே அந்த மில்களில் 'லோ டென்ஷன்'— மின் அழுத்தம் குறைவாகவே உள்ளது என்பதைப்பற்றி அரசுக்கு எழுதித் தந்திருக்கிறார்கள். நானும் 20 நாட்களுக்கு முன்னாலிருந்தே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர் களுக்கும், அதைப்போன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கும் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த மின் அழுத்தக் குறைவினால் இப்போது 3 ஷிப்டாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற மில்களில் இனி இரண்டு ஷிப்டுதான் நடத் தப்போகிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? ஆகவே, உடனடியாக ஒரு வாரத்திற்குள்ளாக மின் அழுத்தம் சரியாகக் கிடைக்கவில்லை என்றால் இரண்டு ஷிப்டு நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், தொழிலாளர் மத்தியிலே ஒரு போராட்ட உணர்வு ஏற்பட்டு, போராட்டத்திலே குதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கு அரசுதான் பொறுப்பு, அரசுதான் போரட்டத்தை தூண்டிவிடுகிறது என்று நான் சொல்லலாம் அல்லவா? ஆகவே ஒரு வாரத்திற்குள் சரியான மின் அழுத்தம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, லோ வோல்ட்டேஜ் என்பது உண்மை. ஆனால் அது ஒரு வாரத்தில் சரி செய்யப்படும் என்ற உறுதியினை அளிப்பதற்கில்லை. ஏனென்றால் அந்த 11 கே. வி. ஃபீடர்களைப் பொறுத்தவரையில் அதை இரண்டாகப் பிரிக்கவேண்டி இருக் கிறது. அதற்குரிய வேலைகள் நடந்து வருகின்றன. அதேபோல ரீஆக்டர்ஸ் பொருத்துவதற்கு 25 எம்.ஈ.ஆர். சிங்க்ரோனைஸ்ட் கண்டன்ஸர் வேண்டும். அதற்கு ஓரளவு காலத்தாழ்வு ஏற்பட் டிருந்தாலும் வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பு 8.6 கிலோ வாட் என்று இருந்தது 9.6 கிலோ வாட் என்கிற அளவுக்கு வந்திருக்கிறது. ஆகவே நிலைமை திருப்திகரமாக ஆகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.



## 6. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகளின் ஆய்வுக் குழுவின் முதலாவது, இரண்டாவது அறிக்கைகள்—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன், சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் உறுப்பினர் மேற்படி குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை களை அளிப்பார்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைக் குழுத்தலைவரின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) கிராம உத்யோகஸ்தர்கள் சங்கத்தின் போராட்டம் குறித்து அரசு அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. துரை முத்துச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் நடத்துகின்ற போராட்டம் சம்பந்தமாக இன்றையதினம் அறிக்கை கொடுப்பதாக சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதை அறிவிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இன்றைக்கு அறிவிப்புத் தருவதாகச் சொல்ல வில்லை. பத்திரிகையிலே செய்தி வந்தது என்றால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங் கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1978ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

8. 1978-79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி),

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாநிலச் சட்டமன்றம் பற்றிய விவாதத்தினுடைய தொடர்ச்சி இருக்கிறது. அதற்கடுத்து தேர்தல்கள் என்ற மானியக் கோரிக்கை இருக்கிறது. அதையடுத்து மானியக் கோரிக்கை 9 இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் மொத்தமாகச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம் என்று பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) கோரிக்கை என் 7—சட்டமன்றம் (தொடர்ச்சி.)

(ஆ) கோரிக்கை என் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சரின் சார்பாக ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கைஎன் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ 23,38,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''



(முற்பகல் 10.50)

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, வாக்காளர் பட்டியல் வீடு, வீடாகச் சென்று எடுக்கும் பணியாளர்களுக்கு தினசரி படி கொடுப்பது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,38,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''. என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தற்போதுள்ள தேர்தல் சாவடியின் தூர அளவு 3 கிலோ மீட்டர் என்பதை மாற்றி ஒரு கிலோ மீட்டர் தூரம் என நிர்ணயிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை என் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,38,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) கோரிக்கை என் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பாக ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: —

''மானியக் கோரிக்கை என். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ.12,81,18,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் முறையீடுகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் உடனடியாக விடையளிக்கத் தவறுவதைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை என். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,81,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

[1978 மார்ச் 28

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, அமைச்சர்களின் சம்பளம், ஏனைய படிகள் ஆகியவைகளை உயர்த்துவது பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை என். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,81,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, கட்டாய ஓய்வுக்கு ஆளான எல்லா சர்க்கார் சிப்பந்திகளையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க.—

" மானியக் கோரிக்கை என். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,81,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, தலைமைச் செயலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களில் பணியாளர்களை நியமிக்காதது குறித்தும், குறிப்பாக சட்டத்துறையில் பல பணியிடங்கள் காலியாக வைத்திருப்பது குறித்தும் விவாதிக்க:—

" மானியக் கோரிக்கை என். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 12,81,18,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் 8, 9 இவை இரண்டுக்குமான குறிப்புகள்* ஏற்கனவே அவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்ததாக ஏற்றுக் கொண்டு குறிப்பேட்டில் இடம் பெறச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாநிலச் சட்ட மன்றம் உட்பட மூன்று மானியக் கோரிக்கைகள் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தமாகத் தங்கள் கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 28]

*திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : தலைவர் அவர்களே, பேரவை உதவித் தலைவர் அவர்களுக்கு காங்கிரஸ் கட்சி சார்பாக என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நாம் இந்தச் சபைக்கான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடத்துகிறோம். இந்தச் சபைக்கு சுமார் இரண்டு லட்சம் மக்கள், ஒரு லட்சம் வாக்காளர் அல்லது வோட்டர்களுக்கு ஒரு பிரதிநிதியாக நாம் இங்கு வருகிறோம். இங்கே நாம் வந்ததற்குப் பின் நாம் மக்களுக்கு எல்லாவிதமான நலன்களையும் செய்வதற்காக இங்கு மாதக் கணக்கில் கூடிப் பேசுகிறோம். அப்படி மாதக் கணக்காகக் கூடிப் பேசுவதில் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது. நாம் இப்படி இவ்வளவு செலவு செய்தாலும் கூட சரியான பிரதிநிதித்துவம் கொடுத்து இங்கே பேசப்படுவது இல்லை.

நாங்கள் 27 பேர்கள், உறுப்பினர்கள் இருக்கிறோம். இந்த 27 பேர்களுக்கும் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நாளும் பத்து அல்லது 12 நிமிடங்கள் தரப்படுகிறது. யாராவது தொந்தரவு படுத்தி கூடுதலாகப் பேசினால். நம் பேச்சுகள் முறையாக பிறகு அச்சில் வரப் போகிறது. மக்களுக்குத் தெரியும். இங்கே உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதி பற்றித்தான் பேசிவிடுகிறார்கள். மொத்தமாகப் பேச முடிவதில்லை.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா தலைமை].

நாம் இங்கே நம் கொள்கைகளை எடுத்துரைக்க வந்திருக்கிறோம். அங்கே நமக்கு வேலையில்லாத காரணத்தால் இங்கு வந்து உட்காரவில்லை. ஆகவே, இந்த நிலைமையில் ஒவ்வொருவருக்கும் குறைந்தது பத்து நிமிடங்கள் ஒவ்வொரு பொருள் பற்றிப் பேச நேரம் வேண்டும். அப்படியில்லாததால் நாம் இங்கு வந்து ஒன்றும் சொல்ல முடிவதில்லை. அரசாங்கத்திற்கு இதனால் அதிகச் செலவாகிறது என்றால் இந்த அவையில் உறுப்பினர்களை மூன்றுக்கு இரண்டு பேர்களைக் குறைத்து ஒருவரை வைத்துக் கொள்ளலாம். அப்போதுதான் போதுமான பிரதிநிதித்துவம் இருந்து, இந்தச் சபையில் ஒரு திட்டத்தை எடுத்துரைக்க முடியும்.

இன்னொன்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் மந்திரியாக இருக்கிறோம், ஸ்பீக்கராக இருக்கிறோம். இந்தப் பதவிகளில் எல்லாம் அங்கத்தினர்களாக இருக்கின்ற நாம்தான் இருக்கிறோம். இந்த நிலைமையில் சட்டசபை அங்கத்தினர்களாக

* 472—476-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

இருக்கின்ற நமக்கு தகுந்த மரியாதையும் அந்தஸ்தும் கிடைப்பதில்லை. எப்படியில்லை என்று சொன்னால், நேரடியாக நடந்த சம்பவத்தைச் சொல்கிறேன். புயல் துயர் துடைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலும் பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தெந்த ஊருக்கெல்லாம் சாலைகள் போடப் போகிறீர்கள் என்று கேட்டு தபால் எழுதினேன். இன்று வரை பதில் கிடையாது. என்னால் முடிந்த வரைக்கும் என்னுடைய சொந்தச் செலவிலேயே அந்த ஊர்களுக்கெல்லாம் போய் சாலைகளில் என்ன வேலைகள் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கெடுத்து, அதை உதவி என்சினியர் அவர்களுக்கும் டிவிஷனல் என்சினியர் அவர்களுக்கும் பதிவுத் தபால் மூலம் நான் கணக்கு எடுத்ததை எல்லாம் எழுதி அனுப்பினேன். நான் இப்படிச் சொல்வது எல்லாம் உறுதியானது, இப்படி பதிவுத் தபாலில் கடிதம் எழுதியும் இதுவரை சட்டமன்றப் பேரவை அங்கத்தினராக இருக்கும் எனக்கு பதில் கிடையாது.

அதன்பிறகும் சாலைகளில் வேலை நடந்திருப்பது சரியல்ல. ஆனால் வேலைகள் எல்லாம் நடந்து முடிந்து அதற்கான தொகையும் கொடுத்தாகிவிட்டது. இதைப் பற்றியும் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ம் தேதியில் எழுதியிருக்கிறேன். பதிவுத் தபாலில்தான் எழுதினேன். இவ்வளவு தகவல் வைத்திருக்கிறேன். ஆனால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்றால், சட்டசபை மெம்பர் என்றால் என்ன என்சினியரா, சீப்-என்சினியரா என்று பேசிக் கொள்கிறார்கள். ஆனால் என்ன நடந்திருக்கிறது என்றால் கொஞ்சம் வேலை செய்துவிட்டு, 2 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வேலை செய்து விட்டு, அதற்கெல்லாம் 10 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் பட்டுவாடா செய்திருக்கிறார்கள், ஆனால் இதையெல்லாம் கேட்பதற்கு அங்கத்தினர்களுக்குத் தகுதியில்லை என்று நினைக்கிறார்கள். இப்படியிருப்பதைவிட அங்கத்தினர்களைக் குறைத்துக் கொண்டு சபையை நல்ல முறையில் நடத்தினால் நன்றாக இருக்கும். இந்த வகையில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு தகுந்த மரியாதையும், தகுதியும், அந்தஸ்தும் தரப்பட வேண்டும். இதற்கான வகையில் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேல், சட்டசபை நடக்கும்போது, சட்டசபை அங்கத்தினர்களுக்கு பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இங்கு நமக்கென்று நான்கு தமிழ் டைப்ரைட்டர்கள் ஏற்படுத்த வேண்டும். ஆஸ்டலில் நான்கு தமிழ் டைப்ரைட்டர்கள் ஏற்படுத்தியாக வேண்டும். இப்போது இந்தக் கூட்டத்திற்கு எல்லோரும் வந்து விடுகிறோம். எல்லோரும் வசதியாக வருவதில்லை. அதே நேரத்தில் நீண்ட நாட்களாக இங்கு இருக்க வேண்டியிருக்கிறது.





இங்கு செக் கொடுத்தால் அதை மாற்றுவதற்கு பாங்குக்கு அவசரமாக ஓட வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல், அசெம்பிளி நடக்கும்போது, இங்கும் ஒரு பாங்கு வைத்தால் நன்றாக இருக்கும்.

அது தவிர இந்தச் சபையில் எதிர் நரப்பு என்ற ஒரு வகை இருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் நாங்கள் 27 பேர்கள் இருக்கிறோம். இந்த 27 பேர்களையும் ஒரு எதிர்க்கட்சியாக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, எங்களுடைய பார்டி ஆபீஸ்-க்கு டெலிபோன் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மேலே நான் கேட்பது, மற்றவர்களுக்கு அது ஒரு மாதிரியாகத் தோன்றலாம். நான் சொல்வது மொத்தமாக எல்லோரையும் சேர்த்துத்தான். பேரவை அங்கத்தினர் என்று சொல்லும் போது, தகுந்த மரியாதையும், உரிய அந்தஸ்தும் கொடுக்க வேண்டும்.

சாதாரணமாக பாராளுமன்ற அங்கத்தினர்களை எடுத்துக் கொண்டால், பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு, இந்த சட்டசபை அங்கத்தினர்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. அங்கத்தினர்கள் செய்யும் பணியை எடுத்துக் கொண்டால், மக்களிடையே சட்டசபை அங்கத்தினர்கள்தான் நேரடியாகப் போய் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன வசதிகள் தரப்படுகிறதோ அவை அத்தனையும், டி.எ. கொடுப்பது, மற்றும் எல்லா வசதிகளும் அவர்களைப்போல் இங்குள்ள சட்டசபை மெம்பர்களுக்கும் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வசதியைப் போல் இங்கும் இருக்க வேண்டும்.

(முற்பகல் 11—00)

அதிலும், ரயில்வேக்களைப் பற்றிச் சொல்லும்போது, நாம் எப்படி மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோமோ, அதைப்போல் நம்முடைய சட்டமன்றப் பேரவை அங்கத்தினர்கள் ரயில்வேக்களில் செல்வதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டும். இந்த வசதியை நாம் நமக்கு மட்டும் கேட்க வேண்டியதில்லை. இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களிலுள்ள சட்டப் பேரவை அங்கத்தினர்களுக்கும் மத்திய அரசு தர வேண்டுமென்று நாம் இங்கிருந்து ஒரு கோரிக்கை விடுத்து, அப்படி இந்த மத்திய அரசை நாம் கேட்கலாம். அப்போது நாம் பணம் கொடுத்து டிக்கட் வாங்க வேண்டிய அவசியமில்லை. இந்தக் கூப்பனும் வேண்டியதில்லை. நம்முடைய மத்திய சர்க்கார் என்பது ஒரே இந்திய

[திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி] [1978 மார்ச் 28

சர்க்கார்தான். ஆகவே, நமக்கு இந்த ரயிலிலே செல்லும், உதவியைத் தரவேண்டுமென்று சொல்லி, நாம் ஒரு கோரிக்கையை இந்த அமைச்சர் அவை மூலம் எழுப்பிப் பெறவேண்டும்.

நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறேன். முன்பு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்து, இப்போது, எம்.எல்.ஏ. இந்த எம்.எல்.ஏ. என்பது 2 ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஒரு முனிசிபல் தலைவரும் சேர்ந்த ஒரு ஏரியா ஒரு எம்.எல்.ஏ.-வுக்கு இருக்கிறது. ஆனால், ஊராட்சித் தலைவர் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி எழுத்தர், ஒரு கடைநிலை ஊழியர் கொடுத்திருந்தார்கள். அப்படி இரண்டு பேர்கள் கொடுக்கப் பட்டது. அதைப்போல் ஒவ்வொரு எம்.எல்.ஏ.-வுக்கும் தேவைப் படுகிறது.

இதெல்லாம் தேவை என்று நான் கேட்பதைப் பார்த்தால், மிக அதிகமாகக் கேட்பதைப் போல் தோன்றும். ஆனால், இது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு எவ்வளவு அவசியம் இருந்ததோ, அதைவிட ஒரு எம்.எல்.ஏ., 2, 3 ஊராட்சி ஒன்றிய அளவுக்குள்ள விவகாரங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட வேலைகள் இருப்பதினாலே, இவைகளையெல்லாம் கவனிப்பதற்கு ஒரு எழுத்தரும், ஒரு கடைநிலை ஊழியரையும் அவசியம் தரவேண்டும்.

இதைத் தவிர, ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை அங்கத்தினருக்கும் அவர்களுடைய சொந்த வீட்டிற்கு ஒரு டெலிபோன் வசதியைச் செய்து தர வேண்டும். இதைப்போல் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கெல்லாம் உண்டு. இப்படி 300 ஒன்றியத் தலைவர்களுக்கு மேல் கொடுத்திருந்தார்கள். அதேபோல் நமக்கும் தரப்பட வேண்டும்.

இதையெல்லாம் நான் கேட்கும்போது, இதைத் தவருக நீங்கள் எண்ணக் கூடாது. சாதாரணமாக ஒரு சட்டமன்றப் பேரவை அங்கத்தினர், இங்கே யாரையாவது ஒரு மாவட்ட அதிகாரியையோ அல்லது பெரிய அதிகாரியையோ போய்ப் பார்க்க வேண்டுமென்று சொன்னுல், அவர்களை கன்னிமரா ஓட்டல், கோரமண்டல் ஓட்டல் அல்லது சோழன் ஓட்டல் போன்ற இடங்களுக்குச் சென்றுதான் அவர்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்று கேட்டால், இந்த அளவுக்கு நம் சர்க்காரிலிருந்து அவர்களுக்கு படி கொடுக்கிருர்கள். அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்குச் சென்று நாங்கள் பார்க்க முடியவில்லை, இந்த நிலைமை சட்டமன்றப் பேரவை அங்கத்தினர்களுக்கு இருக்கக் கூடாது.

அவர்களுக்கு நம் வசதிகளைத் தாராளமாக ஒதுக்கித் தரவேண்டும். இந்தளவு பிரதிநிதித்துவம் வகிப்பவர்களுக்கு நல்ல முறையிலே வசதிகளைச் செய்து தரவேண்டும்.



1978 மார்ச் 28] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

இங்கிருந்து உறுப்பினர்கள் தொகுதியைப் பொறுத்து ஏதாவது தகவல்கள் கேட்டால், அவைகள் உடனடியாக இத்தனை தினங்களுக்குள் கிடைக்க வேண்டுமென்று ஒரு திட்டம் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆஸ்டல் நமக்கு இருக்கிறது. அங்கே இப்போது நாற்றம்தான் இருக்கிறது; அந்த நாற்றத்தோடு கொசு, மூட்டைப்பூச்சி எல்லாம் வேறு இருக்கிறது. இந்த ஆஸ்டலிலே வெளிநாட்டுக்காரர்களும் வந்து தங்குகிருர்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆனுல், நம்முடைய பக்கத்து மாகாணத்தில், ஹைதராபாத்தில் உறுப்பினர்களுக்கு தனித் தனியான வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிருர்கள். இந்த அளவுக்கு இல்லையானுலும், இந்த ஆஸ்டலையாவது மிக நல்ல முறையில் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னென்று, இந்த ஆஸ்டலிலே உள்ள டெலிபோன் சரியாக வேலை செய்வதில்லை. (மீண்டும் மணியடிக்கப்பட்டது). இப்போது போய்ப் பார்த்தாலும் தெரியும். பாதி டெலிபோன்கள் வேலை செய்யாது. எனவே, அவைகளை சரியாகச்செய்யும்படி கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியங்களின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு சட்டமன்றத்தைப் பற்றிய மானியக் கோரிக்கை வருகிற காரணத்தால், இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் என்ற முறையில் நம்முடைய பிரச்சினைகளை நாமே எடுத்துச் சொல்லுகிற நிலைமை ஏற்பட்டு, அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அரசு அதை எந்த அளவிற்கு கவனிக்க இருக்கிறது என்பதை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்க இருக்கிற பல்வேறு பயனுள்ள திட்டங்கள் மூலமாக இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்கு என்ன வாய்ப்புகள் கிடைக்க இருக்கின்றன என்பதை இங்கே இருக்கிற உறுப்பினர்கள் அறிவதற்கு மிகுந்த ஆவலுடன் இருக்கிருர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவஞக இருக்கிறேன்.

முதலிலே நான் இந்தச் சட்டமன்றத்தைப் பார்க்கிறேன். இது பல ஆண்டுகளுக்கு முன்னுல் கட்டப்பட்ட சட்டமன்றம். எந்தக் காலத்திலோ கட்டப்பட்ட சட்டமன்றத்தை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடிய........

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 28

(திரு. சி. ஆறுமுகம் ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார்).

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் மதுராந்தகம் ஆறுமுகம் அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகத்தில் எப்போது சேர்ந்தார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நாம் உறுப்பினர்களைப் பற்றிப் பேசுகிறோம் என்ற காரணத்தால் அதிலே கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது. எல்லா இடங்களிலும் உட்கார்ந்து கலந்து பேசலாம் என்று மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறார். இதைக் கூடப்பிரிக்க வேண்டுமென்ற முயற்சியில் நண்பர் துரை முத்துசாமி அவர்கள் ஈடுபட வேண்டாம். மானியம் நம்மைப் பற்றியது. நாம் கலந்து பேசிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையில்தான் அவர்கள் எங்களோடு கலந்திருக்கிறார்கள்; வேறு வகையில் நினைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரை நீண்ட நெடும் நாட்களுக்கு முன்னால் கட்டப்பட்ட சட்டமன்றம். இதிலே இருக்கிற வசதிகளைப் பற்றி நினைத்துப் பார்த்தால் பல வேடிக்கைகள் இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் மூன்று பேர் முதல் ஆறு பேர் வரை உட்கார்ந்திருக்கிறோம். முதலிலே உட்காந்திருப்பவரை அடுத்து உட்கார்ந்திருப்பவர்கள் உள்ளே போக வேண்டுமென்று சொன்னால் அவர் அனுமதித்தால்தான் போக முடியும். எனக்குப் பக்கத்தில் கொறடா உட்கார்ந்திருக்கிறார்; அவர் வழி விட்டால்தான் நான் உட்கார முடியும். அவர் காலை மடித்து வழி விட்டால்தான் நான் உள்ளேபோக முடியும். இந்த நிலைமையை மாற்றவேண்டும்.

இங்குள்ள ஒலிபெருக்கி பத்தாம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்டு செயல்படுகிற நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வேன்—இங்கிருக்கிற ஒலிபெருக்கியில், நண்பர் உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் கொஞ்சம் அதிகமாக வளர்ந்த காரணத்தால், அவர் பேசும்போது மிகவும் கஷ்டப்பட்டு குனிந்துகொண்டே பேசுகிறார். அவருக்குக் கவலை ஒலிபெருக்கியில் சரியாகக் கேட்கிறதோ இல்லையோ என்பது. அமைச்சர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் வைத்திருக்கிறமாதிரி எந்தப் பக்கம் வேண்டுமானாலும் திருப்புகிற மாதிரி ஒலிபெருக்கியை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 28]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : எந்த உயரத்தில் ஒலிபெருக்கியை வைக்கவேண்டும்? ராதா அவர்கள் உயரத்திலா அல்லது சுப்பிரமணியம் அவர்கள் உயரத்திலா ?

திரு. எஸ். ஆர். இராதா : சுப்பிரமணியம் அவர்கள் உயரத்தில் அமைக்கவேண்டும். எந்த உயரத்தில் வேண்டுமானாலும் நான் சமாளித்துக்கொள்வேன். நண்பர் சுப்பிரமணியம் போன்றவர்கள் சமாளிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சட்டமன்றம் மிக நீண்ட காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட சட்டமன்றம். இன்றைக்கு நாம் டில்லியில் இருக்கிற நாடாளுமன்றத்தைப் பார்க்கிறோம். அதன் தோற்றத்தைப் பார்த்தால் நமக்கே கூடப் பெருமையாக இருக்கிறது. அன்று இவ்வளவு அதிகமான அளவுக்கு நாடாளுமன்றக் கட்டிடத்திற்காகச் செலவு செய்து விட்டார்களே என்று கூடப் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு அதனுடைய தோற்றத்தைப் பார்க்கிற நேரத்தில், இந்திய நாட்டுக்கு, ஒரு குடியரசு நாட்டுக்கு அது பெருமை தருவதாக இருக்கிறது. அது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

அதேபோல் கர்நாடக மாநிலச் சட்டமன்றத்தின் தோற்றத்தைப் பார்க்கும்போது பெருமைக்குரியதாக இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தைப் பார்த்தால் சில நகராட்சிக் கவுன்சில் கூடம் மாதிரி தோற்றம் அளிக்கிறது. இதுபற்றி அரசு கவனித்து நல்ல எழுச்சிமிக்க தோற்றத்துடன், கவர்ச்சியாக, உறுப்பினர்கள் வசதியாக உட்கார்ந்து, வசதியாகப் பேசும் நிலையை உண்டாக்கும் வகையில் சட்டமன்றக் கட்டடத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒரு நூல் நிலையம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நூல் நிலையத்தை நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. புத்தகத்தை எடுத்து திருப்பிக் கொடுத்த பிறகும் ஏன் திருப்பிக் கொடுக்கவில்லை என்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். திருப்பித் தந்துவிட்டேன் என்று சொன்னாலும் மறுபடியும் நோட்டீஸ் வருகிறது. எந்தப் புத்தகத்தைக் கேட்டாலும் அவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார், இவர் எடுத்துக் கொண்டு போய்விட்டார் என்று செரல்கிறார்கள்.

நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், அது உறுப்பினர்களுக்குப் பயன் தருகிற வகையில் செயல்படவில்லை. மிகப் பெரிய பணிகளை ஏற்று பேசிக் கொண்டிக்கும் உறுப்பினர்களுக்கு ஒரு தகவலைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், உடனடி

யாகத் தகவலைத் தெரிந்து கொள்ள முடியாது. நூல் நிலையத்திற்குச் சென்று நாங்களே தேடி எடுப்பது என்றால் இரண்டு மூன்று நாட்கள் ஆகும். ஆகவே, அங்கு ஒரு ஆராய்ச்சிப் பிரிவை வைத்து உறுப்பினர்கள் எந்த நேரத்தில் எந்த நூலைக் கேட்டாலும், எந்த விவரத்தைக் கேட்டாலும் உடனே கொடுக்கக்கூடிய அளவுக்கு வழிவகை செய்யவேண்டு மென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–10).

அதேபோல், இன்றைக்கு பல உறுப்பினர்கள், உறுப்பினர் களுடைய நிலைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். **உறுப்பினர்** களுடைய நிலை, சம்பளத்தினுடைய நிலை, மற்ற வசதிகளைப் பார்க்கும்பொழுது நாம் உயர்ந்த இடத்திற்கு வந்திருக்கிறோம் என்று நாமெல்லாம் உணரமுடிகிறது, அப்படியிருந்தால் கூட இன்றைக்கு இருக்கிற சம்பள நிலையை நாம் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலிக்கிற நேரத்திலே வெளியிலே பேசுகின்றவர்கள், முதலிலே எங்களுக்குத் தர வேண்டுமென்று பேசுவதற்கு ஆள் இல்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்; ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களே பேசி அவர் களே எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்று சொல்வார்கள் என்ற பயம் இருக்கிறது.

ஆனால் தனித்தனியாக யாரைக் கேட்டாலும் நிச்சயமாகச் சொல்கிறார்கள், இது இன்றைக்கு இருக்கிற வாழ்க்கைக்குப் போதாது என்று. நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள் **கிறேன்**, வாழ்க்கையைப் பொறுத்தஅளவிலே, **சட்ட மன்ற** உறுப்பினரானதற்குப் பிறகு வாழ்க்கைகூட மாறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக என்னை எடுத்துக் கொண்டால் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போது 100 ரூபாய் 150 ரூபாய் இருந்தால் போதும் நான் ஓட்டிவிடுவேன் என்ற நிலைமைதான். ஆனால் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினரானதற்குப் பிறகு சூழ்நிலை மாறி யிருக்கிறது. அதற்கு வேண்டிய வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்; செய்து தரப்படாத நிலையிலேதான் யாராவது வருவார்களா என்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த இடத்திலேதான் தவறு ஆரம்பமாகிறது. அப்படி தவறு ஆரம்பம் ஆகக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாக ஆனதற்குப் பின்னாலே தான்—நான் எனக்கு இருக்கிற கஷ்டத்தைச் சொல்கிறேன்,— சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு முன்னாலேயே எனக்கு கும்பகோணத்திலே ஒரு வீடு இருக்கிறது. என்னுடைய அந்த பழைய வீட்டிலேயேதான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே 100 பேர்களை 200 பேர்களைப் பார்க்கவேண்டிய



நிலை இருக்கிறது, அவர்கள் வந்தால் அவர்களை உட்காரவைத்து மரியாதையாக அழைத்துப் பேசுவதற்குக்கூட வசதியில்லாமல் இருக்கிறது. ஆனால் வாக்குக் கேட்கப்போகிறபோது நாம் குடிசைகளிலேயும் மற்ற இடங்களிலேயும் குனிந்து போய்க் கேட்கிறோம், ஆனால் வாக்களித்தவர்கள் வந்தால் அவர்களை சட்டமன்ற உறுப்பினரானதற்கு பின்னாலே உட்காரவைத்துப் பேசமாட்டேன் என்கிறார்கள் என்ற குறை இருக்கிறது.

இந்த அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை பல்வேறு திட்டங்களுக்காகச் செலவிடுகிறபோது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் ஒரு அலுவலகம் வைத்து,—பெரிய வசதி படைத்தவர்கள் வேண்டுமென்றால் அவர்களுடைய மாளிகை களிலே அப்படிப்பட்ட அலுவலகங்களை ஏற்படுத்திப் பயன் படுத்திக்கொள்ளலாம்—ஆனால் என்னைப் போன்ற வசதியற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய முறையிலே ஒரு அலுவலகத்தை ஏற்படுத்தித் தரவேண்-டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம், அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அலுவலகத்தை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் அமைப்பதை ஒரு மூலதனச் செலவாக அரசு கருதி அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு மிகப் பெரிய குறை என்ன என்று சொன்னால் சட்டமன்றத்தைப் பற்றிப் பேசுகின்ற இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் அவர்களால் இங்கே வர இயலவில்லை, அவர்களைக் கேட்டால் அவர்களே சொல்வார்கள், உங்கள் சம்பளத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள், என் சம்பளத்தைப் பற்றிப் பேசுவதில்லை என்று. இந்தியாவிலே இருக்கிற பல்வேறு சட்டமன்றப் பேரவைத் தலைவர்களின் கணக்குகளை யெல்லாம் அவர்கள் எடுத்துப் பார்த்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவருக்குத் தான் குறைவாக இருக்கிறது, இந்தியாவிலே வேறு மாநிலங் களிலே உள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள் எல்லாம் பெறுகிற வசதிவாய்ப்புக்களெல்லாம் நம்முடைய அவைத் தலைவர் அவர்களுக்கும் இருக்கவேண்டும், அப்படி இருந்தால் தான் நல்ல முறையிலே அவர்களும் செயல்படமுடியும்.

அடுத்து, சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய நிலையைக் கவனித்தால் மிகமிகப் பரிதாபம். அவர் இன்னும் திருமண மாகாமல் இருக்கிறார். அவருக்கு இருக்கிற நிலையில் அவர் களுக்குச் சம்பளம் என்ன என்று நான் கேட்டதற்குப் பின்னாலே தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நாம் உறுப்பின ராகவே இருந்திருக்கலாம், பேரவைத் துணைத் தலைவராக

இருக்கத் தேவையில்லை என்று எண்ணக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. உறுப்பினர்களாகிய நமக்குக்கூட பரவாயில்லை, இங்கே பேசினாலும் பேசாவிட்டாலும் கையெழுத்துப் போட்டு விட்டால் போதும் படி 35 ரூபாய் கிடைத்துவிடுகிறது, ஆனால் அவர்களுக்கு அந்த 35 ரூபாய்கூட கிடையாது, அவருக்கு இருக்கிற சம்பளத்திலே அந்த சார்ஜ், இந்த சார்ஜ் எல்லாம் சேர்த்து போனதுபோக 250 ரூபாய்தான் மீதம் உள்ளது. இந்த நிலையில் அவர் தன்னுடைய செலவிற்காக அறந்தாங்கிக்கு கடிதம் எழுதி, அப்பா பணம் அனுப்பினால்தான் காரியங்கள் நடக்கும் என்ற நிலைமைதான் இருக்கிறது. அவர்கள் வேண்டுமானால் பர்ஸ்ட் கிளாஸில் அவர்மட்டும்தான் போகமுடியும், மனைவியை அழைத்துக் கொண்டு போகமுடியாத நிலைமைதான் இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : திருமணம் ஆகாதவர் என்று கூறிவிட்டு இப்பொழுது அவர் மனைவியோடு செல்ல முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறாரே ......

திரு. எஸ். ஆர். இராதா : நான் கூறும்போது அதை ஜாக்கிரதையாகக் கூறினேன். அதை நான் சொல்லும் பொழுது, அவர் விரைவில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார் என்ற நம்பிக்கையில்தான் தெரிவித்தேன். ஆனால் இளங்கோவன் அவர்கள், அவர் திருமணமே செய்துகொள்ளக் கூடாது என்று கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. எனவே, அவர் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னாலேயே இந்த வசதிகளைச் செய்து தர வேண்டுமென்பதுதான் என்னுடைய கவலையே தவிர வேறல்ல.

அதைப்போல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியைப்பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் தண்டபாணி எல்லாம் பேசினார்கள், அங்கேயுள்ள விடுதி எந்த நிலைமையிலே இருக்கிறது என்று இன்றைக்கு அது ஒரு பெரிய ஆராய்ச்சிக்குரிய விஷயமாக ஆகிவிட்டது. நாங்களெல்லாம் அந்த விடுதியில் இருப்பவர்கள் அந்த விடுதி இன்றைக்கு எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பது தெரியும். ஆனால் அந்த நிலையை மாற்றுவதற்கு நாம் நிச்சயமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அதைவிட நான் இன்னொன்றைச் சொல்வேன். சட்டமன்றக் கூட்டம் பிப்ரவரி மாதத்திலே ஆரம்பித்து ஏப்ரல் மாதத்திலே முடிகின்ற நிலைமையிருக்கிறது. இது குறைந்த நாட்கள்தான். இன்னும் அதிகமான நாட்கள் தேவைப்படுகிறது. ஆனால் இப்பொழுது அவசரம் அவசரமாக முடிக்க வேண்டுமென்ற காரணத்தைக்காட்டி, எதிர்கட்சியிலிருந்து



பேசுபவர்களுக்கும், ஆளுங்கட்சியிலிருந்து பேசுபவர்களுக்கும் தடை விதித்து, இரண்டுபேர் மூன்று பேர் பேசினால் போதும், முடிவெடுத்தால் போதும் என்ற நிலைமையில் இருக்கிறது.

ஆனால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இந்த அவையில் நல்ல முறையில் சரியான முறையில் முடிவு எடுக்க, எந்தப் பிரச்னையானாலும் நீண்ட நாள் ஆலோசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டால் நல்ல முறையில் இருக்கும். இன்றைக்குள்ள கஷ்டம் என்னவென்றால் நாங்களெல்லாம் அறைகளிலே தங்கியிருக்கிறோம். எத்தனை நாட்கள் அறைகளிலே தங்க முடியும் என்ற நிலையில் சில உறுப்பினர்கள் திடீர் திடீரென்று ஊர்களுக்குப் போய்விடுகிறார்கள். அப்படிப் போனவர்களைத் திரும்ப அழைப்பது கடினமாக இருக்கிறது. அதைப்பற்றிக் கேட்டால் பலபேர் கூறுகிறார்கள், இரண்டு மூன்று மாதங்கள் யாரய்யா உட்கார்ந்திருப்பார்கள், வேறு வேலையே கிடையாதா என்று சொல்கிறார்கள்.

இந்தக் கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்றால் இருக்கின்ற ஒரேயொரு வசதியைச் சொல்கிறேன். அது ஒரு பெரிய செலவு அல்ல, அது மூலதனச் செலவுதானே தவிர அந்தச் செலவு வீணாகப் போகின்ற செலவு அல்ல. எனவே, அதை மூலதனச் செலவாகக் கருதி, இன்றைக்கு உள்ள விடுதி என்ற நிலைமையை மாற்றி, அதை வீடாக மாற்றினால் பலபேர் வீட்டை விட்டு எங்கேயும் போகமாட்டார்கள், நிச்சயமாகச் சட்டமன்றத்திற்கு வந்து கலந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். இரண்டு மூன்று மாதங்கள் சட்டமன்றம் நடக்கிறது என்றால், அவர்கள் குடும்பத்தோடு இருக்கின்ற காரணத்தினால், மகிழ்ச்சியோடு அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். அந்த மகிழ்ச்சியோடு சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகின்ற நிலைமை வந்தால் நல்ல பலனுள்ள பல்வேறு யோசனைகள் சொல்லப்பட்டு, நல்ல பலனுள்ள பல்வேறு காரியங்களும் நடக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

அதேபோல, இன்றைக்கு எங்களுக்கு டெலிபோனுக்காக நூறு ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்த நூறு ரூபாயை வைத்துக்கொண்டு டெலிபோன் வைத்துக் கொள்வதைவிட, டெலிபோனை வைத்துக் கொள்ளாமல் இருப்பதே உத்தமம். தப்பித் தவறிக்கூட வைத்துக்கொள்ளக்கூடாது. தேர்தலில் ஜெயித்தவுடன் நான் தெரியாத்தனமாக டெலிபோன் வைத்துக் கொண்டது எவ்வளவு பெரிய தவறு என்பது இன்றைக்குத்தான் தெரிகிறது. டெலிபோன் வைத்துக்கொள்ளாதவரையில் இலாபம்தான். வைத்த பிறகு உள்ள கஷ்டம் என்னவென்றால், யாருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை, யார் வேண்டுமென்றாலும் பேசிக்கொள்ளலாம். மாதத்திற்கு 200 ரூபாய், 250 ரூபாய் என்று பில் கட்டும்போது சம்பளமே இதில்

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 2

போய்விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. எனவே, டெ
போனுக்குக் கொடுக்கப்படும் தொகையை அதிகப்படுத்
வதற்கு ஆலோசிக்க வேண்டுமென்று நான் பணிவோ
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுக்கு ரயில்வே கூப்பன்கள் கொடுத்திரு
கிறார்கள். அந்தக் கூப்பன்கள் சம்பந்தமாக இன்றைக்
மாற்றம் வரும் என்று நண்பர்கள் சொல்லிக்கொண்டிருக்
கிறார்கள். நானும் ஆவலோடு அதை எதிர்பார்த்துக் கொண்
டிருக்கிறேன். குடும்பத்தோடு போக வேண்டுமென்று மிகுந்
ஆசையோடு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஒ
நண்பர் சொன்னதாகக் கருதுகிறேன், 5,000 கிலோ மீட்ட
உறுப்பினர் வைத்துக்கொண்டு, பாக்கியுள்ள 5,000 கிலே
மீட்டரில் குடும்பத்தோடு போக ஏற்பாடு செய்ய வேண்டுமென்
சொன்னார்கள். ஆனால் எப்படி வரப்போகிறதோ தெரியவில்லை
குடும்பத்தோடு போகிறோமோ இல்லையா என்பது தெரியாது
ஆனால் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்
10,000 கிலோ மீட்டர் என்பது உறுப்பினர்களைப் பொறுத்
வரையில் சரியானது அல்ல என்பதை நான் பகிரங்கமாகவே
சொல்வேன். காரணம் என்னவென்றால், நான் இரண்டாவது
வகுப்பில் பயணம் செய்து பழக்கப்பட்டவன். இன்றைக்கு
என்னை முதல் வகுப்பிலே ஏற்றிவிட்டார்கள். வேறு வழி
யில்லை, ஏறியாக வேண்டும். ஏறிய பிறகு அதிலிருந்து இறங்கு
என்றால் அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. திரும்பவும்
இரண்டாவது வகுப்பிற்குப் போக வேண்டுமென்றால் ஏன்
இந்த முதல் வகுப்பிலே ஏறினோம் என்ற கவலை வந்து விடுகிறது.
எனவே, முதல் வகுப்பிற்குள்ள கட்டணத்தை காசாகக்
கொடுத்துவிட்டால்கூட வசதியாக இருக்கும். அதை விட்டு
பாஸைக் கொடுத்து, முதல் வகுப்பில் ஏறச் சொல்லி, 10,000
கிலோ மீட்டர் ஆகிவிட்டது கீழே இறங்கு என்று சொன்னால்
கஷ்டமாக இருக்கிறது. அதை மாற்றி 40,000 கிலோ மீட்டர்
50,000 கிலோ மீட்டர் என்று செல்வதற்கு இரண்டாம் வகுப்
பில் செல்வதற்காவது ஏற்பாடு செய்தால் நாங்கள் ரயிலில்
போய்க்கொண்டிருப்போம்.

பஸ்ஸில் போவதில் கஷ்டம் என்னவென்றால் நான்
வாராவாரம் விடுமுறையிலே என்னுடைய தொகுதிக்குப்
போகிறேன்.

[முற்பகல் 11-20]

சனிக்கிழமை போய்விட்டு, ஞாயிற்றுக்கிழமை தங்கி
விட்டு, திங்கட்கிழமை திரும்பி வரவேண்டுமென்றால், பஸ்ஸிலே
போய் வருவது நிச்சயமாகக் கடினமாக இருக்கிறது. காரணம்,
பஸ்ஸினுடைய நிலைமை வேறு, ரோடினுடைய நிலைமை வேறு.



978 மார்ச் 28] [திரு. எஸ். ஆர். இராதா]

இந்த இரண்டும் நம்மைப் பாதிக்கிறது. ரயிலிலே வந்தால்
அது கொஞ்சம் வசதியாக இருக்கிறது. ஆகவே, அதைக்
கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
என்னுடைய நண்பர், கொறடா அவர்கள் இருக்கிறார்கள்.
அவர்களுக்கு இருக்கிற மிகுந்த கவலை என்னவென்றால், அவ
ருக்கு ஒரு கார் கொடுத்திருக்கிறார்கள். வசதியான கார்.
அவருக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால், ஒரு நாளைக்கு
3 லிட்டர் பெட்ரோலுக்கு மேல் உபயோகிக்கக்கூடாது என்ற
கட்டுப்பாடு இருக்கிறது. அங்கே இருந்து இங்கே வருவதற்
கும், இங்கே இருந்து அங்கே போவதற்கும் அந்த 3 லிட்டர்
பெட்ரோல் சரியாகப் போய்விடும். அதற்குப் பின்னால்
எங்காவது போக வேண்டுமென்றால் * * * வேண்டுமென்று
தான் அவர் போவார். அதைக் கவனிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி</u> : * * * தான் ஓட்டு
கார் ஓட்டுவார்கள், யார் வரவேண்டும்? நான் வர
வார்கள் என்று சொன்னார்களே, அங்கத்தினர்கள் வரவேண்டுமா ?
வேண்டுமா, அல்லது மற்ற

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : நான் கூறியது, அவருடைய
வேலைக்கு வந்தால், அவர்தான் அழைத்துப் போக வேண்டும்.
திரு. இராமசாமி அவர்கள் வருவதே இல்லை. காரில் 3 லிட்டர்
வந்து போவதற்கே சரியாகப் போவதால், வேலையாக வந்தால்,
அவர் அழைத்துக்கொண்டு போவார்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : * * * என்ற அந்த வாக்கி
யம் குறிப்பேட்டில் வருவது சரியல்ல. அதை நீங்கள் குறிப்
பேட்டிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே.
சாதிக் பாட்சா)</u> : *என்ற அந்த வார்த்தையை குறிப்பேட்டி
லிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : அதற்கடுத்து, இன்றைக்கு
நம்முடைய அமைச்சர்களுக்கு இருக்கிற வசதியைப் பற்றி
நான் சொல்லியாக வேண்டும். அவர்களுக்கு நிறைய அதி

---

* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

காரம் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், [illegible]களைப் பொறுத்தவரை, நமக்கேகூட கவலையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள், நீங்கள் உட்கார்ந்தால் ரூ. 35, நாங்கள் நாளெல்லாம் இந்த அவையிலும், மேலவையிலும் உட்காருகிறோம், எங்களுக்கு பணம் கிடையாது என்று சொல்கிறார்கள். எனவே, அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும். அதிகாரம் நிறைய இருக்கிறது. அதிகாரத்தை எவ்வளவுதான் பயன்படுத்தினாலும், அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் என்ன என்பதை இந்த அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிற காருக்கு பெட்ரோல் அளவு ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். 10 லிட்டர் என்று சொல்லப்படுகிறது (குறுக்கீடு), 8 லிட்டர் என்று சொல்லப்படுகிறது. அவர்களையெல்லாம் அளவுகோலாக வைத்துக் கொள்ளக் கூடாது. அமைச்சர்களுக்கு எவ்வளவு பெரிய அதிகாரங்களைக் கொடுத்து எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்ய அதிகாரம் கொடுத்திருக்கிறோம். இந்த நேரத்திலே, 8 லிட்டரை பார்த்துக் கொண்டிருப்பது என்று சொன்னால், அவர்களுடைய வேலையே ஓடாது. அந்த முறையை எடுத்துவிட்டு, அமைச்சர்கள் என்ற பெரிய பொறுப்பு கொடுத்திருக்கிற நேரத்தில்—அவர்கள் பெரிய செலவு செய்யப் போவதில்லை—அப்படி செலவு செய்தாலும், நிச்சயமாக சட்டமன்றத்திலே கேட்டுவிடுவார்கள். ஆகவே, அவர்களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. எனவே, அதை மாற்ற வேண்டுமென்று நான் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தேர்தலைப் பற்றிய மானியம் வந்திருக்கிறது. விரைவிலே நகராட்சி, ஊராட்சி தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. அந்தத் தேர்தல்கள் சிறப்பாக நடைபெறப்போகிறது என்பதை நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் தேர்தல்கள் மிகுந்த சிறப்பாக நடப்பதற்கான வழி வகைகளோடு நடத்தப்பட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நேரடித் தேர்தல் வந்தால் [illegible] தானே எந்த அளவு மக்களாலே வரவேற்கப்படுகிறது என்பதையறிந்து, எந்த அளவு வாக்களிக்க வேண்டுமென்று மக்களுக்குத் தெரிவித்து அந்தத் தேர்தலை நடத்த வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல், தலைமையிடத்துப் பணியாளர்களைப் பற்றி இதிலே வந்திருக்கிறது. இந்தத் தலைமைச் செயலகத்திலே யிருக்கிற பணியாளர்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மிகுந்த பாராட்டுதலுக்குரியவர்கள். தமிழ் நாட்டிலே நெருக்கடி வந்த நேரத்திலே, என்.ஜி.ஓ.-க்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்ட நேரத்திலே, பல்வேறு கஷ்ட நஷ்டங்களுக்கிடையே இந்தத் தலைமைச் செயலகப் பணியாளர்கள் பணியாற்றி யதை நாம் பாராட்டியாக வேண்டும். அவர்களுக்கென்று பிரச்சினைகள் வருகின்ற நேரத்திலே, இந்த அரசு பரிசீலித்து, அவர்களுக்கென நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. என். வரதராஜன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் துறை இதர மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களை முன் வைக்கிறேன்.

சட்டசபைத் துறை என்பது அரசுத் துறையிலே ஒரு முக்கிய மான துறையாகக் கருதப்படுகிறது. இன்று அது கூடும்படியான நாட்கள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனாலே மக்களுடைய பிரச்சினையைப் பற்றி அதிகமாக விவாதிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. மார்ச் 30-ஆம் தேதி நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றுவதற்கு ஒரே ஓட்டமாக சட்டசபையை ஓட்ட வேண்டிய நிலையில் இருக்கிறது, ஓட்டப் பந்தயத்திலே ஓடுவதைப்போல ஓட வேண்டியிருக்கிறது. அதை மாற்றி ஓராண்டிலே 3, 4 முறை கூடவும், அதிகமான நாட்கள் கூடவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏதோ காலத்திலே எற்படுத்திய சட்டசபை கூடும் நாட்கள் குறைந்ததாக இருந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது.

தேசத்திலே கடுமையான பொருளாதார நெருக்கடி தோன்றி மக்கள் இயக்கங்களில் ஈடுபடும் காலம் மற்றும் பல்வேறு பிரச் சினைகள், சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது அவற்றையெல்லாம் பேசும்படியான கூடமாக, சபையாக இது இருந்து வளரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பேரவை இருக்கிற கீழ்ப்பகுதி, வராந்தா முழுவதுமே சட்டசபைத் துறைக்கு ஒதுக்க வேண்டும். எந்தத் துறைக்குச் சென்றாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்காரக் கூட இடமில்லாத சூழ்நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே. கீழ் வராந்தா முழுவதும் சட்டசபைத் துறைக்கே ஒதுக்கி அலுவலகத்தையும் விஸ்தரித்து வேலையும் முறையாக நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 28

ஒலிபெருக்கி ஏற்பாடு பற்றி நான் அதிகமாகச்சொல்ல விரும்பவில்லை. நவீன காலத்தில் இப்படிப்பட்ட ஒலிபெருக்கிகளைத்தான் உபயோகப்படுத்த வேண்டுமா என்பது கேள்வி. இந்த ஒலிபெருக்கி கூட தேவையில்லை. நாங்கள் பேசும்போதே கிரகித்துக்கொள்ளக்கூடிய நவீன சாதனங்கள் எல்லாம் இருக்கும்போது, சுப்பிரமணியமும் வரதராஜனைபோன்ற உயரமானவர்கள் குனிந்து கொண்டு பேசுகின்ற இந்த நிலைமை ஏன் என்று தெரியவில்லை. ஆகவே உடனடியாக இதை மாற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றக் கட்சிகளின் அலுவலகங்களுக்கு தொலைபேசி ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும், எங்கள் அலுவலக ஊழியர்களுக்கு பஸ்பாஸ் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்வது, அமைச்சர்கள் பல துறைகளை நிர்வகித்து வருகிறார்கள். ஒரு மானியக் கோரிக்கை விவாதம் ஆண்டுக்கு ஒரு முறைதான் வருகிறது. மக்களுடைய குறைகளைப் பற்றி ஒரு முறைதான் பேசமுடியும். ஒரு மணி நேரத்தில் மக்களுடைய கோரிக்கைகளைச் செம்மையாக விவாதித்து விட முடியும் என்று நினைத்தால் அது சரியல்ல. ஆகவே, திரும்பத் திரும்ப வற்புறுத்தவேண்டியிருக்கிறது. மத்திய அரசில் இருப்பதைப் போல ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும்.

அடுத்து சொல்லுவது, பெட்டிஷன் கமிட்டி என்பது எல்லாத் தரப்பிலும் வற்புறுத்துகிறோம். நாம் அமைக்கும் குழுவிலே பெட்டிஷன் குழு அனைத்து முக்கியமான குழுவாக இருக்க வேண்டும். இது அடுத்த ஆண்டிலே இருந்து நடைமுறைக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ-க்கள் எழுதிக்கொடுத்தால் பதில் அனுப்புவது கிடையாது. காரியங்களும் சரியாக நடப்பது கிடையாது. எனவே, நான் விரும்புவது, 30 நாட்களுக்குள் அவர்களுக்கு இலாகாவினர் பதில் தர வேண்டும். ஏன் அந்தக் காரியம் நடக்கவில்லை என்பதற்குக் காரணத்தைத் தர வேண்டும். இது மிகவும் முக்கியமான பிரச்சினை.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, இங்கே சுற்றி நின்று கொண்டிருக்கும் காவல் துறையினர், வெள்ளை உடை அணிந்து நிற்கும் அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு ஜதை உடைதான் கொடுக்கிறார்கள். அமைச்சர்களும் நாமும் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் நின்று கொண்டே இருக்கிறார்கள். மிகவும் கடின உழைப்பைத் தருகிறார்கள், அவர்களுக்கு 2 ஜதை உடைகள் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் பாட்டா கொடுக்கிறார்கள். அவர்களுக்கு 5 ரூபாய் கொடுத்தால் என்ன மோசம் போய்விட்டது என்பதை யோசிக்கவேண்டும்.



1978 மார்ச் 28] [திரு. என். வரதராஜன்]

அது மட்டுமல்ல, பூட் ஒன்றுதான் கொடுக்கிறார்கள், போலீஸ் ஸ்டேஷனிலே கொடுத்த பூட்தான் போடுகிறார்கள். நாம் அவர்களுக்கு தனியாக பூட் கொடுக்க வேண்டும்.

அடுத்து, சட்டமன்றத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் விடுதியிலே பணியாற்றுகிறவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியும் தற்காலிகப் பணியாளர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அந்தப் பணியாளர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய சம்பளத்தைக் கூட 6 வாரம் 8 வாரம் கழித்துக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்.

சட்டமன்ற விடுதி என்று ஒரு பழைய விடுதி இருக்கிறது. அண்ணா சாலைக்கு அருகில் இருக்கிறது. நான் பழைய இந்திப் படத்தில் மதுமதியில் பார்த்த போட்டுமா சத்திரத்தைப் போல இருக்கிறது. ஏன் இப்படி நடக்கிறார்கள் என்றே எனக்குப் புரியவில்லை. கழிப்பிடங்கள், குளியலறைகள், மோசமாக இருக்கின்றன. லைட்டுகள் எரிவதில்லை. இருட்டறை போல் இருக்கின்றன. அதை உடனடியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சட்டமன்ற உறுப்பினர்களையே கேவலப் படுத்துவதைப்போல இருக்கிறது. அதை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

அடுத்து, நூலகம் பற்றி சொல்ல விரும்புகிறேன். அந்த நூலகம் ஒரு இருட்டறை போல் இருக்கிறது. அது ஒரு டன்ஜன். அதைச் சரியான இடத்தில் மாற்றி அமைத்து, அந்த நூலகத்தில் எல்லா நூல்களையும் வைக்க வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிக்கைகளான தீக்கதிர், செம்மலர், பீப்பிள்ஸ் டெமாக்கிரசி போன்ற ஏடுகளையும் மற்ற கட்சிகளின் ஏடுகளையும் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பில்ஸ் செக்ஷன் இருக்கிறது. அதிலே பணியாற்றுகிறவர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகிறார்கள். அங்கே குறைந்த நபர்களை வைத்துக்கொண்டு பணியாற்றுகிறார்கள். ஆகவே, கூடுதலான நபர்களை வைத்துக்கொண்டு அந்த செக்ஷன் இயங்க வேண்டும். அதிகமான நேரம் வேலை செய்தால் அவர்களுக்கு ஓவர்டைம் வேறு கொடுக்க வேண்டும். 24 மணி நேரமும் அவர்களை மாடுகளைப்போல் உழைக்கச்செய்வது வரவேற்கத்தக்கது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் சலுகைபற்றி பேசுகிற நேரத்தில், சம்பளத்தையும், படியையும் உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கை எந்தத் தரப்பில்

இருந்து வந்தாலும், நாம் பொதுமக்கள் பிரதிநிதிகளாக வந்து இருக்கிறோம். கூடுதலான கஷ்டங்களை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. நாங்கள் எல்லாம் எங்கள் கட்சியின் முழு நேர ஊழியர்கள். இங்கே கொடுக்கும் சம்பளத்தில் பாதி கட்சிக்குக் கொடுத்து வருகிறோம். நமது மக்களின் மோசமான வாழ்க்கை நிலைகளை மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, சம்பளம் அதிகம் கேட்பதை விட வேறுவிதமான சலுகைகளை, பரிந்துரைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் ஜனங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு கொடுத்து இருக்கும் டெலிபோன் வசதி போதுமானதாக இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒரு உறுப்பினருக்கு அலுவலகத்திற்கு ஒன்று, வீட்டிற்கு ஒன்று என்று வசதி செய்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில், ஒரு டெலிபோன் வசதியாவது செய்து தர வேண்டும். இப்போது தரப்படும் ரூ. 100 தேவையில்லை, இலவசமாக டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும்தான் வைத்திய வசதி ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களுக்கு வைத்திய வசதி இல்லை. அதைச் செய்து கொடுக்க வேண்டும். ரயில்வேக்கு இப்போது கூப்பன் கொடுக்கிறார்கள். அது தேவையில்லை. மத்திய அரசோடு பேசி ஏதாவது பாஸ் கொடுத்தால் இன்னும் உபயோகமாக இருக்கும். அதை வைத்துக் கொண்டு அவர்கள் மக்களோடு அதிகமாக தொடர்பு கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சரின் சுற்றுப்பயணங்கள் பயன் உள்ள முறையில் அமைய வேண்டும். அவர்கள் எந்தத் தொகுதியில் பயணம் புரிகிறார்களோ அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு வாரத்திற்கு முன்பே சுற்றுப்பயண விவரம் அனுப்பப்பட வேண்டும். அவர்கள் சில நேரங்களில் தலைமை அலுவலகத்தில் இருக்கிறார்கள், சில நேரங்களில் சுற்றுப்பயணத்தில் இருக்கிறார்கள் சென்னை வந்து பார்க்க முடியாமல் திரும்புகிறோம், அவர்களின் சுற்றுப்பயணக் குறிப்பு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்க வேண்டும்; முதலமைச்சர் உட்பட அமைச்சர்கள் தலைமைச் செயலகத்தில் ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் துரை முருகன் அவர்கள் ஒரு கோரிக்கையைச் சொன்னார்கள். அவர்களுடைய தொகுதிக்கு ஒரு அமைச்சர் வந்த நேரத்தில் அங்கே சர்க்கார் விழா நடந்த நேரத்தில் அந்த உறுப்பினர் பெயர் போடப்படவில்லை, அழைக்கப்படவும் இல்லை என்று



சொன்னார்கள். அப்படிப்பட்ட குறை இனிமேல் வரக்கூடாது. அது எந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் ஒரு விழாவிற்கு அழைக்கப்படவில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்தார்கள். நான் சென்ற ஞாயிற்றுக்கிழமை அவர்களுடைய தொகுதிக்குப் போய் இருந்தேன். அவர் பெயரும் அச்சிடப்பட்டு இருந்தது. திறப்பு விழா கல்லிலும் போடப்பட்டு இருந்தது. சட்டமன்ற உறுப்பினர் பெயர் அறிவித்து இருந்தும் கலந்து கொள்ளவில்லை என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

<u>திரு. என். வரதராஜன் :</u> நான் சொன்னது எல்லாம் ஒரு குறைந்த பட்ச நியதியை நாம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான். நான் அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொன்ன காரணம் அப்படிப்பட்ட கருத்து இனி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். துரை முருகன் குற்றச்சாட்டு சொன்ன அந்த நேரத்தில் ஆளும் கட்சித் தரப்பில் இருந்து சரியான பதில் வராததால் இப்போது நான் தெரிவித்தேன்.

இந்தத் தலைமைச் செயலகத்தில் நம்முடைய அமைச்சர்களைச் சந்திக்க வருபவர்கள் தங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் பல தூதுக்குழுக்களை அழைத்து வந்து பேச வேண்டியிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். சட்டசபை நடக்கும் நேரத்தில் கூட அந்தச் சங்கடங்கள் இருக்கின்றன. அந்த தூதுக்குழுக்கள் சில நேரங்களில் இரண்டு நாட்கள் கூட காத்து இருக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, எல்லா அமைச்சர்களும் ஒரு நாள் சில மணி நேரம் தூதுக்குழுக்களை சந்திக்க வாய்ப்பளிக்கும் முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்துச் சொல்ல வேண்டுமானால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடத்துகிறோம். அந்தக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இவர்கள் எல்லாம் இடம் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அந்த மன்றக் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளைச் சரியாக அமுல்படுத்துவதில்லை. அதைப் பார்க்கும்போது ஏதோ பெயரளவுக்கு 'நாம்கே வாஸ்தே' என்று சொல்வார்களே அதேமாதிரி நடக்கிறது. இந்த முறை மாற வேண்டும். அங்கே எடுக்கின்ற தீர்மானங்களுக்கு அல்லது முடிவுகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அவைகளை முறையாகப் பரிசீலித்து,

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 28

நடவடிக்கை எடுத்து, உடனடியாக இங்கிருந்து பதில் அனுப்பப்படவேண்டும். அங்கிருந்து அனுப்பிவைக்கப்படுகின்ற தீர்மானங்களை வாங்கி வைத்துக்கொண்டு இங்கே இருப்பவர்கள் ஒரு தர்பார் மாதிரி செயல்படக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் புயல் அடித்தது. பெரு வெள்ளம் வந்தது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவருடன் நானும் சென்றிருந்தேன். பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இங்கே இருந்து தினசரி போன் வருகிறது. குடிசைவாழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிறபோது குடிசைக்கு 40 கொடு, 50 கொடு, 60 கொடு என்று போன் வருகிறது. இப்படி அடிக்கடி முடிவுகளை மாற்றிக்கொண்டிருந்தால், கீழே செயல்படுகின்ற அதிகாரிகள் எப்படி ஒழுங்காகச் செயல்பட முடியும்? உதவி பெறுகின்ற மக்கள் எப்படி பாதிக்கப்படுவார்கள்? இதை யோசிக்க வேண்டும். இப்படிப்பட்ட மாறுபட்ட முடிவுகளை ஏற்றுச் செயல்படும்போது அங்கே பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, மக்களுடைய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து செயல்படும்போது போடுகின்ற உத்தரவுகள் ஒழுங்கானவைகளாக அமைய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா தேர்தல் வருகிறது என்று உறுதியாகச் சொன்னார்கள். நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு விரைவிலே தேர்தலை நடத்தவேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். இந்த மன்றத்தின் கூட்டம் முடிவடைவதற்குள் தேர்தல் நடத்துவதற்கான தேதி தெரிந்துவிட்டால் நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைவோம். தேர்தல் இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாமல் நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் சிறப்பாக செயலாற்ற முடியவில்லை.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இப்போது சர்க்கார் ஒரு குழு அமைக்க ஆணை பிறப்பித்திருக்கிறது. ஊராட்சி மன்றத்திற்கும் நகராட்சி மன்றத்திற்கும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தக் குழு அமைப்பது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு என்ன தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கலெக்டர் என்ன சொல்கிறார் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்—இவைகளைச் சேர்ந்த யாரையாவது என் இஷ்டத்திற்கு நியமிப்பேன் என்கிறார். அந்த முறை கூடாது. நான் ஒரு மாவட்டச் செயலாளர். எங்கள் கட்சியில் யாரை நியமித்தால் சிறப்பாக காரி



1978 மார்ச் 28] [டாக்டர் கே. சமரசம்]

யங்கள் நடக்கும் என்பது எனக்குத் தெரியும். அதைப்போல ஒவ்வொரு கட்சியிலும் யாரை நியமித்தால் நல்லது என்பது அந்தந்தக் கட்சியினருக்குத்தான் தெரியும். எனவே, அந்தந்த கட்சியிலிருந்து யாரை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறோமோ அவர்களை நியமிக்கவேண்டும். அந்த வகையிலே உத்தரவை திருத்தி, குழுவை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, சட்டமன்றம், மாநில ஆட்சித் தலைவர், தலைமையிடத்துப் பணியாளர்கள் ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகள்மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

சட்டமன்றப் பேச்சு என்பது சாசனமாக மாறுகிறது. மக்களுக்குத் தேவையானவற்றை விவாதித்து, நிறைவேற்றுவது இந்தச் சட்டமன்றம். 'சிகப்பு' என்பது ஒரு அபாயத்தைத் தெரிவிக்கிறது. சிகப்பு விளக்குப் பகுதி நாட்டிலே ஒரு அபாயமான பகுதி. சிகப்பு விளக்கைக் காட்டினால் ஓடுகின்ற இரயில் நிற்கும். ஆனால் இங்கே சிகப்பு விளக்கு எரிந்தால்தான் செய்தி செல்கிறது, காரியமே நடக்கிறது.

தமிழ்நாட்டிலே இருக்கிற இந்தச் சட்டமன்றம் ஒரு வள்ளுவர் மன்றமாக இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். இருபதாம் நூற்றாண்டின் வள்ளுவராக இன்றைய முதல்வரவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு முகாந்திரம் ஏராளமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இந்த மன்றத்தில் பேசுகின்ற ஒவ்வொரு பேச்சும் சாசனமாக மாறக்கூடிய நேரத்தில் நாம் பல பல காரியங்களை அணுகாமல் அகலாமல் தீ காய்வது என்று வள்ளுவர் சொன்னதைப்போல பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேவை என்பது வேறு, ஆசை என்பது வேறு. ஆசைகள் நிராகரிக்கப்படலாம். ஆனால் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். நாம் சம்பளம் பெறுகிறோம். டிஏ (T.A) பெறுகிறோம். டி.ஏ. (D.A.) பெறுகிறோம். இன்னும் பிற வசதிகள் பெறுகிறோம். இவையெல்லாம் நாம் செய்யக்கூடிய தியாகத்திற்குப் போதுமானவையா என்றால் இல்லை. ஒரு விவசாயி ஏர் ஓட்டுகிறான், கரும்பு நடுகிறான், நீர் பாய்ச்சுகிறான், களை எடுக்கிறான், கரும்பு வெட்டுகிறான், பாரம் ஏற்றுகிறான், கொண்டு செல்கிறான், ஆலையிலே சேர்க்கிறான். சர்க்கரை எடுக்கிறார்கள். அதற்கு ஒரு விலை நிர்ணயிக்கிறார்கள். அந்த விலை அவன் செய்கின்ற வேலைக்கு அவனுடைய உழைப்புக்கு நிர்ணயிக்கப்படுகிறதே தவிர அந்த சர்க்கரைக்கு, கரும்பு இனிப்புக்கு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிப்புக்கு யாரும் விலையை நிர்ணயிக்க முடியாது. அதைப்போல சட்டமன்றத்திலே பணியாளர்கள்

இருக்கிறார்கள்; அவர்களுக்கு யாரும் சம்பளம் நிர்ணயிக்க முடியாது. ஆனால் செய்யக்கூடிய வேலைக்கு ஊதியம் கொடுக்கின்ற கட்டாயம் அரசுக்கு இருக்கிறது. இதை அரசும் உணர்ந்திருக்கிறது; மக்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

ஆனால் செய்யக் கூடிய வேலைகளை அதாவது தேவையானவற்றைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் அரசுக்கும் இருக்கிறது. அதை மக்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று சொல்கிறோம். ஒழுக்கம் இருந்தால்தான் நாட்டிலேயுள்ள மக்களின் கருத்துக்களை நன்றாக உணரமுடியும். ஆனால் உடல் நன்றாக இருந்தால்தான் ஒழுக்கமும் நன்றாக அமையும். ஏனென்றால் உடல் கூறுகளின் அடிப்படையில்தான் மனமும் அமையும் என்று சொல்லப்படுகிறது. உடல் நன்றாக இருந்தால்தான் நல்ல நெறி முறைகளைக் கடைப்பிடிக்கும் தன்மை ஏற்படும். ஆகவே, அந்த முறையிலே நம்முடைய உறுப்பினர் விடுதியில் ஒரு விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் நல்ல முறையிலே உடலைப் பேணுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, விளையாட்டு அரங்கம் கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் என்று கொடுக்கிறார்கள். அது உறுப்பினர்களுக்கு மட்டும் தான் கொடுக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தனி மனிதர்கள் அல்ல. சட்டமன்றம் என்பது பலர் சேர்ந்திருக்கும் ஒன்று. அதுபோன்றே சட்டமன்ற உறுப்பினர்களும் தனி மனிதர்கள் அல்ல. அவர்கள் எங்கே போனாலும் யாரோ ஒருவர், இருவர் உடன்செல்கின்ற சூழ்நிலை இருப்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். பொதுத்துறை என்றாலே பலர் ஒன்றாக இணைவது என்றுதான் பொருள். இப்படி இருக்கின்ற நேரத்தில் உறுப்பினர் எங்காவது செல்லுகின்ற நேரத்தில் யாராவது அவருடன் இருக்கலாம். மனைவியாக இருக்கலாம். நண்பராக இருக்கலாம். அட்டென்டராக இருக்கலாம், அல்லது வேறு உதவியாளராக இருக்கலாம். ஆகவே அதற்குத் தகுந்த வகையில் அந்த ரெயில்வே பாஸினுடைய விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பேருந்து வண்டியிலே செல்வதற்காக வழங்கப்படுகின்ற பாஸிலேயும் இன்னொருவர் செல்வதற்கேற்ற வகையில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கலையினைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கலையினை எல்லோரும் போற்றக்கூடிய தன்மை இருக்கிறது. கலையினை நம்பி வாழ்கின்றவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே



அதிகமானவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். முன்பெல்லாம் அரசியல் பிரச்சாரங்கள் கூட கலை மூலமாக நடந்திருக்கின்றன. ஆகவே, கலையினை நல்ல முறையில் வளர்ப்பதற்காக ஒரு கலைக் குழுவை அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட குழு அமைக்க முன்வந்தால் இங்கே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அதனை ஆதரிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, உறுப்பினர் விடுதியிலே உணவு விடுதி இருக்கிறது. என்ன பாவம் செய்தோமோ இங்கே வந்து தங்குவதற்கு என்று எண்ணக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே உணவு நன்றாக இல்லை. இது எல்லோருடைய ஒருமித்த கருத்து. ஆகவே, அங்கே அதை நடத்துகின்ற ஆளை மாற்றி வேறு ஒருவருக்குக் கொடுத்தோ அல்லது அரசே ஏற்று நடத்தியோ நல்ல முறையில் உணவு வழங்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அங்கே டெலிபோன் இருக்கிறதே தவிர டெலிபோன் செய்ய முடியவில்லை. ஆகவே அங்கு தகுந்த முறையில் இந்த டெலிபோன் இணைப்புகளை நன்கு விரிவு படுத்தி உறுப்பினர்கள் தடையின்றி பயன்படுத்துகின்ற வகையில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதி அவர்களது இருப்பிடத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அப்படி டெலிபோன் வசதி செய்து கொள்ளவேண்டுமென்றால் 2,000 ரூபாய் அல்ல 1,500 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. உறுப்பினர்கள் அவ்வாறு கொடுக்க வேண்டியதில்லை என்ற முறையில் அதனை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, "சட்டமன்றப் பேரவை" என்று இருக்கிறது. தமிழ் என்று சொல்கிறோம். பேரவை என்று சொன்னாலே தமிழ்தான். மன்றம் என்பது தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, சட்டப்பேரவை என்று இருந்தாலே போதும், ஆகவே, அப்படி மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொரடா என்று இருக்கிறது. அதற்கு நல்ல தமிழ் வார்த்தையைக் கண்டுபிடித்துப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 27 ஆண்டுகளுக்கு முன்பே இந்திய அரசியல் சட்டத்தை தமிழில் மாற்றியமைப்பதற்கு மத்திய அரசு மானியத்தை வழங்கி இருக்கிறது. அந்த மானியத் தொகையினை நல்ல

முறையில் பயன்படுத்தி நல்ல சொற்களை அமைத்துத் தருகின்ற அறிஞர் பெருமக்களைக் கொண்டு நல்ல முறையில் அது உருவாக்கபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறை, சட்ட மொழி ஆணைக்குழு, மொழி பெயர்ப்புத் துறை இப்படி மூன்று வகையான அமைப்புக்கள் இருக்கின்றன. இந்தத் துறைகளிலே போட்டிருக்கக்கூடிய அதிகாரிகள் மூன்று பேரும் உயர் மட்ட அதிகாரிகள். தமிழகத்திலேயே அதிகமாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் சுத்தமாகத் தமிழ் தெரியுமா என்பது தெரியவில்லை. ஆகவே, அந்த மூன்றையும் ஒன்றாக இணைத்து அதற்கு ஒரே அதிகாரியைப் போட்டு மற்றும் நல்ல தமிழ் தெரிந்தவர்களையும் அந்தக் குழுவிலே போட்டு நல்ல தமிழிலே சட்டமன்ற மற்றும் ஆணைச் சொற்கள் அனைத்தும் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் சட்டப் பேரவைச் செயலாளர் மற்றும் ஆறு பேர்களைக் கொண்ட ஒரு குழு, மு.வ. உட்பட ஒரு காலத்தில் போடப்பட்டிருந்தது. அது மத்தியில் நீக்கப்பட்டுவிட்டது என்று கருதுகிறேன். இந்த நிலை நீடித்திருப்பது நியாயமற்றதாகும். ஆகவே, அதை மாற்றியமைத்து நல்லமுறையில் அந்தத் தமிழ்த் துறையினை விரிவுபடுத்தி தமிழகத்தில் தமிழ் நல்ல முறையில் பயன்படக்கூடிய வகையில் இந்த அரசு கவனம் எடுத்து பரிசீலனை செய்ய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தி மற்றும் விளம்பரத் துறை என்று போடப்பட்டிருக்கிறது. செய்தி-விளம்பரத் துறை என்று இருந்தாலே போதும். இப்படி பலப்பல காரியங்கள் இருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து எடுத்துச் சொல்ல நேரமில்லை. ஆகவே, இந்நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சி அல்லது மாநில ஆட்சி என்று சொல்லுகிறபோது ஆட்சி செய்வதற்குச் சட்டங்கள் தேவை. ஆனால், சட்டமே ஆட்சியாக இருக்கக்கூடாது. இதுதான் மக்கள் ஆட்சி. ஆட்சி செய்வதற்கு சட்டம் தேவையே தவிர, சட்டம் ஆட்சி செய்வதற்கு ஒரு பாதுகாப்பாக இருக்க வேண்டுமே தவிர, தேவையான சமயத்தில் பயன்படுத்திக்கொள்ள சட்டம் இருக்க வேண்டுமே தவிர, நடைமுறையில் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஒரு ஆட்சி இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பலப்பல பகுதிகளில் அந்த நிலைமைகள் இருக்கின்றன.

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களாக தமிழ் தெரிந்தவர்களைப் போடவேண்டும். தமிழில் சிந்திக்கக்கூடிய அறிவாற்றலற்ற தமிழ் முழுமையாகத் தெரியாத பலர் இருப்பது வேதனைக்குரிய



ஒருவிஷயமாகும். ஆகவே, அந்நிலையை மாற்றியமைத்து நல்ல தமிழ் தெரிந்தவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகவும், மாவட்டக் கண்காணிப்பாளர்களாகவும் போட்டு அந்தப் பகுதியில் உள்ள மக்களோடு உறவாடி, அவர்கள் கூறுகிற கருத்துக்களைப் புரிந்து கொண்டு ஆட்சி நடத்தக்கூடியவர்களைப் போட வேண்டும் என்று நான் இந்தச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மனுஷனை மனுஷன் சாப்பிடுகிறான்டா தம்பிப் பயலே, அது மாறுவதெப்போ, தீருவதெப்போ நம்ம கவலை. உயர் அதிகாரிகள் ,கீழ் அதிகாரிகள் மேல் பல குற்றங்குறைகளை எழுதி வைத்து விடுகிறார்கள், அவர்கள் பேச்சுக்கு கட்டுப்படவில்லை என்பதால். விருப்பு வெறுப்பு காரணமாக கீழ்மட்ட அதிகாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருப்பதை நீக்கக் கூடிய முறையில் மக்கள் குழு அமைப்பது நிச்சயமாகத் தேவை. நாம் ஒரு அதிகாரி தவறு செய்கிறார் என்று சுட்டிக்காட்டினால் அதை அவரது உயர் அதிகாரிக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் அவர்களது மேல் அதிகாரிக்கு அனுப்புகிறார். இப்படி அந்த வரிசையில் போகிறது. கீழ் இருப்பவர்களிடம் இப்படி எழுது என்று சொல்லி எழுதி வாங்கி இது சரியில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இது தவறு, இது நீக்கப்பட வேண்டும்.

ஆகவே, மக்கள் கண்காணிப்புக்குழு நிச்சயமாக அமைய வேண்டும். அந்த மக்கள் குழு என்ன சொல்கிறது, அதிகாரிகள் குழு என்ன சொல்கிறது என்பதைப்பரிசிலனை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு குழு அமைத்தால்தான் நியாயமான, உண்மையான, நல்ல முறையில் ஆட்சி தொடருகிற வகையில், பொதுமக்களும் உண்மையில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறியக்கூடிய அளவில் அமையும். இடைக்காலத்தில் பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன. அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளக்கூடிய வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். தொழில் கோர்ட் இருக்கிறது, சிவில் கோர்ட் இருக்கிறது. அதே போல் இது ஒரு கோர்ட்டாக இருக்க வேண்டிய அவசியமில்லை. பிரச்சனைகளுக்கு முடிவு கட்டக்கூடிய கருத்தை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில், வேலை நேரங்களில் அரசாங்க அதிகாரிகள் எந்தக் கட்சிப் பத்திரிகையையும் பயன்படுத்தக்கூடாது. அரசாங்க அதிகாரிகள் அவர்களுடைய பணியைச் செய்ய வேண்டும். அரசியல் பத்திரிகைகள், மற்றப் பத்திரிகைகளை அந்த வேலை நேரத்தில் எடுத்துச் சென்றால் நிச்சயமாக அதைக் கண்காணிக்கக்கூடிய ஒரு பொறுப்பு இருக்க வேண்டும்.

ஒழுங்காக அரசாங்க வேலைகளைக்கவனிக்க வேண்டுமென்றால், அரசாங்க வேலைகள் திறமையாக நடக்க வேண்டுமென்றால், பிரச்சனைகள் தீரவேண்டுமென்றால், பைல்கள் அவ்வப்போது தீர்க்கப்பட வேண்டுமென்றால் முழுக் கவனம் வேலையில் செலுத்தக்கூடிய அளவில் இருக்க வேண்டும். பலப்பல இடங்களில் இந்த நிலை மாறியிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரையும் நான் சொல்லவில்லை. குறிப்பாக சிலர், இருக்கக்கூடிய பலரைக் கெடுத்துவிடுகிறார்கள் என்ற நிலை இருக்கிற காரணத்தால் இதை மாற்றியமைத்து அரசாங்க அலுவல் நேரங்களில் அரசாங்கத் தொடர்பு இல்லாத, உத்தியோகத் தொடர்பற்ற புத்தகங்களை அல்லது பத்திரிகைகளை எடுத்துச் செல்லக்கூடாது என்ற கட்டாயத்தை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரகசியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். பலப்பல இடங்களில் இரகசியங்கள் வெளியே வருவது கண்டிக்கத்தக்கது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். அமைச்சர்கள் எங்கெங்கோ இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு அமைச்சரை பார்த்துவிட்டு இன்னொரு அமைச்சரை பார்க்கப்போக வேண்டுமென்றால் பெட்ரோல் செலவு அதிகமாக ஆகிறது. ஆகவே, அமைச்சர்கள் எல்லோரும் ஒரே பகுதியில் இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்வது குறித்து பரிசீலித்து நல்ல முறையில் அதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதிகளைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், நம்முடைய வசதிகளைப்பற்றிச் சொல்வதற்கு முன்னால் இங்கே பணிசெய்கின்ற பணியாளர்களைப்பற்றி அவர்களுடைய வசதிகளைப்பற்றிச் சொல்லிவிட்டு, அதற்குப் பின்னால் சட்டமன்ற உறுப்பினர்களுடைய படி, சம்பளம் இவைகளைப்பற்றி கேட்பது சரியாக இருக்கும் என்ற அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

நம்முடைய பிரச்சனைகளைப் பற்றி பேசுவதற்கு முன்னால் கட்டாயம் வாட்சு அன்ட் வார்டுகளுக்கு சலுகை காட்டாமல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த சலுகையும் காட்டக்கூடாது என்று நான் கருதுகிறேன். முதலில் நான் குறிப்பிட விரும்புவது, இங்கு கொடுக்கப்படுகின்ற இரண்டரை ரூபாய் படி ஒரு பூட்சுக்கோ ஒரு உடுப்புக்கோ கூட காணாத நிலையில் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, இதைப்பற்றி யாரும் சொல்லவில்லையே என்று கூட அவர்கள் நினைக்கக்கூடும், ஆகவே இவர்களுக்கு இந்த வாட்சு அன்ட் வார்டுகளுக்கு படியை அதிகப்படுத்திக்கொடுக்க வேண்டும்



என்ற கோரிக்கையை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மான்யக் கோரிக்கைக்கு பதில் சொல்லும்போது, குறைவான எண்ணிக்கையுள்ள இவர்களுக்கு குறைந்த பட்சம் ஐந்து ரூபாய் என்ற அளவிலாவது கொடுக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அதிகப்படியாக வேலை செய்வதற்கு வழங்கப்படும் ஓ.டி. **பணம்** இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. அதாவது ஜூன் மாதத்திலிருந்து இதுவரை அந்தப்பணம் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். இது நல்லதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஜூன் மாதத்திலிருந்து இதுவரை கொடுக்கப்படவில்லை என்றால் எத்தனை மாதம் ஆகிறது என்பதை பார்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்கள் போய் சண்டை போடுகிறோம், எங்களுக்கு பில்லை இன்றே போட்டுக் கொடுங்கள் என்று சண்டை போடுகிறோம். அப்படியிருக்கும்போது, இதுவரை பணம் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் இதற்கு யார் பொறுப்பு என்று தெரியவில்லை. ஆகவே, உடனடியாக இந்த ஓ.டி. பணத்தை கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இனிமேல் மாதாமாதம் கொடுப்பதற்கும் அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், டி.ஏ. பில் வாங்கப்போகின்ற இடத்தில் நிற்க முடிவதில்லை. அங்கு வேலை செய்கின்ற பியூன்கள் கூட உள்ளே போக முடியாத அளவுக்கு இட நெருக்கடியாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி போக வேண்டிய இடமாக இருக்கிறது. போகின்ற உறுப்பினர்கள் வசதியாக உட்கார்ந்து பில்லை வாங்கிக்கொண்டு போகக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது, இந்த நெருக்கடிக்குள் போய் வாங்கிக் கொண்டு போவதை விட சம்பள பில்லே வாங்காமல் இருப்பது நல்லது என்று நினைப்பதற்கு முன்னால், வெகு சீக்கிரமாக இட மாற்றுதல் செய்ய வேண்டும் என்றும், எல்லா அங்கத்தினர்களும் போய் வசதியாக உட்கார்ந்து இருந்து பில்லை வாங்குவதற்கும் அதே நேரத்தில் அங்கு வேலை செய்கின்றவர்களுக்கும் வசதியான விதத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தால் அவர்கள் உட்கார்ந்திருந்து கொண்டு வேலை செய்வதற்கும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்த இடத்தில் வேண்டிய இட வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வசதியைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், இந்தத் துறையில் இன்னும்கூட பலர் பல ஆண்டுகளாக டெம்பரரியாக வேலை செய்கின்றார்கள். வாட்சு அன்ட் வார்டர்களாகவும், மற்றும் பல துறைகளிலும் டெம்பரரியாக வேலை செய்து கொண்

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1978 மார்ச் 28

டிருக்கிறார்கள். போராடுகின்றவர்களுக்குத்தான் சலுகை கிடைக்கும் என்ற நிலைமை இருந்து வருகின்ற இந்த காலத்தில் எந்த விதமான போராட்டமும் இல்லாத நிலையில் இவர்களுக்கு நியாயமான சலுகைகளை அளிக்க நாம் முன் வர வேண்டும். அந்த அளவில் டெம்பரரியாக இருக்கின்றவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓல்டு ஆஸ்டலில் திடீரென்று ஏதாவது அவசியத்திற்கு போன் பண்ண வேண்டுமென்றால், அல்லது வேறு ஏதாவது அவசியத்திற்கு ஆள் வேண்டும் என்று கேட்டால் ஒரு பியூன் கூட வருவதில்லை. முக்கியமாக போன் செய்யக்கூடிய இடத்தில் இன்னும் நான்கு அட்டன்டர்களை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பணியாளர்களுடைய வசதியைப் பெருக்காமல் வெறும் குறைகளை மட்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் எந்த பயனும் இல்லை. இந்த மாதிரியான வசதிகளை முதலில் செய்ய வேண்டும், அதற்குப் பின் சில அம்சங்களைச் சொல்லவருகிறேன்.

ஆஸ்டலில் புதிதாக நுழை வாயிலில் சிமின்ட்டினால் கட்டியிருக்கிறார்கள். கான்ட்டிராக்டர்கள் செய்தார்களோ அல்லது டிப்பார்ட்மென்டுகாரர்கள் செய்தார்களோ தெரியாது. புதிதாக கட்டி ஒன்றிரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. ஏதோ சிமின்டில் கலந்து கட்டுவதாக கேட்டிருக்கிறோம். இங்கு கட்டப்பட்டிருப்பது சிமின்டில் தானா என்பதே சந்தேகமாக இருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இருக்கக்கூடிய இடத்திலேயே இந்தமாதிரியான கலவையை சேர்த்து கட்டுவதற்கு இவர்களுக்கு தைரியமிருக்குமானால் இந்த நாட்டில் என்ன நடக்காது என்பதை நான் அழுத்தமாக கேட்க விரும்புகிறேன். நிச்சயமாக பஸ்கள் வரும் போது, போகும் போது நுழைவாயிலில் நிச்சயமாக இது என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு இருக்கிறது. இதற்கு கான்டிராக்டரிடம் நான் போக வேண்டுமா அப்படியிருந்தால் கூட எவ்வளவு தைரியமாக இப்படி செய்திருக்க வேண்டும் என்பதை நான் அழுத்தமாக கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட பல குறைகள் இருக்கின்றன என்றாலும் உதாரணத்திற்காக இந்த ஒன்றை சொன்னேன். இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் அகற்றுவதில் நாம் நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகளைப்பற்றி சொல்லும் போது, கிராமங்களிலுள்ள மக்கள் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறார்கள், அவர்களுடைய நிலை உயராத வரைக்கும் நாம் நம்முடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்வது நியாயமல்ல. நாட்டிலுள்ள நிலையைப்பார்த்தால் சரியல்ல என்று நான் கருதுகிறேன்.



1978 மார்ச் 28] [திரு. கூத்தக்குடி ச. சண்முகம்]

ஆனால், தொகுதி மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றுவதற்குரிய வசதியும் வாய்ப்பும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும். ஒன்று, போக்குவரத்து மிகவும் முக்கியமாக இருக்கிறது, அரியானாவிலும், பஞ்சாபிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்கு சென்று வருவதற்கென்று தனியாக 250 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

ஆகவே, இங்கே 250 ரூபாய் அப்படி கொடுக்கப்படாவிட்டாலும், ஏற்கனவே இருக்கக்கூடியபடி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, மாதத்திலே இரண்டு நாட்களுக்கு யூனியனிலே இருக்கக்கூடிய ஜீப்புகளை கொடுக்கலாம். இந்த மாதிரியான வசதியை உடனடியாக இந்த அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படி செய்து கொடுத்தால்தான், உறுப்பினர்கள் தொகுதி மக்களிடம் செல்வதற்கு முடியும். இந்த முறையை அமுல்படுத்துவதிலே எந்த விதமான பணமும் கொடுக்க வேண்டியதில்லை; அரசாங்கத்திற்கு நிதி நிலைமையிலேயும் எவ்விதமான சங்கடமும் இல்லாத யோசனையாகும். எனவே, இதை முறையாக அமுல்செய்ய வேண்டும், அதற்கான உத்தரவை உடனடியாகப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், கட்டாயம் தொலைபேசி வசதி தேவைப்படுகிறது. இது மிகவும் முக்கியமானது. எனக்கு வருகின்ற கடிதத்தைப் பார்த்தாலே, தினமும் 200-க்கு மேல் வருகிறது. அவைகளைப் படிக்க முடியவில்லை. ஆய்வு செய்யக்கூட நேரம் போதவில்லை. எனக்கே இப்படியென்றால், அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் எப்படியிருக்கும் என்பதைப் பார்க்கலாம்.

இன்றைக்கு வேலையில்லாமல் பலர் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒருவர் வீதம், அவர் எழுத்தர், உதவியாளர் என்று என்ன பேரில் வேண்டுமானாலும் இருக்கலாம், அதற்குள்ளே போக நான் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் அரசாங்கச் சிப்பந்திகளாக இருக்க வேண்டும். அப்படியிருந்து உதவி செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால், எந்த விதமான தபாலும் போகாது. தொகுதி மக்களுடன் உறவு வைத்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, இதையும் நிச்சயமாக செய்ய வேண்டும். இது எதிர்காலத்திலே வரக்கூடிய உறுப்பினர்களுக்கும் சாதகமாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது கொடுக்கக்கூடிய இந்த கூப்பன் முறை ரொம்ப சங்கடமாக இருக்கிறது. இந்தக் கூப்பன் கொடுத்து, நான் டெல்லிக்குப் போக டிக்கட் எடுத்தேன். அப்போது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மேல் வாக்கெடுப்பு. நெருக்கடியான சூழ்நிலை. எனவே, பிரயாணத்தை ரத்து செய்ய வேண்டியிருந்

தது. ஆனால், அதற்காக கொடுக்கப்பட்ட கூப்பன் தரவில்லை. காசு கொடுக்க வேண்டாம்; கூப்பனையாவது திருப்பித் தரலாம் அல்லவா? 2,000 கிலோ மீட்டருக்கான கூப்பன் அது. கொடுக்கவில்லை. கேட்டால், அப்படிச் சட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னால் இதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவர் டிக்கட் எடுத்துவிட்டு, அதைக் கான்சல் செய்தால், அதைத் திருப்பி ஏன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இதற்கு சட்டம் இப்படி இருக்கிறது என்று சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதைத் திருப்பித் தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல. 10.000 கிலோ மீட்டர் என்றிருப்பதை 20,000 கிலோ மீட்டராகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன். இதை இரண்டாவதாக வகுப்புக்கே கொடுத்தால் தேவலை. முதல் வகுப்பு கொடுப்பதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. அதைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. இரண்டாம் வகுப்பிலே 40,000 கிலோ மீட்டராகக் கொடுத்தால் நல்லது. அரசாங்கத்திற்கு பணத்திலும் சிக்கனம் ஏற்படும். 40,000 என்று இரண்டாவது வகுப்பிலே கொடுத்தால், நண்பர் இராதா அவர்கள் சொன்னதுபோல் ரொம்ப உதவியாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் இரண்டாவது வகுப்பிலே பிரயாணம் செய்ய விரும்புகிறேன். எனவே, இந்த 40,000 என்பதை கொடுக்கவேண்டும். இப்படிப் பண்ணும்போது அரசாங்கத்திற்கு நஷ்டம் வராது. எனவே, இந்த அறிவிப்பை உடனேஅறிவிக்கவேண்டும்.

இதையெல்லாம் பேசி ஆலோசனை செய்துவிட்டு, அறிவிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. இந்த மாதிரியான சாதாரணமான பொருளாதார நெருக்கடி இல்லாத கோரிக்கைகளை உடனே அறிவிக்க வேண்டும். யோசிக்கவேண்டிய அவசியமில்லை. எனவே, இதைப்பற்றி உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. கட்டாயம் கூட ஒருவர் போகவேண்டும். இப்படி கூட ஒருவர் போக வேண்டியது அவசியம். பாதுகாப்புக்காவது அவசியம் தேவைப்படுகிறது. 'ஒய்ப்ஸ்' அதாவது மனைவிமார்களை உடன் அழைத்துச் செல்வதும் அவசியமாக இருக்கிறது. யாராவது....

திரு. ரா. மார்க்கபந்து: 'மனைவிமார்கள்' என்று சொல்கிறீரே, அதற்கு ஏதாவது லிமிட் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு கூத்தக்குடி ச. சண்முகம்: இரண்டு மனைவிகள் சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறார்கள். அப்படி வைத்திருக்கின்றவர்கள் யார் என்பதும் பலருக்குத் தெரியும். அதற்குள்ளே



போக நான் விரும்பவில்லை. -மனைவிமார் என்று நான் சிங்குலரில் சொன்னது, தமிழில் பன்மையிலே அர்த்தம் தருகிறது. நான் ஒரு மனைவிமாரைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) உறுப்பினர் அவர்களுடைய மனைவிமாரைப் பற்றித்தான் சொல்கிறேன். * * * ஆகவே, இந்தமாதிரியான குறைகளையெல்லாம் களைய கட்டாயம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா( மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய * * * என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு கூத்தக்குடி ச. சண்முகம்: உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த அறைகள் ஒதுக்குவதிலே உள்ள குறைபாடுகளைப் பற்றி, இதைப்பற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள்கூட குறிப்பிட்டார்கள். கட்டுக்கட்டாக நமக்குப் புத்தகங்கள் மற்றவைகள் அனுப்புகிறார்கள். நமக்கு அறை பர்மனென்டாக இருந்தால்தான் அவைகளை வைத்துக் கொள்ள முடியும். டெம்பரரியாக இருந்தால், அவைகளை எங்கே தூக்கிக்கொண்டு போவது, எனவே, உறுப்பினர்களுக்கு பர்மெனன்டாக அறைகள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ரூம் கொடுப்பவர்களுக்கு ரூம் கொடுக்கட்டும், வீடு கொடுப்பவர்களுக்கு வீடுகள் கொடுக்கலாம். ஆனால் இவைகள் பர்மெனன்டாக கொடுக்கப்பட வேண்டும்.

(நண்பகல் 12.00)

அந்த முறையில் பல்வேறு மாநிலங்களில் அப்படிக் கொடுக்கப்படுகிறது. அதிலே கணக்குப் பார்க்கக்கூடாது.

அமைச்சர்களுக்கெல்லாம் எட்டு லிட்டர் பெட்ரோல்தான் என்று சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. உண்மையா என்று தெரியாது. மாதத்திற்கு 250 லிட்டர் என்று சொல்லுகிறார்கள். விவரம் எனக்குத் தெரியாது. குறைந்த பட்சம் சேவை செய்யக்கூடிய அளவுக்கு தேவைகள் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் தவறுகள் ஏற்பட வழி வகுக்கும். தேவைகளைக் கொடுக்கவில்லை என்று சொன்னாலே தவறுகள் வரும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் என்றெல்லாம் அதிகமாகக் கொடுக்காவிட்டாலும் இதுபோன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அடுத்து, தேர்தல் பற்றி இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாநிலத்தில் பஞ்சாயத்து தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தேர்தல், நகராட்சித் தேர்தல்களில் 18 வயதுள்ளவர்களுக்கு ஒட்டுரிமை வழங்கங்கூடிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். பல மாநிலங்களில் வந்திருக்கிறது. அந்த முறையில் வரக்கூடிய தேர்தல் நடக்கவேண்டும்.

இப்போது போடப்படுகிற கமிட்டிகளை எல்லாம் பார்க்கும்போது தேர்தல் நடத்தப் போகிறார்களா இல்லையா என்ற சந்தேகம் வருகிறது. இன்னும் மூன்று மாதத்தில் தேர்தல் வரப்போகிறது என்ற நிலையில் ஏன் இந்த மாதிரி கமிட்டிகளைப் போட வேண்டும். தேர்தல் நடக்கக்கூடிய தேதிகளை சொல்லா விட்டாலும் இந்த மாதம் நடக்க வேண்டுமென்றாவது குறிப்பிட்டு அறிவிக்க வேண்டும். மீண்டும் மீண்டும் ஒரு வருஷ காலம் ஒத்தி வைத்துக் கொண்டே போகக் கூடாது. தேர்தல் மேலும் தள்ளிப் போகுமா என்ற அபாயம் இருக்கிறது. தேர்தல் நடைபெறும் மாதத்தை குறிப்பிட வேண்டும்.

18 வயதானவர்களுக்கு ஒட்டுரிமை வழங்கப்பட வேண்டும்.

இங்கே உறுப்பினர்கள் உட்கார இடம் நெருக்கடியாக இருக்கிறது. மற்றவரை இடித்துக் கொண்டு பேசுவது சிரமமாக இருக்கிறது. இந்தச் சிரமங்கள் குறைய வேண்டும்.

பாராளுமன்றத்தில் இருப்பது போல் குழுக்கள் ஒவ்வொரு அமைச்சரின் மானியக் கோரிக்கை வரும்போதும் ஆராய ஒரு குழு தேவை.

இங்கே பேசும்போது பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள் என்ற விகிதாசாரத்தில் நேரம் கொடுக்கப்படுகிறது. சில நேரங்களில் சிறிய கட்சிகளுக்கும் நேரம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. சில நேரங்களில் தடை செய்யப்படுகிறது.

அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் அதிக நாட்கள் சட்டசபைக் கூட்டத்தை நடத்த வேண்டும்.

அதே சமயத்தில் ஆலோசனைக் குழுக்களை அமைக்கவும் வழி வகை செய்ய வேண்டும்.

தமிழ் சம்பந்தமாக பலமுறை சொல்லியிருக்கிறேன். பொதுக் கணக்குக் குழுவில்கூட, ப.உ.ச. அவர்கள் 'கூத்தகுடி சண்முகம் அவர்கள் வந்து விட்டார்கள், தமிழில் பேசுங்கள்' என்று சொன்னார்கள். இந்தியா, ஆங்கிலமா என்ற போராட்டத்தை விட, தமிழா ஆங்கிலமா என்ற போராட்டம் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இந்தியைத் திணிக்கக்கூடாது என்பதில் எவ்வளவு அழுத்தமாக இருக்கிறோமோ அதேபோல் தமிழகத்தில் தமிழை சகல துறைகளிலும் கொண்டுவர அழுத்தமாக இருக்க வேண்டும்.





தமிழில் மொழி பெயர்ப்பைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன்— "Unfortunately after independence" என்பதற்கு 'துரதிருஷ்டவசமாக சுதந்திரம் அடைந்த பிறகு' என்று மொழி பெயர்த்திருந்தார்கள். இப்படி ஒரு மொழி பெயர்ப்பா? இந்த மாதிரி மொழி பெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள் என்றால் வருத்தமாக இருக்கிறது. குழுவிற்குக் கொடுக்கப்பட்ட சில மொழி பெயர்ப்புகளில் உள்ள தவறுகளைக் கூட நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். தமிழ் தெரிந்த நல்ல மொழி பெயர்ப்பாளர்களைப் போட வேண்டும். தமிழைப் பற்றிப் பேசினால் மட்டும் போதாது. நடை முறையில் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். சட்டமன்றத்தில் நடைமுறையில் கொண்டு வர வேண்டும்.

துப்பாக்கி பற்றியெல்லாம் சொல்லப்பட்டது. வேறு மொழி திணிக்கப்படும்போது இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து செயல்படும் நிலை தமிழகத்தில் ஏற்படும். "Sten gun and Bren gun" என்ற அந்த அளவுக்கு அழுத்தமாக இருக்கிறேன்.

ஆகவே, சட்ட மன்றத்தில் ஆலோசனைக் குழுக்களை அமைத்தால்தான் அதிக ஆலோசனைகளைச் சொல்ல முடியும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, சட்டமன்றத் துறையினுடைய மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பல அங்கத்தினர்கள் அவரவர்கள் கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்தார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி இருக்கிறதே, **அதை நிச்சயமாகப்** புதுப்பிக்க வேண்டும் . . . .

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது எங்களுக்கு எல்லாம் கேட்கவே இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ். ஜே. இராமசாமி அவர்கள் தயவு செய்து மைக்கிலே பேசவேண்டும்.

திரு. எஸ்.ஜே. இராமசாமி: பழைய காலத்திலே கட்டப்பட்ட விடுதி தான் அந்த பழைய ஹாஸ்டல். அதைப் புதுப்பித்து இன்னும் வசதியாகச் செய்து தரவேண்டும். எங்களைப் போன்றவர்களை எல்லாம் செயலாளர் எல்லாம், அதிகாரிகள் எல்லாம் பழைய விடுதிக்கே அனுப்பிவிடுகிறார்கள்—அங்கே வசதிகள் குறைவாக இருக்கின்றன. புதிய விடுதிகளில் வசதிகள் இருக்கின்றன, இப்படி ஒரு கண்ணிலே வெண்ணெயும், ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் வைக்காமல் அதையும் நல்லபடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்களுக்கு பாஸ் பற்றி இங்கே பல அங்கத்தினர்கள் பேசினார்கள், எனக்கு முன்னாலே பேசிய கூத்தகுடி சண்முகம் அவர்களும் மனைவிமார்களும் போவதற்கும் பாஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். என்னுடைய கருத்தெல்லாம் குடும்பத்தை சேர்ந்த ஒருவர்—அது மனைவியாக இருக்கலாம், மகனாக இருக்கலாம் அல்லது மகளாக இருக்கலாம், குடும்பத்தைச் சேர்ந்த யாராகவும் இருக்கலாம்—என்ற முறையிலே போட்டு விடலாம் என்பதுதான், ஆனால் கொடுப்பதற்குத்தான் இந்த அரசுக்கு மனம் வேண்டுமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

ஆர். ஆர். செக்ஷனில் டைப் செய்வது, சரிவர டைப் செய்வது கிடையாது. கொஞ்சம் தெளிவான ஆளைப் போட வேண்டும், இருக்கக்கூடிய எம். எல்.ஏ-க்கள் சிபாரி செய்துதான் டைப் செய்து கொள்ளுகிறார்கள். பொறுமையாக, சுறுசுறுப் போடு அடிக்கக்கூடியவரை போட வேண்டும். காலையிலே கொடுத்நால் மாலையிலே தான் டைப் செய்து கொடுக்கிறார்கள். என்ன செய்ய முடியும்? ஆகவே சரியான ஆளைப் போட வேண்டும்.

லெட்டர் பேப்பர்ஸ் கொடுக்கிறார்கள் உறுப்பினர்களுக்கு. இந்த ஆண்டு கூட சரியாகக் கொடுக்கப்படவில்லை. அதிலே உறுப்பினர்களின் பெயர்களை அச்சடித்தே கொடுந்து விடலாம். அமைச்சர்களுக்கு எல்லாம் பொதுப்பணித் துறை என்று எல்லாம் அச்சடித்துக் கொடுக்கிறார்கள், ஆகவே அந்த முறையிலே உறுப் பினர்களின் பெயர்களையும் அச்சடித்துக் கொடுந்துவிடலாம்.

உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் ஒரு சீருடை இருக்க வேண்டும். ஒருவர் போனால் இவர்தான் சட்ட மன்ற உறுப்பி பினர் என்று தெரியக் கூடிய முறையிலே சீருடை இருக்க வேண்டும். அடுத்து, சபாநாயகராக இருக்கக்கூடியவர் கறுப்புக் கோட்டு போட வேண்டும்........

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஜே. இராமசாமி அவர்கள் உறுப்பினர்களுக்கு சீருடை வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த சீருடை எந்தக் கலரிலே இருக்கவேண்டுமென்று சொல்வாரா?

திரு. எஸ். ஜே. இராமசாமி: அதைப்பற்றி அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து பேசிக் கொள்ளலாம். சபாநாயகராக இருக்கக்கூடியவர் கட்டாயமாக கறுப்புக் கோட்டைப் போட்டுத் தான் அந்த இடத்திலே உட்கார வேண்டும். அப்போதுதான் நீதிமன்ற லட்சணம் இருக்கும்.

நாம் சபாநாயகருக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுக் கிறோம் என்பதை நீங்கள் தயவுசெய்து யோசித்துப் பார்க்க வேண்டும். சபாநாயகராக ஒருவரை நாம் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும், எங்களுடைய சபாநாயகர் என்று நான் இப்படிச் சொல்லவில்லை.





இப்போது இருக்கக்கூடியவர் உங்களுடைய சபாநாயகர் தான் இருக்கிறார். சபாநாயகருக்குரிய மரியாதையும் அவர் சொல் லுக்குக் கட்டுப்படக் கூடிய நிலைமையும் ஏற்பட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஜே. இராமசாமி அவர்கள் கூறும் பொழுது இப்போது உள்ளவர் எங்களுடைய சபாநாயகர் என்றும் ஏற்கனவே இருந்தவர் அவர்களுடைய சபாநாயகர் என்றும் குறிப் பிட்டார்கள். நாம் எல்லாம் சேர்ந்து, போட்டியில்லாமல், இரண்டு கட்சிகளும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் சபாநாயகர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா): சபாநாயகர் இந்த இருக்கையில் இருக்கும்போது எல்லோருக்கும் சபாநாயகர்தான். ஆகவே ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் கிடை யாது.

(பிற்பகல் 12.10).

திரு. எஸ். ஜே. இராமசாமி: அதை நான் திருத்திக் கொள் கிறேன். நம்முடைய சபாநாயகர்தான், நான் கொஞ்சம் அவசரப் பட்டுப் பேசிவிட்டேன். அவர் நம்முடைய சபாநாயகர்தான், அதில் சந்தேகமில்லை.

சீருடை கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும், அதேபோல் சபாநாயகர் அவர்கள் கறுப்பு கோட் அணிந்து வர வேண்டும். முன்பு இருந்த ஆதித்தனார் அவர்கள் கறுப்பு கோட் போட்டுக் கொண்டுதான் வந்து உட்கார்ந்தார். நீதி மன்றத்திற்குக் கொடுக்க கூடிய கௌரவத்தையும், மரியாதையையும் கொடுக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி நேரத்தில் சபாநாயகர் ஒரு பக்கமாகக் கொடுத்துக் கொண்டு போகிறார் என்ற உண்மையை நாம் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்குத்தான் சபாநாயகர் அதிக வாய்ப்புக்களைக் கொடுத்துக் கொண்டிருக் கிறார். அப்படியிருந்தும் அவர்கள் திருப்தியில்லாமல் இருக் கிறார்கள். அதே நேரத்தில் எங்களையும் கொஞ்சம் திருப்திப் படுத்த வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். கோஷன் பிளாக் என்று இருக்கிறது, அவைகளில் அதிகாரிகள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். கோஷன் பிளாக்கை மூத்த சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத்தான் ஒதுக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேறு இடங்களிலே இடம் இருக்கிறது. நந்தனம் போன்ற இடங் களில் 7 மாடி, 9 மாடி கட்டிடங்கள் என்று இருக்கின்றன. ஆகவே, கோஷன் பிளாக்குகளை மூத்த சட்ட மன்ற உறுப்பினர் களுக்குக் கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்ல வேண்டும். சட்ட மன்றம் கூடும்பொழுது நமது சட்ட மன்ற இலாக்கா இருக்கிறதே அது நல்ல சுறுசுறுப்பாகப் பணியாற்றும் இலாக்காவாக இருக்கிறது. இந்த இலாக்காவில் இருப்பவர்களுக்கு நாம் கொஞ்சம் உதவித் தொகையைக் கட்டாயமாக வழங்க வேண்டும். அவர்கள் இரவு 7 மணி வரையில் வேலை செய்து கொண்டு இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, சட்ட மன்றக் கூட்டம் நடக்கும்பொழுது அவர்களுக்குக் கூடுதலாகக் கொஞ்சம் தனியாகத் தொகையை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அமைச்சர்களுக்குப் பெட்ரோல் கட்டுப்பாடு இருப்பதைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அது போதாது. இந்த அமைச்சரவைக்காகச் சொல்லவில்லை., எந்த அமைச்சரவையாக இருந்தாலும், பொதுவாகப் பேசுகிறேன், எங்கள் அமைச்சரவைக்கு என்று சொல்லவில்லை, அப்படிப்பட்ட எண்ணத்தை வைத்துக் கொண்டிருந்தால் தயவுசெய்து அதை மாற்றிக் கொள்ளுங்கள். எந்த அமைச்சரவையானாலும் பெட்ரோல் கொடுப்பது உண்மையிலேயே போதாது.

இப்படி சொல்கின்ற நேரத்தில் என் அருமை நண்பர் ப.உ.ச. அவர்களைக் கேட்டால் அவரே கூட போதாது என்று வாதாடுவார். எனவே, அதைப் பரிசீலித்து அமைச்சர்களுக்குக் கூடுதலாகப் பெட்ரோல் அளிக்க வேண்டும். அவர்களுக்கு, இதற்கு முன் கலைஞர் ஆட்சியில் கொடுத்ததை விடக் குறைவாகக் கொடுப்பதாக நான் அறிகிறேன். அப்பொழுது கொடுத்த பெட்ரோலைக் கூட இந்த ஆட்சியில் அமைச்சர்களுக்குக் கொடுக்கவில்லை. எனவே 200 லிட்டர் போதாது, 500 லிட்டராவது கொடுக்க வேண்டும், அல்லது 400 லிட்டராவது கொடுக்கலாம் என்று என்னுடைய கருத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எந்த விழா வந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். இங்கே கூட பேசியிருக்கிறார்கள். எந்த விழாவிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

இன்னொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கல்லூரிகளுக்கு ஏதாவது அட்மிஷனுக்காகப் போகிறோம். அங்கேயுள்ள பிரின்சிபால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒருகாலும் மரியாதை கொடுப்பதில்லை. கல்லூரியிலே சென்று எங்களுடைய பிள்ளைக்கோ, மகளுக்கோ அட்மிஷன் வேண்டுமென்று கேட்கப் போகவில்லை, மற்றவர்களுக்காகப் போகும்பொழுது அந்த பிரின்சிபால் எங்களைக் கொஞ்சம் கூட மதிப்பது கிடையாது. அரசாங்கம் இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இதை நான் ஏன்





சொல்கிறேன் என்றால் கேளாக்காதினராக பிரின்சிபால்கள் இருந்து சட்டமன்ற உறுப்பினர்களை மதிப்பதே கிடையாது. விசிடிங் கார்டு கொடுத்தால் அதைப் பார்ப்பதே கிடையாது. இப்படிப்பட்ட அவல நிலை இருப்பது நியாயமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் அப்படிச் சொல்லி விடட்டும். கல்லூரியில் அட்மிஷன் கொடுக்க முடியாது என்று சொல்வது என்றால் அப்படிச் சொல்லிவிடட்டும். அப்படியில்லாமல் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலே உட்கார்ந்திருப்பதைப்போல பிரின்சிபாலின் ரூமிற்கு முன்னால் இருக்கும் பெஞ்சிலே நீண்ட நேரம் உட்கார வைத்திருப்பது என்பது முறையானது அல்ல, அவ்வளவு நேரம் சட்டமன்ற உறுப்பினரைக் காக்க வைப்பது சரியாக இருக்குமா ? இதை அரசு யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் அதிகமாகிவிட்டபடியால் ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி விடை பெறலாம் என்று நினைக்கிறேன்.

டெலிபோன் பற்றிப் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். டெலிபோன்களைக் கொடுத்தாலும் கொடுங்கள், கொடுக்காவிட்டாலும் போங்கள். ஆனால் கிராமங்களிலே இருப்பவர்களுக்கு டெலிபோன் வேண்டுமென்றால் டெபாசிட் கட்டும்படி சொல்கிறார்கள். அந்த டெபாசிட் தொகையை அரசாங்கமே கொடுத்து, அந்த உறுப்பினர்களது பதவி போகும்பொழுது அந்த டெபாசிட் தொகையைத் திரும்ப வாங்கிக் கொள்ளட்டும். அவர் மீண்டும் பதவியில் இருந்தால் அது அப்படியே கன்டினியூ ஆகட்டும். இல்லாவிட்டால் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். ஆகவே, அந்த டெலிபோன் இணைப்புக்கான வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரமாகிவிட்டபடியால் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், தேர்தல், அமைச்சர்கள், மாநிலத் தலைவர், தலைமையிட ஊழியர்கள் சம்பந்தப்பட்ட இந்த மானியங்களில் என்னுடைய கருத்துக்களை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன். ஆகையினாலே, ஆளுகின்ற அரசிற்கு, இந்த அரசில் நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் என்னுடைய கடமையாகும். ஆகவே, இதைத் தனிப்பட்ட முறையில் யாருக்கும் விரோதமாக நான் பேசுவதாக அருள்கூர்ந்து கருதக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவலின் படி ஒரு அமைச்சர் அடிக்கடி மதுரை மாவட்டத்திற்கு வருகை புரிகிறார். அந்த அமைச்சரின் இந்த வருகைக்கான செலவுகளையெல்லாம் அந்த அமைச்சர் எந்தத் துறையில் பதவி வகிக்கிறார்

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 28

களோ, அந்த டிபார்ட்மென்ட், அந்தத் துறை, ஏற்றுக் கொள்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த அமைச்சர் அங்கம் வகிக்கிற கால்நடைத்துறை மருத்துவர்களும், கால்நடை மருந்தகங்களும் அதற்காக விருப்பத்தோடு, தானாகவும், தாராளமாகவும் நிதி வசூல் செய்யப்பட வேண்டுமென்றும் அப்படி செய்யப்படுவதற்கான கணக்கு கொடைக்கானல் மருத்துவ மனையில் வைக்கப்படும் என்றும் ஒரு அறிக்கை அதிகாரபூர்வமாகத் தரப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். கால்நடைத் துறை இயக்குநர் அவர்கள் 3-11-1977 அன்று அப்பீல் அனுப்பியிருக்கிறார்கள். அவருடைய கையெழுத்து போட்ட அந்த அறிக்கையை துணை சபாநாயகரிடத்திலே முன் கூட்டியே நான் கொடுத்து விட்டேன். அவைகளை அவர் வாங்கிக்கொண்டார். அவர் வாங்கிக் கொண்டாலும் அதற்கான காப்பி இங்கே என்னிடத்திலே இருக்கிறது.

## APPEAL

Office of the Assistant
Director of Animal Husbandry
Kodaikanal.

The Veterinary Assistant Surgeon, i/c. Veterinary Dispensary AIC and Poultry Extension Centres in Kodaikanal Division are informed that Hon. Minister for Animal Husbandry Tamil Nadu is frequently visting Madurai district. The expenditure in connection with the visit of Hon. Minister is being met departmentally. The Regional Director of Animal Husbandry, Madurai has openly appealed to all the Veterinary, Assistant Surgeons i/c. Veterinary Dispensaries in charge Division to get donation voluntarily and willingly.

I therefore appeal to you to donate voluntarily willingly and liberally in this cause. An account will be maintained by the Veterinary Assistant Surgeon, i/c. Veterinary Hospital, Kodaikanal and will be shown to the concerned.

Asst. Director of Animal Husbandry
Kodaikanal-2.



1978 மார்ச் 28] [திரு. ஏ. ரகுமான்கான்]

ஏற்கனவே ஆதாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில், நான் கேட்பதெல்லாம் இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா ? அமைச்சரவர்கள் பயணம் செய்கிறார், அதற்காக அரசாங்கத்திடமிருந்து T. A. வாங்குகிறார், D. A வாங்குகிறார். அதற்குப் பிறகு, அவர் அடிக்கடி மதுரை மாவட்டத்திற்கு வருகை புரிகிறார் என்று சொல்கிறபொழுது அதற்கான செலவுகளை அந்தத் துறை ஏன் ஏற்றுக் கொள்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அப்படி அந்தத் துறை ஏற்றுக் கொள்கிறது என்று சொன்னால், அது Misuse of Power ஆகாதா ? அது அதிகார துஷ்பிரயோகம் ஆகாதா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

இப்படி வசூலிக்கப்படுகிற பணம் எப்படியெல்லாம் வசூலிக்கப்படுகிறது என்று சொல்கிறபொழுது, அதிலே தெளிவாகச் சொல்கிறார்கள். நீங்கள் வசூலிக்கிற பணம், தானாகவே வசூலிக்கப்பட வேண்டும், விருப்பத்தோடு வசூலிக்கப்பட வேண்டும், தாராளமாக வசூலிக்கப்பட வேண்டும், என்று. உத்தியோகபூர்வமாக போகிற Official Visit இல்லை. This Cause என்று குறிப்பிடுகிறபொழுது என்ன நோக்கம், என்ன காரணம் இருக்கிறது ? ஏன் அந்த அமைச்சர் அடிக்கடி விஜயம் செய்ய வேண்டும் ?

அந்த அமைச்சர் யார் என்று நீங்கள் கேட்கக்கூடும். ஏற்கனவே, எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் அவர்களாலே குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்பட்ட மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் சரஸ்வதி அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். அதற்கான செலவுக்கணக்கு கொடைக்கானல் மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் அதை இந்தச் சபை பரிசீலிக்க வேண்டும், அதை இந்தச் சபை பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகிற நீங்கள் புத்தர் என்று சொல்கிறீர்கள், ஏசுநாதர் என்று சொல்கிறீர்கள், நாங்கள் தூய்மையானவர்கள் என்று சொல்கிறீர்கள் ; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஊழல் பேர்வழிகள், கறை படிந்தவர்கள் என்று சொல்கிறீர்கள்.

[பிற்பகல் 12-20.]

இது ஊழல் இல்லையா ? அப்படி அந்தக் கணக்கை இங்கே வைக்க வேண்டும். பாரதி கமிஷன் போட்டார்கள். பெகரோல் தவறாகப் பயன்படுத்தப்பட்டது, டெலிபோன் தவறாட்ன் பயன்படுத்தப்பட்டது என்று. 18 ரூபாய்க்குக் கூட கமிஷப் போட்டிருக்கிறீர்கள்; குற்றவாளிகளாக்கிக் காட்டுகிறீர்கள். நான் கேட்கிறேன். இதற்கு ஒரு நீதி விசாரணையை அமைக்க வேண்டும்

புரட்சித் தலைவர் என்று மெத்தப்பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதாரத்தை உங்களிடத்திலே கொடுத்து இருக்கிறேன். இது முதல் பிரச்சினை.

இரண்டாவது, உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, மதிப்பிற்குரிய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும் என்றிருக்கிறது. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே பல ஆண்டுகள் இருந்தவர். ஆகையினாலே 1964 அக்டோபர் மாதம் 29 தேதி, உருவாக்கப்பட்ட 'கோட் ஆப் கான்டக்ட் பார் மினிஸ்டர்ஸ்' என்ற சட்டம் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அந்த சட்டத்தின் படி செக்ஷன் 7-ன் படி "A person before taking office as a Minister shall disclose to the Prime Minister or the Chief Minister as the case may be, details of the assets and liabilities and all business interests of himself and all members of his family." என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் இங்கே கேட்பது அமைச்சர்கள் சரியான தகவலை, சொத்துக்கள் பற்றி கொடுத்திருக்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், அப்படி சரியாகக் கொடுக்கவில்லை என்று வெளியே பேசிக் கொள்கிறார்கள். சொத்துக்கள் கணக்கு சரியாக தந்திருக்கிறார்களா என்பதை இன்றைக்கு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தவறான சொத்து விவரத்தை தந்திருக்கிறார்கள் என்று வெளியே பேசிக்கொள்கிறார்கள்.

அடுத்து, உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது அமைச்சர்களுடைய உறவினர்கள், அண்ணன் தம்பிகள் போன்றவர்கள் யாராவது வியாபாரம் செய்தால் அல்லது மேனேஜ்மெண்டு வியாபார நிறுவனத்திலே இருந்தால் அவர்களும் சொத்துக் கணக்குகள் கொடுக்க வேண்டும். குடும்பம் என்று சொல்லும்போது அந்த சட்டம் தெளிவாக சொல்கிறது.

"A Minister's family shall include his wife or the husband as the case may be, not legally separated from him, minor children and any other person related by blood or marriage and wholly depending on the Minister"

ஆக, நான் கேட்பது இந்த அமைச்சரவையில் யாராவது இது போன்ற உறவினர்கள் தொழில் செய்கிறார்களா அல்லது மேனேஜ்மெண்டில் இருக்கிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்வதற்காக கேட்கிறேன். இருப்பதாக வெளியே பேசிக்கொள்கிறார்களே அது உண்மையா என்றும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சினிமாவிலே நடிப்பதாக ஒரு கருத்து சொல்லப்படுகிறது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியே பேசிக் கொள்கிறார்கள் என்று சொல்லி, அதை வைத்துக் கொண்டு பேசுவது சரியல்ல. நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு பேசவேண்டும். சரியாக கணக்கை வைக்கவில்லை என்று வெளியே பேசிக்கொள்கிறார்கள் என்று சொல்லக் கூடாது, சரியான கணக்கை இங்கே வையுங்கள் என்று கேளுங்கள், அந்தக் கணக்குகள் தவறானவை என்று நீங்கள் நினைத்தால்.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் நம்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால் சரியான கணக்கை கொடுங்கள் என்று கேளுங்கள். பொறுப்பேற்றுக் கொண்டு குற்றச்சாட்டுக்களை சொல்லுங்கள். அதை விட்டு வெளியே பேசிக் கொள்கிறார்கள் ஆகவே நான் பேசுகிறேன் என்று சொல்வது சரியல்ல.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கவனத்திற்கு அடுத்து கொண்டு வருவது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சினிமாவில் நடிப்பதாக ஒரு கருத்துத் தெரிவித்தார்கள். அது குறித்து எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. பொதுமக்களுக்காக பணியாற்றுகிற நேரத்தில் சினிமாவில் நடித்துக் கொண்டிருப்பதால், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்ற முடியாத நிலைமைக்கு சூழ்நிலை போய்விடுகிறது. அவர் தனிப்பட்ட முறையில் நடிப்பது என்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் முதலமைச்சர் பதவி என்பது நாலரை கோடி தமிழ் மக்களுக்காக வகிக்கின்ற பதவி. ஆகவே, முழு நேரமும் அவர் அந்தப் பதவியில் கவனம் செலுத்த வேண்டும். கலைஞர் அவர்கள் அப்போது பிள்ளையோ பிள்ளை சினிமாவிற்குக் கதை எழுதினார். அது அதிகார துஷ்பிரயோகம் என்றும் அதன் மூலமாக புரொடியூசர்கள், டிஸ்டிரியூட்டர்கள். முதலியவர்கள் மீது அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றச்சாட்டை நீங்கள் கொடுக்கின்றபோது தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள்.

அதை நான் வாசிக்க ஆசைப்படுகிறேன்.

"The then Chief Minister, Kalaignar has written the story and dialogues to the picture produced by the said concern under the title 'PILLAYO PILLAI'. The Distributors have been forced to pay fabulous prices and the mighty arm of pow.r which he has exercised will be fully revealed if an enquiry s made from the Distributors. This will further reveal a closen connection he has with business operation and misuse of powoe for business interests.

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 28

வியாபார அடிப்படையில் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்று ஜனாதிபதி இடத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அந்தக் குற்றத்தைச் சுமத்தியவர்கள் இன்று சினிமாவில் நடிக்கலாமா? மேலும் அந்தப் படத்தில் அவர் நடிப்பதால்—முதல் அமைச்சர் இன்புளுயன்ஸ் செய்யமாட்டார்—அவர் பதவியை—விநியோகஸ்தர்கள் மீது இன்புளுயன்ஸ் செய்யலாம். ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது ஆளுநர் அரசு உறவு முறை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆளுநர் பதவி குறித்து முன்னால் என்ன கருத்தை நாங்கள் சொன்னோமோ அதுதான் இப்போதும் எங்களுடைய கருத்து.

ஆனால், அரசியல் சட்டம் விதித்து இருக்கின்ற விதிமுறைகளின் படி ஆளுநர் அவர்கள் பணியாற்ற வேண்டும். அந்த மிகப் பெரிய பதவி கௌரவிக்கப்பட வேண்டும். ஆளுநர் அவர்களைப் பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை. சபையின் மரபை நான் மீற விரும்பவில்லை. நான் விவாதமாகச் சொல்லவில்லை. எந்த வகையில் ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் உறவு முறை இருக்க வேண்டும் என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரு குற்றச்சாட்டு உங்களுக்குத் தெரியும். புயல் வெள்ள நிவாரணப் பணியில் ஈடுபட வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் சென்னையில் ஒரு விழா ஏற்பாடு செய்து நிதி திரட்டினார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. பத்திரிக்கை நிருபர்கள் கேட்டார்கள். பத்திரிக்கையில் வந்த செய்திகளை ஆதாரமாக வைத்துச் சொல்கிறேன். அப்போது முதலமைச்சர் சொன்னார். ஆளுநர் கூட்டிய விழாவில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை என்று என்னைக் கேட்கக்கூடாது. ஆளுநர் ஏன் கூட்டினார் என்றும் என்னைக் கேட்கக்கூடாது என்று சொன்னார்கள். அதை நான் கருத்து வேறுபாடு என்று சொல்லவில்லை. கருத்து வேறுபாடு இருக்குமோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் வந்துவிடக்கூடாது.

இரண்டாவதாக, மதுவிலக்கு நிறைவேற்றுகிற மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் மானியம் வழங்க வேண்டும் என்று நான் சொன்ன நேரத்தில், ஆளுநர் அவர்கள் வேறு கருத்தைக் கூறினார்கள். ஆகவே, அதிலும் கருத்து வேறுபாடு இருக்குமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் வந்து விடக் கூடாது.

அதேபோல், மூன்றாவதாக, மதுரைப் பல்கலைகழக செனட் உறுப்பினர்கள் கூட்டம் 2—3 நாட்களுக்கு முன்பு நடந்தது. நான் அதற்கு செனட் உறுப்பினர் என்ற முறையில் சென்று இருந்தேன்.



1978 மார்ச் 28] [திரு. ஏ. ரகுமான்கான்]

அங்கே இன்னும் துணை வேந்தர் நியமிக்கப்படவில்லை. அதிலும் கூட அங்கே வந்து இருந்த பல்வேறு செனட் உறுப்பினர்கள் சொன்னார்கள். வெளியே அப்படி ஒரு கருத்து பரவலாக இருக்கிறது. இந்த துணை வேந்தர் நியமன விவகாரத்தில் ஆளுநர்-முதலமைச்சரிடையே கருத்து வேறுபாடு இருக்குமோ என்று சொன்னார்கள். நான் நம்பவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் கவர்னருக்கும், முதலமைச்சருக்கும் இடையே இருக்கக்கூடாது. இந்த அரசாங்கத்திற்கும் ஆளுநருக்கும் இடையே ஒரு நல்ல ஆரோக்கியமான உறவு முறை இல்லை என்ற கருத்து இருக்குமானால் அது நம்மைப் பெரிதும் பாதித்து விடும். தமிழக மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தவறான எண்ணத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. இரா. முத்தையா</u> : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினர்கள் அங்கே துணை வேந்தர் நியமிப்பதில் அரசுக்கும் ஆளுநருக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது என்று சொன்னதாகவும் இங்கே சொன்னார்கள். அப்படி எதுவும் நடக்கவில்லை. நானும் செனட் உறுப்பினர் என்ற முறையில் அங்கு சென்று வந்தேன். அப்படிப்பட்ட கருத்து எந்த அளவிலும் நிலவவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : அப்படி இருக்குமானால் மிகுந்த நன்றி.

துணைத் தலைவரவர்களே, மற்றொன்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர் ஒருவர் பி. எச். டி. பட்டப் படிப்பிற்காக, தீசிஸ் சப்மிட் செய்வதற்கு யூனிவர்சிடி, பல்கலைக்கழகத்தில் அனுமதி வாங்கியிருக்கிறார். அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. பி. எச். டி.-யைப் பொறுத்த வரையில் உங்களுக்குத் தெரியும். டாக்டர் பட்டம், அதைப் பெற சில விதிமுறைகள் இருக்கின்றன. பிரைவேட் ஸ்டடியாக யாரையும் அனுமதிப்பது இல்லை. ஆனால், இங்கே அமைச்சர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற படிப்பதற்கு அனுமதி பெற்று இருக்கிறார். அவர் கேட்டு இருக்கிறார். பல்கலைக்கழகம் அதைப் பரிசீலித்து இருக்கிறது, அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது எந்த அளவிற்கு உண்மை என்பதை தெளிவாக்கினால் நல்லது, இது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக ஆகாதா? அந்த எண்ணத்தை மக்களிடத்தில் உருவாக்காதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னால் சரியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : தயவுசெய்து சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். நேரம் இல்லை. இன்று மாலையும் நிகழ்ச்சி இருக்கிறது.

திரு. ஏ. ரகுமான்கான் : இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதைப்போல நம்முடைய துணைத் தலைவரவர்களே, உங்கள் கவனத்திற்கு இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தலைமைச் செயலகத்தில் சிகப்பு நாடா முறை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். கடைநிலை ஊழியர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் பிடிக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த அரியர்சை யும் இப்போது உள்ளதையும் சேர்த்துப் பிடிக்கிறார்கள். ஹவுஸ் ரெண்ட் அலவன்சையும் பிடித்துக்கொகிறார்கள். வாடைகயாக மாதம் 12 ரூபாய் பிடிக்கிறார்கள். இப்படிப்பட்ட வகைகளிலே சம்பளத்தைப் பிடித்தம் செய்வதால் ஒரு கணிசமான அளவு சம்பளத்தில் குறைந்து விடுகிறது. அது அவர்களுடைய வாழ்க் கைச் செலவுக்கு எந்தவிதத்திலும் போதாது. ஆகவே, அரி யர்சை ரயிட் ஆஃப் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சட்டமன்றத் துணைத் தலைவரவர் களே, தேர்தல்கள், அமைச்சர்கள், சட்டமன்றம், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

சட்டமன்றம் என்பது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை யில் ஜனநாயகத்தினுடைய மூன்று அங்கங்களில் மிக முக்கியமான ஒரு அங்கமாகும். இந்தச் சட்டமன்றம் எந்த அளவுக்கு முனைப் பாகவும் திறமையாகவும் செயல்படுகிறதோ, மக்களுக்கு நீதி செய்கின்ற முறையில் செயல்படுகிறதோ அந்த அளவுக்குத் தான் நாட்டிலே ஜனநாயகம் வேரூன்றும் ; நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்திருக் கிறார்கள்.

இன்றைக்கு சட்டமன்றத்தைப்பற்றி நம்முடைய அவை முன்னவர் அவர்கள் நன்கு அறிவார்கள். 'செப்பரேஷன் ஆப் பவர்ஸ்' என்று நம்முடைய அரசியல் சட்டத்திலே சட்டமன்றம் தனித்து இயங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய சட்டமன்றம் செயல்படுகின்ற முறையில் இதனுடைய தனித்தன்மை பாதிக்கப்படுகின்றதோ, ஏதோ ஊடுருவல் ஏற்படுகின்றதோ, Serious inroads into the independent realm of the Legislature- என்றமுறையிலே எக்சிகியூட்டி வினுடைய, நிர்வாகத்தினுடைய தலையீடுகள் ஆக்கிரமிப்புகள் சட்டமன்றத்தினுடைய தனித்தன்மைக்கு, சுதந்திர மாகச் செயல்படுவதற்கு பாதகம் ஏற்படுகிறதோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு குறைந்த பட்சம் இந்த நிர்வாகம் செம்மையாகச் செயல்பட வேண்டும் ; சட்டமன்றத்துறை என்பது ஒரு தனித் துறையாக இருக்க வேண்டும். இந்தத் துறைக்கு ஒரு பணியாளரை நியமிக்க வேண்டுமென்றால் பினான்ஸ் டிப்பார்ட்மென்ட் கன்கரன்ஸ் வாங்கவேண்டுமென்று இருக்கிறது.



அப்படி இருந்தால் இந்த சட்டமன்றம் தனித்து, சுதந்திரமாகச் செயல்படுவதற்கு சில இடையூறுகளை ஏற்படுத்தும் என்ற அச்சத் தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றத் துறைகளில், பினான்ஸ் இம்பிளிகேஷன் என்ன இருக் கிறது என்று ஆராய்வதற்கு, அறிவதற்கு பினான்ஸ் டிப்பார்ட் மென்ட் உரிமை பெற்றிருந்தாலும் சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் பினான்ஸ் டிப்பார்ட்மென்டுக்கு எந்தவிதமான அதிகார மும் உரிமையும் இருக்கக்கூடாது. இது ஒரு தனித் துறையாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு நம்முடைய சட்டமன்றத்தில் பணி செய்யக் கூடியவர்களில் புதியவர்கள் வருகிறார்கள். வயதானவர்கள் ரிட்டயர் ஆகிச் செல்கிறார்கள். ஆகையால் புதியவர்கள் வரும்போது சட்டமன்றத்தின் நடைமுறைகளை, நெறிமுறைகளை எப்படி கையாள்வது, சட்டமன்றத்தினுடைய சட்டதிட்டங்களுக்கு, மரபுகளுக்கு உட்பட்டு நிலைமைகளை எல்லாம் காப்பாற்றுவது எப்படி, எந்த எந்த நிலைமைகளிலே எந்தெந்த நெறிமுறைகளை, மரபுகளை நாம் காப்பாற்றி வருகிறோம், எந் தெந்த சந்தர்ப்பங்களில் புதிய நெறிமுறைகள் உருவாகும் போது புதிய விளக்கங்களைத் தரமுடியும், எப்படி நடைமுறைப் படுத்த முடியும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக நம்முடைய சட்டமன்றத்தில் வேலை செய்கின்றவர்கள், அதிகாரிகளாக இருந் தாலும், அதிகாரிகளுக்குக் கீழ்நிலையில் இருந்தாலும் நம்முடைய நாட்டின் மையமாக விளங்குகின்ற பாராளுமன்றத்தில் ஒருசில நாட்கள் இருந்து ட்ரெயினிங் பெறுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.

குறிப்பாக சட்டத் துறையிலே வேலை செய்கின்றவர்கள் பாராளுமன்றத்திற்குச் சென்று, ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு அங்கே இருந்து, எப்படி பாராளுமன்றம் நடக்கிறது, எப்படி நெறி முறைகள் கையாளப் படுகின்றன என்பதில் 'பிராக்டிகல் ட்ரெயினிங்' அதிகாரிகள் பெற வேண்டும். அப்படி ட்ரெயினிங் பெறுகின்ற வகையிலே அவர்களை டிப்யூட் செய்து, ட்ரெயினிங் பெற்றுக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இப்படிச் சொல்வதால் இங்கே இருக்கின்ற அதிகாரி களுக்கு திறமை குறைவு அல்லது விஷயம் தெரியவில்லை என்று உறுப்பினர் குறை கூறுவதாக யாரும் நினைத்துக்கொள்ளக் கூடாது. அதிகாரிகள் நல்ல திறமைமிக்கவர்கள், விஷயம் தெரிந் தவர்கள் ; அதைப்பற்றி நான் குறைசொல்லவில்லை. அவர்கள் பதவிக்கு வரும்போது அப்படிப்பட்ட ட்ரெயினிங் கொடுத்தால் அது ஒரு நல்ல அடிப்படையாக அமையும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விழைகிறேன்.

[திரு எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 28

ஒரு நல்ல அடிப்படையில் உதவும் என்ற காரணத்தினால் நான் இதை நான் வற்புறுத்திச் சொல்கிறேனே தவிர வேறல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய சட்டமன்றத் துறைக்கு என்று ஒரு தனி காசாளர் அதாவது காஷியரை நியமிக்க வேண்டும். ஏதாவது ஒன்றை 'என்கேஷ் செய்யவேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. ? சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செக் கொடுக்கிறார்கள். அங்கே நாங்கள் 3 மணிக்குள்ளாக வந்தாக வேண்டும். அதற்குள் அந்தச் செக்கை எடுத்துக்கொண்டு அங்கே செல்லவேண்டும். இல்லாவிட்டால் நாளைக்குத்தான் வரவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, சட்டமன்றத்திற்கென்று ஒரு தனி காசாளர் இருப்பாரேயானால் அது மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆகவே, செக்ரட்டேரியட்டுக்காவது ஒரு தனி காசாளர் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் சட்டமன்றம் மிகவும் முக்கியமானதொன்று. நாட்டு மக்கள் எல்லாம் இங்கே என்ன நடக்கிறது என்பதை அறிய ஆவலோடு இருக்கிறார்கள். விஷயம் தெரிந்தவர்களும், விஷயம் தெரியாதவர்களும், பாமரர்களும் படித்தவர்களும் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆனால் சட்டமன்றத்திற்கு உள்ளே எப்படிச் செல்வது அதற்கு யாரை அணுகுவது எப்படி அணுகுவது என்று கஷ்டப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. யாராவது எம்.எல்.ஏ. இருந்தால் தான் அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால்தான் அனுமதி கிடைக்கிறது. ஆகவே பொதுமக்கள் எல்லோரும் சட்டமன்ற நடவடிக்கைகளை எல்லாம் அறிந்துகொள்வதற்கு தெரிந்துகொள்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்காக ஒரு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கமிட்டி ஆன் கவர்ன்மென்ட் பெட்டிஷன்ஸ் பற்றி சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குழுவினை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக கமிட்டி ஆன் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் என்றும், கமிட்டி ஆன் ஷெட்யூல்டு ட்ரைப்ஸ் என்றும் ஏற்படுத்தி அதற்கு பல சட்டமன்ற உறுப்பினர்களைப் போட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதிலே பல விதிமுறைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதேமாதிரியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் தனியாக ஒரு கமிட்டி அமைப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு எம். ஏ. லத்தீப்]

அடுத்து, இங்கே சட்டமன்றப் பேரவைத்துறையில் லைப்ரரி ஒன்று இருக்கிறது. அந்த நூலகத்திலே புத்தகங்கள் எல்லாம் சரியாக வைக்கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. எந்தப் புத்தகம் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியவில்லை. அங்கே எவ்வளவு புத்தகங்கள் இருக்கின்றன என்பதும் தெரியவில்லை. அங்கே எவ்வளவு ரெஃபரன்ஸ் புத்தகங்கள் இருக்கின்றன என்பதும் தெரியவில்லை. நாட்டு நடப்புகளை ஒட்டி எவ்வளவு நூல்கள் அங்கே இருக்கின்றன என்பதும் தெரியவில்லை. அந்த நூலகத்தில் உட்கார்ந்து படிப்பதற்கு இடம் இல்லை. இந்தச் சூழ்நிலை நிலவுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்ய முடியும் என்பதைத் தயவு செய்து கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கென்று தனியாக ஒரு நூலகக் குழு ஒன்று ஏற்படுத்தி இந்த நூலகம் நல்ல முறையில் உறுப்பினர்களுக்குப் பயன்படுகின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியமானதொன்று என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சட்டமன்ற இடம் இருக்கிறதே இது ரொம்பவும் குறுகலான இடமாக இருக்கிறது. இங்கே நடமாடக்கூட முடியாத நிலைமை இருக்கின்றது. நம்முடைய துறைக்காக ஒரு தனிக் கட்டிடம் கட்டினால் கூட நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். சட்டமன்றம் அடங்கிய துறைக்கு ஒரு நல்ல கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும் அல்லது மற்ற ஆபீஸ்களை இங்கேயிருந்து வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டு இங்கே இருக்கின்ற அறைகள் பூராவும் சட்டமன்றத்திற்கு பயன் உள்ளதாக இருக்கின்ற முறையில் மாற்றினால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

இப்போது நம்மைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். ரெயில்வே கூப்பன்கள் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிவிட்டிருக்கிறார்கள். ரெயில்வே கூப்பன்கள் இப்போது கொடுப்பது 10,000 கிலோ மீட்டர், அந்த 10,000 என்பதை 20,000 கிலோ மீட்டர் என்ற அளவிற்காவது உயர்த்தி மனைவியாக இருந்தாலும் சரி—சிலபேர்கள், எங்களுக்கு மனைவி இல்லையே, நாங்கள் என்ன செய்வது என்று கேட்கிறார்கள் ( Wife or any companion ) பாராளுமன்றத்தில் அப்படி வைத்திருக்கிறார்கள். அது மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குத் தெரியும். 'கம்பானியன்' என்று சொல்வார்கள். இல்லாவிட்டால் சர்வென்ட் என்று சொல்வார்கள், சர்வென்ட் என்று சொல்வதற்கு நான் தயாராயில்லை, 'கம்பானியன்'க்காக அதை ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே 10,000 என்றிருப்பதை 20,000 கிலோ மீட்டர் என்றாவது ஆக்கலாம்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 28

இப்போது உறுப்பினர்களுக்கு ரூ. 35 அலவன்ஸ் கொடுக்கிறார்கள். இந்த ரூ. 35 என்பது காலையில் மட்டும், சில நாட்களில் ரூ. 50 செலவாகிவிடுகிறது. பிரத்தியட்ச நிலையை சொல்கிறேன். ஏன் இப்படிச் செலவு செய்கின்றீர்கள் என்று கேட்டால், என்ன செய்வது, எங்கள் தலைவிதி செலவழித்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. காலையில் பத்து பேர்கள் தொகுதியிலிருந்து வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கும் செலவழித்துத்தான் ஆக வேண்டும். அவர்களை வைத்துக்கொண்டு நான் மட்டும் எப்படி சாப்பிட முடியும்? அவர்களுக்கும் தருவித்துத்தான் சாப்பிடவேண்டியிருக்கிறது. சில நேரங்களில் அங்கிருந்து வந்தவர்கள், வழிச் செலவிற்குப் பணம் இல்லை என்றால் பணத்தையும் கொடுத்து அனுப்பவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே ஏன் இந்த 35 ரூபாய் என்றிருக்கவேண்டும்.

Why should it be Rs. 35 ? Why not you go up to Rs. 50 at least? அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், ஸாலரி ரூ. 550. ஸாலரி, அலவன்ஸ் எல்லாம் சேர்த்து, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட நிலைமை இல்லை என்று கருதுகிறேன். ஐந்து நாட்களுக்குத்தான் வரும் என்று தண்டபாணி அவர்கள் சொன்னார்கள். இது நிதர்சனமான உண்மை. நான் இதைப் பற்றி இங்கே பேசினால் மக்கள் என்ன கருதுவார்கள் என்று கேட்கிறார்கள். எவ்வளவோ பேர்கள் நம்மிடம் கேட்கிறார்கள், எப்படி ஸார், இந்த ரூ. 550 போதும் என்று கேட்கிறார்கள். என் தொகுதியில் இருந்து வந்து என்னைப் பார்க்கிறவர்கள், ஏன் ஸார், உறுப்பினர்களுக்கு ரூ. 550 தான் சம்பளமாமே, எப்படி ஸார் இது போதும், நீங்கள் செலவு செய்வதைப்பார்த்தால் இந்த ரூ. 550 எப்படிபோதும், எப்படி, என்ன என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆகவே தயவுசெய்து மக்கள் நம்மைப் பற்றி தவறாகப் புரிந்துகொள்ளாமல் இருக்க தயவுசெய்து இந்த ரூ. 550 என்பதை ரூ. 800 அல்லது ரூ. 1,000 என்று செய்யுங்களேன். இதில் என்ன தவறு இருக்கிறது? இந்தமாதிரி ப்ரிஸம்ஷன்ஸ் இல்லாமல் இருக்கவேண்டும். ஆகவே தயவுசெய்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் டெலபோன் இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? நான் இப்போது என் தொழிலைவிட்டு விட்டுவந்து பேசிக்கொண்டிருக்கிறேன். அங்கே போய் பேசினால் ஆயிரம் ரூபாய் பீஸாவது கிடைத்திருக்கும். வெளியே கட்சிக்காரர்கள் நிற்கிறார்கள். இதைப் பற்றி இங்கே பேசவேண்டுமென்றுதான் வந்திருக்கிறேன். அதுதான் இந்த டிரஸ்ஸோடு இங்கே வந்திருக்கிறேன். கட்சிக்காரர்கள் வெளியே காத்திருக்கிறார்கள். கட்சிக்காரர்களை விட்டுவிட்டு இங்கே வந்து பேசவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி இங்கே பேசிவிட்டுப் போக வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். வாக்காலத்து பைல் பண்ணாமல் பேசுகிறேன் என்று பேசிக்கொண்டிருக்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு. எம். ஏ. லத்தீப்]

தயவு செய்து இந்த போன் வசதியை இன்க்ரீஸ் செய்யவேண்டும். குறைந்தபட்சம் தொகுதிக்கு, உறுப்பினர்கள் தொகுதிகளுக்கு ட்ரங்க் கால் செய்ய ஹாஸ்டலில் அலவ் செய்யவேண்டும். கையெழுத்து போடவேண்டும் என்று சொல்வது சரியல்ல. மாதம் ஒன்றுக்கு ஒருசில நாட்கள் தொகுதிக்கு ஏதாவது அவசரமான காரியங்களுக்காக ட்ரங்க் கால் செய்யவேண்டுமென்றால் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மெயின் லைன் ஹாஸ்டலில் இருக்கிறது. யு.என்.ஓ.வில்கூட, பெரிய இன்டர்நாஷனல் ஆர்கனைசேஷனில் கூட, சீக்கிரம் கனெக்ஷன் கிடைத்துவிடும் இங்கே போன் செய்து கை வலித்து ஐந்து மணிநேரம் தவம் கிடந்தால்தான் எக்ஸ்சேஞ்சிலிருந்து கனெக்ஷன் கிடைக்கும் 25 மெயின் லைன்ஸ்தான் இருக்கின்றன. 50 மெயின் லைன்ஸ் கூட இல்லாமலிருந்தால் எப்படி உடனடியாகக் கிடைக்கும்? பாவம் அங்குள்ளவர்களைச் சொல்வதற்கில்லை, அவர்களைக் குறை கூறவில்லை. அதையும் செய்யவேண்டும்.

நேற்றுகூட கேட்டார்கள், நாலைந்து எம்.எல்.ஏ.க்கள் பேசிக்கொண்டிருந்தோம். தாராபுரம் எம்.எல்.ஏ. பேசிவிட்டுப்போகும்போது ஜேம்ஸ் அவர்கள் கேட்கிறார்கள் இவர் யார் என்று. என்ன செய்வது? தாராபுரம் உறுப்பினரைப் பார்த்து, இவர் யார் என்று கேட்கிறார் ஜேம்ஸ் அவர்கள். ஆக, யார் யார் என்று யாருக்கும் தெரியவில்லை. ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு அங்கு ஒரு காமன் ஹால் தேவை. காமன் காதரிங்-க்கு சோஷயல் காண்டாக்ட்க்கு ஒரு காமன் ஹால், இடம் அங்கில்லை. ஆகவே ஹாஸ்டலில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து உட்கார, அவர்கள் பேச, கருத்துக்கள் பரிமாறிக் கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க ஒரு காமன் ஹால் தேவை, அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவைப்பற்றி பலரும் சொன்னார்கள். நமது அவை முன்னவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் அங்கு சாப்பிடுவதே கிடையாது. நான் ஆஸ்டலில் சாப்பிடுவதில்லை, எங்கேயோ வெளியில் டாக்ஸியில் போய்தான் சாப்பிட்டு வருகிறேன். நமது முன்னவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். மற்ற இடங்களில் எல்லாம் நன்றாக இருக்கிறது, இங்கே இருக்கின்ற சாப்பாட்டை சாப்பிட்டு எனக்கு வியாதியே வந்துவிட்டது, என்னுடைய டெம்பரே மாறிவிட்டது ....(சிரிப்பு) நமது அவை முன்னவர் அவர்கள் நீண்ட நாட்கள் பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார்கள். அங்கெல்லாம் சப்ஸிடி ரேட்டில் உணவு கொடுக்கிறார்கள், எவ்வளவு நல்ல உணவாக இருக்கிறது அந்த உணவை சாப்பிட்டுவிட்டு சபையில் வந்து நன்றாக பேச முடியும், நல்ல ஆரோக்கியத்தோடு வந்து பேச முடியும்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 28

அது மட்டுமல்ல, இங்கே என்ன நடக்கிறது என்ருல், நம்மைப் பார்த்துவிட்டால், எம்.எல்.ஏ.க்கள் இருக்கிருர்கள் என்பதற்காக சரியாக பில்லைப் போடுவார்கள். அப்படியில்லாமல் நம்மோடு கூட பத்து பேர்கள் அல்லது ஏழு பேர்கள் வந்து விட்டால், பில் டபிள், ட்ரிபிள் என்றெல்லாம் போட்டுவிடுவார்கள். காரணம் எம்.எல்.ஏ.யின் பின்ஞல் தானே இவர்கள் வருகிருர்கள் என்று எண்ணிக்கொண்டு போட்டுவிடுகிருர்கள். முதலில் காசு கொடுப்பதற்காக எம்.எல்.ஏ. பையில் கை போடவும் இல்லை. நாங்கள் கொடுக்கிருேம் என்று அவர்கள் சொல்லவும், இல்லை. நாங்கள் கொடுக்கிருேம் என்று இவர்கள் சொல்லவும், இப்படியாக யாரும் கணக்கு கேட்பதில்லை, இந்த மாதிரியான அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் கேட்டுக்கொள்வது குறிப்பாக அந்த 'மெஸ்' உடனடியாக மாற்றப்பட்டாக வேண்டும். அதுவும் உடனேயே.................இந்த மெஸ் மாற்றப்பட்டாக வேண்டும். (ஆரவாரம்) என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, ஆபீசில் சூப்பர்வைசரி ஸ்டாஃப்கள் இருக்கிருர்கள். இவர்களுக்கு ப்ரமோஷன் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது, அதிகமான ப்ரமோஷன் சான்ஸ் இருக்கவேண்டும். பொதுவாக லெஜிஸ்லேச்சர் டிப்பார்ட்மென்டில் இன்னும் அதிகமான ஆட்கள் நியமிக்கப்பட வேண்டும். இதற்கான உத்திரவாதம் தரப்பட வேண்டும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள், இன்னும் பலர் பேசவேண்டியிருக்கிறது...... (குறுக்கீடு) லத்தீப் அவர்களே தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கட்டும் என்ருல் மற்றவர்களுக்கு பேசுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதை இந்த அவை ஏகமனதாக வரவேற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களால் எந்த அளவு வரை பேசமுடியுமோ அந்த அளவுவரை அவர்களை பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, லத்தீப் அவர்கள் பேசுவதை எல்லாம் ஏகமனதாக நாங்கள் ஏற்றுக்கொள்வதாகச் சொன்ஞர்கள். அவர்கள் பேசுகின்ற எல்லாவற்றிலும் நாங்கள் ஒருமைப்பாடு கொண்டவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணுநிதி : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறியதை நானும் ஆதரிக்கிறேன்.



1978 மார்ச் 28]

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் ஏகமனதான கருத்து என்று கூறினது, பெருவாரியான அங்கத்தினர்கள் ஆதரிக்கிருர்கள் என்பதைத்தான் ஏகமனதாக ஆதரிக்கின்ருர்கள் என்ற கருத்தில் சொன்னேனே தவிர லத்தீப் அவர்கள் கூறியதை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்கிருேம் என்ற பொருளில் சொல்லவில்லை.

திரு கே. கந்தசாமி : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கம்யூனிஸ்ட்டு மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரும் கூறிய கருத்து அவர்களுடைய சொந்தக் கருத்து என்று கருதுகிறேன். ஏனென்ருல் அவர்களுடைய கட்சியிலுள்ள உறுப்பினர்களின் கருத்து அதுவல்ல என்று கருதுகிறேன். எல்லாக் கட்சியிலுள்ள உறுப்பினர்களும் லத்தீப் அவர்கள் சொல்வதை ஆதரிக்கிருர்கள். ஆதலால் லத்தீப் அவர்களைப் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு லத்திப் அவர்கள் சிக்கிரமாக முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோல்தான் இருக்கவேண்டும், காரம் இருக்க வேண்டும், இனிப்பு இருக்க வேண்டும். புளிப்பும் இருக்கவேண்டும். நான் சொல்வது எல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருக்கலாம். சில ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கலாம். பொதுவாக இது ரசிக்கக்கூடியதாக இருக்கிறது. பொதுவாக சொல்லப்படுகின்ற கருத்துக்களைத் தான் நாம் கவனிக்கவேண்டும். சூப்பர்வைசரி ஸ்டாஃப்களை பொறுத்தவரையில் அதிகமான ப்ரமோஷன் வாய்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, ரூம்களில் அவசரத்திற்கு கூப்பிட்டால் போதிய அளவு பியூன்கள் இருப்பதில்லை. ரூம் பாய்-களை அதிகமாக நியமிக்கவேண்டும். இப்போது இருப்பது போதாது. ஸ்டாஃப்கள் போதாது, ஆஸ்டலை கவனிப்பதற்கு என்று தனியாக ஒரு டெப்டி செக்ரடரி போடவேண்டும். இதையெல்லாம் நீங்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமையின் காரணமாக அடிக்கடி சென்னைக்கு வருகின்ருர்கள். வேறு காரியங்களுக்கு என்று வந்தால் வாடகை போடவேண்டியதுதான். குறிப்பிட்ட வேலைகளுக்கு வரும்போது வாடகை போடுவது நியாயமல்ல. அதிலும் வாடகை போடுவது ஆர்பட்டரியாக இருக்கிறது. திடீர் திடீரென்று பில் வருகிறது. திடீரென்று டிரங்க் கால் பில் 150 ரூபாய்க்கு வருகிறது. நான் டிரங்க் கால்-லே போடவில்லையே எங்கிருந்து பில் வருகிறது என்று

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 28

கேட்டால், வேறு யாரோ ஒருவருடைய பெயரில் வரவேண்டியது உங்கள் பெயரில் வந்துவிட்டது சார், சரியாக பார்த்து பின்னால் சொல்கிறேன் என்று போகிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று பார்க்கும்போது, ஸ்டாஃப்கள் போதாது, ஸ்டாஃப்கள் அதிகமாகப் போட வேண்டும், முக்கியமாக ஒரு டெப்டி செக்ரட்டரி போடவேண்டும்.

[பிற்பகல் 12.50]

இன்னும் இரண்டு அடிஷனல் செகரடரிகள் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி பஸ்களில் செல்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்கள் எங்கள் தொகுதிகளுக்குப் போகும்போது, அங்குள்ள மக்கள் பெட்டிஷன்கள் கொடுக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தால், அவர்களுக்கு 6 தொகுதிகள் இருக்கின்றன. இந்தத் தொகுதியிலே இருந்து, அந்தத் தொகுதி என்றும், அந்தத் தொகுதியிலே இருந்து, இந்தத் தொகுதி என்றும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், நாங்கள் அவ்வாறு சொல்ல முடியாது. ஆகவே, மக்களோடு இருக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கான காரியங்களை நல்ல முறையிலே செய்யவேண்டியிருக்கிறது. ஒரு முறை தொகுதிக்குச் சென்றுவந்தால், அமைச்சராகிய உங்களிடம் எவ்வளவு பெடிஷன்கள் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைத்தவிர, அங்குள்ள கலெக்டரிடம், ஆர்.டி.ஓ.விடம், தாசில்தாரிடம், இன்னும் டீ.இ., ஏ.இ., சீ.இ., எஸ்.இ. என்று இன்னும் இப்படி பல பேர்களிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு கிளார்க் வேண்டாமா? நாங்கள் என்ன செய்வது? ஒரு கிளார்க் கொடுத்தால், நாங்கள் செம்மையாக நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு கிளார்க்கை, பி.ஏ. மாதிரி கொடுக்கலாம். இந்த கிளார்க் எங்களோடு சேர்ந்து தேவையானால் பஸ்ஸில் பிரயாணம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யலாம். எனவே, இது மக்களிடையே நல்லமுறையிலே சேவை செய்வதற்கான திட்டம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> தயவுசெய்து சிக்கிரம் முடியுங்கள். இன்னும் இரண்டு பேர்கள் பேச வேண்டியிருக்கிறது.



1978 மார்ச் 28]

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> கடைசியாக, எக்ஸ் எம்.எல்.ஏ.-க்களுக்கு இப்போது 250 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி கொடுக்கும்போது, இரண்டு டெர்ம்கள் உறுப்பினர்களாக இருந்தால்தான் கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே ஒரு டெர்ம் இருந்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஒரு டெர்ம் எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் இந்த உதவி கொடுக்க வேண்டும். பாவம், கொஞ்சம் கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். பெயரை வேண்டுமானாலும் சொல்கிறேன், பரவாயில்லை. நமது கோதண்டராமையா அவர்கள் வாழ்க்கைக்கு வசதியில்லாமல் இருக்கிறார்கள். லத்தீப், இதைப்பற்றிக் கொஞ்சம் பேசுங்கள் என்று சொன்னார். எங்கள் தளபதி திருப்பூர் முகைதீன் அவர்கள் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வயதானவர்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு தடவை இருந்தாலும் பென்ஷன் கொடுக்கலாம். இப்பேர்ப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் கொடுக்கிறார்கள். தயவுசெய்து, அதை நீங்களும் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு இந்த 250 ரூபாய் என்பது கொஞ்சம். ஆகவே, இன்னும் சற்று அதிகமாக 350 ரூபாய் என்று கொடுத்தால், வாழ்க்கையை வசதியாக நடத்துவதற்கு உதவும்.

தவிர, இப்படி சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் இன்னொரு டிஸ்-குவாலிபிகேஷனும் இருக்கிறது. என்னிடத்திலே ஜூனியராக இருப்பவர்களே, என்னைப் பார்த்து, நீங்கள் எங்களுக்கு ஜூனியராக வரக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கிறது. காரணம், அந்த வக்கில் தொழிலிலே இருந்து, இப்படி சட்டமன்ற உறுப்பினராக வந்துவிடுவதால், அந்தத் தொழிலிலே ஒரு பிடிப்பு இல்லாமல் போய், அதன் காரணமாக வருமானமும் போய்விடுகிறது. கேஸ் கொடுப்பவர்களும், லத்தீபா, அவன் ஊரைச் சுற்றிக் கொண்டு இருப்பானே, அவனிடமா கொடுப்பது என்ற நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்த வரையில் எங்களுக்குச் சலுகைகள் செய்யாவிட்டாலும், இந்த ரிடையர்ட் ஆன எக்ஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று வாதாடுகிறேன். சாத்தியமான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒரு மினிஸ்டர் சம்பளம் 1,000 ரூபாய் என்று சொல்லும்போது, இது உண்மைதானா? அதிலே அவர்கள் வாழ்க்கை நடத்த முடியுமா என்று ஜனங்கள் கேட்கிறார்கள். ஜனங்கள் வேறு மாதிரியாகவும் பேசுகிறார்கள்.

It is a dignified post, not a question of . . . . . . . . . . . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது, எம்.எல்.ஏ.வாக ஆனபிறகு எங்களிடம் வழக்கைத் தரமாட்டார்கள் என்று சொன்னார்கள். எம். எல். ஏ—வாக ஆகி வழக்கறிஞர்களாக பணியாற்றக் கூடியவர்களை, இது பாதிக்கும் என்பதால், அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை அவர்கள் விளையாட்டாகத்தான் சொன்னார்கள். இது பரவாயில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : மினிஸ்டர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் என்று சொன்னால், ஒரு வேளை காப்பி, டீ போன்றவைகளை வழங்குவதற்கு இது ஒரு மினிஸ்டருக்குப் போதுமா? இன்னும் எத்தனையோ பேர்களுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள், நினைப்பார்கள் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். வேறு விதமாக நினைக்கிறார்கள், தயவுசெய்து உங்களுடைய பொஸிஷன், பைனான்ஸ் மினிஸ்டர். It is not a question of Mr. Manoharan. It's a question of Hon'ble Minister for finance, Government of Tamil Nadu. He must safeguard the interest of the institution and the post that he holds. எனவே, இந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது கட்டாயம் போதாது. ஐ.ஏ.எஸ். ஆபீசர்களுக்கு இருக்கக்கூடிய சம்பளம் கூட இல்லையே. அந்த அளவிற்காவது கொடுக்கக்கூடாதா? எனவே, இதைப் பரிசிலனை செய்து முறையாக சம்பளம் அறிவிக்கப்படவில்லை என்று சொன்னால் "You do not respond to the wshes of the people" என்று அர்த்தம்.

திரு. கே. கந்தசாமி : குறைந்த பட்சம் 2,000 ரூபாய் சம்பளம் இந்த அமைச்சர்கள் பதவிக்கு இருந்தால்தான் கவுரவமாக இருக்கும். எம்.எல்.ஏ.க்கள் வருகிறார்கள். அவர்களுக்கு காபி வாங்கிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைத் தயவுசெய்து பரிசிலனை செய்து, உறுப்பினர்கள் கருத்தை அமுல்படுத்துமாறு, செயல்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : கவர்னருக்கு எவ்வளவு ரூபாய் சம்பளம்? கவர்னர் ஃபங்ஷன் என்ன? உங்கள் ஃபங்ஷன் என்ன? கவர்னருக்கு மக்களிடத்தில் தொடர்பு என்ன? உங்களுக்கு மக்களிடத்தில் தொடர்பு என்ன? கான்ஸ்டிட்யூஷனல் ஹெட் என்ற நிலைமையில் இருப்பவருக்கே அவ்வளவு சம்பளம் இருக்கிறது என்றால் உண்மையிலேயே மக்களிடத்தில் சேவை செய்யக்கூடிய உங்களுக்கு எவ்வளவு இருக்க வேண்டும்? ஏதோ ஒரு காரணத்



தாலே அதைக்கொண்டு வந்தார்கள். அதைக் கொஞ்சம் ஏற்றுங்கள்—நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—that is a different matter. But we do press it. நாங்கள் அதைக் கேட்கிறோம். போஸ்டுகளின் கவுரவத்தைக் காப்பாற்றவேண்டும்.

டெபுடி ஸ்பீக்கர்—என்ன அநியாயம், அவருக்கு படி கூடக் கிடையாதாம். சம்பளம் 500 ரூபாய்தான்.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உங்களை இன்புளுவன்ஸ் செய்து அதிக நேரம் பேசப் பார்க்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: I am interested in the matter. ஆனால் அதற்காக நான் ''ஈல்டு'' ஆகமாட்டேன். நேரம் ஆனவுடன் மணி அடித்துவிடுவேன்.

திரு. எம்.ஏ. லத்தீப்: டெபுடி ஸ்பீக்கருக்குக் காரைக் கொடுத்து விட்டால் மட்டும் போதுமா? அவருக்கு இருக்கிற வீட்டுக்குக் கூட வாடகை கொடுக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பது சரியல்ல. எனக்கு ரொம்ப நாளாக விஷயம் தெரியாது. டெபுடி ஸ்பீக்கர் என்றால் ஏதோ விஷயம் இருக்கிறது என்று நினைத்தேன். போஸ்ட் டிக்னிஃபைட் போஸ்டுதான். I do understand. டிக்னிடியைக் காப்பாற்றிக் கொள்ள ரெம்யூனரேஷன் வேண்டாமா? அவருடைய சம்பளத்தை ஏற்றிக் கொடுக்கவேண்டும். டெய்லி பேட்டா கொடுக்கவேண்டும். ஒரு வீடு கொடுக்கவேண்டும்.

இப்படியெல்லாம் கோரிக்கை வைக்கக் காரணம், மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நாம் செம்மையாக செயல்பட வேண்டுமென்ற காரணத்தால்தான் சொல்லுகிறேனே தவிர, வேறல்ல.

அதோடு ஹாஸ்டலைத் துப்புரவுபடுத்த வேண்டும். பல தடவை சொல்லி குறிப்பிட்டேன். நீக்கப்பட்ட பிரச்சினை. அதற்குள்ளே போக விரும்பவில்லை. அங்கு இருப்பவர்கள் டிக்னிஃபைட் பர்சன்ஸ் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். ஹாஸ்டலில் இருக்கும் எம்.எல்.ஏ.க்களில் டயபிடிஸ், பிரஷர், ஹார்ட் அட்டாக், இந்தமாதிரி கேஸஸ் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் ஃபுட் பால், வாலி பால் ஆட ஒரு வாய்ப்பு அங்கு இருக்குமானால், அதனால் வியர்வை வருமானால் உறுதியாக இருப்பார்கள், வியாதி தீரும். அதை ஏற்படுத்த வேண்டும்.

கார்டனை அழகுபடுத்த வேண்டும். தற்போது ஹாஸ்டலில் யார் நினைத்தாலும் அறைக்கு வந்துவிடுகிற நிலை இருக்கிறது. கேரள அசெம்பிளியில் உறுப்பினர்களைப் பார்க்க

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 28

யாராவது வந்தால், அறைக்கு ஃபோன் பண்ணி இன்னார் உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள் என்று சொல்வார்கள். அவர்களை அறைக்கு அனுப்ப மாட்டார்கள். எம். எல். ஏ. அந்தப் பொதுவான இடத்திற்கு வந்து அவர்களைப் பார்ப்பார். அந்த முறை இருந்தால்தான் படிக்க வாய்ப்பாக இருக்கும். இப்போது ஒரு பாலிசி நோட்டைக் கூட முழுமையாகப் படிக்க நேரம் இல்லை. படிக்க எங்கே விடுகிறார்கள்? அந்தமாதிரி இங்கும் மாற்றம் செய்ய வேண்டும்.

மக்களுக்காகத்தான் உறுப்பினர்களும், அமைச்சர்களும், மற்றவர்களும் இருக்கிறார்கள். மக்களுடைய நன்மைக்கும் ஜனநாயகம் செம்மையாக இருப்பதற்கும் இந்தக் காரியங்கள் செய்யப்படுவது இன்றியமையாதது என்ற காரணத்தால்தான் இவற்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர், அவை முன்னவர் எங்களுக்கு கார்டியனாக இருந்து இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று எல்லோர் சார்பாகவும் கேட்டு அமர்கிறேன்.

## 9. அமைச்சரின் அறிக்கைகள்.

### (அ) கவியரசு கண்ணதாசன் அவர்கள் ஆஸ்தானக் கவிஞராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்த கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1949-ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஆஸ்தானக் கவிஞராக நியமிக்கப்பட்டார். அதற்குப்பின் ஆஸ்தானக் கவிஞரை நியமிக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. இவ்வரசு இப்பொழுது மீண்டும் அதனைப் புதுப்பிக்கக் கருதியுள்ளது.

கவியரசு கண்ணதாசன் அவர்களை ஆஸ்தானக் கவிஞராக நியமித்திட அரசு முடிவு செய்துள்ளது. அவருக்கு சிறப்பூதியமாக மாதம் ரூ. 1,000 வழங்கப்படும். மற்றும் உந்து வண்டி போன்ற வசதிகளும் அளிக்கப்படும்.

### (ஆ) சித்த மருத்துவக் குழுவில் திரு. மாசிலாமணி அவர்கள் இடம் பெறுவது குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவக் குழுவில் மேலவை உறுப்பினர் திரு மாசிலாமணி அவர்கள் இடம் பெறுகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 28]

[பிற்பகல் 1-00]

## 8. 1978–79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், மாநில நிர்வாகம், தேர்தல்கள் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்று காலையிலிருந்து பல்வேறு உறுப்பினர்கள் சட்டமன்ற நிர்வாகம் எப்படி எல்லாம் இருக்கவேண்டுமென்று வெகு தெளிவாக எடுத்துத் தெரிவித்த கருத்தை நானும் அதையே தொடங்க விரும்பவில்லை. நம்முடைய அவை முன்னவர் அவர்கள் ஏற்கெனவே டெல்லி மாநகரை ஒரு பதினைந்து ஆண்டுக்காலம் வலம் வந்தவர் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாநில நிர்வாகம் என்று எடுத்துக்கொண்டால் இன்றைக்குப் பல்வேறு தரப்புகளிலே தலையீடுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். மாநிலத்திலே இருக்கின்ற அதிகாரிகள், பெரிய அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகளை அழைத்து எப்படி எப்படி வழக்குகள் இருக்கவேண்டுமென்று இன்னமும் அச்சுறுத்துகின்ற பழக்கவழக்கம் இருக்கிறது, அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. கே. பண்ணைசேதுராம்) தலைமை]

மாநில நிர்வாகம் என்றால் தலைமைச் செயலாளரைக் குறிக்கும் மாநில நிர்வாகம் என்றால் ஐ.ஜி. ஆப் போலீசைக் குறிக்கும், ஆக இந்த இருவரோடு சேர்த்து முதலமைச்சர் அவர்களையும் சேர்த்து 3 பேர்களும் சேர்ந்துதான் மாநிலத்தினுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீதிக்குள்ளே நிர்வாகம் குறுக்கிடக்கூடாது என்பது பழமொழி. நீதிக்குள்ளே நிர்வாகம் குறுக்கிடக்கூடாது என்ற நிலைமை இருக்கவேண்டும். அப்படிக் குறுக்கிட்டதால் ஏற்பட்ட நிலைமையை நாம் அமெரிக்க நாட்டை இன்னொரு முறை கண்ணோக்கிப் பார்க்கவேண்டும் என்ற நிலைமை வந்துவிடும். அநேகமாக யாரும் மறந்துவிடமாட்டோம்.

அமெரிக்காவிலே வாட்டர்கேட் நிகழ்ச்சி, அமெரிக்கா என்றாலே வாட்டர்கேட் என்பதுதான் பழமொழி. இப்போதைய சர்க்காரும் வாட்டர்கேட் விவகாரம்போல் நடந்து கொள்கிறது. நான் எங்கேயாவது தொலைபேசி மூலம் பேசுவேன், கடக் என்று சத்தம் கேட்கும், எனக்குத் தெரியும்

அதை யார் செய்கிறார் என்று. இப்படி டேப் செய்யும் முறையை விட்டுவிடவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக கட்சி ஆபீஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறது, அங்கே காலையிலிருந்து இரவு பத்து மணி வரை கூட தொலைபேசிகள் வரும் போகும், அப்போது நாங்கள் எத்தனையோ கட்சி விஷயங்களைப் பேசும் நிலை இருக்கும், அதை டேப் செய்கிறார்கள். அதனால் தான் நான் சொல்கிறேன். வாட்டர்கேட்டுக்குப் போகக் கூடாது என்று.

அமெரிக்காவின் ஜனாதிபதி பதவி எவ்வளவு பெரிய பதவி. உலகம் பூராவும் பார்த்து வெட்கப்படக்கூடிய நிலைமை வந்தது, பாவம். அந்த நிலைமைக்கு இந்த அரசு வந்துவிடக்கூடாது. நாங்கள் தொலைபேசியில் ஏதோ பேசிக்கொள்கிறோம். உங்களுக்கு, கட்சி விவகாரங்களை ஏன் தெரிந்துகொள்ளவேண்டும், நீங்கள் சி.ஐ.டிக்கள் வைத்திருக்கிறீர்கள். சென்னையிலே ஒரு ஐ.எஸ். பிராஞ்ச், மாவட்டத்திலே கிரைம் பிராஞ்ச், மாநிலத்திற்கு ஒரு கிரைம் பிராஞ்ச் என்று 3 பிராஞ்சுகள் வைத்திருக்கிறீர்கள். எத்தனையோ கட்சிக் காரியங்களை நாங்கள் பேசுவோம், ஆகவே நான் அவை முன்னர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து டேப் செய்வதை நிறுத்துங்கள் (குறுக்கீடு). டேப்அடிப்பது அல்ல, நாங்கள் உங்களை வேறு வேலைக்கு அனுப்பியிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட முறைகளைக் கையாள வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாட்டர்கேட் இங்கேயும் வந்துவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது. எனக்குக் கூட வரும், நான் மறுக்கவில்லை.

டெல்லியிலே ''தமிழ்நாடு ஹவுஸ்'' இருக்கிறது. இங்கேயிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே போனால் யாரையும் மதிப்பதாகத் தெரியவில்லை. அவை முன்னர் அவர்களும் நானும் டெல்லியிலே அங்கே இருக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. நம்முடைய அவை முன்னவரையே மதிக்கவில்லை என்றால் என்னை எங்கே மதிக்கப் போகிறார்கள்? குறிப்பாகச் சொல்லப் போனால் நம்முடைய அரசினுடைய கிளையாக அது டெல்லியிலே இருக்கிறது. அங்கே அதிகாரிகள் போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் நன்றாக சமைத்து சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருக்கின்ற நிலைமைதான் இருக்கிறது.

டெல்லிக்கு ஒரு கமிட்டியை அனுப்பினார்கள். அந்தக் கமிட்டியை அவர்கள் மதிக்கவேயில்லை. பாவம், முசிறிப்புத்தனும், நானும் ரொம்ப வருத்தப்பட்டோம், வெளியிலே சொல்ல முடியாத நிலை. அவர் தலைவர்; நான் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர். எனவே வெட்கப்பட்டுக் கொண்டு வெளியிலே





சொல்லவில்லை. அவர்கள் எங்களைச் சட்டை செய்யவேயில்லை. பூவராகன் அவர்கள் ஒரு விருந்து கொடுத்தார்கள். எங்களிடத்தில் பணத்தை வாங்கிக்கொண்டு எங்களுக்குச் சாப்பாடே இல்லை என்று அந்த இடத்தில் சொல்லிவிட்டார்கள். பிறகு கடைவீதியிலேயிருந்து வாங்க வேண்டியதாயிற்று. நாங்கள், காசு கொடுத்துவிட்டுத்தான் கேட்கிறோம், இனமாகக் கேட்கவில்லை. அந்த அளவிற்குத் தாழ்வான நிலைக்கு நாங்கள் வரவில்லை.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதில் சரிபாதி உண்மையிருக்கிறது. அது முறையான ஏற்பாடுகளோடுதான் இருந்தது. இரவு நேரத்தில், குறிப்பிட்ட நேரத்தில், அவர்கள் வர வேண்டிய நேரத்தில் சில பேர் வராத நேரத்தில் அவர்களுக்கு உணவு வைக்கவில்லையே தவிர, நம்முடைய உறுப்பினர்களுக்கு டெல்லியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, 'தமிழ்நாடு ஹவுஸ்' என்று நான்சொல்லி விளக்க வேண்டுமென்ற அவசியம் இருக்காது. ஆறுமுகம் சொல்வதில் பாதி உண்மையிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : நன்றி, பாதிக்காவது துணை வந்தார்களே, பரவாயில்லை. முழுவதும் இல்லாவிட்டால் நான் என்ன செய்வது? அந்த 'தமிழ் நாடு ஹவுஸில்' உள்ள அதிகாரிகள் டெல்லியிலுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது. தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் வரிப்பணத்தில் ஒரு பகுதியை அனுப்பி, மாநில நிர்வாகம் சம்பந்தமாகச் செல்லும்பொழுது இருக்க வேண்டுமென்பதற்காக அரசாங்க கெஸ்ட் ஹவுஸ்மாதிரி அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஏதோ அதிகாரிகள் அங்கே போய் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக என்றால், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த நிலைமையை மாற்றியமைக்க அவை முன்னவரவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சட்டசபை உறுப்பினர்களைப் பற்றி வருகிறேன். இப்பொழுது சட்டசபை நடக்கிறது. வெள்ளை டிரஸ் போட்டுக் கொண்டு எஸ்.ஐ., இன்னும் ஹெட்கான்ஸ்டபிள்ஸ் ஆகியோர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள், காலையிலிருந்து மாலைவரையில். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற படி எவ்வளவு என்றால் இரண்டு ரூபாய்தான். இரண்டு தடவை காப்பி குடித்தால் இரண்டு ரூபாய் போய்விடும்.

ஒரு ஐ. ஏ. ஏஸ். அதிகாரியாக இருந்தால் எவ்வளவு வாங்குகிறார்கள்? பி. டி. சி. யை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மேனேஜிங் டைரக்டருக்கு 80 ரூபாய் படி. நான் அவை முன்ன

வரவர்களைக் கேட்கிறேன். இரண்டு பேர்களுக்கும் ஒரே வயிறு தான் இருக்கிறது, அப்படியிருக்கும்பொழுது சாப்பிடும் முறையிலே மட்டும் ஏன் வித்தியாசம் வைக்கிறீர்கள்? அதற்குப் பதில் சொல்ல வேண்டும். போலீஸ்காரருக்கு இரண்டு ரூபாய் படி, ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கு 80 ரூபாய் படி, அவருக்கு ஏர்கண்டிஷன் ரூம், நமக்கே ஏர்கண்டிஷன் கிடையாது, வெயிலிலே உட்கார்ந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஹாஸ்டலை எடுத்துக் கொள்வோம். கொசு எங்களை கடித்துக்கடித்து சொரணையில்லாமற் போய்விட்டது. லத்தீபை போல் டெம்பர் எங்களுக்குப் போகவில்லை, சொரணை போய்விட்டது. அவ்வளவு மோசமாகக் கடிக்கிறது. (குறுக்கீடு) கும்பகோணம் கொசுவைவிட மோசமாக இல்லை. ஹாஸ்டலா அது, விடுதியா அது? நான் எங்களுக்குச் சலுகை கேட்கவில்லை. நாங்கள் தங்கும் நேரத்தில் அந்தப் படுக்கையையும், தலையணையையும் பார்த்தால், சாதாரண ஹாஸ்டலில்.................

திரு. எஸ். ஆர் இராதா: தலைவரவர்களே, கும்பகோணம் கொசுவை விட என்று ஏன் என்னையும் சேர்க்கிறார்கள்?

திரு. சி. ஆறுமுகம்: நம்முடைய சட்டப் பேரவைச் செயலாளரும், பேரவைத் தலைவரும் வந்து விடுதி எப்படியிருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

எங்களுக்கு இருக்கின்ற டெலிபோன் வசதியைப் பற்றிச் சொல்ல வேண்டும். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், நான் சலுகையை விரும்பாத ஆள். (மணியடிக்கப்பட்டது) கொஞ்சம் இருங்கள், உங்களுக்கும் சேர்த்துத்தான் நான் பேசுகிறேன். டெலிபோன் எங்கள் ரூமிற்கு இருக்கக்கூடாதா? மந்திரிகள் மட்டும் நான்கு டெலிபோன்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எங்களைப் போல் எம். எல். ஏ. தானே அவர்களும். அவர்கள் ஆளுங்கட்சியாகி, மெஜாரிட்டி வந்து விட்டதால் மந்திரிகளாகிவிட்டார்கள். உங்களுக்குப் போன் இருக்கும்பொழுது எங்களுக்கு எக்ஸ்சேஞ்ச் கொடுக்கக்கூடாதா? அது கூட இல்லாமல் உங்களுக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயம் என்றால் என்ன செய்வது? டெலிபோன் டைரக்டரியும் இல்லை.

அடுத்து, இந்த ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். எம். எல். ஏ., கெஜட்டெட் ரேங்க் உள்ள அதிகாரி அளவிற்குக் கையெழுத்து போடுகிறார்கள். ஆனால் ரெண்ட் கண்ட்ரோலில் வீடு வேண்டுமென்றால் எங்கேபார்த்தாலும்



ஆபீசர்கள் தான் வீடுகளில் இருக்கிறார்கள். நாங்களும் வரி கட்டுகிறோம் வரி கட்டாமல்இல்லை. இப்பொழுது ஏப்ரல் வந்துவிட்டால் இடுப்பு வலி வந்துவிடும், வரி கட்ட வேண்டும், அதைத்தான் சொன்னேன், வேறு ஒன்றும் அல்ல. அப்படி வரி கட்டுகின்ற எங்களுக்குச் சலுகை இல்லை, ஆனால் வரி கட்டாமல் ஸ்காலர்ஷிப்பில் படித்துவிட்டு வந்தவர்கள் ரெண்ட் கண்ட்ரோல் வீட்டில் தொடர்ந்து இருக்கிறார்கள் என்றால், உதாரணத்திற்கு அண்ணா நகருக்குப் போனாலும் சரி அதிகாரிகள் இருக்கும் வீடுகள்தான், எங்கள் தலைவரின் பெயரில் உள்ள நகருக்குச் சென்றாலும் அங்கேயும் அதிகாரிகள் இருக்கும் வீடுகள்தான், இந்திரா நகருக்குச் சென்றால் அங்கேயும் அதிகாரிகள் இருக்கும் வீடுகள்தான், காந்தி நகருக்குச் சென்றால் அங்கேயும் அதிகாரிகள் இருக்கும் வீடுகள் தான் இருக்கின்றன.

[பிற்பகல் 1—10].

ஒரு நகரிலே கூட நம் ஆள் யாருக்கும் கிடையாது. கட்டி, பழையபடி ரெண்ட் கன்ட்ரோல் என்று அவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். நமக்கு கிடையாது. இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, தேர்தல் பற்றி சொல்ல விரும்புகிறேன், உள்ளாட்சித் துறை அமைச்சர் இருக்கிறார். தேர்தலைச் சீக்கிரமாக நடத்துங்கள். கடைசிவரையிலும் அதிகாரிகளை நம்பாதீர்கள். இப்பொழுது எதற்கு கமிட்டி? இந்தத் தேர்தலை உடனடியாக அனௌன்ஸ் பண்ணிவிட்டு போங்கள். யாராவது ஜெயிக்கட்டும்? அது வேறு விஷயம். மக்கள் ஓட்டு போட்டு வருகிறவர்கள், ஆள்கிறவர்கள். ஆனால், அங்கே அதிகாரிகள். அரசாங்க தனி அதிகாரிகள் எதற்கு? உள்ளாட்சிகள், முனிசிபாலிட்டிகள், நகராட்சிகள், பஞ்சாயத்து எல்லாவற்றிற்கும் தனி அதிகாரி. அவர் என்ன செய்கிறார்? அவர் தனியாகவே செய்ய ஆரம்பித்து விட்டார். முன்னாலே, கூட்டாகச் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது தனியாகவே செய்ய ஆரம்பித்து விட்டார்.

ஒரு நல்ல கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். இந்தியாவிலேயே, 'செக் டிராயிங் பவர்' ஊராட்சி மன்றத் தலைவருக்குத் தான் இருக்கிறது. இந்தியாவிலேயே, 'செக் டிராயிங் பவர்' அமைச்சருக்குக் கிடையாது, முதலமைச்சருக்குக் கிடையாது, ஜனாதிபதிக்குக் கூட கிடையாது, பஞ்சாயத்து தலைவருக்கு இருக்கிறது. அதை என்றைக்கு எடுக்கிறோமோ அன்றைக்கு உள்ளாட்சி நிர்வாகம் செம்மையாக இருக்கும். ஊராட்சி சாலை போக்குவரத்துக் கழகம் போட்டுவிட்டு............

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> இப்பொழுது தெரிவித்த கருத்து, மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களுடைய சொந்தக் கருத்தா அல்லது இயக்கத்தின் சார்பாகச் சொல்லப்படுகிற கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> நீங்கள் கேட்பீர்களென்று தெரியும். அது என்னுடைய சொந்தக் கருத்து. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஒவ்வொரு வாரமும் பி.டி.ஓ. செக் புக்கை வைத்துக் கொண்டு தலைவர் வீட்டில் வந்து நிற்கிறார்கள். சில பஞ்சாயத்துத் தலைவர்கள் கையெழுத்தைப் போட்டு, பி.டி.ஓ.விடமே கொடுத்து விடுகிறார்கள். அவர், என்னப்பா, முனுசாமி, 300 வந்திருக்கிறது, வாயேன் என்று சொல்வார். அந்தக் கொடுமையை நீக்கவேண்டும். எல்லாத் தலைவர்களும் விவரம் தெரிந்தவர்கள் அல்ல.

தேர்தல் என்று சொல்லும்போது, நீங்கள் கண்டிப்பாக விரைவில் நடத்த வேண்டும். மற்றப் பிரச்னைகள், சலுகைகள் பற்றிய பிரச்னைகள். ஆகவே, அதைப் பற்றி ரொம்ப சொல்லக்கூடாது என்று சொல்லி, நீங்கள் வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கிறேன், வணக்கம்.

<u>திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்:</u> மாண்புமிகு ......னர் மதுராந்தகம் ஆறுமுகம் பேசும்பொழுது, தனி அதிகாரிகளை நியமிப்பதற்கு முன்னால், கூட்டாகச் செய்து கொண்டிருந்தார்கள் இப்பொழுது தனியாகச் செய்கிறார்கள் என்று சொன்னார்களே, அதற்கு என்ன அர்த்தம் ?

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> காரியங்களை ஆற்றுவதற்கு கூட்டாக இருந்து ஆற்றினோம், இப்பொழுது தனியாக ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

*<u>திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் :</u> மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டமன்றம், தேர்தல்கள, மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது இந்தச் சட்டமன்றத்திலேயிருக்கிற சட்டங்கள் எல்லாமே ஆங்கிலேயர் காலத்திலே இயற்றப்பட்ட சட்டங்கள். அதை வைத்துக்கொண்டு இப்பொழுதும் சட்ட மன்றம் நடந்து கொண்டிருக்கிறது. இதைக் கட்டாயமாக மாற்ற வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன். காரணம் இந்தச் சட்டமன்றத்தைப் பற்றி மக்கள் எல்லாம் மிகக் கூர்ந்து கவனிக்கிறார்கள். சட்ட மன்றத்திலே என்ன நடக்கிறது என்று பத்திரிகைகளைப் படிக்





கிறார்கள். எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களை, இந்த பாய்ன்டுகளையெல்லாம் நீங்கள் ரெய்ஸ் பண்ண வேண்டுமென்று கூறுகிறார்கள். சட்டமன்றத்திலேயிருந்து போனபிறகு, ஏன் இதையெல்லாம் கேட்கவில்லையென்று கேட்கிறார்கள். ஆனால், இங்கே மணியடித்து எங்களைப் பேசவிடாமல் செய்துவிடுகிறார்கள். எங்களுடைய சட்டமன்றத் தொகுதியிலேயிருக்கிற குறைகளை ஒரு வருஷத்திலே ஒரு முறை கூட எடுத்துச்சொல்லமுடியாத துர்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைத் தளர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளிலே இருக்கிற குறைகளைக் குறைந்தபட்சம் ஒரு வருஷத்திலே ஒரு மணி நேரமாவது நாங்கள் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும் ; அதிலும் எதிர்க்கட்சி மெம்பர்களாக இருக்கிற எங்களுக்குக் கட்டாயம் ஒரு வருஷத்திலே ஒரு மணி நேரமாவது, பல நாட்களுக்கும் கணக்கு செய்து, கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை].

இந்த மன்றத்திலே நாம் பார்க்கிறோம். பல பிரச்சினைகளைக் கிளப்பி பத்திரிகைகளிலே வரவேண்டும் என்பதற்காக கிளப்புகிறார்கள். இந்த பார்லிமெண்டரி முறைகளுக்கு அப்பாற்பட்டு சில பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள். நேரத்தை வீணடிக்கிறார்கள். அப்படி எல்லாம் நேரத்தை வீணாக்கி எங்களுடைய தொகுதியிலே உள்ள குறைகளைப் பற்றி நாங்கள் சொல்லமுடியாமல் நேரத்தை வீணாக்கி இடைஞ்சல் எற்படுத்துகிறார்கள். ஆகவே அவர்களுடைய பேச்சுக்கும் உச்ச வரம்பு வைத்து இந்த ஒரு வருடத்தில் ஒரு மணிநேரத்தில்தான் எல்லோருக்கும் பேசலாம் என்றால் போதும்.

ஒரு வருடத்திலே ஒரு மணிநேரம் நேரம் தனியாக எதிர்க்கட்சி மெம்பர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். தொகுதியினுடைய கஷ்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுகிறோம். அதைப் பற்றி யாராவது கவனிக்கிறார்களா என்றால், கவனிப்பதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நியாயமான குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு உச்சவரம்பு என்று இந்த அரசு எடுக்க வேண்டும். இத்தனை நாட்களுக்குள் நியாயமான குறைகள் கவனிக்கப்படும் என்று குறிப்பிடவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு — நியாயமான குறைகளைத் தவிர சொல்வதை எல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டாம்— தொகுதியினுடைய டெவலப் மென்டுக்காகச் சொல்லப்படுகின்ற குறைகளை

நிவர்த்தி செய்ய வேண்டும். கட்டாயமாகச் செய்ய வேண்டும். செய்வோம் என்று உறுதி கொடுக்கவேண்டும். அப்போதுதான் அந்தத் தொகுதி மேம்பாடு அடையும். நன்றாக நடந்து கொள்ளும். எங்களையும் தொகுதி மக்கள் திட்டாமல் இருப்பார்கள்.

முக்கியமாக போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது தொகுதியிலே, பக்கத்திலே இருக்கிற காட்டாறுகளிலே பாலங்கள் அவசியமாக இருக்கிறது. அப்படி பொதுவான குறைகளை நாங்கள் சொல்லும்போது, ஒரு 2 வருடம் 3 வருடத்திற்குள் இவைகளை செய்து முடிக்க உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன்கள் கூட்டங்களிலும், மற்ற மாவட்டக் கூட்டங்களிலும் கலந்து கொள்கின்ற உரிமை இருக்கிறது. ஆனால் நகராட்சிகள் மீட்டிங் நடக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பில்லை. இது ஏன் என்று தெரியவில்லை. முன்பு கூட தி.மு.க. அரசாங்கம் இருந்தபோது கூட நானே பலமுறை இந்த சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ஏன் அதைச் செய்யவில்லை. அந்தப் பொறுப்பு எங்களுக்கு இல்லை என்று நினைக்கிறதா. முதலிலே இருந்த அரசாங்கம் அப்படி நினைத்தாலும் கூட , இந்த அரசாங்கம் கண்டிப்பாக நகராட்சிகளிலே மீட்டிங் நடக்கும்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கும் வகையிலே உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். இதிலே எந்தவிதமான சங்கடமும் கிடையாது. ஆகவே இதை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா மட்டத்திலே உள்ள அதிகாரிகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லவேண்டும். எனக்கு கிட்டதட்ட 25வருடம் சட்ட மன்ற உறுப்பினராக அனுபவம் இருக்கிறது. அவ்வளவு அனுபவம் வாய்ந்த உறுப்பினர் நான். அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கின்ற காரியங்களை உடனடியாகச் செய்வதில்லை. அது இப்போதுரொம்ப மோசமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதிலே எங்களுக்கு வேண்டிய ஆட்களுக்கு சிபாரிசு செய்தால் கேட்கவேண்டாம். பொதுப்படையாக அந்தப் பகுதி குறைகளை சொல்வதற்கு ஜில்லா மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் நன்றாக கேட்டு, உடனடியாக பரிகாரம் தேட இந்த அரசு எடுத்துக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஆஸ்டல் பற்றிப் பேசினார்கள். இங்கே ஒரு பழைய ஆஸ்டல் இருக்கிறது. சென்னையிலேயே இப்படிப்பட்ட ஒரு அழகான கட்டடம் இருக்காது என்று நினைக்கிறேன். அந்தக் கட்டடம் கொஞ்சம் கொஞ்சமாக சிதைந்து போய் கொண்டிருக்





கிறது. மதுரையிலே உள்ள திருமலை நாய்க்கன் மகாலைப் போன்றது அந்தக் கட்டிடம். அதற்குத் தனியாக கவனம் செலுத்தி அந்தக் கட்டடத்தை ரிப்பேர் செய்வதற்கு நன்றாக அழகு படுத்துவதற்கு முன்போலவே சட்ட மன்ற உறுப்பினர்கள் அங்கே தங்குவதற்கு—இப்போது அங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதில்லை—லாயக்காக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1–20)

நமது மதிப்பிற்குரிய செக்ரட்டரி அவர்கள், பேசும்போதுகூட கொஞ்ச நாளில் அங்கு சட்ட மன்ற உறுப்பினர்களே தங்க முடியாத நிலை வரலாம் என்று சொன்னார்கள். அங்கே நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) மணியடிக்கிறார்கள். சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

அதற்குப் பிறகு மேற்குப் பகுதியில் இருக்கும் ஹாஸ்டலில் இப்போது இருக்கின்ற அங்கத்தினர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பகுதியை ஒதுக்கி, அங்கே அவர்களுக்கு தேவையான கக்கூஸ் வசதி, குளிக்கும் வசதி போன்றவற்றைத் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் அதிகாரிகளை அணுகி பல குறைகளைச் சொல்லவும், மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் முடியும்.

இப்போது 10,000 கிலோ மீட்டர் ரயில் பிரயாணம் செய்ய கூப்பன் கொடுக்கப்படுகிறது. நாங்கள் எல்லாம் 10 தடவைபோய் வந்தால் 10,000 கிலோ மீட்டர் ஆகிவிடுகிறது. அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு மாதத்திற்கு ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்னை வந்து, அமைச்சர்களை அணுகி பிரச்சினைகளை விவாதிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் சட்டமன்றம் கூடும் நேரங்களில் அடிக்கடி ஊருக்குப் போய் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அதை 20,000 கிலோ மீட்டர் என்ற அளவிற்கு ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தலைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தேர்தல் நடக்காத காரணத்தால் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் கெட்டு, பஞ்சாயத்துக்களில் நிதி கூட இல்லாமல் மோசம் அடைந்

துள்ள நிலை இருக்கிறது. ஆகவே, விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது வரைக்கும் அந்த பஞ்சாயத்து யூனியன்களில் நிதி நிலைமைகள் மோசமாக ஆகியுள்ளதால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்றத்தில் வேலை செய்யும் டிபார்ட்மென்ட் அதிகாரிகளுக்கு நான் புரிந்து கொண்டவரைக்கும் செக்ரடேரியட்டில் பணியாற்றும் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் அளவிற்கு சம்பள வசதிகள் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். நன்றாக வேலை செய்கிற சட்டமன்ற அலுவலர்களுக்கு அப்படிப்பட்ட நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கோள்கிறேன்.

எங்கள் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், 27 அங்கத்தினர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம். இதை சட்ட பூர்வமான எதிர்க் கட்சியாக அங்கீகரித்து, எங்கள் தலைவருக்கு நல்ல வசதிகளைச் செய்து தந்து நல்ல வகையில் சட்ட மன்றம் இயங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, இதற்கு முன்னால் இந்த மன்றத்தில் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது யாரோ ஒரு அமைச்சர் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. பட்டம் பெறுவதற்காக பதிவு செய்து கொண்டு இருக்கிறார் என்று சொன்னார். நான் பல்கலைக் கழகத்தோடு தொடர்புகொண்டு கேட்டதற்கு அப்படி யாரும் அனுமதிக்கப்படவில்லை என்றும், இதற்கு முன்னதாக பிரைவேட் காண்டிடேட் என்ற முறையில் மாணவர்கள் அங்கே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும், திரு. ராமகிருஷ்ணன், திருமதி ராதா தியாகராசன் என்பவர்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்படித் தவறான தகவலை வைத்துக்கொண்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்கிறார். அது அவைக்குறிப்பில் இருக்கலாமா? இப்படி பொத்தாம் பொதுவாக குற்றம் சாட்டியிருப்பது முறை தானா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான் ஆராய்ச்சி மாணவனாகப் பதிவு செய்துகொண்டுள்ளது உண்மை. ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. மாணவனாகத்தான் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். பல்கலைக் கழக பிரின்சிபலுக்கு மாறாக இது இருக்கக்கூடும் என்ற





வகையில் சின்டிகேட் உறுப்பினராக இருக்கும் ரகுமான்கான் சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம் என்பது தனி அமைப்பு. சின்டிகேட்டில் வைத்துத்தான் என் விண்ணப்பத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு முன்னாலும் இப்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதைத்தான் திரு. இராதா அவர்கள் இங்கே கேட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே சமர்ப்பிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக எனக்கு ஏற்பட்டிருக்கிற கவலை, 7, 8, 9 என்ற 3 மானியக் கோரிக்கைகளில் எட்டாவது மானியமும் 9-வது மானியமும் பெற வேண்டிய அளவுக்கு இடத்தைப் பெறாமல், 7-வது மானியம் ஒன்று மட்டும் எல்லோருடைய மனதையும் கவர்ந்திருப்பது கவலைக்குரியது என்று நான் சொல்லாவிட்டாலும் சிந்தனைக்குரியது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் எனக்கு பிரச்சினை சுலபமாகப் போயிற்று.

கேட்டவர்களில் பெரும்பாலோர் வசதி வாய்ப்புகள் அங்கத்தினர்களுக்குத் தேவை; தொலைபேசி வாய்ப்புகள் தேவை, 10,000 கிலோ மீட்டர் என்று இருப்பது—முதல் வகுப்பு—40,000 கிலோ மீட்டர் —இரண்டாம் வகுப்பு—தேவை. அது மட்டுமல்ல; பஸ்ஸிலே எங்களுக்கு என்று பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது; அது உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல் உறுப்பினர்களின் துணைவியருக்கும் தேவை என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

சம்பளம் போதவே இல்லை—மெத்த வருத்தப்பட்டார்கள் லத்தீப் அவர்கள். அங்கே போடப்படுகிற சாப்பாட்டைப்பற்றிச் சொன்னார்கள். உடல் இளைத்து விட்டதாகவும் சொன்னார்கள். பேசும்போது எனக்கு அப்படித் தெரியவில்லை (சிரிப்பு).

அதற்குப் பிறகு அமைச்சர்களைப்பற்றிச் சொல்லும்போது அப்படிச் சொன்னாலாவது நமக்குக் கொஞ்சம் அதிகமாக கிடைக்காதா என்ற எண்ணத்தில் பெரியவர் கந்தசாமி அவர்கள் 2,000 ரூபாய் மந்திரிகளுக்கு கொடுக்கலாமே என்று சொன்னார்கள். அதையெல்லாம் கேட்டவுடன் மந்திரிகள் எல்லாம் உற்சாகப்பட்டார்கள். நிதி மந்திரியாக இருக்கிற நான் அதைவிட ஆசைப்பட்டு, நமக்கு ஒரு இரண்டாயிரம் வைத்துக்கொண்டு, கந்தசாமிக்கு ஒரு நூறை தள்ளிவிடுவோம் என்று கருதியிருப்பார்கள், என நினைக்கிறேன். அவ்வளவு சுலபமாக நான் மாற்ற விரும்பவில்லை என்று கந்தசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 28

அதன் பிறகு இந்த கட்டடத்தை மாற்ற வேண்டுமென்றும், புதியதொரு சட்ட மன்றம் கட்டப்பட்டு, நவீன வசதிகளை அந்தக் கட்டடத்தில் அமைக்க வேண்டுமென்று கருத்தை இங்கே தெரிவித்தார்கள். நான் இங்கே உட்கார்ந்து எதிர்க் கட்சித் தலைவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் எனக்குச் சொன்னார்கள். கட்டடம் கட்டுவது என்பது சாதாரண காரியம்தான். ஆனால் இந்தக் கட்டடத்திற்கு என்று ஒரு தனி மரியாதை இருக்கிறது. மரபு இருக்கிறது, நீண்ட நெடுங்காலமாக இருக்கிற கட்டடத்தில் ஒரு கம்பீரம் இருக்கிறது; ஆக இது இருந்தால் போதும் என்ற கருத்தை என்னோடு சாதாரணமாக உரையாடும்போது சொன்னார்கள்.

சம்பள விகிதத்தைப்பற்றி இங்கே பேசியதற்கு நான் அதைச் சுட்டிக்காட்டுவது அவர்களை வருத்தப்படுத்துவதற்காக அல்ல. இங்கே என்னிடம் குறிப்பு இருக்கிறது. இந்தக் குறிப்புப்படி பார்த்தால் தமிழ்நாட்டிலே இருக்கிற நமது உறுப்பினர்கள் வாங்குகிற சம்பளம் அந்த அளவுக்கு குறைவானதாக நான் கருத முடியவில்லை. ஏனென்றால், கேரளத்திலே வாங்குவது மொத்தம் 450 ரூபாய். ஒரே ஒரு மாநிலத்திலேதான் 700 ரூபாய் வாங்குகிறார்கள். மீதியுள்ள மாநிலங்களைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, சம்பளம், அலவன்ஸ், எல்லாம் பார்த்தாலும், 550 என்ற அளவிலேதான் இருக்கிறது; அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை

ஆனால் லத்தீப் அவர்கள் பயங்கரமான ஒரு உண்மையைச் சொன்னார்கள். அந்த உண்மை இதுதான். எப்படி இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு இந்த மந்திரிகள் எல்லாம் தேடி வருகிறவர்கள் சாப்பிட தேனீரும் வழங்கி, காப்பியும் வழங்கி, தேவைப்பட்டால் சாப்பிடுவதற்கான பண்டங்களும் வழங்கி, இந்த ஆயிரம் ரூபாயில் தங்களை நிறுத்திக்கொள்ளுகிறார்கள்; இது பொது மக்கள் மத்தியிலே சந்தேகத்தை எழுப்பாதா என்று கேட்டார்கள். நான் நண்பர் லத்தீப் அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருபவர்கள் அத்தனை பேருக்கும் தேநீர் கொடுக்கின்ற அளவில் அமைச்சர்கள் இல்லை. சிலபேர்கள் வருகிறார்கள்; நல்ல நண்பர்கள். அவர்களுக்கு வழங்கப்படுகிறதே தவிர, அதன் மூலம் ஒரு பெரும் தொகை பாழாகிறது என்ற நிலை அமைச்சர்களுக்கு இல்லை என்று நண்பர் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30.]

எங்களுக்கு ஊதியத்தை ஆயிரமாக உயர்த்துங்கள். உங்களுக்கு இரண்டாயிரமாக உயர்த்துங்கள் என்று சொன்ன போது இருதரப்பிலே இருந்தும் எழுந்த கரவொலியைக் கேட்டபோது எல்லோரும் பேசி வைத்துக் கொண்டுதான் இங்கே பேசி இருக்கிறார்கள் என்பதை என்னால் சுலபமாக **உணர முடிந்தது.**



1978 மார்ச் 28] [திரு. கி. மனோகரன்]

சம்பளத்தை உயர்த்தக் கூடாது என்று நான் சொல்லவில்லை. உண்மையிலேயே குறிப்பிடப்போனால் விலைவாசிகள் எல்லாம் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்தச் சம்பளம் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆகையினால் கூட்டுவதற்கான நியாயங்களை கற்பிக்கின்றபோது அந்த நியாய உணர்வுகளை நான் மறுதலிக்க விரும்பவில்லை. ஆனால் நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 550 ரூபாயைச் சம்பளமாகப் பெறுகின்ற உங்களுக்கு இவ்வளவு தொல்லை இருக்கின்றது. ஆயிரம் ரூபாய் சம்பளத்தைப் பெறுகின்ற அமைச்சர்களுக்கு இவ்வளவு தொல்லை இருக்கிறது. ஆனால், தினசரி 4 அணாக்கூட இல்லாமல் அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கின்றவர்கள் இந்த நாட்டிலே எவ்வளவு பேர் வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கணக்குப்போட்டு பார்க்கிறபோது நான் பல தடவை சொன்னதையே திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். எனக்கு மேலே இருப்பவனைப் பார்த்து நான் பொறாமைப்படுவதை விட என்னைவிட அடித்தளத்தில் இருப்பவனைப் பார்த்து சரி, அவனைவிட நான் நன்றாகத்தான் இருக்கின்றேன் என்று எடுத்துக்கொள்கிற அந்த மனப்பக்குவத்தை லத்தீப் போன்ற பெரியவர்களும், கந்தசாமி போன்ற தந்தை உள்ளம் படைத்தவர்களும் எண்ணிப் பார்ப்பார்கள் என்று மனதார நம்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது எல்லோரும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று.................

திரு. ஜெ. ஜேம்ஸ் : எல்லோரும் விளக்கிச் சொன்னார்கள் என்று சொன்னேனே தவிர எல்லோரும் எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்லவில்லை. எல்லோரும் எல்லாக் கருத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எல்லோரும் ஏகோபித்த கருத்துக்களைச் சொன்னார்கள் என்று எடுத்துச் சொல்லி அந்த ஏகோபித்த கருத்துக்கள் எல்லாவற்றிலும் நாங்கள் ஒன்றவில்லை, சில கருத்துக்களிலே நாங்கள் ஒன்றி இருக்கிறோம் என்று உமாநாத் அவர்களும் நா மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இங்கே பேசி இருக்கிறார்கள்.

இப்படி ஒரு யோசனையைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, தேவைப்பட்டால் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவிற்கு வேண்டுமானால் எதிர்க்கட்சித் தலைவரே தலைவராக உட்கார்ந்து அதைப் பற்றி நன்றாக ஆராய்ந்து எந்த அளவிற்கு உயர்த்தலாம், எவை

எவைகளை உயர்த்தலாம் என்பது பற்றி ஒரு அறிக்கை தயார் செய்து, அதுவும் டைம் பவுண்டாக தயார் செய்து சீக்கிரமாக அரசுக்குத் தருவார்களேயானால் அதை வைத்துக் கொண்டு ஏதாவது முடிவு எடுப்பதற்கு இந்த அரசினால் முடியும் என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> அந்தக் கருத்து ஏற்கப் படுமானால் அதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு வழியாக இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் லத்திப் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அதை ஏற்க இயலாமைக்கு வருந்துகிறேன். ஒரு ஆட்சி என்று கருதப்படுகிறபோது அல்லது ஒரு அமைப்பு என்று கருதப்படுகிறபோது அதற்கு செக்ஸ் அண்டு பேலன்ஸஸ் உண்டு. அது மட்டுமல்ல, மூன்று விங்ஸ் என்று சொல்வார்கள். ஒன்று லெஜிஸ்லேசர், இன்னொன்று ஜுடிஷியர், மற்றொன்று, எக்ஸிக்யூட்டிவ். இந்த மூன்றும் சுதந்திரமான உறுப்புக்களேதவிர சட்டமன்றத்தின் உரிமையை நீதிமன்றம் பறிக்கவோ அல்லது நீதிமன்றத்தில் தலையிடுகின்ற அளவுக்கு சட்டமன்றம் செல்லுவதோ அல்லது இந்த இரண்டையும் மறுத்தளித்து விட்டு எக்ஸிக்யூட்டிவ் என்று சொல்லப்படும் நிர்வாகங்கள் செயல்படுவதோ அப்படிப்பட்ட நிலைமை கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவ்வாறு செயல்படக்கூடிய நிலைமை ஒரு நாட்டில் இருக்கின்றது என்று சொன்னால் ஒழுங்கான ஆட்சி இருக்காது என்ற சாதாரண பொலிட்டிக்கல் கிராமரை எல்லோரும் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்று நான் லத்திப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத்தின் உரிமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீதிமன்றம் பறிக்காது. நீதிமன்றத்தின் உரிமையைப் பறிக்கின்ற அளவிற்கு உறுப்பினர்கள் செயல்பட மாட்டார்கள். ஆகவே, கற்பனை செய்து கொண்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரையும் பழி சாட்டுகின்ற அளவுக்கு நாம் வராமல் இருப்பது நல்லது என்பதை நான் பணிவோடு லத்திப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு ஏதாவது கருத்துக்கள் இருக்குமானால் அவர்கள் தனியாக அவர் என்னிடம் சொல்லலாம். தாராளமாக நான் கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன்.



ஒன்று மட்டும் தெளிவாக இருக்கின்றது. சாவர்னிட்டி ஆஃப் லெஜிஸ்லேசர். இதை விட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசோ உறுப்பினர்களோ எந்தக் காரணத்தைக் கொண்டும் தயாராக இருக்க மாட்டார்கள் என்ற உறுதியை நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> நீதிமன்றம் சட்டமன்றம்பற்றி, சட்டமன்றத்தில் தலையிடுகிறது என்ற கருத்தில் சொல்லவில்லை, அப்படி தலையிடவும் முடியாது, அப்படி தலையிட நாம் அனுமதிக்கவும் முடியாது. ஆனால், எக்ஸிக்யூட்டிவ் என்று சொல்கிற நிர்வாகத்தினிடத்தில் சட்டமன்றம் பற்றிய சில காரியங்களை நிறைவேற்றுவதற்கு, குறிப்பாக பைனான்ஸ் டிப்பார்ட்மென்ட் கன்கரன்ஸ் வாங்கித்தான் செய்ய வேண்டும் என்ற ஒரு முறை இருப்பது, அது சட்டமன்றம் முறையாக சுதந்திரமாகச் செயல்படுவதற்கு வழி வகுக்காது என்ற காரணத்தால் சட்டமன்றம் தனியாக இயங்கச் செய்வதற்கு, எக்ஸிக்யூட்டிவ் பிடியில் அது தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாத ஒரு சூழ்நிலை உருவாக்குவதற்குத் தான், அதற்கு வழி வகுக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர நீதிமன்றத்தைப் பற்றி நான் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லாமலிருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு, சாப்பாடுப் பிரச்னைகள் பற்றிச் சொன்னார்கள். இந்தப் பிரச்னையை ஒரு சுலபமான பிரச்னையாக, சாதாரணப் பிரச்னையாக நான் கருதவில்லை. என்னிடம் கூட பல பேர்கள் வந்து சொன்னார்கள். வாயில் வைக்கவே முடியவில்லை, காபி என்று எதையோ தருகிறார்கள், டீ என்று எதையோ கொடுக்கிறார்கள், உடம்பெல்லாம் கெடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள் வருத்தப்பட்டு. நிச்சயமாக அதைப்பற்றி அரசு ஆராயும் என்பதோடு மட்டுமல்ல, அதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்து மாண்புமிகு உறுப்பினர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு துணையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே ஒரு பாங்க், போர்ட் செயின்ட் ஜார்ஜ் பகுதியில் ஒரு பாங்க் ஓப்பன் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இங்கே ஸின்டிகேட் பாங்கின் ஒரு பிராஞ்ச் இருப்பதாக நான் கருதுகிறேன். உறுப்பினர்கள் அதை தாராளமாக பயன்படுத்தலாம்.

அதற்குப் பிறகு பெட்டிஷன்ஸ் கமிட்டி ஒன்று தேவை என்று இங்கே குறிப்பிட்டார்கள். கன்ஸல்டேட்டிவ் கமிட்டி தேவை, பாராளுமன்றத்தில் இருப்பதைப் போல் கன்ஸல்டேட்டிவ் கமிட்டி தேவை என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கமிட்டிகள் எல்லாம்

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 28

லெஜிஸ்லேச்சர் கமிட்டிகளாக இருக்க முடியுமே தவிர, அரசாங்கத்திற்கும் மற்ற டிபார்ட்மென்ட்களுக்கும் இடையே இயங்குகிற கமிட்டிகளாக அவை அமைய முடியுமே தவிர, அரசாங்கக் கமிட்டிகளாக அவை அமைய முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். அந்த குழுக்கள் அமைப்பதன் மூலம் எந்தச் சாதனைகளை உருவாக்க முடியும் என்பதுபற்றி இந்த அரசு தீவிரமாக சிந்தித்துக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசியவர்கள் மூட்டைப் பூச்சிக் கடி தாங்கமுடியவில்லை, கொசுக்கடி தாங்கமுடியவில்லை. மூட்டைப் பூச்சிக்கடி தாங்கமுடியாமல், கொசுக்கடி தாங்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மூட்டைப் பூச்சிகளை இவர்கள் தாங்கமுடியாமல் தவிக்கிறார்களா அல்லது அவைகள் இவர்களை தாங்கமுடியாமல் தவிக்கின்றனவா என்று தெரியவில்லை. ஆனால் மூட்டைப் பூச்சிகள் எங்கே இருந்தாலும் சரி, கொசுக்கள் எங்கே இருந்தாலும் சரி, அவைகளைப் போக்க வேண்டிய பொறுப்பு ஆட்சிக்கு உண்டு.

லத்தீப் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். கூவம் அங்கே நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இவைகளை எல்லாம் போக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை நான் சென்ற கூட்டத்தில் பேசுகிறபோதுகூட நான் அதைக் குறிப்பிட்டேன்.

அதற்குப் பிறகு, இங்கே நம் சாதிக் பாட்சா அவர்கள் எப்போதும் அமைதியாக இருந்து கொண்டு வெடிக்கிற சில வெடி குண்டுகளை வீசுவதில் வல்லவர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். திரு. லத்தீப் அவர்கள் டெப்டி ஸ்பீக்கருக்கு கொஞ்சம் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்ன நேரத்தில், கொஞ்சம் அதிக நேரம் கிடைப்பதற்காக நம்முடைய மதிப்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்களை இன்ப்ளுவன்ஸ் செய்யப் பார்க்கிறார்களா என்று கேட்டார்கள். துணை சபாநாயகர் அவர்களுக்கு என்ன சம்பளம் என்று அவர் இப்போதுதான் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். தெரிந்ததற்குப் பிறகு, மிகுந்த வருத்தப்பட்டு அவருக்கு சம்பளத்தைக் கூட்டுங்கள், எங்களுக்கும் சேர்த்துக் கூட்டுங்கள் என்று ஒரேயடியாகச் சொல்லி வைத்திருக்கிறார்கள். துணை சபாநாயகர் அவர்கள் மீது லத்தீப் அவர்களுக்கு இருக்கிற ஆழ்ந்த அனுதாபத்திற்காக என் நன்றியை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு. கி. மனோகரன்]

அதற்குப் பிறகு, இங்கே பேசியவர்கள் எல்லாம் திருப்பித் திருப்பி அதைத்தான் சொன்னார்கள். பி.ஆர்.ஓ. தேவை என்ற கருத்தை லத்தீப் அவர்கள் தெரிவித்ததாக நினைவு. ஏனென்றால், இங்கே இந்த நடவடிக்கைகளைக் கவனிக்க வருபவர்கள் யாரிடம் செல்லவேண்டும் என்று தெரியாமல் தயங்கி நிற்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

(பிற்பகல் 1-40)

நாடாளுமன்றத்தில் என்ன வசதியிருக்கிறது என்றால் 'ரிஷெப்ஷன் கம் என்கொயரி சென்டர்' என்ற ஒன்று இருக்கிறது. நேராக அங்கு போவார்கள். எந்த உறுப்பினரை தாங்கள் தெரிந்து தெரிந்து வைத்திருக்கின்றார்களோ, அந்த உறுப்பினரை 'ரிஷெப்ஷன்' ஆபீஸ் மூலமாக தொடர்பு கொண்டு அங்கேயே வந்து பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதன் காரணமாக உள்ளே வருகின்றவர்களை—அல்லது உள்ளே வந்து பார்க்க விரும்புகின்றவர்களை உள்ளே கொண்டு வருவதற்கும், வெளியே அவர்கள் வசதியாக போவதற்கும் அங்கே வசதி வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதுமே நல்ல யோசனைகளை சொல்லும் நண்பர் லத்தீப் அவர்களுக்கு புதிதாக இதை தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

அடுத்ததாக, இங்கு பேசப்பட்ட ஒரு கருத்து. அப்படிப்பட்ட ஒரு கருத்தை திருப்பித் திருப்பிச் சொல்லி ஆளுநர் அவர்களுக்கும் இந்த ஆட்சிக்கும் ஏதோ ஒரு பெரிய மனத்தாங்கல் இருப்பதைப் போலவும், சந்தேக உணர்வுகள் இருப்பது போலவும், போட்டி மனப்பான்மையில் பழகுவது போலவும் கருத்துக்களில் பேசப்பட்டது. அரசின் சார்பாக நான் அழுத்தந்திருத்தமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, ஆளுநருக்கும் ஆட்சிக்கும் எந்தவித மோதலும் இல்லை. அதே நேரத்தில் காதலும் இல்லை. அவர் ஆளுநர், இது ஆட்சி. அவர் ஆளுநருடைய கடமையை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி தனது கடமையை செய்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர வேறு எந்த விதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அபிப்பிராய பேதம் இருக்கிறது, அல்லது கருத்து மாறுபாடுகள் இருக்கிறது என்று வாதத்திற்கு வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளலாம். நாங்கள் ஒரு கருத்தை தெரிவிக்க, அவர்கள் வேறு கருத்தை தெரிவிக்க, இதன் காரணமாக ஒரு புதிய கருத்தை பெறுவதில் என்ன தவறு, அப்படிப்பட்ட நிலைமைகள் ஒன்றும் கிடையாது. இருந்தாலும், இப்படிப்பட்ட கருத்துக்கள் தோன்றுவதில் எந்தவிதத வறும்

இருக்க முடியாது. இதுதான் உண்மையான நிலை இதுவரை, இந்த அவையிலே பேசிக் கொண்டிருக்கின்ற இந்த நேரம் வரை ஆளுநர் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கும், ஆளுநர் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும், ஆளுநர் அவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே எந்தவிதமான பேதங்களும் இல்லை என்பதை திட்டவட்டமாக அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து இப்படிப்பட்ட செய்திகளை, திருப்பித் திருப்பி சொல்வதின் மூலம் தவறான ஒரு எண்ணத்தை, தவறான கணக்கை, தவறான உணர்வை ஏற்படுத்த வேண்டாம் என்றும்—இப்படிப்பட்ட எண்ணம் நம் மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு பரவி விடுமோ என்கின்ற அச்ச உணர்வின் காரணமாக, பொறுப்புணர்ச்சியின் காரணமாக இதைத் தெரிவிக்கிறேனே தவிர வேறு எதுவுமில்லை. ஏதோ வெளியில் பேசிக் கொள்கிறார்கள். வெளியே பேசிக் கொள்கிறார்கள் என்று இங்கு உள்ளே பேசிக்கொண்டிருப்பது, உள்ளே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அழகல்ல என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றபடி, இங்கு பேசப்பட்டது, நூலகம் தேவை என்ற கருத்தை தெரிவித்தார்கள். இப்போது இருக்கின்ற நூலகத்திற்கு ஒரு குழு போட வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதில் இருக்கின்ற சிக்கல்கள் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன. என்னைப் பொறுத்த வரையில் எனது ஆசையை தெரிவிக்க விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்குத் தெரியும். அந்த அளவுக்கு நூலகத்தை வைத்திருக்கிறார்கள். ஸீராக்ஸ் வைத்திருக்கிறார்கள். மேலேயும் நூலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. ரிசர்ச் சென்டர் வைத்திருக்கிறார்கள். அனெக்ஸ் வைத்திருக்கிறார்கள். அத்தனை வசதிகளும் அங்கே இருக்கின்றன.

என்னைப் பொறுத்தவரையில் எனது ஆசையை வெளியிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட ரிசர்ச் சென்டர் ஒன்று—உதாரணத்திற்கு சொல்வதாக இருந்தால்—டி-வால்யூவேஷனாக இருக்கட்டும், இன்ப்ளேஷனாக இருக்கட்டும், டி-ஸ்டபிலேஷனாக, இருக்கட்டும். எப்பேர்ப்பட்ட அரசியலாக இருந்தாலும் சரி பொருளாதாரமானாலும் சரி, ஹ்யூமானிட்டிஸாக இருந்தாலும் சரி, ஸோஷியல் ஸயன்ஸாக இருந்தாலும் சரி, இந்தப் பிரச்னையில் பேசப் போகிறேன், பேசுவதற்கு ஒரு நோட் தயாரித்துக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டால் குறிப்பிட்ட இரண்டு நாட்களுக்குள், அவர்கள் ஒரு அருமையான குறிப்பை தயாரித்து நமக்கு அவர்கள் அளிக்கிறார்கள். இப்படிப்பட்ட வசதிகளை நமது உறுப்பினர்கள் பெறுவார்களேயானால், இங்கே நடைபெறுகின்ற



விவாதங்களில் உறுப்பினர்கள் கலந்து கொள்கிற போது, அருமையான கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் எண்ணிப்பார்க்காமல் இல்லை.

இப்போதுள்ள நூலகக் கட்டிடம் குறுகலான அளவுக்கு இருக்கிறது. அதையும் பெரிதாக செய்ய முடியவில்லை என்ற சில கருத்துக்களை லத்தீப் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த லெஜிஸ்லேச்சர் இலாகாவிற்கே இந்தக் கட்டிடம் பூராவும் இருக்கட்டும். இந்தப் பக்கத்தில் எதுவுமே இருக்கக் கூடாது எனறெல்லாம் கருத்துக்கள் தெரிவித்தார்கள். இந்தக் கருத்திற்கு என்னுடைய உடன்பாடு உண்டா, இல்லையா என்பதைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய ஆசையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகுமானால், ஒரு அருமையான வாசகசாலை அமையுமானால், அந்த நல்ல வாசகசாலையிலே படிக்கின்ற வாய்ப்புகள் உறுப்பினர்களுக்கு ஏற்படுமானால், ரிசர்ச் சென்டர் உருவாக்கப்படுமானால், அது இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு உறுதுணையாக அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, நான் விடை பெறுவதற்கு முன்பு ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். கோபித்துக் கொள்ளாதீர்கள். சம்பளத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் விடுகிறானே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். நிதி நிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்த நேரத்தில், 'பற்றாக் குறை' பற்றாக் குறை' என்று சொல்லிக் கொண்டு, உறுப்பினர்கள் மட்டும் தங்களுடைய சம்பளத்தைப் பெருக்கிக் கொள்கிறார்களே என்ற உணர்வு வெளியிலே இருக்கின்ற மக்களுக்கு வரக் கூடாது. மத்திய சர்க்காரிலே இருப்பவர்களுக்கு வரக் கூடாது. பைனான்ஸ் கமிஷனிலே இருக்கின்றவர்களுக்கு வரக் கூடாது. பிளானிங் கமிஷனிலே இருப்பவர்களுக்கு வரக் கூடாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், சர்க்காருடைய நிதி நிலைமை அப்படியிருக்கிறது. திடீரென்று தூக்கி பணத்தை வீசுகிறபோது, 500 லிருந்து 1,000 ரூபாய் என்று பார்க்கின்றபோது, என்.ஜி.ஓ.க்கள் சும்மா இருப்பார்களா, கிராம உத்தியோகஸ்தர்கள் சும்மா இருப்பார்களா, மற்றவர்கள் சும்மா இருப்பார்களா! சும்மா இருந்தாலும், அவர்களைச் சும்மாயிருக்க மற்றவர்கள்தான் விடுவார்களா? இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, முடிந்தவரை இந்த ஆட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன தேவையோ, அந்தத் தேவைகளையெல்லாம் பரிசிலனை செய்து, தன்னால் இயன்றவரை செய்யும் என்று சொல்லிக் கொண்டு,

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 28

இந்த 3 மானியங்களையும் நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, வெட்டுப் பிரரேபணைகளை திரும்பப் பெற வேண்டு மென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு நான் அமர்கிறேன்.

(உறுப்பினர் திரு. கூத்தக்குடி ச. சண்முகம் எழுந்திருந்தார்).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நேரமில்லை. பிற்பகலிலும் சபை கூட இருக்கிறது. உட்காருங்கள்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம் :</u> நிதி நிலைமையை பாதிக்காமல், சில வசதிகளையாவது செய்து தரக் கூடாதா ? முதல் வகுப்புக் கூப்பனுக்குப் பதில் இரண்டாவது வகுப்புக்கு வசதி செய்யலாம் என்று சொன்னேனே, அதற்குப் பதில் சொல்ல முடியாதா ! பொதுவாக பதில் சொன்னால் எப்படி !

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> கோபித்துக் கொள்ளாதீர்கள். சண்முகம் அவர்களுக்கு கோபம் வரக் கூடாது. இரண்டாவது வகுப்புக் கூப்பன் தரக் கூடாதா என்று கேட்டீர்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது நமது கையில் இல்லை. மத்திய சர்க்காருக்கு நாம் எழுதி, அவர்கள் அனுமதியைப் பெற்றுச் செய்ய வேண்டிய காரியம். இத்தகைய வசதிகளைச் செய்வதற்குத் தயாராக இந்த அரசு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதாவது சண்முகம் அவர்களுக்கு கோபம் தணியும் என்று நம்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> விவாதம் முடிவுற்றது. இனிமேல் வாக்கெடுப்பு.

திருவாளர்கள் சு. பாலன், பு. ஆர். இராஜாராம் ரெட்டி, பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், கோரிக்கை எண் 7-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 63,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".



1978 மார்ச் 28]

மானியக் கோரிக்கை, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்-8க்கு திருவாளர்கள் ரெ. வி. சௌந்தரராஜன், எம். அண்ணாமலை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

அடுத்த கோரிக்கை எண். 9-க்கு, திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் ரெ. வி. சௌந்தரராஜன், வி. கே. கோதண்டராமன், அ. சுவாமிதாஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,81,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–50 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் மாலை 4 மணி அளவில் கூடியது.]

8. 1978–79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை. எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,45,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

திரு. த. வேணுகோபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்களில் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பதிவு செய்யப்படாமல் பத்திரங்களைப் பதிவு செய்துவிட்டு பிறகு வால்யு போட்டு மீண்டும் வசூல் செய்யும் நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,45,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்குக் குறைத்துள்ள கமிஷனை மீண்டும் அதிகப்படுத்துவதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 6.—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,45,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





திரு. அ. சுவாமிதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் முத்திரைத் தீர்வை மிக அதிகமாக உள்ளதால் பத்திரங்களைப் பதிவு செய்வோர் அண்டைய மாநிலமான கேரளாவில் சென்று பத்திரப் பதிவு செய்ய விரும்புவதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் இழப்பு குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,45,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDU: Sir, to discuss about the maintenance of "Guide lines" in the Registration Offices, I move—

'that the allotment of Rs. 2,45,11,000 under Demand No. 6-Registration-be reduced by Rs.100.'

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to expedite the process of registration and disposal of documents, I move--

'That the allotment of Rs.2,45,11,000 under Demand No.6-Registration-be reduced by Rs.100.'

(2) கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,55,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் இப்பொழுது அதிகமாக் கிணறு வெட்டவும், நிலச் சீர்திருத்தம் செய்யவும் கடன் வழங்கப் படாதது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6, 55,92,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கு ஜனநாயக முறைப்படி தேர்வு நடத்தி நிர்வாக இயக்குனர்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சிக் குழு ஏற்படுத்த ஆணை பிறப்பிக்காதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,55,92,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கூட்டுறவு நிலவள வங்கிகளில், வாங்கிய கடன்களில் தண்ணீர் இல்லாத கிணறுகள், உப்புத் தண்ணீர் உள்ள கிணறுகள் ஊற்று வற்றிய கிணறுகள் இவைகளுக்குக் கொடுக்கப்பட்ட லோன்களைத் தள்ளுபடி செய்தல் சம்மந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 23,—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,55,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDU: Sir, to discuss about the functions of Advisory Committee to be appointed by the Government, I move—

'That the allotment of Rs 6,55,92,000 under Demand No. 23-Co-operation— be reduced by Rs. 100.'

திரு. எம். ஏ. லத்திப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 23,—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,55,92.000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(அ) கோரிக்கை எண் 25—சின்கோனு.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 25,—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,18,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. என். கிட்டப்பா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணம் தரும் பல்வேறு மரம், செடி, கொடிகளை மூலப் பொருளாகக் கொண்டு பல்வேறு மணப் பொருள்களை, எண்ணெய் வகைகளை உற்பத்தி செய்யத் தவறியதைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,18,92,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்தரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்கோனு தோட்டங்களை அதிகமாக ஏற்படுத்தி வருமானங்களைப் பெருக்குவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,18,92,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25 — சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,18,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்கோனு பட்டையிலிருந்து தயாரிக்கும் காய்ச்சல் மாத்திரையின் தரம் சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,18,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1978 மார்ச் 28

THIRU R. MARGABANDU : Sir, to discuss about the Cincona plantations and the benefit to the public, I move—
'That the allotment of Rs. 1,18,92,000 under Demand No. 25-Cinchona be reduced by Rs. 100.'

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,18,92,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(எ) கோரிக்கை எண்—45 காட்டு வளத்துறை.

மாண்புமிகு திரு. க. உரொா எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண். 45 — காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,85,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, தமிழகத்தில் மலைப் பகுதிகள் ஏராளமாக இருந்தும் தரைப்பகுதியிலுள்ள விளைநிலங்களுக்கு ஏற்றப் பகுதிகளை வனத் துறையினர் பாதுகாப்பிலுள்ளதை நீக்கி, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுப்பது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,85, 63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வனங்களில் மரங்களைப் பேணிப் பாதுகாக்க தீவிர ஏற்பாடுகள் செய்யாதது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,85,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1978 மார்ச் 28]

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் கண்மாய்களுக்கு உள்பகுதியில் மரங்கள் வளர்ப்பது நல்ல பலனைத் தந்துள்ளதால் இன்னும் விரிவுபடுத்தும் முறையில் பெரிய கண்மாய்களிலெல்லாம் மரங்கள் வளர்ப்பது குறிப்பாக மானாமதுரை தாலூகா நெட்டூர் கண்மாயில் மரம் வளர்ப்பது சம்பந்தமாக விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,85,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDU: Sir, to discuss about the possibilities of starting sandalwood oil and soap factories and paper industries, I move—

'That the allotment of Rs.4,85,63,000 under Demand No. 45Forest Department—be reduced by Rs.100.'

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to effectively curb the widespread sandalwood smuggling in the State, I move-:

'That the allotment of Rs. 4,85,63,000 under Demand No.45—Forest Department be reduced by Rs.100.

(ஏ) கோரிக்கை எண், 56—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

'மானியக் கோரிக்கை எண் 56 — காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,61,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

<u>திரு. சு. பாலன் :</u> தலைவர் அவர்களே, காடுகளின் சந்தன மர வளர்ப்பு குறைந்து வருவதைச் சுட்டிக் காட்டி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 56 — காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,61,89,000--ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. ரெ. வீ. சவுந்திரராசன் :</u> தலைவர் அவர்களே, வன விலங்கு பாதுகாப்பு, மலைத் தோட்டங்கள் மேம்பாடு, வனப் பாதுகாப்பு ஆகியவை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 56 — காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,61,89,000- ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 56 — காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,61,89,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.





<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எடுத்து வைக்கப் பட்டிருக்கின்ற 4 மானியக் கோரிக்கைகளைப் பற்றி அரசாங்கத்தின் சார்பிலே உள்ள விளக்கங்களைப் புத்தகங்களாக *அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் தெளிவாகப் படித்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். அவைகளை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு, அவைகளை இந்த அவைக் குறிப்பேடுகளிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு நான் என்னுடைய பதிலை அவைகளுக்குப் பதில் தருகின்ற வகையில் சொல்வதற்கு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*<u>திரு. டி. எம். தைலப்பன் :</u> தலைவர் அவர்களே, கொடுத்துள்ள புத்தகத்திலே பக்கம் 5-இல் பாரா. 7 -ல் 1978–79-இல் நம்முடைய மாநிலத்தில், சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவி அளிப்பதில் மேலும் அதிக நாட்டம் செலுத்தவும், மொத்தம் வழங்கப்படுகின்ற கூட்டுறவுக் கடன்களில் குறைந்தது 60 சதவீதமாவது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகின்ற வகையில் அவர்கட்கு அளிக்கப்படும் கடன்களை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினர் யார்? 5 ஏக்கருக்குக் குறைந்து சொந்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது குத்தகைக்கு வைத்துள்ள விவசாயிகள் ஆவார்கள். கடன்களின் மொத்த அளவில் 34 சதவீதம் மட்டுமே சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டது. தற்போது 60 சதவீதத்திற்குக் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் புதிய விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் திட்டமா? அல்லது சிறிய விவசாயிகளுக்கு அதிகக் கடன் கொடுக்க உத்தேசமா? கடன்களைக் கொடுப்பதில் முறையாகச் செல்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது உண்டா? இல்லையெனில் அதற்கான . திட்டம் உண்டா? திட்டமும் இல்லாவிட்டால் கொடுக்கும் கடன்கள் விவசாயத்திற்கு இறைத்த நீர், விழலுக்கு இறைத்த நீர் ஆகும்.

*477-543ம் பக்கங்களில் இணைப்புகள் II, III, IV, V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. டி. எம். தைலப்பன்]

[1978 மார்ச் 28

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நீடாமங்கலம், ஒரத்தநாடு, திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு போன்ற பகுதிகளில் நலிந்த மெலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்றால், தள்ளுவண்டியில் விற்போர், தட்டுக்கூடைகள் தூக்குவோர், வீட்டுவீட்டுக்குச் சென்று விற்போர், மட்டுமா உழைத்து ஓடாய்த் தேய்வோர் அவர்கள் ஒருவரிடம் 20 ரூபாய் பெற 2 ரூபாய் வட்டி, 100 ரூபாய் பெற 10 ரூபாய் வட்டி கொடுக்க வேண்டும்.

(மாலை 4–10)

நாள் ஒன்றுக்கு 10 ரூபாய் வட்டி என்றால் 365 நாட்களுக்கு 3,650 ரூபாய் வட்டியாகின்றது. பத்து சதவீதம் வட்டியாகிறது. இந்தக் கொடுமையை ஒழிக்க ரூரல் பேங்குகள் வேண்டும். அந்த பேங்குகளின் மூலம் நபர் ஜாமீனில் கடன் வழங்க வேண்டும். இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

பார்பர் ஷாப் வைத்திருப்பவர்கள், லாண்டரி வைத்திருப்பவர்கள், சிறிய பெட்டிக்கடை வைத்திருப்பவர்கள், சுருங்கச் சொல்ல வேண்டுமானால் நமது உடன் பிறந்தவர்கள் பயன் பெறத் தக்க திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கூட்டுறவு என்பது ஒரு இயக்கம், அதை உணராமல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சி போர்டுக்கு ஆலோசனைக் குழு சிபாரிசு செய்கிறார்கள். அப்படிச் செய்தால் இந்த இயக்கம் வெற்றி பெறாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்பொழுது சிறுபான்மையோர், அரிசன மக்கள் ஆகியோர் மத்திய வங்கிகளில் இயக்குநராக நியமிக்கப்பட்டார்கள். ஏனையோர் தேர்தல் மூலமாக இயக்குநர்கள் ஆனார்கள். ஆனால் 'ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை' என்று சொல்வதைப்போல, எங்களைப் பழித்துவிட்டு நீங்கள் முழுக்க முழுக்க உங்கள் கட்சிக்காரர்களை நியமனம் செய்கிறீர்கள்.



[திரு. டி. எம். தைலப்பன்]

1978 மார்ச் 28]

பொதுவாக, ரிசர்வ் வங்கியிலிருந்து மாநில கூட்டுறவு வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து மாவட்ட மத்திய வங்கிக்கும், மாவட்ட மத்திய வங்கியிலிருந்து கிராமக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் கடன் அளிக்கப்படுவதால் அதிக வட்டி விகிதத்திற்கு ஆளாக்கப்படுகிறது. இந்த அமைப்பு முறையை மாற்றி வட்டி விகிதங்களைக் குறைக்க அரசு முன் வர வேண்டும்.

வட்டியை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் தப்பு வட்டி என்று வாங்குகிறார்கள். அந்த வட்டிக்குப் பெயர் வைத்தவர்களே தப்பு வட்டி என்று வைத்திருக்கிறார்கள். வெள்ளத்தின் பொழுதும் சரி, விபத்திலேயும் சரி, தப்பு வட்டி வசூலிக்கப்படுகிறது.

அண்மையிலேகூட தஞ்சாவூர் மாவட்டத்தில், மாவட்ட ஒன்றிய நண்பர்கள் அமைச்சரைச் சந்தித்துச் சில கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். அவற்றைப் படிக்க விரும்புகிறேன். முதலாவதாக, விவசாயிகளுக்குச் சென்ற ஆண்டில் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கும் எல்லாக் கடன்களையும் ஒன்று சேர்த்து ஒரே கடனாக, அதாவது நீண்டகாலக் கடனாக, 15 ஆண்டுகளில் சம தவணைகளில் வசூலிக்க ஆவன செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, இதுவரை விவசாயிகளுக்குக் கொடுத்துள்ள மத்திய காலக் கடன்கள், குறுகிய காலக் கடன்கள் ஆகியவற்றிற்கு உள்ள எல்லா வட்டிகளையும் மாநில அரசு மானியமாக ஆக்க வகை செய்ய வேண்டும். மற்றபடி உள்ள நீண்ட காலக் கடன்களுக்கு 9 சதவிகித வட்டி வசூலிக்க ஆவன செய்யவேண்டும். ...ப்படிப்பட்ட கோரிக்கைகளைத் தஞ்சைவந்த அமைச்சரிடத்தில் ...த்துள்ளார்கள். எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர ...ண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவரவர்...க்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

திரு. ஒ.ப.சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வனத்துறை மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

[திரு. ஓ. ப. சோமசுந்தரம்]

[1978 மார்ச் 28

என்னுடைய பொள்ளாச்சி தொகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்துள்ள ஒரு பகுதியாகும். அங்குள்ள மலைப்பகுதியில் ஏராளமான பழங்குடி மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கென்று சேத்துமேட்டையில் மலைவாழ் மக்களுடைய ஒரு சொஸைட்டி செயல்பட்டு வருகிறது. அந்தக் கூட்டுறவு சங்கத்தில், காட்டுப் பொருள்கள் மூலமாகவும், வனத்துறைக்குச் சொந்தமான நிலங்கள் மூலமாகவும் ஏறக்குறைய ரூ.3 இலட்சத்துக்கு மேல் வருவாய் வருகின்றது. அந்த ரூ.3 இலட்சம் பழங்குடி மக்களின் பெயரால், பழங்குடி மக்களின் உழைப்பால் பெறப்படுகின்றது. ஆனால், அந்தப் பணம், அங்கு வாழ்கின்ற பழங்குடி மக்களுக்குச் சரியாக பிரயோஜனப்படவோ, அவர்கள் வாழ்வுக்காக வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ பிரயோஜனப்படவில்லை. அதனுடைய பலன்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்சிக்காரர்களுக்கு, ஆளுங்கட்சிக்காரர்களுக்குப் போய்ச் சேர்ந்தது. அந்தச் சங்கத்தின் மூலமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அங்கு கிடைக்கும் புளி, தேன் போன்ற பொருள்களை அவர்கள் கட்சியினர்களுக்கென்று ஒதுக்கி, இலாபம் அத்தனையையும் அவர்களே எடுத்துக்கொண்டிருந்தார்கள் என்ற நிலை அன்று இருந்தது. அதோடு மட்டுமல்ல, அதிலே கிடைக்கின்ற பணம் ஆங்கங்கிருந்த அதிகாரிகளுக்கும் பங்கு என்ற முறையிலே, மரபுபோல், அவர்கள் ஆட்சிக்காலத்திலே நடைபெற்று வந்தது. அந்த நிலை மாறி, இன்று பழங்குடி மக்களுக்கு அந்தப் பொருளிலே கிடைக்கக்கூடிய வருவாய் செல்கின்ற வகையில், சங்கத்தினருக்குக் கொடுக்காமல் , பொது ஏலத்தில் விட்டால் இன்றைக்கு ரூ.3 இலட்சம் வரக்கூடிய வருவாய் ஏறக்குறைய ரூ. 7 இலட்சத்திற்கு மேலாகக் கிடைக்கும் என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆய்வின் பொழுது, அந்தச் சங்கத்திலே நடந்த ,புளி சேகரிப்பிலே நடந்த பல குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. ஆகவே, சங்கத்திற்கு விடாமல், பொது ஏலத்திற்கு அவைகளை விட்டால், இலாபமும், பங்கும் பழங்குடி மக்களுக்குப் போய்ச் சேரும். அவர்கள் வாழவும் உபயோகப்படுத்த முடியும். ஆகவே, அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும், அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தச் சங்கத்தின் மூலமாக அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம், வருஷத்திற்கு ஒரு ஜோடி சட்டையும், ஒரு ஜோடி வேட்டியும்தான். ஏறக்குறைய 52 ஏக்கர் பூமி இருக்கிறது. ஆயிரக்கணக்கான புளியமரங்கள் இருக்கின்றன. ஆனால், பழங்குடி மக்கள் வாழ்வதற்கு வீடு கிடையாது, பள்ளிக்கூடம் கிடையாது, பாதைகள் கிடையாது. அவைகளை எல்லாம் நமது அரசாங்கம், புரட்சித் தலைவர் ஆட்சி அமைத்துத் தரவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு. ஓ. ப. சோமசுந்தரம்]

புதுப்பேட்டையிலே வாழ்கின்ற பழங்குடிமக்கள், ஏறக்குறைய 300 பேர்கள் இருக்க வீடில்லாமல், ஏதோ மற்றவர்கள் குத்தகைக்கு எடுத்தது போல், ரூ. 200, ரூ. 300 கடன் பெற்று, அடிமைகள் போல் வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களைச் சங்கத்தின் உறுப்பினர்களாக ஆக்கி, அந்த் புதுப்பேட்டை நிலங்களில் ஆளுக்கு ஒரு ஏக்கர் குத்தகையாகக் கொடுத்து இந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு அடையத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். உழவு மாடு போன்றவைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வன விலங்கு நிலையம் இருக்கிறது. அங்கு வந்து வன விலங்குகளைக் காணுகின்ற உல்லாசப் பயணிகளுக்கு அங்குள்ள பாதுகாவலர்கள் தேவையான வசதிகளைச் செய்து தரவில்லையென்ற பல குறைபாடுகளை என்னிடத்திலே கூறினார்கள். அங்கே, கீழிருந்து 6 மணிக்கு மேல் எந்த வாகனமும் மேலே போகக்கூடாது; அதேபோல, மேலே இருந்து 7 மணிக்கு மேல் கீழே வரக்கூடாது. கீழிருந்து உல்லாசப்பயணி 7 மணிக்கு மேலே சென்றால், அங்கிருக்கிற 2 உட்ஹவுஸ், அது போல் பி.ஏ.பி., அதுபோக, ஒய்சன் லாட்ஜ் என்ற லாட்ஜ் இவைகளில் எல்லாம் உல்லாசப் பயணிகள் வாடகைக்குப் போயிருக்கமுடியாது. அப்படிப் போகவேண்டுமென்றால், பொள்ளாச்சிக்கு வந்து, அனுமதி பெற்றுக வேண்டும். மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு ஏன் அனுமதி வழங்கக்கூடாது. பொள்ளாச்சி சென்று அனுமதி வாங்கி வர வேண்டுமென்று உல்லாசப் பயணிகளுக்கு எப்படித் தெரியும்? எனக்குத் தெரியும், அங்கிருப்பவர்களுக்குத் தெரியும், ஆனால், தூரத்திலிருந்து வருகிற உல்லாசப்பயணிகளுக்கு அது தெரியாது.

அடுத்து, வன விலங்கு பாதுகாப்பு. தமிழகத்திலே, அதிகமான வன விலங்கு உள்ள ஒரே இடம், டாப்ஸ்லிப்—முதுமலை; வனவிலங்குகள் அதிகமாக உள்ள அந்த இடத்தைப் போல், தமிழகத்திலே வேறு எங்கும் நிச்சயமாகக் கிடையாது.

(மாலை 4-20)

சென்ற முறை கல்வி அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்க்கும்போதுகூட அந்த மிருகங்கள் இரண்டு கன்றுகளை ஈன்ற காட்சிகளைப் பார்த்தார்கள். இதுபோன்ற நல்ல காட்சிகள் தமிழகத்திலே மட்டுமல்லாமல், உலகத்திலே எந்தப் பகுதியிலே இருந்து வந்தாலும் அதைக் காணுவதற்கு வாய்ப்பாக அங்கே இருப்பதை நிச்சயமாக நாம் உபயோகப்படுத்திக்கொள்ள முடியும்.

அங்கே வனவிலங்குகளைக் காண்பதற்காக இரண்டு பெரிய வேன்கள் இருக்கின்றன. அந்த வேன்கள் நல்ல முறையிலே இல்லை என்பதைத் தயவு செய்து கூற விரும்புகிறேன். மிருகங்களை

காணச் செல்லும்போது ஏதாவது ஒரு காட்டு மிருகத்தைக் கண்டு விட்டால் அந்த வேன்கள் தானாகவே நின்று விடுகின்றன. உயிரின் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அந்த வேன்களைப் பயன்படுத்த மாட்டார்கள். அந்த வேனை ஓட்டுகிறவரும் அந்த வேனை எடுக்காமல் இருப்பதற்குத் தடை செய்வார். வேன் சரியாக இல்லை என்றும் இன்னும் பலவும் சொல்வார். எனவே அந்த வேனை நிச்சயமாக மாற்றிப் புது வண்டிகளை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அங்கே ஒரு கேட் இருக்கிறது. அந்தக் கேட்டைக் கடந்து செல்லும் ஒவ்வொரு வண்டிக்கும் 5 ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு வண்டிக்கு 5 ரூபாயும், லாரிக்கு 7 ரூபாயும் வசூல் செய்யப்படுகிறது. ஆனால் வருகின்ற உல்லாசப் பயணிகள் இது விஷயமாக சிரமத்தையும், கஷ்டத்தையும் அனுபவித்து வருகிறார்கள். இது எதற்காக வசூலிக்கப்படுகிறது? யார் வசூலிக்கிறார்கள் என்றும் தெரியவில்லை.

மேலும் அங்கே உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்று இருக்கிறது. 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. கட்டி 5 ஆண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப்படவில்லை. ஏன் திறக்கப்படவில்லை என்றால் எலெக்டிரிக் டிப்பார்ட்மென்டில் இருந்து கரன்ட் கனெக்ஷன் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். 4, 5 இலட்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்து கட்டிய விடுதி கேட்பாரற்றுக் கிடக்கிறது. அங்கே ஒரு பங்களா இருக்கிறது. அந்த பங்களா இன்று 4, 5 லட்சம் பெருமானம் உள்ள பங்களாவாகும். அங்கு யாரும் தங்குவதில்லை. காட்டு மிருகங்கள்தான் தங்கியிருக்கின்றன. அந்தப் பங்களாவுக்குச் செல்லும் பாதைகள் படுமோசமாக இருக்கின்றன. அதைச் சீர்செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பத்துமட்டை என்ற இடத்தில் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்ட இடமும் விவசாயம் செய்யக் கடனும், தொழில் செய்ய உதவியும் அரசாங்கம் வருவாய்த் துறை மூலமாக அளிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அங்கே இருக்கிற கார்டமம் போன்ற பொருள்களைப் பொது ஏலத்தில் விட்டால்இப்போது கிடைக்கிறவருவாயை விட 2, 3 மடங்கு வருமானம் அதிகமாகக் கிடைக்கும். இதிலே ஊழலுக்கு இடம் இருக்காது, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தைத் தவிர்க்கலாம் என்று கூறிக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே **பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.**





* <u>திரு. செ. சதாசிவம்:</u> துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் மானியங்களிலே, குறிப்பாகக் கூட்டுறவு பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்குத் தன்னுடைய தொண்டை ஆற்ற வேண்டுமென்றால் இன்றியமையாது விளங்கக்கூடிய அமைப்பாக விளங்குவது இன்று நாட்டிலே கூட்டுறவு என்பதை நாம் மறுக்க முடியாது. இருந்தாலும் இந்த வகையிலே இருக்கக்கூடிய பல்வேறு சிரமங்களை, சூழ்நிலைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்ற என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

இன்று கூட்டுறவு அடிப்படையில், முக்கியமாகக் கிராமப் புறத்திலே விவசாய மக்களுக்குப் பல்வேறு பணிகளைச் செய்யக் கூடிய அமைப்பு தமிழ் நாடு கூட்டுறவு வேளாண்மை கடன் சங்கங்கள்தான் மிகமுக்கியமாக அமைந்து இருக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அந்தச் சங்கங்களிலே இருக்கின்ற குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று கூட்டுறவு அடிப்படையில் அவைகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தாலும், மத்திய அரசின் திட்டங்களின் காரணமாக, நேஷனலைஸ்டு பாங்குகளும் இன்று விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்யவேண்டும் என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையைச் செய்யத் தொடங்கி இருக்கிறார்கள். அவர்கள் கடன் வழங்குவதையும், நாம் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் கொடுக்கும் கடன் வட்டி விகிதம் குறைவாகவும், கூட்டுறவுத் துறையில் கொடுக்கப்படும் கடன்களுக்கு வட்டி விகிதம் அதிகமாகவும் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாம் கொடுக்கிற கடன்களுக்கு 13½ சதவீதம் வட்டி என்றாலும், மத்தியக் கால கடன்கள் கொடுக்கும் நேரத்தில் 16 சதவீதம் என்று நாம் நம் சங்கங்கள் மூலம் விநியோகிக்கிறோம். அப்படி விநியோகிக்கிற நேரத்தில் ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தால் அந்த விவசாயியின் கையில் ரூ. 900 தான் போய்ச் சேரும் நிலை, ஏன் என்றால் 10 சதவீதம் ஷேர் காபிடலாக நாம் வசூலிக்கிறோம். ஆகவே, அந்த 900 ரூபாய்க்கு வட்டிக் கணக்குப் பார்த்தால் 17 சதவீதம் முதல் 18 சதவீதம் வருகிறது. அதோடு மட்டுமல்ல, அந்த விவசாயி பணம் திருப்பித் தருவதில் தவறினால் 3 சதவீதம் அபராத வட்டி சேர்த்து, 21 சதவீதம் என்று வசூலிக்கும் நிலை ஏற்படுகிறது. ஆனால் அதே நேஷனலைஸ்டு பாங்குகள் கொடுக்கும் நேரத்தில் அவர்கள் இதையெல்லாம் பார்க்காமல், முன்பு இருந்த விதிகளையெல்லாம் மாற்றி, முன்பு கடன்கொடுக்க வேண்டும் என்றால், பதிவு செய்ய வேண்டும், பத்திரங்கள் வாங்கவேண்டும் என்ற முறை இருந்தது—**அதையெல்லாம்**

[திரு. செ. சதாசிவம்] [1978 மார்ச் 28

படிப்படியாக மாற்றி அவர்கள் கூட்டுறவுத்துறையில் என்ன அடிப்படையில் கடன் வழங்குகிறார்களோ அதைப் பின்பற்றி வழங்குவது என்று வந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஆட்களை இழுக்கப்பார்க்கிறார்கள். அது வலுவான அமைப்பாக இருக்கும் என்றாலும், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 10,000, 15,000 என்று கடன் வாங்கும் ஒரு சிலரை எடுத்துவிட்டால் அந்தச் சங்கத்தின் நிலை கொஞ்சம் தளர்ந்து போகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர்கள் வட்டி விகிதம் குறைவாக இருப்பதால் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கியத்துவம் தாழ்ந்து விடும். ஆகவே, ரிசர்வ் வங்கியிடம் எடுத்துக்கூற வேண்டும், வேளாண்மைக் கடன் சங்கங்களுக்குக் கொடுக்கும் வட்டி விகிதம் குறைக்கப் படவேண்டும்.

அப்படிப் பார்க்கிறபோது தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கி, பிறகு கிராமக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், இப்படி 3 நிலைகளில் ஒவ்வொன்றிலும் 2 சதவீதம் வட்டி என்ற விகிதத்தில் கூட்டி வைத்து, கடைசியில் 6 சதவீதம் வட்டி அதிகமாகி, அந்த நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு, அந்தத் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி தேவை தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நேரடியாக மத்திய வங்கி மூலம் கொடுத்தால் அந்த வட்டி விகிதம் குறையும்.

ஆகவே, கூட்டுறவு நிர்வாக அமைப்பின்கீழ் மத்திய கூட்டுறவு வங்கியை வைத்து அந்த அதிகாரிகள் மூலமாகக் காரியங்களைச் செய்ய வேண்டும். அந்த வகையில் ரிசர்வ் வங்கிக்கு தமிழ்நாடு அரசு எடுத்துச் சொல்ல, கடன் விநியோகிக்கும் முறையில் மாற்றம் ஏற்படுத்தி வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும், குறைக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஷேர் காபிடலை கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஷேர் கேபிடல் ரூ. 5 என்ற அளவிற்குக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் குறைத்தால் உடனடியாக நன்மை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சிக்கன சேமிப்பு என்று பிடிக்கிறோம். ஒவ்வொரு முறையும் 2 சதவீதம் பிடிக்கிறோம். அந்தச் சிக்கன சேமிப்பு என்ற பெயரில் கூடுகின்ற நிலையை நாம் பார்க்கிறபோது, அந்தப் பணத்தை அவர்கள் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய அவ்வளவு ரூபாயையும் செலுத்தி விட்டு, கடைசியில் விலகுகின்ற நேரத்தில்தான் திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று சட்டம் வைத்து இருக்கிறோம்.



1978 மார்ச் 28] [திரு. செ, சதாசிவம்]

[மாலை 4-30]

இந்த அமைப்பைப் பார்க்கும்போது அவர்களுக்குப் பளு அதிகமாக இருக்கிறது. கிடைக்கின்ற கடனில் பெரும் பகுதியைத் திரும்ப வாங்கிக்கொள்ளுகிறோம் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. அதனால் சிரமப்படுகிறார்கள்.

அடுத்து, விநியோக முறையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஆண்டுக் கடன் முறையானது மிகவும் பளுவாக இருக்கிறது. இன்றல்ல, இதற்கு முன்னாலும் நான் இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். வழங்கப்படும் கடனைப் பற்றி பிப்ரவரி, மார்ச் மாதத்திலே திட்டமிடுகிறோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே ஆண்டுக் கடன் வழங்க அனுமதிக் கப்படுகிறது. ஒரு விவசாயி எந்தெந்த நேரத்தில் என்னென்ன பயிர் செய்கிறான் என்று பார்த்து அதற்கேற்ற முறையில் கடன் கொடுக்க அனுமதிக்கப்படுகிறது. ரிசர்வ் வங்கி நாம் போடுகின்ற திட்டத்தின் அடிப்படையிலே பணத்தை ஒதுக்கித் தருகிறது. ஆனால் விவசாயி, தன்னுடைய விவசாயத்தைச் செய்ய ஆரம்பிக்கும்போது, அவன் முதலிலே கரும்பு பயிரிட திட்டமிட்டிருந்தால், சூழ்நிலையின் காரணமாகத் தண்ணீர் இல்லாமலோ, மழை இல்லாமலோ அல்லது வேறு வேறு காரணங் களினாலோ கரும்பு பயிர் செய்யமுடியாமல் இருக்கும்போது அவன் வேறு பயிர் செய்யவேண்டுமென்றால் மீண்டும் பாங்க் அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும். அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. காரணம், ஆண்டுக் கடன் அப்போ செய்யும்போது இந்தக் காலத்தில் உழவு, இந்த காலத்தில் அறு வடை என்று குறிப்பிட்டு அப்போ செய்யவேண்டியிருக்கிறது. அதனால் இந்த ஆண்டுக் கடனை மாற்றியமைக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக ஒரு விவசாயி எவ்வளவு நிலம் வைத் திருக்கிறான் என்ற கணக்கைப் பார்த்து, ஆண்டு பூராவும் அந்த நிலத்தில் எந்தப் பயிர் செய்கிறான் என்ற கணக்கையும் பார்த்து, எந்தப் பயிர் எந்த நேரத்தில் செய்யப்படுகிறது என்ப தைக் கண்டறிந்து, எந்த அளவுக்குக் கடன் கொடுக்க வேண்டு மென்பதையும் கண்டறிந்து, அதற்கு ஏற்ற மாதிரி 'ஓவர் ட்ராப்ட்' அல்லது பாஸ் புத்தக முறை போன்ற வழிவகைகளைச் செய்து, தேவையான அளவுக்கு நிதி உதவி வழங்க ஏற்பாடு செய்தால் மிகச் சுலபமாக இருக்கும்.

ஆனால் அதே நேரத்தில் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண் டுமென்றால், 'ஓவர் ட்ராப்ட்' வழங்கினால், அது குறுகிய காலக் கடனாகவோ அல்லது மற்றக் கடனாகவோ இருந்தால் இந்த ஆண்டு இவ்வளவு செலுத்த வேண்டுமென்று சொல்லி விடலாம். அப்படிச் செய்துவிட்டால் எளிய முறையில் கடன் பெற்று, சுலபமாகத் திருப்பிக் கொடுக்க வசதியாக இருக்கும்.

முன்பெல்லாம் அங்கு 'நான்—அஃபிஷியல் சேர்மென்' இருந்த காலத்தில் கோ—ஆர்டினேஷன் அடிப்படையில் இவைகளை எடுத்துச் சொல்லமுடியவில்லை, இப்போது கோ-ஆர்டினேஷன் கமிட்டியில் ஸ்பெஷல் ஆபீஸர் போன்றவர்கள் இருப்பதால் இவைகளை நன்கு திட்டமிட்டு ரிசர்வ் வங்கியை ஒப்புக்கொள்ள வைத்து அவர்கள் நாம் வகுத்துக்கொடுக்கும் எல்லைக்கோட்டின் அடிப்படையில் பணம் ஒதுக்குவதால், நான் கூறியபடி இப்போது வழங்கும் முறையை மாற்றியமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, கிராமங்களில் இருக்கக்கூடிய சிறிய வேளாண்மை கடன் சங்கங்களின் வசதிகளைப் பெருக்க வேண்டும். வேளாண்மை செய்பவர்கள் மூலம் ஷேர் காபிட்டல் வாங்குகிறோம். ஷேர் காபிட்டல் 10 சதவீதம் வாங்கியிருந்தாலும் மத்திய வங்கி 7 சதவீதம் வாங்கிக்கொள்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான வருமானமும் கிடையாது. 2 சதவிதம் கொடுக்கும் வட்டியிலிருந்துதான் எல்லாச் செலவுகளையும் நடத்த வேண்டும். இது போதாது. இன்னும் அதிகமான வசதி செய்வதற்குள்ள சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இப்போது இருக்கிற அமைப்பில் ஒருசில வசதிகள் இருக்கின்றன. நான் அமைச்சரவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது இந்த வேளாண்மைக் கடன் சங்கங்கள் மூலம், இப்போது இருக்கிற பல்வேறு வகைகளில் விநியோக சங்கங்கள் மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே இதுவரை நாம் பல்வேறு விநியோகங்களைச் செய்து வந்தோம். குறிப்பாக உணவுப் பொருள் தட்டுப்பாடு வந்த நேரத்தில்—நான் 1942-லிருந்து கூட்டுறவுத் துறையில் பணி புரிந்து வருகிற அனுபவத்தில் சொல்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருட்களை விநியோகம் செய்ததால்தான் விலையைக் கட்டுப்படுத்த முடிந்தது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏதோ சில இடங்களில் சில தவறுகள் நடக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே தவறு நடக்கின்றது என்று தவறான கருத்துக்கள் அரசியல்வாதிகள் மூலமாகப் பல்வேறு இடங்களிலே பேசப்படுகிறது. எல்லா இடங்களிலும் இவ்வாறு தவறுகள் நடப்பதில்லை. எல்லா இடங்களிலும் நடக்கின்றது என்று சொல்லுவது சரியானதல்ல. பல கூட்டுறவுச் சங்கங்களிலே முன்னேற்றத்தை நாம் காண்கிறோம். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எப்படி அன்றைக்குச் சொன்னார்கள் என்று புரியவில்லை. அது உண்மையான கருத்தல்ல. இதனால் கூட்டுறவாளர்கள் மனம் புண்பட்டிருக்கிறார்கள். சங்கத் தலைவர்கள் உணவுப் பொருள் வினியோகத்தையே நிறுத்திவிட எண்ணுகிறார்கள்.



இது சரியாக நடக்கவில்லை என்று கருதி நீங்கள் இந்த உணவு விநியோகத்தை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் கொடுப்பீர்களேயானால் நிச்சயமாக நாட்டிலே நீங்கள் நினைப்பது மாதிரி பொருட்களை நேர்மையான முறையிலே வினியோகிக்க முடியாது என்று திட்டவட்டமாக நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, கூட்டுறவுத் துறையின் மேலே தவறு சொல்ல வேண்டாம் என்பது என்னுடைய கருத்து. அந்தச் சங்கங்கள் மூலமாகத்தான் நல்ல முறையிலே வினியோகிக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சங்கம் லாபகரமாக இயங்கும் வகையில் அதை நல்ல முறையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறப்பதாக இருக்கிறீர்கள். ஆனால் அவைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்வதுதான் நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் யார் போய் வாங்கக்கூடிய நேரத்திலேயும் எடை குறைவாக உள்ளது என்பதை எடுத்துரைத்தால் அதற்கு அவர்கள் எந்தவிதமான பதிலையும் கூறுவது கிடையாது. ஒரு சிவில் சப்ளை க்டோனுக்குப் போனால் உள்ளேயே விடமாட்டேன் என்கிறார்கள். பெரிய அதிகாரியாக இருந்தால் கூட விட மறுக்கிறார்கள். சப் கலெக்டராக இருந்தால் கூட அவர்கள் கருத்துக்கள் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஆகவே இப்போது இந்தப் பணியை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் கொடுத்தால் கிராம மக்களிடையே வினியோகிக்கும் பொருள்களுக்கு ஒரு மோசமான நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புயலால் பாதிக்கப்பட்டவைகளில் ஒன்று என்னுடைய பகுதி. அந்தப் பகுதியிலே இருக்ககூடிய விவசாயிகள் தங்களுடைய நிலத்தினை ஈடு வைத்து குறுகிய காலக் கடனாகவும் நீண்டக் காலக் கடனாகவும் விவசாயக் கடன் சங்கங்களிலிருந்தோ அல்லது நிலவள வங்கியிலே இருந்து வாங்கி இருக்கிறார்கள். அங்கே இருக்ககூடிய என்னுடைய பகுதிகளில் சில நிலங்கள் மண்ணால் மூடப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் உதவி கொண்டுதான் அதனைச் சரிப்படுத்த முடியும். இப்போது அந்த நிலங்கள் எல்லாம் புல்டோசர் வைத்து விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக மாற்றி வருகிறார்கள். அந்த இடங்களிலே சுமார் 600, 700 ஏக்கர் பகுதிகளிலே கம்ப்ளீட் எரோசன் ஆகி இருக்கிறது. இப்போது பாறைகளாகவும் ஓடைகளாகவும் தான் காட்சியளிக்கின்றன. மூன்று ஏக்கர், 4 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் உழைத்து உருக்குலைந்து நிலவள வங்கி மூலமாக கடன்களைவாங்கி நிலத்தைச் செப்பனிட்டு மோட்டார் வைத்து பைப் லைன்கள் போட்டு சீர்படுத்தி இருக்கிறார்கள். இப்போது அந்தத் கடன்களை எல்லாம் நிச்சயமாக அவர்களால் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை. டிபார்ட்மென்ட்கள் அவர்கள் கடனைக் கொடுக்கவில்லை என்று ஜப்தி செய்யக்கூட முடியாத நிலைமை இருக்கின்றது. அவர்களுள் நல்ல முறையில் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். மத்திய மாநில கூட்டுறவு வங்கிகள்

மூலமாக பேட்டெட் ரிசர்வ் நிதி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ரிசர்வ் தொகையிலிருந்து இந்த நேரத்தில் அவர்களுக்குக்கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை விட இந்தத் தலைப்பில் உள்ள நிதியை உபயோகிப்பதற்குரிய இதைவிட அரிய வேறு சந்தர்ப்பம் கிடையாது. ஆகவே அந்த நிதியிலிருந்து அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் அந்த விவசாயிகளை ஓரளவுக்காவது திருப்தி செய்ய முடியும் என்பதைக் கூறி நான் இதுபோன்ற நல்ல பல முன்னேற்றத் திட்டங்களை ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவித்து இன்னும் மேன்மேலும் வளர்ப்பதற்கு வகை செய்து எளிய முறையிலே விவசாயிகளுக்கு கடன் கிடைக்க வகை செய்ய வேண்டும என்று கூறி என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 4-40.]

திரு. பி. ராமதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம்மாண்புமிகுகூட்டுறவுத்துறைஅமைச்சர் அவர்களால் இந்த அவை முன் சமர்ப்பித்துள்ள கூட்டுறவு மானியக் கோரிக்கைமீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு, கூட்டுறவே கிராம வளர்ச்சிக்கு உறுதுணை என்பன போன்ற முதுமொழிகள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் அமைந்தஅரசாலும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் உயரிய உழைப்பாலும்தான் இன்று சிறப்புப் பெற்றிருக்கின்றன என்பதனை பெரு மகிழ்வோடு கூறிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். கிராம ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகவும், கிராமப்புற வளர்ச்சிக்காகவும், அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறவும், அவர்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்காகவும் அமைக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் சில ஆண்டுகளாக ஒழுங்கான முறையில் நடைபெறாமல் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் அந்த நோக்கம் எல்லாம் ஈடேறும் வகையில் செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

கூட்டுறவுத் துறை என்பது ஒரு காலத்தில் ஊழல் நாயகர்களின் கூடாரமாகவும், ஊழல் குட்டி அரசர்களின் சாம்ராஜ்யமாகவும், லஞ்சலாவண்யக்காரர்களின் பிறப்பிடமாகவும் இருந்து வந்தது. ஆனால் இப்போது அது ஏழை எளியவர்களின் காப்பகமாகவும், ஏழை எளியவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் உறைவிடமாகவும், கிராமப்புற மக்களின் பூங்காவாகவும் இன்று உள்ளதைப் பார்க்கும்போது உள்ளபடியே நாம் பெருமைப்படலாம். அத்தகைய ஒரு நிலையை, நம் தானைத் தலைவர் புரட்சித்





தலைவர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது நாம் எல்லாம் பெருமிதம் அடையக் கூடிய நேரத்தில் அந்தப் பெருமையையும் புகழையும் வாங்கிக் கொடுத்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த ஏழை எளிய மக்கள் சார்பில் என் உளமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அரசு ஏழை எளியவர்களின் நலனுக்காக பாடுபடுகிறதோ, அவர்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்க நினைக்கிறதோ அந்த அரசினுடைய எண்ணங்கள் ஈடேற்ற விடாமல் கிராமப்புற கூட்டுறவு நிலையங்களில் இன்னும் சில குட்டி மஸ்தான்கள் தங்களுடைய ஆதிக்க சாம்ராஜ்யத்தினை நிலைநாட்டி கொண்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்பால் அன்பு கொண்ட இந்த அரசு மக்களால் அமைக்கப்பெற்ற இந்த மக்கள் அரசு அவர்களையெல்லாம் நீக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நீக்கி ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த பெரிதும் உதவ வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் பல கூட்டுறவு விவசாய வங்கிகள் இருக்கின்றன. சென்றமுறை பருத்தி சாகுபடிக்காக க்ராப் லோன் வாங்கினார்கள். ஆனால் கொடிய புழுக்களின் கோரச் செயலால் அந்தப் பருத்தி சாகுபடி சீரழிந்த நிலையில் உள்ளது. அப்படி பருத்திச் சாகுபடி சீரழிந்த நிலையில் இருப்பதன் காரணமாக அவர்கள் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அரசு இதில் உடனடி கவனம் செலுத்தி சற்று காலதாமதம் ஏற்பட்டாலும் அவற்றை, குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக்கடன்களாக ஆக்கி அந்த ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

என் பகுதியில் உள்ள கூட்டுறவு விவசாய வங்கிகளில் இன்னும உரம், பூச்சி மருந்துகள் தருணத்தில் கிடைக்காத நிலையில் அரசு உடனடியாக கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நிலவள வங்கிகளில் பல பேர்கள் ரிட்ரென்ச் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஒரு வழி வகை செய்யுமளவிற்கு நிதிநிலைமை சீராக உள்ள வங்கிகளில் அவர்களையெல்லாம் அப்சார்ப் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய பணங்களையெல்லாம் பல பாங்குகளில் டெப்பாஸிட் செய்வதை நிறுத்தி நம் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் டெப்பாஸிட் செய்தால் அதனால் வரும் லாபத்தை வைத்து நாம் இன்னும் பல கிராமப்புற மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு இன்னும் பல நன்மைகள் செய்ய வாய்ப்புள்ளது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பி. ராமதாஸ்] [1978 மார்ச் 28

அடுத்து, வன இலாகாவைப் பொறுத்தவரையில் என் தொகுதியில் சுமார் 2,500 ஏக்கர் நிலத்தில் உழவு சாகுபடி செய்து, போடி- தெரிந்தோ தெரியாமலோ செய்து விட்டார்கள். இன்று அந்த மரங்கள் பத்து பதினைந்து ஆண்டு மரங்களாக உள்ளன. இன்று அங்குள்ள ஏழை எளிய மக்கள் அந்த காடுகளைத்தான் நம்பியிருக் கிறார்கள் தங்கள் வாழ்க்கைக்கு. அந்த காட்டு நிலங்களை, அந்த ஏழை எளியவர்களின் இருப்பிடமாக உள்ள அந்த காட்டு நிலங் களை, ஏழை எளியவர்களால்பால் கருணை காட்டும், அன்புகொண் டுள்ள இந்த அரசு, அந்த ஏழை எளிய மக்களுக்கே பட்டாசெய்து கொடுக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். நன்றி. வணக்கம்.

## 10. தன்னிலை விளக்கம்.

**தன் மதுரை சுற்றுப் பயணம் பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுடைய குற்றச்சாட்டிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் விளக்கம்.**

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் மானியங்களின் மீது விவாதம் நடக்கும் போது, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், என்னுடைய மதுரை சுற்றுப் பயணத்தின் போது, நன்கொடை அளிக்க வேண்டும் என்று கொடைக்கானல் கால் நடை பரா மரிப்புத் துறை துணை இயக்குநர் அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்திருப்பதாக குறிப்பிட்டார்கள். அதன் மீது நான் தன்னிலை விளக்கம் கூற கடமைப்பட்டிருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரி இப்போது இங்கு தற்போது பயிற்சிக்காக வந்துள்ளார் கள். அவர் கொடுத்துள்ள விவரம் பின்வருமாறு :—

'From
Dr. R. Natarajan,
Assistant Director of Animal Husbandry,
Kodaikanal
(Under Training: Madras)

To
The Director of Animal Husbandry,
Madras-5.

Sir,

Sub: Appeal for collections— Regarding.

—o—o—

I submit that a meeting at the Office of the Regional Deputy Director of Animal Husbandry, Madurai was held in September, 1977. Two days after I was attending to the office



1978 மார்ச் 28] [செல்வி பி.டி.சரஸ்வதி]

work at my office, Members belonging to the DMK party including Thiru Rahaman Khan, MLA came to the office. At that time I was discussing the subject of the visit of Hon'ble Minister for Animal Husbandry with my staff. During the course of the discussion the D. M. K. Members suggested the an appeal for donation for meeting the expenditure in connection with the visit of the Hon'ble Minister can be made to the members of the subordinate staff. They also suggested that since the donations are given voluntarily by the staff there is no harm in issuing a written circular. I thought this was a harmless suggestion. Accordingly I appealed on 3rd November 1977. I did not follow up this appeal and no collections were made on this score and no account was maintained.

2. It is really unfortunate that I have issued such an appeal totally in violation of service rules. I confess the mistake committed. I humbly request that I may be excused in this regard. I assure you, Sir, such mistakes will not occur in future.

Yours faithfully,
Sd. Dr. R. Natarajan
28/3/78
(DR. R. NATARAJAN).

இது சம்பந்தமாக செயலாளர் அவர்களுக்கோ அல்லது கால் நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களுக்கோ அல்லது மண்டல துணை இயக்குநர் அவர்களுக்கோ விவரம் தெரியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருப்பினும் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தன்னிலை விளக்கம் கொடுத்துள்ளார்கள். இதன் மீது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர் கள் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்கள். அதன் மீது உங் களுடைய கருத்துக்களைச் சொல்வது என்பது மரபாக இல்லாமல் இருந்திருக்கிறது.

திரு. ஏ. ரகுமான்கான் ; துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த தன்னிலை விளக்கத்தில் நான் சம்பந்தப்பட்ட சில விவரங்களை சொல்லியிருக்கிறார்கள். அதில்

சில கிளாரிபிகேஷன் நான் கேட்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே துணைத் தலைவர் அவர்கள் அருள் கூர்ந்து என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்வது என்னவென்றால், உங்களைப்பற்றி குறிப்பிட்ட வார்த்தைகளை மட்டும் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். மற்றபடி இதை ஒரு கேள்வி நேரமாகவோ அல்லது டிஸ்கஷனாகவோ ஆக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சுருக்கமாக சொல்லுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட விவாதம் நடைபெற்ற போது இருந்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் எந்த தேதியில், எங்கு, எந்த டிஸ்கஷனில் இருந்தேன் என்கின்ற விவரம் சொல்லப்படவில்லை. என்ன டிஸ்கஷனில் நான் கலந்து கொண்டேன் என்கின்ற விளக்கமும் இல்லை. இரண்டாவது நான் கூறிக் கொள்ள விரும்புவது, எனக்கு இதுபற்றி தரப்பட்ட தகவலை நான் ஆதாரத்தோடு இங்கு வைத்திருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் தன்னுடைய தன்னிலை விளக்கத்தில் கூறியிருப்பது.

Members belonging to the D. M. K. party including Thiru Rahamankhan, M. L. A. came to the office.

நான் இருந்ததாக இருக்கிறது. அந்த டிஸ்கஷன் எந்தத்தேதியில் எந்த அலுவலகத்தில் நடைபெற்றது என்பதை ஆதாரத்தோடு சொல்லவில்லை. அதே நேரத்தில் குறிப்பிட்ட நாளில் நான் அங்கு இல்லவே இல்லை. இந்த டிஸ்கஷனில் கலந்து கொள்ளவும் இல்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன விளக்கத்தைக் கொடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டரோ அல்லது க்ளாரிபிகேஷன் கேட்கின்ற கேள்வியோ வரவில்லை. இந்தப் பிரச்னையை பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் என்ற முறையில் அவர்களைப் பற்றி கூறிய குற்றச்சாட்டுக்கு அதிகாரிகள் கொடுத்த தகவலை வைத்து இங்கு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கலந்து கொள்ளவில்லை என்று உங்கள் கருத்தைக் கூறியிருக்கிறீர்கள். அதோடு இந்தப் பிரச்னையை இதோடு முடித்து விடலாம்.

[மாலை 4.50]

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்தச் சபையிலே தந்திருக்கிறார்கள். காரணம், நான் எந்தக் கூட்டத்திலேயும் கலந்து கொள்ளவில்லை.



சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நான் எதுவும் பேசவும் இல்லை. அப்படிப் பேசியதாகச் சொல்வதற்கு என்ன ஆதாரம் என்பதை, அவர்கள் இந்தச் சபையில் விளக்கினால் சரியாக இருக்கும். இல்லையென்றால், அவைகளை இந்தச் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டும்.

(ஆளுங் கட்சியிலே இருந்து சில உறுப்பினர்கள் எழுந்திருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் பேச வேண்டாம். உங்களுக்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். உங்களுடைய கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் அதிகாரியிடமிருந்து வந்திருக்கின்ற பதிலை இங்கே வாசித்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, அதிலே தாங்கள் கலந்து கொள்ளவில்லை என்ற உங்களுடைய பேச்சும் இந்த அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிறது. ஆகவே, உங்களுடைய குற்றச்சாட்டிற்கு, அமைச்சர் அவர்களுடைய பதிலும், அதற்கு மேல் தங்களுடைய பதிலும் சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. துரை முருகன் : இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைப் படித்தார்கள். அதிலே, அந்த அதிகாரியோடு ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள், ரகுமான்கான் அவர்கள் ஆலோசனை கலந்தார்கள் என்றார்கள். அந்த அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, ரகுமான்கான் அவர்கள் சொல்கிறார், இந்த மாதிரி எந்த அதிகாரியோடும் நான் பேசவில்லை, எந்த விதமான டிஸ்கஷனிலும் கலந்து கொள்ளவில்லை என்று.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான கருத்தைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் காலை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நம்முடைய சமுதாய நல வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேல் சில குற்றச்சாட்டுகள் கொண்டு வந்தார்கள். அப்படி குற்றச்சாட்டுகள் கொண்டு வந்த காரணத்தால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் அளிக்கும் உரிமை அவர்களுக்கு நிச்சயம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். தன்னுடைய நிலைமையை விளக்குகின்ற வகையில், மாண்புமிகு சமுதாய நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எந்த விதமான விளக்கத்தையும் கொடுக்கவில்லை என்பதையும், அவர்கள் அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரி அவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதைப் படித்திருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

[1978 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். ஏற்கனவே நான் சொன்னேன், அந்த அதிகாரி எழுதிக் கொடுத்த பதிலைத்தான் அந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள் என்று. அதற்கு உங்களுடைய பதிலையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, தயவு செய்து இந்தப் பிரச்னையை இதோடு முடித்துக் கொள்ளலாம். அடுத்து, திரு. ஞானசிகாமணி.

## 8. 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

*திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வனத் துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பாக கூற விரும்புகிறேன்.

இந்த வனத்துறை மானியத்திலே காடுகள் வளர்க்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாட்டிலே, மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டுமென்றும், அந்தக் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் நமது நாட்டிலுள்ள நியதி. அந்த அடிப்படையிலே கடந்த தடவை பண்ணை நிலங்கள், பயனற்ற நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகிய நிலங்களில் ஏராளமான காடுகள் வளர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று கூறப்பட்டது. அந்த அடிப்படையிலே பரவலாக பல இடங்களிலே புதிய காடுகள் வளர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டதுக்

ஆனால், அந்தக் காடுகள் வளர்க்கப்படும்போது ஒவ்வொரு. ஜில்லாவிலும் எந்தெந்தப் பகுதிகளிலே, எத்தனை எத்தனை ஏக்கரு காடுகள் வள்ர்க்கப்பட்டன என்பதைப் பற்றிகூட இந்த அறிக்கையிலே கூறியிருந்தால் நலமாக இருந்திருக்கும். மேலும், இப்படி புதிதாக காடுகள் வளர்ப்பதற்கு நாம் திட்டமிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நமது பல்வேறு காடுகளிலே இருந்து ஏராளமான வருவாய் சந்தன மரத்திலிருந்து சந்தனக்காடுகளிலிருந்து நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே நமது மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் கூறினார்கள். இந்தக் காடுகளிலே இருந்து ஏராளமான சந்தன மரங்கள் திருட்டுப் போய்க் கொண்டிருக்கின்றது என்று பல குற்றச்சாட்டுக்களை கூறினார்கள். ஆகவே, இந்த சந்தனக் காடுகளிலே வளர்க்கப்படுகின்ற சந்தன மரங்களை நாம் சரியான முறையிலே பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நீலகிரி மலையிலே சின்கோனாத் திட்டத்தைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.



1978 மார்ச் 28] (திரு. தே. ஞானசிகாமணி)

சின்கோனா தோட்டத்திலே அதிகமான வருவாய் கிடைக்கிறது. ஆனால் அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குப் பக்கத்தில் தேயிலைத் தோட்டங்களில் கொடுக்கக்கூடிய சம்பளம் கூட கொடுக்கப்படவில்லை. ஆஸ்பத்திரி வசதி இல்லை, ரோடு வசதி இல்லை. அவர்கள் தங்குவதற்கான குடிசைகள், நீண்ட காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டவை. மழை காலத்தில் அவர்கள் வாழ முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் தற்போது சுமார் அரை மைல், ஒரு மைல் தூரமுள்ள பள்ளத்தாக்குகளில் இருக்கிறார்கள். அவர்கள் நோய்வாய்ப் பட்டால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வது சிரமமான காரியம். அந்த வீடுகளைப் புதிதாகக் கட்டும்போது மேட்டுப் பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் வனத் துறையால் ஆயிரக் கணக்கான ஏக்கரில் ரப்பர் பயிரிடப்படுகிறது. மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசின் மானியத்தோடு நடைபெறுகிற அந்த ரப்பர் பிளான்டேஷனில் சிலோனிலிருந்து வந்த அகதிகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அகதிகளுக்கு வேலை கொடுக்கும்போது ஒரு குடும்பத்துக்கு இரண்டு பேருக்கு மேல் வேலை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆண்டு பூராவிலும் பெண்களுக்கு அதிகமாக வேலை கிடைப்பதில்லை. பல மாதங்கள் வேலை இல்லாததன் காரணமாக அந்தக் குடும்பங்கள் பட்டினியில் வாழுகின்ற நிலைமை இருக்கிறது. எல்லா நாட்களும் ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு வேலை கொடுத்தால்தான் அவர்கள் வாழ முடியும். அப்படி வேலை கொடுக்காததன் காரணமாக சிலோனிலிருந்து வந்த அகதிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்பட வேண்டும், அங்குள்ள காவலர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். காட்டு வேலை செய்கிறவர்களுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வேலை செய்கிறவர்களுக்கு ஒரே விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

அந்த ரப்பர் பிளான்டேஷனில் அதிகமான ஊழல் நடப்பது பற்றித் தொடர்ந்து நாங்கள் கூறிக் கொண்டிருக்கிறோம். 1964–65-ல் காணிக்கேசம் டிவிஷனில் 100 ஏக்கர் ரப்பர் வைத்து மூன்று நான்கு வருஷம் கழிந்து காடு எடுக்காமல், தீ வைத்தோ எப்படியோ ரப்பர் எரிந்து போய் விட்டது. அதனால் அரசுக்கு லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம். இந்தத் தொழில் அதிகமான லாபத்தைத் தரக்கூடியது, அதே நேரத்தில் அதிகமான செலவும் ஏற்படுகிறது. சாதாரண கம்பெனி தோட்டங்களில்

ஒரு ஏக்கர் ரப்பர் பயிரிட என்ன செலவாகிறது? ஒரு ஏக்கரில் எவ்வளவு வருவாய் கிடைக்கிறது என்ற அடிப்படை கணக்கெடுத்து எப்படி ஊழல் நடந்திருக்கிறது என்பதை ஒரு விசாரணைக் கமிஷன் போட்டு விசாரணை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் ரப்பர், லவங்கம், மங்குஸ்ஜீன், கிராம்பு போன்ற பல்வேறு விதமான விலையுயர்ந்த பொருட்கள் உற்பத்தியாகின்றன. அங்கு தென்னை மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. தென்னையில் பலவிதமான மாதிரிகள் இருக்கின்றன. மிகக் கடுமையான நோய் தென்னைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதே போல் ரப்பருக்கும் ஏற்பட்டிருக்கிறது. சரியாக ஆராய்ச்சி நடத்தி சரியான மருந்துகள் தயாரித்து நோய் வராமல் தடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தடிக்காரக்கோனத்துக்குப் பக்கத்தில் பள்ளம் என்ற இடம் இருக்கிறது. 90 ஏக்கர் 900 ஏக்கராக மாறிய இடம். தனியாரிடமிருந்து வன இலாகா கேஸ் போட்டுத் திரும்பப் பெற்ற இடம். அங்கு காடுகள் இல்லை. அங்கு ஒரு ஆராய்ச்சி நிலையமோ, அல்லது விவசாயக் கல்லூரியோ ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். பயிர்களுக்கு வரும் நோயையும் தடுக்க முன் கூட்டியே தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

[மாலை 5-00]

அதோடு கூட கிழக்கோதையாறு பகுதியில் மார்க்கெட் ஏரியாவில் சில குடிசைகள் இருக்கின்றன. அங்கு மின்சாரத் திட்டம் நடந்த காலத்திலே அந்தக் குடிசைகள் கட்டப்பட்டன. அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சித்தாறு அணைக் காட்டுப் பகுதியில் சுமார் நூறு குடும்பங்கள் இருந்தன. அணையில் தண்ணீர் நிரப்பும்போது அவர்களுக்கு முன்னாலே இருந்த ஆட்சியில் மாற்று இடம் கொடுக்கப்படும் என்று உத்திரவாதம் கொடுக்கப்பட்டது. ஆகவே, காடுகள் அழிந்துபோன தொடலக்காடு பகுதியில் மாற்று இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே காடுகள் அழிந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, காட்டுக்குள்ளே போக நாடும் காடுமாக உள்ள பகுதிகளை இணைக்கக்கூடிய ரோடுகளை நல்ல முறையிலே போடுவதற்கும் ரோடுகளை சரிப்படுத்துவதற்கும், பல லட்ச ரூபாய் பிரத்தியேகமாக ஒதுக்கப்படும் என்று கழிந்த தடவை சொல்லப்பட்டிருந்தது. பாலமோரிலிருந்து மேல் கோதை



யாறு போகும் ரோடும், கீரைப்பாயிண்டிலிருந்து கீழ் கோதையாறு வரைக்கும் போகும் ரோடும், ஆலச்சோலையிலிருந்து ஆறு காணி வரைக்கும் போகக்கூடிய ரோடும் இது வரையில் செப்பனிடப்படவில்லை.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி ஒரு வார்த்தை. எங்கள் ஜில்லாவிலிருந்து ஏராளமான பேர்கள் கேரளாவிற்குச் சென்று பத்திரப் பதிவு செய்கிற நிலைமை இருக்கிறது. அதனால் அங்கு அரசாங்கத்திற்கு போதிய வருமானம் வருவதில்லை. ஸ்தல ஸ்தாபனத்திற்கும் இதனால் கிடைக்க வேண்டிய வருவாயும் கிடைக்கவில்லை. ஒரு சென்ட் நிலம் 200, 300 ரூபாயாக இருந்தால் அதை 1,000 ரூபாயாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக பத்திரம் பதியக்கூடியவர்கள் நிலத்திற்கு விலை நிர்ணயிக்கப்படாத கேரளாவில் சென்று பதிக்கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் பத்திரப் பதிவு நடைபெறுகிறது. சிறிய பெரிய ரப்பர் தோட்டங்கள் இருக்கக்கூடிய மாவட்டம் அது. பத்திரப்பதிவு செய்யப்படுகிறபோது கேரளாவிற்குப் போகிற நிலைமை இருக்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத்திலே விலை இப்படி நிர்ணயித்திருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைக் கடன் வசதி அதிகரித்தால் தான் விவசாயம் வளர்ச்சியடையும். சிறு விவசாய மக்கள் கூட பயனடைய வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1976-77-இல் விவசாயக் கடன் ரூ. 125 கோடியாக இருந்ததை 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 145 கோடியாக உயர்த்தியிருப்பது மிகவும் பாராட்டத் தக்க ஒன்றாகும். மேலும் இந்தத் தொகையை அதிகமாக்கினாலும் நலிந்த விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழிவகை செய்யும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் ரூ. 4·06 கோடி குறுகிய காலக் கடனை நடுத்தரக் காலக் கடனாக மாற்றியதற்காக இந்த அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த ஐந்தாண்டுக் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்பது பழமொழி. ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவைத் தங்களது வீட்டு உயர்வுக்காகப் பயன்படுத்தியதன் காரணமாக பல்வேறு முறைகேடுகளும், நிர்வாகத்தில் சீர்கேடுகளும் நடந்துள்ளன. இதை இந்த நாடும் நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். இந்த அரசும் இதை நன்ருக அறியும். ஆகவே இது பற்றிய விசாரணையை விரைவில் முடித்து தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கையை தவருமல் எடுக்க வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு விற்பனை நிலையங்களில் சர்க்கரை வழங்குவதில் எடை குறைவு இருப்பதாக பொதுமக்கள் குறை கூறுகிருர்கள். ஆகவே இதையும் அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் ஒரு லட்சம் மக்கள் வாழ்கின்ற நகரம் என்னுடைய தொகுதியாகிய விழுப்புரம் நகரமாகும். இந்த நகரைச் சுற்றிலுமுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கு நாள்தோறும் வருகிருர்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை ஒரேயிடத்தில் வாங்குவதற்கு வசதியில்லாமல் மிகவும் அவதிப்படுகிருர்கள். ஆகவே, உடனே ஒரு சூப்பர் மார்க்கெட்டை ஏற்படுத்திக் தருமாறு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் எல்லா இடங்களிலும் ஒரே அளவு நிர்வாகக் குழு உறுப்பினர்களே நியமிக்கப்படுகிருர்கள். இது எல்லா இடங்களுக்கும் பொருந்தாது. ஆகவே, இதை மாற்றியமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அந்தந்தப் பகுதியின் மக்கள் தொகைக்கேற்பவும், நிலப்பரப்புக்கு ஏற்பவும், சங்க உறுப்பினர்களின் தொகைக்கு ஏற்பவும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முறையையே மாற்றியமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

குளம், ஏரிகளில் உள்ள புறம்போக்கு நிலங்களை சிலர் ஆக்கிரமிப்புச் செய்கிருர்கள். ஏரியில் நீர் நிரம்பாமல் இவர்கள் வெட்டிவிடுவதால் இத்தகைய ஆக்ரமிப்பாளர்களை அகற்றுவதோடு, அங்கெல்லாம் கருவேல மரங்களை பயிரிட வேண்டுமென்று வனத்துறை இலாக்காவைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த அரசுக்கு என்னுடைய வேண்டுகோளாக ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூவம் மணக்கிறது, மணக்கிறது என்று முந்திய ஆட்சிக் காலத்தில் பல



காடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டியும் மணக்கவில்லை, மட்டல்தான் வருகிறது. அந்தக் குமட்டலைப் போக்குவதற்கும், ல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும், பல்லாயிரக் ணக்கான ஏழைக் குடும்பங்களுக்கு மலிவு விலையில் காய்கறிகள் டைப்பதற்கும் நான் யோசனையை இந்த நேரத்தில் தெரிவிக்க ிரும்புகிறேன்.

கூவம் நீர் சத்துள்ள நீராக இருப்பதால், அந்த நீரைக் கொண்டு கூவம் கரை நெடுகிலும் உள்ள காலி நிலப்பகுதிகளில் ாழை, கீரைவகைகள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடலாம். இதனுல் அரசுக்கு நல்ல வருவாயும் கிடைக்கும். இத்துடன் அரசுக்குச் சொந்தமான காலி நிலப்பகுதிகளிலும் கூவம் நீரைக் கொண்டு சென்று காய்கறிகளைப் பயிரிடலாம். இதனுல் கூவத்தின் நீர் காய்கறி விளைச்சலுக்குப் பயன்படுவதோடு குடலைப் பிடுங்கும் குமட்டலும் நீங்கும். அரசுக்கு வருவாயும் கிடைக்கும்.

மேலும், என்னுடைய விழுப்புரம் நகரத்தில் 'மதராஸ் வனஸ்பதி' என்று தனியார் துறையிலே இயங்கி வருகிறது. அந்த வனஸ்பதித் துறையைக் கூட்டுறவுத் துறையின் மூலம் எடுத்து நடத்திஞல் அங்கேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கும், பாமர மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை கிடைக்கும்.

மேலும், தென்ஞற்காடு மாவட்டத்திலேயே விழுப்புரம் நகரம் ஒரு மைய மண்டபம்போல் விளங்கும் நகரமாகும். அங்கே கூட்டுறவுத் துறையிலே காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்திஞல் தென்ஞற்காடு மாவட்டத்தில் உள்ள நான்கு சர்க்கரை ஆலைகளிலேயும் இருந்து கிடைக்கின்ற அந்தக் கரும்புச் சக்கைகளைக் கொண்டு நல்ல முறையிலே காகிதத் தொழிற்சாலையை நடத்த உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியிலே தென் பெண்ணை ஆற்றங்கரைப் பகுதியிலே வாழும் சிறு விவசாயிகள் அந்த ஆற்றிலே வெள்ளம் வருகின்ற பொழுதெல்லாம் கரை உடைப்பெடுத்து அதன் காரணமாக நெல் விளைச்சல் வரும் நிலங்களையெல்லாம் இழந்து, பயிர்களையெல்லாம் இழந்து தவிக்கும் கொடுமை ஏற்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட தீமைகள் ஏற்படுகின்ற நேரத்திலெல்லாம் அந்த ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகவும், அந்த ஆற்றிலே வெள்ளப்பெருக்கு எடுப்பதற்குக் காரணமாக இருக்கின்ற விக்ரவாண்டி—பண்ருட்டி நெடுஞ்சாலையில் இருக்கின்ற தரைப்பாலத்தை அகற்றி மேம்பாலம் கட்டிஞல் இப்படிப்பட்ட உடைப்புக்கள் ஏற்பட வழியில்லாமல் இருக்கும். மேலும்

[திரு. பி. கிருஷ்ணன்] [1978 மார்ச் 28

வெள்ளம் வரும்பொழுதெல்லாம் இந்த அரசுக்குப் பல இலட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்கவும் முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நெடுஞ்சாலை பணித்துறையிலே புதிதாகப் பாலங்களை அமைத்து பழைய டைவர்ஷன் ரோடுகளை வெட்டிவிடுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நேரத்தில் அந்த ரோடுகளிலேயெல்லாம் எதிர்பாராத விதமாக விபத்துக்கள் ஏற்பட்டால் போக்குவரத்திற்கு நீண்ட நேரம் காலதாமதமாகிறது. அத்தகைய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த டைவர்ஷன் ரோடுகளை இந்த அரசு பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் ஏழை விவசாய மக்களுக்கு நல்ல முறையிலே குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக கடன்கள் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ஏழை விவசாயிகள் நான்கைந்து ஆண்டுக்காலமாக நிலவள வங்கியிலும், கூட்டுறவுத் துறையிலும் கடன் பெற்று அவர்கள் வாங்கிய மோட்டார்களுக்கு மின்னிணைப்பு கிடைக்காமல் அவர்கள் அவதிப்பட்டு வட்டி கட்டக்கூட வழியில்லாமல் இருக்கிறார்கள். மோட்டார்களை அடகு வைத்து நிலவள வங்கிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கட்ட நேரிடுவதால் தங்களுடைய பொருள்களை இழப்பதோடு விவசாயத்தையும் சரிவர செய்ய முடியாத சூழ்நிலையிலும் கிராமப் பகுதி மக்கள் எல்லாம் வாழ்கின்ற ஏழை விவசாய மக்கள் அவதிப்படுகிறார்கள்.

[மாலை 5.10]

ஆகவே, அப்படிப்பட்ட விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், அவர்கள் வங்கிகளிலே வாங்கியுள்ள கடன்களுக்கு வட்டி கட்டமுடியாத சூழ்நிலையிருக்கின்ற காரணத்தால், அப்படிப்பட்ட ஏழைகளுக்கு மின் இணைப்பு உடனடியாக கிடைக்க இந்த அரசும் நமது கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவு வனத்துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே வைத்துள்ள கூட்டுறவு, பத்திரப் பதிவு, சின்கோனா, காட்டு வளம், காட்டுவள மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

கூட்டுறவுத் துறை, மாநில வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் ஆகியவை தற்பொழுது தனி அதிகாரிகளாலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனி அதிகாரிகளை மாற்றி, ஜனநாயக முறைப்படி



1978 மார்ச் 28] [திரு. அ. சுவாமிதாஸ்]

தேர்தல் மூலம் பிரதிநிதிகளைக் கொண்டு மத்திய வங்கிகளைச் செயல்படச் செய்ய வேண்டுமென்ற கருத்தை முன்னர் இந்த மாமன்றத்திலே ஒருமித்த கருத்தாக எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். விரைவிலே, அதற்குரிய ஏற்பாடுகளை இந்தக் கூட்டுறவுத் துறை மேற்கொள்ளும் என்று அமைச்சரவர்களும் வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனால், அந்தத் தனி அதிகாரிகளை இதுகாறும் மாற்றி தேர்தல் மூலம் வங்கிகள் செயல்பட ஏற்பாடு செய்யாததற்கு என்ன காரணம் என்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தத் துறை இன்னும் கொஞ்சம் வேகமாகச் செயல்பட்டால் நாம் நினைக்கும்படியே இந்தத் துறை பல வழிகளிலே நல்ல முறையிலே செயல்பட முடியும். ஆகவே, அரசு இன்னும் காலந் தாழ்த்தாது தனி அதிகாரிகளை வைத்து செயல்படுகிற முறையை மாற்றி, தேர்தல் மூலம் இயக்குநர்களைப் போட்டு மாநில வங்கிகளையும், மத்திய வங்கிகளையும் செயல்படச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலேயிருக்கிற கடன் வழங்கு சங்கங்களைத் தொடங்குகிற நேரத்தில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களாகத் தான் துவக்கினார்கள். பலவிதமான பணிகளிலே அந்தச் சங்கங்கள் இயங்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தொடங்கப்பட்டு, அந்தச் சங்கங்கள் இன்று வெறும் கடன் வழங்குகின்ற சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாகச் சொல்லப்போனால், வேளாண்மை செய்பவர்களுக்கு மட்டும் கடன் வழங்குகின்ற சங்கங்களாக அவை மாற்றப்பட்டிருக்கிறன.

அண்மையிலே ஒரு அறிக்கையைப் பார்த்தேன். கிராமக் கடன் வழங்கு சங்கம் என்ற பெயரை மாற்றி கிராமக் கூட்டுறவு சேவை சங்கம் என்று பெயர் வைக்கப் போவதாகப் பார்த்தேன். அப்படிப் பெயரை மாற்றியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதனால், பல்வேறு துறையிலே அந்தக் கிராம சங்கத்தை இயக்கிக் கொண்டு போகமுடியும். இப்பொழுது கடன் மட்டும் நாம் வழங்கி கொண்டிருக்கிறோம். அந்தச் சங்கங்களின் மூலமாக அதுவும் விவசாயிகளுக்கு மட்டும் கடன் வழங்குகிறோம். கிராமத்திலே விவசாயத் தொழில்களோடு ஒட்டிய பல்வேறு இதர தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; தச்சர்கள், கொல்லர்கள், இதரப் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் கிராமத்திலே கடன் வழங்கவேண்டும் என்று விரும்பினாலும் அந்த சங்கத்தாலே உதவ முடியாது. யார் யார் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்களோ, நெற்பயிர்கள் இதர பணப்பயிர் போன்றவற்றிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மட்டும் இந்தச் சங்கம் கடன் வழங்கிக்கொண்டிருக்கிறது. இது கிராமப் பகுதிகளில் பூரணமான வசதியைச் செய்து கொடுத்ததாகாது.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 மார்ச் 28

ஆகவே இந்த நிலையை மாற்றி இந்தத் துறை கடன் வழங்கு வதிலே மாறுதலைக் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறேன். இதர தொழிலாளர்களுக்கும் நெசவுத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் அத்தொழி லாளர்கள் மிகுதியாக வாழக்கூடிய பகுதியிலே இருக்கின்றன. ஆனால் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டார்கள். இதர சங்கங்க ளோடு தொடர்பு கொள்ள 7, 8 மைல்கள் போகவேண்டும். அவர்களுக்கும் இந்தக் கிராமக் கடன் வழங்கு சங்கத்திலே கடன் வழங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அதனால் அந்த சங்கத்திற்கும் அங்கு வாழ்கிற பொதுமக்களுக்கும் நல் லுறவு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அதன் மூலம் பல நல்ல காரியங்கள் செய்ய முடியும் என்பதை எனது அனுபவத்தில் வாயிலாக கண்டிருக்கிறேன். நான் ஒரு கிராம கூட்டுறவு சங்கத் தலைவர். அந்தச் சங்கம் பலவிதமான செயல்களிலும் ஈடுபடுகிற காரணத்தால் அதை ஒரு மாதிரி சங்கமாக நடத்த முடிகிறது. கிராம மக்களும் எங்களை நம்புகிறார்கள். அந்த சங்கத்தில் ஊழலே கிடையாது என்று நம்புகிறார்கள். அண்மையிலே நகையை வைத்துப் பணத்தைக் கொடுப்பதற்கான அனுமதியை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் கிராம மக்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர்களுக்கு திடீரென்று 50 ரூபாய் வேண்டுமென்றால் ஒரு நகையை வைத்து வாங்கிக்கொண்டு, 2 3 மாதங்களில் மீட்டுக்கொள்கிறார்கள். அதுமட்டும் சேவிங்ஸ் அக்கவுண்டு கூட எங்கள் சங்கத்திலே வைத்திருக்கிறோம் பாஸ் புக் கொடுத்திருக்கிறோம். செக் புக் கொடுத்திருக்கிறோம். அவர்களும் சின்னசின்ன தொகைகளைப் போடுகிறார்கள். நம்பிக் கையோடு செய்கிறார்கள். அந்த அளவிற்கு இருக்கின்ற அதை விருத்தி செய்யவேண்டும்.

கட்டுப்பாட்டில் இருக்கிற பொருள்களை வினியோகம் செய்கி றோம். தேவையான பொருள் கொடுப்பதற்குக் கிடைக்கவில்லை. கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்களிலே எப்போது கட்டுப்பாடு விலையில் வரும் என்று கேட்கிறார்கள். மிகுதியாக துணிகளை கொடுத்து ஆதரிக்க வேண்டும்.

அடுத்து கிராமங்களில் இருக்கிற கூட்டுறவு சங்கங்களிலே கிட்டங்கிகளைக் கட்டிக் கொடுக்கிறோம். இந்தக் கிட்டங்கிகளின் அமைப்பு முறை எங்களுக்குப் பயன்படுத்துகிற முறையில் இல்லை. அங்கு விவசாயப் பொருள்களை வைத்துப் பாதுகாத்து வைப்பதற்கு ஏற்ற நிலையில் இருக்கிறது. ஆனால் நாங்கள் எண்ணுகிறபடி, அதை விற்பனை கூடமாக அதை மாற்றி அமைப்பதற்கு முடியவில்லை. எங்கள் பகுதியிலே உணவுப் பொருள்களை அதிகமாக வைப்பது கிடையாது. உணவுப் பொருள் களை விற்பனை செய்ய அதைப் பயன்படுத்துகிறோம். ஆகவே



1978 மார்ச் 28] [திரு. அ. சுவாமிதாஸ்]

கட்டப்படும் கிடங்குகளின் பயன்களைக் கருத்தில் கொண்டு அந்தத் துறையிலே இருப்பவர்கள் ஆராய்ந்து அதை மாற்றி அமைக்க வேண்டும். ஏற்கனவே 40 ஆயிரம் ரூபாய் அரசாங்கத்திலே இருந்து கடனைக் பெற்றுக் கட்டியிருக்கிறோம். இந்தத் துறை யிலே இருக்கிற பொறியாளர்கள் எந்தெந்தத் வகையிலே கிடங்குகளைக் கட்டினால் அது பயனுடையதாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்து அதற்கேற்றவாறு கட்டடங்களைக் கட் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5-20]

நெற்பயிர் செய்யும் விவசாயிகள் ஆண்டில் இருபோகம் பயிர் செய்கிறார்கள். இருபோகங்களுக்கும் இரு தடவை கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அப்படி இருபோகங்களுக்கும் இரண்டு தடவை கடன்கள் கொடுப்பதை மாற்றி, ஒரே தடவையில் ஆயிரம் ரூபாய் ஒரு ஆண்டிற்கு என்று சொன்னால், அந்த ஆண் டிற்கு ஆயிரம் ரூபாயை மொத்தமாக கொடுத்து விட்டு, முதல் போகத்தில் 6 மாதம் கழித்து ரூ. 500-ஐயும், மறுபோகத் தில் ரூ. 500-ஐயும், வட்டியையும் வசூலிக்கலாம்.

இந்த முறையை அரசு அமல்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் இந்த முறையை மாற்ற ரிசர்வ் வங்கி ஒப்புக் கொள்வது இல்லை. அதற்காக நாம் ரிசர்வ் வங்கியிடம் எடுத்துச் சொல்லவேண்டும். நமக்கு இருக்கும் சங்கடத்தை அவர்களிடத்தில் சொல்லி, அந்த விதிமுறைகளில் மாற்றம் செய்து, ஒரே தவணை யில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அது தனியார் கட்டிடத்தில் இப்போது இயங்கிக்கொண்டு இருக்கிறது. அது வாடகைக் கட்டிடம். ஆகவே, அதற்காக அரசாங்கம் தனியாக நிதி ஒதுக்கி ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பயிற்சி நிலையத்தை மாற்றி மதுரைக்கு எடுத்துச்செல்ல இருப்ப தாக நான் கேள்விப்படுகிறேன். அதை மாற்றக்கூடாது. அங்கே கிராமக் கூட்டுறவுத் தலைவர்களுக்கும் பயிற்சி கொடுக்கிறார்கள். அது மிகவும் பயன் உள்ளதாக கிராமத் தலைவர்களுக்கு இருக் கிறது. ஆகவே, அந்தக் திட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக கடை வைத்து நடத்துவதாகச் சொன்னார்கள். அந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் எவ்வளவு நஷ்டம் வந்தாலும் அரசு ஏற்றுக்கொள்கிறது. அவர்களிடம் கேள்வி கேட்பது இல்லை. ஆனால் ஆயிரம், ஐநூறு கூட்டுறவுத் துறையில் இழப்பு என்று சொன்னால், தலைவர் பேரில் நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு மூட்டை குறைந்தாலும் தலைவர் அந்த நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டும். அப்படியில்லை என்றால் வழக்குப்போட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவார். ஒரு சில சிப்பந்திகள் தவறு செய்யலாம். ஆனால் கூட்டுறவு சொசைடி தலைவர்கள் அவ்வளவு பேரும் தவறு செய்கிறார்கள் என்ற எண்ணம் கூடாது.

கூட்டுறவு சங்கத்தில் சில தவறுகளை சிப்பந்திகள் செய்கிற போது அந்த குறிப்பிட்ட சிப்பந்திமேல் நடவடிக்கை எடுக்கலாம். யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் பேரில் வழக்குப் போட லாம். அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கலாம். அவர்களை சிறையில் போடலாம். ஆனால் அது உண்மையான தவறு செய்துள்ளவர்களை தண்டிப்பதாக இருக்கவேண்டும். வழக்கு நடத்துகிறபோது அந்த தவறு செய்தவர்கள் யார் என்பது தெரிந்து விடும். தலைவர் தெரியாமல் கையெழுத்துப் போட்டு இருப்பார். ஒரு நம்பிக்கை நாணயத்தின் பேரில் தான் தலைவர்கள் கணக்குகளைப் பார்க்காமல் கூட கையெழுத்துப் போடு கிறார்கள். ஒவ்வொரு நாளும் எவ்வளவு கொடுக்கல் வாங்கல் நடக்கிறது. எல்லாவற்றையும் சோதனை செய்து கொண்டு இருக்கமுடியாது. நான் கூட எப்போதாவது ஒரு முறை சென்று தான் கையெழுத்துப் போடுவேன். தவறு செய்தால் தண்டியுங் கள். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுங்கள். அந்த வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

வன இலாகாவைப் பொறுத்தவரையில் இப்போது வேலை குறைந்து போய் இருக்கிறது. இரண்டு கார்ப்பரேஷன்கள் நாம் தொடங்கியிருக்கிறோம். தமிழ் நாடு பாரஸ்ட் பிளான்டேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட், தமிழ் நாடு டி பிளான்டேஷன் கார்ப்ப ரேஷன் லிமிடெட் இன்னும் கூட ஒன்று, ரப்பர் பிளான்டேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் என்று அமைக்க இருக்கிறோம் அதற்கு அரசு ஒப்புதல் அளித்து இருப்பதாகத் தெரிகிறது. இப்படி இருக்கும்போது, எதற்காக இரண்டு சிப் கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்ஸ் இருக்கவேண்டும். இப்போது வேலைப் பளு அதிகமாக இல்லை. இப்போது இருக்கும் எண்ணிக்கையே அதிகம். ஆகவே, இனிமேல் அதிகமாக நியமிக்க வேண்டியதில்லை. அதுவும் பட்டி ணத்தில் 4 கன்சர்வேட்டர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு டஜன் டிபுடி கன்சர்வேட்டர்கள் இருக்கிறார்கள். காடு





எங்கோ இருக்கிறது. வேலை எங்கோ நடக்கிறது. (குறுக்கீடு) தலைமையகம் இருக்கட்டும் ; வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு இத்தனைபேர் இருக்க வேண்டுமா? காடும் விருத்தியாக வில்லை ; இருப்பதும் சுருங்கிக்கொண்டே போகிறது. அதனால் மேலும் அதிகாரிகள் தேவையா என்பதை சிந்திக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தமட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்ல வருவாய் கொடுத்துக்கொண்டிருந்த ஒரு அமைப்பாக ரப்பர் தோட்டம் இருக்கிறது. அங்கே இருக்கிற தனியார் ரப்பர் தோட்டங்களில் 20 சத வீதம் போனஸ் கொடுக்கிறார்கள். ஆனால் அரசுத் துறையில் போனஸ் இல்லை. அங்கே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஏனென் றால் அவர்கள் இருப்பது காட்டுப்பகுதி ; பாதுகாப்பு இல்லாத இடம்.

மூங்கில் பண்ணையைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் காட்டுப் பகுதியில் மூங்கில் பண்ணை ஏராளமாக இருக்கிறது என்று சொல்லி ஒரு காலத்தில் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். இன்றைக்கு அங்கு மூங்கில் பண்ணையே இல்லை. என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்தப் பண்ணைகள் அழிந்துவிட்டன. அதைத் திரும்ப ஏற்படுத்த வேண்டும். அந்த மூங்கில் பண்ணைகள் அழிந்ததற்கு ஒரு சரித்திரம் இருக் கிறது. யார் அழித்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். மூங்கில்களை வெட்டுவதற்கு முன்னால் மூன்று கூறுகளாகப் பிரிப்பார்கள். மூன்றில் ஒரு பகுதியை இந்த வருஷம் வெட்டுவார்கள் ; இரண்டு பகுதி அப்படியே இருக்கும். மூங்கில் வெட்டுவதற்கு ஏலம் எடுத்தவர்கள் எல்லா வற்றையும் வெட்டிவிடக்கூடாது. ஒரு வருஷத்திற்குட்பட்ட மூங்கில்களை அப்படியே விட்டுவிட வேண்டும். அதைப் போல ஐந்து நன்கு முதிர்ந்த மூங்கிலையும் அப்படியே விட்டுவிட வேண் டும். மற்றவைகளைத் தான் வெட்ட வேண்டும்.

மூங்கில் வெட்டுவதற்கான காண்ட்ராக்டில் அப்படித்தான் இருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் குத்தகை எடுத்தவர்கள் எல்லாவற்றையும் வெட்டிக் கொண்டுபோய்விட்டார்கள். அது வும் டன்னுக்கு 100 ரூபாய் வருமென்றால் அவர்களுக்கு 10 ரூபாய்க்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு விசாரணை கூட நடைபெற்றது. அது என்னவாயிற்று என்பதைக் கவனிக்க வேண்டும். விசாரணையில் 30 லட்சம் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

அதோடு, அழிந்துபோன மூங்கில் பண்ணைகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு போ. கோபாலன் : தலைவரவர்களே, காலமெல்லாம் கண்டு மகிழும் காடுகள் மிக்க நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த நான் இந்த வனத்துறையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நீலகிரி மாவட்டத்தில் மிக அடர்த்தியான காடுகள் இருந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலம் இன்று மாறி, காடுகள் அழிக்கப்பட்டு, அந்தக் காடுகள் இல்லாத காரணத்தால் விவசாயிகள் எதிர்நோக்கும் மழை காலாகாலத்தில் பெய்யாமல் விவசாயிகள் ஏமாறக்கூடிய சூழ்நிலை சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நிலப் பரப்பில் காடுகளை உருவாக்கும் ஒரு நல்ல திட்டத்தை இங்கே வெளியிட்டிருப்பதை அறிந்து பாராட்டுகிறேன். காடுகள் அதிகமாக இருந்தாலும் வீட்டு உபயோகத்திற்கு தேவையான விறகு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மரங்களிலிருந்து விறகு எடுக்க முடியாமல் எங்கள் பகுதி மக்கள் அவதிப்படுகிறார்கள். வனத்துறையில் தற்போதைய ஏற்பாட்டினால் மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கரில் கூப்பு காண்ட்ராக்ட் எடுக்கிற வியாபாரிகள் சிறு சிறு குச்சிகளைக் கூட விட்டுவைக்காமல் லாரிகளில் ஏற்றிச்சென்றுவிடுகிறார்கள். அதனால் அங்கே விறகுத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் விறகு விற்பனைக் கடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கிராமங்களில் விவசாயிகள் ஒரு மரம், இரண்டு மரம் என்று தான் சொந்தமாக வைத்திருப்பார்கள். அந்த மரங்களை அவர்கள் வெட்டுவதாக இருந்தாலும் வனத்துறை அதிகாரிகளிடம் முன் அனுமதி பெறவேண்டும். அதனால் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, ஒன்றிரண்டு மரங்களை வெட்டுவதற்கு வனத்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டிய தேவையில்லை என்ற முறையை நம்முடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கூடலூர் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான டன் மரங்களை ஈரோடு சேஷசாயி பேப்பர் மில்ஸ், சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி, டான் இந்தியா நிறுவனத்தார் போன்றவர்கள் வெட்டிச் செல்கிறார்கள். ஆண்டுதோறும் மூங்கில் மிளாறுகளை எல்லாம் அங்கிருந்து கொண்டு செல்கிறார்கள். அவர்கள் எல்லாம் குறைந்த விலையில் அங்கிருந்து மரங்களை வெட்டிச் செல்ல



அரசு அனுமதி கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அந்த அனுமதியை ரத்து செய்தால்கூட நல்லது என்று நினைக்கிறேன். மேலும் அங்கே பெருமளவில் காடுகளை வளர்த்து, அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 5-30]

அதுமட்டுமல்லாமல் ஒரு பக்கம் காடுகளில் மரங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கம் மிக அதிக அளவில் அழித்துக்கொண்டிருக்கிறோம். காடுகளை வளர்ப்பதற்குத் தகுந்தாற்போல் அழிப்பதும் இருக்கவேண்டும் என்பதை நான் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, கூடலூர், குன்னூர் பகுதியிலே தேயிலைத் தோட்டக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேயிலைத் தோட்டங்களிலே இலங்கையிலிருந்து வந்த அகதிகள் நூற்றுக்கணக்கான பேர் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏற்கெனவே பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் வேலையிலிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நான்கைந்து ஆண்டுகளாக உழைத்து உருக்குலைந்து இருக்கின்ற நிலையில், அவர்கள் வேலையிழந்து தவிப்பதோடு அவர்கள் வாழ்ந்த வீடுகளிலேயிருந்தும் துரத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, சேரன்கோடு பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக 25 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை இரவோடு இரவாக வனத்துறை அதிகாரிகள் விரட்டி இருக்கிறார்கள். அவர்களைக் காலி செய்த பின் இலங்கையிலிருந்து வந்தவர்களை அங்கே குடியமர்த்தியிருக்கிறார்கள். அந்த 25 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஏறக்குறைய அகதிகளாக வீதியிலே அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, நீலகிரியில் 12 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய அரசாங்கத்தின் டீ கார்ப்பரேஷன் சார்பாகவும் தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் அங்கே விளைகின்ற தேயிலைகள் தனியார் தொழிற்சாலைக்குக் கொடுக்கப்படுகின்றன. அருகிலேயே கூட்டுறவுத் தொழிற்சாலை இருந்தும் இவ்வாறு தனியாருக்குக் கொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது. அதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று

கேட்டுக்கொண்டு, அந்தப் பகுதியிலே விளைகின்ற தேயிலையை கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைக்கே கொடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

அதுமட்டுமல்லாமல் கூடலூர் குன்னூர் பகுதியிலே அதிகமான ஏக்கர் நிலங்களை அழித்துத் தேயிலைப் பயிரிடும் நிலைமை இருக்கின்றது. ஆகவே காடுகளை அழிக்காமல் தேயிலைப் பயிரிடுவதற்கு உரிய திட்டத்தை அரசு உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பண்ணைக் காடுகளை வளர்ப்பதில் அரசு கவனம் செலுத்துவது குறித்துப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சிற்றூரிலே இருக்கின்ற புறம்போக்கு நிலங்கள் விவசாயத்திற்கு உகந்த நிலங்களாக இருக்கின்றன. அத்தகைய விளை நிலங்களை காடுகளை உருவாக்கும் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும், அதை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சிற்ருறுகள், நீரோடைகள், அருவிகள் ஆகியவற்றின் பக்கத்திலே வனத்துறையைச் சேர்ந்தவர்கள் கற்பூர மரங்களை நடுகிருர்கள். அப்படி நடப்படும் அந்த கற்பூர மரங்கள் அங்கே இருக்கின்ற நீர் முழுவதையும் உறிஞ்சிவிடுகின்றன அதன் காரணமாக அங்கே இருக்கின்ற மக்களுக்குக் குடிப்பதற்கு நீர் இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இனி மேலாவது வனத்துறையினர் அங்கே கற்பூர மரங்களை நடக்கூடாது என்றும், நடப்பட்ட கற்பூர மரங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், இதனை ஒரு கோரிக்கையாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நீலகிரியில் இருப்புப் பாதை ஓரங்களில் தரிசு நிலங்கள் வீணுகக் கிடக்கின்றன. நிலமற்ற ஏழை விவசாயிகள் இவற்றைப் பயன்படுத்தி வருகிருர்கள். ஆகவே, அந்த நிலங்களை மரம் நடுவதற்குப் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலங்களை விவசாயிகள் அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி அழகான இடம். அங்கே முதுமலைக் காடு இருக்கின்றது. உல்லாசப் பயணிகள் அங்கே வந்து வனத்தைப் பார்த்து களித்துச் செல்லுகின்றனர். அவ்வளவு சிறப்பு வாய்ந்தது அந்த முதுமலைக் காடு. அந்தக் காட்டுப் பகுதியிலே ஏப்ரல், மே மாதங்களிலே வரட்சி நிலைமை ஏற்படுமானுல் நீர் தேக்கங்களிலே நீர் இல்லாமல் போய்விடுகிறது. அவ்வாறு நீர் இல்லாமல் போவதால் அங்கே இருக்கக்கூடிய யானைகள் அருகிலே



உள்ள கிராமங்களிலே நுழைந்துவிடுகின்றன. இவ்வாறு நுழைவதால் கிராமங்களிலே உள்ள மக்கள் இறந்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை இவ்வாறு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஆகவே, அங்கே நீர்த் தேக்கங்களை செயற்கையாகவாவது ஏற்படுத்தி அந்த யானைகள் காட்டைவிட்டு வெளியே வராத நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, யானைகளால் கொல்லப்படும் யானைப் பாகர்கள் பற்றி நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஏழைப் பாகர்களுக்கு நாம் உதவித் தொகை அளிப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூடலூர் பகுதியிலே வாழைத் தோட்டம் என்ற இடத்திலே வனத்துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி ஏழை விவசாயிகளை அச்சுறுத்துவதாக பொதுமக்கள் தெரிவித்திருக்கிருர்கள்.

அந்த விவசாயிகளிடம், 'நீங்கள் என்னுடைய பேச்சுப்படி நடக்காவிட்டால், கேட்காவிட்டால் சந்தன மரங்களைத் திருடியதாக வழக்கு போடுவேன்' என்று பயமுறுத்தி அந்த மக்கள் அஞ்சி முறையிடுகிருர்கள். எனவே, அவர்களை விசாரித்து இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய தலையீடு அல்ல, என் முறையீடு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் என்ற பெயரால் மத்திய அரசின் உதவியோடு தேயிலைத் தோட்டங்களை விரிவுபடுத்தி காடுகளை புதிதாக உருவாக்கி விரிவு படுத்துவது என்பன போன்ற திட்டங்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் அதிகமான அளவுக்கு ஜெரேனியம் பயிர் விளைகிறது. நறுமண சென்ட் என்று சொல்வார்கள். அதிகமான ஏக்கர்களில் ஜெரேனியம் பயிர் செய்து, நீலகிரியில் அதற்கான நறுமணத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை இந்த அரசு உருவாக்கித் தர வேண்டும் என்பதை என் கோரிக்கையாக விடுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் ஏராளமான மூங்கில் விளைகிறது. அந்த மூங்கில் அங்கிருந்து வீணுன செலவை ஏற்படுத்தி ஈரோடு போன்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அந்த மூங்கிலைப் பயன் படுத்தி அங்கு சின்னதொரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை என் கோரிக்கையாக விடுகிறேன். அடுத்து, சின்கோனு துறை. இந்த சின்கோனு என்பது மிகவும் அவசியம் என்பதை நாடு

உணர்ந்திருக்கிறது. மலேரியா நோயைத் தடுக்க அது மூலாதார மந்திரமாக அமைந்திருக்கிறது. எனவே, கொய்னா விளைச்சலின் பரப்பை நாம் அதிகப்படுத்த வேண்டும்.

ஜெரேனியம் பயிரிடுவதையும் அதிகப்படுத்த வேண்டும்.

சின்கோனா தொழிலாளர்களின் குடியிருப்பு மனைகளை நல்ல முறையில் விரிவாக்கி அமைக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மே மாதம் நீலகிரியில் உலக மக்கள் எல்லாம் பாராட்டக்கூடிய, இந்திய நாட்டு மக்கள் அனைவரும் வந்து காணக்கூடிய மலர்க் காட்சி நடைபெற இருக்கிறது. அந்த மலர்க்காட்சிக்கு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தர வேண்டும் என்று என் விருப்பத்தை மக்கள் கோரிக்கையாக விடுத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எனது கருத்துக்களை இந்த மானியக் கோரிக்கையின் அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு தொடர்ச்சியாக கடந்த மூன்று ஆண்டுகளாக பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டு மிகப் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கக்கூடிய தமிழ்நாடு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த சொசைட்டிகள் மூலம் மேலும் பல சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மத்திய வங்கிகள் கடன் கொடுக்கக்கூடிய காலத்தில் ரிசர்வ் பாங்க் 6 சதவீதம் என்பதில் ஆரம்பித்து சாதாரண் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக்கூடிய காலத்தில் 12½ சதவீதம் என்ற அளவிற்கு அது போய்விடுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று பல தடவை நாங்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறோம்.

கடந்த பட்ஜெட்டில் கூட இந்த வட்டி விகிதத்தை குறைக்க வேண்டும் என்று நாங்கள் எடுத்துச்சொல்லியும் கூட இன்று வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படக்கூடிய காலத்தில் கடன்கள் ரத்து செய்யப்படலாம் என்று இன்று குழுக்கள் மூலம் எடுத்துச் சொல்லப்படுகிறது. 1972-ம் ஆண்டில் கூட்டுறவு சம்பந்தமாக ஆய்வு செய்வதற்காகவேண்டி ரிசர்வ்வங்கி ஒரு ஆய்வுக்



குழுவைப் போட்டிருந்தது. அந்த ஆய்வுக் குழு இரண்டு ஆண்டு ஆராய்ச்சி செய்து 1974-ல் தன் ரிப்போர்ட்டை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் இந்த அரசின் கையில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். அந்த ரிப்போர்ட்டில் குறிப்பாக, ஒரு ஆண்டு பாதிப்பு ஏற்பட்டால், இந்த மாதிரி விசேஷமாக இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுகிற பாதிப்புகளை ஈடுகட்டும் வகையில் ஒரு ஆண்டு பாதிப்பு ஏற்படாமல் ஏற்கனவே வாங்கிய கடன்களை ஏழு ஆண்டு கடன்களாக மாற்ற வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் பாதிப்பு ஏற்பட்டால் முதல் ஆண்டுக் கடனை முழுவதும் ரத்து செய்ய வேண்டும். இரண்டாவது ஆண்டு வாங்கிய கடனை மட்டும் ஏழு ஆண்டு கடனாக மாற்றவேண்டும் என்று அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகாலம் இயற்கையின் சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டால் இரண்டு ஆண்டு கடன்களை ரத்து செய்து விட்டு மூன்றாவது ஆண்டு வாங்கிய கடனை ஏழாண்டு கடனாக மாற்றவேண்டும் என்று அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. என்றும் இல்லாத அளவிற்கு தமிழ்நாடு நான்கு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சத்தால் மூன்று ஆண்டுகள் பாதிக்கப்பட்டிருக்கிறது, நான்காவது ஆண்டு புயல் மழையினால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் இன்று கடுமையான முறையில் வசூல் நடந்துகொண்டிருக்கிறது.

(மாலை 5-40)

நாங்கள் இதை தொடர்ச்சியாக சொல்லிக்கொண்டிருக்கிறோம். விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களிடையே வாங்கும் சக்தி மிகவும் குறைந்திருக்கிறது, இதன் காரணமாக 'ரீ-பேயிங்' கெப்பாசிட்டி குறைந்து கொண்டு வருகிறது. வறுமைக்கோட்டின் கீழ் 55 சதவீதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறோம். அவர்களுக்கு பல ஏற்பாடுகளை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த மக்களுக்கு சொஸைட்டிகள் மூலம் உதவி செய்து கொடுக்க வேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய கடன்கள் எல்லாம் மூன்று வருட கடன்களாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி மூன்று கடன்களையும் மூன்று வருட கடன்களாக மாற்றுவதன் மூலமாக இப்போது வட்டி அதிகமாக மாறியிருக்கிறது. அதேநேரத்தில் ஏதாவது வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதா என்றால் அது கிடையாது.

வட்டியைத் தொடர்ந்து அபராத வட்டி. இவையெல்லாம் போட்டால் மேலும் கடன் வளர்ந்து கொண்டே போகிறது. இதன் காரணமாக படிப்படியாக வங்கிகளில் கடன் வாங்குவது போன ஆண்டை விட இந்த ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக ஓவர் ட்யூ அதிகமாக இருப்பதின் காரணமாக விவசாயிகள் இப்போது கடன் வாங்க முடியாத நிலைமையில்

இருக்கிறுர்கள். இந்த ஆண்டு தரப்பட்டிருக்கின்ற குறிப்புகளைப்
பார்த்தால் மக்களிடையே வாங்கும் சக்தி மிகவும் குறைந்திருப்
பதைப் பார்க்க முடிகிறது. ஆகவே, கடன் பூராவும் அத்தனையும்
ஒன்று சேர்த்து ஒரு விவசாயிக்கு எத்தனை கடன்கள் இருக்கிறதோ
அவை அத்தனையும் இந்த விசேஷமான சந்தர்ப்பத்தில் இயற்
கையின் சீற்றத்தால் ஏற்பட்டிருக்கின்ற நஷ்டங்களையும் கணக்
கில் எடுத்துக்கொண்டு, அத்தனை வட்டிகளையும் தள்ளுபடி செய்து
விட்டு எல்லா கடன்களையும் ஒன்று சேர்த்து நீண்டகால கடனுக,
10 வருட கடனுகவோ அல்லது 15 வருட கடனுகவோ தவணைகள்
கொடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதன் மூலம் மீண்டும்
இந்த ஆண்டு கடன் வாங்குவதற்கும் வசதியாக சட்டங்களை
திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, எல். டி. பாங்குகளை பொறுத்தவரையில்
20 வருட தவணைக் கடன்களாக ஏற்கனவே இருந்து வந்தது,
முன்னுல் எல்லாம் பல நாடுகளில் 60 வருட கடன்கள், 40
வருடம், 35 வருடம் என்றெல்லாம் இருந்தது. இப்படிப்பட்ட
தவணைகளில் நீண்ட காலக் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. பத்து
வருடங்களுக்கு முன்னுல் 20 வருட தவணைகூட இருந்து வந்தது.
இப்போது ஏழு வருட கடனுக மாற்றப் பட்டிருக்கிறது. இதை
யெல்லாம் மாற்றி முன்னுல் இருந்தது போல் 20 வருட கடன்க
ளாக மாற்றினுல்தான், விவசாய மக்களுடைய வாங்கும்
சக்தி பெருகி, 'ரீ-பேயிங் கெப்பாஸிட்டியும்' அதிகமாகும்.
ஆகவே, இவற்றையெல்லாம் நீண்ட காலக் கடனுக மாற்ற
ஏற்பாடு செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அர
சாங்க ஜி.ஓ.க்கள் இருக்கின்றன. இந்த ஜி.ஓ.க்களில் அரசாங்கம்
விவசாயிகளுக்குப் பயன்படும் பல உத்தரவுகளைப் போட்
டிருந்தாலும், கூட்டுறவு டிப்பார்ட்மென்டில் ஊழல்கள்
தலையிடுவதன் காரணமாக அந்தப் பயன்களை கிடைக்காமல்
செய்து விடுகிறுர்கள். குறிப்பாக ஜி.ஓ. நம்பர் 614— கோவாப்
ரேஷன்— தேதி 28—11—74— இந்த ஜி.ஓ.வில் கிணறுகள்
வெட்டினுல் அதில் தண்ணீர் இல்லாத கிணறுகளுக்கு நிவாரணம்
கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.
ஆனுல், இன்று வரைக்கும் எந்த விவசாயியும் அந்த உத்தரவின்
பயனை அடையாமல், கோ-ஆப்பரேடிவ் டிப்பார்ட்மென்டார்
செய்து விட்டார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே உங்களுக்குத் தெரியும், தமிழ்நாட்டில்
தோண்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் இருப்
பதின்காரணமாக மக்கள் பல இடங்களில் பாதிக்கப்பட்டிருக்





கிறுர்கள். கிணறுகள் இருக்கின்றன. ஆனுல், வெட்டப்
பட்ட கிணறுகளில் தண்ணீர் இருப்பதில்லை. அப்படி. ஒன்
றிரண்டு கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும் அது உப்புத்
தண்ணீராக இருக்கும். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு
நிவாரணம் அளிப்பதற்காக 1974-ல் இப்படி ஃபெய்லூர் (Failure)
ஆகும் இடங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், தவணைகளை
தள்ளுபடி செய்வதற்கும் அரசாங்கம் ஜி.ஓ. மூலம்
உத்தரவு போட்டிருந்தாலும், அதிகாரிகளின் தலையீடு காரண
மாக இன்று வரைக்கும் அது அமல்படுத்தப்படாமல் இருக்கிறது.
ஆகவே, இந்த ஜி.ஓ.விலுள்ள பலன்களை விவசாயிகள் பெறுவதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றுல், இன்றைக்கு ஆயிரக்
கணக்கான கிணறுகள் இந்த மாதிரியான நிலைமையில் இருக்
கின்றன. ஆகவே, 1974-ல் போட்டிருக்கின்ற ஜி.ஓ.வின்படி
எல்.டி. பாங்குகள், வெட்டப்பட்ட கிணறுகளை எல்லாம்
கணக்கெடுத்திருக்கிறது. ஆனுல், அப்படி எடுக்கப்பட்டும்,
பலன் கிட்டவில்லை, கைக்கு எட்டியது வாய்க்கு கிடைக்காத
நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதை உடனடி
யாக அமல்படுத்தும்படி அரசை நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சென்டரல் பாங்கை எடுத்துக்கொண்டால்,
இன்றைக்கு இதில் வேலை செய்யக்கூடியவர்கள் 4,000 பேர்
களுக்கு ஆபத்து வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்
கிறது. இப்போது வந்திருக்கின்ற ஜி.ஓ.வின்படி இந்த ஆபத்
தான நிலைமை வந்திருக்கிறது. காரணம், சென்ட்ரல் பாங்கி
லிருந்து செக்ரட்டரிகளாகவும், கிளார்க்குகளாகவும், பல
சொஸைட்டிகளில் போட்டிருக்கிறுர்கள். சொஸைட்டிகளில்
இப்படிப் போட்டுக்கொண்டால் நல்லது என்ற முறையில்
தான் போடப்பட்டார்கள். இவர்களை இப்போது மாற்ற
வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக, இன்றைக்கு தமிழ்நாடு பூராவிலும்
உள்ள 4,000 சொஸைடிகளிலே இருக்கின்ற, 4,000 பேர்கள்
வேலை இழக்கக்கூடிய ஒரு நிலைமை, நிர்ப்பந்தம் இருக்கிறது.
அப்படி என்ன நிலைமை இருந்தாலும்கூட, அவர்கள் அந்த மத்திய
வங்கிகளிலே வேலைசெய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.
எந்தக் காரணத்தை முன்னிட்டும், வேலை இழக்கக்கூடிய
நிலைமையை உண்டாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே இந்த சென்ட்ரல் பாங்கியிலே
வேலை செய்யக் கூடியவர்கள், ஊழியர்கள் 1973 ஆம் ஆண்டி
லிருந்து தங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் வைத்துப்
போராடிக் கொண்டிருக்கிறுர்கள். இன்றையதினம் அவர்
களிடம் யாரும் பேசுவதாக இல்லை. யாரிடம் அவர்கள்

[திரு. செ. சிவசாமி] [1978 மார்ச் 28

தங்கள் கோரிக்கைகளை வைத்துப் பேசுவது என்ற நிலைமை கூட இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தக் கூட்டுறவு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் சம்பந்தமாக உடனடியாக பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களுக்கு வேண்டிய எல்லா விதமான ஆதரவையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, இன்றைக்குக் கடன் கொடுக்கும் முறையிலே தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே இப்போது மூன்று அடுக்கு முறை இருக்கிறது. இந்த மூன்று அடுக்கு முறை என்பது சரியாக இல்லை. இந்த மூன்று அடுக்கு முறையின் காரணமாக, விவசாயிகள் அதிகமான வட்டியைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இந்த மூன்று அடுக்கு முறையை மாற்றி, இரண்டு அடுக்கு முறையைக் கொண்டு வாருங்கள். அப்படி மாற்றுங்கள். அதன் காரணமாக, விவசாயிகளுக்கு வட்டி குறையும் சந்தர்ப்பம் ஏற்படும். அதன் காரணமாக அந்த சாதாரண விவசாயி, அதிகமாகக் கடன் வாங்கவும், குறைந்த வட்டி கொடுக்கவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தவிர, எந்தக் காரணத்தை முன்னிட்டும் விவசாயிகளுக்கு வருங்காலத்திலே 8 அல்லது 9 சதவிகித வட்டிக்கு மேல் மொத்த வட்டி வரக் கூடாது. இந்த முறையிலே இவைகள் மாற்றியமைக்கப்பட்டு, அங்கே உள்ள சொஸைடிகள் மூலம் அவர்களுக்கு இந்தக் கடனுதவி வழங்கப்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், இந்த சென்ட்ரல் பாங்கை மொத்தமாக எடுத்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, ஒவ்வொரு சென்ட்ரல் பாங்கிலும் ஒவ்வொரு விதமான சம்பள விகிதம் இருக்கிறது. தமிழ்நாடு பூராவிலும் ஒரே சரியான சம்பள விகிதம், நிலைமை இருக்கவேண்டும். ஒரு இடத்திலே ஒரு விதமான சம்பளம், இன்னொரு இடத்திலே அதிகமான ஊதியம் என்றிருக்கக் கூடாது. இதனால் ஊழியர்களிடையே அதிருப்தி ஏற்படுகின்ற நிலைமையிருக்கிறது.

அது மட்டுமல்ல. ஒவ்வொரு பாங்கிலும், ஒவ்வொரு விதமான சம்பள விகிதம் இருப்பதால், அந்த ஊழியர்களிடையே குழறல் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு, அதையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்றும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்தக்கூடாது, அதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 15 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. எனவே, சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.



978 மார்ச் 28]

திரு. செ. சிவசாமி : மேலும் சொல்கிறேன். இந்த
சாஸைடிகளிலே எல்லாம பல வருஷங்களாக தேர்தல் நடத்த
வண்டுமென்று சொல்லியும், தேர்தல் நடக்காமல் இருக்கிறது.
ிப்படி தேர்தல் நடக்காததன் காரணமாக, ஸ்பெஷல் ஆபீசர்
ள் நியமிக்கப்பட்டு, பல சம்பவங்கள், பல கோளாறுகள்
சொஸைடிகளின் மூலமும், சென்ட்ரல் பாங்கியிலேயும் ஏற்
பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் தொடர்பாக பல அபாயங்கள்
ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் குறித்து நல்ல
முறையிலே கவனித்து, உடனடியாக சொஸைடிகளுக்கு தேர்தலைக்
கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எங்களுடைய பகுதியிலே, பரமக்குடியிலே ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சொஸைடி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த பரமக்குடி சொஸைடியோடு இளையாங்குடியையும் சேர்த்து ஒரு சொஸைடியாக ஏற்பாடு செய்திருப்பதன் காரணமாக, இன்னொரு பகுதியிலே உள்ள மக்கள் இந்த வீடு கட்டும் சொஸைடியிலே பங்குபெற முடியாமல் இருக்கிறது. எனவே, பரமக்குடிக்கு ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சொஸைடியும், இளையாங்குடிக்கு ஒரு வீடுகட்டும் சொஸைடியும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது. முடித்து விடுங்கள். அடுத்து, திரு. யூசுப்.

*திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன, கூட்டுறவு, பதிவுத் துறைகள் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்திலே, இந்தத் துறைகளிலே குறிப்பாக வனத் துறை எவ்வளவு தூரத்திற்கு சீரழிந்தது என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக, இந்த வனத் துறையைப் பொறுத்த மட்டிலும், வனத்தை வளர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, வனத்தை அழித்தார்கள் இதற்கு முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள் என்பதற்கு ஒருசில உதாரணங்களை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 5–50]

குறிப்பாக என்னுடைய மாவட்டமாகிய நெல்லையைச் சேர்ந்த அம்பையிலே திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான 1,800 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலத்தினைப் பருவம் செய்கிறோம் என்று சொல்லி முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ராஜலிங்க ராஜா என்ற பெரிய மனிதருக்கு இந்த

இடம் ரீ-பிளான்டேஷன் செய்ய வேண்டும் என்ற ஒரு நிபந்தனையின் அடிப்படையிலே ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு ரீ-பிளான்டேஷன் செய்யாமலே இந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டார். பிறகு அந்த இடத்தில் அரிசன மக்கள் உள்ளே நுழைந்து பருவம் செய்கிற சூழ்நிலையில் அவர்கள் மேல் பாரஸ்ட் என்கரோச்மென்ட் தனி வழக்குகள் போட்டு அவர்களை வெளியேற்ற பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கோபால் தேவர் என்ற ஒருவரும், மகராசன் என்ற முன்னாள் பாரஸ்டரும் அதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, ஈத்தல் அடுக்கு என்பது எங்களுடைய பகுதியில் அதிகமாக இருக்கிறது. அது பேப்பர் ஆலைகளுக்குப் பயன்படுவது. இந்த ஈத்தல் ஒரே ஒரு பேப்பர் மில்லுக்குத்தான் அன்றையதினம் வழங்கப்பட்டது. அந்த பேப்பர் மில்லுக்குச் சொந்தக்காரர் அந்த சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று இன்றையதினம் தமிழகத்திலுள்ள பிரம்பு கேரளத்தின் வழியாக அந்நிய நாடுகளுக்குக் கடத்தப்பட்டு வருகிறது. இதிலே விநோதம் என்னவென்றால் லாரிகளில் எடுத்துச்செல்லப்படுகிற பிரம்புக்கு அனுமதி தேவைப்படுகிறது, அதே நேரத்தில் ரயிலில் செல்லுகிற பிரம்புக்கு அனுமதி தேவைப்படுவதில்லை. எனவே ரயில் மூலம் கடத்தப்படுகிறது. ரயிலில் எடுத்துச் செல்லும் பிரம்புகளுக்கும் அனுமதி பெற வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர வேண்டும்.

அதிகாரிகளே fine பணம் வசூலிக்கின்ற உரிமை வழங்கியிருப்பதால், ஒரு சில தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கும் காரணத்தால், அதிகாரிகள் பணம் வசூலிக்கும் அதிகாரத்தை எடுத்து விட வேண்டும்.

பயனற்ற மரங்களை எடுத்துவிட்டு அந்தப் பகுதியில் சந்தன மரம், தோதகத்தி, செங்குரிச்சி போன்ற மரங்களை வளர்க்கலாம் என்று யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏலச் செடி அதிகமாக வளருவது கிடையாது. அந்தப் பகுதியில் மாற்றுச் செடியாகக் காப்பிச் செடியை வளர்க்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, வன விலங்குகளில் பன்றியினால் அழிமானம் அதிகமாக இருக்கிறது. காட்டுப் பன்றியால், கிராம மக்கள், குறிப்பாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தால் காட்டுப் பன்றிகளை ஒழிப்பதில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வன விலங்கு பாதுகாப்பில் இருந்து காட்டுப் பன்றிகளுக்கு விதிவிலக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பத்திரப் பதிவுத் துறை பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி பிராமிசரி நோட் வாங்கி தனியார் கடன்களை வழங்குகிறார்கள். இதனால் ஏழை எளிய மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால் கண்டிப்பாக ரூபாய் இரண்டரை பத்திரத்தில் ரிஜிஸ்ட்ரேஷன் செய்யவேண்டுமென்று சட்டத்தை இந்த அவையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பற்றி, மணியடிக்கப்பட்டு விட்டதால் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு மத்திய வங்கிகள் கடந்த காலத்தில் எவ்வளவு தூரத்திற்கு சுய நலத்திற்கு ஆளாக்கப்பட்டன என்பதும், அந்த மத்திய வங்கிகள் எதற்கெல்லாம் பயன்படுத்தப்பட்டன என்பதையும் எல்லா உறுப்பினர்களும் அறிவார்கள். நெல்லை மாவட்ட மத்திய வங்கி ஜீப்புகளும், மோட்டார் வாகனங்களும் திண்டுக்கல் தேர்தலில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய வங்கிகளைப் பிடிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக ஒரே நாளில் எவ்வளவோ கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்பட்டன. ஓட்டு போடும் காரணத்திற்காக ift Lirrgation oil products co-operative போன்றபல வங்கிகள் இரவோடு இரவாக உருவாக்கி, வாக்காளர் பட்டியலை விரிவாக்கி மத்திய வங்கி தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிலவள வங்கிகள் தனியார் நலனுக்காக பலப்பல இடங்களில் தேவைப்படாத இடங்களில் உருவாக்கப்பட்டன. இன்றையதினம் அவை செயல்படுத்தப்பட முடியாத நிலைமை இருக்கிறது. அவற்றை இன்றைக்கு ஒன்றாக இணைக்கும் திட்டத்தை இந்த அரசு மேற் கொள்ளும் சூழ்நிலை உருவாக்க வேண்டும். வங்கிக் கடன்களைப் பொறுத்த மட்டில் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் ஏழை எளிய மக்கள் வாழும் பகுதியிலும் வறட்சியால் வெள்ளத்தால் தமிழகம் பாதிக்கப்பட்டிருக்கும் காரணத்தாலும் கடன் தொகையை வசூலிக்கும் நேரத்தில் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு மேற் கொள்ளக்கூடாது என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, இவற்றையெல்லாம் நீண்டகாலக் கடன்களாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச நல் வாய்ப்பு நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் மீது கழகத்தின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்

களிலே கடன் கொடுக்கின்ற நேரத்திலே பல பதிவேடுகளிலே கையெழுத்து வாங்கவேண்டி இருக்கிறது. முதலிலே ஆண்டி மாண்ட் மனு தயாரித்து அதிலே விவசாயிகள் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதிலே அவர்கள் கையெழுத்துப் போடத் தவறிவிட்டதால் அதன் காரணமாக உரிய நேரத்திலே கடன்கள் வழங்கப்படுவதில்லை. ஆகவே கடன் வழங்குவதில் இருக்கக்கூடிய சிரமங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, எவ்வளவு கடன் தேவைப்படும் என்று அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு உரிய நேரத்திலே கடன்களைப் பெற்று சரிவர விவசாயம் செய்யமுடியயும். குறுவை போடுகின்றபோது கோரப் படுகிற கடன் குறுவை அறுவடை முடிந்துதான் கிடைக்கிறது. பல கோணங்களிலே பார்க்கிறபோது கூட்டுறவுச் சங்கங்களிலே வேலைச் சுமை அதிகம் காரணமாக வேலை பாதிக்கப்படுகின்றது. அங்கே வேலை அதிகமாக இருக்கிற காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களிலே மளிகைச் சாமான்கள், உணவு வழங்கல் துறை மூலமாக வழங்கப்படுகின்ற பொருட்கள் இவைகளையெல்லாம் விற்கவேண்டிய நிலைமை இருக்கிறது. சில இடங்களிலே டெம்பரரியாக ஆட்களைப் போட்டு, கேஷுவல் பணியாளர்கள் போட்டு அந்த வேலைகளைச் செய்யச் சொல்கிறார்கள். ஆனால் சிலஇடங்களிலே தவறாக அவர்களிடமே வேலை வாங்குவதால் இந்த வேலைகள் பாதிக்கப்படுகின்றன..........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : எந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. மா. மணிமாறன் : கூட்டுறவுச் சங்கங்களிலே அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. கும்பகோணம் மைய வங்கிக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தேவையில்லாமல் விவசாயிகளுக்கு கரும்பு லோன் கொடுக்கப்பட்டு பழைய பாக்கிக்காக அதுவரவு வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கியதால் அந்த விவசாயிகள் கடன்கள் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது மட்டுமல்ல, உரமும் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது. சென்ற ஆண்டு வெள்ளம் காரணமாக குறுவை பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்திலே கரும்பு லோனை கொடுத்து ஓவர் டியூ என்று ஆக்கி வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. கும்பகோணம் மைய வங்கியிலிருந்து அதனால் கடன்கள் கிடைக்கவில்லை, அவர்களுக்கு கன்வர்ஷன் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள்.





மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு கரும்புக்காக கொடுக்கப்பட்ட லோனை மாற்றி மத்திய காலக் கடனாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் விவசாயிகளுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்படுகின்றன, இந்தக் கூட்டுறவு சங்கங்களிலே வேண்டிய நேரத்திலே வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள், வேண்டாத நேரத்திலே வேலையிலிருந்து எடுத்துவிடுகிறார்கள், அவர்களுக்கு கட்டாயமாக வேலை கியாரண்டி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய நிலை திரிசங்கு சொர்க்கமாக அவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள், இந்த நிலைமையைப் போக்கவேண்டும்.

கூட்டுறவுச் சங்கக் கடன்களைப் பொறுத்தவரையில் தவணை தவறிய கடன்கள் என்ற முறையிலே 1975ஆம் ஆண்டில் 9 சதவீதமாக இருந்தது, 1976 ஆம் ஆண்டிலே 11 சதவீதமாக இருந்தது, 1977 ஆம் ஆண்டில் 15 சதவீதமாக இருக்கிறது கேட்பு நிதி தவணைதவறிய கடன் என்று பார்க்கிற நேரத்திலே. அவைகளை விவசாயிகள் கட்டவேண்டாம் என்ற நோக்கம் அல்ல. வறட்சி 3 ஆண்டுக்காலமாக ஏற்பட்ட காரணத்தினால் அவர்கள் கட்டமுடியாத நிலை இருக்கிறது.

[மாலை 6—00.]

அத்துடன்கூட ஏறக்குறைய நான்கு தடவைகள் ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது. நான்கு தடவை ஒத்தி வைக்கப்பட்டதால் அதனுடைய வட்டியோடு இந்த ஆண்டு வாங்கும் கடனையும் சேர்த்து அடுத்த ஆண்டு கட்டாயமாக அவர்களால் கட்ட முடியாது. அவர்கள் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப்போல அவர்கள் சங்கத்திலிருந்து வாங்கிய கடனையும் கட்ட வேண்டியிருக்கிறது. இப்படி நான்கு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டதால் பாங்குகளுக்குக் கட்ட வேண்டிய வட்டியும், இந்த ஆண்டு வாங்கும். கடன், அதற்கான வட்டி ஆகியவற்றைக் கட்ட வேண்டுமானால் அடுத்த ஆண்டு நிலத்தை அவன் விற்றால்தான் முடியும். ஆகவே, அருள்கூர்ந்து இந்த 30 கோடி ரூபாயையும் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து கொடுப்பார்களேயானால் எதிர்காலத்திலே அவர்கள் விவசாயத்திலே மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலேகூட நீங்கள் தவறினால் வெள்ளக் காலத்தில் ஒத்தி வைக்கப்பட்ட ஏழரை கோடி ரூபாயையாவது தள்ளுபடி செய்ய வேண்டும். தவணை தவறிய கடன்களுக்கு வட்டி விகிதம் அதிகமாகி கட்ட முடியாத நிலைமையில் விவசாயிகள் இன்றைக்கு இருக்கிறார்கள். அந்த வட்டி விகிதத்தைத் தயவு செய்து மாற்ற வேண்டும். இல்லையென்றால் விவசாயிகளினால் கட்ட முடியாது. விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்ய ஆர்வத்தோடு ஈடுபடும் நேரத்தில் இயற்கையின் காரணமாகப் பல இடர்ப்

பாடுகளை ஏற்றிருக்கிறார்கள். அதனால் கடனைச் சரியாகக் கட்ட முடியவில்லை. எனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் ஓத்தி வைக்கப்பட்ட 8 கோடி ரூபாய்க் கடன்களைத் தள்ளுபடி செய்தால் ஒழுங்காக விவசாயம் செய்து அவர்கள் வாழ முடியும்.

மேலும் அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்குச் சரியாக விலை கிடைப்பதில்லை. அவர்கள் உற்பத்தி செய்த நெல்லுக்கு சரியாக விலை கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஐ.ஆர். 20 நெல்லுக்கு 60 ரூபாய் முன்பு கிடைத்தது, ஆனால் இப்பொழுது 50 ரூபாய்க்குக் கூட விற்க முடியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் உணவு வழங்கும் துறைக்கும் அமைச்சராக இருப்பதால் இந்த ஐ.ஆர். நெல் ரகத்தை முதல் ரகமாகக் கருதி முன்பு கொடுக்கப்பட்ட ரூபாய் 59.86 இருந்ததை மீண்டும் விவசாயிகள் பெற அமைச்சரவர்கள் ஆவன செய்தால் விவசாயிகளுக்கு நீங்கள் நன்மை செய்தவர்கள் ஆவீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலம் கடந்த கடன்களினால் விவசாயிகள் படும் இடர்ப்பாடுகள் அதிகம், வட்டி அதிகம், அதைக் கட்ட முடியவில்லை. ஆகவே, இந்த நிலைமைகளைப் பார்க்கும்பொழுது இந்த அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்கின்ற நிலைமையிருந்தாலொழிய அவர்களுக்கு விடுதலை கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற ஊழியர்களின் சம்பள விகிதத்தையும் உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>* திரு. எம். வின்சென்ட் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவு, வனத்துறை, சின்கோனா முதலிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறையின் தலையாயபணி காடுகளைக் காத்தல், மேம்படுத்துதல் என்பதனைப் பாராட்டுகின்ற நேரத்தில் முப்பதாண்டுக்காலமாக வனத்தை அதிகரிக்கச் செலவழிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாயைப் பார்த்தால், 290 சதுர கிலோ மீட்டர் பரப்பளவானது இன்றைக்குக் குறைந்திருக்கிற நிலையைத்தான் பார்க்கிறோம்.

முன்பிருந்த உயர் மட்ட அதிகாரிகள் வனாந்தரக் காடுகளில் டென்டுகளைப் போட்டு அதிலே வாரக் கணக்கில் முகாம் போட்டு பணியாற்றினார்கள். ஆனால் இன்றைய அதிகாரிகள் அத்தகைய ரீதியில் செயல்படுகிறார்களா என்றால் அப்படிச் செயல்படவில்லை. ஆகவே, இன்றையதினம் இருக்கின்ற வன இலாக்கா அதிகாரிகளின் பாதச் சுவடுகள் காட்டைத் தேடிச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்திலே சென்னையிலேயிருந்து போடும் பல இலட்சக்கணக்கான ரூபாய்த் திட்டங்கள் வெற்றி பெற்றதாக ஏட்டிலே இருப்பதே தவிர காட்டிலே இல்லை. ஏனென்றால் அனுபவம் மிக்க அடிமட்ட அதிகாரிகளைச் சந்தித்துத் திட்டம் தீட்ட வேண்டும் என்பதே என்னுடைய கருத்து என்பதனை இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் கோவை மாவட்டத்தில் வடகோவை வனத் தோட்டத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் பசுமை மாறா வனத்தை அழித்து மூங்கில் நட்டார்கள். ஆனால் அங்கே இன்றையதினம் ஒரு மூங்கில்கூட இல்லை. ஏனென்றால் கேட்டால், ' Homelands of elephants '. அதாவது யானை இராஜ்யத்தில் நட்டால் எப்படி அது வளரும் என்பதுதான். இது அனுபவம் மிக்க அடி மட்ட அதிகாரிகளுக்குத்தான் தெரியும் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது தேவையிருக்கின்ற வனங்களை எப்படிப்பாதுகாப்பதுஎன்பதில்அரசுஅக்கறை செலுத்த வேண்டும். 1.8 சத விகிதம் நிதி ஒதுக்கி இருக்கின்ற வனங்களைப் பாதுகாப்பதற்கும், 98.20 சதவிகிதம் வனங்களை மேம்படுத்துவதற்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். வனங்களை காக்க 67 ஆயிரம் ரூபாயும், மேம்படுத்த 948 இலட்சம் செலவழிப்பதில் என்னுடைய கருத்து என்னவென்றால், Intensive protection is better than extensive plantation 25 சதவிகிதம் நிதி காடுகளை பாதுகாப்பதற்கு அரசு ஒதுக்க வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரியில் படிக்கிற காளையைப் பலியாக்கி, கருவில் வளர்கிற சிசுவை பாதுகாக்க எடுக்கிற முயற்சி அவ்வளவுதூரம் பலன் தராது என்று நான் தெரிவித்து கொள்கிறேன். ஏனென்றால் மரம் நடுவிழா திட்டத்தின்கீழ், 1976–77-ம் ஆண்டு 92 இலட்சம் நாற்றுகள் நடப்பட்டன. ஆனால், இன்று அந்த நாற்றுகளின் 10 சத விகிதம் நாற்றுகூட வளரவில்லை. கணக்குகளை அரசு கேட்கிறது. அரசுக்கு கலெக்டர்கள் கன்சர்வேட்டர்களிடம் கேட்டு கணக்கு கொடுக்கிறார்கள். நாற்று நடப்பட்டதோ இல்லையோ, நடப்பட்டதாகக் கணக்குகள் வருகிறதே தவிர, நடப்படவும் இல்லை, காக்கப்படவும் இல்லை. ஆகவே, மரங்கள் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படுகிற பணம் சுரண்டப்படுகிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் எண்ணிக்கையில், ஒன்றாக இருந்த சீப் கன்சர்வேட்டர் இரண்டானது. மூன்றாக இருந்த கன்சர்வேட்டர் 8 ஆனது. 31ஆக இருந்த உதவி கன்சர்வேட்டர்கள் 52 ஆனது. ஆனால், வனங்களைப் பாதுகாக்கிற கார்டுகளையும், வாச்சர்களையும் அதிகமாக்க அவர்கள் அக்கறை காட்டவில்லை. ஒரு பீட்டை ஒரு கார்ட் காக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் கொண்ட ஒரு பீட்டை எப்படி ஒரு

கார்ட் காக்க முடியும்? படித்த இளைஞர்கள், இளைஞர் அணியில் உள்ளவர்கள் குமரி மாவட்டத்திலும், மற்ற மாவட்டத்திலும் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் வன இலாகா நிர்வாகத்தைப் பற்றிய குறைபாட்டைக் குறிப்பிட்டு காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கிண்டி பூங்காவில், மிருகங்களுக்குத் தீனி வாங்கி வழங்குவதில் 1971—75-ல் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி நடந்ததாக, ஒரு விசாரணை நடந்தது. ஆனால், அதில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் முன்னாள் முதலமைச்சர் வீட்டிலும், சீப்-கன்சர்வேட்டர் வீட்டிலும் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்களே தவிர, குற்றவாளிகளைக் கண்டுபிடித்த அதிகாரி பழி வாங்கப்பட்டார். இந்தச் செய்தியை நான் தெரிவிப்பதற்குக் காரணம், அரசு இது குறித்து, ஒரு விசாரணை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் அமைச்சருக்கு நெருங்கிய உறவினராக பொன்னுசாமி என்பவர் கோவை தெற்கு டிவிஷன் அதிகாரியாக அனுப்பப்பட்டார். அவரால், ஏராளமான தேக்கு, கருங்காலி மரங்கள் வெட்டப்பட்டன. இது பற்றி 7—12—1973-ல் தகவல் வந்தது. அந்த டிவிஷன் காடுகள் அழிக்கப்பட்டு அதனால் ரூ. 5 இலட்சம் நஷ்டமாகியிருக்கிறது. அந்தக் கொள்ளையை அன்றைய செய்தி பேப்பர் 'அலை ஓசை' 20—11—1973-ல் வெளியிட்டுள்ளது. ஆனால், அங்கே சபார்டினேட்ஸ் தண்டிக்கப்பட்டார்களே தவிர, டி. எஃப். ஓ. தண்டிக்கப்படவில்லை. டி. எஃப்.ஓ. மேல் குற்றம் சாட்டப்படவில்லை. அந்த டி.எஃப்.எஸ். அதிகாரிமேல் குற்றம் சாட்டப்படவில்லை. ஏனென்றால், அவர் முன்னாள் அமைச்சரவர்களின் நெருங்கிய உறவினர்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், தேக்கைத் திருடிய அவர்மேல் குற்றம் சாட்டவில்லை. ஆனால், பக்கத்தில், தர்மபுரியில் உள்ள டி.எஃப்.ஓ. மேல், விறகை வெட்டியதற்காக, விஜிலன்ஸ் அன்ட் ஆன்டி கரப்ஷன் மூலம் குற்றம் சுமத்தப்பட்டது, விசாரணை நடைபெற்றது. அவர் மேல் சார்ஜ் ஷீட் போட்டு, அந்த வழக்கைத் தொடர மத்திய அரசை அனுமதி கேட்டிருக்கிறார்கள். தேக்கைத் திருடியதற்கு, அந்த அதிகாரி மேல் வழக்கு தொடர மத்திய அரசை அனுமதி கேட்கவில்லை; ஆனால், விறகைத் திருடியவர் மேல் வழக்கு போட முந்தைய அரசு நடவடிக்கை எடுத்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எங்கள் மாவட்டம் சம்பந்தமாக, மதிப்பிற்குரிய சுவாமிதாஸ் அவர்கள் பேசினார்கள், மூங்கில் தோட்டத்தையே அழித்து விட்டார்கள், என்று. இராஜபாளையத்திலே, எம்.பி.பி.





இராஜா ஐயனார் என்பவருக்கு வன இலாகா குத்தகைகள் தரப்பட்டன. பொதுவாக, மூங்கில் தோட்டத்தை குத்தகைக்கு விடும்போது எந்த இடமாக இருந்தாலும் சுழல் முறையில்தான் குத்தகைக்கு விடப்படுவது வழக்கம். அப்பொழுதுதான் மூங்கில் உற்பத்தி அதிகரிக்கும். ஆனால், குமரி மாவட்டத்திலுள்ள குலசேகரம் காட்டில், மூங்கில் வளர்க்க, குத்தகை, எம். பி. பி. இராஜா ஐயனார் என்பவருக்கு விடப்பட்டது. ஆனால், அவருக்கு விடப்பட்ட விதிகளுக்கு மாறாக, முறைகேடாக அவர் மூங்கில்களை வெட்டினார் என்பதற்காக, அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மீண்டும் அங்கே மூங்கிலை உருவாக்க 10 ஆண்டுகள் ஆகும். அதனால்ஏற்பட்ட நஷ்டம் ரூ.10 இலட்சம்என்று கணக்கிடப்பட்டது. மூங்கில்களை வெட்டுவதற்கான விதிகளை — நிபந்தனைகளை மீறி, அவர் மூங்கில்களை வெட்டிவிட்டார். இதுவும் முந்தைய ஆட்சியில் நடைபெற்றது.

இன்னொரு நிகழ்ச்சி. குத்தகைக்காரர் கேட்டுக்கொண்டதன் பேரில் குத்தகை இடம் மாற்றப்பட்டு, மிகவும் செழிப்பான வளர்ச்சி இடம் அவருக்குத் தரப்பட்டது. குத்தகை எடுக்கப்பட்டது ஒரு இடம். ஆனால், வெட்டுவது வேறு இடம். வன இலாகா சரித்திரத்தில் இம்மாதிரி நடக்கவில்லை, அதற்கு முன்னால், ஏலத்தைப் பொறுத்த வரையில் பகிரங்கமாக ஏலம் விடாமல், முந்தைய அரசு தனிப்பட்ட முறையில் கொடுத்திருக்கிறது. இதனால் பல கோடி ரூபாய்களை விழுங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை—6-10.)

கோவை மாநாட்டிற்கு 1975-லே நடந்த கோவை மாநாட்டிற்கு, குத்தகைதாரர்களிடம் இருந்து 5 லட்சம் ரூபாய்க்கு மேல் முன்னாள் அமைச்சருடைய உத்தரவின்படி வனப் பாதுகாவலர் ஐம்புலிங்கம் வனக் குத்தகைதாரர்களிடம் இருந்து பணம் பெற்றிருக்கிறார். சில குத்தகைகாரர்கள் இந்த நன்கொடையை தங்கள் கணக்குப் புத்தகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, ஒரு வேதனையான செய்தி, இப்போது இரண்டு கன்சர்வேட்டர்கள், இரட்டை ஆட்சி நடப்பதைப்போல், இன்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

<u>திரு. துரை முருகன்:</u> பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு யாரோ குத்தகைதாரர்களிடம் இருந்து 5 இலட்சம் ரூபாய் வசூலித்ததாகச் சொல்கிறார். அதற்கு என்ன ஆதாரம்? அதை வைத்திருக்கிறாரா அதை இந்த அவையிலே விளக்குகிறாரா? என்பதை முதலிலே அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி முன்னாள் அண்ணா தி.மு.க.-வின் அவைத் தலைவர், கே. கே. ஷா கவர்னர் அவர்களிடம் ஆதாரத்தோடு குற்றச் சாட்டுக்களைக் கொடுத்திருக்கிறார் என்ற தகவலையும் சில குத்தகைதாரர்கள் தங்கள் நன்கொடைகளை தங்கள் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள் என்ற தகவலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: கே.கே. ஷா இடத்திலே கொடுத்தாரா அல்லது ஜனாதிபதி இடத்திலே கொடுத்தாரா என்பதல்ல விவகாரம். இந்த அவையிலே அவர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இன்று அவர் பொறுப்பேற்றுக்கொள்கிறாரா அல்லது தாங்கள் இதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இங்கே ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்தில் இருக்கிற அமைச்சர்களைப் பற்றியோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றியோ பேசுவதற்குத் தான் ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும், மற்றவைகளுக்கு இங்கே சமர்ப்பிக்கப்பட வேண்டாம் என்று கூறப்பட்டிருக்கிறது. தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. துரை முருகன்: நான் கூறுகிற கருத்தைத் தலைவர் ஏற்றுக் கொள்ளுகிறாரா என்பது மட்டும்தான் எனக்குத் தேவை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்ட முறையிலே நீங்கள் குற்றம் சுமத்துவது என்பது. அப்படிக் குற்றம் சுமத்தினால் அதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இயக்கத்தைப் பற்றி குறிப்பிட்ட குற்றச்சாட்டு சொல்லும்போது அப்போதும்கூட நீங்கள் தகுந்த ஆதாரத்தோடு பேசவேண்டும். குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: மன்னிக்க வேண்டும், இது நாளைக்கு பத்திரிகையிலே வரும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு 5 லட்சம் வசூல் செய்தார்கள் என்பதை நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அவர் ரெஸ்பான்சிபிலிடி எடுத்துக் கொள்கிறாரா என்று கேட்கிறேன்.



திரு. எம். வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் நடந்த தி. மு. கழக மாநாட்டின் போது அன்றைய அமைச்சரின் உத்தரவின்படி வனப் பாதுகாவலர் ஐம்புலிங்கம், வனக் குத்தகைதாரர்களிடம் இருந்து கட்டாயமாக ரூபாய்கள் வசூல் செய்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது—அதனை நான் அவகாசம் தந்தால் அதனை ஆதாரத்தோடு நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: அவகாசம் எடுத்துக் கொள்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அது வரையிலும் சபை நடவடிக்கையிலே இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அப்படியானால் நான் சொல்கிறேன், எனக்குத் தெரிந்த வரையிலே இங்கே உள்ள அமைச்சர்கள் பணம் வாங்கினார்கள்..........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் இங்கே கூறிய குற்றச்சாட்டுக்களுக்கு நம்முடைய உறுப்பினர் இங்கே விளக்கம் கொடுக்கிற நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா என்று நீங்கள் கேட்டீர்கள். அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அவர் சொன்ன பிறகு அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டும் என்று நீங்கள் கேட்பது சரியில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: மன்னிக்க வேண்டும். அவர் முதலில் உங்களிடத்தில் காண்பித்து இருக்க வேண்டும். உங்களிடத்தில் அதைப் பேசுவதற்கு அனுமதி பெற்று இருக்க வேண்டும். அப்படி அவர் செய்தாரா? இன்றைக்கு அவர் சொல்லியது நாளைக்குப் பத்திரிகையில் வந்து விடும். அப்புறம் என்ன செய்ய முடியும்

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் - தலைவரவர்களே, ஆதாரங்களை கையில் கொண்டு வர வேண்டும் என்று கட்டாயமாக இங்கே விதிமுறைகள் இல்லை. பொறுப்பு ஏற்றுக் கொண்டால் போதும் என்று விதிமுறை இருக்கிறது. முந்தைய நடவடிக்கைகளும் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரூல் எப்படி என்றால், பேசுகிற உறுப்பினர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, அதனுடைய முழு விளைவுகளையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். ஆதாரத்தை அவர் அவைக்குத் தருகிறேன்

என்று சொன்னதற்குப் பிறகு, அந்த ஆதாரத்தைக் கேட்டுப் பெற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சொல்கிற குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுத்துவிட வேண்டும். எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அவர் பேசிவிட்டுப் போய்விடுகிறார். நாளைக்குப் பத்திரிகையில் வரும். ''தி. மு. கழக மாநாட்டிற்கு கான்டிராக்டரிடமிருந்து 5 லட்சம் ரூபாய் வசூல் செய்தார்கள்'' என்று முன்னாள் அமைச்சர் மீது வின்சென்ட் குற்றச்சாட்டு என்று பெரிய தலைப்பில் கொட்டை எழுத்தில் வெளிவரும். பிறகு எப்போது ஆதாரம் வரும்? ஆதாரம் கொண்டு வந்து காட்டுவாரா, இல்லையா என்பதும் தெரியாது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் என்றால், அதற்கு அடுத்த கூட்டத் தொடர் வருகிற வரையில் காத்து இருக்க வேண்டும். ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்று போய்விடும். ஆகவே அதை சபைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும். அதற்கு தலைவர் தீர்ப்புக் கொடுக்க வேண்டும்.

(திரு. துரை முருகன் நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : நீங்கள் உட்காருங்கள். நான் ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : சபாநாயகர் தீர்ப்பு தருகிற வரையில் நான் உட்காரமாட்டேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : நான் உட்கார மாட்டேன். நீங்கள் வேண்டுமானால் பேசுங்கள்.

The Hon. Minister is not my master and he cannot ask me to sit down. it is only the Chair who can ask me to do so.

The Hon. Thiru G. R. EDMUND: I am only requesting the hon. Member to resume his seat





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். நான் தீர்ப்பு சொல்வதற்கு முன்பு அமைச்சர்கள் விளக்கம் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சபாநாயகர் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று, கட்டாயப்படுத்துவதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நிரூபித்தால்தான் அது குறிப்பில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சபைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். நான் இந்த அவையில் கடைபிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகளை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருவது இந்த நேரத்தில் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது இந்த அவையில் கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு கொலை வழக்கைப்பற்றி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி, அந்த கொலை சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அவருக்குத் தெரியும் என்ற சூழ்நிலையில், அதற்கு ஆதாரங்கள் இருக்கிறது, குற்றவாளி யார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தருகிறேன் என்று பொறுப்பேற்றக் காரணத்தால், அந்தப் பேச்சு சட்டசபை குறிப்புகளில் இருந்து அகற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்போது அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் இங்கே அவர் சொல்லிய குற்றச்சாட்டுக்கு அவர் கைவசம் ஆதாரம் இப்போது இல்லை என்றாலும், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருப்பதால், அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவது முறைதானா என்பதை பேரவைத் தலைவர் அவர்களே நீங்கள் அதற்குத் தீர்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே என் தீர்ப்பை இது விஷயமாகச் சொல்லிவிட்டேன். என்னுடைய தீர்ப்பு என்னவென்றால், பேசுகின்ற உறுப்பினர் தகுந்த ஆதாரத்தோடு பேச வேண்டும். ஆதாரம் இருக்குமானால் அதைக் காட்டிவிட்டு பேசவேண்டும். ஆதாரம் இல்லாமல் பேசினால், முழுப் பொறுப்பையும், அதனுடைய விளைவுகளையும் ஏற்றுக் கொண்டு பேசவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்களை

அவைத் தலைவருக்கு அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவரை தொடர்ந்து பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. துரை முருகன் : இங்கே தான் நான் தங்கள் தீர்ப்புக்கு மாறுபாடு கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்லிய தீர்ப்பைத்தான் நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

திரு. துரை முருகன் : நான் கேட்க விரும்புவது, திரு. வின்சென்ட் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்காக கான்டிராக்டரிடம் 5 லட்சம் ரூபாய் வாங்கியது என்று ஒரு பெரிய குற்றச்சாட்டை ஒரு பேரியக்கத்தின் மீது சுமத்தியிருக்கிறார்கள். ஒன்று அவர் அதை இப்போதே நிரூபிக்க வேண்டும், இல்லாவிட்டால், அவர் ஆதாரம் கொண்டு வந்து காட்டுகின்ற வரையில் அந்தப் பேச்சு நடவடிக்கைக் குறிப்பில் வராமல் இருக்கும்படி சபாநாயகர் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய கருத்தைச் சொல்வதில் தவறில்லை. ஆனால் தலைவரின் தீர்ப்பு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று எந்த உறுப்பினரும் தலைவரைக் கட்டுப்படுத்த முடியாது. அந்த அதிகாரம் எந்த உறுப்பினருக்கும் கிடையாது. ஏற்கனவே அவர்களிடம் தகுந்த ஆதாரம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னால் கூட இப்படி இரண்டு முறை பேசப்பட்டு, அந்தப் பேச்சுக்கள் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கிறது.

திரு. துரை முருகன் : நீங்கள் ஆதாரம் கேளுங்கள் ; அவர்கள் ஒருவருஷம் கழித்துக் கொடுப்பார்கள் ; அதுவரை நாங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டுமா ? அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. நீங்கள் இப்படித்தான் தீர்ப்பு அளிப்பதாக இருந்தால் நீங்கள் ஒருதலைப்பட்சமாக நடக்கிறீர்கள் என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறேன் (கூச்சல் குழப்பம்). ஏற்கனவே இதுபோன்ற ஒரு சம்பவத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, உங்களுடைய தீர்ப்பைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் அவையிலே 'ப்ரொஜிசிரை' கடைப்பிடிக்க வேண்டும். சபை மரபுகளுக்கு உட்பட்டு பேசவேண்டும்.



திரு. துரை முருகன் : ப்ரொசீஜரைப்பற்றி எனக்குத் தெரியும். எனக்கு நீண்டகால அனுபவம் இருக்கிறது. (குறுக்கிடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னைவிட அனுபவம் உங்களுக்கு அதிகமாக இருக்கலாம். அனுபவம் இருக்கிற காரணத்தால் தப்பு பண்ண வேண்டுமென்று சட்டம் இல்லை சபை மரபுகளை மீறி பேசுவதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பை நான் ஆட்சேபிக்கவில்லை. இதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் பேசும்போது கலைஞர்மீது குற்றஞ் சாட்டினார்கள். அதற்கு ஆதாரம் கொடுக்கப்படவில்லை. எனவே, சபைக் குறிப்பிலும் அவருடைய பேச்சு இடம் பெறவில்லை. ஆகவே தொடர்ந்து இதுதான் தங்களுடைய தீர்ப்பு என்றால் தொடர்ந்து இந்த விவாதத்தில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்பதைச் சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (அவரைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள். அப்போது திரு! துரை முருகன் "தலைவரின் ஒருதலைப்பட்சமான தீர்ப்பு ஒழிக, தலைவரின் ஒருதலைப்பட்சமான தீர்ப்பு ஒழிக" என்று சப்தமிட்டுக் கொண்டே சென்றார்).

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவரவர்களே, இந்த அவையிலே எந்த சம்பவம் நடைபெற்றாலும், என்ன கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டாலும் நிச்சயம் அவை குறிப்பில் ஏறும். அது நிச்சயம் பத்திரிக்கையிலும் வரும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்வதிலே நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை ; அது அவர்களுடைய உரிமை. ஆனால் வெளிநடப்புச் செய்கிறவர்கள் வெளியே செல்லும்போது தங்களுடைய தீர்ப்புக்கு களங்கம் கற்பித்து வெளியே சென்றிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பில் ஏறவிடக் கூடாது என்று தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, பலமுறை பேரவைத் துணைத் தலைவரைப் பற்றியும், பேரவைத் தலைவரைப்பற்றியும், இதர உறுப்பினர்களைப் பற்றியும் பலர் பேசும்போது குறிப்பிடுவது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது என்ற ஒரு போர்வையில் அவர்கள் பாது

காக்கப்படுவதால் அடிக்கடி இப்படி பேசப்படுகிறது. ஆகவே, பொதுமக்களும் மற்றவர்களும் அவை உறுப்பினர்களில் யார் யார் கண்ணியமற்ற முறையில் பேசுகிருர்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு கண்டிப்பாக இந்த மாதிரியான வார்த்தைகள், அவை அன்பார்லிமென்டரியாக இருந்தாலும் கூட சபைக் குறிப்பில் இருக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்கட்சி வரிசையில் இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும், குறிப்பாக வெளிநடப்பு செய்வதற்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அதே நேரத்தில் இந்த சபையின் கண்ணியம் காக்கப்படும் வகையில் அவர்கள் வார்த்தைகளை உபயோகப்படுத்த வேண்டுமென்ற மரபு இருக்கிறது. அந்த மரபினை திரு. துரை முருகன் அவர்கள் மீறி, வெளிநடப்பு செய்கின்ற நேரத்தில் '' தலைவரின் ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு ஒழிக '' என்று சப்தமிட்டுக் கொண்டே சென்ருர்கள். அவர் இந்த சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டு, எப்படி பேசினுர், எப்படி சபையிலே நடந்து கொண்டார் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அவர் கூறிய வார்த்தைகள் அப்படியே இருக்கட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எம். வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையநிலையில்இரண்டு சீஃப்கன்சர்வேட்டர்கள் இருப்பதாகவும் அதில் ஜுனியர் சீனியராகவும், சீனியர் ஜுனியராகவும் இருப்பதாகப் பேசப்படுகிறது. அது மட்டுமல்ல 10 ஐ.எஃப். எஸ். ஆபீஸர்களும் சென்னையில் இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆகவே இதனை நீங்கள் பரவலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவரவர்ளே, இன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற கருத்துக்களிலே குறிப்பாக பத்திரப் பதிவு பற்றி இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிருர்கள். சென்ற முறை நான் பேசுகின்றபோது பத்திரப் பதிவு ஆபீஸ்களில் கைட் லைன்ஸ் வைத்திருக்கிருர்கள். 1969ஆம் ஆண்டிலே அதை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். அதை அமலுக்குக் கொண்டு வருகிறபோது அங்கங்கே இருக்கின்ற வில்லேஜ் ஆபீஸர்கள், கர்ணம்கள், மணியக்காரர்கள் ஆகியவர்களுடைய ஸ்டேட்மெண்ட்களை வைத்துக்கொண்டு நிலங்களுக்குண்டான நில மதிப்பை நிர்ணயித்திருக்கிருர்கள். நிலத்தின் தன்மையைப் பொறுத்தும் இடங்களைப் பொறுத்தும் பல்வேறு இடங்களில் மதிப்பு மாறுபட்டிருக்கிறது.



### 11 உரிமைப்பிரச்னை.

**உறுப்பினர் திரு. துரை முருகன் பேரவை துணைத் தலைவர் தீர்ப்பை குறை கூறி குறிப்பிட்டது குறித்து.**

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளி நடப்புச் செய்திருக்கிருர்கள். அவர்கள் வெளி நடப்புச் செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் மற்ற மெம்பர்களும் துணைத் தலைவருடைய தீர்ப்பை ஆட்சேபித்து துரை முருகன் அவர்கள் ''துணைத் தலைவர் ஒழிக'' என்று குரல் எழுப்பியும் சபையினுடைய நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்கின்ற வகையில் நடந்துகொண்டிருக்கிருர். உங்களுடைய தீர்ப்பையும் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு என்று உங்களுடைய தீர்ப்புக்கே அவர் களங்கம் கற்பிக்கிருர். பொதுவாக சபாநாயகருடைய தீர்ப்பையோ அவர்களுடைய உத்தரவுகளையோ எந்த உறுப்பினரும் விமரிசனம் செய்யக்கூடாது என்று சபை விதிகளிலே இருக்கின்றது. அதை மீறி அவைக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவர்கள் பேசிச் சென்ருர்கள். எனவே இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சுக்கள், அவையின் நடவடிக்கை பற்றிய அந்த குறிப்புகள் ஆகியவற்றை மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல் உரிமைப் குழுவிற்கு அனுப்புகிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவரவர்களே சபைத் தலைவருடைய தீர்ப்பை ஆட்சேபித்து பேசக்கூடிய இந்தப் பேச்சுக்களை விதிப்பிரகாரம் தவறு என்பதை எடுத்துக் காட்டி அதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று திரு. இராதா அவர்கள் கேட்டுக்கொண்டது ஒரு மோஷன் ஆக மூவ் பண்ணப்படவில்லை. அதை எழுதிக் கொடுக்கத் தேவையில்லையா வாயாலே சொன்னுலேயே போதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபைக்கு வெளியே நடந்த நிகழ்ச்சிகளையும் அல்லது இதற்கு முன்னுலே நடந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டுச் சொல்லும்போது எழுதிக்கொடுக்க வேண்டும். ஆனுல் சபைக்குள்ளே இதைப்போன்ற பிரச்சினைகள் வரும்போது உடனடியாக உரிமைக்குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்ருல் எழுத்து மூலமாக அல்லாமல் வாய்மூலமாகவும் சொல்லலாம். அதை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிற உரிமை சபையினுடைய தலைவருக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாலை 6-30]

## 8 1978-79-ம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. ரா. மார்க்கபந்து: பொதுவாக பத்திரங்கள் எழுதுகிறபோது நான் ஏற்கனவே சொன்னேன். பணம் வாங்குகிறவர்கள், கடனை வாங்குகிறவர்கள் அந்தச் சொத்தை கிரயமாக எழுதிக்கொடுக்கிறார்கள் w th an agreement torepurchase the property ஆயிரம் ரூபாய் வாங்கி பத்திரம் எழுதிக் கொடுத்து ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் அதைத் திருப்பி வாங்குகிறபோது கெயிட்லைனில் சொல்லியிருக்கிற மதிப்புப்படி பத்திரத்தில் எழுத வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. திருப்பி வாங்கும்போது 20,000 ரூபாய் மதிப்புள்ள சொத்து என்று அரசாங்கக் கணக்கில் இருந்தால் அதற்குண்டான ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 மதிப்புக்கு பத்திரம் வாங்கி எழுத வேண்டும் என்ற நிலை இருக்கிறது. கோர்ட்டுகளில் நடக்கிற வழக்குகள் '' Specific performance of Contract '' என்று சொல்லக்கூடிய வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்புகளில் கூட கிரயமாக எழுதிக் கொடுக்கும்போது அவர்கள் அதற்குண்டான மதிப்புள்ள பத்திரங்கள் வாங்கிக் கொடுத்தால்தான் ரெஜிஸ்தர் ஆகும் நிலை இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலிக்கவேண்டும், அதற்குரிய முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். அதேபோல் ஸ்டாம்ப் ட்யூட்டி என்பது மிக அதிகமாக இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டும். பத்திரப் பதிவு என்று வருகிறபோது கோர்ட்டில் பலவிதமான வழக்குகள், கணவன் மனைவி என்ற பிரச்னை வருகிறபோது, கணவன் மனைவி என்று சொல்வதற்கு வேண்டிய ஆதாரங்கள், ரிக்கார்ட் பூர்வமாக இல்லாத காரணத்தால் பலவித வழக்குகள் கோர்ட்களில் நடைபெற்று வருகின்றன.

நேற்று கூட நான் ஒரு அப்பீல் வழக்கில் பேசுகிற போது 25 ஆண்டுகளுக்கு முன்னால் திருமணம் செய்து கொண்டவர்கள் ஆறு குழந்தைகளை பெற்றுவிட்ட பிறகு அவர்கள் திருமணம் சட்டப்படி செல்லுமா செல்லாதா என்ற பிரச்சினை பற்றி பேசிவிட்டு வந்திருக்கிறேன். இப்படி பல பிரச்சினைகள். 1949-ம் ஆண்டு பிகமி பிரவன்ஷன் ஆக்டுக்கு முன்னால் இரண்டாவது திருமணம் செய்துகொண்டால் செல்லுபடியாகும். 1949-ம் ஆண்டு சட்டத்திற்குப் பிறகு இரண்டாவது திருமணம் செய்துகொண்டால் அது செல்லுபடியாகாது. அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு சொத்து வாரிசு உரிமை கிடையாது. என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது.



ஆகவே பெர்த் அன்ட் டெத் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரெஜிஸ்டர் செய்வதுமாதிரி திருமணம் என்றால் எந்த இடத்தில் எந்த ஊரில் திருமணம் நடக்கிறதோ அந்த ஊர் கிராம அதிகாரிகள் மூலம் அத்திருமணம் ரெஜிஸ்டர் செய்யபபடவேண்டும். இவர்களுக்கு இந்தத் தேதியில் திருமணம் ஆகியிருக்கிறது. என்று ரெஜிஸ்டர் செய்கிற முறையை அமல்படுத்துவதன் மூலம் கோர்ட்டில் நடைபெறுகிற பலவிதமான வழக்குகளை தவிர்க்க முடியும், அதனால் ஏற்படுகிற சிக்கல்களையும் நாம் தவிர்க்கமுடியும்

அதே நேரத்தில் பத்திரம் பதிவு செய்யும்போது பழைய பத்திரங்களை வாங்கிப் பயன் படுத்தும் முறை இருக்கிறது. ஒருவன் கந்தசாமி என்பவன் நிலம் வாங்குகிறான். பத்திரம் கந்தசாமி என்ற பெயரில் வாங்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். பத்திரம் எழுதி நான்கு மாதம் ஆகிறது ரெஜிஸ்டர் செய்ய. அதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. அதை வேறு ஒருவர் வாங்க நினைக்கும்போது மற்றவர்கள் பெயரால் உள்ள பத்திரங்களை வாங்கி, பின்னால் வாங்கியிருந்தாலும் முன் தேதி போட்டு பத்திரங்கள் எழுதும் நிலை இருப்பதால் கோர்ட்டுகளில் வழக்குகள் அதிகமாகின்றன. ஆகவே, எழுதப் படுகிற பத்திரங்கள் யார் சொத்தை வாங்குகிறார்களோ அவர் பெயரில் பத்திரம் இருக்கவேண்டும் என்ற கட்டாயத்தை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். கூட்டுறவுத் துறை பற்றி சொல்லுகிற போது, இதற்கு முன்னால் ஒரு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஓர் அதிகாரி தவறு செய்கிறார் என்றால், மிஸ்- அப்ராப்பிரியேஷன் செய்கிறார் என்றால் இந்த கூட்டுறவுச் சட்டத்தில் இருக்கிற நிலைமைப்படி The President is the ex-officio Treasnry. என்ற முறையில் யார் தவறு செய்தாலும் அந்தத் தலைவர் கோர்ட்டுக்குச் சென்று 409 ஐ.பி.சி.யின் கீழ் அந்த வழக்கைச் சந்திக்கவேண்டியிருக்கிறது. அதேபோல் அந்தத் தலைவர் கையெழுத்து போட்டு கூட்டுறவு சொஸைட்டியில் பணம் கையாடல் செய்யப்பட்டிருந்தால் பஞ்சாயத்து மெம்பர்கள் என்று ஐந்து பேர்கள் இருக்கிறார்கள், அதில் கையெழுத்து வாங்குகிறார்கள். அவர்கள் கட்டாயம் பலியாகவேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, கூட்டுறவுச் சட்டத்தில் சில திருத்தங்கள் தேவை.

அதுபோன்று கூட்டுறவுச் சட்டத்தில் இருக்கிறபடி ஒரு கூட்டுறவு சங்கத்தில் ஒரு ரூபாய் பணத்தைக் கட்டி மெம்பராகிவிட்டால், பின்னால் ஏதோ காரணத்தால் நஷ்டம் ஏற்பட்டால் சொஸைட்டியை மூடுகின்ற நேரங்களில், சட்டத்தின் மூலம் ஒரு ரூபாய் கட்டி அந்த சொஸைட்டியில் மெம்பராக இணைந்துக் கொண்டதின் காரணமாக—அந்த சொஸைட்டிக்கு ஏற்பட்ட இழப்பை சரிகட்டுவதற்கு அந்த மெம்பருடைய சொத்துக்களி

லிருந்தும் வசூலிக்கக்கூடிய நிலைமை வருகின்றது. இந்த நிலைமையைப் போக்குகின்ற அளவில் சட்டத்தை திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத்துறையைப் பொறுத்தளவில், மலைஜாதி மக்களைப் பொறுத்தவரையில், வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் அந்த பழங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ரெவின்யூ பட்டாக்கள் என்று 30, 40 வருடங்களாக பட்டாக்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பின்னால் இந்த இடங்களை பாரஸ்ட் பட்டாக்கள் என்று மாற்றப்படுகிறது. இதன் காரணமாக ரெவின்யூ பட்டாக்களிலிருந்து அந்த மலைவாழ்மக்களை வெளியேற்றுகின்ற கொடுமையான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து பல்வேறு வழக்குகள் கோர்டுகளில் இருக்கின்றன. பல வழக்குகளை கோர்ட்டுகளில் இந்த மககள் சந்திக்கவேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் வன இலாகாவை சேர்ந்தவர்கள் அந்த நிலங்களில் சந்தனச் செடிகள், போன்ற செடிகளை வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள், இதற்குத் தப்பித் தவறி இதில் விவசாயம் செய்து கொண்டிருக்கின்றவர்கள் தடுத்தால் அவர்கள் மீது வழக்குகளைப் போடுகிறார்கள். இது போன்ற நிலைமைகள் இருப்பதால் ஏராளமான ரிப்ரசென்டேஷன்கள் பாரஸ்ட் ஆபீஸர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. கலெக்டர்களிடத்திலும் வந்துகொண்டிருக்கின்றன. ஏதாவது ஜெனூயின் கேஸாக இருந்தால் இதில் ரெவின்யூ பட்டாவாக இருப்பதற்கு எக்ஸம்ஷன் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்

மேலும் டீ-பாரஸ்டேஷன் என்றிருக்கின்ற இடங்களை ஏலத்தில் விடுகிறார்கள்......

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள், மலைவாழ் மக்களைப்பற்றி கருத்தைச் சொன்னார்கள். மலைஜாதி மக்கள் வைத்திருக்கின்ற நிலங்களை அல்லது அவர்களது சொந்தமான பட்டா நிலத்தையோ யாராவது அபகரிப்பார்களேயானால் அதை தடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஒரு சட்டத்தை கொண்டுவர யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி டீ-பாரஸ்டேஷன் நடைபெறும் காலத்தில் காட்டில் உள்ள பகுதிகளை '' கூப் '' என்று மிகுந்த செல்வாக்கு உடையவர்கள் எடுத்து அவர்களுக்கு அதிகாரிகள் உடந்தையோ அல்லது உடந்தை இல்லையோ இதன் கீழ்



அதிகமான இடங்களை எடுத்து தங்கள் கீழ் வைத்துக்கொள்கிறார்கள். இதன் காரணமாக இந்த இடங்களிலிருந்து ஏராளமான சந்தனக்கட்டைகள் திருடு போகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபை நடவடிக்கைகளை 7 மணிக்காவது முடிக்க வேண்டும். தயவு செய்து சிக்கிரமாகப் பேசி முடித்துக்கொண்டால் நல்லது.

திரு. ரா. மார்க்கபந்து : வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக முக்கியமாக செங்கம், போளூர், குடியாத்தம் இந்த மூன்று தாலுகாகளிலும் வாழ்கின்ற மக்கள், இவர்கள் மலையை ஒட்டி வாழ்கின்ற மக்கள், தங்களுக்கு க்ராப் ப்ரொட்டக்ஷன் காக '' கன் '' லைசென்ஸ் வேண்டும், கேட்டால் லைசென்ஸ் கொடுப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் செல்ப் ப்ரொட்டக்ஷன் அல்லது பெர்ஸனல் ப்ரொட்டக்ஷன் என்று '' கன் '' லைசென்ஸ் வேண்டும் என்று கேட்டால் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஜவ்வாது மலையில் உலகில் எங்குமே இல்லாத ஸ்பெஷல் ஸ்பீஸஸ் என்ற வகையில் இருந்து கொண்டிருக்கிறது. இதை நாம் பாதுகாக்க வேண்டும். ஜவ்வாது மலையில் அமிஞ்சி பாரஸ்ட் என்ற பகுதியை வனவிலங்கு சரணாலயமாக ஏற்படுத்துவது அந்தப் பகுதிக்கு மிகவும் பெருமையாக இருக்கும். அங்கு இருக்கின்ற ஸ்பெஷல் ஸ்பீஸஸ்-ஐ காப்பாற்றுவதில் இந்த அரசு முக்கிய கவனம் செலுத்துகின்ற வகையில், அங்கு வனவிலங்கு சரணாலயம் அமைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 6-40]

திருமதி சுப்புலட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மான்யக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைக் கூற வாய்ப்புத் தந்த தங்களுக்கும் என் நன்றியைக் கூறி இந்தக் கூட்டுறவு மான்யத் துறை மீது என்னுடைய சில கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

இந்த அரசு வேளாண்மை பெருமக்களுக்கு வேளாண்மை செய்யவும், விலைபொருள் விற்பனைக்கும், நுகர்பொருள் வழங்கவும் நீண்டகாலக் கடன்கள் வழங்கவும், நகர, மற்றும் கிராமக் கைத் தொழில்களை ஊக்குவிக்கவும் எனப் பல வகைகளில் கூட்டுறவுகள்

வாயிலாக நிதி வசதிகள் அளித்து வருவதையும், அந்த நிதி வசதிகளின் அளவைத் தொடர்ந்து உயர்த்தி அளித்துவருவதையும் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, சிறு விவசாயிகள், நலிந்த பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் அதிக அளவில் நிதி உதவி கிடைக்கச் செய்யும் முயற்சிகளைப் பாராட்டும்போது; ஐந்து ஏக்கர் நிலமுடையவர் சிறு விவசாயி என மொத்தமாக குறிப்பிடுவது எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டு முழுவதற்கும் பாசன வசதியுடைய பகுதிகளுடன், இரண்டாண்டுக்கு ஒரு முறை பாசன வசதி கிடைக்கும் பகுதியையும், நிலத்தடி நீர் வளமுள்ள பகுதியையும், எங்கள் கோவை மாவட்டம் போன்ற நிலத்தடி நீருக்கே மிகுந்த சிரமப்படும் பகுதியையும், இப்படி எல்லாவற்றையும் சேர்த்து ஒரே அளவிலே எடுத்துக்கொண்டு, ஐந்து ஏக்கர் நிலமுடையவர்களை சிறு விவசாயிகள் என்று குறிப்பிடுவது பொருந்தாது. அந்தந்தப் பகுதிக்கேற்ப சிறிய விவசாயிகள் என்று கருதப்படுகிறவர்களுக்கு நில அளவு குறிப்பிடப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி, வெள்ளக் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய கடன்களைத் தவணை முறையிலே செலுத்தலாம் என்று அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதைப் பாராட்டுவதோடு, வசூலைத் தள்ளி வைக்கவும், மாற்றிக் கொடுக்கவும் மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி உதவி அளித்திட மத்திய அரசு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை கடன்கள் வசூலைப் பொறுத்தவரை நிலைமை சரியில்லை என்பதையும், இந்த ஆண்டில் மேலும் தவணை தவறிய தொகையின் சதவீதம் அதிகமாகும் என்பதைக் கருத்தில்கொண்டு, தேர்தல் நடத்தும்வரை அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய செல்வாக்குள்ளவர்களைக் கொண்டு ஆலோசனைக் குழுக்களை அமைப்பதன் மூலம், வசூல் செய்யும் பணிக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய வங்கிகளைப் பொறுத்தவரையில், " ஏ " வகுப்பில் வரவேண்டும் என்பதற்காக, செயலிழந்த கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கலைக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, மற்றும் மாவட்ட, பிரதம விற்பனை சங்கங்களின் பணிகள் தேவைக் கேற்பவும், தரமானதாகவும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு



கிறேன். விவசாயிகளுக்குத் தேவையான காலங்களில், தேவையான உரங்களை வழங்கினால், அது பயனுள்ளதாக இருக்கும். ஆனால், அப்படி வழங்க போதிய சிரத்தை எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே, விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, இந்தத் துறை பூரண சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அனைத்திந்திய புகழ்பெற்ற சிந்தாமணி சிறப்பு அங்காடியிலே வாங்குவதிலும், விற்பனை செய்வதிலும் போதுமான அக்கறை இல்லாமல் இருப்பதன் காரணமாக, வெளி சந்தையில் இருக்கின்ற விலையைவிட, சிந்தாமணிக் கூட்டுறவு அங்காடியின் விலை அதிகமாகக் காணப்படுகின்றது. அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களை, விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களோடு இணைப்பது மட்டுமல்லாது, கடன் வழங்கு சங்கங்களையும் சேர்த்து, ஒருங்கிணைந்த அமைப்பாக செயல்பட, தகுந்த திட்டம் வகுப்பது மிகச் சிறப்புடையதாக இருக்குமென்றும், தற்போதுள்ளபடி தன்னிச்சையாக சங்கங்கள் செயல்படுவதால், முரண்பட்ட நடவடிக்கைகள் காரணமாக உரிய பயன் கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திட்டங்களையும், திட்ட முறைகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவது என்று வரும்போது, அதிகாரிகளின் பிடியில் இல்லாமல், அதிகாரப் பற்றற்ற தூய்மையான பொதுநல ஊழியர்களைப் பொறுப்பு உள்ளவர்காளக ஆக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம், அதிகாரிகளே பெரும் பொறுப்பு ஏற்கும் நிலை கூட்டுறவு இயக்கத்தின் ஜனநாயகத் தன்மையையே மாற்றிவிடும் என்பதுடன், ஊழல்களும், தவறுகளும், முறைகேடுகளும் பரவலாகவும், அதிகாரிகளுடைய துணையுடனும் பரவி இயக்கத்தைத் திசை திருப்பிவிடும் என அஞ்சுகிறேன்.

எடுத்துக்காட்டாக, கூட்டுறவுத் துணை அதிகாரிகள் மேற்பார்வையில் இருந்த வால்பாறை கூட்டுறவு பண்டகசாலையில் 12 இலட்சம் ரூபாய்களுக்கான முறைகேடுகள், காமதேனு சிறப்பங்காடியில் 35 இலட்சம் ரூபாய்களுக்கான முறைகேடுகள், காவேரி சிறப்பங்காடியில் 10 இலட்சம் ரூபாய்களுக்கான முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. கோவை சிந்தாமணியில் தனி அதிகாரி காலத்தில், ஆந்திராவிலிருந்து 40,000 மூட்டை அரிசி வாங்கப்பட்டு, அவைகள் கெட்டுப்போன நிலையிலே, இந்த அரிசி மூட்டைகளை எல்லாம் மிகுந்த குறைந்த விலைக்கு வால்பாறைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு போக்குவரத்துச் செலவுகூட இல்லாமல், விற்கப்பட்டு இருக்கிறது. இதனால், சிந்தாமணி அங்காடிக்கு ஏகப்பட்ட ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி சுப்புலட்சுமி] [1978 மார்ச் 2

1976-ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களிலே நடைபெற்ற முறைகேடுகளைப் பற்றி விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு, பொதுப்பணியாற்ற வந்தவர்களையும், அரசியல் சார்புடையவர்களையும் மட்டுமே குற்றம் சாட்டியிருக்கிறதே தவிர, இந்தக் குற்றங்களைச் செய்வதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளைப் பற்றிய உண்மைகளை மறைத்துவிட்டது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மத்திய கூட்டுறவு வங்கிச் செயலாளர் மீது எவ்வளவோ ஊழல் புகார்கள் கொடுத்தும், காவல்துறை அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்தும் கூட்டுறவுத்துறையால் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வந்தார். இப்படிப்பட்ட முறையை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த பிறகு, அமைச்சர் அவர்கள் பெருமுயற்சி காரணமாக கூடுதல் பதிவாளர் நேரில் சென்று நேரடி விசாரணை செய்து வந்ததாகத் தெரிகிறது. கோவை மாவட்ட கூட்டுறவு வங்கியில் புரையோடிவிட்ட இந்த ஊழலைக் களைந்து கோவை கூட்டுறவு வங்கியை ஆரோக்கியமான நிலைமையாக உருவாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு சிறு குற்றங்களுக்காக கூட்டுறவு ஊழியர்களை கூட்டுறவு சட்ட விதி 70ன்-கீழ் ஆண்டுக் கணக்கில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு வருவதைத் தவிர்த்து குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்குள்ளாக அவர்கள்மீது இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகளை விசாரித்து அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டு திரு. ஒ. சுப்பிரமணியன் பேச அழைக்கப்பட்டார்.)

திரு. ஒ. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் வேகமாக முன்னேறிக் கொண்டு வந்தாலும் கடன் வாங்கிய விவசாயிகள் தவணைக் கடன்களுக்காக பல தொல்லைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக, தண்ட வட்டி போடுவதை அறவே ஒழித்தால்தான் இந்த நாட்டு விவசாயிகள் அரசுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். தனிப்பட்ட லேவாதேவிக் கடன்களை சட்டங்கள் மூலம் திருப்பிச் செலுத்தாமல் இருக்க நிவாரணம் அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் கூட்டுறவுக் கடன்களால் விவசாயிகளுக்கு மிகத் தொல்லை ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, கூட்டுறவை விட தனிப்பட்டவர்களிடத்தில் வாங்கினாலே தேவலாம் என்ற மனோபாவம் மக்களுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தண்ட வட்டி போடுகிற முறையை எப்படியாவது கண்டிப்பாக ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு. ஒ. சுப்பிரமணியன்]

கிராமங்களில் பால் சொசைடிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்குப் பல நடைமுறைகள் இடைஞ்சலாக இருக்கின்றன. அந்த நடைமுறைகளை எல்லாம் நீக்கிக் கொடுத்தால் கிராமங்களில் உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும். குறிப்பாக சொசைடிகள் மூலம் விற்கப்படுகிற பாலுக்கு லிட்டர், ஒன்றுக்கு 1-30 பைசாவுக்குத்தான் விவசாயிகள் கொடுக்க முடிகிறது. ஆனால் தனியாரிடத்திலே விற்கும்போது இரண்டு ரூபாய்க்கு விற்கும் நிலைமை இருக்கிறது. இந்த விலை வித்தியாசத்தை நீக்கினால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். கிராமத்தில் உப தொழில் பால் பண்ணைதான். அதை ஊக்குவிக்கும் நடவடிக்கை இருப்பதாகத் தெரியவில்லை.

கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புப் புத்தகத்தில் 9-வது பக்கத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 12 கோடி 18 லட்சம் ரூபாயும், விவசாயம் அல்லாத சொசைடிகளுக்கு 23 கோடி 76 லட்சமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பால் சொசைடிகளுக்கு 55 லட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கிராம மக்களுக்கு ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையில் அதிகமான அளவில் அந்தப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கார் ஸ்தாபனங்கள் நஷ்டம் அடைந்திருக்கும்போது கூட்டுறவு வங்கிகள் மட்டும் நிச்சயமாக லாபம் அடைந்திருப்பதாகக் கணக்குகள் காட்டுகின்றன. 1974-75 ஆம் ஆண்டு 186.11 லட்சம் லாபம்; 1975-76 ஆம் ஆண்டு 241.90 லட்சம் லாபம். எவ்வளவு அதிகமாக, கடுமையாக வட்டி வசூலித்திருக்கிறார்கள் என்ற நிலையைத்தான் இது காண்பிக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட மாவட்டங்கள். வசூல் கெடுபிடியைப் பார்க்கும்போது கொடுத்திருக்கிற புத்தகத்தில் 16-வது பக்கத்தில் நிலுவை விவரத்திலே தர்மபுரியில் 30-6-75 வரை 45 சதவிகிதம்; 30-6-76 வரை 40 சதவிகிதம் என்று இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 30-6-75-ல் 9.9 சதவிகிதம், 30-6-76ல் 13.2 சதவிகிதம் என்று இருக்கிறது. 30-6-1977-ல் 14.8 சதவிகிதம் என்று இருக்கிறது. ஆகவே, வசூல் கெடுபிடியாக இருக்கிறது என்பது தெரிகிறது. வறட்சி மாவட்டங்கள் என்று ஒப்புக் கொண்டும் வசூல் கெடுபிடியாக இருந்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரம் காட்டுகிறது. தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை போன்ற மாவட்டங்கள் எல்லாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்

டத்திற்குப் புயல் வெள்ளத்தால் பாதிப்பு இல்லையா ? முதல்வர் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் மாவட்டம் என்று சலுகை கொடுத்திருக்கிறார்கள் என்று அடுத்த மாவட்டக்காரர்கள் சொல்லுவார்களோ என்று விட்டு விட்டார்களா ? என்று தெரியவில்லை. இந்த மாவட்டத்திற்கும் நிச்சயமாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-50)

வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதால் தனியார்களுடைய கமிஷன் கடைகளிலேதான் அவர்கள் விற்று பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கட்டிங் பெடரேஷன் வெல்லத்தை வாங்க ஏற்பாடு செய்து அவர்களுக்கு அதன் மூலமாக நியாயமாக விலை கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உ. ரோ. எட்மண்ட்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே இந்த அவையிலே நான் எடுத்து வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொன்னதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நான் ஒவ்வொரு மானியமாக இங்கே நீண்ட நேரம் உரையாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். காரணம், இன்றைய தினம் விவாதத்திலே கலந்து கொண்ட ஏறத்தாழ 15 மாண்புமிகு உறுப்பினர்களில் பத்திரப் பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து மாத்திரம்தான் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வழக்கறிஞர் என்ற காரணத்தால் அந்தக் கருத்தை இந்த மன்றத்திலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கூட பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

பத்திரப் பதிவுத் துறையினுடைய வருங்கால ஓர் ஆண்டு செயல்முறைக்கான விளக்கக் குறிப்பை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிகத் தெளிவாக நான் ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கின்ற காரணத்தாலே அடுத்து வருகின்ற ஓராண்டு இந்தத் துறையிலே என்ன என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க இருக்கிறது என்று மீண்டும் ஒரு முறை திருப்பி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.





அந்த அடிப்படையிலே பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையைப் பொறுத்தமட்டில் திரு. மார்க்கபந்து அவர்கள் இங்கே எழுப்பிய ஒரே ஒரு பிரச்சினைக்கு பதில் சொல்லிவிட்டு என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அரசின் சார்பில் இன்றைய தினம் பத்திரப் பதிவு கட்டணத்தை திருத்தியமைப்பதற்கான ஆலோசனை அரசினுடைய ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. அரசு ஒரு சிரிய முடிவை எடுக்கிற நேரத்திலே அதை நிச்சயமாக அறிவிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையைப் பொறுத்தமட்டிலும் கூட வருகின்ற ஓராண்டுக் காலத்திற்கு கூட்டுறவுத் துறையில் செய்ய இருக்கின்ற முற்போக்கான முறையிலே செய்யக் கூடிய பணிகளைப் பற்றி மிக விளக்கமான முறையிலே உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே ஏற்கனவே அரசின் சார்பிலே தெளிவு படுத்தி இருக்கிறோம். அதை மீண்டும் ஒரு முறை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லி நேரத்தை வீணாக்குவது உசிதமாக இருக்காது என்ற அடிப்படையில் கூட்டுறவுத் துறையின் மீது தங்களுடைய அரிய கருத்துக்களை வழங்கிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு நான் விளக்கம் சொல்வதன் மூலம் என்னுடைய உரையை நான் அதையும் குறைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்களால் பல்வேறு கருத்துக்கள் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில் எடுத்துச் சொல்லப்பட்டாலும் முக்கியமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் அக்கறை காட்டியது எல்லாம் கூட்டுறவுத் துறைக்குண்டான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கையையும், கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கப்படுகிற கடன்களுக்கு வட்டி விகிதம் அதிகமாக இருக்கிறது. அதை குறைக்க வேண்டும் என்பதையும், காலம் கடந்த கடன்களுக்குத் தண்ட வட்டி வசூலிப்பதை நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் விளக்கம் சொல்வதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக இந்த அரசினுடைய எண்ணங்களைப் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அவற்றிற்கு மாத்திரம் பதில் அளிப்பது நலமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

முதலிலே கடன்களை ஒத்திவைக்க வேண்டுமென்று பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு

[திரு. க. உரொ எட்மண்ட்] [1978 மார்ச் 28

உறுப்பினர் சிவசாமி அவர்கள்கூட உரையாற்றும்பொழுது இதற்கு முன் இப்படிப்பட்ட நிலைமைகள் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நேரத்தில் . மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரையின்மேல் மத்திய அரசாங்கத்திலே ஒரு குழு நியமிக்கப்பட்டு தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகாலம் வறட்சியால், இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் அவர்கள் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்திருப்பதாக சிவசாமி அவர்கள் கூறினார்கள்.

குழு ஒன்று அமைக்கப்பட்டது என்பதிலேயும், அந்த குழு கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று பரிந்துரையைக் கொடுத்தது என்பதிலேயும் எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் குழு கொடுத்த பரிந்துரை எந்த மாநிலத்திலேயாவது ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது அது செயல்முறைப் படுத்தப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை இந்த அவையிலே எடுத்துக்கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதிலே இருக்கின்ற பல்வேறு சிக்கலான பிரச்சினைகளைப்பற்றி இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் நல்லமுறையிலே அறிந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் கடனில் பாதித்தொகை. நம்முடைய ரிசர்வ் வங்கியின் மூலம் பெறப்பட்டு கொடுக்கப்படுகிறது என்பதை நான் சொல்லாமலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவது என்பது மத்திய அரசாங்கம் அதற்குச் சம்மதம் தெரிவித்தால் அதை நாம் செய்ய முடியுமே ஒழிய மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலோ அல்லது ரிசர்வ் வங்கியினுடைய ஒப்புதலோ இல்லாமல் நாம் அதைச் செய்ய முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அந்த அடிப்படையிலேதான் இன்றையதினம் விவசாயிகளுக்கு இருக்கின்ற பல்வேறு சங்கடங்களை இந்த அரசு உணரவில்லை என்று கூறுவதற்கில்லை. தொடர்ந்து வறட்சியாலோ அல்லது இயற்கையின் சீற்றத்தினாலோ விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லும்போது இந்த அரசுக்கு நிச்சயமாக முரண்பாடான கருத்துக்கள் இல்லை என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



1978 மார்ச் 28] [திரு. க. உரொ. எட்மண்ட்]

ஆனால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசு எந்த அளவிற்குத் தன்னால் இயன்ற நன்மைகளை அல்லது சலுகைகளைச் செய்ய முடியுமென்று நான் சொல்ல விரும்புகின்ற நேரத்தில், கடன்களை ரத்து செய்வது முடியாத காரியம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்த மட்டிலே இதற்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தெந்த வகையிலே நன்மையான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்க முடியுமோ அந்தச் சூழ்நிலைகளை அரசு செய்து கொடுப்பதில் கொஞ்சம்கூடத் தயங்கவில்லை என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தொடர்ந்து விவசாயம் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் குறுகிய காலக்கடனை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு வழி முறைகள் இருக்கின்ற காரணத்தினால் அவற்றை மத்திய காலக் கடனாக இந்த அரசு, இந்தத் துறை மாற்றியிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையிலே அறிவார்கள்.

தண்டத் தீர்வை வசூக்கப்படுவதை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதுவும் இந்தத் துறையின் அதிகாரவரம்பிற்குள்ளே இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிந்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஏற்கனவே இந்த அவையிலே கேள்வி நேரத்தின்பொழுது ஒருகேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது, தண்டத் தீர்வை எப்பொழுது வசூலிக்கப்படுகிறது என்றால், குறுகியத் காலக் கடன் நடுத்தரக் கால்க்கடனாக மாற்றப்பட்டு. கால வரம்பிற்குள் விவசாயிகள் கடனைச் செலுத்தவில்லை என்றால் எந்தக் காலத்திற்கு அவர்கள் கடன்களைச் செலுத்தாமல் இருக்கிறார்களோ அந்தக் காலத்திற்கு மட்டும் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. வேறு வழியில்லை என்பதை இந்த அவையிலே தெளிவாக்கி இருக்கிறேன்.

அந்த அடிப்படையிலே குறுகிய காலக் கடன்கள் நடுத்தரக் காலக் கடன்களாவும், நடுத்தரக் காலக் கடன்கள் இன்னும் சிறிது காலத்திற்கு நீடித்துக் கொடுக்கின்ற அதிகாரம்தான் இந்தத் துறைக்கு இருக்கிறதே தவிர. கொடுக்கப்பட்ட கடன்களை அல்லது அதற்கு வசூலிக்கப்பட வேண்டிய வட்டியை ரத்து செய்வது என்பது இந்தத் துறையாலே, அரசாலே முடியாது என்பதைஇந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இல்லை என்றாலும் ஒரு கருத்தை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[இரவு 7-00].

கடந்த வாரம் வெளியிடப்பட்ட முரசொலி பத்திரிகையிலே கூட ஒரு செய்தியைப் போட்டிருக்கிறார்கள். நான் இந்தச் செய்தியைப் போட்டதற்காகக் கூட வருத்தப்படவில்லை. ஆனால், எந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்களுக்கு அந்தச் செய்தியைப் போடுவதற்கான தகுதி இருக்கிறது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே இல்லையென்றாலும், அவர்கள் எண்ணிப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த வாரம், 25-ந் தேதி நாளிதழில் ஒரு செய்தியைப் போட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை எடுத்துக் காட்டி, 'வறட்சியால் ஒத்திவைக்கப்பட்ட கூட்டுறவுக் கடன்களுக்கு வட்டி வசூல் நீக்கம் இல்லை' என்ற தலைப்பைப்போட்டு, கழகத்தவர் கோரிக்கையை அமைச்சர் நிராகரித்தார் என்று திராவிட முன்னேற்றக் கழக அதிகார பூர்வமான, முரசொலி ஏட்டிலே ஒரு செய்தியைப் போட்டிருக்கிறார்கள். 1967 முதல் 1976 வரை தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இந்த 9 ஆண்டுகாலத்தில், விவசாயிகளுக்கு, எவ்வளவு தொகையை அவர்கள் நீக்கிச் செய்து கொடுத்தார்கள். அல்லது ரத்து செய்து கொடுத்தார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நானும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளைக் கேட்ட நேரத்தில், அப்பேர்பட்ட அதே சூழ்நிலைகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட விவசாயிகளுக்கு ஏற்பட்டிருந்தாலும், அன்றையதினம் அதே கோரிக்கை, இதே மன்றத்திலே வைக்கப்பட்டாலும்கூட, அப்பேர்பட்ட கடன்களையும் அல்லது கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டிகளையும் ரத்து செய்ததாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் வரலாற்றிலேகூட எந்தவிதமான சூழ்நிலையும் அமையவில்லையென்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்த நான் இதைக்கூற முன் வரவில்லை. செய்ய முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்கிறது, சூழ்நிலை இருக்கிறது. அதே சூழ்நிலைதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதை மெத்தப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



அந்த அடிப்படையிலே இன்றையதினம் குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. எங்கெங்கே விவசாயம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள், அனாவாரி சர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கவேண்டிய நிலையிலே கேட்கிறார்களோ, அவர்களுக்கான கடன்கள் இன்றையதினம் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்பது மாத்திரமல்ல, பொதுவாக, அரசாங்கத்தின் சார்பில் கடன்களை வசூலிப்பதில் மிகவும் மெதுவாக அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டுமென்றும் ஜப்தி போன்ற நடவடிக்கைகளிலே அதிகாரிகள் ஈடுபடக்கூடாது என்கின்ற திட்டவட்டமான உத்தரவை இந்த அரசு அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறது என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அவையிலே எடுத்துச் சொன்னதைப் போல, இந்த நேரத்திலேயும் திருப்பிச் சொல்வதன்மூலம், அதை உறுதிப்படுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தாற்போல், தேர்தலை நடத்த வேண்டுமென்று இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள்கூட, அந்தக் கருத்தை எடுத்துச்சொல்லி, தேர்தலை கூடிய விரைவிலே நடத்தப் போவதாக நான் இந்த அவையிலே நீண்ட நாட்களுக்கு முன்னால் ஒரு அறிவிப்பைக் கொடுத்ததாகவும், ஆனால், அதை இன்னும் செயல்படுத்தவில்லையென்றும் அவர்கள் குற்றம்சாட்டிப் பேசினார்கள்.

இந்த அவையிலே இந்தப் பிரச்னை கடந்த மானியக் கோரிக்கையிலே எழுப்பப்பெற்றப்பொழுது கூட அரசின் சார்பில் நான் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில், இந்த அரசைப் பொறுத்தவரையில், ஜனநாயகத்திலே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதிலே யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை. கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை இந்த அரசு நிச்சயமாக நடத்தும். நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தான் இந்த அரசு இருக்கிறது.

ஆனால், அப்பேர்ப்பட்ட தேர்தலை நடத்துவதற்கு முன்னால், மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு, கூட்டுறவு சங்கங்களிலே அமைக்கப்படுவதற்கு முன்னால், இதற்கு முன்னால் நடைபெற்ற தவறுகள் மீண்டும் நடைபெறாதவண்ணம் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தைத் துரிதமாகத் திருத்தி, சட்டம் திருத்தப்பட்ட பின்னால், கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை நடத்துவோம் என்று அறிவித்தேனே தவிர, சட்டத்தைத் திருத்தாமலே தேர்தலை நடத்துவோம் என்று அன்றைய தினம் நான் அறிவிக்கவில்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சட்டத்தைத் திருத்துவோம் என்று நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில், இன்றைய தினம் இந்த அரசு சட்டத்தைத் திருத்துகின்ற முயற்சியிலே ஈடுபாடு கொண்டு, இது துறையின் மட்டத்திலே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று முடிவுற்று, இன்றையதினம் சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. திருத்தப்பட்ட சட்டம் வடிவம் பெற்று, அது அரசினுடைய ஒப்புதலைப்பெற்று, பின்னுலே நிச்சயமாக இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு வைக்கப்படும், பார்வைக்கு வைக்கப்படும்.

அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னுல், எவ்வளவு துரிதமாகக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை இந்த அரசு நடத்த வேண்டுமோ அவ்வளவு விரைவிலே இந்தத் தேர்தலை நிச்சயமாக இந்த அரசு நடத்தும் என்ற உறுதிமொழியை அரசின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்த அளவுக்கு இந்தக் கூட்டுறவுத் துறையில் இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எந்த அளவுக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பின்னுல் இந்தத் துறையின் மீது நம்பிக்கை வந்திருக்கிறது என்பதை என்னுலே புரிந்து கொள்ள முடிகிறது.

ஆகவேதான் இந்தத் துறை நல்ல முறையிலே வளர்ச்சி பெறவேண்டும், இந்தத் துறை தூய்மையாக, நாணயமாக நாட்டிலே நடைபெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இந்த அவையிலே எடுத்துக் கூறியிருக்கிருர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மெத்தப்பணிவோடு ஏற்றுக் கொள்ளக் கடமைப் பட்டவனுக இருக்கிறேன்.

அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல அரிய ஆலோசனைகள் அப்போதைக்கப்போது நிச்சயமாக பரிசிலிக்கப்பட்டு தகுந்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய நேரத்தில் நிச்சயமாக எடுக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

வட்டி விகிதத்தைப் பற்றிப் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொன்னுர்கள். அந்த அடிப்படையிலே அரசு இன்றையதினம் நல்ல முறையில் ஆலோசனை செய்து நம்முடைய விவசாயிகளுக்கு இனிப்பான செய்தியை அறிவிக்க இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை, வட்டி விகிதத்தைப் பொறுத்த



மட்டில், இந்த அரசு ஏற்றுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்கத்தக்க நல்லதொரு அறிவிப்பை இந்த அவையிலே கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டவனுக் இருக்கிறேன்.

அந்த அடிப்படையிலே இனிமேல் வருகிற கூட்டுறவுத் துறை ஆண்டு முதற்கொண்டு எல்லா விவசாயிகளுக்கும் (for all farmers) உணவுப் பொருள் உற்பத்தி செய்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் 12·6 சதவிகிதம் என்று இப்போது இருக்கின்ற வட்டியை 12 சதவிகிதமாக குறைப்பது என்று இந்தத் துறை முடிவெடுத்திருக்கிறது. (கைதட்டல்—ஆரவாரம்).

அதைப்போல சிறிய சிறிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது எல்லா விவசாயிகளுக்கும் பொருந்தும். வசதி படைத்தவர்களுக்கு இப்பேர்பட்ட சலுகைகளை அதிகமாக கொடுக்கத் தேவையில்லை என்ற அடிப்படையிலே (குறுக்கீடு— திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்) நீங்கள் கம்யூனிஸ்டுகள் சார்பிலே எல்லோருக்கும் இந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னல் நாங்கள் அதைப்பற்றி ஆலோசிக்க தயாராக இருக்கிறோம். நாட்டிலே இருக்கிற வசதி படைத்த விவசாயிகளுக்கு 12·6 சத விகிதம் என்ற வட்டி விகிதத்தை 12 சத விகிதம் ஆக குறைத்தால் போதும்.

சிறு விவசாயிகள் (Small farmers) என்று கருதப்படுகின்ற உணவுப் பொருள் விளைச்சலை செய்கின்றவர்கள், அவர்களுக்கு இப்போது 12·6 சத விகிதம் என்று இருக்கிற வட்டி விகிதத்தை 10·5 சத விகிதம் என்று குறைப்பது என்று இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்—பலத்த கைதட்டல்) மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் இப்போது இதை உற்சாகமாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 12.6 சத விகிதம் என்பதை ·6 சத விகிதத்தைக் குறைத்திருக்கிருர்கள். இது ரொம்பக் குறைச்சலானது. சிறிய விவசாயிகள் என்று சொல்லும்போது 2½ ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்கள், இது வரவேற்கக்கூடிய விஷயம்தான். இருந்தாலும் முன்னலே 6 சத விகிதம் இருந்தது கொஞ்சம் கொஞ்சமாக 12 சத விகிதம் ஆக உயர்ந்திருக்கிறது. அபராத வட்டியும் சேர்ந்தால் 15 சத விகிதமாக போகிறது. நாங்கள் சொல்வது இன்னமும் குறைக்கலாம். 3 அடிக்கு, 2 அடிக்காக குறைந்தால் நலமாக இருக்கும். அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. போன கூட்டத் தொடரிலேயே சொல்லப்பட்டது. கூட்டுறவுத் திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டு உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மூலமாக நிர்வாகத்தைக் கவனிப்பதற்குண்டான ஏற்பாடு செய்யப்படும் என்று. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், இந்தக் கூட்டத்தொடரிலும் அந்தச் சட்டம் வராது போல் தோன்றுகிறது. இனி அடுத்த கூட்டம் மே, ஜூன் மாதங்களில்தான் வரும். ஜூலையில் இருந்தாவது புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கொண்டு கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(இரவு 7-10.)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இன்னும் இரண்டு அறிவிப்புகளைக் கொடுத்துவிட்டு, மொத்தமாக அவர்களுக்கு பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இதைப்போல், நடுத்தரக் காலக்கடன் (மீடியம் டெர்ம் லோன்) என்று எல்லா விவசாயிகளும் வாங்கக்கூடிய அந்தக் கடனுக்கு இப்போது இருக்கிற 13·8 என்ற வட்டி வீதத்தை 12.5 என்ற வட்டி வீதமாகக் குறைப்பது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

அதைப்போல், நகைக்கடன் மீது இப்போது 16 சத விகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதை 15 சத விகிதம் என்று குறைக்க அரசு முடிவு எடுத்து இருக்கிறது. (ஆரவாரம்).

இவ்வளவுபோதாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே குறைபட்டுக்கொண்டார்கள். பல்லாண்டுக்காலமாக ஏற்றப்பட்டு இருந்த இந்த வட்டி வீதத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட 9 மாத காலத்திற்குள்ளே குறைக்க ஆரம்பித்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுதான் முடிவு என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்கு முன்னால் வட்டி வீதத்தைக் கூட்டிக்கொண்டே போனார்கள். இந்த அரசு வந்த பிறகு தான் விவசாயிகள் மீது அக்கறை கொண்டு அவர்களுக்கு இருக்கும் கடன் சுமையை, வட்டிச் சுமையை எந்த அளவிற்குக் குறைக்கலாம் என்று எண்ணிப் பார்த்து, ஏதாவது அவர்களுக்கு செய்ய வேண்டும் என்று, ஒரு நல்ல எண்ணத்தோடு



முதற் கட்டமாக, அதுவும் பொறுப்பேற்றுக் கொண்ட 9 மாதங்களுக்குள் இந்த அளவிற்கு வட்டி குறைத்து இருக்கிறது. இதற்கும் மேல் கட்டாயமாகச் செய்ய இருக்கிறோம்.

இன்னும் விவசாயிகளுக்கு வட்டி வீதத்தில் எவ்வளவு சலுகை கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு தன்னால் இயன்ற முயற்சிகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல கருத்துக்களை இந்த அரசு நிச்சயமாக ஏற்றுக் கொண்டு, விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகள் நிச்சயமாக கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தவணைக்காலம் ஏற்கெனவே 20 வருஷம் என்று இருந்தது. அதை, குறைத்து ஏழு வருஷம் ஆக்கி விட்டார்கள். இப்போது, ஒரு வருஷம், மூன்று வருஷம், ஏழு வருஷம் என்று தான் இருக்கிறது. அதை 20 வருஷம் ஏற்றித் தருவதற்கு என்ன கஷ்டம் என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் இருந்து விவசாயிகள் பெற்று இருக்கக் கூடிய கடன்களை வசூல் செய்வதற்காக ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று ஒவ்வொரு தடவையும் வலியுறுத்தி வருகிறோம் என்ற அம்சத்தைக் கூறியிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க அம்சம் தான். அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்பை வெளியிட்ட பின்பும், பல்வேறு பகுதிகளில் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கைகளில் மேற்கொண்டு வருகிறார்கள். சில பகுதிகளில் ஜப்திக்கான பி பார்ம் நோட்டீஸ் கொடுக்காமல் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், என்னுடைய தொகுதியில் இருக்கும் சர்க்கார் சாமக்குளம் பஞ்சாயத்தில், காளப்பட்டி என்ற இடத்தில் பி பார்ம் நோட்டீஸ் கொடுக்கப் படாமல் 3–4 விவசாயிகள் மேல் பலாத்காரமாக நடவடிக்கை எடுத்து, அவர்களிடம் இருந்து டிரான்ஸ்சிஸ்டர், ரேடியோ போன்ற சாதனங்களை எடுத்துக் கொண்டு சென்று இருக்கிறார்கள். கிராம விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், அந்த அதிகாரிகள் பின்வாங்கிச் சென்று, இறுதியாக போலீஸ் உதவியோடு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஜப்தி நடவடிக்கைகள் கூடுமான வரையில் எடுக்கக்கூடாது என்று அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவு, தேவையான உத்தரவு ஏற்கெனவே கொடுத்து இருக்கிறோம். இந்த அவையில் பல முறை அதை எடுத்துச் சொல்லியும் இருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட உத்தரவுகள் பல சந்தர்ப்பங்களில் மீறப்பட்டு இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய விவசாயிகள் மீதும் இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இந்த அவையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில் அவற்றை நாங்கள் மறுக்கவில்லை.

ஆனால் அதே நேரத்தில் இந்த அவையில் ஒன்றை நான் மிகவும் குறிப்பாக குறிப்பிடக்கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சொல்கிறபோது, எந்த அதிகாரி தவறு செய்தார் என்ற வகையில் இங்கே குற்றம் சாட்டுகிற உறுப்பினர் குறிப்பிட்டுக்காட்டி சொல்வார்களானால் நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

ஏற்கெனவே இந்தக் கருத்தை பல முறை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். எதற்காக சொல்லியிருக்கிறேன் என்றால், புகார்கள் இப்படி சொல்கிறபோது ஏழை எளிய விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படக்கூடாது, அதே நேரத்தில் வசதி உள்ளவர்கள் இப்படிப்பட்ட உத்தரவுகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாமல், வட்டியைச் செலுத்தாமல், தப்பித்துக்கொள்ளக்கூடாது என்ற வகையில் அரசாங்கம் பொதுவான உத்தரவை அதிகாரிகளுக்கு கொடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இப்பேர்ப்பட்ட உத்தரவுகள் மீறப்படும் இடத்தில், எந்த சந்தர்ப்பத்தில் எந்த அதிகாரி உத்தரவை மீறினார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக, அப்பேர்ப்பட்ட அதிகாரிகள் ஏழை எளிய விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா அல்லது வசதிப் படைத்தவர்களிடம் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா என்பதைப் பரிசீலித்து தகுந்த முடிவு செய்ய அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடன் தவணைகளை நீட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நீண்டகால கடன்களை 7 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையில் திருப்பிச் செலுத்த வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசோடு ஒத்துழைக்கின்ற வகையில் இந்த கூட்டுறவுத் துறையைப் பலப்படுத்துகின்ற முறையில், இந்தக் கூட்டுறவுத் துறையிலே ஏற்கெனவே சென்றமுறை நான் சொன்னதைப்போல, நாட்டிலே இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கு மாத்திரம் அதிகமாகப் பயன்படும் கருத்துக்களைச் சொல்ல வேண்டும், இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஜப்தியை பொறுத்த மட்டில், செக்ஷன் 60 ஆப் தி சிவில் ப்ரொசீஜர் கோடு கையாளப்படுமா என்பதையும், அதோடு கட்டு குத்தகை விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு, செய்யப்படுமா என்பதையும், அறிய விரும்புகிறேன். அதோடு, 'அனாவாரி சான்று ' 2, 3 ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டு கடன் வசூல் தள்ளிப்போடப்படுகிறது ; ஆனால் விளைவு காலத்தில் ஒரே ஆண்டில் 2, 3 ஆண்டுகள் தள்ளிப்போட்டதையும் சேர்த்து வசூல் செய்கின்ற முறை இருக்கிறது. அப்படி இல்லாமல், 10 தவணைகள் என்றிருந்தால், இரண்டு ஆண்டுகள் வசூல் தள்ளிப் போடப்பட்டிருந்தால், 12 தவணைகளில் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா? அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் அதைப்பற்றி பரிசீலித்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஜப்தி நடவடிக்கையைப் பொறுத்த மட்டில் சிவில் ப்ரொசீஜர் கோடு, செக்ஷன் 60 கடைப்பிடிக்க வேண்டுமென்றுதான் விதி இருக்கிறது.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுடைய நிலத்தை ஈடு வைத்து வாங்கியிருக்கிற கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலை இருப்பதால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் முறையிலே அங்கே ஒதுக்கி வைத்திருக்கிற ரிசர்வ் பண்டிலிருந்து ஈடு செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று என்னுடைய கருத்துக்களைச் சொன்னேன். அதற்கு அமைச்சரவர்களின் பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்பேர்ப்பட்ட வழிமுறைகள் இதற்கு முன்னால் கடைப்பிடிக்கவில்லை. இனிமேல் அப்படி ஏதாவது செய்ய முடியுமா என்பதை இந்த அரசு பரிசீலித்துத் தான் முடிவு செய்ய வேண்டியிருப்பதால் உடனடியாக அதற்குப் பதில் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன்.

அடுத்து, வனத்துறையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வனத்துறையை பொறுத்த மட்டில் கூட அடுத்து வருகின்ற ஓராண்டு காலத்திற்கு வனத்துறையிலே இந்த அரசு என்னென்ன முன்னேற்றமான காரியங்களை செய்ய இருக்கிறது என்பதை ஏற்கெனவே அரசின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றையதினம் நம்முடைய மத்திய அரசு உத்தரவுப்படி அல்லது ஆணையின்படி மொத்த நிலப் பரப்பில் 1/3 பங்கு காடுகள் இருக்க வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசு தொடர்ந்து அதைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், நிலப்பரப்பில் 1/6 பங்கு மட்டுமே வனப் பகுதியாக இருப்பதால் மத்திய அரசு உத்தரவை நிறைவேற்றுகின்ற முறையில் இந்த நாட்டில் காடுகளை அதிகமாக வளர்ப்பதன் மூலம் நல்ல இயற்கைச் சூழ்நிலையை உருவாக்கி, இங்கே ஒரு செழுமையான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று வனத்துறை இன்றையதினம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

(இரவு 7-20)

பல்வேறு பகுதிகளிலே இன்றையதினம் புதிய காடுகளை உருவாக்குவதன் மூலமும் அந்தக் காடுகளைப் பேணி வளர்ப்பதன் மூலமும் அந்தத் துறையிலே அரசு எவ்வளவு அக்கறை காட்டிக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்,



நாம் காடுகளை வளர்த்தால் மட்டும் போதாது. காடுகளிலேயிலிருந்து கிடைக்கும் பொருள்களை பயன்படுத்தி பல்வேறு தொழிற்சாலைகளை தமிழகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த அரசு புதிய கொள்கைகளை வகுத்து அந்தக் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் இன்றையதினம் வட ஆர்க்காடு மாவட்டத்திலே கிடைக்கின்ற சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி சந்தன சோப்பு, எண்ணெய், ஊதுவத்தி போன்ற பொருள்களைத் தயாரிக்கின்ற 1½ கோடி ரூபாய் மதிப்பிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குற்றச் சாட்டுக்களைச் சொல்லும்போது விஸ்கோஸ் போன்ற நிறுவனங்களுக்கும் சேஷசாயி பேப்பர் நிறுவனத்திற்கும் மூங்கில் மரங்களைக் குறைந்த விலையில் இந்த அரசாங்கம் கொடுக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். சேஷசாயி காகித ஆலையைப் பொறுத்த மட்டில் முன்னாலே டன் ஒன்றுக்கு ரூ. 22·50 என்ற அளவில் தைல மரக்கட்டைகள் கொடுக்கப்பட்டு வந்தது. அது இன்றையதினம் ரூ. 80 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது, அதைப்போல நம்முடைய விஸ்கோஸ் போன்ற நிறுவனங்களுக்கு கொடுக்கிற பட்டை உரித்த வேட்டில் கட்டைகள் புளு கம் போன்ற காட்டுப் பொருள்களைக்கூட இன்றையதினம் அவர்களுக்கு கூடுதலாக விலையில், கொடுப்பதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பட்டா கொடுப்பது பற்றி இங்கே பல உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். இன்னும் ஏற்கனவே வன்ப்பிரதேசங்களில் பயிர் செய்து அதன்மூலம் வாழ்க்கையினை நடத்துகின்ற மலைவாழ் மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்றும் சொல்லப் பட்டது. இந்த அரசைப் பொறுத்தமட்டில் நிலங்களைப் பயிரிட்டு அதன்மூலம் வாழ்க்கையை நடத்துபவர்களுக்குப் குறைந்த அளவில் அவர்கள் பயிர் செய்வதற்காக கட்டுக் குத்தகைக்குக் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரி

வித்துக்கொள்கிறேன். அந்த இடங்களை பட்டா போட்டுக்கொடுப்பது பற்றி பரிசிலித்த பின்புதான் அதற்கான காரியங்களை இந்த அரசு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பட்டா கொடுப்பது முடியாத காரியம் என்று இந்த அரசு ஏற்கனவே முடிவெடுத்திருக்கிறது. ஏனென்றால் வனத்தை பட்டா செய்து கொடுப்பதனால் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற திட்டங்களைச் செயல்படுத்த முடியாது என்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய வனத்துறையின் வளத்தை, முன்னேற்றத்தைப் பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொருவருக்கும் நான் பதில் சொல்ல முடியாத நிலையில் இருந்தாலும் அவர்கள் சொன்ன அரிய கருத்துக்கள் அரசினுடைய கவனத்திலே இல்லாமல் போய்விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருத வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களை பரிசீலனை செய்து அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(சில உறுப்பினர்கள் பேசுவதற்கு எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். நாளைக்கு வேண்டுமானால் கேள்வியாக எழுதிக்கொடுங்கள். நீங்கள் கேட்டதற்கு பதில் இல்லை என்ற பாயின்ட் ஆப் ஆர்டரை வேண்டுமானால் அனுமதிக்க முடியும். ஆகவே உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கார்ப்பரேஷன் அமைக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறப்பட்டது. அவ்வாறு அமைப்பதனால் நிர்வாகச் செலவும் நிர்வாக வசதியும்



ஏற்படும். அரசு அது குறித்து என்ன கருத்தைக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ரப்பர் காடுகளைப் பொறுத்தமட்டில் ஒரு தனி வாரியம் அமைப்பதற்கான ஆலோசனை அரசுக்கு வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து தகுந்த நேரத்தில் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. செ. சிவசாமி குறுக்கீடு.)

பேரவைத் துணைத் தலைவரவர்களே, கட்டுக்குத்தகைக்கு கொடுப்பதில்லை என்று நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மலைப் பிரதேசங்களில் பட்டா இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சத்தியமங்கலத்தில் புத்தியாலத்தூர், குன்றி, கோட்டமேளம், திங்களூர் போன்ற மலைப்பகுதிகளில் இருக்கக்கூடிய ஆதி மலைவாசிகள் பரம்பரை பரம்பரையாக அந்த மலைப்பகுதிகளில் விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு பட்டாவும் வழங்கப்பட்டிருக்கிறது. இடமும் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயம் செய்யும் அந்த ஆதி மலைவாசிகளுக்கு அந்த நிலங்களை பட்டா செய்துகொடுக்க ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா, செய்யாதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட்: உறுப்பினர் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அங்குள்ள பழங்குடி மக்களுக்கு எல்லாம் பட்டா வழங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். மீண்டும் பட்டா வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதைத் திட்டவட்டமாக சொன்னால் பதில் சொல்ல முடியும்.

திருவாளர்கள் த.வேணுகோபால், வி. கே. கோதண்டராமன், ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை எண் 6-க்கு அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திரு. அ. சுவாமிதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 6— பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,45,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண்- 23-க்கு திருவாளர்கள் ஓ. சுப்பிரமண்யம், அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரா. மார்க்கபந்து, எம்.ஏ. லத்தீப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,55,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.





திருவாளர்கள் என். கிட்டப்பா, ரா. மார்க்கபந்து, எம்.ஏ. லத்தீப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை எண் 25-க்கு அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் ரெ.வீ. சவுந்திரராஜன், அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,18,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 45-க்கு திருவாளர்கள் சி.பழனிமுத்து, அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் ரா. மார்க்கபந்து, எம்.ஏ. லத்தீப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண் 45-காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,85,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இரவு 7–30]

கோரிக்கை எண். 56-க்கு திருவாளர்கள் சு. பாலன், வி. கே. கோதண்டராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றவையாக கருதப் பெற்றன, திரு. ரெ. வி. சௌந்திரராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

மானியக் கோரிக்கை எண் 56— காட்டுவளமூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,61,89,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-32க்கு ஒத்திவைக்கப் பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

326. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—2—1978 ஆம் தேதியிடப் பெற்ற 165ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு



[தமிழ்நாடு 1971 ஆம்ஆண்டு விற்பனைவரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

327. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது, இரண்டாவது விவர அட்டவணைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 20—2—1978 ஆம் தேதியிடப் பெற்ற 201 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

328. வருவாய் துறையில் 5—1—1965 ஆம் தேதியன்று வெளியாகி, 27—1—1965 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பக்கம் 135-ல் (ஆங்கிலத்தில்) வெளியான III-30/1965 ஆம் என் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின், 15—2—1978 ஆம் தேதியிடப்பெற்ற 38447/II2(2)/77-6ம் என் அரசு குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

175. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதல் அறிக்கை (ஆறுவது சட்டமன்றப் பேரவை).

176. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை (ஆறுவது சட்டமன்றப் பேரவை).

177. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1978).

%178. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன் வடிவிற்கான (சட்டமன்றப்பேரவை சட்டமுன் வடிவு எண் 15/1978) இணைப்பு.

%179. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் பணிகள் பற்றிய குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%180. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறுகுறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%181. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் பணிகள் பற்றிய குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%182. தமிழகத்தில் மத்திய கூட்டுறவு வங்கிகள் (ஆங்கிலம், தமிழ்).

%183. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

%184. கோரிக்கை எண். 25—சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978–79 (ஆங்கிலம், தமிழ்).

%185. 1978–79ஆம் ஆண்டுக்கான, சின்கோனாத்துறையின் வணிக சம்பந்தமான வரவு — செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

%186. கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

%187. காடுகள் பற்றிய 1978–79ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

%188. கோரிக்கை எண். 43—இளைஞர் அணி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

%25.3.1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பபெற்றது.





*189. கூட்டுறவுத் துறை பற்றிய 1978–79 ஆம் ஆண்டிற்கான செயல்முறைத் திட்டம் (ஆங்கிலம், தமிழ்).

*190. சின்கோனா துறை பற்றிய 1978–79 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

*191. கோரிக்கை எண். 43—பல்வகை—அயல்நாடுகளில் உள்ள இந்தியர் மற்றும் அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தோர் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*192. கோரிக்கை எண். 43—பல்வகை—பொதுத் துறை தொடர்பான திட்டங்களின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1978–79 (ஆங்கிலம், தமிழ்).

%25—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

*26—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

[1978 மார்ச் 28

## இணைப்பு I.

303-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## பொதுத் (தேர்தல்கள் 6) துறை.

## தேர்தல் கொள்கை விளக்கக் குறிப்பு.

[பொருள் : 1978–79 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டம்—கோரிக்கை எண். 8—தேர்தல்கள்—கொள்கை விளக்கக் குறிப்பு.]

''மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்'' என்பதன்கீழ் 1978–79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை (அனுமதிக்கப்பட வேண்டிய) ரூ. 23,38,000 ஆகும். இந்தத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ள இனங்களுக்கு 1978–79-ல் செலவிடப்படுவதற்காக உள்ளது :—

| | ரூ. |
|---|---|
| (ஏஏ) தேர்தல் அதிகாரிகள் | |
| ஏஏ. சட்டமன்றப் பாராளுமன்றத் தொகுதிகள். | 20,28,000 |
| ஏபி. மேலவைத் தொகுதிகள். | 8,000 |
| (ஏபி) வாக்காளர் பட்டியல் தயாரித்தலும் அச்சிடுதலும். | |
| ஏஏ. சட்டமன்றத் தொகுதிகள். | 2,34,000 |
| ஏசி. மேலவைத் தொகுதிகள். | 2,000 |
| (ஏசி) நாடாளுமன்றப் பேரவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடக்கும்போது தேர்தல்களை நடத்துவதற்கான செலவுகள். | 28,000 |
| (ஏடி) நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள். | |
| ஏஏ. இடைத் தேர்தல்கள். | 8,000 |
| ஏபி. நாடாளுமன்றத் தேர்தல்கள். | 7,000 |
| (ஏஇ) மாநிலச் சட்டமன்றத்திற்காகத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள். | |
| ஏஏ. மாநில சட்டமன்றம். | 14,000 |
| ஏபி. சட்டமன்ற மேலவை. | 9,000 |
| மொத்தம். | 23,38,000 |



1978 மார்ச் 28]

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள் முறையான, மற்றும் சிறப்புப் பணியாளர்கள் முதலியவர்களை நியமிப்பதற்கும், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்கும் அனுமதியை ஒட்டித் தயாரிக்கப்பட்டுள்ளன.

### ஏஏ. தேர்தல் அதிகாரிகள்.

### ஏஏ. சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிகள்

மதிப்பீடு: ரூ. 20,28,000

தலைமைச் செயலகத்தில் பொதுத் தேர்தல்களுக்குப் பொறுப்பு வகிக்கும் தலைமைத் தேர்தல் அதிகாரி, மற்றும் உள்ள நிரந்தர ஊழியர்கள் ஆகியோரின் சம்பளம், படிகள் ஆகியவை இந்தக் கணக்குத் தலைப்பிலிருந்து செலவு செய்யப்படுகின்றன.

மாவட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு அலுவலக உதவி செய்து கொடுப்பதற்காக, இந்த வகைப் பணியைக் கவனிக்க சில தேர்தல் பணியாளர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெளியூர் பகுதியில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஒவ்வொரு வட்ட அலுவலகங்களிலும் தனியான துணை வட்டங்களின் பொறுப்பிலுள்ள ஒவ்வொரு துணைத் தாசில்தார்கள் அலுவலகத்திலும், வெளியூர் பகுதியில் தேர்தல் பதிவு அதிகாரி அலுவலகம் ஒவ்வொன்றிலும் (கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் பொறுப்பு அதிகாரிகளின் அலுவலகங்கள் மதுரை மாநகராட்சி பொறுப்பு அதிகாரி அலுவலகம் ஆகியவை உட்பட) தனியான உதவியாளர் ஒருவரை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கண்காணிப்பாளர் ஒருவர், உதவியாளர் இருவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், பதிவெழுத்தர் ஒருவர், கடைநிலை ஊழியர் ஒருவர் ஆகியோர் அடங்கிய பணியாளர்களை, சென்னை மாநகராட்சி பொறுப்பதிகாரி அலுவலகத்தில் தனியாக நியமிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள ஊழியர்களின் சம்பளம், படிகள் இக்கணக்குத் தலைப்பின்கீழ் செலவு செய்யப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் நிர்வாகத்திலுள்ள துணைச் செயலாளர் அலுவலகத்திலுடைய பணியாளர்களுக்கான சம்பளம், படிகளும் இத்தலைப்பின்கீழ் செலவு செய்யப்படுகின்றன.

பயணச் செலவுகள்.

அலுவலகச் செலவுகள்.

மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதவி அதிகாரிகள், உதவித் தேர்தல் அதிகாரி அவர்களுடைய பணியாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரியின் நிர்வாகத்திற்குட்பட்ட அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகள் இக்கணக்குத் தலைப்பின்கீழ் செலவிடப்படுகின்றன, மேற்குறிப்பிட்ட அதிகாரிகளின் அலுவலகச் செலவுகளுக்கும். எதிர்பாராத செலவினங்களும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் செலவிடப்படுகின்றன. தந்திக் கட்டணங்கள், தபால் தலைச் செலவுகள், அலுவலகச் செலவுகளின் உள்ளடங்கும் சிறப்புப் பணிகளுக்கான செலவினங்கள் இந்தலைப்பின்கீழ் செலவிடப்படுகின்றன.

மேற் கூறப்பட்ட இனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை மிகவும் அவசியமானதாகும். மத்திய அரசு இந்த செலவினங்களின் ஐம்பது சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளும்.

ஏஏ. தேர்தல்கள்.

ஏபி. மேலவைத் தொகுதிகள்.

மதிப்பீடு : ரூ. 8,000/-

மேலவைத் தொகுதிகளுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிக்கான செலவுகளும், இதற்கான சிறப்புப் பணியாளர்களுக்கான செலவுகளும் இத்தலைப்பின் கீழ் செலவிடப்படும். 1978–79 ஆம் நிதி ஆண்டில் மேலவைத் தொகுதிகளுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிகிறது. இதற்கான சிறப்புப் பணியாளர்கள் நியமிக்க அனுமதி வழங்கப்பட மாட்டார்கள். எனவே அடையாள மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசுடன் பகிர்ந்து கொள்ள முடியாத செலவினங்களின் வகையில் அமைந்தது. இச்செலவினங்கள் முழுவதும் மாநில அரசே மேற்கொள்ளும்.

ஏபி. வாக்காளர் பட்டியல் தயாரித்தலும் அச்சிடுதலும்.

மதிப்பீடு : ரூ. 2,34,000/-

எழுது பொருள் துறை இயக்குநர் அலுவலகத்தில், தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்கான பணியாளர்கள் மற்றும் ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பணியாளரின் சம்பளம், இத்தலைப்பிலிருந்து செலவிடப்படுகிறது. சட்ட மன்ற வாக்காளர் பட்டியலைத் திருத்தும்



பணிக்கான செலவுகள் இத்தலைப்பிலிருந்து செலவிடப்படுகிறது. 1978–79 ஆம் நிதி ஆண்டில், வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மேற்கொள்ள வாய்ப்பு இல்லை. எனவே அடையாளமதிப்பீடு மட்டும் சில விளக்கத் தலைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் தனியார் அச்சகங்களில் நிலுவையிலுள்ள பட்டியல்களின் தொகைகளை தீர்த்து வைப்பதற்கு, ''26. இதர இனங்களின்'' விளக்கத் தலைப்பின்கீழ் மதிப்பீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1977–78 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இச்செலவினங்களின் ஐம்பது சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளும். இந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை மிகவும் அவசியமானதாகும்.

ஏபி. வாக்காளர் பட்டியல் தயாரித்தலும் அச்சிடுதலும்.

ஏசி. மேலவைத் தொகுதிகள்.

மதிப்பீடு : ரூ. 2,000/-

1977–78 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் பட்டதாரிகள் ஆசிரியர்கள் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல் அச்சிடும் பணி, அரசு அச்சகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதிக்கான வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மேற்கொள்ளும் வாய்ப்பு இல்லை. இத்தலைப்பின் கீழ் அடையாள மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஏசி. நாடாளுமன்றப் பேரவைக்கும், சட்ட மன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தும் போது தேர்தல்களை நடத்துவதற்கான செலவுகள்.

மதிப்பீடு : ரூ. 28,000/-

தலைமைத் தேர்தல் அதிகாரியின் நிர்வாகத்திலுள்ள ஒரு தற்காலிக உதவிச் செயலாளரின் சம்பளப் பட்டியல்கள், மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகளைப் பாதுகாக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட காவலாளர்கள் சம்பளங்கள் ஆகிய செலவினங்கள் இக்கணக்குத் தலைப்பிலிருந்து செலவிடப்படுகின்றன.

வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, பொதுத் (தேர்தல்) துறையிலுள்ள வாகனத்தின் பராமரிப்பு, பெட்ரோல் இதர செலவினங்களுக்கும், வாக்குப் பதிவுக்குத் தேவைப்படும் பலவகைப் பொருட்கள் வாங்குவதற்கும், வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவினங்களும், தந்திக் கட்டணங்கள் உட்பட இதர கட்டணங்களுக்கான செலவினங்களும் இக்கணக்குத் தலைப்பிலிருந்து செலவிடப்படுகின்றன.

மத்திய அரசு இச்செலவினங்களில் ஐம்பது சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளும். மேற் கூறப்பட்ட இனங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை மிக அவசியமானதாகும்.

ஏடி. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்— ஏஏ. இடைத் தேர்தல்கள்.

மதிப்பீடு : ரூ. 8,000/-

1978–79 ஆம் ஆண்டு நாடாளுமன்ற இடைத் தேர்தல்கள் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. இருப்பினும் இத்தலைப்பின் கீழ் அடையாள மதிப்பீடாக ரூ. 8,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் முழுவதும் மத்திய அரசு மேற்கொள்ளும்.

ஏடி. நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்—ஏபி. நாடாளுமன்றத் தேர்தல்கள்.

மதிப்பீடு : ரூ. 7,000/-

1978–79ஆம் நிதிஆண்டில் நாடாளு மன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. இருப்பினும் அடையாள மதிப்பீடு ரூ. 7,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் முழுவதையும் மத்திய அரசு மேற்கொள்ளும்.

ஏஇ. மாநிலச் சட்ட மன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்—ஏஏ. மாநிலச் சட்டமன்றம்.

மதிப்பீடு : ரூ. 14,000/-

1978–79 ஆம் நிதிஆண்டில், தனியாக மாநிலச் சட்ட மன்றத் தேர்தல்கள் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. இருப்பினும் அடையாள மதிப்பீடு ரூ. 14,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் முழுவதையும் மாநில அரசு மேற்கொள்ளும்.

ஏஇ. மாநிலச் சட்ட மன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள்—ஏபி. சட்டமன்ற மேலவை.

மதிப்பீடு : ரூ. 9,000/-

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்ட மன்ற மேலவைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கிறது. இதற்கான செலவினங்கள் தற்பொழுது வரையறுக்க இயலாது. எனவே ஒவ்வொரு துணைக் கணக்குத் தலைப்பின் கீழ் அடையாள மதிப்பீடாக ரூ.1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செலவினங்கள் முழுவதும் மாநில அரசே மேற்கொள்ளும்.



## இணைப்பு II

[....387-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண். 6.

பத்திரப் பதிவுத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

பத்திரப் பதிவுத்துறை, முக்கியமாக, 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) நிர்வகிக்கும் பொறுப்பையும், சொத்துரிமையை பாதிக்கக் கூடிய ஆவணங்களைப் பதிவு செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், இயங்காச் சொத்துக்களின் மீது உரிமை கோருபவரது உரிமைகளை நிலை நாட்டும் ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் நிறைவேற்றி வருகின்றது. இத்துறை, இந்தியப் பங்குதாரர்கள் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு-இறப்புப் பதிவுச் சட்டம், திருமணச் சிறப்புச் சட்டம், இந்துத் திருமணச் சட்டம், கிறித்துவ திருமணச் சட்டம், பார்சி திருமணச் சட்டம், விவாகரத்துச் சட்டம், வரதட்சணை ஒழிப்புச் சட்டம், போன்ற திருமணப் பதிவுச் சட்டங்கள் திருவிதாங்கூர்-கொச்சி இலக்கிய அறிவியல் அறக்கட்டளைச் சங்கங்கள் பதிவுச் சட்டம் ஆகியவற்றையும் நிர்வகித்து வருகின்றது. இத்துறை, தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் நிர்வகித்து வருகிறது. இத்துறையைச் சேர்ந்த துணைப் பதிவாளர்கள், மாவட்டப் பதிவாளர் முதலியோரிடம், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் கீழ் அதிகாரங்கள் ஒப்படைக்கப் படுகின்றன.

2. துறையின் நிர்வாக அமைப்பு.—(1) பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். இவரே, பிறப்பு-இறப்பு திருமணங்களைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராவார். இவர் சீட்டு நிதிகளின் இயக்குநர் ஆவார். இவருக்கு, துறையின் அலுவலகப் பணியாளர்களைத் தவிர பத்திரப் பதிவுத் துணைத் தலைவர் ஒருவர், நேர்முக உதவியாளர் ஒருவர், சீட்டு நிதியின் கூடுதல் இயக்குநர் ஒருவர், ஆய்வு அதிகாரி (சீட்டு) ஒருவர் ஆகியோர் உதவி புரிகின்றனர். நேரிடை அளவில் இவருக்கு 36 மாவட்டப் பதிவாளர்களும், 584 துணைப் பதிவாளர்களும் உதவுகின்றனர்.

(2) இம்மாநிலம், சென்னை, கடலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் என்னும் ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பொறுப்புடையவராவார். ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 முதல் 6 வரையிலான

பதிவு மாவட்டங்கள் அடங்கியிருக்கும். ஆய்வாளர், துணைப் பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், துணைப் பதிவாளர்களுக்கு எதிராக வரும் ஊழல் புகார்கள், குறைத்து மதிப்பிடுதல் போன்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துதல் ஆகிய பணிகளைக் கவனிக்கிறார்.

(3) ஏழு வட்டாரங்கள் மேலும் 36 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும். மாவட்டப் பதிவாளர்கள், தங்களது மாவட்டங்களிலுள்ள துணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களை ஆண்டுக்கொருமுறையும், திடீரென்றும் சோதனையிடுகிறார்கள். ஆவணங்களைக் குறைத்து மதிப்பிட்டுள்ள நேர்வுகள் குறித்து விசாரணை செய்து அவை குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும், அவர்கள் துணைப் பதிவாளர்கள் அனுப்புகின்ற ஆவணங்களைப் பதிவு செய்ய மறுக்கும் ஆணைகளுக்கெதிராகச் செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகள் குறித்தும் விசாரணை செய்கிறார்கள். மாவட்டப் பதிவாளர்கள், நிறுவனங்கள், சங்கங்கள், பிறப்பு-இறப்பு, திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பதிவாளர்களாவர். மேலும், இவர்கள், திருமணப் பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதிவாளராவார்கள்.

(4) மாவட்டப் பதிவாளர்கள், துணைப் பதிவு அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செம்மையாகச் செய்து முடிக்க பதிவு மாவட்டங்கள், துணைப் பதிவாளர் அலுவலகங்கள் எண்ணிக்கையைப் படிப்படியாக உயர்த்துவது அவசியமாகும். பதிவு மாவட்டங்களின் எண்ணிக்கையை 40 ஆக உயர்த்த முதலில் கருதப்பட்டது. எனினும், நிதி நிலை இடர்பாடு காரணமாக 1978–79ஆம் ஆண்டில் கூடுதல் பணியாளர் தொகுதியுடன் கூடிய ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து மொத்தம் 37 பதிவு மாவட்டங்கள் இருக்கும்.

(5) 1977–78 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்காகக் கட்டிடம் கட்டும் வேலைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(6) இம்மாநிலத்தில் தற்சமயம் மூலப்பத்திரப் பிரிவுகள் உட்பட 451 துணைப் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. 36 மாவட்டப் பதிவாளர்களின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இவை உள்ளன. துணைப் பதிவாளர் அலுவலகத் தலைவராகிய துணைப் பதிவாளர், ஆவணங்களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள், சான்று கூறப்பட்ட நகல்களை வழங்குதல், அதிகாரப் பத்திரத்திற்கு சான்றொப்பம் அளித்தல் போன்ற சட்டப்படிக்கான பணிகளை பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் நிறைவேற்று





கிறார். இதுதவிர, திருமணச் சட்டத்தின்கீழ் திருமணம் நடத்தி வைக்கும் அதிகாரியாகவும், சீட்டுகள் பதிவாளராகவும், விற்பனைப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள், அறுதியாவணங்கள், பரிமாற்றப் பத்திரங்கள் முதலிய குறிப்பிட்ட சில ஆவணங்களைப் பொறுத்த மட்டில் முத்திரைத்தாள் சட்டத்தின் 16, 41, 42 ஆகிய பிரிவுகளின் கீழ் கட்டணம் வசூலிப்பவராகவும் ஒரு துணைப் பதிவாளர் செயல்படுகிறார். பொது மக்கள் பத்திரங்கள் பதிவு செய்வதற்கு வசதிகள் எங்கெங்கு அவசியமோ, அங்கெல்லாம் புதிய துணைப் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. 1978–79 ஆம் ஆண்டில் மேலும் ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**(7)** ஒன்று அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மாவட்டங்களில் உள்ள துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஒவ்வொரு தணிக்கைப் பிரிவும் ஒரு தணிக்கை துணைப் பதிவாளரின்கீழ்ச் செயல்படுகிறது. முத்திரைத்தாள் சட்டத்தின் 47-A ஆவது பிரிவின்கீழ் ஆவணங்களை மதிப்பிடுவதில் அது சிறப்பான கவனத்தைச் செலுத்தும். இது பதிவு அலுவலகங்களின் ஆய்வாளரின் மேற்பார்வையில் உள்ளது. இந்த மாநிலத்தில் மொத்தம் 22 தணிக்கைத் துணைப் பதிவாளர்கள் உள்ளனர்.

3. கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி. —(1) பத்திரப் பதிவுத் துறையின் பணிச் சுமைக்கு ஏற்ப, 1978–79-ல் பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும், துணைப் பதிவாளர் அலுவலகங்களில் 25 இளநிலை உதவியாளர் பதவிகளை ஏற்படுத்தவும் அனுமதி வழங்க அரசு கருதியுள்ளது.

(2) சொத்துக்களின் உரிமை குறித்த விவரங்களை அழியாமல் பேணி வருவதற்காக மங்கிப்போன பதிவுகளை மீண்டும் நகல் எழுதுவது முக்கியப் பணியாகும். இந்தப் பணியைக் கவனிக்க 1978–79 ஆம் ஆண்டில் 43 தற்காலிகப் பிரிவு எழுத்தர்களை நியமனம் செய்வதற்கான ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

(3) 1978–79 ஆம் ஆண்டில் பத்திரப் பதிவு அலுவலகங்களில் நிரந்தர ஆவணங்களைப் பாதுகாத்து வருவதற்காக 100 உருக்கு அலமாரிகள், 3 உருக்கு பக்கஅடுக்குகள் வாங்குவதற்கான ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டின் சீட்டு நிதிகள் சட்டம். — 8–7–1964 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, பாளையங்

[1978 மார்ச் 28

கோட்டை ஆகிய பதிவு மாவட்டங்களில் முதல் முதலாகக் கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு 1–12–1969 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் நீட்டிக்கப்பட்டது. சென்னை, பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் சீட்டு நிதிகளின் இயக்குநர் ஆவார். பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தில் சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் ஒருவரும், மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் ஆய்வு அதிகாரி ஒருவரும் இவருக்கு உதவி புரிகின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்புடைய 21 சீட்டு நிதிப் பதிவாளர்கள் (புலனாய்வு வழக்கு தொடர்தல்) சீட்டு நிதிகள் ஆய்வு அதிகாரி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அனுமதி பெறாத சீட்டுகள், அனுமதி பெற்ற சீட்டுகளின் மோசடி ஆகியவற்றைக் கண்டறிவதும், சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் நீதி மன்றங்களில் புகார் கொடுப்பதில் சீட்டுப் பதிவாளர்களுக்கு உதவி புரிவதும் அவர்களது முக்கியப் பணியாகும்.

| | | |
|---|---|---|
| (i) | 1977 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை. | 5,656 |
| (ii) | 1977 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் செயல்படுகின்ற சீட்டுகளின் எண்ணிக்கை. | 16,069 |
| (iii) | 1977 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படுகின்ற மொத்த சீட்டுத் தொகை ரூ. | 11,30,72,871·00 |

5. துறையின் வருமான வாயில்கள்.—பத்திரப் பதிவிற்காகச் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் மீது விதிக்கத்தக்க பதிவுத் கட்டணங்கள், தேடுவதற்கான கட்டணங்கள், வில்லங்கச் சான்றிதழ் முதலியவற்றை வழங்குவதற்கான கட்டணங்கள் ஆகியவை பதிவுத் துறைக்கு முக்கிய வருமான வாயில்களாகும். 1977–78 ஆம் ஆண்டில் அதாவது 1–4–1977 ஆம் நாளிலிருந்து 31–12–1977 ஆம் நாள் வரை, பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 6,30,272. கடந்த ஆண்டில் இதே கால அளவில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 5,21,919. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டுகளைப் பதிவு செய்வதன் மூலமும் வருமானத்தை ஈட்டுகிறது.



1978 மார்ச் 28]

6. வரவு-செலவு :—1972–73 முதல் 1977–78 (1977 டிசம்பர் முடிய) துறையின் வரவு-செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | வரவு. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1972–73 .. .. | 345·41 | 125·05 |
| 1973–74 .. .. | 392·00 | 142·00 |
| 1974–75 .. .. | 330·30 | 118·86 |
| 1975–76 .. .. | 383·12 | 158·16 |
| 1976–77 .. .. | 307·06 | 183·41 |
| 1977–78 (டிசம்பர் 1977 முடிய.) | 242·30 | 146·66 |

## இணைப்பு III.

[.. 387 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

### 1978-79-ம் ஆண்டிற்கு கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கம்—குறிப்புரை.

தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் விரிந்து பரந்துள்ள கூட்டுறவு இயக்கம், தொடர்ந்து படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகிறது ; குறிப்பாக, வேளாண்மைக் கடன் வசதி, விற்பனை வசதி, வேளாண் விளை பொருள்கள் பதனிடுதல், பயன் கொள்வோர் நுகர் பொருட்கள் பங்கீடு ஆகிய துறைகளில் கூட்டுறவு இயக்கம் சீரான முறையில் முன்னேற்றமடைந்து வருகிறது.

2. வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்களை வழங்குவதில் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளன. அவை 1975-76 ஆம் ஆண்டில் 102·85 கோடி ரூபாய் கடன்வழங்கின. ஆனால், 1976-77ஆம் ஆண்டிலோ 125·12 கோடி ரூபாய் கடன் வழங்கின: 1976-77ஆம்

ஆண்டில் வழங்கப்பட்ட குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்களில் 47 சதவீதம் சமுதாயத்தில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டது. நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்களாக 1975-76 ஆம் ஆண்டில் 19·05 கோடி ரூபாய் வழங்கியிருந்தன. ஆனால், 1976-77-ஆம் ஆண்டிலோ 19·14 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன்களாக வழங்கின. இதுபோலவே விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும் 1975-76-ல் 27·64 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளை பொருள்களை விற்பனை செய்தன. 1976-77 ஆம் ஆண்டிலோ 35·72 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்தன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1976-77-ஆம் ஆண்டில் 147·23 கோடி, ரூபாய் மதிப்புள்ள பண்டங்களைச் சில்லறையில் விற்பனை செய்தன.



3. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்தச் செலவு விவரங்களும், நடப்பாண்டில் ஆகுமென எதிர்பார்க்கப்படும் செலவுகளும் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| பணித் திட்டங்களின் விவரங்கள். | செலவு. | | | | |
|---|---|---|---|---|---|
| | 1974-75 ஆம் ஆண்டில். | 1975-76 ஆம் ஆண்டில். | 1976-77 ஆம் ஆண்டில். | 1977-78 ஆம் ஆண்டுக்கு முதலீடு. | 1977-78 ஆம் ஆண்டுக்கு எதிர் பார்க்கப் படும் செலவு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | | |
| A. மாநிலத் திட்டப் பணிகள் : | | | | | |
| 1 கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள். | 259.61 | 544.26 | 735.32 | 1,035.64 | 1.685.91 |
| 2 விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 2.84 | 21.93 | 26.37 | 7.70 | 7.18 |
| 3 நுகர் பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள். | 15.98 | 9.52 | 12.67 | 41.62 | 45.57 |
| 4 ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள். | .. | 7·71 | 15.79 | 12.25 | 43.26 |
| 5 கல்வி, ஆராய்ச்சி பயிற்சி .. | 0.32 | .. | .. | 10.94 | 11.14 |
| மொத்தம்—மாநிலத் திட்டப் பணிகள். | 278.75 | 583.42 | 790.15 | 1,108.15 | 1,793.06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| B. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத் துறைத் திட்டங்கள், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டங்கள். | 95.30 | 221.90 | 245.04 | 122.22 | 214.80 |
| பெரு மொத்தம் .. .. | 374.05 | 805.32 | 1.035·19 | 1.230.37 | 2.007.86 |



## கூட்டுறவுக் கடன் வசதி.

### குறுகியகால நடுத்தரக்காலக் கடன் வசதி.

4. உழவர்களுக்குத் தேவையான குறுகிய காலக் கடன்களேயுந் நடுத்தரக்காலக் கடன்களேயும், கிராமங்களின் அளவில் அமைந்துள்ள 4,750 வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் வழங்குகின்றன ; இவையாவும் மாவட்ட அளவில் அமைந்த 15 மத்திய கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன ; மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் யாவும் மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 38·54 இலட்சம் உழவர் குடும்பங்கள், அதாவது இம்மாநிலத்தில் உள்ள மொத்த உழவர் குடும்பங்களில் 87 சதவீதக் குடும்பங்கள் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. இன்னும் குறிப்பாகச் சொன்னுல், இம் மாநிலத்தில் உள்ள சிறு உழவர்கள், சொற்ப ஆதாயம் பெறும் சிறு உழவர்கள், நிலமற்ற குத்தகைக்காரர்கள் ஆகிய மூவகையினரின் குடும்பங்களது மொத்த எண்ணிக்கையில் 81 சதவீதம் அதாவது 22·74 இலட்சம் குடும்பங்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாகியுள்ளன. இச் சங்கங்களில் உறுப்பினர்களாவதற்குத் தகுதி வாய்ந்த, விருப்பங் கொண்டுள்ள உழவர்கள் அனைவரையும் இவற்றில் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டு, அதன் மூலம் 1978-79 ஆம் ஆண்டு இறுதிக்குள் இவற்றில் உறுப்பினராயுள்ள உழவர் குடும்பங்கள் அளவை 90 சதவீதமாக உயர்த்த மும்முர இயக்கம் ஒன்றைத் தொடங்குவதெனக் கருதப்பட்டுள்ளது.

5. வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் 1973-74-ல் குறுகிய காலக் கடனுகவும் நீண்டகாலக் கடனுகவும் வழங்கிய தொகை 78.82 கோடி ரூபாய் ஆகும் ; 1976-77-ல் இவ்வாறு வழங்கப்பட்ட தொகை 125·12 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், குறுகியகாலக் கடன்களாகவும் நீண்டகாலக் கடன்களாகவும் 135 கோடி ரூபாய் வழங்கப்படும் என எதிர்பார்க்கபடுகிறது. 31—12—1977 ஆம் நாள் வரையில் 81·60 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

6. இவ்வாறு வழங்கப்படும் கடன் அளவை, 1978-79 ஆம் ஆண்டில் 145 கோடி ரூபாயாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இத்தொகை, இம்மாநிலத்திலுள்ள உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களின் அளவில் 70 சதவீதத்துக்குச் சற்று கூடுதலாக இருக்கும்.

7. 1976-77 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 47 சதவீதம் சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு அதாவது, ஐந்து ஏக்கருக்குக் குறைவான நிலத்தைச் சொந்தத்தில் வைத்துள்ள அல்லது குத்தகைக்குப் பயிரிடுகின்ற உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில்,

இந்நாடு முழுவதிலும் வழங்கப்பட்ட கூட்டுறவு வேளாண்மைக் கடன்களின் மொத்த அளவில் 34 சதவீதம் மட்டுமே சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1978-79-இல் நம்முடைய மாநிலத்தில், சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு நிதியுதவியளிப்பதில் மேலும் அதிக நாட்டம் செலுத்தவும், மொத்தம் வழங்கப்படுகின்ற கூட்டுறவுக் கடன்களில் குறைந்தது 60 சதவீதமாவது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படுகின்ற வகையில் அவர்கட்கு அளிக்கப்படும் கடன்களை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது.

8. கடன் வழங்கும் திட்டங்கள் அதிகரித்து வருவதையொட்டி அதனை நிறைவு செய்கின்ற வகையில், வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் சொந்த நிதி வசதிகள் போதுமான அளவிற்கு இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் திரண்ட பங்கு மூலதனம் (அரசின் பங்கு மூலதனம் நீங்கலாக) 1976-77 ஆம் ஆண்டு இறுதியில் 46·50 கோடி ரூபாயாக இருந்தது. இது நடப்பாண்டு இறுதியில் 52 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றின் திரண்ட வைப்புத் தொகைகளும் 156·89 கோடி ரூபாயிலிருந்து 170 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டின் இறுதியில் அவை தமது பங்கு மூலதனத்தை 53 கோடி ரூபாயாகவும், வைப்புத் தொகைகளை 185 கோடி ரூபாயாகவும் உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

9. இந்தக் கடன் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் வாங்கும் சக்தியைப் பெற்றிருக்கவும் பயன் கொள்வோருக்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களை பங்கிட்டளிக்கும் பணியை மேற்கொள்ளவும் இவற்றின் பங்கு மூலதனத்தை அரசு வலுப்படுத்துகின்றது. இதற்காக, இந்திய ரிசர்வ் வங்கியிடமுள்ள தேசிய வேளாண்மைக் கடன் வசதி (நீண்ட காலக் கடன்) நிதியிலிருந்து மாநில அரசு கடன் பெறுகிறது. 31-3-1977 ஆம் நாளில் உள்ளவாறு, நிலவள வங்கிகள் நகர்ப்பகுதி வங்கிகள் உட்பட கடன் வழங்கு நிறுவனங்களில் பங்கு மூலதனமாகவுள்ள அரசின் மொத்த முதலீடுகள் 17·60 கோடி ரூபாயாகும்.

10. நடப்பாண்டில் 150 இலட்சம் ரூபாய் முதலீடு செய்வதென தற்காலிகமாகக் கருதப்பட்டுள்ளது. இதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டிற்கும்கூட, இந்திய ரிசர்வ் வங்கியின் கடன் உதவியைக் கொண்டு அரசின் பங்குத் தொகை வழங்கப்படும்.

11. வேறுபாடு எதுவும் பாராட்டாமல், உழவர்களில் நலிந்த பிரிவினர்க்குக் கடன் வசதிகளை வழங்குவதில் வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்களுக்கும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும்





ஊக்க உதவிகள் அளிக்கும் நோக்குடன் வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் விரயக் காப்பு நிதிகளுக்கு ( Risk Funds ) நேரடித் தொகை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட்ட கடன்களில், திரும்பப் பெறவியலாத கடன்களையும், திரும்பப் பெறுவது ஐயத்துக்கு இடமாயுள்ள கடன்களையும் தள்ளுபடி செய்து விடுவதற்கு மேற்சொன்ன நிதிகள் பயன்படுத்திக் கொள்ளப்படும். 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாள் நிலவரப்படி வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் விரய காப்பு நிதித் தொகை முறையே 252·28 இலட்ச ரூபாயும், 79·24 இலட்ச ரூபாயுமாகும். 1978-79ஆம் ஆண்டில் அரசு இந்த நிதிக்கு 45 இலட்ச ரூபாய் வழங்கக் கருதியுள்ளது.

## வசூல்.

12. கடன் தொகையை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன், தவணை கடந்து நிலுவையாக உள்ள கடன்களை வசூல் செய்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| காலம். | | கேட்பு. | வசூல். | | கேட்புத் தொகையில் தவணை கடந்து நிலுவையாகவுள்ள தொகையின் சதவீதம். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் கோடியில்நிலுவை.) | |
| 30—6—1974 உள்ளபடி. | இல் | 86/81 | 80/59 | 6/22 | 7 |
| 30—6—1975 உள்ளபடி. | இல் | 103/77 | 94/77 | 9/00 | 9 |
| 30—6—1976 உள்ளபடி. | இல் | 121/24 | 108/00 | 13/24 | 11 |
| 30—6—1777 உள்ளபடி. | இல் | 134/13 | 114/51 | 19/62 | 15 |

## இயற்கைப் பேரிடர்கள்.

13. பஞ்சம், வெள்ளம், வறட்சி முதலியவற்றின் காரணமாக பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகின்றபோது உழவர்கள் வாங்கியுள்ள குறுகியகாலக் கடன்களை நடுத்தரக் கால கடன்களாக மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்குடன், மாநிலக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் ஆகியவை தத்தம் நிலையில் வேளாண்மைக் கடன் வசதி நிலைப்படுத்து நிதியை

ஏற்படுத்தி தங்களது நிகர ஆதாயத்திலிருந்து இந்நிதிக்குத் தொகை வழங்கி வருகின்றன. கடனாகவும், உதவித் தொகையாகவும், இந்திய அரசு அளித்த உதவியுடன், மாநிலக் கூட்டுறவு வங்கியின், வேளாண் கடன் வசதி நிலைப்படுத்து நிதிக்கு மாநில அரசு இதுவரை 250.75 இலட்ச ரூபாய் அளித்துள்ளது. குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்ற, விவசாயக் கடன் நிலைப்படுத்து நிதியில் தற்போதுள்ள தொகைக்கு மேல் தேவைப்படும் தொகையை இந்திய ரிசர்வ் வங்கி கடனாகத் தருகிறது. 1974-75, 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் நடுத்தரக் காலக் கடனாக மாற்றப்பட்ட குறுகிய காலக் கடன் தொகைகள் முறையே 34.10 கோடி, 13.15 கோடி, 31.22 கோடி ரூபாயாகும். வடகிழக்குப் பருவ மழை தொடங்குமுன், மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சி நிலவியதன் காரணமாக, நடப்பு ஆண்டில் 4.06 கோடி ரூபாய் குறுகிய காலக் கடன் தொகை, நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளது.

14. அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென் ஆற்காடு, மதுரை ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பயிர்கள் கணிசமான அளவுக்குச் சேதமுற்றன. அதன் காரணமாக உழவர்கள் விவசாயக் கடனாகப் பெற்ற 8 கோடி ரூபாயை திருப்பி செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். இக்குறுகிய காலக் கடன்கள் அடுத்த ஆண்டு முதல் மூன்றாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்படுகின்றன.

இவ்வாறாக மாற்றக் கருதியுள்ள 8 கோடி ரூபாயில் இதுவரை 7.5 கோடி ரூபாய் மட்டுமே நடுத்தரக் காலக் கடனாக மாற்றப் பட்டுள்ளது. புதுக் கடன்களும், கூடுதல் கடன்களுமாக 3.40 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவற்றோடு,21 இலட்ச ரூபாயும் நடுத்தரக் காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த வரையில், மாநில நிலவள வங்கி 3 கோடி ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணைகளை மாற்றியமைக்கக் கருதுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீண்டகாலக் கடன் பெற்றவர்கள் அதற்கு அளித்துள்ள பிணையச் சொத்துக்களின் மதிப்பு இயற்கை இன்னல்கள் காரணமாக குறைந்து போனதால் அவற்றிற்கு ஈடாக அரசு உத்திரவாத மளிக்கவும் முடிவு செய்துள்ளது. இது ஏறத்தாழ 1 கோடி ரூபாயாகஇருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாநில நிலவள வங்கி ஆகியவை இக்கடனுதவியை அளிக்கும் பொருட்டு அரசு இவ்வங்கிகள் ஒவ்வொன்றுக்கும் வழி வகை முன்பணமாக 5 கோடி ரூபாய் கொடுத்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வேளாண்மைக் கடன் வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வாங்குவதற்



காகக் கூடுதல் கடன்களையும் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்துள்ள பகுதிகளில் புதிய கடன்களையும் வழங்கி வருகின்றன. செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதித்த பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குத் தாளடிப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய், சம்பா பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 20 ரூபாய் என்ற உச்சவரம்புக்குட்பட்டு, உரத்திற்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு 150 இலட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள எல்லா உழவர்களுக்கும் வழங்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான விலையில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக 1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி வரையில் வழங்க அரசு வகை செய்துள்ளது.

15. குறுகிய கால வேளாண்மைக் கடன் வசதி கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவதனால் ஏற்படும் எதிர்பாராத இழப்புகளை ஈடு செய்யும் பொருட்டு, வேளாண் கடன் (நிவாரண உத்திரவாத) நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிதியில், தற்போது 82·03 இலட்ச ரூபாய் உள்ளது. இதனை வலுப்படுத்துதல் அவசியமாகும். அரசு இந்நிதிக்காக, 1978-79 ஆம் ஆண்டில் 10 இலட்ச ரூபாய் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

16. உழவர்களுக்கு, குறிப்பாக, சிறு உழவர்கள், சொற்ப ஆதாயம் பெறும் சிறு உழவர்கள் ஆகியோருக்கு ஒரே அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த கடன் வசதியையும், வேளாண் பணிகளையும் அளிக்கும் பொருட்டு, சிறு உழவர்கள் வளர்ச்சி நிறுவனம் மாநில அரசு இவற்றின் உதவியுடன் அண்மையில் நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்ட 14 சங்கங்கள் உட்பட, 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நீண்டகாலக் கடன்.

17. மாநிலத்திலுள்ள உழவர்களுக்கு தேவைப்படும் நீண்டகாலக் கடன்களை மாநில நிலவள வங்கியுடன் இணைந்துள்ள 223 தொடக்க நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன.

18. 1968-69 ஆம் ஆண்டிலிருந்து வேளாண் மறு நிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதன் மூலம் வேளாண்மை வளர்ச்சிக்குக் கடன் வழங்க பகுதிவாரியான வளர்ச்சிப் பற்றித் திட்டமிடப்பட்டது. 37.32 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 45 சிறுபாசனத் திட்டங்களும் 9.90 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 24 சிறு பாசனமில்லாத திட்டங்களும் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

19. உலக வளர்ச்சி நிறுவனத் திட்டம் தமிழ் நாட்டில் 2—11—1971 முதல் செயற்படுத்தப்பட்டது. சிறுபாசனத்துக்கும் நிலச் சமன்பாட்டிற்கும் இந்நிறுவனம் ஒதுக்கிய கடன்

தொகைகள் முறையே 18.05 கோடி ரூபாயும், 0.55 கோடி ரூபாயும் ஆகும். இவை ஏற்கெனவே பெறப்பட்டன. டிராக்டர்கள், திட்டத்திற்குத் தேவையான கருவிகள், தொழில் நுட்ப உதவி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள எஞ்சிய தொகை 7.65 கோடி ரூபாய் 31-12-1977-க்குள் பெறப்பட்டது. உலக வளர்ச்சி நிறுவனம் உதவியளிக்கும் பண்ணைத் தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டத்தின்கீழ் 1,652 டிராக்டர்கள் வாங்க 8.64 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது.

20. வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்களின் கீழ் மின்சார மோட்டார் விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு கொடுப்பதற்காகும் செலவிற்காக தமிழ் நாடு மின் வாரியத்திற்கு நிதி உதவி செய்யவேண்டி தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு நிதி வழங்குவதற்கான திட்டம் ஒன்றிற்கு மேற்படிக் கழகம் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கீழ் 1-8-1974 முதல் 30-9-1976 வரை 3,094 மின்சார மோட்டார் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கிய செலவிற்காக மின்சார வாரியத்திற்கு 1976-77-ல் மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி 144.84 இலட்ச ரூபாய் கடன் வழங்கியது. 1-10-1976 முதல் 31-3-1977 வரை 377 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான செலவுக்காக அனுமதிக்கப்பட்ட 17.28 இலட்ச ரூபாய் கடனை மின்சார வாரியம் பெறவிருக்கிறது. 1-4-1977 முதல் 30-6-1977 வரை 272 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான செலவுக்காக 12.89 இலட்ச ரூபாய் கடன் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

21. 1974-75 முதல் நிலவள வங்கிகள் வழங்கிய நீண்டகாலக் கடன்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

வழங்கப்பட்டுள்ள கடன்கள்.

(ரூபாய் கோடியில்).

| ஆண்டு. | சாதாரணத் திட்டம். | வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்திட்டங்கள். | உலக வளர்ச்சிக் நிறுவனத் திட்டங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1974-75 .. .. | 9.71 | 2.88 | 2.84 | 15.43 |
| 1975-76 .. .. | 8.40 | 4.39 | 6.26 | 19.05 |
| 1976-77 .. .. | 8.32 | 4.30 | 6.52 | 19.14 |





நடப்பு ஆண்டில் நீண்டகாலக் கடன்களாக 18 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிட்டு, 31–12–1977 வரை 6.91 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1978–79 ல் சாதாரணத் திட்டங்களின் 11.10 கோடி ரூபாயும் கீழ்வேளாண் மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவி பெறும் திட்டங்களின்கீழ் 7.90 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 19 கோடி ரூபாய் அளவுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படும். சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான வாய்ப்பு குறைந்து வருவதால், தென்னை, முந்திரி, காப்பி பயிரிடுதல் முதலிய சிறுபாசனமில்லாத திட்டங்களுக்கும், மலைத் தோட்டங்கள் அமைத்தல், பட்டுப்புழு வளர்த்தல், டிராக்டர்கள், கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள், கால் நடைக் கொட்டகைகள், பால் பண்ணைத் திட்டங்கள், குத்தகைதாரர்கள் நிலம் வாங்குதல் முதலியவற்றிற்கும் அதிக அளவில் கடன்கள் வழங்க நிலவள வங்கிகள் முயன்று வருகின்றன. நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் உபரி நிலம் ஒப்படைக்கப் பெற்றவர்கள் தங்கள் நிலத்தை நிலவள வங்கிகளிடம் அடமானம் வைத்து வளர்ச்சிக் கடன் பெற அனுமதிப்பதுப்பற்றி, அரசு ஆய்வு செய்து வருகிறது. சுமார் 85,000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப் பெற்ற சுமார் 50,000 சிறு உழவர்கள் இதனால் பயனடைவர்.

22. மாநில நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் வாயிலாக நிதி திரட்டுகிறது. மாநில, மத்திய அரசுகள், வேளாண் மறு நிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பிற நிறுவனங்கள் இப்பத்திரங்களை வாங்கி நிதி வழங்குகின்றன. இவ்வகை பத்திரங்களின் பேரில் மாநில அரசு நிதி வழங்கி 31-3-1977 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள தொகை 19.51 கோடி ரூபாயாகும். நடப்பு ஆண்டில் மாநில அரசு 145 இலட்ச ரூபாய் நிதிவழங்கும். 1978-79-ல் நிதி வழங்க வரவு செலவு திட்டத்தில் 160 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

23. கடன்கள் என்னென்ன நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன என்பது பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1974–75 | 1975–76 | 1976–77 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சிறு பாசனங்களுக்கு .. | 8,75·00 | 12,99·44 | 8,18·60 |
| 2 நிலத்தை பண்படுத்துதல். | 20.00 | 13·52 | 19·79 |
| 3 டிராக்டர்கள்.. .. | 2,23·00 | 3,00·06 | 6,77·87 |

[1978 மார்ச் 28

| | 1974-75 | 1975-76 | 1976-77 |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 4 பிற இயந்திரங்கள் .. | 21·00 | 11·82 | 46·70 |
| 5 நிலம் வாங்குதல் .. | 29·00 | 31·95 | 83·68 |
| 6 மலைத் தோட்டங்கள் வளர்த்தல். | 44·00 | 40·23 | 41.17 |
| 7 பிற உற்பத்தி திட்டங்கள். | 66·00 | 58·13 | .. |
| 8 முன் கடன்களைத் தீர்த்தல். | 41·00 | 24·48 | 46.10 |
| 9 ஏனைய காரியங்கள் .. | 2,24·00 | 1,25·48 | 1,80·18 |
| மொத்தம் .. | 15,43·00 | 19,05·11 | 19,14·09 |

24. புதுக் கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சத விதம் அல்லது 500 ரூபாய் இதில் எது குறைவானதோ அத் தொகையை உதவித் தொகையாக தொடக்க நிலவள வங்கிகள் மூலம் சிறு உழவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் சுமார் 1,000 சிறு உழவர்கள் இப்புதிய திட்டத்தினால் பயனடைவர். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1,000 சிறு உழவர் களுக்கு, ஒரு கிணற்றுக்கு 500 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க 1978—79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது.

25. வறட்சி, வெள்ளம் முதலிய இயற்கைச் சீற்றங்களின் காரணமாகத் தங்களது கடன் தொகை குறித்த ஆண்டுத் தவணைத் தொகைகளைச் செலுத்த இயலாத கடன்தாரர்களுக்கு நிவாரணம் அளிக்க வகை செய்யும் பொருட்டு, வேளாண் கடன் நிலைப்படுத்து நிதியானது, மாநில நிலவள வங்கியாலும், தொடக்க நிலவள வங்கிகளாலும் அவர்களது நிகர ஆதாயத்திலிருந்து தொகை வழங்குவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியின் இருப்பில் மாநில நிலவள வங்கியிலும் தொடக்க நிலவள வங்கிகளிலும் முறையே 1,67·55 இலட்ச ரூபாயும், 16·71 இலட்ச ரூபாயும் உள்ளன. இம்மாநிலத்தின் குறிப்பிட்ட சில



1978 மார்ச் 28]

பகுதிகளில் அண்மை ஆண்டுகளில் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியால் கடந்த மூன்று ஆண்டுகளில் வசூலிக்க வேண்டிய 30·85 கோடி ரூபாயை வசூலிக்காமல் நிலவள வங்கிகள் தள்ளிப் போட்டன. இதற்காக, குறுகிய காலக் கடன்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து கிடைக்கும் உதவிபோன்று ஏதும் இல்லாததால், மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றின் சொந்த நிதி வசதிகள் பெரிதும் இக்கட்டான நிலையிலுள்ளன. அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்குள்ள தொகை வசூலிக்காமல் தள்ளிப் போடப்படும். எனவே, அரசு செலுத்தும் தொகையைக் கொண்டு இந்நிதியை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்காக, 1978—79ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்க வகை செய்யப் பட்டுள்ளது.

26. தனித்து இயங்கவல்ல தொடக்க நிலவள வங்கிகளுக்கு நிர்வாக உதவித்தொகை வழங்க மாநில அரசு வகை செய் துள்ளது. கூட்டுறவு நிலவள வங்கித் தொழில் குறித்த குழு செய்த பரிவுரையை யொட்டி, தொடக்க நிலவள வங்கிகள் தாமே இயங்கவல்ல அடிப்படையில் அவற்றைச் சீரமைப்பதற் கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இக்குழுவின் பரிவுரைகளுக்கிணங்க, 35 இலட்சம் ரூபாய் கடன் வழங்க வாய்ப்புள்ள வங்கிகள் ஒவ்வொன்றும் தாமே இயங்கவல்ல வங்கி கள் என்று கருதப்படுகின்றன.

27. குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சிறு உழவர்களுக்கு பொதுவான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 327 இறை வைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் 105 சங்கங்கள் சிறுபாசனத் திட்டங்களை நிறை வேற்றி வருகின்றன. இதில் 727 கிணறுகள் அடங்கியுள்ளன. இதனால் 2·85 கோடி ரூபாய் செலவாகிறது; 12,050 ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. இச்சங்கங்களுக்கு நிலவள வங்கிகள் நிதி யுதவி செய்கின்றன. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு மாநில அரசு நிர்வாக உதவித் தொகை வழங்குகிறது.

## நுகர்வுக் கடன்.

28. கடன் நிவாரணச் சட்டத்தாலும், அதன் விளைவாக நிதி வழங்கு நிறுவனங்கள் அல்லாத வாயில்களிலிருந்து கடன் வசதி கிடைப்பது குறைந்ததாலும்; கடன் வழங்குவதில் ஏற் பட்ட இடைவெளியை இயன்றவரையில் நிரப்பும் முக்கியமான பணியை கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கும் பணியில் தற்போது, 658 வேளாண் கடன் வசதி சங்கங்கள், மாநில-மத்திய கூட்டுறவு வங்கிகளின் 312 கிளை வங்கிகள், 128 கூட்டுறவு நகர வங்கிகள்

ஈடுபட்டுள்ளன. தங்க நகைகளின் பேரில் கூட்டுறவுச் சங்கங் களால் 1975-76 ஆம் ஆண்டில் 22 கோடி ரூபாய் மட்டுமே கடன் வழங்கப்பட்டிருக்க 1976–77ஆம் ஆண்டில் 40·10 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டில், 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் தங்க நகைகளின் பேரில் 35 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப் பட்டுள்ளது. அதுபோன்ற கடன்களை நடப்பாண்டில் 60 கோடி ரூபாய் வரையில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தங்க நகை களின் பேரில் 1978–79ஆம் ஆண்டில் 70 கோடி ரூபாய் வரையில் கடன் வழங்கத் கருதப்பட்டுள்ளது.

## நகர வங்கிகள்.

29. நகர்ப்புற, ஓரளவு நகர்ப்புறத்தைச் சேர்ந்த மக்களுக்குக் கடன் வழங்கு-வங்கி வசதிகளை 133 நகர கூட்டுறவு வங்கிகள் செய்து வருகின்றன. அவை 1975–76ஆம் ஆண்டில் 33·38 கோடி ரூபாய் மட்டுமே கடனாக வழங்கியிருக்க 1976–77ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாகவும், நடுத்தரக் காலக்கடனாகவும் 37·39 கோடி ரூபாய் வழங்கியுள்ளன. குடிசைத் தொழில், சிறு தொழில் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், அவை, 1976–77ஆம் ஆண்டில் 46·40 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கியுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் வழங்கப் பட்ட கடன் தொகை 43·47 இலட்சம் ரூபாயாகும்.

## கூட்டுறவு விற்பனையும், பதப்படுத்துதலும்.

### கூட்டுறவு விற்பனை.

30. தொடக்க நிலையில் 118 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்போடு இணைந்துள்ளன. தஞ்சாவூர் கூட்டுறவு விற் பனைக் கூட்டமைப்பு ஒன்றுதான் மாவட்ட அளவில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும். இந்த அங்காடிச் சங்கங்களால் 1975–76ஆம் ஆண்டில் 27·64 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள் களை விற்பனை செய்யப்பட்டிருக்க 1976–77ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை விளை பொருளின் மதிப்பு 35.72 கோடி ரூபாயாகும். இந்த ஆண்டில் 31–12–1977ஆம் நாள் முடிய விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை விளைபொருளின் மதிப்பு 35·73 கோடி ரூபாயாகும். இந்த மதிப்பு ஆண்டு இறுதியில் 40 கோடி ரூபாயை எட்டலாம். 1978–79ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளைபொருள்களை விற்பனை செய்யவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.



31. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, 117 சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசு முதலீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் அரசால் முதலீடு செய்யப்பட்ட தொகை 116·45 இலட்சம் ரூபாயாகும். மத்திய அரசுத்துறை திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட கூட் டுறவு விற்பனைச்சங்கங்களுக்குக் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புகளுக்கும் 17·60 இலட்சம் ரூபாய் கூடுதல் பங்கு மூலதனமாக அளிக்கப்பட்டுள்ளது. 1978–79ஆம் ஆண்டில் விற்பனை சங்கங்களின் பங்கு மூலதனத்திற்குத் தொகை அளிக்கப் படுவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 2.25 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

32. உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருள்களைப் பெருமளவில் ரொக்கக் கொள்முதல் செய்ய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, சங்கங்களின் விலை ஏற்றத்தாழ்வு சிறப்பு நிதிக்கு அரசு தொகை வழங்குகிறது. இதுவரை விற்பனைச் சங்கங்களின் விலை ஏற்றத்தாழ்வு சிறப்பு நிதிக்கு 9.58 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1978–79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இது குறித்து 2 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

33. இரசாயன உரங்களை விநியோகிப்பது கூட்டுறவு விற் பனைத் துறையின் பெரும் பணியாகும். குறிப்பாக இரசாயன உர மையக் களஞ்சியத்திலிருந்து உரங்களைப் பங்கீடு செய்யும் பணியை 1973-ஆம் ஆண்டில் இத்துறையிடம் அரசு ஒப்படைத்ததிலிருந்து இப்பணி இத்துறையின் பெரும்பணியாக அமைந்துள்ளது. தஞ் சாவூர், நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும், தஞ்சாவூரில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பும் , நீலகிரி மாவட் டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச்சங்கமும் இரசாயன உரமையக் களஞ்சியத்திலிருந்து கிடைக்கும் இரசாயன உரங்களையும் வெளி அங்காடிகளில் கிடைக்கும் இரசாயன உரங்களை வாங்கி சில்லறை விற்பனையாளர்களாகப் பணிபுரிந்த 4,400 வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் மூலம் விற்பனை செய்தன. வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விவசாயக் கடனின் ஒரு பகுதியாக இரசாயன உரங்களை வழங்கு கின்றன. உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும்

இரசாயன உரங்கள் ரொக்கத்திற்கு விற்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்ககள் விநியோகம் செய்த உரங்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | | விநியோகம் செய்யப்பட்ட உரங்கள். அளவு இலட்சம் டன்னில். | மதிப்பு (ரூபாய் கோடியில்). | பயன் படுத்தப் பட்ட மொத்த அளவில் சதவீதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1973—74 | .. | 3.23 | 34.18 | 48 |
| 1974—75 | .. | 2.83 | 54.08 | 58 |
| 1975—76 | .. | 3.05 | 55.07 | 54 |
| 1976—77 | .. | 3.03 | 49.20 | 51 |
| 1977—78 (1977, டிசம்பர் வரையில்). | .. | 2.58 | 40.92 | .. |

நடப்பாண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 65 கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் 4 இலட்சம் டன் உரங்களை விநியோகம் செய்யு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978—79-ல் 81 கோடி ரூபாய் மதிப்புள்ள 5 இலட்சம் டன் உரங்களை விநியோகம் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

34. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு ஆகியவை உரங்களை கொள் முதல் செய்து விநியோகம் செய்வதற்காக அவற்றுக்குத் தேவை யான தொடக்க நிலை உதவித் தொகை அளிக்கும் பொருட்டு அரசு 1976—77 வரையில் இரண்டு நிறுவனங்களுக்கும் 2.11 கோடி ரூபாய் வரையில் பங்கு மூலதன நிதியுதவி அளித்துள் ளது. 1978—79-ல் முதலீடு செய்வதற்காக அரசு வரவு-செலவுத் திட்டத்தில் 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.
விற்பனை செய



## விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைத்தல்.

35. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைக் கூட்டு றவுச் சங்கங்களுடன் இணைந்த முறையில் அரிசி, பயறு வகைகள், பருப்பு வகைகள், கொத்தமல்லி, புளி, மிளகாய், மஞ்சள், எண்ணெய், மோட்டா ரக தானியங்கள், கோதுமை, கோதுமைப் பொருட்கள், வாசனைப் பொருட்கள், வெல்லம் போன்ற இன்றியமையாப் பொருட்களைப் பெருமளவில் வாங்கி விநியோகம் செய்ய வேண்டும் எனக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தோராயமாக 60 கோடி ரூபாய் மதிப்புள்ள இன்றியமை யாப் பொருட்களைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யக் கருதப்பட்டுள்ளது. இதனால், உற்பத்தியாளர்கள் தமது பொருட்களுக்கு நியாயமான விலையைப் பெற இயல்வதுடன் நுகர்வோர் நியாயமான விலையில் நல்ல ரகப் பொருட்களை வாங்க வும் முடியும்.

## கூட்டுறவு பதனிடு தொழில்.

36. தொலிப்புக் கருவிகள் (Decorticators) அரிசி அரவை இயந்திரங்கள், எண்ணெய் ஆலைகள் மரவள்ளிக் கிழங்கு, அன்னாசிப் பழம் பதப்படுத்தும் பிரிவுகள் ஆகியவற்றைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் இணை அமைப்புகளாக நிறுவ, பங்கு மூல தன மாகவும், கடனாகவும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குச் சொந்தமான பல்வேறு வகை பதனிடு பிரிவுகள் 88 உள்ளன.

37. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு மன்னார் குடிக்கருகில் பாமணியில் 27.22 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ள உரபணிகள் தொழிற்சாலை மனநிறைவளிக்கும் வகையில் செயல் பட்டு வருகிறது; வெவ்வேறு தர உர மணிக் கலவைகளைத் தயாரிக்கின்றது. இத் தொழிற்சாலை 1976—77ஆம் ஆண்டில் 34,100 டன் உர மணியையும், நடப்பாண்டில் 1977 டிசம்பர் வரையில் 19,600 டன் உர மணிகளைத் தயாரித்தது.

38. கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம் 45.58 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில், ஒண்டிபுதூரில் சூரிய காந்தி விதை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது. இச்சங்கம், இத் தொழிற்சாலையில் 15.37 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் பருத்தி விதையி லிருந்து எண்ணெய் எடுக்கவும், 15.50 இலட்சம் ரூபாய் மொத் தச் செலவில் எண்ணெய் தூய்மையாக்குவதற்கும் கூடுதல் இயந்திரங்களை அமைத்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத் தில் 61.06 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் சூரியகாந்தி

விதை எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம் , தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் கூட்டமைப்பு ஆகியவை 1977, மார்ச் திங்களிலும், 1977 பிப்ரவரியிலும் தொழிற்சாலைகளைத் தொடங்ககிய நாளிலிருந்து முறையே 541 டன், 352 டன் கடலை எண்ணெய்யைத் தயாரித்துள்ளது. வட ஆற்காடு மாவட்டம் , திருவண்ணாமலையில் 62 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் கடலை எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அமைக்கிறது.

39. 1976-ஆம் ஆண்டு அரிசி அரைவைத் தொழில் (முறைப் படுத்துதல்-உரிமம் வழங்குதல்) திருத்த விதிகளின்படி வாலாயமான அரிசி ஆலைகள் நவீன காலத்துக் கேற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். நடப்பாண்டில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் ஆறு அரிசி ஆலைகளை நவீனப் படுத்துவதற்காக 2.57 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும்.

40. நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள், பயிர்வகைகள் ஆகியவற்றுக்கான தரமுள்ள விதைகளைப் பெருக்குவதற்காக 170.50 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் வகுக்கப்பட்ட விதைப் பெருக்கத் திட்டத்தை, துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கமும், ஒன்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், 11 இடங்களில், 23,000 ஏக்கரில் 25,000 டன் விதைகளை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் டணிகள் சங்கமும், 5 விற்பனைச் சங்கங்களும் 94 இலட்சம் ரூபாய் செலவிலான திட்டத்தின் முதற்கட்டப் பணியை நிறைவேற்றி வருகின்றன. 1976—77-ல் 9·35 இலட்சம் ரூபாய் அரசுப் பங்கு மூலதனமும் 16.37 இலட்சம் ரூபாய் கடனும் வழங்கப்பட்டது. நடப்பாண்டில் சங்கங்களுக்கு 16.37 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். ஆறு பிரிவுகளிலும் கட்டிடப்பட ணி நடந்தேறி வருகிறது.

## கிடங்குகள் கட்டுதல்.

41. வேளாண்மை விளைபொருள்கள் உற்பத்திப் பெருக்கத்தை கருத்தில் கொண்டு பார்க்கையில் கிடங்கு வசதிகளின் முக்கியத்துவம் அதிகமாகிறது. வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்களுக்கும் விற்பனைச் சங்கங்களுக்கும் கிடங்குகள் கட்டுவதற்கு உதவித் தொகையாகவும் கடன்களாகவும் அரசு நிதியுதவி அளிக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மாநில அரசுக்கு செலவில் 62.5 சதவீதத்துக்குக் கடனாக நிதியுதவி வழங்குகின்றது. எஞ்சிய 37.5 சதவீதம் மாநில அரசால் உதவி தொகையாக அளிக்கப்படுகிறது. 1974—75 ஆம் ஆண்டிலிருந்து கிராம அளவில் ஒவ்வொன்றும் 150-120 டன் கொள்ளளவு





கொண்ட 750 கிடங்குகளும் (இவற்றில் நடப்பாண்டில் நிதியுதவி அளிக்கப்பட்ட 200 கிடங்குகளும் அடங்கும்), ஒவ்வொன்றும் 1,000 டன் கொள்ளளவு கொண்ட 13 விற்பனைக் கிடங்குகளும் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 12 விற்பனைக் கிடங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்படும்.

42. இருநூறு கிராமக் கிடங்குகள், 10 விற்பனைக் கிடங்குகள் ஆகியவற்றை நிறுவுவதற்காக 1978—79-ல் நிதியுதவி அளிக்கக் கருதியுள்ளது. நிதியுதவி அளிக்கப்பட்ட கிராமக் கிடங்குகள் விற்பனைக் கிடங்குகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை இதனல் முறையே 3,234, 250 ஆக அதிகரித்து, அமைக்கப்பட்ட கிடங்குகளின் மொத்தக் கொள்ளவு 1978—79 இறுதிக்குள் 4.65 இலட்சம் டன் ஆக அதிகரிக்கும். 1978—79-ல் அரசு 102 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நிதியுதவியை அளிக்கும். முந்திய ஆண்டில் கட்டி முடிக்கப்படாத கிடங்குகள் கட்டி முடிப்பதற்கான திட்டங்கள் குறித்த 52 இலட்சம் ரூபாயும் இதில் அடங்கும்.

## நுகர்வோர் கூட்டுறவுகள்.

43. நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்று அடுக்குகள் கொண்டதாகும். அதாவது, மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டு அமைப்பு, ஒரு மாவட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அளவில் பணியாற்றும் 12 மாவட்டக் கூட்டுறவு வழங்கல் — விற்பனைச் சங்கங்கள் உட்பட 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், கிராமம் அல்லது நகர அளவில் 1,748 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆகிய மூன்று அமைப்புகளைக் கொண்டது. எழுநூற்று எழுபத்து மூன்று கல்லூரி-உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட தொடக்கக்கூட்டுறவுப் பண்டகசாலைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மற்ற எழுது பொருட்கள் ஆகிய மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன. பெண்களுக்கென்றே 19 பண்டகசாலைகளும், தொழிற்சாலை, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 281 பண்டகசாலைகளும் உள்ளன. தொடக்கப் பண்டகசாலைகள் இல்லாத அல்லது தொடக்கப் பண்டகசாலைகள் செவ்வையாக செயல்படாத இடங்களில், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் சில்லறை விற்பனைக்காக 619 கிளைப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளன. தொடக்கப் பண்டகசாலைகளும், சில்லறை விற்பனை செய்வதற்காக 378 கிளைப் பிரிவுகளைத் தொடங்கியுள்ளன. நுகர்வோர் பண்டகசாலைத் திட்டங்களைத் தொடங்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 20 பல்துறைப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. 1975—76, 1976—77-ம் கூட்டுறவு ஆண்டுகளில் இந்த பல்துறைப் பண்டகசாலைகள் முறையே

32.20 கோடி ரூபாய்க்கும், 34.69 கோடி ரூபாய்க்கும் விற்பனை செய்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவுகளின் வணிகத்தை உயர்த்தவும், பல்வகைப்படுத்தவும் சிறு சிறப்பு அங்காடிகள் எனப்படும் 86 நவீன சில்லரைக் கடைகளை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், நன்கு செயல்படும் தொடக்கப் பண்டகசாலைகள் ஆகியவை திறந்துள்ளன. 1976—77-ல் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் செய்த சில்லறை விற்பனையின் மொத்த மதிப்பு 147.23 கோடி ரூபாய் ஆகும். ஒன்பதாயிரம் நியாயவிலைக் கடைகளில், சுமார் 7,000 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுகளினால் நடத்தப்படுகின்றன.

44. நிர்வாகப் பணியாளர்களின் செலவிற்காகவும், மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்களை வாங்குவதற்கும், நடைமுறை மூலதனத்தைப் பெருக்குவதற்கும், டிரக் வண்டிகளை வாங்குவதற்கும், கிடங்குகளை நிறுவுவதற்கும், நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு, உதவித் தொகை, கடன், பங்கு மூலதனம் ஆகியவைகளில் அரசு நிதி உதவி வழங்கிவருகின்றது. மாநிலத் திட்டப் பணிகளின்கீழ், 78 நுகர்வோர் தொழிற் பிரிவுகளை அமைப்பதற்காக நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு, கடன், பங்கு மூலதவம் ஆகிய முறைகளில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

45. மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், கிடங்குகள் அமைப்பதற்காக மாநில அரசு நிதியுதவி அளிக்கின்றது. நடப்பு ஆண்டில் 10 கிடங்குகள் அமைப்பதற்காக 7.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1978—79-ல் 1.50 இலட்சம் ரூபாய் செலவில் 2 கிடங்குகளை அமைக்க உதவி செய்யக் கருதப்பட்டுள்ளது. 1978—79-இல், 1 இலட்சம் ரூபாய் செலவில் 5 கிடங்குகளைக் கட்டுவதற்காக தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் புதிய திட்டப்படி உதவி பெறுவதற்கான உத்தேசமும் இருக்கிறது.

46. கிராமக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைத்து, கிராமப் புறங்களில் நுகர்வோர்ப் பொருட்களைப் பங்கிட்டளிக்கும் முறையை தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வழங்கியுள்ள 13.88 இலட்ச ரூபாய் உதவித் தொகையைக் கொண்டு இம்மாநிலத்தில் 10 மாவட்டங்களில் உள்ள 232 கிராம வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றுவதற்காக 1976 மார்ச் திங்களில் 10 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1976—77-ல் தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 20.95 இலட்சம் நிதி உதவி பெற்று மேலும் இத்தகைய 15 திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவை 325 கிராமப் புற வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்படும். 1975—76-ல் ஒப்புதல் வழங்கப்பட்ட 10 திட்டங்களில் உள்ள கிராமப் புற வேளாண்மைக் கடன்





வசதி சங்கங்கள் 1976—77-ம் கூட்டுறவு ஆண்டில் 3.17 கோடி ரூபாய்க்கு இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. தற்போது, 20 தலைமைச் சங்கங்களுடன் இணைந்துள்ள 557 கிராமப்புற வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் மூலமாக 25 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள் 1977 டிசம்பர் திங்கள் முடிய (ஆறு மாத கால அளவில்) 3 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளன மேலும் 43 திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான செயற் குறிப்புகள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளன.

47. மதுரை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களால் தற்போது நடத்தப் பட்டு வரும் 914 நியாய விலைக் கடைகளை அரசு உதவி பெற்று சில்லறைக் கடைகளாக மாற்றுவதன் மூலம் இன்றியமையாப் பொருட்களைப் பங்கிட்டளிப்பதற்கான விரைவுத் திட்டம் ஒன்று விரைவில் தொடங்கப்படும்.

48. மாணவர் விடுதிகளுக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருட்கள் வழங்கும் பணி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டது. 1976—77-ம் கூட்டுறவு ஆண்டில், 1.29 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் 243 மாணவர் விடுதிகளுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 54,000 மாணவர் பயனடைந்துள்ளனர். 1977, டிசம்பர் திங்களோடு முடிவடைந்த (ஆறு மாத கால அளவில்) 81.95 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் 202 மாணவர் விடுதிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

## சிறப்பங்காடிகளும், சிறு சிறப்பங்காடிகளும்.

49. இம்மாநிலத்தில் 20 சிறப்பங்காடிகளும், 86 சிறு சிறப்பங்காடிகளும் உள்ளன. மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் நடப்பாண்டில் பல்பொருள் அங்காடி ஒன்றையும் 8 சிறு சிறப்பங்காடிகளையும் ஏற்படுத்த நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் பல்பொருள் அங்காடிகள் இரண்டையும், 22 சிறு சிறப்பங்காடிகளையும் ஏற்படுத்த நிதி உதவி அளிப்பது பற்றிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் 10 சிறு சிறப்பங்காடிகளைத் தொடங்க 1978—79-ல் நிதி உதவி அளிப்பதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 6 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## கட்டுப்பாட்டு விலைத் துணி.

50. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறைகளின் மூலம் மட்டுமே கட்டுப்பாட்டு விலைத்துணி பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட துணியில் 75 சத வீதம், கிராமப் புறப் பகுதிகளில் நலிந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு விலைத் துணியை விற்பனை செய்வதில் அதிக அளவு வங்கிக் கடன் பெற இயலும் வகையில், 35 நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு இந்திய அரசு 19.22 இலட்சம் ரூபாய் ஆதாரத் தொகையாக அளித்துள்ளது. 1976—77-ம் கூட்டுறவு ஆண்டில் 3.92 கோடி ரூபாய் மதிப்புள்ள 14,672 பேல்கள் கட்டுப்பாட்டு விலைத் துணிகளை 4,764 சில்லறை விற்பனைக் கடைகள் பகிர்ந்தளித்தன. 1977 ஜூலை 1-ம் நாள் முதல் 1977 டிசம்பர் 31-ம் நாள் வரை உள்ள கால அளவில் 2.72 கோடி ரூபாய் மதிப்புள்ள 10,098 பேல்கள் கட்டுப்பாட்டு விலைத் துணியை கூட்டுறவுச் சங்கங்கள் விற்றன. இத் துணி கிராம மக்களிடையே பிரபலமாகியுள்ளது. கிராம மக்களிடையே இத் துணிக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல்.

51. 1976—77-ல், சென்னை மாநகரம் நீங்கலாக மாநிலத்தின் மற்ற இடங்களில் தேசீயமயமாக்கப்பட்ட பாட நூல்கள் விற்பனை செய்யும் பணியை மாநில அரசு முதன் முறையாக கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைத்தது. 2.55 கோடி ரூபாய் மதிப்புள்ள 169.44 இலட்சம் பாட நூல்களை அவைகள் பகிர்ந்தளித்தன. நடப்பாண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 கோடி ரூபாய் மதிப்புள்ள 236.91 இலட்சம் பாட நூல்களை விற்பனை செய்துள்ளன. 35,530 பள்ளிகளில் பயிலும் சுமார் 77 இலட்சம் மாணவர்களுக்கு சரியான விலையில் இப்பாட நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அரசு எடுத்த முடிவினையொட்டி, பின்தங்கிய வகுப்பினர், அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மெட்ரிக் வகுப்பிற்கு முந்திய படிப்பு பயிலும் மாணவர்களுக்கும் அனுமதிக்கப்பட்ட படிப்பு உதவித் தொகை பாட நூல்கள் வடிவில் தான் கொடுக்கப்பட்டன. ரொக்கமாகக் கொடுக்கப்படவில்லை. 1978—79 ஆம் ஆண்டிலும் கூட்டுறவு சங்கங்கள் பாடநூல்களை விற்பனை செய்யும்.

## கட்டுப்பாட்டு விலையில் தாள்களை பகிர்ந்தளித்தல்.

52. 1976 ஜனவரியில் 400 டன் அளவிற்கு சலுகைக் கட்டணத்தில் தாள்களை இந்திய அரசிடம் பெற்று, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து



மாநில அரசு முடிவு செய்த விலையில் மாணவர்களுக்கு விற்பனை செய்தன. 1976—77-ல் 883 டன் தாள்கள் ஒதுக்கப்பட்டன. இதில் 631 டன் தாள்கள் மாணவர்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் சலுகை கட்டணத்தில் தாள்களாகவோ அல்லது தாள்களை நோட்டுப் புத்தகங்களாகத் தயாரித்தோ விற்பனை செய்யப்பட்டன. 1977 டிசம்பர் வரை உள்ள நடப்பாண்டில் 275 டன் தாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பொதுச் சமையல் நிலையங்கள்.

53. விடுதியில் தங்கிப் பயிலாதவர்களுக்கும் கிராமப்பகுதிகளிலிருந்து வந்துள்ளவர்களுக்கும் மலிவான விலையில் உணவு வழங்க கல்லூரி மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலையினால் பொதுச் சமையல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்று இம்மாநிலத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை அத்தகைய 33 நிலையங்களை ஏற்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 22 நிலையங்கள் ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளன. சுமார் 2,000 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 1978—79-ல் மேலும் பல நிலையங்களை ஏற்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

## கல்லூரி பல்கலைக் கழக மாணவர்களின் பண்டகசாலைகள் திறனை வலுப்படுத்துதல்.

54. கல்லூரி பல்கலைக் கழக மாணவர்களின் பண்டகசாலைகளின் திறனை வலுப்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கொண்டு வந்துள்ளது. கல்லூரி மாணவர் பண்டகசாலை ஒன்றுக்கு ரூ 15,000-ம் பல்கலைக்கழக மாணவர் பண்டகச்சாலை ஒன்றுக்கு ரூ. 30,000-ம் சராசரியாக உதவி அளிக்கப்படுகிறது. எட்டு கல்லூரி மாணவர் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளிக்குமாறு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்துக்கு மட்டுமே நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. இயன்றவரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு செயற்குறிப்புகளை அனுப்பி இத் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக அளவு நிதி உதவி பெறக் கருதப்பட்டுள்ளது. இப்பண்டக சாலைகள் தங்களுடைய பணியாளரமைப்புச் செலவினைச் சரிகட்ட மாநில அரசு நிதிகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு பண்டகசாலைக்கு 1,000 ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு நிர்வாக உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது.

[1978 மார்ச் 28

## வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையங்கள்.

55. நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தின் செயல் முறையில் நலிந்த தொடர்பு யாதெனின் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் தாங்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும் என்ப தாகும். இது தனியார் தொழில் அங்காடி உத்திமுறைகள் ஆகியவற்றின் திடீர் மாற்றங்களுக்கு நுகர்வோர் கூட்டு றவுகளை உட்படுத்துகிறது. எனவே, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதலை ஒரு அமைப்பின் மூலம் ஒரு முகப்படுத்தி ஒருங்கு திரட்டுவது அவசியமாயிற்று. இதனால் உற்பத்தியாளர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் இடையே திறமையான பேரம் பேசும் நிலை ஏற்பட இயலும். எனவே, கோயம்புத்தூரில் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையம் ஒன்றை இந்திய அரசின் உதவியுடன் அரசு ஏற்படுத்தியது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவை யானவற்றைப் போதுமான அளவிலும், உரிய நேரத்திலும் எவ்வித இடையூறின்றியும் இந்த நிலையம் வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கு இந்திய அரசு 22.32 இலட்சம் ரூபாய் தமிழ் நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. இதில் கிடங்குகள் கட்டுதல், வண்டி கள் வாங்குதல், கருவிகள் வாங்குதல் ஆகியவை குறித்து 16.75 இலட்சம் ரூபாய் கடனும், 5.57 இலட்சம் ரூபாய் உதவித் தொகை யும் அடங்கும். சென்னையில் மற்றொரு வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையம் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இதற்கு 72.50 இலட் சம் ரூபாய் நிதி உதவி அளிக்கும் செயற் குறிப்பு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப் படுகிறது.

## கூட்டுக் கொள்முதல் திட்டம்.

56. ஏனைய பகுதிகளில் வட்டாரப் பகிர்ந்தளிப்பு நிலையங் களை நிறுவுவதற்கு முன்னோடியாக, மொத்த விற்பனைப் பண்டக சாலைகளினால் கூட்டுக் கொள்முதல் திட்டம் ஒன்றும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. போட்டி விலைகளில் பெரும் அளவு கொள் முதல் செய்கையில் கூட்டுறவுத் துறைகளினால் பேரம்பேசி விலை யைக் குறைத்து வாங்கும் ஆற்றலை இக்கூட்டுக் கொள்முதல் திட்டம் வளர்த்துள்ளது.

## நலிந்த பிரிவினர்களுக்குக் கூட்டுறவுத் துறையின் உதவி.

57. பின்தங்கிய பகுதிகளில் அல்லது சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் தேவையை நிறைவு செய்ய சிறு கிளைகளை ஏற்படுத்திய கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் வலுவான தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளுக்கும் நிதிஉதவி அளிக்கும் திட்டம் ஒன்றை இந்திய அரசு கொண்டு வந்துள்ளது. நலிந்த பிரிவினரில் மிக நலிந்த பிரிவினரான நகரப்பகுதிகளிலுள்ள குடிசை



78 மார்ச் 28]

குதி மக்களுக்குப் பணிபுரிய "ஜனதா அங்காடி" என்றழைக்கப் படும் சிறு கிளைகளைத் தொடங்கும் புதிய திட்டம் ஒன்றும் அண்மை ல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. நலிந்த பிரிவினருக்காக சிறிய கிளைகளையும், நலிந்த பிரிவினரில் மிக நலிந்த பிரிவினருக் க 59 சிறிய கிளைகளையும் (ஜனதா அங்காடிகள்) தொடங்கு தற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள் ன. இவற்றில் சிறிய கிளைகளுக்கான 6 செயற்குறிப்புகளுக்கும், லும் சிறிய கிளைகளுக்கான (ஜனதா அங்காடிகள்) 22 செயற் றிப்புகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இயன்ற அளவு வ்வளவு முடியுமோ அவ்வளவு செயற்குறிப்புகளை அனுப்பி ந்திய அரசிடமிருந்து இத்திட்டத்தின்கீழ் அதிக அளவு நிதி தவியைப் பெறக்கருதப்பட்டுள்ளது. அப்போதுதான் கிராமப் குதிகளிலும், பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள சிறிய கிளைகள் னதா அங்காடிகள் மூலமாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு கர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்ற முடியும்.

## நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

58. தொழிலாளர்கள் சலவைத் தொழிலாளர்கள், முடி ருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் பான்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பயனுக்கான கூட்டு வுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் பணிகளைப் பறுவதன் மூலம் தங்களுடைய உறுப்பினர்களுக்கு தொழிலாளர் ப்பந்தக் கூட்டுறவுச்சங்கங்கள் வேலை வாய்ப்பளித்து வருகின்றன. ற வகைச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கு பணிகளை ல்லது கடன் வசதியை அளிக்கின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு லதனம், கடன் உதவித்தொகை, துறைப் பணியாளர்களின் ணிகள் ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

59. ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான நிதி உதவியை ரசிடமிருந்து பெற்று, திண்டுக்கல்லில் நடப்பாண்டில் சைக்கிள் க்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

ஐந்து தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு .00 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது (பங்கு லதனம். நடைமுறை மூலதனம், சேமநிதி, கருவிகள் வாங்கு ல் ஆகியவற்றை குறித்து 80,000 ரூபாய் கடனும், ஒரு ங்கத்திற்கு நிர்வாக உதவித் தொகைக்காக 20,000 ரூபாய் ம்),

நவீன முடிதிருத்தும் நிலையங்களை அமைப்பதற்காக ஒவ் வான்றும் 0.21 இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில் முடி ருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கு நிதி தவி வழங்கப்பட்டுள்ளது.

நவீன உலர் சலவைப் பிரிவுகளை அமைப்பதற்காக ஒவ்வெறும் 0.33 இலட்சம் ரூபாய் என்ற வீதத்தில் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

60. 1978—79-ல் சிறப்பு வகை சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்க வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 4.76 இலட்சப் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு, முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு, சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு, கூட்டுறவு அச்சகங்கள் ஐந்து ஆகியவை 1978—79-ல் நிதி உதவி பெறும் சங்கங்கள் ஆகும்.

## பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

61. மலைச் சாதியினர் மிக அதிகமாக வாழ்கின்ற பகுதிகளிக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒப் இடத்தில் கடன், விற்பனை வசதிகளுக்கும், ஏனைய ஒருங்கிணை பணிகளுக்கும் வகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1976—77 ஆம் ஆண்டில், சேலம், தருமபுரி திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் பெரி அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தென் ஆற்காடு மாவட்டத்தில், கல்ராயன் குன்றுகளி மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் மூன்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைச் சாதியின பொருளாதார நிலையினைக் கருத்தில் கொண்டு இச்சங்கங்களுக் நிதியுதவியினை அரசு தாராளமாக வழங்கி உள்ளது. சங்கங்க தங்களின் கடன் வாங்கும் திறனைப் பெருக்கிக் கொள்வதற் இயலும் பொருட்டு, பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுற சங்கம் ஒன்றுக்கு 50,000 ரூபாய் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது. மலைச் சாதியினர், கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பங்குகளை வாங்குவதற்கு வகை செய்யு பொருட்டு ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் பங்கு மூலதன உதவி வழங்கப்பட்டுள்ளது. கிடங்கு—அலுவலகம்—சில்லறை விற்பனை நிலையம் கட்டுவதற்காக கடன் பாதி உதவித் தொகை பாதி என்ற அடிப்படையில் நிதியுதவி அளிக்கவும் அரசு அனுமதியளி உள்ளது. இயல்பான வட்டி வீதமான 12.6 சதவீதத் மாருக, குறைந்த அளவு வட்டி வீதத்தில் அதாவது 4 சதவீ வட்டியில் சங்கங்கள், உற்பத்தி மற்றும் நுகர்வுக் கடன்களையு வழங்கும் வகையில் மீதி 8.6 சதவீத வட்டியை அரசு ஈடு செய் கிறது. பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக உதவித்தொகை விரயக்காப்பு நிதிஉதவித் தொகை, விலை ஏற்றத்தாழ்வு உதவித் தொகை போன்ற ஏனைய உதவித் தொகைகளும் அரசால் அனுமதி





பகுரிக்கப்பட்டுள்ளன. பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்வாக இயக்குநர்களாக பணியாற்றுவதற்கு யில் கூட்டுறவு சார் பதிவாளர்கள் பதவிகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இவர்களுக்கான செலவை அரசே ஏற்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இதைப் போன்ற உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1976—77-ஆம் ஆண்டில், பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 12.15 இலட்சம் ரூபாய் உதவித் தொகையை அரசு வழங்கியுள்ளது.

62. ஏழு பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை 7,565 மலைச் சாதிக் குடும்பங்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். 18.41 இலட்சம் ரூபாய் கடன்கள் வழங்கப்படடுள்ளன. மலைச் சாதினரின் 2.80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு சிறு பாருள்களை இச்சங்கங்கள் வாங்கியுள்ளன.

63. மேலும் இரு பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் புதூர் நாட்டில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் அருநூத்துமலையில் மற்றொன்றுமாக அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைகளில் உள்ள 3 பல் நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும், மசினகுடியில் உள்ள மலைச் சாதியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கமும் '' தொன்மையான பழங்குடியினர் '' திட்டத்தின்கீழ், பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றவும் கேட்கப்பட்டுள்ளன.

## கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும்

64. இம்மாநிலத்தில் கூட்டுறவுச் கல்வி, பயிற்சி ஏம்பரம் ஆகியவற்றின் பொறுப்பை சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஏற்றுக் கொண்டுள்ளது. துறையின் இடை நிலையில் உள்ள பணியாளர்களுக்கு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மூலமும் இள நிலைப் பணியாளர்களுக்கு சென்னையில் உள்ள மத்தியக் கூட்டுறவு பயிற்சிசாலை மூலமும் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கமர்த்தப்படுவதற்காக, இள நிலைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக மாவட்டங்களில் உள்ள 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் 36 இலட்சம் ரூபாய் செலவில்

கட்டிடத் தொகுதி ஒன்று கட்டப்படுகிறது. கட்டிடத்தின் செலவுக்காக, அரசு தனது பங்காக 10 இலட்சம் ரூபாயை நடப்பாண்டில் வழங்கியுள்ளது.

65. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆங்கிலம், தமிழ் மாத இதழ்களில் கூட்டுறவு இயக்கத்தின் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை விளம்பரம் செய்தும், விளம்பரக் காரியங்களுக்காக ஊர்திகளை இயக்கியும், அனைத்திந்திய கூட்டுறவு வாரத்தைக் கொண்டாடியும், நூலகங்களைப் பராமரித்தும் கூட்டுறவு நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டும், மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தியும் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

66, உறுப்பினர்கள் கல்வித் திட்டம் எனப்படும், உறுப்பின கள், குழு உறுப்பினர்கள். கூட்டுறவுச் சங்கங்களில் உறு பினர்களாகச் சேரக் கூடியவர்கள் ஆகியவர்களுக்குக் கல் கற்பிப்பதற்கான திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் பா நாசம் வட்டாரத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டு வ கிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, உறுப்பின கல்வித்திட்டம் ஒன்று, தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தா செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு வேளாண்மை பொறியியல்—பணிக் கூட்டுறவுக் கூட்டமைப்பு நிறுவனம் (ENCOFED)

67. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல்—பணிக்கூட்டுறவு கூட்டமைப்பு நிறுவனம், 1972 பிப்ரவரியில் தனது பணியைத் தொடங்கியது. இந்த கூட்டமைப்பின் முக்கிய நோக்க களாவன (i) இணைக்கப்பட்ட வேளாண் பணி நிலையங்களி பணியை ஒருமுகப்படுத்தி மேற் பார்வையிடுதல், (ii) டிராக்ட கள், விசையேற்றங்கள் முதலியவற்றைத் தயாரித்தல், பெ தல், விற்றல் அல்லது விற்பதற்கான முகவராகச் செயல்படு (iii) வேளாண்மை இயந்திரங்களைப் பழுது பார்த்தல், (i இணைக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் பணியாளர்களுக் தொழில் நுட்ப உதவியும் பயிற்சியும் அளித்தல், (v) வேளா பணி நிலையங்கள் மூலம் உழவர்களுக்கு விவசாய இடு பொரு களை வழங்க வகை செய்தல்.

மாவட்ட அளவில் 12 கூட்டுறவு வேளாண் பணிச் சங்கங்களும், வட்டார அளவில் 220 வேளாண் பணி நிலையங்களும் உள்ளன.





இந்த நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் 1 கோடி ரூபாயாகும். அவற்றில் 319 உறுப்பினர்கள் உள்ளனர். அவற்றின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 18.37 இலட்சம் ரூபாயாகும். இதில், அரசுப் பங்குத் தொகையான 5.72 இலட்சம் ரூபாயும் அடங்கும். வட்டார அளவிலான நிலையம் ஒன்றுக்கு, 2 இலட்சம் ரூபாய் என்ற அளவு வரையில் இந்திய ஸ்டேட் வங்கியும் இந்த நிறுவனத்திற்கு உதவி வருகிறது. இதுவரை 207 வட்டார அளவிலான நிலையங்களுக்கு 2,07.20 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடனுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கின்றது.

மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் தவிர, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு வாயிலாகவும் இந்த நிறுவனம் உள்ளது. நானூற்று நாற்பது பொறியாளர்கள், 1,760 ஐ.டி.ஐ. தகுதி பெற்றவர்களுக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்டத்திற்கு மாறாக, இது வரை 183 பொறியாளர்களும் 34 ஐ.டி.ஐ. தகுதி பெற்றவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டீசல் எண்ணெய், மசகெண்ணெய் முதலிய நல்ல தரமுள்ள பெட்ரோலியப் பொருட்கள் போதுமான அளவில் பங்கிடப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு தென் ஆற்காடு, வடஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று பண்ணை எரிபொருள் விற்பனை நிலையங்கள், செயல்பட்டு வருகின்றன. 1978—79-ல் 33 நிலையங்கள் கூடுதலாகத் தொடங்கப்படும். தமிழ்நாட்டில் எரிபொருள் பம்புகளைச் சோதித்துப் பார்த்து சீர் செய்வதற்கென வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, 1977—78 இறுதிக்குள், ஓரிடத்தில் எரிபொருள் பம்ப் சோதனைப் பிரிவு ஒன்று நிறுவப்பட இருக்கிறது. 1978—79 இறுதிக்குள், அத்தகைய நிலையங்கள் மேலும் 6 தொடங்கப்படும். உணவு தானியப் சேமிப்பு இயக்கம், இந்தக் கூட்டமைப்பின் மற்றொரு முக்கியப் பணியாகும். சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களின் பயனுக்காக உணவு தானியக் களஞ்சியங்களை தயாரிக்கும் பணி இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எட்டு இலட்சம் ரூபாய் வட்டியில்லாக் கடன் அதன் நடை முதல் மூலதனத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1976—77-ஆம் ஆண்டில் 2,400 உணவு தானியக் களஞ்சியங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற இலக்கிருக்க 1976 அக்டோபர், 1977 மார்ச் காலத்தில் 2,295 களஞ்சியங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உணவு தானியக் களஞ்சியங்களை வாங்கும் சிறு உழவர்களுக்கும், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் 25 சதவீத உதவித்தொகை அனுமதிக்கப்படுகிறது. இந்த நிறுவனம் உழவர்களுக்குச் சாண எரி வாயுச் சாதனங்களைத்

தயாரித்து நிறுவுவதற்கென ஏற்பளிக்கப்பட்ட ஒரு நிறுவன மாகும். இந்தக் கூட்டமைப்பில் பல்வேறு நிலையங்கள் மூலம் கைத்தறித் துணியும் பங்கிடப்படுகிறது. 1976–77-ல் இது 37,000 ரூபாய் மொத்த ஆதாயம் ஈட்டியது.

## பொது

68. நமது மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் முறைகளில் நடைபெற்ற கையாடல், முறை கேடு கள் இவற்றைக் குறித்துப் புலனாய்வு செய்வதற்காகத் தனி விசாரணைக் குழு ஒன்றை அரசு 1976 ஜூன் திங்களில் அமைத்தது. தலைமைச் சங்கங்கள்— மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு வழங்கல், விற்பனைச் சங்கங் கள், மொத்தப் பண்டகசாலைகள் ஆகியவை உட்பட 50 கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த தனது அறிக்கையை இக்குழு அனுப்பியது. இக்குழு கூட்டுறவுச் சங்கங்களில் செய்யப் பட்ட முறைகேடுகள் பலவற்றை அதாவது முறையற்ற வகையில், பணியாளர்களை நியமனம் செய்தது, மோட்டார் வண்டிகள், தொலைபேசிகள், நிதிகள் முதலியவற்றைத் தவருகப் பயன்படுத்தியது, தேவையற்ற விளம்பரங்கள் செய்தது, பினாமி பெயர்களில் கடன் வழங்கியது. அந்தந்த கூட்டுறவுச் சங்க நிறுவனங்களின் நலனைப் பாதிக்கும் செல வுகள் முதலியவற்றைச் செய்தது ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளது. இம்முறைகேடுகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வ்ருகிறது.

கூட்டுறவுச் சங்க நிறுவனங்களின் பலவகைப்பட்ட முறை கேடுகளை புலனாய்வு செய்வதை விரைவுபடுத்தும் நோக்கத் துடன் காவல்துறை டெபுடி சூப்பிரெண்டுகள் இருவர், இன்ஸ்பெக்டர்கள் முதலிய துணைப் பணியாளர்களையும் தேவையான வாகனங்களையும் காவல்துறை, வணிக சம்பந்த மான குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அரசு 1976ஆம் ஆண் டில் அனுமதியளித்தது. இவை தவிர கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாக முடிவு செய்வதற்காக வணிக சம்பந்தமான வழக்குகளை புலனாய்வு செய்யும் பிரிவில், ஏற்கெனவேயுள்ள 3 உதவி அரசு வழக்கறிஞர்களுடன், 8 உதவி அரசு வழக்கறிஞர்களை நியமிக்கவும் அரசு அனுமதி யளித்துள்ளது, சர்சார்ஜ் நடவடிக்கைகளை எடுக்கவும், வழக்கு களைத் தொடரவும் கூட்டுறவுத் துறையின் சரக அலுவ லகங்களில் 17 கூட்டுறவு சார் பதிவாளர்களை 1978–79-ம் ஆண்டில் நியமிப்பதற்கு அனுமதியளிக்கக் கருதியுள்ளது.

69. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைச் சீரமைக் கும் நோக்கத்துடன் தமிழ்நாடு, 1961ஆம் ஆண்டு கூட்டு றவுச் சங்கச் சட்டத்தில் பலநோக்குத் திருத்தங்களைச் செய் வது அரசின் பரிசீலனையில் உள்ளது.



70. சங்கங்களின் தணிக்கையைப் பொறுத்தவரை, கூட் டுறவு ஆண்டான 1976–77-இல் (ஜூலை 1976 முதல் ஜூன் 1977 வரை) 19,856 சங்கங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டி இருந்தன. இவற்றில், 14,256 சங்கங்களின் தணிக்கைகள் 31— 12— 1977-இல் முடிவடைந்தன. எஞ்சியுள்ள சங்கங்களின் தணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

71. வணிக வங்கிகளிடமுள்ள அதிகமான நிதி வளங்களை வேளாண்மைத் துறைக்குப் பயன்படுத்த இயலச் செய்வதற் காகவும், மாவட்டங்களின் சில பகுதிகளில் கடன் வசதிப் பற்றுக்குறை ஏதுமிருப்பின் அதனை ஈடுசெய்யும் பொருட்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்களுக்குக் கடன் வழங்கும் பணியை வணிக வங்கிகளிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. கிராம வேளாண்மைக் கடன் வசதி சங்கங்கள், தங்களின் நிதித் தேவைகளை மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் பெருமல் சம்பந்தப்பட்ட வணிக வங்கியிடம் பெறும் என்பதே இதற்குப் பொருளாகும்.

72. வங்கிகளின் அதிகாரிகள் ஆதரவோ அச்சமோ இன்றி நியாயமாகப் பணியாற்றவும், பல்வேறு நிலைகளில் தங்களது பதவி உயர்வு வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொள் ளவும், தொடக்க நிலவள வங்கிகள், வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள், மத்திய தலைமைக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றிற்கு ஒரு பொதுவான பணி அமைப்பை ஏற் படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இச்செய்முறையின் முதல் கட்டமாக, இம்மாநிலத்தில் உள்ள 223 தொடக்க நிலவள வங்கிகளின் செயலாளர்களுக்காகப் பொதுவான பணி அமைப்பை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமை-மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சில அதிகாரிகளுக்கும் பொதுவான பணி அமைப்பை ஏற்படுத்தும் செயற் குறிப்பு தீவிர பரிசீலனையில் உள்ளது.

73. இவ்விதமாக, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலையை மேம்படுத்த எல்லா விதமான முயற்சி களும் மேற்கொள்ளப்படுகின்றன.

[1978 மார்ச் 28

## இணைப்பு—IV

[387-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கக் குறிப்பு.

மதிப்பீடு 1978–79 சின்கோனாத்துறை.

மானியக் கோரிக்கைகள் 25—சின்கோனா

மற்றும் 51—மூலதனம்.

பிரிவு—அ

(1) தமிழக அரசின் வணிக நிறுவனங்களில் ஒன்றான சின்கோனாத் துறையானது 1976–77-ஆம் ஆண்டில் பணியாற்றி, மூலதன வட்டிக்காக ரூ. 20·45 இலட்சம் போக ரூ. 62·21 இலட்சம் நிகர ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1977–78-ம் ஆண்டில் மூலதன வட்டிக்காக ரூ. 22 இலட்சமும், நிரந்தர ஒதுக்கீட்டிற்காக ரூ. 15 இலட்சமும் போக, ரூ. 30 இலட்சம் நிகர இலாபம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதைப்போலவே 1978–79-ஆம் ஆண்டிலும் சுமார் ரூ. 37 இலட்சம் நிகர இலாபம் ஈட்டலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சமீப காலத்தில் கொய்னாப் பொருட்களுக்கான தேவை வெளிநாடுகளில் அதிகரித்து வருவதுடன், எதிர்பாராத விதமாக மலேரியா நோய் நம் நாட்டில் தீவிரமாகப் பரவி வருவதன் காரணமாக உள்நாட்டிலும் அவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு, இத்துறையானது ஏற்கனவே சின்கோனா சாகுபடி செய்யப்பட்டு செடித்திரட்சி குறைவாக உள்ள நிலங்களில் அதிக முனைப்புடன் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளது. இது தவிர அதிக வளர்ச்சியில்லாத செடிகளை எடுத்துவிட்டு அந்த நிலங்களில் விரைவான வளர்ச்சி உள்ளதாயும் அதிக பலன் தரக் கூடியவையுமான சின்கோனா மர வகைகளைப் பயிர் செய்ய திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாளன்றின்படி (31–12–77) இத்துறையிலுள்ள சின்கோனாத் தோட்டங்களின் பரப்பளவு பின்வருமாறு :

| நீலகிரி | ஆனைமலை | மொத்தம் |
|---|---|---|
| ஹெக்டேர் | ஹெக்டேர் | ஹெக்டேர் |
| 445·95 | 2,034·68 | 2,480·63 |



1978 மார்ச் 28]

(2) நடுதல் திட்டம் :

1976 முதல் 1979 முடிய உள்ள ஆண்டுகளுக்கான சின்கோனா நடுதல் திட்டம் பின்வருமாறு :

| | | 1976–77. | 1977–78. | 1978–79 |
|---|---|---|---|---|
| | | (ஹெக்டேர்களில்) | (எதிர்பார்க்கப் பட்டது) | (மதிப்பிடப் பட்டது) |
| | | (1) | (2) | (3) |
| 1 | வழக்கமான நடுகைத் திட்டம் .. | 131·00 | 84·63 | 113·00 |
| 2 | பதியன் முறை நடுகைத் திட்டம் .. | 74·00 | 54·71 | 35·84 |
| | மொத்தம் .. | 205·00 | 139·34 | 148·84 |

இத்துறை நம் நாட்டின் மருந்து மற்றும் மணங் கமழ் தைலங்களுக்கான விரிவடைந்து வரும் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் தனது நடவடிக்கைகளைப் பன்முகமாகப் பெருக்கி அதற்கான பயிர் வகைகளைப் பெருமளவில் பயிரிட்டு வருகிறது. 31–12–1977-ஆம் நாளன்று இப்பயிர்கள் பயிரிடப் பட்டுள்ள பரப்பளவு பின்வருமாறு :—

| | ஹெக்டேர். |
|---|---|
| 1 நீலகிரிப் பிரிவு .. .. .. | 732·93 |
| 2 ஆனைமலைப் பிரிவு .. .. .. | 353·30 |
| மொத்த பரப்பளவு .. .. | 1,086·23 |

[1978 மார்ச் 28

இப்பயிர்களின் 1976–79 வருடங்களுக்கான நடுதல் திட்டம் பின்வருமாறு:-

| | 1976–77. | 1977–78. | 1978–79. |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்) | | |
| | | (எதிர்பார்க்கப் பட்டது). | (மதிப்பிடப் பட்டது). |
| ஜெரேனியம் .. .. .. | 15·00 | 28·50 | 26·00 |
| சிட்ரோனெல்லா .. .. | 1·25 | .. | 8·00 |
| பைரேத்ரம் .. .. .. | 2·00 | .. | .. |
| டயாஸ்கோரியா .. .. | 20·00 | 20·00 | 20·00 |
| யூகலிப்டஸ் சிட்ரியோடோரா .. | 15·00 | 6·00 | 6·00 |
| யூகலிப்டஸ் குளோபுளஸ் .. | 10·00 | 12·00 | 9·00 |
| சோலானம் லாசினியாட்டம் .. | .. | 4·00 | 4·00 |
| வின்கா ரோசியா .. .. | .. | 6·00 | 4·00 |
| சோலானம் காசியானம் .. | .. | 20·00 | 2·00 |
| பச்சோலி .. .. .. | .. | 0·50 | 2·00 |
| ஓசிமம் கேம்பரா .. .. | .. | 2·00 | 2·00 |
| சின்னமம் ஜிலானிகம் .. | .. | 2·50 | .. |
| மொத்தம் .. .. | 63·25 | 101·50 | 83·00 |

(3) கொய்னாப் பொருட்களின் உற்பத்தி :

கோவை மாவட்டம் ஆனைமலையில் உள்ள அரசாங்க சின்கோனாத் தோட்டத்திலுள்ள கொய்னாத் தொழிற்சாலையானது இத்துறைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் சின்கோனாப் பட்டையிலிருந்து பல்வேறு வகைக் கொய்னாப் பொருட்களை



1978 மார்ச் 28]

தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. கடந்த நான்கு வருடங்களில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் விபரம் பின் வருமாறு :—

| | 1974–75. | 1975–76. | 1976–77. | 1977–78. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | | (1977 டிசம்பர்) முடிய. |
| | (கிலோக்களில்.) | | | |
| குனைன் சல்பேட் .. | 5,094 | 7,308 | 8,905 | 6,678 |
| குனைன் ஹைட்ரோ குளோரைடு. | 3,570 | 1,476 | 5,044* | .. |
| குனைடின் சல்பேட் .. | 190 | 300 | 250 | 182 |
| சின்கோனா பெப்ரிபியூஜ். | 8,299 | 8,011 | 8,110 | 5,650 |

(*இந்த ஆண்டு குனைன் சல்பேட்டிலிருந்து தயாரித்தது).

1978–79-ஆம் ஆண்டுக்கான கொய்னாப் பொருட்கள் உற்பத்தித் திட்டம் பின்வருமாறு :—

| | (கிலோ கிராம்.) |
|---|---|
| குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு. | 9,000 |
| சின்கோனா பெப்ரிபியூஜ் .. .. .. | 8,000 |
| குனைடின் சல்பேட் .. .. .. .. | 300 |

(4) மருந்து மற்றும் முக்கிய எண்ணெய்கள் உற்பத்தி :

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலத் தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்களை சோதனை செய்து சுத்திகரித்து, தரம் பிரித்து, சிப்பம்கட்டி வெளி இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பும் பணியினைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது. இத்தொழிற்சாலையிலிருந்து 1978–79-ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 14.90 இலட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) விற்பனையும் வருவாயும் :

(அ) கொய்னாப் பொருட்கள் :— இப் பொருட்களுக்கான வெளிநாட்டுத் தேவை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இது தவிர அண்மைக் காலத்தில் பரவி வரும் மலேரியா காய்ச்சலின் காரணமாக இப்பொருட்களுக்கான தேவை உள்நாட்டிலும் வெகுவாக அதிகரித்து வருகிறது. கொய்னாப் பொருட்கள் விற்பனையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| | 1974–75. | 1975–76. | 1976–77. | 1977–78. (எதிர் பார்க்கப் பட்டது.) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| உள்நாட்டு விற்பனை .. | 8.06 | 10·16 | 10·16 | 10.00 |
| வெளிநாட்டுக்கான ஏற்றுமதி .. .. | 64.79 | 119.61 | 110.55 | 70.00 |
| | 72.85 | 129.77 | 120.71 | 80.00 |

1978–79 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனை இரண்டும் சேர்ந்து கிடைக்கும் வருவாய் ரூ. 98 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளில் விற்பனை வருவாய் குறையக் காரணம் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் இன்றியமையாத தேவைகளுக்காக கொய்னாப் பொருட்களை வழங்குவதும் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் குறைவான விலையுமே ஆகும்.

(ஆ) மருந்து மற்றும் முக்கிய தைலங்கள் :

இத்தைலங்களின் விற்பனையால் கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| ஆண்டு. | விற்பனை மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1974–75 .. .. | 5·38 |
| 1975–76 .. .. | 10·41 |
| 1976–77 .. .. | 16·25 |
| 1977–78 .. .. | 13·80 |
| (1977 டிசம்பர் முடிய.) | 8·75 |



(ஆ) மருந்து மற்றும் முக்கிய தைலங்கள்—தொடர்ச்சி

1978–79 ஆம் ஆண்டில் இப்பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. 14·90 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(6) ஆராய்ச்சி :

மூலிகை மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதில் மேம்பாடான முறைகளைக் கண்டறிவதிலும், உயர் விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடி வகைகளை வளர்த்தலிலும் இத்துறை ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. சின்கோனா மற்றும் இதர பயிர்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியின் பொருட்டு அரசின் அங்கீகாரத்துடன் தாவர மரபியல் அறிஞர் ஒருவரைத் தலைமையாகக் கொண்ட ஓர் ஆராய்ச்சி மையம் 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது.

(7) திட்டப் பணிகள் :

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இத்துறையில் செயலாற்றப்பட்டு வரும் திட்டங்கள் பின்வருமாறு :—

(1) சின்கோனாவை முனைப்புடன் பயிரிடுதல்.

(2) மருந்து மற்றும் நறுமணப் பயிர்களை வர்த்தக ரீதியில் பெருமளவில் பயிர் செய்தல்.

(3) மருந்து மற்றும் நறுமண எண்ணெய்ச் செடிகள் பற்றிய முனைப்பான ஆராய்ச்சியும், மேம்படுத்தலும்.

(4) இத்துறையின் தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு, போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் அளித்தல்.

(5) இத்துறையிலுள்ள இரு தொழிற்சாலைகளுக்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குதல்.

(6) மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர்ப் பொருட்களை முன்னோடி அளவில் பதப்படுத்துதல்.

(8) இத்துறையின் நிதியமைப்பு :

1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுடைவாறு (31–3–1977) சின்கோனாத்துறையின் மொத்த

உடைமைகளின் மதிப்பு ரூ. 4,15,11,591·00. இதன் விபரம் பின்வருமாறு :

| நிலையான உடைமைகள். | ரூபாய். |
|---|---|
| சின்கோனாத் தோட்டங்கள் .. .. | 1,02,75,380 |
| விறகுக்குப் பயன்படும் மரவகைகள், மருந்து மற்றும் மணங்கமழ் தைலச் செடிகள் .. .. .. .. | 34,63,262 |
| கட்டிடங்கள், தளவாடங்கள், இயக்க ஊர்திகள் போன்ற இதர இருப்புகள் .. | 1,01,42,123 |
| **தற்காலிக உடைமைகள்.** | |
| பண்டங்கள், நிறைவுபெற்ற பொருட்கள் மற்றும் உற்பத்தி வேலையில் உள்ள பொருட்கள் .. .. .. .. | 1,76,30,826 |
| மொத்தம் .. .. | 4,15,11,591 |

பிரிவு ஆ.

**இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்:—**

இத்துறையின் அண்மைக்காலச் சாதனைகளிற் குறிப்பிடத் தக்கவை பின்வருமாறு :—

(1) மிகக் குறைந்த விலை பெறுவதும் தேங்கி போவதுமான துணைப்பொருளான சின்கோனா பெப்ரி பியூஜிலிருந்து அதிக விலை பெறக் கூடிய குனைன் சல்பேட் மற்றும் குனிடைன் சல்பேட் (இருதய நோய்க்கான சல்பேட் மருந்து) தயாரித்தல்.

(2) சுற்றுப் புறங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் தேயிலைக் கழிவிலிருந்து காஃபின் என்னும் மருந்தினை முன்னோடி திட்டத்தில் தயாரித்தல்.

(3) குடும்ப நலத் திட்டத்தில் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகளை தயாரிப்பதில் மூலாதாரமான 'டயஸ்ஜனின்' என்ற மருந்தை, இத்துறையில் பயிரிடப்பட்டு வரும் டயாஸ்கோரியா கிழங்குகளிலிருந்து ஆய்வக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.



(4) மலேரியாக் கொசுக்களின் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெற 'சினோமாஸ்' என்னும் களிம்பும் 'சின்ஸ்ப்ரே' 'சின்ஸ்பிரஷ்' என்ற தெளிப்பான்களும் குறைந்த விலையில் தயாரித்து விற்பனை செய்து இத்துறை சேவை புரிகிறது.

(5) நீலகிரி மாவட்டத்தின் பருவநிலைகளுக்கு ஈடு கொடுத்து செழித்து வளரக்கூடிய புதிய வகை ஜெரேனியம் பயிரிடப்படுகிறது.

பிரிவு-இ.

**இலங்கை அகதிகளின் மறுவாழ்வுத் திட்டம் :**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரை குடியமர்த்த ஆனைமலை அரசினர் சின்கோனாத் தோட்டங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு வருவாய்த் துறையினால் 1973 ஏப்ரல் திங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 125 அகதிகள் குடும்பத்திலிருந்து 250 நபர்களை வேலைக்கமர்த்தப்பட வேண்டும். இதுகாறும் 198 குடும்பத்திலிருந்து 216 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 10 வீடுகள் அடங்கிய ஒரு புதிய தொழிலாளர் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளதுடன் 4 பழைய குடியிருப்புகள் பழுது பார்க்கப்பட்டு செம்மைப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒரு புதிய குடியிருப்பு கட்டப்பட்டு வருகிறது.

மேலும், "மேல் பழனி" மலைத் தொடரில் (கொடைக்கானல்) சுமார் 800 ஏக்கரில் ஜெரேனியம் பயிரிடும் திட்டம் தமிழக அரசின் தீவிர கவனத்தில் உள்ளது.

நிதி நிலை.

**(அ) கோரிக்கை எண். 25—சின்கோனா :**

1977–78 ஆம் ஆண்டு க்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த மதிப்பீடான ரூ. 92.78 இலட்சம், அவ்வாண்டு திருத்திய மதிப்பீடு அளிக்கும்போது ரூ. 115/49 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளிலிருந்து இத்துறையின் 2,600 தொழிலாளர்கட்கும் ஒருமித்த ஊதிய உயர்வு அளிக்கும் வகையில் ஏற்பட்ட அதிகப்படி செலவுகளை சரிக்கட்டவும், அதிகப்படியான கொய்னா மற்றும் ஏனைய பொருட்களைத் தயாரிக்க மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் செலவுகளை ஈடுசெய்யவும், தீவிர பயிர் வளர்ப்பு முறைகளைப் பயன்படுத்தி கொய்னாப் பட்டையின் உற்பத்தியையும் மருந்து மற்றும் மணங்கமழ் தைலங்களின் உற்பத்தியையும் பெருக்குவதற்கும் இந்த அதிகப்படியான நிதி அளிக்கப்பட்டது.

## 1978–79 ஆம் ஆண்டின் நிதி நிலை :

1978–79 ஆம் ஆண்டிற்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 118.92 இலட்சமாகும். இந்த அதிகப்படியான நிதித் தேவை தொழிலாளர்களின் ஊதிய உயர்விற்காகவும், இந்த ஆண்டில் புதிதாக சின்கோனாப் பயிரிடுதலைத் தவிர ஏற்கெனவே சின்கோனாப் பயிரிடப்பட்ட நிலங்களின் பராமரிப்புச் செலவிற்காகவும் கோரப்பட்டது.

## (ஆ) கோரிக்கை எண். 51—மூலதனம் :

1977–78 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது. இந்த நிதியானது தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டும் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வாங்கவும் வழங்கப்பட்டது.

## 1978–79 ஆம் ஆண்டின் நிதிநிலை :

1978–79 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் பழுதுபார்த்தல், சாலைகள் அமைத்தல் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக ரூ. 10/01 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை எண்கள் 25, 51-ன் தலைப்புக்களின் கீழ், மதிப்பீடு 1977–78, திருத்திய மதிப்பீடு 1977–78, மற்றும் மதிப்பீடு 1978–79 ஆகியவற்றில் வழங்கப்பட்ட நிதியின் சுருக்கம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் வீட்டு வசதி.

1978–79 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் 100 புதிய தொழிலாளர்கள் குடியிருப்புக்கள் கட்டும் பணிக்காக ரூ. 8 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள குடியிருப்புக்கள் முப்பது-நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டவை. இவற்றில் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள வசதிகள் இல்லை. எனவே, தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளைத் திட்டமிட்ட முறையில் கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய குடியிருப்புக்கள் மின்சார வசதியுடன் கழிப்பு அறைகளையும் கொண்டதாயிருக்கும்.





முடிவுரை —

சின்கோனாத் துறை, தொழிலாளர்களை அதிக அளவில் பயன்படுத்தி இயங்கி வருவதால், நிர்வாகத்திற்கும் தொழி லாளர்களுக்குமிடையே நல்லுறவு இன்றியமையாததாகும். எனவே, இத்துறை தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளையும் அளித்து தொழிலாளர்கள்-நிர்வாகம் ஆகியோருக்கு இடையே சுமுகமான உறவைத் தொடர்ந்து நிலவச் செய்கிறது. இத்துறை ஆண், பெண் தொழிலாளர் களுக்கு சம ஊதியம் கொடுக்கிறது. இதை 1975 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் முதல் அமுல்படுத்திய தில், ரூ. 2.5 இலட்சம் 1977 ஆம் ஆண்டு பாக்கித் தொகை யாக கொடுத்துள்ளது, இத்துறையில் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் திட்டப்பணிகளின் கீழ், அதிக அளவு தொழி லாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வேலைவாய்ப் பளிக்கப்படுகிறது.

## இணைப்பு IV-.A

320. தொழில்கள்—கோரிக்கை எண். 25—

| விவரங்கள் (கணக்குத் தலைப்புகள்.) | வரவு, செலவு மதிப்பீடு, 1977–78. | திருத்திய மதிப்பீடு, 1977–78. | வரவு, செலவு மதிப்பீடு 1978–79. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| இயக்கம் .. .. .. | 6.84 | 7.19 | 7.52 |
| தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை). | 32.70 | 46.40 | 46.14 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் வாசனை எண்ணெய் தொழிற்சாலை, நடுவட்டம் மற்றும் அரசினர் கொய்னா தொழிற்சாலை, ஆனைமலை) .. | 10.76 | 11.04 | 11.30 |
| விற்பனை பிரிவு .. .. | 1.13 | 1.12 | 1.18 |
| பணி ஆய்வு மற்றும் (திட்டம்) | 22.35 | 27.74 | 28.78 |
| மூலதனத்திற்கான வட்டி .. | 19.00 | 22.00 | 24.00 |
| மொத்தம் .. | 92.78 | 1,15.49 | 1,18.92 |

[1978 மார்ச் 28

526. தொழில் வளர்ச்சிக்கான மூலதனம் இடல்—கோரிக்கை எண். 51—

| விவரங்கள் (கணக்குத் தலைப்புகள்). | வரவு-செலவு மதிப்பீடு-1977–78 | திருத்திய மதிப்பீடு-1977–78 | வரவு-செலவு மதிப்பீடு 1978–79 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கட்டிடங்கள் .. .. .. | 8.00 | 8.00 | 0.01 |
| 1978–79(பகுதிஇரண்டுதிட்டத்தின் கீழ்) .. .. .. | .. | .. | 8.00 |
| தளவாடங்கள் மற்றும் தொழிற் கருவிகள் .. .. .. | 1.00 | 2.00 | 2.00 |
| மொத்தம் | 9.00 | 10.00 | 10.01 |

## இணைப்பு V.

[387..........-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## வனத்துறை மான்யக் கோரிக்கை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

காடுகள் இன்றியமையாத இயற்கை வளங்களைக் கொண்டவை. நாட்டின் பொருள் வளத்திலும், மக்களின் நல் வாழ்விலும் அவை பெரும் பங்கு பெறுகின்றன. மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களான மரத்தடிகள், விறகு, எருத் தழை (மரம்), பிசின், பட்டைகள் (தோல் பதனிடும்) எண்ணெய் வகைகள், உண்ணத்தக்க பழங்கள், பருப்புகள் மற்றும் வேறு பல பொருள்களையும் காடுகள் வழங்குகின்றன. காகிதம், அட்டை, மர இழைப்பட்டு, மரத்தூள், பலகை, தோல் பதனிடும் பொருள், நறுமணப் பொருள் ஆகியவற்றை ஆக்கும் தொழில்களுக்கும் பிற தொழில்களுக்கும் பயன்படும் மூலப் பொருட்களையும் காடுகள் வழங்குகின்றன. இந்த வெளிப்படையான பயன்கள் மட்டுமன்றி மண்வள ஈரக் காப்பிலும், தட்பவெப்ப மிகுநியைத் தணிப்பதிலும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேடுகளின் விளைவை மட்டுப்படுத்துவதிலும் காடுகளில் பயன



1978 மார்ச் 28]

கள் குறிப்பிடத்தக்கனவாம். கண்ணைக் கவரும் வன விலங்குகள் வாழ்விடமும் காடுகள் தாம். எனவே, காடுகள் காத்தலும் மேம்படுத்தலும் தலைமையான இடத்தைப் பெறுகின்றன. வனத் துறையின் மேம்பாட்டு நடவடிக்கைகள் கிராமப் புறப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

நம் மாநிலத்தில் வனத் துறையின் கீழுள்ள காட்டின் பரப்பு 20,844 சதுர கிலோமீட்டராகும். இதில் 17,300 சதுர கிலோ மீட்டர் ஒதுக்குக் காடாகவும், எஞ்சிய 3,544 கிலோமீட்டர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது. இம் மாநிலத்தில் பதினறு விழுக்காடு நிலமே ஒதுக்குக்காடாகவும் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது. இது தேசீய வனக்கோட்பாட்டின்படி வகுக்கப்பட்ட குறைந்த அளவின் பாதியைக் காட்டிலும் குறைவு. பண்ணைக் காடுகள் (Village Forests) மற்றும் வனவிரிவாகத் திட்டத்தின் (Extension Forestry) கீழும், வறட்சி தணிப்புத் திட்டத்தின் கீழும் காடுகளுக்கு வெளியே ஊராட்சி நிலங்களிலும், அரசு புறம்போக்கு நிலங்களிலும் காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டுள்ளன. காடுகளின் பரப்பை உயர்த்த ஓரளவுக்கு இவை துணை செய்யும். காடு சாராத நோக்கங்களுக்கு வனத் துறையைச் சேர்ந்த நிலங்களை விடுவிப்பது இல்லை எனவும் அரசு முடிவு செய்துள்ளது.

### வரவும்-செலவும்.

காடுகளிலிருந்து 1976–77-ஆம்ஆண்டில் ரூ. 1,2,85.91 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. 1976–77 ஆம் ஆண்டில் ரூ. 6,01.39இலட்சம் வருவாய் தந்து சந்தனமரம் வனத்துறையின் வருவாயில் பெரும் பங்கு பெற்றுள்ளது. மரமும், விறகும் ரூ. 3,29.01 இலட்சம் வருவாயாகத் தந்துள்ளது. 1977–78-ல் காடுகளிலிருந்து கிடைக்கவிருக்கும் வருவாய் ரூ. 9,69.50 இலட்சமும், 1978–79-ல் ரூ. 974.78 இலட்சம் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், சந்தனக் கட்டையின் விலை குறையாமல் இருப்பின் 1977–78 மற்றும் 1978–79-ல் கிடைக்கும் வருவாய் 1976-77-ல் கிடைத்த வருவாயைக் காட்டிலும் குறைவாக இருக்காது.

''காடுகள்'' தலைப்பின் கீழ் 1977–78-ல் ரூ. 9,48.50 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978–79-ல் திட்டமிடப்பட்டுள்ள செலவு ரூ. 10,00.86 இலட்சம். இதில் ரூ. 46.56 இலட்சம், 1977–78 ஆம் ஆண்டிற்கும், ரூ. 42.53 இலட்சம், 1978–79 ஆம் ஆண்டிற்கும், வறட்சியால் பாதிக்கப்படும் பகுதி திட்டத்திற்காகும். செலவுத் தொகையின் பெரும்பகுதி, காடுகளில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வகையில்

செயல்படும் திட்டங்களுக்கான முதலீடாகும். மரம், விறகு, தொழில்துறைகளுக்குத் தேவையான மரம், மற்றும்அத்தியாவசியமான காட்டுப் பொருட்களின் பெருகிவரும் தேவைகளை ஈடு செய்யும் நோக்கோடு வனத்தோட்டங்கள் அமைத்தல் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திட்டங்களைச் செயல்படுத்தல்.

பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 4,11.17 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூ. 290.93 இலட்சம் மாநில திட்டங்களின் கீழ் தொழில் மற்றும் பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த தோட்டங்களை வளர்க்கவும், வன இயல் ஆய்வு, வனத் திட்டம், மண்வளப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்தவும் செலவழிக்கப்படும். மத்திய அரசு உதவி திட்டங்களான மேற்கு மலைத்தொடர் திட்டத்தின் கீழ் ரப்பர் தோட்டங்கள், கிராம்புத் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், மரக்கூழ் தோட்டங்கள் முதலியன வளர்ப்பதற்கு 1977–78-ல் ரூ. 89.61 இலட்சம் செலவழிக்கப்படும். மத்திய அரசு உதவித் திட்டமான சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் (Social Forestry) ரூ. 22 இலட்சம் செலவு செய்யப்படும்.

1978–79-ல் மாநில வனத் திட்டங்களுக்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 320,25 இலட்சம். மாநில மண்வளத் திட்டங்களுக்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 19.10 இலட்சம். மத்திய அரசின் திட்டத்துக்கென ரூ. 1,13.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காடு வளர்ப்பு என்பது முதலீட்டிற்கும், விளைபயனுக்கும் இடையே நீண்டகால இடைவெளி கொண்ட நீண்டகாலத்திட்டம் என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பல திட்டங்கள் பயன்தரத் தொடங்கி, மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றுகின்றன.

## காடு சார்ந்த தொழில்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கல்.

மாநிலத்தில் உள்ள சில பெரிய தொழிற்சாலைகளுக்கு இத்துறை மூலப்பொருள்களை வழங்கி வருகின்றது. 1977–78-ம் ஆண்டின் "சேஷ சாயி" காகித தொழிற்சாலைக்கு 50,000 டன் மூங்கில் வழங்கப்படும். மர இழைப்பட்டு கூழ் தயாரிப்பதற்காக சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்திற்கு 1977–78 ஆம் ஆண்டில் 1,156 ஏக்கர் (Blue gum) கற்பூரமர தோட்டங்களும், 500 ஏக்கர் (Eucalyptus grandis) கிராண்டிஸ் தைல வகைத் தோட்டங்களும் ஒதுக்கப்பட்டன. இத் தோட்டங்களிலிருந்து சுமார் 70,000 டன் மரம் கிடைக்கும்



என எதிர்பார்க்கப்படுகிறது. கோடைக்கானல், நீலகிரி குன்றுகளில் உள்ள தோட்டங்களிலிருந்து மிலாறு பட்டைகள் டான் தோல் பதனிடு தொழிற்சாலைக்கு வழங்கப்படுகின்றன. 6,518 டன் பட்டைகள் 1976 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## சந்தனமரத் தொழில்கள் நிறுவுதல்.

சந்தனமரம் காடுகளிலிருந்து வரும் வருவாயில் பெரும் பங்கு பெறுகின்றது. ஆண்டுதோறும் சுமார் 1,500 டன்கள் சந்தனக்கட்டை ஏலத்தில் விற்கப்பட்டு ரூ. 5 கோடிக்கும் மேலாக வருவாய் வருகிறது. காடுகளிலிருந்து கிடைக்கும் சந்தனக் கட்டையினை ஏலத்தில் விற்பதற்கு பதிலாக, சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஊதுவத்தி தயாரிப்பு போன்ற ஏனைய துணைத் தொழில்களும் அமைக்கலாம்.

## சந்தனமரக் காடுகளின் பாதுகாப்பு.

நமது மாநிலத்திலுள்ள விலை மதிப்பு வாய்ந்த சந்தன மரக் காடுகளை சீரிய முறையில் பாதுகாக்கும் பொருட்டு, தற்போதுள்ள நிர்வாக அமைப்புகளைத் தக்கபடி மாற்றியமைத்து திருவண்ணாமலையில் இதற்கென தனியே ஒரு கோட்டத்தினை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இச்செயற் குறிப்பு கோவை வட்டத்திலுள்ள சந்தனமரப் பகுதிகளைக்காக்க கூடுதலாக காப்பு ஆட்கள் நியமிக்கவும், தனி இயங்கு குழுக்களை ஏற்படுத்தவும், வாகனங்கள் போன்ற போக்குவரத்து வசதிகளை தரவும், ஆயுதங்கள் வாங்கவும் வகை செய்கிறது.

## நியாயவிலை விறகுக் கடை.

விறகு விலை ஏற்றத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு அரசு சென்னை நகரில் சில்லறை விறகு விற்பனைக் கடைகளைத் திறந்துள்ளது. வனத் துறை காட்டுப் பகுதிகளிலிருந்து விறகுகளை எடுத்துவந்து மத்திய கிடங்குகளில் சேர்ப்பிக்கிறது. சில்லறை விற்பனைக் கடைகள் உணவு வழங்கு கழகத்தால் நடத்தப் படுகின்றன. துவக்கத்தில் சென்னை நகரில்இருபது சில்லறை விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## புயல் நிவாரணப் பணிகள்.

தஞ்சாவூர், தென்னாற்காடு, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டு வீடிழந்த மக்களுக்கு வீடு கட்டத் தேவையான

மூங்கில், சவுக்கு, தேக்கு மரத்தடிகள், காற்றுல் விழுந்த தைல மரங்கள் முதலியவற்றை நியாய விலையில் வழங்கும்பொருட்டு வனத்துறை விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது.

கேரள அரசிடமிருந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென 25,000 தேக்குமரத் தடிகள் அன்பளிப்பாக பெறப்பட்டன.

கடற்கரை நெடுக காற்றுத் தடுப்பு மரங்களை ஏற்படுத்தும் நோக்கோடு கடற்கரையிலிருந்து 2 கிலோ மீட்டருக்குள் சவுக்கு போன்ற மரங்களை வளர்க்கும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இது மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படவிருக்கும் ஒரு திட்டமாகும்.

## சமூகக் காடு வளர்ப்புத் திட்டம். (Social Forestry Scheme)

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்வணியில் உள்ளது. இத்திட்டம் 1960-ல் துவக்கப்பட்டது. இதுவரை சுமார் 67,000 ஹெக்டேர் நிலங்களில் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளது. 1977–78-ல் மேலும் சுமார் 12,000 ஹெக்டேரில் தோட்டம் வளர்க்கப்படும். தரிசு நிலம், ஏரிக்கரை மற்றும் தரிசு மலைப் பகுதிகளில் காடுகளை ஏற்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஊராட்சிக்குச் சொந்தமான நிலங்களில் தோட்டம் வளர்க்கப்பட்டால், அத் தோட்டங்களின்மூலம் வரும் வருவாயில் 50 விழுக்காடு ஊராட்சி மன்றங்களுக்கே தரப்படுகிறது. இது நிலங்களை வனத் துறையிடம் ஒப்படைப்பதற்கு ஒரு ஊக்குவிப்பாகும். கருவேலம், தைலமரம், ஓடை, பரம்பை, முந்திரி போன்றவை இத் திட்டத்தில் வளர்க்கப் படுகின்றன. இத் தோட்டங்கள் கிராமப்புற மக்களின் எரி பொருள், மரம், பசுந்தழை உரம் போன்ற தேவைகளை நிறைவு செய்கின்றன. இத்தோட்டங்கள் மண்வளம் மற்றும் ஈரப்பசை முதலியவற்றைக் காப்பதோடு சுகாதார சூழ்நிலையினை பெறுவதற்கும் பெரிதும் உதவுகின்றன. மத்திய அரசு இந்த சமூக காடு வளர்ப்புத் திட்டத்தினை மத்திய அரசு உதவி தரும் திட்டமாக ஏற்று உதவி தந்து வருகிறது. 1977–78-ல் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கெனவே நான்கு தனிக் கோட்டங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1978–79-ல் இக் கோட்டங்கள் காட்டு பகுதிகளுக்கு வெளியே 3,000 ஹெக்டரும், காடுகளில் 1,500 ஹெக்டரும் தோட்டம் வளர்க்கும் பணியினை மேற்கொள்ளும்.





## மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டம்.

இது மத்திய அரசு திட்டம். மேற்கு மலைத் தொடரில் உள்ள இயற்கை வளத்தை அப்பகுதியின் பொது வளத்திற்கு ஏற்ப பயன்படுத்தலும் வளர்த்தலும் இதன் நோக்கங்கள். 1975–76-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இரண்டு பணிகளை இத் துறை மேற்கொண்டது. அவை (அ) நீலகிரியில் தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல், (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல்—இதற்கென ரூ. 18/83 இலட்சம் செலவழிக்கப்பட்டது 1976–77-ல் இவற்றுடன் மேலும் இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை (அ) மதுரை மாவட்ட பழனி மேல் மட்ட குன்றுகளில் கூழ் மரங்கள் வளர்த்தல் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்த்தல். இத்திட்டத்தின் கீழ் 1976–77 ஆம் ஆண்டில் ரூ. 31/87 இலட்சம் செலவிடப்பட்டது. 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 78/87 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். 1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 78/92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வறட்சி தணிப்புத் திட்டங்கள்.

தணிப்புப் பணியாக வறட்சியில் பாதிக்கப்பட்ட இடங்களில் தோட்டங்கள் வளர்த்தல் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. நீர் வறட்சியைத் தவிர்க்க மக்களுக்கு நிலையான ஏற்பாடாக மரம் வளர்த்தலும், வறட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் தீர்ப்பு இடை ஏற்பாடாக வேலை வழங்கலும் இதன் நோக்கங்களாம். இத்திட்டத்தின் கீழ் 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 3/64 இலட்சம் செலவிடப்படும்.

## வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளில் திட்டம்.

இது ஒரு மத்திய அரசு ஆதரவு திட்டம். வறட்சியால் பாதிக்கப்படும் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் இது செயல்படுத்தப்படுகிறது. காடு வளர்த்தலும் புல் வளர்த்தலும் முதன்மையாக செயலாக்கப்படுகின்றன. 1977–78 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 46/56 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். 3,440 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும். 1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 42/53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மரம் நடுவிழா.

மத்திய அரசு, மற்றும் மத்திய வன ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க 1976—77ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் மரம் நடுவிழா பெருமளவில் கொண்டாடப்பட்டது. ஆளுநரை தலைவராகவும், வனத்துறை அமைச்சரை துணைத் தலைவராகவும் கொண்டு மாநிலக்குழு ஒன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி, கல்வி நிலையங்கள் சார்ந்த நிலங்கள், தனியார் நிலங்கள் முதலியவற்றில் மரம் நடுதல் ஊக்கப்படுத்தப்பட்டது. நாற்றங்கால் எழுப்புதலும் கன்றுகள் வழங்குதலும் வனத்துறை மற்றும் வேளாண்மைத் துறைகளால் மேற்கொள்ளப்பட்டன. 1976-77ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் 92 இலட்சம் நாற்றுகள் நடப்பட்டன. 1977—78ஆம் ஆண்டிற்கு மரம் நடுதற்கான குறிக்கோள் 150 இலட்சமாகும்.

நகர்ப்புறங்களில் உள்ள மரங்களை வெட்டப்படுவதை தக்க முறையில் சீர்படுத்திப் பாதுகாக்கவும், நகர்ப்புறங்களில் மேலும் புதிய மரங்களை நடும்படி செய்வதற்கும் என ஒரு தனிச் சட்டம் இயற்றும் எண்ணம் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

## தனியார் காடுகளை அரசு எடுத்துக் கொள்ளுதல்: ''ஜாகிர் காடுகள்''

தென்னாற்காடு மாவட்ட ஜாகிர்தாரர்கள் வழக்கைத்திரும்ப பெற்றுக் கொண்டவுடன் சுமார் 1,00,000 ஹெக்டேர் சாகிர்காடுகளை 1976 ஆகஸ்டு மாதத்தில் அரசு எடுத்துக் கொண்டது. இச் சாகிரில் பெரும் பகுதி காடாகும். ஒரு உதவி வனப்பாதுகாவலர் மற்றும் சார்நிலை கள அலுவலக பணியாளர் அடங்கிய சிறிய பணித் தொகுதிக்கு ஒப்பு அளிக்கப்பட்டது. பாதுகாப்புப் பணியுடன் எல்லைகளை வரையறுக்கும் பணியையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இவைகளை ஒதுக்குக் காடுகளாகப் பின்னர் அறிவிக்கப்படும்.

## கூடலூர் ஜென்மம் நிலங்கள்.

இந்திய அரசியல் அமைப்பினை திருத்தம் செய்து, அதன் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்ததன் மூலமாக 1969ஆம் வருடத்திய கூடலூர் ஜென்மம் ஐயன் (ஒழிப்பு மற்றும் ரயத்வாரி மாற்றம்) சட்டம், 27—11—1974 முதல் நடைமுறைக்கு வந்தது. ஜென்மம் நிலங்களின் மொத்தப்பரப்பு 32,400 ஹெக்டேர். இதில் 16,220 ஹெக்டேர் காட்டுப் பகுதிகளாகும். வருவாய்த்துறை நிர்ணய வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 4,622 ஹெக்டேர் காட்டுப் பகுதியாக இச்சட்டத்தின் பிரிவு 53-ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.





## பழங்குடியினர் வளர்ச்சி.

இம்மாநிலத்தில் பழங்குடியினர் தொகை 3.11 இலட்சமாகும். அவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வனத்துறை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவர்கள் வேளாண்மை மேற்கொள்ள குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது. வனத்துறையின் தோட்டங்களின் ஊடே பயிரிடும் 'கும்ரி' முறையை மேற்கொள்ளவும் அவர்கள் தூண்டப்பட்டுள்ளனர். இந்த முறையில் வேளாண்மை செய்யப்படும் பயிர் வகைகளோடு காட்டுத் தோட்டங்களும் வளர்க்கப்படுகின்றன. அவர்களுடைய கால்நடைகள் இலவசமாக மேயவிடப்படுகின்றன. அவர்களுக்கு பயிர் செய்யவும் வீட்டு உபயோகங்கட்குத் தேவையான பொருட்களை காடுகளிலிருந்து இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். காடு பணிகளிலும் அவர்கள் அமர்த்தப்படுகின்றனர். சிலர் வனத்துறையில் பணியாளர்களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பழங்குடியினர்கள் குழந்தைகளுக்காக வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் இத்துறை பள்ளிக்கூடங்களை நடத்துகின்றது. 12 (துவக்கப் பள்ளிகளும், ஒரு உயர் துவக்கப் பள்ளியும்) ஒரு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. பிள்ளைகளுக்கு நண்பகல் உணவும், ஆடைகளும், பாடநூல்களும், எழுதுபலகைகளும்இலவசமாக வழங்கப்படுகின்றது. சில பள்ளிகளில் தங்கும் விடுதிகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விறகு கூப்புகளும், சிறு பொருள் சேகர பகுதிகளும் குறைந்த தொகையில் இச்சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. அவர்களுக்கு மருத்துவ வசதி, வீட்டு வசதி முதலியவற்றையும் இத்துறைத் தந்துள்ளது. பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்களுக்கென 1977—78ஆம் ஆண்டு ரூ. 7·50 இலட்சம் செலவிடப்படும். 1978—79—ல் இதற்கென ரூ. 12.10 இலட்சம்ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்னாற்காடு, சேலம் மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகளிலுள்ள பழங்குடி மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கோடு கடுக்காய், கருவேப்பிலை, புளி போன்ற காடுபடு சிறு பொருட்களை குறைந்த குத்தகை தொகைக்கு எடுத்துச் செல்லும் உரிமையினை அரசு அளித்துள்ளது. பழங்குடியினர் முன்னேற்றத்திற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவுக் கழகங்களுக்கு (LAMP Societies) இக்குத்தகைகள் ஆண்டொன்றிற்கு ரூ. 25 என்ற வீதத்தில் தரப்படுகின்றன.

## தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்.

இலங்கை அகதிகள் மறுவாழ்விற்காக 1969–ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட தேயிலை வளர்ப்புத் துறை திட்டத்தை தனியாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமாக 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றப் பட்டுள்ளது. 1,500 ஹெக்டேர் பரப்பில் தேயிலை வளர்த்து 1,875 அகதிக் குடும்பங்களைக் குடியமர்த்த வேண்டும் என்பது திட்டத்தின் குறிக்கோள். தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ரூ. 90 இலட்சம் செலவில் ஒரு நவீன தேயிலை தொழிற் சாலை சேரங்கோட்டில் நிறுவப்பட்டுள்ளது.

குன்னூரில் இன்னுமொரு, தேயிலைத் தொழிற்சாலையினை ரூ. 49 இலட்சம் செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜென்மம் நிலங்களில் 1,500 ஏக்கர் பரப்பில் தேயிலைத் தோட்டம் ஏற்படுத்தும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, அது வேளாண்மை நிதி உதவி மேம்பாட்டு கழகத்தின் (Agricultural Refinance and Development Corporation) பரிசீலனையில் உள்ளது.

## தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், 1956-ம் வருட கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 13—6—1974 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இதனுடைய பதிவு பெற்ற அலுவலகம் திருச்சியிலுள்ளது. இக்கழகத்தின் பங்குகள் முழுவதும் அரசினுடையது ஆகும். இராமநாதபுரம், திருச்சி, தென்னாற்காடு, மாவட்டங்களிலுள்ள 76,578 ஹெக்டேர் பரப்பளவுள்ள காட்டு நிலங்களை இக்கழகத்திற்கு நீண்ட காலக் குத்தகைக்குத் தரப்பட்டுள்ளது. இதில் 37,000 ஹெக்டேர் ஏற்கனவே தோட்டம் வளர்க்கப்பட்ட நிலங்களாகும்.

இக்கழகம் தென்னாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 30,000 ஹெக்டேரில் தைல மரத் தோட்டங்களை ஏற்படுத்த பெரும் திட்ட மொன்றினைத் தயாரித்துள்ளது. இத்திட்டம் வேளாண்மை நிதி உதவி மேம்பாட்டு கழகத்திடமிருந்து ரூ. 251 இலட்சமும், அரசின் நிதி உதவி ரூ. 77 இலட்சமும் கொண்டு செயல் படுத்தப்படும். அரசும், வேளாண்மை நிதி உதவி மேம்பாட்டு கழகமும், நான்கு தேசிய வங்கிகளின் கூட்டமைப்பும், தோட்டக் கழகமும் சேர்ந்து சமீபத்தில் இது பற்றி ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளன.



வனத் துறையிடமிருந்து மதுரையிலுள்ள அரக்குத் தொழிற்சாலையினை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலையின் முக்கிய தயாரிப்புகள் ''பிரெஞ்சு பாலிஷ்'' ''பிக்சர் வார்னிஷ்', ஆகும்.

## ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலையும்.

அரசு ரப்பர் தோட்டங்கள் மற்றும் ரப்பர் தொழிற்சாலை தொடர்பான நடைமுறைப்பணிகளை விரைவு செய்ய தக்க அமைப்பொன்று காணும் கருத்துடன் தேவையான அதிகாரங்களுடன் ஆளுகைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு அவ்வப்போது கூடி அரசு ரப்பர் தோட்டங்களில் நடைபெறும் வேலைகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்வதோடு ரப்பர் தோட்டங்களில் செயலாக்கப்பட வேண்டிய திட்டங்களையும் ஒப்பளிக்கிறது. இதுவரை, வளர்க்கப்பட்ட ரப்பர் தோட்டங்களின் பரப்பு 4,163.70 ஹெக்டேர். இதில் 1,240 ஹெக்டேர் பரப்பிலிருந்து ரப்பர் பால் எடுக்கப்படுகிறது.

அரசு ரப்பர் தோட்டம், தொழிலாளர்க்கு பலவித வசதிகளைச் செய்து தருகிறது. இதுவரை 531 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 200 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 300 வீடுகள் அடுத்தஆண்டு கட்டப்படவிருக்கின்றன. மருத்துவ, கல்வி, போக்குவரத்து வசதியும் தொழிலாளருக்கு அளிக்கப்படுகின்றன,

## திட்ட செயலாக்கமும் 1978–79க்கான திட்ட நிரலும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வனத்துறையால் நிறைவேற்றப் பட்ட திட்டங்களின் விரிவான விளக்கங்களும், 1978–79-ம் ஆண்டுக்கான செயல் குறிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன:—

### வனத் திட்டங்கள்.

வனத் திட்டமே காடுகள் நிர்வாகத்தின் அடிப்படையாகும். வனத்திட்டமிடல் பணிக்கு வலிவு சேர்க்கவும் அது நவீனமாக்கப் படுவதற்கு தேவையான கருவிகளை வாங்கவும், போதிய வாய்ப்பைத் தருகின்றது. 1977–78ஆம் ஆண்டில் ரூ. 0.39 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1978–79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 0.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வன இயல் ஆய்வும் கல்வியும்.

காடு வளர்ப்புக்கலை (Silriculture) மரபியல் ஆய்வு (Genetics), மண்ணிலாய்வு (Soil Science) கோமியல் ஆய்வு (Forest pathology), ஆகிய துறைகளில் ஆய்வு மேற்கொள்ளத்தக்க வகையில் ஆய்வுத் துறைக்கு வலிவு சேர்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 4.97 இலட்சம் செலவழிக்கப்படும். மரபியல் ஆய்வு (Forest Genetics) உருவளவு (Forest Mensuration) துறைகளிலும் ஆய்வை விரிவு படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1978–79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 10.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1978–79ல் வனத் துறையில் ஆராய்ச்சிப் பிரிவினைத் தக்கபடி மாற்றியமைக்கவும் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை தொடர்ந்து செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முந்திரித் தோட்டங்கள்.

வாய்ப்பான இடங்களில் முந்திரி வளர்த்தலும் வளர்க்கப் பட்டுள்ள முந்திரி தோட்டங்களில் உரமிடுதல், மருந்து தெளித்தல் முதலிய தீவிர பண்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுவதின் மூலம் விளைச்சலை மிகுவித்தலும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

1977–78ஆம் ஆண்டில் 14.55 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சி, மதுரை கோட்டங்களில் 800 ஹெக்டேரில் முந்திரி வளர்க்கப்படும் பழைய தோட்டங்களில் பண்படுத்தும் பணிகளும் செய்யப்படும்.

1978–79ஆம் ஆண்டில் ரூ. 11.85 இலட்சம் செலவில் 600 ஹெக்டரில் முந்திரி தோப்புகள் வளர்க்கப்படும்.

கூழ்மரத் தோட்டங்கள்.

மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் தொழில்களின் தேவையை ஈடு செய்ய விரைவில் வளரும் தைல மர வகைகளையும் மூங்கில் போன்றவற்றையும் வளர்ப்பதை விரைவு படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78ஆம் ஆண்டில் ரூ. 28.06 இலட்சம் செலவிட்டு 2,470 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும். 1978-79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 27.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2,200 ஹெக்டேரில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.



பண்ணைக் காடுகள்.

சிற்றூர்களில் அரசு புறம்போக்கு நிலங்களிலும் பயனற்ற நிலங்களிலும் வாய்ப்பான திட்டுகளில் காடு வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கம்.

1977–78ஆம் ஆண்டில் 44.15 இலட்சம் ரூபாய் செலவிட்டு 6,121 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கப்படும். 1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 49.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 9,000 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

தொழில் வாணிகத் துறைகளுக்கு வேண்டிய மரங்கள் வளர்த்தல் (தேக்கு இதர கடின மரங்கள்).

இம்மாநிலத்தில் பெரு மரங்கள் வளத்தை மிகுவிக்க தேக்கு போன்ற கடின வகை மரங்களை தக்க இடங்களில் வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78ஆம் ஆண்டில் ரூ. 4.96 இலட்சம் செலவிட்டு 500 ஹெக்டேர் பரப்பில் மரம் வளர்க்கப்படும்.

1978–79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 6.21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 560 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மற்றும் கடின வகை மரத்தோப்புகள் வளர்க்கப் படும்.

தீக்குச்சி மரங்கள்.

தீக்குச்சி தொழிலுக்கு வேண்டிய குச்சிகளையும், பெட்டிகளை யும் தயாரிக்கத் தேவையான மர வகைகளை மதுரை, திருநெல் வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வளர்த்தலே இத்திட்டத் தின் நோக்கம்.

1977–78ஆம் ஆண்டில் வாகை, இலவ மரம் போன்ற மர வகைகள் ரூ. 0.40 இலட்சம் செலவில் 100 ஹெக்டர் பரப்பில் வளர்க்கப்படும்.

1978–79ஆம் ஆண்டில் 50 ஹெக்டர் பரப்பில் தோட்டங் களை வளர்க்க ரூ. 0.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

" வாட்டில் " தோட்டங்கள்.

தோல் பதனிடும் தொழில் மற்றும் மரக்கூழ் தொழில் ஆகிய வற்றிற்கு வாட்டில் மரமும் பட்டையும் சிறப்பான மூலப் பொரு ளாகும். நீலகிரியிலும், பழனியின் மேல் மட்டக் காடுகளிலும், வாட்டில் மரம் வளர்க்க திட்டம் வகை செய்கிறது.

[1978 மார்ச் 28

1977–78ஆம் ஆண்டில் 5.70 இலட்சம் ரூபாய் செலவில் 1,400 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்படும்.

1978–79ஆம் ஆண்டில் 1,500 ஹெக்டர் பரப்பில் தோட்டம் வளர்க்க ரூ. 9.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடுகள்.

மண் அரிப்பைத் தடுப்பதற்கு தேக்கு போன்ற பொருளாதார சிறப்புள்ள மரங்களை ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரை நெடுக வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78ஆம் ஆண்டில் 12.23 இலட்சம் ரூபாய் செலவில் 1,270 ஹெக்டர் பரப்பில் தோட்டம் வளர்க்கப்படும்.

1978–79ஆம் ஆண்டில் ,1,550 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்க ரூ. 13.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்புப் பாதையை ஒட்டி வெற்றிடமாகவுள்ள ரயில்வேக்கு சொந்தமான நிறங்களில் மரங்கள் நடும் செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

விறகு மரக் காடுகள்.

மக்களின் எரிபொருள் (விறகு) தேவையை ஈடு செய்ய விறகு மர வகைகளை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1977–78ஆம் ஆண்டில் சவுக்கு மர வகைகள், பிறவகை மரங்களை 35 இலட்சம் ரூபாய் செலவில் 2,885 ஹெக்டர் பரப்பில் வளர்க்கப்படும்.

1978–79ஆம் ஆண்டில் 3,900 ஹெக்டர் பரப்பில் வளர்க்க ரூ. 43.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சந்தன மரக்காடு.

வனத்துறையின் வருவாயில் 40 சதவீதத்திற்கு மேல் சந்தன மர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை மிகு விக்க வாய்ப்பான இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.

1977–78ஆம் ஆண்டில் 8.43 இலட்சம் ரூபாய் செலவில் 200 ஹெக்டர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்ப்பு மற்றும் இயற்கை சந்தனக் காடுகளில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.



1978 மார்ச் 28]

1978–79ஆம் ஆண்டில் 169 ஹெக்டர் பரப்பில் சந்தன மரம் வளர்ப்பும் மற்றும் 840 ஹெக்டரில் பண்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுவதற்கு ரூ. 10.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனவிரிவாக்கத் திட்டம் தோட்டங்கள்

புறம்போக்குகள், குன்றுச் சரிவுகள், சாலை ஓரங்கள் முதலிய இடங்களில் விறகு, எருத்தழை, புல் முதலிய தேவைகளை ஈடு செய்யும் வகையில் மரம் வளர்த்தலுக்கு இத்திட்டம் வகை செய்கிறது. மண்ணின் வளம், ஈரப்பாதுகாப்பிற்கும், மக்களுக்கு பூங்காவாகவும் இக்காடுகள் பயன்படுகின்றன.

1977–78ஆம் ஆண்டில் 27.49 இலட்சம் ரூபாய் செலவில் 3,100 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்ப்பும், சாலை ஓரங்களில் மரம் வளர்ப்பும், பொது மக்களுக்கு கன்றுகள் வழங்குதலும் மேற்கொள்ளப்படும்.

1978–79ஆம் ஆண்டில் 3,700 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்கவும் 150 கி.மீ. சாலை ஓரங்களில் மரங்கள் வளர்க்கவும் மற்றும் 25 ஹெக்டர் பரப்பில் சாலை ஓரங்களில் பூங்காக்கள் அமைக்கவும் ரூ. 34.61 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தடிமரம் அகற்றுதலும், வனப் பயன்பாடும்.

1977–78ஆம் ஆண்டில் 2·37 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் சாலைகள் அபிவிருத்தி, ஊர்திகள் பணிமனை பராமரிப்பு, கட்டிடங்கள் கட்டுதல், மற்றும் தொழிலாளர்களுக்கு கம்பளி உடைகள் வழங்குதல் முதலியவை மேற்கொள்ளப்படும்.

1978–79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 0·75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காடுபடு சிறு பொருள்கள்

புளி, குங்கிலியம், கற்பூர தைல மரம், கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை வளர்ப்பதன் மூலம் காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் கூடுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ள இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78ஆம் ஆண்டில் 8 இலட்சம் ரூபாய் செலவில், 1,105 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்படும்.

[1978 மார்ச் 28

1978–79-ல் 950 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்க ரூ. 11·14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து.

வெட்டப்பட்ட மரங்களை விரைந்து எடுத்து செல்லத்தக்க வகையில் ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகள் அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். காடுகளில் மேற்கொள்ளப்படும் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நல்ல போக்குவரத்து அமைப்பு, மிகவும் இன்றியமையாதது ஆகும்.

1977–78ஆம் ஆண்டில் 14 இல்ட்சம் ரூபாய் செலவில் சாலைகள் அமைத்தல், மற்றும் 13 கி.மீ. நீள பழைய சாலைகள் புதுப்பித்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படும்.

1978–79-ல் சாலைகள் அமைக்க காட்டுப் பகுதிகளில் ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்.

காடுகளின் உட்பகுதியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட இத்திட்டம் வகை செய்கிறது. 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 5.90 இலட்சம் செலவில் காடுகளில் குடியிருப்புகள் கட்டப்படும்.

1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு புகலிடங்கள்.

காடு வாழ் விலங்குகளை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் விலங்கு புகலிடங்கள் இன்றியமையாப் பங்கு பெறுகின்றன. இப் புகலிடங்கள் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்கின்றது.

1977–78 ஆம் ஆண்டில் ரூ. 13·46 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். சாலைகள் பராமரிப்பு, கட்டிடங்கள் கட்டுதல், சரணலயத்தில் தீ தடுப்புப் பணிகள், முதலைப் பண்ணை மற்றும் மிருகக் காட்சி சாலை மேம்படுத்தல், பார்வை கோபுரம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

1978–79-ல் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 22·95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1978 மார்ச் 28]

ரூ. 3.57 இலட்சம் தொடராகச் செலவில் கோடிக்கரை பறவைகள் சரணலயத்தை மத்திய அரசின் நிதி உதவியோடு மேம்படுத்தும் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆகும் தொடரும் செலவுக்களை மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

கிண்டிப் பூங்காவை தேசீயப் பூங்காவாக மாற்றுவதென, அரசு அறிக்கை செய்துள்ளது. இரண்டு மாதகாலம் முடிவுற்றதும், வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் (1972) கீழ் இந்தப் பகுதி தேசீயப் பூங்காவாக ஏற்படுத்தப்படும்.

கீழ்க்குறிப்பிட்ட பகுதிகள் விலங்கு புகலிடமாக ஏற்படுத்தப் படவுள்ளன :—

(அ) பிச்சாவரம் ; (ஆ) முத்துப்பேட்டை ; (இ) குற்றாலம் (ஈ) கோதையாறு ; (உ) மஞ்சம்பட்டி ; (ஊ) தலைமலை ; (எ) ஒகனேக்கல்.

வன விளம்பரம்

நாட்டு நலன் காக்கும் பணியில் காடுகளும், விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும், அதனைச் காப்பதன் இன்றியமையாமையை குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுகிறது.

1977–78-ல் விளம்பரப் பொருட்கள் வாங்கவும், திரைப் படங்கள் தயாரிக்கவும் ரூ. 1,02 இலட்சம் செலவிடப்படும்.

1978–79-ம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 2,63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. திரைப்படங்கள், சிறு வெளியீடுகள், விளம்பரப்பலகை போன்றவைகளின் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

காடுகளைச் சேர்த்தல்.

ஏறத்தாழ 3,000 கி.மீ. பரப்புள்ள முன்னள் சமீன் காடுகளை வனத்துறை எடுத்துக் கொண்டுள்ளது. இவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்க இக்காடுகளை நில அளவை செய்து முறையான எல்லை வரையறுத்து தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் ஒதுக்குக் காடுகளாக ஏற்படுத்த வேண்டும். முன்னள் சமீன் காடுகளை ஒதுக்குக் காடுகளாக மாற்றும் பணி இத்திட்டத்தின் முதல் நோக்கமாகும்.

1977-78ல் நிலத்தை அளந்து எல்லை வரையறுக்க ரூ. 1.93 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1978–79-ல் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 2.19 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

காடு பாதுகாப்பு.

தீ விபத்துக்களிலிருந்தும் ஏனைய இடையூறுகளிலிருந்தும் காடுகளைக் காப்பதற்கான வழிவகைகளை வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தீ விபத்து காலங்களில் கண்காணிப்பாளர்களை பணி அமர்த்தவும், தீ தடுப்பு வேலை செய்யவும் 1977–78-ல் ரூ. 0,67 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

1978–79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ 2,88 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனத்துறைப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதிகள் தருதல்.

காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், பணியார்களுக்கும் கம்பளி வழங்கல், குடியிருப்பு கட்டுதல், மருத்துவ உதவி முதலிய வசதிகளை செய்து தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78 ஆம் ஆண்டில் ரூ. 3,64 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1978–79-ல் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 5,34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் ஏற்பாடு, மருத்துவ வசதிகள், கம்பளி மற்றும் மழை ஆடைகள் வழங்குதல் முதலியன தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

வன வள ஆய்வு

வன வளத்தைச் சிறப்பான முறையில் பயன் கொள்ளும் நோக்குடன் வன வளத்தினை ஆய்ந்து மதிப்பிடுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977–78-ல் ரூ. 0.18 இலட்சம் செலவில் ஆய்வுப் பணி தொடரும். இவ்வேலையைக் கவனிக்க இரண்டு கோட்டங்கள் உள்ளன. தர்மபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஆய்வு வேலை நடைபெற்று வருகின்றது.





1978–79-ம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 0.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டம், புள்ளி விவரப் பிரிவு.

வனங்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டவும், விளை பொருள்கள் அளவு தொடர்பான தகவல்களைத் தொகுத்தலும், அங்காடி குறித்தலை மேற்கொள்ளவும் தற்போதைய வருங்காலத் தேவைகளை மதிப்பிடவும், ஒரு பிரிவினை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கம். 1977–78-ல் ரூ. 0.16 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1978–79-ம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வனத் திட்டங்கள் தயாரிக்கவும், திட்டங்களை மதிப்பீடு செய்யவும், திட்டத் தயாரிப்பு பிரிவு ஒன்றினை எளிய அளவில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மண் வளப் பாதுகாப்பு.

(1) வைகை ஆற்றின் நீர் கோள் பகுதி—

வைகை ஆற்றின் நீர் கோள் பகுதிகளில் மண் அரிப்பையும் வண்டல் படிவதையும் தடுக்கும் வகையில் மண் வளத்தைப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1977–78-ல் ரூ. 7.85 இலட்சம் செலவில் 600 ஹெக்டர் பரப்பில் மர வளர்ப்பும், பழைய தோட்டங்களின் பராமரிப்பும், மண் அரிப்பு தடுப்பு அணைகள் போன்றவைகள் மேற்கொள்ளப்படும்.

1978–79-ஆம் ஆண்டில் 1,000 ஹெக்டர் பரப்பில் இத்திட்டத்தினை மேற்கொள்ள ரூ. 6.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது

(2) '' ஸ்டான்லி '' நீர் தேக்கம்—

மண் அரிப்பையும், வண்டல் படிவதையும் தடுப்பதற்கான மேட்டூர் ஸ்டான்லி நீர்த் தேக்கத்தின் நீர் கோள் பகுதிகளில் பல வகையான மண் வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977-78-ம் ஆண்டில் 1,500 ஹெக்டர் பரப்பில் மர வளர்ப்பு பணியும், நில வளைவு கற்சுவர்கள், மண் அரிப்பு தடுப்பு அணைகள், பணியாளர்கள் இல்லங்கள் போன்றவைகள்

கட்டுதல் ரூ. 14.42 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். 1978-79-ம் ஆண்டில் 1,500 ஹெக்டர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்பட ரூ. 12.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்.

இது ஒரு மத்திய அரசு திட்டமாகும். மேற்கு மலைத் தொடர்ச்சியின் பொருளாதார வளர்ச்சிக்கும் முறையான பயன்பாட்டுக்கும் வழிகோலும் வகையில் ஒருமித்த வளர்ச்சியைக் காண்பதே இதன் நோக்கம். வனத்துறை கீழ்க்கண்ட திட்டங்களைத் துவக்கியுள்ளது.

(1) நீலகிரியில் தேயிலை வளர்த்தல்—

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் 89 இலட்சம் ரூபாய் செலவில் 300 ஹெக்டர் பரப்பில் தேயிலை வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கம்.

1977-78-ல் 23.98 இலட்சம் ரூபாய் செலவில் 146 ஹெக்டர் பரப்பில் தேயிலை வளர்க்கப்பட்டு கட்டிடங்கள் கட்டுதல், சாலை போடுதல் முதலியனவும் செய்யப்பட்டன.

1978-79-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 16.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேயிலை தோட்டங்கள் மேலும் 90 ஹெக்டர் பரப்பில் உண்டாக்குதல் மட்டுமின்றி பழைய தோட்டங்களின் பராமரிப்பு பணிகள், சாலைகள், கட்டிடப் பணிகள் ஆகியவைகள் மேற்கொள்ளப்படும்.

(2) கன்யாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல்—

கன்யாகுமரி மாவட்டத்தில் 31 இலட்சம் ரூபாய் செலவில் 100 ஹெக்டர் பரப்பில் கிராம்பு வளர்த்தல் இத்திட்டத்தின் நோக்கம்.

1977-78-ல் 7.62 இலட்சம் ரூபாய் செலவிட்டு 36 ஹெக்டர் பரப்பில் கிராம்பு வளர்க்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள் மற்றும் சாலை வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1978-79-ம் ஆண்டில் 4.98 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 35 ஹெக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கட்டிடங்கள் மற்றும் சாலைகள் வேலைகளும் மேற்கொள்ளப்படும்.



(3) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்த்தல்—

இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் ரூ. 36.89 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1978-79-ம் ஆண்டில் 200 ஹெக்டர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் உண்டாக்குதல், பழைய தோட்டங்களின் பராமரிப்பு தொழிற்சாலையமைத்தல், தொழிலாளர் குடியிருப்பு மற்றும், அலுவலக கட்டிடங்கள் கட்டுதல், இயந்திரங்கள் வாங்குதல் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ. 50 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

(4) மதுரை மாவட்டத்தில் (மரக்கூழ்) மரங்கள் வளர்த்தல்—

மதுரை மாவட்ட மேல் பழனி பகுதியில் 24 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 ஹெக்டர் பரப்பில் தொழில்துறைக்கு தேவையான மூலப் பொருள்களை வழங்கும் தைல மர வகைகள், ஊசி இலை மரங்கள் முதலியன வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1977-78-ல் 10.38 இலட்சம் ரூபாய் செலவில் 600 ஹெக்டர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும்.

1978-79-ல் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 7.65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 600 ஹெக்டர் கூடுதல் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும். பழைய தோட்டங்கள் பராமரிக்கப்படும்.

(5) மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம்—

மத்திய அரசு ஆதரவு பெற்ற இத்திட்டத்தின் கீழ் ஐந்தாவது திட்ட காலத்தில் நீலகிரி மாவட்டத்தில் 31.33 இலட்சம் ரூபாய் செலவிட்டு காடுகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் ரூ. 10.74 இலட்சம் செலவில் 190 ஹெக்டர் பரப்பில் பயன்தரும் தைல மரங்கள், ஊசி இலை மரங்கள் வளர்க்கப்படும்.

1978-79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 600 ஹெக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(6) முந்திரிகளின் பதியப் பெருக்கம்—

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகும். கூடுதல் விளைச்சலைத் தரும் முந்திரியைப் பதியப் பெருக்க முறையில் வளர்த்தலே இதன் நோக்கமாகும்.

1977-78ஆம் ஆண்டில் ரூ. 0.75 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 0.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வனத்துறை மற்றும் வனத் தோட்டக் கழகத்தின் வசம் தற்போது உள்ள 30,000 ஹெக்டர் முந்திரித் தோட்டங்களை தீவிரப் பண்பாட்டு வேலைகள் செய்து முந்திரி விளைச்சலை அதிகப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஆதரவு திட்டங்கள்.

(1) கலப்பின மரங்கள் வளர்த்தல்—

இது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் 75:25 விழுக்காட்டில் பங்கிடப்படுகிறது. 1977-78ல் ரூ. 11 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படும். 1,000 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்ப்பும் 3,000 ஹெக்டர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகளும் மேற்கொள்ளப்படும். கிராமப்புற மக்களின் தேவைகளான விறகு, எருத்தழை, மரம் முதலிய வற்றை ஈடு செய்யும் வகையில் ஊராட்சி நிலங்களில் மரங்கள் வளர்க்கப்படும்.

1978-79ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த 18.85 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 3,000 ஹெக்டர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

(2) தரம் தாழ்ந்த காடுகளை வளப்படுத்துதல்—

இதுவும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்திற்காகும் செலவுத் தொகையை மத்திய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விழுக்காட்டில் பகிர்ந்து கொள்கின்றன. 1977-78ல்



ரூ. 11 இலட்சம் செலவிட்டு 800 ஹெக்டர் பரப்பில் மரம் வளர்க்கவும் 1,500 ஹெக்டர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின் விறகு மற்ற தேவைகளை ஈடு செய்வதற்காக வனத்துறையின் தரம் தாழ்ந்த காடுகளை பொருளாதார சிறப்புள்ள தோட்டங்களாக மாற்ற வகை செய்கிறது இத்திட்டம்.

1978-79-ல் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ. 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,500 ஹெக்டர் பரப்பில் தோட்டங்களை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

முடிவுரை.

வனப் பணிகள் பெரும்பாலும் வேலை வாய்ப்பளிக்கும் தன்மையன. எனவே, அதில் முதலீடு செய்யப்படும் நிதி அனைத்தும் கிராமப்புறத்திலும், ஒதுங்கிய பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு பெரிதும் வேலை வாய்ப்பளிக்க உதவுகிறது. நமது எதிர்காலக் கொள்கை பழங்குடியினர் போன்ற சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினர்க்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்குவதாகும். நமது மாநிலத்தில் தொழில்கள் பெருக மேலும் மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதும் நமது மிக முக்கியமான குறிக்கோளாகும்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

## புதன்கிழமை, 1978 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினுக்கள்.

### தென் ஆற்காடு மாவட்டத்தில் நெல் கொள்முதல்

*13 குறுகியகால வினு—

*திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

தென்னுற்காடு மாவட்டத்திலும் குறிப்பாக சிதம்பரம் வட்டத்திலும், தனிப்பட்ட வியாபாரிகள் நெல் கொள்முதலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதும், அதனுல் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த விலை கிடைக்காமலிருப்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அவ்வாறு புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னுற்காடு மாவட்டத்தில், சிதம்பரம் வட்டத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் கொள்முதல் செய்வதில் நிறைய ஈடுபட்டிருக்கிருர்கள். தென்னுற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டமும், தஞ்சை மாவட்டமும் ஒரே மாதிரியான நில அமைப்பு இருக்கக்கூடிய காரணத்தினுல், இரண்டு இடங்களிலும் கொள்முதல் நிலையங்கள் அதிகமாக இல்லாத காரணத்தினுல், அரசு நிர்ணயித்துள்ள 95, 90

ரூபாய் கிடைக்காத அளவில் இங்குள்ள வியாபாரிகள் புகுந்து விளையாடி 70 அல்லது 65 ரூபாய்க்குத்தான் கொள்முதல் செய்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்ற கேள்வி தான் இது. இதுசம்பந்தமாக அங்கேயிருக்கக்கூடிய, சிதம்பரம் வட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் அத்தனை பேர்களும் பல்வேறு இடங்களில் பல கோரிக்கைகளுடன் முக்கியமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 17 ஆம் தேதி அன்றைக்கு பல்வேறு இடங்களில் உண்ணாவிரதம் இருந்து, இதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராஜாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அரசு குறிப்பிட்ட விலைக்கு, அதிலும் சிதம்பரம் வட்டத்தில் அரசு குறிப்பிட்ட விலைக்கு நெல் விற்பனை ஆகவில்லை என்ற புகார் எதுவும் அரசுக்கு இதுவரைக்கும் வரவில்லை.

ஒன்றை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு சார்பில் மத்திய அரசாங்கம் மோட்டா ரக நெல்லுக்கு நிர்ணயித்துள்ள விலை ரூ. 77 தான். விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கோரிக்கைகள் விடுத்ததன் காரணமாக, உணவுத் துறை இதை பரிசீலித்து, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 90 ரூபாய், 95 ரூபாய் விலைக்கு வாங்குவதற்கு முடிவுசெய்து, இன்றையதினம் அந்தக் கழகத்தின் மூலமாக இந்தக் குறிப்பிட்ட விலைக்கு விவசாயிகளிடமிருந்து வாங்கப்பட்டு வருகிறது.

வியாபாரிகள் என்ன விலைக்கு வாங்குகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தால், குறைந்த விலை கிடைக்கும் இடங்களில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய அளவிற்கு அரசே உணவு வழங்கு துறையின் மூலமாக கொள்முதல் செய்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் வியாபாரிகள் இந்த விலைக்கு வாங்க வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அங்கே கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன யோசனையை இந்த அரசு கவனத்தில் ஏற்றுக் கொண்டு, அதற்கான நடவடிக்கையை இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. ரி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில் எத்தனை கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன? அங்கே கொள்முதல் நிலையங்கள் ஏற்படாததற்குக் காரணம் என்னவென்று சொன்னால், வேயிங் மெஷின் அதாவது எடை போடும் இயந்திரங்கள் வாங்குவதிலும், அதற்கான சிப்பந்திகள் வைப்பதிலும் சிரமம் இருக்கின்றது என்பதுதான். சிதம்பரம் வட்டம் முழுவதும் எத்தனை கொள்முதல் நிலையங்கள் இப்போது இருக்கின்றன? ஒரே ஒரு கொள்முதல் நிலையம் இருப்பதாக எனக்குத் தகவல். அது போதாது. அதை அதிகப்படுத்த வேண்டும். அரசு மூலமாக கொள்முதல் செய்கிறோம் என்று சொன்னால், கொள்முதல் செய்வதற்கு வேண்டிய மெஷினரி அங்கே சரியாகச் செயல்படுவது இல்லை. எனவே, அதை அதிகப்படுத்துவதற்கும், எடை இயந்திரங்கள் வாங்குவதற்கும் உடனடியாக இந்தப் பருவ காலத்திலேயே இதைச் செய்வதற்கும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராஜாராம்: கொள்முதல் நிலையங்களை ஆரம்பிப்பதன் மூலம் அரசுக்கு இருக்கிற பல்வேறு சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் தெரிந்து வைத்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல பிரச்சினை. சில இடங்களில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு உணவு வழங்கல் துறை கொள்முதல் நிலையங்களை ஆரம்பித்தாலும் தேவையான அளவுக்கு நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. இங்கே வாங்கப்படுகிற விலையை விட வியாபாரிகள் கூட ஒரு ரூபாய் கொடுத்து வாங்குவதால் அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமைகளை எல்லாம் பரிசீலித்து இன்று கொள்முதல் நிலையங்களை அரசு திறக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தாலும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிதம்பரம் வட்டத்தில் அதிகமான கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள்,

சிதம்பரம் வட்டத்தைப் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடம் இல்லை. இருந்தாலும் அரசு இதைப் பற்றி ஆலோசித்து தேவையான கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப் படவில்லை என்றால் தேவையான கொள்முதல் நிலையங்களை ஆரம்பிக்க விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று முயற்சி எடுத்ததற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவை மாவட்டத்தில் 100 ரூபாய் 120 ரூபாய் கொடுத்து வியாபாரிகள் நெல்லை வாங்குகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் 75 கிலோ 60 ரூபாய், ஒரு குவிண்டால் 80 ரூபாய்க்குத்தான் வாங்குகிறார்கள். அதேமாதிரிதான் தென்னாற்காடு மாவட்டத்திலும். வியாபாரிகள் இப்படிக் குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக் கொண்டு பின்னால் வெளியே அதிகமான விலைக்கு விற்கும் நிலைமை அடுத்துவரும். 90, 95 ரூபாய் என்று அரசு வாங்கி வைத்துக் கொண்டால் கிலோ ரூபாய் 1-60, ரூபாய் 1-65-க்கு மேல் உயராமல் அரிசி போட முடியும். ஆகவே, அரசாங்கம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக விவசாயிகள் கொடுக்கக்கூடிய நெல்லை 90, 95 ரூபாய் கொடுத்து குறிப்பாக தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களில் வாங்க விசேஷமான ஏற்பாட்டைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை தேவையான கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் ஆரம்பிக்கப் பட்டு விவசாயிகளிடமிருந்து நெல்லை இந்தத் துறை வாங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் போதுமான நிலையங்களைத் திறக்க வேண்டுமென்ற கருத்துரையைச் சொன்னார்கள். போதுமான நிலையங்கள் திறக்கப் பட்டிருக்கின்றன என்று அரசு கருதுகிறது என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தஞ்சை மாவட்டத்தில் இப்போது நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்யும்போது அந்த இடங்களில் 100, 150 மூட்டைக்கு மேல் ஒரு நாளைக்கு கொள்முதல் செய்வதில்லை. அதனால் விவசாயி





களுக்குப் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதிக அ[illegible]மாக வாங்க ஏற்பாடு செய்வதுடன் சென்ற மாதம் 15 சதவிகிதம் மாய்ஸ்சர் உள்ள நெல்லை மூன்று கிலோ அதிகமாகச் சேர்த்து வாங்கி இருக்கிறார்கள். இப்போது ஒரு கிலோ அதிகமாக வாங்குகிறார்கள். அதிகமாக வாங்கிய நெல்லுக்கான கிரயத்தை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு திருப்பிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அதைச் செய்ய முடியாது.

## புத்தன்துறை கிராம மீனவர்.

*14 குறுகியகால வினா

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி நாகர்கோவில் தொகுதியில் உள்ள புத்தன்துறை கிராமத்தில் உள்ள ஒரு மீனவர் கடலுக்கு கட்டுமரத்தில் சென்றபோது காணாமல் போனது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அவரைக் கண்டுபிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட் : கடந்த பிப்ரவரி மாதம் 20-ம் தேதி நாகர்கோவில் தொகுதியிலுள்ள புத்தன்துறை கிராமத்தில் உள்ள ஒரு மீனவர் கடலுக்கு கட்டுமரத்தில் சென்றபோது காணாமல் போய்விட்டார். அவர் உயிரோடு இல்லை என்றும், கத்தும் கடல் கவ்வி விட்டதாகவும் உடன் சென்றவர்கள் கூறுகிறார்கள். கடலில் காணாமல் போன அவருடைய குடும்பத்துக்கு உதவித் தொகை கொடுக்க அரசு முன்வருமா ?

[1978 மார்ச் 29

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : புத்தன்துறை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர், தமது 18-2-1978 நாளிட்ட கடிதத்தில் 17—2—1978 அன்று காலை 5-00 மணியளவில் திரு. மரியான் என்பவர் கட்டுமரத்தில் தனியாக மீன் பிடிக்கச் சென்றவர் கரை திரும்பவில்லையென்றும், தேடுவதற்கு முயற்சி மேற்கொள்ளுமாறும் கோரினார். அதன்பேரில் மீனளத் துறையைச் சார்ந்த அண்மைக் கடல் மீன்பிடிச் சுற்றாய்வு நிலையப் படகுகளான ஐ. பி. 18 மற்றும் இசட். பி. 4 ஆகிய இரு படகுகள் 18—2—1978 முதல் 22-2-1978 வரையிலான இடைப்பட்ட நாட்களில் கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரையிலுள்ள கடற் பகுதிகளில் எல்லாம் தேடியும் மீனவரைக் கண்டு பிடிக்க இயலவில்லை. பின்னர் 18-2-1978 அன்று மாலையில் ஒருவரின் உடல் பாதி கட்டுமரத்திலும் தலைப்பாகம் தண்ணீரிலுமாக மிதந்து சென்றதை கடியப்பட்டிணத்தினைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டு, மேற்படி நபர் தனது கணவராகத்தான் இருக்க வேண்டும் என திருமதி அ. பவியின் தனது 23-2-1978 நாளிட்ட கடிதத்தில் துறைக்குத் தெரிவித்துள்ளார். மனுதாரரின் விண்ணப்பம் மீனளத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

இன்னும் இறந்தவர் யார் என்பது உறுதியாக்கப்படவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவர்களைப் பொறுத்தவரையில் கட்டுமரங்களிலே போவதும் சாவதும் இயல்பாகிவிட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படகோட்டி என்ற படத்தில் மீனவனாக நடித்து, கடலில் தவிக்கவிட்டான், எங்களை கண்ணீரில் மூழ்கவைத்தான் என்று பாடியிருக்கிறார்கள். ஆகவே இப்படி மீனவர்கள் இறந்துபோகின்றபோது அவர்களுடைய குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் திரு அம்பிகாபதி அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை புதிய பிரச்சினை அல்ல. ஏற்கெனவே அதை அரசு அறிவித்திருக்கிறது.



1978 மார்ச் 29]

தூத்துக்குடியில் அனல் மின் நிலையம்.

*698 - வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு இரண்டு கொதிகலன்களுக்குமான அடித்தள அமைப்பு புகை போக்கிக்கான காங்கிரீட்டு வேலைகள், முதல் டர்பைன் மேடை, மின்நிலைய கட்டிட அடித்தள வேலைகள், பணிபுரிவோருக்கான வீடுகள், அலுவலக கிடங்கு கட்டிடங்கள் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் மற்ற வேலைகள் பெரிதும் திட்டமிட்ட கால அட்டவணைப்படி நடைபெற்று வருகின்றன. முதல் யூனிட் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், இரண்டாவது யூனிட் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் இயக்கிவைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. அ. சுவாமிதாஸ் : துணைத்தலைவர் அவர்களே, இந்த தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்திற்கு, அதை உருவாக்குவதற்கு மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப் படுகிறது, மத்திய அரசு அதில் எவ்வளவு ஒதுக்குகிறார்கள் ? மாநில அரசு எவ்வளவு ஒதுக்குகிறார்கள் ? அதனுடைய வேலை எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீடு 140 கோடியே 86 இலட்சம். இந்த வேலை 1979 ஆம் ஆண்டு ஜூனில் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய அரசு எவ்வளவு உதவி செய்கிறது என்று குறிப்பிடமுடியாது. இதெல்லாம் திட்ட வரையறைக்குள் வந்துவிடுகிறது. திட்டத்திற்கு மத்திய அரசு பிளாக் கிராண்ட் (Block grant) என்ற வகையில் கொடுப்பதால் அதைப்பல்வேறு வகையில் திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம். ஆகவே ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக மத்திய அரசு எவ்வளவு உதவி செய்கிறது என்று சொல்வதற்கு இல்லை.

திரு. ந. தனசேகரன்: தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் துரிதமாகவும் நல்லமுறையிலேயும் நிறைவேற்றப்பட தனியார் காண்ட்ராக்ட்டுக்கு விடாமல் அரசே அதைச் செய்யுமா? இந்தத் திட்ட வேலைகள் துரிதமாகவும் நல்லமுறையிலேயும் முடிக்கப்பட ஒத்துழைக்கும் விசுவாச ஊழியர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஊழியர்கள் விசுவாசமாக இருந்தால் நிச்சயமாக ஊக்குவிக்கின்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கும். காண்ட்ராக்ட் முறையில் வேலைகள் துரிதமாக நடைபெறுவதில்லை. ஆனால் டிபார்ட்மெண்ட் மூலமாக செய்கிறபோதும் நம்முடைய அனுபவம் அதுதான்.

திரு. என். வரதராஜன் : ஏற்கனவே தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கிற அனல் மின் நிலையங்களில் உள்ள பிளான்ட்கள் மற்ற இயந்திரங்கள் எல்லாம் கோளாறாக இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிக்கை சமர்ப்பிக்கும்போது சொல்லியிருக்கிறார்கள் அப்படிப்பட்ட கோளாறுகள் ஏன் ஏற்படுகின்றன ? அயல்நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யும்போது திறமை தொழில் நுட்பம் வாய்ந்த இயந்திரங்களை வாங்காதது கோளாறா ? அடுத்தபடியாக இன்றைக்கு நாம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை நிர்ணயிக்கும் நேரத்தில் அந்த அனல் மின் நிலையத்தின் சக்தி எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போதுமான அளவிற்கு தொழில் நுட்ப அறிவு வளர்ச்சி அடையாததன் காரணமாகவும், வெளிநாடுகளிலிருந்து பொருள்களை வாங்கும் தன்மையின் காரணமாகவும் ஏற்கனவேயுள்ள அனல் மின் நிலையங்களில் பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அதற்கு வேண்டிய கருவிகள் அனைத்தும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. 'பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்' மூலம் நமக்குக் கிடைக்கின்றன. எனவே ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே கோளாறுகள் ஏற்படும் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயம் அல்ல.





திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடியில் அனல் மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் காண்டிராக்ட் முறை என்பது படுபயங்கரமான சூழ்நிலையில் இருக்கிறது. பி. எச். இ. எல். நிறுவனத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய்க்குக் காண்டிராக்டிற்கு விடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களால் இன்னொரு சப்-காண்ட்ராக்டிற்கு 1 லட்சம் ரூபாய்க்கு விடப்படுகிறது. அந்த ஒரு லட்சம் ரூபாய்க்கு காண்ட்ராக்ட் எடுத்த சப்-காண்ட்ராக்ட்டரால் சப்ஸ்டிடியூட் காண்ட்ராக்ட் என்று 50,000 ரூபாய்க்கு விடப்படுகிறது. இப்படி 50,000 ரூபாய் வேலைக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அது உண்மை என்றால் அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே அரசைப் பொறுத்தவரையில் தகுதியான ஒருவரிடம் காண்ராக்டிற்கு விடப்படுகிறது. அவர் எப்படிச் செய்கிறார் என்பது அவரைப் பொறுத்தது, நம்மைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட நேரத்தில் வேலை தரமாக நடைபெறுகிறதா என்பதுதான்.

## Power supply in Tiruchi Town

* 699 Q. Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Bublic Works be pleased to state

(a) Whether it is a fact that there are more frequent breakdowns in the supply of electricity in Tiruchi Town compared to the period prior to Nationalisation;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken or proposed to be taken to rectify and minimise the breakdowns ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனியார் துறையிலிருந்த மின் நிறுவனம் 1973-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. இந்த

ஐந்தாண்டுகளாக பத்தாயிரக்கணக்கான மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டு வேலைப்பளு அதிகமான காரணத்தினால் இம்மாதிரி மின்னிணைப்பு கொடுப்பதில் தடை ஏற்பட்டு வருவதாக அறிகிறேன். எனவே, இந்த வேலைப் பளுவை குறைப்பதற்காக கூடுதலான ஊழியர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பிறகு மின்சாரம் வழங்கலில் தடைகள் குறைந்திருக்கின்றன என்பது நான் தந்திருக்கிற விவரம். அதிகமாகிவிட்டது என்று காரணத்தை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

<u>திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன். :</u> மாண்புமிகு துணைத்தலைவரவர்களே, திருச்சியிலே இருக்கின்ற மின் இணைப்புகளில் நிறைய இடங்களில் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன என்பதாலும், வெகு நாட்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட இணைப்பு என்பதாலும், பல டிரான்ஸ்பார்மர்கள் முறையாகச் செயல்படாத காரணத்தாலும் இம்மாதிரி அடிக்கடி பழுது ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகிறதே அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அப்படியென்றால் அதை நீக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் ஏற்கனவே துக்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மின் தடங்கல் நீக்க அழைப்புகள் வருவதை மிகவும் குறைப்பதற்காக மின்வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது :—

(1) பழுதான மின் இணைப்பு கம்பிகளை மாற்றுவதற்கான பணிகள் படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது.

(2) மாற்று மின்சாரம் சப்ளை செய்வதற்காக உள்ள ஏற்பாடுகளை முன்னேற்றமடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





(3) அதிக மின் சுமையின் காரணமாக ஏற்படும் மின் தடங்கல்களைப் போக்குதவற்கு எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் தற்சமயம் உள்ள மின்சாரம் சப்ளை செய்யும் கம்பிகளை வலுப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, பஞ்சாயத்தில் இருக்கின்ற தெரு விளக்குகளுக்கு மீட்டர் பொருத்திக் கொடுக்க வேண்டுமென்று மூன்று வருஷங்களாக முயற்சிக்கிறோம். ஆனால், இது வரையிலும், இதுநாள் வரையிலும் மீட்டர் பொருத்திக் கொடுக்கப்படவில்லை. இனியாவது உடனடியாக மீட்டர் பொருத்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் கேட்கின்ற கேள்வி சம்பந்தம் இல்லை என்றாலும், மார்ச் மாதத்திற்குள்ளாகவாவது எல்லா ஊராட்சி மன்றங்களிலும் இந்த மீட்டரைப் பொருத்தி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியே இன்னும் கொஞ்சம் தள்ளிப் போனால்கூட ஜூன் மாதத்திற்குள்ளாக முடித்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. சி. கோவிந்தராசன் : துணைத்</u> தலைவரவர்களே தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு 'சௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன்' என்ற தனியார் நிறுவனமாக இருந்தது. அது நாட்டுடமையாக்கப்பட்டதற்குப் பிறகு ஏற்கனவே அவர்கள் எந்தெந்த இடங்களிலே டிரான்ஸ்ஃபார்மர்கள் வைத்து இருந்தார்களோ அவைகள் மட்டும்தான் இருக்கிறதா? அல்லது புதிதாக டிரான்ஸ்ஃபார்மர்கள் அமைக்கப்பட்டு தடையில்லாமல் மின்சாரம் வழங்குவதற்கு ஏதேனும் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா?

[முற்பகல் 9.20]

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, மேற்கொண்டு தேவைப்படுகின்ற மின் இணைப்புகளை நாம் வழங்கித்தான் வருகிறோம். ஆனால், ஏற்கனவே இந்த மின்சார நிறுவனத்தில் பல்வகையான கம்பிகள், இன்னும்

டிரான்ஸ்பார்மர்கள் எல்லாம் ரொம்பக் காலமாக இருக்கின்றன. அவைகளை மாற்றுகிற பணியைப் படிப்படியாக மேற்கொண்டு வருகிறோம்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, அடுத்த மாதத்திற்குள் பஞ்சாயத்துக்கள் தெரு விளக்குகளுக்கு மீட்டர்கள் வைத்துவிடுவதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி. இந்த மீட்டர்கள் வைக்கின்ற செலவை பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது, அரசே ஏற்று, மீட்டர்களை வைக்குமா என்ற விவரம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ளும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மின்னிணைப்பு பற்றி பதில் சொல்லும்போது பழைய காலப் பொருள்கள்—அவைகளை மாற்றுவதற்குச் சங்கடம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பு அலுமினியம் கம்பிகளில்கொடுக்கப்பட்ட மின்னிணைப்புகள்—மழை பெய்து பெய்து, தூசி படிந்து பூரணம் பிடித்து விடுகிறது. அதனால் மின்னிணைப்பு கிடைக்க, லைனில் வேறு பல சங்கடங்கள் இருக்கின்றன. அதை மாற்றி, செப்புக் கம்பிகளாகக் கொடுக்க உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, செப்புக் கம்பிகளைப் பயன்படுத்துவதில் சிரமங்களிருக்கின்றன. ஒன்று, அவை கிடைப்பதில்லை. இரண்டு, கிடைத்தாலும் அதிக விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. மூன்றாவது, அப்படியே நாம் போட்டாலும் அது திருடு போய்விடுகிறது. ஆகையினாலே, செப்புக் கம்பிகளை நாம் பயன்படுத்த முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது, 'பை-மெட்டாலிக் ஆக்ஷன், என்று சொல்வார்கள். அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மின்தட்டு என்பது கிராமத்திலும் நகரத்திலும் ஒரு நாளைக்கு 4, 5 முறை ஏற்பட்டு விடுகிறது. பொதுவாக, இந்த மின்தட்டு ஏற்படுத்துவதும் கிராமப் புறங்களிலே அதிக அளவு மின்சார பல்புகள் பொருத்தாததும் மின்வெட்டுக்காக மறு நிலையிலே இவ்வாறு மின்சாரத் தட்டை ஏற்படுத்தித் தருகிறார்கள் மின்சாரத் துறையினர் என்ற பொதுவான அபிப்பிராயம் இருக்கிறதே, அதுபற்றி அரசு ஏதாவது விளக்க முடியுமா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தப் பொதுவான அபிப்பிராயம் மிகவும் தவறான அபிப்பிராயம். மின் வெட்டு வேண்டுமென்றால் அதை நேரடியாகக் கொண்டு வரலாமே தவிர, இப்படியெல்லாம் கொண்டு வருவது சரியல்ல. ஆனால், பொதுவாக லைன்கள் சரியாகப் பராமரிக்காத காரணத்தாலே இத்தகைய மின் வெட்டுகள் ஏற்படுவது இயற்கை. அவற்றை நன்றாகப் பராமரிக்க வேண்டுமென்ற வகையில் இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஆலந்துறை ஆற்றின் குறுக்கே அணை.

* 700வினா —திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டத்தில் உள்ள கஞ்சிப்பாறையில் ஆலந்துறை ஆறு அணைக்கட்டு வேலை எப்போது முடிவு பெறும் ?

(ஆ) அனுமான் ஆற்றுப் பாசனத்தில் பயனடையும் வடக்கன் குளத்தையும் இத்திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) 31-3-1978-ல் பூரணமாக முடிவடையும்.

(ஆ) ஆலந்துறையாறு திட்டம் தயாரிக்கப்பட்டபோது வடக்கன்குளம் இத்திட்டத்தில் இடம் பெறவில்லை. இருப்பினும் வடக்கன் குளத்தை இத் திட்டத்தில் சேர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடங்கல் எக்ஸ்டிராக்டின்படி, வடக்கன் குளத்திற்கு அனுமான் ஆற்றுப் பாசனத்தில் முழு உரிமை

யிருக்கிறது. தொன்றுதொட்டு அந்த உரிமையைப் பெற்று, அனுமான் ஆற்றில் பாசனம் பெற்று வருகிறது, அந்தக் குளம். ஆனால், இந்தத் திட்டம் துவக்கப்பட்ட பிறகுதான் பாசன உரிமையை அக்குளத்தினர் இழந்திருக்கிறார்கள். அதே நேரத்தில், இந்தத் திட்டத்தில், ஏற்கனவே பாசன உரிமையில்லாத ஒருசில குளங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, அதிகாரிகள் ஆய்வுகள் நடத்தி, ஆய்வுகளின் முடிவுப்படி நடவடிக்கைகள் எடுப்போம் என்று சொல்கிறார்கள். எனவே, உரிமையிருக்கின்ற அந்தக் குளத்தை, அவசியம் அத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவசியமானால் சேர்க்கலாம்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, இந்த வடக்கன் குளம் அந்தத் திட்டத்தில் முழு உரிமை பெற்றிருக்கிற காரணத்தால் அவசியம், அவசியமில்லாதது என்று பார்க்காமல், கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, அதற்குச் சாதகமான பதிலை அமைச்சரிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

(விடை இல்லை.)

கிராம வங்கிகள்.

* 701 வினா—திரு. சோ. அழகர்சாமி,

திரு. என். கிட்டப்பா :

திரு. சி. மு. வாசன் :

மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கிராம பாங்குகள் (Rural Banks) எங்கெங்கு துவக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : இராமநாதபுரம் மாவட்டத்தில், சாத்தூரில் "பாண்டியன் கிராம பாங்கு" என்னும் வட்டார கிராமிய வங்கி ஒன்று 9-3-77 அன்று துவக்கப்பட்டுள்ளது. இதன் கிளைகள் திருநெல்வேலி மாவட்டத்தில் பதிமூன்றும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பன்னிரெண்டும் துவக்கப்பட்டுள்ளன. வேறு கிராம பாங்குகள் ஏதும் தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்படவில்லை.



திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்தக் கிராம வங்கிகளைத் துவக்கக்கூடிய நேரத்தில் நம்முடைய அரசிடத்திலே கேட்டு, எந்த எந்த இடங்களில் என்று கேட்டு துவங்கினார்களா ? அந்த வங்கிகள் துவங்கிய நேரத்திலே அந்த வங்கிகள் எந்த முறையிலே கடன்களை வழங்குகிறார்கள் ? அவர்கள் கடன் வழங்கும் போது, சாதாரண சிறு விவசாயிகளுக்கு, சிறு தொழில் நடத்துபவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டாலும்கூட, அரசாங்கத்திலே பணியாற்றக்கூடியவர்கள், மாத வருமானம் உள்ளவர்கள் ஜாமீனாகக் கையெழுத்திட்டால்தான் வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்த வங்கிகளை கன்ட்ரோல் செய்யும் அதிகாரம் நமக்கு இருக்கிறதா ; அல்லது மத்திய அரசாங்கம்தான் அதிகாரம் செலுத்துமா ? புதிதாகத் துவக்கச் சொல்வதற்கு நாம் ஏதாவது முயற்சி செய்யலாமா? முடியுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய ஆலோசனையின் பேரிலும், அறிவுரையின் பேரிலும் தான் இந்த கிராம வங்கிகள், நெல்லை மாவட்டத்திலும், முகவை மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகளில் மத்திய அரசாங்கம் 50 சதவிகிதம் மூலதனம் முடக்கி இருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் பேரில் அல்லது கட்டாயத்தின் பேரில் இந்த மாவட்டங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. எந்த அடிப்படையிலே இந்த இரண்டு மாவட்டங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதற்கான விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். இப்போது இந்த பெஞ்சுப் பக்கம் வழியாக ஒரு பெருச்சாளி கடந்து சென்றது. அதே மாதிரி பல்வேறு ஜந்துக்களும் உள்ளே இருக்கக்கூடும். ஆக தேவையான பாதுகாப்பு செய்து அதை நிவர்த்திக்க தலைவர் அவர்கள் அதற்கான

ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது போனது பெருச்சாளிதான் என்றாலும், விஷ ஜந்துக்கள் கூட இதற்குள்ளாக இருக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பார்த்துக் கொள்ளச் சொல்வோம்.

திரு. சி. ஆறுமுகம் : துணைத்தலைவர் அவர்களே, சட்டசபையிலேயே பெருச்சாளி வந்தது என்றால், எங்கள் விடுதி எந்த அளவிற்கு இருக்கும் என்பதற்கு நீங்களே தீர்ப்பு அளிக்கவேண்டும்.

திரு. என். வரதராஜன் : பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டார்கள். பாதுகாப்பு பெருச்சாளிக்கா அல்லது உறுப்பினருக்கா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சீ. மு. வாசன் : துணைத்தலைவர் அவர்களே, கிராமப் புற வங்கிகளை மட்டும், கிராமப் புறங்களில் உள்ள மக்கள் இப்போது நம்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பான் புரோக்கர்ஸ் இப்போது இந்த வேலையைச் செய்வதில்லை. எனவே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 5,6 கிராம வங்கிகளை உருவாக்கி செயல்படுத்த இந்த அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்கள்தோறும் கிராம வங்கிகளை ஆரம்பிப்பதற்குண்டான ஆலோசனை எதுவும் இப்போது அரசிடம் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு கிராமப் புற வங்கிகள் என்று போடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கிராமப் புறங்களில் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு வங்கிகள் கிராமப் புறத்திலே இருக்கிற மக்களுக்காக ஏற்படுத்தி இருக்கும் போது, ஒரு பிரச்சினையை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



சிதம்பரம் வட்டத்தில் விளாகம் கூட்டுறவுச் சங்கத்தை கிட்டத்தட்ட 5 பஞ்சாயத்துகளும், 11 கிராமங்களும் கொண்டது. இதிலே ஏற்கனவே அந்த கிராமங்களின் மூலமாகத்தான் 5 பஞ்சாயத்துகளும் 11 கிராமங்களும் கொண்ட விளாகம் கூட்டுறவுச் சங்கம். அந்தச் சங்கத்தில் தான் விவசாயிகள் கடன் பெற்று வந்தார்கள். இப்போது அண்மையிலே 15, 20 நாட்களுக்கு முன்னதாக அதை எல்லாம் சிதம்பரம் கிளையில் இருந்து வாங்க வேண்டும் என்று சொல்லி, அங்கிருந்து 10 மைலுக்கும் அதிகமாக இருக்கும். சிதம்பரத்திற்கு அதை மாற்றியது அரசுக்குத் தெரியுமா? அப்படி மாற்றியதைத் திருப்பி அங்கேயே அந்தச் சங்கத்தை அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மூலக் கேள்வி முகவை மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் அமைக்கப்பட்டிருக்கும் கிராம வங்கிகளைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் சிதம்பரம் வட்டத்திலே உள்ள கிராம வங்கியைப் பற்றிய பிரச்சினையை இங்கே எழுப்புகிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்து தருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கிராம வங்கிகள் வடார்க்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கிற ஆலோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள விவசாயக் கடன் சங்கங்களில் அத்தகைய பணியைச் செய்கிற நிலைமை இருந்து வருகிறது. ஆனால் போதிய நிதி வசதி இல்லாததால் அவைகள் எல்லாம் தடைபட்டு வருகின்றன. ஆகவே, நிதி வசதி செய்து அந்த விவசாயச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட அரசு நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பில்லை.

[முற்பகல் 9-30.]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, பாண்டியன் கிராமிய பாங்கில் 50 சதவீதம் மத்திய அரசு முதலீடு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாநில அரசு எத்தனை சதவீதம் முதலீடு செய்திருக்கிறது ? இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் எத்தனை சதவீதம் முதலீடு செய் திருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர் களே, நம்முடைய தமிழக அரசு 15 சதவீதம் முதலீடு செய்திருக்கிறது, அதாவது 3.75 லட்சம் ரூபாய். இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் 35 சதவீதம் முதலீடு செய்திருக்கிறது, அதாவது 8.75 லட்சம் ரூபாய்.

## அமுதம் ஓட்டல்கள்.

* 702—வினா திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உணவு–கூட்டுறவுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் நடத்தப்படும் 'அமுதம்' ஓட்டல்கள் இலாபகரமாக இயங்கி வருகின்றனவா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மக்களுக்கு மலிவு விலையில் தரமான உணவுப் பண்டங்கள் கிடைத் திடச் செய்ய வேண்டும் என்ற பொது நோக்கோடும் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமலும் 'அமுதம்' உணவு விடுதி நடத்தப்படுகின்றது.

திரு. து. புருஷோத்தமன் : துணைத்தலைவரவர்களே, சென்னையிலே இப்படிப்பட்ட ஓட்டல்கள், அமுதம் ஓட்டல்கள் எத்தனை இருக்கின்றன ? அங்கே தரமான பண்டங்கள் விற்பனைச் செய்யப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், அந்த ஓட்டல்கள் நடத்துகின்ற நிர்வாகி கள் வாங்குகின்ற காய்கறிகள், உணவுப் பொருட்கள் முதலியவை தரம் குறைந்தவையாக இருக்கின்றன என்று புகார் வந்து கொண்டிருக்கிறது. அரசுக்கு இன்னும் புகார்





வரவில்லை என்றால் நிர்வாகிகளை அழைத்துக் கேட்கலாம் அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா ? தரம் குறைந்த பொருட்களை வாங்குவதால், அங்கு விற்பனையாகும் பண்டங்கள் தரக்குறைவாக இருக்கின்றன என்று மக்களும், ஊழியர்களும் சொல்கிறார்கள். அந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவ ரவர்களே, தரமான உணவுப் பண்டங்களை நியாய விலையில், தனியார் விற்பனை செய்கின்ற விலையைவிட குறைந்த விலையில் விற்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் உணவுத் துறை சென்னை நகரில் அமுதம் உணவு விடுதிகளைத் தொடங் கும் முயற்சிகளில் ஈடுபட்டது. சென்னையிலே எத்தனை அமுதம் ஓட்டல்கள் நடக்கின்றன என்ற விவரம் இல்லை. இருந்தாலும் தரக்குறைவான உணவுப் பண்டங்கள் விற்பனைச் செய்யப்படுகின்றன என்ற குறைபாடு ஏதும் அரசுக்கு இன்னும் வரவில்லை.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இத்தகைய நல்ல தரமான உணவுப் பண்டங்களை அமைச்சர் சொல்லு கின்ற மாதிரி–குறைந்த விலையில் விற்கின்ற அமுதம் ஓட்டல் கள் சென்னையில் நடைபெறுகின்றன. அதைப்போல எல்லா தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸிலும் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர் களே, சென்னையில் இப்போது நடைபெறுகின்ற அமுதம் உணவு விடுதிகள் இழப்பிலே ஓடுகின்றன. ஆகவே, வட்டார அளவில் இத்தகைய ஓட்டல்கள் திறப்பது பற்றி, நன்கு பரிசீலனை செய்துதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, லாபகர மாக அமுதம் ஓட்டல்கள் இயங்கி வருகின்றனவா என்று மூலக் கேள்வி கேட்டிருந்தேன். லாபகரமாக இல்லை என்று இப்போது பதில் சொல்கிறார்கள். அப்படியானால் நஷ்டம் எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவ ரவர்களே, 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1977 ஆம் ஆண்டு மார்ச் முடிய விற்பனை செய்யப்பட்டதில்

[1978 மார்ச் 29

ஏற்பட்ட நஷ்டம் ரூ. 41,254. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையில் ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் 12,225. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1978 ஜனவரி வரையில் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 21,764.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த அமுதம் ஓட்டல்களை நடத்துவதில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை அரசு விசாரித்துப் பார்த்ததா? மேலும் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று எண்ணுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, இந்த உணவு விடுதிகள் தொடர்ந்து நஷ்டத்தில் செயல்படுவதற்கான காரணங்களை அரசு பரிசீலித்ததில் கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்திருக்கிறது:—

(1) அரசு 1976 ஆம் ஆண்டில் நிர்ணயித்த விலையிலேயே உணவுப் பண்டங்களை விற்பனை செய்வது.

(2) விற்பனை வரி தனியாக நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யவில்லை. இதில் மட்டும் ஆயிரம் ரூபாய் வருகிறது.

(3) உணவு விடுதி நெரிசல் இல்லாத இடங்களில் அமைந்திருக்கின்றன.

(4) உணவு விடுதிகளிலுள்ள பணியாளர்களின் கூட்டுறவு போதுமான அளவு இல்லை.

(5) தனியார் துறையில் போட்டி உணவு விடுதி ஒன்று அமுதம் உணவு விடுதிக்கு எதிரில் அமைந்திருக்கிறது.

(6) குறைந்தபட்சம் ஊதிய உயர்வு ஏற்பட்டது.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளித்த நேரத்தில் சென்னையில் எத்தனை அமுதம் உணவு விடுதிகள் இருக்கின்றன என்ற விவரம் இல்லை என்று சொன்னார்கள். இப்போது அளித்த பதிலில் 41,000 ஒரு தடவை இழப்பு என்றும், 12,000 இன்னொரு தடவை இழப்பு என்றும் இறுதியில் 22,000 இழப்பு என்றும் சொன்னார்கள். இது எத்தனை ஓட்டல்களில் ஏற்பட்ட இழப்பு?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: ஒரு உணவு விடுதியில் உள்ள இழப்பு.



1978 மார்ச் 29]

திரு. மு. கருணாநிதி: ஆகவே சென்னையில் மொத்தம் ஒரே ஒரு உணவு விடுதிதான் இருக்கிறது என்று சொல்லலாம். விவரங்கள் இல்லையென்று சொன்னார்கள் அதுதான் கேட்டேன்.

## ஜனதா கடைகள்.

*703—வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஏழை மக்கள் வசிக்கும் பகுதிகளில் அவசிய உணவுப் பண்டங்களை வழங்கிடும் ஜனதாக் கடைகளை திறப்பதற்கான திட்டத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு அளிக்கும் பங்குத் தொகை யாது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) ஏழை மக்கள் வசிக்கும் பகுதிகளில் அவசிய உணவுப் பண்டங்களை வழங்கிடும் ஜனதாக் கடைகளைத் திறப்பதற்கான ஒரு திட்டத்தை மத்திய அரசு தீட்டியுள்ளது. அதன்படி மாநில அரசை செயற்குறிப்புகள் அனுப்பும்படி மத்திய அரசு கேட்டுக்கொண்டது. மாநில அரசு இதுவரை 57 ஜனதாக் கடைகள் திறப்பதற்கான செயற்குறிப்புகளை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்றில் எட்டு ஜனதாக் கடைகள் திறப்பதற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாக ரூபாய் 10,000 அளிக்கிறது. மாநில அரசு அப்பணத்தை பங்குத் தொகையாக முதலீடு செய்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இறைச்சி, மீன், கோழி, முட்டை இவைகளின் விலைகள் நாள்தோறும் ஏறிக்கொண்டு போகிறது. எனவே, அவற்றை வாங்கிச்

சாப்பிட முடியாமல் இருக்கிறது. ஆகவே, அவை நியாய விலையில் கிடைக்க அரசாங்கம் நியாய விலைக் கடைகள் மூலமாகவோ அல்லது அரசாங்கம் மூலமாகவோ கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அப்பேர்ப்பட்ட யோசனை எதுவும் இப்போது அரசாங்கத்திடம் இல்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: ஏற்கெனவே ஜனதா சாப்பாடு போட்டுக் கொண்டிருந்த கடைகள், இப்போது ஜனதா சாப்பாடு எல்லாக் கடைகளிலும் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் ஏதாவது எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: உணவு விடுதி உரிமையாளர்களை அழைத்துப் பேசியதில் இன்னும் அவர்கள் ஜனதா சாப்பாட்டை தொடர்ந்து நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உணவு விடுதிகளில் ஜனதா சாப்பாடு வழங்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: ஜனதா விநியோகக் கடைகளை ஏற்படுத்தும்படி மத்திய அரசு கேட்டுள்ளது. அதற்காக ஐம்பது சொச்சம் கடைகளை ஏற்படுத்துவதற்கு செயற் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் ஜனதாக் கடைகள் என்று சொல்வது குறைந்த விலையில் நல்ல சாதனங்களை ஏழை மக்களுக்குக் விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லப்படக்கூடிய ஒரு காரியமாக இருப்பதால் இந்த அரசு நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்கு விநியோகம்செய்து விலைகளைக் குறைக்கும்படியான கொள்கையைக் கொண்டிருப்பதால் இப்படிப்பட்ட ஜனதாக் கடைகளை தமிழ்நாடு முழுவதும் ஏராளமான கடைகளைத் திறப்பதற்கு மத்திய அரசின் உதவியைக் கேட்டு செய்தால் என்ன தவறு? அதை ஏன் செய்யக்கூடாது? அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் உதவி பெற்று ஜனதாக் கடைகளை மாநிலம் முழுவதும் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு தருகிற உதவித் தொகை போதுமானதாகயில்லை.

திரு. கே. உச்சி: ஜனதாச் சாப்பாடு என்பது மிகவும் ஏழைகள் சாப்பிடக்கூடிய ஒரு சாப்பாடு என்றளவில் விநியோகிக்கப்படுகிறது. அந்த மாதிரி உணவுகள் கொடுக்கும் போது, ஏழை மக்கள் நிறைந்த தொழிலாளர்கள் நிறைந்த என் தொகுதியில், கூடலூரில் அப்படி ஒன்று புதிதாகத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை அரசாங்கத்தின் கவனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

## முந்திரி உற்பத்தி.

704—வினா—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது உற்பத்தியாகும் முந்திரிப்பருப்பு எவ்வளவு?

(ஆ) முந்திரித் தொழில் வளர்ச்சிக்காக புதிய ஆராய்ச்சி நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) ஆண்டொன்றுக்கு சுமார் 13,000 டன்கள்.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. அ. ப. பழனியப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முந்திரி ரொம்பவும் முக்கியமான ஒன்று. நல்ல வருமானம் கிடைக்கக்கூடிய ஒன்று. அப்படிப்பட்ட முந்திரித்

தோட்டங்கள் எங்கள் பகுதியிலே 200, 300 ஏக்கர் என்ற அளவில் தரிசு நிலமாக வேறு எதற்கும் பயன்படாத நிலையில் இருக்கும் அந்த நிலங்களை எல்லாம் முந்திரிப் பயிரிடுவதற்காக அங்கே முந்திரிப் பண்ணைகளை அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தரிசு நிலங்களில் முந்திரியைப் பயிரிடுகின்ற யோசனை இல்லை அரசிடம் என்று இப்போது தான் சொன்னேன். ஆகவே பின்னால் தேவையான காலத்தில் அதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாநிலத்தில் உற்பத்தி ஆகின்ற முந்திரி வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாக அறிகிறோம். இங்கே இருக்கின்ற தொழிற்சாலைக்கே போதுமான முந்திரி இல்லாத காரணத்தினால் அவை மூடப்பட்டு கிடக்கின்றன. ஆகவே இந்த நிலையில் நமது மாநிலத்தில் உற்பத்தி செய்கின்ற முந்திரியை நமது மாநிலத்திலேயே எடுத்துக்கொண்டு வெளி மாநிலத்திற்கு அனுப்பப்படுவதை அனுமதிக்காமல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேரள மாநிலத்திலிருந்து முன்னாலே தமிழ்நாட்டுக்கு ஏராளமான முந்திரி நம்முடைய தொழிற்சாலைகளுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் காரணமாக கேரள மாநிலத்திலுள்ள முந்திரி தொழிற்சாலைகள் மோசமான நிலைமைக்குச் சென்ற காரணத்தினால் கேரள அரசு அந்த மாநிலத்திலேயிருந்து பக்குவப்படுத்தாத முந்திரியினை வெளி மாநிலத்திற்கு கொண்டு போவதைத் தடை செய்கின்ற விதத்தில் ஒரு தடையுத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் நமது மாநிலத்திலிருந்து ஆந்திர மாநிலத்திற்கு எடுத்துச் செல்வது பற்றி குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி பரிசீலித்து கேரள அரசு போட்டிருக்கும் அந்த உத்தரவைப்போல் இந்த அரசும் ஒரு உத்தரவை பிறப்பிக்கலாமா என்பதைப் பற்றி யோசிக்கலாம்.





டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, முந்திரி உற்பத்தி ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடியதொன்று. ஆகவே, தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசு இந்த முந்திரி உற்பத்திக்கு ஏதேனும் செயல் திட்டங்களை வகுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட செயல் திட்டங்கள் எதுவும் இப்போது வகுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேர்வைத் துணைத் தலைவரவர்களே, புதிதாக முந்திரி தொழிற்சாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, கன்னியாகுமரிப் பகுதியிலே, நம்முடைய மாநிலத்திற்கு தேவையான மொத்த முந்திரியின் தேவை என்ன? நம்முடைய உற்பத்திக்கும் அதற்கும் எவ்வளவு குறைபாடு ஏற்படுகிறது என்பதைச் சொல்ல இயலுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

## தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல் நிலையம்.

* 705 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலுள்ள ஓலைச் சுவடிகள் மற்றும் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கவும் அதில் முக்கியமானதும் அபூர்வமானதுமான நூல்களை வெளியிடவும் எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதை நிர்ணயித்துச் செயல்பட ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு சி. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த சரபோஜி மகாராஜா நூல்நிலையத்தில் உலகத்திலேயே வேறு எங்கும் இல்லாத நூல்கள் எல்லாம் இருப்பதாக நான் அறிகிறேன். அங்கே இருக்கக்கூடிய பல ஓலைச் சுவடிகள் கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அவைகளை மொத்தமாக எடுத்துக்கொண்டு வந்து நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் அதை அச்சிட்டு தமிழக அரசே பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1975-76-ஆம் ஆண்டில் இந் நூலகத்திற்கு ரூ. 91,000 சம்பளம் மற்றும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்காகவும், ரூ. 25,000 புத்தகங்கள் வெளியிடுவதற்காகவும் தமிழக அரசு மானியம் அளித்திருக்கிறது. இந்த ஓலைச்சுவடிகளைப் பிரதி எடுப்பதற்காக இரண்டு லட்சத்து நாற்பத்து எட்டாயிரம் ரூபாய் செலவில் ஒரு மைக்ரோ பிலிம் யூனிட்டும் வாங்க 1976-ல் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி வசதி இப்போது பொருத்தப்பட்டு இயங்குவதற்குத் தயாராக உள்ளது. ஆகவே, அந்த ஓலைச் சுவடிகளைப் பொறுத்த அளவில் போதுமான வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரஸ்வதி மகால் நூல்நிலையம் மத்திய அரசின் துறை மூலம் நடத்தப்பட வேண்டும் என்ற ஒரு வேண்டுகோள் மாநில அரசுக்கு தரப்பட்டு அதை அவர்கள் நிர்வகித்து ஒப்படைக்கக்கூடிய நிலைமை ஏற்கனவே ஏற்பட்டுள்ளது. இப்போது மத்திய அரசின் பொறுப்பில் இருப்



பதின் காரணமாக தமிழ் ஏடுகள், பழமையான சில ஏடுகள் உடனுக்குடன் அச்சிட்டு பதிவுசெய்து பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதறான அதிகான ஆர்வம் இல்லாமல் இருப்பதாக தெரிகிறது. எனவே, அப்படிப்பட்ட பழமையான தமிழ் ஏடுகளை நாம் இழந்துவிடாமல் பாதுகாக்கக்கூடிய நிலைமையில் அவற்றை அச்சிடுவதற்கான பொறுப்பை மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்றுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மைய அரசு, தஞ்சை மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகத்தின் முன்னேற்றம் கருதி, நல்ல முறையில் செயல்பட அக்கறை கொண்டு அண்மையில் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்நூலக அபிவிருத்திக்காகத் தேவையான நிதி உதவியை நிர்ணயிக்க ஒரு குழு அமைத்தது. அக்குழு 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 24, 25-ம் நாள் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகத்திற்கு வருகை தந்து அந் நூலக நிர்வாகிகளுடனும், அரசுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி 1977-78, 79-ஆம் ஆண்டு அபிவிருத்திக்காகச் சுமார் ரூபாய் 7 லட்சம் மைய அரசின் நிதி உதவி தேவைப்படும் என்ற கருத்தை ஏற்று, மைய அரசுக்கும் பரிந்துரை செய்ய இருக்கிறது. 1978-79-ம் ஆண்டில் மைய அரசு இக்குழுவின் கருத்தை ஏற்றால் பின்வரும் நிதி உதவி அளிக்கும்.—

1. சம்பளத் தொகையில் ரூ. 50,000-க்குக் குறையாமல்.

2. புத்தக வெளியீட்டுக்காக ரூபாய் 25,000.

3. ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்க ரூபாய் 15,000.

4. புதியதாக ஓலைச் சுவடிகள் வாங்குவதகாக ரூபாய் 5,000.

5. ஆராய்ச்சியாளர்களுக்கு நிதி உதவியாக ரூபாய் 27,000.

6. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகக் கட்டிடத்தைப் பழுது பார்த்து ஓலைச் சுவடிகள் நாசமாகாமல் தடுத்து தக்க நடவடிக்கை எடுப்பதற்காக ரூபாய் 2 லட்சம்.

7. ஓலைச் சுவடிகளைச் சரிவர அடுக்கி வைத்து விஞ்ஞான முறையில் பாதுகாக்க ரூபாய் 2 லட்சம்.

இத்துடன் இவ்வரசு ஏற்கனவே அளித்து வரும் ரூபாய் ஒரு லட்சத்து 16 ஆயிரமும் மான்யமும் அளிக்கப்படும். இந்த வகையில் எல்லாம் சரஸ்வதி மகால் நூலகம் பாதுகாக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, அங்குள்ள சில தமிழ் ஏடுகள் பிற மொழிகளில், குறிப்பாக வடமொழியில் மொழி பெயர்க்கப்படுவதின் காரணமாக வடமொழி நூலாகவே மக்களுக்கு அறிமுகமாகி விடுகின்றன. ஆனால் தமிழ் நூல்களுக்கு அப்படிப்பட்ட ஒரு குறைபாடு ஏற்படுகிறது. ஆகவே, இதைப் போக்குகின்ற வகையில் ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கி தமிழ் நூல்களை அச்சிடுவதற்கோ அல்லது மைரோ பிலிம் செய்து பாதுகாப்பதற்கோ தனியான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பழைய தமிழ் நூல்களை நல்ல முறையில் பாதுகாக்கவும், அவற்றை பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னையில் ஆசிரியர்களுக்கு விடுதி.

*706 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சென்னை நகரில் ஆசிரியர்கள் தங்குவதற்காக, நூல் நிலையத்துடன் கொண்ட ஹாஸ்டல் ஒன்றைக் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். சென்னை நகரில் தமிழ்நாடு தேசீய அடிப்படை ஆசிரியர் நல நிதியில் இருந்து ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்து, ஓர் ஆசிரியர் இல்லம் கட்ட அரசு உத்தேசித்துள்ளது.



(ஆ) இவ்வாசிரியர் இல்லம் வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும் ஆசிரியர்கள் தங்க வசதிகள் கொண்டுள்ள அறைகளுடன் கட்ட உத்தேசித்துள்ளது. மேலும் இதில் முக்கியமான சில கூட்டங்கள் நடத்த ஒரு கூடமும் உணவு விடுதியும் மற்றும் நூலகம் போன்ற வசதிகளும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கான வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு ஆகியவை தயார் செய்து அனுப்புமாறு தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை (கட்டிடம்) அவர்களைக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மற்றும் ஆசிரியர் இல்லத்தை பழைய கல்லூரி கட்டிட வளவுக்குள் (அதாவது D. P. I.'s Office Compound) அரசாங்க நிலத்தில் கட்ட அனுமதி வழங்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் சென்னையில் எந்த இடத்தில் கட்டப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, கல்வித் துறை டைரக்டர் ஆபீஸ் இருக்கின்ற கட்டிட வளவுக்குள் கட்டுவதற்கு உத்தேசம் உள்ளது.

## மதுக்கரை நகரியத்தில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

707—*வினா: திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை நகரியக்குழு பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு யாது?

(இ) எந்த அளவில் அப்பணி நிறைவேறியுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ) மற்றும் (இ) : மதுக்கரை அரசு உயர்நிலைப்பள்ளிக்காக புதிய கட்டிடம் கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ஆ. நடராசன்: அந்தப் பள்ளியில் புதிய கட்டிடம் இல்லாததால் இட வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டுவது குறித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு, முன்னுரிமை அளிக்கப்படும்போது இந்தப் பள்ளிக் கூடத்தின் தேவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### கருங்கல், கப்பியறை பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்கல்.

708—*வினா: திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கருங்கல், கப்பியறை நகரப் பஞ்சாயத்துக்களுக்காக குடிநீர் வழங்கும் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) மேலும் சில உள்ளாட்சி நிறுவனங்கள் இணைந்த ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. உத்தேச மதிப்பீடு தயாரானதும் அரசின் ஒப்புதல் பெற்று, பின்பு வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு நாட்களுக்குள் இந்தத் திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரானதும், இந்தத் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் பெற்று, அதன் பிற்பாடு இந்த வேலைகள் துவங்கப்படும்.

### சேலத்தில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள்.

709—*வினா—திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர் அன்னதானப்பட்டியில், வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் குடியேறாத நிலையிலுள்ள காலனியில் காவல்துறையினருக்கு குடியிருப்புகள் ஒதுக்கும் உத்தேசம் இவ்வரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ):

சேலம் மாவட்டம் அல்லிக்குட்டை ஏரி குடிசைப்பகுதிகள் அகற்றும் திட்டத்தின் கீழ் அடங்கிய 211 குடியிருப்புகள், முடிக்கப்பெற்று 1977 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் தகுதிபெற்ற குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பெற்றது உண்மை. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களில், 60 குடும்பங்கள் மாவட்டத்தை விட்டு வெளியேறி விட்டதால், 60 குடியிருப்புகள் காலியாக உள்ளன. எனவே, இந்த காலியாக உள்ள குடியிருப்புகளை, தகுதிபெற்ற மற்று குடிசை வாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய சேலம் மாவட்ட ஆட்சியரோடு கலந்து ஆலோசித்து ஆவன செய்யுமாறு வீட்டு வசதி வாரியத்திற்கு அறிவுரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி வீடுகள் எந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது? எந்த ஆண்டு குடியிருக்க அனுமதிக்கப்

பட்டது? இடையிலே காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்ன ? அப்படி காலியாக இருக்கக்கூடிய 60 வீடுகளை, அருகிலே இருக்கக்கூடிய காவல் துறைக்கு ஒதுக்குவது பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, the construction was completed during October 1977. கட்டி முடிக்கப்பட்டது 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம். இதில் 60 பேர்கள் வெளியேறி விட்ட காரணத்தால், மீதமுள்ள eligible slum dwellers அதாவது இந்த குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் பெறுவதற்குச் சில தகுதிகள் இருக்கின்றன. அந்தத் தகுதிகள் உள்ள பட்டியல் கலெக்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன், குடிசை மாற்று வாரியத்தால் அந்த வீடுகள் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

## வேலைவாய்ப்புகளில் அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு.

710—*வினா.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்புகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 18 சத இடங்களுக்கு அரசுத்துறை, தனியார் துறை, கூட்டுறவு துறையிலுமான நிறுவனங்களில் அவர்கள் நியமிக்கப்படுவது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ்நாடு அரசு பணியிடங்களிலும் மற்றும் அரசுபொது நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு 18 சதவீத பணியிட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அரசு உத்திரவிட்டுள்ளது. இது நிலைமை குறித்து எல்லா துறைகளும் ஆண்டு அறிக்கைகள் அரிசன மற்றும் மலைவாழ்துறை இயக்குநருக்கு அனுப்புதல் வேண்டும். ஆண்டு அறிக்கைகளின் வாயிலாகவும் மற்றும் பல்வேறு துறைகளுக்கு நேரில் சென்று, ஒதுக்கீடு வழிமுறை குறித்து ஆய்வு நடத்தியும் நிலைமை கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்





வொரு துறையிலும் ஒரு அதிகாரி பொதுத் தொடர்பு அதிகாரியாக பணியாற்றி நிலைமையை ஆய்வு செய்கிறார். கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இந்த ஒதுக்கீடு முறை பொருந்தும். தனியார் துறைகளுக்கு இந்த ஒதுக்கீடு முறை பொருந்தாது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 18 சத விகிதம், இந்த வேலை வாய்ப்புகளை தனியார் துறை, அரசுத் துறை கூட்டுறவுத் துறை போன்ற நிறுவனங்களில் நியமிக்கப்பட்டதா ? இதைக் கண்காணிக்கின்ற முறைகளைப் பற்றி முன்பு அமைச்சர் சொன்னார்கள். அதே நேரத்தில், இதுவரையில் இந்த நிறுவனங்களில் எத்தனை சதவிகிதம் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது ? அப்படி பூர்த்தி செய்யப்படாத நிறுவனங்களின் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தர பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த விதிமுறை அரசாங்கத்தின் பொதுத்துறைக்குத் தான் பொருந்துமே தவிர தனியார் நிறுவனங்களுக்குப் பொருந்தாது. மத்திய அரசாங்கம் தனியார் நிறுவனங்களுக்கு பொருந்துமாறு செய்யலாமா என்பது குறித்து இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எத்தனை சதவிகிதம் இதுவரைக்கும் தரப்பட்டிருக்கின்றது என்ற புள்ளி விவரம் தற்போது என் கைவசம் இல்லை. இருந்தாலும், இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, அரசுத் துறையில் 18 சதவிகிதம் கண்டிப்பாய் ஒதுக்கித் தரப்பட வேண்டுமென்ற ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : 18 சதவிகிதம் தனியார் துறைகளிலும் கொடுக்க வேண்டுமென்று மேற்கு வங்க அரசு மத்திய அரசாங்கத்தில் அனுமதி கேட்டு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்றாலும் கூட அதை மீறி 18 சதவிகிதம் தனியார் துறையிலும் கொடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக பத்திரிகைச் செய்தியிலிருந்து அறிகிறேன். அந்த அடிப்படையில் இங்கும் ஏற்பாடு செய்யப்படுமா ? மேலும் குறிப்பாக டிரான்ஸ்போர்ட் போன்ற கழகங்களிலும், மின் வாரியம் போன்ற வாரியங்களிலும் 18 சதவிகிதம் துப்புரவாகக் கொடுக்கப்படவில்லை. கல்வித் துறையிலும், அரசுத் கல்லூரிகளிலும் அப்படிப்பட்ட ஒதுக்கீடு கொடுப்பது கிடையாது. சமயத் துறையில்—இந்து ரிலிஜியஸ் என்டௌமென்ட்

[1978 மார்ச் 29

துறையிலும் கொடுப்பது கிடையாது. இப்படி அரசியல் சட்ட ரீதியாகக் கொடுக்க வேண்டிய அந்தச் சலுகையை கொடுக்க மறுக்கிற, கொடுக்க ஏற்பாடு செய்யாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். மேற்கு வங்க அரசு தனியார் நிறுவனங்களிலும் 18 சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்ததாக பத்திரிகைச் செய்தியில் வந்ததாகக் கூறுகிறார்கள் . பத்திரிக்கைச் செய்தியை வைத்து நாம் எந்த ஒரு முடிவுக்கும் வந்துவிட முடியாது. இருந்தாலும் மத்திய அரசாங்கம் இந்த 18 சதவிகிதத்தை தனியார் நிறுவனங்களிலும் தரப்பட வேண்டுமென்ற வகையில், நல்ல கொள்கையில் செயல்படக்கூடிய நிலைமை வந்தால், மாநில அரசாங்கம் பின்பற்றத் தயாராக இருக்கிறது. கல்விக் கூடம், ஊராட்சி ஒன்றியம் போன்ற இதர அலுவலகங்களில் 18 சதவிகிதம் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை என்ற குறையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதை ஆராய்ந்து பார்த்து எந்தெந்த அலுவலகங்களில் தரப்படவில்லையோ அவை கண்டிப்பாக தரப்பட வேண்டுமென்பதிலே இந்த அரசு கண்டிப்புடன் இருக்கிறது என்பதையும், அப்படித் தரப்படவில்லை என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ்மக்கள் மேம்பாடுத் திட்டம்.

*711வினா.—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மார்வாடி, மதகேரி, கொத்தளம், முருக்கல், நத்தம் மற்றும் இருபத்திரெண்டு கிராமங்கள் இணைந்து செயல்படும் திட்டத்தினை அமுலாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?**



1978 மார்ச் 29]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தருமபுரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் மார்வாடி, மதகேரி, கொத்தளம், முருக்கல், நத்தம், மற்றும் 22 கிராமங்கள் இணைந்து செயல்படும் திட்டத்தினை அமுலாக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தருமபுரி மாவட்டத்தில் சிற்றூறு பகுதியில் காவேரிப் பட்டினம் தொகுதியில் மார்வாடி., மதகேரி, கொத்தளம், முருக்கல், நத்தம் போன்ற பகுதிகளில் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அப்படிப்பட்ட பகுதியை மேம்படுத்த இனிமேலாவது அரசு செயல் திட்டத்தை வகுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அங்கு மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். மத்திய திட்டக்குழு தொடர்ச்சியாக உள்ள பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளைத் தான் துணைத் திட்டப் பகுதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறியுள்ளது. இவ்விதிமுறைக் கிணங்க துணைத் திட்டப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இது தேர்ந்தெடுக்கப்படவில்லை. இருந்தாலும் மீடியம் டர்ம் பிளான் என்ற திட்டத்தை அரசாங்கம் வகுக்க இருக்கிறது. அந்தத் திட்டம் வகுக்கப்படுமானால் இந்தப் பகுதியும் சேர்க்கப்படும்.

[முற்பகல் 10—00.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிசனங்களுக்கு 18 சதவீதம் இடம் ஒதுக்கவேண்டும் என்ற அந்த சம்பந்தப்பட்ட கேள்வியில் அமைச்சர் அவர்கள் எந்தத் தேதியில் உத்திரவிட்டார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா ? அதேபோல் தனியார் துறை நிறுவனங்களிலேயும் அரசு உதவிபெற்று...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி இருந்தால் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் : நான் ஆரம்பத்திலேயே கையை உயர்த்தினேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

## கோவையிலிருந்து புதிய ரயில் வண்டிகள்.

*712. வினா—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவையில் இருந்து திருவனந்தபுரத்திற்கு பகலில் துரித ரயில் ஒன்று விடுவதற்கும், தற்சமயம் பாஸ்ட் பாசஞ்சர் வண்டியாக கொச்சிவரை செல்லும் இரவு ரயிலை துரித வண்டியாக மாற்றி திருவனந்தபுரம் வரை விடுவதற்குமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவையிலே கேரள மாநிலத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு கணிசமான பகுதியினர் வசிப்பது அனைவருக்கும் தெரியும். அந்தப் பெரிய நகரத்திலேயிருந்து திருவனந்தபுரத்திற்குச் செல்வதற்கு சரியான போக்குவரத்து என்ற அடிப்படையில் துரித வண்டி இல்லாத நிலைமை இருக்கிறது. அந்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். அதே மாதிரி கோவையிலிருந்து சென்னைக்கு வருவதற்கும், அல்லது திருவனந்தபுரத்திற்குச் செல்வதற்கும் இரவு நேரத்திற்குப் புறப்படக்கூடிய ரயில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, கோவையிலிருந்து, சென்னைக்கும், திருவனந்தபுரத்திற்கும் துரித ரயிலை விடுவதற்கு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரயிலை விடுகின்ற நடவடிக்கையை மாநில அரசு எடுப்பதல்ல, அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும் என்று கருதுகிறேன். மத்திய அரசுக்கு இதைப் பற்றி பரிந்துரை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அம்மாபேட்டை சாலை.

*713. வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி—கரடிசித்தூர் சாலையில் அம்மாபேட்டையிலிருந்து 3 கி.மீ. தூரம் வரையான சாலை மட்டும் நெடுஞ்சாலைத் துறையால் எடுக்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனை நெடுஞ்சாலைத்துறை எடுக்க வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இச்சாலையில் கி.மீ. 13/8 முதல் கி. மீ. 14/8 வரையுள்ள 1 கி.மீ. நீளமுள்ள பகுதி மட்டும் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) அரசின் நிதி நிலையைப் பொறுத்து இப்பகுதியை அரசு சாலையாக எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

## பள்ளியக்கிரகாரம்—நீடாமங்கலம் சாலை.

*714 வினா—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பள்ளியக்கிரகாரத்திலிருந்து நீடாமங்கலம் வரை வெண்ணாற்றின் வடகரையில் சாலை போடும் திட்டம் இதுவரை எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பள்ளியக்கிரகாரத்திலிருந்து நீடாமங்கலம் வரையுள்ள சாலையில் கி.மீ. 0/0 முதல் 16/8 வரையுள்ள முதல் பகுதி தார் சாலையாக மேம்

படுத்தப்பட்டு நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது. வெண்ணாற்றின்வடகரையில் உள்ள எஞ்சியப் பகுதியை (கி.மீ. 16/8 முதல் 32/0 வரை) மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, வெண்ணாற்றங் கரையின் வட பகுதியிலே கலஞ்சேரி வரையில்தான் இந்த சாலை போடப்பட்டு உள்ளது. மீதம் 1 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கும் என்று கூறினார்கள். அதையும் தொடர்ந்து போட்டு கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மீதம் உள்ளது 1 கிலோ மீட்டர் என்று கூறவில்லை. 16·8 கி.மீ. இருக்கிறது. இதை மேம்படுத்துவதற்காக 20 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, நிதி நிலைக்கு ஏற்ப அது மேற்கொள்ளப்படும் என்று தான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## (2) உரிமைப் பிரச்னை.

### மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் கால் நடைத் துறை உதவி இயக்குநர் மீது எழுப்பப்பட்ட பிரச்னை!

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 184-ன் கீழ் சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், கால்நடைத் துறையின் அதிகாரி திரு. நடராசன் ஆகியவர்களுக்கு எதிராக நான் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து நோட்டீஸ் தங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அந்த உரிமைப் பிரச்னையைப்பற்றி விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டியதில்லை. நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அது ஆய்வில் இருக்கிறது. பின்னால் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மு. கருணாநிதி : இது ஆய்வுக்கு வைக்கவேண்டிய பிரச்சினை என்று நாங்கள் கருதவில்லை. நேற்றைய தினம் அவசரம் அவசரமாக திரு. துரைமுருகன் மீது உரிமைப் பிரச்னை கொண்டுவரப்பட்டு, உரிமைக்குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். ஆகவே, இது ஆய்வில் இருக்கிறது என்றுசொல்வது பொருத்தமுடைய பதிலாக இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, உரிமைப் பிரச்சினையைப்பற்றி கருத்துக்களை எடுத்துக்கூற நீங்கள் எங்களை அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்மீது இங்கே உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு உரிமை மீறல் குழுவிற்குத் தாங்கள் அனுப்பியதைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். நேற்றைய தினம் நடந்த சம்பவம் இந்த அவையிலே நடந்த காரியம் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். உடனடியாக உரிமைப்பிரச்னை இந்த அவையிலே எழுப்பப்பட்டதால் அதைப்பற்றி ஆய்விலே எடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மீது மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் அவர்கள் எழுப்பியிருக்கின்ற உரிமைப்பிரச்னையை ஆய்விலே எடுத்துக் கொள்வதும், எடுத்துக்கொள்ளாததும் பேரவைத் தலைவரவர்களைப் பொறுத்தது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை கூடுவதற்கு இரண்டு மூன்று நிமிடங்களுக்கு முன் வந்து அவர்கள் என்னிடத்தில் கொடுத்தார்கள். கொடுத்திருக்கின்ற அந்தப் பிரச்னையை ஆராய்ந்து பார்த்த பிறகு எடுத்துக்கொள்வதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மேலும், நேற்றைய தினம் நடந்த சம்பவத்தை இதனோடு ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். அப்பொழுது நடந்த சம்பவத்தைப்பற்றி அப்பொழுதே பிரச்னை எழுப்பப்பட்ட விவகாரம் அது.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் படித்ததும் இந்த அவையிலே நடைபெற்ற விவகாரம்தான். அது வெளியிலே நடைபெற்ற விவகாரம் அல்ல. அமைச்சரவர்கள் படித்த அறிக்கை இந்த அவையிலே நடைபெற்ற

விவகாரம்தான். வேண்டுமென்றே, குற்றச் சாட்டைச் சுமத்திய உறுப்பினரின்மீது ஒரு எதிர்ப் புகாரைச் சுமந்து கின்ற அளவிற்கு அறிக்கை படிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் தன்னுடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது என்று தந்திருக்கிறார்கள். இது ஒரு உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்னை மட்டுமல்ல. இந்த அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தக்கூடிய பிரச்னைதான். இப்படி ஒரு புகாரை உறுப்பினர்கள் எழுப்புகின்ற நேரத்தில் திரும்பவும் அவர்கள் மீது புகார் எழுப்புவது நல்ல மரபாக இருக்க முடியாது. எனவே, இது அவையிலே நடைபெற்ற சம்பவம்தான். அமைச்சரவர்களின் அறிக்கை இங்கே தான் படிக்கப்பட்டது. எனவே, இது அவை உரிமையை மீறிய பிரச்சினையாகும். ஆகவே, இன்றைக்கே இதை எடுத்துக்கொள்வதுதான் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகம்மது: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள் இங்கே படித்த அறிக்கையும் இந்த அவையிலே நடைபெற்ற சம்பவம்தான் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், வெளியே நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட ஒரு புகாரின்மீது அந்த அறிக்கை வாசிக்கப்பட்டதே தவிர, அது சம்பந்தமாக தன்னிலை விளக்கமாக அந்த அறிக்கை வாசிக்கப்பட்டதே தவிர இங்கே நடைபெற்ற சம்பவங்களுக்குத் தொடர்புடையது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, இந்த உரிமைப் பிரச்சினை பற்றி நீங்கள் அனுமதித்தால், எடுத்துக்கொள்வதற்கு அனுமதிப்பீர்களேயானால் அரசுத் தரப்பில் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 184-வது விதியின்கீழ் சமூக நலத் துறை அமைச்சருக்கு எதிராகவும், கால்நடை உதவி இயக்குநர் அவர்களுக்கு எதிராகவுக் இந்த உரிமைப் பிரச்சினையை நான் இங்கே கொண்டு வருகிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினர்.



நேற்று இந்தச் சபையில் கால்நடைத் துறை உதவி இயக்குநர் அனுப்பின சர்க்குலரை ஆதாரமாக வைத்து அமைச்சருக்கு எதிராகவும், அதிகாரிக்கு எதிராகவும் குற்றச் சாட்டைக் கொண்டு வந்தேன். அந்தக் குற்றச்சாட்டை சமூக நலத் துறை அமைச்சரோ, அவ்வ முன்னவரோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியோ மறுக்கவில்லை. கவர்மென்ட் சர்வன்ட்ஸ் ரூல்ஸ்-க்கு விரோதமாக சர்க்குலர் போட்டது தவறுதான், மன்னிக்க வேண்டுமென்று அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் சொல்லிய குற்றச்சாட்டை அதிகாரியோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ, முன்னவரோ மறுக்கவில்லை.

ஆனால், கால்நடைத் துறை அமைச்சரவர்கள், 81-வது விதியின்கீழ் அதிகாரிஎழுதிய கடிதத்தைப் படித்து, தன்னிலை விளக்கம் தந்தார்கள். அப்படித் தன்னிலை விளக்கத்தைத் தருகின்ற பொழுது அதிகாரி எழுதிய கடிதத்தைப் படித்து, அதில் குறிப்பிட்டார்கள், நான்சம்பந்தப்பட்ட அதிகாரியைச்சந்தித்ததாகவும், நான் ஆலோசனை கூறியதன் பேரிலேயே அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் உண்மைக்கு மாறாக, வேண்டுமென்றே எனக்குக் களங்கம் கற்பிக்கும் விதத்தில் உண்மைக்கு புறம்பான ஒரு தகவலை அதில் தந்துள்ளார்கள். இந்தச் சபையில் அந்தக் கடிதத்தை வாசித்தார்கள். இது என்னைப் பற்றி தவறான எண்ணத்தை மக்கள் மத்தியிலே உருவாக்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னுடைய கடமையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தும். ஆக்வே, இது உரிமை மீறிய செயலாகிறது. நான் அந்த அதிகாரியைச் சந்திக்கவே இல்லை, நான் எந்த ஆலோசனையையும் எது சம்பந்தமாகவும் அவருக்குக் கூறவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரி, உண்மைக்குப் புறம்பான தகவலை, என்னைப்பற்றிய தகவலை அந்தக் கடிதத்தின் மூலம் தெரிவித்திருக்கிறார். நான் எப்பொழுது அந்த அதிகாரியைச் சந்தித்தேன் என்பதை இங்கே அமைச்சராலும், அதிகாரியாலும் ஆதாரத்தோடு சொல்லப்படவில்லை.

[முற்பகல் 10·10]

அது மட்டுமல்லாமல், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நான் ஒரு அதிகாரியைப் பார்த்து, தவறான, சட்ட விரோதமான ஆலோசனைகளைச் சொன்னால், அவைகளை நிறைவேற்ற அந்த அதிகாரி உத்தரவு போடுவாரா? அப்படி போடலாமா? அப்படி அவர் உத்தரவு போடவேண்டிய அளவுக்கு அவசியம்

என்ன? நானும் அவரைச் சந்தித்து, அமைச்சர் அடிக்கடி மதுரைக்கு வருகிறார். ஆகவே, செலவைச் சரிக்கட்ட வசூல் செய்ய ஆணை பிறப்பியுங்கள் என்று சொல்ல எனக்கு என்ன அவசியம்? தனிப்பட்ட முறையில் அந்த அமைச்சர் மீது எனக்கு என்ன அவ்வளவு அக்கறை? இவைகளெல்லாம் தெளிவாக்கப்படவில்லை. இது வேண்டுமென்றே தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கும் உண்மைக்குப் புறம்பான தகவல். ஒரு சட்டமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லும்போது அது உண்மைதானா என்பதை அறிந்து, இந்தத் தவறு எப்படி நடந்தது என்பதை விளக்கவேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக, குற்றச்சாட்டு சொல்பவர்களையே நீங்கள்தான் அந்தக் குற்றச்சாட்டை செய்யச் சொன்னீர்கள் என்று அபாண்டமான களங்கம் கற்பித்து, தவறான தகவலைச் சொல்வதென்றால் பிறகு யாரும் தங்கள் சட்ட மன்ற பணியைச் செய்ய முடியாது. எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்து இந்த அரசுக்கு எதிரான குறைகளை அல்லது குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, ஜனநாயகக் கடமையைச் செய்யமுடியாது.

அமைச்சரவர்கள் 81-வது விதியின்கீழ் தன்னிலை விளக்கம் தருகிற வகையில் அதிகாரி எழுதிய கடிதத்தை இங்கே படித்ததன் மூலம் அந்தக் கடிதத்திலுள்ள வாசகங்களுக்கு அவர் பொறுப்பாகியிருக்கிறார். அது மட்டுமல்ல, அவர் அந்தக் கடிதத்தில் உள்ள அந்தப் பதில் சரிதானா என்பதை அறிந்து இந்த அவைக்கு விளக்கம் தரவேண்டும். அதிகாரி தவறான தகவல் தருகிறார். அது உண்மையல்லவென்று தெரிந்தும், வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு, குற்றச்சாட்டு சொல்லி அது நிரூபிக்கப்பட்டுவிட்டதால், என்னை வேண்டுமென்றே பொது மக்கள் மத்தியிலேயும், மற்றவர்கள் மத்தியிலேயும் களங்கப்படுத்துகின்ற முறையில் ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த சபையில் அமைச்சரவர்களே தந்திருக்கிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட அமைச்சர், கால்நடைத் துறை அமைச்சருக்கு எதிராகவும், சம்பந்தப்பட்ட அதிகாரி நடராஜன் என்கிற கால்நடைத் துறை உதவி இயக்குநருக்கு எதிராகவும் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.'

என்னைப் பொறுத்து மட்டுமல்ல, பல்வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நாளைக்கு யாரும் எந்தக் குற்றச்சாட்டையும் கொண்டு வந்தால், அதிகாரிகள் அவர்களை



சொன்னார்கள், ஆகையினாலேதான் நான் இந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று எதிர்க் குற்றச்சாட்டு சொல்வார்களேயானால், சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமையை ஆற்ற முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, இவ்வளவு மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் என்மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறவேண்டுமென்பதற்காக கால் நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களிடம் நான் சொன்னபொழுது, அவர் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்ட, அசிஸ்டெண்டு டைரக்டர் டாக்டர் நடராஜன் இங்கு, சென்னையிலே டிரெயினிங் எடுத்துக் கொண்டிருப்பதால், அவரை அழைத்து அவர் கைப்பட எழுதிய அந்தக் கடிதத்தைத்தான் நான், வாசித்தேன். எனவே, இது அதிகாரி சம்பந்தப்பட்டதுதானே தவிர, இதிலே எனக்கு ஏதோ சம்பந்தம் இருப்பதாக நான் நிச்சயமாகக் கருதவில்லையென்று கூற விரும்புகிறேன்.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அவை அரசாங்க அதிகாரிகள் எழுதிய கடிதத்தைப் படிப்பதற்காக உள்ள அவை அல்ல. இந்த அவையிலே ஒரு கடிதம் படிக்கப்படுமானால், படிக்கிற அமைச்சர்தான் அந்தக் கடிதத்திற்குப் பொறுப்பே தவிர, அந்த அதிகாரி அல்ல. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எந்த இலாகாவிலே வேண்டுமானாலும் எழுதி வைத்தால் அதை இந்த அரசாங்கத்தின் சார்பிலே அவையிலே அமைச்சர் படிக்கின்றபொழுது அமைச்சர்தான் பொறுப்பெடுத்துக்கொண்டு படிக்கிறார் என்று பொருளாகும். எனவே, அமைச்சர் அந்தக் கடிதத்தைப் படிக்கிறபொழுது, சட்ட மன்றப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்மீதே திரும்பக் குற்றம் சாட்டுகிற வகையிலே ஒரு கருத்து வருமானால் அந்தக் கருத்து அவையிலே உள்ள உறுப்பினர் உரிமையைப் பாதிப்பதாகும். மாறாக, இன்னும் சொல்லப்போனால் அவை உரிமை பறிக்கப்படுகிற தன்மை உடையதாகும். எனவே, அவைத் துணைத்தலைவரவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கே படிக்கப்பட்ட காரணத்தால், இங்கே, அரசாங்கத்தின் சார்பிலே படிக்கப்பட்டதாக ஆகிவிட்டது. எனவே, இந்தப் பிரச்னை இலகுவாகக் கருத முடியாத அவை உரிமைப் பிரச்சினையாகும்.

ஒரு வேளை குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்பதை மட்டும் அரசாங்கம் விசாரித்து அது எந்த அளவுக்கு உண்மை, அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கிறோம் என்று தெரிவித்து இருப்பார்களானால் அதுவேறு. அமைச்சருக்கு இதில் நேரடியாகச் சம்பந்தம் இல்லை என்றோ அமைச்சருடைய இலாகாவிலே இது நடந்திருக்கிறது என்றோ சொன்னால் அது வேறு. ஆனால் அந்த அதிகாரி எழுதிய கடிதத்தை இங்கே படித்ததின் மூலம், அமைச்சருக்குத் தெரிந்தே அந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று எண்ணத்தை அமைச்சரே உண்டாக்கி இருக்கிறார்கள். ஒரு அதிகாரி எழுதிய கடிதத்தைப் பரிசீலித்து விட்டுத்தான் இந்த அவையிலே படிக்கவேண்டும்.

ஒரு அதிகாரி இந்த அவையிலே இருக்கிற எந்த உறுப்பினரையும் குற்றம் சாட்டத் தகுதியோ, நியாயமான உரிமையோ பெற்றவர் அல்ல. அப்படிக் குற்றம் சாட்டும் போது முழு ஆதாரம் பெற்றுத்தான் குற்றம் சாட்டவேண்டும். அந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் விசாரித்திருக்க வேண்டும். அரசாங்கம் இதற்கான சான்றுகளைக் கேட்டு அதை விசாரித்து விட்டு, அதற்குப் பிறகு திரு. ரகுமான் கான் சொன்னதன் பேரில்தான் அந்தக் குற்றம் நடந்தது என்று சொன்னால், அவரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளக் கூட வலியுறுத்த நான் தயாராக இருக்கிறேன்.

ஆனால் அதற்கு மாறாக, சட்டமன்ற உறுப்பினரைச் சம்பந்தப்படுத்துவதன் மூலமாக உண்மையல்லாத ஒன்றைக் கூறித் தன்மீது உள்ள குற்றச்சாட்டிலிருந்து அரசு மன்னித்து விடும் என்று எண்ணிக்கொண்டு முறை தவறாகச் சொல்லுகிற காரணத்தால், இது நிச்சயமாக உறுப்பினர் உரிமையைப் பாதிக்கின்ற, சட்டமன்றத்தை அவமதிக்கிற காரியமாகும். எனவே, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பத்தான் வேண்டும் என்பதை மறுத்து அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பொருத்தமாக இல்லாத காரணத்தால், எ[illegible] கருத்தை வலியுறுத்தி, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்[illegible] வேண்டுமென்று தெ[illegible]வித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : துணைத் தலைவர் அவர்களே, இது அமைச்சர் மீது குற்றச்சாட்டு குற்றச்சாட்டு என்று நேற்றும், இன்றும் திரும்பத்திரும்ப வருகிறது.





ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு அசிஸ்டன்ட் டைரக்டர் அனுப்பிய சுற்றறிக்கையை காட்டினார்கள். அதிலே அமைச்சருக்கும் அந்த சுற்றறிக்கைக்கும் என்ன சம்பந்தம் என்பதை எடுத்துச் சொல்லவில்லை.

ஒரு துறையிலே கீழ் மட்டத்திலே இருக்கிற ஒரு அதிகாரி இதைப்போல ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார் என்கிற ஆதாரத்தைத்தான் எடுத்துக் காட்டினார்கள். ஆகவே அத்தகைய ஒரு சுற்றறிக்கை ஒரு அமைச்சருடைய கவனத்திற்குத் தெரியாமல் வருவதற்கு எல்லாவிதயான வாய்ப்புகளும் உண்டு. இருப்பினும் அந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்காமல் மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி என்ன என்று ஆராய்ந்து இந்த மன்றத்திற்குத் [illegible]கவல் தரவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் நேற்றைய [illegible]ம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அத்தகையசுற்றறிக்கை [illegible]வதற்கான காரணம் என்ன என்பதை துறையின் மூலம் விசாரித்து இருக்கிறார்கள்.

விசாரித்தபொழுது யார் அந்த சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்களோ அவரே தனது பதிலைத் தந்திருக்கிறார். அத்தகைய ஒரு பதிலை ஆராய்ந்து பார்த்துத்தான் சட்டமன்றத்திற்கு தரவேண்டும் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒரு குற்றச்சாட்டு காலையிலே தெரிவிக்கப்பட்டு பிறகு அதுசம்பந்தமான விவரங்களை அரசாங்கமும் கேட்டறிந்த பிறகு அந்தக் தகவலை அவைக்குத் தெரிவிப்பது அரசாங்கத்தினுடைய கடமை என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினை அந்த அதிகாரியை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் சந்தித்தாரா இல்லையா என்பது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்களுக்கும், அந்த அதிகாரிக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சினையாகத்தான் இது தெரிகிறது.

இருந்தாலும், அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே இந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்ட காரணத்தாலே, சம்பந்தப்பட்ட தகவல்களை உடனடியாக விசாரித்து மன்றத்திற்குத் தரவேண்டும் என்ற அக்கறையோடுதான் இந்த விவர அறிக்கையை நேற்றைய தினம் இங்கே வைத்திருக்கிறார்களே தவிர, வேறல்ல.

[திரு. ச. இராமசந்திரன்] [1978 மார்ச் 29

இது மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் இந்த அவையின்மீது எந்த அளவுக்கு நம்பிக்கையும், நல்லெண்ணத்தையும் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தகவலை உடனே தரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தான் இந்தக் காரியம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே சபையினுடைய கௌரவத்தை பாதிக்கவேண்டும் என்றோ அல்லது கண்ணியத்தைக் குறைக்கவேண்டும் என்றோ, அவர்கள் இந்த முயற்சியை மேற்கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்தக் கடிதத்தின் முழு விவரத்தையும் தந்திருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைப் பற்றிய குற்றச்சாட்டு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தன்னிலை விளக்கம் தரவேண்டும். அப்படி அளிப்பதற்கு எல்லாவிதமான வாய்ப்பும் இந்த மன்றத்தில் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை ஒன்றாக்கி மொத்தமாகப் பிரச்சினையினுடைய கூரை மழுங்க வைப் பதிலே மிக ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்கள் கூரை மழுங்க வைக்கின்ற ஆற்றல் படைத்தவர்கள். இந்தப் பிரச்சினை திரு. ரகுமான்கான் அவர்கள் அதிகாரியினுடைய சுற்றிக்கையின் மீது எழுப்பிய குற்றச்சாட்டு. அந்தக் குற்றச் சாட்டு உண்மையா அல்லவா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கலாம்.

அமைச்சருடைய இலாகா என்ற காரணத்தால் அமைச்சர் அவர்களுடைய பெயர் வருகிறதே தவிர, அவரே சுற்றறிக்கை அனுப்பினார் என்பதல்ல கருத்து. இது நான் அறியாமலேயே நடைபெற்ற காரியம், எனக்குத் தெரியாது நடந்திருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டால் அமைச்சரின் நேரடியான பொறுப்பு நீங்குகிறது.

ஆனால் அமைச்சருடைய இலாகாவின் மீது குற்றம் சாட்டப்படுகிற பகுதி அப்போதும் நீங்காது. தவறு செய்தவர் மீது நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிவித்திருந்தால் அதைப் பெத்தவரையில் அது போதுமானது.



1978 மார்ச் 29] [திரு. க. அன்பழகன்]

[முற்பகல் 10-20].

ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்துக் கடிதம் எழுதிய ஒரு அதிகாரி வேண்டுமென்றே தவறான முறையில் வாய்ப்பை துஷ்பிரயோகம் செய்கின்ற முறையில் இந்த சட்டமன்றத்தை அதற்கு கருவியாகப் பயன்படுத்துகின்ற முறையில் ஒரு கடிதத்தை எழுதியிருக் கிறார். அவர் உண்மைக்கு மாறாக எழுதியிருக்கிறார். அது உண்மை அல்ல என்று நேற்றையதினமே உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு அதிகாரி, சட்டமன்ற உறுப் பினர் சொல்லிய அந்தக் குற்றச்சாட்டு உண்மை என்று ஒப்புக்கொண்டதற்குப் பின்னால் அதற்கு வருத்தம் தெரி விக்கிறேன் என்று சொல்லிவிட்டு, இப்படிப்பட்டத் தவறு செய்ததற்குக்காரணம் அந்த சட்டமன்ற உறுப்பினர்தான் என்றும் அவருடைய ஆலோசனையின்பேரில்தான் அந்த தவறு நடைபெற்றது என்று தெரிவித்திருக்கிறார்.

ஒரு அதிகாரி இப்படிக் கொடுக்கின்ற தகவல் ஏற்றுக் கொள்ளப்படுமானால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர் செய்த தவறுக்குக்காரணம் என்றால், நாளையதினம் ஒரு அதிகாரி லஞ்சம் வாங்குகிறார் என்று வைத்துக்கொள் வோம் ; லஞ்சம் வாங்கியவர் பிடிப்பட்டால், எதிர்க் கட்சியில் இருக்கிற இன்னொரு உறுப்பினர் லஞ்சம் வாங்கச் சொன்னார் ; வாங்கினேன் என்பார். அதைப்போல எந்தத் தவறு நடக்கும்போதும் அதற்கு இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் காரணம் என்று சொல்லிவிடக் கூடிய நிலைமை ஏற்படும். இப்படியே போனால் இந்தச் சட்ட மன்றம் அர்த்தமற்றதாகிவிடும்.

இந்தப் பிரச்சினையில் நான் கூறுவதெல்லாம், ஒரு சட்டமன்ற உறுப்பினரை ஒரு அதிகாரி தவறான முறையில் குறிப்பிட்டு அவர்மீது ஒரு அபாண்டமான களங்கத்தை ஏற்படுத்த இந்த அவை ஒரு கருவி ஆகக்கூடாது. அவையில் இருக்கிற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண் டும். ஒரு அமைச்சருக்கு பாதுகாப்பு தருவது என்பது வேறு ; ஒரு அதிகாரிக்கு பாதுகாப்புத் தருவது என்பது வேறு. குற்றம் செய்திருக்கிற அதிகாரி, குற்றத்தை ஒப் புக்கொள்கிற அதிகாரி, எதிர்க்கட்சி உறுப்பினர்களைக்

களங்கப் படுத்தி தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலை வரு
மானால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல,
ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக்கூட பாதுகாப்பு இல்
மல் போய்விடும்; இந்த அவையே அர்த்தமற்றதாகிவிடும்.

குற்றச்சாட்டை சொன்ன உறுப்பினர் மீதே திருப்பி
உண்மையல்லாத குற்றஞ்சாட்டி ஒரு அதிகாரி கடிதம் எழுதி,
அதை அமைச்சர் அவையில் படிப்பார். ஆனால், அதற்கான
பொறுப்பை அமைச்சர் ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது.
ஏனென்றால் எதிர்க்கட்சி அங்கத்தினர் மீதே புகார் எழுப்பப்
படுகிறது. அமைச்சர் தன்னுடைய இலாகாவில் ஏற்பட்ட
தவறுக்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக குற்ற
சாட்டைச் சொன்னவர் மீது குற்றச்சாட்டு கூற வேண்டு
மென்ற நோக்கத்தோடு அதிகாரியின் கடிதத்தைப் படித்
தால், இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து
கடைசி உறுப்பினர் வரையில் யாராக இருந்தாலும் யா
ருக்கும் உரிமை பாதுகாப்பு இல்லாமல் போய்விடும்.
ஆகவே, இது அவை உரிமை மீறிய ஒரு செயல் என்பதை
மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அந்த அதிகாரியை நண்பர் ரகுமான்கான் சந்தித்
தார் என்று கூறியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்
கான் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே, உண்மை
என்ன, என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.
அவர் அவ்வாறு சந்திக்கவில்லை என்றால் அது இந்த அவையின்
உரிமையை மீறிய ஒரு செயலாக இருக்கிறது. ஆகையால்
இந்தப் பிரச்சினையை பொறுத்தவரையில் உரிமைக் குழு
விற்கு அனுப்பி, உண்மை நிலையைத் தெரிந்து, ஒரு சரியான
முடிவு எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இன்றைய
தினம் இப்போது அவையில் விவாதித்துக்கொண்டிருக்கும்
பிரச்சனை மிக முக்கியமான ஒரு பிரச்சினை என்பதை முதலில்
கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் நண்பர் ரகு
மான்கான் அவர்கள் இந்த அவையில் எடுத்துக்காட்டிய அந்த
அதிகாரியின் ஆர்டர் அமைச்சருக்கும் அதற்கும் சம்பந்தம்



இல்லை. ஆனால் அதற்கு அடுத்தபடியாக நடைபெற்றிருக்
கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது நிச்சயமாக இங்கே
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பும் இல்லை;
அவர்கள் தங்களுடைய குறைகளை சீர்செய்வதற்கு வாய்ப்பும்
இல்லை என்ற நிலை ஏற்படுகிறது.

நண்பர் ரகுமான்கான் அவர்கள் ஒரு அதிகாரி மீது ஒரு
குற்றச்சாட்டைக் கூறினார்கள். அதற்கு ஆதாரத்தைக்
காட்டினார்கள். ஆனால் அந்த குற்றச்சாட்டை எந்த அள
வுக்கு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதன்மீது என்ன
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக அந்த
அதிகாரியே குற்றச்சாட்டைச் சொன்ன அங்கத்தினர்மீது
இன்னொரு குற்றச்சாட்டை, ஒரு அபாண்டமான பழியைச்
சுமத்தி இருப்பது என்பது இங்கே இந்த மன்றத்திற்கு
பெரிய ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்
பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எந்த அங்கத்தினரும், ஆளும்கட்சி அங்கத்தினர்களும் கூட
தங்கள் கடமைகளை இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சரிவர
செய்ய முடியாது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். இன்றைக்கு அந்த அதிகாரி இங்கே அமைச்சர்
மூலம் அவையில் கொடுத்திருக்கிற அந்த அறிக்கை அங்
கத்தினருடைய உரிமையைப் பாதிக்கின்ற அறிக்கையாக
இருக்கிறது. ஆக, இதன் உண்மை நிலையைப் புரிந்து
கொள்வதற்கு இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழு
வுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய துணைத்
தலைவரவர்களே, இப்போது அவையில் எழுப்பப்பட்டிருக்கும்
இந்தப் பிரச்சினை சாதாரணமானதல்ல. ஒரு உறுப்பினர்
பெயரிலேயே ஒரு அதிகாரி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லு
கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒரு
அறிக்கை அனுப்பி இருக்கிறார்.

நேற்றைய தினம் மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்
கான் அவர்கள் ஒரு அதிகாரி பற்றியக் குற்றச்சாட்டினைச்
சொன்னார். அவ்வாறு சொல்வது அங்கத்தினருடைய உரி
மையாகும். அவ்வாறு அங்கத்தினர் கொடுத்த அந்தக்
குற்றச்சாட்டினை விசாரித்து அதன்பேரில் அரசு என்ன நட

வடிக்கை எடுத்திருக்கிறது என்ற அளவிலே மாண்புமிகு
அமைச்சரவர்கள் அறிக்கை இருந்திருக்குமானுல் இந்தப்
பிரச்சினை வராது.

ஒரு அதிகாரிமீது குற்றம் சாட்டப்படுகின்ற நேரத்தில்
அவர் குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக எந்த உறுப்பினர்
அதனைச் சொன்னுரோ அந்த உறுப்பினர் பெயரிலேயே குற்ற
அறிக்கையை அந்த அதிகாரி மாண்புமிகு அமைச்சருக்கு
அனுப்பி இருக்கிருர். அதனை மாண்புமிகு அமைச்சரவர்கள்
இந்த அவையிலே படிப்பது என்பது எந்த வகையிலே சரி
யானது என்பது தெரியவில்லை. அவர் அந்த மாதிரி படித்
திருக்கக்கூடாது.

இந்த அவையிலே ஒரு உறுப்பினர் தன் காதிலே விழு
கின்ற குற்றச்சாட்டினை அரசின் கவனத்திற்குக் கொண்டு
வருவதற்கான உரிமை இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது
குற்றச்சாட்டு கொண்டுவந்த அந்த உறுப்பினர் மீதே குற்
றச்சாட்டு தருகின்ற வகையில் அந்த அதிகாரி ஒரு குற்றச்
சாட்டைக் கொடுத்தால் அதை அமைச்சரவர்களும் இந்த
அவையிலே படிப்பது என்பதை என்னுல் புரிந்து கொள்ள
முடியவில்லை.

அப்படிப் படித்தது அந்த உறுப்பினரின் உரிமையைப்
பறிப்பதாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.
உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றுதான் நான்
கருதுகிறேன். அவையிலே குற்றச்சாட்டை உறுப்பினர்கள்
வைக்கின்றபோது அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.
ஆகவே, உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டிய பிரச்
சினை இது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பேரவைத் துணைத் தலைவர
வர்களே, கொடுக்கப்பட்டிருக்கின்ற விளக்கத்திற்குப் பிறகு
இந்தப் பிரச்சினையினுடைய பரப்பளவு மிகவும் குறுகலாக
ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன்.

குறிப்பிட்ட அதிகாரிக்கும், மாண்புமிகு அமைச்சரவர்
களுக்கும் இதிலே தொடர்பு இல்லை என்றும் தன்னுடைய
வேண்டுகோளுக்கிணங்க இந்த சர்குலர் அனுப்பப்படவில்லை
என்றும் தெளிவாக்கி இருக்கிருர்கள். ஆக அவர்களுக்கு
ஆக்சுவல் ரெஸ்பான்சிபிலிட்டி இதிலே இல்லை.





உறுப்பினர், தான் அவரைச் சந்திக்க வில்லை என்று
சொல்கிருர்கள். ஆகவே அந்த அதிகாரி தந்த விளக்கத்தை
ஏற்றுக் கொள்வோமேயானுல் அந்த அதிகாரி அந்தக் குற்றச்
சாட்டுகளிலிருந்து விலகிக்கொள்கின்ற சூழ்நிலை உருவாகி
றது. அதையேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் கூடச் சொன்னுர்கள்.
ரகுமான்கான் அவர்கள் அந்த அதிகாரியைச் சந்திக்கவில்லை
என்று சொல்கிருர்கள். அப்படியே சந்தித்தார்
என்றே வைத்துக் கொண்டாலும் அந்த ஆபீஸர்
இதுபோன்ற விளக்கத்தினை இவ்வாறு அனுப்பலாமா
என்ற ஒரு பிரச்சினை இங்கே வருகிறது. அப்படி அவர்
உறுப்பினரைச் சந்தித்ததனுல் நான் அனுப்புகிறேன் என்று
தப்பித்துக் கொள்ள முயலுவார்களேயானுல் அது ஒரு
மாபெரும் குற்றம்.

அவர் அந்த மாதிரியான விளக்கத்தைத் தரும்போது
அமைச்சரவர்கள் தன்னுடைய சென்ஸ் ஆப் டிஸ்கிரிஷன்-ஐ
யூஸ் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்
பேர்ப்பட்ட ஒரு கடிதத்தை அவர் தரும்போது நீங்கள்
இப்படித் தந்திருக்கிறீர்களே, மாண்புமிகு உறுப்பினர்மீது
குற்றம் சாட்டப்படும் இப்படிப்பட்ட கடிதத்தை நீங்கள்
அனுப்பலாமா என்று அவர்களிடத்திலே கேட்கக்கூடிய அதி
காரம் அமைச்சரவர்களுக்கு உண்டு. அதை யாரும்
மறுத்துவிட முடியாது. ஆக, ஆக்சுவல் ரெஸ்பான்ஸிபி
லிட்டி இல்லாவிட்டாலும் கன்ஸ்ட்ரக்டிவ் ரெஸ்பான்ஸிபி
லிட்டி என்ற ஒன்று இருக்கின்றது.

ஆக இது நிச்சயமாக உரிமைக் குழுவுக்கு அனுப்பப்படக்
கூடிய பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அந்த அதிகாரியைப் பொறுத்தவரையில் அவர் தண்டிக்கப்பட
வேண்டிய அதிகாரி என்றும், தண்டிக்கப்பட வேண்டிய
அதிகாரி என்றும், இத்தகைய பொது நிறுவனங்களிலே பணி
யாற்றுவதற்கு அருகதையற்ற அதிகாரி என்றும் கூறிக் கொள்
கிறேன். அவர் மீது நடவடிக்கை எடுப்பதோடு இந்தப்
பிரச்சினையை உரிமைக் குழுவுக்கும் அனுப்ப வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி</u> : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, நமது சபைக்கு முன்னுல் எழுந்து
இருக்கின்ற இந்தப் பிரச்சினையானது நாம் அத்தனை
பேரும் மிகவும் அக்கறை கொள்ளக் கூடிய பிரச்சினையாக

இருக்கிறது. ஒரு அதிகாரியின்மீது புகார் எழுப்பப்பட்ட சமயத்திலே அவர் இங்கே எழுப்பிய புகாருக்குப் பதில் அளிக்கின்ற வகையில் ஒரு உறுப்பினர். புகாரைச் சொல்லி அது அவையிலே படிக்கப்படுகிறது என்று சொன்னால் இது வரைக்கும் இப்படி ஒரு நிகழ்ச்சி இந்த அவையிலே நடைபெறவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் அதிகாரியைச் சந்திக்கவில்லை என்று சொல்கிறார். ஆகவே, இந்த மாதிரியான பிரச்சினையின் பல விவரங்களைத் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் இதனை உரிமைக் குழுவுக்கு அனுப்புவதுதான் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினையானது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான வாதத்தின் அடிப்படையில், உரிமையின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை.

ஆனால் அமைச்சர்களும் இந்த உரிமைக குழுவிற்குப் போகக்கூடியவைகள் பற்றிப் பேச உரிமை உள்ளவர்கள் என்று நான் கருதுகிறேன். அவை உறுப்பினராக ஆன பிறகுதான் அமைச்சர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பதால் அமைச்சர்களுக்கும் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக கொள்ள வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை எழுப்ப உரிமை இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துககொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எப்போதுமே ஆதாரத்தோடு பேசுவதுபோல், அவர்கள் ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறவர்கள் இதற்கு முன்னால் சில சமயங்களில் அவர்கள் சொன்ன சில கருத்துக்களை, குறிப்பாக ஒரு போலீஸ அதிகாரி ஒரு விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும் என்று அவர் சொல்லி, ஆதாரத்தைத் தருகிறேன் என்று சொன்னார்கள் அது இன்னும் கொடுக்கப்படவில்லை,

அதேபோல் இங்கே இதிலும் படித்துக்காட்டிப் பேசும்போது, அதைப் பற்றித் தகவல்கள்விசாரிக்கப்பட்டு, தனக்கு கிடைத்ததை வைத்து, இந்த அவையில் உண்மையான பதிலை வைக்காமல் மறைத்து பரிசீலிக்கிறோம், கவனிக்கிறோம், உத்தரவிட்டிருக்கிறோம் என்று சொல்லி சபையை ஏமாற்ற



வேண்டுமென்று ஒரு பதிலைச் சொல்வதற்கு யாரும் இங்கே அனுமதி தரமாட்டார்கள், அதை விரும்பவும் மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தெளிவாக, நடைபெறுகிற நிகழ்ச்சிகளை, உண்மைகளை, தங்களுக்குக் கிடைப்பதை எடுத்து வைத்து ஆதாரங்களோடு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள், அதை வைத்துப் பேசுகிறார்கள். அதே போல் தனக்குக் கிடைத்த பதிலை வைத்து இங்கே எடுத்துச் சொல்வதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்க வேண்டும். அதிலே யாருடைய உரிமையையாவது வேண்டுமென்றே பொய் சொல்லி பறிக்கப்பார்த்தால் அது உரிமைப் பிரச்சினையாகும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

இன்னொன்றை நான் பணிவன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்னை முடிந்து விட்டதாக இந்த அமைச்சரவை கருதவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே ஆதாரத்தோடு படித்துக் காண்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர் அவர்கள் அதுபற்றி விசாரித்து தனக்குக் கிடைத்த தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்: இதோடு இந்தப் பிரச்னை முடிந்து விட்டதாக இந்த அமைச்சரவையோ அல்லது இந்த அரசோ அல்லது அதிகாரிகளோ யாரும் கருதவில்லை என்பதையும், இதுபற்றித் தீரவிசாரிக்க வேண்டிய ஒரு பெரிய கடமை இந்த அமைச்சரவைக்கு உண்டு என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இந்த அமைச்சரவை—இதுபற்றி நீங்கள் எவ்வளவு மனது புண்படுகிற அளவிற்கு வேதனைப்படுகிறீர்களோ அதைவிட அதிகமாக நாங்களும் வேதனை அனுபவிக்கிறோம் என்பதை இங்கே நான் சொல்வது என் நீங்காத கடமையும் உண்மையுமாகும். கடிதத்தைப் படித்துக்காண்பித்தார், அமைச்சர் அவர்கள். அமைச்சர் அவர்கள் தனக்குக் கிடைத்த பதிலை படித்துக் காண்பித்திருக்கிறார்கள். இது உரிமை மீறல் பிரச்னையா அல்லது இதைப் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகாரத்தில் இருக்கிறவர்கள் கூறிவிட்டார்கள். அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள், இது போதும் என்று கருதுகிறார்களா என்ற கேள்வி தொடர்கிறது.

அந்த அதிகாரிமீது என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுபற்றி சட்ட ஆலோசகர்களோடு கலந்து, அவர்கள் அதுபற்றித் திட்டவட்டமான பதில் தரவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்கள் அதை விரைவிலே

தருவார்கள் என்பதோடு அதைப்பொறுத்து அந்த அதிகா
எந்த ஆதாரத்தைவைத்து அந்தக் கடிதத்தை எழுதி
கொடுத்தார், எந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட உறுப்பினரை
சந்தித்தார் என்பதையெல்லாம் அவர்கள் தெரிவித்தாக
வேண்டும் என்பதையும், அதை ஆதாரத்தோடு அவர்கள்
தந்தாலொழிய அவர்கள் பதவி எப்படிப்பட்டதாக இருக்கும்
என்பதைப்பற்றியும் சட்ட இலாகா பார்த்து யோசனை
சொல்லி அதற்குப் பிறகு எந்த வகையில் அந்த நீதி கிடைக்க
வேண்டும் என்பதற்கேற்ப அமைச்சரவை நிச்சயமாக நட
வடிக்கை எடுக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

உரிமைக் குழுவிற்கு அனுப்பத்தான் வேண்டும் என்று
எல்லோரும் விரும்புவார்களேயானால் நான் அதை ஆட்சே
பணை செய்யவில்லையென்று சொன்னாலும்கூட ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் தங்களுக்குக் கிடைக்
கிற ஆதாரங்களை இங்கே வைக்கக்கூடாதா, அது அவை
உரிமையைப் பாதிக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர்கள்
அதைப்பற்றி ஆலோசித்து—உறுப்பினர்கள் விஷயங்
கள் தெரிந்தவர்கள், விவரங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்,
சட்டம் தெரிந்தவர்கள்—அனைவரும் அதைப்பற்றிச் சிந்தித்து
இது ஒருதலைப்பட்சமான எண்ணம் என்று விட்டுவிடாமல்,
பொதுவான பிரச்னையாகக் கருதி அமைச்சர்களும் உறுப்
பினர்களைப் போல் தங்கள் பங்கினைச் செய்வதற்கு அவர்
களுக்கும் வாய்ப்பு தரவேண்டியிருக்கிறது என்பதையும் சிந்
தித்து நீங்கள் உங்களுடைய எண்ணங்களைச் சொல்வீர்களானால்
அதற்கேற்ப இந்த அரசு நிச்சயமாக நியாயமான நட
வடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

*__திரு. மு. கருணாநிதி :__ தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை எடுத்துக்கூறினார்
கள். ஏற்கனவே ஒரு விஷயத்தைச் சொல்லி அதற்கு அவர்
கள் ஆதாரம் தரவில்லை என்று குறிப்பிட்டார்கள். நேற்
றைக்குக்கூட, சில உறுப்பினர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டு,
பதிலுக்குப் பதில் பேசியது எல்லாம் அவைக்குறிப்பில் இருக்
கிறது. அதற்கான ஆதாரத்தை அவர் தருவதாகவும் கூறி
யிருக்கிறார். அவர் தருவாரா இல்லையா என்பது எனக்குத்
தெரியாது. இப்படிப்பட்ட பதிலுக்குப் பதில், போட்டிக்குப்
போட்டி இருந்து கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை,
முதலமைச்சர் அவர்களும் விரும்ப மாட்டார்கள் என்று நம்பு
கிறேன், நிற்க.



இந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டால், இந்த அதி
ாரி கொடுத்த தகவல் சரியானவையா இல்லையா என்பதும்,
அதில் ரகுமான்கான் அவர்களைச் சம்பந்தப்படுத்தி, அவர்கள்
அனுப்பிய சுற்றறிக்கை, அமைச்சர் அவர்களது சுற்றுப்பயணம்
றித்த சுற்றறிக்கை, தான் அறிவுரையாகக் கூறியிருக்கும்
ற்றறிக்கை இவ்வளவும் எழுப்பப்பட்ட பிறகு, இந்தச் சுற்
றிக்கையை அனுப்பியதற்குக் காரணத்தைச் சொல்லுகின்ற
நரத்தில் இது நாங்களாக அனுப்பவில்லை. திராவிட முன்
னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த அரிய
யோசனையைச் சொன்னார்கள், அதற்கேற்பத்தான் இந்தச்
சுற்றறிக்கை அனுப்பப்பட்டது என்று அதிகாரி கொடுத்த
கடிதத்தை அமைச்சர் அவர்கள் படித்துக் காட்டினார்கள்.
அது சரிதானா என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் ரகுமான்கான் அவர்கள் கொடுத்த ஆதா
ரத்தைப் பரிசீலிப்பதற்கும், அமைச்சர் அவர்கள் படித்த கடி
தத்தைப் பரிசீலிப்பதற்கும் இந்தப் பிரச்னையை உரிமைக்
குழுவுக்கு விட்டுவிடுவதுதான் சாலப் பொருத்தமாக இருக்
கும் என்று நான் கருதுகிறேன்.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ துணைத்
தலைவர் அவர்களே, நான் முன்பே கூறிவிட்டேன். மாண்பு
மிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற எந்த ஆதா
ரத்தையும் படிக்கலாம், அவற்றை எடுத்துக் கூறலாம் என்று
இருக்கும்போது. அமைச்சர்கள் அதற்கு மாறான கருத்தை
அதற்கான ஆதாரத்தைப் படிக்கக்கூடாது என்று சொல்லு
வது எந்த நியதி என்பது எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு)
ஆம். வார்த்தைகளைத்தான் நானும் குறிப்பிடுகிறேன்.
வேண்டுமென்றால் கடிதத்தில் உள்ள சில குறிப்பிட்ட வார்த்
தைகளை விட்டுவிட்டுப்படிக்க வேண்டும் என்று சொல்ல
வேண்டும். கடிதத்தில் இருப்பதை என்ன பார்த்தார்களோ
அதை, அந்த அறிக்கையை அப்படியே வெளியிட்டார்கள்,
இந்தப் பிரச்னை சொல்லப்பட்டதும், அதைப்பற்றி விசாரித்து
அவர்கள் கொடுத்த விவரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கை வெளியிட்டது உண்மை என்ற அடிப்
படையில்தான் வந்திருக்கின்ற தகவல்களை அப்படி அமைச்சர்
அவர்கள் வெளியிட்டாரா அல்லது அமைச்சர் அவர்கள்
அதைப்பற்றிச் சொல்லாமல் வெளியிட்டாரா? இதற்கு நாம்
பதில் பெற்றாக வேண்டும். இந்தப் பிரச்னை சொல்லப்பட்ட

வுடன் விசாரித்து அறிந்து விவரங்களை வெளியிட்டிருக்கிறார்
கள். இந்த அறிக்கை அதிகாரி தானாக எழுதி அனுப்பி
னாரா அல்லது தானாக எழுதாமல் அமைச்சர் சொல்லி அல்
லது அமைச்சரது கட்டளையின்படி எழுதப் பட்டதா என்
பதையும் நாம் அறிந்தாக வேண்டும். (குறுக்கீடு) நான்
சொல்லி முடித்து விடுகிறேன். அதிகாரி இவ்வாறு செய்
ததற்குக் காரணம் அமைச்சர் சொல்லி அதிகாரி வெளியிட்
டாரா என்பது முதல் கேள்வி. (குறுக்கீடு) என்னை இன்னும்
இரண்டு வார்த்தைகள் பேசுவதற்கு இடம் கொடுத்தால்
நன்றாக இருக்கும். இதில் என்ன சொல்லப்பட்டாலும்
அமைச்சர் சொல்லி இந்தச் சுற்றறிக்கை அனுப்பியிருக்கி
றார் என்பதுதான் உள்ளர்த்தமே தவிர அந்த அதிகாரியே
வெளியிட்டாரா என்றால், அந்த அதிகாரி தானாக இதை
அனுப்பவில்லை என்று சொன்னால் அல்லது அமைச்சர் சொல்லி
அவர் செய்திருந்தால் அதற்கு அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்
கொள்ள வேண்டும். அந்த அதிகாரி வெளியிட்டது அமைச்
சருக்குத் தெரிந்துதான் என்றால் அதற்கும் அமைச்சர் அவர்
கள் பதில் சொல்லியாக வேண்டும்.

அந்த வகையில் இந்தப் பிரச்னை எழுகிறது என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு அடிப்படையே
அதுதான். நான் என்னுடைய இலாகா அதிகாரிகள் சுற்
றறிக்கை வெளியிட்டால் என்ன வரும், முதலமைச்சர் அவர்
கள் சொல்லித்தான் இந்த அறிக்கை வந்திருக்கிறது என்று
சொல்வார்கள். முன்னால்கூட உள்துறையிலிருந்து வந்த
அறிக்கைபற்றிச் சொல்லப்பட்டது. அதில் நான் என்ன
குறிப்பிட்டிருந்தேன் என்பது பற்றியெல்லாம் சொல்லப்பட்
டது. இதைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். அது போல்
இந்தப் பிரச்னையில் அதிகாரி இப்படிப்பட்ட சுற்றறிக்கை
அனுப்பினார் என்று சொல்லும்போது, அமைச்சருக்குத்
தெரிந்துதான் இது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதுஇதில்
ஊடுருவி இருக்கிறது.

இதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும்
என்று வரும்போது, இதைப்பற்றி விசாரித்து பதில் பெறும்
பொது பதில் அறிக்கையாக வருகிறது. அதை வெளியிடாமல்
தேவைப்பட்டால் இதைப்பற்றி விசாரித்துப் பார்க்கிறோம்
என்றோ, இதைப்பற்றி விசாரிக்க எற்பாடு செய்கிறோம்
என்றோ சொல்லாமல் உண்மையைத் தள்ளிப்போட்டு அதை
ஊறப்போட்டு விடாமல், உடனடியாக விசாரித்து உண்மை



யைச் சொல்ல விரும்பியிருக்கிறார்கள். ஆனால், அதிலிருந்த
வாசகம், அது பயன்படுத்தப்பட்ட முறை தவறா, அதற்காக
என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் பார்க்க
வேண்டும். இவற்றையெல்லாம் உரிமைக் குழுவுக்கு அனுப்
பித்தான் தீர வேண்டும் என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை
இல்லை. ஆனால், பிரச்னை இதுதான் ஏன்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

(திரு. க. அன்பழகன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள்தான்
ஏற்கனவே விளக்கம் சொல்லிவிட்டீர்களே. . . .

திரு. க. அன்பழகன் : துணைத். தலைவர் அவர்களே, முதல்
அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கும், என் எண்ணத்
திற்கும் ஒன்றும் மாறுபாடு இல்லை. ஆனால் பிரச்னை அதுவல்ல.
அதிகாரி வெளியிட்டிருக்கின்ற அறிக்கைக்கு, கருத்திற்கு
அமைச்சரே பொறுப்பு என்று இந்த அவையிலே இதுவரை
யிலே எதிர்க் கட்சியிலே யாரும் சொல்லவில்லை. அமைச்சர்
அவர்களுக்கு விருந்து முதலான ஏற்பாட்டிற்காக அந்த
அதிகாரி நிதி திரட்டச் சுற்றறிக்கை அனுப்பியதாகச்
சொன்ன அந்தக் கருத்திற்கு, அமைச்சர் அவர்கள் நேரடிப்
பொறுப்பு ஏற்கவேண்டும் என்று ரகுமான்கான் அவர்களோ
வேறு யாருமோ அவ்வாறு சொல்லவில்லை. ஒரு இலாகாவில்
ஒரு சுற்றறிக்கை வருகிறபோது, அந்த இலாகாவைச் சார்ந்த
அமைச்சரின் கவனத்திற்கு அது வருகிறபோது, என்ன நட
வடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை
எடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் இந்தக் குற்றச்
சாட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனவே, இதிலே அமைச்சர் அவர்களை நேரடியாகக்
குற்றஞ்சாட்ட வேண்டுமென்று அல்ல, அந்த அதிகாரி செய்த
காரியத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.
ஆனால் அமைச்சர் அந்த அதிகாரி கொடுத்த கடிதத்தை இந்த
அவையிலே படித்திருக்கிறார். அதைப்பற்றித்தான் இங்கே
உரிமைப் பிரச்னை எழுகிறது.

இரண்டாவது, அமைச்சர் அவர்கள் படித்த கடிதத்தில்,
அந்த அதிகாரி தான் செய்தது தவறு என்று ஒப்புக் கொண்
டிருக்கிறார். அதற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்

என்றும் கூறியிருக்கிறார். தவறாக சுற்றறிக்கை அனுப்பி
யிருப்பதாக அவர் சொல்லியிருக்கிறார். அதிலே பிரச்னை
இல்லை. எனவே, தவறு செய்த அதிகாரி மீது அரசாங்கம்
முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுப்
பது அரசாங்கத்தின் கண்ணியத்திற்கு, அவர்கள் ஏற்றுக்
கொண்டுள்ள கடமைக்கு ஏற்ற பொறுப்பான செயலாகும்.
அப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால்,
அதற்குப் பிறகு எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் ஏன்
நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பதற்கு ஏற்ற காலம்
வரும். இடையிலே வருகின்ற பிரச்னை என்னவென்றால்,
அந்த அதிகாரி தவறு செய்து விடுகிறார். அப்படி அந்த
அதிகாரி செய்த தவறுக்கு இந்த அவையிலே உள்ள ஒரு
உறுப்பினரை அதிலே சம்பந்தப்படுத்தி ஒரு பதில் கூறி
யிருக்கிறார். அந்தத் தவறை ஏற்றுக் கொள்ளுகின்ற அந்த
அதிகாரி, இந்த அங்கத்தினரையும் அதோடு சம்பந்தப்
படுத்தி, தான் செய்த தவறை வெளிப்படுத்தியவரையே
குற்றவாளி போலக் குறிப்பிட்டு எதிர்க் கட்சி உறுப்பின
ருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற வகையிலே அந்தக்
கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதால், அது சட்ட மன்ற உரிமை
யைப் பாதிப்பதாகும்.

திரு. ரகுமான்கான் அவர்கள் தன்னிலை விளக்கம் என்ற
முறையில், அந்த அதிகாரியைத்தான் சந்திக்கவே இல்லை என்று
நேற்றைய தினமே இங்கே உடனடியாகப் பதில் சொல்லி
யிருக்கிறார்கள். அது தன்னிலை விளக்கம். அது வேறு. ரகுமான்
கான் சந்தித்தாரா, இல்லையா என்பது வேறு. முடிந்தால்
நிரூபியுங்கள், அது வேறு. இரண்டிற்கும் இடையிலே சட்ட
மன்ற உறுப்பினர் ஒருவரைச் சம்பந்தப்படுத்தி, அதிகாரி
கொடுத்த அந்தக் கடிதத்தை அமைச்சர் அவர்கள் இங்கே
படித்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், டைரக்டருக்கு எழுதிக்
கொடுத்த அந்தக் கடிதம் துறையினரால் பரிசீலனை செய்யப்
பட்டு, அது சரியான எக்ஸ்பிளனேஷன்தானா என்று பரிசீலிக்
கப்பட்டு அமைச்சர் அவர்களுக்கு தரப்பட்டிருக்க வேண்
டும். அப்படி இல்லாமல், ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டர்,
டைரக்டருக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தையே இங்கே
நேரடியாக அமைச்சர் படித்து விடுகிறார். அதுவும் inthe
ame form-ல் படித்திருக்கிறார்.



அப்படியே படிக்கின்றபோது, நான் ரகுமான்கான் அவர்
களுக்காகச் சொல்லவில்லை, சட்ட மன்ற உறுப்பினர் யாராக
இருந்தாலும், அப்படி ஒருவரைச் சம்பந்தப்படுத்தி எழுதிய
கடிதத்தை அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே படித்
திருப்பது, இந்த அவையின் உரிமையை பாதிக்கின்றது.
இதிலே ரகுமான்கான் என்பதல்ல, எதிர்க்கட்சிக்காரர்கள்
என்பதல்ல, அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்பதல்ல, அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்
கிறார்கள் என்பதல்ல. இந்த அவையின் உரிமையை இது
பாதிப்பதாக இருக்கிறது என்பதுதான். எனவே, முதல்
அமைச்சர் அவர்கள் தயவு செய்து, இந்தக் கோணத்திலே
இந்தப் பிரச்னையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றுநான்
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, பேராசிரியர் அவர்களின் கருத்திற்கு நான் மகிழ்
வோடு சம்மதம் அளிக்கிறேன். எனக்காக அவர்கள் வாதாடி
இருக்கிறார்கள் என்பதுதான். ஏற்கனவே நான் சொன்னதும்
அதுதான். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு விசாரித்து
நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்ப
தையும், அவர் அப்படிச் செய்யா விட்டால், அதற்குப் பிறகு
சட்டமன்றத்தில் கேள்வி வரும் என்பதையும் அவர்கள்
தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

இதையெல்லாம் உள்ளடக்கியிருக்கிற இந்தப் பிரச்னை
என்று சொல்லுகிறபோது, அதற்கடுத்து அந்த உறுப்பினர்
சென்றாரா, இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டியது அந்த
அதிகாரியின் வேலை. எப்போது சந்தித்தார்? எந்த இடத்
தில், எப்படிப் பேசினார்கள்? என்பதையெல்லாம் சாட்சி
யாக, ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டியது அந்த அதிகாரி
யின் கடமை. இதைப்பற்றி இலாகா சட்டப்படி நடவடிக்கை
எடுக்கும். இந்தக் கடிதம் இங்கே படிக்கப்பட்டது சரியா,
இல்லையா என்பது இப்போது பிரச்னை . . . .

திரு. க. அன்பழகன் : இந்தத் துணிச்சல் எப்படி வந்
தது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விசாரணை
செய்யப்பட்டு, அதற்குப் பதிலை அவர்கள் தந்த பிறகு, நாம்
கேட்க வேண்டிய கேள்வி இது. அதற்குப் பிறகுதான்

உரிமைப் பிரச்னையெல்லாம் இருக்கிறது. இவைகளையெல்
லாம் விசாரிக்க இருக்கிறோம். இதை உரிமைக் கமிட்டிக்கு
அனுப்புவதால் அப்படிப் போனால், பெரிய ஆபத்து வந்து
விடுமோ இந்த அமைச்சர் அவைக்கு என்று -நாங்கள் நம்ப
வில்லை. அஞ்சவில்லை. அமைச்சர் அவர்களுக்கும் இதற்
கும் சம்பந்தம் இல்லை என்பதை எதிர்க் கட்சித் துணைத்
தலைவர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னையிலே எல்லாம் எதிர்க் கருத்து இல்லை
என்பதை நான் சொல்லும்போது, அந்தக் கடிதத்தை
படித்தது அவருடைய கடமை என்றும், தனக்குக்
கிடைக்கிற தகவலை மறைக்காமல், உள்ளதை உள்ளபடியே
சொல்ல வேண்டுமென்பது எங்களுடைய கட்சியின்,
அமைச்சர் அவையின் மிகப் பெரிய கடமை, பொறுப்பு
என்றும் நான் கருதுகிறேன்.

தட்டிக் கழிக்கிற நிலைமையில் விட்டு விட்டுப் போகக்
கூடாது என்பதால் உடனடியாக நடவடிக்கை எடுத்துப்
பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பதில் சொல்லப்
பட்டது, அந்தக் கருத்தை இங்கே படித்தது தவறா இல்லையா
என்பதுதான் பிரச்னை.

ஆகவே, அமைச்சருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை,
அமைச்சர் சொல்லவில்லை என்பதும் தெரிகிறது. ஆனால்
அமைச்சர் கட்டளை இட்டாரா என்று இங்கே பேசப்பட்
டிருக்கிறது. ஆனால் அமைச்சர் இந்தக் கடிதத்தை இங்கே
படிக்கலாமா, விசாரணை முடிந்த பிறகு படிப்பதா என்றால்
அது எத்தனை நாட்களுக்குப் பிறகு என்பதைப் பற்றி தயவு
செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள
வேண்டும்.

அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற கருத்துக்கள் இங்கே
உறுப்பினர்களைப் பற்றிக் கூடச் சந்தேகத்தை உண்டாக்கு
கிறது என்ற அளவுக்கு வெளியே சொல்லப்படுகிறது என்ற
எண்ணத்தை உருவாக்குவதாக இருந்தால் அதே போன்று
அவர்கள் சொல்லுகிற கருத்தைப் படிக்கும்போது அமைச
சர்கள் மீது சந்தேகப்படவும், அவநம்பிக்கை கொள்ளவுமான
நிலை ஏற்பட்டு விடுகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.





ஒரு குற்றச்சாட்டை ஒருவர் சொல்லி அதற்கு அமைச்சர்
அவருக்குக் கிடைத்த தகவலை இங்கே சொல்லக்கூடாது
என்றால் அந்த அமைச்சருக்குப் பாதுகாப்பு இல்லாமல்
போகிறது. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
ஆதாரம் இல்லாமல் கொடுத்ததை வைத்துக் கொண்டு
இங்கே சொல்லலாம். ஆனால் தனக்குக் கிடைத்த தகவலை
அமைச்சர்கள் அவைக்கு சொல்லக் கூடாது என்றால் எப்படி?
அமைச்சர்கள் உரிமையை யார் பாதுகாப்பது? எங்களுக்குப்
பாதுகாப்பு வேண்டாமா ? எங்களுக்குக் கிடைக்கிற
தகவலை உங்கள் முன் வைக்கக் கூடாதா ? விசாரணை செய்து
விட்டு வைக்க வேண்டுமென்றாலும் அப்போதும் இந்தப்
பிரச்னை வரத்தான் செய்யும். அதற்குப் பிறகும் இந்தக்
கடிதத்தைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டும்.

அந்த அதிகாரி தான் சொன்னதை நிரூபிக்கவில்லை
என்றால் தன்னை அவமானப் படுத்தும் நோக்குடன் பொய்
யான ஒன்றை உருவாக்கிச் சொன்னார் என்று நிச்சயமாக
வழக்கு மன்றத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பு இருக்கு
மானால் உறுப்பினர் அங்கே சென்று நிச்சயமாக வாதிக்க
முடியும்; தனக்குக் கிடைத்த அவமானத்தை நீக்க வழி
செய்து கொள்ளலாம். வழக்குமன்றம் தனி—இங்கே
பேசுகின்றவைகளுக்காக அங்கே போகவில்லை. அதற்கும் இதற்
கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அமைச்சர்களுக்கும் ஒரு
பாதுக்காப்புத் தரவேண்டும்.

அந்த அதிகாரிக்கு எப்படித் துனிச்சல் வந்தது என்ப
தெல்லாம் எதிர்காலத்திலே விசாரிக்கப்பட வேண்டியவை.
அப்படி விசாரித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்
எடுத்துக் கொள்ளப்படும். அவர் எழுதிய கடிதத்தைப்
படிக்கக்கூடாது என்று சொன்னால் எவை எவைகளை இந்த
மன்றத்தில் படிக்கக்கூடாது. எவை எவைகளை மட்டும்
படிக்க வேண்டுமென்ற நிலைமைகள் ஏற்படும்போது எங்களை
நாங்களே ஏமாற்றிக் கொள்கிற நிலைக்குப் போக
முடியாது.

கேள்விக்குப் பதில் சொல்லும்போது தனிக் கேள்வி
போடுங்கள் என்று தப்பித்துக் கொள்ளலாம் நாங்களும்
சொல்வோம், மற்றவர்களும் சொல்வார்கள். அந்த
விவரங்கள், குறிப்புகள் இல்லை என்றால் தனிக் கேள்வி

போடுங்கள் என்று சொல்வார்கள். புள்ளி விவரங்கள்
இருந்திருக்காது. அதைப் பற்றியும் வெளியே சொல்லப்
படுகிறது. அமரர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருக்
கிறார்கள்.

தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது—அமைச்
சர்களுக்கும் ஒரு பாதுகாப்பு வேண்டும். அமைச்சர்களைப்
பற்றி, அவர்கள் சம்பந்தப்பட்ட இலாக்காவைப் பற்றி
ஆதாரங்களோடு குறிப்புகளைச் சொல்லும்போது, படிக்கும்
போது அது வெளியே மக்கள் மத்தியில் பேசப்படும்
வகையில் பத்திரிகைகளில் வெளியிடப்படுகிறது. என்ன
செய்திருக்க வேண்டும்? இதற்கு அமைச்சர் சரியான
பதிலைக் கொடுக்கிற வரையில் இந்தச் செய்தி பத்திரிகை
யில் வராமல் இருக்க வேண்டுமென்று சொல்லியிருப்பார்
களானால், இத்தகைய பதிலை, அமைச்சர் அவர்களுக்கு
வந்த பதிலை இங்கே படித்திருக்க மாட்டார்கள். அந்தப்
பதில் ஏன் வந்தது என்று தெரியும். ஏன் இந்தப்
பிரச்னையை துணிந்து எழுப்பினர் என்று இனிமேல்தான்
கவனிக்க வேண்டும், விசாரிக்க வேண்டும்.

அதிகாரிகளுக்கு எவ்வளவோ தைரியம், எதை
எதையோ செய்கிறார்கள் அந்தத் துணிச்சல் அதிகாரி
களுக்கு எப்படி வந்தது? அதைப் பற்றி நான் விவாதிக்க
விரும்பவில்லை. எத்தனையோ காரியங்களை, எத்தனையோ
அதிகாரிகள் செய்து விட்டு பதவி உயர்ந்து கொண்டே
போகிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறோம். உங்களுக்கே
தெரியும்—அவர்களுக்கெல்லாம் எப்படித் துணிச்சல் வந்தது
என்று. எங்களைப் பொறுத்தவரை உரிமைப் பிரச்னை
என்று சொல்லும்போது மாமன்ற உறுப்பினர்களுக்கு
எந்த அளவுக்கு உரிமை உண்டோ அதே போன்று
அமைச்சர்களுக்கும் கொஞ்சம் பாதுகாப்புத் தரவேண்டும்.
இரண்டுக்கும் சேர்த்து விசாரணை நடத்தலாம் என்றால்
எனக்கு ஆட்சேபனை இல்லை என்று முதலிலேயே சொல்லி
விட்டேன். ஆனால் விளக்கமும் தேவைப்படுகிறது. வருகிற
பதிலை அப்படியே படிக்கக்கூடாது, உறுப்பினர் சம்மந்தப்
பட்டதைப் பேசக்கூடாது என்று சொல்லும்போது
எங்களுடைய கையையும் வாயையும் கட்டிப் போடுவ
தாகும் என்பதைச் சொல்லி, அதைப் பற்றித் தலைவர்
அவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.





[முற்பகல் 10–50]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
எடுத்துக்கூறியதற்கு பிறகு இந்தப் பிரச்சினையைப்பற்றி நான்
அதிகமாக விளக்க விரும்பாவிட்டாலும் ஒன்றை இங்கே
தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேற்றைக்கு நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தனக்குக்
கிடைத்த, அசிஸ்டெண்ட் டைரக்டர், கால்நடை
இலாகாவைச் சேர்ந்தவர் விடுத்த சுற்றறிக்கை ஒன்றை
இங்கே படித்துக் காட்டினார்.

அவர் படித்துக் காட்டும்போது அந்த அதிகாரி,
நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பி. டி. சரஸ்வதி
அவர்களைக் களங்கப்படுத்த வேண்டுமென்று அந்தச்
சுற்றறிக்கையை விட்டார் என்று ரகுமான்கான் அவர்கள்
சொல்லவில்லை. இப்படி ஒரு அறிக்கை வந்திருக்கிறது.
இந்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அந்தப்
பகுதியிலே பிரயாணம் செய்யப் புறப்பட்ட காரணத்
தால் ஆகக்கூடிய செலவுகளுக்காக என்று அதிலே
எழுதப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி அது எந்த அளவிற்கு
உண்மை என்று தெரிந்து கொள்வதற்காகத்தான்
திரு. ரகுமான்கான் அவர்கள் அந்தக் கேள்வியைக்
கேட்டார்களே தவிர, மாண்புமிகு அமைச்சர் பி. டி.
சரஸ்வதி அவர்களின் மேல் ஒரு புகார் குற்றச்சாட்டைக்
கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தோடு அவர் இங்கே
கொண்டுவரவில்லை என்பதை நான் மனதார ஏற்றுக்
கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இன்றைக்குக் காலையிலே பத்திரிகை
யிலே பார்க்கிறபோது பி. டி. சரஸ்வதியின் மேல் புகார்
குற்றச்சாட்டு, ரகுமான்கான் சட்டசபையிலே கொண்டு
வந்தார் என்று வருகிறது. இது எந்த வகையிலே நியாயம்
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு
அமைச்சர் பி. டி. சரஸ்வதி அவர்களின் மேல் புகார்
குற்றச்சாட்டுக் கொண்டுவராத ரகுமான்கான் மீது ஒரு
களங்கம் கற்பிக்கிற வகையில், பி. டி. சரஸ்வதியின் மேல்
புகார் குற்றச்சாட்டு என்று எந்தப் பத்திரிகை எழுதி
னாலும் அது பொறுப்பற்ற முறையிலே எழுதுகிறதே தவிர
திரு. ரகுமான்கான் அவர்களுக்கு களங்கம் கற்பிக்கின்ற

முறையிலேதான் அந்தப் பத்திரிகை ஈடுபடுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு பின்னால் தீர்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள், இதிலே அடிப்படையான பிரச்சினைகள் என்ன என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்களே, எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, இந்த அவையிலே உள்ள அமைச்சர்களுடைய உரிமை பாதிக்கப்படுவதாக இருந்தாலும், அல்லது உறுப்பினருடைய உரிமை பாதிக்கப்படுவதாக இருந்தாலும் உரிமைக் குழுதான் பாதுகாக்க முடியும். இந்த அவையிலே உள்ள அனைவருடைய உரிமையையும் உரிமைக் குழுதான் பாதுகாக்க முடியும். ஆகவே உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்ற எங்களுடைய தீர்மானத்தை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு தீர்ப்பு பின்னாலே அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்.

வடாற்காட்டிலிருந்து சென்னைக்கு வரும், நெல், **அரிசி**யைப் பொறுத்தவரையில் வர்த்தக லெவி வசூலிக்க வேண்டாமென எடுத்த முடிவு குறித்து உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையின் 82-வது விதியின்கீழ் அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது, ஆலைகள் **மீதும், வர்த்தகர்கள் மீதும் லெவி விதிக்கப்பட்டு, கொள்முதல்** செய்யப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வர்த்தக லெவியைப் பொறுத்த வரையில்



உபரி மாவட்டங்களாகிய தஞ்சை, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்து தமிழகத்தில் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லில் 20 சதவீதமும், அரிசியில் 10 சதவீதமும் இப்போது லெவியாக வசூலிக்கப்படுகிறது. இதே லெவி விகிதங்கள்தான், மாநிலத்தைவிட்டு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கும் பொருந்தும். நம் மாநிலத்தில், அரிசி கையிருப்பைப் பலப்படுத்தும் பொருட்டு, நெல்லுக்கும் அரிசிக்கும் 50 சதவீத வர்த்தக லெவி விதிப்பதென்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது, ஆயினும். நம் மாநிலத்திற்குள் உபரி மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்குப் போகும் அரிசி, நெல்லைப் பொறுத்தவரையில், இப்போதுள்ள முறையே நீடிக்கும்.

சட்ட மன்றப் பேரவையில், உணவு மான்ய விவாதம் நடந்தபோது, செங்கற்பட்டிலிருந்து சென்னை நகரத்திற்கு லெவி கொடுக்காமல் நெல்லையும், அரிசியையும் எடுத்துச் செல்லலாமென்று இப்பொழுது அளித்துள்ள சலுகையை வட ஆற்காட்டிலிருந்து சென்னை நகருக்கு வரும் நெல், அரிசிக்கும் அளிக்கவேண்டுமென்று கோரிக்கை எழுப்பப்பட்டது. இக்கோரிக்கையை ஏற்று, வட ஆற்காட்டிலிருந்து சென்னை நகரத்திற்கு வரும் நெல், அரிசியைப் பொறுத்தவரையிலும் வர்த்தக லெவி வசூலிக்கவேண்டாமென்று இப்போது அரசு முடிவு செய்துள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகும் சிறப்பு ரகமான கிச்சடி அரிசியைச் சென்னை நகரவாசிகள் பெரிதும் பயன்படுத்திப் பழக்கப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காக இந்த விசேஷ சலுகை அளிக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) அம்பத்தூர் 'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' தொழிற்சாலை கதவடைப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. சுப்பு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சுப்பு அவர்கள் அவையில் இல்லை.

புலவர் கோவிந்தன் : அவருக்குப் பதிலாக நான் கொண்டு வருகிறேன்.

"1978–ம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ம் நாள் தேதியிலிருந்து அம்பத்தூரிலுள்ள 'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' என்னும் தொழிற்சாலையினை அறிவிப்பு எதுவும் இல்லாமல் கதவடைப்பு செய்ததின் விளைவாக அதன் தொழிலாளர்கள் அனைவரும் தகுந்த காரணம் ஏதுமின்றி வேலையினை இழக்க நேரிட்டதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து." என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சவரர்களின் கவனத்திற்கு 41-வது விதியின் கீழ் கொண்டுவருகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் : பேரவைத் துணைத்தலைவரவர்களே, அம்பத்தூரிலுள்ள சைக்கில் சேணம் தயாரிக்கும் "ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா" என்னும் தொழிற்சாலையில் சுமார் 40 தொழிலாளர்கள் உள்ளனர். இந்த தொழிலாளர்கள் ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா ஒர்க்கர்ஸ் யூனியன் என்றும் சங்கத்தினரால் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளவர்கள். ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா தொழிற்சாலை டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா தொழிற்சாலையிருக்கும் எல்லைக்குள்ளே உள்ளது. 11–1–1978 அன்று டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா தொழிற்சாலையில் நடந்த சம்பவத்தை ஒட்டி அத்தொழிற்சாலை இயங்குவது நிறுத்தப்பட்டது. இதனுல் ரைட் சாடில்ஸ ஆப் இந்தியா நிர்வாகத்தினர் தங்கள் தொழிற்சாலையின் எல்லா பிரிவுகளையும் 11–1–1978 அன்று மூடினர்.

'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' ஒர்க்கர்ஸ் யூனியன் எழுப்பிய ஒரு தொழிற் தகராறின்மீது செங்கற்பட்டு தொழிலாளர் துறை அலுவலர் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி மற்றும் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதிகளில் பேச்சு வார்த்தைகள் நடத்தினுர். டியூப் இன்வெஸ்ட்மெண்ட் எம்ப்ளாயீஸ் யூனியன் மற்றும் டி. ஐ. சைக்கிள்ஸ் எப்ளாயீஸ் யூனியன்களைச் சார்ந்த தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபடலாம் என்று அஞ்சியதால் தொழிற்சாலையில் பாதுகாப்பு மற்றும் சுமுகமான வேலை நடைபெறுதல் போன்றவைகளுக்கு சங்கம் உறுதி கொடுத்தால் ஒழிய, தொழிற்சாலையைத் திறக்க இயலாதென நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' தொழிலாளர்களுக்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் தேதி முடிய வேலை செய்த காலத்திற்கு ஈட்டிய ஊதியம் கொடுக்கப்பட்டது. தொழிலாளர் 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி முடிய ஊதியம் கேட்டு சென்னை 2-வது வட்ட தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையர் முன்பு சம்பளப்பட்டுவாடா சட்டத்தின்கீழ் விண்ணப்பித்துள்ளனர்.

'ரைட் சாடில்ஸ் ஆப் இந்தியா' தொழிற்சாலை மூடியுள்ளது பற்றிய தொழிற்தகராறின்மீது செங்கற்பட்டு தொழிலாளர் துறை அலுவலர் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறுர்.

(ஆ) கொடைக்கானல் மலைப்பகுதியில் வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பெற்ற 'குப்ரஜோதி' என்ற விதைக் கிழங்கு பெரும்பகுதி பழுதானதால் விவசாயிகள் நஷ்டம் குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: துணைத் தலைவரவர்களே, 4 -வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" கொடைக்கானல் மலைப் பகுதியில் உருளைக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு " குப்ரஜோதி " என்ற விதைக் கிழங்கு வட மாநிலங்களிலிருந்து குளிர்ச்சாதனப் பெட்டிகளில் வரவழைக்கப்பெற்று விநியோகிக்கப்படுவதில், 100-க்கு 60 விதைகள் பழுதாகி, விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாவதால், அவ்விதைக் கிழங்குகளைக் கொள்முதல் செய்வதில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து. "

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கொடைக்கானல் தாலுக்காவில் உருளைக்கிழங்கு சுமார் 5,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடியாகிறது. இந்த மாவட்டத்தில் வன இலாக்காவில் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில் கும்ரி சாகுபடியும் பரவியுள்ளது. கொடைக்கானலில் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு இரண்டு பருவங்கள் உள்ளன. ஏப்ரல், மே முதல் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் விளைச்சலுக்கு வரும் பயிர் மானுவாரியாகப் பயிர் செய்யப்படுகிறது. இந்தப் பருவத்திலேயே அதிகமான பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. அக்டோ

பர், நவம்பர் முதல் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் பாசன வசதியைப் பொறுத்து சுமார் 300 முதல் 400 ஏக்கர்வரை பரவலாகப் பாசனப் பயிராக பயிரிடப்படுகின்றது. பயிரிடப் படும் முக்கிய ரகங்கள் குப்ரிஜோதியும், பிரசிடென்டும் ஆகும்.

தேவையான விதைக் கிழங்குகள் நீலகிரி மாவட்டம் மற்றும் ஹோசூர் தாலுக்கா ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றது. சில வியாபாரிகளால் மேட்டுப்பாளையம், ஹோசூர் ஆகிய இடங்களிலிருந்து விதைக் கிழங்குகள் வாங்கி கொடைக்கானலுக்கு கொண்டு வரப்படுகின்றன. மேலும், தனிப்பட்ட விவசாயிகள் நேரிடையாக மேற்கண்ட இடங்களிலிருந்து வாங்குகிறார்கள். விவசாய இலாக்காவும் விதை விநியோகம் செய்கிறது. கொடைக்கானல் தாலுக்காவில் விவசாய இலாகாவால் விதை உற்பத்திக்காக இரண்டு விதைப் பண்ணைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதன் விவரம் ரைபிள் ரேஞ்ச் 36 ஏக்கர் மற்றும் வில்பட்டி 37 ஏக்கர். இந்திய அரசால் உருளைக் கிழங்கு விதை உற்பத்திக்கு ஆதாரமாக அடிப்படை விதை உற்பத்திக்காக மன்னவனூர் என்னுமிடத்தில் ஒரு நிலையம் ஏற்படுத்தியிருக்கிறது. சமீபத்தில் ஹோசூர் அருகாமையில் உள்ள அமுதகொண்டபள்ளி என்னுமிடத்தில் சுமார் 106 ஏக்கரில் ரூ. 5·90 இலட்சம் செலவில் ஒரு உருளைக்கிழங்கு விதை உற்பத்திப் பண்ணை ஆரம்பிக்க தமிழக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி இந்த ஆண்டு தொடங்கும். வருடத்திற்கு 400 டன் விதை உற்பத்தி செய்யப்பட்டு கொடைக்கானல் மற்றும் இதர பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

முக்கிய பருவ விதைப்பு கொடைக்கானலில் இன்னும் ஆரம்பமாகவில்லை. ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும். இந்தப் பருவத்தில் விதைக் தேவையை ஹோசூரில் உள்ள தனியார் விவசாய நிலங்களில் ஏற்பாடு செய்த விதைப்பண்ணைகளில் இருந்து 300 டன் குப்ரிஜோதி ரகத்தை கொள்முதல் செய்து விநியோகிக்கப்படும். நடப்பு ஆண்டில் விதை விநியோகம் சம்பந்தமாக எவ்வித பிரச்சினையும் இருக்காது.

உறுப்பினர் குறிப்பிடுவது 1974-75-ல் குப்ரிஜோதி என்ற உருளைக்கிழங்கு விதை ரகத்தை சிம்லாவிலிருந்து வரவழைத்து விநியோகம் செய்ததைப் பற்றியதாகும். இப்போது இம்





மாதிரி வடநாட்டிலிருந்து விதை வரவழைக்கப்படுவதில்லை. விவசாயிகள் இத்துறையிலிருந்து வாங்கும் விதைகளின் தரத்தைப்பற்றி இனிமேல் கவலை கொள்ள வேண்டிய தில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. கே. பண்ணை சேதுராம் : அமைச்சரவர்கள் விளக்கத்திற்குப் பின்னால் அங்கே, கொடைக்கானலிலேயுள்ள விதைப் பண்ணை நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற திட்டத்தை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விழைகிறேன். மேலும், கொடைக்கானலிலே கொடுக்கப்படுகிற விதைக் கிழங்குகளில், 'கோல்டன் நிமெட்டோ' என்ற பொன்நிற நோய் இருக்கிறது. அதைப்பற்றி விளக்கம் கொடுக்கவில்லை. கொடைக்கானலிலே விதைப்பண்ணையை விரிவுபடுத்த வேண்டுமென்றும் ஹோசூர் பண்ணையைப் போல் கொடைக்கானலிலே ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. THIRU P. KOLANDEIVELU : With regard to "golden nematod", control measures are being taken by the department and it is being eradicated.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோ கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## 6. 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமயக் அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,44,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

திரு. ஜி. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்பதை மாற்றி சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்வது குறித்து விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,44,94,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எல்லா கோயில்களுக்கும், நிர்வாகம் ஒழுங்காகவும் திறம்படவும் நடக்க உடனடியாக நல்ல அறங்காவலர்களை நியமனம் செய்வது குறித்து விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,44,94,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, கோவில் மடங்களுக்குச் சொந்தமான இடத்தில், வீடு, நிலமில்லாத ஏழை மக்கள் 5 ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டிக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கே பட்டா வழங்குவதைப் பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,44,94,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. ARUMUGHAM: Sir, to discuss about the undesirability to have all the three powers, namely, the executive, the audit and judicial, in the hands of the same and single department, I move—

"That the allotment of Rs. 1,44,94,000 under Demand No. 12—Hindu Religious and Charitable Endowments Department be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்களில் வாடகைக்கு குடியிருப்பவர்கள், கடை வைத்திருப்பவர்கள் ஆகியோருக்கு வாடகை கட்டுப்பாடு சட்டத்தின் அனுகூலங்கள் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,44,94,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to expedite the construction of Kalyana mantapams in the Sreevaikuntaperumal temple at Ambur, North Arcot district, I move—

"That the allotment of Rs. 1,44,94,000 under Demand No. 12—Hindu Religious and Charitable Endowments Department be reduced by Rs. 100".

---

* 696–706ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் நிர்வாகம் பற்றிய குறிப்புரை* ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரால் அச்சடிக்கப்பெற்று அவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றிருக்கிறது. தமிழிலே உள்ள அந்தக் குறிப்பை நான் இங்கே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பேட்டிலே, அவைகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெளியிடுகின்ற கருத்துக்களை யொட்டி இறுதியிலே விளக்கம் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கெள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கென்று குறிப்பிடப்பட்ட நாட்களில் இன்று கடைசி நாள், எனவே இன்று பிற்பகல் 1 மணிக்கு விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடத்த வேண்டும். மானியக் கோரிக்கை எண். 12 விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதன் மீது விவாதம் 1 மணிக்கு முடிய வேண்டும். இது தவிர இன்று 1977-78 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவேண்டும். எனவே விவாதம் 1 மணிக்கு முடிவுற்றால், வாக்கெடுப்பிற்கான நேரம் சரியாக இருக்கும். எனவே இதன் மீது விவாதம் தேவையா இல்லையா என்பதை அவையினர் முடிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சு. பாலன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"நமது மாநிலத்தில் 51,833 இந்து சமய நிறுவனங்கள் உள்ளன என்றும் அவற்றிற்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்கள் 610741 ஏக்கர் உள்ளன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 24,605 சமய நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த நிறுவனங்களுக்கு 570304 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன.





எஞ்சிய சமய நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன" என முதல்வர் கூறுகிறார்கள். முதல்வரின் கணக்குப்படி 40,437 ஏக்கர் நிலங்கள் ஆய்வில் உள்ளது. இதில் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் உள்ளதா? அவற்றிற்குச் சொந்தமான நிலங்களின் கணக்கு எவ்வளவு? "குடிவார முறை தொடர்பான பல்வேறு சட்டங்களும்-கடன் தவணை ஒத்திவைப்புச் சட்டம், பொதுப் பொறுப்புக் கழகங்கள் சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டதினால் **நிலங்கள் மூலம் கிடைக்கும் வருவாயையே** முக்கிய வருமானமாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. நிலங்கள்தான் கோயில்களின் முக்கிய வருவாய் வாயில்களாகும்" என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் நிலங்கள் எந்த எண்ணத்தின் அடிப்படையில் கோயில்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும் எழுதி வைக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறவில்லையென்பதையும், அவைகள் அந்தக் காரியங்களுக் காக்கும் மதத் தலைவர்களால் உண்மையில் பெரிதும் பயன்படுத்தப்படவில்லையென்பதையும் இதே அவையில் பல ஆண்டுகளுக்கு முன்னாலே சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

மடங்களும், ஆதீனங்களும் சைவத்தினையும்-தமிழையும் தழைக்கச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டவை என்று சொல்லிக் கொள்ளுகின்றன. ஆனால், "சைவமெனும் சூளையிலே தமிழ்நட்டால் முளையாது" என பேரறிஞர் அண்ணா அவர்கள் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். 1960-ல் அண்ணா இதே அவையில் "பொதுக்காரியத்திற்காக, பொது நன்மையை உத்தேசித்து நிலத்தை சர்க்கார் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்வதென்றால்—மத ஸ்தாபனமாக இருந்தாலும்—மத ஸ்தாபனங்களால்தான் மதம் இருக்கிறதா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினை—அற நிலையங்களால்தான் அறம் தழைக்கிறதா என்பதும் விவாதத்திற்குரிய பிரச்சினை—இந்த அறமும் மதமும் இந்த நிலங்களால்தான் இருக்கிறதா என்பது அடிப்படையான பிரச்சினை. அத்தனை நிலங்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவைகள் உழுபவனுக்கே உரிமையாக்கப்பட வேண்டுமென" வலியுறுத்தியுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல "உழுபவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலிலே வளத்தைக் காண முடியாது" என்பதையும் எடுத்துக்காட்டினார்கள். நிலங்களை எழுதி

வைத்து காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்திலேதான் காரியங்கள் நடைபெற முடியாத நிலையிருக்கும்போது நிலங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு இழப்பீட்டுத் தொகை வழங்குவதன் மூலம் கோயில் காரியங்களும் நடைபெறும்.

அந்த நிலங்களும் உழுபவனுக்கே உரிமையாக்க வழிவகை காண முடியும் என முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1976-ம் ஆண்டு, முந்தைய அறங்காவலர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். தற்போது புதிதாக அறங்காவலர்களை நியமித்திடும்போது அந்தப் பொறுப்பினை அறநிலையத் துறையோ அரசோ மேற்கொள்ளாமல் நீதிபதிகளைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அறங்காவலர்களை நியமிக்க வேண்டுகிறேன்.

[முற்பகல் 11-10]

அத்தகைய அறங்காவலர் குழுவில் நிச்சயம் ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு இடம் தருதல் என்ற திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவர் கலைஞரின் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும், பெண்களுக்கும் அக்குழுக்களில் இடம் அளிக்கவும் ஆவன செய்தல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மடங்களுக்கும், ஆதீனங்களுக்கும் சொந்தமானதாகக் கூறப்படும் பெரிய கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமித்து, அவற்றை அறநிலையத் துறையின் கண்காணிப் பின்கீழ் கொண்டுவருதல் வேண்டும்.

''ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே'' என அவனை அறிந்ததாகக் கூறிக் கொள்பவர்களே சொல்லுகிறார்கள். கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்டோரும் அர்ச்சகர் ஆகலாமென இங்கு சட்டம் கொண்டு வரப்பட்டு, தற்போது தடைப்பட்டுள்ளது. அதனை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்திடல் வேண்டும்.

'தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தானில்லை' என்றார் கவிஞர். தமிழகத்திலேயுள்ள திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை புரிய கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் வழிவகைக் காணப்பட்டதைத் தொடர்ந்து புதிய அரசும் அதனை வலியுறுத்தி செயல்படச் செய்திட ஆவன புரிய வேண்டுகிறேன்.



இராஜராஜ சோழன் சிலை தஞ்சையில் கலைஞர் காலத்தில் வைக்கப்பட்டது. அது கூரையின்றி உள்ளது. அகிலமெலாம் தமிழகத்தின் புகழ் பரப்பிய கோயிலை மத்திய ஆட்சிதான் நிர்வகிக்க வேண்டுமா? அண்ணா அவர்களே சொன்னார்கள். சில பெரிய கோயில்களில் காணப்படும் ஆயிரம் ஆண்டுகாலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் கூட திருக்கோயில் நிதியிலிருந்து சமுதாய நலப்பணிகள் மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதை அறிகிறோம்.

கலைஞர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட கருணை இல்லங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் இவ்வரசினைப் பாராட்டுகிறேன்.

சமுதாய நலப்பணிகள்—குறிப்பாக, கல்வி நிறுவனங்கள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மேலும் அமைத்திட அறநிலையத் துறையினைப் பயன்படுத்துவது சாலப் பொருத்தமாகும்.

நாயன இசை—இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, உலகிலேயே மிகச் சிறந்த இசையாகப் போற்றப்படும் தமிழகத்திற்கே உரித்தான நாயன இசை. இதனை ஊக்குவிக்க காலஞ்சென்ற 'வித்வான் டி. என். இராஜரெத்தினம் பிள்ளை உதவித் தொகை' என்ற பெயரில் அதிகபட்சம் 5 ஆண்டு நாயனம் பயிலும் மாணவர்கள் 5 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 500 ரூபாயும், தவில் கலை பயில்வோருக்கு மாதம் 300 ரூபாயும் அளிக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

முன்பு கழக ஆட்சியில் பழனியில் இழுவை இரயில் நிறுவப்பட்டதைப் போல் திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமானசுவாமி கோயிலுக்கும் இழுவை இரயில் அமைத்திடும் திட்டம் செயல்பட இருப்பதனை வரவேற்கிறேன்.

மாயூரம் நகரில் திரு. இந்தளூர் அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயிலின் சார்பாக ஏழை எளியவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திருமண மண்டபம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதை நிறைவேற்றித்தரக் கோருகிறேன்.

மாயூரம் தொகுதி கடலங்குடியில் பள்ளிவாசலுக்காக இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் 3 சென்ட் நிலத்தைத் தந்துவிட்டு, பதிலாக அறநிலையத் துறையின் மூலமாக 3 சென்ட் நிலம் பள்ளிவாசல் அமைக்கக் கோரியதை அனுமதிக்க வேண்டுகிறேன்.

கங்கைகொண்ட சோழபுரம் மூர்த்தி கோயில், கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. இராஜராஜ சோழனுக்கு அவர் மகன். ஈழம், சாவகம், கடாரம், விஜயதுர்க்கம் முதலிய நாடுகளை வெற்றிகொண்டவன்.

நான் இந்த நேரத்தில் எங்களைப்பற்றி 'ஊழல், ஊழல்' என்று சொல்கிறவர்களுக்குத் தற்போதைய ஆட்சியில் நடந்துவரும் ஊழலைப்பற்றிச் சொல்கிறேன். எங்களைப் பார்த்து சொன்ன அதே ஊழலை இந்த நிர்வாகத்திலும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

(திரு. கே. பண்ணை சேதுராம்—தலைமை.)

டி.எம்.பி. 7778 அம்பாசிடர் கார் கோவை துணை ஆணையர் அலுவலகத்தின் உபயோகத்திற்கு இருந்த கார். பிப்ரவரி 1976-ல் அந்த கார் சென்னைக்கு கொண்டு வரப் பட்டு, இன்றையதினம் வரையில் அறநிலையத் துறை செய லாளர் தன் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார். அதற்கான 'லாக் புக்' தவறாக எழுதப் பட்டு வருகிறது. இதை சரிசெய்ய வேண்டுமென்று கேட் டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேது ராம்): மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்த ராசன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

## 7. தன்னிலை விளக்கம்.

தன் (திரு. ரகுமான்கான்) பேச்சை ஒரு நாளேட்டில் தவறாகப் போட்டிருப்பதாக நிதியமைச்சர் கூறியது குறித்து திரு. ரகுமான்கான் அவர்கள் விளக்கம்.

திரு ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலை வரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 81-ன் கீழ் ஒரு தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு எனக்கு அனுமதி தருமாறு கோருகிறேன்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேது ராம்): பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுங்கள். தன் னிலை விளக்கம் என்று சொல்லாதீர்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர வர்களே, 81-வது விதியின் கீழ் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே நான் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் மீது ஒரு கருத்தைச் சொல்லுகின்றபோது, எனக்கு எதிராக தவறான கருத்து உண்டாகின்ற விதத் தில் வெளியிலே செய்திகளைப் போட்டு விட்டார்கள் என்ற ஒரு வருத்தத்தைச் சொல்லி, சட்டமன்ற உறுப்பினர் ரகு மான்கான் அவர்கள் அமைச்சர் சரஸ்வதி அவர்களுக்கெதி ராக எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் என்னுடைய பேச் சின் பகுதியை வைத்திருக்கிறேன். அந்தப் பேச்சு டைப் அடிக்கப்பட்டு, எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அதை இங்கே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நான் கேட்பதெல்லாம் இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? அமைச்சரவர்கள் பயணம் செய்கிறார். அதற் காக அரசாங்கத்திடமிருந்து T.A. வாங்குகிறார். D.A. வாங்குகிறார். அதற்குப் பிறகு, அவர் அடிக்கடி மதுரை மாவட்டத்திற்கு வருகை புரிகிறார் என்று சொல்கிறபொழுது அதற்கான செலவுகளை அந்தத் துறை ஏன் ஏற்றுக் கொள் கிறது, அப்படி அந்தத் துறை ஏற்றுக் கொள்கிறது என்று சொன்னால், அது 'misuse of power' ஆகாதா? அது அதிகார துஷ் பிரயோகம் ஆகாதா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்." என்று தெளிவாகவே நான் அமைச் சருக்கு எதிராகக் குற்றச்சாட்டைச் சொல்லிய பகுதி இங்கே இருக்கின்றது.

எனவே, நான் சொல்லிய கருத்தில் அமைச்சருக்கு எதி ராகக் குற்றச்சாட்டு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெளிவாக்கிக் கொள்கிறேன். ஆகையால் பத்திரிகையில் வந்தது சரி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேது ராம்): எதிர்க்கட்சித் துணைத் தலைவரே அமைச்சர் மீது குற்றம் இல்லை என்று சொன்னார்கள். அதனால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விவகாரம் முடிந்து விட்டது.

## 6. 1978–79-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

திரு துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் வைக்கப்பட்டிருக்கிற இந்த அறநிலையத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் ஏறத்தாழ 51,833 கோயில்கள் இருக்கின்றன. அதனுடைய உள்ளடங்கல் நிலமாக 6,10,741 ஏக்கர்கள் நிலங்களிலிருந்து அந்தக் கோயில்களுக்கு ஏறத்தாழ 6 கோடி ரூபாய் வருமானமாக வருகிறது. ஆனால் அந்த வருமானம், ஆலயத்திலே இருக்கும் பல்வேறு நிலைமைகளின் காரணமாக வரவில்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துறையிலே அரிஜன மக்கள், பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே எந்தவிதமான நன்மையும் செய்து கொடுக்கவில்லை, என்று குறிப்பிட்டார்கள். அதேபோன்று இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் நல்ல சலுகைகளை இந்த அரசு செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு மெத்த பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். இந்தத் துறையினுடைய சார்பாக இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த மானியத்தினுடைய அறிக்கையில் அரிஜனப் பகுதியிலே இருக்ககூடிய 33 கோயில்களைப் புதுப்பிப்பதற்கு— தலா ஆயிரம் ரூபாய் வீதம் — 33 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல், 4 கோடி ரூபாயில் ரூபாய் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வருமானம் உள்ள 15 புதிய கோயில்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் பணியும், 17 இலட்ச ரூபாயில் திருப்பணியும் 3 இலட்ச ரூபாயில் திருமண மண்டபம் கட்டுவதற்கான பணியும் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது — பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு காலத்திலே கோயில் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னது நினைவுக்கு வருகிறது. அவர்கள் கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அண்ணாவின் லட்சியத்திற்கும்,





எண்ணத்திற்கும் ஏற்றதாக அந்த ஆலயப் பணிகள் நடைபெறவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11–20]

இன்றைக்கு ஏறத்தாழ 51,000 பேர்கள், இந்தக் கோவில்களில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 15-வரை இன்று வழங்கப்படுகிறது, இடைக்கால நிவாரணமாக அந்தத் தொகை அவர்களுக்கு கிடைக்கிறது, 1977 டிஸம்பர் 1-ம் தேதி முதல் அவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிடிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்தத் துறை மூலமாக நாதஸ்வரம் பயில்கிற மாணவர்களுக்கு ரூ. 500 மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது, தவில் பயில்கிற மாணவர்களுக்கு ரூ. 400 வழங்கப்படுகிறது, இப்படி இந்த அரசு செய்திருக்கிறதை எண்ணிப் பார்க்கிறபோது, குறிப்பாக இந்த அரசுக்குச் சொந்தமான ஏழு லட்சம் ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டு, அதிலிருந்து வருமானம் ஆண்டு ஒன்றுக்கு அறுபது கோடி ரூபாய் வரவேண்டும் என்று கணக்கு இருந்தாலும் அதில் பத்தில் ஒரு பகுதி கூட வர முடியாத அளவிற்கு, ஆலயத் திருப்பணிகள் கூட நடைபெறமுடியாத அளவிற்கு இன்றைக்கு பல்வேறு புதிய சட்டங்களை உருவாக்கியும், இருக்கிற சட்டங்கள் மூலமாகவும், மான்யுமென்ட்ஸ் ஆக்ட் என்ற சட்டத்தைப் போட்டதற்குப் பின்னாலும், நிலத்தை வைத்திருப்பவர்கள் ஆலயங்களுக்குச் செலுத்த வேண்டிய அல்லது ஆலயங்களுக்குச் சேரவேண்டிய நிதியை அல்லது பணத்தை பல்வேறிடங்களில் வழங்காத காரணத்தால் ஆலயப்பணிகள் பல்வேறு இடங்களில் நடைபெறவில்லை என்ற அந்தக் குறையைப் போக்குகிற வகையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் பரியாதைக்குரிய நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த மதியழகன் அவர்கள் அந்த ஆலய நிலங்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக வைத்திருக்கிற அல்லது குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கிறவர்களுக்கு, அந்நிலங்கள் அவர்களுக்கே கிடைக்கிற உரிமையைக் கொடுத்து அவர்களுக்கு விற்றுவிட்டு அந்தப் பணத்தை ஒரு பாங்கில் போட்டால்கூட அதிலிருந்து கிடைக்கும் வட்டியில் ஆறில் ஒரு பகுதியை வைத்து ஆறு

கால அல்லது ஏழு கால பூஜை என்று சொல்கிற பூஜைகளை நடத்தலாம் என்ற அடிப்படையில் ஒரு கணக்கைத் தந்தார்கள்.

இந்த அரசு அதை மீண்டும் பரிசீலித்து அந்த நிலங்களை அவற்றைச் சாகுபடி செய்யக்கூடிய குத்தகைதாரர்களிடம் விற்றுவிட்டு அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கோவில் பணிகள் நடைபெறுவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு பல்வேறு வழக்குகள் உள்ளன. கோவில் நிலங்களை பெரிய பெரிய மடாதிபதிகள், பெரிய பெரிய வசதி படைத்தவர்கள் பினாமி, மாற்றுப் பெயர்களில் கோவில் நிலங்களையெல்லாம் வைத்துக் கொண்டு அதிலிருந்து வருகிற வருமானத்தை ஆலயங்களுக்கும் செலுத்தாமல் அல்லது சிறு விவசாயிகள் என்ற பெயரால் கணக்கை மட்டும் காட்டிவிட்டு பல்வேறு பகுதிகளில் நாற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் உடனடியாக பார்த்து பண்ணைச் சாகுபடி அல்லது கூட்டுறவுச் சாகுபடி என்ற அடிப்படையில் அந்த நிலங்களை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மடாதிபதிகளின் சொத்துக்களை உடனடியாக அரசுடமை யாக்கி அதை ஆலய நிர்வாகத் துறையின் கீழ் கொண்டுவர வேண்டும். கோவில்களில் இன்றைய தினம் பல்வேறு ஊழல்களைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக பல ஆலயங்களில் இருக்கிற பூஜிக்கப்படுகிற, பலருடைய தெய்வங்களாக எண்ணிப் பார்க்கக்கூடிய சாமிகள் எல்லாம் இன்றைய தினம் எந்த சாமிகளாக கோவில்களில் காட்சியளிக்கிறார்கள் என்று சொன்னால் பழமை எங்கேயோ போய் புதுமை உள்ளே புகுந்ததுபோல், பழைய நடராஜர் சாமிச் சிலைகள் போன்றவையெல்லாம் அமெரிக்கா போன்ற நாடுகளில் கண்டுபிடிக்கிறார்களே தவிர தமிழ்நாட்டிலிருந்து ஆலயங்களுக்கு உள்ளே இருந்த சாமிகள் எல்லாம் இப்போது தமிழ்நாட்டு எல்லைக்குள் இல்லை என்பது குறித்து சட்ட பூர்வமாக ஏதோ ஒரு வழக்கு மன்றத்தில் ஒரு தீர்ப்பு கூட பார்த்தேன்.

அந்தத் தீர்ப்பில் ஒரு நடராஜர் சிலை கண்டுபிடிக்கப்பட்டு ஒருவர் மேல் வழக்கு தொடரப்பட்டு வழக்குமன்றத்தில் அவர் விடுதலை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பிறகு அந்த நடராஜர் சிலை எந்த ஒருவர்மேல் வழக்கு தொடரப் பட்டதோ அவருக்கே திரும்பக் கொடுக்கப்படுகிறது.



இப்படிப்பட்ட தீர்ப்புகள் வருகிற காரணத்தால்தான் பல்வேறுயிடங்களில் இருக்கிற சாமிகள்...... அங்கேயிருக்கிற, குறிப்பாக ஒன்றரை அல்லது இரண்டு லட்சம் அறங்காவலர்கள் போடப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் துணையோடோ என்னவோ அதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை, ...... அவர்கள் பொறுப்பேற்று நடத்துகிற ஆலயங்களில் சாமிச் சிலைகள் ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் என்று கருதுகிறேன். அதிகமான அளவிற்கு திருட்டுக்கள் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் ஆலயங்களுக்கு தொழுவதற்கு வரக் கூடியவர்கள் கூட சாமியே இல்லை என்று எண்ணி வருகிறவர்கள் எண்ணிக்கை ஆலயங்களில் குறைந்துகொண்டே வருகிறது.

அந்தந்த சிலைகள் எல்லாம் நல்லமுறையில் பாதுகாக்கப் படுகின்ற அளவில் அறங்காவலர்களை நியமித்து, ஒன்றரை லட்சம் பேர்களையும், நல்ல முறையில் நிர்வகிப்பதற்கு தகுந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஆலயங்களுக்கு சேரவேண்டிய நிலங்களில், அவற்றில் இடைத்தரகர்களாக இருப்பவர்களை பினாமியாக வைத்துக்கொண்டு, ஆலயங்களுக்குச சேரவேண்டிய வகுலையும் கொடுக்காமல், சில பெரிய மடாதிபதிகளைச் சேர்ந்தவர்கள் அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற சிலர் பெரியவர்களாக இருந்துகொண்டு மடாதிபதிகளிடத்திலுள்ள நிலங்களை எல்லாம் தங்களுடைய பெயரில் பினாமியாக வைத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களிடமிருந்து நெல்லையும் இவர்களே வசூல் செய்து ஆலயத்திற்கு சேராத அளவுக்கு காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையைப் போக்க கோவில் நிலங்களை எல்லாம் சரியான முறையில் நிர்வகிக்கவேண்டும். இவ்விதம் சரியாக நிர்வகிக்கப்படாமல் இருப்பதின் காரணமாக பல்வேறு ஆலயங்களில் பங்குனி மாதத்தில் நடைபெற வேண்டிய திருவிழாக்கள் நிதி பற்றாக்குறை காரணமாக நடைபெறாமல் இருக்கின்ற நிலைமையை நாம் பார்க்கின்றோம். நாட்டுப் புறங்களில் பல ஊர்களில் ஒன்றாக இணைந்து உண்மையான சொந்தம் பாராட்டுகின்ற முறையில், பழமையான நல்ல உறவுகள் ஏற்படுகின்ற முறையில், பல நல்ல கட்டுப்பாடுகள் பல விழாக்கள் மூலமாக நாட்டுப்புறங்களில் நிலவி, வந்தது

இதன் காரணமாக அந்த ஊர் மக்கள் எல்லாம் ஒன்று சேருகிற நிலைமை இருந்து வந்தது. அந்த உறவெல்லாம் இப்போதுள்ள நிதிப் பற்றுக்குறை காரணமாக திருவிழாக்கள் நடைபெற முடியாமல் இருப்பதின் காரணமாக, அந்த உறவுகள் எல்லாம் பிரிக்கப்படுகின்ற அளவுக்கு திருவிழாக்கள் நடைபெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இதை நான் வேடிக்கைக்காகச சொல்லவில்லை.

எங்கள் பகுதியில் 18, 20 ஊர்களுக்கு சேர்ந்தாற் போல் ஒரு ஆலயம் இருக்கிறது. அங்கு ஆண்டுக்கு ஒரு முறை திருவிழா நடைபெறும், அதில் இந்த ஊரிலுள்ள உற்றார் உறவினர் என்று சொல்லக்கூடியவர்கள் எல்லாம் கூடுவார்கள். அதில் குறிப்பாக திருமணம் ஆகாத சின்னஞ்சிறு பையன்கள், அதே போன்று திருமணம் ஆகாத சிறிய பெண்கள் இவர்கள் எல்லாம் வருவார்கள். இங்கு பையன்கள் பெண்களை பார்த்துக்கொள்கின்ற வகையில் திருவிழாவில் கூடுகின்ற பழக்கம் எங்கள் பகுதியில் இருந்து வந்தது. ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இந்தத் திருவிழாவில் உறவினர்களில் பலரை ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்வதற்கும், ஒருவரை ஒருவர் உறவு முறை கொண்டாடுவதற்கும் எங்கள் பகுதியில் ஜமீன் முறை இருந்த காலத்திலிருந்தே நடைபெற்றுவந்தது. இப்படிப்பட்ட திருவிழாக்கள் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில்—அந்தந்த நாட்டுக்குச் சொந்தமான பல ஆலயங்கள் இருக்கின்றன.

மேலும் பல ஆலயங்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இவைகளிலுள்ள மதிற் சுவர்கள் எல்லாம் இடிந்து விழக்கூடிய நிலையில் காட்சியளிக்கின்றன. சில ஆலயங்கள் மட்டும் பணக்கார ஆலயங்களாக இருக்கின்றன. சில ஆலயங்கள் பஞ்சை பராரியாக காட்சி தருகின்றன. ஏழு கால பூஜைகள் எல்லாம் போய் இப்போது ஒருகால பூஜை கூட இல்லாத நிலையில் பல ஆலயங்கள் இருக்கின்றன.

நாட்டிலுள்ள மக்களைப் பொறுத்தவரையில் ஏழைகள் பணக்காரர்கள் இவர்களை எல்லாம் ஒன்றாகப் பார்க்கவேண்டும் என்று கூறுகின்ற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட கோயில்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, இவற்றிலுள்ள நிதிநிலைகளை எல்லாம் ஒன்றாக சேர்த்து, இதில் 10, 20 சதவீதத்தை அலுவலர்களுக்கு ஊதியமாக தந்து கிடைக்க



வேண்டிய இடத்தில் எல்லாம் நல்ல முறையில் வருவாயை வசூலித்து, வருவாயைப் பெருக்கி, ஆலயங்களிலுள்ள பணியாளர்களை எல்லாம் நல்ல முறையில் நிர்வகிக்கவேண்டும் என்றும், இந்தத் துறையை நல்லமுறையில் வளர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கை மீது இந்திரா காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். தற்போது கேரளாவில், ஐயப்பன் சுவாமி கோவில் என்றும், தமிழ் நாட்டில் பழனி முருகன் கோவில் என்றும் திருச்செந்தூர் முருகன் என்றும், ஆந்திராவில் திருப்பதி கோவில் என்றும் பல கோவில்கள் விசேஷமாக வழிபட்டுக் கொண்டு, கோடிக்கணக்கான பக்தர்கள் போய்க் கொண்டிருக்கின்ற நேரத்தில், பல இடங்களில் அந்த பக்தர்களுக்கு விரோதமாக, கடவுளே இல்லை என்று பல பேர்கள் கல்லில் எழுதிவைத்திருப்பது, அவர்களுடைய மனம் புண்படுகின்ற மாதிரி இருக்கிறது.

[முற்பகல் 11–30]

இதைத் தவிர்க்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், அப்படி எடுக்காவிட்டால், பல காலக்கட்டத்தில் புரட்சிகள் எல்லாம் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதை நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் கொல்லி மலை என்ற ஓர் மலை இருக்கிறது. அந்த மலையில் வல்வில் ஓரி காலத்தில் அறப்புளீஸ்வரர் கோவில் நிறுவப்பட்டு, அது இப்போது பாழடைந்து, இடிந்து பழைய காலத்தில் இருந்ததைப்போல் மிகவும் மோசமாக இருந்து கொண்டிருக்கிறது அந்த அறப்புளீஸ்வரர் கோவிலுக்கு தற்போது மானியத்தில் 4 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்தக் கோவிலைச் செப்பனிடுவதற்கு 4 லட்சத்திற்கு மேலாகும். ஏனெனில், இந்தக் கோவிலுக்கு கிழே நீர் விழ்ச்சி ஒன்று இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சிக்கு பக்தர்கள் எல்லாம் ஆடி 18-ன் போது லட்சக் கணக்கிலே போகிறார்கள். அப்படிப் போவதற்கு எந்தவிதமான தட வசதியோ அல்லது படிக்கட்டுகளோ அங்கேயில்லை. அங்கே அந்த நீர்வீழ்ச்சி சுமார் 500, 600 அடி உயரத்திலிருந்து விழுகிறது, அதைப் பார்க்க பல

இடங்களில் இருந்தும், பல மாநிலங்களில் இருந்தும், கோடிக் கணக்கான மக்கள் அங்கே வருகிறார்கள். அதைச் செப்பனிட்டு, நல்லமுறையிலே செய்வதற்கு 4 லட்சம் ரூபாய் போதாது. எனவே, அதைப் பொறுத்தவரையிலே இந்த நீர்வீழ்ச்சிக்குப் படிக்கட்டுகள் கட்டி, நல்ல போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க, இன்னும் 2 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கொடுத்தால், அந்தக் கோவிலை நல்ல முறையிலே செப்பனிட்டுக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே கொல்லிமலையிலிருந்து , வாழவந்தான் யூனியனுக்கு ஒரு ரோடு போகிறது, அங்கிருந்து இந்தக் கோவிலுக்கு வருவதற்கு ரோடு வசதி சரியாக இல்லை. எனவே, அந்த ரோடு வசதியையும், அங்கே பஸ் வசதியையும், மின்சார வசதியையும் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதோடு, கொல்லிமலையிலிருந்து, திருச்சி மாவட்டத்திற்குச் செல்வதற்கு 3 மைல் தொலைவுதான் இருக்கிறது. இந்த ரோட்டையும் செப்பனிட்டால், அந்தத் திருச்சி மாவட்டத்திலே உள்ளவர்களும், அங்கேஇருக்கக்கூடிய மலைவாழ் மக்களும், இவர்கள் எல்லாம் இந்தக் கோவிலுக்குப் போய்வருவதற்கு வசதியாக இருக்கும். இதைத் தவிர , அதற்கும் மேலே உள்ள பழங்குடி மக்களுக்கும், மற்றவர்களுக்கும் வசதியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, கோவில்களில் எல்லாம் நிலங்கள் நிறைய இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு எல்லாம் பட்டா இருக்கின்றதே ஒழிய, அவர்கள் அவைகளை அனுபவிப்பதில்லை. யாரோ மூன்றாவது மனிதர்கள் அவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிலத்திற்கு ஆயிரம், இரண்டாயிரம், அல்லது ஏதாவது பணத்தை வாங்கிக் கொண்டு, பல பேர்கள் பல வகைகளிலே அந்தக் கோவில் நிலங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், அந்தக் கோவிலுக்கு அந்த வருவாய் போய்ச் சேருவதில்லை. அவர்களே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும், வசதி படைத்தவர்கள்தான் அந்த நிலங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டு நேரடியாக உழுகின்ற விவசாயிகளுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் **கொள்கிறேன்.**



அடுத்து, இதற்கு முன்னாலே இருந்த அரசு காலத்தில் பல கோவில்களிலே சிலைகள், தங்கம், பொன், ஐம்பொன் போன்ற சிலைகள் எல்லாம் கூட திருட்டு போய்க்கொண்டு வந்தது. பல கோவில்களிலே போய்ப் பார்த்தால், தற்போதுகூட கோவில்களிலே சிலைகள் காணப்படுவதில்லை. இதற்கு முன்பு இருந்த அரசு காலத்தில்தான் நிறைய சிலைகள் திருட்டுப் போய்க் கொண்டிருந்தது. அந்தச் சிலைகள்...............

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்த அரசு காலத்தில் என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள் ?

திரு. ரா. பெரியசாமி : இதற்கு முன்னாலே இருந்த அரசு என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : முன்னாலே இருந்த அரசு என்றால் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சியை அவர் குறிப்பிடுகின்றாரா ?

திரு. ரா. பெரியசாமி : திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்று சொல்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் சிவபுரம் நடராஜர் சிலை மண்டல காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் குடும்பம் திருடி அமெரிக்காவுக்கே கொண்டு போகப்பட்டது. அதைக் கண்டு பிடித்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. பெரியசாமி : கண்டு பிடித்ததற்கு நன்றி..

திரு. மு. கருணாநிதி : 1952 ஆம் ஆண்டில் திருடிய குடும்பம் மண்டல காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரின் குடும்பம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார். காங்கிரஸ் கட்சிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடந்திருக்கலாம்.

திரு. மு. கருணாநிதி : நண்பர் மாரிமுத்து அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். சிவபுரம் நடராஜர் சிலையை அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றது 1952 ஆம் ஆண்டு. அந்தக் காலத்தைக் குறிப்பிடுகிறேன். அதில் சம்பந்தப்பட்ட ஒருவர் மண்டல காங்கிரஸ் கட்சியின் தலைவர். சம்பந்தப்பட்டவர்களின் பெயரையும் வேண்டுமானால் சொல்கிறேன்—ஜவகர், நேரு, நேதாஜி, என்று பிள்ளைகளுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : காங்கிரஸ் கட்சித் தலைவர் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. காங்கிரஸ்கட்சித் தலைவர் திருடியிருக்க முடியாது. யாரோ ஒருவர் திருடியிருப்பார். அவர் கதர் கட்டியிருக்காலமே தவிர வேறல்ல.

திரு. மு. கருணாநிதி : காங்கிரஸ் கட்சித் தலைவர் திருடியிருக்க முடியாது. ஆனால் திருடியவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் என்பதுதான் எனக்கு வந்த தகவல்.

திரு, ரா. பெரியசாமி : யார் திருடினாலும் அதை அப்போதைய அரசு கண்டு பிடித்தது என்றால் பாராட்டுகிறேன்.

அதே சமயத்தில் எத்தனை கோயில்களில் அந்த அரசு காலத்தில் சிலைகள் திருடு போயின என்பதைப் பார்க்க வேண்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் காங்கிரஸாக இருந்தாலும், தி. மு. க. வாக இருந்தாலும், அ, தி. மு. க. வாக இருந்தாலும் சிலை திருடியிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். அப்போதிருந்த அரசு காலத்தில் நிறைய கோயில்களில் சிலைகளைக் காணோம். எங்கள் பகுதியில் பச்சைப் பெருமாள் கோயிலில் சிலை திருடு போயிருக்கிறது, கருப்பம்பட்டியில் சிலை திருடு போயிருக்கிறது. யார் திருடியிருந்தாலும் அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**(மணி அடிக்கப்பட்டு திரு. வி. கே. கோதண்டராமன் பேச அழைக்கப்பட்டார்.)**





திரு.வி.கே. கோதண்டராமன்: ஐயா, தமிழ்நாடு இந்து அறநிலைய நிர்வாகத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் கோயில்களாக இருந்தாலும், மடங்களாக இருந்தாலும் கொலை கொள்ளை, பதுக்கல், கடத்தல் இப்பேர்பட்ட காரியங்களுக்கு ஒரு பதுங்கல் இடமாக இன்றைக்கு இருந்து வருகிறது என்பதற்கு ஒரு சில விளக்கங்களைத் தர ஆசைப்படுகிறேன்.

இந்த அறிக்கையிலே 51,833 இந்து சமய நிறுவனங்கள் இருக்கின்றன என்றும், அதிலே அவற்றுக்குச் சொந்தமான நிலம் ஆறு லட்சத்து சொச்சம் என்றும், இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வந்திருப்பது 24,625 சமய நிறுவனங்கள் என்றும், அதற்குச் சொந்தமாக இருக்கும் நிலம் 5,70,304 ஏக்கர் என்றும், மீதி நிறுவனங்களுக்குச் சொந்தமானது 40,437 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிறுவனங்களை எல்லாம் எடுத்திருப்பதில் கூட அதற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய வருவாய்க்கு அருகதையாக இருக்கக்கூடிய நிலங்கள் கல்யாண மண்டபங்கள்,வேறு கட்டடங்களை எல்லாம் எடுத்ததாகத் தெரியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில் குடியாத்தத்தில் அம்மன் கோயில் எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் எடுக்கப்பட்டு கல்யாண மண்டபம் மாத்திரம் விட்டு வைக்கப்பட்டிருக்கிறது, அது ஏற்கனவே இருந்த டிரஸ்டியின் நிர்வாகத்தின்கீழ் இருந்து வருகிறது. வேண்டியவர்களுக்கு, சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் கல்யாண மண்டபம் கொடுக்கப்படுகிறது: மற்றவர்களுக்கு ஒரு நாளைக்கு 175 ரூபாய். இப்படி இன்னும் பல இடங்களில் இருக்கலாம். ஏற்கெனவே கொள்ளையடித்து அனுபவித்துக் கொண்டிருந்தவர்களே இன்றைக்கும் ஏகபோகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றித் தெள்ளத் தெளிவாகப் பரிசீலிக்க வேண்டும்.

[முற்பகல் 11-40]

கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைக்கூட, 50 ஏக்கர், 60 ஏக்கர் என்ற அடிப்படையிலே குத்தகை என்ற பெயராலே ஒருவர் எடுப்பதும் எடுத்து மற்றவர்களுக்கு உள்குத்தகை என்ற பெயரால் 4, 5 ஏக்கர் என்று விட்டு

அவர் மகாராஜா மாதிரி சுற்றிக்கொண்டிருக்கிறார். ஆனால் உண்மையிலேயேபாடுபட்டுகஷ்டப்பட்டு உழைக்கிறவர்களுக்கு பலன் போய்ச் சேருவதில்லை, அதேபோல் கோயில்களின் வருமானம்கூட பல கோடிக்கணக்கான ரூபாய்கள் இழப்பு ஏற்படுகிறது. யாராக இருந்தாலும் பாடுபடக்கூடிய ஏழை விவசாயிகள், உழுகிறவர்கள் இவர்களுக்குத்தான் பட்டா கொடுத்தாக வேண்டும். அந்த அடிப்படையிலே தான் வீடுகளும், இன்றைக்கு கோயில்களுக்குச் சொந்தமான வீடுகளும், மடங்களுக்குச் சொந்தமான வீடுகளும், இடங்களும் இருக்கின்றன. அவைகளிலே குடிசைகள் போட்டு வாழ்ந்து வருகிறார்கள். அப்படி இருக்குமானால் 2 வருடங்களுக்கு மேலாக அந்த வீடுகளிலே குடியிருந்து வரக்கூடியவர்கள் வீடு இல்லாதவர்களாக இருந்தால் அந்த மக்களுக்கு அதை பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1976 ஆம் ஆண்டு திருத்த சட்டப்படி சமயநிறுவனங்களில் பரம்பரை முறை இல்லாத அளவிற்கு ஒழிக்கப்பட்டது. மறுபடியும் பகீரத முயற்சி அதற்காக செய்யப்பட்டு வருகிறது. மீண்டும் அதுபோன்று இந்த அரசு நியமிக்கப் போகிறதா? அப்படியென்று சொன்னால் சர்வ கட்சி அடிப்படையிலே ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதைச் சொல்லக்கூடிய நேரத்திலே பக்தர்களை மாத்திரமே போடலாம் என்று சொல்லலாம். தி. மு. க. ஆட்சி இருந்தபோது போட்டப்பட்டவர்கள் பக்தர்கள்தானா? கிடையாது. ஆகவே முன்பின் யோசனைக்கு இடம் தராமல் சர்வகட்சி அடிப்படையில், போடுவது என்றால், போட்டாகவேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே. . . . . .

திரு. வி. கே. கோதண்டராமன் : குறுக்கீடுகள் இருக்குமானால் கண்டிப்பாக 1 மணிக்கு மேலே வந்து விடும்.

திரு. எஸ். ஆர். இராதா: பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

திரு. வி. கே. கோதண்டராமன்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தான், அந்தப் பெயரில் தான் குறுக்கீடு வருகிறது



திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பெரியவர் திரு. கோதண்டராமன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொல்லும்பொழுது மத நம்பிக்கை அற்றவர்கள் பக்திமான் அற்றவர்கள் கோயில்களிலே அறங்காவலர்களாகப் போடப்படவேண்டும். சென்ற ஆட்சிக் காலத்திலே அப்படித்தான் போடப்பட்டது என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா கட்சிகளுமே பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. மத நம்பிக்கை உள்ளவர்களைத்தான் போடவேண்டும் என்று சட்டமே இருக்கிறது, சட்டத்தை மீறிச் செய்வது சரிதானா?

திரு. வி. கே. கோதண்டராமன்: அவர்களையே போடவேண்டுமென்று சட்டம் ஒன்றும் கிடையாது. இருந்தால் அதைத் திருத்தவேண்டும். நம்பிக்கையுள்ளவர்கள் என்ற பெயரிலே கோயிலிலே உள்ள பணத்தை மோசடி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைக் தடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே சர்வகட்சி போடவேண்டுமென்று சொன்னேன். திருநீறு அணிந்துகொண்டு, நாமத்தைப் போட்டுக் கொண்டு வருகிறார்கள் என்றால் அவர்கள் என்ன செய்கிறார்கள்?

என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே ஆற்காடு பகுதியிலே ரத்தினகிரி கோயில் இருக்கிறது. அங்கே அடக்குமுறை காலத்திலே நடந்த ஊழல் பற்றி, விபச்சாரம் பற்றி கொள்ளையைப்பற்றி காவல் துறையைச் சேர்ந்தவரே அதைச் சகிக்கமுடியாத நிலையில் கேட்டதற்காக என்ன நடந்தது— அங்கே இருக்கக்கூடிய சாமியாரல். கோயில் ஆட்களை வைத்து,—குத்தி கொலை செய்யப்பட்டார் என்பது உண்மை. ஆரம்பத்தில் தூக்குத்தண்டனை என்று வந்தது, பிறகு ரத்து செய்யக்கூடிய நிலைமை வந்தது. கொலை செய்தது யார் என்று கண்டுபிடிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்): வழக்குமன்றத்தில் இருந்தால் அது சப்ஜூடிஸ் ஆகும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இன்றைக்கு கொலைக்கு உறைவிடமாக இருக்கக்கூடிய பதுக்கல் இடம் என்ற முறையிலே நான் கூறுகிறேன்.

அதேபோன்றுதான் இன்றைக்கு மடங்களுக்கும் வரவு செலவுக் கணக்கு வைத்தாலும், மன்னுதி மன்னர்கள் 600 பேர்களை, மகாராஜாக்களை ஒழித்துக் கட்டினோம் என்று காங்கிரஸ்காரர்கள் 1947 இலேயிருந்து பெருமையாகப் பிரச்சாரம் செய்தார்கள். ஆயிரக் கணக்கான மடாதிபதிகள் அதைவிட மோசமான அளவிற்குக் கொள்ளை அடித்து, சமூகத்தில் என்னென்ன செய்யக் கூடாதோ அவ்வளவும் செய்து வருகிறார்கள் என்றால் இந்த மடாதிபதிகளை முதலிலே ஒழித்துக் கட்ட வேண்டும். ஆகவே, அதற்காக அவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலத்தை பாடுபடும் ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தாக வேண்டுமென்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்றுதான் இந்து மதத்தைப் பரப்புவதற்காகத்தான் இது.

என்ன நிலைமை உள்ளது. சினிமா விளம்பரம் நடப்பதைப் போல ஆகிவிட்டது. இந்த விளம்பரம் என்ற பெயரில் ஆயிரக் கணக்கிலே, இலட்சக் கணக்கிலே ஊழல் ஏற்படும் சூழ்நிலைமைகள் ஏற்படுகின்றன. ஊழலை மூடி மறைக்க நினைக்கக்கூடாது. நான் சொல்ல முடியும் சவுக்கடி சந்திரகாந்தா என்ற படம் வந்தது, அதில் முழுக்க முழுக்க மடாதிபதிகளின் ஊழலைப்பற்றி அம்பலப்படுத்தப்பட்டது. மடாதிபதிகள் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைக் கொடுத்து அந்தப் படமே ஓடாத அளவிற்குத் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாவது அந்தப் படம் ஓடக்கூடிய அளவிற்கு, அவர்களின் ஊழலை அம்பலப்படுத்தும் அளவிற்கு முன் வருமா? வர வேண்டுமென்றுதான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

எளிய முறையிலே பக்தி செலுத்துவதற்குப் பதிலாக இன்றைக்கு ஆண்டவனுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்க்குத் திருவாபரணங்கள் எதற்கு? 51,000 பேர் ஊழியம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? சர்வசாதாரணமாக 7 ரூபாயிலிருந்து இன்னும் மோசமான சம்பளம்.

உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்கிறேன். இங்கே, புரசவாக்கத்திலே இருக்கின்ற கங்காதரேஸ்வரர் கோவிலில் இருக்கின்ற அக்கவுண்டன்ட் பர்ஸ்ட் கிரேடுக்கு சம்பளம் 150—6—180. செகண்ட் கிரேட் அக்கவுண்டண்டுக்கு சம்பளம் 80—5—120, அதேபோல் வாச்மேனுக்குச் சம்பளம்



70—2—80. இந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டால் அவன் ஆபரணத்தையும் திருடுவான், அக் கட்டிடத்தையே பெயர்த்துக்கூடத் திருடிக் கொண்டு போவான், அதில் ஆச்சரியமில்லை.

ஆகவே, 51,000 ஊழியர்களுக்கும் தயவு செய்து சர்க்கார் ஊழியர்களைப்போல சம்பள உயர்வு கொடுக்க வேண்டும், அந்த முறையிலே முன் முயற்சி எடுத்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதில் வரக்கூடிய வருவாய் கொள்ளை வருவாயாக இருக்கிறது. அதற்குச் சரியாகக் கணக்கு வரவு-செலவு கிடையாது. இங்கே சர்க்கார் கொடுத்து உதவி செய்யும் அளவிற்கு தொடர்ந்து வரும் சூழ்நிலைகள் இருந்தால் (மணியடிக்கப்பட்டது) தயவு செய்து கவனிக்க வேண்டும், இது முக்கியமான விஷயம். அன்றைக்கே நான் சொல்லியிருக்கிறேன் முதலமைச்சரவர்கள் இருக்கும்பொழுது, ஆகையினாலே தயவு செய்து அனுமதி கொடுக்க வேண்டும்.

சாமியைத் திருடுவான், கழுத்திலே இருப்பதைத் திருடுவான், சாமிக்குப் பக்கத்திலே இருக்கின்ற அவருடைய பெண்டாட்டி கழுத்திலே இருக்கிறதைத் திருடினால் சுவாமி ஒன்றும் பண்ண முடியாத அளவிற்குத்தானே இருக்கிறது. இதைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதே நிலைமையில் இன்றைக்கு இருக்கும் சூழ்நிலைமையிலே பலவிதங்களில் வருவாய் இருக்கிறது.

அதைச் சொல்லக்கூடிய நேரத்திலே வேறு விஷயங்களில் உள்ளே நுழைய வேண்டியிருக்கும். அர்ச்சனை என்றால் பணம் கும்பாபிஷேகம் என்றால் பணம், குடமுழுக்கு என்ற பெயராலே பணம். எத்தனையோ முழுக்கு பெயராலே பணம். கோயிலையே மொழுகிப் பூசிவிடுகிறார்கள். விசாரணைக்கு விடப்பட்டிருக்கிறது. நான்காவது பக்கத்தில் இருக்கிறது சிறப்பு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக. ஏராளமான ஊழல்கள் இருக்கின்றன, என்ன நடவடிக்கை எடுத்தார்களோ, எடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை. நீங்கள் எடுக்கப் போவது மாதிரியும் தெரியவில்லை.

கண்ட கண்ட இடத்திலே, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலே கூட, மரத்துப்பொந்தில் வெங்கடேசப்பெருமாள் முளைத்துப் போய்விட்டார் என்று சொல்கிறார்கள். போன பட்ஜெட் கூட்டத்திலேயே சொன்னேன். ஏழை பாழைகள் குடிசை

போட்டால் பிய்த்து விடுகிறார்கள். இம்மாதிரி கொள்ளையடிப்பதற்காக பண்டாரங்கள் வந்து கொள்ளையடிக்க இம்மாதிரி செய்ய ஆரம்பித்தால் அதைத் தவிர்க்கவேண்டும்.

(முற்பகல் 11-50)

அடுத்து, நீதி நிர்வாகம், இன்றைக்கு நீதியும் சரி, நிர்வாகமும் சரி, அவர்கள் கையிலேயே இருக்கிறது, அந்த அதிகாரிகள் கையிலேயே தான் இருக்கின்றன. இன்றைய தினம் இரண்டுமே அவர்கள் கையில் இருந்தால் உருப்படுமா அது? அந்தப் பக்கத்திலே நிர்வாகம், இந்தப் பக்கத்திலே நீதி என்று இரண்டையும் அவர்கள் பார்க்கக்கூடிய நிலையிருக்கிறது. இந்தப் பகுதி அதிகாரிகளும் அந்தப் பகுதி அதிகாரிகளும் ஒன்றாகச் சேர்ந்து, அவர்களுக்குப் பாதுகாப்பு இவர்கள், இவர்களுக்குப் பாதுகாப்பு அவர்கள் என்றுதான் போகிறது.

ஆகவேதான் நீதி தனியாகவும், நிர்வாகம் தனியாகவும் இருந்தாகவேண்டும். இரண்டையும் தனித்தனியாக பிரிக்கவேண்டும். மற்ற மாநிலங்களிலே அப்படித்தானிருந்து வருகிறது. மற்ற மாநிலங்களிலே இருந்து வருகிறதோ, இல்லையோ அது வேறு விஷயம். இங்கு நீதியும், நிர்வாகமும் ஒருவர் கையிலே இருந்தால் சரியாக இருக்க முடியுமா என்பதை இந்த அரசு நல்லமுறையிலே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைக்கிருக்கக்கூடிய சூழ்நிலையிலே, கோவில் நிலங்களின் வாடகை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், அதாவது திருச்சி மாவட்டத்திலே ஜம்புகேஸ்வர அகிலாண்டேஸ்வரர் கோவில் நிலத்திற்கு முன்பு ரூ. 4 வாடகை வாங்கப்பட்டது. இப்பொழுது ரூ. 99 வாங்கப்படுகிறது. அதே போல், ரூ. 7 வாடகை, இப்பொழுது ரூ. 90 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது சும்மா, உதாரணத்திற்கு, ஒன்றிரண்டு சொல்கிறேன். இந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், எவ்வளவு மோசமான நிலைமை என்பதை யோசிக்கவேண்டும்.

அதே போலத்தான், மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானக் கடைக்கு, ரூ. 275 இருந்தது, இப்பொழுது ரூ. 1,275 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ரூ. 250 இருந்தது, இப்பொழுது ரூ. 1,200 ஆக ஆகியிருக்கிறது. இந்த மாதிரி



ஏராளமாக இருக்கின்றன என்பதோடு, ஏராளமான இடங்களிலே இருக்கின்றன. இது வாடகையை உயர்த்தி கொள்ளை அடிக்கிற அளவிற்கு இருந்து வருகிறது.

வடலூரிலே என்ன நிலைமை? ஒரு மாதத்திற்கு முன்னால், அங்கே உண்ணாவிரதப்போராட்டமே நடந்தது. உண்ணாவிரதப் போராட்டத்திற்கு என்ன காரணம்? அறநிலையக் குடி நீர் தொட்டியிலேயிருந்து, பக்கத்திலேயிருக்கிற பேரூராட்சிக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும்; சத்திய ஞான சபையின் தொடர் ஜோதியை நீக்கவேண்டும், அந்தச் சபையின் கணக்குகளை சிறப்பு ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும், என்று இவற்றிற்காகப் போராட்டம் நடத்தினார்கள். அந்தத் திபம் எப்படி என்று சொன்னால், நமக்குத் தெரிந்த நிலைமை என்னவென்றால், வருஷத்திற்கு ஒரு தடவை காட்டுவார்கள். அதை மக்கள் போய்ப்பார்ப்பார்கள். அதிலே எனக்கு நம்பிக்கை கிடையாது, நம்பிக்கை இருப்பவர்களுக்காகச் சொல்கிறேன். இப்பொழுது, பெரிய முதலாளி, பெரிய மனிதர்—பெயரை வேண்டுமானால் சொல்கிறேன் — ரொம்பப் பெரிய மனிதர், அவர் மாதாமாதம் ஜோதியைக் காட்டுகிறாராம், அதில் ஊழல் நடைபெறுகிறது. அந்த ஊழலைப் போக்க வேண்டுமென்பதற்காக அங்கே உள்ள பக்தர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் இப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலே, அரசு அறங்காவலர்களைப் பற்றி, மடங்களைப் பற்றி கவனிப்பதில்லையென்று சொல்லவிரும்புகிறேன்.

நெல்லிக்குப்பம் பக்கத்திலே எய்தனூர் கிராமம் சிவன் கோவிலுக்குச் சொந்தமான நிலம் 22 ஏக்கர். அதை ஏகபோகமாக அனுபவித்து வருகிறார். (மணியடிக்கப்பட்டது.)

நான் கேட்டுக்கொள்வது, வடலூரில், வருஷா வருஷம் தான் ஜோதி காட்டவேண்டும். அதை மாதாமாதம் காட்டக்கூடாது. அதேபோல், வரக்கால்பட்டு சிவன் கோவில் ஊழலையும் கவனிக்கவேண்டும்.

கடைசியில், மெய்வழிச்சாலை விவகாரம், அங்கே கோடிக்கணக்கான மதிப்புள்ள தங்கம் எடுக்கப்பட்டது என்று பத்திரிகையில் பார்த்தோம். அங்கு பல பேரை இதுசம்பந்தமாக பிடித்தார்களே தவிர, அவர்களை 'மிசா'விலே வைக்கவில்லை. அவர்கள் பேரில் கொலைக் குற்றம் சாட்டப்படவில்லை. அது சம்பந்தமான வழக்கு என்னவாயிற்று? பழுக்

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1978 மார்ச் 29

கல்தானே இது? அங்கேயே புதைத்திருக்கிறார்கள். அதனால் தான் கொலை, கொள்ளை, பதுக்கல் என்று சொன்னேன். அவர்களுக்கு உதவியாக செங்கல்பட்டு மாவட்டத்திலே துப்பாக்கி, வெடி மருந்து தயார் பண்ணக்கூடிய ஒரு கூட்டம் இருக்கிறது. அவர்களையும் அரெஸ்ட் பண்ணி உடனே விட்டு விட்டார்கள், ஐயா.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. கே பண்ணை சேதுராம்): முடித்துக் கொள்ளுங்கள், இன்னும் 15 பேர்கள் பேசவேண்டும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். ஒரு மணிக்குள்ளாக இந்த விவாதம் முடிவுற்று பிறகு கில்லட்டின் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதே மணி 12 ஆகிறது. அமைச்சருடைய பதில் 1/2 மணி நேரமாவது இருக்கும் என்று கருதுகிறேன். நாங்கள் இன்னும் 15 நபர்கள் இருப்பதாக அறிவிக்கிறீர்கள். அப்படியானால் அமைச்சருடைய பதில் கில்லட்டின் ஆகிவிடும். எனவே, பேசுகின்ற பேச்சையும் குறைத்து, நபர்களையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா சுந்தரராஜ்: இன்றையதினம் இங்கே ஒரு மணியோடு முடிவடைகிறது என்று சொல்கிறீர்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே; ஒரு மணிக்குக் கூடுதலாகப் போனாலும், கடிகாரத்தை நிறுத்தி விடுவதாகச் சொல்கிறார்கள்— அப்படி ஒரு மரபு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, ஒரு மணிக்குப் பிறகு, கடிகாரத்தை ஒரு மணியோடு நிறுத்தி தொடர்ந்து அவையை நடத்தி, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்குள்ள நான்கு கடிகாரங்களை நிறுத்தினால் மட்டும் போதாது, அத்தனை பேருடைய வாச்சுகளையும் நிறுத்தியாக வேண்டும். ஆக, அது இயலாத காரியம்.

திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 29] [திருச்சி ஆர். சௌந்தரராஜன்]

அறக்கட்டளைகள் என்ற பெயரிலே இன்றையதினம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலேயும், பல்வேறு சமுதாய நிலையங்கள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நாடு நன்றாக உணரும், அப்படிப்பட்ட இந்த அறக்கட்டளைகளிலே இன்றையதினம் இருக்கிற எஸ்டாபிளிஷ்மென்டு என்று சொல்லப்படுகிற ஆலயங்களினுடைய கணக்கை எடுக்கிறபோது 23,507 என்றும் அதற்குள்ள நிலங்கள் 5,23,307 ஏக்கர்கள் என்றும் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

நான் இவைகளைப் பார்க்கின்ற நேரத்தில் ஒரு கருத்தை இங்கே நான் முதன் முதலில் சொல்லியாகவேண்டும். நம்முடைய அரசின் துறையைப் பொறுத்தவரையில் நிறைய வழக்குகள் நிறைய காலமாக முடிவெடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதையும் அப்படிப்பட்ட முடிவுகள் தரப்படாத காரணத்தினாலே பல்வேறு இடங்களிலே நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகத் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள். இதற்கென்று தனியாக ஒரு துணை ஆணையரை நியமித்து வேகமாக வழக்குகள் தீர்க்கப்படும் என்று எழுத்திலே காட்டியிருக்கிறார்களே தவிர, அதைச் செயலிலே காட்டினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் நிறைய ஆலயங்கள் இருக்கின்றன. தமிழகத்திலே இருக்கின்ற ஆலயங்களில் 60,000-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 30, 40 ஆலயங்கள் இருக்கின்றன. இதிலே இரண்டொரு ஆலயங்கள் தவிர மீதி இருக்கிற ஆலயங்களில் பணியாற்றுகிறவர்களைக் கேட்போமானால் எங்களுக்கு சம்பளம் இரண்டாண்டுகளாக வரவில்லை, 6 மாதமாக வரவில்லை என்று குற்றச் சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

என்ன காரணம் என்பதைப் பார்க்கும்போது, கோவிலிலே சொத்து இல்லையா என்பதைப் பார்க்கும்போது நிலம் நிறைய இருக்கிறது. நிலத்திலே இருந்து வரவேண்டிய தானியங்கள் வரவில்லை என்ற குற்றச்சாட்டை அங்கே இருக்

கிறவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே கேட்டுக்கொள்வது எல்லாம், ஒன்று அந்த நிலத்திலே இருந்து அந்த ஆலயத்திற்கு வருகிற குத்தகை நெல்லை முறையாக வருவதற்கு சட்டத்தை மாற்ற வேண்டும் அல்லது விவசாயிகளை அவர்கள் பாதுகாக்க வேண்டுமென்ற நிலைமை வருமானால் அந்த நிலத்தை யார் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு விற்றுவிட்டு அந்தப் பணத்தை பிக்சட் டெப்பாசிட் என்று சொல்கிற அளவுக்கு வங்கியிலே போட்டு அதிலே இருந்து வருகிற வட்டியை வைத்து இந்த ஆலயங்கள் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று புரட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை முக்கியமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற ஆலயங்களை வருமானத்தை வைத்து 3 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். வருமானமே இல்லாத ஆலயங்களில் நிறைய விழாக்களை நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, வருமானத்தை வைத்துப் பிரிப்பதைவிட செலவை வைத்துப் பிரித்து, இழப்பை சரிக்கட்ட ஏனைய கோவில் நிலங்களையும் அத்துடன் இணைத்து ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12·00]

இன்றைக்கு பல ஆலயங்களில் நல்ல வருவாய் வருகிறது; செலவு குறைவாக இருக்கிறது. சில ஆலயங்களில் வருவாய் குறைவாக இருக்கிறது; ஆனால் செலவு அதிகமாக இருக்கிறது. இதிலே என்னுடைய யோசனை என்னவென்றால் அனைத்து ஆலயங்களின் வருமானத்தையும் ஒன்றாகத் திரட்டி, எந்தெந்த ஆலயத்திற்கு எவ்வளவு தேவை என்பதை அறிந்து, பங்கிட்டுத்தரும் ஒரு முறையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தமாகச் செய்யமுடியாவிட்டாலும் மாவட்டவாரியாகவாவது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன். இந்த ஆலயங்களிலே பணியாற்றும் பலருக்கு சம்பளம் வழங்குவதைக் கேட்டால் மிகவும் கேவலமான அளவுக்கு அல்ல, நம்ப முடியாத அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது. சில ஆலயங்களிலே 15 ரூபாய் சம்பளம் சில ஆலயங்களிலே 9 ரூபாய், இன்னும் சில ஆலயங்களிலே 8 ரூபாய் சம்பளம் கொடுக்கும் நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.



புதுக்கோட்டை மாவட்டத்தில் $3\frac{1}{4}$ ரூபாய், $6\frac{1}{4}$ ரூபாய் என்று தரப்படுகிறது. அதற்குப் பதிலாக 6 பட்டை அல்லது 7 பட்டை சோறு தரப்படுகிறது. அன்றைக்குத் தரப்பட்ட பட்டை ஒரு தலை அளவுக்கு இருந்தது. ஆனால் இன்றைக்குத் தரப்படும் பட்டை ஒரு சின்ன வெல்ல அச்சு போல் சிறுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகத்திலே இருக்கிற இதுபோன்ற பிரச்சினைகளை முக்கியமாகத் தீர்த்தாலன்றி, கோவில்களிலே நடைபெறும் தவறுகளை நம்மால் தடுக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே இங்கே பேசும்போது நம்முடைய ஆலயங்கள் நம்முடைய வரலாறுகளை, கலாச்சாரங்களை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே இருக்கிற பல்வேறு ஆலயங்களிலே பல்வேறு வகையான வாத்தியங்கள் பழக்கத்தில் இருந்தன என்பதை வரலாறு தெளிவாக்குகிறது. ஆனால் இன்றைக்கு அப்பேர்ப்பட்ட வாத்தியங்கள் இருக்கின்றனவா என்றால் இருந்த இடம்தான் என்றுசொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட வாத்தியங்களைப் புதுப்பிக்க வேண்டும். வாசிக்க முடியாமல் போனால்கூட அவைகளைப் பார்க்கக் கூடிய வகையிலாவது இன்றையதினம் புதுப்பிக்கும் நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

அத்தகைய வாத்தியங்களைப்பற்றிய ஒரு ஆராய்ச்சியை ஸ்ரீரங்கத்தில் இருக்கிற ஒரு பேராசிரியர் திருமேனி என்பவர் சூசகமாகச் செய்துகொண்டிருக்கிறார். அவர் செய்கின்ற ஆராய்ச்சியிலிருந்து எத்தகைய வாத்தியங்கள் இந்த தமிழ் நாட்டிலே இருந்தன என்பதை எழுதி வைத்துக் கொண்டு இருக்கிறார். அவைகளை அரசு பெற்று, அந்த வாத்தியங்கள் எந்தெந்த ஆலயத்தில் இருந்ததோ அங்கே அவைகளை செய்து வைப்பதற்கோ அல்லது இருக்கின்றவைகளைப் புதுப்பித்து வைப்பதற்கோ ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. பெரிய ஆலயங்களை வெளிநாடுகளிலி இருந்து வருகிறவர்கள் உள்ளே போய்ப் பார்க்க முடிய வில்லை. அதற்கு மதம் இடம் தரவில்லை என்று சொல் கிறார்கள். அவர்கள் உள்ளே போய்ப் பார்க்க முடியாவிட்டாலும், வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் கர்ப்பகிரஹம் என்று சொல்லுகின்ற மூலஸ்தானத்தைப் பார்க்கின்ற வகையில் ஒரிஜினல் விக்கிரகத்தின் 'மினி யேச்சர்' ஒன்றை வெளியே வைக்கலாம்.

கோயில்களில் எவ்வளவோ இடம் இருக்கிறது. நூற்றுக் கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்றெல்லாம் இருக்கிறது. சில கோயில்களில் அந்த இடம் இருள் அடைந்துபோய் கிடப்பது மட்டுமல்ல, அது கெட்ட வழி களில் பயன்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட இடத்தில் மாதிரி விக்கிரகங்களை வைத்து, சின்ன எக்ஸிபிஷன் மாதிரி உருவாக்கி, அந்த பொருட்காட்சியை வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் மட்டுமல்ல ; நம்முடைய நாட்டிலே உள்ள வர்களும் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யலாம். அதில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு கோயில் நிர் வாகத்தை செய்வதற்கு, செம்மையாகச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதைப்போல இன்னொன்றையும் இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கிற பல ஆலயங்களில் பல்வேறு தவறுகள் இதற்கு முன்னாலே 30 ஆண்டு காலத்தில் அல்ல, 20 ஆண்டு காலத்திலே நடைபெற்றிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு ஒரு தனி புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆராய்ந்து, தவறு நடந்திருக் கிறது, தவறு நடக்காமல் இல்லை என்று சுட்டிக்காட்டி, எந்தெந்த வகையிலே தவறு நடந்திருக்கிறது என்பதை எல்லாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பல்வேறு இடங்களில் பத்திரிகைக்கு விளம்பரம் தர ஆலய நிதியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் ஆலயப் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் இருந்திருக்கிறது என்று சொன்னால் எந்த அள வுக்கு ஆலய நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். விளம் பரம்தான் தந்தார்களே, அது அந்த ஆலயத்தைப்பற்றிய



விளம்பரமாக இருந்திருந்தால் கூட பரவாயில்லை ; அதனால் ஆலயங்களுக்கு வருமானம் கூடியிருக்கும். அப் படிச் செய்யாமல் கோயில் நிதியை எடுத்து வேறு எது எதற்கோ விளம்பரம் தந்திருக்கிறார்கள்.

மலைக்கோட்டையில் மின் இழுவைப் பொறி வைப்பது பற்றி நீண்ட நாட்களாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆய்வு நடக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு என்று முடியும், மின் இழுவைப் பொறி என்று வைக்கப்படும் என்பது இன்னும் சிதம்பர ரகசியமாகவே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வேகமாக இந்தத் துறையை இயக்கிவிட வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கு இது நன்கு தெரி யும். எதையுமே வேகமாக இயங்கச் செய்யும் நம்முடைய புரட்சித் தலைவரவர்கள் இந்தத் துறையையும் வேகமாக இயங்கச் செய்து, குறைபாடுகளை மிகச் சீக்கிரமாக களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மாவட்டங் களுக்கு வருகின்றபோது அந்தந்த மாவட்டத்தில் இருக் கும் ஆலய அதிகாரிகளைச் சந்தித்து, அந்த ஆலயத்திலே இருக்கிற குறைபாடுகள் என்னென்ன என்பதை அங்கேயே கேட்டறிந்தால் நலமாக இருக்கும் என்பதை இந்த நேரத் தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஆலயங்களிலே அறங் காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அறங்காவலர் களை நியமிக்கும்போது இரண்டு அம்சங்களை முக்கியமாகப் பார்க்க வேண்டும். ஒன்று அவர்களுடைய வயது வரம்பு. இன்னொன்று அவர்களுக்கு சொத்து எவ்வளவு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். சொத்தே இல்லாதவர் அறங் காவலராக வந்தால் ஆலயச் சொத்துக்களை தன்னுடைய தாக்கிக்கொள்ளும் நிலைமைதான் வரும். ஆகவே ஆலயச் சொத்தைக் காக்க வருகின்றவர்களுக்கு, ஆலயச் சொத் தில் கை வைக்காத அளவுக்கு சொத்து இருக்கிறதா என் பதைப் பார்த்து அறங்காவலராக நியமிக்க வேண்டும். அந்தப் பொறுப்பை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண் டும். முந்தைய அரசு செய்த தவறுகளை இந்த அரசு செய் யக்கூடாது. ஆலயங்களின் சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டும் ; அங்கே இருக்கின்ற ஆண்டவனையும் காப்பாற்ற வேண்டும். ஆண்டவனையும் நாம்தான் காப்பாற்ற வேண்டுமா

என்று கேட்கலாம். ஆலயத்தில் இருக்கும் ஆண்டவரை நாம் காப்பாற்ற வேண்டுமென்ற நிலையில்தான் இருக்கிறார் என்பதை எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பல ஆலயங்களிலே விலை மதிப்பற்ற நகைகள், காணக் கிடைக்காத நகைகள் ஆகியவை மிகவும் சீரழிந்து போன நிலையில் இருக்கின்றன. அவைகளைப் புதுப்பித்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான்கு குழுக்கள் இருந்தன. இப்போது அது எட்டு குழுக்களாக ஆக்கி இருக்கிறார்கள். ஆகவே, செய்து வைக்கப்பட்ட நகைகளை எல்லாம், 8 குழுக்களும் புதுப்பித்து அவைகளைப் பொதுமக்கள் பார்க்கின்ற அளவுக்கு ஒரு எக்ஸ்பிஷனாக வைத்தால் நேரடிப் பாதுகாப்பில் இருக்கும் வாய்ப்பு இருக்கும். அப்படிப்பட்ட வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலை, கலாசாரம், நம்முடைய பாரம்பரியம், வரலாறு இத்தனையையும் பறை சாற்றுகின்ற அந்தக் கலைச் செல்வங்களை வைக்கின்ற முக்கியமான பொறுப்பிலே நம்முடைய புரட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு நல்லவை நடக்கும் என்ற நம்பிக்கையை இன்றைக்கு ஆலயங்களிலே இருப்பவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு முடிக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய துரை கோவிந்தராசன் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆலயங்களிலே நடைபெறுகின்ற திருவிழாக்கள் பற்றிச் சொல்லப்பட்டது. இன்று சென்னையிலே பல பொழுது போக்குகள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களிலே அந்தத் திருவிழாக்கள்தான் பொழுதுபோக்கு. அந்தத் திருவிழாக் காலங்களிலே கச்சேரி வைப்பது வழக்கம். அந்தமாதிரி கச்சேரிகள் வைப்பது இடையிலே வந்த குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் அதே நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்தமாதிரி கச்சேரிகள் எல்லாம் வைத்தால்தான் கலைஞர்களை வாழ வைக்க முடியும். மக்களுக்கும் பொழுதுபோக்காக இது இருக்கும். ஆகவே இதிலே மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.



**திரு. சோ. அழகர்சாமி**: தலைவரவர்களே, அறநிலையத்தைப் பொறுத்த மட்டில் ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய இந்து சமய நிறுவனங்களுடைய சார்பிலே இருக்கக்கூடிய நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏறக்குறைய 6,10,741 ஏக்கர் என்ற அளவிலே இருக்கின்றன. அது இந்தக் குறிப்பிலே காட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சாகுபடி செய்து வருகின்ற ஏழைஎளிய மக்களுக்கு தொடர்ந்து அவர்கள் சாகுபடி செய்யும் உரிமையைப் பெறுவதற்கு நீண்ட நாட்களாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பலவிதமான கட்சிகளும் இதை ஒத்துக்கொள்ளக்கூடிய இன்றைய நிலையில் இதனை அந்த ஏழைகளுக்காகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிர்வாகங்களின் கீழ் வராமல் ஏறக்குறைய 40 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் 27 ஆயிரம் சமய நிறுவனங்களிடம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல இடங்களிலே இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்படாமல் இதை வேறு சிலர் தவறான முறையிலே விற்று விக்கிரயம் செய்து அபகரிக்கக்கூடிய நிலைமைகள் இருந்து வருகின்றன.

உதாரணமாக, திருநெல்வேலியிலே வேடப்பட்டி என்ற கிராமத்தில் சத்திரத்துக்குச் சொந்தமான சொத்தை தனியார் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இது ஒரு தனியாருக்குப் போகக்கூடிய நிலையும் இருக்கக்கின்றது. இதனைத் தடுக்கவேண்டும் என்று இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கேட்டும் அதிகாரிகளால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பல இடங்களில் இப்படி இந்த சொத்துக்களை தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளும் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக அறநிலையத்துக்குச் சொந்தமான கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இன்றைக்கு அது பெரியதொரு பிரச்சினையாக இருக்கின்றது. இது மாதிரி கட்டிடங்களில், தமிழ்நாட்டில், 125 ஆயிரம் பேர்கள் வாடகைக்கு குடியிருக்கிறார்கள்: 1974 ஆம் ஆண்டு

ஒரு ஜி.ஓ. போடப்பட்டதன் காரணமாக இந்த வாடகைக்கு சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சாக்காக வைத்துக்கொண்டு நிர்வாக அதிகாரிகள் ஒன்றுக்கு பத்து மடங்கு என்று வாடகையை உயர்த்தி இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசியவர்கள் கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். அன்று 350 ரூபாய் என்று இருந்ததை 4,010 என்று 1,333 சதவீதம் உயர்த்தி இருக்கிறார்கள். 25 ரூபாய் என்று இருந்ததை 281 ஆக 1,024 சதவீதம் உயர்த்தி இருக்கிறார்கள். இப்படி பல இடங்களிலே உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு கமிட்டி போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த இடங்களிலே குடியிருப்பவர்கள் இந்த வாடகையைக் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை யென்றால் அவர்களை வெளியேற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக திருச்சியிலே மணப்பாறை என்ற இடத்திலே நிர்வாகத்துக்குச் சொந்தமான இடங்களிலே 21 பேர் வாடகைக்கு குடி இருந்தார்கள். அவர்கள் அதிக வாடகையைக் கொடுப்பதற்கு ஒத்துக் கொள்ளாத காரணத்தினால் அவர்களை வெளியேற்றி விட்டார்கள். திரும்ப பாதிரியாரிடம் சொல்லக்கூடிய நேரத்திலே நீங்கள் மதம் மாறி கிறிஸ்தவர்களாகிவிட்டால் அந்த இடம் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கின்றது.

ஆகவே சில இடங்களிலே இதுமாதிரியாக ஜாதி, மதம், இனம் ஆகிய வேறுபாடு காரணங்களுக்காக இந்த ஜி.ஓ. வைச் சாக்கு வைத்துக்கொண்டு குடியிருப்பவர்களை வெளியேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி பல விதமான பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். எல்லோருக்கும் வாடகைக்குக் கட்டுப்பாடு சட்டம் இருக்கும் போது கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமான கட்டிடங்களுக்கு இது பொருந்தாது என்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்று தெரியவில்லை. ஆகவே, அறத்தைப் பாதுகாக்கவேண்டிய துறை இன்றைக்கு இது சம்பந்தப்பட்ட விஷயங்களில் எத்தனிதமான கோர்ட்டுக்கும் போகவோ நீதிமன்றத்திற்கு போகவோ முடியாத நிலையில் வைத்துக்கொண்டிருக்கின்றது. அந்த ஜி.ஓ. இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணமாக இருக்கின்றது.





[பிற்பகல் 12-10]

ஆகவே இந்த ஜி.ஓ.வை, நெ.1998, இந்த ஆர்டரை, 1974-ம் ஆண்டு போட்ட இந்த ஆர்டரை மாற்ற வேண்டும். இதைச் சொல்லும்போது 1949-ல் இதை மாற்றி முன்பே ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மூன்று மாதக் காலத்தில் அது சரியாக வரவில்லை என்று சொல்லி அது மாற்றப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே கௌரவம் பார்க்காமல் அந்த உத்தரவை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் ஏகப்பட்ட பிரச்னைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. பல இடங்களில் கோவில்களுக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருப்பவர்கள் அவர்களோ தங்கள் சொந்தச் செலவில் கட்டடங்கள் கட்டி, கட்டடங்களைச் சீர் செய்து குடியிருக்கிறார்கள். பி.டப்ளியூ.டி. நார்ம்ஸ்படி வாடகை நிர்ணயம் செய்தாலும் வாடகை அதிகமாக இருக்கிறது. கோவில் அல்லது மடங்களின் வீடுகளில் குடியிருப்பவர்கள் தாங்களே தங்கள் செலவில் அந்த வீடுகளை ரிப்பேர் செய்து வருகிறார்கள். அதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வேறு இடத்திற்குப் போங்கள் அல்லது வாடகையை உயர்த்துவது என்று சொன்னால் அது நியாயமில்லை. இது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களிடம் தூது கோஷ்டி வந்திருக்கிறார்கள். வந்து சொல்லி இருக்கிறார்கள். அறநிலையத் துறையைச் சார்ந்தவர்கள் இதை தர்ம சிந்தனையோடு பார்க்க வேண்டும். இது அறநிலையத் துறை, மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

ஆக, இந்த 1,25,000 வாடகைக்கு குடியிருப்பவர்களின் பிரச்சினையை நியாயமான முறையில் அணுக வேண்டும். 1949-ல் இதே மாதிரி ஒரு ஜி.ஓ. போட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுத்து மூன்று மாதங்களுக்குப் பிறகு அது மாற்றப்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, கோவில்களில் பணியாளர்கள் 51,000 பேர்கள் இருக்கிறார்கள். ரூ. 5, ரூ. 10, ரூ. 30, ரூ. 80-க்கு மேல் யாருக்கும் ஊதியம் இல்லை. நான்கு கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் நடக்கின்றன. லட்சக்கணக்கான ரூபாய் ஒவ்வொரு கோவிலுக்கும் திருப்பணிக்காக

செலவிடப்படுகிறது. கோவில் நிலங்களை அதை விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்குச் சொந்தமாக்க வேண்டும். கோவில்களில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு, அந்த 51,000 பேர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும். அதிகமாக கொடுக்க வேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. நியாயமான அளவிற்கு, அவர்களது வாழ்க்கைக்கு ஓரளவு வேண்டிய அளவிற்கு ஊதியம் கட்டாயம் கொடுக்க வேண்டும்.

சில கோவில்களில் மடங்களில் வருமானம் குறைவாக இருக்கலாம். ஆனால் வேறு கோவில்களில் அதிகப்படியான வருமானம் வருகிறது. ஆகவே அதிகப்படியான வருமானம் வரக்கூடிய கோவில்களிலிருந்து ஓரளவிற்கு வருமானத்தை வருமானம் இல்லாத கோவில்களுக்கு ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது? அப்படி அதிகப்படியாக வருமானம் வரக்கூடிய கோவில்களிலிருந்து வருகிற வருமானத்தை இந்தக் கோவில்களுக்கு, வருமானம் இல்லாத கோவில்களுக்கு மாற்றி அங்குள்ள பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். எல்லா அறநிலையப் பணியாளர்களையும் ஒன்றாகச் சேர்த்து அதிக வருமானம் வரக்கூடிய கோவில்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து வருமானம் அதிகம் வராத கோவில்களின் வருமானத்தை ஈடுகட்டிக் கொள்ள வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கோவில்களுக்கு சொந்தமான நிலங்களில் குடியிருக்கும் விவசாயிகள், அந்த இடங்கள் தங்களுக்குச் சொந்தமாக்கப்படாததின் காரணமாக,—சாதாரணமாக புஞ்சை நிலத்தில் சாகுபடியை பெருக்குவதற்காக ஒரு கிணறு தோண்டுவதற்கோ அல்லது பம்பு செட் வைப்பதற்கோ முடியாமல் இருக்கிறது. இதன் காரணமாக விளைச்சலையும் அதிகமாக அவர்களால் பெருக்கிக் கொள்ள முடிவதில்லை. ஆகவே, கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் இருக்கின்றவர்களுக்கு அந்த இடங்களைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும். இதனால் வருமானம் குறையுமா என்று பார்த்தால் வருமானம் குறைவதற்கு வழியில்லை. ஏனென்றால் கோவில் நிலங்களை சொந்தமாக்கிக் கொடுக்கும் போது, நஷ்ட ஈடு அரசாங்கத்திலிருந்து வாங்குகிறார்கள். ஆகவே இதில் வருமானத்தில் எந்தவிதமான குறைவும் ஏற்பட்டுவிடாது.



கேரளாவில் இதற்கென்று ஒரு சட்டம் கொண்டு வந்து, அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை அதில் குடியிருந்தவர்களுக்கு கொடுத்து சீர் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் முக்கியமாக தரப்பட்டிருக்கின்ற ஆய்வுரையில் 4-வது, 5-வது பக்கத்தில் .... '' குடிவார முறை தொடர்பான பல்வேறு சட்டங்களும், கடன் தவணை ஒத்திவைப்புச் சட்டம், பொதுப்பொறுப்புக் கழகங்கள் சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டதனால் நிலங்கள் மூலம் கிடைக்கும் வருவாயையே முக்கிய வருமானமாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது '' என்று வருவாய்க்கு இடைஞ்சலாக இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் இப்போதுள்ள சட்டங்களில் பல உங்களுக்கு பாதகமாக இருக்கின்றது என்று கோவில் நிலங்களில் இருக்கின்றவர்கள் சொல்லுகின்றார்கள். இது கூடாது இதில் போடக் கூடிய சட்டங்கள் எல்லாம், இதில் குடி இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குச் சாதகமாக சட்டங்களை போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவில் காரியங்களை எல்லாம் நடத்துவதற்கு, வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு எத்தனையோ வழிவகைகள் இருக்கின்றன என்பதையும் தெரிந்து, அதோடு இங்குள்ள கடைக்காரர்களையும் சேர்த்து இந்தச் சட்டத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும்..........

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இப்போது ப.உ.ச. அவர்கள் பேச இருக்கிறார்கள். அவர்கள் பேசி முடித்த பின்னால் நான் பேச முடியாது என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். எனக்கு இந்த மான்யத்தில் பேச வாய்ப்பு தரப்பட வேண்டும் என்று ஆயிரம் தடவை சொல்லி இருக்கிறேன். இந்த மான்யத்தில் நான் பேசாவிட்டால் என் தொகுதியிலுள்ள மக்கள் என்னைப்பற்றி வேறு விதமாக நினைக்க வேண்டியது வரும். இந்த அறநிலைய மான்யக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்புத்தர வேண்டும் என்று நான்கு நாட்களுக்கு முன்பே கேட்டிருக்கிறேன்.

[1978 மார்ச் 29

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்) : நீங்கள் பல மான்யக் கோரிக்கைகளின் மீதும் நிறைய பேசி இருக்கிறீர்கள். அதனால்தான் இதில் உங்களுக்குச் சந்தர்ப்பம் தரப்படவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் எங்கள் கட்சிக்கு என்னை அனுமதிக்கக் கூடாதா ? எல்லா மான்யங்களின் மீதும் பேசியிருக்கிறேன் என்றால், நான் எல்லாவிதமான மக்களின் பிரதிநிதியாகத் தான் வந்திருக்கிறேன், அந்த முறையில் எல்லாவற்றிலும் பேசியிருக்கிறேன். அதில் எந்தவித தவறும் இல்லை. இதில் எனக்கு பேச சந்தர்ப்பம் கொடுக்கவில்லையென்றால் அது மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஐந்து நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுடைய இக்கட்டான நிலைமையை நான் உணருகிறேன். ஐந்து நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ள நான் முயற்சி செய்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், பலரும் பேசி இருக்கிறார்கள், '' ஆலயம் தொழுவது சாலவும் நன்று '' என்பதும், '' கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் '' என்பதும் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகின்ற முதுமொழி. ஆலயங்கள் எந்தவகையில் இருந்துவந்தன என்பதையும், எப்படிப்பட்ட உயர் நோக்கத்தோடு செயல்பட்டு வந்தன என்பதையும் சொன்னார்கள்.

ஒரு காலத்தில், மூவேந்தர் காலத்தில், தமிழைப் படிப்பதற்கும், தமிழை வளர்ப்பதற்கும், ஒழுக்கத்தை வளர்ப்பதற்கும், நமது பண்பாட்டை வளர்ப்பதற்கும் இந்த ஆலயங்கள் பயன்பட்டு வந்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த நிலையில் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் வணங்குகின்ற இந்த ஆலயங்களைப்பற்றி அவர்களது மனம் நொந்து போகின்ற அளவில் பேசுவது சிறந்தது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



1978 மார்ச் 29]

நமது அறிவை வளர்த்துக்கொள்ள ஆலயங்கள் கேந்திரங்களாக இருந்திருக்கின்றன. சிவபெருமான் தலைமையில் தான் நம்முடைய மதுரை தமிழ்ச்சங்கம் இயங்கிக் கொண்டு இருந்தது என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். தமிழுக்கென்றே ஒரு தெய்வத்தை ஏற்படுத்தியதுமட்டுமல்ல; தமிழ் என்பதே ஒரு தெய்வம் என்று நம்புவோர்களும் இருக்கின்றார்கள். சிலருக்கு வேண்டும் என்றால் இதில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். இந்த நிலையில் கோவில்களில் சென்று வணங்கும் கோடிக்கணக்கான பக்தர்களின் மனம் நோகின்ற முறையில், கோவில்களில்தான் ஊழல்கள் நடைபெறுகின்றன, கோவில்கள்தான் ஊழலுக்குக் காரணம் என்றும், கற்பழிப்பு போன்றவை இங்குதான் நடைபெறுகின்றன என்றும் சொல்வது சரியல்ல.......

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சிவபெருமான் தான் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தார் என்று நம்புகின்றவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்றும், தமிழுக்கென்று ஒரு தெய்வம் இருக்கிறது என்றும் சிலர் நம்புகின்றார்கள் என்றும் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டார்கள். லத்தீப் அவர்கள் இதை நம்புகிறாரா ?

[பிற்பகல் 12–20]

திரு. எம். ஏ. லத்தீப்: இது என்னுடைய தொகுதியினுடைய நீண்டகாலப் பிரச்னையாக இருக்கிறது. அந்தத் தொகுதியிலே வாழ்கின்ற இந்துப் பெருங்குடி மக்களின் அபிலாஷைகளை, நான் இப்போது அவர்களுடைய பிரதிநிதி என்கின்ற முறையில் அவர்களுடைய எண்ணங்களை எடுத்துப் பேச, கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவர்கள் இங்கே வந்து நேரடியாகப் பேச முடியாத காரணத்தால், நான் அப்படிப் பேசுவதற்கு ஒரு கருவியாக இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கருத்துக்களை எடுத்துக் கூறக் கூடிய ஒரு கருவியாக நான் பயன்படுவதால் அவர்களுடைய எண்ணங்களை, அபிலாஷைகளை, உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில், அவர்களுடைய உணர்வுகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் பேசக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நம்முடைய கோயில்கள் எல்லாம் சுத்தமான முறையிலே பராமரிக்கப்பட்டு, செம்மையான முறையிலே நடைபெற வேண்டும். அதை விடுத்து, கோவில்களிலே இருப்ப-

வர்கள் எல்லாம் பண்டாரங்கள், அயோக்கியர்கள் என்றெல்லாம் பேசுவது இந்துப் பெருங்குடி மக்களுடைய நம்பிக்கைக்கு பாதகம் ஏற்படக் கூடியதாக அமையும். எனவே அத்தகைய பேச்சை இங்கே, இந்த அவையிலே பேசுவதுத் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் ஆலயங்கள் நல்ல முறையிலே பராமரிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தயவு செய்து நீங்கள் எல்லாம் கோபித்துக் கொள்ளக் கூடாது. பரவலாக காவேரிக் கரையைச் சுற்றியுள்ள ஆலயங்களைப் பற்றித்தான் சொல்லப்படுகிறதே தவிர, பாலாற்றங்கரைப் பக்கம் இவர்கள் போவதே இல்லை. தமிழ்நாடு நாகரீகத்தில் முதன் முதலாக பாலாற்றங்கரை நாகரீகத்திலே தான், அதிலும் பல்லவன் காலத்திற்கு முன்பே பாலாற்றங்கரையிலே தான் கோயில்கள் கட்டப்பட்டன என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் துரையிலே 'திருக்கோயில்' என்று ஒரு சஞ்சிகை நடத்தப் பெறுகின்றது. அந்த சஞ்சிகையிலே கூட காவேரிக் கரையிலே உள்ள கோயில்களைப் பற்றியும் மற்ற கோவில்களைப் பற்றியும் தான் வருகிறதே தவிர, எங்களுடைய பாலாற்றங்கரையின் மேலுள்ள அத்தீஸ்வரர் கோயிலைப்பற்றி வருவதில்லை. அதே போல் அங்குள்ள சுந்தர பெருமாள் கோவிலைப் பற்றி வருவதில்லை. அதே போல் அங்குள்ள பள்ளி கொண்டானைப் பற்றி வருவதில்லை. அரங்கத்திலே இருக்கின்ற அரங்கனைப் பற்றித்தான் வருகின்றதே தவிர, இந்தப் பள்ளிகொண்டானைப் பற்றி வருவதில்லை. அதேபோல் விரிஞ்சிபுரத்திலே உள்ள மார்க்க பந்தீஸ்வரரைப் பற்றி வருவதில்லை. அதே போல், ஜலத்தை கண்டத்திலே வைத்துக் கொண்டு, ஜல நாயகனுக விளங்குகின்ற ஜலகண்டேஸ்வரரைப் பற்றி அதிகம் வருவதில்லை. 'நகரேஷு காஞ்சி, புஷ்பேஷு ரோஜா, புருசேஷு விஷ்ணு, நாரிஷு ரம்பா' என்று சொல்வார்கள். அந்த 'நகரேஷு காஞ்சி'யைப்பற்றி அவர்கள் கவனிப்பதாகத் தெரியவில்லை. அங்கே இருக்கின்ற கைலாசநாதரைப் பற்றியும் கவனிப்பதில்லை. அந்தக் கைலாசநாதர் கோயில் இடிந்து, இடிபாடுகளோடு காணப்படுகிறது. அந்தக் கோவில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பொறுப்பிலே இருப்பதால், இந்த அரசு நாங்கள் அதைச் செப்பனிட முடியாது என்று சொல்கிறார்கள். இப்படி பல்லவன் காலத்திலே கட்டப்பட்ட இந்தக் கோயில்களை எல்லாம், பிரசித்திப்பெற்ற கோயில்களை எல்லாம் இந்த அரசு செப்பனிட்டு, நல்லமுறையிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

ஆலங்காயத்திலே மாரியம்மன் கோயில் என்ற ஒரு சிறப்பான கோயில் இருக்கிறது. இந்தக் கோவில் சார்பாக நிலங்களுக்கு பட்டா கேட்கப்பட்டது. அந்தப் பட்டா நிலத்தில் ஆக்கிரமிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புக்காரர்கள் இன்றைக்கு அகற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முழுவதும் அகற்றப்படுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) I am winding up. நான் வாயு வேகத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன். அந்த மாரியம்மன் கோவில் நிலங்களுக்குப் பட்டா கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய பாலாற்றங்கரையிலே உள்ள சிறப்பான கோவில்களைப் பற்றி ஆய்வு செய்து, அவைகள் நல்லமுறையிலே இயங்கவும், அப்படிப்பட்ட சிறப்பான கோவில்களைப் பற்றிய குறிப்புகள் இந்தச் சஞ்சிகையிலே வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

*திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியத்தின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியம் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட குறிப்பேட்டில், கொடுக்கப்பட்டுள்ள நல்ல குறிப்புக்களை நான் வரவேற்கிறேன். துவக்கத்திலேயே நான் வரவேற்று விடுவது நல்லதென்று கருதுகிறேன். நாதஸ்வரம் கற்கும் மாணவர்களுக்கும், தவுல் பயிற்சிபெறும் மாணவர்களுக்கும் மானியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல், தேவார பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கும், தேவாரம் கற்பிப்பதற்கும், அந்த மாணவர்களுக்கும் மானியம் அளிக்கப்பட இருக்கின்றது. இந்தக் கருத்துக்களுக்கு நன்றி கூறிக் கொண்டு, எனது பேச்சைத் துவக்குகிறேன்.

இடையிலே நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் விசாரணைக் குழு ஒன்று போடப்பட்டு, இதற்கு முன்பிருந்த அறங்காவலர்கள் குற்றம் செய்து விட்டார்கள் என்று புகார் வந்ததாகவும், அந்தப் புகார்களை எல்லாம் இந்தக் குழு விசாரித்து, அரசுக்கு ஒரு அறிக்கை கொடுத்திருப்பதாகவும் நான் இதிலே படித்தேன்.

அந்த அறிக்கை என்ன என்பதை இந்த அவைக்குத் தருவார்களானால் மிகவும் நன்றாக இருக்கும். என்ன தவறு நடந்தது? யாராக இருந்தாலும் கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்பதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை அரசோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குற்றச்சாட்டுக்களை நான்கு வகையாகக் கூறியிருக்கிறார்கள். யாரேனும் செய்திருப்பார்களானால் அந்தக் குற்றத்தைக் செய்தவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிச்சயமாகக் கிடையாது. தண்டிக்கலாம். ஆனால் குற்றம் செய்தார்கள் என்று வலியச் சென்று யாரையும் குற்றவாளியாக ஆக்கிவிடக் கூடாது என்பதுதான் கவலை. வேறல்ல. அப்போது நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் அத்தனைபேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு பல்வேறு கருத்துக்களைக் கூறுகிறார்கள். முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் குறை கூறுவதையே வேலையாக வைத்துக் கொள்ளக் கூடாது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சுந்தரராஜன் அவர்கள் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது கூட பல கோயில்களில் இருந்து பல அரசியல் கட்சிப் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெயரைச் சொல்லுவது சரியல்ல. அப்



படிக் கொடுப்பதில் தவறு என்ன இருக்கிறது என்று புரியவில்லை. ஒரு வேளை அதிகமாகக் கொடுத்திருப்பார்கள் என்று சொல்லலாம். ஏன் அதிகமாகக் கொடுத்தார்கள் என்று கேட்கலாம். விளம்பரம் கொடுத்ததே தவறு என்று கூறுவது சரியாக இருக்க முடியாது.

தினசரி ஆலய பூஜைகளுக்கே பணம் இல்லையென்ற நிலை இருப்பதால் குழு போட்டு எப்படி அதைச் சரிக்கட்டுவது என்பதைப் பற்றியெல்லாம் யோசனை செய்யப் போகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சி அழகர்சாமி அவர்கள் பேசும்போது கோயில் நிலத்திலே உழுது கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் பட்டா கொடுத்து விட வேண்டும். அவர்கள் கடன் நிவாரணச் சட்டத்தால் பலன் பெறவில்லை என்று வாதித்தார்கள். கடன் நிவாரணச் சட்டத்தில் உழவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதைத் தடுக்கவில்லை. இந்தச் சட்டத்தின் காரணமாக வருவாய் இழந்து தவிக்கும் ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அரசாங்கம் தவணையை நீட்டித்தாவது, அந்தக் கோயில்களுக்கு மானியத்தைக் கொடுத்து உடனடியாக அங்கே பணியாற்றுபவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஆலயங்களில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போன்று அவர்கள் பணிக் காலத்தில் இறந்து விட்டால் பத்தாயிரம் ரூபாய் அவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுக்கவேண்டும்.

அறநிலைய ஆணையாளர் அலுவலகத்தில் நடந்தவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. விசாரிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அறநிலைய ஆணையாளர் அலுவலகத்தில் 15,000 ரூபாய் செலவில் டெலிபோன் இன்டர்காம் வைத்திருக்கிறார்கள். அரசாங்க செலவில் வைத்திருந்தால்கூட அரசாங்கம் பணம் கொடுத்தது என்று கருதலாம். கருமாரி அம்மன் கோயில் பணத்திலிருந்தும், திருத்தணி முருகன் கோயில் பணத்திலிருந்தும் இன்டர்காம் கனெக்ஷன்—வண்ண வண்ண டெலிபோன்களை—வைத்திருக்கிறார்கள். **இது எப்படி முறையாக**

இருக்கும்? இது எப்படி சரியாக இருக்குமென்று அரசாங்கம் விசாரிக்க வேண்டும். யார் செய்திருந்தாலும் தவறான காரியம். அதைக் கண்டிக்க வேண்டும். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அதிகாரி பெயரைச் சொல்ல விரும்பவில்லை. சேலத்தில் பணியாற்றிய உதவி ஆணையாளர் ஒருவர் மீது நிறைய புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. விசாரிக்கப்பட்டு, குற்றங்கள் உண்மை என்று சொல்லி, அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து, விஜிலென்ஸ் அண்டு ஆன்டி—கரப்ஷன் இலாகாவுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள்.

சேலத்தில் பணியாற்றக்கூடிய அந்த அதிகாரிக்கு இப்போது என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அவருக்குப் பதவி உயர்வு கொடுத்து மாநிலம் முழுவதும் இருக்கிற ஆலயங்களில் இருக்கக்கூடிய நகைகளைப் பரிசோதிக்கும் அதிகாரியாக உட்கார வைத்திருக்கிறார்கள். எந்த அதிகாரி விசாரித்து உண்மைதான் என்று கண்டு பிடித்தாரோ அந்த அதிகாரி இருக்கும் இடத்திலும் சோதனை செய்து தீர்ப்பளிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் எப்படி நியாயம் கிடைக்கும்? இது எவ்வளவு பெரிய தவறான காரியம்?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: அந்த அதிகாரி யார் என்ற விவரத்தைச் சொன்னால் நலமாக இருக்கும்.

<u>திரு. ப. உ. சண்முகம்</u>: நான் பெயரைச் சொல்லி அது ரெக்கார்டில் ஏறுவதை விரும்பவில்லை. தனியாகக் குறிப்பிடுகிறேன். அவர் சேலத்தில் உதவி ஆணையாளராகப் பணியாற்றியவர். யார் செய்திருந்தாலும் தவறு. உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த கண்ணப்பன் அவர்கள் ஊரில் கல்யாண மண்டபம் கட்டியது சரியா, தவறா என்று விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். கல்யாண மண்டபத்தைத் தன்னுடைய ஊரில் முன்னாள் அமைச்சர் கட்டிக் கொண்டது குற்றம் என்று சொன்னால் நான் இப்போது கேட்கிறேன், அறநிலையத் துறை ஆணையராக இருக்கின்றவர் தன் சொந்த ஊரில், தென் ஆற்காடு மாவட்



[பிற்பகல் 12-30]

டத்தில் இருக்கிற மேலக் காரணியில் உள்ள திருவாமுத்தூர், அங்கே கோயிலுக்காக இலட்ச ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். தன் சொந்த ஊரில், அறநிலையத் துறைப் பணத்தை, அரசாங்கப் பணத்தை கோயிலுக்காகத்தான் கொடுத்திருக்கிறார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் கல்யாண மண்டபம் கட்டுவதற்காகப் பணத்தைக் கொடுத்தால் தவறு என்று சொல்கிறார்கள். ஆனால், ஆணையர் தன் சொந்த ஊரிலே உள்ள கோயிலுக்குக் கொடுத்திருப்பது நியாயந்தானா? முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் கல்யாண மண்டபம் கட்டக் கொடுத்தது தவறு என்றால் இந்த அதிகாரி செய்ததும் தவறாகத்தான் இருக்க முடியும் என்று நான் சொல்வதிலே நியாயம் இருக்கும்.

கழக ஆட்சிக் காலத்திலே தான் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை யார் யாரோ பினாமி என்ற பெயரால் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அரசாங்கம் உயர்தர அதிகாரியை நியமித்தது. அதன் மூலமாக 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலம், ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள், தனிப்பட்டவர்கள் அவைகளை அனுபவித்துக்கொண்டு இருந்தார்கள். சிதம்பரம் கோயிலுக்கு ஒரு சென்ட் பூமி கூட கிடையாது என்ற நிலைமை இருந்தது. ஆனால், இந்த அதிகாரி நியமிக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு, சிதம்பரம் கோயிலுக்கு 1,400 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. இவைகளை வேறு சிலர் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நிலங்களை எல்லாம் இன்றைக்கு அரசாங்கம் கையகப்படுத்தியிருக்கிறது. பினாமியாக கோயில் நிலங்களை, யார், யார் எல்லாம் வைத்துக்கொண்டு அனுபவித்துக் கொண்டுவந்தார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதில் கழக ஆட்சி எவ்வளவு சுறுசுறுப்போடு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைச் சுட்டிகாட்டுவதற்காகத்தான் சொல்கிறேன். சிதம்பரம் கோயிலுக்கு 1,400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே, 250 ஏக்கர் நிலத்தை கோயிலே நேரடியாக, குத்தகைக்கு விட்டு அதன் மூலம் வருடத்திற்கு 30,0000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மீதம் இருக்கிற 1,150 ஏக்கர் நிலத்தை அந்தக் கட்டளைக்காரர்களுக்கு, ஊழியர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவும் செய்தது கழக ஆட்சிக் காலத்திலேதான் என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 29

நேரம் இல்லாத காரணத்தினல் நான் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சென்னையிலே நடைபெற்ற மாநாட்டிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. திருப்பாவை-திருவெம்பாவை மாநாடு அது. அதிலே போடப்பட்ட தீர்மானம்—திருப்பாவை பாடியது ஆண்டாள், திருவெம்பாவை பாடியது மாணிக்கவாசகர்—அது தமிழிலே இருக்கக்கூடிய நூல்—அந்த மாநாடு தமிழிலே நடத்தப்படுகிறது. அங்கே வக்கிரபுத்திக்காரர்கள் தமிழிலே அர்ச்சனை செய்யக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிருர்கள். மாநாடு நடத்துவது தமிழிலே. திருப்பாவை—திருவெம்பாவை மாநாட்டிலே பிராந்திய மொழிகளிலே ஆலயங்களில் அர்ச்சனை செய்யக் கூடாது, சமஸ்கிருத மொழியிலே அர்ச்சனை செய்தால்தான் அது. ஆண்டவனுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று தீர்மானம் போடுகிருர்கள். அதுவும், அவர்கள் பரிந்துரை செய்கிருர்கள். அகில இந்தியாவும் ஒற்றுமையாக இருப்பதற்காக, தேசீய ஒற்றுமைக்காக அப்படி இருக்க வேண்டுமென்று, சமஸ்கிருதத்திலே தான் அர்ச்சனை இருக்க வேண்டுமென்று வக்கிர புத்திக்காரர்கள்தான் தீர்மானம் நிறைவேற்றுகிருர்கள் என்ருல் இந்த வானெலிக்காரர்களுக்கும் புத்தியில்லை; அவர்களும் ஒழுங்காக விமர்சனம் செய்கிருர்கள்.

உள்ளபடியே தமிழிலே நடத்தப்படுகிற மாநாடு அது. அங்கே தமிழ் வேண்டாம் என்று சொல்லப்படுகிற துர்பாக்கியமான நிலைமை. தமிழைப் பழிக்கிறவன் தமிழ்நாட்டிலே எவனுக இருந்தாலும் அவனுக்குத் தண்டனை கொடுக்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். நாம் அத்தனைபேரும் சேர்ந்து அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். தமிழிலே அர்ச்சனை செய்தால் ஆண்டவனுக்குப் பிடிக்காதா? தமிழ்ப் பாட்டுக்கள் ஆண்டவனுக்காகப் பாடப்படவில்லையா? அந்தத் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடியவர்கள் திராவிட கழகத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தை, அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. என்னுடைய ஊரைச் சேர்ந்த அருணகிரிநாதர் தமிழில் பாடவில்லையா ? வள்ளலார் அருட்பாவைத் தமிழில் பாடவில்லையா ? மூவர் பாடிய தேவாரம் தமிழில் இல்லையா? திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கு உருகார் என்று சொல்லுவார்களே, அந்த ஒரு வாசகத்தையும் கேட்டுவிட்டு இப்படித் தீர்மானம் நிறைவேற்றுகிருர்கள் என்ருல் அவர்கள் கல்மனம் படைத்தவர்களா ? அந்த மாநாட்டினைக்



1978 மார்ச் 29] [திரு. ப. உ. சண்முகம்]

கூட்டியவர்கள். தமிழிலே அர்ச்சனை செய்தால் அது ஆண்டவனுக்கு ஏற்புடையதாக இருக்காது என்று தீர்மானம் நிறைவேற்றியவர்கள் அத்தனை பேரும் கண்டிக்கத் தக்கவர்கள். அவர்களுக்கு இந்த இலாகாவும் துணை போயிருக்குமானல், இந்த இலாகாவும் கண்டிக்கத்தக்கது. ஆனல், இந்த இலாகா துணை போயிருக்காது என்று நினைக்கிறேன். தமிழுக்கு எதிராக எது நடந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. தமிழில் அர்ச்சனையை ஆலயங்களிலே விரிவாக்க வேண்டும்.

அறங்காவலர்களை நியமிப்பது பற்றி ஒரு வார்த்தை. அறங்காவலர்கள் நியமிப்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது சொத்து இருக்கிறதா ? இல்லையா ? என்று கணக்கு பார்க்க வேண்டுமென்று எனக்கு முன்பு ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் குறிப்பிட்டார். திராவிட முன்னேற்றக் கழகம் செய்த தவறை நீங்களும் செய்துவிடாதீர்கள் என்று சொன்ஞர். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், சொத்து இருக்க வேண்டுமென்ற நியதியைத் தயவு செய்து அரசாங்கம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் ஆபரணங்களைத் திருடிக் கொண்டு போய்விடுவார்கள் என்று யாரும் நினைக்கத் தேவையில்லை. அங்கேயிருப்பது ஒரே பூட்டு அல்ல. சாவி ஒருவரிடத்திலே மட்டும் இருக்கவில்லை. இது அங்கே சென்று பொக்கிஷத்தைப் போய்ப் பார்த்தவர்களுக்குத் தெரியும். திருவண்ணுமலை ஆலயம், மீனுட்சியம்மன் ஆலயம், திருத்தணி ஆலயம், திருச்செந்தூர் ஆலயம் போன்ற ஆலயங்களுக்குப் போய்ப் பார்த்தால் உள்ளே இருக்கின்ற பொக்கிஷத்திற்கு ஏழெட்டு பூட்டுகள் போடப்பட்டு, ஏழெட்டுப் பேர்களிடத்தில் சாவி இருக்கிறது. மொத்தமாக அவ்வளவு பேரும் வந்தால்தான் திறந்து எடுக்க முடியும். அதிகாரி வேறு இருக்கிருர். இடையிலே குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுது அறங்காவலர் குழுக்களைக் கலைத்து விட்டார்கள். அப்பொழுது பொக்கிஷத்தின் சாவியைக் கொடுப்பதில் சிலயிடங்களில் தாசில்தார்களிடத்திலும், சிலயிடங்களில் ஆர்.டி.ஓ.—விடத்திலும் கொடுத்திருக்கிருர்கள்.

திருவண்ணமலை ஆலயத்தைப் பொறுத்த வரையில், சொல்கிறேன், சென்ற கார்த்திகை தீபத்திற்கு வெளியே எடுக்கப்பட்ட விலையுயர்ந்த ஆபரணங்கள் இன்னும் பொக்கிஷத்தில் வைக்கப்படவில்லை என்று சொன்ஞர்கள். அது

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 29

உண்மையானால் எவ்வளவு பெரிய தவறு? காரணம் கேட்டால் தாசில்தார் வரவில்லை, திறக்கவில்லை, உள்ளே வைக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, ஆலயங்களிலே பொக்கிஷங்கள் இருக்கின்றன. ஆகவே, சொத்து இருப்பவர்கள்தான் போக வேண்டுமென்றால்—மன்னிக்க வேண்டும்—சொத்து இருக்கின்றவர்கள் தவறு செய்ய மாட்டார்களா? செய்ய மாட்டார்கள் என்று ஏன் நம்புகிறீர்கள்? தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டுமே தவிர சொத்துக் கணக்கைப் பார்க்க வேண்டியதில்லை. உள்ளே போய்த் தவறு செய்யாமல் இருக்க வேண்டும். (குறுக்கீடு)

சுத்தக் கணக்கு பார்க்க வேண்டுமென்று நிதியமைச்சர்கள் சொல்கிறார்கள். ஒத்துக் கொள்கிறேன். அதைப் பார்த்து அறங் காவலர்களை விரைவில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அறங்காவலர்களைப் போடும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசு கையாண்ட முறை, போடும் அறங்காவலர்களில் தாழ்த்தப்பட்ட மகன் ஒருவராவது நிச்சயமாக இருக்க வேண்டும். யாரைப் போடுவீர்களோ, எப்படிப் போடுவீர்களோ? ஆனால், தாழ்த்தப்பட்டவர் அறங்காவலராக நிச்சயம் இருந்தேயாக வேண்டும். நந்தனாரை மறைக்கின்ற நந்திகள் இருப்பார்களேயானால் அந்த நந்தியை அப்புறப்படுத்திவிட்டு, நந்தனாருக்கு வழிவிடுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு, உரையை முடிக்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமாகி விட்டது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லும்பொழுது இன்னொரு மொழியை என்று சொன்னார்களே, அது டெட் லாங்குவேஜா அல்லது உயிருள்ள மொழியா என்று கேட்க விரும்புகிறேன்.

*திரு. இரா. ஆதிசுவாமி: தலைவரவர்களே, கோயில் நிர்வாகத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.



1978 மார்ச் 29] [திரு. இரா. ஆதிசுவாமி]

கோயில்களுக்கு டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள் இந்துக் கோயில்களில் நம்பிக்கை உள்ளவர்களாகவும், மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு வயது வரம்பு வைக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் கோயில்களின் நிர்வாகம் நல்ல முறையில் நடக்க முடியும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், 1976ஆம் ஆண்டு ஒரு கமிட்டி வைத்ததாகவும், பல ஊழல்கள் நடந்திருப்பதாகவும், விசாரணை நடந்திருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். இவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால் கோயில்களின் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் தகுந்தவர்களாகவும், வயது வந்தவர்களாகவும், அதற்குள்ள பண்பாடு கொண்டவர்களாகவும், மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

கோயில்களுக்கு ஆறு இலட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதே அறிக்கையிலேயே நிறையக் கோயில்களில் தீபங்கள் கொளுத்தக் கூட வழியில்லாமல் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அவல நிலை ஏன் ஏற்பட வேண்டும்?

குத்தகைதாரர்கள் பாக்கி வைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒன்று, அந்த நிலங்களை விற்று அதை டெபாசிட் செய்து அதில் வரும் வட்டியை வைத்து நடத்த வேண்டும். இல்லாவிட்டால் இவைகளையெல்லாம் ஒரு கூட்டுப் பண்ணையின் மூலம், அல்லது 'ஹை பவர் கமிட்டி' மூலம், அதாவது எல்லோருக்கும் வாரியம் வைத்திருக்கிறார்களே அதைப்போல தகுதியான நபர்களைப் போட்டு கமிட்டியை வைத்து அவைகளை நிர்வகிக்க வேண்டுமென்று நான் கூறிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

கடைகளிலே வாடகைகளைப் பற்றி சொன்னார்கள். முன்பு ரூபாய்க்கு 8 படி அரிசி இருந்த சமயத்தில் நிர்ணயிக்கப்பட்ட வாடகையை இப்பொழுதுதான் சில இடங்களில் உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, இன்றைய நிலைக்கு வாடகைகளைக் கொண்டு வந்தால்தான், கோவில்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய முடியும். ஆகவே, இன்றைக்கு இது பற்றி பரிசிலனை செய்யும்போது, இன்றைக்கு நிலவிவரும் வாடகையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில், கோயில்களுக்கு உள்ளேயே கடைகள் இருக்கின்றன. அவைகளை மாற்ற வேண்டும். கோவில்கள் தெய்வீகமான இடங்கள். அந்தக் கடைகளைக் காலி செய்து, கூட்டுப் பிரார்த்தனை நடத்தலாம். அப்பொழுது எல்லா சமுதாயத்தினரும் வர வசதியாக இருக்கும். அப்படியிருந்தால், ஜாதி வித்தியாசம் நீங்க மார்க்கம் இருக்கும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு கோவிலையும் புதுப்பிப்பதற்குப் பணம் ஒதுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஒவ்வொரு சிறு கோவிலுக்கும் புதுப்பிப்பதற்கு ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, நைவேத்தியங்களுக்காக. இப்பொழுதுள்ள விலைவாசியில் அது போதுமானதுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் பின்தங்கிய மக்கள் வாழ்கிற இடங்களிலே கோவில்கள் கட்டாயம் வைக்கப்படவேண்டும். அவைகள் நன்கு பராமரிக்கப்படவேண்டும், அவைகளுக்குக் கூடுதல் மானியம் ஒதுக்கப்பட வேண்டும். சர்க்காரே தனது நிர்வாகத்தின் கீழ் நிபுணர்களை வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களைக் கொண்டு, புதுப்பிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். அதே போல், புதிதாகக் கட்டப்படுகிற அரிசனக் குடியிருப்புகளிலே கட்டாயமாகக் கோவில்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் ஜில்லாவில், 1957-ல் ஸ்டேட் ஆர்கனைசேஷனுக்குப் பிறகு, எங்களுடைய கோவில்களுக்கு ரூ. 13,70,000 மானியமாகக் கொடுக்கப்படுகிறது, இது மிகவும் குறைவு. விலைவாசிகள் ஏறியிருப்பதால், போதிய சேவை செய்ய முடியவில்லை, மற்ற வசதிகளும் குறைவாக இருக்கிறது. அங்குள்ள சில கோவில்களில் 50 கிராம் அரிசியை நைவேத்தியத்திற்குக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். அது ஒரு கோழிக்குக் கூட போதாது. நைவேத்தியத்தை யாரும் தூக்கி எறிவதில்லை. அங்குள்ள பூசாரிகள் சாப்பாட்டுக்கு உணவாக அதை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, அதை மாற்றி பழைய மாதிரி, முன்பு எவ்வளவு கொடுத்தார்களோ, அந்த மாதிரி தேவையான அளவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இறுதியில் ஒன்றே ஒன்று. எங்கள் ஜில்லாவில் ஒரே ஒரு கல்லூரி, தேவஸ்தானத்தின் சார்பில் இருக்கிறது. அந்தக் கல்லூரி, ஒரு சத்திரத்தில் நடந்து வருகிறது. அந்த நிலையில்தான் இருந்து வருகிறது. ஆனால், எல்லோரும் பணம் கொடுத்து நல்ல இடத்தில் நடத்த வேண்டுமென்று தீர்மானங்கள் எல்லாம் போடப்பட்டன. நானும் அதற்கு நன்கொடை கொடுத்திருக்கிறேன். ஆனால், பொது மக்களால், அங்கே கட்டிக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, தேவஸ்தானம் அதைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சமயம், அறக்கட்டளைகளின் சார்பில்; மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஒட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் விளக்கமாகப் பதில் அளிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்றாலும், நேரம் முன்னாலே வந்து மிரட்டிக் கொண்டிருக்கிற காரணத்தினால், குறிப்பாக சில முக்கியமான விவரங்களுக்கு மாத்திரம், விஷயங்களுக்கு மாத்திரம் அரசினுடைய நிலைமையை தெளிவுபடுத்துகிற முறையிலே என்னுடைய பதிலைச் சுருக்கிக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமயம், அறநிலையத் துறை என்பது நமது நாட்டினுடைய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இந்திய மக்களுக்குள்ள உரிமையில் மதச் சார்பற்ற ஆட்சி நடத்துவது என்று நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற அந்தக் கருத்தின் மீது, அந்த அடிப்படை உணர்வின்மீது நின்று கொண்டுதான் இந்தப் பிரச்சினைகளைப் பரிசீலிக்க முடியும், பரிசிலிக்க வேண்டும் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு கருத்துச் சுதந்திரங்கள் தரப்பட்டிருக்கின்ற இந்த நாட்டில் அவரவர்கள் தங்களுடைய கருத்துக்களை, சொந்தக் கருத்துக்களை அல்லது தாங்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் கருத்துக்களை எடுத்துவைப்பதற்கு உரிமை இருக்கிறது. அதைப்போல நாங்கள் நம்புகின்ற, வழிபடுகின்ற, உண்மையிலேயே பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றி வருகிற மதக் கருத்துக்களை, ஆஸ்திகக் கருத்துக்

களை, தெய்வீகக் கருத்துக்களை, இந்த நாட்டுக் குடிமக்கள் பின்பற்றவும் அதை வளர்க்கவும் வாழவைக்கவும் அவர்கள் விரும்புவார்கள். ஆனால் பொறுப்பிலே இருக்கிற அரசு இவைகள் அனைத்தையும் சீர்தூக்கிப் பரிசீலித்துப் பார்த்து, இவைகள் எல்லாவற்றிற்கும் பொதுத்தன்மையான நடவடிக்கைகளைத்தான் மேற்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு இங்கே எடுத்துவைக்கப்பட்டப் பல்வேறு கருத்துக்களில், இந்து சமயம், அறநிலையத்துறை எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பற்றி சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நீண்டகாலமாகவே இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிக்கொண்டு வருகிற இந்தத் துறை, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி வருகிற ஒரு தன்மையைப் பெற்றுக்கொண்டு வருகிறது என்பதையும் நாம் உணர்ந்தாகவேண்டும்.

இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிற சட்டம் கூட ஒரு இரட்டை ஆட்சி முறை என்பதைப்போல் அமைந்திருக்கிறது. அரசு நேரடியாகவும் அதிகாரம் செலுத்தமுடியாமல் அல்லது தனி ஆட்சி உரிமை பெற்ற நிர்வாகமும் நடைபெறாமல், அங்கேயும் நிர்வாகமும் நீதியும் இணைக்கப்பட்ட ஒரு முறை இருக்கிறது.

இப்படி சிக்கலான நிலைமையிலே உருவாக்கப்பட்டுதான் இந்தத் துறை நீண்ட காலமாக நடந்து வருகிறது. பல்வேறு காலகட்டங்களில் அந்தச் சட்டங்கள் திருத்தப்பட்டு இன்னும் திருத்தப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்றன் என்பதை இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கிற அரசு உணர்ந்திருக்கிற காரணத்தால் ஒட்டுமொத்தமாக இவைகளை எல்லாம் ஆராய்ந்து மிகச் சிறந்த நிர்வாகத்தைப் பெறுவதற்கும் குறை கூறப்படுகின்ற ஊழல்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் அகற்றப்படுவதற்கும் என்ன வழிகாணவேண்டும் என்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கடுத்தபடியாக, நமது மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும், இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். பிரதான எதிர்க் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள் மற்றும் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்து மதத்தை விட்டு வேறு மதத்திலே இருக்கிற முஸ்லீம் உறுப்பினர் என்று சொல்லப்படுகிற (குறுக்கிடு) முஸ்லிம் என்று இருக்கிற அருமை உறுப்பினர் லத்தீப் அவர்களும், மிகத் தெளிவாக இந்து மதத்தைப்பற்றித் தனக்கு எவ்வளவு விவகாரங்கள், விவரங்கள் தெரியும் என்பதையும், அவர்களுக்கு ஓட்டு போட்ட மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையிலே இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஆளும் கட்சியிலேயும் பல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நான் அவர்களிடம் பொதுவாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.



இந்த இந்து மத அறக்கட்டளைகள் ஒழுங்காக நடைபெறவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது இங்கே சொன்ன கருத்துக்களைப் பார்த்தால், அக்கு வேறாக ஆணி வேறாகப் பிரித்து அழித்துவிடவேண்டும் என்று விரும்புகின்றீர்களா என்பதை இந்த மன்றம் முடிவெடுக்கவேண்டும். ஏனென்றால் 50,000 பேர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு 10 ரூபாய் சம்பளம் தருகிறார்கள், 15 ரூபாய் சம்பளம் தருகிறார்கள் என்று கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தக் கோவிலுக்கு வருமானம் தருகிற, ஆண்டுக்கு 8 கோடியிலிருந்து 10 கோடி வரையில் வருமானம் தருகிற நிலங்களை எல்லாம் அங்கே குத்தகைக்குக் எடுக்கக்கூடிய விவசாயிகள், அதை எல்லாம் கொடுக்கக்கூடாது என்று ஒரு புறத்திலே வாதாடுகிறார்கள். ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் வருமானத்தை இழந்து விட்டால் இந்த அறநிலையங்கள் அல்லது இந்து சமயக் கட்டளைகளின் கீழ் இருக்கிற கோவில்களில் பணிபுரிகின்ற பணியாளர்கள், ஊழியர்களுக்கு எப்படி சம்பளத்தைத் தரமுடியும் என்பதைத் தயவு செய்து காட்டுங்கள்.

சரி, இன்னொரு கருத்தையும்சொல்லுகிறார்கள். வாடகைக்கு விட்டு அதிலே வருமானம் வருகிறது என்று சொன்னால், நான் விவரத்தை ஒன்றிரண்டை மாத்திரம் சொல்கிறேன், முழு விவரத்தையும் கூற முடியாது. அதைப் பொதுப்பிரச்சினையாக எடுத்துக் கொண்டு வாடகையை ஏற்றலாமா, இது அநியாயம் இல்லையா, அவர்

களுக்கு மட்டும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலே இருந்து விதிவிலக்கு அளிக்கலாமா என்றும் கேட்கிறார்கள். இங்கேயும் வருமானம் வராது, நிலங்களிலிருந்தும் வருமானம் வராது. 5 லட்சம் ஏக்கர் நிலங்களிலிருந்து வரக்கூடிய 8 கோடி ரூபாய் வருமானமும் இல்லாமல், இந்தக் கட்டடங்களிலிருந்து வருகிற வருமானமும் இல்லாமல், எப்படி நடத்துவது?- இவைகளை எல்லாம் ஒரு காலத்திலே சமுதாயத்திலே பொது நன்மைக்காக, நாங்கள் நம்பிய ஒரு பொது நோக்கத்திற்காக, தந்து விட்ட செல்வங்கள், அவர்கள் வழங்கிவிட்டுச் சென்ற செல்வங்கள், அவைகளை ஆண்டு கொண்டிருக்கிறவர்கள் அல்லது அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள் இதற்குரிய கட்டணத்தைக்கூட தர மறுக்கிறார்களே, இந்த மன்றம் அதை வளர்க்க விரும்புகின்றதா, அல்லது கட்டுப்படுத்த விரும்புகின்றதா என்பதை இந்த அறக் கட்டளைகளை உருவாக்கினார்களே, அவர்களுக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும்.

(பிற்பகல் 12-50)

அதை நம்பிக்கொண்டிருக்கிற கோடிக்கணக்கான மக்களுக்குப் பதில் சொல்லி ஆகவேண்டும். கடந்த காலத்தில் சில தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று குற்றச்சாட்டு தரப்பட்டிருக்கிறது. நான் அவைகளுக்குள் நுழைய விரும்பவில்லை. 1976 ஆம் ஆண்டு ஒரு குழு போட்டார்கள். குழு போட்டு, விசாரித்தார்கள். அந்தக் குழு அறிக்கை வைத்திருக்கிறதா என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கேட்டார்கள். குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே பல்வேறு குற்றச்சாட்டுக்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இப்படி ஒரு குழுவைப் போட்டு விசாரித்ததிலே என்ன சொன்னார்கள்? அதன்மீது நடவடிக்கை எடுத்தீர்களா? தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அவர்கள் தந்த அறிக்கை மீது அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன்பேரில் தொடுக்கப்பட்ட சிவில் வழக்குகள் 12; தொடுக்கப்பட்ட கிரிமினல் வழக்குகள் 6; பொருள் இழப்பைத் திரும்பப்பெற தண்டம் வழங்கப்பட்டவர்கள் 26; தற்காலிக வேலை நீக்க செய்யப்பட்ட பணியாளர்கள் 7; இலாகாவினர்மீது ஒழுங்கு



நடவடிக்கை எடுக்கப்பட்டது 56. இப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கலாம். இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு நிர்வாகத்தில் குழு போட்டு, அறிக்கை தந்திருக்கிறார்கள். அதை இந்த அரசு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ற முறையிலே பரிசீலிக்கிறது; அது எந்த நிலைமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்று பரிசீலிக்கிறது. அவர்கள் தெரிவித்திருக்கிற குற்றச்சாட்டுகள் எந்த அடிப்படையில் இருக்கின்றன என்பதைப் பரிசீலிக்கிறது. அவைகள்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லாக் குற்றச்சாட்டுக்களைப் பற்றியும் தெரிவிக்கா விட்டாலும், திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தெரிவித்தார்களே, அதற்காக ஒன்றிரண்டை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்து அறநிலையத் துறையின் நிதியிலிருந்துஅவர்களுடைய கிராமத்தில் ஒரு லட்சம் ரூபாயில் கோயில் கட்டினார்களே, நியாயமா என்று இங்கே கேட்டார்கள், முன்னாள் அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் கல்யாண மண்டபம் கட்டினார்கள்; அது தவறு என்று சொன்னார்களே என்றும் கேட்டார்கள். தவறு எங்கே வருகிறது என்றால், இந்த அறநிலையத்துறைச் சட்டத்தின்படி கோயில் நிதியிலிருந்து கல்யாண மண்டபம் கட்ட இடமில்லை. இப்போது இருக்கிற சட்டத்தின்கீழ் கல்யாண மண்டபம் கட்டக்கூடாது. இருந்தாலும் பொறுத்துக்கொள்ளலாம் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் ஆணையர் கட்டிய கோயிலுக்கு 18,000 ரூபாய்தான் மானியம் வழங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு). அது அறநிலையத் துறையிலிருந்து செலவிடப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அந்த ஊரிலே அந்தக் கோயில் கட்டப்பட்டது நியாயமா என்பது பின்னாலே பரிசீலிக்க வேண்டிய ஒன்று. ஆனால் குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர்மீதுள்ள குற்றச்சாட்டு என்னவென்றால், ஒரு லட்சம் ரூபாய்க்கு திட்டமிட்டு அவருடைய கிராமத்தில் கல்யாண மண்டபம் கட்டப்பட்டது. தவறான முறையிலே அமைச்சருக்கு வேண்டியவருக்கு காண்ட்ராக்ட் விட்டதாகச் சொல்கிறார்கள். நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. ஆனால் சர்க்கார் தரப்பிலே காண்ட்ராக்ட் விட்டு கட்டும் ஒரு கட்டிடத்தை மேற்பார்வை செய்ய எஞ்சினீயரை அனுமதிக்கவில்லை. அதையும் அனுமதித்து விடுகிறேன். அதனுடைய விளைவு என்னவென்றால், இது

சரியாகக் கட்டப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க அன்றைக்கு இருந்த ஆணையர் திரு. நரசிம்மன் என்பவர் மண்டபத்திற்குள்ளே போனார். பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்தக் கட்டிடம் இடிந்து விழுந்து, அவருடைய கால் எலும்பு முறிந்து, அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஆகவே, இது ஒழுங்காகக் கட்டப்படவில்லை என்பது பரிசீலனையில் இருக்கிறது.

அதைப்போல இன்னும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 52,000 ரூபாய்க்கு கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. 22,000 ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது என்று அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பல இருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் பினாமி, பினாமி என்று பேசினார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒரு அதிகாரிதான் 2½ லட்சம் ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தார் என்று சொன்னார்கள். அங்கே கண்டுபிடித்ததைத் தொடர்ந்து செய்தாரா, அதை என்ன செய்தார் என்று பார்த்தால் அதைக் கொண்டுபோய் இன்னொரு இடத்தில் சேர்த்து விட்டார்கள். ஒரு இடத்திலே கண்டுபிடித்தது இன்னொரு இடத்திலே போய்ச் சேர்ந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை அந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சனைகளை எல்லாம் தெரிந்து, பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதில் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ, கட்சி கண்ணோட்டமோ இல்லாமல், யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வாடகையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இது மிகவும் முக்கியமான விவகாரம் என்பதால் சொல்கிறேன். இங்கே நிலங்களைத் தனிப்பட்டவர்கள் எடுத்து ஆட்சி செலுத்துகிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள், சப்-டெனன்ட்டுக்கு விடுகிறார்கள் என்பது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்—இரண்டு கட்சி உறுப்பினர்களும்—எடுத்துச் சொன்னார்கள். வாடகை கொடுத்துக் கொண்டிருப்பவர்களுக்காக வாதாடுகிறார்கள். ஆனால் அதிலே இருக்கின்ற நூற்றுக்குத் தொன்னூற்றொன்பது பேர் வாடகைக்கு எடுத்



துக்கொண்டு, வெளியிலே இருந்துகொண்டு, உள் வாடகைக்கு விட்டுக்கொண்டு உட்கார்ந்த இடத்திலேயே சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அனுமதிக்க முடியுமா ?

நான் ஒன்றிரண்டு சான்றுகளைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவர் மாத வாடகை ரூபாய் 24 தருகிறார். அவர் உள் வாடகைக்கு விட்டு ரூபாய் 560 சம்பாதிக்கிறார். இது நியாயமா ? இன்னொருவர் ரூபாய் 25 மாத வாடகையாகத் தருகிறார். அவர் உள் வாடகைக்கு விட்டு ரூபாய் 2,500 சம்பாதிக்கிறார் மாதம். நான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்த நிலைமை வளரவேண்டும் என்று விரும்புகிறார்களா?

இன்னொன்றும் சொல்கிறேன். சென்னையிலே ஒருவர் ரூ. 250 தருகிறார், கோவிலுக்குச் சொந்தமான கட்டிடத்திற்காக. அவர் அந்தக் கட்டிடத்தைப் பகுதியாகப் பிரித்து மாதம் வாடகையாக ரூ. 4,000 பெறுகிறார். அந்தப் புண்ணியவான் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை.

அது மாத்திரமல்ல, 1969ஆம் ஆண்டிலேயே அவரது பீரியட் முடிகிறது. அவர் எங்கெங்கோ சென்று யார், யாரையோ பார்த்து இந்தச் சட்டத்தை மூளியாக்கி சட்டத்தை நிறைவேற்றாமல் தடுத்துக்கொண்டிருக்கிற நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு நிறையப் பேர் இப்படித்தான் இருக்கிறார்கள். நிறைய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால் சிலவற்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சட்டம் குறுக்கிடுகிறது என்று எல்லா அரசியல் கட்சிக்காரர்களையும் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்.

ஆகவே இந்தப் பிரச்சினைகளுக்கு இன்றைக்குத் தெளிவாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. 100 சதவீதம் வாடகை சொந்தமாகக் குடி இருக்கும் வீடுகளுக்கு உயர்த்தலாம், நான்-ரெசிடென்சியல்—க்கு 200 சதவீதம் உயர்த்தலாம். கமர்ஷியலுக்கு 300 சதவீதமாக உயர்த்தலாம் என்று இன்றைக்கு விதியாக வகுக்கப்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமல்ல. அவர்கள் எல்லாம் இப்படிக் கொள்ளை அடிப்பவர்களாக இருந்தால் தனிப்பட்ட முறையில் தான் பரிசீலிக்க வேண்டும். நாலாயிரம் ரூபாய் வாடகை வாங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு, 3,542 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். 250 ரூபாய் என்று இருந்ததை 3,542 என்று உயர்த்தி விட்டார்கள் என்று உங்களிடத்தில் வந்து சொல்கிறார்கள். தயவு செய்து உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த அரசு.................. (குறுக்கீடு)..........

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> எல்லோரும் அப்படி இருக்க மாட்டார்கள். ஏதோ ஒரு சிலர் அப்படி இருப்பார்கள். அதற்காக எல்லோரும் அப்படித்தான் என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> அது ஒரு சிலர் அல்ல. அனேகமாக 90 சதவீதம் பேர் அப்படித்தான். தனிப்பட்டவர்கள் பாதிக்கப்படுவார்களானால், அவர்களுடைய பிரச்சினைகள்த் தனியாக வருமேயானால் அதன் உண்மையை உணர்ந்து அரசு தீர்ப்பளிக்கும் என்பதை உறுதியாக நான் சொல்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> இந்தக் கோவில் வீடுகளை ரென்ட் கண்ட்ரோலில் இருந்து கழக ஆட்சியில்தான் எடுத்தோம். அறநிலையத் துறைக்கு அதிக வருமானம் வரவேண்டும் என்பதற்காக எடுத்தோம். அப்போது ஒரு உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது. சிறு கடை வியாபாரிகள், ஏழை எளியவர்களாக இருப்பவர்கள், இவர்களுக்கு வாடகையை உயர்த்துவதில்லை என்ற உறுதிமொழியை அளித்திருக்கிறோம். அது செயல்பட்டாலே போதும்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> அதைத்தான் நான் சொல்கிறேன். சிறுகடை வியாபாரிகள், ஏழை எளியவர்கள், அவர்களுடைய சொந்த முயற்சியில் வைத்திருப்பதாகயிருந்தால் அதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். அதுவும் இன்றைய நிலைக்கேற்ப, தனியாரிடத்திலானால், அவர்களுக்கு பத்து ரூபாய் கொடுக்கவேண்டும் என்றிருந்தால் இதற்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் போதும் என்றால்— கோவில் சொத்து என்றால் இது என்ன பிள்ளையில்லாச் சொத்தா என்ன—அது என்ன நியாயமா என்று பார்க்க



வேண்டும். அப்போது அவர்களுக்கு உறுதிமொழி அளித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த உறுதிமொழிக்கேற்ப நியாயமான முறைகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பாவை, திருவெம்பாவை மாநாட்டைப் பற்றிச் சொன்னார்கள். அது அவர்களுடைய ஆசை. பாவம், இதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. குறுக்கிட வேண்டாம். ஆனால் இந்த நாட்டில், தமிழகத்தில் தமிழ் மொழியைப் புறக்கணித்து விடலாம், தமிழே இல்லாமல் வாழ்ந்து விடலாம், தமிழே இல்லாமல் செய்துவிடலாம் என்று யாராவது எண்ணுவார்களேயானால் அவர்கள் ஏமாளிகளாக மாத்திரம் இருக்கமாட்டார்கள். அவர்களுக்கு என்ன பெயர் இடுவது என்பதை இந்த நாடு முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடு).

இந்த அளவில் நான் என்னுடைய உரையை முடித்துக் கொண்டு வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமர்கிறேன்.

[பிற்பகல் 1-00]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இப்போது பிற்பகல் மணி 1. விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு ஆரம்பமாகிறது.

திருவாளர்கள் கெ. சொக்கலிங்கம், ரெ.வீ. சவுந்தரராஜன், வி.கே. கோதண்டராமன். மு. ஆறுமுகம், சோ. அழகர்சாமி, எம்.ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ள பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண்.12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ.1,44,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி மானியக்கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,56,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஈ) கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 51,94,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.



(உ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி " மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,55,20,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஊ) கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 48—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## 8] அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## [9] அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்-2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவை பேரவைமுன்அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

## (8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 1977–78 ஆம் ஆண்டுக்கான—கூடுதல் மானியக் கோரிக்கைகள் முன்மொழிய ஆளுநரின் பரிந்துரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1977–78 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Further Grants for the year 1977-78'.

## 10) 1977–78 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண். 1—நிலவரித்துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 9,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரியதொகை வழங்கப்பெற்றது.



### கோரிக்கை எண். 2 —மாநில ஆயத்தீர்வை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத்தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

### கோரிக்கை எண். 4—பொது விற்பனைவரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 71,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

### கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக்கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்— நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

### கோரிக்கை எண். 7— மாநில சட்டமன்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— '' மானிய கோரிக்கை எண். 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானிய கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 89,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.



கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 15—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,00,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 18—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,34,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 19—பொது சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 19—பொது சுகாதாரம் என்னும் தலைப்பின்கீழ் ரூ. 30,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்னும் தலைப்பின்கீழ் ரூ. 7,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,22,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,08,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,84,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 1-10]

கோரிக்கை எண். 25—சின்கோனா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள ''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,57,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 27—கதர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,26,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,30,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 33,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— '' மானியக் கோரிக்கை எண் 34- நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 61,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் .''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 36 - பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,34,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் .''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 37— பொதுப் பணிகள்— கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 37— பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,49,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும். கருவிகளும் தளவாடங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 60,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 39—சாலைகளும், பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,16,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் .''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,65,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் .''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,000-க்கு மே[illegible]படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 45—காட்டு வளத் துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 50,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,45,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரியதொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 52—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 52—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும், "



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்து மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— " மானியக் கோரிக்கை எண். 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,17,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 55—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானிய கோரிக்கை எண். 55—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும், "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 56—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,66,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப் பின்கீழ் ரூ. 70,33,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நிதிஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(9) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.



8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) 1970–71-ம் ஆண்டில் மிகைச் செலவிற்கான மானியக்கோரிக்கைகள் முன் மொழிய ஆளுநரின் பரிந்துரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1970–71ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது :—

In pursuance of Article 203 clause (3) of the Constitution of India I, Prabhudas Patwari Governor of Tamil Nadu hereby give my recommondation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for Grants for Excess Expenditure for the year 1970–71.

11 1970-71ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 2 — மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள் — நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டி வரிச் சட்டங்கள் — நிர்வாகம் என்ற தலைப் பின்கீழ் ரூ. 97,984-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 3— பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — "மானியக் கோரிக்கை எண். 3— பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,61,997-க்கு மேற்படாத தொகை வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 1—20]

கோரிக்கை எண். 6 — மாநிலச் சட்ட மன்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—'மானியக் கோரிக்கை எண். 6—மாநிலச் சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,931-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை' எண். 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,13,810-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை' எண். 9—மாவட்ட நிர்வாகம், பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,357-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.



கோரிக்கை எண். 10—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — ''மானியக் கோரிக்கை எண். 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,21,894-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்: 11—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — ''மானியக் கோரிக்கை எண். 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,92,022-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 13—கல்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— ''மானியக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,98,607-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 14—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 47,39,256-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 16—வேளாண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,57,889க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 17—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,68,844-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 22—கதர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 22 கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,590க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 23—சமுதாய நல வளர்ச்சி திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 23—"சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,49,613க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 29—பொதுப் பணிகள் உதவி மானியங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 29—பொதுப் பணிகள் உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,83,794-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 31—பஞ்சத் துயர்தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 31—பஞ்சத் துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ.1,42,04,734க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 32—ஓய்வூதியங்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:—பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ 38,46,156க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 33—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :—பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண், 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,75,844-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 34—எழுது பொருள் அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 34—எழுது பொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,68,893க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 35 காட்டுவளத் துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :— பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 35—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,15,577க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் : 38—பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,56,009-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 39—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண். 39—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,09,198-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண்: 45—ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,55,323-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண். 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,57,41,395-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## 8 அறிவிப்புகள் தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. "தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன் வடிவை " பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுவதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்டமன்றத் துணைத் தலைவரவர்களே, அதைப்படிப்பதற்கு முன் என்னுடைய, வேண்டுகோள், உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற கிளாசிலே இருக்கின்ற தண்ணீரைக் கொஞ்சம் சாப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை " பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 12 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### [அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.]

329. 1978ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் தேதியின்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கடன்களுக்காக, தமிழ்நாடு அரசு அளித்துள்ள உறுதிமொழிகளின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை [தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 92-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

193. 1978—79ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட நடவடிக்கைகள் பற்றிய முதல் பொருளாதார—செயல்முறை சார்ந்த வகைப்பாடுகள்.

†† 194. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவிற்கான (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1978) இணைப்பு.

---

*வெட்டுத் தீர்மானங்கள் முன்னரே அனுப்பப்பெற்றுள்ளன.

**பேரவை விதி 155(3)-ன்படி விவாதமின்றி, பிற்பகல் 1 மணிக்கு வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

†வெட்டுத் தீர்மானங்கள் தனியே அனுப்பப்பெற்றுள்ளன.

††1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் தேதி அன்று அனுப்பப்பெற்றுள்ளன.

## இணைப்பு I.

[615-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 12.

### 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்—குறிப்புரை.

### முகவுரை.

தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959), 1960ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இச்சட்டம் அரசுத்துறை ஒன்றினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறைக்கு ஆணையாளர் சட்டப்படிக்கான தலைவராவார். இச் சட்டத்தின் பற்பல விதித்துறைகளையும், விதிகளையும் சரிவர செயலுக்குக் கொண்டு வருவதில் அவருக்கு துணை ஆணையாளர்கள் எழுவரும், உதவி ஆணையாளர்கள் பதினாறு பேரும் உதவி புரிந்து வருகின்றனர். இதைத் தவிர இச்சட்டத்தின் கீழ் அவர்களுக்கே உரிய சட்ட பூர்வமான சில கடமைகளையும் நிறைவேற்றி வருகிறார்கள். இத்துடன் ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், பின்வரும் பிரிவுகள் இத்துறையில் இயங்கி வருகின்றன :—

(i) வருவாய்ப் பிரிவு.—கோயில் நிலங்களை ஆய்வு செய்து அவற்றைச் சரிவர நிர்வகிப்பதற்காக மாவட்ட வருவாய் அதிகாரியின் தரத்தில் ஒரு தனி அதிகாரியும், தேவையான பணியாளர்களும் இப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

(ii) தணிக்கைப் பிரிவு.—சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக மாநிலக் கணக்காய்வாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பெற்ற தலைமை தணிக்கை அலுவலர் ஒருவர் தேவையான பணியாளர்களுடன் இப்பிரிவிற்கு தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்.

(iii) பொறியியற் பிரிவு.—சமய நிறுவனங்களில் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்து பரிசீலனை செய்வதையும், அத் திருப்பணிகளை மேற்பார்வையிடுவதையும் இப்பிரிவு கவனித்து வருகிறது. இது ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் தலைமையில் தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.



இவை தவிர, சமய நிறுவனங்களின் திருவாபரணங்கள், விலையுயர்ந்த பிற உடைமைகள் ஆகியவற்றிற்கு விலை மதிப்பிட்டு சரிபார்ப்பதற்கும் உதவி ஆணையாளர்கள் தரத்தில் சரிபார்க்கும் அலுவலர்கள் எட்டு பேரும், அவர்களுக்குத் தேவையான உதவியாளர்களும் உள்ளனர். வட்டாரத் துணை ஆணையாளர்களிடம் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள நீதியியல் விசாரணைகளை விரைவில் விசாரணை செய்து முடிப்பதற்காகத் தனியாக ஒரு துணை ஆணையாளர் இயங்கி வருகிறார். சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாயுள்ள கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிச்சயிப்பதற்காக, நிர்வாகப் பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு கட்டிடத்திற்காகவும் விதிக்கப்படத்தக்க நியாய வாடகையை நிர்ணயிப்பதில் ஆங்காங்குள்ள வாடகை நிர்ணயக் குழுக்களுக்கு இவர் ஆய்வுரை வழங்குவார்.

நமது மாநிலத்தில் 51,833 இந்து சமய நிறுவனங்கள் உள்ளன என்றும், அவற்றிற்குச் சொந்தமாக நன்செய் புன்செய் நிலங்கள் 6,10,741 ஏக்கர் உள்ளன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் 24,605 சமய நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த நிறுவனங்களுக்கு 5,70,304 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன. எஞ்சிய சமய நிறுவனங்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### சமய நிறுவனங்களைத் தரம் பிரித்தலும் அறங்காவலர்களின் நியமனமும்.

இந்து சமய அறநிலைய மூலச்சட்டமானது குடியரசுத் தலைவரின் 24/1976ஆம் சட்டத்தினால் திருத்தப் பெற்றது 1976 ஜூன் 1-ம் நாளன்று இத்திருத்தம் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி, இந்து சமய பொது நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருவாயையொட்டி (சகாயத் தொகை விதிப்பிற்குரிய) பின்வரும் நான்கு தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன—

(1) ரூபாய் 10,000-க்குக் குறைந்த ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள் ;

(2) ரூபாய் 10,000-க்குக் குறையாமலும் ரூபாய் 20,000-க்கு மேற்படாமலும் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள் ;

(3) ரூபாய் 20,000-க்குக் குறையாமலும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாமலும் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள் ;

(4) ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறையாமல் ஆண்டு வருவாய் உள்ள நிறுவனங்கள்.

1976 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி சமய நிறுவனங்களில் பரம்பரை முறை உரிமையில்லாத அறங்காவலர்கள், 1976 ஜூன் 1 ஆம் நாள் முதற்கொண்டு பதவியிலிருந்து நீங்கினார்கள். அவர்களுக்குப் பதிலாக, மூலச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் அறங்காவலர் குழுக்கள் மீண்டும் நியமிக்கப்படுகிற வரையில் 'தக்கார்கள்' நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் அந்நிறுவனங்களின் நிர்வாக அலுவலர்களாகவோ, இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆய்வாளர்களாகவோ, பிற துறைகளின் அலுவலர்களாகவோ இருப்பவர்கள். ரூ. 10,000மும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும், ஒரு நிர்வாக அதிகாரியின் பணிகள் கிடைக்கும் வகையில் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். சமய நிறுவனங்களுக்கு பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிப்பதென அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## மாநில ஆலோசனைக் குழு.

1976 ஆம் ஆண்டு 24-வது திருத்தச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், மாநில அளவிலான ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கோயில்களின் நிர்வாகம் சம்பந்தமான பல்வேறு கூறுகள் குறித்து ஆலோசனைகளை ஆணையாளருக்கு அளிப்பதே இக்குழுவின் பணியாகும். இந்து சமய அறக்கட்டளைகளின் ஆணையாளர் அலுவல் முறையில் அதன் [illegible]வராவார். அரசு சார்பற்ற 12 உறுப்பினர்கள் அதில் அ[illegible]கம் வகிப்பார்கள்.



## சிறப்பு விசாரணைக் குழு.

முன்னாள் அறங்காவலர்களும் ஏனையோரும், சமய நிறுவனங்களை முறைகேடான வகையில் நிர்வகித்ததாக பொதுமக்களின் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து பல குற்றச்சாட்டுகள் பெறப்பட்டதன் மேல், 1976 ஆம் ஆண்டில் அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக சிறப்பு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு ஓர் அறிக்கையைக் கொடுத்துள்ளது. இக்குழு சுட்டிக்காட்டிய முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கூறலாம் :—

(i) கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் முதலியவற்றை முறைகேடான வகையில் நிர்வகித்தல், நிலங்கள் முதலியவற்றை குத்தகைக்கு விடுவதில் அல்லது விற்பனை செய்வதில் ஒழுங்கீனங்கள், வேண்டியவர்களுக்குத் தனிச் சலுகை காட்டுதல், பினாமி குத்தகை, குத்தகைப் பத்திரங்களை எழுதி கொடுக்காமை, குறைந்த வாடகைகளுக்கு குத்தகை விடுதல் முதலியன ;

(ii) ஒப்பந்தங்கள் வழங்குவதிலும், திருமண மண்டபங்கள் கட்டுவதிலும், இராச கோபுரம் கட்டுதல், கோயில் குளங்களைத் தூறெடுத்தல் உட்பட கோயில்களுக்கு திருப்பணிகள் செய்வதிலும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பதிலும் முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் ;

(iii) பல்வேறு காரியங்களுக்காக கோயில் நிதிகளைப் பயன்படுத்துவதிலும், ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து நிதிகளை அனுமதிப்பதிலும் முறைகேடுகள் ;

(iv) சில தனி நபர்கள் வெளியிட்ட புத்தகங்களையும், வெளியீடுகளையும் வாங்குவதற்குக் கோயில் நிதிகளைப் பயன்படுத்துதல், கட்சிப் பத்திரிகைகளில் வகை தொகையின்றி விளம்பரங்களைக் கொடுத்த.

முறைகேடுகள் சம்பந்தப்பட்ட குறிப்பான வழக்குகள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவசியமானவற்றில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## நிதிப் பிரச்சினைகள்.

குடிவாரர முறை தொடர்பான பல்வேறு சட்டங்களும், கடன் தவணை ஒத்திவைப்புச் சட்டம், பொதுப் பொறுப்புக் கழகங்கள் சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்

பட்டதனுல் நிலங்கள் மூலம் கிடைக்கும் வருவாயையே முக்கிய வருமானமாகக் கொண்டுள்ள சமய நிறுவனங்களின் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது. நிலங்கள்தான் கோயில்களின் முக்கிய வருமான வாயில்களாகும். குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் சமய நிறுவனங்களுக்கு நிலங்கள் மூலம் தான் வருமானம் முதன்மையாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டதன் விளைவாக சமய நிறுவனங்களின் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நிலவரி, மாநகராட்சி வரி, நகராட்சி, ஊராட்சி வரிகள், துறைக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை, தணிக்கைக் கட்டணங்கள் போன்ற பல பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு இயலாத நிலையிலுள்ளன. பல கோயில்கள் தினசரி பூசைகள் நடத்துவதற்கான செலவைச் செய்யவும், கோயில் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கவும் இயலாத நிலையில் உள்ளன. கோயில்களின் நலனையும், சம்பந்தப்பட்ட ஏனையோரின் நலனையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்கு சிறந்த முறையில் தீர்க்கலாம் என்று அரசு ஆலோசித்து வருகிறது.

## சட்டம், விதிகளுக்குத் திருத்தங்கள்.

மூலச் சட்டத்தை இதுவரையில் செயல் படுத்தியதில் பெறப்பட்ட அனுபவத்தை யொட்டியும், சிறப்பு விசாரணைக் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டிய விஷயங்களைக் கருத்திற்கொண்டும் மூலச் சட்டத்திற்கு விரிவான திருத்தங்கள் கொண்டுவர அரசு ஆலோசித்து வருகிறது.

## கோயில் திருப்பணிகள்.

1,000-க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் சுமார் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கீழ்க் கண்ட திருப்பணிகள் பற்றி சிறப்பாகக் கூறலாம் :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், மருதமலை .. .. .. .. | 20 |
| 2. அருள்மிகு காமாட்சியம்மன் கோயில், காஞ்சிபுரம் .. .. .. | 50 |



| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 3. அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம் | 45 |
| 4. அருள்மிகு அரங்கநாதசாமி கோயில், ஸ்ரீரங்கம் .. .. .. .. | 45 |
| 5. அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில், திருவேற்காடு, சென்னை .. .. | 26 |
| 6. அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், திருச்செந்தூர் .. .. .. | 18 |
| 7. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம் .. .. .. | 18 |
| 8. அருள்மிகு மங்களநாதர் கோயில், உத்திரகோசமங்கை .. .. .. | 12 |
| 9 அருள்மிகு இராமநாதசாமி கோயில், இராமேஸ்வரம் .. .. .. | 9 |
| 10. அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில், திருவண்ணாமலை .. .. .. | 5 |
| 11. அருள்மிகு பவானி அம்மன் கோயில், பெரியபாளையம் .. .. .. | 3 |
| 12. அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில், காஞ்சிபுரம் .. .. .. | 4 |
| 13. அருள்மிகு அரப்பளீஸ்வரர் கோயில், கொல்லிமலை .. .. .. .. | 4 |
| 14. அருள்மிகு வெள்ளியங்கிரி கோயில், பூண்டி | 3 |
| 15 அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் அவிநாசி .. .. .. .. | 3 |

1977–78 ஆம் ஆண்டில், ரூ. 164.46 இலட்சம் அளவிற்கு 348 மதிப்பீடுகளுக்கு ஏற்பளிக்கப்பட்டது.

நிதி பற்றாக்குறையாயுள்ள கோயில்களின் திருப்பணி வேலைகட்கும், கோயில்களிலிருந்து சிலைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள் திருடு போகாமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கும், பொதுமக்களின் முயற்சிக்குத் துணையாக, கணிசமான ஒரு தொகையை அரசு மானியமாக ஒவ்வொர் ஆண்டும் அனுமதித்து வந்துள்ளது.

நடப்பாண்டில் (1977–78) இது குறித்து ரூ. 17 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இந்தப் பணிகளுக்காக 1978–79-ஆம் ஆண்டிற்கு ரூ. 17 இலட்சம் வழங்க கருதப்பட்டுள்ளது. நிதி பற்றாக்குறை காரணமாக பாதியிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் திருமண மண்டபங்களைக் கட்டி முடிப்பதற்காக ரூ. 3 இலட்சம் கடன் உதவி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், இந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்படுவதுடன், இந்த கோயில்கள் தங்கள் முதலீடுகளிலிருந்து ஓரளவு ஆதாயம் ஈட்ட இயலும்,

பிற்பட்ட பகுதிகளிலும், அரிசனக் குடியிருப்புக்களிலும் அமைந்துள்ள சிறு கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்வதற்காக, ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ. 1,000 வீதம் 33 கோயில்களுக்கு இதுவரை ரூ. 33,000 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## மலைக்கோயில்களுக்கு மின்சார இழுவைப் பொறிகள்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலுக்கு மின்சார இழுவைப் பொறி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வழிபடும் பொதுமக்களின் பெருகி வரும் தேவையினை ஈடு செய்யும்பொருட்டு, மேலும், இழுவைப் பொறி ஒன்று அனுமதிக்கப்பட்டு பணிகள் நடந்தேறி வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமான சுவாமி கோயிலும், திருச்சிராப்பள்ளி திருவாளர்கள் பாரத் கனரக என்ஜினியரிங் (BHEL) நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் ஒரு மின்சார இழுவைப் பொறி அமைக்கும் திட்டம் செயல்பட இருக்கிறது.



## கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்களும் புதுக்கோட்டை கோயில்களும்.

1974-ஆம் ஆண்டு 50 ஆவது சட்டத்தின்கீழ், திருவிதாங்கூர் அரசர்களின் நிர்வாகத்தின்கீழ் முன்பு இருந்த கோயில்கள் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு 22 ஆவது சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாகத் துறையின் உதவி ஆணையாளர் பதவித்தரத்தில் உள்ள ஒரு நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக ஆண்டு மானியமான 13,70,000 ரூபாயினை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதைப்போலவே முன்னாள் புதுக்கோட்டை அரசின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 136 கோயில்களை பராமரிப்பதற்காக 1976–77-லிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் 5,00,000 ரூபாயினை அரசு அனுமதித்து வந்துள்ளது. இந்த மானியத்தைத் தவிர, முன்னாள் புதுக்கோட்டை அரசின் ''பூஜை வீட்டினை'' பராமரிப்பதற்காக ரூ. 6,000 அளிக்க அரசு அனுமதியளித்துள்ளது.

## ''திருக்கோயில்'' திங்கள் இதழ்.

''திருக்கோயில்'' என்ற வெளியீடு மாதந்தோறும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது, சமயம், தமிழ்நாட்டிலுள்ள தொல் பொருட்கள், கோயில்களின் வரலாறு பற்றி புகழ் பெற்ற அறிஞர்கள் தங்களுடைய கட்டுரைகளை இந்த இதழுக்கு வழங்கி வருகின்றனர். தற்சமயம் வெளி நாட்டு சந்தாதாரர்கள் உட்பட, சுமார் 13,000 சந்தாதாரர்கள் உள்ளனர்.

## விலைமதிப்புள்ள பொருட்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்.

கோயில்களிலிருந்து தொல் பொருள்களை 1972-ஆம் ஆண்டின் தொல் பொருட்கள் புதையல்கள் பதிவு செய்யும் சட்டத்தின்கீழ் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பழங்கால விக்ரகங்கள் ஏனைய மதிப்பு மிக்க தொல் பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக, வலிமையான இரும்புக் கதவுகள், இரும்புக்

கம்பிகள் முதலியவற்றிக்கு ஏற்பாடு செய்து பாதுகாப்பிற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுள்ளன. அன்றாட வழிபாட்டில் இல்லாத செப்புத் திருமேனிகளை பொறுத்த வரையில், அருகிலுள்ள எந்த கோயில்களில் பாதுகாப்பான இடங்கள் உள்ளனவோ அந்தகோயில்களுக்குக்கொண்டு சேர்க்கப்பட்டு, பத்திரமாக வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## கோயில் பணியாளர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கோயில்களில் சுமார் 51,000 பணியாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 15 வரை அகவிலைப்படி உயர்வு, 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கொடுக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 5 லிருந்து ரூ. 10 வரை கொடுக்கவும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

## சமுதாய நலப் பணிகள்

சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து மேற் கொள்ளப்பட்ட சமூக நலப் பணிகள் தொடர்ந்து செயல் படுத்தப்படுகின்றன. செவிடர், ஊமையர் பள்ளிகள்-2 அன்பு இல்லங்கள்-3, நூலகங்கள்-204, சித்த மருத்துவ மனைகள்-24, ஆங்கில மருத்துவமனை-1, சுமார் 2,770 குழந்தைகளைக் கொண்ட 36 கருணை இல்லங்கள் உட்பட பல அனாதை இல்லங்கள் ஆகியவை கோயில் நிதியிலிருந்து செயல்பட்டு வருகின்றன. 7 கல்லூரிகள் தொடக்கநிலைப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் உட்பட மொத்தம் 33 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன., நாதஸ்வரம் பயில்வதற்காக 2 பள்ளிகளும், ஓதுவார்களுக்கு 7 பள்ளிகளும், 4 வேத ஆகம பாடசாலைகளும் செயல்பட்டு வருகின்றன.

திருத்தணியில் "முதியோர் இல்லம்" ஒன்றும் திருவானைக்காவலில் தேவாரப் பாடசாலை ஒன்றும், ஸ்ரீரங்கத்தில் திவ்யபிரபந்த பாடசாலை ஒன்றும் திறக்க செ ற்குறிப்பு ஒன்று உள்ளது. இந்து கலை பண்பாட்டில்



மூன்று ஆண்டு பட்டயப் படிப்பு பிரிவு ஒன்று இராமேஸ்வரத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதி லிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ் இசையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, நாதஸ்வரம், தவில் ஆகிய கலைகளை மாணவர்கள் பயின்று வல்லுநராவதற்கு, இக்கலைகள் பயிலும் மாணவர்களுக்கு, உதவித் தொகை அளிக்கும் திட்டம் ஒன்றினை அண்மையில் அரசு கொணர்ந்துள்ளது. மாநிலத்திலுள்ள நாதஸ்வரப் பள்ளியில் மாணவர் தங்களுடைய படிப்பினை முடித்த பிறகு, புகழ் பெற்ற வித்வான்களிடம் மேல்பயிற்சி பெறப் செல்வார்கள். இந்த உதவித் தொகை "காலஞ்சென்ற வித்வான் டி. என். இராஜரத்தினம் பிள்ளை நினைவு உதவித் தொகை" என்று அழைக்கப் பெறுகிறது இந்த உதவித் தொகை அதிக பட்ச ஐந்து ஆண்டு காலத்திற்கு நாதஸ்வரம் பயிலும் மாணவர்கள் ஐந்து பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயும், தவில் கலை பயிலும் மாணவர்கள் 5 பேருக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயும் அளிக்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறும் மாணவர்கள் புகழ் பெற்ற வித்வான்கள் மூவர் அடங்கிய குழுவினால் தெரிந்தெடுக்கப்படுவர்.

இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் பல்வேறு சமய நிறுவனங்களால் நடத்தப்படும் தேவார பாட சாலைகளில் பயிலும் மாணவர்களில், அவர்களின் படிப்புத் தரத்தில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர் களுக்கு அவர்கள் வேலை பெறும்வரை உதவியாக இருக்கும் பொருட்டு, ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் ரொக்கமாக வழங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.

## நிர்வாகத்தை மேம்படுத்துதற்குரிய நடவடிக்கைகள்.

துறையின் நிர்வாகத்தையும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்தவும், மேம்படுத்தவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, குறிப்பாக வருவாயில் இழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்குரிய நியாய வாடகைகளை நிர்ணயம் செய்வதன்மூலம் வருவாயினைப் பெருக்கும் பொருட்டும் தக்க

நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக சம்பந்தப்பட்ட வட்டாரத் துணை ஆணையாளர்கள், துறையின் நிர்வாகப் பொறியாளர், கோயில்களின் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள். ஒவ்வொரு கோயிலுக்கும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறை விதிமுறைகளில், விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க கோயில் கட்டிடங்களுக்கான வாடகை விதங்களை மாற்றியமைப்பதற்காக இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாடகை விதங்களை மாற்றி யமைத்தது, அவைகள் நியாயமானதாக இருந்த போதிலும் எங்கேனும் மிக அதிக அளவில் உயர்த்தப்பட்டிருப்பதாக கண்டறியப்படுமாயின், திருத்தியமைக்கப்பட்ட வாடகை விதங்களை படிப்படியாக செயலுக்கு கொண்டு வருமாறு ஆணையாளர் கட்டளையிட்டுள்ளார்.

நமது கலைகளுக்கும் பண்பாட்டிற்கும் பொக்கிஷங்களாகவும் நிலைக்களங்களாகவும் உள்ள கோயில்களைப் பேணி பாதுகாப்பதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வரும்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வியாழக்கிழமை, 1978 மார்ச் 30

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) இரங்கற் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. நிவர்த்தி வெங்கட்சுப்பையா அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. நிவர்த்தி வெங்கடசுப்பையா அவர்கள் 28-3-1978 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நிவர்த்தி வெங்கட்டசுப்பையா அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளர், சுயராஜ்யா பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். சத்தியாக்கிரக போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, ராயலசீமா பஞ்ச நிவாரணக் குழு, அரிசன சேவாசங்கம் போன்றவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். சென்னை மற்றும் ஆந்திரா மாநிலங்களின் பல்கலைக் கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டுவரை ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக கர்நூல் பொது கிராமப்புறத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். ஆந்திர மாநில சட்டமன்ற மேலவையின் தலைவராக இருந்தவர். 28-3-1978 அன்று பொதுக் கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருக்கையில் மாரடைப்பால் திடீரென்று இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

## (2) வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சிதம்பரம் கூட்டுறவு பால்வழங்கு யூனியன்

*குறுகியகால வினா 15—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் யூனியனில் நிலவும் முறைகேடுகள் சம்பந்தமாக அரசுக்கு ஏதேனும் புகார் மனு வந்துள்ளதா?

(ஆ) கடலூர் (பால்பதம்) துணைப்பதிவாளரால் சிதம்பரத்திலிருந்து புகார் மனு கொடுத்தவர்கள் அச்சுறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) புகார் மனுக்கள் வந்துள்ளன.

(ஆ) துணைப்பதிவாளர் (பால்பதம்), கடலூர் அவர்கள் அச்சுறுத்தியதாக அரசுக்கு ஏதும் தகவல் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிதம்பரம் பால் யூனியனில் இருக்கக்கூடிய தனி அலுவலர் ஏற்கெனவே தஞ்சை மார்க்கெட்டிங் சொசைட்டியில் இருந்தவர், அங்கு கையாடல் செய்து, அவர் மீது ஒரு வழக்கு இருக்கிறது. அது முடியவில்லை. அவரே திண்டிவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்து அங்கும் கையாடல் வழக்கு உண்டு, அதுவும் முடிவு பெறவில்லை. அப்படியிருக்கும்போது கடலூரில் உள்ள துணைப்பதிவாளர் அவரை சிதம்பரத்தில் உள்ள பால் யூனியனுக்குத் தனி அலுவலராக நியமித்திருக்கிறார். அவர் பால் வென்டர்களுக்குச் சரியான முறையில் ரசீது கொடுப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'டைரக்டா'கத் துணைக்கேள்வி போடுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்: அங்கு வேலை செய்யும் ஆட்கள் மூலமாகப் பணத்தைக் கொடுத்து, அந்தப் பணத்தைத் தன்னுடைய பொறுப்பிலே வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் பல்வேறு குற்றச்சாட்டுகள் உண்டு. அதுசம்பந்தமாக, துணைப் பதிவாளருக்குப் புகார் அனுப்பும்போது அந்தத் துணைப் பதிவாளர் அங்கு சென்று விசாரிக்கும்போது 'நீங்கள் எல்லாம் புகார் எழுதுகிறீர்கள். நான் உங்களை போலீசில் ஒப்படைப்பேன்' என்று மிரட்டியிருக்கிறார். எனவே, அவருக்கும் இவருக்கும் சம்பந்தம் இருப்பது மாதிரி தெரிகிறது. எனவே, இது சம்பந்தமாக தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலை
அவர்களே, தனி அலுவலராக இருக்கிற அவர்மீது பல்வேறுவ
பட்ட குற்றங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுப
தனி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. மேலும் ஒன்று, து
பதிவாளர் அவர்கள் இந்த விசாரணையிலே ஈடுபட்டிருக்கிறார்க
அங்கே இருக்கக்கூடிய மில்க் வென்டர்கள்தான் இந்த மனுக்
யெல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். அது குறித்து நடவடிக்
எடுக்கப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்
கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் பணியாற்றக்கூடிய த
அலுவலர்கள் அங்குள்ள பாதுகாக்கப்பட்ட பாலில் நீர் கலப்ப
செய்து விற்பதற்கு உடந்தையாக இருந்து வருகிறார்கள். அதன
மிக அத்தியாவசியமாக மக்களுக்குக் கொடுக்கவேண்டிய நல்ல
மான சுத்தமான-பாதுகாக்கப்பட்ட பால் வழங்கப்படுவதில்
அதைப்பற்றி புகார் சொல்பவர்களைப் பழி வாங்கும் நோக்கத்துட
தனி அதிகாரி நடவடிக்கை எடுப்பதை அமைச்சரவர்
அறிவார்களா? அதை நீக்க அரசு முயற்சி செய்யுமா என அ
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அ
களே, அப்படிப்பட்ட புகார்களைத் தனி அலுவலர்களிடத்தி
கொடுக்காமல், நேரடியாகவே இங்கே இந்தத் துறையிலே கொ
தாலும் அல்லது எங்களிடத்திலே கொடுத்தாலும் உடனடிய
நடவடிக்கை எடுத்து அதற்கு மேற்கொண்டு அரசு
வடிக்கைகளின் மூலமாக, நல்ல பதப்படுத்தப்பட்ட பாலைக் கொ
பதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்யும் என்பதனைத் தெ
வித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தக் கு
பிட்ட நபர் சம்பந்தமாக அங்கே ஒரு ஜீப் ரிப்பேர் செய்வதற்க
கடலூரில் ஒரு தனியார் ஒர்க்ஷாப்பில் விட்டு, 5,000 ரூபாய் செ
செய்ததை அரசு தணிக்கை செய்ததா என்பதை அறிய விரும்
றேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதுபற்றி இதுவரையி
அரசுக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
படிப்பட்ட தகவலைக் கொடுப்பார்கள் என்று சொன்னால் உட
யாக நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் ; தலைவர் அவர்களே, அந்தப் ப
யூனியன் 7 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருக்கும்போது அங்
உள்ள ஒரு வேன், மாண்புமிகு உறுப்பினர் ஜீப் என்று சொன்
அதை ரிப்பேர் செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது, அ
டெண்டர் விட்டு விற்கலாம் என்ற நிலைமை இருக்கும்போது, அ
விற்காமல் கடலூருக்கு தனியார் ஒர்க்ஷாப்புக்கு எடுத்துச் சென்
5 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்திருக்கிறார்கள். இது அவருடை

சொந்த உபயோகத்திற்காகச் செய்கிறரோ என்பது சந்தேகப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த 5 ஆயிரம் ரூபாய் எந்தக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தணிக்கை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் இது வரையிலும் இந்த அரசுக்கு தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருந்த தகவலைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## வீராணம் ஆயக்கட்டுப் பகுதி

*715 வினு—திரு. துரை கலியமூர்த்தி; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வீராணம் ஏரியின் தற்போது பாசனம் பெறும் அதிகாரப் பூர்வமான நஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(ஆ) புஞ்சையில் நஞ்சைப் பாசனம் எவ்வளவு?

மாண்புமிகு: திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) வீராணம் ஏரியின் தற்போது நஞ்சை பாசனம் பெறும் அதிகாரப்பூர்வமான நிலங்களின் பரப்பளவு 44,856 ஏக்கராகும்.

(ஆ) ஏரியின் கீழ் புஞ்சை நிலங்கள் ஏதுமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, வீராணத்தின் கொள்ளளவு 1450 மில்லியன் கன அடி இருந்ததாகவும் தற்போது 950 ஆயிரம் கன அடி தண்ணீர்தான் கொள் அளவு இருப்பதாகவும் கூறுகிறர்கள். அதை அதிகப்படுத்தி அங்கே புஞ்சைப் பாசனம் செய்ய ஏற்றதாக இருக்கிற நிலத்தை நஞ்சைப் பாசனம் செய்யும் வகையில் மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, அந்த ஏரியின் தற்போதைய கொள் அளவு சுமார் ஆயிரம் மில்லியன் கன அடியாகும். இந்தக் கொள் அளவை அதிகப்படுத்துகின்ற திட்டம் தற்போது எதுவும் இல்லை.

திரு. எம். வின்சென்ட்; தலைவர் அவர்களே. வீராணம் நீரை சென்னைக்குக் கொண்டு வருவதன் மூலம் வீராணம் ஏரியினுல் பாசனம் பெறும் நிலங்கள் பாதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, பாதிக்கப்படாது என்று ஏற்கெனவே அரசின் சார்பில் உறுதி யளிக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம்.



திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த பாசனத்தைக் கூடுதலாக ஆழப்படுத்த உத்தேசம் இல்லை என்கிறர்கள். இதிலே கரையை உயர்த்துவதற்கு சென்ற ஆண்டு 374 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதன் காரணமாக எந்த அளவு வேலை நடைப்பெற்றிருக்கிறது. அதை அதிகப்படுத்துவதன் காரணமாக மேற்குப்பகுதி நிலங்கள் தண்ணீர் மயமாக வெள்ளக்காலத்தில் இருந்தது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வீராணம் குடிநீர் திட்டத்தின் கீழ் வீராணம் ஏரியைப் பலப்படுத்துகின்ற திட்டம் உள்ளது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீராணம் ஏரியில் அந்த வேலைகள் நடைபெற்றிருக்கக்கூடும். ஆனுல் பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரையில் 10 லட்சம் ரூபாய் செலவில் ஒரு மாதிரித் திட்டம் லால்பேட்டை 750 ஏக்கரும், வெள்ளியக்குடி ஆயிரம் ஏக்கரும் பாசனம் பெறுகின்ற இரண்டு கால்வாய்களை மட்டும் எடுத்துக்கொண்டு மாதிரித் திட்டம் ஒன்றினை 1977 ஆம் ஆண்டு எடுத்துள்ளோம். அந்தத் திட்டத்தினுடைய நோக்கம் தண்ணீர் வீணுகாமல் தடுப்பதும், எல்லா நிலங்களுக்கும் தேவையான அளவு பாசன வசதி ஏற்பாடு செய்வதும் ஆகும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருபோக சாகுபடி நிலைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது, காவிரிப் பிரச்சினை காரணமாக அது வீராணத்திற்கும் வரும், விவசாயமும் பாதிக்கப்படாது என்றும் தண்ணீர் கிடைக்கும் என்றும் கருத்துக்களைச் சொல்வது தவறு என்று அரசு கருதவில்லையா? எனவே சென்னைக்கு வீராணம் தண்ணீர் கிடைக்காது என்று அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் உருவாகின்றபொழுதே, வீராணம் திட்டத்தில் பாசன வசதி பெறுகின்ற விவசாயிகள் இதை இங்கே எழுப்பினுர்கள். பழைய அரசு இருந்தபோது விவசாயத்திற்கு எந்தவிதத்திலும் இந்தக் குடிநீர்த் திட்டத்தால் பாதிப்பு ஏற்படாது என்று உறுதி அளிக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம். ஆனுல் அது பற்றிய முழுவிவரமும் தற்போது என்னிடத்திலே இல்லை.

## Chambagathoppu Dam Project

*716 Q.—Thiru K. J. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Public Works with reference to Question No. 33, answered on 8-8 1977 be pleased to state—

(a) whether the Chambagathoppu Dam Project which has been designed and allotted funds in the last budget has not begun so far; and

(b) if so, the reasons therefore?)

(1978 மார்ச் 30

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; (அ) ஆம்.

(ஆ) உண்மையிலேயே, இத் திட்டத்திற்குப் போதிய அளவிற்கு உபரி தண்ணீர் கிடைக்குமா என்பதனை அறிய, ஆற்றின் நீர் நிலை, நீர் வரத்து போன்ற தகவல்கள் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-10)

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். இதனால் பயன்பெறும் நிலங்கள் ஏறத்தாழ 17,000 ஏக்கர்கள். அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் பற்றாக்குறை இருக் கிறது. ஆகவே, இவற்றைக் கருத்தில்கொண்டு அந்த வேலையைத் துவங்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, வருவாய்த்துறை வாரிய ஆணையாளர்—உணவுத்துறை ஆணையாள ரைத் தலைவராகக் கொண்ட கமிட்டியில் அது சிக்கனமாக இருக்காது என்று தெரிவித்து நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்றும், அதனுடைய ஹைட்ராலஜி என்ன என்பதை பார்க்கவேண்டும் என்றும், அரசாங்கம் அந்தத் துறைத் தலைவர், தலைமைப் பொறியாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் அந்த அப்ரெய்சல் கமிட்டியும் இப்போது ரத்து செய்யப்பட்டு விட்டது.

திரு. பெ. சு, திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த அரசு இந்தத் திட்டத்தை செயல்படுத்து வதாக அறிவித்தது. இந்த அரசும் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் அதற்காகப் பணம் ஒதுக்குவதாக அறிவித்து இருக்கிறபோது, அந்தக் கமிட்டி ஆரம்பித்த நோக்கம் என்ன என்பதை அறிய விரும்பு கிறேன். விவசாயிகளின் நலன் கருதியும், அந்த ஆற்றில் இந்த ஆண்டு ஏராளமான தண்ணீர் மிகுதியாகச் சென்று இருப்பதாலும், அந்தத் தண்ணீர் தேங்கியிருந்தால் கிணறுகளில் நீர் அதிகமாகி யிருக்கும் என்பதாலும், அதைக் கருத்தில் கொண்டு, இதைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த அரசு அந்தத் திட்டத்தைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டது; பிறகு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. அந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டவை வருவாய்த்துறை வாரியம், வழியாக வரவேண்டும். வருவாய்த்துறை வாரியத்தில், நெருக்கடி காலத்தில் ஒரு அப்ரெய்சல் கமிட்டி போட்டார்கள். அந்த அப்ரெய்சல் கமிட்டிக்கு அது வந்தபோது, அந்தத் திட்டம் சிக்கன மாக இருக்காது, போதிய நீரோட்டம் இல்லை, அந்தத் திட்டத்தை எடுப்பதால் பயன் இல்லை என்று சொல்லி அரசாங்கத்திற்கு வந்தது.



1978 மார்ச் 30)

அதை வைத்துக்கொண்டு அரசாங்கம் உண்மையிலேயே அதிலே உள்ள நீரோட்டம், ஹைட்ராலஜி எவ்வளவு என்பதை மீண்டும் ஆராய வேண்டும் என்று அத்துறைக்கு உத்தரவிட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இந்த ஆண்டு பெய்த மழையைக் கணக்கில் வைத்துக்கொள்ளக் கூடாது. இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் நல்ல மழை பெய்து இருக்கிறது. இப்போது அந்த அப்ரெய்சல் கமிட்டி ரத்து செய்யப்பட்டு இருப்பதால், திட்டங்கள் நேரடியாக அரசாங்கத்திற்கே பழையபடி மீண்டும் கொண்டு வரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சொன்னார்கள். அப்படி இந்த அரசு ஏற்றுக் கொண்டதா? முன்பு இருந்த அரசு ஏற்றுக்கொண்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எந்தத் திட்டமும் முதலில் ஒப்புக் கொள்கிறபோது—இட் ஈஸ் அக்ரீட் இன் பிரின்சிபிள்—என்று தான் போடுவார்கள். அது அரசு மாறுவது இல்லை.

அய்யன்குளம் கண்மாய்

717—வினா * திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பழனி வட்டம், ஆயக்குடி பகுதியில் உள்ள அய்யன் குளம் என்ற கண்மாய் சுமார் 20 ஆண்டுக் காலமாக எவ்வித மராமத்து இல்லாமலும் தண்ணீர் வரும் வாய்க்கால் மண் மூடியும் கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாரமத்து செய்ய என்ன நட வடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இக் குளத்தைச் சீர்ப்படுத்தும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணி தொடங்கப் பெறும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, பொதுவாக குளங் கள் மராமத்து செய்கிறபோது இந்த வனத் துறையிலிருந்து கருவேலம் மரச்செடிகளை அங்கே நடுவதற்கு முன்பு இப்படிப் பட்ட மராமத்து செய்தால் பயன் உள்ளதாக இருக்கும், அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப் பினர் தெரிவித்த யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

### தர்மபுரியில் ஜுடிசியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு

* 718 வினா—திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தர்மபுரியில் ஜுடிசியில் சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIAR: (a) There is a proposal to constitute a Court of Judicial First Class Magistrate at Dharmapuri.

(b) The Committee on jurisdiction of Courts has recommended that a Sub Divisonal Judicial Magistrate's Court may be constituted at Dharmapuri. Since the Sub Divisonal Judicial Magistrates have no appellate jurisdiction according to the new Criminal Procedure Code 1973 and as the Sub Divisional Judicial Magistrates are in effect Judicial First Class Magistrate the High Court has considered that a Judicial First class Magistrate's Court may be constituted at Dharmapuri instead of a Sub-Divisonal Judicial Magisrate's Court at Dharmapuri, and it has sent a detailed proposal for the constitution of a Judicial First Class Magitrate's court at Dharmapuri. The proposal is under consideration of the Government.

THIRU K. APPUNU GOUNDER : Respected Speaker Sir, will the Hon. Minister be pleased to state whether this Court will be opened this year itself?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR; Mr Speoker Sir, the constitution of Judicial First Class Magistrat'e Court at Dharmapuri has not been included in the priority list. The reply from the High Court is expected and awaited.

THIRU K. APPUNU GOUNDER : Respected Speaker Sir, Is it necessary that priority list is an important criteria for starting the Courts? Is not the recommendation of the High Court enough to start the Courts?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The system of evolution of priority list is resorted to for the simple reason that, what I call, establishment of courts at random here and there through outthe year results in what is called imbalance of



the financial resources of the State, with the result that some of the Plan Schemes are not being implemented or partly implemented, which is because of the prejudicial effect caused on, what I call, these plan Schemes and other things. The Finance Department of the Government of Tamil Nadu has its own limitations in sanctioning these things. Therefore, the system of priority list has been evolved.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த ஜுடிசியல் சப் மாஜிஸ்ட்ரேட் 36 பேர்கள் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள், அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்படுவார்களா? அதுமட்டுமல்ல. செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பதவிகளை ஒழித்துவிட்டு, சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்-கம்-முன்சீப் பதவிகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது எப்போது வரும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The hon. Memberis requested to put two separate questions onthese two separate and distinct matters.

### கௌரவ நீதிபதிகள்

* 719 வினா— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கௌரவ நீதிபதிகளை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் இது அமுலுக்கு வரும்

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIAR : (a) and (b) : There is no provision to appoint Honorary Magistrates in the code of Criminal procedure, 1973. Representations have been received from the Federation of former Honorary Magistrates of India, Ex. Honorary Presidency Magistrates' Association Madras etc. for the revival of Honorary Magistracy. Their representations are under examination of the Government.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஆனரரி மாஜிஸ்ட்ரேட்களை நியமிப்பதன் மூலம் துரிதமாகப் பல வழக்குகளை நிவர்த்தி செய்ய முடியும். அவ்வாறு அவர்களை நியமிக்காவிட்டாலும், முன்னாள் ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஒருசில வழக்குகளைத் தீர்ப்பதற்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது. அந்த முறையை மீண்டும் கொண்டுவர இந்த அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The suggestions will be considered by the Government.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, சட்ட அமைச்சரவர்கள் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிக்க கோடு ஆஃப் கிரிமினல் ப்ரொசீஜரில் ப்ரொவிஷன்' இல்லை என்று சொன்னார்கள். அதை மீறி ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I presume and if I am wrong, the hon. member may correct me that the state Legislature has the power to legislate for an institution of a simllar type, This is a concurrent subject and this can be done a'so with the approval of the Government of India because principally the Act has been the Act of the Central Government.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? அவர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR The question does not arise because it is only under consideration.

### புதுமனைக்குப்பம் பகுதி மீனவர்கள்

* 720 வினா— திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள புதுமனைக் குப்பம் கடலோரப் பகுதியில் வாழ்ந்துவரும் மீனவர் குடும்பங்களை அவர்கள் குடியிருந்து வரும் குடிசைகளிலிருந்து வெளியேற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் பாதுகாப்புக்கு இந்த அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் — (அ) ஆம்

(ஆ) அவர்களின் மாற்று குடியிருப்பு வசதிக்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவரவர்களே, அந்தத் துறைமுகத்தை ஒட்டியே கட்டடம் கட்டினால் கடற்கரை ஓரமாக இருக்கிற அந்த மீனவர்களுக்கு ஏதுவாக இருக்கும்



என்று அந்தப் பகுதியிலிருக்கின்ற மீனவர்களிடம் இருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்தத் துறைமுகத்தைக் கட்டுகின்ற நேரத்திலேயே அங்கே கட்டிடம் கட்டித் தர அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, கடற்கரையை ஒட்டி வாழ்கின்ற அந்த மீனவர்களுக்கு கூடுமான மட்டும் அந்த இடத்திலேயே புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று அந்த மீனவர்கள் விண்ணப்பம் அளித்திருக்கிறார்கள். நான் அந்தப் பகுதியை நேரிலேயே சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். அவர்கள் என்னிடத்திலே நேரிலும் சொன்னார்கள் இவ்வாறு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று. ஆனால் அந்தத் துறைமுகத்தைக் கட்ட வேண்டுமென்றாலே அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்தாக வேண்டும். அதற்குப் பிறகு இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்பது முடியாத காரியம். இருந்தாலும் எவ்வளவு அருகாமையிலே அவர்களுக்கு இல்லங்களைக் கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு அருகாமையிலேயே கட்டிக்கொடுக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சின்கோனா துறை.

* 721 வினா— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சின்கோனா உற்பத்திக் கழகம் ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### கூட்டுறவு வங்கிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்

* 722 வினா—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவு வங்கிகளுக்கு ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) ஆம்

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்குக் குழுக்களை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அமைக்கப் படுகிற அந்தக் குழுவிலே ஒரு சீஃப் ப்ரமோட்டரையும் உறுப் பினராக நியமிக்கிற உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு .க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஆலோசனைக் குழு அமைப்பதற்குத்தான் விதிமுறைகளிலே இடமிருக்கிறது. ஆகவே சீஃப் ப்ரமோட்டரை நியமிக்கின்ற அதிகாரம் எதுவும் சட்டத் திலே கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர் களைக் கொண்டு அமைக்கப்படுகிறதா? அல்லது எப்படி அமைக்கப் படுகிறது? அந்தக் குழு எப்போது தன்னுடைய பணியைத் தொடங்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவ ரவர்களே, இந்த ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு அறிவிக்கப் பட்ட நேரத்திலேயே அது தன்னுடைய பணியை ஆரம்பிக்கும். கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதற்கு அரசியல் ரீதியாக ஆலோசனைக் குழு அமைப்பது என்பது அரசினுடைய எண்ணத் திலே இல்லை. நல்லமுறையிலே அந்தச் சங்கங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்ற வகையிலே விவரம் தெரிந்தவர்கள் அந்த நல்லவர்கள்தான் அந்தக் குழுவிலே இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழுவின் தலைவர் யாராக இருப்பார். இப் போது டி. டி. சி.-க்கு கலெக்டரே தலைவராக இருக்கிறாரே, அது போல் இருக்குமா.? அல்லது கூட்டுறவு வங்கித் தலைவர்களே தலை வர்களாக இருக்கிறார்களே, அதுபோல் இருக்குமா.? எப்படி அமைக் கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர வர்களே, பல்வேறு சந்தர்ப்பங்களிலே பல்வேறு உறுப்பினர்கள் ஜனநாயக முறையிலே இந்தக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்று கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதிகாரிகள் இதிலே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்ற குறைபாடும் மாண்புமிகு உறுப்பினர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லப்பட்டது. ஆகவே அதிகாரிகளைக் கண்காணித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகின்ற முறையிலே இந்தக் குழு அமைக்கப்படுகிறது.



திரு. ஒ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழுஅமைக்கப்படும்போது ஏற்கனவே கூட்டுறவு நிறுவ னங்களிலே அங்கம் வகித்து ஒழுங்கீனமாக நடந்துகொண்டு விசா ரணைக்கு உட்பட்டவர்களை இதில் இடம் பெறச்செய்யாமல் தவிர் ப்பதற்குஅரசுக்கு உத்தேசம் உண்டாஎன்பதைஅறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர வர்களே, ஏற்கனவே அங்கம் வகித்து குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டவர்கள் இந்த ஆலோசனைக் குழுவிலே நிச்சயமாக இடம் பெற மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழு என்பது ஒரு தனி அதிகாரிக்கு ஆலோசனை வழங்குவதற்காகவா? அல்லது அந்த வங்கிகளின் அலுவல்களைக் கவனிப்பதற்கா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கு ஆலோ சனைக் குழு என்று பெயர் இருக்கிறதே, யாருக்காக அது இருக் கிறது என்பதைத் தெளிவு படுத்தவேண்டும், அதற்கு ஒரு தலை வரைப் போட்டு அந்தத்தலைவருக்காவது அரசு அதிகாரம் தருவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தனி அதிகாரிக்கு ஆலோசனை சொல்வதற்காகத்தான் இந்த ஆலோசனைக் குழு அமைக்கப்படுகிறது என்று நான் ஏற்கனவே சொன்ன நேரத்தில் வங்கியினுடைய அல்லது கூட்டுறவு நிறுவனத்தின் நடைமுறையை உன்னிப்பாகக் கண்காணித்து வந்தால்தான் சரியான முறையில் தனி அதிகாரிக்கு ஆலோசனைகள் சொல்ல முடியும். ஆகவே. நியமனம் செய்யப்படுகிற இந்தக் கமிட்டி நிர்வாகத்தையும் கண் காணித்துக் கொண்டிருந்து அங்கு தவறுகள் ஏற்படுமானால் அதைப் பொறுத்துத் தனி அதிகாரிக்கு ஆலோசனை சொல்வதற்கும் இந்தக் குழு பயன்படும்.

திரு. ஆ. நடராசன்: கூட்டுறவு வங்கிகளில், கூட்டுறவுச் சங் கங்களில் தேர்தல் நடத்துகிற உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நேற்று முன் தினம் மானியக் கோரிக்கை மீது இங்கே இந்த அவையில் பேசியபோது தேர்தல் நடத்துகிற ஆலோசனை நிச்சயமாக இந்த அரசுக்கு உண்டு. என்றாவது ஒரு நாள் தேர்தல்கள் நடத்தித்தாக வேண்டும் என்று சொன்னேன்சட்டத் திருத்தங்கள் இந்த அவையில் நிறைவே றியவுடன்தேர்தல்கள் நடத்துவது பற்றி இந்த அரசு நிச்சயமாக ஆலோசித்து முடிவு எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : ஆலோசனைக் கமிட்டி, அட்வைஸரிக் கமிட்டி என்பது ஒரு அதிகாரமற்ற கமிட்டியாக இயங்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே எக்ஸிக்யூட்டிவ் பவர்ஸ், நிர்வாக அதி காரமுள்ள குழுவாக அது நல்லமுறையில் இயங்க இந்த அரசு இந்தப் பிரச்சனையை மறுபரிசீலனை செய்யுமா?

[1978 மார்ச் 30

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: எக்ஸிக்யூட்டிவ்பவர்ஸ்' அட்வைஸரி பவர்ஸ் இவற்றிற்கு பாரதூர வித்தியாசம் உண்டு.

திரு. செ. சிவசாமி: ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே, ஆனால் அதே நேரத்தில் தேர்தல்களும் கொண்டுவரப்படும் என்றும் சொல்லப்படுகிறதே, இதன் மூலம் தேர்தல்கள் தள்ளிப் போடப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆலோசனைக் குழு அமைக்கிற ஒரே காரணத்தினால் நிச்சயமாக தேர்தல்கள் தள்ளிப் போடப்படாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த ஆலோசனைக் குழுவில் இடம் பெறுபவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களில் ஒருவரும், இன்னொருவர் பெண் உறுப்பினராகவும் இருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆலோசனைக் குழுவில் இடம் பெறுவதில் ஆலோசனைகூறத்தகுதிபடைத்தவர்கள்தான் தேவையே தவிர அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பிரச்னை அல்ல. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்தக்கோரிக்கையைக்கவனித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய இடம் அளிக்கப்பட கூடுமான மட்டும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. அ. க. அரங்கநாதன்: ஆட்சிக்கு வந்து எட்டுமாதங்களாகிறது. ஆலோசனைக் குழு போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது எவ்வளவு மாதங்களுக்குள் அல்லது ஆண்டுகளுக்குள் போடுவார்கள்? அட்வைசரிக் கமிட்டி என்று சொல்வதற்கும் இதற்கு முன்பே டைரக்டர் இருந்ததற்கும் என்ன வித்தியாசம்? இதை அதிகாரமுள்ள ஒரு ஆலோசனைக் குழுவாகப் போட உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆலோசனைக் குழு சீக்கிரம் அமைக்கப்படவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள் என்று தெரிகிறது. நம் மாநில பதிவாளரிடம் அதற்கான பட்டியல்கள் கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்தவுடன் அறிவிக்கப்படும்.

கூட்டுறவு நிதி

* 723 வினா— திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதி கூட்டுறவு அபிவிருத்தி நிதி இவைகளின் மூலம் தமிழ்நாடு பூராவிலும் இதுவரை சேர்ந்துள்ள மொத்த தொகை எவ்வளவு?

(ஆ) இவை எந்தெந்த வகையில் செலவழிக்கப்படுகிறது?



1978 மார்ச் 30]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) கூட்டுறவு கல்வி நிதியில் 31-1-78 வரை ரூ. 79.86 லட்சம் சேர்ந்துள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி நிதியில் 31-1-78 வரை ரூ. 179.50 லட்சம் சேர்ந்துள்ளது.

(ஆ) கூட்டுறவு கல்வி நிதிக் குழுவினால் அங்கீகாரம் செய்யப்பட்ட கூட்டுறவிற்கான கல்வி, பயிற்சி, விளம்பரம், பிரச்சாரம் ஆகிய திட்டங்களுக்குக் கூட்டுறவுக் கல்வி நிதி பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்து பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களின் மேம்பாட்டிற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

எட்டாம் வகுப்பில் பொதுத் தேர்வு

* 724 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 8-ம் வகுப்புக்கான மாணவர்களுக்கு நடத்தப்பெறும் 'பொதுத் தேர்வு' முறையை மாற்றியமைக்கும் அல்லது ரத்து செய்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இப்பொழுதுள்ளது 8-ஆம் வகுப்பில் பொதுத் தேர்வு அல்ல. கேள்வித் தாள்கள் மட்டும் பொதுவாக அச்சிடப்பட்டுப் பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. விடைத் தாள்கள் அந்தந்தப் பள்ளிகளில் தான் திருத்தப்படுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: முன்பே இ. எஸ். எல். ஸி. என்னும் பொதுத் தேர்வு இருந்ததே, அது அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்தொடக்கப்பள்ளிகளில் மட்டும் 8வது வகுப்பின் இறுதியில் இ. எஸ். எல் சி. என்னும் பொதுத்தேர்வு 1941-42 ல் தொடங்கப்பட்டது. உயர்நிலைப்பள்ளிகளிலும் 8வது வகுப்பு இறுதியில் பொதுத் தேர்வு கொண்டுவரலாமா என்று 1929-ல் ஆய்வு செய்யப்பட்டுப்பின்னர் இளம்வயது சிறார்களை அத்தகைய பொதுத்தேர்வுக்கு ஆளாக்கவேண்டாமென்று கருதப்பட்டு அந்த எண்ணம் கைவிடப்பட்டது. இப்பொழுது உள்ளது 8-ம் வகுப்பில் பொதுத் தேர்வு அல்ல. கேள்வித்தாள்கள் மட்டும் பொதுவாக அச்சிடப்பட்டு, பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(முற்பகல் 9.30)

திரு. வி. கே. ராஜு: தலைவர் அவர்களே, மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஐந்தாம் வகுப்பிலும் எட்டாம் வகுப்பிலும் பொதுத் தேர்வுகளை நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்போது இல்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் இருக்கின்ற பாட முறைகள் சரியாக நடத்தப்படுவதில்லை என்ற புகார் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே ஐந்தாம் வகுப்பிலும் எட்டாம் வகுப்பிலும் பொதுத் தேர்வு முறையை ஏற்படுத்தினால் இதிலுள்ள பாடங்களை ஆசிரியர்கள் நல்லமுறையில் கற்றுக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இந்த இரண்டு வகுப்புகளிலும் பொதுத் தேர்வு முறையைக் கொண்டுவருவதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1963 மார்ச்சு முதல் இ. எஸ். எல். சி. தேர்வு பின்வரும் காரணங்களுக்காகக் கைவிடப்பட்டது. (1) இளம் சிறுர்களை பல பொதுத் தேர்வுகளுக்கு ஆட்படுத்துவது உசிதமல்ல. (2) 8-வது படிக்கும் மாணவர்கள் மனநிலை அத்தகைய பொதுத் தேர்வின் சிரமத்தைத் தாங்கக் கூடியதல்ல, (3) எல்லோருக்கும் எஸ். எஸ். எல். சி. முடிய கல்வி தரவேண்டும் என்ற குறிக்கோளை அரசு ஏற்றபின் 8-வது வகுப்பில் வடிகட்டுவது போன்ற ஒரு தேர்வுக்கு அவசியமில்லை. (4) உயர்நிலைப்பள்ளிகளில் 8-ம் வகுப்பில் பொதுத் தேர்வு இல்லாதபோது, உயர் தொடக்கப் பள்ளிகளிலும் தேவையில்லை. (5) 8-வது வகுப்பு பொதுத் தேர்வினை நடத்த நிர்வாகச்சிரமங்களும், பணச் செலவும் அதிகமாகும்.

## கிருட்டிணகிரியில் தொழிற் கல்விக் கூடம்

* வினா 725—திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தருமபுரி மாவட்டம் கிருட்டிணகிரியில் தொழிற் கல்விக் கூடம் (பாலிடெக்னிக்) ஆரம்பிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஒன்றினை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துருவில் முடிவெடுத்தபின், தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப் படவிருக்கும் பாலிடெக்னிக்கை கிருஷ்ணகிரியில் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, பல்வேறு மாவட்டங்களில் அதிகமாக பாலிடெக்னிக் பள்ளிகள் தேவைப்படுகின்றன. ஆக, அரசு இதைப் பற்றிப் பரிசிலனை செய்து, ஒட்டு மொத்தமாக தேவைப்படுகின்ற மாவட்டங்களில் எல்லாம் அதிகமான பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. அ. க. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, படித்து விட்டு வேலையின்றி நிறைய மாணவர்கள் இருக்கின்ற காரணத்தால், பாலிடெக்னிக்குகளை அமைப்பதில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 3, 4 துவங்கினால் இதன் மூலமாகத்தொழில்கல்வி படித்து, தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கும், தனியார் துறை மூலம் தொழில்களைப் பெருக்கிக்கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும், ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும்நான்கைந்து பாலிடெக்னிக்களையோ அல்லது ஐ. டி. ஐ. போன்ற பள்ளிகளையோ திறப்பதற்கு அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்பவும், இருக்கின்ற வசதிக்கு ஏற்பவும் அரசாங்கம் இதை நிறைவேற்ற முயற்சிகளை எடுக்கும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தர்மபுரியில் ஒரு கல்லூரி இருக்கிறது. கிருஷ்ணகிரியிலும் ஒரு கல்லூரி இருக்கிறது. ஆகவே, பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற ஓசூரில் இடவசதி எல்லாம் இருப்பதால் ஓசூரில் இந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதைப்பற்றி ஆலோசிப்பதற்கு போட்ட குழு, தர்மபுரி மாவட்டத்தில் இந்த பாலிடெக்னிக்கை ஓசூரிலோ அல்லது கிருஷ்ணகிரியிலோ அல்லது

[1978 மார்ச் 30

அரூரிலோ – ஏதாவது ஒரு இடத்தில் ஏற்படுத்தலாம் என்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர்அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த பாலிடெக்னிக்கில், ஆண்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்களா அல்லது ஆண்களும் பெண்களும் சேர்ந்து படித்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆண்கள் மட்டுமல்ல. பெண்களையும் இதில் சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தேவைக்கு ஏற்ப இருக்கின்ற வசதிக்கு ஏற்ப இந்த ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர்: தர்மபுரி மாவட்டத்திற்கு தர்மபுரி தலைநகரமாக இருக்கிறது. ஆகவே, தர்மபுரியிலேயே இந்த பாலிடெக்னிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று பொதுமக்களிடமிருந்து மனு வந்துள்ளதா? அதன் அடிப்படையில் தர்மபுரியிலேயே இந்த பாலிடெக்னிக் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, டிப்ளமா படிப்பை 3 ஆண்டுகள் படிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், சாண்ட்விச் கோர்சைப் படிப்பதற்கு 4 ஆண்டுகள் படிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் டிப்ளமாதான். இதை 4 ஆண்டுகள் படிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த வேறுபாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சாண்ட்விச் கோர்சைப் படிக்கும்போதே அவர்களுக்கு செயல்பூர்வமாகப் பயிற்சி தரப்படுகின்ற ஒன்றாகும்இது. ஆகவே, இதை மாற்றுவதற்கான உத்தேசம் இல்லை.

## நகராட்சி உயர்நிலைப்பள்ளி, மாயூரம்

* வினா726—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை, அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியினை அரசாங்கமே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்சமயம் இல்லை.



1978 மார்ச் 30]

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே உள்ள நகராட்சிகள் நிதி நிலை காரணமாக உயர்நிலைப் பள்ளிகளை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இப்படிக் கேட்டால், எல்லா உறுப்பினர்களும் இப்படிக் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். இது மாயூரம் நகராட்சியைப் பற்றிய கேள்வி. எனவே, அதையொட்டிக் கேளுங்கள்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரம் நகராட்சியிலே நிதி நிலை நெருக்கடி காரணமாக இந்த உயர்நிலைப் பள்ளியை நடத்த முடியாமல் இருப்பதால், இந்த உயர்நிலைப் பள்ளியை அரசே ஏற்று நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசு ஏற்று நடத்துவதற்கான ஒரு குறிப்புப் பரிசிலனையில் இருந்த போது, அவர்கள் கோரிக்கை தந்தார்கள். ஆனால், நஷ்ட ஈடு கேட்கப்பட்டதனால், அவ்வாறு கொடுக்க விதிமுறை இடம் தராததால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியை எடுத்துக் கொள்வதுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை மீண்டும் அரசு திருப்பிக் கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறதே, அதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மீண்டும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சிகளுக்கே திருப்பி அளிப்பது பற்றி அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, உயர்நிலைப் பள்ளிகளை முன்பு அரசு நடத்தி, அதற்கு 'சி' விங் அமைப்பு என்று அறிவிக்கப்பட்டது. தற்போது நகராட்சி மன்றங்கள் விரும்பினால், அவர்களிடம் அரசு அந்தப் பள்ளிகளைத் திருப்பி ஒப்படைக்க இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தற்போது அப்படி எடுத்துக் கொள்ளப்படும் பள்ளிகளின் நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட்ட நகரசபை பள்ளிகளை மீண்டும் திருப்பித் தரும் யோசனை இப்போது அரசின் பரிசிலனையில் இருக்கின்றது. அவர்கள் மானியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அதிகப்படுத்துவது பற்றி முடிவெடுத்தவுடன், இந்த நகரசபைப் பள்ளிகள் திருப்பித் தரப்படும்.

[1978 மார்ச் 30

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி :</u> தலைவர் அவர்களே, இந்த நகராட்சி மன்றங்களிலே போதுமான நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால் தான், இந்தக் கேள்வி இங்கே கேட்கப்படுவதன் நோக்கம், நகராட்சி மன்றங்களிலே போதுயான நிதி வசதி கிடையாது, அது எந்த நகரமாக இருந்தாலும், அங்குள்ள நகராட்சிகளில் போதுமான நிதி வசதி இல்லை, இப்படி பல இடங்களில் இருக்கிறது, வட ஆற்காடு மாவட்டத்தில், வாலாஜாபேட்டையில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, எல்லா நகராட்சிகளிலேயும் இருக்கின்ற எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் இந்த அரசு தயக்கம் இல்லாமல் நிதி நிலைமையை சரிசெய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், கருத்தில் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே, நிதி நிலைமை இருப்பதால்தான் அங்கே உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்கிறார்கள். இபபோது பல உயர்நிலைப் பள்ளிகள் சரியான முறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், சில நகரசபைகளிலே போதுமான அளவில் பண வசதி இல்லை என்று சொல்லப்படுகிறது. இப்போது தனியார் பள்ளிகளுக்குத் தரப்படுவதுபோல், நகரசபைப் பள்ளிகளுக்கும் மானியம் கொடுப்பது என்ற யோசனை பரிசீலனையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## <u>சென்னை, பட்டினப்பாக்கம் குடியிருப்புகளுக்கான வாடகை.</u>

* <u>வினா 727— திரு. என். வரதராஜன் :</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை, பட்டினப்பாக்கத்தில் அரசு குடியிருப்பு மனைகளில் வாடகைக்கு இருக்கும் குறைந்த வருவாய் உள்ள அரசு ஊழியர்களிடம் அதிகபட்சமாக மாத வாடகை வசூலிக்கப்படுகிறதா ?

(ஆ) அப்படியானால் எந்த அடிப்படையில் இந்த வாடகை நிச்சயிக்கப்படுகிறது ?

(இ) இதற்கு அரசு ஊழியர்களிடமிருந்து ஆட்சேபணை வந்ததா ?

(ஈ) அந்த ஆட்சேபணையின் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> (அ)விலிருந்து (ஈ)வரை :



1978 மார்ச் 30]

பட்டினப்பாக்கத்திலிருக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான அரசு குடியிருப்புகளில் 2-10-1970-க்கு முன்பு ஒதுக்கீடு பெற்ற அரசு ஊழியர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வாடகைக்கும், 2–10–1970-க்குப் பின்பு ஒதுக்கீடு பெற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வாடகைக்கும் வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாட்டினை நீக்க வேண்டுமென அரசு ஊழியர்கள் முறையிட்டுள்ளனர். இதனை அடுத்து அரசு குடியிருப்புகளில் உள்ள அரசு ஊழியர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வாடகை விதத்தை மறு பரிசீலனை செய்யக் கோரி ஒரு தனி நபர் குழு அமைக்கப்பட்டது. இக்குழு சமர்ப்பித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டினப்பாக்கத்திலே கட்டப்பட்ட வீடுகள் முன்னால் மீனவர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள். அவர்கள் அங்கே குடியேற மறுத்ததன் காரணமாக, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்த வீடுகள் இருக்கக்கூடிய நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியாது. அந்த வீடுகள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. நான் அந்த நிலைமையைப் பார்த்திருக்கிறேன். எனவே, அந்த வீடுகளை இடித்துவிட்டு, கடற்கரை ஓரமாகத் தங்குவதற்கு ஏற்ற அளவில் எல்லா வசதிகளோடும் கூடிய வீடுகள் கட்டுவதற்கும், அதற்கு நியாயமான வாடகை நிர்ணயிப்பதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.40]

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> கேள்வி பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதி பற்றியது. மீனவர்களைப் பற்றி அல்ல.

<u>திரு. பொ. சிகாமணி :</u> சில அதிகாரிகளுக்குச் சொந்த வீடு இருந்தும் வாடகைக்கு, ரெண்ட் கன்ட்ரோல் வீடுகளில் இருக்கிறார்கள். இதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. துரை முருகன் :</u> * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இக்கேள்விக்கு அனுமதி இல்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 மார்ச் 30

இந்துஸ்தான் எக்யூப்மென்ட் மானுபாக்சரர்ஸ், சிங்காநல்லூர்.

*728 வினா. திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் நகராட்சியைச் சேர்ந்த ஆவாரம்பாளையத்திலுள்ள இந்துஸ்தான எக்யூப்மென்ட் மானுபாக்சரர்ஸ் கம்பெனி கதவடைப்பு செய்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆலையை திறக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ); கதவடைப்பு ஏதும் இல்லையாயினும் நிர்வாகம் 1-3-1976 முதல் இயங்கவில்லை.

கோவை இரண்டாம் வட்ட தொழிலாளர் துறை அலுவலர் முன்பு இத்தொழிலகம் திரும்ப இயங்குவது பற்றிய பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

திரு. ஆ. நடராசன் : இரண்டாண்டுக் காலமாக மூடப்பட்டு நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை இருக்கும் காரணத்தால் அந்த ஆலையைத் திறக்க அரசு வேகமான முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை. 65 தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள்.

வங்கியிலிருந்து நிர்வாகம் கேட்டுக்கொண்ட கடன் கிடைத்தவுடன் திருவாளம் மீண்டும் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிர்வாகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் தொழிற்சாலையை மீண்டும் திறப்பது குறித்து நேரடிப் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாகத் தெரிகிறது. கோவை இரண்டாம் வட்டத் தொழிலாளர் துறை அலுவலர் 28-2-78 அன்று பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார். கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இரு தரப்பினரையும் 3-3-78 அன்று கூட்டி வைத்து பேச்சு வார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திரு. ஆ. நடராசன் : அந்தப் பேச்சு வார்த்தை முடிந்து அந்தத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பும் வரை அவர்களுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1978 மார்ச் 30]

திரு. மு. அம்பிகாபதி : இந்தத் தொழிற்சாலை வேலை செய்யாமல் இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. நானும் அங்கே சென்றபோது என்னிடமும் கூறினார்கள். 60 பேர் நிரந்தரமானவர்கள், பாக்கியுள்ளவர்கள் பதிலிகள் — ட்ரெயினிஸ், 500 பேர் அவ்வாறு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தகவல் சரியானது அல்ல என்பதை உணர்ந்து மீண்டும் பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலைக் கொண்டு மேலும் இதைப் பற்றி விசாரித்து தெரிந்துகொள்ள முயற்சிக்கிறேன்.

## Nagapattinam-Velankanni Road.

*729Q—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Transport be pleased to state ;

(a) whether there is any proposal to lay road and introduce bus transport from Nagai via Keechankuppam, Akkaraipettai, Vadakku Poikainallur and Therku Poikainallur, to Velankanni (Nagai taluk) and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

## தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

*730 வினா—திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள சிவந்திபுரம் பக்கமுள்ள பூசைத்துறையில் தாம்பிரபரணி ஆற்றின் மீது ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று சிவந்திபுரம் ஊராட்சியிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அக்கோரிக்கை மீது என்ன முடிவு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : அம்பாசமுத்திரத்தில் சிவந்திப்புரத்திற்குத் தெற்கே சுமார் 1,500 ஏக்சர் நிலம் இருக்கிறது, இருபோக நஞ்சை நிலம். இடையிலே தாம்பிரபரணி ஆறு இருக்கிறது. அந்த நஞ்சைக்குப் போக வேண்டிய விவசாயிகள் எல்லாம்

ஆற்றுக்குத் தெற்கே இருக்கிறார்கள். ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் பத்து கிலோ மீட்டர் சுற்றிப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக மாட்டு வண்டி போகக்கூடிய அளவுக்காவது ஒரு பாலம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் அந்தப் பாலத்தின் தேவையும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட வேண்டிய சாலையின் தேவையும் பரிசீலிக்கப்பட்டு தேவைதான் என்று உணரப்பட்டுள்ளது. ஆனாலும் நிதிநிலைத் தட்டுப்பாடு காரணமாக உடனடியாக மேற்கொள்ளப்படவில்லை, நிதிநிலைக்கேற்ப விரைந்து செயல்படுத்த பரிசீலனை செய்து மேற்கொள்ளப்படும்.

## தட்டாமனைப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம்

*731 வினா—திரு. த. புஸ்பராஜு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில், கரம்பக்குடி—தஞ்சாவூர் சாலையில் உள்ள தட்டாமனைப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி.பொன்னையன் (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு, த. புஷ்பராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அந்த ஆற்றிலே ஏற்பட்ட வெள்ளத்தாலே ஒரு பஸ்ஸே மூன்று பர்லாங் தூரம் அடித்துச் செல்லப்பட்டது. அந்த வழியில் 5 பஸ்கள் ஓடுகின்றன. சாதாரணமான மழை பெய்தால் கூட ஆற்றில், அந்த காட்டாற்றில் வெள்ளம் அதிகமாக வந்துவிடுகிறது. ஆகவே, அந்த ஆற்றில் ஒரே ஒரு பாலமாவது, கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே: சாதாரண காம்போகி கட்டுவதற்குக்கூட 11 லட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. நிதிநிலைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் ; தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிதிநிலை குறித்து, இந்தப் பாலம் கட்டுவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக இந்தப் பாலம்





தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களை கரம்பக்குடி என்ற ஊர் மூலமாக இணைக்கக்கூடிய வகையில் உள்ளது. தஞ்சையில் உள்ள சில ஊர்கள் இந்தப் பாலம் இல்லாத நிலையில் பாதிக்கப்படுகிறது. அந்த நிலையில் மழைகாலத்திலே 5,6 நாட்களுக்குத் தொடர்ந்தார்போல் தண்ணீர் ஓடுகிறது, புதிய திருமணங்கள் செய்து கொள்கின்றவர்கள் போகவர முடியாமல் இந்தக் கரையில் மாப்பிள்ளையும் அந்த கரையில் பெண்ணும் காத்து இருக்கக் கூடிய முறையிலே அவர்கள் திருமணம் செய்து ஒன்று சேரமுடியாத நிலைமை இருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டாவது, அவர்கள் இல்லறத்தைத் துவங்கி இன்பமாக வாழ்க்கையைத் துவக்குவதற்காக அரசு உதவி செய்கிற முறையிலே இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டிக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயம் துறவறம் போக மாட்டார்கள். இல்லறம் நடக்கும் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லறம் துவங்குவதற்கு, இன்ப வாழ்க்கை நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் இந்தப் பாலத்தை விட அன்புப் பாலம் தான் தேவை என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போல் இந்தப் பாலம் தேவை என்று கருதுவதால் தான் நிதிநிலைக்கு ஏற்ப கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்படிப்பட்ட பாலங்கள் கட்டவேண்டுமென்றால் நிதிநிலை சரியாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நிதிநிலை சரியாகித்தான் மாநிலத்திலே தேவைப்படும் பாலங்களையெல்லாம் கட்ட வேண்டுமென்றால் பல ஆண்டுகளாவது ஆகும். இப்போது மேற்கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில் கிராமங்கள் முன்னேற வேண்டுமென்றால் பாலங்கள் அதிகமாக அமைக்கப்பட வேண்டும், ஆகவே ஏதாவது புதிய திட்டத்தைத் தொடங்கி வங்கிகளில் இருந்து கடன்கள் பெறுவது தேவைப்படுகின்ற அத்தியாவசியமான பாலங்களைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் கிராமப்புற முன்னேற்றத்திற்கு சாலைகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்று அரசு ஒப்புக்கொள்கிறது. அந்த அடிப்படையிலே தான் புதிய திட்டமாக சாலைகள்-பாதைகள் என்பதை கோர்செக்டாரில் சேர்த்து அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த இயக்கத்தின் மூலமாக அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். பெருமாள் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய வரகூரில் உள்ள சாலை......

[1978 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடம் அதற்குப் பதில் இருக்காது. இந்தக் கேள்வி சம்பந்தப்பட்டதாக இருந்தால் கேளுங்கள்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, நிதிநிலை சரியாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்னை நகரத்திலே அடியில் உள்ள பாலம், மேம் பாலம் என்று கட்டிக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால் கிராமத்தை முன்னேற்றுவது என்றால் தனி கிராண்ட் வாங்கி பாலங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், இல்லையென்றால் கிராமங்கள் ஒருகாலும் முன்னேற முடியாது. இதை மனதிலே கொண்டு ஏதாவது திட்டமிட்டு அரசாங்கம் இதைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களுக்கும், நகர்ப்புறங்களைப் போல் அல்லது நகர்ப்புறங்களை விட அதிகமாகத் திட்டங்கள் தீட்டப் படவேண்டுமென்ற முறையில் தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மத்திய அரசு உதவிக்காக, இவைகளுக் காக பல கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிற காரணத் தால், மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று மாநில அரசு அணுகியிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, நிதிநிலை சரியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு, அதுவும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு தனிச் சலுகைகள் கொடுத்து, தனி நிதி ஒதுக்கி, மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி கேட்டு பெற்று அதைச் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினரின் விருப்பப்படி த்தான் செயல் திட்டம் அமலில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இது போன்ற பாலங்கள் பல நம்முடைய தமிழ்நாட்டில் கட்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே, மத்திய அரசினுடைய அனுமதி யைப் பெற்று உலக வங்கியிடம் நீண்ட காலக் கடன்களைப்பெற்று இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்குத்தான் மத்திய அரசினுடைய உதவி தற்பொழுது கிடைத்திருக்கிறது. கிராம மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அதிக நிதி ஒதுக்க அரசு அணுகி உள்ளது.



1978 மார்ச் 30]

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, பாலங்களைக் கட்டு வதில் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால்தான் இன்றைக்குத் தேவை அடிப்படையில் கட்ட முடியவில்லை என்று அமைச்சரவர் கள் சொன்னார்கள். கட்டப்படும் பாலங்கள் எந்த அடிப்படை யில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதையும், தற்பொழுது இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட பாலங்கள் எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர் களே, தேவையின் அடிப்படையில் எந்தப் பகுதியில் போக்கு வரத்திற்கு உடனடியாகப் பாலங்கள் தேவையோ அந்த அடிப் படையில் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எத்தனை பாலங்கள் இந்த ஆண்டு எடுக்கப்படுகிறது என்பதற்கான குறிப்பு தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, கடந்த புயல் வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாலங்கள் கட்டவும் ரோடுகள் போடவும் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் மார்ச் மாதத்திற்குள் முடிக்க வேண்டு மென்று உத்தரவு இருப்பதாகத் தெரிகிறது. சல்லி போன்றவை கிடைக்கவில்லை என்று அதிருப்தி நிலவுகிறது. எனவே, அந்தக் காலத்தைக் கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர் களே, மார்ச் மாதத்திற்குள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு எவ்வளவு பணம் செலவிடப்படுகிறதோ அந்த அடிப்படையில் மத்திய அரசினிடத்திருந்து உதவி பெறும் நிலை இருப்பதால் அந்த உத்தரவு அனுப்பப்பட்டது. ஆனாலும் பலயிடங்களில் இன்னும் பணி முற்றுப்பெறாது இருப்பதால் தொடர்ந்து அந்தப் பணிகளை மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் 40,000 ரூபாய்க்கு மேல் உள்ள வேலைகளை ஒன்றியத்தின் மூலம் செய்யக்கூடாது என்று விதி யிருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் அதற்கு மேற் பட்ட வேலைகளை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலம் செய்ய குத்தாலம் ஒன்றியத்தில் முடிவு செய்து ஏழு பாலங்கள் கட்டு வதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எழுதியும் மதிப்பீடு தயார் செய்து நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினர் வேலையை செய்து கொடுக்க தாமதம் செய்து வருகிறார்கள். நிதி வசதியுள்ள அந்த ஒன்றியத்திற்கு மதிப்பீடுகளை உடனடியாகத் தயார் செய்து முன்னுரிமை கொடுத்து வேலையைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 30

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். : பேரவைத் தலைவரவர்களே, நிதிவசதியுள்ள ஒன்றியங்கள் இப்பணிகளை மேற்கொள்ள பரிந்துரைக்கும் பொழுது உடனடியாகக் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. செ. சிவகாமி : தலைவரவர்களே, கிராமப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பாலங்களும், ரோடுகளும் போடுவதற்கு ஒரு திட்டத்தைத் தயார் செய்து கொண்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசினிடத்தில் நிதி கோரி வற்புறுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்;

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, அப்படியொரு திட்டத்தை அரசு தயார் செய்து, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசை மாநில அரசு அணுகுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, குற்றாலம் ஒன்றியத்தில் ஏழு பாலங்களைக் கட்டுவதற்கு நிதிவசதி இருந்து, அதற்கான செண்டேஜ் தொகைகூட நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைக்குக் கட்டப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(3) ஒழுங்குப் பிரச்னைகள்

(அ) ஓர் உறுப்பினர் சிறையிலிருந்து முன்னதாக விடுதலையாகி விட்டதாக தவறாக அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

*திரு. இரெ. இராசமாணிக்கம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான், கழகத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளியேறி வந்து, பிறகு 24 ஆம் தேதி அவைக்கு வந்த பிறகு, நான் நான்கு நாட்கள் முன்னதாக விடுதலையாகி விட்டதாக தாங்கள் ஒரு தவறான தகவலை இந்தச் சபைக்கு அறிவித்தீர்கள். நான் தவறான தகவல் என்று சொன்ன பிறகு தாங்கள் உண்மையான தகவலைத் தெரிந்து மறுபடியும் சொல்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இதுவரையில் சொல்லவில்லை. எனவே, தயவு செய்து நான் எப்பொழுது வந்தேன். எப்படி வந்தேன் என்பதை சபையிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1978 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அன்றைக்கே அதற்கான விளக்கத்தை நீங்கள் திருப்பிச் சொல்லும்பொழுது தாங்கள் சொல்வது சரியாக இருக்குமேயானால் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லி முடித்துவிட்டேன். 15 நாட்களுக்குப் பிறகு இன்றைக்கு அதை எழுப்புகிறீர்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : சபைக் குறிப்பிலே இருக்கிறது என்பதற்காகச் சொன்னேன்.

(4) தகவல் கோரல்.

(அ) நெல்லை மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோய் பரவுவது குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஏற்கனவே கடந்த இரண்டு மூன்று மாதங்களாக மூளைக் காய்ச்சல் நோய் பரவி கிட்டத்தட்ட 100 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். அதுபற்றி ஏற்கனவே 41-வது விதியின்கீழ்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய உணர்வுகளை நானும் உணர்கிறேன். இன்னும் அரசுத் தரப்பிலேயிருந்து பதில் வராததால் தேதி குறிப்பிடவில்லை. நான் இன்றைக்குக் கூட அதை வலியுறுத்தி பதில் பெற நடவடிக்கை எடுக்கிறேன்......

(5) உரிமைப் பிரச்சினைகள்

(அ) 'தினமலர்' நாளேட்டின்மீது எழுப்பப்பட்ட பிரச்னை மீது தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. 11–3–1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் திருச்சியிலிருந்து வெளிவரும் 'தினமலர்' நாளேட்டின்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை இப்பேரவையில் எழுப்பினார், 8-3–1978 அன்று அரசிதழ் பதிவிலா ஊழியர்கள் குறித்த பிரச்னையில் எதிர்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததை வெளியிடுகையில், அந்தப் பத்திரிகை வேண்டுமென்றே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்புச் செய்ததை வெளியிடவில்லை என்றும், அதனால் இது அவை உரிமை மீறிய செயல் என்றும் அவர் எடுத்துக் கூறினார். இதுகுறித்து பத்திரிகைக்கு எழுதி விளக்கம் கேட்டுப் பின்னர் எனது தீர்ப்பை வழங்குவதாக நான் அறிவித்து இருந்தேன்.

பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வந்த விளக்கம் பின்வருமாறு:—

''குறிப்பிட்ட தினத்தில் டெலிபிரிண்டர் இயந்திரம் பழுதடைந்து விட்டதால், தொலைபேசியின் மூலம் செய்திகள் சென்னையிலிருந்து பெறும்படியாயிற்று. தொலைபேசியின் மூலம் செய்தி

எடுத்தபோது தொலைபேசி சரியாகக் கேட்காத நிலையில் அச்செய்தியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் விடுபட்டு விட்டது. சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்ட இத்தவறுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தினமலர் பத்திரிகையைப் பொறுத்தமட்டில், வேண்டுமென்றோ, உள்நோக்கத்துடனோ, செய்திகளை வெளியிடக் கூடியதில்லை என்பதைத் தாங்களும் சட்ட மன்றமும் அறிந்ததே. எனவே, இதில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு பெயர் விடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சூழ்நிலை காரணமாகத் தவறு ஏற்பட்டுள்ளது என்றும், அதற்காக வருத்தமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் மட்டும் விடுப்படக்கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டதென்று தெரியவில்லை. ஆயினும், அவர்கள் உள்நோக்கம் இல்லை என்றும், வருத்தமும் தெரிவிப்பதால் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று கருதி, இத்துடன் மேல் நடவடிக்கை தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) மக்கள் குரல் நாளேடு மீது எடுக்கப்பட்ட பிரச்னை மீது தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை.

15-3-1978 தேதியிட்ட 'மக்கள் குரல்' நாளிதழில் 'சட்ட சபையில் மர்ம மனிதன்' என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை எழுப்பி உள்ளார்.

15–3–1978 அன்று பேரவையில் உறுப்பினரல்லாத ஒருவர் உட்கார்ந்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஆறுமுகம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பியபோது '....எனக்கு வந்த தகவல் உறுப்பினர் அப்துல் லத்தீபை லாபியில் யாரோ பார்க்க வந்திருக்கிறார். அவர் இங்கே உட்கார்ந்து விட்டுப் போயிருக்கிறார் என்பதுதான்....' என்று நான் குறிப்பிட்டேன். இதை 'மக்கள் குரல்' பத்திரிகை ''அந்த இளைஞன் முஸ்லிம் லீக் உறுப்பினர் லத்தீப்புடன் வந்தவர் எனத் தெரிகிறது. இது குறித்து விசாரிக்கிறேன் என்று சபாநாயகர் முனு ஆதி கூறினார்'' என்று வெளியிட்டுள்ளது. எனவே தம்மை வேண்டுமென்றே குறை கூறும்படி இருப்பதாகவும், பேரவைத் தலைவர் கூறியதையே மாற்றி, வேறுவிதத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இருப்பதால் இது அவை உரிமை மீறல் ஆகும் என்று திரு. லத்தீப் அவர்கள்



குறிப்பிட்டுள்ளார். பத்திரிகை வெளியிட்டது தவறாகத்தான் உள்ளது. எனவே, ஆசிரியரை விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. அதற்கு அவரிடமிருந்து வந்த பதில் பின்வருமாறு:—

''15–3–1978 தேதிய மக்கள் குரலில் 'உறுப்பினர் லத்திப் பற்றி தவறாக செய்தி வெளியிடப்பட்டதற்காக வருந்துகிறோம்:

பரபரப்பான சூழ்நிலையில், மர்ம மனிதனைப் பற்றி சபாநாயகர் அவர்கள் வெளியிட்ட தகவல்களை டெலிபோனில் கேட்டு எழுதும்போது இந்தத் தவறு ஏற்பட்டிருக்கிறது.

இனிமேல் இதுபோன்ற தவறுகள் நேரிடாமல் எச்சரிக்கையாக இருக்கும்படி நிருபர்களுக்கும் துணை ஆசிரியர்களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

உறுப்பினர் லத்தீப் அவர்களுடைய கவுரவத்தைப் பாதிக்கும் வகையிலோ, உள்நோக்கத்துடனோ மக்கள் குரலில் வெளியிடப்படவில்லை என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறோம்.''

தவறுக்கு வருத்தம் தெரிவித்தும், இனி இம்மாதிரி தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்வதாவும் எழுதி இருப்பதை ஏற்றுக்கொண்டு, இப்பிரச்னையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

## (இ) திரு. க. சுப்பு அவர்கள் மீது எடுக்கப்பட்ட பிரச்னை மீது தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, பி. சந்திரன். கே. பண்ணை சேதுராம், துரை முத்துசாமி ஆகியோர் 16–3–1978-ஆம் நாள் அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்களை ஒரு தகாத சொற்றொடரை உபயோகித்துப் பேசியது குறித்து உரிமைப் பிரச்னை கொண்டு வந்து அதை அவையில் 17–3–1978 அன்று எழுப்பி, கருத்துக்கள் கூறப்பட்டு, எனது முடிவு பிறகு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது..

இப்பிரச்னை அவையில் எழுப்பப்பட்டபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் முதல்நாள் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வருத்தம் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமிக்கும் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். எனவே, அதை ஏற்றுக்கொண்டு எழுப்பப்பட்ட பிரச்னையின் மீது மேற்கொண்டும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இதை அவை ஏற்கும் என் நம்புகிறேன்.

## (3) ஒழுங்குப் பிரச்னைகள் (தொடர்ச்சி)

### (அ) இராணிப்பேட்டையில் கொண்டாடப்பட்ட உழவர் பெருவிழாவிற்கு அத்தொகுதி உறுப்பினர் அழைக்கப்படாதது பற்றி எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் அறிவுரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21–3–1978 அன்று திரு. துரை முருகன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அவரது தொகுதியில் 24–3–78 அன்று உழவர் திருநாள் கொண்டாடப்பட இருக்கிறது என்றும், அதற்கான அழைப்பிதழ் அவருக்கு அளிக்கப்படவில்லை என்றும், மேலும் அழைப்பிதழில் அவரது பெயர்கூடப் போடப்படவில்லை என்றும், இது அவரது பணியை இப்பேரவை உறுப்பினர் என்ற முறையில் ஆற்றுவதற்கு ஏற்புடைத்ததாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது உறுப்பினர் தொகுதி பற்றியது. இப்பேரவை சம்பந்தப்பட்டது அல்ல. எனவே, பேரவைத் தலைவர் இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது. இருந்தாலும் அரசாங்க நிகழ்ச்சிகளில் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்களை அழைப்பது நல்லது என்ற நோக்கத்தோடு, பேரவைத் தலைவர் என்ற முறையில், எந்தெந்தத் தொகுதிகளிலே அரசாங்க நிகழ்ச்சிகள் நடக்கிறதோ அங்கேயெல்லாம் மக்கள் பிரதிநிதிகளை அழைப்பது தான் மரபு, நியாயம் என்பதை என்னுடைய அறிவுரையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்னையை எழுப்பிய பிறகு 26-3-78 அன்று அங்கே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உணவு விடுதி திறக்கப்பட்டது. அமைச்சர் கூட கலந்து கொண்டார். ஆனால் அவருடைய பெயர் கொட்டை எழுத்திலே போடப்பட்டும், அவர் வரவில்லை. ஆகவே இப்படிப்பட்ட பிரச்னையை அவர் எழுப்பியது நல்ல எண்ணத்தோடு எழுப்பட்ட பிரச்னை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நான் ஏற்கனவே இந்தப் பிரச்னை குறித்து சபையிலே எழுப்பினேன். தாங்கள் எனக்குத் தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தீர்கள். எனவே, அந்தத் தீர்ப்பை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது நான் எழுப்பியது எனக்குக் கொடுக்க வேண்டிய, மக்கள் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கௌரவம் கொடுக்கப்படவில்லை என்பது. அதை விட்டு பெயர் கொட்டை எழுத்தா, சப்பை எழுத்தா என்பதைப் பற்றி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவருடைய வசதியையும், சௌகரியத்தையும் பொறுத்தது. நிகழ்ச்சிகளிலே போடுகிறார்களா என்பது தவிர, அது அவருடைய வசதியைப் பொறுத்தது.



## (6) பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை தவறு நேராவண்ணம் வெளியிடுவதன் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகைகளுக்கு பேரவைத் தலைவர் அறிவுறுத்த வேண்டுகோள்.

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு சிறு வேண்டுகோள். தாங்கள் முதலிலே 2 உரிமைப் பிரச்சினைகளைப் பற்றி அறிவிக்கும்போதும், முதல் உரிமைப் பிரச்சினையிலேயும், இரண்டாவது உரிமைப் பிரச்சினையிலேயும் தொலைபேசி வாயிலாக பேசுகிற காரணத்தாலே தவறுகள் நடந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இரண்டு பிரச்சினையிலேயும் தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். பத்திரிகைக்காரர்கள் தொலைபேசியிலே கேட்டுச் செய்திகளைப் போடுகிறபோது, விட்டுப் போகிறது அல்லது தவறு நடைபெறுகிறது என்கிற நிலைமை ஏற்படுகிறது என்று தெரிவித்தீர்கள். ஒரு உரிமைப் பிரச்சினையிலே தொலைபேசியிலே பேசுகிறபோது எல்லாச் செய்திகளையும் கூறுததால் விட்டுப்போயிருக்கிறது என்ற விளக்கம் கிடைக்கும். இன்னொரு பிரச்சினையில் இல்லாத செய்திகளையும் சேர்த்து சொல்லப்பட்டது என்ற விளக்கம் கிடைக்கும். ஆகவே தயவு செய்து, இந்த தொலைபேசிமூலம் கேட்டு வெளியிட்டிருப்பதுதான் இதற்குக் காரணம் என்றாலும், வெளியாகிற செய்தி தவறு இல்லாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டும் என்று தாங்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். இங்கே பேராசிரியர் கூறிய யோசனையையும் ஏற்றுக் கொள்ளலாம். நீங்கள் சொல்வதைப்போல் அவர்களும் கருதலாம், ஆனால் அவர்கள் தவறு என்று எழுதியிருக்கிறார்கள். நான் படிக்க வேண்டியிருக்கிறது. மேற்கொண்டும் இப்படியே தொலைபேசியினால் தவறு என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்று அவை முடிவெடுத்தால் நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

## (4) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) உறுப்பினரல்லாத ஒருவர் பேரவைக்குள் வந்தது குறித்து.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சிறிது நேரத்திற்கு முன்பு அமைச்சர் பக்கத்தில் ஒரு பையன் வந்தான். அவனை சார்ஜன்ட் பிடித்துப் போயிருக்கிறார், அது யார் என்று அறிய விரும்புகிறேன்.

## (7) அறிக்கை அளித்தல்.

### ஒரு துணைவினாவிற்கான விடையை திருத்தம் செய்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 24-2-1978 அன்று சட்டமன்றப் பேரவை வினா எண்.259 (உடுக்குறியிட்டது) க்கு விடையளிக்கப்பட்ட போது எழுப்பப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் விவசாயக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்க்கும்போது விவசாயிகளின் மகன்களாக இருக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனையும் இருக்கிறது என்றும் அப்படிப்பட்டவர்களுக்கு முன் உரிமை கொடுத்துத்தான் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் என்றும் கூறினேன்.

மேற்கண்ட விடைக்குப் பதிலாக பின்கண்ட பதிலைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்:

வேளாண்மைக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் விண்ணப்பத்தாளில் நிலம் அவர்களின் குடும்பத்திற்கு உண்டா என்ற விவரமும் கேட்கப்படுகிறது. அந்த விபரம் கேட்பதிலிருந்தே விவசாயிகளின் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பது நன்கு தெரிகிறது. இட ஒதுக்கீடு முறைப்படி 12 இடங்கள் விவசாயிகளின் மகன்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு. ஜெ. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, திருத்தி இங்கே கூறியிருக்கிற பதிலிலே இருந்தும் நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தான் இடம் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாத விவசாயிகளுடைய பிள்ளைகளுக்கும் விவசாயக் கல்லூரியில் இடம் அளிக்க சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

## (8) கவன ஈர்ப்பு

### ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி, கொடுமுடி வட்டாரங்களில் மின்சார மோட்டார்களின் 'காயில்கள்' போதிய மின்அழுத்தம் இல்லாமையால் கருகினதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து.

திருமதி சுப்புலட்சுமி: தலைவரவர்களே, ''ஈரோடு வட்டம் மொடக்குறிச்சி, கொடுமுடி வட்டாரங்களில் உள்ள மின்சார மோட்டார்கள் போதிய மின்அழுத்தம் இல்லாததால் 'காயில்கள்'



கருகி விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வருவதால் போதிய அளவில் மின் வழங்க எடுக்க வேண்டியது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாசனக் கிணறுகளில் நல்ல நீர் வசதி இருப்பதால் விவசாயிகளின் மின் தேவை இவ்வாண்டு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் 1,300 மெகா வாட்டாக இருந்த மின் தேவை இந்த ஆண்டு திடீரென்று எதிர்பாராத வகையில் 1,600 மெகா வாட்டாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மின் தேவை அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு பொதுவாக உச்ச வேளை மின் தேவை மிகவும் அதிகமாக இருப்பதாலும் அநேக துணை மின் நிலையங்களில் மின் அழுத்த குறைபாடு ஏற்பட்டுள்ளது.

(2) கொடுமுடி துணை மின் நிலையத்தில் மின் அழுத்தம் 12.3 கி. வோ. முதல் 8.2 கி வோ. வரை இருந்து வந்தது. ஆனால், மோட்டார்களில் காயில் தீய்ந்து போனதாக எந்தப் புகாரும் மின்வாரியத்திற்கு இதுவரை வரவில்லை. 2–3–78 ஆம் தேதி மின் அழுத்த மாற்றிகளில் மின் அழுத்தம் சிறிதளவு உயர்த்தப்பட்டது. பழுதுபட்டிருந்த கெபாசிட்டார்களும் சரி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. அதன் பிறகு மின் அழுத்தம் 11.5 கி. வோ. முதல் 9.8 கி. வோ. வரை அதிகரித்து உள்ளது.

மேலும், மொடக்குறிச்சி பகுதியில் ஆனந்தபாளையம் கிராமத்தில் ஓர் சிறு துணை மின் நிலையம் கூடிய விரைவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேலத்தில் 25 எம்.வி.ஏ.ஆர், சிங்கரன்ஸ் கன்டன்சர் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. இவற்றின் காரணமாக மின் அழுத்த நிலைமை மேலும் சீர்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திருமதி சுப்புலட்சுமி: தலைவரவர்களே, இந்தக் காலத்தில் தான் மின்சார மோட்டார்கள் அதிகம் இயங்கும் நிலை இருக்கிறது. 3 மணி நேரத்திற்குள் 15 தடவை மோட்டார்கள் நின்று இருக்கின்றன. அங்கே, மொடக்குறிச்சி வட்டாரத்தில் மேற் பார்வை பணி சரியில்லை என்று விவசாயிகள் கருதுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே, அதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மின் அழுத்தத்தைப் பொறுத்தவரையில் சாதாரணமாக 11 கே. வி. இருக்க வேண்டும். 11½ கே. வி. முதல் 9.8 கே. வி. வரையில் மின் அழுத்தம் இருக்கிறது. பராமரிப்பு வேலைகள் சரியில்லை என்றால் அதுபற்றி நிச்சயமாக வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

(3) தகவல் கோரல்-தொடர்ச்சி

(ஆ) உறுப்பினரல்லாத ஒருவர் பேரவைக்குள் வந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் பாலகிருஷ்ணன் எழுப்பிய பிரச்னை குறித்து விசாரித்தேன். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் அவருக்கு பார்வையாளர் சீட்டு வழங்கியிருக்கிறார். இறங்கிச் செல்கிறபோது அவரைப் பார்த்து நன்றி சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்து இருக்கிறார். திரு. மாரிமுத்து தொகுதியைச் சேர்ந்தவர். அனுமதி சீட்டு பெற்று பார்வையாளராக இருந்து பார்த்துவிட்டு, திரும்பிச் செல்கிறபோது இங்கே நுழைந்து விட்டு இருக்கிறார்.

திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம், அவர் இருக்கையில் இல்லாததால் தள்ளுபடி செய்யப்பட்டது.

(9) அரசினர் தீர்மானம்

உரிமைக்குழு, சட்டவிதிகள் குழு, அரசு உறுதிமொழிக்குழு மற்றும் அவைக்குழு ஆகிய குழுககளின் உறுப்பினர்கள் 31-3-1979 வரை அக்குழுக்களில் பணியாற்றுவது குறித்து

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''1977 ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற

1. உரிமைக்குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக்குழு
3. அரசு உறுதிமொழிக் குழு
4. அவைக்குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லையாதலால் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடையும் என்னும் பேரவை விதிகள் முறையே 183(2), 201(2), 214(2), 221(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து மேலும் ஒரு நிதி ஆண்டு காலத்திற்கு அதாவது 31-3-1979.வரை அக்குழுக்களில் பணியாற்றவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[முற்பகல் 10-10]



(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/78).

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

*திரு. துரை முருகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதா மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே பல்வேறு பிரச்சனைகளுக்கு வருவதற்கு முன்னால் என் தொகுதியில் இருக்கிற குறைபாட்டை சுட்டிக்காட்டி. நேரம் கிடைக்கிறபோது மற்றவைகளைச் சுட்டிக் காட்டுகிறேன்.

வாலாஜாவில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அங்கே எக்ஸ்ரே கருவி கெட்டுப்போய் இருக்கிறது. அதை உடனடியாகச் சரி செய்வதற்கு அல்லது புதிய எக்ஸ்ரே கருவி வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையில் ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவமனை வேண்டுமென்று கேட்டோம். ஆனால் அங்கே ஒரு டிஸ்பென்சரிதான் வந்திருக்கிறது. அதை மருத்துவமனையாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொன்னையில் ஒரு ஹையர் செகண்டரி பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு விதிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, எல்லாப் பணமும் இடவசதியும் செய்து தரத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அங்கே ஹையர் செகண்டரி பள்ளியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1973-ல் இருந்தே பொருணையாற்றில் ஒரு மேம்பாலம் கட்டும் நடவடிக்கை இருந்துக்கொண்டிருக்கிறது; வேலை ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. அதில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர் ஒன்றியத்தைச் சேர்ந்த தாருரெட்டிபள்ளி, பாலமூதூர், குண்டலேரி, பெரியபோடிநத்தம், சின்னபோடி நத்தம், ஆவல்ரங்கபள்ளி, எஸ். என். பாளையம், பாலேகுப்பம், மேல்பாடி காலனி, தேம்பள்ளி காலனி ஆகிய கிராமங்களுக்கு ரோடு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்] [1977 மார்ச் 30

அதைப்போல வாலாஜா ஒன்றியத்தைச் சேர்ந்த எருகம் தொட்டி, கல்மேல்குப்பம், ராமசந்திரபுரம், அல்லிகுளம், நரசிங்க புரம், திருமலைச்சேரி, பூண்டி போன்ற கிராமங்களுக்கு ரோடு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த மேலகுப்பம், திம்மணுச்சாரி குப்பம், சாணார்பெண்டை, இளந்தோப்பு, கிருஷ்ணபுரம்: மாங்குப் பம், மேல்நந்தியாலம், அருங்குன்றம் கிராமங்களுக்கும் ரோடு வசதிகள் மற்றும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பஸ்வசதி இல்லாத பொன்னை. வேலூர் (வழி) வள்ளிமலை, பொன்னை-திருவலம் (வழி) வள்ளிமலை, பொன்னை-சென்னை, பொன்னை-ராணிப்பேட்டை, கொம்பர நெல்லூர்-ராணிப் பேட்டை ஆகிய ரூட்டுகளில் பஸ்கள் விட வேண்டும்; விஷாரம் கல்லூரியை இணைக்கின்ற வகையில் பஸ்வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில், அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் பரந்து கிடக்கின்றன, பாகம்பம் முதல் காட்பாடி வரை சத்துவாச்சாரி முதல் கோண வட்டம் வரை அவற்றையெல்லாம் ஒரே இடத்தில் மாவட்ட மைய இடத்தில் ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எலெக்ட்ரிசிட்டியைப் பொறுத்த வரையில் வோல்டேஜ் குறைவாக இருப்பதால் பம்புசெட்டுகள் எரிந்து போகின்ற நிலைமை ஏற்படுகிறது. அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக அரசு எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வேலூரிலுள்ள கலைக்கல்லூரியில் முதுகலை பட்டப் படிப்பை ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தச் சர்க்காரைப் பொறுத்த வரையில் பல் வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மானியம் கேட்கப்படுகிறது. ஆனால், இந்தச் சர்க்காரிலே நடைபெறுகின்ற காரியங்களைப் பார்க்கின்றபோது இந்த இலாக்காக்களுக்கு எல்லாம் பணம் ஒதுக்கீடு செய்யவேண்டுமா என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

ஜெயங்கொண்டம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம் என்று ஒருவர் இருக்கிறார். அவர் 19-12-77 முதல் 21-12-77 வரை ரவுத்திரி என்ற ஒரு அரிசனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து, அங்கே வைத்து துன்புறுத்தி பல்வேறு வகைகளில் அவரை கஷ்டப்படுத்தியிருக்கிறார். ஸ்டேஷனுக்குக் கொண்டு போனதற்கு



1978 மார்ச் 30] [திரு. துரைமுருகன்]

எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை. ஸ்டேஷனில் எந்த அளவுக்குத் துன்புறுத்த முடியுமோ அந்த அளவுக்குத் தொல்லை படுத்தியிருக்கிறார் அந்தச் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். அவர்மீது எந்தவிதமான வழக்கும் போடாமல் அங்கே அடைத்து வைத்திருக் கிறார். அது 'ராங்புல் கன்பைன்மென்ட்' என்பது எல்லோ ருக்கும் தெரியும்.

அதற்குப் பின்னால் சப்-இன்ஸ்பெக்டர் அதைப் பார்க்கிறார். எந்தவிதமான வழக்கும் போடாமல், காரணமும் இல்லாமல் அந்த அரிசனை அங்கே பூட்டி வைத்திருப்பதைப் பார்க்கிறார். காரணம் இல்லாமல் ஸ்டேஷனில் வைத்திருப்பதைப் பார்த்த அவர் அந்த அரிசனை வீட்டுக்குப் போக சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த அரிசன் வீட்டுக்குப் போகாமல் ஆஸ்பத்திரிக்குப் போய். ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற்று, வழக்குத் தொடர முற் பட்டார். அதை அறிந்த அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் டி.பாலூர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், ஸ்டேஷன் டயரி, எப். ஐ. ஆர், பாஸ்போர்ட், போலீஸ் கான்ஸ்டபிள் நோட்புக் எல்லாம் பிடுங்கி விட்டு, டாம்பரிங் திரெக்கார்ட்ஸ் செய்து அந்த அரிசன ரவுத்திரி யை அங்கே அடைத்து வைக்கும் சூழ்நிலையை உருவாக்கினார். அதன் பிறகு இன்ஸ்பெக்டருக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் தகராறு ஏற்பட்டு, சப்-இன்ஸ்பெக்டரை திருச்சிக்கு மாற்றி இருக்கிறார்.

ஆனால் அந்த சப்-இன்ஸ்பெக்டர் எஸ். பி. யைப் பார்த்து நான் நியாயமாகத்தான் நடந்துக் கொண்டேன், ஒரு அரிசனை எந்தவிதமான காரணமும் இன்றி போலீஸ் ஸ்டேஷனில் மூன்று நாட்கள் அடைத்து வைத்தது தவறு அல்லவா, நான் செய்தது தவறு என்று சப்-இன்ஸ்பெக்டர் கேட்டார். நியாயத்தை உணர்ந்த எஸ். பி. அந்த சப்-இன்ஸ்பெக்டரை மீண்டும் ஜெயங் கொண்டான் போலீஸ் நிலையத்திற்கு மாற்றுகிறார். பிறகு அந்த சப்-இன்ஸ்பெக்டர் நேராக வேறு எங்கு போனாலும் நடக்காது என்று நேராக முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்கு வரு கிறார். முதலமைச்சர் அவர்களின் பி. ஏ. க்களில் ஒருவராகிய ராமையா என்கிறவர் 14-3-78 அன்று செக்ரட்டேரியேட்டிலிருந்து 24417-ல் திருச்சிக்குப் போன் போடுகிறார். எஸ். பி. க்கு போன் போடுகிறார். அவர்களைக் கூப்பிட்டு ஜெயங்கொண்டான் சப்-இன்ஸ்பெக்டரை நீங்கள் உடனடியாக மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறார். அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீண்டும் மாற்றப்படு கிறார், அதே திருச்சிக்கு 14-3-78-ல் மேலும் அந்த சப்-இன்ஸ் பெக்டரிடம் நீங்கள் மரியாதையாகப் போக வேண்டும் இல்லா விட்டால் உங்கள் மேல் நடவடிக்கைகள் எடுப்போம் என்று அவர் கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நான் கேட்பது இதுதான். நீங்கள் இங்கே நிதி ஒதுக்க மசோதா கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த போன் செலவிற்கும் சேர்ந்துதான் செலவாகிறது, ஒரு சாதாரண சப்-இன்ஸ்பெக்டரை

மாற்றுவதற்கு முதல் அமைச்சர் அலுவலகத்திலிருந்து போன் போகிறது. அதற்கும் பணம் செலவாகிறது. அதற்கும் சேர்ந்து தான் நாம் இந்த நிதி ஒதுக்க மசோதாவில் நிதி ஒதுக்கவேண்டி யிருக்கிறது. இப்படிச் செய்வது நியாயமா, இது முறைகேடல்லவா என்று நான் கேட்கிறேன். இன்னொன்று, திருத்துறைப் பூண்டி ஹரிஜன நல பள்ளி என்று ஒன்றிருக்கிறது. அங்குள்ள மாணவர் களுக்கு. உணவு சாப்பிட தட்டுகள் வழங்கியிருக்கிறார்கள். அத் தட்டுகளில்..........

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஜெயங்கொண்டான் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை மாற்றுவதற்காக முதல் அமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் இருந்து முதல் அமைச்சர் அவர்களின் உதவியாளர் டெலிபோன் செய்து இருக்கிறார் என்று சொன்னார்கள் ..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது அதற்குப் பதில் சொல்வார்கள். ஏதாவது பாயிண்ட் ஆப் ஆர்டர் இருந்தால் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்தக் குற்றச் சாட்டினை சொல்வது எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்வார்கள். அப்போது அவர்கள் பதில் சொல்லட்டும்,

திரு. துரை முருகன் : திருத்துறைப்பூண்டியில் ஹரிஜன நல பள்ளி என்று ஒரு பள்ளி இருக்கிறது. அதில் படிக்கிற மாணவர் களுக்கு நூற்றுக்கணக்கான தட்டுகள் சாப்பிடுவதற்காக மாணவர் களுக்கு வழங்கி இருக்கிறார்கள். வெல்பேர் தாசில்தார் அந்தத் தட்டுக்களைக் கொடுக்கிறார். சின்னஞ்சிறு சிசுக்கள் அந்தப் பள்ளி யில் படிக்கிறார்கள். அவர்களுக்கு தட்டுகள் கொடுக்கிறார்கள் சாப்பிடுவதற்கு. அந்தத் தட்டில் விளம்பரத்தை விரும்பாத இந்த அரசு,—நீங்கள் விரும்புகிறீர்களோ என்னவோ—உங்கள் மனதைப் புரிந்துக் கொண்டு அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். வள்ளுவர் சொல்லுகிறார்,

''காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.'' என்று

என்ன பொருள் என்றால் நீங்கள் விரும்புவது அதிகாரிகளுக்குத் தெரியக் கூடாது, தெரிந்தால் உடனே அது மாதிரி செய்து விடுகிறார்கள். ஆளுபவருக்கு இது பிடிக்கும் என்றால் அந்த நிமிடமே அது செய்யப்படும். ஆகவே, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தாசில்தார் முதல் அமைச்சர் அவர்களுக்கு எது பிடிக்குமோ அதை....





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்தக் குறளுக்கு என்ன பொருள் என்பதை நேரடியாகச் சொல்ல வேண்டும்.

திரு. துரை முருகன் : என்னைவிட தமிழ் அதிகம் படித்தவர் காளிமுத்து அவர்கள். அவர்கள் டாக்டராகப் போகிறார்கள். அதுபற்றியும் சொல்கிறேன். அந்தத் தட்டில் என்ன இருக்கிறது. எம். ஜி. ஆர். என்று போடப்பட்டிருக்கிறது. எம். ஜி. ஆர். என்றிருக்கிறது, சரி, இது பரவாயில்லை, அவர்கள் முதல் அமைச்ச ராக இருக்கிறார்கள், முதல் அமைச்சரைத் தெரிந்து கொள்ள எழுதியிருக்கலாம், சரி. அதைக் கேட்கவில்லை. (இரண்டு தட்டு களைக் காண்பிக்கிறார்.) இது (தட்டைக்காட்டி) ** ** லதா. இந்தத் தட்டில் எம். ஜி. ஆர். இந்தத் தட்டில் லதா. இந்த இரண்டையும் படிக்கிற சின்னக் குழந்தைகளுக்குத் தந்திருக் கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் தட்டுகள் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அவை இவர் கைக்கு எப்படி வந்தன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தத் தட்டில் எம். ஜி. ஆர். என்றிருக்கிறது என்று சொன்னார்கள். அடுத்த தட்டில் லதா என்றிருக்கிறது என்று காண்பித்தார்கள். ** ** லதா என்று சொன்னார்களே, அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரைமுருகன் : நான் அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லியிருக்கி றீர்கள். லதா என்று போட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். ஆனால், ** ** லதா என்று சொல்லக் கூடாது.

திரு. மு. கருணாநிதி : தங்கள் தீர்ப்பை வரவேற்கிறேன் ** ** லதா என்று துரைமுருகன் பயன்படுத்திய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டும் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் இந்தப் பள்ளிகளுக்கு இந்தத் தட்டுகளை வழங்கவில்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன். தனியார் யாராவது இதை வழங்கி யிருக்கக்கூடும்.

---

** ** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படிச் சபையில் ஏதாவது பொருட்களை காண்பிக்க வேண்டுமென்றால் என்னிடம் காண்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும். இனிமேலாவது உறுப்பினர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இது பற்றித் தீர்ப்புக்கள் இருக்கின்றன. இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் இரண்டு நாட்களுக்கு முன்பு கண்ணாடிகளைக் காண்பித்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் தலைவரிடம் காண்பித்து அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்பது எனக்கு தெரியாது, தங்களிடம் இதைக் காண்பித்து விட்டு பின்னால் இங்கு பேச வேண்டும் என்று வரும்போது, செயல் முறையில் அங்கத்தினர்களுடைய கைக்கு உரிய நேரத்தில் திரும்ப வந்து சேராது என்கின்ற அச்சத்தின் காரணமாகத்தான் அங்கத்தினர் அவர்கள் இங்கேயே இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவரிடம் கொடுக்கப்படும் பொருட்கள் அங்கத்தினர்களுக்கு நிச்சயமாக திருப்பித் தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டிய தட்டுகள் அரசாங்கத்தின் சார்பில் வழங்கப் பட்டிருக்கிறது என்று சொல்வதாக இருந்தால், அரசாங்கத்தின் சார்பில் வழங்கப் பட்டது என்பதை நிரூபித்து விட்டு அதற்குப் பின்னால் பேச வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தட்டுகளில் எம் ஜி. ஆர். என்றும், லதா என்றும் பெயர் இருக்கிறது என்று சொன்னதை அவை குறிப்பேட்டுகளிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இந்தத் தட்டுகள் பள்ளிக் கூடத்தில் வழங்கப்பட்டது. இது அரசாங்கத்தின் பொருள். அப்படியிருக்கும் போது அது இந்த மன்றத்திற்கு எப்படி வந்தது என்பதையும் சொல்ல வேண்டும்.

(குறுக்கீடு)

திரு. துரை முருகன் : எப்படி வந்தது. எப்படிப் போனது என்பதெல்லாம் இப்போது சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அரசாங்கத்தின் சார்பில் இதற்குப் பணம் பட்டுவாடா செய்யப் பட்டதா அல்லவா என்பதல்ல இப்போது பிரச்னை. இப்படிப் பட்ட ஒரு விளம்பரத்தைச் செய்கிறார்கள். இவற்றை யார் கொடுத்தார்கள் என்பதை நீங்கள் இனிமேல் தான் கண்டுபிடிக்க



வேண்டும் என்றாலும், இந்தப் பள்ளிக்கு அரிசன் (துறை) தாசில்தார் வழங்கியிருக்கிறார். பிள்ளைகளுக்குப் போய் சேர்ந்திருக்கிறது, அரிசன் (துறை) தாசில்தார்தான் இதைக் கொடுத்திருக்கிறார் என்றும் சொல்லி விட்டேன், பின்னால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியென்றால் அரிசன் (துறை) தாசில்தார் உங்களிடம் கொண்டு வந்து கொடுத்தாரென்று சொல்லுகிறீர்களா?

திரு. துரை முருகன்: தாசில்தார் என்னிடம் கொடுக்கவில்லை, மாணவர்கள் என்னிடம் வந்து கொடுக்கிறார்கள். எப்படி வந்தது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாங்கத்தால் தரப்பட்டிருந்தாலும் சரி, தனியார்களால் தரப்பட்டிருந்தாலும் சரி, இந்த இரண்டு தட்டுகள் இப்போது பள்ளிகளில் இல்லை என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் காண்பிக்கப்பட்ட பொருள் திருட்டுச் சொத்தாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. ANBAZHAGAN: I raise a Privilege Motion against the Hon. Minister for giving a statement that the hon. Member has brought the plates which are more or less theft articles.

நான் இங்கு எழுப்ப விரும்புவது, சட்ட மன்றத்தில் உறுப்பினர் ஒருவரால் கொண்டு வந்து காண்பிக்கப்படும் பொருள் திருடப்பட்டது என்று சொல்லுவது அவையினுடைய உரிமையைப் பாதிப்பதாகவும் அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினருடைய உரிமையைப் பாதிப்பதாகவும் இருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் இந்த உரிமைப் பிரச்னையை நான் எழுப்ப விரும்புகிறேன், அரசாங்கத்திற்கு எந்த விவரம் கொடுத்தாலும், அது சரியாக இருந்தாலும் சரி, தவறாக இருந்தாலும் சரி, சட்டமன்றத்தில் எடுத்துக் கூறுகின்ற கருத்துக்கள் தவறாக இருந்தால் அவைகள் திருத்தப்படலாம். சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால், இவற்றை எடுத்துக் காட்டுகின்ற அடிப்படையான உரிமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் தாழ்த்தப்பட்டோர் பள்ளியில் வழங்கப்படுகின்ற தட்டுகளைப் பற்றிய விவரங்களை, அதற்கான ஆதாரங்களோடு சென்னையில் வந்து கொடுக்கப்பட்டு, இப்படிக்கூட பள்ளிக்கூடத்தில் தருகிறார்கள் என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டதால் இங்கே காண்பித்துப் பேசி அதை

இந்தச் சட்டமன்றத்தில் எழுப்பியிருக்கிறார். வேண்டுமென்றால் அரசாங்கம் இதை மறுக்கலாம் அல்லது தரப்பட்டிருக்கின்ற விவரங்கள் சரியல்ல என்று கூறலாம். அதில் நியாயம் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் அதைப்பற்றி எதிர்த்துப் பேசலாம். அது வேறு. ஆனால், சட்டமன்ற உறுப்பினரால் சட்டமன்றத்தில் காண்பிக்கப்படுகின்ற பொருள் திருட்டுப் பொருள் என்று சொல்லப்படுமானால், சட்டமன்றத்தில் எந்தப் பிரச்சினையையும், எந்தச் சட்டமன்ற உறுப்பினராலும் எடுத்துக் காட்ட முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படும்.

எனவே துணைத் தலைவர் அவர்களே, இதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையாயினும் சட்டமன்றத்தில் காட்டப்பட்ட பொருள் திருட்டுப் பொருள் என்று கூறப்பட்டது அவைக் குறிப்பேட்டில் இருப்பது நல்லதாக இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத பிரச்சினை சில சந்தர்ப்பங்களில் மன்றங்களில் வந்து விடுகின்றன. அப்ரோப்பிரியேஷன் பில்லைப் பற்றிப் பேசும்போது, குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையைத்தான் பேசலாம் என்ற நியதி இல்லையென்றாலும் நினைப்பதையெல்லாம் பேசலாம் என்கின்ற ஒரு நடைமுறை, ஒரு வரம்பற்ற தன்மை இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கொண்டுவந்து காட்டப்பட்ட தட்டுக்கள் திரு. துரைமுருகன் அவர்களால் திருடிக் கொண்டு வந்த தட்டுக்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை—(குறுக்கீடு) Please listen நான் கொஞ்சம் பேசி விடுகிறேன்—கொஞ்சம் பொறுமையாக இருங்கள்—தட்டுக்கள் திருத்துறைப்பூண்டி பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தட்டுக்கள். இது திரு. துரைமுருகன் அவர்கள் சொன்ன கருத்து. அந்தத் தட்டுக்களை எடுத்துக் கொண்டு, சென்னை மாநகரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. (குறுக்கீடு) பொறுங்கள். ஆக, மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தட்டுக்கள், மாணவர்கள் பயன்படுத்த வேண்டிய தட்டுக்கள், அவைகள் அங்கேயிருந்து சென்னைக்கு கொண்டு வரப்பட்டதென்றால், அது திருடப்பட்டு கொண்டு வரப்பட்டதே தவிர, வேறு வழியில்லை என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். (குறுக்கீடு) பிறகு எப்படிக் கொண்டுவரப்பட்டது? (குறுக்கீடு: பேரண்ட்ஸ்) அப்படிக் கொண்டுவர பேரண்ட்ஸுக்கு என்ன ரைட் இருக்கிறது? Parents have no right. Excuse me. I am sorry. Pl..es are given to Students only. Parents have no business to take all these plates outside the campus of the School.



விவரம் தெரிந்தவர்கள் இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் திருடப்பட்டு கொண்டுவந்த தட்டுக்கள் சென்னையிலே இருக்கின்றன. பொறுப்புள்ள கடமை உணர்வுள்ள திரு. துரைமுருகன் அவர்கள் திருடிக் கொண்டு வந்தார் என்று இந்த மன்றத்தில் யாரும் சொல்ல மாட்டார்கள். குறிப்பாக, அமைச்சர் அவர்கள் சொல்ல மாட்டார்கள். எனவே, இத்தோடு இப் பிரச்சினையை விட்டு விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. க. அன்பழகன் :</u> நம்முடைய அவை முன்னவர் அவர்கள் ஒரு கருத்தை இந்த அவையிலே புதிதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருடவில்லை என்பதை அவர்கள் இந்த நேரத்திலே சொன்னதற்காக நான் நன்றி தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடத்திலே குழந்தைகளுக்குத் தரப்பட்ட தட்டுக்கள்பற்றித் தவறாகவோ, சரியாகவோ அந்த முறையிலே தட்டுக்கள் கொடுக்கப்பட்ட பிறகு, இதை பிள்ளைகள் பெற்றோர்களிடம் கொடுத்து, அந்தத் தட்டு இங்கே வந்திருக்கலாம், அப்படி பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட மிகச் சாதாரண விலையுள்ள இந்தத் தட்டுக்களை யாரோ திருடிக் கொண்டு வந்தார்கள் என்று சொல்கிற போது, அந்தத் திருட்டுப் பொருளைப் பெற்றுக் கொண்டு வந்ததுகூடக் குற்றம் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் மீது குற்றம் வருகிறது. (குறுக்கீடு) அது மட்டும் அல்ல. திருடப்பட்ட பொருளை போலீசார் கைப்பற்றியுள்ளபோது அது வழக்குப் பதிவு செய்ய சான்றாகலாம். அது போல செய்யக்கூடியதல்ல இது. அது சட்டமன்ற உறுப்பினருடைய வேலையல்ல.

ஆனால், இப்படி ஒரு நியாயத்தை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்ட பொருள் இது. அப்படிக் கொடுக்கப்பட்ட பொருள் எப்படி, எந்தத் துறையால் கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றி அரசாங்கம் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படி விசாரணை செய்வதற்குப் பதில், இந்தப் பிரச்சினை சட்டமன்றத்திற்கு வந்து விட்டதே என்பதற்காக, திருடப்பட்ட பொருள் என்ற ஒரு கருத்தை உண்டாக்குவது நல்லதல்ல. பிள்ளைகளுக்கு தட்டுக்கள் கொடுக்கப்பட்டு, பெற்றோர்களினால் அது திருடப்பட்டு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்கிற ஒரு எண்ணம் இருக்கக் கூடாது. பிள்ளைகளுக்கு இப்படிக் கொடுக்கப்பட்ட தட்டுக்களைப் பற்றிப் பெற்றோர்களுக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அது ஒரு பெரிய தவறல்ல.

இன்னும் சொல்லப் போனால், இப்படிப்பட்ட விளம்பரம் செய்யப்பட்டதைப் பற்றி பெற்றோர்கள் தங்களுடைய வருத்தத்தைக் காட்டுவதற்காக இதைக் கொண்டு வந்திருக்கக் கூடும். ஆகவே......

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பள்ளிக்கூடத்திற்கு வெளியே தட்டைக் கொண்டு வந்ததே தவறு.

திரு. க. அன்பழகன்: அது வேறு. வாதத்திற்கு வேண்டுமானால் அப்படிச் சொல்லலாம்......

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: இங்கே வாதம் தான் நடந்து கொண்டிருக்கிறது, வாதத்தை வாதத்தால்தான் சந்தித்தாக வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தட்டை அப்படிக் கொண்டு வந்து கொடுத்திருக்கலாம், இல்லை அப்படிக் கொண்டு வந்து கொடுக்கப்படாமலும் இருக்கலாம். (குறுக்கீடு) We have to see both sides. We have to see this side and that side. கொடுக்கப்பட்டிருக்கலாம், அப்படிக் கொடுக்கப்படாமலும் இருக்கலாம். அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தாலும், பிள்ளைகள் உணவு அருந்துவதற்காகக் கொடுக்கப்பட்ட தட்டுக்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். பேராசிரியர் அவர்களும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். உணவு அருந்துவதற்காக, இப்படி வழங்கப்பட்ட தட்டுக்கள், விதிமுறைகளின்படி, பள்ளிக் கூடக் கட்டிடத்திற்குள் இருக்கலாமே தவிர, எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பள்ளிக் கட்டிடத்தை விட்டு வெளியே வரக் கூடாது. குழந்தைகள்கூட அதை வெளியே கொண்டு வரக் கூடாது. அந்தக் குழந்தைகளுக்குகூட இந்த உரிமை கிடையாது.

(முற்பகல் 10-30)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இங்கே பேசும் போது மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தட்டுக்களைப் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அந்தத் தட்டுக்களை எடுத்துக் கொண்டு வந்து இப்படி உறுப்பினரிடம் காட்டுவது என்பது எந்த வகையில் முறையாகாது என்று சொல்ல முடியும் என்று கூறி இருக்கிறார்கள்.

நான் ஆரம்பத்திலே சொன்னதைத் திரும்பவும் சொல்கிறேன். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தட்டுக்கள் அந்தப் பள்ளிக்கூட காம்பவுண்டை விட்டு வெளியே வரக் கூடாது. ஆனால் எப்படி அந்தத் தட்டுக்கள் உறுப்பினர் அரை முருகன் அவர்கள் கையிலே வந்தது என்பது பற்றிக் கேட்கிற உரிமை எனக்கு இல்லை. அந்த சோர்ஸைக் கேட்கக் கூடாது. அது விழிப்போடு இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செய்யக்கூடிய காரியம். நான் அதை மறுக்கவில்லை.



ஆனால், நான் தெரிந்து கொள்ள விரும்புவது இந்தத் தட்டுக்களை இங்கே கொண்டு வந்து காட்டி, இதுதான் தரப்பட்ட தட்டு என்று சொல்வதற்குப் பதிலாகப் பெற்றோர்கள் ஏதோ தங்களது குழந்தைச் செல்வங்களுக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்வது என்ற அடிப்படையில் பேசிய பேராசிரியருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அந்த மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களிடத்திலே சென்று இப்படித் தட்டுக்கள் தரப்பட்டிருக்கின்றன, அந்தத் தட்டுக்களிலே இப்படிப்பட்ட பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன, நீங்கள் சட்டசபையிலே இந்தப் பிரச்சினையைக் கிளப்புங்கள் என்று சொல்லி இருப்பார்களேயானால் அதிலே நியாயம் இருக்கிறது. ஆனால், முற்றிலும் மாறாக அந்தத் தட்டுக்களை எடுத்துக் கொண்டு பெற்றோர்களிடம் சென்று கொடுக்கக்கூடாது, முறையற்றது. ஆனால், அதை எடுத்துக்கொண்டு பொறுப்புள்ள பெற்றோர்கள் சட்டமன்ற உறுப்பினர் [illegible] கொடுப்பது என்பது அதனிடப் பெரிய [illegible] தவறு செய்து [illegible] தலைவர் [illegible] கேட்டுக் கொள்கிறேன். ஆகவே நியாயத்தை ஏற்றுக் கொள்வதிலே தயக்கம் காட்டாதீர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முன்னவரவர்கள் இந்தப் பிரச்சினையிலே பள்ளிக்கூடத் தட்டுக்கள் வெளியிலே வந்தது [illegible] என்று சொன்னார்கள். ஆனால், இரண்டு தட்டுக்களும் [illegible] பெற்றோர் மூலமே வந்திருக்கிறது என்று [illegible] நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஏறக்குறைய இந்தத் தட்டின் விலை [illegible] ரூபாய் அல்லது 50 பைசா தான் இருக்கும். [illegible] அதற்காக வழக்கு போட்டு நடவடிக்கை எடுப்பதைக்கூட நான் வரவேற்கிறேன்.....(குறுக்கீடு) பெயர் வேண்டுமானால் அந்தப் பள்ளிக்கூடத்திலே கேட்டால் தெரியும். ஆகவே பிரச்சினை அதுவல்ல. இப்படி ஒரு தவறான முறையிலே [illegible] ஒருவர் [illegible] பள்ளிக் கூடத்திலே கொடுத்தாலும் தாசில்தார் [illegible] கொடுப்பதாக இருந்தால் [illegible] தவறான எண்ணத்தை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

இப்படி வழங்கப்பட்ட தட்டுக்களிலே நமது முதலமைச்சரவர்களுடைய பெயர் மட்டும் இல்லை, இன்னொரு பெயரும் இருக்கிறது என்று சொன்னதன் விளைவாகவே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. [illegible] பிரச்சினையே அந்தக் கோணத்திலேயிருந்து [illegible]. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் அரசாங்கத்தின் [illegible] அளவுக்கு அதிகாரிகள் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் கருதினால் நடவடிக்கை எடுங்கள் அல்லது [illegible] நடப்பட்டது என்றால்

நடவடிக்கை எடுங்கள். சட்டமன்றத்தில் இதை எடுத்துச் சொல்வது உறுப்பினர்களது அடிப்படை உரிமை. சொல்லப்பட்ட குற்றச்சாட்டைத் தவறு என்று மறுத்துச் சொல்வதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே தவறு என்றால் அதை மறுப்பதிலே, திருத்துவதிலே தான் உங்களுடைய நோக்கம் இருக்க வேண்டுமே தவிர தவறாக இருந்தாலும் உண்மையை மறைப்பதற்காக வேறு கோணத்திலே கவனத்தைத் திருப்புவதற்கு முயற்சிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. மகேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நான் திரும்பவும் எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நான் விரும்புவது இதுதான். வேறு ஒன்றும் அல்ல. பிரச்சினையே இருந்திருக்காது. இப்படித் திருட்டுக் குற்றங்கள் சொல்லக்கூடிய அளவுக்கு வார்த்தைகளைப் பயன்படுத்தும் துர்பாக்கியம் இந்த அவைக்கு வந்திருக்காது.

எதிலிருந்து எது ஏற்பட்டது என்றால் இப்படி அமைந்திருந்தால் மிகவும் நன்றாக அமைந்திருக்கும். அந்த மாணவர்கள், அந்தப் பள்ளிக் கூடத்தில் படிக்கிற மாணவர்கள், கொடுக்கப்பட்ட தட்டுக்களைப் பயன்படுத்துகிற மாணவர்கள், அந்தத் தட்டுக்களைப் பார்த்துவிட்டு, அதிலே பொறிக்கப்பட்டிருக்கிற பெயர்களைப் பார்த்து விட்டு, அதைப் போய் அப்பா, அம்மாவிடம் சொல்லி, அவர்கள் இப்படியெல்லாம் எழுதப்பட்டிருப்பது நியாயமா என்ற எண்ணத்தில் சட்ட மன்ற உறுப்பினருக்குச் சொல்லி, அதை அவையில் கிளப்பக் கூடாதா என்று சொல்லியிருப்பார்களானால் அதிலே நியாயம் இருந்திருக்கும். அதை விட்டு விட்டு அந்தத் தட்டை மாணவர்கள் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தால் அதைத் தகப்பன்மார்கள் வாங்கிக் கொண்டு வருவது ரொம்பத் தப்பு. (திரு. க. அன்பழகன்—குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நீங்கள்தான் சொன்னீர்கள். தகப்பனார் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். பிள்ளைகள் தட்டை வெளியே எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். தட்டை வெளியே எடுத்துக் கொண்டு வந்தவுடன் உண்மையான தகப்பனாக இருந்தால் அந்தப் பையனை உதை, உதை என்று உதைத்திருப்பார். எப்படி இந்தப் பொருளைத் திருடிக் கொண்டு வெளியே வரலாம் என்று சொல்ல வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடக் கூடாது. நீங்கள் பேராசிரியராக இருந்தவர்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன். தயவு செய்து அநியாயத்திற்காக வாதாடாதீர்கள். தவறாக நடந்ததை ஏற்றுக் கொள்ளுங்கள், ஒத்துக் கொள்ளுங்கள். அதனால் இழுக்குப் போவது எதுவும் இல்லை. பெரிய தவறு [illegible] இருக்கிறது. நடந்த தவறை ஏற்றுக் கொள்ளுங்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய முடிவை இதிலே நான் சொல்லிவிடுகிறேன். இரு தரப்பிலும் ஏற்பட்ட வாதத்திலே பேரவைத் தலைவருக்கு ஒரு கடமை உண்டு. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அந்தத் தட்டைக் கொண்டு வந்து காட்டுவதற்கு அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஒரு பொருளை எடுத்துக் கொண்டு வந்து அந்தப் பொருளை அவைக்குள் காட்ட வேண்டுமென்றால், அந்தப் பொருளைப்பற்றிய ஆதாரங்கள் உண்மையானதுதான் என்று அறிந்து அனுமதித்த பிறகுதான் இங்கே காட்ட வேண்டும். அந்தத் தட்டை முதலிலே அவைத் தலைவருக்குக் காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அதை என்னிடம் காட்டாமல், எனக்குத் தெரிவிக்காமல் அவைக்குள் அதைக் கொண்டு வந்தது, காட்டியது தவறு. அந்தத் தட்டு உண்மையாகவே அந்தப் பள்ளியின் தட்டுதான் என்று முதலிலேயே தெரிந்திருக்க வேண்டும். பிறரைக் காயப்படுத்தக் கூடிய வகையில் உள்ள தட்டு போன்றவற்றை இந்த அவைக்குள் கொண்டு வரக் கூடாது. இதை உரிமைப் பிரச்சினைக்கு விட வேண்டுமென்றால் அது பற்றி முடிவு செய்யட்டும். பேரவையில் நீங்கள் இருவரும் பேசியிருக்கிறீர்கள். பேரவை முன்னவர் அவர்கள் இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று விரும்பினால் உரிமைக் குழுவுக்கு அனுப்புவதில் ஆட்சேபணை இல்லை. அதற்குரிய தீர்மானத்தை முன்மொழியலாம்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஏதோ பள்ளியிலே சாப்பாட்டுக்காகக் கொடுத்த தட்டு என்று இரண்டு தட்டை எடுத்துக் காட்டி பேச ஆரம்பித்ததில் இருந்து இப்போது முடிவு பெற்றிருக்கும் விவாதங்கள் வரை அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டுமா என்று நீங்கள் முடிவு செய்ய வேண்டும், அவைமுன்னவரும் மற்றவர்களும் முடிவு செய்ய வேண்டும். அதற்கிடையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி விடுகிறேன்.

தாங்களே சொல்லியிருக்கிறீர்கள் - இந்த அவைக்குள்ளே கொண்டு வந்து காட்டுகிற பொருள்களுக்கு உங்களிடத்திலே முன்னாலே காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதை மீறிச் செய்யப்பட்டிருக்கிற ஒன்று என்பதனால் அதையொட்டி எனக்கு ஏற்படுகிற சந்தேகத்தையும் இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

கூறிய குற்றச்சாட்டு, அரசு நடத்துகிற பள்ளியிலே அரசு அதிகாரி ஒருவரால் வழங்கப்பெற்ற தட்டுகளில் இரண்டு பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன, விளம்பரத்தை விரும்பாதவர்கள் இப்படி பெயர்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்களே என்ற குற்றச்சாட்டை சுமத்தினார்- எனக்கு ஏற்படுகிற ஐயம்

இது அரசால் வழங்கப்பட்டது அல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டிருக்கிறார். ஆனால் இதை யார் வழங்கினார்கள்? அந்த அதிகாரி எப்படி ஏற்றுக் கொண்டார்? இதற்குப் பின்னால் என்ன திட்டமிட்ட சதி நடைபெற்றிருக்கிறது? யாரால் இது தயாரிக்கப்பட்டது? தஞ்சை மாவட்டத்தில் இப்படி யாரைத் தயார் செய்யச் சொன்னார்கள். யாரிடத்தில் அனுமதி பெற்றுச் சொன்னார்கள்? யாருடைய விருப்பத்தின்படி சொன்னார்கள்? இப்படி தட்டைச் செய்து, அதிலே பெயரையும் பொறித்து அந்தப் பள்ளிக்கு வழங்க ஒரு அதிகாரியையும் கையில் வைத்துக் கொண்டு நிகழ்ச்சியை நடத்தி முடித்து, சட்ட மன்றத்திலும் பேரவைத் தலைவர் அனுமதி பெறாமல் நடத்தக் கூடிய இந்த அற்புதமான, அரசியல் சிரிப்பைச் சிரிக்கும் நாடகம் என்று கூடச் சொல்ல மாட்டேன்.

(முற்பகல் 10-40)

ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் பொறுப்புள்ளவர், இங்கே அவர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் [illegible] வேண்டும். அவைக் குறிப்பிலே ஏறியிருக்கிற அந்தச் சம்பவங்கள், அந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கிற அரசியல் சதி என்ன என்பதைத் [illegible] தெரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறது [illegible] தெரிவித்து, தாங்கள் இவைகளைப் பற்றிய முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. மகேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாதாரணமான பிரச்சினையாக இதைக் கருதவில்லை. ஆகவே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று அரசின் சார்பாக நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பவேண்டுமானால், தாங்கள் தீர்மானம் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

(4) உரிமைப் பிரச்சினைகள்—(தொடர்ச்சி)

(அ) திருத்துறைப்பூண்டி [illegible] பள்ளியில் மாணவர்கள் [illegible] பொறிக்கப்பட்ட தட்டுக்கள் வழங்கப்பட்டது [illegible] குறிப்பிட்டது குறித்தும் [illegible] மற்றவர்கள் குறித்தும்.

மாண்புமிகு திரு. சி. மகேந்திரன் : நான் உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று தெரிவித்து இருக்கிற கருத்து இதுதான் "திரு துரைமுருகன் அவர்களால் குறிப்பிடப்பட்ட அந்தத் தட்டுக்கள் அந்தப் பள்ளிகளுக்குத் தரப்பட்டனவா? உண்மை





யிலேயே அந்தத் தட்டுக்கள் ஆட்சியின் சார்பிலே கொடுக்கப் பட்ட தட்டுக்கள் தானா? அதாவது, இங்கே காட்டப்பட்ட தட்டுக்கள் அரசாலே கொடுக்கப்பட்ட தட்டுக்கள்தானா? இங்கே காட்டப்பட்ட தட்டுக்கள் உண்மையிலேயே அந்தப் பள்ளியிலே கொடுக்கப்பட்ட தட்டுக்கள் தானா? இவைகளை எல்லாம் ஆராய்ந்து அரசின்மேல் சாட்டப்பட்டிருக்கிற இந்தக் களங்கத் தைத் கழுவுவதற்கு இவைகளை விசாரித்து அறிக்கை அளிக்குமாறு இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பிலே அவைமுன்னவர் சில கருத்துக்களைக்கூறி உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பிரச்சினை குறித்து சட்டமன்றத்திலே சொல்லப் படுவது சட்டமன்றத்திலே சொல்கிற அளவிற்கு ஆதாரம் உள்ளதுதானா, சட்டமன்றத்திலே சொல்கிற அளவிற்கு அனுமதிக்கப் படத்தக்கது தானா, சட்டமன்றத்தின் மொத்த கௌரவத்தையும் சட்டமன்றத்தின் உரிமையையும் பாதுகாப்பதுதானா அல்லது உறுப்பினரின் உரிமையைப் பாது காப்பதுதானா, என்ற அந்த வரம்பிற்குள்ளேதான் அவைகளை நிலை நாட்டத்தான் உரிமைக் குழு செயல்படவேண்டுமே தவிர, அதற்கு மேலே எங்கே என்ன நடைபெற்றது என்றெல்லாம் விசாரிக்கிற கடமையைச் செய்ய இயலாது. அவைகளை எல்லாம் அரசாங்கமே விசாரித்து அவர்கள் தருகிற கருத்துக்களை இந்தச் சட்டமன்றத்திலே வைக்கலாம். எனவே இந்தப் பிரச்சினையில் எந்த அளவிற்கு உரிமைக் குழுவிற்கு அனுப்ப முடியுமோ அந்த அளவிற்குத்தான் உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை தனிப் பட்டவரைப் பற்றியோ வெளியே உள்ளவரைப்பற்றியோ அல்ல, முதலமைச்சர் பெயரைப் பயன்படுத்தி * * * என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு உள்ள பிரச்சினையெல்லாம் இந்தப் பிரச்சினை இந்த அவையில் உள்ள எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்த முக்கியமான பிரச்சினை—இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பித் திர விசாரிக்க பேரவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வாக்கெடுப்பிற்கு விடுகிறேன்,

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டது. இப்பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பட்டது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் ஆலோசனை சொல்வதற்கு விரும்பவில்லை. தாங்கள் சொல்லிய போது, முதலமைச்சர் * * * என்று தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள். முதலமைச்சர் பெயர் விளம்பரத்தை யாரோ செய்திருக்கிறார்கள் என்று தான் வருமே தவிர, * * * என்ற அந்த வார்த்தை இங்கே வரவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர், *** என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லவில்லை. ஆனால் நான் ஒரு ரெபரன்ஸைச் சொல்கிறேன். விளம்பரத்தை விரும்பாத முதலமைச்சர் அல்லது அரசாங்கம் என்று திரு. துரைமுருகன் சொன்னதிலே எனக்கு ஒன்றும் இல்லை.

முதலமைச்சர் விளம்பரத்தை விரும்பாதவர் என்ற கருத்துப் படச் சொல்லி அதற்குப் பிறகு இதைக் காட்டியவுடன் அந்த விளம்பரத்திற்காக என்று தானாகவே வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டச் சொன்னேன். குறிப்பிட்ட இந்த வார்த்தையை அவர் பயன்படுத்தியதாக நான் சொல்லவேயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்று சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் நேரத்தையும் கருதி, பாயிண்ட் ஆஃப் ஆர்டரின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் கருதி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டும். எல்லோரும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால்....

திரு. மு. அம்பிகாபதி : இது முக்கியமான விஷயம். என்னவென்றால், உரிமைக் குழுவிற்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. முதலமைச்சருடைய பெயரை இந்தத் தட்டிலே

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





பொறித்துத்தான் விளம்பரம் ஆகக்கூடிய அளவிற்கு அவர் பலகீனமானவர் அல்ல. உரிமைக் குழுவின் நேரத்தை வீணடிக்க வேண்டாம். இந்த டிஸ்கஷனை பேரவையிலேயே முடித்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். இந்த அவையின் முடிவிற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசாதீர்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இன்னொரு முக்கியமான பிரச்னை. உத்தமபாளையம் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் ஒரு மாணவன் படிக்கிறான். அரசினர் மாணவர் இல்லத்தில் ஒரு மாணவன் தங்கி படிக்கிறான். அந்த மாணவனின் உயரம் ஐந்து அடி இரண்டு அங்குலம். வயது 16. அந்தப் பள்ளியிலே படிக்கும் மாணவர்களுக்கு தீபாவளி, தைப்பொங்கல் ஆகிய விழாக்களுக்கு இனமாக சட்டை, கால் டிரௌசர் தைத்துக் கொடுப்பார்கள். இந்த வழக்கப்படி சட்டை தைத்து எல்லோருக்கும் ஒரே விதமாகக் கொடுத்திருக்கிறார்கள். சபாநாயகரவர்களே, * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இப்படிப்பட்ட நிலைமைகளை வரவேற்கிறார்களா? இதையெல்லாம் என்னிடத்தில் சொல்லாமலேயே இப்படிச் செய்தால் தாங்கள் பேசியதை நீக்க வேண்டிய நிலைமை வரும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு கோரிக்கை, சபை தெரிந்து கொள்வதற்காகவும், காலத்தையும் நேரத்தையும் வீணாக்காமல் இருப்பதற்காகவும் என் வேண்டுகோள். இன்னும் எத்தனை பொருட்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதைச் சபைக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்கள் இரண்டு நிமிஷங்களில் முடித்துக் கொள்ள வேண்டும். * * * * என்பதைப் பத்திரிகையிலே வெளியிடக்கூடாது என்று சொல்கிறேன். * * * *

திரு. துரை முருகன் : இந்த அவையிலே இட்லியைக் கொண்டு வந்து காட்டியிருக்கிறார்கள்.

* * * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றுக்கொன்று போய்க் கொண்டே இருக்கிறது. என்றைக்கோ ஒன்றைக் காட்டினால் ஏற்றுக்கொள்கிறேன். எனக்குத் தெரியாதது அல்ல. இவர் அடுக்கடுக்காக ஒவ்வொன்றையும் காட்டுகிறார். அடுத்து ஒரு பெரிய.... அதை நான் சொல்லக் கூடாது, கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாமல் காட்டிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?

திரு. எஸ்.ஆர். இராதா : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டுத்தான் அதற்கு ஆதரவாகச் சில வார்த்தைகளைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன். ஆனால் அதற்கு முன் சொல்கின்ற வார்த்தைகள் மாறுபட்டதைப் போலத் தோன்றினாலும், நான் சொல்ல வேண்டிய அவசியத்தின் காரணமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே ஏற்கனவே இட்லி காட்டப்பட்டிருக்கிறது, அவைத் தலைவரிடம் முன்கூட்டியே காட்டப்படாமல், மட்கிப்போன அரிசி இந்த அவையிலே பல உறுப்பினர்களால் காட்டப்பட்டிருக்கிறது. கண்ணாடிகள் இங்கே காட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அவர்களால் இங்கே முதலிலே காட்டப்பட்ட அளித்த தீர்ப்புக்குப் பிறகு ** காட்டியதை அவருடைய ** அல்ல—தைக்கப்பட்ட வேறொருவர்** காட்டியதைத் தாங்கள் தவறு என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஏற்றுக்கொண்டுதானே பேசுகிறேன், ஏன் மறுக்கிறீர்கள். ** ...ற அந்த விஷயத்தை மட்டும் பத்திரிகைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடலாம், ஆனால் 16 வயதுப் பையனுக்கு அளவு குறைந்த அளவில் சட்டை தைத்துக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் அவைக் குறிப்பிலே இருந்தால்தான் அமைச்சரவர்கள் கவனக்குறைவாக இருந்து சீர்திருத்த முடியும். எனவே, அந்த வார்த்தை இடம் பெறட்டும், ** என்ற இந்த விவரம் இடம் பெறுமல் இருக்கச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அதுவேதான் நான் சொன்னது. **பத்திரிகைகளில் வெளியிட வேண்டாமென்று நான் சொல்கிறேன். நீங்கள் சொல்லியபடி இட்டிலி, அரிசி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

காட்டும்போது கூட என்னிடம் காட்டித்தான் செய்ய வேண்டும். ஆனால், அவற்றைக் காட்டும் போது இவ்வளவு பிரச்னைகள் வராது. அவையின் ஏகோபித்த கருத்தாக இருக்கும் (குறுக்கீடு) புழுத்துப் போன அரிசியைப் பற்றி எந்த உறுப்பினருக்கு மாறுபட்ட கருத்து வரும்? ஆனால், உண்மையிலே இந்த* * * அந்தப் பள்ளியிலே கொடுக்கப்பட்ட * * * தானா என்று எனக்குச் சந்தேகம்.

திரு. மு. அரங்கநாதன் ; புழுத்துப் போன அரிசியைக் கூட வேறிடத்திலிருந்து பெற்று அப்படிக் காட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புழுத்துப் போன அரிசியைப் பற்றி யாருக்குமே ஆட்சேபனை வராது.

திரு. மு. அரங்கநாதன் : இட்டிலியைக் கூட வீட்டிலே தயார் செய்து, இங்கு விற்றது என்று காட்டலாமே....

(இரு தரப்பிலும் பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து என் அனுமதி இல்லாமல் யாரும் பேசக் கூடாது, எல்லோரும் உட்காருங்கள்.

## 10. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

## (அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 19/78)—தொடர்ச்சி

திரு. துரைமுருகன்: இன்னொரு விவகாரம் நீதித் துறையிலே எவ்வளவுதூரம் இந்தச் சர்க்கார் ஈடுபடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன். சேலத்திலே பூலாவரியிலே ஒரு கொலை வழக்கு நடந்தது. கொலை வழக்குக்குள்ளே நான் புகவில்லை. அது நீதிமன்றத்திலேயிருக்கிறது. வழக்கு மன்றத்திற்குள்ளே நான் போகவில்லை, காம்பவுண்ட் சுவருக்கு வெளியிலே நின்று கொண்டு பேசுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காம்பவுண்ட் சுவருக்கு வெளியேயிருக்கலாம்; உள்ளே எட்டிப் பார்க்கக் கூடாது. (சிரிப்பு)

திரு. துரைமுருகன் : 1974-ம் வருஷம் இந்தக் கொலை நடைபெற்றது. அதுபற்றி ஒரு வருஷம் துப்பு துலக்கப் பெற்றது. பிறகு துப்பு சரியாகக் கிடைக்கவில்லையென்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு நெருக்கடி காலத்திலே, 1976-ல், மீண்டும் துப்பு துலக்கப்பட்டது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நவம்பர் 1976-ல் சார்ஜ் சிட் போட்டார்கள். 1977 மே மாதத்திலே முதல் அப்ரூவரை விசாரித்திருக்கிறது கோர்ட். 'நெருக்கடி காலத்திலே என்னைத் துன்புறுத்தினார்கள். ஆகையினால் இப்படியெல்லாம் சொல்லிவிட்டேன். ஆகவே, இந்த வழக்குக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை' என்று முதல் அப்ரூவர் கோர்ட்டில் மாறிவிடுகிறார். அதற்குப் பிறகு, இந்த வழக்கை, சேலத்திலேயிருந்து மாற்றி கிருஷ்ணகிரிக்குக் கொண்டு செல்ல வேண்டும்; பிறகு கிருஷ்ணகிரியிலிருந்து தர்மபுரிக்கு மாற்ற வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பிலே சொல்லப்படுகிறது. சாதாரணமாக, கட்சிக்காரர்கள்தான் கோர்ட்டை மாற்று என்று கேட்பார்கள். ஆனால், இங்கே சர்க்காரே கேட்கிறது, சேலத்திலே வேண்டாம், கிருஷ்ணகிரிக்கு மாற்று, என்று. பிறகு, கிருஷ்ணகிரியில் வேண்டாம், தர்மபுரியில் நடத்து என்று கேட்கிறது. தர்மபுரியில் வழக்கு போடப்படுகிறது. மீதியிருக்கிற இரண்டு அப்ரூவர்களையும் விசாரிக்கிறார்கள். அவர்களும் அந்த இடத்திலே, 'நெருக்கடி காலத்திலே எங்களைத் துன்புறுத்தினார்கள். ஆகவேதான் அப்ரூவர்களாகிச் சொன்னோம். அந்த வழக்குபற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று சொன்னார்கள். பிறகு விசாரணை நடக்கிறது, செஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட் பண்ணி விடுகிறார்கள். நான் கேட்கிறேன், இப்பொழுது நடக்கிறது? (குறுக்கீடு) தர்மபுரியிலே நிறைய கொலை கேஸ்கள் இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால், அங்கு நிறைய இல்லை. இரண்டு மூன்று தானிருக்கும். இப்பொழுது ஸ்பெஷல் கோர்ட் கேட்கிறார்கள்.

<u>திரு. எஸ். ஆர். இராதா ;</u> ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்;</u> தயவுசெய்து அமருங்கள். பேரவைத் தலைவர் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்; நீங்கள் உட்காருங்கள்.

(திரு. துரை முருகன் பின்னாலிருந்து சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

தயவுசெய்து அமருங்கள். உங்கள் தரப்பிலேயிருந்து அனுமதி பெறாமல் பேசுவது சகஜமாக இருக்கிறது.

<u>திரு. மு. அரங்கநாதன்:</u> திரு. ராதா எந்த அனுமதி கேட்டு பேசுகிறார்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> அங்கேயும் நான் கண்டித்து உட்காரச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆனால், உட்கார்ந்து பேசுவது அதிக நேரங்களில் உங்களுக்குப் பழக்கமாகி விட்டது. திரு. ரகுமான்கான் அங்கே உட்கார்ந்து பேசுவது இங்கே



எனக்குக் கேட்கிறது. (திரு. அரங்கநாதன் உட்கார்ந்து கொண்டே குறுக்கீடு) தயவுசெய்து உறுப்பினர் அரங்கநாதன் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யுங்கள். மற்றவர்களைக் காட்ட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அது என்னுடைய கடமை, உங்களுடைய கடமையை நீங்கள் ஆற்றுங்கள். என்னுடைய கடமையை நான் செய்கிறேன்,

வழக்கு முடிந்து விட்ட ஒன்றா? அல்லது, இப்பொழுது தொடர்ந்து நடைமுறையிலே நடந்து கொண்டு வருகின்ற ஒன்றா?

<u>திரு. துரை முருகன் :</u> தலைவரவர்களே, முடிந்து விட்ட ஒன்று என்றாலும், பேசலாம். (குறுக்கீடு) ஆகையினாலே தர்மபுரி செஷன்ஸ் கோர்ட்டிலேயே வழக்கு நடத்தலாம். ஆனால், சர்க்கார் தரப்பிலே இப்பொழுது என்ன கேட்கிறார்கள் என்றால், ஸ்பெஷல் கோர்ட் கேட்கிறார்கள். ஸ்பெஷல் கோர்ட் என்றால், இடம் வேண்டும், தனியாக ஜட்ஜ் போடவேண்டும். இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாகச் செலவு. ஆக ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், போலீஸ் இலாகாவிற்கு ஒதுக்கப் படுகிற பணம் இப்படியே போகும். ஏதோ பழி வாங்கவேண்டு மென்று அநாவசியமாக கோர்ட்டுகளை மாற்றுவது, ஸ்பெஷல் கோர்ட் வேண்டுமென்று சொல்வது, ஒரு வழக்கிலே இந்த முயற்சிகளைச் செய்வதால், பணம் செலவாகிறது, இதற்கெல்லாம் நிதி ஒதுக்கீடுகள் கேட்கிறீர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> தயவு செய்து எனக்குள்ள சந்தேகம், அந்த அப்ரூவர்களைப் பயமுறுத்தி வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சொன்னீர்கள்.... (குறுக்கீடு—பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன.

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

<u>திரு. எஸ். முனிரத்தினம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசின் மானியம் மீதும் அதை ஒட்டிய என்னுடைய தொகுதியிலே இருக்கிறகுறைகள் ஒன்றிரண்டையும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய கும்மிடிப்பூண்டி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இதிலே இன்னும் சாலை வசதிகளும், குடிநீர் வசதிகளும் போதுமானதாக இல்லை. இவைகளை முழுமையாகப் பெறுவதற்கு இந்த அரசு மேலும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். அதே போல, பெரியபாளையம் ஆற்றின் குறுக்கே பெரிய பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அந்தப் பாலத்தின் மூலம் வருடத்திற்குச் சுமார் 4 மாதங்கள் வழி இல்லாமல் அந்தப் பகுதி மக்கள்

இந்தப் பகுதிக்குச் செல்ல முடியாமல், இந்தப் பகுதி மக்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாமலும் இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு அந்தப் பாலத்தைக் கொஞ்சம் உயரமாகக் கட்டுவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே சக்தி பைப்ஸ் என்னும் தொழிற்சாலை சில ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. அங்கே பணி புரிகிற சுமார் 500, 600 தொழிலாளர்கள் உணவில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தத் தொழிற்சாலையை திறப்பதற்கான வசதிகள் இப்போது இல்லை. இன்னும் சில ஆண்டுகள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். அப்படி இருக்கிற நேரத்தில் அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களை வேறு தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களுக்குத் தொழில் வாய்ப்பளிக்கின்ற முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

அதேபோல் இங்கே என்னுடைய தொகுதியிலே இருக்கிற கோவில் நிலங்களைப் பெரிய மிட்டா மிராசுகள் குறைந்த குத்தகையிலே ல ஆண்டுகளாக அதை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட அளவில், அந்த நிலங்களை எல்லாம் அவர்களி ம் இருந்து பறித்து ஏழை எளிய விவசாயிகளுக்குக் குறைந்த குத்தகைக்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அதேபோல, பரம்பரை தர்மகர்த்தாக்களாக இருப்பவர்களை முதலிலே நீக்கவேண்டும், ஏன் என்று சொன்னால், பல லட்சம் ரூபாய்கள் வருமானம் வந்தும், அந்தக் கோவிலுக்குச் சரியான வசதியைச் செய்து கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்ற முறையை நீக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு எதிர்கட்சியிலே இருக்கிற உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்த குற்றங்களைச் சொல்ல வேண்டுமானால் ஒரு மாதமல்ல, இரண்டு மாதம் அல்ல. ஒரு வருடம் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒரு கோவிலைப் பற்றிச் சொல்கிறேன். பெரியபாளையத்தில் பவானி அம்மன் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலில் உள்ள பரம்பரை தர்மகர்த்தா அப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசில் * * * மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய முதல் அமைச்சரும் இன்றைய எதிர்கட்சித் தலைவருமாகிய......

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்டவர்களைப்பற்றி குற்றச்சாட்டைச் சொல்லும்போது ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும். காட்டாமல் பேசக்கூடாது. வேறு பிரச்னைக்குப் போங்கள். தனிப்பட்ட அமைச்சரைப் பற்றி பேசும்போது ஆதாரம் காட்டிவிட்டுத்தான் பேசவேண்டும் அவர் பேசியதில் * * * * என்று குற்றச்சாட்டுள்ள பகுதியை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. எஸ். முனிரத்தினம் ; ஆதாரத்தைக் கொண்டு வந்து நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அன்று முதல் அமைச்சராக இருந்த, இன்று எதிர்க் கட்சித்தலைவராக இருக்கும் திரு. கருணாநிதி அவர்கள் அந்தக்கோவிலின் தர்மகர்த்தாவால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்திற்கு வந்து தங்கக் கிரீடம் சூட்டிக் கொண்டு வந்தார். அந்த ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : முறை இல்லாமல் பேசுவது என்ற முடிவிற்கு வந்து விட்டால் எல்லோரும் முறை இல்லாமல் பேச அனுமதிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது. ஆதாரம் இருந்தாலும் என்னிடத்தில் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும். அந்தப் பிரச்னையை விட்டுவிட்டு வேறு பிரச்னைக்குச் செல்லுங்கள்.

திரு. எஸ். முனிரத்தினம் : அதேபோல், தர்மகர்த்தாவுக்குச் சாதகமாக பல ஆணைகள், சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. உதாரணமாக, ஜி. ஓ. எம். எஸ். 2307, தேதி 21-7-1970, ஜி. ஓ. நெம்பர் 12550/93/71-72, தேதி 2-3-1971 போன்ற அரசு ஆணைகள் மூலம் மேற்படி கோவில் மேலாளும் அறங்காவலராக அவர் நியமிக்கப்படும் சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. அன்றைய ஆட்சியில் இது போன்ற தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பணியாற்றுகிறார்கள் என்ற காரணத்திற்காக பொதுமக்களுக்குப் பயன்படும் அந்தக் கோவிலின் பணம் இது போல் அநியாயமாக, அட்டூழியமாக அந்த ஆட்சியில் செலவிடப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஜி.ஓ.க்களை ஒழித்து பரம்பரை தர்மகர்த்தா முறையை நீக்கி அரசாங்கமே அதற்கு ஒரு கமிட்டி நியமித்து, அதில் தனிப்பட்டவர்கள் இருக்கக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இதுபோன்று இன்னும் அந்த ஆட்சியில் நடந்த பல அட்டூழியங்களைக் களைவதற்கு நம்முடைய அரசு தீவிர முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. மாரிமுத்து நீங்கள் 15 நிமிடத்தில் முடித்துக்கொண்டால் நல்லது. ஏனெனில் நேரம் இல்லை, நிறைய மசோதாக்கள் நிறைவேற்றப்படவேண்டியிருக்கின்றன.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே நிதி ஒதுக்க மசோதாவை தாக்கல் செய்து இருக்கிறார்கள். இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட உடனே அரசு பணத்தை எடுத்து செலவிடுவதற்கான ஒரு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையை செலவழிப்பதிலே அதிக கண்காணிப்பு இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு தடவையும் நாம் பேசுவது வழக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுகிறார்கள், நிர்வாகத்தில் நிர்வாக அமைப்புகள் சரியாக இல்லை, என்ற குறைகளை இங்கே அவரே எடுத்துக் காட்டுகிறார்கள். அந்தக் குறை இருப்பதற்கு என்ன காரணம்? அந்தக் குறை ஏற்படுவதற்கு, நிர்வாகத்தில் தவறு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதை பின்னாலே சொல்கிறேன்.

ஆகையால், அமைச்சரவைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்கான முறையில் மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் சரியாக கண்காணித்து, நாம் எந்த எண்ணத்தோடு மக்களுக்காக அந்தத் தொகையை ஒதுக்குகிறோமோ அந்தப் பணியை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையோடு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கிற போது பொதுவாக ரெவின்யூ பட்ஜெட்டில் செலவினத்திற்கு 11 கோடி குறைச்சல். இதற்காக பல்வேறு காரணங்கள் உண்டு. இதை ஒரு பெரிய குறையாகச் சொல்ல முடியாவிட்டாலும், சென்ற ஆண்டைவிட 11 கோடி ரூபாய் குறைச்சலாக ஒதுக்கியிருக்கிறார்கள். இங்கே

'Economic-*Cum*-Functional Classification'

என்ற புத்தகம் கொடுத்து இருக்கிறார்கள். அதன்படி பார்த்தால் திட்டத்திட்ட எகனாமிக் சர்வீசுக்காக 50 கோடி குறைச்சலாக இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு மக்களின் நலனுக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக குறைந்த தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தக் குறைந்த தொகை ஒதுக்குவதற்கு என்ன காரணமாக இருந்தாலும் கூட,



வளர்ந்து வரும் பொருளாதார நிலையிலே, தேவைகள் அதிகரித்து இருக்கும் பொருளாதார நிலையிலே இன்னும் அதிக தொகைகள் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்பதை மட்டும் இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாங்கத்தினுடைய வருவாய் குறைவாக இருக்கிறது; செலவு அதிகமாக இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மை. ஆக இந்த வருவாயை இன்னும் அதிகரிக்கச் செய்ய என்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். தேசிய வளர்ச்சிக் குழுவிற்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் சென்று வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் இந்த 'ரோலிங் பிளான்' பற்றி ரொம்ப வெகுவாக ஆதரித்து இருக்கிறார்கள். எந்த அடிப்படையில், எந்தக் கருத்தில் ஆதரித்தார் என்பது தெரியவில்லை.

இந்த ரோலிங் பிளான் என்பது போட்ட திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றிவிட வேண்டுமென்று கட்டாயம் இல்லாமல் போடக்கூடிய ஒரு திட்டம். அரசாங்கத்திற்கு வசதி இல்லை என்றால் திட்டத்தைத் தள்ளிப்போட்டு விடலாம்; வசதி இருந்தால் செய்யலாம். இதுதான் ரோலிங் பிளான் கன்செப்ஷன். இதை எப்படி ஏற்றுக் கொண்டு வரவேற்றார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதைப்போலதான் பொருளாதார கொள்கையிலும் அறிவித்திருக்கிறார்கள். அதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொடுக்கிறது என்றால் அதை அமுலாக்க வேண்டியதுதான், இல்லை என்று சொல்ல முடியாது. குடிசைத் தொழில்களை, சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொன்னார்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொண்டு காரியங்கள் செய்ய வேண்டியதுதான். ஆனால் அம்மாதிரி பொருளாதாரக் கொள்கை நல்லதல்ல என்பதிலே நம்முடைய கருத்தை அறிவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல், பாராட்டி விட்டு வந்தது வரவேற்க முடியாத ஒன்று என்பதை மட்டும் குறிப்பிட்டுச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்களைச் செய்வது என்றால் அதற்குத் திறமை வேண்டும். இன்றைக்கு அதிகமாக வேலை கொடுக்கிறோம் என்று சொன்னால் கூட, இதற்கு முன்னால் அரை குறை வேலைவாய்ப்பு இருக்கிறவர்களுக்கு முழு வேலைவாய்ப்பு கிடைப்பதாக இருக்குமே தவிர புதிதாக இலட்சக்கணக்கான

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 30

பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும் என்று ரோலிங் பிளான் பொருளாதாரக் கொள்கையில் அறிவித்திருப்பது எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கும் என்பது தெரியவில்லை.

தேசியக் கொள்கையைப் பொறுத்தவரையில், தொழில் வளர்ச்சியடைய ஊக்குவிக்க வேண்டும். அதற்கு குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் ஏற்பாடு செய்வது என்றாலும்கூட, தொழில் திறமை ஏற்பட முயற்சிச் செய்யவில்லை என்றால் பொருளாதாரப் புரட்சியைக் காணப்போகிறோம் என்று சொல்லும் திட்டம் வெற்றி பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறத்திலே அதிகமான வளர்ச்சிக்கான திட்டங்களை ஒதுக்கப் போவதாகக் கூறுகிறார்கள். ஆனால் இதுவரையிலும் அவைகள் பற்றிய ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. அப்படியே வந்தாலும் கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒதுக்குகின்ற தொகை அங்கே இருக்கிற சாதாரண மக்களுக்குப் போய் சேரும் வகையில் என்ன ஏற்பாடுகளைச் செய்யப் போகிறோம் என்பது இன்றைக்கு ஒரு பிரச்சனை. எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும் கீழே இருக்கிற சாதாரண மக்களுக்கு முழுப் பயனும் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது.

இன்றைக்கு கிராம வளர்ச்சியில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சாதாரண மக்களுக்கு அந்த அபிவிருத்தி கிடைக்கும் வகையில் நிலச் சீர்திருத்தத்தை விரைவில் அமுலாக்க வேண்டும். நில சீர்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை என்றால் அது சாதாரண விவசாயிகளுக்குப் போய் கிடைக்காமல் பெரும் நிலச்சுவான்தார்களுக்குத்தான் போய்ச்சேரும், அதைத் தடுக்கின்ற வகையில் நிலச் சீர்திருத்தத்தை வெகுவாகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய திட்டத்திலே, படித்தவர்களுக்கு இந்த பட்ஜெட்டிலும் சரி, இதற்கு முந்திய பட்ஜெட்டிலும் சரி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சி இல்லை. படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு எப்படிக் கொடுப்பது என்பது ஒரு பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் குடிசைத் தொழில், சிறு தொழில் செய்வதில்லை. பயிற்சி இல்லாத காரணத்தால் தங்களுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். படித்தவர்கள் சுயமாக வேலை பார்க்க வேண்டுமென்றால் அவர்களுக்குத் தொழில் பயிற்சி கொடுக்க வேண்டும்.



1978 மார்ச் 30] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெறும் கல்லூரிப் படிப்பில் மிகுந்த பயனில்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் தொழில்கல்விக்கு அல்லது தொழில்பயிற்சிக்கு ஏதாவது புதிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. முன்பிருந்த முறைதான் அப்படியே இருக்கிறது. புதிதாகத் தொழில் கல்வி ஏற்படுத்த முயற்சியே செய்யவில்லை, படித்தவர்கள், படித்துவிட்டு வீட்டிலே இருப்பது ஒரு நாட்டுக்கு நல்லதல்ல. ஆகவே, குறுகிய கால பயிற்சியாவது கொடுத்தால்தான் அவர்கள் இன்றைக்கு சுயமாகத் தொழில் செய்யும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வார்கள். ஆகவே, தொழில் கல்வியை அதிகமாக ஏற்படுத்தி, தொழில் பயிற்சி முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

[முற்பகல் 11–10]

இன்றைக்கு மத்திய சர்க்காரிலே ஊதியம், வருமானம், விலை என்ற கொள்கையினை வகுக்க கமிஷன் ஏற்படுத்தி இருக்கிறார்கள், அதாவது வேஜ், இன்கம், பிரைஸ் பாலிசி. அதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் பல தொழிற் சங்கங்கள் இந்த வேஜ் பாலிசியை ஒத்துக்கொள்ள முடியாது என்று கூறி இருக்கிறார்கள். அது என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.

இன்றைக்கு இருக்கின்ற சமூக அமைப்பிலே அவரவர்களைப் பற்றித்தான் அவரவர்கள் கவலைப்பட முடியுமே தவிர பிறரைப் பற்றிக் கவலைப்படாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவரவர்கள் தங்கள் தங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்காக ஆங்காங்கே பெரு முயற்சிகள் செய்கிறார்கள். ஆக முதலாளித்துவ அமைப்பு சமுதாயத்திலே இருக்கிற காலம் வரையிலும் ஆங்காங்கே பணியாற்றக்கூடியவர்கள் தங்களது குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சி செய்வது உண்டு.

அவ்வாறு முயற்சிகளை அவர்கள் மேற்கொள்கின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றை அடிக்கடிச் சொல்கிறார்கள். கிராமப்புற மக்களும் வறுமை கோட்டிற்குக் கீழே இருப்பவர்களும் கோடிக்கணக்கில் இருக்கும்போது ஓரளவு ஊதியம் பெறுபவர்கள் போராட்டத்தை நடத்தலாமா என்று அவர்கள் சொல்வதை நாம் பார்க்கிறோம். இது சமுதாயத்தின் அமைப்பிலே இருக்கின்ற ஒரு குறையே தவிர இதைக்கொண்டுபோய் அந்தப் பிரச்சனையோடு இணைப்பது என்பது பிரச்சினைகளைத் தீர்ப்பதா இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஆகவே, ஆங்காங்கு அந்த அந்த நிறுவனங்களிலே பணியாற்பவர்கள் தங்களது குறைகளை எடுத்துச்சொல்கிறபோது வறுமை ட

கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் மேலும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருக்க முடியாது. ஆகவே, அந்தப் பிரச்சினைகளைப் போக்குவதோடு பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கான முயற்சியையும் எடுத்தாக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்சம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. இதைப் போக்க வேண்டும் என்று மிகவும் அதிகமாகவே பேசப்படுகிறது. இந்த லஞ்சத்தை எப்படிப் போக்குவது என்பது பற்றி நாம் யோசிக்க வேண்டும். நிர்வாக அமைப்புத்தான் லஞ்ச ஊழலுக்குக் காரணமாக இருக்கிறது என்பது பலபேர்களுடைய கருத்து. ஆகவே, இந்த நிர்வாக அமைப்பை அடியோடு மாற்றியமைக்க முடியவில்லை என்றால் லஞ்சம் ஊழலை நாம் அடியோடு போக்குவது என்பது ரொம்பவும் சிரமமான காரியம். இந்த அமைப்பு அப்படியே இருக்கின்ற வரையிலும் லஞ்சம் இருந்துகொண்டுதான் இருக்கும். நான் லஞ்சத்தைப் போக்கவே முடியாது என்று உறுதியாகச் சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிர்வாக அமைப்பை மாற்றியமைத்தாக வேண்டும். அதுதான் அதற்காகச் செய்யப்படும் நன் முயற்சியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். எந்த ஒரு சிறு காரியமாக இருந்தாலும் ஒரு பகுதியிலே இருக்கக்கூடிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள், எதற்கெடுத்தாலும், சென்னையை நோக்கித்தான் வரவேண்டி இருக்கிறது. எதற்கெடுத்தாலும் பெரிய அதிகாரியைத்தான் பார்க்க வேண்டும் என்ற நிலை நீடிக்குமானால் இந்தச் சங்கடத்தைத் தீர்ப்பது கடினம் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே நிர்வாக அமைப்பை மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராம அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி என்கின்றபோது தண்ணீர்ப் பிரச்சினை முன்னதாக இருக்கிறது. காவேரிப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இது குறித்து இதற்கு முன்னாலே பல முறை முந்தைய கூட்டங்களிலே வற்புறுத்தியும் இன்னும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஜூன் மாதம் வரப் போகிறது. சாகுபடி வேலையை ஆரம்பிக்க வேண்டும். காவேரிப் பிரச்சினை பற்றி ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றிய பேச்சே இல்லை. ஆகவே மத்திய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டு விரைவிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஒரு பெரிய திட்டத்தை மற்ற ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு முதலீடு செய்தார்களோ அந்த அளவுக்கு கிட்டத்தட்ட 1 லட்சத்து 16 ஆயிரம் கோடி ரூபாயினை 6 வது திட்டத்திற்கு ஒதுக்குவது குறித்து மத்திய அரசு



யோசித்துக் கொண்டு இருக்கிறது. இவ்வளவு பெரும் தொகை ஒதுக்கப்போகின்ற பெரிய திட்டத்தில் கங்கை காவிரி இணைப்பைப் பற்றியும் வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டும்.

அடுத்து கொள்முதல் கொள்கையைப் பற்றி மாண்புமிகு உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் நேற்றைய தினம் ஒரு அறிக்கையினை வாசித்தார்கள்.

விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டது. இப்போது 50 சதவிகிதம் வெளி மாநிலங்களுக்கு கொண்டு போக லெவி விதித்திருப்பதாகச் சொல்கிறார்கள். நமக்கு அதிகமான கொள்முதல் தேவைதான். லெவி ரேட்டை அதிகரிப்பதால் இப்போது ஒப்பன் மார்க்கெட்டில் விலை விவசாயிகளுக்குக் குறைவாகயிருக்கிறது. லெவியை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு, குறிப்பாக நெல் உற்பத்தி செய்கிற மாவட்டங்களில் இருப்பவர்கள், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சை போன்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு, நியாயமான விலை கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் விவசாயிகளுக்கு ஏற்படுவது நியாயமே. இந்த லெவியை அதிகரிப்பதன் மூலம் மூட்டைக்கு நான்கு ரூபாய் குறையும். ஆகவே, அரசாங்கம் பொது விநியோகத்திற்காக வெளி மார்க்கெட்டில் வாங்கக் கூடிய கொள்கையை அமுலாக்குவது தான் நல்லது.

அடுத்தபடியாக, கிராம ரோடுகள் போதுமான அளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் கிராம ரோடுகளுக்காக, இணைப்பு ரோடுகளுக்காக, அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு வந்தது. ஆறு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டது. இடையில் அது ஒன்றரைக் கோடியாகி அந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன.

ஆகவே, கிராம ரோடுகளுக்காக ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நிதிநிலைஅறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், மூன்று கோடி ரூபாய்தான் ஒதுக்கப்போவதாகத் தெரிகிறது. காரணம் என்னவென்று புரியவில்லை. ஆகவே ஐந்து கோடி ரூபாயாவது கிராம ரோடுகளுக்காக, இணைப்புச் சாலைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும், அதில் குறைவு ஏற்படக் கூடாது, அப்படிச் செய்தால்தான் ரோடு வசதி இல்லாத கிராமங்களுக்கு ரோடு வசதி ஏற்படுத்த முடியும், ஏற்படுத்தி உற்பத்திப் பொருள்களை வெளியே கொண்டுவர வசதிகள் ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை) :

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை, வெளி மாநிலங்களில் இருக்கிற அளவிற்கு அவ்வளவு மோசமாக இல்லை என்றாலும், தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜனங்கள் இன்னும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் பல சங்கடங்

களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலயிடங்களில் ஜாதிப் பிரச்னை தலைதூக்கி அவர்கள் சங்கடத்திற்கு உள்ளாக்கப் பட்டிருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் இருந்து தந்தி ஒன்று வந்திருக்கிறது. ஹரிஜனங்கள் தாக்கப்படுகிறார்கள்; உடனடியாகப் பாதுகாப்பு வேண்டுமென்று. அந்தத் தந்தியை நான் அமைச்சர் அவர்களிடம் தருகிறேன். சில அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்றாலும் ஆங்காங்கு சிறிய அளவில் இவ்விதம் நடப்பதை அரசு கவனித்து கடும் நடவடிக்கை எடுப்பதன்மூலம் இதையெல்லாம் ஒடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அரசு பாதுகாப்பு இருக்கிறது என்றாலும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் செலக்ஷனாகி இரண்டு ஆண்டுகள் வேலை பார்த்தும் கூட அவர்கள் ஊஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தந்தி வந்திருக்கிறது. கமிஷன் செலக்ட் செய்து வேலை பார்த்து வந்தவர்கள் ஊஸ்ட்செய்யப்பட்டிருக்கிறார்கள். விதி 10(எ)(1)—ன்கீழ் வேலைபார்த்தவர்கள் அநேகம் பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். நிலைமை இப்படி இருக்கும்போது படித்துவிட்டு வேலையில்லாதிருப்பவர்களுக்கு எப்படி வேலை கொடுக்க முடியும்? ஆகவே இவர்களுக்கும், படித்து வேலையற்று இருக்கக்கூடியவர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய திட்டங்களை அரசு தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதா மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த ஆண்டை விட அதிகமான அளவில் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து மாநில அரசு இதை எந்தெந்தத் தலைப்புகளின்கீழ் செலவிடப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருகிறது. ஆண்டுதோறும் அளவு கடந்து தொகை செலவானாலும் கூட அடிப்படையில் நாட்டில் இருக்கக்கூடிய தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்களின் வாழ்க்கையில் எந்தவிதமான விமோசனமும் இல்லாத நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. எந்தத் திட்டங்கள் போட்டாலும், எந்தளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த அடிப்படை நிலை மாறவில்லை. எனவே இவ்விஷயத்தில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



[முற்பகல் 11.20]

மலிவு தானியக் கடைகள் 16 ஆயிரம் கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நான்கு மாவட்டங்களில் தான் இது இன்றைக்கு ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, இன்னும் பல மாவட்டங்களில் விஸ்தரிக்கப்படவேண்டும். அதில் எல்லாம் அத்தியாவசியமான பண்டங்களைக் கொடுப்பதற்கும், இந்தப் பொருளாதார நெருக்கடி காலத்தில் மக்களுக்குத்தேவைப்படும் எல்லாப் பொருட்களை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இதை நீண்டகாலத் திட்டமாக கருதக்கூடாது. இதற்கென்று அதிக நிதி தேவைப்பட்டால் மத்திய அரசிடமிருந்து மானியமோ உதவியோ பெறுவதற்கு வேண்டிய முயற்சியை மாநில அரசு எடுக்க வேண்டும்.

ஜனதா ஓட்டலைப்பற்றி இரண்டு நாட்களுக்கு முன் இங்கு விவாதம் நடைபெற்றது. அந்த முறையில் குறைந்த விலையில் அத்தியாவசியப் பண்டங்களை வழங்க முன் வர வேண்டும். ஆகவே மலிவு தானியக் கடைகளை நடத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து அதிக நிதி கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால், இந்தத் திட்டமானது ஒரு சில மாவட்டங்களுக்கு மட்டும் கொண்டு வரப்பட்டால் மக்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு குறைந்த விலையில் பொருட்களை வாங்குவதற்கு முடியும் என்ற நிலை நிச்சயமாக ஏற்படாது.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக்குறைந்த பட்சக் கூலிச்சட்டம் என்று வந்தது. ஏற்கெனவே இன்றைக்கு இருக்கக்கூடிய ஆளும் கட்சி வெளியில் இருக்கும்போது கிராமப்புற விவசாயிகளுக்கு அதிகப்படியான அளவுக்கு கூலியை உயர்த்துவோம் அதற்கான முயற்சிகளை எடுப்போம் என்று அறிவித்திருந்தது. இன்றைக்கு சட்டம் வந்திருக்கிறது. போதுமான அளவுக்கு கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அது ஒரு புறமிருக்க, அந்தச் சட்டம் அமல் படுத்த முடியாத நிலையில் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலும் உள்ள விவசாயிகள் பலன் அடைகிற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த பட்சக் கூலியாவது இந்தக் கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கிடைப்பதற்கும் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஆரம்பத்தில் கூறிய மாதிரி 1,103 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அடிப்படையில் மாற்றம் இல்லை என்கின்ற நிலைமையில் சில மாநிலங்களில் நிறைவேற்றியிருப்பதைப் போல் தமிழகத்தில் பிரத்யேகமாக எதுவும் கொண்டு வராவிட்டாலும், நாமும் இந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று அறிவிக்கின்ற முறையில், வேலையில்லாதோருக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை வேறு மாநிலத்தில் கொண்டு

வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்த்திருத்தம் சம்பந்தப்பட்டவரை, ஒரு காம்ப்ரஹென்சிவ் லான்ட் ரிபார்ம் பில் வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இது வரை வரவில்லை. ஏற்கெனவே நிறைவேற்றிய சட்டங்களின் மூலம் கிடைத்த சர்ப்ளஸ் லான்டும் அதிகமாக இல்லை. ஓரளவு வழங்கப்பட்ட இடங்களில் பல சிக்கல்கள் வந்திருக்கின்றன. சட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகளை தவிர்க்க திருத்தச் சட்டங்கள் வருகிறதே தவிர, ஏற்கெனவே இருக்கின்ற பினாமி நிலங்களை எடுப்பதற்கு, அவற்றை எடுத்து நிலமில்லாத ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்தால் தான் இன்றைக்கு அடிப்படையில் ஒரு மாற்றம் ஏற்படுமே தவிர, வேறு பலன் எதுவும் இராது. ஆகவே, உடனடியாக இதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் பற்றி பேசப் படுகிறது. இந்த பட்ஜெட் கூட்டத்திலேயே அவர்களுக்கான சட்டம் வரும் என்று எதிர்பார்த்தார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியம்.

இன்னொன்று, வேலையில்லாதோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வரும் போது, கன்னியாகுமரி மாவட்டத்தில், நீண்ட நாளாக இருக்கின்ற ஒரு பிரச்னை. அதாவது ஆசிரியர்கள் 30 வயதுக்குள் வேலையில் அமர்ந்தாக வேண்டும் என்று இருக்கிறது. அங்குள்ள தனியார் பள்ளிகளில் அவர்கள் விருப்பத்திற்கேற்ப ஆசிரியர்களை நியமித்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள், டிரெயினிங் ஆனவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். மற்ற எல்லா இடங்களை விடவும், கன்னியாகுமரி மாவட்டத்தில, இருக்கின்ற நிலைமையைப் பார்த்து, ஆசிரியர்களை நியமிக்கின்ற விஷயத்தில் வயது வரம்புக்கான விதிகளைத் தளர்த்தியாவது 30 வயதுக்கு மேல் இருந்தாலும், அவர்களை நியமித்துக்கொள்கின்ற முறையில், அந்த மாவட்டத்தில் இருக்கின்ற பிரத்யேகமான சூழ்நிலையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, பல்வேறு பள்ளிகளில் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன் வரவேண்டும். அதற்கேற்ற வகையில் 'பீப்பிள்ஸ்-டீச்சர்' ரேஷியோவை 1:20 என்ற முறையில் போட்டு அமைத்தால், இதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கை உடனே எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்



இன்னொரு தகவலை நான் கேள்விப்பட்டேன், கடலூரிலே இருக்கக் கூடிய சப் கோர்ட்டை, திண்டிவனத்திற்கு மாற்றப் போவதாகக் கேள்விப்பட்டேன். கடலூரிலே சப்-கோர்ட்டு நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கு சிதம்பரம் தாலுகாவிலிருந்தும், இன்னும் அந்த மாவட்டத்திலுள்ள விருத்தாசலம், திருக்கோவிலூர், திண்டிவனம் ஆகிய பகுதிகளிலே இருந்தும் இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள். கடலூர் இதற்கெல்லாம் சென்டராக இருக்கிறது. எனவே, இதை திண்டிவனத்திற்குக் கொண்டு செல்வது நல்லதல்ல. அது கிட்டத்தட்ட செங்கற்பட்டிற்கு அருகாமையில் இருக்கின்றது. அப்படியிருக்கின்ற காரணத்தால், சிதம்பரத்திலே இருக்கக்கூடிய ஒருவர் வழக்கு சம்பந்தமாக இப்படி திண்டிவனத்திற்கு வரவேண்டுமென்றால், செலவு அதிகமாகும். அது சிரமமும் கூட. அப்பேர்ப்பட்ட ஒரு ஆலோசனை இந்த அரசிடம் இருந்தால், அதைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் ஒரு சம்பவம் நடந்தது, அது சம்பந்தமாக நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது இங்கு பட்ஜெட் கூட்டத்தில் மானியத்தின் மீது பேசும்போது பேசி விடுங்கள் என்று சொல்லி, அவசரமான பொது முக்கியத்துவம் உள்ள பிரச்னையாக இருந்தாலும் கூட, அது பேரவையிலே நிராகரிக்கப்பட்டு, அனுமதி மறுக்கப்படுகிறது. திருக்கோவிலூரிலே, கனகநந்தல் என்ற கிராமத்தில், அங்கே இருக்கக்கூடிய அந்த கிராமத்து வாலிபரை 3 போலீஸ்காரர்கள் தாக்கி, அவர் மரணமடைந்து விட்டார். இப்படி அவர் மரணம் அடைந்து விட்டார் என்றால், அது கொலை என்றுதான் அர்த்தம். அந்த 3 போலீஸ்காரர்களும் சப்-ஜெயிலில் காவலர்களாக இருந்தார்கள். டுட்டியில் அப்போது இருந்த அவர்கள் இங்கே ஏன் சென்றார்கள் என்றால், அங்கே கள்ளச் சாராயம் போன்ற விஷயங்களுக்கு வசூல் செய்வதற்காகத் தான். இந்தக் காவலர்களை அங்கிருக்கக்கூடிய டி.எஸ்.பி.யே அனுப்பியிருக்கிறார். இதைக் கேள்விப் பட்டதும் அங்கே 5000 மக்கள் சூழ்ந்துகொண்டார்கள். ஆர். டி. ஓ., கலெக்டர், எஸ். பி. எல்லாம் அங்கே சென்று அமைதியான சூழ்நிலைமையை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இம்மாதிரியாக இன்றைக்கும் அங்கே அந்த மாவட்டத்திலே போலீஸ் துறையில் பல்வேறு ஒழுங்கீனங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும்.

அதேபோல், நெல்லிக்குப்பம் போலீஸ் ஸ்டேஷனிலே லாக்-அப்பிலே இருக்கும்போது ஒரு கைதி மரணமடைந்தார். அதற்காக ரெவின்யூ போர்டு உறுப்பினர் ஒருவரை விசாரிப்பதற்காக

[திரு. சி. கோவிந்தராஜன்] [1978 மார்ச் 30

அனுப்பினார்கள். அந்த விசாரணை முடிவு பெற்று விட்டது. அந்த விசாரணை எப்படி நடைபெற்றது? இவைகள் எல்லாம் ஏற்கெனவே இங்கு சம்ப்ந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு விசாரணை நடக்கும்போது, விசாரணைக்குரிய போலீஸ் காவலர்கள், அல்லது அந்த போலீஸ் அதிகாரிகள் அந்த இடத்திலேயே இருப்பார்களானால், அந்த விசாரணை நியாயமாக இருக்க முடியாது. இருப்பினும் இந்த விசாரணை என்னவாயிற்று? முடிவு என்னவாயிற்று? விசாரணை நடந்தது. அப்படி விசாரணை நடந்தால், அது வெளிப்படுத்தாத நிலையிலேயே இருக்கக் கூடாது. அந்த விசாரணையின் முடிவு என்ன என்பதை, இந்த அவையிலே வைத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வர வேண்டும்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன், இந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரி, இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருப்பதால், இப்படிப்பட்ட விஷயங்களில் பல்வேறு விதமான தவறான நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இதனால், சட்டம் ஒழுங்கு ஆகியவைகளைப் பராமரிப்பதற்குப் பதில், சட்டம் ஒழுங்கு ஆகியவைகளை தவறாகப் பயன்படுத்தும் ஒரு நிலைமை அந்த மாவட்டத்திலே இருக்கிறது. இது குறித்து முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் அடிக்கடி தெரிவித்திருக்கிறேன். விண்ணப்பங்களும் கொடுத்திருக்கிறேன். எனவே, அந்த மாவட்டத்திலிருந்து உடனடியாக வேறு மாவட்டத்திற்கு அவர் மாற்றப்பட வேண்டும். இது சம்பந்தமாக ரூல் இருக்கிறதோ, இல்லையோ, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மாவட்ட அதிகாரியை, அதிலும் முக்கியமாக போலீஸ் அதிகாரியை அந்த மாவட்டத்திலேயே வைத்திருப்பது நியாயம்தானா, சரிதானா என்பதை ஆலோசித்துப் பார்த்து, அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்னையை நாங்கள் அடிக்கடி கூறி வந்திருக்கிறோம். சிறையிலே இருக்கக்கூடிய நக்சலைட் கைதிகளை எல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டபோது. அது சர்க்காரின் பரிசிலனையில் இருக்கிறது. என்று சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு நாட்களுக்குள் பரிசிலனை செய்யப்படும்? இன்னும் எத்தனை நாட்களுக்கு அவர்கள் சிறையிலே இருக்க வேண்டும்? அவர்கள் கொள்கை சம்பந்தமாக மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறபோது, அவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டாமா? இந்த மாநிலத்திலே மட்டும்தான் இந்த நிலைமை இருக்கிறது. மற்ற மாநில அரசுகளிலே இப்படிப்பட்ட



1978 மார்ச் 30] (திரு. சி. கோவிந்தராசன்)

நிலைமை இல்லை. எனவே, அவர்கள் தண்டனை பெற்ற கைதிகளாக இருந்தாலும், அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திண்டுக்கல்லில் பகவதி விலாஸ் சுருட்டுக் கம்பனி என்று ஒரு கம்பனி இருக்கிறது. அந்தக் கம்பனியில் 150 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தச் சுருட்டுக் கம்பெனி முதலாளியும், இன்னொரு முதலாளியும் சேர்ந்து அதை மூடிவிட்டு, புதிதாகத் திறந்து நடத்தக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11.30]

அந்த சுருட்டுக் கம்பெனியை மூடி இரண்டு மாதங்கள் ஆகின்றன. குறைந்த கூலிக்கு, குறைந்த வசதிகளில் ஏற்கெனவே இருந்த நிலைமைகளைக் குறைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு தொழிலாளர் ஒத்துக் கொண்டு வேலைக்கு வந்தால் வைத்துக் கொள்ளப்படும் என்று நிபந்தனை விதிக்கிறார்கள், அதனால் 150 தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே அரசு அசிரத்தையாக இருந்து வருகிறது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்தச் சுருட்டுக் கம்பேனியைத் திறக்கவும், 30 ஆண்டுகள் சொர்விஸ் ஆனவர்களை எல்லாம் புது சொர்விசாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிர்பந்தத்தை நீக்கி அவர்களை எல்லாம் வேலைக்கு எடுத்துக் கொள்ளவும் உடனடியாகத் திறக்கப்பட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் நகர் மன்றங்களில் தனி அலுவலர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் ஆலோசனைக் குழுக்கள் போடப்படுகின்றன. அந்த ஆலோசனைக் குழுக்களுக்கு யார் யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்கான அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தத் தனி அதிகாரியே அவர்களைத் தேர்ந்தெடுக்கிறாரா? அந்த நபரைத் தேர்ந்தெடுப்பது என்பது அவருடைய விருப்பமா? அதிலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை எடுப்பதாகத் தெரியவில்லை உதாரணத்திற்குச் சொல்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர் நகர் மன்றம் இருக்கிறது, அங்கு அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பிரதிநிதி யாரும் கிடையாது. அதே போல விருத்தாசலத்தில் அமைக்கப்பட்ட குழுவிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் இல்லை. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இதர முக்கியமான கட்சிப் பிரதிநிதிகளும் இடம் பெறவில்லை. விழுப்புரத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இடம் இல்லை. இப்படிப்பட்ட இடங்களில் ஓரளவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது, விழுப்புரத்தில் இரண்டொரு முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்

(திரு. சி. கோவிந்தராசன்) [1978 மார்ச் 30

முனிசிபல் கவுன்சிலர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். புதிதாக வந்திருக்கிற ரெட்டி காங்கிரஸ் உள்பட தேர்ந்தெடுத்து இடம் கொடுக்கும் நிலைமை இருக்கும் போது, எந்தக் கட்சியிலும் சேராத பல பேர் இடம் பெறும்போது, இப்படிப்பட்ட முக்கியமான கட்சிக்கு ஏன் இடம் தரவில்லை ? இதற்கு யார் பொறுப்பு? இதை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்கிறாரா அல்லது தனி அதிகாரிகள் செய்கிறார்களா ? அரசின் நிலை என்ன ? இதைச் சீர்தூக்கிப் பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல்தான் கூட்டுறவு அமைப்புகளும்; அங்கும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. காலையில் ஒரு கேள்விக்கு அந்தத் துறைக்கான மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது அந்தத் துறையில் அனுபவம் உள்ளவர்களாக இருந்தால் போடப்படுகிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தத் துறையில் அனுபவம் உள்ளவர் என்று யார் கண்டு பிடிப்பது ? புதிதாகத் தேர்தல் வந்தால் அனுபவம் இல்லாதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லையா ? அப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்களைதான் போட்டுக் கொண்டு வருகிறார்கள் என்று அரசு கூற முடியுமா ? கடந்த காலங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே நிரப்பப்பட்டு பல்வேறு விதமான தவறான நிலைமைகள் ஏற்பட்டன. இப்படிப்பட்ட தவறான நிலைமைகள் இந்த ஆட்சியில் இருக்காது என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட குழுக்களில் ஒருவரையொருவர் கண்காணிக்கக் கூடிய வகையில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசு பாராபட்சம் இல்லாமல் அனைத்துக் கட்சியினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியில் உள்ள மக்கள் தொடர்ந்து கோரி வருகிறார்கள், வாசுதேவநல்லூரில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை வேண்டுமென்று, பங்குகள் வசூலிக்கப்பட்டு விட்டன். அங்கு அமைக்க வேண்டிய தொழிற்சாலை அதே மாவட்டத்தில் வேறு ஒரு இடத்திற்குச் சென்று விட்டது. அங்குள்ள மக்கள் அங்கு ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை வேண்டுமென்று கோருகிறார்கள். 1250 டன் கெபாசிடி உள்ள சர்க்கரை ஆலை நிறுவ முடியாவிட்டாலும், மினி ஷுகர் பாக்டரிஸ் என்று அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது போல் அதையாவது அந்த இடத்தில் வைப்பதற்கு அங்கே தண்ணீர் வசதி, மற்ற வசதிகள் எல்லாம் இருப்பதால் அரசு மேலும் அதற்கு உதவி செய்ய கூடிய வகையில் அங்கு ஒரு சர்க்கரை தொழிற்சாலையை அமைக்க உடனடியாக ஏற்பாடு செய்ய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 30] (திரு. சி. கோவிந்தராசன்)

இந்தக் கூட்டுறவுக் கடன் கொடுக்கும் விஷயத்தில் ஏற்கெனவே வெள்ளம், புயல் அடித்து இருக்கக்கூடிய நிலையிலே மகசூல் சரியாக இல்லாத காரணத்தினால் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கத் தயாராக இருந்தாலும், நாணயமான சிறு விவசாயிகள் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் குறைந்தபட்சம் குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக ஆக்காவிட்டாலும் கூட மத்திய காலக் கடன்களாகவாவது மாற்ற வேண்டுமென்று கோருகிறார்கள். ஆனால் அதை நிராகரிப்பது மட்டுமல்ல, இன்றைக்கு ஜப்தி செய்யக்கூடிய நிலைமையில் நெல்லிக்குப்பம், கடலூர், தென் ஆர்க்காடு மாவட்டத்திலே பல இடங்களிலே கூட்டுறவு வங்கியினர் நடத்தி வருகிறார்கள். இதைத் தடுக்க வேண்டும்.

கடன்கள் கொடுக்கும் போது கடனை வாங்குகிறவரே இன்னொருவருக்கு அவர் கடன் வாங்க ஜாமீனாக இருக்கிறார், அவரும் அந்தச் சங்கத்திலே உறுப்பினராக இருக்கிறார். ஜாமீனாக இருப்பவர், அவர் தான் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டாலும்கூட, இன்னொருவருக்காக ஜாமீன் கொடுத்தார். அந்த நபர் கடனைத் திருப்பிக் கட்டவில்லை என்ற காரணத்திற்காக அவருக்கு மறுபடியும் கடன் கிடைப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது, இது ஒரு அனுமலி. இது நியாயமல்ல. யார் சூரிட்டியாக இருக்கிறாரோ, அவர் தன்னுடைய சொந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டாலும், இன்னொருவர் கொடுக்காவிட்டாலும் அவருடைய சொத்து இருக்கிறது, இல்லாவிட்டால் ஜாமீன் கொடுத்தவருடைய சொத்து இருக்கிறது, நடவடிக்கை எடுக்கலாம், ஆனால் ஜாமீன் கொடுத்தார் என்பதற்காக அவருக்கு மறுகடன் கிடைக்காத நிலையில் திருகண்டேசுவரம் போன்ற சொஸைடிகளிலே இபபடிப்பட்ட நிலைமை இருக்கிறது. அவைகளையும் கவனித்து ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லிக்குப்பத்தில் உள்ள நகர்மன்ற மருந்துவமனையைப் பொறுத்த வரையில், அது முனிசிபாலிட்டி, இன்டஸ்ட்ரியல் சென்டர் ஆகவும் இருக்கிறது. பல்வேறு ஸ்தாபனங்களும் அங்கே இருக்கின்றன. அங்கே அது ஒரு டிஸ்பென்சரி மாதிரி தான் இருக்கிறது. அதை இந்த முனிசிபாலிட்டியால் நிர்வகிக்க முடியாமல் எதற்கெடுத்தாலும் கடலூர் மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அடிக்கடி கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவ மனையை அரசே எடுத்துக் கொள்வதற்கும், குறைந்த பட்சம் 10 படுக்கைகளாவது அங்கே ஏற்படுத்த வேண்டுமென்றும் ஏற்கெனவே இருக்கிற ஒரு டாக்டரோடு இன்னொரு லேடி டாக்டரையும் நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே 1103 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களின் வாழ்க்கை நிலையில் மாறுதல் இல்லாமல் செலவு மட்டும் அதிகமாகியிருக்கிறது. இதனால் நமக்கு என்ன ஆதாயம் என்று மக்கள் வியந்து கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அடிப்படை காரியங்கள் என்ற முறையிலே நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கவும், வேலையில்லாதவர்களுக்கு சில மாநிலங்களிலே தரப்படுவதைப் போல் எம்ப்ளாயிமண்ட் ரிலிப் கொடுத்து நாமும் அந்தப் பாதையிலே போகிறோம் என்றும் பணம் விரையமாகவில்லை, பழைய மாதிரிப் போகவில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். 1103 கோடி ரூபாய் சாதாரண விஷயமல்ல, கடந்த ஆண்டை விட, அதற்கு முந்தைய ஆண்டைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட அடிப்படைக் காரியங்களை யெல்லாம் இந்த அரசாங்கம் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமருகிறேன். வணக்கம்.

*டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி நவின்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகவே தமிழகம் மட்டும் அல்லாது இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய பெரும்பாலான மாநிலங்களினுடைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால் வரவு 8 அணா செலவு 10 அணா என்ற நிலைமையிலே தான் இருக்கின்றன என்பதை நாம் எல்லாம் தெளிவாக உணரக்கூடிய நிலையிலே இருக்கிறோம். இது வரையிலும் நிர்வாக முறையிலே பல பல வகையிலே எந்தத் துறைக்கு எவ்வளவு தருகிறார்களோ அதை மேலும் பெருக்கக் கூடிய வகையிலே அடிக்கடி துணை மதிப்பீடுகள் பெருகுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பொருளாதார நிலை மாறியிருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இதைத் தொடர்ந்து கொண்டேபோனால் நிச்சயமாக அது நல்ல ஆரோக்கியமான அரசியலுக்கு உகந்ததாக இருக்காது.

(முற்பகல் 11.40)

இப்போழுது புதிதாக தமிழக அரசு பால்வள நிறுவனத்தின் அடிப்படையில் ஒருசில கருத்துக்களை வைத்திருப்பது வரவேற்கக் கூடியதாகும். ஒரு துறையிலே வரக்கூடிய வருவாய் அந்தத் துறையில் யாரால் வருகிறதோ அந்தத் துறையை வைத்துக் கொண்டே அதை நிர்வகிக்கக் கூடியவர்களுக்குச் செலவு செய்து அதனால் வரும் இலாப நஷ்டத்தைப் பங்கீடு செய்து கொள்ளும் முறையை மற்றத் துறைகளிலும் செய்து சீரமைத்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழாது என்று நான் கருதுகிறேன்.



அதுமட்டுமல்லாமல், ஒரு நாட்டின் மொத்த வருவாய் எவ்வளவு என்பதை அனுசரித்து நிர்வாகச் செலவிற்காக இத்தனை சதவீதம் தான் ஒதுக்க வேண்டுமென்று திட்டவட்டமான வரைமுறை இருக்க வேண்டும். அப்படி வரைமுறையிருந்தாலொழிய இடையிடையே ஏற்படக்கூடிய பல பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள், போராட்டங்களுக் கெல்லாம் நாம் ஊக்கம் கொடுக்கும் முறையில் அமையும் என்பதால் இந்த அளவிற்குத்தான் மொத்த வருவாயில் அரசு நிர்வாகத்திற்குச் செலவழிக்க வேண்டுமென்ற நிலையில் மாற்றியமைக்க வழிவகை காண வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நாட்டிலே பணப்புழக்கம் இடையிலே ஏற்பட்ட பலப்பல சங்கடங்களால் மாற்றப்பட்டுள்ளது. லேவாதேவி முறைகள் நல்லமுறையில் இல்லாத காரணத்தினால் கீழே இருக்கிற, தாழ்ந்த மட்டத்திலே இருக்கின்ற மக்களிடத்தில் மிக நல்லமுறையில் இல்லை என்பதை நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். ஏற்கனவே இருந்த நடைமுறையில் கூட்டுறவுச் சங்கங்களின் முறைகள் நல்லமுறையில் இயங்காத காரணத்தினாலும், நடைமுறை லேவாதேவிகள் முடக்கப்பட்ட காரணத்தினாலும் மக்கள் அன்றாடப் பிரச்னைகளில் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, லேவாதேவி முறையை மாற்றியமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு ஆலோசனையையும் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். லேவாதேவி முறை என்று சொல்லும்பொழுது லேவாதேவி முறையை யார் யார் விரும்பிக் கேட்கிறார்களோ அப்படிக் கேட்பவர்களுக்கு லேவாதேவி செய்ய உரிமை கொடுக்கப்பட வேண்டும். அப்படி உரிமை கொடுக்கும்பொழுது உரிமைக் கட்டணம். 10 ரூபாய் என்று வாங்கலாம். அந்த முறையில் பதிவு பெற்றவர்கள்தான் லேவாதேவி செய்ய வேண்டும், மற்றவர்கள் அதைச் செய்யக் கூடாது என்று வைக்க வேண்டும், பதிவு பெறாதவர்கள் லேவாதேவி செய்ய உரிமையில்லை என்று செய்ய வேண்டும். அந்தமுறையில் பதிவு பெறாதவர்கள் லேவாதேவி செய்தால் சட்டப்படியும், சம்பிரதாயப்படியும் வழக்குமன்றத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைமைகளை உருவாக்க வேண்டும். பதிவு பெற்றவர்கள் பதிவு எண், வரிசை எண் ஆகியவற்றை லேவாதேவி செய்யும்பொழுது குறிப்பிட வேண்டும். 100 ரூபாய் ஒருவர் வாங்கினால் ஒரு ரூபாய் பதிவுத் தாளில் எழுத வேண்டுமென்று இருக்க வேண்டும். பிராமிசரி பாண்ட்டாக இருந்தாலும், ஆதாரப் பத்திரமாக இருந்தாலும் நகைக் கடனாக இருந்தாலும், சிட்பண்டாக இருந்தாலும் இப்படிப்பட்ட எல்லாவற்றிற்கும் 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய் பதிவுப் பத்திரத்திலே வேண்டுமென்று செய்தால் நிச்சயமாகக் கறுப்புப்பணம் இருக்க இடமில்லாமற்போகும். அப்படியிருக்கும் பணம் அரசுக்கு வருவாயாக அமையும். எனவே முத்திரைத் தாளில் 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய் எழுத வேண்டு

மென்று செய்தால் அரசுக்கு வருமானம் வரும் நிலையிருக்கும். அப்படியிருக்கும் சூழ்நிலையில் லேவாதேவி முறையில் ஏமாற்றவும் முடியாது; ஏமாறவும் முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்த அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று அரசினை நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதைப்பற்றிய பல விவரங்கள் தேவைப் படும்பொழுது அதைத் தருவதற்கும் நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கமிஷன் மண்டி என்று இருக்கிறது. நிலத்திலே உழவர்கள் பாடுபடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சரியான விலை இல்லை. அதைப் போலவே கஷ்டப்பட்டு சம்பாதித்து வாங்கி உண்பவர்களுக்கும் நல்ல குறைந்த விலையில் அவைகள் கிடைக்கவில்லை. ஆனால் இடையிலே இருப்பவர்கள் மிக அதிகமான பணத்திற்கு விலையை நிர்ணயிக்கும் உரிமையைப் பெறுகின்றார்கள். ஆகவே, கமிஷன் மண்டியிலே இடையிலே பணம் புழங்குகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து, அப்படிப்பட்ட கமிஷன் மண்டிகளிலே அரசு நிர்வாகிகளை அமர்த்தி விலைக் கட்டுப்பாட்டை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கமிஷன் மண்டியில் உள்ள அவர்களுக்கு வேண்டிய முதல் ஃபோன், பேன், ரூம் அவ்வளவுதான். இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் வருவாயை அவர்கள் சம்பாதிக்கும் நிலைமையிருக்கிறது. இப்படிப்பட்டவர்களை அரசு கண்காணித்து அதை மாற்றியமைத்து நல்லமுறையில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம். படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள், பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தனியார் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பலயிடங்களிலே பயிற்சி பெறுதவர்கள் அல்லது ரிடையர்ட் ஆனவர்களெல்லாம் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறார்கள். எனவே, படித்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் என்ற அடிப்படையில் 100 ரூபாய், 150 ரூபாய் என்ற அடிப்படையிலே அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால், இப்படிப்பட்ட திட்டத்தை அரசு ஏற்படுத்தினால் அவர்களுக்கும் வேலை கிடைக்கும். அப்படி வேலை கிடைத்தவர்கள் அரசின் வேலைக்கு அருகதையானவர்கள் முன்னுரிமை பெற்றவர்கள் என்று ஏற்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவிற்குக் குறையும் என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும்.

அது மட்டுமல்ல, நாட்டிலே டெண்டர் முறைகள் இருக்கின்றன. டெண்டர்கள், கொடேஷன்கள் என்று இருக்கின்றவை பலப்பல ஊழல்கள் நடக்கக் காரணமாக இருக்கின்றன. தனியார்





துறையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், 6 லாரிகளுக்கு ஆர்டர் கிடைத்தால் ஒரு கார் வருகிறது என்று. அப்படிப்பட்ட நிலைமைகள் பலயிடங்களில் இருக்கின்றன.

இது அரசுத் துறையிலே அதிகமாக ஊடுருவ வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், இது ஏற்படாமல் கண்காணிக்கக்கூடிய வகையில், அதை அனுசரித்து, அதற்காக, கொடுக்கக்கூடிய பர்சன்டேஜ் எவ்வளவு என்று பார்த்து, அதை அரசுக் கணக்கிலே வரவு வைத்து, நல்லவகையில். குறைந்த தகுந்த விலையில், அரசு தேவையான தளவாடங்களை வாங்குகின்ற வகையில், அதைப் பயன்படுத்த வழிவகைகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, இன்றிருக்கின்ற சூழ்நிலையில் கொடுப்பதும் வாங்குவதும் அன்றாடக் கலையாக பிரச்னையாக ஆகிவிட்டது. நாம் எது கூடாது என்று சொல்கிறோமோ அதுதான் நடைமுறையில் இருப்பதால். நிச்சயமாக அப்படிப்பட்ட நிலைமைகள் மாற ஒரு மக்கள் குழு அமைக்க வேண்டும். பிரச்னைகள் தீரவேண்டுமானால், அங்கே என்ன நடக்கிறது என்று என்று நாம் தெரிந்தால்தான் நல்லமுறையில் நடந்து கொள்ள ஏதுவாக இருக்கும். அங்கே என்ன நடக்கிறது என்பதுபற்றி அரசுக்கு, சரியான தகவல்கள், உண்மைகள், கிடைக்கவில்லை என்பதற்குப் பலப்பல வரலாறுகள் இருக்கின்றன. ஆகவே என்ன நடக்கிறது என்பதை அறிய, மக்கள் குழு, நிச்சயமாக அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட குழுக்களினுடைய பரிந்துரைகளைப் பரிசீலித்து, அதிகாரிகள் சொல்வதையும் ஏற்று நடைமுறைப்படுத்தினால்தான் நாம் நாட்டிலே நல்ல முறையில் செயல்பட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மது விலக்கு. மதுவிலக்கை உண்மையிலே, காந்தியடிகள் எந்த அளவு ஜீவநாடியாக வைத்திருந்தார்களோ அந்த அளவு தமிழக முதல்வர் அவர்களும் வலியுறுத்துகிறார்கள் என்றாலும் நாட்டின் நிலைமைகள் மாறுபட்டுப் போவதால், இதை மேலும் நல்ல முறையில் அமுலாக்க தனி அமைப்புகளை ஏற்படுத்தி, அங்கங்கே எப்படி எப்படி மதுவிலக்கினை அமுல் செய்கிறார்கள், இந்தப் பிரச்னையிலே தவறாக நடக்கக்கூடியவர்கள் மீது எந்த வகையிலே நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை ஆராய தனி அமைப்புகளை நல்லமுறையிலே அமைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருமணங்கள். நிச்சயமாக, பதிவுத் திருமணங்களாக ஆக்கப்பட வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இப்பொழுது ஒருவர் 6 இடங்களிலே ஓட்டுப்போடக் கூடிய நிலைமை இருக்கிறது. திருமணங்களைப் பதிவு செய்தால்

[டாக்டர் கே. சமரசம்] [1978 மார்ச் 30

நான் தெளிவான கணக்கெடுப்பு கிடைக்கும். இன்னாருக்கு உறவு முறை இது என்ற முறை கூட இதனால் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உண்மையான கணக்குகளை அரசு கொடுக்கவும் கூட உதவிகரமாக இருக்கும். ஆகவே, அம்முறையை அமுலாக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்,

இன்றைக்கிருக்கிற சூழ்நிலையிலே கிராமங்களைப் பேரூராட்சியாக மாற்றுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இன்றைக்குக் கிராமங்களிலே, சிற்றூர்களிலே, தனியார், ஊராட்சியா. வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சந்தைகள் கூட, தனியார் துறையில் ஏலம் விடப்பட்டு. அரசுக் கணக்குக்குப் போகாமலிருக்கிறது. ஆகவே, குறைந்த வசதியோடு உள்ள கிராமங்களை தகுதியானவற்றை பேரூராட்சியாக மாற்ற, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், (மணியடிக்கப்பட்டது) ஆகவே, இலஞ்சத்தை ஒழிக்க நல்ல அமைப்புகளை ஏற்படுத்தி, நிர்வாகத்தை அரசு தூய்மைப்படுத்த வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்,

திரு. ஜே, ஜேம்ஸ்: தலைவரவர்களே, அவைமுன் வைத்திருக்கிற நிதி ஒதுக்க மசோதாவின் மீது சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்தியில் ஆளுகின்ற ஜனதா அரசின் பல்வேறு கொள்கைகளை ஏற்று அமுல்படுத்திக் கொண்டுவருகிற சூழ்நிலையைப் பார்க்கின்றபொழுது உண்மையிலே நமது மாநிலத்திற்கு ஒரு நல்ல வருங்காலம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். குறிப்பாக, தொழில் கொள்கையைப் பொறுத்தமட்டில், இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களிலும் ஏற்றுக் கொண்டிருக்கிற தொழில் கொள்கையை, நமது மாநில அரசும் ஏற்று செயல்பட முன் வந்திருக்கிறது. இருந்தாலும், கூட அதனையும் எதிர்க்கின்ற ஒரு கட்சி இங்கேயிருக்கிறது என்று சொன்னால், உண்மையிலே அவர்களுடைய எண்ணங்கள் எந்தத் திசையிலே செல்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்திரா காங்கிரஸ் ஆளுகிற சில மாநிலங்களில், மத்திய அரசு தொழில் கொள்கையை ஏற்று, இன்றையதினம் செயல்படுகிறது. இதுவரையிலும் மத்திய அரசு ஏற்றுக்கொண்ட தொழில் கொள்கை நாட்டில் எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்து விடச் செய்தது அதோடு, மக்களிடையே ஏற்றத் தாழ்வையும் அதிகரித்து விட்டது என்ற உணர்வோடு இந்த நாட்டில் ஒரு சமதர்ம சமுதாயம் அமைக்கப்பட வேண்டும், வேலை



1978 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

யில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, இன்றையதினம் மத்திய அரசு புதிய ஒரு தொழில் கொள்கையை ஏற்று. அதைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டுமென்று திட்டத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

ஏற்கனவே 4 ஆண்டுகளில் அந்தத் திட்டம் பூர்த்தி அடையும் என்று எதிர்பார்த்திருந்தாலும் அது போதாது. அந்தத் திட்டம் 2 ஆண்டுகளில் பூர்த்தியாக வேண்டும் என்று உயர்ந்த நோக்கத்தோடு மத்திய அரசு செயல்படுகிறது. அதனைக் கொள்கை ரீதியாக மாநில அரசு செயல்படுத்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றை நான் கூற விரும்புகிறேன்.

மத்திய அரசு கொள்கை ரீதியாக ஏற்றிருந்தாலும், அதனை செயல்படுத்துகிற வகையில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு போகிற வேகத்தில் மாநில அரசும் சென்றால்தான் இந்தக் கொள்கை வெற்றிகரமாக முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இருக்கிற தொழில் கொள்கை செயல்படுகின்ற நிறுவனங்கள் இந்தக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு வேளை பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றுகிற அதிகாரிகள் இந்தக் கொள்கையிலே நம்பிக்கை இழந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்களை அரசு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இப்போது செயல்படுகின்ற பல்வேறு நிறுவனங்களில் தேவைப்பட்டால் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய கொள்கையின் அடிப்படையில் அந்த நிறுவனங்களை மாற்றி அமைப்பதற்கும், தேவைப்பட்டால் அதையும் செய்ய வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் கூட ஒரு படி கூடுதலாகப் போய் இந்தத் துறையில் நம்பிக்கையுள்ள அதிகாரிகளை இந்தத் துறையில் அமர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இப்போது அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிற கைத்தறித் தொழிலைப் பற்றி அரசு அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். கோவை, சேலம், புதுக்கோட்டை போன்ற இடங்களில் இப்போது கைத்தறி அதிகமாகத் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, கைத்தறிக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஏற்கனவே கைத்தறித் துணிக்கு இருந்த தள்ளுபடி இப்போது நிறுத்தப்பட்டதாகவும் அதன் காரணமாக தேக்கம் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. அந்தத் துறையிலே இருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு முன் வரவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 30

அது மட்டுமல்ல. கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலே கரப்பாடி கிராமத்தில் உள்ள வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ் மூடப் பட்டிருப்பதன் விளைவாக தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இது பற்றி முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அதனை நிவர்த்திப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தமிழ்நாடு ரப்பர் பேக்டரியைப் பொறுத்தமட்டில் அரசு ஏற்கனவே 60 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தைக் கைவிடுவது பொறுத்தமாக இருக்காது. இதிலே இருக்கிற கோளாறுகளைப்பற்றி பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த அறிக்கை வந்தவுடன் தமிழ்நாடு ரப்பர் பேக்டரியை கன்னியாகுமரியில் ரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய பிரதேசத்தில் இந்தத் திட்டத்தை அமுல் படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீர்ப்பாசனத் திட்டங்கள், பல்வேறு திட்டங்கள் அமுல் படுத்தப் பட்டுவிட்டன. இருந்தாலும் எஞ்சியிருக்கிற திட்டங் களை கேரள மாநிலத்திலே பாய்ந்து, கடலிலே வீணாகப் போகிற அந்தத் தண்ணீரை தமிழ்நாட்டுக்குப் பயன்படுத்தும் விதத்தில் மத்திய அரசாங்கத்தோடும் கேரள அரசாங்கத்தோடும் பேச்சு வார்த்தை நடத்தி உடனடியாக அதை அமுல் படுத்த அரசு முன் வரவேண்டும்.

பாண்டியாறு, புன்னம்புழா திட்டத்தைப் பற்றி மத்திய அர சுக்கு, மாநில அரசு கவனத்தில் கொண்டு வரவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவல் உண்மையானால் இன்னும் காலதாமதம் இன்றி, கேரள அரசாங்கத்தோடு பேசலாம் என்று நினைத்தால், அது முடியவில்லை என்றாலோ மத்திய அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். அப் படிச் செய்தால் இது ஒரு பெரிய திட்டமாக இருக்கும் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிற காரணத்தால், இனியும் கால தாமதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கல்வி இலாகாவைப் பொறுத்தவரையில், புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்து இருக்கிறோம். பல்வேறு ஹையர் செகன் டரி வகுப்புகளை எல்லாம் நாம் ஏறத்தாழ 500 பள்ளிகளில் ஆரம்பிக்க இருக்கிறோம். அதிலே, அதிகம் கிராமப் பகுதியில்தான் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் அந்தப் பள்ளிகள் அமைவதால்



1975 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மேலும் கல்வியின் தரம் குறைந்து போகாமல் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. குறிப்பாக, கல்வி இலாக்கா அந்தக் கிராமப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்களை நியமிக்கவும், தரமான, தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கவும் நட வடிக்கை எடுத்தால் ஒழிய நாம் அமைக்க இருக்கும் கல்வித் திட்டம் வெற்றிபெற இயலாது என்பதைத் தெரிவித்து, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்தத் திட்டத்தின்கீழ் பலவிதமான வொகேஷனல் பயிற்சித் திட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. எந்தெந்தப் பிர தேசத்தில் எந்தெந்த தொழில் அமைவதற்கான வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றனவோ அந்தத் தொழில்களை பயிற்றுவிக்க, அந்த மாதிரி வகுப்புகளை அமைக்க அரசாங்கம் திட்டம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தகுந்த வகையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு நீண்ட நாட்களாக பென்ஷன் முறையாகக் கிடைக்கவில்லை என்ற ஒரு புகார் இருந்து கொண்டு இருக்கிறது. அரசு அதைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோருகிறபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் லட்சுமிபுரம் பள்ளியில் ஆசிரியர்களுக்கு இதற்கு முன்பு 1975-ம் ஆண்டில் என்று நினைக்கிறேன், 13 மாத காலச் சம்பளம் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. நியாயமாக அவர்களுக்குக் கொடுக்கப் படவேண்டிய சம்பளம் அது. என்ன காரணத்தாலோ அது வழங் கப்படவில்லை. அதை உடனடியாக அளிக்க அரசு கவனிக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன், பள்ளிக்கூடங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும். இப்போது ஒதுக்கி இருக்கும் நிதி போதாது என்று சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக கன்னியா குமரி மாவட்டத்தில் அதிகமான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அரசு பள்ளிக்கூடங்களாக அவைகள் இருக்கின்றன. பல ஆண்டுக் காலமாக பள்ளிக்கூடங்கள் கட்டப் போதுமான நிதி இல்லாத காரணத்தால் பள்ளிக்கூடங்கள் வசதியாக நல்ல நிலைமையில் இல்லாமல் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

இப்போது ஒதுக்கியிருக்கும் நிதி போதாது என்று சொன்னால் துணை மானியத்தில் அதிகம் நிதி ஒதுக்கலாம். ஆகவே, தேவை யான இடங்களில் பள்ளிக்கூடங்கள் உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக என்னு டைய தொகுதியில் மஞ்சள்மூடு, முஞ்சிறை ஆகிய இடங்களில் இருக்கும் ஆரம்பப்பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டென்டல் மெகானிக்குகளுக்கு ஏற்கனவே வேலை வாய்ப்பு அளிப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாக்களித்தார்கள். ஆனால் இப்போது 6 நபர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு அளித்து இருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. மொத்தம் 20 பேர்தான் அதில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு உடனடியாக அளிக்க வேண்டும். ஏற்கனவே அவர்கள் படித்து முடித்து விட்டு பல ஆண்டுகாலமாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மூளைக்காய்ச்சல் நெல்லை மாவட்டத்தில் வந்ததால், ஏறத்தாழ 20 விலங்கினங்கள், குழந்தைகள் இறந்து போயின. அந்த காய்ச்சல் நெல்லை மாவட்டத்தோடு நிற்காமல் கன்னியாகுமரி மாவட்டத்திலும் வந்து இருக்கிறது. அங்கே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். இருப்பினும் அரசாங்கத்தில் இருக்கும் அந்தத் துறை அந்த நோய் வருவதற்கான காரணம் என்ன என்பதை விரைவாக ஆராய்ந்து அதைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களுக்கும் அது பரவாமல் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வியாசர்பாடியில் நடந்த நிகழ்ச்சி பற்றி பல்வேறு தீர்மானங்கள் கொடுத்தோம். இதுவரையில் இந்த அவையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. பர்மா அகதிகள் அங்கே ஏறத்தாழ 3,000 பேர் இருக்கிறார்கள். ஏதோ அங்கே கள்ளச் சாராயம் வடிக்கின்றவர்கள் ஏற்படுத்திய குழப்பத்தில், போலிஸ் தலையிட்டு சரியான தீர்வு காணாமல் ஒரு தலைபட்சமாகச் செயல் பட்டதால் விளைந்த விளைவுகள் என்னவென்றால் ஏறத்தாழ 100-க்கும் அதிகமான ஏழைகள் வசிக்கும் குடிசைகள் தீக்கிரையாகின. அவர்கள் குடிசை இல்லாமல், வீடு இல்லாமல் வசிக்கிறார்கள். உண்மையிலேயே தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் ரோடுகளிலே. ஆகவே. அவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வரவேண்டும். அதில் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திருவொற்றியூர், பாரதி நகரில் இருக்கும் மணல் அரசுக்குத் தேவை என்பதால் அங்கே இருப்பவர்களை அகற்ற, அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த விஷயம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கூறியபோது, அவர்களுக்கு மாற்று நிலம் அளித்தால் ஒழிய அவர்கள் அகற்றப்படமாட்டார்கள் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் திருவொற்றியூரிலே மணல் குவாரி பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்று இடம் தருகின்றவரையில் அங்கிருந்து வெளியேற்ற வேண்டாம் என்று உறுதி தந்தார்கள் என்று சொன்னார்கள். அது சரியல்ல. நானும் அப்போது இருந்தேன். 10 நாள் வரையில் ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று தான் குறிப்பிட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, இப்போது நடவடிக்கை தேவையில்லை என்றும், அதேநேரத்தில் வீட்டுவசதித் துறையிடம் மாற்று இடம் தருவதற்கு ஆராயவும் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : உடனடியாக அவர்களை மாற்றவேண்டாம் என்றுசொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர் நல அமைச்சரவர்கள் மாற்று இடம் கொடுக்கப்படுகின்றவரை அவர்களை மாற்றமாட்டோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அவர்களுக்கு மாற்றிடம் பெறுவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. மாற்றிடம் கொடுத்தால் அவர்கள் அங்கே போகத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் மாற்றிடம் கொடுக்கின்றவரை அங்கிருந்து அவர்களை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தமட்டில் மத்திய அரசிலிருந்து இந்தி படித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய் மாநில அரசுக்கு கொடுத்ததாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ததாகத் தெரியவில்லை. இந்தித் திணிப்பை நாம் வரவேற்கவில்லை; அதை எதிர்க்கிறோம். ஆனால் விரும்புகின்றவர்கள் படிப்பதற்கு மத்திய அரசு நிதியைத் தந்தால் அந்த வாய்ப்பை நமது இளைஞர்களுக்கு ஏற்படுத்தித் தரக் கடமைப்பட்டிருக்கிறோம். நிச்சயமாக மத்திய அரசு கொடுத்த பணத்தைச் செலவிட்டு, விரும்புகின்றவர்கள் இந்தி படிப்பதற்கான வாய்ப்பை, வகுப்பு முடிந்ததற்கு அப்பாலாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்ற விருப்பம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். ஆனால் அவர்கள் விருப்பம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது ஆங்காங்கு ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளைப்

பார்க்கும்போது, நிச்சயமாக அவர்களுடைய விருப்பம் வெற்றிகரமாக இல்லை என்பதை இங்கே முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பொள்ளாச்சி நிகழ்ச்சிப் பற்றி ஏற்கனவே அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அதனால் மேலும் அது பற்றி விரிவாகக் கூறவில்லை. இருந்தாலும் அதற்கு ஆளுகின்ற கட்சியினர் துணை போகின்ற காரணத்தால் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அந்தமாதிரியான நிலைமைகள் மேலும் வரக் கூடாது என்பதைச் சொல்லும்போது எந்த அளவுக்கு எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிடுகின்றவைகளுக்குக் பாதுகாப்பு அளிக்க முடியுமோ அந்த அளவுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் துறையூர் வட்டத்தில் சோமநல்லூர் என்ற இடத்தில் பஸ் ஸ்டாண்டுக்குத் தேவையாக இருக்கிற புறம்போக்கு இடத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் குடிசைப் போட்டு, அங்கே எம். ஜி. ஆர். மன்றம் என்று போர்டு போட்டிருக்கிறார். அந்த இடத்தை அவருக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று ஏ.டி.எம்.கே. காரர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றிய புகைப்படம் எல்லாம் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடம் பஸ் ஸ்டாண்டுக்குத் தேவை, பொதுமக்களுக்குத் தேவை. ஆகையால் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்காத வண்ணம் அரசின் பொறுப்பில் இருக்கிறவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலத்தில் சி. ஐ. பி. மிஷனுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. 1908ஆம் ஆண்டில் அரசால் பதிவு செய்து கொடுக்கப்பட்ட நிலம் அது. கடந்த 70 ஆண்டுக் காலமாக அந்த நிலம் மிஷன் கைவசம் இருந்தது, அவர்கள் அங்கே கட்டிடங்கள் கட்டி அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இப்போது ஆளுகின்ற கட்சியின் தலையீடு இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறை சொல்வது பொருத்தமில்லை, என்றாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேர், அந்த நிலத்திலே தலையிடுகிறார்கள். பவானிசாகர் எம்.எல்.ஏ. அவர்கள் சில ஆளும் கட்சிக்காரர்களை அழைத்துச் சென்று அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்கள் அங்கே குடிசைகள் போடுகின்ற நிலைமைகளை புகைப்படம் எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். பவானிசாகர் எம்.எல்.ஏ. அவர்கள் அங்கே சென்று 'வினோபா நகர்' என்று பெயரிட்டு, அவர்களுக்கு குடிசைகள் போட ஆதரவு கொடுத்திருக்கிறார்.





இன்னும் சில நாட்களுக்குப் பின் 13-3-1978 அன்று சத்தியமங்கலத்திலே இருக்கும் அந்தப் பகுதியின் பெயரை அண்ணா நகர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இதற்கான அத்தாட்சி..

<u>திரு. வி. கொ. சின்னசாமி :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, பவானிசாகர் எம்.எல்.ஏ என்று என்மீது ஏதோ புகார் கூறப்பட்டது. புகார் சொன்ன அந்தச் சமயத்திலே நான் வெளியே இருந்தேன். ஆகவே மீண்டும் அதைச் சொன்னால் விளக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> புகைப்படங்கள் வைத்திருக்கிறேன். வினோபா நகர் என்று ..........

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த புகைப்படத்தில் எம். எல். ஏ. இருக்கிறாரா என்பதை அறிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற மனுவில், கையெழுத்துப்போட்டு அனுப்பப்பட்ட மனுவில் அவருடைய பெயர் இருக்கின்றது.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே. குடியிருப்புக்கு வினோபா குடியிருப்பு என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வும் அதற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெளிவாக்க வேண்டும். அவருக்கு இதிலே ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று எனக்குப் புரியவில்லை.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, வினோபா குடியிருப்பு என்று பவானிசாகர் எம்.எல்.ஏ.....

<u>திரு. வி. கொ. சின்னசாமி :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட மட்டில் தற்சமயம் கோர்டிலே கேஸ் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதைப் பற்றி விளக்கமாக இங்கே பேசுவதற்கு அனுமதிக்கலாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> உங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்று மட்டும் சொல்லுங்கள்; போதும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது சம்மந்தமாக வழக்கு நடைபெற்று முடிவாகி அந்த நிலம் மிஷனுக்குச் சொந்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 30

ஆக்கிரமிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. கோர்ட் உத்தரவையும் மீறி மொதுமக்களை இந்தக் காரியங்களைச் செய்வதற்கு தூண்டிவிடுகிறார்கள். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். கோர்ட்டிலே வழக்கு முடிந்து விட்டது. கோர்ட் கொடுத்த அந்த உத்தரவையும் நான் இங்கே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களைக் குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தவறு என்ற காரணத்தினால் இதனை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது என்பதை வேதனையோடு கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து திருச்சி ஜில்லாவில் திருவானூர் . . . .

திரு. வி. கொ. சின்னசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று திட்டவட்டமாக மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு நான் முதலமைச்சர் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினரைப் பற்றிக் குறை கூற உண்மையிலேயே விரும்பவில்லை. இருந்தாலும் மிக்க வேதனையோடு இதனைக் குறிப்பிடுகிறேன். மேலும் இந்த நிலம் பொது அவசியத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒன்று. இது ஒரு தனியார் சொத்தல்ல. இது மிஷனுக்குச் சொந்தமானது. அவர்களுக்குத் தொல்லை ஏற்படுகின்ற காரணத்தினால்தான் சொல்ல வேண்டி இருக்கிறது. அவர்கள் நீங்கள் இதைக் கண்டிப்பாக சட்ட மன்றத்திலே பேச வேண்டும் என்று கட்டாயப் படுத்தியதன் காரணமாகவும் இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதன் காரணமாகவும் இதை இங்கே கூறுகிறேன்.

அடுத்து, திருச்சி மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்குப் பதிலாக . . . .

மாண்புமிகு திரு. சி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே திரு. ஜேம்ஸ் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த நிலம் மிஷனுக்குச் சொந்தமான நிலமா ? அல்லது புறம் போக்கு நிலமா ?

திரு. ஜே. ஜேம்ஸ் ; பேரவைத் தலைவரவர்களே, 1909 ஆம் ஆண்டிலே அது மிஷனுக்குக்காகக் கொடுக்கப்பட்டது. கோர்ட் உத்தரவு இருக்கிறது.



1978 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக, திருச்சி ஜில்லாவிலே திருமானூர் என்ற இடத்தில் ராமநாதபிள்ளை என்ற ஒருவர் புறம்போக்கு நிலங்களை ட்ரை லான்ட் என்றால் ஒரு சென்ட்டுக்கு 5 ரூபாய் என்றும் வெட்லாண்ட் என்றால் ஒரு செண்ட்டுக்கு 10 ரூபாய் என்றும் கொடுப்பதாக 53 நபர்களிடம் இருந்து வசூலித்து இருக்கிறார். அப்படி வசூல் செய்த பின்பு இப்போது அவர்களுக்குக் கூட கொடுக்கப் படவில்லை. அதற்கும் அதிகமான பணம் வேறு சிலரிடம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அதிகமான பணம் கொடுப்பவர்களுக்குத்தான் அந்த நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் ஆகிக் கொண்டிருக்கின்றது.

[பிற்பகல் 12-10]

அதில்கூட நான் பெயரைக் கூற விரும்பவில்லை. அந்தக் கர்ணத்தின் உறவினர் ஒருவர் ஆளும் கட்சி எம்.எல்.ஏ ஆக இருப்பதாகக் கூறப்படுகிறது.

திரு. கே. சௌந்திரராசன் : திருமானூர் அரியலூர் தொகுதியில் வருகிறது. அந்த தொகுதி சட்டமன்ற பிரதான உறுப்பினர் எதிர்க்கட்சி உறுப்பினர் என்பதை நான் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் ஒவ்வொன்றிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிட்டதாக அல்லது அவர்கள் தூண்டுதல் பேரில் இவை நடந்ததாகச் சொல்லப்படுகிறது, சொல்லப்படுகிறது என்று சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் விதிகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இன்னொரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது தக்க ஆதாரத்தோடு கூற வேண்டும் இல்லை என்றால் பேசவே கூடாது.

"Hon. Member must not make a specific charge against another Member"

என்று பர்சனல் சார்ஜ் பொறுத்தவரை தெளிவாக இருக்கிறது. ஆதாரத்தோடு சொன்னால் பரவாயில்லை. ஏனெனில் உறுப்பினர்கள் திடீர், திடீர் என்று எழுந்து நிற்க வேண்டியிருக்கிறது. இவர்கள் திடீர், திடீர் என்று சொல்வது, எந்தப் பிரச்சனை எந்தக் கட்சி எம்.எல்.ஏ. செய்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் ஏற்கனவே கூறியதற்கு ஆதாரம் கொடுத்து விட்டேன். இதற்கும் ஆதாரம் தருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; மன்னிக்க வேண்டும், குறுக்கிடுவதற்கு. எந்த ஆதாரத்தைத் தந்திருக்கிறீர்கள்? எம்.எல்.ஏ. தலையீடு என்பதற்கு ஆதாரம் இல்லை. சில காரியங்கள் நடந்திருக்கின்றன, அதற்கான ஆதாரங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தக் காரியங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் நடைபெற்றது என்பதற்கு ஆதாரம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் ; பாதிக்கப்பட்டவர்கள் எழுதி அவர்கள் கையெழுத்து போட்டு அதற்கு ஆதாரமாக புகைப்படங்கள் எனக்கு அனுப்பப்பட்டு அந்தப் புகைப்படங்களைக் கொடுத்திருக்கிறேன். கையெழுத்து போட்ட கடிதங்கள், முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு நகல் எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதையும் கொடுத்திருக்கிறேன். ஆகவே இதைப் பற்றி வேண்டுமென்றே குறை கூற வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை. அரசு தலையீடு கூடாது, ஆளும்கட்சியினர் தலையீடு கூடாது என்ற கொள்கை அரசுக்கு இருப்பது எனக்கு நன்கு தெரியும். ஆனால் நடைமுறையில் அந்த அளவிற்கு இல்லை என்பதைச் சுட்டிகாட்டுவதன் மூலம் இதுமாதிரி நிலைமைகள் இனி வரக் கூடாது என்பதற்காக நல்லநோக்கோடுதான் கூறினேன். யார் மீதும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்று கூறவில்லை. (மணியடிக்கப்பட்டது.)

நெல்லை ஜெபமணி அவர்கள் ஊரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ரோடு தார் செய்யப்பட்டும் இதுவரை பஸ் விடவில்லை என்ற குறை இருக்கிறது. தேவையான பஸ்கள் விடவேண்டும், இல்லையென்றால் அவர்கள் வீட்டுக்கு இரண்டு மைல் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்து, நடைபெற இருப்பதாக கூறப்படுகிற டிரான்ஸ்போர்ட் ஸ்ட்ரைக் குறித்து இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, அந்த ஸ்ட்ரைக் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் டிரான்ஸ்போர்ட் வேலை நிறுத்தம் என்றால் பொதுமக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பது அரசுக்கு நன்கு தெரியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறபோது கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே ஓடுகிற ஆறுகள் சம்பந்தமான பிரச்சனையை மத்திய அரசு தயாராக இருந்தும் மாநில அரசு அதைப்பற்றி ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மை அது அல்ல. பாரதப் பிரதமர் அவர்கள் திருவனந்தபுரம் வந்திருந்தபோது நமது முதல்வர் அவர்களும் கேரள முதல்வர் அவர்களும் சேர்ந்து



எந்தெந்த ஆறுகளை எடுத்து முதலில் ஆய்வது என்பது பற்றி ஒப்பந்தத்திற்கு வந்தாகிவிட்டது. அதற்காக ஒரு தொழில் நுட்பக் குழு போடப்பட்டுவிட்டது. அந்தத் தொழில் நுட்பக் குழுவை மத்திய அரசுதான் போட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சனை குறித்து ஆராய வேண்டியது மத்திய அரசின் கடமை.

மாநில அரசைப் பொறுத்தவரையில் ஒருமுறை நாங்கள் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். மறுமுறையும். எழுதி இருக்கிறோம் இந்த ஆய்வுக்குழுவைக் கூட்டி அதை விரைவுபடுத்த வேண்டுமென்று மத்திய அரசை கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு ஒன்றும் செய்யாமலிருக்கிறார்கள் என்று நான் சொல்வதற்குத் தயாராயில்லை. அவர்கள் விரைவில் நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

* மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையில் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி, மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அதிலே,

''ஒரு உறுப்பினர் பேசும் பொழுது, வேறோர் உறுப்பினர் மீது குறிப்பிட்டு ஏதாவது குற்றம் சாட்ட விரும்பினால், அக்குற்றச் சாட்டைப் பேரவைத் தலைவரிடம் முன்னதாகவே கூறி பேரவைத் தலைவர் அதைக் குற்றம் சாட்டப்படும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்ததன் பின்னரே, அதற்கான அனுமதி வழங்குவார். அவ்வித அனுமதியின்றி, எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் மீது தமது உரையில் குற்றம் சாட்டுவது கூடாது. இதுவே நாடாளுமன்றத்திலும், நமது சட்ட மன்றங்களிலும் பின்பற்றப்படும் மரபாகும். நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலும் இந்த முறையைத் தவறாது பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, உறுப்பினர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உரை நிகழ்த்துமாறு வேண்டுகிறேன்.''

இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகுதிரு ஜேம்ஸ் அவர்கள் சம்பந்தப்பட்ட எம்.எல் ஏ.க்களுக்கு தெரிவித்த பின்னர் பேசினாரா? என்பதை அறிய விரும்புகிறேன்?.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அதைப் பின்பற்றித்தான் ஒரு முடிவு எடுத்திருக்கிறார். இங்கே காட்டாமல் அவர்கள் பேசக் கூடாது என்றுதான் நானும் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் முதலில் பேசட்டும். அதன் பிறகு வேண்டுமானால் கேளுங்கள். பேச அனுமதிக்கிறேன். இப்போது உட்காருங்கள்,

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். அதற்கான ஆதாரம், புகைப்படங்கள் பற்றிச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரிவாக அவர்களிடம் எடுத்துச் சொல்லவில்லையே தவிர, குறிப்பாக இதைப் பற்றித் துணைத் தலைவர் அவர்களிடம் இதைப்பற்றி பேசியிருக்கிறேன் என்று தெரிவித்துள்ளேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்பளித்தமைக்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நல்ல திட்டங்களையும், செயல் முறைகளையும் அமுல்படுத்துவதற்கு, வழிவகைகள் காணுகின்ற வகையில் இந்த நிதி ஒதுக்கீடு அமைந்திருக்கிறது என்பதற்கு நான் மனதாரப் பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக் கொண்டாக வேண்டும். இப்படிப்பட்ட நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு வருவதானாலும், இந்த ஆண்டு தரப்பட்டிருக்கின்ற இந்த நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டிலும், மிகத் தெளிவான முறையிலே பல்வேறு பிரச்சனைகளையும் விட்டுவிடக் கூடாத ஒரு வகையிலே இந்த அறிக்கை அமைந்திருப்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்தாக வேண்டும். என்றாலும், இங்கே பல்வேறு நண்பர்கள் பல்வேறு பிரச்சனைகளை இப்போது எடுத்துச் சொல்லுகின்ற வகையில் நானும் ஒருசில பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அளவிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

நான் முதலிலேயே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு பல்வேறு நகரசபைகளிலே, அந்த நகர மன்றங்களிலே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அவர்கள் திடீரென்று வீட்டு வரியை உயர்த்துவதும், அதேபோன்று பல்வேறு வரிகளை உயர்த்துவதும் போன்ற நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு இருக்கிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு நகரங்களில் பார்த்தால், குடிக்கின்ற தண்ணீருக்குக்கூட இன்றைக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நகரசபைகளில் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டிருப்பதையும் காணலாம். நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அந்த வகையிலே, என்னுடைய தொகுதியாகிய கும்பகோணம் நகராட்சியைப் பொறுத்த மட்டிலும், நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இன்றைக்கு அங்கேயுள்ள தனி அதிகாரி அவர்கள், அவர்களாகவே ஒரு முடிவை எடுத்துக் கொண்டு, இன்றைக்கு 5 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வந்த குடிநீர் வரி, திடீரென்று ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 10 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த நகராட்சியிலே இருக்கின்ற மக்கள் எந்த அளவிற்குத் தொல்லைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் இந்த நேரத்திலே கவனித்தாக வேண்டும். அது மட்டுமல்ல. அங்கேயிருக்கின்ற எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் இந்தக் குடிதண்ணீர் வரி உயர்வைக் கண்டித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.20)

அதற்காக அரசாங்கத்திற்குப் பல்வேறு கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தப் பிரச்சினையை, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரை இருந்தாலும் சரி, குடிதண்ணீர் வழங்குகின்ற அந்தந்த் துறையாக இருந்தாலும் சரி, குடிதண்ணீர் வரியை உயர்த்துகிற நேரத்திலே, கட்டணத்தை உயர்த்துகிற நேரத்திலே இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே நகராட்சியைப் பொறுத்தவரையிலே சில நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதுவரை நகராட்சிக் கடைகள் ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடப்பட்டு முன்பு ஏலம் எடுத்தவர்களைத் தொல்லைக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு ஏலம் விடாமல் அவர்கள் தருகிற வாடகையில் 5 சதவிகிதம், 10 சதவிகிதம் உயர்த்தி அவர்களுக்குக் கடைகளைக் கொடுத்திருக்கக்கூடிய காரியத்தை இன்றைக்குக் கடைகளை வைத்துக் கொண்டிருக்கிற பல்வேறு வியாபாரிகள் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லக் காரணம்—விரைவாக நகராட்சித் தேர்தல்கள் வர இருக்கிறது என்ற உணர்வு இருக்கிற நிலையில் அதிகாரிகள் விதிக்கிற கட்டண உயர்வை நிறுத்தி வைத்தால் பொதுமக்களிடத்தில் நம்மைப் பொறுத்தவரை நல்ல அபிப்பிராயம் உருவாக வசதியாக இருக்கும். இந்தக் கட்டண உயர்வு எந்தக் காலத்தில், எந்த ஆட்சிக் காலத்தில் வந்தது என்று பேசப்பட்டாலும்கூட, அதற்குக் காரணங்கள் சொல்லாததால் இன்றைக்கு இருக்கிற ஆட்சியின் மீது குறை சொல்லுகிற நிலைமைகள் உண்டாகக்கூடும். எனவே, அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் குடந்தையில் இருக்கும் மருத்துவ மனை நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அது எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி அது. அதைத் திருத்தியமைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. வசதிகள் இருக்கின்றன. இரண்டாண்டுகளுக்குள் குடந்தையிலே மிகப் பெரிய பெருவிழா வர இருக்கிறது. பெருவிழா வருகிற நேரத்தில் மருத்துவ மனை மிகப் பெரிய அளவில் திருத்தப்பட வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மகாமகம் விழா இரண்டாண்டுகளில் வர இருக்கிறது. தமிழ் நாட்டில் இருந்து மட்டுமல்ல, இந்தியாவில் இருந்து லட்சக் கணக்கான மக்கள் திரளப் போகிறார்கள். அப்படித் திரளுகின்ற நேரத்தில் மருத்துவ மனை நல்ல முறையில் பயன்படுகிற அளவில் அமைய வேண்டும்.

அங்கு நீண்டகாலமாக புதை சாக்கடைத் திட்டம் அமல் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பகுதிக்கு மட்டும் போடப்பட்ட பிறகு அது கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது. அதை மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைக்குள்ள நிலைமையில் குற்றச்சாட்டுகள் என்பது மிகச் சாதாரண நிலைமையில் இருக்கிறது. இங்கே பல்வேறு குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. அந்தக் குற்றச்சாட்டுகளின் நிலை என்ன என்பதையும், எதற்காகச் சொல்லப்படுகின்றன என்பதையும் என்னால் மிக நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது. இங்கே சொல்லப்படுகிற ஒவ்வொரு குற்றச்சாட்டும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு அதை எப்படி மாற்றுவது என்பதற்காக ஒரு குற்றத்தை மறைக்க வேறு ஒரு குற்றம் சொன்னால் அந்தக் குற்றம் மறையும் என்ற எண்ணத்தில் பல்வேறு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு மெத்த மன வேதனையோடு ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அது தேவையில்லை என்று 'இதுவரை கருதினாலும் இன்றைக்கு இங்கே குற்றச்சாட்டுகள் என்று சொல்லப்படுகிற நிலைமைகளைப் பார்த்து நான் சொல்லுகிறேன். ஆதாரங்கள் இருக்கின்றன, புகைப்படம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லி மிகப் பெரிய அளவில் சொல்கிறார்கள். நான் தலைவருடைய அனுமதிக்காக எழுதிக் கொடுக்கிறேன்.

என்னுடைய நண்பர் திரு ரகுமான்கான் அவர்கள் இங்கே உறுப்பினராக இருக்கிறார். அந்த திரு ரகுமான்கான் அவர்கள் இன்றைக்கு அரசாங்கத்தின் வீட்டில் குடியிருக்கிறார்கள். ஏறத்தாழ இரண்டாண்டுக் காலமாக அந்த வீட்டில் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த வீடு யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஒரு மேல்சபை உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் அவர் இருக்கிறார். நான் அவர் பாஷையில் சொல்வதானால் — ''இதிலே பயங்கரமான



ஊழல் நடைபெற்று விட்டது; வாடகையில் மோசடி நடைபெற்றிருக்கிறது; இது எவ்வளவு பெரிய தவறு; கொள்ளை அடிக்கிறார்கள்'' என்றெல்லாம் அந்த பாஷையில் பேச முடியும். ஆனால் நான் அவ்வாறு பேச விரும்பவில்லை.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எந்த அளவுக்குக் குற்றங்களைச் சொல்லுகிறார்கள். அப்படிக் குற்றங்களைத் தெரிவிக்கிற நேரத்தில் நம்மை நாமே பார்த்துக் கொள்ள வேண்டாமா? யாருடைய பெயரிலோ இருக்கிற வீட்டில் இன்னொருவர் இருக்கிறார், ஒரு உறுப்பினர் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிற அரசாங்கத்தினுடைய நாட்குறிப்பில் கூட அவருடைய முகவரி போடப்பட்டிருப்பது — அரசாங்க எஸ்டேட்டில் இருக்கும் கோஷன் பிளாக் 7 ஆம் எண் என்று போடப்பட்டிருக்கிறது. நான் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு கேட்டேன், அந்த வீடு யாருக்கு ஒதுக்கப்பட்டது, யார் அதில் இருக்கிறார்கள் என்று கேட்டேன். அதிகாரிகள் சொல்லுகிறார்கள், ஒன்றரை ஆண்டு காலமாக சம்பந்தப்பட்ட இலாகாவிற்குத் தெரிவித்திருக்கிறோம், யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அவர் குடியிருக்கவில்லை, யாரோ ஒருவர் குடியிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஒரு ஆண்டுக் காலமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் இதே தவறை ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் செய்திருப்பதாக இல்லை, செய்வதாகத் தெரிந்தால்கூட அதை மிகைப்படுத்தி மிகப் பெரிய அளவிற்குப் புகைப்படங்கள் எடுத்து பூதாகாரமாக எடுத்துச் சொல்லி ஆளுங்கட்சியின் மேல் பழிபோடுகின்ற வகையில் வந்து இருக்கும், இன்றைக்கு சைனா பஜார் [ * ] பர்மா பஜார் [ * ] இன்றைக்கு இங்கே வேகமாக வந்து கொண்டிருக்கின்றன......

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவர் தான் விளக்க வேண்டும், தன்னிலை விளக்கம் தர வேண்டியது அவர் தான், தாங்கள் அல்ல.

திரு. துரை முருகன் : ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறேன், என்ன என்று சொல்ல அருள்கூர்ந்து அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பும்போதே நான் புரிந்து கொள்கிறேன். நீங்கள் எழுப்புவது தங்களை ஒட்டியதாக இருந்தால், அனுமதிக்கலாம், பேரவைத் தலைவர் கடமையைப் பாருங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1978 மார்ச் 30

திரு. துரை முருகன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் யாரோ ஒரு உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் இருக்கிறார் என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்சினையல்ல. தன்னிலைவிளக்கம் அந்த உறுப்பினர் தான் தர வேண்டும், இன்னொரு உறுப்பினருடைய தன்னிலை விளக்கத்தைத் தாங்கள் சொல்ல வேண்டியதில்லை. திரு. ரகுமான்கான் விவகாரம் இது. அவரே விளக்கலாம்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திரு. துரை முருகன் எழுப்பவந்த ஒழுங்குப் பிரச்சினை, அவர் ஒழுங்குப் பிரச்சினை எழுந்தவரையில் உண்மை. அவர் எழுப்பியதில் ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது. ஆனால் இடையில் வேறு விவாதத்தில் அதை அவர் விட்டுவிட்டார். இன்று காலையிலே இங்கே பேசப்பட்ட உரிமைப் பிரச்சினையைக் குறிக்கிற விதத்தில் அவர் சைனா பஜார் ( * ) வேறு எங்கேயோ ( * ) என்றெல்லாம் உறுப்பினர் ராதா அவர்கள் கூறியது உரிமைப் பிரச்சினைக்குட்பட்டது. அதைத்தான் அவர் எழுப்ப இருந்தார்.

திரு. துரை முருகன் : அதைத்தான் சொல்ல வந்தேன். என்னைச் சொல்லவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. தாங்கள் நேரடியாக அதைச் சொன்னால் பரவாயில்லை, பேராசிரியர் சொன்னது போல் சொல்லவில்லை, தாங்கள் திரு ரகுமான்கான் பிரச்சினையை எழுப்பினீர்கள். அதனால் தான் அனுமதிக்கவில்லை. ஏற்கனவே உரிமைக் குழுவிற்கு விடப்பிட்ட பிரச்சினை, ஆகவே இராதா அவர்கள் சொன்ன அந்த ( *** ) என்பதை யெல்லாம் நீக்கவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தாங்கள் உத்தரவிட்டதற்குப் பிறகு அதைப் பற்றி உரிமைக் குழுவிற்கு போன ( * *) இங்கே பேசவில்லை, அவை உரிமைக் குழுவிலேயே இருக்கட்டும். பழைய தி.மு.க. பாணியிலே பேச வசனம் சரியாக வர வேண்டுமென்று பேசினேன். நான் குற்றச்சாட்டு என்ற முறையிலே சொல்லிக் கொண்டிருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

( * ) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மிகப்பெரிய காரியம் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினர்களாக இருக்கிற நாமெல்லாம் 7 நாட்கள் இங்கே இருந்துவிட்டு ஊருக்குச் சென்று— செல்கிறோமோ இல்லையோ— வருவதற்கு நமக்கு பயணப்படி வழங்கப்படுகிறது. செல்கிறோமோ இல்லையோ என்று நான் சொல்வதற்குக் காரணம் அதற்கான ஆதாரம் வழங்கப்படவேண்டுமென்பதால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர், உறுப்பினர்கள் பிரச்னையாக இருக்குமானால் அதுபற்றி அந்த இலாக்கா அமைச்சர் இடத்திலோ அல்லது முதலமைச்சரிடத்திலோ கொடுத்துவிட்டு அதைப்பற்றிப் பேசுங்கள். இங்கே ஒரு உறுப்பினரைப்பற்றியோ அல்லது மற்ற உறுப்பினர்களைப் பற்றியோ பேசவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : அடுத்து, இன்றைக்கு நாம் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். நான் அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்வேன். ராஜாஜி ஹாலில் பார்த்தால் பெரிய பெரிய படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. படங்களிலே இருக்கின்ற உருவத்திலே இருக்கிற மகிமையை விட அந்தப் படத்தை விட யார் அதை நிறுவியது தெரியுமா என்று கருணாநிதி என்று பெரிய எழுத்திலே போடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12.30)

அரசாங்க மாளிகையில் இருக்கின்ற படங்களை யார் நிறுவினார்கள் என்ற வரலாற்றைப் போட வேண்டிய அவசியமில்லை. இங்கே மூன்று நான்கு படங்களை நாம் வைத்திருக்கிறோம், இவைகளை யார் நிறுவியது, யார் வைத்தது என்று இல்லை. ஆனால் அங்கே பார்த்தால் பெரியதாக எழுதியிருக்கிறார்கள், நிறுவியது யார் தெரியுமா என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிறுவனர் என்பதை எடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இன்னொரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இங்கே ஆளுங்கட்சியிலிருப்பவர்களும், எதிர்கட்சியிலிருப்பவர்களும் பல்வேறு அமைச்சர்கள் தங்கள் தொகுதிகளுக்கு வருகின்ற நேரத்தில் விழாவிற்கு அழைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த நேரத்தில் என்னுடைய நினைவிற்கு ஒன்று வருகிறது. அருமை நண்பர், கொறடா, திரு கோவிந்தராசன் அவர்கள் இருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன் அவர் இந்த மன்றத்திலே கதறிக் கதறிப் பேசினார். அவருடைய தொகுதியில் குருங்குளம் சர்க்கரை ஆலை திறப்பு விழா நடைபெற்றது. எங்கேயோ இருக்கின்ற குருங்குளத்திற்குத் தஞ்சாவூரிலே திறந்து வைத்தார்கள். அதற்காகப் பெரிய அழைப்பிதழ்கள் போடப்பட்டன,

ஒரு அழைப்பிதழுக்கு ஏறக்குறைய பத்து ரூபாயாகும். அப்படிப்பட்ட பெரிய அழைப்பிதழில் அந்த தொகுதியிலே இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் அழைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அது அவருக்குத் தெரிவிக்கப்படக்கூட இல்லை. மரியாதைக்காக கூட அதிகாரிகள் அவரை அழைக்கவில்லை. ஏன் என்று இந்தச் சட்டமன்றத்திலே கேட்டார், எதற்காக அழைக்கவில்லை என்று பேசினார். ஆனால் அதற்குப் பதில் சொல்ல மனமில்லாமல், என்ன காரணம் என்று சொல்ல முடியாமல் இருந்தவர்கள் இன்றைக்கு நியாயம் கற்பிக்கும் நேரத்தில் உண்மையிலே எனக்குப் பரிதாபமாகவும் இருக்கிறது, கொஞ்சம் வேறு விதமாகவும் இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறையில் மாற்றங்கள், இவர் தலையிட்டார், அவர் தலையிட்டார், இவர் போனிலே பேசினார் அவர் தொலைபேசியிலே ஓடினார் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் எத்தனை அநியாயங்கள், எத்தனை அக்கிரமங்கள் ஏழாண்டுக்காலத்தில் நடைபெற்றன என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

நான் ஒன்றைச் சொல்கிறேன், இன்றைக்குச் சில அதிகாரிகள் மீது பகிரங்கமாகவே குற்றச்சாட்டைச் சொல்கிறேன், முதலமைச்சர் வருத்தப்பட்டாலும் பரவாயில்லை என்று சொல்கிறேன். பல அதிகாரிகள் இன்றைக்குத் திட்டமிட்டு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் சொல்லியே ஆகவேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், எதிர்க்கட்சித் தலைவரவர்களின் கைக்குப் போவதற்கு முன்னால் சொல்கிறேன், ஒரு அதிகாரி ஒரு மாறுதலுக்காக உத்தரவு போடும்பொழுது ஆளுங்கட்சி உறுப்பினர் போனிலே சொன்னார், அதனால் இந்த உத்தரவைப் போடுகிறேன் என்று உத்தரவு போடுகிறார். நான் அந்த எம். எல். ஏ. யினிடத்தில் கேட்டேன், அவர் சொல்கிறார் போனில் பேசவில்லை என்று. ஆனால் அதிகாரி போனிலே பேசியதாகச் சொல்லி அதனால்தான் மாறுதல் உத்தரவு போடுகிறேன் என்று சொல்கிறார். இப்படி ஏன் செய்கிறார் என்றால் இந்த அரசாங்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும் என்று செய்கிறார். ஆளுங்கட்சி உறுப்பினரைக் களங்கப்படுத்த வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டுக் காரியம் நடைபெறுகிறது. இதை அரசு கவனிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டு, நீங்கள் இந்த வாய்பளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இங்கே......





திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு தலைவரவர்களே,

Under Rule 81, the hon. Speaker may be pleased to give me permission to make a personal explanation regarding the allegations made against me by the learned Member Thiru Radha.

மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த நம்முடைய அருமை நண்பர் இராதா அவர்கள் என்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினாலே அதற்கு நான் தன்னிலை விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசினர் தோட்டத்தில் கோஷன் பிளாக்கில் 7-வது நம்பர் ...டு திராவிட மணி, எம், எல்.சி.-க்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சட்டமன்றத்தினுடைய மேலவை உறுப்பினராக இருக்கின்ற திராவிடமணி அவர்கள் அதற்காக மாத வாடகையைக் கட்டி வருகிறார்கள், அவர்கள்தான் எலக்ட்ரிக் பில் கட்டி வருகிறார்கள். வீட்டில் அவருடைய போர்டு இருக்கிறது. அதிலே அவர் தங்கியிருக்கிறார்.

I have also been residing along with him.

என்று இருக்கிறது. ஆகையினாலே இதில் எந்தவிதமான சட்ட விரோதமான நிலைமையும் இல்லை.

அதுமட்டுமல்லாமல் நான் உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திராவிடமணி அவர்களுக்கு அலாட் செய்யப்பட்ட அதே வீட்டைப்போல நம்முடைய அருமை (*)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும், உங்கள் தன்னிலை விளக்கத்தோடு உட்காருங்கள். தன்னிலை விளக்கம் என்றால் உங்களோடு சரி, இன்னொருவரைப்பற்றிச் சொல்லக் கூடாது.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் அவரைப்பற்றிச் சொல்லவில்லை. வேறொரு விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தன்னிலை விளக்கம் இதோடு சரி.

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் சொல்ல வருவது வேறு விஷயம். நான் கேட்பது, நம்முடைய அருமை நண்பர் திரு. இராதா அவர்கள் சட்டவிரோதமான ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். என்னுடைய பர்மனென்ட் அட்ரஸ், கம்பம், மதுரை மாவட்டம் என்று இருக்கிறது. இது டெம்பரரி அட்ரஸ்தான் நான் கொடுத்திருக்கிறேன். ஆகையினாலே இதிலே எந்தவிதமான சட்ட விரோதமும் இல்லை. அதே நேரத்தில் அமைச்சர் * * (மணியடிக்கப்பட்டது)

திரு. துரை முருகன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் * * * .... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்

THIRU DURAI MURUGAN: I am raising a point of order.

MR. SPEAKER : The hon. Member may please sit down.

THIRU DURAI MURUGAN I am raising a point of order. You will have to listen to me.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Please sit down தன்மை தெரிந்து மரபு தெரிந்து எழுப்புங்கள். உட்காருங்கள் என்றால்....''

திரு. துரை முருகன் : நம்முடைய * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ** அவர்கள் பற்றிய இந்தப் பிரச்னையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்

திரு. துரை முருகன் : ** பற்றிச் சொன்னால் நீக்குவதா. ( மணியடிக்கப்பட்டது ) (திரு. துரைமுருகன், திரு. ரகுமான் கான் இருவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுகிற வாய்ப்பு இருக்கிறது, தயவு செய்து உட்காருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த வீடுகள் ஒதுக்கப்படுவது பொதுப் பணித் துறையின் மூலம். இங்கே இந்தப் பிரச்னை எழுந்துவிட்டதனால் நான் சிலவற்றை விளக்க விரும்புகிறேன். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கோ, மேலவை உறுப்பினர்களுக்கோ வீடுகள் அரசாங்க உததரவின் பேரில் கொடுக்கப்படுகின்றன. அந்த வீடுகளை அவர்கள்தான் பயன்படுத்தவேண்டும். வேறு யாராவது அந்த வீடுகளிலே இருப்பது விதிகளுக்கு முரணானது. சில உறுப்பினர்கள் மற்றவர்களையும் தங்க வைக்கிறார்கள் என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அது உண்மையா என்பதை, அதிகாரிகளைப் பார்க்கச் சொல்லியிருக்கிறது அரசாங்கம். ஆகவே, அரசாங்கம் விதிப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும்.

*திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே. அமைச்சரவர்கள் விளக்கம் அளித்துள்ளதால் நான் விளக்க விரும்புகிறேன். அரசாங்கம் யாருக்கு வீடு கொடுத்ததோ அவர் வேறு யாருக்காவது உள் வாடகைக்குக் கொடுத்தார்களானல் அரசாங்கம் யாருக்கு வீடு கொடுத்தார்களோ, அவர்மீது குற்றச்சாட்டு சொல்லலாமே தவிர, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தாலும், தாங்கள் யாருக்கு கொடுத்தார்களோ, அவர்மீது குற்றச்சாட்டாக இருக்குமே தவிர, அந்த வீட்டிலே இருக்கிறவர்கள் மீது, குற்றச்சாட்டாக வராது. ஆகவே. அவையிலே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கு, இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் ஆளாகமாட்டார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேராசிரியர் தெரிவித்த கருத்து எனக்கு உடன்பாடான கருத்து. யாருக்கு அந்த வீடு தரப்பட்டிருக்கிறதோ அவர்கள்தான் அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரு. ரகுமான்கான் எழுப்பிய பிரச்னைக்குச் சொல்கிறேன்.

"Rule 81 : A member may, with the permission of the Speaker make a personal explanation although there is no question before the house, but in this case no debatable matter may be brought forward, and no debate shall arise.''

இந்த விதியின்கீழ் தன்னிலை விளக்கம் தரலாமே தவிர, மற்றவைகளை நீங்கள் எழுப்பிப் பேசக் கூடாது.

திரு. க. அன்பழகன்: இந்த அவையிலே ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பற்றி எழுப்பிய பிரச்னையை, குற்றச்சாட்டுக்கு உரியதாக இல்லை என்பதாலே, பொதுப்பணித் துறை

அமைச்சரவர்களும் அதே கருத்தைத் தெரிவித்துவிட்ட காரணத்தாலே, அதைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று கருதுகிறேன். குறிப்பேட்டிலே ஒரு குற்றச்சாட்டு ஏறியிருக்கிறது. ஏறிய அந்தக் குற்றச்சாட்டு, குற்றச்சாட்டு ஆகாதென்று பொதுப் பணித் துறை அமைச்சர் கருத்தும் குறிப்பேட்டிலே ஏறியிருக்கிறது. ஆகவே, ஏறிய குற்றச்சாட்டு, குற்றச்சாட்டு அல்ல என்பதால் அக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பேட்டிலே இருக்க வேண்டுமா என்பதற்குத் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இரண்டும் ஏறியிருக்கின்றன குறிப்பேட்டிலே. இந்தப் பிரச்னையை திரு. ரகுமான்கான் சொல்லும் போது I am also residing in thesame house என்ற அளவிலே சொல்லியிருக்கிறார்கள். தவறில்லை. இரண்டு பேர் பேசியதும் குறிப்பேட்டிலே ஏறியிருப்பதாலே, நீக்க வேண்டிய அளவுக்கு அதிலே ஒன்றுமில்லை, அப்படியே இருக்கட்டும். ஆனால், தன்னிலை விளக்கம் தருகிறேன் என்று சொல்லிவிட்டு திரு. ரகுமான்கான் அவர்கள் இன்னொருவரைப் பற்றிச் சொன்னார். அப்படிச் சொல்லக் கூடாது என்பதாலே விதியைப் படித்துக் காட்டினேன்.

(பிற்பகல் 12-40)

<u>திரு. டி. கே. கபாலி</u>: தலைவர் அவர்களே, இங்கே பேசிய ஒவ்வொரு ஆளுங்கட்சி உறுப்பினர்களும் பேசும்போது முன்பிருந்த ஆட்சியின் மீது குற்றச்சாட்டைச் சொல்லி, அதே குற்றத்தைதான் நாங்களும் செய்கிறோம் என்ற அளவிலே பேசினார்களே தவிர....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; நீங்கள் நடுநிலைமையாகப் பேசுங்கள்.

<u>திரு. டி. கே. கபாலி</u>; அப்படிப் பேசினால் அதைக்கூடத் தவறாக எடுத்துக்கொள்வார்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள். நண்பர் இராதா அவர்கள். எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயர் எங்கும் இருக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். அதற்குத்தான் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத்தை உருவாக்கி பல பெயர்களை இரவோடிரவாக நீக்கியிருப்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். எங்கள் தலைவருடைய கட்டளையையும் மீறிச் சொல்லுகிறேன், அடுத்த பட்ஜெட் கூட்டம் வருவதற்குள்ளாக எங்கள் தலைவருடைய பெயர் எங்கெங்கு இருக்கிறதோ அவற்றை எல்லாம் எடுத்துவிடுமாறு நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய பெயரை மூதத அ



விட்டாலும் அவருடைய புகழை அழிக்க முடியாது, அவரை மட்டுமல்ல நம்முடைய புரட்சித் தலைவர் பெயரை எடுத்துவிட்டாலும், அவர்களையும் உலகம் மறக்காது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தலைவர்களைப் பற்றி அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் பேசுவதைப்பற்றி அந்த வார்த்தைகளை எல்லாம் தாங்கிக் கொண்டு தான் இருக்கிறோம். அதே மாதிரி இந்தப் பக்கத்திலே இருப்பவர்கள் பேச ஆரம்பித்தால் எப்படி இருக்கும் இந்தச் சபை என்று மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களுக்குத் தெரியும்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; உங்களுக்கு 5 நிமிடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினைக்கு வாருங்கள்.

<u>திரு. டி. கே. கபாலி</u>; எங்கள் தலைவரைப் பற்றிப் பேசும் போது உள்ளம் பதறுகிறது. கழகத்திலே 32 ஆண்டுகளாக இருக்கிறோம். என்ன தவறு செய்துவிட்டார் டாக்டர் கலைஞர் அவர்கள்? 9 ஆண்டுகாலம் இந்த நாட்டில் ஆண்டார்களே என்ன தவறு செய்தார்கள்? நீங்கள் தவறுகளே செய்யவில்லையா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; தயவு செய்து துரைமுருகன், யாராவது உறுப்பினர் சொன்னார் என்றால் தயவு செய்து பாயிண்ட் அப் ஆர்டர் என்று எழுந்து சொல்லுங்கள். அதற்காக உட்கார்ந்து கொண்டே பேசுவது கூடாது. அவர்கள் சொல்கிறார்கள், நானும் அதே மாதிரி சொல்கிறேன் என்றால் சரியில்லை.

<u>திரு. டி. கே. கபாலி</u>; நான் இத்தோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே ஆளுங்கட்சியினர் செய்கின்ற தவறுகளை முதலமைச்சரிடம் சொல்கிறேன். நானும் அதிலே ஈடுபட்டால் தொகுதி எந்த நிலைமைக்குப் போய் முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே அதைத் தொடரவில்லை. மேலும் எனக்குக் கொடுத்ததோ 5 நிமிடம்.

என்னுடைய தொகுதியில் திருவள்ளுவர் சிலைக்குப் பின்புறம் உள்ள பாலம், 91 வட்டம் 92 வட்டம். இணைப்புப் பாலம் புதிதாகக் கட்டுவதற்கும்—முள்ளிக்குப்பம் திருவான்மியூர் இணைப்புப் பாலமும் கடந்த 4 ஆண்டுகளாக உடைந்திருக்கிறது—அதைப் பழுதுபார்த்தும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்பற்றி சென்ற கூட்டத்தொடரிலே பேசினேன். இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதைப் போலவே பட்டினப்பாக்கம் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் பார்த்தார்கள். பார்த்துவிட்டுப் போனார்கள். இன்று வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ரோடுகளைக்கூட சீர் செய்யவில்லை. அங்கே கடல் அரிப்பு ஏற்படாமல் ஒரு மதில் சுவர் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். அடுத்து அடையாறு ஆற்றில் நகராண்மைக் கழக வாரியம் கழிவு நீர் கொண்டு வந்து விடுகிறார்கள். அதனால் மீன் பிடிப்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கழிவு நீர் விடுவதைத் தடுக்கவும், அந்த ஆற்றை ஆழப்படுத்துவதற்கு தூர் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டு கொள்கிறேன்.

அடுத்து பெசன்ட் நகர், இந்திரா நகரிலே, போலீஸ் நிலையம் அமைக்க கடந்த கூட்டத் தொடரிலேயே சொன்னேன், இதுவரை நடவடிக்கை இல்லை. ஆகவே போலீஸ் நிலையம் ஒன்று அமைக்க அரச முன்வர வேண்டும். பட்டினப்பாக்கத்தில் அடிக்கடி சச்சரவு ஏற்படுவதால் அங்கே போலீஸ் நிலையத்தை அமைக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன். என் தொகுதியில் குடிசைகள் அதிகமாக இருப்பதால் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. ஆகவே அங்கு ஒரு தீ அணைப்பு நிலையம் மந்தவெளிப் பாக்கம் பகுதியில் அமைத்துத் தரவேண்டுகிறேன்.

அடுத்து, உள்ளாட்சித்துறையைப் பற்றி நகராட்சித் தேர்தலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் சென்னை மாநகராட்சி சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. குழாய்கள் சரியில்லை, ரோடுகள் சரியில்லை. தண்ணீர் சரியாக வருவது கிடையாது, விளக்குகள் சரியாக எரிவதில்லை, எந்தவிதமான வேலையும் நடப்பதில்லை. கேட்டால் பொருள்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

இந்த அரசு தேர்தலை நடத்த இருக்கிறது. தேர்தல் முடிந்த உடன் அந்த வாக்காளர் பட்டியலைப் புதிதாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறந்தவர்கள், இடமாற்றம் செய்தவர்கள் பெயர்களெல்லாம் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருக்கிறது. ஆகவே அதை நீக்கிப் புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும். கார்ப்பரேஷன் ஊழியர்கள் 10 ஆண்டுகள் தற்காலிகமாக இருப்பவர்கள் நிரந்தரமாக்கபடுவார்கள் என்று அமைச்சர் சொல்லி இருக்கிறார்கள். அந்த 10 வருடம் என்றிருப்பதை 5 வருடம் என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கார்ப்பரேஷனில் உள்ள அதிகாரிகள் பதவி உயர்வு வரும்போது, அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. சர்க்காரிலே இருந்து அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள், அதனால் கார்ப்பரேஷனில் பணியாற்றுகின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். சர்க்காரிலே இருந்து அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப் படுகிறார்கள். ஆகவே சர்க்காரில் இருந்து அதிகாரிகளை நகராண்மைக் கழகத்திற்கு பதவி உயர்வுக்கு அனுப்புவதை நிறுத்தி நகராண்மைக் கழக அதிகாரிகளுக்கே பதவி உயர்வு தர வேண்டு கிறேன்.



வீட்டு வரியை சென்னை மாநகரில் ஒன்றுக்கு 5 மடங்காக நெருக்கடி நிலையின்போது உயர்த்திவிட்டார்கள். ஆகவே, தயவு செய்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், ஏற்கனவே இருந்த வீட்டு வரியைக் கட்டுவதற்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு கிராமப்புறங்களில் பணம் கடன் தருகிறார்கள். சென்னை நகரம் போன்ற இடங்களில் வீடு கட்டுவதற்குப் பணம் தருவது இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சென்னை போன்ற நகரங்களில் இருபவர்களுக்கும் வீடு கட்டுவதற்குக் கடன் தொகை அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக் கப்பட்டது).

குடிசை மாற்று வாரியம் கட்டுகின்ற வீடுகளுக்கு ரோடு வசதி, கக்கூஸ் வசதி கிடையாது. இவற்றை உடனடியாகக் கவனிக்க வேண்டும். கக்கூஸ் கட்டப்பட்டு இருந்தாலும், அதை யார் பராமரிப்பது என்பது தெரியவில்லை, ஆகவே, கார்ப்பரேஷன் அதிகாரிகளையும், குடிசை மாற்று வாரிய அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, நிச்சயம் அவர் அப்படிச் செய்வார் என்று எனக்கு நம்பிக்கை உண்டு, என்னுடைய இனிய நண்பர், அவரிடம் பேசினால் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவு படுத்துவார், இருப்பினும் இப்போது வேறு கட்சிக்குப் போய்விட்டார், ஆகவே. கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், இதை நிச்சயமாக அவர் செய்வார் என்று நம்புகிறேன்.

நொச்சிக்குப்பம் பகுதியில் குடிநீர் வசதி இல்லை. அங்கே அந்த வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அடிக்கடி மணியடித்துக்கொண்டு இருப்பதால், இந்தோடு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு மானியங்களை நிறைவேற்றி, அரசுக்கு பல்வேறு மானியங்களின் அடிப்படையில் தொகை ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளில் ஒதுக்கிய தொகையைச் செலவுசெய்வதற்கான ஒரு அதிகாரத்தை ஆளுகின்ற சர்க்காருக்கு அளிக்க தீர்மானமாக, சட்டமாக இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிற இந்த நிதிக்கோரிக்கை மசோதா மீது பேசுகிறபோது, கருத்துச் சொல்கிறபோது, செலவினங்களை நாம் செய்யும்போது முழுமையான நிதி ஒழுக்கத்தைக் கையாள்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று நான் முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிக்கடி ஆடிட் அப்ஜெக்ஷன் அதிகமாக வரும்போது அந்த ஆடிட் அப்ஜெக்ஷன் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதி நிர்வாகத்தில் முறைகேடுகள்

இருக்கின்றன என்ற ஒரு நிலைகள் இருப்பதும் நம்முடைய நிதி நிர்வாகத்திற்கு நல்லது அல்ல என்ற காரணத்திற்காக அந்த ஆடிட் அப்ஜெக்ஷன் அதிகமாக எவ்வளவு அதிகமாகக் கூறப்படுகிறதோ அந்த அளவிற்கு செலவினங்கள் செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

All appropriations are expenditure, but all expenditure are not appropriations. Appropriations of the public Fund by the Government should distinctly conform to the norms of the financial discipline, and there should not be any serious deviation or diversion of the Public Fund, and it should strictly conform to the expenditure and the purpose evolved and delienated by the Legislature. என்கிற அந்த basic principle, அடிப்படையான கொள்கையை நாம் நிதி செலவழிக்கும்போது கடைப்பிடிப்பது நல்லது என்பதை இந்த நேரத்தில் சொல்வது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு வக்ஃப் நிர்வாகத்தைப் பற்றி ஒன்றைக் கூறுவது என் கடமையாக நான் கருதுகிறேன். வக்ஃப் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்னைகள் வக்ஃப் வாரியத் தீர்ப்புக்கு, விசாரணைக்கு வருகின்றன. ஆனால், பல பிரச்னைகள் சில சமயங்களில் வழக்கு மன்றங்களுக்குப் போகுமானால் வக்ஃப் வாரியத் திர்ப்புக்கு விரோதமாக வருகின்றன. அதற்கு முக்கிய காரணம் அங்கே உரிய முறையில் விசாரணைகள் செய்யப்படுவது இல்லை. உரிய நோட்டீஸ் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அனுப்பப்படுவது இல்லை. முக்கியமானவர்களுக்கு வாய்ப்புத் தரப்படுவது இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. இதைப்பற்றிய குறிப்புகளும் எண்ணங்களும் நீதிமன்றத்தில் பல தடவைகளில் வழங்கி இருப்பதால் அந்த வக்ஃப் வாரியம் இயங்கும் தன்மையில், முறையில் மாற்றம் தேவை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பல கட்சிக்காரர்கள் வெளியூரில் இருந்து திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற தூரப்பகுதிகளில் இருந்து எல்லாம் விசாரணைக்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் பதினொரு தடவை பன்னிரண்டு தடவை வந்தாலும் கூட அவைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை. அது எந்த நோக்கத்தோடு என்றும் நமக்குத் தெரியவில்லை. கோரம் இல்லை என்றும் மீட்டிங் நடைபெறுவது இல்லை. ஆகவே, எந்தப் பிரச்னைகளையும் அவர்கள் எடுத்து விவாதிக்க முடியவில்லை இப்படிப்பட்ட



...லை வக்ஃப் நிர்வாகத்திற்கு பெரிய சவாலாக அமைந்து இருப்பது ...ட்டுமல்ல, அதற்குப் பெருத்தபாதகமாகவும் இருக்கிறது ...ன்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். எமர்ஜன்சி இருந்த ...நரத்தில் அந்த நிறுவனத்தில் யார் யாரையோ அவர்கள் வக்ஃப் ...ாரிய உறுப்பினர்களாகப் போட்டு விட்டார்கள்.

(பிற்பகல் 12-50)

அவர்களிலே கூட எட்டு பேர் சென்னையிலே இருக்கக் கூடிய ...ர்கள். சென்னையிலே இருக்கக்கூடிய எட்டு பேர் கூட கூட்டங்... ...ளுக்கு வருவதில்லை என்ற நிலை இருக்குமானால் கோரம் இல்லை ...என்று, வெகு தூரத்திலிருந்து வரக்கூடியவர்கள் எல்லாம் அடிக்கடி வந்து திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது: ...இருக்கக்கூடிய கமிட்டியை திருத்தி அமைக்க ஆகையால் ...வேண்டாமா" என்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் ...கிறேன். இது மிக முக்கியமான பிரச்சனை. வாய்ப்புக் கிடைக்காமல் இருக்கலாம். இருந்தாலும் இருக்கின்ற நிலையை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

இன்னொன்று; நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள், வியாசர் பாடி நிகழ்ச்சி பற்றிச் சொன்னார்கள். அங்கே பெரிய பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. அதுபற்றி விவாதிக்க இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. மோட்டார் பற்றிக்கொள்வதைப் பற்றியெல்லாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, இந்த முக்கியமான பிரச்சனை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அங்கே நூறு வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்களுக்கு எல்லாம் தெரியும். பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிப் பேசுவது இந்த அவையில் மரபு அல்ல. நீங்கள் அப்படிக் கூறுவதை நான் அனுமதிக்க மாட்டேன். அந்த பொருளில் நீங்கள் பேசக் கூடாது.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> அதுபற்றி நான் ஏற்கெனவே போலீஸ் மானியத்திலும் பேசியிருக்கிறேன். அங்கே இருக்கிற மக்கள் எங்களைப் பார்த்து என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மாபேட்டையைச் சேர்ந்த மூன்று சிறுபான்மையோர் வெட்டி கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றியும் கேட்டேன். சரியான பதில் இதுவரை கிடைக்கவில்லை. அங்கே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. அதையும் கவனிக்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், பேரையூரில் மசூதிக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. மசூதிக்குச் சொந்தமான அந்த நிலத்தில் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று சொன்னேன். என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே பல மானியங்களை அவசரம் அவசரமாக நிறைவேற்றுகிறோம். பல சட்ட முன் வடிவுகளைக் கூட அவசரம் அவசரமாக நிறைவேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால், எல்லா விவரங்களையும் சரியாக எடுத்துச் சொல்ல முடியவில்லை ஆகையால், இன்னும் காலத்தை நீட்டி, ஒவ்வொரு மானியத்திற்கும் ஒரு நாள் என்று சட்டமன்றத்தை நடத்தினால் அதிகமாக நீதி செய்தவர்கள் ஆவோம். ஜனவரி மாதத்தில் கவர்னர் உரைக்கு ஏற்பாடு செய்து, பிப்ரவரி முதல் வாரத்திலிருந்தே பட்ஜெட் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினால் மானியங்களை நல்லமுறையில் விவாதிக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வாணியம்பாடியில் ஒரு சிவில் கோர்ட் வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. அது ஒரு தாலூக்கா ஹெட்குவார்ட்டர்ஸ். அங்கே ஒரு சிவில் கோர்ட் இல்லை என்ற குறை நீண்டகாலமாக இருக்கிறது. அதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூருக்கும் பேரணாம்பட்டுக்கும் இடையே பாலாறு ஓடுகிறது. அதனால் இரண்டும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டையும் இணைக்கின்ற வகையிலே அங்கே ஒரு பாலம் வேண்டுமென்று முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினரும் கேட்டிருக்கிறார். இன்னும் அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை. ஆம்பூருக்கும் பேரணாம்பட்டுக்கும் இடையே பாலாற்றில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கும் மற்றவர்களுக்கும் பட்டா கொடுக்கிறார்கள். அதை எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியிலே பல கிராமங்களில் இன்னும் பட்டா கொடுக்கவில்லை. எல்லா ஊர்களிலும் எங்கெங்கு பட்டா கொடுக்க சாத்தியக்கூறு இருக்கிறதோ அங்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடயநல்லூரில் ஒரு மசூதியில் போலீஸ்காரர்கள் புகுந்து, அங்கே இருக்கும் புனிதத் தன்மை கெடுகின்ற வகையில், புனிதத் தன்மையைப் பாதிக்கும் வகையில் நடந்திருக்கிறது என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது என்ன என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும். **(மணியடிக்கபபட்டது)**



அடுத்தபடியாக, தோல் பதனிடும் தொழில் வாணியம்பாடி ஆம்பூரில் நடைபெறுகிறது. அங்கே ஒரு தோல் தொழிற்பேட்டையை ஏற்படுத்தி, தோலை மூலப்பொருளாக வைத்து என்னென்ன தொழில்களை ஏற்படுத்த முடியுமோ அவைகளை (மணியடிக்கப்பட்டது) வாணியம்பாடியில் ஏற்படுத்த அரசு முன் வந்தால் அங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தர வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமையாகும்.

அடுத்தபடியாக சந்தனம் ........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் உட்காருங்கள், இனிமேலும் பேச அனுமதி இல்லை. நேரம் இல்லை. இன்னும் பலர் பேசவேண்டியிருக்கிறது. தங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேல் பேசிவிட்டீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

<u>திரு. எம். ஏ. லத்திப்:</u> முடிக்கும் தருவாயில் வந்துவிட்டேன். இந்த ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். எப்போது பார்த்தாலும் நீங்கள் என்னோடு ஒத்துழைக்க மாட்டேன் என்கிறீர்கள் நீங்கள் உட்காருங்கள். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. லத்திப் அவர்களே, தாங்கள் உட்கார்ந்துகொண்டே பேசக் கூடாது. தாங்கள் இப்படி நடந்துகொள்ளக் கூடாது. தயவு செய்து பிறர் காதில் விழும்படி சத்தம்போட்டு அவையில் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது.

(அடுத்து திரு. செ. சிவசாமி பேச அழைக்கப்பட்டார்)

*<u>திரு. செ. சிவசாமி:</u> பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய நேரம் மிகவும் குறைந்து விட்டது. ஆனாலும் எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முதன் முதலில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இளையாங்குடி, ராஜசிங்கமங்கலம் ஆகிய யூனியன்களின். கிராம இணைப்புச் சாலைகள் ஒழுங்காக இல்லை. வழி எல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றது. அதைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக, தெ. புதுக்கோட்டையிலிருந்து பரமக்குடி செல்லும் ரோடு, இளையான்குடியிலிருந்து சாலையார்கோவில் செல்லும் ரோடு, குறிச்சியிலிருந்து முனைவென்றி, நெடுங்குளம் வழியாக, வாணி வந்து நயினார்கோவில் செல்லும் ரோடு, அண்டைக் குடியிலிருந்து சாலைக்கிராமம் செல்லும் ரோடு, வண்டலிலிருந்து ராஜசிங்கமங்கலம் செல்லும் ரோடு, வண்டலிலிருந்து ஆனந்தூர் செல்லும் ரோடு ஆகியவற்றை நல்ல முறையில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கண்மாய்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நெட்டூர் கண்மாய், ஆயூர் கண்மாய், இளையான்குடி கண்மாய், சாலைக்கிராமம் கண்மாய், ராஜசிங்கமங்கலம் கண்மாய், இவைகள் சரியாகப் பராமரிக்கப் படவேண்டும், அந்த ஐந்து கண்மாய்கள் தவிர, மேலும் எண்பத்தாறு கண்மாய்கள் இருக்கின்றன. அவைகளையும் நன்கு சீர்செய்து பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தண்ணீர் வசதி பற்றிப் பேச விரும்புகிறேன். இளையான்குடியில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இளையான்குடிக்குத் தண்ணீர் வசதி செய்கின்ற அளவில் ஒரு நல்ல திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இளையான்குடியில் மருத்துவ வசதி தேவை. அதற்காக நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். இதற்காக நாங்கள் ஒரு லட்சம் ரூபாய் வசூல் செய்து கட்டி மூன்றரை வருடம் ஆகியும் இன்னும் மருத்துவ மனை கட்டிக் கொடுக்கப்படவில்லை. மருத்துவமனை சம்பந்தமாக மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களை நான் சந்தித்து நேரடியாகக் குறைபாடுகளைச் சொல்ல வேண்டும் என்று பல முறை முயற்சித்தும் முடியவில்லை.

முதலமைச்சரைக் கண்டுபிடிப்பது சபையிலேயே கஷ்டமாக இருக்கிறது. அதனால் நாங்கள் முதலமைச்சரைச் சந்தித்து எங்கள் தொகுதிகள் பற்றிய குறைகளைச் சொல்லுவதற்கு நல்லதொரு ஏற்பாட்டினைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நிறைய வேலைகள் இருக்கலாம். அதனால் பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கலாம். முதலமைச்சர் என்ற முறையிலே பல அலுவலர்கள் அவருக்கு இருப்பது வாஸ்தவம்தான். இருந்த போதிலும்கூட மெம்பர்கள் நன்மையைக் கருதி, தொகுதி நன்மையைக் கருதி, தமிழ்நாட்டின் நன்மையைக் கருதி, குறைபாடுகளைச் சொல்வதற்காக அமைச்சரவர்களைச் சந்திப்பதற்கு நல்ல வாய்ப்புக்களை உறுப்பினர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த காலத்தில் தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சி செய்த நேரத்திலே ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் வரக்கூடிய சமயங்களிலே அவர்கள் [illegible] ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். அந்த முறையிலே நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நமக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிற் சாலையைப் பொறுத்தமட்டில் ராஜசிங்கமங்கலத்திற்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காரைக்குடி, இளையான்குடி, பரமக்குடி, சாயல்குடி வழியாக தூத்துக்குடிக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டும். இதற்கான ஏற்பாட்டைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரிக்குச் செல்வதற்கு பஸ் விடவேண்டும். தெ. புதுக்கோட்டை, சாலைக்கிராமத்திற்கு டவுன் பஸ் விட வேண்டும். அடுத்து இளையான்குடியில் தாயமங்கலத்தில் பூமிக்கடியில் நல்ல தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை இரண்டு கிணறு மூலமாக நிறைந்த பல கண்மாய்களாக அமைக்க வேண்டும். இந்தக் கண்மாய்த் தண்ணீரை கிராமங்களுக்கு மட்டுமல்லாது இளையான்குடி டவுனுக்கும் சப்ளை செய்யலாம். அந்த அளவுக்கு அங்கே நீர் இருக்கிறது. ஆகவே அந்த தண்ணீரை மேலே கொண்டுவர ஏற்பாடு செய்து கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

அமைச்சர்களிடம் கொடுக்கக்கூடிய ஒருசில குறிப்புகள் ஏழு எட்டு மாதங்களாகியும்கூட தகவல் கிடைப்பதில்லை. குறிப்பாக, கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வி போட்டிருந்தேன். இன்றுவரை பதில் வரவில்லை. கேள்வி கேள்வியாக இருக்கிறது. இதுபோல் பல அமைச்சர்களிடம் கொடுக்கக்கூடிய பல விஷயங்களுக்கும் பதில் வருவதில்லை. அந்தப் பிரச்சனைகள் குறித்து அவை என்னவாயிற்று என்பது குறித்து பதில் ஏன் வரவில்லை என்பது குறித்து கேட்பதுகூட இல்லை. அவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும், பலவற்றைப் பற்றி கேட்டிருந்தும் சபைக்கு இன்று வரை வரவில்லை.

உதாரணத்திற்காக, ஒரு உபாத்தியாயர் மாறுதல், ஆசிரியர் ஒருவர், கணவன் சென்னையில் இருக்கிறார். அவர் மனைவி கடலூரில் இருக்கிறார். கணவன் மனைவி இருவரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் ஏழு மாதங்களாகியும் கூட, அவர்கள் இரண்டுபேர்களும் மனுக்கள் கொடுத்தும்கூட

இன்றுவரை கணவன் மனைவி ஒன்றுசேர்க்கப்படவில்லை, ஒரே இடத்தில் வேலை செய்ய ஏற்பாடு செய்யப்படவில்லை. சட்டம் இருக்கிறது, ஆனால் அமுல் நடத்தப்படவில்லை.

இதேபோல் ஒரு டாக்டர். கணவன் தூத்துக்குடியில் இருக்கிறார். மனைவி சாலக்கிராமத்தில் இருக்கிறார். ஏழு மாதங்களாகின்றன. அவர்கள் மனு போட்டிருக்கிறார்கள். வாரத்திற்கு ஒரு தடவை கூட வந்து போகமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே கணவன் மனைவி இருவரையும் ஒரேயிடத்தில் போட வேண்டும் என்று சட்டம் இருந்தும் அதை அமுல் நடத்த என்ன செய்திருக்கிறார்கள் என்றால் ஒன்றுமே செய்யவில்லை. எங்கெங்கே யார் யார் எப்படி எப்படி இருக்கிறார்களோ அப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

கூட்டுறவு சம்பந்தமாக வசூல் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. அதை நிறுத்த வேண்டும். 1974-ல் ரிசர்வ் பாங்க் ஒரு குழுவை நியமித்து அவர்கள் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். விசேஷ காலங்களில், இயற்கையின் சீற்றங்கள் ஏற்படுகிறபோது ஒரு ஆண்டுக் கடனை ஏழு ஆண்டுக் கடனாக மாற்றவேண்டும் என்றும், இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்திருந்தால் முதல் ஆண்டுக் கடன்களை அடியோடு ரத்து செய்து விட்டு இரண்டாவது ஆண்டுக் கடனை ஏழாண்டுக் கடனாக மாற்றவேண்டும் என்றும். தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் இப்படி நிலை இருந்தால் முதல் இரண்டாண்டுக் கடன்கள் முழுவதையும் ரத்து செய்துவிட்டு மூன்றாவது ஆண்டு வாங்கிய கடனை ஏழாண்டுக் கடனாக மாற்றவேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தக் குழுவின் சிபார்சை எந்த ஸ்டேட்டிலும் கொண்டு வரவில்லை, ஆகவே நாங்களும் கொண்டு வரவில்லை என்று சொல்கிறார்கள். இதுசரியான வாதமல்ல. நாம் ஏன் ஒரு முன்மாதிரியாக இருக்கக்கூடாது? இந்தக் கமிட்டி ரெக்கமென்டேஷனில் எந்தஅளவிற்கு நஷ்டம்மாநிலத்திற்கு ஏற்படுகிறதோ அந்த நஷ்டத்தை முழுவதும் மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே மத்திய சர்க்காரை வற்புறுத்தி நம் ஸ்டேட் நஷ்டத்தை ஈடு செய்வதற்குப் பதிலாக அவர்கள் செய்யவில்லை. ஆகவே நாங்களும் செய்யவில்லை என்று சொல்வது இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களுக்குப்பாதகம் செய்வது போலாகும்.

புயலால் பாதிக்கப்பட்டபோது தமிழ்நாட்டுக்கு 200 கோடி ரூபாய் வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் போட்டு வலியுறுத்தினோம். அதை வேறு அர்த்தத்தில் எடுத்துக்கொண்டு கம்யூனிஸ்ட்ஸ் கலராறு மூட்டிவிடப் பார்க்கிறார்கள் என்றெல்லாம் இங்கே பேசப்



பட்டது. நிச்சயமாக அந்த 200 கோடி ரூபாயை நாம் கேட்டுப் பெற்றிருந்தால் இன்று இந்த மாநிலத்திலுள்ள ஏழை மக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள தொல்லைகள் வந்திருக்காது. அவர்கள் வீடுகளிலுள்ள தட்டு முட்டுச் சாமான்கள் ஜப்தி செய்யப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்காது. அவர்கள் செய்யவில்லை. ஆகவே நாங்களும் செய்யவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது ஏழை மக்களுக்காக வேண்டி நாங்கள் வந்திருக்கிறோம் என்று சொல்வதற்கு ஏற்றதாக இருக்காது.

அடுத்தபடியாக, மானாமதுரை-தூத்துக்குடி வழி ஒரு மீட்டர் கேஜ் பாதை அமைக்க—இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசாங்கம் என்றிருந்தாலும்—இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

அதோடு மதுரை— தூத்துக்குடிக்கு ப்ராட்கேஜ் போடவேண்டிய ஏற்பாட்டிற்கும் இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79-ம் ஆண்டுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கான செலவினங்களுக்காக நிதி ஒதுக்கீட்டுக்கான ஒப்புதலைப் பெற இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற விவாதத்தில் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். நேரம் அதிகமில்லாத காரணத்தினால் நான் விரிவாகப் பிரச்னைகளைப்பற்றி எடுத்துக் கூறாமல் நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கும் நேரம் அளிக்கின்ற வாய்ப்பினைத் தந்து விரைவில் என்னுடைய உரையை முடிக்க இருக்கின்றேன்.

முதலில், சுயநலம், சுயநலத்திலும் பொதுநலம் கலந்திருக்கிறது. அந்த முறையில் அண்ணா நகர் தொகுதியைப்பற்றி, அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையிலும், நமது நிதி அமைச்சர் அவர்கள் அண்ணா நகர் தொகுதிக்காரர் என்ற முறையிலும் நான் விடுக்கின்ற வேண்டுகோள்—கழக ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட மருத்துவ மனை இன்னும் இயங்காமல் இருக்கிறது. அன்றைக்கு மருத்துவத்துறை மானியம் பற்றி வைக்கப்பட்டுள்ள உரையில் கூட அது இன்னும் தொடங்கவில்லை என்ற குறிப்பும் இருக்கிறது. சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இன்னும் இயங்காமல் இருக்கின்றது. என்பதால் அந்த மருத்துவமனை இயங்கக் கூடிய வாய்ப்பினை இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று அண்ணா நகர் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 30

அதைப்போலவே அண்ணா நகர் பகுதி என்பது புதிய வளர்ச்சி பெற்ற ஒரு பகுதியாகும். ஏற்கனவே ஏரிகளாகவும், பள்ளங்களாகவும் இருந்த பகுதிகள் எல்லாம் மேடாக்கப்பட்டு அந்தத் தொகுதி உருவாகியிருக்கிறது என்பதும், அதைப் போலவே சென்னை மாநகரத்தில் பல பகுதிகள் உருவாகியிருக்கின்ற காரணத்தினால் வெள்ளம் வருகின்ற நேரத்தில் எல்லாம் இப்படிப்பட்ட புதிய குடியிருப்புகளிலும் புதிய நகரங்களிலும் வெள்ளம் செல்லுவதற்கும் ஏதுவாக இருக்கின்றன. காரணம் ஏரிகளாக இருந்த இடங்கள் தூர்க்கப்பட்டு நகரப் பகுதிகளாக மாற்றப்பட்டிருப்பது தான் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பேருண்மையாகும். அண்ணா நகர்தொகுதியிலும்அப்பேர்ப்பட்டசூழ்நிலையில்இந்தநகரப் பகுதிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற நிலையில் மழை,வெள்ளம் இவைகள் ஏற்படுகின்ற நேரத்தில் ஆங்காங்கு இருக்கின்ற சிற்றாறுகள் போல் இருக்கின்ற வாய்க்கால்கள் பெருக்கெடுத்து, பக்கத்திலுள்ள ஏழை எளிய மக்கள் ஒண்டுவதற்குக் கூட இடமில்லாத ஒரு பயங்கர நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஏரிகளின் கரைகளை எல்லாம் உயர்த்துகின்ற பணிக்கும் இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவு செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நிதி ஒதுக்கீட்டில் 1975-76-ம் ஆண்டில் கழக ஆட்சி நடந்த வரையில் ரூ.501 கோடி வருமானமாக இருந்து, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதைப்போல் 1976-77ல் வருமானம் 526 கோடியாக வளர்ந்து 1977-78-ல் 635 கோடியாக உயர்ந்து 1978-79-ல் 680 கோடியாகப் பெருகியிருக்கிறது. எனவே, கழக ஆட்சி முடிவுற்ற காலத்திற்கும், இன்றைய அரசு பொறுப்பேற்றிருக்கும் இந்தக் காலத்திற்கும் இடையில் 180 கோடி ரூபாய் வருமானம் அதிகமாயிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி 180 கோடி ரூபாய் வருமானத்தில் அதிகமாயிருக்கிற நேரத்தில்—முன்பிருந்த அரசு போட்டிருந்த திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றாமலும், நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்ட திட்டங்களும் வேகமாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

காவல் துறை மான்யத்தில் பேசுகின்ற நேரத்தில்—1975-ம் ஆண்டு வைக்கப்பட்ட டெலிபோன் வசதிகள்—873 காவல் நிலையங்களில் 756 காவல் நிலையங்களில் மட்டுமே டெலிபோன் வைக்கப்பட்டிருந்தன—என்ற நிலையில், வருமானம் இவ்வளவு உயர்ந்தும் ஒரு டெலிபோன்கூட காவல் நிலையத்திற்கு வைக்கப்படவில்லை. இது வேதனைக்குரியது என்று குறிப்பிட்டேன். விடையளித்துப்பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஆதாரக் கஷ்டங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். புயலால் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்,



1978 மார்ச் 30] [திரு. மு. கருணாநிதி]

ஆனால் 180 கோடி குறைவாக இருந்த காலத்தில், அதாவது 500 கோடி வருமானம் இருந்த காலத்தில் 756 காவல் நிலையங்களில் டெலிபோன் வசதி வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னால் 180 கோடி அதிகமாகியும்கூட, 10, 15 டெலிபோன்கள்கூட காவல் நிலையங்களில் வைக்கப்படவில்லை என்று நான் கூறியது ஆழ்ந்து நோக்கத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-10]

8,000 காவல் துறையினர் ஐந்தாண்டுக்கால கழக ஆட்சியிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். 10,000 நபர்கள் காவல் துறையிலே எடுத்துக் கொள்ளப்படுவார்கள்என்றுபுதிய ஆட்சியில் அறிவிக்கப்பட்டது. அதுவும் நிதி ஆதாரம் காட்டப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற பதிலைத்தான் இந்த அவையிலே நாங்கள் பெறமுடிந்தது. அறிவித்த 16,000 நியாய விலைக் கடைகளுக்கும் அதுவேதான் பதிலாக அமைந்தது. புயல், வெள்ளம் இவைகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு 150 கோடி ரூபாய் தேவைப்படும் என்று அரசின் சார்பிலே தொடக்கத்திலே அறிவிக்கப்பட்டு, 100 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று எடுத்துக் கூறப்பட்டு, மத்திய அரசு தந்துள்ள தொகையில், அது மானியமாக எவ்வளவு தந்திருக்கிறது, கடனாக எவ்வளவு வழங்கியிருக்கிறது என்ற விவரங்களைக்கூட தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில், இன்னும் நம்முடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவிற்கு மத்திய அரசு உதவி செய்யப் போகிறதா, இல்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். அதைப் பற்றிய விளக்கங்களை இந்த நிதி ஒதுக்கீடுக்கு ஒப்புதல் வழங்கப்படுகின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வழங்குவார்களானால், அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மெத்தவும் பயன்படும். மத்திய அரசிடம் நிரம்பத் தொகையை மாநிலத்து மக்களின் நல்வாழ்விற்காகவும், வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுடைய புது வாழ்விற்காகவும் அவர்களிடம் பெறுவதற்கு எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும் இந்த அரசின் கரத்தைப் பலப்படுத்தத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேதான் நான் இந்த விளக்கத்தை நிதி அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து பெற விரும்புகிறேன்.

500 கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த காலத்திலே ஒரு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது பிற்பட்டோர் நலனுக்காக என்றிருந்த நிலைமை மாறி 6 கோடி ரூபாய் அளவிற்கு 500 கோடி ரூபாய்க்கும் குறைவாக வருமானம்இருந்தபோது உயர்த்தப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது. அரிசனங்களுக்காக 13 கோடி ரூபாய் செலவில்இலவசமாக வீடுகள் கட்டித்தரப்பட்டு, ஏறத்தாழ

40,000 வீடுகள் அரிசனங்களுக்கு, மீனவர்களுக்கு கட்டித் தரப் பட்டன என்பதையும் மறந்து விடக்கூடாது. இந்தப் பணிகள் தொடர வேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கிற நேரத்திலே நான் ஒன்றை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே கேள்வி நேரங்களில், அவர்கள் இல்லாத நேரங்களில், நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். பிறகு பத்திரிகையிலே கட்டுரை வாயிலாகத் தெரிவித்தேன். சில நிகழ்ச்சிகளிலே இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். நான் கூறியதற்குப் பிறகு, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களில் சில பேர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள், கட்சி சார்பற்ற முறையில்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அதிலும் குறிப்பாக நான் முதல் அமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில், அதுவரையிலே அரிசன நலத் துறையும், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, இரு சாராரும் தக்க பலன்களைப் பெறாது ஒரு இக்கட்டுக்கு ஆளாக்கப்பட்டிருப் பதை உணர்ந்து, பலரும் எடுத்துச் சொன்ன விழைவுகளுக்கு இணங்கவும், பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு என்கிற ஒரு குழு அமைக்கப்பட்டது மாத்திரமல்ல, பிற்படுத்தப்பட்டோர்களுடைய நலன்களைக் கவனிக்க, அரிசன நலத் துறையிலே இருந்து இந்தத் துறையைத் தனியாகப் பிரித்தெடுத்து, தனி இலாகாவாக உருவாக்கியது மாத்திரமல்ல, அதைத் தனிப்பட்ட ஒரு அமைச்சர் இடத்திலே, அந்தப் பொறுப்புக்கள் முழுவதும் ஒப்படைக்கப் பட்டிருந்த காரணத்தினாலே, அரிசன மக்களுக்கும் நல்லமுறையிலே பணியாற்ற முடிந்தது. அந்தத் துறை அமைச்சர் அவர்களால். அதேபோல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நல்ல முறையிலே பணியாற்ற முடிந்தது அந்தத்துறை அமைச்சர் அவர்களால். எனவே, இதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச்செய்யக் கூடிய நேரம் இது. ஏனென்றால், அமைச்சர் அவையில் மாற்றங்கள் வரக்கூடிய இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கை ஏமாற்றத்திற்கு ஆளாகாமல், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அரிசன நலத் துறையையும், பிற்படுத் தப்பட்டோர் நலத் துறையையும் தனித்தனியாக அமைக்கின்ற வகையிலே அமைத்து. பிற்படுத்தப்பட்ட மக்களையும், அரிசன மக்களையும் மகிழ வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

இதை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி இரண்டு துறைகளும் பிரிக்கப்பட்டால்தான் இரண்டு பெரிய சமுதாயத்து மக்களும் நல்ல பலன்களை எய்த முடியும் என்பதை நான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.



திட்டங்கள் தீட்டினால் மாத்திரம் போதாது, அவை மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்பதை அமைச்சர் பெருமக்கள் அடிக்கடி எடுத்துக் கூறுகிறார்கள். அப்படிக் கூறுகிற நேரத்தில் ஏதோ இதற்கு முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் அப்படிச் சேரவில்லை என்பதை சூசகமாக எப்படியாவது தெரிவித்தாக வேண்டும் என்ற மன உணர்வு அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. முன்பு இருந்த ஆட்சியைப் பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணம் இன்றைக்கு ஆளும் கட்சி யாக வந்தவர்களுக்கு இருப்பதும், இன்றைக்கு இருக்கிற ஆட்சியில் ஏற்படுகிற குறைகளைச் சுட்டிக்காட்டுகிற எண்ணம் எதிர்க்கட்சி களுக்கு இருப்பதும் முறையானதுதான். ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்பது மாறி மாறி வரக்கூடியவைகள். நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது எதிர்க்கட்சித் தரப்பில் என்னென்ன வாதங்கள் எடுத்துவைக்கப்பட்டன, அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தால் எடுத்துவைக்கப்பட்டன என்பதை நான் மறந்து விடுவதற்கில்லை.

ஆனால் குற்றங்களை எதிர்க்கட்சி எடுத்துக் காட்டுகிற நேரத்தில் என்னைப் பார்த்துக் குற்றம் சொன்னாயா என்று கேட்பதற்குப் பதிலாக அல்லது நினைப்பதற்குப் பதிலாக அந்தக் குற்றங்களைக் களைய வேண்டிய முயற்சிகளை ஒரு அரசு எடுத்துக் கொள்ள வேண்டும், எடுத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் அந்தக் குற்றங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் கூட நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசிய பிறகு அறநிலையத் துறை மானியம் பற்றிப் பதிலளித்த நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் அவர்களுடைய சொந்த ஊரில் கல்யாண மண்டபம் கட்டினார்; கல்யாண மண்டபம் கட்டுவதற்கு அறநிலையத் துறைச் சட்டத்தில் இடம் கிடையாது; அதை மீறிக் கட்டப்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு எந்தவிதமான நிதிநிலை சாங்ஷனும் இல்லாமல், பார்வை எதுவும் இல்லாமல் நடைபெற்றது; பார்வையிடச் சென்ற கமிஷனர் தலையில் அல்லது காலில் அந்த மண்டபம் இடிந்து விழுந்தது என்று சொன்னார்கள்.

நான் தொலைபேசி மூலம் திரு. கண்ணப்பன் அவர்களிடத்தில் விசாரித்தேன்; மற்றும் உள்ள நண்பர்களிடத்திலும் விசாரித்தேன். எனக்குக் கிடைத்த தகவல்படி— அந்தக் கல்யாண மண்டபத்தை அவரது சொந்த ஊரில் கட்ட வேண்டுமென்று அவர் விரும்பினாரா அல்லது அந்த ஊர் மாரியம்மன் கோயில் ரெனவேஷன் கமிட்டி— திருப்பணிக் குழு விரும்பியதா? அந்தத் திருப்பணிக் குழு அப்படிப் பட்ட ஒரு தீர்மானத்தைக் கொடுத்தது. திருப்பணிக் குழு போட்ட தீர்மானத்திற்கிணங்க கல்யாண மண்டபம் கட்டுகின்ற முயற்சி எடுக்கப்பட்டது. அந்த மண்டபத்திற்கு பத்தாயிரம்

ரூபாயைதிரு. கண்ணப்பன் தனது சொந்தப்பொறுப்பில் வழங்கியிருக்கிறார். மண்டபம் கட்ட இடம் இல்லாத காரணத்தால் சொந்த இடத்தைக் கூட மண்டபம் கட்ட வழங்கியிருக்கிறார். அது முழுவதுமாக இடிந்து விழவில்லை. அந்தக் கட்டடம் வலுவாகத்தான் இருக்கிறது. கல்யாண மண்டபத்திற்கு எந்தச் சேதமும் வரவில்லை. அதையொட்டி கட்டப்பட்ட படிகளுக்கு, கட்டப்பட்டு ஒரு நாள் கூட முடியாத நிலைமையில் கமிஷனர் அங்கு சென்று சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவரோடு சென்றவர்கள் வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தபோது படிகளின் கால் சரிந்து அதன் காரணமாக அவருடைய காலில் காயம் ஏற்பட்டது என்ற சேதியும் கிடைத்தது. ஏற்கனவே இந்தச் சேதிகளைப் பற்றி நான் அறிவேன்.

ஆனால் கல்யாண மண்டபம் கட்ட அறநிலையச் சட்டத்தில் இடம் இல்லையென்றாலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து கல்யாண மண்டபங்கள் அறநிலையத் துறையின் சார்பாகக் கட்டப்பட்டிருக்கின்றன. மயிலை கபாலி கல்யாண மண்டபம் இல்லையா? கற்பகாம்பாள் கல்யாண மண்டபம் இல்லையா? இன்னும் பல கல்யாண மண்டபங்கள் இருக்கின்றன. ஏராளமாக இருக்கின்றன. அந்தந்த அறநிலையங்களின் வருமானத்திற்கேற்ப கட்டப்பட்டு திருமணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மலிவான வாடகையில் தங்கள் இல்லத்து விழாக்களை நடத்த முடியும் என்ற வகையில்தான் அந்த மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தக் கல்யாண மண்டபத்திற்காக 90,00,300 ரூபாய் செலவு; இதுபற்றிச் சில விசாரணை. இதெல்லாம் நெருக்கடி காலத்தில் ஏற்பட்டது. நெருக்கடி காலத்தில் எப்படி எல்லாம் விசாரணை நடந்தது என்று இன்றைக்கு நாள்தோறும் பத்திரிகையில் பார்க்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு நெருக்கடியை எதிர்த்தது என்ற ஒரே காரணத்திற்காக எவ்வளவு தொல்லைகளுக்கு அந்தக் கழகமும், அந்த அரசும் ஆளாக்கப்பட்டது என்பதை அவையிலே உள்ளவர்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல.

(பிற்பகல் 1·20)

அப்படித்தான் பல குற்றச்சாட்டுகள் புனையப்பட்டன. நம்முடைய அருமை நண்பர் அமைச்சர் வீரப்பன் அவர்கள் இங்கே ஒரு பட்டியலைத் தந்தார்கள். அறநிலையத் துறையைப்பற்றிய ஒரு பட்டியலைப் படித்தார்கள். ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இருக்கின்ற தமிழகத்திலே அவர்கள் தந்திருக்கிற பட்டியல் 16, 12, 10 குற்றச்சாட்டுகள், நூற்றுக்கணக்குக்கு உள்ளடக்கிய வகையிலே தான் படித்துக் காட்டினார். எங்கெங்கே தவறுகள் நடந்தாலும்



அது கண்டிக்கப்பட வேண்டியது, வெளிப்படுத்தப்பட வேண்டியது, தண்டிக்கப் பட வேண்டியது என்பதை நான் உணராதவன் அல்ல, ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான்.

முன்பிருந்த ஆட்சியின்பேரில் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையிலே பல குழுக்கள் போடப்பட்டன. இன்னும் சொல்ல வேண்டுமானால் முன்பிருந்த ஆட்சியாளர்கள் புத்தகங்களிலே கூட சமுதாய உணர்வுகள் எங்கெங்கெல்லாம் தலைதூக்குகிறதோ அங்கெல்லாம் பிரிவினை வாத உணர்வு, தேச விரோத உணர்வு வெளியிடப்படுவதாகக் கருதப்பட்டது. இதற்காக ஒரு குழு நியமித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள், போடப்பட்ட குழு என்ன அறிக்கையை வெளியிட்டிருக்கிறது என்று தெரியவில்லை. பெரியார் என்று ஒரு இடத்திலே இருந்தால் அது தவறு என்று வந்திருக்கலாம். பேரறிஞர் அண்ணா என்று வந்தால் அது தேச விரோதச் செயல் என்று குழு கருதியிருக்கலாம்.

இப்படி முன்பிருந்த ஆட்சியாளர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் எல்லாம்கூட நெருக்கடி கால பூதக்கண்ணாடியை வைத்து அலசி ஆராயப்பட்டன. இவைகளை நான் சொல்வதற்குக் காரணம் நெருக்கடி காலத்திலே குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்காகப் போடப்பட்ட திட்டங்களுக்குப் பின்னால் நின்று கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பிறகு வேறு ஒரு அரசு வந்ததற்குப் பிறகு மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டிக்கொண்டிருப்பது முறையல்ல என்பதையும் புதிய அரசு வந்ததற்குப் பிறகு, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் கூறியதைப்போன்று, பழைய அரசு நடத்தியிருக்கிற நல்ல காரியங்களைத் தொடர்ந்து ஆற்ற வேண்டுமென்று இந்த நிதி ஒதுக்கீடு கேட்கிற நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒரு அருமையான அறிவிப்பைச் செய்தார்கள். அதுவும் புயல். வெள்ள நேரத்திலே, அரசு பொறுப்பையேற்றவுடன் இந்த அறிவிப்பைச் செய்தார்கள். இனிமேல் கான்ட்ராக்ட்காரர்களிடம் எந்த வேலையும் விடப்பட மாட்டாது என்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து மக்கள் குழுக்கள் அந்தக் காரியத்தை ஆற்றும் என்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து இலாகா, டிபார்ட்மெண்ட்தான் அந்த வேலைகளைச் செய்யும் என்று சொன்னார்கள். ஆனால், நான் அரசு இதைக் கவனிக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். சொல்லிச் சொல்லி அலுத்துப் போன ஊழல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இப்படி நடந்துவிட்டது கவனிப்பீர்களா மறுப்பீர்களா என்று எல்லாம் கேட்கிற தோரணையிலே நான் சொல்லவில்லை. ஆனால் இருப்பதைச் சுட்டிக் காட்டினால் முதலமைச்சர் அவர்களுக்கும் இவ்வளவு கோடி ரூபாய்

நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்கிற நிதியமைச்சர் அவர்களுக்கும் பயன்படும் என்ற காரணத்தினால் இருக்கிற குறைபாட்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புயல், வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிகளை நிறைவேற்ற பணம் ஒதுக்கப்படுகிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்திலே புவனகிரி, சிதம்பரம் பகுதிகள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும் அவைகளுக்கு ஒதுக்கப்படாத பணம் பண்ருட்டிக்கு திருப்பிவிடப்படுகிறது. அதனால் பண்ருட்டி மக்களுடைய கோபத்திற்கு நான் ஆளாக விரும்பவில்லை. பண்ருட்டி மக்களாக இருந்தாலும், தமிழகத்தின் எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும் நல்வாழ்வு அவர்களுக்குத் தருவது அரசினுடைய கடமை, அவைகளுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டியது எதிர்க்கட்சியினுடைய கடமை. புயல், வெள்ளத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் அங்கே செலவழிக்கப்பட்டதாக தகவல். நல்ல காரியத்திற்காக செலவழிக்க வேண்டுமென்றால் ஒரு ஹெட்டிலிருந்து இன்னொரு தலைப்பிற்கு மாற்றுவதை நான் ஒரு பெரிய புகாராகச் சொல்லவில்லை.

நாமினேஷன் கொடுக்கும்போது 50 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால் நாமினேஷன் தரக் கூடாது என்றெல்லாம் உத்திரவு. முதலமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக, கான்ட்ராக்ட் வேலைகள் யாருக்கும் தரமுடியாது என்று அறிவித்த முதலமைச்சர், பிறகு குழுக்கள் மூலமாக இந்த வேலைகள் நடைபெறும் என்று அறிவித்த முதலமைச்சர், அதற்குப் பிறகு இலாகாக்கள் இந்த வேலைகளையும் நிறைவேற்றும் என்று அறிவித்த முதலமைச்சர் அவர்கள் சொன்னதை தமிழகத்தில் கூட்டங்களில், ஏடுகளில் பிரச்சாரம் செய்த அமைச்சர் பெருமக்கள் அத்தனைபேரும் மறந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐம்பதாயிரம் ரூபாய்க்குமேல் நியமன வேலைகள்—நாமினேஷன் வேலைகள்—தரச்கூடாது என்று இருக்கிறது. ஆனால் இந்த பண்ருட்டி பஞ்சாயத்து யூனியனில் எப்படி இந்த உத்தரவின் சந்து பொந்துகளிலே நுழைந்து பலபேர் மோசடி செய்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய முதல்வரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அழகப்ப சமுத்திரம் ரோடு பிராஞ்சிங்கில் மொத்த நீளம் 4 கிலோ மீட்டர். இந்த 4 கிலோ மீட்டருக்கும் ஆக வேண்டிய மொத்தச் செலவு என்று பார்த்தால் 50,000 ரூபாய்தான் ஆகியிருக்க வேண்டும், ஒருவரிடத்திலே நாமினேஷன் கொடுக்கப்பட்டிருந்தால். ஆனால் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? இந்த 4 கிலோ மீட்டரைப் பிரித்தார்கள். எப்படித் தெரியுமா? 0 கிலோ மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டர், பிறகு 1 கிலோ



மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர், பிறகு 2 கிலோ மீட்டரிலிருந்து 3 கிலோ மீட்டர், பிறகு 3 கிலோ மீட்டரிலிருந்து 4 கிலோ மீட்டர் என்று பிரித்தார்கள். ஒரே ரோடு, 4 கிலோ மீட்டர் ரோடு, அழகப்ப சமுத்திரம் ரோடு. முதல்வரவர்கள் குறித்துக் கொள்ள விரும்புகின்ற காரணத்தால் மீண்டும் சொல்கிறேன், அழகப்ப சமுத்திரம் ரோடு, 4 கிலோ மீட்டர் நீளமுள்ள ரோடு, 50,000 ரூபாய்க்கு மேல் வந்துவிட்டால் ஆபத்து வந்து விடும் என்று கருதி நான்காகப் பிரித்தார்கள்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறபொழுது நான் குறுக்கிட வேண்டாமென்றுதான் இருந்தேன். ஆனால் ஒரு விளக்கத்தை இந்த நேரத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர் மேலும் தகவல் இருந்தால் எங்களிடத்தில் தருவதற்கும் அது உதவும். ஒருவரிடத்திலே ஒரு வேலையைக் கொடுக்கிறபொழுது 50,000 ரூபாய் வரையில் இருக்க வேண்டும். ஆனால் ஒரு ஒர்க் அல்ல. ஒரு ஒர்க்கில் பல ரிச்கள் உண்டு. எட்டு மைல் நீளமுள்ள ஒரு பாதை அடித்துக்கொண்டு போனால் மொத்த ஒர்க். ஒரு குறிப்பிட்ட தனி நபரிடத்திலே அந்த ஒர்க்கைக் கொடுக்கும்பொழுது அதன் மதிப்பு 50,000 ரூபாய்க்குள் இருக்க வேண்டும். ஒரு இலட்சம் ரூபாய் வேலை நாமினேஷனில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரிடத்தில் தகவல் இருந்தால், தருவார்களேயானால் நிச்சயமாக சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> இங்கே நான் சொல்வதற்கு அருமையான ஆதாரத்தை அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். நான்கு பேர்களுக்குத் தரவில்லை, ஒரே ஆளுக்கு தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாய் வேலை 50,000 ரூபாய் என்று வரம்பு கட்டியிருக்கிறோம் அல்லவா, ஆகவே தர முடியாது என்று இலட்சத்து எண்பத்தையாயிரம் வேலையை நான்காகப் பிரித்து வி. பால சுப்பிரமணியம், மணப்பத்தூர் என்ற ஆளுங்கட்சியைச் சார்ந்த ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது.

அழகப்ப சமுத்திரம் ரோடு ஒவ்வொரு கிலோ மீட்டராகப் பிரிக்கப்பட்டு தனித்தனி பேருக்குக் கொடுக்கப்படவில்லை, ஒருவர் முருகன், ஒருவர் முத்தன், ஒருவர் முனியன், சுப்பன் என்று தனித்தனியாக அல்ல, இந்த நான்கும் வி. பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர் என்பவருக்குத் தரப்பட்டிருக்கிறது. இது ஒரு குற்றச்சாட்டு.

இரண்டாவதாக இன்னொன்றைச் சொல்கிறேன். அழகப்ப சமுத்திரம் ரோடு பிராஞ்சிங்கில் பூவராகமூர்த்தி, விஸ்வநாதன் ஆகிய இரண்டுபேர், குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 30

வர்கள், அவர்களுக்கு அழகப்ப சமுத்திரம் ரோடு, 0-விலிருந்து 1 கிலோ மீட்டர் 34,500 ரூபாய், 1 கிலோ மீட்டரிலிருந்து 2 கிலோமீட்டருக்கு 34,500 ரூபாய், 2 கிலோ மீட்டரிலிருந்து 3 கிலோமீட்டருக்கு 34,500 ரூபாய், 3 கிலோ மீட்டரிலிருந்து 4 கிலோ மீட்டருக்கு 34,000 ரூபாய், இதைக் கூட்டினால் 1,37,500 ரூபாய் வருகிறது. இது ஒரே பார்ட்டிக்கு. அதாவது பூவராக மூர்த்தி, விஸ்வநாதன் ஆகிய இருவருக்கும் இந்த ரோடு வேலை நான்காகப் பிரிக்கப்பட்டு, ஒரே வேலையாக இருப்பதைப் பிரித்து நான்கு பேர்களுக்குத் தருவதற்குப் பதிலாக ஒருவருக்கே தரப் பட்டிருக்கிறது.

அடுத்து, இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சத்திப் பட்டு ரோடு டு புதுப்பாளையம் வயா முத்தரசநல்லூர், இது 0 கிலோ மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டர் 36,000 ரூபாய், சத்திப் பட்டு டு புதுப்பாளையம் 0 கிலோ மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர் 36,500 ரூபாய்.

[பிற்பகல் 1.30]

2 டு 3 கிலோ மீட்டர் ரூ. 37,000 ; 3 டு 4 கிலோ மீட்டர் ரூ. 37,000 ; 4 டு 5 கிலோ மீட்டர் ரூ. 34,000 ; 5 டு 6 கிலோ மீட்டர் ரூ. 34,000 ; 6 டு 7 கிலோ மீட்டர் ரூ. 35,000. மொத்தம் கூட்டினால், ரூ2.50,000 வேலை ஒருவருக்கே தரப்பட் டிருக்கிறது.

அந்த ஒருவருடைய பெயர் வேணுகோபால், அந்தஒரு அமைப்பி னுடைய பெயர் வேணுகோபால் அண்ட் பழனி. அவர்கள் யார் எவர் என்ற ஆராய்ச்சிக்கெல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால், நான் அப்படிப்பட்ட நிலையை இப்பொழுது உருவாக்க வேண்டிய அவசியமோ, எண்ணமோ எனக்கில்லை. இதை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்து திருந்தினால் போதும் என்பதற் காகவும் முதலமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ அதை கவனித்து திருத்திக் கொண்டால் போதுமானது என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. மேலே, இப்படி ரூ. 50,000 ஆக நிர்ணயித்துவிட்டு, ஆட்களைப் பிரிந்து 4 ஆக, 5 ஆகப் பிரித்து, 4,5 பேருக்குத் தரப்படாமல் ஒருவருக்கே தரப்பட்டிருப்பது நியாயம்தானா என்று நான் கேட்க விரும்பு கிறேன்......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், உடனடி யாக வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையொட்டி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு அலுவல் நேரத்தை நீட்டிக்கிறேன்.



1978 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காக அரசு தனி உத்தரவின் மூலம் வேலைகள் துரிதமாக நடைபெற வேண்டு மென்பதற்காகத்தான் இந்த விதிகளே பிறப்பிக்கப்பட்டிருக் கின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், காண்ட்ராக்ட் விடுகின்ற முறையை கொள்கை அளவில் நாங்கள் ஏற்கவில்லை, அதைப் படிப்படியாக நீக்குவதுதான் இந்த அரசாங்கத்தின் திட்டம். ஆனால், அதே நேரத்தில் ஏற்கப்பட்ட வேலைகள் விரைவிலே நடக்கவும், இந்த ஆண்டு மட்டுமல்ல, எப்பொழு தும், வெள்ளம் ஏற்பட்டாலோ, புயல் ஏற்பட்டாலோ, வறட்சி ஏற்பட்டாலோ, எப்பொழுதும் அரசாங்கம் கடைப்பிடிக்கிற முறையானது, ரூ. 50,000-லே நாமினேஷன் போட்டு, வேலை களைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்ற நியதியால்தான் பொதுப் பணித் துறை—இலாகாவின்—மூலம் அந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் பொழுது, அதிலும் குறிப்பாக, அதுவும் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றி மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு அந்த விவரங்களை எடுத்துச் சொன்னதற்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கே கூட அந்த விவரங்கள் நிச்சயமாகத் தெரியாது. ஆனால், ஒரு ஊரிலே வேலைகளைச் சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்பதற்காகப் பிரித்துத் தருவது வாடிக்கை. ஆனால், எந்தச் சூழ்நிலையில் அந்த வேலைகளை ஒருவருக்கே தந்தார்கள் என்பது ஆராய வேண்டியதுதான். அதை நான் மறுக்கவில்லை.

ஆனால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்று சொன்னார்கள். எனக்கு ஒன்றும் ஞாபகம் இல்லை. ஆகையினாலே அங்கே வேலை செய்கின்ற லோக்கல் அதிகாரி வேண்டுமானால், வேலைகளைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்பதற்காக அப்படிப் பிரித்துக் கொடுத்திருப்பார்களானால்—என்னைப் பொறுத்தவரையிலே தகவல் நிச்சயமாகக் கிடையாது—ஆனால் நாம் பார்க்க வேண்டியது. வேலைகளை யாருக்குக் கொடுத்தார்கள் என்பதைவிட வேலைகள் சரியாக நடந்தனவா என்பதைத்தான் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இருந்த நிலைமை, பல இடங்களிலே வேலைகள் தரப்பட்டிருக்கின்றன, வேலைகள் சரியாக நடக்கவில்லை என்பதுதான் பிரச்னை. வேலைகள் எடுக் கப்பட்டு, சரியாக நடக்காமல் அவர்கள் பில் போட்டு எடுத்துக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்வார்களானால் எல்லா நடவடிக்கைகளையும் நான் எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அமைச்சரவர்கள் இது ஆராய வேண்டிய ஒன்று என்று கூறுவதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பை முதலமைச்சரிடம் ஒப்படைக்கிறேன். வேலைகள் சீக்கிரம் முடிய வேலைகளைப் பகிர்ந்தளிப்பது 4 பேர்களுக்குப் பகிர்ந்தளித்தால் வேலை சீக்கிரமாக முடியும். ஒருவருக்கே பகிர்ந்தளித்தால் எப்படி சீக்கிரம் முடியும் என்று நானும் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்ததனால், எனக்குப் புரியவில்லை. இதிலே நூற்றுக் கணக்கான பேர்களுக்கு வேலை அளித்திருக்கும்போது, குறிப்பிட்ட 5,6 பேருக்கு இப்படிப்பட்ட, ரூ. 2,50,000, ரூ. 2 இலட்சம், 1,50,000 என்ற வகையிலே வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அவற்றைத் தங்களிடத்திலே காட்டித்தான் அனுமதி பெற்று பேசுகிறேன். இது, ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பன்ருட்டி அவர்களால் வெளியிடப்பட்ட List of works taken up under cyclone and flood damage in Panruti Panchayat Union என்கின்ற இந்தப் புத்தகத்திலே (புத்தகத்தைக் காட்டி) இருந்து கிடைத்த அந்தத் தகவலைத்தான் இங்கே வைத்திருக்கிறேன். இன்னும் பல விவரங்களை நான் பேச வேண்டுமென்று விரும்பினேன். நேரம் இல்லை. நிதியமைச்சருக்கு வழிவிட்டு இந்த அளவோடு முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் வேறு எந்த விதத்திலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் முழுக்க முழுக்க நிதி அமைச்சர் என்ற நிலைமையில் நின்று நான் பிரச்சினையை சந்திக்க விரும்புகிறேன்.

1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே நான் சமர்ப்பித்ததை ஒட்டி, விவாதங்கள் நடந்து முடிந்ததும், அதற்கேற்ப வெவ்வேறு துறைகளின் சார்பாக ஒதுக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஒட்டி விவாதங்கள் நடைபெற்று நிறைவேற்றப்பட்ட பிறகு, ஒட்டுமொத்தமாக நிதியை வழங்குகின்ற ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக நான் முன்மொழிந்த மசோதாவை ஒட்டி இன்றைக்குக் காலையிலே இருந்து பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனைபேருக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நான் ஆரம்பத்தில் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புவது இந்த 1978-79 ஆம் ஆண்டிற்கான திட்ட அளவு 305 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மின்சாரத்திற்கான ஒதுக்கீடு 95 கோடி ரூபாயிலிருந்து 114 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 210 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்றாவது பிரிவு தூத்துக்குடியில் அமைக்கப்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தொழில்களைப் பொறுத்தவரையில், பெருந்தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் எல்லா வகையிலும் ஊக்கமும், உதவியும் அளிப்போமென உறுதி கூறப்பட்டுள்ளது. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை 1978 செப்டம்பரில் செயல்படத் தொடங்கும். கூட்டுறவுத் துறையிலே மேலும் இரு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படும். 100 கோடி ரூபாய் மூலதன முதலீட்டில் காகித ஆலை ஒன்றை அமைப்பதற்குரிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. நலிந்த நூற்பு நெசவாலைகளை மீண்டும் செயல்படச் செய்ய முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறு தொழில்களை ஊக்குவிக்கும்பொருட்டு, 7 மாவட்டத் தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்களின் உற்பத்தியிலிருந்து அரசுக்குத் தேவையான பொருள்கள் இயன்றவரை வாங்கப்படும். பட்டுப்புழு வளர்ப்பு, தீப்பெட்டித் தயாரிப்பு, சிறு தோட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கப் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும். கிராம மேம்பாட்டிற்கான புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். கிராமச் சுகாதார மேம்பாட்டிற்காக பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடமாடும் மருத்துவப் பிரிவுகள் திட்டம் 100 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்படும். மேலும் 50 சிறு சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக மொத்தம் 12 கோடி ரூபாய் செலவிடப்படும். கிராமங்களை முக்கிய சாலைகளுடன் இணைப்பதற்காக, கல்பாவிய சாலைகள் அமைக்கும் புதிய திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிராம வீட்டு வசதிக்காக, 1978 ஜூன் முடிவிற்குள் 10,000 புதுக் கடன்கள் வழங்கப்படும்.

[திரு. சி. மனோகரன்] [1978 மார்ச் 30

10 + 2 + 3 கல்வித் திட்டம் 400 பள்ளிகளில் செயலுக்குக் கொண்டுவரப்படும். மேற்கொண்டும் 1,400 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். முறைசாராக் கல்வி நிலையங்கள் 748 இடங்களில் ஏற்படுத்தப்படும்.

தமிழ் பண்பாட்டுக்காகச் சிறப்புத் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம், மதுரையில் புதிதாக இசைக் கல்லூரி, இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக மதுரைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி.

நான் சுருக்கமாக என்னுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

(முற்பகல் 1.40)

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பொருளாதாரத் திட்டங்கள், 1.5 கோடி ரூபாய்—2 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இராணுவத்தில் அரிசன, மலைசாதி பட்டதாரிகள், அதிகாரிகள் நிலையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகப் பயிற்சி அளிக்கும் சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

விதவைகளுக்கு உதவித் தொகை அளிப்பதற்கான வயது வரம்பு 45 ஆக இருப்பது 40 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 5,000 பேருக்கு இவ்வாறு உதவித் தொகை அளிக்கப்படும். உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்காக 83 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பேசவியலும், கேட்பதிலும் ஊனமுற்றோருக்குச் சிகிச்சையும் பயிற்சியும் அளிக்க நிலையம் ஒன்று சென்னையில் தொடங்கப்படும். பார்வையற்ற, நெசவுத் தொழிலில் பயிற்சி பெற்ற 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, நெசவுக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்படும்.

பீடி சுற்றும் தொழிலிலும் கைத்தறி நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களில் காச நோய் உள்ளவர்களைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டம்.

பெருந்து விபத்துக்களில் மரணமடைபவர் குடும்பத்திற்கு உடனடி கருணை மானியமாக 1000 ரூபாய் கொடுக்கப்படும். காயம் அடைந்தவர்களுக்கு தக்க உதவித் தொகை வழங்கப்படும்.

இந்தியப் பாதுகாப்புப் படைகளில் சேரத் தகுதியுள்ளவர்களாகும்பொருட்டு உடல் வலுவுள்ள தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் சிறப்புத் திட்டம்.





காவலர் வீட்டு வசதிக்காக நடப்பாண்டில் 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1978-79 ஆம் ஆண்டில் 90 இலட்சம் ரூபாய் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நியாயவிலைக் கடைகள் இல்லாத வருவாய்க் கிராமங்கள் அனைத்திலும் அக்கடைகளை ஏற்படுத்த 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊதியக் குழு செய்யும் பரிந்துரைகள், 1—4—78 முதல் செயல்படுத்தப்படும். அரசுப் பணியாளர்களுக்கு ஒரு முறை மொத்த நிவாரணம் அளிக்கப்படுகிறது. அரசுப் பணியாளர்களின் பணி நிலைமைகள், விதிகள் திருத்தியமைக்க, பணிக் குழுவொன்று நியமிக்கப்படும்.

இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, மானியக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு அமைச்சர் சார்பிலும் அவர்கள் அளித்த சலுகை பற்றிய ஒரு சிறு குறிப்பு ஒன்றை இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஆகியோரில் மாதமொன்றுக்கு 200 ரூபாய்க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறுவோருக்கு 19 ரூபாயும் மாதமொன்றுக்கு 200 ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் பெறுவோருக்கு 15 ரூபாயும் கூடுதலாக இடைக்கால நிவாரணம்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—1—1974 முதற்கொண்டு பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்களைச் செயற்படுத்தி, சம்பள நிர்ணயம் செய்வது; காப்புறுதித் திட்டம் உட்பட, பல சலுகைகள் அளிப்பது.

புயலினாலும் வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த கிராம அதிகாரிகளுக்கு 100 ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்குவது.

புயலினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் விளைச்சல் மதிப்பு ரூபாய்க்கு 6 அணாவுக்கு மேற்படாமலிருந்தால், நிலவரி வசூல் விதிமுறைகளைத் தளர்த்துவது.

ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் முதலீடு செய்யப்பட்டுள்ள சிறு தொழில்களுக்கு 10 சதவீத உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தைக் கொண்டு வருவது.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்று, கன்னியாகுமரியில் கூடுதலாக மாவட்டத் தொழில் நிலையம் ஒன்றினைத் தொடங்குவது.

உதவி சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குக் குறையாத காவல் துறை அதிகாரிகளுக்கு மருத்துவச் சோதனை வசதி அளிப்பது.

விரைவுப் பேருந்துக் கட்டணத்தை, கிலோ மீட்டர் ஒன்றுக்கு 5.5 காசிலிருந்து 5 காசாகக் குறைப்பது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளும் வசதிகளும் அளிப்பது.

உயர்நிலைப் பள்ளி மாணவரில்லங்களில் உள்ள அரிசன வகுப்பு, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு மானியங்களை, மாதமொன்றுக்கு 40 ரூபாயிலிருந்து 45 ரூபாயாக உயர்த்துவது.

இறுதிச் சடங்குகள் செய்வதற்காக, அரிசன மக்களுக்கு 50 ரூபாய் கருணை மானியம் வழங்குவது.

ஓய்வு பெற்ற, வறிய எழுத்தாளர்களுக்கு உதவி செய்ய நல நிதி தொடங்குவது.

இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர்கள் 314 பேருக்கு ஒன்றும் நிலை கால்நடை ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு அளிப்பது.

இவைகளெல்லாம் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த பிறகு மானியக் கோரிக்கையின் மேல் அளிக்கப்பட்ட சலுகைகள் என்பதை அவை உறுப்பினர்கள் அறிய வேண்டும் என்பதை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு இங்கே விவாதிக்கப்பட்ட மிக முக்கியமான பிரச்னைகளில் ஒன்று மத்திய மாநில உறவுகளைப் பற்றியதாகும். அதிலும் குறிப்பாக, பைனான்சியல் அட்ஜெஸ்ட்மென்ட் அல்லது பைனான்சியல் அடானமி என்ற அளவிலே சில பேர் பேசினார்கள். நான் ஒன்றைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். சில பேர் பேசும்போது கனம் உறுப்பினர்கள் ஒரு அச்சத்தை வெளியிட்டார்கள். இந்த அரசு தனது உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் தயங்கும் அல்லது நடுங்கும், கிடைக்க வேண்டிய நியாயமான பங்கை கேட்டுப் பெறுவதற்கு இந்த அரசு துணிச்சலோடு இயங்காது என்றும் சில பேர்கள் இங்கே கேள்விகளைக் கேட்டார்கள்.

நான் அந்த நல்ல நண்பர்களுக்கு எல்லாம் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாநிலத்திற்குத் தேவை அல்லது இந்த மாநிலத்தின் உரிமைக்கு உட்பட்டது என்று தெரிகிற அத்தனை நிதி நிலை ஆதாரங்களையும் பெறுவதற்கு மத்திய அரசோடு இந்த வாக எங்க அளவிற்குப் பிரச்னைகளை கடுமையாகவும், அதே





நேரத்தில் கனிவோடும் தேவைக்கு ஏற்றமுறையில் நல்ல காரியம் நடைபெற வேண்டும் என்ற முறையில் வைத்து இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை நான் பெரிதும் விரும்புகிறேன்.

உதாரணமாக, இங்கே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு முறை இங்கே பதறிப் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பெரியார் இராமசாமி-தந்தை ஈ. வெ. ரா. பெரியார் தபால்தலை வெளியிடப்படும் என்று அறிவித்த பிறகு, அது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்ற அறிவிப்பை அந்த அமைச்சர் நாடாளுமன்றத்திலே தெரிவித்ததை எடுத்துக்காட்டி. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பிரச்சனையை இங்கே கிளப்பியபோது நானும் அவரும் எந்த அளவுக்கு உணர்வோடு ஒன்றினோம் என்பதை இந்த அவை மறந்திருக்க நியாயம் இல்லை. உடனடியாக மத்திய சர்க்காருக்கு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, கடிதத்தைந் தீட்டி. இது ஒரு பெரிய சிக்கலை உருவாக்கும், ஆகையால் எடுத்த முடிவை நீங்கள் மாற்றினால் சிக்கலுக்கு நீங்கள் வழிவகை செய்கிறீர்கள்; சிரமத்தை உருவாக்குகிறீர்கள்; நியாயத்தை நீங்கள் முடக்கிப் போடுகிறீர்கள் என்று எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, செப்டம்பர் 17-ந் தேதி நாடெல்லாம் மகிழும் அளவு, விழா எடுக்கும் அளவுக்கு பெரியார் தலை போட்ட அஞ்சல் தலை வெளிவர இருக்கிறது என்பதை (ஆரவாரம்) தெரிவிப்பதற்குக் காரணம் நிச்சயமாக இந்த அரசு நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்துவதில் மத்திய அரசிடம் பயப்படாது, நடுங்காது, நடுங்க வேண்டிய தன்மையிலே நாங்கள் இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாக திட்டவட்டமாக நான் தெரிவிக்க, விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இங்கே ஃபினான்ஸ் கமிஷன், வந்தது உங்களுக்குத் தெரியும். அந்த நிதிக்குழுவை நானும் அமைச்சர் பெருமக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சந்தித்தோம். அந்த நிதிக் குழுவிடம் நமது மெமராண்டம் ஒன்றை நாம் தந்திருக்கிறோம். அந்த மெமராண்டத்தை நீங்கள் எல்லாம் படிக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு. ஆனால் இங்கே தரப்படவில்லை என்ற பெருத்த குறையைச் சொல்லக் கூடும், அது தரப்படாத காரணம் பினான்ஸ் கமிஷன் தனது பணியை முழுமை செய்யவில்லை. இன்னும் சில மாநிலங்களுக்குச் சென்று தனது பணியை முடித்து, பினான்ஸ் கமிஷன் தனது அறிக்கையை தஸ்தாவேஜை சமர்ப்பித்த பிறகு இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இந்த மன்றத்திலே வைக்க வேண்டுமென்ற ஓரே எண்

னத்தின் காரணமாக அல்ல, நாம் நமது மெமராண்டத்தை முன்கூட்டியே வைத்துவிட்டால் அதனால் நிதிக் குழுவிற்கு சிரமங்களை மற்றைய மாநிலங்களைப் பொறுத்த வரையில் உருவாக்கக் கூடாது என்று அவர்களே கேட்டுக் கொண்டதற்கிணங்க வைக்கப்படவில்லை. அது வைக்கப்பட்டப் பிறகு எந்த அளவுக்கு இந்த அரசு மத்திய அரசை நிதி ஆதாரங்களைப் பெறுவதல் வற்புறுத்தி கோடிட்டுக் காட்டி இருக்கிற பரப்புகளை நீங்கள் காண்பீர்களானால் எந்த அளவுக்கு உறுதிப்பாடான நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் தெளிவாகக் காணமுடியும் என்று நம்புகிறேன். அதுவரை தயவுசெய்து கொஞ்சம் பொறுத்திருங்கள் என்று கேட்டுக்கொள்ளும் நேரத்தில் அதுவரை எங்களைக் கோழைகளாகக் கருதிவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதன்பிறகு தேசிய வளர்ச்சிக் குழுவில் நடந்தது தெரியும். அதற்கு முன்னால் இன்னொன்றையும் தெரிவித்து விடுகிறேன். இந்த மின் உற்பத்தி இருக்கிறதே, அதைப் பொறுத்தவரையில் திடீரென்று அவர்கள் வரி போட்டார்கள். போட்ட வரியின் மூலம் இந்த மாநில சர்க்காருக்கு வருகிற நஷ்டத்தைக் கணக்கிட்டு 16 கோடி ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த 16 கோடியும் சேர்ந்தால், அந்த நஷ்டத்தை எப்படி வாங்குவது என்று கருதி முதன் முதலாக கண்டனக் குரல் எழுப்பிய ஒரே மாநிலம் இந்த மாநிலம். இந்த அரசு என்பதை மெத்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைத் தொடர்ந்துதான் கேரளம் வந்தது, அதைத் தொடர்ந்து தான் வெஸ்ட்பெங்கால் வந்தது ; அதைத் தொடர்ந்துதான் மராட்டிய மாநிலம் வந்தது, அதைத் தொடர்ந்து தான் ஒரிசா வந்தது, அதைத் தொடர்ந்து தான் பல மாநிலங்கள் வந்திருக்கின்றன.

(பிற்பகல் 1-50)

நேஷனல் டெவலப் மென்ட் கவுன்சிலிலே பங்கு பெறுவதற்காக முதலமைச்சரோடு நான் சென்றபோது முதலமைச்சரை அத்தனை மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் பாராட்டினார்கள். '' நீங்கள்தான் இந்தத் துறையில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தீர்கள், நாங்கள் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்று சொன்னதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.



அதற்குப் பிறகு இன்றைக்கு இருக்கிற நிதிநிலையைப்பற்றி இங்கே எடுத்து சொல்லப்பட்டது, இந்த அவையிலே சமர்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி, 1978-79 இறுதியில், மொத்தத்தில் 34.05 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். கூடுதல் வரிவிதிப்புகள் மூலம் 9.55 கோடி ரூபாய் கிடைக்குமென்ற மதிப்பீட்டைக் கணக்கிற்கொண்ட பிறகு, இறுதிப் பற்றுக்குறை 24·5 ஆக இருக்கும். அதன் பிறகு, மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் மின் சக்தி உற்பத்தி மீது யூனிட் ஒன்றுக்கு 2 காசு ஆயத் தீர்வை விதித்தது. நிலக்கரி மீதான ஆயத் தீர்வையை உயர்த்தியது ஆகிய காரணங்களால் நமது நிதி நிலைமை மேலும் மோசமடைந்திருக்கிறது. இந்த நடவடிக்கைகளின் காரணமாக, மின்சார வாரியத்திற்கு வரும் ஆண்டில் நான் ஆரம்பத்திலே சொன்னதைப் போல 18 கோடி ரூபாய் வரையில் இழப்பு ஏற்படும். அடுத்து இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட வருவாய் இழப்பும் 85 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது அதைப்பற்றி ஒரு குறிப்பு கூட இல்லையே என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுடைய சீரிய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புயல் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட வருவாய் இழப்பு மொத்தம் சுமார் 85 கோடி ரூபாய். மத்திய அரசு உதவி 33.91 கோடி. இதில் உணவு தானிய மானியமாக 2·60 கோடி ரூபாய், முன் பணம் 2 கோடி ரூபாய். திட்ட முன் உதவி 29·31 ரூபாய், அதில் 70சதவிகிதம் கடன், 30 சதவிகிதம் மானியம்.

இன்னொன்று, முதலிலே வந்த சென்ட்ரல் டீம் இந்தத் தொகையை வழங்குவதற்கு சிபாரிசு செய்தது. அடுத்து ஒரு சென்ட்ரல் டீம் எதிர்பார்க்கப்பட்டது. என்ன காரணத்தாலோ அந்த டீம் அப்போது வரவில்லை. இன்றைக்கு மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்ட்ரல் டீம் வந்ததாயிற்று. அவர்களை நமது அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சென்ட்ரல் டீம் சென்றதற்குப் பிறகு நிச்சயமாக கணிசமான ஒரு நல்ல தொகை நமக்குக் கிடைக்கும் என்று மனதார நம்புகிறேன் என்பதை இந்த நேரத்திலே மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசிய நண்பர்களின் கருத்துக்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா நகர் மருத்துவ மனையைப் பற்றி நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச்சொன்னார்கள். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டாயிற்று. ஆனால் பணி துவங்கப்படவில்லை என்று அவர்கள்

சொன்னார்கள். முதலமைச்சரவர்களின் அனுமதியைப் பெற்று உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்: விரைவில் அந்தப் பணி தொடரும் என்ற உறுதியினை நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு நமது அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். அந்தக் கருத்து வேறு ஒன்றும் அல்ல. அருமையான கருத்து. பெறவேண்டிய கருத்து, பெற்று நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டிய கருத்து. ஃபைனான்சியல் டிசிப்ளின். அதாவது ''அப்ராப்ரையேஷன் பில் என்று வருகிறது நாங்கள் அந்தப் பணத்தைத் தருகிறோம். அதனைச் செலவிடுகின்றபோது செலவழிக்கப்படும் ஒவ்வொரு பைசாவும் ஒழுங்காக செலவழிக்கப்படுகின்றதா'' என்று சொன்னார்கள். அவர்கள் பயமுறுத்துகின்ற வகையில் சொல்லவில்லை. கடமை உணர்வோடு அவர்கள் சொன்னார்கள், நான் திரு. லத்திப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன். இந்த அரசு எப்படி இயங்குகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்,

வெள்ளத்தினாலும் புயலினாலும் இந்த மாநிலம் பாதிக்கப்பட்டபோது அதற்கென்று வசூல் செய்யப்பட்ட அந்தப் பணத்தை ஆடிட் செய்வதற்காக, அவர்கள் மறந்துவிடக் கூடாது என்று நான்கு ஃபிஸ்டு ஆடிட்டர்ஸ் கொண்ட அந்த பார்ட்டியை நியமித்து அவர்கள் அதை ஆடிட் செய்து செலவழிக்கப்பட்ட ஒவ்வொரு நயா பைசாவிற்கும் கணக்கு இந்த அரசு வைத்திருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லும்போது லத்திப் போன்றவர்கள் நாளைக்கு இந்தக் கட்சியிலே வந்து சேர்ந்தால் கூட ஆச்சரியப்பட மாட்டேன் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன.

அதற்குப்பிறகு என் அருமை நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே பேசும்போது ரோலிங் ப்ளானைப் பற்றிச் சொன்னார்கள். திரு. கோவிந்தராஜன் அவர்கள் இங்கே பேசும்போது நான் இல்லை என்றாலும் குறிப்பில் இருந்து பார்த்தேன். ரோலிங் ப்ளானை எப்படி இந்த அரசு ஏற்கலாம், எப்படி முதல் அமைச்சர் அவர்கள் என். டி ஸி. யில் ஒத்துக் கொண்டுவரலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். திரு. மாரிமுத்து அவர்கள் தெரிவித்தார்கள். திரு. மாரிமுத்து அவர்களது கட்சிக்கு அது உடன்பாடற்றதாக இருக்கக்கூடும்.

ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் ரோலிங் ப்ளானை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் அது ஒன்றும் பெரிய புதுமையான ஒன்றல்ல, உலகத்தில் பல நாடுகளில் பின்பற்றப்படுகிற ஒன்று. இந்த





ரோலிங் ப்ளான் கொண்டுவரப்படுகிற காரணத்தால் ஐந்தாண்டுத்
திட்டத்தை இந்த அரசு கைவிட்டு விடும் என்ற மாயையின்
அடிப்படையிலே அந்த எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது என்பதை
நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ரோலிங் ப்ளான் கான்செப்ட் பற்றி நான் கொஞ்சம் விளக்க
விரும்புகிறேன். இது, ''Annual evaluation of the Plan''
ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கிறோம். ஒரு ஆண்டு முடிந்த
பிறகு நாம் எங்கே நிற்கிறோம், எந்தெந்த இடங்களில் தவறி
யிருக்கிறோம், மேற்கொண்டு என்னென்ன தேவைப்படுகிறது
என்பதைப் பற்றி ரெவ்யூ செய்ய இந்த ரோலிங் ப்ளான்
கான்செப்ட் இருக்கிறதே தவிர ஐந்தாண்டு திட்டத்தை கைவிடுவ
தில்லை — பர்ஸ்பெக்டிவ் ப்ளான் அப்படியே இருக்கிறது—
என்று முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை எடுத்துப்
பேசி பிரதமர் அவர்களின் உறுதி மொழியை வாங்கியிருக்கிறார்கள்
என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்தில் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Rolling plan is not a dangerous concept but it is a practical concept.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இதற்கு
முன்னால் இருந்த ப்ளான்களிலும் அப்போதைக்கப்போது அதைப்
பற்றி ரெவ்யூ பண்ணியிருக்கிறோம். ரோலிங் ப்ளான் என்ற
கான்செப்ட். நமக்கு நிதிவசதி இருந்தால் நிறைவேற்றலாம்,
இல்லாவிட்டால் தள்ளிப்போடலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவரவர்கள் தங்களது
கொள்கைகளுக்கேற்ப, அல்லது கட்சிகளின் நிலைமைகளுக்கேற்ப
கருத்துக்களை வகுத்துக் கொள்வது, அல்லது எடுத்துக்கொள்வது
அல்லது தொகுத்துக்கொள்வது என்பதில் எனக்கு அபிப்பிராய
பேதம் இல்லை. ஆனால் எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில்
நான் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த அரசைப் பொறுத்த
வரையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னால்
இருந்த ஐந்தாண்டுத்திட்டம் நடக்கும். ''mid-term valuation''
இது ஒவ்வொரு ஆண்டு இறுதிக் கட்டத்தில் நடக்கும். இது
தொடர் திட்டம். ஆகவே இதனால் எந்தவிதமான ஆபத்தும்
மாநிலங்களுக்கு வந்துவிடப் போவதில்லை. அந்தளவிற்கு
விழிப்புணர்ச்சியற்றவர்களாக மாநில மக்கள் இருப்பார்கள்
என்ற அச்ச உணர்வு அல்லது ஐய உணர்வு எனது அருமை
நண்பர், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களுக்கு
இருக்கவேண்டிய தேவை இல்லை என்பதை நான் பணிவுடன்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இறுதியாக நான்
தெரிவிக்க விரும்புகிறேன். நான் அரசாங்க சார்பா- சமர்பித்த

[திரு. கி. மனோகரன்] 1978 மார்ச் 30

இந்த பட்ஜெட் மூன்று அடிப்படைகளை உள்ளடக்கிய பட்ஜெட் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே முதல் அடிப்படை ரிலீப், இரண்டாவது அடிப்படை ரீஹாபிலிடேஷன், மூன்றாவது அடிப்படை ரெஸ்டொரேஷன்: 'த்ரீ ஆர்ஸ்'. இது தான் இந்த நிதிநிலை அறிக்கையின் அடிப்படை.

இந்த நிதிநிலை அறிக்கையின் அடிப்படையை நான் சொல்லியதற்குப் பிறகு நமது சபாநாயகர் அவர்களின் அனுமதி பெற்று ஒரு குறிப்பைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். அதைப் படித்துக்காட்டியதற்குப் பிறகு வேறு சில விஷயங்களுக்கு வருகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததற்குப் பிறகு, அரசு சார்பாக சமர்பித்த பிறகு, தமிழ்நாடு முழுவதும் எக்ஸைமிக் வைப்ரேஷன், ஒரு பொருளாதார துடிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு பொருளாதார வேகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற மக்களும் நம்மைச் சுற்றி ஏதோ இயங்கிக் கொண்டிருக்கிறது, ஏதோ வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற உணர்வினைப் பெற்றிருக்கிறார்கள்.

அதை நான் இங்கே எடுத்துச் சொல்லும்போது அனைத்து உறுப்பினர்களும் மனச்சாட்சியோடு அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் பரிபூர்ணமாக நம்புகிறேன். இந்த நிலை, இதே நிலை என்றில்லாவிட்டாலும் இதற்கொத்த ஒரு நிலை அமெரிக்காவில் இருந்தது. அந்த நிலையைப் போக்குவதற்காக அங்கு அப்போது குடியரசுத் தலைவராக இருந்த காலஞ்சென்ற ரூஸ்வெல்ட் அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்தார்கள்

(பிற்பகல் 2-00)

இந்தத் திட்டம் 'நியூ டீல்' (New Deal) என்பதாகும். அதை உங்களில் பலர் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அந்த 'நியூ டீல்' லைப்பற்றி பல பேர்கள் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் நான் மூன்று புத்தககங்களை படித்துப் பார்த்தேன். அதிலுள்ள சில கருத்தை நான் சபைமுன் வைக்க விரும்புகிறேன்.

Two weeks after Roosevelt took office, the country seemed a changed place where once there had been apathy and despendency, there was now an immense sense of movement. If the country did not know in what direction it was moving, it had great expectations the spell of Lassitude had been snapped.

அதற்குப் பிறகு "On the walls of Thomas A. Edison, Inc., in West Orange, New Jersey, President Charles Edison posted a notice" அந்த நோட்டீஸில் எழுதப்பட்டிருக்கிற வாசகத்தை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். இது தமிழகத்தில் நடைபெற



1978 மார்ச் 30] [திரு. கி. மனோகரன்]

வேண்டும் என்ற ஆசை எனக்கிருக்கிறது. இந்த அரசுக்கு இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இதைத் தெரிவிக்கிறேன். அப்படி அச்சடிக்கப்பட்ட 'வால் போஸ்டரில்' இருந்த அதே வார்த்தைகள்.

"President Roosevelt has done his part; now you do something. "Buy something-buy anything, anywhere, paint your kitchen, send a telegram give a party, get a car, pay a bill, rent a flat, fix your roof, get a haircut, see a show, build a house, take a trip, sing a song, get married.

It does not matter what you do—but get going and keep going. This old world is starting to move.

கடைசியாக இங்கே சிலவற்றை நான் அறிவிக்க விரும்புகிறேன். நான் இதற்கு முன்பு பேசியபோது பல பேர்கள் வேதனைப் பட்டார்கள். அவர்களுக்கு உதவ முடியவில்லை என்பதற்காக வருத்தப்படுகிறேன். சிலவற்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாய வருமான வரி அமைப்பில் சில திருத்தங்களை வரவு-செலவுத் திட்டத்தில் கொண்டு வருகையில், மலைத் தோட்டப் பயிர்களுக்கான இணைக்க வசதியை காம்பௌன்டிங் ஃபெசிலிட்டி (Compounding facility) நீக்கக் கருதினோம். அவ்வாறு செய்கையில், அண்டை மாநிலங்களான கர்நாடக, கேரள மாநிலங்களில் பின்பற்றப்படும் அடிப்படையை மேற்கொண்டோம்.

மலைத் தோட்டப் பயிர்களுக்கு சர்வதேச அங்காடியில் கிடைக்கின்ற உயர் விலைகளையொட்டி, அப்பயிர் விளைவிப்போருக்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதற்கேற்ப மாநில அரசுக்கு அதிலிருந்து கிடைக்கும் வரியும் உயர வேண்டுமெனக் கருதினோம். அதே நேரத்தில் மலைத் தோட்டப் பயிர்கள் விளைவிக்கின்ற சிறு விவசாயிகளிடமிருந்து சில முறையீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் மலைத் தோட்டப் பயிரிடுபவர்கள் பெரும்பாலும் நிறுவனங்களாகவும், பெரிய விவசாயிகளாகவும் இருப்பதால், குறிப்பாக மலைத் தோட்டப் பயிர்களைப் பொறுத்த வரையில் சிறு விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பது அவசியம். இந்த அடிப்படையில், 20 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேற்படாத நிலத்தில் மலைத் தோட்டப் பயிர் விளைவிப்பவருக்கு இணக்க வசதி (Compounding facility) அளிக்க முடிவு எடுத்துள்ளோம். இது சிறு மலைத் தோட்டப் பயிர் விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 30

இரண்டாவதாக, நாம் எல்லாம் அதிகமாக விரும்பாத நகையைப் பற்றியது. நகை வியாபாரிகள் பொது மக்களிடமிருந்து பழைய நகைகளை விலைக்கு வாங்கும்பொழுது 4 சதவிகித கொள்முதல் வரி செலுத்த வேண்டியுள்ளது. இதனை உருக்கி புதிய நகைகளாக செய்து விற்கும் பொழுது, மீண்டும் 4 சதவிகித விற்பனை வரி செலுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின்படி சுத்த தங்கத்தின் மீது 2 சதவிகித வரியும் நகையாக விற்கப்படும்போது 4 சதவிகித வரியும் ஆக மொத்தம் 6 சதவிகித விற்பனை வரிதான் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் பழைய நகைகளை வாங்கி புதிய நகைகளாக செய்து விற்கும்போது 2 சதவிகிதம் அதிகமாக வரி செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையை சீர்படுத்தும்பொருட்டு நகை வியாபாரிகளின் நீண்டநாள் கோரிக்கையை இவ்வரசு ஏற்று புதிய நகைகள் செய்வதற்காக பழைய தங்கம், வெள்ளி வாங்கும் போது அவற்றின் மீது தற்பொழுது விதிக்கப்பட்டு வரும் கொள் முதல் வரிவிகிதத்தை 1-4-1978-ம் நாள் முதல் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நமக்கெல்லாம் ஒரு சுவையான செய்தி. 4-3-1974. நாள் முதல் பதிவு செய்யப்பட்ட வணிகக்குறி (Trade Mark)யுடன் விற்கப்படும் அப்பளத்தின் மீது 8 சதவிகித ஒரு முனை வரி விதிக்கப்பட்டது. அப்பள உற்பத்தியாளர்கள் சிலர் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 8 சதவிகிதமாக வரி வசூலிப்பது 18-4-1975 நாளிட்ட அரசு ஆணையின் பேரில் நிறுத்தி வைக்கப் பட்டது. தடுப்பாணை (stay) அமுலில் இருந்த காலத்தில் அதாவது 18-4-1975 லிருந்து 24-12-1977 வரை 8 சதவிகித வரி வசூலிக்கப்படவில்லை என்றும் 4 சதவிகித வரி மட்டுமே வசூலிக்கப்பட்டது எனவும் எடுத்துக் கூறி, மேற்கூறிய காலத்தில் வசூலிக்கப்படாத 4சதவிகித வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என அப்பளம் உற்பத்தியாளர்கள் கோரியுள்ளனர். இக்கோரிக்கையை மன நிறைவோடு ஏற்றுக்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இன்னும் சில வற்றைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்ற மானியக் கோரிக்கையின் மீது பேசுகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும், அவர்கள் தங்கள் தொகுதிக்கு ஆற்ற வேண்டிய பணிகளுக்காகச் சில சலுகைகளையாவது அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள், மெத்த வருத்தப்படுகிறேன். உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் இப்போது இங்கே இல்லை.



1978 மார்ச் 30] [திரு. கி. மனோகரன்]

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் சலுகைகள் என்ற அளவில் ஏற்படுத்துவது சாத்தியக்கூறு இல்லை. எனவே, அதற் காக ஈட்டுப்படியாகக் கொடுக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதை ரொம்பக் கவனத்தோடு அனைவரும் கவனிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த வகையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அனுமதியோடுதான் நான் சொல்கிறேன். அந்த வகையில் உறுப்பினர்களுக்குத் தற் பொழுது தரப்படும் 'காம்பன்சேட்டரி அலவன்ஸ்'-அதாவது ஈட்டுப்படி-200 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை 350 ரூபாயாக மாதம் ஒன்றுக்கு உயர்த்தப்படும், (ஆரவாரம்),

அவ்வாறே, தொலைபேசிக்காகத் தற்பொழுது மாதத்திற்கு ரூபாய் 100 என்று இருப்பது ரூபாய் 150-ஆக மாற்றியமைக்கப் படும். (ஆரவாரம்).

இச்சலுகைகள் 1-4-1978 முதல் அமுலுக்கு கொண்டு வரப் படும். இதில் சட்டத் திருத்தம் வேண்டியிருப்பதால் சட்டத் திருத்தம் வருவதற்கு முன் அரசு ஆணையின் மூலமாக இதை நிறைவேற்ற முடியும் என்றால் அவ்வாறு செய்யப்பெறும்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு, 1951-ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் பிரிவு 12-ஏ யின்படி தற்போது சட்டமன்றப் பேரவை/மேலவை அங்கத்தினர்கள் ஆண்டொன்றுக்கு பத்தாயிரம் கிலோ மீட்டா வரை இரயிலில் முதல் வகுப்பில் இந்தியாவில் எங்கு வேண்டு மானாலும் பயணம் செய்வதற்கு கூப்பன்கள் வழங்கப்படுகின்றன.

இப்போது இந்தத் திட்டத்தின் கீழ் மாண்புமிகு அங்கத் தினர்களின் மனைவிமார்/கணவர் இரயிலில் இந்த வசதியைப் பயன்படுத்திப் பயணம் செய்ய வழி இல்லை. மாண்புமிகு அங்கத் தினர்கள் இந்த வசதி அங்கத்தினர்களின் துணைவியர்க்கும் (Spouse) வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட வேண்டு கோளை அரசு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முடிவினை எடுத்துள்ளது. இனி உறுப்பினர்களுடன் அவர்களது வாழ்க்கைத் துணைவியரோ/ துணைவரோ ஐயாயிரம் கிலோ மீட்டருக்கு மிகாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன் அங்கத்தினர் அவருடைய மனைவி/கணவன் இருவரும் சேர்ந்து மொத்தத்தில் ஓராண்டில் பத்தாயிரம் கிலோமீட்டர் வரை பயணம் செய்ய வழிவகை செய்யப்படும். அதாவது, மாண்புமிகு அங்கத்தினரின் மனைவி அல்லது கணவன் 5,000 கிலோ மீட்டருக்கு மிகாமலும், அங்கத்தினர் 10,000 கிலோ மீட்டரில் மீதமுள்ள தூரமும் பயணம் செய்யும்படியாக திட்டம் மாற்றியமைக்கப்படும். உறுப்பினர்லத்தீப் அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(குறுக்கிடு) முடிந்ததைச் செய்திருக்கிறோம். தயவுசெய்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல், கடைசியாக . . . . . .

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> உறுப்பினர்கள் சம்பந்தமாக அறிவிப்புகள் தந்தற்காக மன்றத்தின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே, அமைச்சர் அவர்களைப் பற்றி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி ஏதாவது . . . . . .

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> திட்டவட்டமாகத் தெளிவாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்களுக்கும் இல்லை, சபாநாயகருக்கும் இல்லை. துணைச் சபாநாயகருக்கும் இல்லை. மேலவைத் தலைவருக்கும் இல்லை. மேலவைத் துணைத் தலைவருக்கும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கும் இல்லை,

(பிற்பகல் 2-10)

கடைசியாக, கிராம அதிகாரிகளின் குறைகள் அவ்வப்போது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு அதற்கான நிவாரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட கிராம அதிகாரிகளுக்கும், கிராமப் பணியாளர்களுக்கும் அரசு ஆணை (பலவகை) எண் 723, வருவாய், தேதி 21—3—78-ல் ரூபாய் 100 வட்டியில்லா முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளது.

அரசு ஆணை (பலவகை) எண் 1806, வருவாய்த் துறை, நாள் 21—9—77-ல் இப்போது கொடுக்கப்படும் பிரயாணப்படி 20 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகஸ்தர்கள் செல்லையில் கட்டடம் கட்டுவதற்கு அவர்கள் குறிப்பான ஒரு இடத்தை அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், நிச்சயம் அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரை வரும் வரையில் இடைக்கால நிவாரணம் கோரியது குறித்து, அரசு பரிசீலனை செய்தது. கிராம உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் 1—4—78 முதல் மாதம் ரூபாய் ஐந்து வீதம் இடைக்கால நிவாரணமாக அளிப்பது என்று முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகையினால் சுமார் 54,000 கிராம உத்தியோகஸ்தர்கள் பயனடைவார்கள். அரசுக்கு இதனால் ரூபாய் 32.5 லட்சம் ஆண்டொன்றுக்கு செலவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதைவிட அதிகமாகச் சலுகைகளை—சலுகைகள் என்று கூடச் சொல்லமாட்டேன், உரிமை என்பதை நான் மறுக்கவில்லை. தருகிற அளவுக்கு நிதி ஆதாரம் இல்லையென்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கும் பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி, இந்த அவையில் நல்ல கருத்துக்களை வழங்கிய அத்தனைபேருக்கும் நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு நான் அமைகிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து ;</u> நாட்டு வெல்லத்திற்கு வரி விதிக்கப்பட்டிருப்பதால் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் ஏதாவது அறிவிப்பார்களா?

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் இப்போது கேட்ட இந்தப் பிரச்சினை அரசின் சீரிய பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சீரிய பரிசீலனை என்று சொல்லும்போது அதற்கு இருக்கிற முக்கியத்துவம் உங்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன்.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகளை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத் துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், பணியாளர்கள் அவர்கள் பல்லாண்டுகளாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளமும் குறைவு. நாம் மட்டும் உயர்த்திக்கொண்டு அவர்களை விட்டுவிடுவது சரியல்ல. அதைப் பற்றியும் சட்டமன்ற மானியக் கோரிக்கையின்போது பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு ஊதியக் குழு சிபாரிசு வரும் என்று சொல்லும்போது நாம் மட்டும் நம்முடைய ஊதியத்தை உயர்த்திக் கொள்ளக்கூடிய வகையில் செயல்படுவது சரியல்ல என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் இரக்க உணர்ச்சி படைத்த நண்பர் கோவிந்தராசன் அவர்கள் இங்கே சட்டப்பேரவையில் பணியாற்றுகிறவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்றார்கள். அப்படி கேட்டபோது "எனக்குக்கூட வேண்டியதில்லை, அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதா?" என்ற அளவுக்குக் கேட்டார்கள். இப்படி இந்தச் சலுகை தேவையே இல்லையென்று அனைத்து உறுப்பினர்களும் ஒரு முகமாகச் சேர்ந்து இங்கே அறிவிப்பார்களானால் அதிலிருந்து கிடைக்கிற கொஞ்சத் தொகையாவது மற்றைய அதிகாரிகளுக்கு, பணியாளர்களுக்குக் கொடுக்க இயலும் என்று

கருதுகிறேன். நான் கனம் அங்கத்தினர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் அவர் எடுத்துச் சொன்னதற்காகச் சொல்லுகிறேன்.

ஆகையால், திரு. கோவிந்தராசன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது ஏதோ அவர்களை ஒதுக்கிவிட்டோம் என்று கருதி தயவுசெய்து பிரச்சினையை திசை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அது அரசின் கவனத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் பணியாற்றுகிற உறுப்பினர்களுக்கு எவ்வளவு பெரிய பொறுப்புகள் இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியும். நெல்லிக்குப்பத்தில், தொகுதியில் பணியாற்றுகிறபோது உங்களுக்கு ஏற்படுகிற சிரமங்கள், சிக்கல்கள் எவ்வளவு என்று தெரியாதா? அதற்கெல்லாம் உதவுகிற முறையில்தான் இந்த அரசு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறதே தவிர வேறல்ல. சம்பளத்தை உயர்த்தவும் இல்லை. மாறாக, உங்கள் தொகுதியிலிருந்து உங்களைப் பார்க்க நாலுபேர் வருகிறார்கள், பத்து பேர் வருகிறார்கள். தேனீர் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லுகிறார்கள். அந்த கன்ஸிடரேஷனுக்காகத்தான் வைக்கப்பட்டதே தவிர மற்றதல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு இங்கே பணியாற்றுகிறவர்களைப் பொறுத்த வரையில் உங்களுக்குள்ள அக்கறை எங்களுக்கும் உண்டு என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மேலும் பிரச்சினைகளை வளர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, நேரம் அதிகம் இல்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி, 'தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்; தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/78) நிறைவேற்றப்பெற வேண்டும்'' என முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.



(ஆ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/78)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.20/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண்.3) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/78) நிறைவேற்றப்பெற வேண்டும்,'' என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/78)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 21/78) நிறைவேற்றப்பெற வேண்டும்" என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

330. வருவாய்த்துறையில் 7—9—1971 ஆம் தேதியன்று வெளியாகி, 8—9—1971-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II, பிரிவு 1, பக்கம் 2-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1,3987(பி)-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்த வருவாய்த்துறையின் 3-10-1971 ஆம் தேதியிடப்பெற்ற 1914 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (ஆங்கிலம், தமிழ்) (தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

*331. 1976-77ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் மூன்றாம் ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

*332. 1975-76-ஆம் ஆண்டிற்கான, குன்னூரில் உள்ள தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் முதல் ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

இல்லை.

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) [illegible] யில்கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற [illegible] வைக்கப்பெற்றுள்ளன.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினுக்கள்

### வரதமாநதி அணைக்கட்டுப் பணிகள்

* 732 வினு—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பழனி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் வரதமாநதி அணைக்கட்டு வேலைகள் சமீபப் பெருமழையின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்; தலைவரவர்களே, பழனி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் வரதமாநதி அணைக்கட்டு வேலைகள் சமீப பெருமழையின் போது நிறுத்தி வைக்கப்பட்டதாகவும். அதனுல் அப்பகுதி விவசாயிகளுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் வருவதில தடை ஏற்பட்டு பெரும் சிரமப் பட்டதாகவும் சொல்கிருர்கள். அது உண்மையா என்பதை அறிவதோடு, அந்த அணைக்கட்டிலிருந்து எத்தனை ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது? புதிதாகப்பாசன வசதி கிடைக்கும்ஏற்பாடுஏதேனும் அரசின் குறிப்பில் இருக்கிறதா. என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டுத் திட்டமிட்டபடியே மண் அணை கட்டி முடிக்கப்பட்டது. கல் அணையைப் பொறுத்தவரையில் திட்ட மிட்டபடி நவம்பர் 77-இல் கட்டியிருக்க வேண்டும். 'That is the masonry dam' ஆனால் சற்றுத் தாமதம் ஏற்பட்டு விட்டது. 31—1— 78-இல் 99 சதவீதம் வேலை முடிக்கப்பட்டு விட்டது. இத் திட்டத்தில் முன்னேற்றம் திட்டமிட்டபடியே நடந்து கொண்டிருக்கிறது. வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப் பினரவர்கள் கூறினார்கள். அது சாதாரணமாக மழை நாட் களில் நடக்காமல் இருந்திருக்கலாம், அதைப்பற்றிக் குறிப்பிடு கிறார்கள் என்று கருதுகிறேன். அந்தத்திட்டத்தின் மூலம் எவ்வளவு நிலம் பாசனம் பெறும் என்ற விவரம் இங்கே இல்லை.

## குமரி மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்கள்

திரு. மி. வின்செண்ட்

* 733 வினா— திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா ?

(அ) குமரி மாவட்டத்தின் நீர்ப்பாசன கால்வாய்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப் பட்டன ?

(ஆ) அவைகளை நவீனப்படுத்துவதற்கு அரசு என்ன என்ன முயற்சிகள் எடுத்துள்ளது ?

(இ) அனந்தனாறு கால்வாயை நவீனப்படுத்த இந்த அர எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) பழைய நீர்ப்பாசன கால்வாய்கள் நூறு ஆண்டுகளுக் மேற்பட்டவை.

(ஆ) இது தல அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட் வருகிறது. படிப்படியாக மாநிலத்திலுள்ள பழை நீர்ப்பாசன அமைப்புகள் நவீனப்படுத்துவது அரசி நோக்கமாகும்.

**(இ) இதற்கென திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது.**



திரு. மி. வின்செண்ட் ; பேரவைத் தலைவரவர்களே, அனந்தனாறு வெட்டப்பட்ட நேரத்தில் 175 கன அடி கொள்ளும் அளவிற்குதான் வெட்டப்பட்டது. ஆனால் 250 கன அடி தண்ணீர் விடப்பட்டதால்தான் கடைவரம்புகளுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கும். எனவே, அனந்தனாறும் அதன் பிரிவாம் காரவிளை சேனல், கோட்டாறு சேனல், அத்திக்கடை சேனல், ஆசாரிப்பள்ளம் சேனல், தெங்கம்புதூர் சேனல் ஆகிய இந்த ஐந்து சேனல்களுக்கும் கான்க்ரீட் போட்டு 30 கன அடி தண்ணீர் கொள்ளும் அளவிற்குக் கரை கட்டி உயர்த்த மதிப்பீடு செய்யப்பட்டு தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நான் கன்னியாகுமரி மாவட்டத் திற்குச் சென்று இருந்த பொழுதும் இந்தக் கருத்தை என்னிடத் தில் எடுத்துச் சொன்னார்கள். அந்த அனந்தனாறு கால்வாய்ப் பாசனத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு அக்கறை உண்டு. ஆகவே, அவர்கள் குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்ற அரசு கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவரவர்களே. இந்தக் கால்வாய்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே உள்ளவை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த போகத்தில் உபரியாகத் தண்ணீரிருந்தும் ஆயிரக்கணக்கான ஏக்கர் கடை வரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருந்தது. எனவே, இதை எவ்வளவு சீக்கிரம் நவீனப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நவீனப்படுத்த வேண்டும். இப்பொழுதுள்ள புதிய தேவைகளுக்கேற்ப தண்ணீர் விடுவதில் தாமதம் உள்ளது. அதைக் கருத்திற்கொண்டு அங்கே சிறிய கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடும் முயற்சியில் அரசு ஈடுபடுமா ? அதற் கான திட்டத்தை விரைவில் தயாரித்து அங்குள்ள விவசாய மக்களின் தண்ணீர் துயர் தீர ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை அரசு கருத்திற் கொள்ளத் தக்கது.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவரவர்களே, இதுபோல் குமரி மாவட்டத்திலுள்ள விறப்பாறு இடதுகரைக் கால்வாய்க்கு சிமெண்ட் பிளாஸ்டிங் போட உத்தேசமுண்டா ? அதோடு கூட மடிச்சல் கால்வாய் போன்ற கிளைக் கால்வாய்கள் இன்னும் அரைகுறையாக இருக்கின்றன. அந்த அரைகுறையை மாற்றி எல்லாயிடங்களிலும் வேலை செய்து முடிக்க இப்பொழுது அரசுக்கு உத்தேசமுண்டா ?

[1978 மார்ச் 31

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

## கௌசிகா, அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை

*734 வினா திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வழியே செல்லும் கௌசிகா ஆறு மற்றும் அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்

(ஆ) இத் திட்டங்கள் முன்னோடி ஆய்வு நிலையில் இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : இந்தத் திட்டங்கள் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் வைப்பாறை கிராமத்தின் குறுக்கே ஒரு மேம்பாலம் இருக்கிறது. அந்த மேம்பாலத்தைத் தடுத்து, ஸ்குரூ ஷட்டர் அமைத்தால், ஏறத்தாழ 9,000 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். ஆகவே, அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, அர்ஜுனா நதியின் குறுக்கே, ஆலைப்பாறை நீர்த்தேக்கம் திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மண் வேளாண்மைக்கேற்றதல்ல என்று விவசாயத் துறை கூறிய காரணத்தினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அர்ஜுனா நதியும், வைப்பாறும் சேரும் இடத்தில் இருக்கன்குடி கிராமத்தின் அருகே மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க வேண்டி முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

கௌசிகா நதியும், அர்ஜுனா நதியும் சேரும் இடத்தில் மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



1978 மார்ச் 31]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்தியாவில் 57 மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். இந்தப் பின்தங்கிய மாவட்டத்தை முன்னேற்றுவதற்காக ரூ. 800 கோடி மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்றும், நிரந்தரத் திட்டம் இல்லாததால் இந்தத் தொகை ரிசர்வ் பாங்கில் முடங்கிக் கிடக்கிறது என்றும் தெரியவருகிறது. ஆதலால், முகவை மாவட்டத்தின் நீண்டகால வறட்சியைப் போக்க அம் மாவட்ட திட்டத்திற்கும், இதை எடுத்துச் செலவழிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது பழைய தகவல். ஆனால் பணம் எங்கேயோ முடங்கிக் கிடக்கிறது என்பது புதிய தகவல்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது பழைய தகவல். என்று சொல்கிறார்கள். எந்தெந்த வகையில் அது முன்னேற்றம் அடைந்த மாவட்டம் என்று தயவு செய்து அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் பழைய தகவல் என்று சொன்னேனே தவிர, அவர் எங்கேயோ ரூ. 800 கோடி ரிசர்வ் பாங்கிலே இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தகவல்தான் எனக்குத் தெரியவில்லை. அதைத்தான் புதிய தகவல் என்று சொன்னேன். அந்த இராமநாதபுரத்தை முன்னேற்ற பல திட்டங்கள் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## குப்பநத்தம் அணைத் திட்டம்

*735 வினா – திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

செங்கம் வட்டம், குப்பநத்தம் அணைத் திட்டத் துவக்க வேலைகள் துரிதமாக நடைபெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தினருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே: இன்னும் எவ்வளவு காலத்தில் இத்திட்டத்தின் வேலையைத் துவக்க முடியும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ. 352 இலட்சமாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. விரைவாக ஆய்வு செய்த பிறகு எடுத்துக் கொள்ளப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, செய்யாற்றில் கமண்டல நதியின் குறுக்கே செண்பகத் தோப்பு திட்டத்தையும், குப்பநத்தம் அணையையும் நிறைவேற்றினால், வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு பகுதியும், அதே போல், வந்தவாசி, உத்திரமேரூர் வட்டமும் பெரிய அளவில் பாதிக்கக்கூடும். ஆகவே, அதை மனதில் கொண்டு, இந்த இரண்டு அணை கட்டும் திட்டத்தைக் கைவிட அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனை இந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகிற நேரத்தில் பரிசீலிக்கப்படும்; ஆனால், கைவிடப்படுமா என்று அவர்கள் கேட்கிறார்கள். ஏற்கனவே, இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் கொள்கை அளவிலே அப்பொழுதே ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

திரு. த. வேணுகோபால் ; பேரவைத் தலைவரவர்களே, இந்த குப்பாநத்தம் திட்டம் நிரந்தரமான நீரூற்றைத் தடுக்கப் போவதில்லை. ஆகவே, அங்கே அணை கட்ட முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நல்ல பதிலை மாண்புமிகு புலவர் கோவிந்தனுக்கு அளித்திருக்கிறார்.

புலவர் கா. கோவிந்தன் ; நம்முடைய அமைச்சரவர்கள், இந்தத் திட்டம் ஏற்கெனவே முடிவானது என்று சொன்னார்கள். மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில், வேலூரில் நடந்த பாசன மாநாட்டிலே இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறேன். அப்படி மீறிப் போகிறோம் என்று சொன்னால், அந்தப் பகுதி மக்கள் வேறு வழியை ஆராய வேண்டியிருக்கும் என்றும் கூறி இருக்கிறேன். அதிலும் செய்யாற்றின் ஊற்றுக் கால்வாய்கள் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று பாசனம் அளிக்கக்கூடிய வகையில் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறது. ஊற்றுக் கால்வாய்களில் உள்ள நீரூற்று அணைக்கட்டால் பாதிக்கப்படும். ஆகவே, அதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் அந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு விளக்கும் வகையில், தலைவர் அவர்கள் அனுமதித்தால், மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் அந்த விளக்கத்தை அவைக்குத் தெரியப்படுத்தலாம்.

(முற்பகல் 9-10)

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விளக்கத்தை நான் தெரிவிக்க வேண்டியதில்லை. நான் அமைச்சர் இடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாத வகையில்தான் மேலே உள்ள செண்பகத்தோப்பு. குப்பநத்தம் அணைகள் கட்டப்படும் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி கீழே உள்ள ஆயக்கட்டுக்காரர்கள் பாதிக்கப்படாத வகையில் இந்த அணையைக் கட்ட வேலைகள் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் விளக்கம் தந்து ஒத்துழைத்ததற்கு எனது நன்றி.

## நிலவள வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தல்

*736 வினா— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகள் பெறும் கடனுக்கு 20 ஆண்டு தவணை என்றிருந்ததை 7 ஆண்டுத் தவணையாக மாற்றப்பட்டுள்ளதை மீண்டும் 20 ஆண்டு தவணை என்று மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரோ, எட்மண்ட் : இத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை. நீண்ட காலக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம், கடன் வழங்கும் காரியத்தைப் பொறுத்து, 7 ஆண்டு முதல் 15 ஆண்டுகள் வரையில் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலவள வங்கிகளுடைய கடனை 20 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்று அரசு மத்திய அரசிடம் வலியுறுத்துமா, இதோடு தொடர்பு இருக்கிறது என்று கருதி கேட்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் 1385, 1386, 1387 பசலிகளில் கடன்பெற்றவர்கள் திரும்பக் கட்டமுடியாமல் அவர்கள் 31-3-78-ல் ஓவர் டியூ ஆவதால், புதிய கடன் வாங்க முடியாது. அதைத் தொடர்ந்து வட்டிகளைத் தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என்பதையும், அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1978 மார்ச் 31

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; தலைவர் அவர்களே வட்டியை தள்ளி வைக்கின்ற யோசனை எதுவும் அரசிடம் இல்லை. ஏற்கனவே இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாள் கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேசும்போது இதிலே இருக்கிற சிக்கல்களை எல்லாம் எடுத்துச் சொல்லி விளக்கியிருக்கிறேன். அடுத்து 20 ஆண்டுக் கால கடனை நீட்டித் தருவதற்கு சிபாரிசு செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதைப் பற்றிய யோசனை இப்போது அரசிடம் இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு எந்தெந்த காரியங்களுக்காக நிலவள வங்கிகள் கடன் கொடுக்கிறது என்றும் அந்தக் கடனில் எத்தனை சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது என்றும் அறிய விரும்புகிறேன். நில வரி ரத்து செய்யப்பட்ட சிறு விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை இனமாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய முன்னேற்றத்தைக் கருதி பல்வேறு காரியங்களுக்காக நிலவள வங்கிகள் கடன் வழங்குகின்றன. சிறு விவசாயிகளுக்கும் இந்தக் கடன்கள் வழங்குகின்றன. இதிலே மானியம் எத்தனை சதவிகிதம் என்கின்ற விவரம் எதுவும் என்னிடம் இல்லை.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, விவசாயத்திலே காலத்தில் செய்யக்கூடிய நிலத்துக்கு ஒரு கடனும், கோடையிலே செய்யக்கூடிய நிலத்துக்கு ஒரு கடனும் கொடுக்கிறார்கள். ஆனால் காலத்திலே வாங்கிய நிலத்தை கோடையிலே வாங்கிய கடனுக்குக் காட்டக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதனால் சிறு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இதை கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்பட்ட செயற்குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான ஆதாரங்களைத் திரட்டித் தருகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மூலம் குழாய்க்கிணறுகளை அமைப்பதற்காக கடன் வழங்கும் திட்டத்தில் பொதுவாக சொத்துள்ளவர்களுக்குத்தான் கடன் கொடுக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்வதோடு குத்தகை சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கும் அவர்களுடைய குத்தகை சாகுபடியை அடமானமாக வைத்துக்கொண்டு கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் இருக்கிற விவசாயிகளுக்கு அவர்களுடைய விவசாயத் தொழிலுக்கு அல்லது பயிர் செய்வதற்கு அல்லது



1978 மார்ச் 31]

விவசாய முன்னேற்றத்திற்கான காரியங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. குத்தகைதாரர்களுக்கு அப்பேர்பட்ட நிலைமை இப்போது இல்லை. அது அரசினுடைய பரிசீலனையிலும் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய கடனை 20 ஆண்டிலிருந்து 7 ஆண்டுக்கு மாற்றியதை மறுபரிசிலனை செய்வதற்கில்லை என்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு எந்தெந்தக் காரியங்களுக்கு கடன் கொடுக்கப்படுகிறது என்கிற விவரத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே கிணறு வெட்டுதல், கிணறுகள் ஆழப்படுத்துதல் போன்ற சிறு பாசன காரியங்கள், பம்ப் செட்டுகள் நிறுவுவது போன்றவற்றிற்கு சிறு விவசாயிகளுக்கு 15 ஆண்டுகள், மற்றவர்களுக்கு 9 ஆண்டுகள், தனியான கடனாகவும் அல்லது பிற சிறு பாசன திட்டங்களுடன் இணைக்கப்பட்டு, நிறுவப்பட்ட பம்ப்செட்டுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு ஏழு ஆண்டுகள், அதைப்போல் மற்றவர்களுக்கும் ஏழு ஆண்டுகள். குழாய் அமைத்தல், வடிகால் அமைத்தல், நிலச் சீர்திருத்தம் போன்றவைகளுக்கு சிறு விவசாயிகளுக்கு 15 ஆண்டுகள், மற்றவர்களுக்கு ஒன்பது ஆண்டுகள். டிராக்டர், டிரில்லர் போன்ற விவசாயக்கருவிகள் வாங்க எல்லோருக்கும் ஏழுஆண்டுகள், கால்நடை கொட்டில் விவசாயப் பண்ணைகள் அமைக்க எல்லோருக்கும் 10 ஆண்டுகள், தோட்டக் கலை சிறு விவசாயிகளுக்கு 15 ஆண்டுகள், மற்றவர்களுக்கு 10 ஆண்டுகள். பணக் கடன்களை தீர்க்கவும், நெல் வாங்கவும் சிறு விவசாயிகளுக்கு 15 ஆண்டுகள், மற்றவர்களுக்கு ஏழு ஆண்டுகள்.

## Loans for Irrigation Wells

* 737 Q.— Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:—

(a) whether the Government are aware that the present irrigation by bore well system on the basis of advancing loans to individuals, has not benefitted the small farmers; and

(b) if so, what steps the Government propose to take to enable the small farmers benefit by bore well system ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) குழாய்க் கிணறுகள் போடுவதற்காக நிலவள வங்கிகளின் மூலமாக நீண்டகாலக் கடன்களாக 2,584 சிறு விவசாயிகளுக்கு கடன் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே இத் திட்டத்தால் சிறு விவசாயிகள் பயனடையவில்லையென்று கருதுவது சரியல்ல.

(ஆ) எழவில்லை.

[1978 மார்ச் 31

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> பேரவைத் தலைவரவர்களே, குழாய் கிணறு இறக்குகிறபோது முன்னால் இருந்த தி.மு.க. அரசு ஆயில் இன்ஜின் வாங்க அதற்காக ரூ. 1,000/- மானியம் வழங்கியது. அதே போன்றதொரு மானியத்தை இப்போது மின்சார மோட்டார் வாங்கி வைத்தாலும் மானியமாக வழங்க அரசு முன் வருமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ;</u> தலைவரவர்களே, அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

<u>திரு. கா. வே. கந்தசாமி :</u> தலைவரவர்களே, இப்போது சிறு விவசாயிகளுக்குக் குழாய் கிணறு போடுவதற்கு கடன் தருகிறார்கள் சிறு விவசாயிகள் என்றால் 2 ஏக்கர் வைத்திருப்பவர்களா அல்லது 10 ஏக்கர் உள்ளவர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ;</u> பேரவைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகள் யார் என்பதையும், பெரிய விவசாயிகள் யார் என்பதையும் இந்த அரசு நிர்ணயிப்பது இல்லை. அகில இந்திய ரீதியில் அது நிர்ணயிக்கப்படுகிறது. நஞ்சை நிலமாக இருந்தால்— 2½ ஏக்கரும், அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ளவர்கள் சிறு விவசாயிகள். புஞ்சை நிலமாக இருந்தால் 5 ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ளவர்கள் சிறு விவசாயிகள்.

<u>திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் :</u> மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவரவர்களே, இந்த லோன்கள் எல்லாம் புதுக்கோட்டை ஜில்லாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, 600 அடி அகலத்திலே தோண்டப்படுகிற கிணறுகளுக்குத்தான் லோன் கொடுக்கப்படுகிறது. புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய ஜில்லாக்களிலே சிறு சிறு விவசாயிகள், 1 ஏக்கர். 2 ஏக்கர் வைத்து இருக்கக்கூடியவர்கள் 600 அடி அகலத்திலே கிணறுகளை வெட்ட சாத்தியப்படாது. கிட்டகிட்ட தான் கிணறுகள் போடுவதற்கு சாத்தியப்படும். அப்படி கிட்ட போடக்கூடிய அதாவது 600 அடிக்குள்ளேயே போடக்கூடிய கிணறுகளுக்கு அரசு கடன் கொடுக்க முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தலைவரவர்களே, நீண்டதொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்பியிருக்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் தேவையான ஏராளமான தகவல்களைச் சேகரித்துத் தரலாம்.

<u>திரு. செ. இராமலிங்கம் :</u> பேரவைத் தலைவரவர்களே, நில உச்சவரம்பு 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று நாம் நிர்ணயித்து இருக்கிறோம். ஆனால் டிராக்டர் போன்ற கடன்கள் வாங்க நிலவளவங்கிகளுக்குச் சென்றால் அந்த 15 ஏக்கர் நிலம் போதாது என்று சொல்கிறார்கள். ஆகவே, நிலவள வங்கியில் இந்த நில உச்சவரம்புக்கு உட்பட்டு நிலம் வைத்து இருப்பவர்களுக்கும் கடன் வழங்க அரசு முன்வருமா?



1978 மார்ச் 31]

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தலைவரவர்களே, நியாயமான யோசனையை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதைபபற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

<u>திரு. யா. சை. மு. யூசுப் ;</u> தலைவரவர்களே, இதைப்போன்ற குழாய்க் கிணறு பாசனங்கள் லிப்ட் இர்ரிகேஷன் சொசைடி மூலம் வழங்கப்பட்டு வந்தன. அந்த லிப்ட் இர்ரிகேஷன் சொசைடிகள் பயன் உள்ள வகையில் செயல்படுகின்றனவா? மேலும் உணவு வழங்க உணவுத்துறையின் மூலம் ஊராட்சி மன்றத் தலைவருக்கு கடன் வழங்கப்பட்டு, அந்தக் கடன் வசூலாகாமல் இருக்கிறதே, அதை வசூல் செய்ய அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தலைவரவர்களே, லிப்ட் இர்ரிகேஷன் சொசைடிகள் தேவையான இடங்களில் தேவையான பணிகளை இப்போது செய்து வருகிறது. இன்னொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அதைப் பற்றிய தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

(முற்பகல் 9-20)

<u>திரு. மா. மணிமாறன் :</u> தலைவரவர்களே, விவசாயிகளுக்கு ஆயில் எஞ்சின் வாங்க ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது இடையிலே நிறுத்தப்பட்டது. இப்போது தொடர்ந்து கொடுக்கப்படுகிறதா? இல்லை என்றால் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தலைவரவர்களே, ஏற்கனவே கேட்கப்பட்ட துணைக் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன்.

<u>திரு. என். பழனிவேல் :</u> தலைவரவர்களே, விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக அரசு கொடுக்கும் உதவியை சிறு விவசாயிகள் இன்றையதினம் பெறமுடியாமல் இருக்கிறது. 2 ஏக்கர் நிலம் உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்றும், அதற்கு மேற்பட்டவர்கள் பெரிய விவசாயிகள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் கிணறு வெட்ட வசதி இல்லை, ஏனென்றால் நிலம் போதுமானதாக இல்லை. ஆகவே, 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு அரசு உதவி செய்து, கிணறு வெட்டுவதற்கான இடைவெளி 600 அடி, 700 அடி இருக்க வேண்டுமென்ற விதியை இல்லாமல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> கிணறுகள் வெட்ட கடன் வழங்குவதற்குப் போதுமான நிலம் இல்லை என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட சிறு விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து கிணறுகளை வெட்ட கூட்டுறவு நீர் இறைவைச் சங்கங்கள் மூலம் கடன் பெறலாம்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கிணறுகளை வெட்டுவதற்கு அரசு உதவி செய்வதாக இருந்தாலும் நிலத்தடி நீர் சான்றிதழ் பெற்றால்தான் மின் இணைப்புத் தரும் நிலை இருப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, அதை மறுபரிசிலனை செய்து, வேறு உத்தரவுப்போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட நிலைமை இருந்தது உண்மை. இப்போது கூட்டுறவுத் துறை மின்சார வாரியத்தோடு தொடர்புகொண்டு, ஏற்கனவே தோண்டப்பட்டுள்ள கிணறுகளுக்குப் பொருத்தப் பட்டுள்ள பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் முயற்சியிலே ஈடுபாடு கொண்டிருக்கிறது.

## தென்னாற்காடு மாவட்டத்தில் வெட்டப்பட்ட கிணறுகள்

* 738 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டத்தில் நிலவள வங்கிகளில் கடன் பெற்று போடப்பட்ட கிணறுகள், போர்வெல் இவைகளுள் எத்தனை கிணறுகளுக்கு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கவேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தென்னாற்காடு மாவட்டத்தில் நிலவள வங்கிகள் மூலமாகக் கடன் பெற்று தோண்டப்பட்ட கிணறுகளில் 31-1-1978 தேதிவரை 91 திறந்த கிணறுகளுக்கும், 66 குழாய்க் கிணறுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டியுள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்ற 66 குழாய்க் கிணறுகளுக்கும் இன்னும் எவ்வளவு நாட்களுக்குள் கொடுக்கப்படும் என்று அறிவிப்பார்களா? சிதம்பரம் பகுதியில் இன்னும் ஏராளமான கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அவைகளுக்கு உடனடியாக இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின் இணைப்புக் கொடுக்கப்படாத கிணறுகளுக்குக் கொடுப்பதற்கான முயற்சியில் கூட்டுறவுத் துறை இன்றையதினம் ஈடுபாடு கொண்டிருக்கிறது. சிதம்பரம் வட்டத்தைப்பற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.



திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, நிலத்தடி நீர் இலாகாவிலிருந்து சான்றிதழ் பெற்றுத்தந்தால்தான் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்ற விதியைத் தளர்த்தி 50,000 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு அறிவித்திருந்தது. இப்போது அதுபற்றிய உத்தரவு போடப்பட்டுவிட்டதா? இதுவரை எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: நான் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கிறேன். பொதுப்பணித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, நிலவள வங்கி மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேறு ஒரு இடத்தில் கடன் இருந்தால், அவர்களுக்குக் கடன் இல்லை என்று விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் பெரும்பாலான சாதாரண விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசிலிக்குமா? குறைவான கடன் மதிப்பீடு இருந்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவரவர்களே, மூலக்கேள்வி பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது பற்றியது. அந்தக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

## வேலைவாய்ப்பளிக்கும் கல்வி முறை

* 739 வினா—திரு. கரு. ராம கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறையை ஏற்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தற்பொழுதுள்ள கல்வி முறையை அவ்வப்பொழுது மாற்றி யமைக்கும் பொழுது, கல்வி முறை வேலை வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டுமென்ற நோக்கம் ஓரளவு, இயன்றவரை கருத்திற் கொள்ளப்பட்டுத்தான் வந்துள்ளது. எனினும் இனி இந்தக் குறிக்கோளுக்கு மேலும் முதன்மையளிக்க இவ்வரசு கருதியுள்ளது. 1978-79 முதல் செயல்படவிருக்கும் புதிய ''மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி'' நிலையில் தொழில் சார்ந்ததும் வேலை வாய்ப்புக்கு வகை செய்வதும் ஆன பாடமுறைகளைப் புகுத்த அரசு கருதியுள்ளது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழில் கல்வியைப் பொறுத்த மட்டில் 10 ப்ளஸ் 2 என்ற திட்டத்தின் மூலம் அளிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்:

ஆனால் இந்தத் தொழில் கல்வி பயின்றவர்களுக்கு மேற்படிப்புக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலை மேற்கு வங்காளத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி தமிழகத்திலும் ஏற்படாமல் மேல்படிப்புக்குச் செல்வதற்கான வழிவகைகளைச் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, தொழில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கும்கூட அவர்கள் மேற்படிப்புக்குச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே, அத்தகைய மாணவர்களுக்கு மேற் படிப்புக்கு வகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, இப்போது இந்தத் தொழில் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. ஆனால் இதற்கு முன்பே தொழில் கல்வியினைப் பயின்று விட்டுப் பலர் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கின்ற அந்த இளைஞர்களுக்கு, மேற்கு வங்காளத்தில் கொடுப்பது போல் மானியத்தொகை 50 ரூபாய் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, தொழில் கல்வி அளிப்பது என்பதைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் கல்வி பயின்ற மாணவர்கள் தமது வாழ்க்கையினைத் தாமே நிர்ணயிக்கக்கூடிய அளவுக்கு ஆக்குவதற்கு, அவர்களைச் சமுதாயத்திற்குப் பயன் உள்ளவர்களாக மாற்றுவதற்கு வேண்டிய அடிப்படையிலே தான் இந்தத் தொழில் கல்வி தரப்படு கிறது.

இப்படித் தொழில் கல்வி தருவதாலேயே அரசு எல்லோருக்கும் அந்த வேலையையும் தரவேண்டும் என்ற நிலைமை இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு வங்காளத்தில் மாணவர்களுக்குக் கொடுப்பது போல இங்கே தருவதற்குண்டான வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அங்கே மதுவிலக்கு அமல் செய்யப்படவில்லை. ஆனால் இங்கே மதுவிலக்கு அமல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே அது போன்று கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழில் கல்வித் திட்டத்தில் நெசவுத் தொழில் போன்ற சிறு தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? அப்படிப்பட்ட கல்வித்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, ஏறக்குறைய 52 வகையான தொழில் கல்வியினை அளிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன :— வேளாண்மை 15, மனையியல் 9, பொறியியல் 8, வணிகம் 9, உடல் நலம் 8, பல்வகை 3 என்ற வகையில் 52 வகையான தொழில் கல்வி தர திட்டமிடப்பட்டுள்ளது. நெசவுத் தொழில் கல்வியும் தரப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறையை அமல்படுத்துவதற்கு முன்னால் வேலை இழந்து இருக்கிற இளைஞர்களுக்கு கேரளத்தில், மேற்கு வங்காளத்தில் கொடுக்கப்படுவதுபோல் உதவித் தொகை வழங் கப்படுமா என்று கேட்டபோது அமைச்சரவர்கள் அங்கே மது விலக்கு அமல்படுத்தப்படவில்லை, இங்கே அமல்படுத்தப்படு கிறது என்ற பதிலைச் சொன்னார்கள். மதுவிலக்கு தேவையா என்பதைப் பற்றிப பரிசீலிப்பதற்கு அரசு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு அமைத்து அதன்மீது நடவடிக்கை எடுத்துபின் இந்த இளைஞர் களுக்கும் உதவித் தொகை வழங்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவ ரவர்களே, மது விலக்கு தேவையா இல்லையா என்பதைப் பற்றி இப்போது பரிசீலிக்க வேண்டியதில்லை. அதை இப்போது அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது தொழில் கல்வியின் அடிப்படை என்ன என்பதைப் பற்றித்தான் நாம் வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அதுபற்றிய காரியங்களைத்தான் நாம் பேச வேண்டுமே தவிர மதுவிலக்கு பற்றி பரிசீலிக்கவேண்டியதில்லை. சாதாரணக் கல்வி முறையின் மூலம் 3 இலட்சம் பேர் படித்து விட்டு வெளியே வருகின்றனர். அவர்களில் 80,000 பேர்தான் கல்லூரிக்குச் செல்கிறார்கள். மீதி இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் எந்தத் தொழி லுக்கும் தகுதி இல்லாமல், மேற்படிப்புக்கும் செல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையைத் தீவிரமாக மாற்றுவதற்கும் அந்த மாணவர்களின் தரத்தை உயர்த்துவ தற்கும், அவர்களையும் பயனுள்ளவர்களாக ஆக்குவதற்கும்தான் தொழில்கல்வி என்ற இந்தச் சீர்த்திருத்தம் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. மெ. ராஜூ ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் கல்வி மூலம் பயின்று மாணவர்கள் வேலையில் லாமல் வீட்டில் இருந்தால் அந்த மாணவர்களுக்கு ஏதாவது கடன் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய திட்டங்கள் பல செயல் முறையில் இருந்து வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, வருகின்ற ஆண்டு முதல் ஹையர் செகண்டரி படிப்பினை நாம் ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த மாணவர்கள் தொழில் கல்வியைப் பயின்று வேலை இல்லை என்ற நிலை ஏற்படாத வண்ணம் அவர்களுக்கு இரண்டாண்டுகளுக்குள்ளாக வேலை வாய்ப்பினைத் தரத்தக்க வகையில் திட்டத்தினை நிறைவேற்றி அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் அது பற்றி பேச்சு வார்த்தை நடத்தி வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

## புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு உதவி

* 740 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சமீபத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு விசேஷ உதவியளிக்க தீர்மானித்திருப்பதாக பல்கலைக் கழக மானியக் கமிஷன் தமிழக அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா ?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(முற்பகல் 9-30)

திரு. மு. ஆறுமுகம் : அண்மையில் பெய்த பெருமழை புயல் காரணமாக திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் 13[illegible] ஆண்டுகளாக உலகம் முழுவதிலும் இருந்து திரட்டி வைக்கப்பட்ட 33,000-க்கு மேற்பட்ட அரிய நூல்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதை ஈடு செய்ய அரசாங்கம் கணிசமான உதவித் தொகை கொடுக்க முன்வருமா ?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மைய அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கல்லூரிகளுக்கும் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கும் அவற்றைச் செப்பனிட மாநிலத்திற்கு திட்ட உதவித் தொகையாத முன்பணமாக ரூ. 1.22 கோடி வழங்கியுள்ளது. அதில் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு ரூ. 12 லட்சம் தரும்.

திரு. செ. இராமலிங்கம் : கல்லூரி ஆசிரியர்கள் தேர்வுகளைப் புறக்கணித்து நடத்திய போராட்டத்தைத் திரும்பப் பெற்ற நேரத்தில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் சில உறுதி மொழிகளை அவர்களுக்கு அளித்தார்கள். அந்த உறுதி மொழியை வரவேற்று கல்லூரி ஆசிரியர்கள் ஒரு அறிக்கையை விட்டார்கள். அதற்குப் பின்னால் இன்றைய தினம் 78 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு அந்த உத்தரவை திரும்பப்பெற்று மீண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் எல்லாம் அந்தப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : சமீபத்தில் பெய்த மழை, புயல், வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பல கல்லூரிகளுக்கு மானியம் கொடுக்க் பல்கலைக் கழக கமிஷன் மூலம் மத்திய அரசிடம் நிவாரணம் கேட்கப்பட்டுள்ளதா ? அப்படிக் கேட்கப்படாவிட்டால் இனிமேலாவது கேட்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மைய அரசு இதற்காகத் திட்ட உதவித் தொகை முன்பணம் வழங்கியுள்ளது என்பதை முதலில் கூறியிருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தற்போது கல்வி முறையை 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற முறையில் மாற்றியமைத்திருக்கிறார்கள். இந்த அடிப்படையில் இரண்டு ஆண்டுக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளில் துவங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள ஏழை மாணவர்கள் பயன் அடையக் கூடிய முறையில் பத்தாண்டுக் கல்வியை நடுநிலைப்பள்ளிகளில் ஆரம்பிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவை அவ்வப்போது ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு விசேஷ மானிய உதவி தரப்படுகிறதா என்பது கேள்வி, திரு. இராசமாணிக்கம் அவர்கள் அதற்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்கிறார்கள்.

திரு. மா. மண்மாறன் ; வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், ஹரிஜன நலப் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் இவர்களுக்கு 'அடடா'வில் பிடிக்கப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பது தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் அந்தப் பணத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : அடிக்கடி மாணவர்களிடையே, ஆசிரியர்களிடையே புயல் வீசுகிறது, அதனுல் பொதுமக்கள் பாதிக்கப்படுகிருர்கள். அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க யு. ஜி. ஸி. ஏதாவது நிரந்தரமான முடிவு காண அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாங்கம் புயலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Nagappattinam Panchayat Union

* 741 Q—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any representation or proposal to bifurcate the present Nagappattinam Panchayat Union into two Unions viz., Nagappattinam Union and Keezhaiyur Union; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஆறுமுகம்: பொதுவாக தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களை, 60 ஊராட்சிமன்றங்களுக்கு மேல் இருக்கக் கூடிய ஒன்றியங்களைப் பிரிக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கிற உத்தேசம் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டையிலுள்ள திருவலம் யூனியனைப் பிரிக்கப் போவதாகச் சொல்கிருர்கள். அது எப்போது பிரிக்கப்படும் ? (விடையில்லை.)



## தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒன்றியங்கள்

* 742 வினு—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு, ஊத்தங்கரை, தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து புதிய ஒன்றியங்கள் ஏற்படுத்தும் செயல்திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : ஒன்றியங்கள் பெரிய ஒன்றியங்கள், சிறிய ஒன்றியங்கள் என்று பலப் பல வகைகளில் இருக்கிற காரணத்தால் மாநிலத்தில் இருக்கக்கூடிய எல்லா ஒன்றியங்களையும் சேர்த்து சமமாகப் பிரிக்கக்கூடிய வகையில் நாற்பது ஊராட்சி மன்றங்கள் கொண்ட ஒன்றியங்களாக மாற்றியமைக்கக் கூடிய ஒரு குறிப்பு இருப்பதாக அறிகிறேன். அந்தச் சூழ்நிலையில் இந்த பாலக்கோடு. ஊத்தங்கரை, தளி ஆகிய ஒன்றியங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக் கூடிய ஒன்றியங்களைப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடம் இருக்கிறது. அது அரசுக்கு வந்ததற்குப் பிறகு ஆய்வு செய்யப்படும். பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. திருவேங்கடம் அவர்கள் இந்த வினுவிலுள்ள ஒன்றியங்களைப்பற்றிக் கேளுங்கள். வேறு ஒன்றியங்கள் பற்றிக் கேட்கக் கூடாது.

திரு, பெ. சு. திருவேங்கடம் : அடுத்த தேர்தலுக்கு முன்பாக எத்தனை ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மூன்று ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்ருென்றைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசினிடத்தில் இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை பெரிய யூனியனுக இருக்கின்ற காரணத்தால் இதைப் பிரிக்க வேண்டும் என்று அதற்கான

சான்றிதழ்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த யூனியனைப் பிரித்து அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; இதற்கான செயற் குறிப்பு இன்னும் அரசுக்கு வரவில்லை. அரசுக்கு வந்ததும் இது ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கப் போவதாகக் குறிப்பிட்டார்கள். அந்த ஊராட்சி ஒன்றியங்கள் எவை எவை என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவரங்குளம், போகலூர் இந்த இரண்டும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கியைப் பற்றிய கருத்துருவும் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன் ; தலைவர் அவர்களே, ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஜனத் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டதாக நினைவு. இப்போது பரப்பளவு அதிகமாக இருக்கிற காரணத்தினால், நிர்வாக சௌகரியத்துக்காகவும், ஜனங்களின் வசதியையும் கருதி பஞ்சாயத்து யூனியன்களைத் திருத்தி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; உத்தேசம் உண்டு.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. இருந்தும் இன்னும் அரசுக்கு அந்த கோரிக்கை அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. எப்போது அரசுக்கு வரும், எப்போது இதன் மீது முடிவு எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பப்படுகின்ற கோரிக்கைகளில் சில பல கருத்துக்கள் குறித்து விளக்கமாகக் கேட்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியிருக்கக்கூடும். இதனால்தான் கால தாமதம் ஏற்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் பரிந்துரை அரசுக்கு வந்ததும் இதனை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அவிநாசி பேரூராட்சி.

*743 வினா—திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.



திரு. சொ. ந. பழனிச்சாமி : அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தினால் அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி, மற்றும் தண்ணீர் வசதி முதலியவை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை நகராட்சியாக மாற்ற அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இதற்கு முறைப்படி வர வேண்டிய வருவாய், மக்கள்தொகை இவற்றையெல்லாம் கணக்கிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தால் அதை ஆய்வு செய்யலாம்.

## முன்னாள் திருவிதாங்கூர் — கொச்சியிலிருந்து மாற்றல் பெற்ற பணியாளர்கள்

* 744 வினா—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) States Re-organisation காரணமாக திருவிதாங்கூர்-கொச்சி அரசிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு மாற்றப்பட்ட குழித்துறை நகரமன்ற ஊழியர்கள் G. O. Ms. No. 103, R. D. & L. A., dated 29-1-75ல் பென்ஷன் கிராஜுட்டி ஆகியவைகளில் பாதிக்கப்பட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானால், மேற்படி G. O. வை மறுபரிசீலனை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. காளிமுத்து (அ) மற்றும் (ஆ) பல்வேறு நிலைமைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே அரசு முடிவெடுத்தது. இதை மறுபரிசீலனை செய்யும் அவசியம் இல்லை.

திரு. தே. ஞானசிகாமணி : தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், திருவிதாங்கூர்-கொச்சியோடு இருந்த நேரத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு இருந்த இந்தச் சலுகை தமிழகத்தில் சேர்ந்ததற்குப்பின்னால் மறுக்கப்படுகிறது. கேரளத்தில் இவர்களுக்கு கிராஜுயுட்டி, பென்ஷன் முதலியவை கொடுக்கப்படுகிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல முடிவுகளை எடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; இதில், மொத்தத்தில் 12 பேர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. இதைத் திட்டவட்டமாக ஆராய்ந்து ஆணை பிறப்பிக்கப்பட்டது, இன்னும் மறுபரிசீலனை

செய்ய ஆரம்பித்தால் வேறு பல புதிய பிரச்னைகள் பிறக்கும், ஆகவே, இதை மறுபரிசிலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஸ்டேட் ரீ-ஆர்கனேஸேஷன் ஆக்டின் படி திருவிதாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் பணிசெய்தவர்கள் தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்டிருப்பார்களேயானால், ஏற்கனவே அவர்கள் என்னென்ன நன்மைகளைப் பெற்றுக்கொண்டு இருந்தார்களோ, அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து இருந்தால் அவர்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்க முடியுமோ அவை கொடுக்கப்படும், அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அஷ்ஷூரன்ஸ் அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆக, இந்த புதிதாக தமிழ்நாடு ஸ்டேட் ஜி.ஓ.வந்ததால் அவர்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்று சொன்னால் அந்த ஜி. ஓ. வை மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது. கோர்ட்டுக்குப் போனால் இந்த ஜி.ஓ. நிற்காது. ஆகவே இந்த ஜி.ஓ. வை மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஜி.ஓ.வைத் தவறாகப்புரிந்து கொண்டிருக்கிறார்கள். திருவிதாங்கூர் – கொச்சியில் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியத்தை எல்லாம் பரிசீலித்து, அதை வழங்குகின்ற முறையில் தான் இப்போதும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் போக்குவரத்து.

* 745 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மினி பஸ்களை போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்சமயம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலைகள் எல்லாம் மிகவும் குறுகலான சாலைகளாக இருக்கின்ற காரணத்தினால் பெரிய பேருந்துகள் செல்ல முடிவதில்லை. ஆகவே மினி பேருந்துகளை விட்டால் மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதை மனதிற்கொண்டு. தஞ்சை மாவட்டத்தில் அதிகமான மினி பேருந்துகளை விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களுக்கு நலம் பயக்கும் மினி பஸ்கள் விட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில், போத்தகுடி — முன்னவால்கோட்டை வழி, வாழச்சேரி, ரிஷியூர், பெரம்பூர், நீடாமங்கலம் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கும், பட்டுக்கோட்டை — ஓரத்தநாடு வழி ஏனாதி, திருநல்லூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்குமாக இரண்டு வழித்தடங்களில் மினி பஸ்கள் விடுவது பற்றி அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. ஆனால், சோழன் போக்குவரத்துக் கழகம் அதை மேற்கொள்வது பற்றி இன்னும் ஏற்பாடாக வில்லை. அத்தோடு, தஞ்சாவூர், நீடாமங்கலம், நார்த் விதியிலே உள்ள தனியார் ஒருவருக்கும் மினி பஸ் விடும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மினி பஸ்கள் ஓட்டுவதற்கான உத்தரவு எந்தெந்த மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், ராமேஸ்வரம், மதுரை மாவட்டத்திலே நிலக்கோட்டைப் பகுதி, வட ஆற்காடு மாவட்டத்திலே ஆற்காடு, வந்தவாசி ஆகிய இடங்களில் மினி பஸ்கள் விடுவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் அனைத்து மாவட்டங்களுக்கும் வருகின்ற ஆண்டில் படிப் படியாக, கிராம நலனைக் கருதி அங்கேயெல்லாம் மினி பஸ்கள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, இந்த மினி பஸ்களில் எத்தனை பேர்கள் பிரயாணம் செய்ய முடியும் என்பதையும், இது லாபகரமாக இயங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ்கள் விடுவதில் மிகுதியான லாபத்தை எதிர் பார்க்க முடியாது. எனவே, வரியை மிகவும் குறைத்து சீட் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதிலே பிரயாணிகள் சுமார் 20 பேர்கள் பிரயாணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பஸ்கள் விடும் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சிற்றூர்களுக்கு விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கூறிவிட்டேன். அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக இந்த அரசால் மேற்கொள்ளப்படும்.

திரு. சி. மு. வாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஓடிக் கொண்டிருக்கும் மினி பஸ்கள் நஷ்டத்தில் ஓடுவதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, இத் திட்டம் கைவிடப்படும் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பரவலாகப்பேசப்படும் அளவுக்கு, பரவலாக மினி பஸ்கள் விடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, மினி பஸ்கள் விடும் திட்டம் அரசினால் நடத்தப்படும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் உரிமம் அளிக்கப்படுகின்றதா? தனியார் நடத்தும் போக்குவரத்துக்கும் இந்த உரிமம் அளிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் நடத்தப்படும் போக்குவரத்துக் கழகங்கள் இதை மேற்கொள்வதிலே சிக்கல் இருக்கின்றது. காரணம், நஷ்ட நிலைமையிலே போக்குவரத்துக் கழகங்கள் நடப்பதால், மினிபஸ்கள் விடுவது அவ்வளவு சரியான காரியமாகாது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் லாபத்திலே ஓடுகின்ற காரணத்தினால், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவைகளில் இந்த மினி பஸ்கள் விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் நஷ்டத்திலே இருக்கின்ற காரணத்தினால், வட ஆற்காடு மாவட்டத்தில் தனியாருக்கு இந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்களில் மாணவர்கள் கல்வி-சுற்றுலாப் பிரயாணம் செல்லும் போது, சலுகைக் கட்டணமாக மூன்றில் ஒரு பங்கு செலுத்தப்படுவதுபோல், கிராமங்களிலே உள்ள மாணவர்கள் இப்படி கல்வி-சுற்றுலாப் பிரயாணம் மேற்கொள்ளும்போது, இந்தப் பேருந்துகளிலும், அரசுப் போக்குவரத்துக் கழகத்தினால் அம்மாதிரி கட்டணச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மினி பஸ்கள் விடுவதுதான் மூலக் கேள்வி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





## உப்பனாற்றின் குறுக்கே பாலம்.

*746 வினா—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் துறைமுகத்தில் ஸ்டேட் பேங்குக்கும் சிங்காரத்தோப்புக்கும் இடையே உப்பனாற்றை கடப்பதற்கு முந்தைய அரசால் ஒரு பாலம் அமைத்திட திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலம் அமைக்கும் வேலை இப்போது எந்த அளவில் உள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கடலூர் துறைமுகப் பகுதியில் இப்பாலம் அமைக்க விருப்பதால், துறைமுகத்துறையின் ஒப்புதலைப் பெற நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார். ஒப்புதல் கிடைத்ததும் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1975-லே துறைமுக அதிகாரிகளும், மின்வாரிய அதிகாரிகளும் ஒப்புதல் அளித்து 13,50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பாலத்தை ஸ்டேட் பாங்குக்கு எதிரில் கட்டினால் தான் வசதியாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். காரணம், அந்தப் பாங்குக்குப் பக்கத்திலே பள்ளிக்கூடம், மருத்துவமனை, பஸ் ஸ்டாண்டு, மார்க்கெட்டு ஆகியவைகள் இருக்கின்றன. அந்த இடத்தை மாற்றுவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தி, மக்களுக்கு வசதியாக இருக்கும் அதே இடத்தில் கட்டுவதற்கு இந்த அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துறைமுகத் துறையினர இப்பாலத்தை குறுங்குப்பத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கட்டினால்தான் துறைமுகத்தைப் பொறுத்தவரை துறைமுகப்பணிகள் பாதிக்கப்படாமல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்குமென்று கூறப்பட்டது. ஆனாலும் குறுங்குப்பம் கடலூருக்குச் செல்ல அதிக தூரம் ஆகுமென்று கணிக்கப்பட்ட காரணத்தால் இப்பாலத்தை ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட சிங்காரத் தோப்பு அருகில் கட்ட துறைமுகப் பகுதியினரின் ஒப்புதலை அரசு கேட்டு ஒப்புதல் கிடைத்ததும் அப்பணி மேற்கொள்ளப்படும்.

## Bridge across Kuzhithurai river.

* 747 Q. THIRU J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to construct a bridge at Thikurichy across the Kuzhithurai river in pacode village Kanyakumari district, and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: இது பாக்கோடு கிராமத்தையு மார்த்தாண்டத்தையும் ஒன்று சேர்க்கும் ரோட்டில் குழித்துறை ஆற்றில் கட்டப்பட வேண்டிய ஒன்று. பாக்கோடு கிராமத்தி பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது கல்லூரிகள், பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகிற மாணவர்க ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது; ஆற்றில் எ போதும் ஆறு அடித் தண்ணீர் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அரசு இதுபற்றி மறுபரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலம் இப்பகுதிய கட்டப்பட வேண்டாமென்ற முடிவு எதையும் அரசு செய்துவி வில்லை. தேவையை உணர்ந்து வரும் திட்டங்களில் இப்பணி மே கொள்ளப்படும். தற்போது நிதிநிலை காரணமாக உடனடியா மேற்கொள்ளப்படவில்லை.

## தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.

*748 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் வழங்கும் சங்க தின் தலைமை அதிகாரியின் உத்தரவின் பேரில் பாலுக்கு பதில பால் பவுடரை கரைத்து மக்களுக்கு விநியோகிப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) இப்படியும் வழங்க அரசு அனுமதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) தெரியாது. ஆனாலும் பால் உற்பத்தி குறையும் பருவத்தில், பால் பற்றாக் குறையை ஈடு செய்ய பால் பவுடர் கலந்து தயாரிக்க படும் நிலைபடுத்தப்பட்ட பால் மற்றும் சத்து மாற்றப்பட்ட பால் விநியோகம் செய்வது எல்லா சங்கங்களிலும் நடைமுறை யிலுள்ளது. இவ்வாறு செய்வதற்குத் தடையேதுமில்லை.



திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, துணைக் கேள்வி கேட்பதற்காக அல்ல—விடை சொல்லப்பட்டபோது அமைச்சர் 'தெரியாது' என்று பதில் சொன்னார்கள். விடை- 'இல்லை' என்றோ, அல்லது 'அப்படிப்பட்ட ஆலோசனை இல்லை' என்றோ, 'அதைப்பற்றி விவரம் இல்லை' என்றோ சொன்னால் தெரிந்து சொல்கிறார் என்று அர்த்தம். 'தெரியாது' என்று சொன்னால் அமைச்சருடைய பதில் நிறைவுடையதாகாது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வியை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பார்த்திருந்தால் நன்றாகத் தெரியும். அதிலே '..பாலுக்குப் பதிலாக பால் பவுடரைக் கரைத்து மக்களுக்கு விநியோகிப்பது' அரசுக்குத் தெரியுமா?' என்பதற்கு 'தெரியாது' என்று பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: அரசுக்குத் தெரியாததால் 'தெரியாது' என்று பதில் சொல்வதாகக் கூறுகிறார். அரசு முயற்சிகளை எடுத்துத் தெரிந்து கொள்ள நினைக்கவில்லை. அப்படி நடப்பது ஏற்கெனவே அரசுக்குத் தெரியாது என்றாலும் இப்போதும் தெரியாது என்று பதில் சொல்லுவது பொருந்தவில்லை. எனவே, 'தெரியாது' என்பது அரசாங்கத்தின் பதிலில் பொருத்தமான சொல்லாக அமையவில்லை என்று நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு மேலும் அமைச்சருக்குத் 'தெரியாது'' எனில் அது அவருடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படி நடக்கிறதா என்ற கேள்வியைப் போட்டு அதற்குப் பதில் வேண்டுமென்று கேட்பது எப்படிச் சிறந்த முறையாகும் என்பதைத் துணைத் தலைவர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் எழுப்புவது —இந்தக் கேள்வி இலாகாவுக்குப் போய் வந்து உங்களுக்குத் தகவல் தெரிந்திருக்கும். 'இருக்கிறது' 'இல்லை' என்று சொல்லலாமே தவிர, 'தெரியாது' என்று அரசுத் தரப்பில் சொல்லக்கூடாது என்றுதான் எடுத்துச் சொல்லுகிறார். கேள்வி இலாகாவில் ஆய்வு செய்யப்பட்டு சரியான தகவல்கள் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கும். அதை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் 'தெரியாது' என்று சொல்லுவது சரியல்ல.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் அ & ஆ என்பதற்கு 'தெரியாது' என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு சொல்லும் போது அப்படி பால் பவுடரை கலந்து வழங்குவதில் தவறு இல்லை யென்ற முறையில் பதில் சொன்னார்கள். அப்போது தெரிந் திருக்கும் என்ற அர்த்தம் வருகிறது. முதலில் சொன்ன பதிலுக்கு இரண்டாவது பதிலில் விளக்கம் இருக்கிறது. எனவே, அது இல்லை யென்று மறுக்கவில்லை, கலந்து விநியோகிக்கப்படுகிறது என்பதை

ஒப்புக் கொண்டிருக்கிறார். எனவே, உண்மையான பால் என்று சொல்லி பால் பவுடரைக் கரைத்து விற்பது சரிதானா? அதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூலக் கேள்வியைச் சரிவர படிக்காமல் கேள்வியைக் கேட்கிறார்கள். மூலக் கேள்வியைச் சரிவரப் பார்த்திருந்தால் இன்னும் நன்றாக நல்ல கேள்விகளைக் கேட்டிருப்பார்கள். 'பாலுக்குப் பதிலாகப் பால் பவுடரை கரைத்து மக்களுக்கு விநியோகிப்பது அரசுக்குத் தெரியுமா?' என்பது கேள்வி. பாலுடன் பவுடரைக் கரைக்கலாமே தவிர, பவுடரை மட்டுமே கரைத்துக் கொடுப்பது இந்தத் திட்டத்தில் இல்லை என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த மூலக் கேள்வி உறுப்பினர்களுக்குத் தெரியுமா' என்று கேட்கிறார்கள். கேள்வி கேட்டதே மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள்தான். கேள்வி கேட்ட உறுப்பினரையே கேள்வி தெரியுமா என்று கேட்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இரண்டாவதாக, பாலில் மாவைக் கரைத்துக் கொடுத்திருக்கிறார்கள் அல்லது தனியாக மாவைக் கரைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்ற அந்த விவரங்களை அமைச்சரவர்கள் சொல்ல வேண்டுமே தவிர, அந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது மூலமாகத் தெளிவான ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, அந்தக் கேள்வியே தவறு என்று இந்த நேரத்தில் எழுப்புவது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு தவறு நடந்ததாகச் சுட்டிக்காட்டி அந்தத் தவறு நடந்தது தெரியுமா என்று கேள்வி போடப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பில் அது தெரியும் என்றால் அந்தத் தவறு தெரியும் என்று ஆகிறது. ஆகவே, அந்தத் தவறுக்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இங்கே வந்து பதில் சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. ஆகவே, அந்தத் தவறு நடந்தது அரசாங்கத்திற்குத் தெரியாது என்ற பொருள்பட கேள்வியில் பதில் அமைந்திருக்கிறது. ஆகவே, அந்த உணர்வை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் வரவேற்பார்கள் என்றுதான் கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலே உள்ள உணர்வை நான் வரவேற்கிறேன். இந்த உணர்வு அந்தப் பதிலில் இல்லை. தவறு நடந்தது எங்களுக்குத் தெரியாது என்று சொல்வது ஒன்று, தெரியாது என்ற கருத்தைத் தோற்றுவிப்பது ஒன்று. இரண்டிற்கும் உள்ள வேற்றுமையை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் அதைத்தான் சொன்னார்கள்; அதாவது பால் விநியோகம் செய்வது ஒன்று, பால் பவுடரை மட்டும் கரைத்து விநியோகம் செய்வது தவறு என்ற அடிப்படையில் வருவதால் அந்தத் தவறு நடப்பது தெரியுமா என்ற கேள்வி வருகிறது. அதற்குத் துறையினர் பதில் அனுப்பும் பொழுது தெரியாது என்று சொல்லிவிட்டு, அடுத்த கேள்விக்கான விவரங்களைத் தருகிறார்கள். வேண்டுமானால் தவறு ஒன்றுமில்லை என்று மாற்றிக்கொள்ளலாம். ஆனால் மன்றத்திற்குத் தேவையான எந்தப் பதிலைத் தரவேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அந்தப் பதில் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, ** **

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, குற்றச்சாட்டை சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கவனிக்கவில்லை.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரையே திரும்பச் சொல்லச் சொல்கிறேன். துரை கோவிந்தராசன் அவர்கள்,

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வி இதற்குச் சம்பந்தப்பட்டது அல்ல.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, ** **

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, ** **

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடை அளிப்பதற்கு முன்னால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கருத்து, அவர் சொன்னது யாரையோ குறிப்பிட்டு இன்னொர் ஊழல் செய்துவிட்டார்கள் என்று சொன்னதாகத் தெரியவில்லை......

திரு. மு. கருணாநிதி: நீங்கள் அப்பொழுது கவனிக்கவில்லை, யாரோடோ பேசிக் கொண்டிருந்தீர்கள் ** என்று சொன்னார்....

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது என்பது தான் நம்முடைய சட்டமன்ற விதிமுறைகள். ஆகையினாலே குறிப்பிட்ட ஒருவரைப்பற்றி குற்றச்சாட்டு கூறுவது சரியாக இராது. ஆனால் அந்த நிர்வாகத்தில் தவறு நடந்திருக்குமானால் அதைச்சொல்வது வேறு. ஆனால் குறிப்பிட்ட நபரோ அல்லது குறிப்பிட்ட கட்சியோ ஈடுபட்டது என்று சொல்வது சரியல்ல.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவுசெய்து துரை கோவிந்தராசன் எழுப்பிய கேள்வியை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவரவர்களே 'அந்த நேரத்தில் நீங்கள் அதைக் கவனிக்கவில்லை' யென்று எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரைப் பார்த்துச் சொல்லலாமா, நியாயமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எனக்கு உறுதுணையாக உதவி செய்தார். அது ஒன்றும் குறை அல்ல. அவர் என்ன சொன்னார் என்று எடுத்துச் சொன்னாரே தவிர, கேள்வி கேட்கவில்லை.

<u>THE HON. THIRU S. RAGHAVANANDAM :</u> It is casting aspersion on the Hon. Speaker.

<u>திரு. மு. ஆறுமுகம் :</u> பேரவைத் தலைவரவர்களே, பற்றாக் குறை காரணமாக பாலில் பால்பவுடர் கலக்கப்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் தஞ்சாவூரிலே ஒரு நாளைக்குத் தேவையான பால் அளவு என்ன? தஞ்சையில் பால் உற்பத்தி எவ்வளவு? பற்றாக்குறையாக இருக்கும்போது, அந்தப் பால் உற்பத்தியை அதிகரிக்க, தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் எந்த உணர்விலே கேட்டிருக்கிறார்களோ அந்த உணர்வில்தான் நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்குக் கேள்வி தெரியாது என்று நான் சொல்லவில்லை அவர்கள் மறந்திருக்கலாம் என்ற எண்ணத்தில்தான் அவரிடத்திலே நான் சொன்னேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கக் கூடிய கேள்விக்குப் பதில் ஒரு நாளைக்கு 6,500 லிட்டர் பால் தஞ்சை மாவட்டத்திலே இன்று சேகரிக்கப்படுகிறது. அதுவும் 'பிளஷ் சீசன்' (flush season) எனப்படும் பால் அதிகமாக வரக்கூடிய காலத்தில் 6,500 லிட்டர். பால் குறைவாக இருக்கின்ற காலத்தில் 2,000 லிட்டரும் வருகிறது.



<u>திரு. க. மருதாசலம் :</u> தலைவரவர்களே, பாலில் கலக்கப் படும் பால்பவுடர்கள் இந்த மாநிலத்திலிருந்தே பெறப்படுகிறதா? அல்லது வேறு மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறதா ? அப்படியென்றால், இந்த மாநிலத்திற்குத் தேவையானது எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மூலக் கேள்வி தஞ்சாவூர் மாவட்டத்தை ஒட்டியது. மாநில அளவில் கேட்டால் தகவல் இருக்காது.

<u>திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் :</u> பேரவைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் பால் வழங்கும் சங்க கிராமக் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கத்திடமிருந்தும் மிகவும் குறைந்த விலைக்கு பால் எடுப்பதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா? அந்த மாவட்ட பால் வழங்கும் சங்கம் விற்கும் விலை என்ன? வாங்கும் விலை என்ன?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த விலைக்கு வாங்குவதாக இதுவரையிலும் அரசுக்கு எந்தப் புகாரும் வரவில்லை. ஆனாலும் பாலினுடைய விலையை இந்த பட்ஜெட் கூட்டத்திலே நான் அறிவித்திருக்கிறேன். வாங்கக்கூடிய விலையை ரூ. 1.30 காசிலிருந்து, இப்பொழுது எருமைப் பாலாக இருந்தால் ரூ. 1.42 காசுக்கும்; அதே நேரத்தில் பசும் பாலாக இருந்தால் ரூ. 1.38-க்கும் வாங்கப் போவதாக ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அங்கே, நிலைமைக்கேற்றவாறு குறைந்த விலையிலேதான் பாலை விற்றுக்கொண்டிருக்கிறோம்.

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தனியார் பாலில் தண்ணீர் கலக்கினாலும், பவுடரைக் கலக்கினாலும் under Prevention of Food Adulteration Act. பிராசிக்யூஷன் செய்யப்பட்டு வழக்கு போடப்படுகிறது. ஆனால், கூட்டுறவு நிறுவனங்களில் 'இது போன்ற தவறுகள் நடந்தால் பிராசிக்யூஷன் செய்வதில்லை . எனவே, ஜனநாயக நாட்டில் அவமதிக்கும் இரண்டு வகையிலுள்ள, ஒருபிரிவினரை மட்டும் பிராசிக்யூஷன் செய்யும் சட்ட திட்டங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். அவருக்கும் நன்றாகத் தெரியும். Prevention of Food Adulteration Act. என்பது 'சென்ட்ரல் ஆக்ட்' அது அவருக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். மேலும், பாலிலே தண்ணீரை ஊற்றுவது சரியல்ல, 'அடல்டரேட்' பண்ணினால் அது குற்றம்தான். ஆனால், அதே சமயத்தில், இங்கே பாலிலே பவுடரைக் கலந்து, பதப்படுத்தப் பட்டதாக, பக்குவப்படுத்தி, சுகாதாரத்திற்கு எந்தவிதமான கேடும் இல்லாமல் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அது குற்றம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-00)

(மாண்புமிகு உறுப்பினர்கள் மு. அம்பிகாபதி, மி. வின்சென்ட், இரெ. இராசமாணிக்கம் எழுந்து நின்றார்கள் )

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் எல்லோரும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அத்தனை பேரும் எழுந்து நின்றால் நான் என்ன செய்வது. தயவு செய்து உட்காருங்கள்.

## (2) தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களின் உண்ணாவிரதம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை எடுத்துக் கொள்வது பற்றி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அதைக் குறிப் பேட்டிலே ஏற்ற வேண்டும் என்று விரும்பினாலும் அல்லது அந்த விருப்பத்தோடு பேசினாலும் சரி, இந்த அவையிலே இருக்கிற விதி முறைகள் அதை அனுமதிக்கவில்லை. அறையிலே வந்து கேளுங்கள். தங்களுடைய கோரிக்கையை அறையிலே வந்து கேட்டால் பரிசீலிக்கப்படும்.

## (3) ஒழுங்குப்பிரச்சினைகள்

### (அ) சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தை கூட்டலாமா என்ற ஒரு ஒழுங்குப் பிரச்சினையை தலைவர் முன் கொண்டுவருகிறேன்.

''30-3-1978 நாளிட்ட முரசொலியில் 'தலைவர் கலைஞர் தலைமையில் சென்னை மாவட்ட தி.மு.கழக செயல் வீரர்கள் கூட்டம். பேராசிரியர், சாதிக், ப.உ.ச. பங்கேற்பு' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் ஒருவர் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். சென்னை மாவட்டத்தின், தி.மு.கழகச் செயல் வீரர்கள் கூட்டம் 30-3-1978 வியாழன் மாலை 6 மணிக்கு அண்ணாசாலை சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.



1978 மார்ச் 31]

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் பாட்சா, துணைப் பொதுச் செயலாளர் ப.உ.ச. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

வட்டக்கழக — பகுதிக் கழகச் செயலாளர்கள் — நிர்வாகிகள் துணை-சார்பு மன்ற நிர்வாகிகள்—மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற (பேரவை-மேலவை) உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணியினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்றுச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன். ஆர்.டி.சீதாபதி, செயலாளர், சென்னை மாவட்ட தி.மு.க.'' என்று இப்படிப் பட்ட அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. சட்டமன்ற கட்சி அலுவலகத்தில் கூட்டத்தைக் கூட்டுவது சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரா அல்லது செயலாளரா இல்லை, மாவட்டச் செயலாளரா? சட்ட மன்றக் கட்சி அலுவலகம், அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடுவதற்கா அல்லது அரசியல் கட்சி செயல்வீரர்கள் கூடுவதற்கா . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். புரிந்து கொண்டேன். நம்முடைய விதிகளிலே தெளிவாக அவைகளை எடுத்துக் காட்டவில்லை. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கட்சியினுடைய கூட்டத்தைக் கூட்டலாமா வேண்டாமா என்பதற்கு விதிகள் தெளிவாக இல்லை. இரண்டாவது, கட்சியின் தலைவர்களே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாக் கட்சிகளிலும் நடைபெறுகின்றன. ஆகவே, அதைப்பற்றி விதிகளை தெளிவாக ஏற்படுத்தித் தருவார்களானால் பிறகு, அதைக் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கிறேன்.

## (2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள் அரசால் அளிக்கப்பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழக அரசு அறிவித்த அறிவிப்பிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் துணைவியருடன், பெண்ணாக இருந்தால் தங்கள் துணைவருடன் 5,000 கிலோ மீட்டர் ரெயிலிலே பயணம் செய்ய அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் திருமணம் ஆகாத உறுப்பினர்கள் நாஞ்சில் வின்சென்ட், சின்னசேலம் சுப்பிரமணியம் போன்றவர்கள் அந்த 5,000 கிலோ மீட்டர்களை எப்படிப் பயன்படுத்துவது, என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : நான் இன்னும் 2 மாதங்களில் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட வினாக்களை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் 11-ஆம் தேதி இந்த அவையில் ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 11-ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் என்னுடைய தொகுதியைப் பற்றிய கேள்விகள், அமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது இந்தக் கூட்டத் தொடரும் முடிய இருக்கிற காரணத்தினால் இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அதற்கு விடையளிக்க தாங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர்கள் வந்த உடன் கேட்டுப் பதில் சொல்லுகிறேன்.

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்குத் தரப்பட்ட சாப்பாட்டுத் தட்டுகள் பற்றி எழுப்பப்பட்ட பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும்போது மேலதிகாரிகள் அப்பள்ளி ஆசிரியர்களை அச்சுறுத்துவதாக கூறப்படுவது குறித்து :

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றத்தில் திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்குச் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கியிருப்பதையும், அதில் எம். ஜி. ஆர். லதா என்று பெயர்கள் பொறிக்கப்பட்டு இருப்பதையும் குறிப்பிட்டு இங்கே தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எதற்காக என்ற விவரத்திற்கு வாருங்கள்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : அந்த சம்பவத்தின் விளைவாக நேற்று மாவட்டத்தின் பெரிய அதிகாரிகள் அந்த திருத்துறைப்பூண்டி ஆசிரியர்களை அழைத்து இந்த மாதிரி தட்டுகள் அங்கே வழங்கப்படவில்லை, அந்தத் தட்டுகளைத் திரும்பத்தாருங்கள்



என்று பயமுறுத்திக் கொண்டு இருப்பதாகத் தகவல் எனக்கு வந்து இருக்கிறது. அதைப் பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பி விட்ட பிறகு இப்படிப்பட்ட சம்பவம் நடப்பது சரியா, சபா நாயகர் இதில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி விவரமாக எனக்கு மாண்புமிகு உறுப்பினர் எழுத்து மூலமாகத் தருவார் என்றால் நான் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

2. (அ) சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து—தொடர்ச்சி.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, சட்டமன்ற கட்சி அலுவலகத்திலே கட்சிப் பொதுக்கூட்டம் நடத்துவது சரிதானா என்ற அளவிற்கு விதி இல்லை என்று சொன்னீர்கள். ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சாதாரண சூழ்நிலையில் அப்படி நடப்பதால் கவலை இல்லை. தேர்தல் காலத்தில் அப்படிப்பட்ட கூட்டம் நடைபெற்றால் அது வேறு மாதிரி பிரச்னைகளை உருவாக்கும். ஆகவே, அதை முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கும், அவைக்கும் அதுகுறித்து விளக்கமாகச் சொன்னேன். நீங்கள் எனக்கு விதிகளை உருவாக்கித் தாருங்கள். நான் அதைக் கடைபிடிக்கிறேன். அது இந்த அவையில் இருக்கும் உறுப்பினர்களின் உரிமை. நீங்கள் முடிவு எடுக்கவேண்டியது குறித்து என்னிடத்தில் சொன்னால் நான் என்ன செய்வது ?

2. (ஆ) திருமணமாகாத உறுப்பினர்கள் அரசால் அறிவிக்கப்பட்ட ரயில் பிரயாண சலுகையை எப்படி பயன்படுத்துவது என்பது குறித்து—தொடர்ச்சி.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் துணைவியரோடு தொகுதிப்பணி செய்ய ரயிலில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் கன்னியாகுமரி பகுதியில் ரயில் கிடையாது. நாங்கள் தொகுதியில் பயணம் செய்யவேண்டுமானால், துணைவியரோடு பேருந்துகளில் தான் பயணம் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் ரயில் போகாத இடங்களில் பயணம் செய்யப் பேருந்து பாஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு ரயில் நிலையம் வரையில் வந்துவிட்டு, அங்கிருந்து பிறகு ரயிலில் பயணம் செய்யலாம்.

## (4) உரிமைப் பிரச்னைகள்.

(அ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்த பொருள் குறித்து மேலவையில் முதல்வர் விவரம் அறிவித்தது குறித்து எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னைகள் மீதான என் தீர்ப்புகள்.

சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்கள் மீது 17–3–1978 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியுள்ளார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில கோட்பாடுகளுக்கு இணங்க சட்டமன்றத்தில் இரு அவைகளும் சம உரிமைகள் பெற்றவை. ஒரு அவையில் நடைபெறும் நிகழ்ச்சி குறித்து, அது சரியா, தவறு என்பது பற்றி, அந்த அவையிலன்றி, வெளியிலே, அது சரியா, தவறு என்ற பிரச்னைகளோ நடவடிக்கைகளோ எடுக்கக் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 194 (2)-வது விதியின் கீழ் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், ஒரு அவையின் நடவடிக்கை பற்றி மற்றொரு அவையில் உரிமைப் பிரச்னை எழுப்புவதும் மரபு அல்ல என்று பல்வேறு தீர்ப்புகள் உள்ளன. அவ்வாறு நிகழுமாயின் உடனுக்குடனே அந்த அந்த அவைத் தலைவர்கள் மற்ற அவையின் உரிமையைப் பாதுகாப்பது வழக்கம்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்னையில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) திரு. க. சுப்பு மீது எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 23-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பினார்கள். 22-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அவைத் தலைவர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் சில சொற்றொடர்களை உபயோகித்து வெளிநடப்புச் செய்தார் என்றும், இது அவை உரிமை மீறிய செயல் என்றும் திரு. சேதுராம் அவர்கள் குறிப்பிட்டார்:

அவைத் தலைவர் தீர்ப்புக்கு மாசு கற்பிக்கும் வகையிலோ அல்லது கண்ணியக் குறைவாகவோ அல்லது அவைத் தலைவரின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்று குறிப்பிடுவதோ, அல்லது



அவைத் தலைவர் வழங்கும் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதோ இது போன்ற வேறு முறைகளில் அவையின் கண்ணியத்தைக் காப்பதாகாது என்றும், இம்மாதிரி நடவடிக்கைகள் கண்டிக்கப்படத் தக்கவை என்றும் பல்வேறு முன்மாதிரித் தீர்ப்புகள் உள்ளன. இவைகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அன்று நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து இனிமேல் இவ்வாறு நிகழ்ச்சி நடைபெறாது என்று தெரிவித்தால் இப்பிரச்னையை இத்தோடு விட்டுவிடலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சுப்பு அவர்கள்.

(திரு. கே. பண்ணை சேதுராம் எழுந்தார்)

திரு. க. சுப்பு: அவர் பேசுகிறாரா ?

(ஒரு குரல் : யார் அவர் ?

மற்றொரு குரல்' அவர் ஒரு எம். எல். ஏ.)

திரு. க. சுப்பு: அப்படியா, பரவாயில்லையே ! இந்தப் பிரச்னையை விட்டுவிடுவதற்கு முன்பாக, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் அனுமதித்த பிறகு இங்கே பேசுவது தான் குறிப்பேட்டில் ஏறுவது வழக்கம்; நான் சொல்லிவிட்டு வெளியேறியது குறிப்பேட்டில் இருக்கிறது. என்னை உட்காரடா என்று சொன்னதை குறிப்பேட்டில் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருதலைப்பட்சமாக இங்கே குறிப்புகள் பதியப்படுகிறதா, தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள். நான் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது, என்னை உட்காரடா என்று சொன்னது குறிப்பேட்டில் இல்லை.

மாண்புமிகு திரு. க. உடொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்த அவையின் விதி முறைகள் பிரகாரம் அவைத் தலைவர் ஒரு தீர்ப்பளித்தால் அந்தத் தீர்ப்புக்கு பணிந்து நடக்க வேண்டுமே தவிர தீர்ப்புக்கு விளக்கம் தெரிவிப்பது முறையல்ல. நீங்கள் ஒரு தீர்ப்பு சொன்னீர்கள். அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னீர்கள். அவர் வருத்தம் தெரிவிக்கிறாரா இல்லையா என்பதை இந்த அவையில் தெரிவிக்கவேண்டுமே தவிர உங்களின் தீர்ப்புக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில் பேசுவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களே இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். உங்களைப்பற்றிச் சொன்னது யார் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; இன்னார் என்று எழுத்து மூலம் தாருங்கள். அதன்மீதும் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். நீங்கள் சொன்னது தெளிவாக இருக்கிறது. ஆனால் இந்தத் தரப்பிலே யார் சொன்னது என்பதை என்னாலும் கண்டுபிடிக்க முடியவில்லை; உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் எழுத்து மூலம் தாருங்கள். அது அல்லாமல் யார் சொன்னார்கள் என்று இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் நான் என்ன செய்வது ?

திரு. க. சுப்பு : நான் சொன்னது குறிப்பில் இருக்கிறது என்று நினைக்கிறேன். நான் குறிப்பேட்டைப் பார்க்கவில்லை. அதைப் பார்த்துத்தான் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் என்னைப்பற்றி அவர்கள் சொன்னது குறிப்பேட்டில் இல்லை. இன்னார்தான் சொன்னது என்று அவர்களை கூட சொல்லலாம், நான் கேட்பது அன்றைக்கு அவர்கள் என்னைப்பற்றிச் சொன்னதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னதற்குப் பதில் சொல்லப் போகிறீர்களா ? அல்லது வேறு விளக்கம் தரப் போகிறீர்களா ?

திரு. க சுப்பு: நான் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. அதே நேரத்தில் என்னைப்பற்றி அவர்கள் சொன்னது இல்லை. யார் சொன்னது என்பது எனக்குத் தெரிய வேண்டும்: அதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். சபாநாயகரைப் பற்றிச் சொன்னதை நான் 'வித்ட்ரா' பண்ணிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்னை இத்தோடு விட்டுவிடப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். அதில் . . . . . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எனக்கு கொஞ்சம் வாய்தா கொடுங்கள். நான் எதைப்பற்றிக் கொடுத்தேன் என்பதே எனக்கு மறந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னையை நாளை எடுத்துக்கொள்கிறேன்.



## (5) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### அ. மாதவரம் 'வீர் கிளாஸ்' நிறுவனம் கதவடைப்பு செய்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'Serious situation arising out of the illegal lock out declared by the Management of VIR Glass Factory at Madhavaram throwing hundreds of workers out of employment from 27-3-1978.'

இது எப்படி பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, வி. ஐ. ஆர். கிளாஸ் பாக்டரி என்பதைவிட 'விர் கிளாஸ் பாக்டரி' என்பதே பொருத்தமாக இருக்கும். வி. ஐ. ஆர். என்றால் அது வேறு எதையோ குறிப்பதுபோல் இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் சுமார் 350 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள். 240 பேர் நிரந்தர ஊழியர்கள், சுமார் 110 பேர் பதிலிகள் என்ற முறையில் இருக்கிறார்கள். 27—3—78 முதல் சட்டவிரோதமாகத் தொழிற்சாலையில் கதவடைப்புச் செய்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுப்பது, அரசாங்கத்திற்கு டிமிக்கி கொடுப்பது, வருமானத்தைக் குறைத்துக் காட்டி வரி ஏய்ப்பு செய்வது போன்ற காரியங்களில் நிர்வாகத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள். 300 பேர்களுக்கு மேல் தொழிலாளர்கள் இருந்தால் அந்த தொழிற்சாலையை குளோசர் செய்ய வேண்டுமென்றால் முன் அனுமதி பெறவேண்டுமென்று விதி இருக்கிறது. அதனால் 300-க்கு மேல் தொழிலாளர்கள் இருந்தும், அவர்களை நிரந்தர ஊழியர், பதிலிகள், காஷுவல் லேபரர்ஸ் என்று பிரித்துக் காட்டியிருக்கிறார்கள். அத்தனை பேரையும் நிரந்தர ஊழியர்கள் என்று காட்டினால்தான் குளோசர் செய்ய முன் அனுமதி பெறவேண்டுமென்ற முறையிலே இப்படிச் செய்திருக்கிறார்கள்.

இந்தத் தகராறு குறித்து தொழிலாளர்கள் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினாலும் நிர்வாகத்தினர் அனுமதிக்கவில்லை. நிர்வாகம் விரும்புகிறவர்கள்தான் பேச்சு வார்த்தைக்கு வரலாம் என்ற ஒரு நிலைமை இன்றைக்கு சென்னை நகரில் இருந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் விரும்பும் தொழிற்சங்கத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டேன், நாங்கள் விரும்புகிறவர்களோடு அதாவது அவர்கள் விரும்பும் தொழிற்சங்கத் தலைவர் வந்தால் அவரோடு பேச்சுவார்தை நடத்துவோம்

என்று சொன்னால் தொழிலமைதி எப்படி இருக்கும் என்பதை பார்க்கவேண்டும். அவர்கள் எண்ணப்படி, தொழிலாளர்கள் ஒன்றும் கேட்கக் கூடாது, அவர்கள் விரும்பாத தொழிற்சங்கத் தலைவராக இருந்தால் அவர் பேச்சுவார்த்தைக்குப் போகக் கூடாது, அரசாங்கம் கையைக் கட்டிக்கொண்டிருக்கலாம்; அவர்கள் விருப்பம்போல் தொழிலை நடத்திக்கொள்வார்கள். அந்த நிலையிலேதான் அவர்களுடைய போக்கு இருக்கிறது. அந்த நிலைமைக்கு அவர்களைப் போகவிடக்கூடாது.

தொழிலாளர்கள் விரும்பும் ஒருவர்தான் தொழிற்சங்கத் தலைவராக வரவேண்டும். இது அரசியல் சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கிற அடிப்படை உரிமை. அதற்கு விதிவிலக்காக அவர்கள் ஒரு குட்டி சாம்ராஜியத்தை நடத்திக்கொண்டிருக் கிறார்கள்.

இங்கே உற்பத்திச் செய்யப்படும் பொருட்களை ஸ்பான்ஸ் கம்பெனிக்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கம்பெனிக்கு இந்த கிளாஸ் பாக்டரிமேல் இன்டரஸ்ட் இருக்கிறது. ஸ்பான்ஸ் கம்பெனியில் சம்பளம் அதிகம். இப்படித் தனியாக ஆரம்பித்தால் சம்பளம் குறைவாகக் கொடுத்தால் போதும் என்ற முறையிலே அவர்களே கூட ஆரம்பித்திருக்கலாம். அப்படியானால் அவர்கள் குறைந்த வருமானத்தைக் காட்டி, அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர் களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய உரிமைகள் கொடுக்கப் படவில்லை. கோரிக்கை வைத்தால் இரண்டு சங்கங்கள் வைக்க வேண்டும்; ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் இருக்கும். நிர்வாகத்தினர் அந்த கோரிக்கையை சுலபமாக மறுக்கலாம். இந்த போக்கைத்தான் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். அதற்குச் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

கம்பெனியை நடத்த அரசாங்கத்திடமிருந்து உதவி பெறு கிறார்கள். அரசாங்கத்தில் சலுகை பெறுகிறார்கள். ஆனால் அரசாங்கம் போடுகின்ற சட்டதிட்டங்களைப் பின்பற்ற மாட்டேன் என்றால் என்ன அர்த்தம்? தொழிலாளர்கள் பாதிக்கப்படும் போது அவர்கள் நலனைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை; தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இங்கே உள்ள தொழிற் சங்கங்களைக் கையிலே போட்டுக் கொண்டு தொழிலாளர் துறை அமைச்சரைத் தங்களது விருப்பம் போல் ஆட்டி வைப்பதற்கு முயலுகிறார்கள் என்பதை அமைச்சர வர்கள் அறிவார்கள். அந்த வலையிலே விழவேண்டாம் என்பது தான் என்னுடைய கருத்து. டி. வி. எஸ். லுகாஸோடு அது



நிற்கட்டும். இப்படிப்பட்ட ஃபேக்டரியிலேயும் அந்த நிலைமை வரவேண்டாம். இப்படிப்பட்ட மூடு விழாக்களை எல்லாம் நடத்து வதற்கு நாம் அனுமதிக்கலாமா? அமைச்சரவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். நிர்வாகம் சொல்லும் சாக்குகளைக் கேட்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அது 350 தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய இடம். தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் இங்கே பணியாற்று கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. சட்டத்தை மீறி குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனை அரசு தொழிலாளர் நல இலாக்கா கண்காணிக்கவில்லை. ஆகவே, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u>: பேரவைத் தலைவரவர்களே, மாதவரத்திலுள்ள வீர் கிளாஸ் ஓர்க்ஸ் நிறு வனம் சுமார் 117 நிரந்தரத் தொழிலாளர்களையும் 137 கேசுவல் தொழிலாளர்களையும் கொண்டது. இது கண்ணாடிப் புட்டிகள் மற்றும் கண்ணாடிச் சாமான்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். தொழிலாளர்கள் வேலைக்கு ஆஜராகாத நாட்களில் அவர்களுக்குப் பதிலாக நிர்வாகம் சில பதிலி தொழிலாளர்களை நியமிக்கும். இதிலுள்ள தொழிலாளர்கள் 'வீர் கிளாஸ் ஓர்க்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன்' மற்றும் 'வீர் கிளாஸ் ஓர்க்ஸ் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியனைச்' சேர்ந்தவர்கள்.

16—3—1978-ம் தேதியிலிருந்து தொழிலாளர்கள் தாமத மாக வேலை செய்யும் முறையைக் கடைப்பிடித்ததாகக் கூறி நாள் ஒன்றுக்கு 40,000 புட்டிகள் உற்பத்தியினின்றும் உடன் பாட்டிற்கு விரோதமாக 300 புட்டிகள் என்ற நிலைக்கு உற்பத்திக் குறைவு ஏற்பட்டதாக காரணம் காட்டி நிர்வாகம் 27-3-1978 ம் தேதியிலிருந்து கதவடைப்பு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இருந்த போதிலும், வேலை இயல்பான நிலையில் இயங்குவதற்கும், ஒழுங்கு, மற்றும் ஒரு நாளைக்கு 5 டன் குறைந்த அளவு உற்பத்திநிலை ஆகியவைகளுக்கும் தொழிற்சங்கங்கள் உறுதி அளிக்கு மானால் நிர்வாகம் கதவடைப்பை நீக்குவதாக வாக்களித் துள்ளது.

இது குறித்து சென்னை தொழிலாளர் துறை உதவி ஆணை யாளர் (சமரசம்) (Conciliation) அவர்கள் 1—4—78 அன்று மேற்கொண்டு இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தைகள் நடத்த இருக்கிறார்.

எனவே இதற்காக அவையை ஒத்தி வைக்கத் தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 6. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை துறைமுகத் தொகுதி வள்ளுவர் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. அ. செல்வராசன் : சென்னைத் துறைமுகத் தொகுதி 12-வது வட்டம், வள்ளுவர் நகரில் 21—3—1978 (காலை இல்லை மாலை) மாலை 4.30 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் குடியிருப்புகள் எரிந்து விட்டது பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10—20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கொடுத்ததில் காலை என்று தான் இருக்கிறது. வேண்டுமானால் மாலை என்று திருத்திக் கொள்ளலாம். இவர்கள் தவறாக இப்படி அடித்து விட்டார்களோ என்று பார்த்தேன். அவர்கள் கொடுத்ததில் காலை என்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 21—3—78 அன்று மாலை 4.30 மணிக்கு சென்னை பிராட்வே வள்ளுவர் நகரில் தீ விபத்து ஏற்பட்டு 25 குடிசைகள் பாதிக்கப்பட்டன. தீயணைப்புப் படையினரும் அந்தப் பகுதி மக்களும் சேர்ந்து தீயை அணைத்தனர். தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. பொருட்சேதம் ரூ. 17,620. இத் தீ விபத்தினால் உயிர் சேதம் மற்றும் கால்நடைச் சேதம் ஏதுமில்லை.

2. முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 80/- வீதமும் பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 40/- வீதமாக மொத்தம் ரூ. 1,280/- மான்யமாக வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் 23—3—78 அன்றே ஒப்புதல் வழங்கி தாசில்தார் அவர்களை பணத்தை பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்.

திரு. அ. செல்வராசன் : இதுவரையில் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த பணம் வந்து சேர்ந்ததாக எனக்கு தகவல் கிடையாது. இந்தக் குடிசைகள் ஏராளமாக இருப்பதால்தான் திராவிட



முன்னேற்றக் கழக அரசு இந்தக் குடிசைகளை மாற்றி மாடி வீடுகள் கட்டுகிற ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தி தந்திருந்தது. இந்தப் பகுதியில் சுமார் 150 குடிசைகள் உள்ளன. நான் குடிசை மாற்று வாரியத்தில் உறுப்பினராக இருந்த போது அந்தக் குடிசைகளை எல்லாம் அதிகாரிகள் பார்வையிட்டு அந்தக் குடிசைகளை மாடி வீடுகளாகக் கட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசினால் வரைபடம் தீட்டப்பட்டு அது அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்த அரசு உடனயாக அருள் கூர்ந்து அந்தக் குடிசைகளை மாற்றி நல்ல மாடிவீடுகளாகக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு அங்கே தீ பற்றி எரிந்தவுடன் சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து ஐந்து வேளை அவர்களுக்கு உணவு அளித்திருக்கிறார்கள், ஐந்து நாட்கள் அல்ல, ஐந்து வேளை. இதை வைத்து எப்படி அவர்கள் வாழ்வார்கள் என்று யோசிக்க வேண்டும். அவர்களுக்கு .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சு இல்லை. உங்களுக்குள்ள சந்தேகங்களை சுருக்கமாக சொல்லி, நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

திரு. ஏ. செல்வராஜ் : ஆகவே உடனடியாக அவர்களுக்கு பணம் கிடைக்கவும் அந்த வீடுகளை அவர்களுக்கு உடனடியாகக் கட்டிக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலாவதாகப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்பதற்கு உத்தரவு பிறப்பித்தாகி விட்டது. அப்படிச் செய்யப்படவில்லையென்றால் அது விரைவில் செய்யப்படும். இரண்டாவதாக, அவர்களுக்கெல்லாம் மாடி வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஏ. செல்வராஜ் : அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்திடம் கேட்டால் இந்தத் தகவல் கிடைத்துவிடும். ஏற்கனவே சேர்க்கப்பட்டு இப்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவலுக்கு நன்றி.

(ஆ) மன்னார்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடிவிட நிர்வாகி அளித்துள்ள நோட்டீசும், அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் இடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து

*திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளியை 1–6-1978 முதல் மூடிவிட நிர்வாகி அளித்துள்ள நோட்டீசின் விளைவாக ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை 1—6—1977 முதல் மூடிவிடுவதாக, அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 29—3—1977 அன்று அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்து விட்டு, முதன்மைக் கல்வி அலுவலரிடம், பள்ளியை 1—6—1977 முதல் மூடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார். தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973, பிரிவு 29, விதி 20-ன் படி பள்ளி நிர்வாகி ஆறு மாதங்களுக்கு முன்னரே பள்ளியை மூடுதல் குறித்து அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கல்வி அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தல் வேண்டும். மேலும் மேற்கூறிய சட்டத்தின்படி, பள்ளியை மூடுவதாய் இருந்தால் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர்தான் மூடுதல் வேண்டும். மேற் சொன்ன பள்ளி நிர்வாகி 1—6—1977 முதல் பள்ளியை மூடுவதாயிருப்பின், அவர் 1—12—1976-லேயே கல்வித்துறைக்கு தெரியப்படுத்தியிருத்தல் வேண்டும். ஆனால், அப்பள்ளி நிர்வாகி பள்ளியை மூடுதல் குறித்து 29—3—1977 அன்றுதான் தெரிவித்துள்ளார். மேலும், இவர் கொடுத்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்துள்ளார், என்பதனையும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இவருக்கு இப்பள்ளியை 1—6—1977 முதல் மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இப்பள்ளி 20—6—1977 அன்று மீண்டும் திறக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால் இப்பள்ளியின் நிர்வாகி பள்ளியை 1—6—1978 முதல் மூட இருப்பதாக 1—6—1977 அன்றே மீண்டும் தஞ்சை மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களை அண்மையில் உள்ள பள்ளிகளில் சேர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளியை 1—6—1978 முதல் மூடுவதற்கான நிர்வாகியின்



அறிவிப்பு முதன்மை கல்வி அலுவலரின் பரிசீலனையில் இருக்கிறது. முறை கேடாக நடத்தப்படும் தனியார் பள்ளிகளை அரசே, தற்காலிகமாக ஏற்று 5 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நடத்தி, பின்னர் தனியார் நிர்வாகத்திற்கு திருப்பி கொடுக்க, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973, பிரிவு 34-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தனியார் பள்ளிகளை அரசே நிரந்தரமாக எடுத்து நிர்வகிக்க விதிகளில் இடமில்லை. இவ்வாறு இப்பள்ளியை 5 ஆண்டுகளுக்கு அரசே எடுத்து நடத்துதல் இயலாது. ஏனெனில் மற்ற தனியார் பள்ளிகளுக்கு இது ஒரு முன் மாதிரியாக ஆகிவிடும். மேலும், இந்நிர்வாகம் பள்ளியை முடிவிடுவதாகவே முடிவெடுத்துள்ளது.

ஆரம்பக் கல்விக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியது, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்களின் கடமையாகும். எனவே, இப்பகுதியில் நகராட்சி பள்ளி ஒன்று திறக்கும்படி மன்னார்குடி சிறப்பு அலுவலரை கேட்கப்பட்டது. நிதி வசதியின்மை காரணமாக அப்பகுதியில் நகராட்சி பள்ளி தொடங்க இயலாதென நகராட்சி சிறப்பு அலுவலர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் புயல் மற்றும் வெள்ளத்தின் காரணமாக இப்பள்ளியின் கட்டிடம், கூரை முதலியன பெரும் சேதமடைந்ததினால் இப்பள்ளி 16—1—1978 முதல் தொடர்ந்து நடைபெறவில்லை. இப்பள்ளியை தொடர்ந்து நடத்துதற்கும், நிர்வாகச் சீர்கேடுகளைத் தீர்க்கக் கோரி மாவட்டக் கல்வி அதிகாரி வெளியிட்ட ஆணைகளை, நிர்வாகம் ஏற்று செயல்படவில்லை. நகராட்சிகளுக்கு அரசால் கல்வி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நிதி வசதியின்மை காரணமாக இப்பள்ளியை நகராட்சி எடுத்தோ, அல்லது புதிதாக அப்பகுதியில் ஆரம்பிக்கவோ, இயலாதென்பது சரியல்ல. எனவே, நகராட்சியே இப்பள்ளியினை எடுத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடர்பாடு இல்லாமல் நடத்தும்படி, நகராட்சி ஆய்வாளருக்கு அறிவுரை வழங்குமாறு, பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையிலே இந்தப் பள்ளியின் நிர்வாகி எவ்வளவு குழப்பங்களை விளைவித்திருக்கிறார் என்பது தெளிவாக இருக்கிறது. புயலால் விழுந்த பள்ளிக்கட்டிடம் இன்னும் கட்டப்படவில்லை. இதிலுள்ள பிள்ளைகள் 750 பேர் தெருக்களிலும் சத்திரங்களிலும் இருந்து படிக்கிறார்கள். இதற்கிடையிலே இதன் நிர்வாகத்தினர் பள்ளியை மூடிவிடுவதாகவும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இந்தப் பள்ளிக்கூடம் இருக்கக்கூடிய

இடத்தை எடுத்து, அல்லது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து எடுக்கவும், விழுந்த பள்ளிக்கட்டிடத்தை கட்டவும், இந்த பள்ளிக்கூடம் தொடர்ந்து நடக்கவும், இதிலுள்ள 25 ஆசிரியர்கள், பயிலுகிற 750 மாணவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பள்ளியின் நிர்வாகியின் நடவடிக்கையின் விளைவாக, விழுந்த பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. இதிலுள்ள மாணவர்கள் சத்திரங்களிலும் பல வீடுகளிலும் சென்று பயிலக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் துரிதமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். அவ்விதம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது ஆரம்ப கல்வியைச் சேர்ந்த பள்ளியாக இருப்பதால் நகராட்சி இதை எடுத்து நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இதில் ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அடுத்து. அரசினர் சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்,

திரு. சி. கோவிந்தராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் இங்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகளை வழங்கினார்கள். அதிலே காம்பன்ஸேஷன் அலவன்ஸ் பற்றியும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை எந்த நேரத்தில் எழுப்புவது என்றிருக்க வேண்டும். ஒரு அமைச்சரை நான் பேச கூப்பிட்டதற்குப் பிறகு இதை எழுப்புவது சரியல்ல. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I Move; "That leave be granted for the introduction of the Tamil Nadu debt Relief Laws (Second amendment) Bill, 1978."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10–30)

(3) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப் படியை திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கப்போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அந்த கூடுதல் படியையும் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து

* திரு. சி. கோவிந்தராசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்னை. நேற்றைய தினம் இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் சிலவற்றை வழங்கினார்கள். அதன்படி, காம்பன்சேடரி அலவன்சு ஏற்கெனவே இருப்பது 200 ரூபாய் என்பது 350 ரூபாயாகவும், டெலிபோனுக்கு 100 ரூபாய் என்பது 150 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. அந்தச் சமயத்திலே நான் எழுந்து கூறினேன். என். ஜி. ஓக்களுக்கு ஊதியக் குழு பரிந்துரை செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். இதைத் தவிர, இங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நோ. பாயிண்ட் ஆப் ஆர்டர். எழுதி அனுப்புங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்; நான் இந்தப் பிரச்னையைச் சொல்லி விடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இதிலே ஒழுங்குப் பிரச்னைக்கே வழி இல்லை.......

*திரு. சி. கோவிந்தராசன்; சட்ட மன்றத்திலே சலுகைகள் அறிவிக்கும்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்கள் இங்கே இருந்தார்கள். ஆனால், வெளியிலே அவர்களுடைய சட்ட மன்றக் குழு கூடி, நாங்கள் இந்த காம்பன்

**உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப்படியை திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கப்போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அந்த கூடுதல் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து**



சேடரி அலவன்சு, ரூ. 150 பெறப் போவதில்லை என்றும், 50 ரூபாய் போன் அலவன்சு மட்டும் பெறப் போவதாகவும் அறிவிக்கப்பட்டு இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வெளிவந்திருக்கிறது. நேற்று அறிவித்த அடிப்படையில், கொடுக்கப்பட்ட சலுகைக்கான உத்தரவு நிறைவேற்றப்படும் என்று நினைக்கிறேன். அப்படியானால், இந்த 150 ரூபாயை அவர்கள் வாங்குவார்களா அல்லது வாங்கப் போவதில்லையா? அப்படி வாங்கப் போவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். நானும் இங்கே ஒன்றை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேற்சொன்ன இந்த 150 ரூபாய் சம்பந்தப்பட்ட வரையிலும் நாங்களும் வாங்குவதில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆர்டர் பாஸ் பண்ணுவதற்கு முன்பாக இந்த அறிவிப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பிரிவு 13 (1)-ல் இதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

''Any person entitled to any salary or allowances under this Act may relinquish a whole or any portion thereof''

ஆகவே இது உங்கள் விருப்பம். இங்கே இந்த அவையிலே அதற்கு ஒழுங்குப் பிரச்னை கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. ஒழுங்குப் பிரச்னை என்று தாங்கள் கூறி, இந்த அவையிலே ஒரு அறிவிப்பைத் தெரிவித்திருக்கிறீர்கள். இந்தத் தகவலை எனக்கு எழுதி அனுப்பியிருக்கலாம். அதை விட்டுவிட்டு, ஒழுங்குப் பிரசனையை எழுப்பியிருக்கிறீர்கள். அது சரியல்ல. சம்பளமோ, படியோ வாங்குவதும் வாங்காததும் உங்கள் பிரியம். அதற்கு இங்கே ஒழுங்குப் பிரச்னை தேவையில்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் கூற விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜன் அவர்கள் தங்கள் கட்சி எடுத்துள்ள முடிவை அறிவித்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் ஒன்று கூடி ஒரு முடிவெடுத்தார்கள் என்று சொன்னார்கள். அதைச் சொல்லிவிட்டு. இந்த 150 ரூபாய் தேவையில்லை என்கிறார்களே, அதை அவர்கள் வாங்கப் போகிறார்களா, இல்லையா என்று கேட்டார்கள். பத்திரிகைச் செய்தியிலேயே இது தெளிவாக வந்திருக்கிறது. இதை அவர்கள் வாங்க மாட்டார்கள் என்பது தெளிவாக வந்திருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## (8) அறிவிப்புகள்

### 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (ஆ) 1978-ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவ*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று நான் முன் மொழிந்திருக்கிறேன். சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றின் குடிநீர் வழங்கும் பணியையும், சாக்கடை நீர் அகற்றும் பணியையும் சென்னை மாநகராட்சியும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றமும் கவனித்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், உலக சுகாதார நிறுவனம், இந்திய அரசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி, சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கு முன்னர் ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அனுமதித்தது.

நிறுவன அமைப்பு நிர்வாகம், நிதி விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான குடிநீர் வழங்கள் கழிவு நீர் அகற்றுவது குறித்த பெருந்திட்டமொன்றைத் தயாரிக்கவும் உலக சுகாதார நிறுவனம் சில தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமித்தது. ஆலோசகர்கள் ஒப்பந்தத்தின்படி இடைக்கால அறிக்கையுடன் பெருந் திட்டமொன்றையும் ஆலோசகர்கள் அனுப்பினர். இடைக்கால அறிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்தது. உலக சுகாதார நிறுவனம் பரிவுரை

* 14—6—1978 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

செய்துள்ளவாறு, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்று முறைகள் குறித்து மட்டும் கவனிப்பதற்காகவென்றே தனி அதிகார மன்றம் ஒன்றை ஏற்படுத்தக் கருதியது.

சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு அதிகார வரம்புடைய இந்த அதிகார மன்றம், சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம், ஏனைய உள்ளூர் அதிகார மன்றங்கள் ஆகியவற்றினின்று வேறுபட்ட. ஒன்றாகவும் தனித்தியங்கக் கூடியதாகவும் இருக்கும். மேலும் இந்த அதிகார மன்றம், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றும் பணிகளைச் செயற்படுத்துவதில் தனி உரிமை பெற்றிருப்பதுடன் தன்னாட்சி உரிமை பெற்றதாகவும் நிதி விவகாரங்களில் தனித்துச் செயல்படுவதாகவும் இருக்கும்.

வரும் ஆண்டுகளில் இத்துறையில் பெருந்திட்டமொன்றைச் செயல் படுத்துவதற்கு மூலதனம், நிர்வாகம் ஆகிய இருவகையிலும் தனித்தியங்கும் முறையில் கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்தவல்ல ஒரே அமைப்பு இருப்பதன் அவசியம் வலியுறுத்தப் பட்டது. அரசு, மேற்படி பரிவுரையை ஆய்வு செய்து, சென்னை பெருநகர்ப் பகுதி முழுவதிலும் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றுப் பணி குறித்து கவனிப்பதற்கு தனி அதிகார மன்றம் ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தையும் இத்துறைக்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றை நன்னிலையில் உருவாக்குவதற்கான அவசியத்தையும் ஒப்புக்கொண்டது. அதற்கிணங்க சட்டப்படிக்கான அதிகார மன்றம் அமைக்கப்படும் வரையில், இப்பகுதில் இத் திட்டம் சரிவரச் செயல்படுத்துவதற்கு அவசியமான நிர்வாக, நிதி அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தற்போதுள்ள அமைப்பிடமிருந்து புதிதாக அமைக்கப்படும் அமைப்புக்கு அலுவல்களை எளிதாக மாற்றுவதற்கான திட்டமொன்றை வகுக்கவும் சென்னை பெருநகர்ப் பகுதி குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் என்றழைக்கப்படும் தனி அதிகார மன்றம் ஒன்றை அரசு அமைத்தது. இதில் தனி அதிகாரி ஒருவர், பொறியியல் இயக்குநர் ஒருவர், நிதி இயக்குநர் ஒருவர் ஆகியோர் இருப்பர். உலக வங்கி நிதியுதவி வழங்கும் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கால அட்டவணைக்கிணங்க, சட்டப்படிக்கான அதிகார மன்றம் 1978, ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும். இம்மசோதாவை மேற்சொன்ன முடிவுகளைச் செயற்படுத்த முற்படுகிறது. இம்மசோதா ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.



THIRU S. J. SADIQ PASHA: Sir, I move the following amendment:

"That the Madras Metropolitan Water Supply and Sewerage Bill, 1978 (L. A. Bill No. 11 of 1978) be referred to a Select Committee".

The amendment was duly seconded.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஏராளமான மசோதாக்கள் இருக்கின்றன. இதிலே கட்சிக்கு ஒருவர் வீதம் பேசினால் மற்ற மசோதாக்களைப் பரிசீலிக்க வாய்ப்பாக இருக்கும். தலைவர்களை நான் கேட்கிறேன். (குறுக்கீடு) தலைவர்களை மட்டுமல்ல, எங்களையும் கேளுங்கள் என்றால் எனக்கு மறுப்பு இல்லை. தலைவர்களைக் கலந்து பேசுவதுதான் வழக்கம். அதனால் உங்களுக்குள்ள உரிமையைப் பறித்து விடவில்லை.

<u>திரு. க. சுப்பு;</u> டிமாண்ட் பற்றிய விவகாரம் வேறு, மசோதாக்களில் உறுப்பினர்கள் பேச விரும்பினால் அனுமதிக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்;</u> உங்களுக்கு உரிமையைப் பறிக்கவில்லை. தலைவர் அவர்களைக் கேட்பது மரபு. கனம் உறுப்பினர் சுப்பு அவர்களையும் ஒவ்வொன்றுக்கும் கேட்க வேண்டுமென்றால் நிச்சயமாகக் கேட்கிறேன். கவலைப்பட வேண்டாம். மசோதாவின் பேரில் கட்சிக்கு ஒருவர் பேசினால் மற்ற மசோதாக்களுக்குச் செல்ல முடியும்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து:</u> சில முக்கியமான மசோதாக்கள் இருக்கின்றன. அதிலே சில உறுப்பினர்கள் அல்லது அதிகமான பேர்கள் பேச வேண்டிய நிலைமை இருக்கும். எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரி செய்வது கூடாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மற்ற மசோதாக்களின் பேரில் பேசாமலே நிறைவேற்றி விடலாம் என்றால் தாராளமாக எல்லோரும் பேசலாம். ஒவ்வொரு கட்சிக்கும் மூன்று நான்கு பேர் கூடப் பேசலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லா மசோதாக்களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

<u>*திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, இது சென்னை மாநகராட்சியை ஒட்டியிருக்கும் நிலையில் முக்கியமான மசோதாவாக இருக்கிறது. மாநகராட்சி பற்றியெல்லாம் இங்கிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்க வேண்டுமென்று

விரும்புவார்கள். ஒருவர்தான் ஒரு கட்சிக்கு என்று சொன்னால் எங்கள் கட்சிக்கு திரு. அரங்கநாதன் ஒருவரோடு முடிந்துவிடும். எனவே, காலத்தையும் நேரத்தையும் ஒட்டி கட்சிகள் ஒத்துழைக்கத் தயார். ஆட்களை நிர்ணயிப்பதை விட நேரத்தை நிர்ணயித்து விடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து இதிலே விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. அரங்கநாதன் அவர்கள் பத்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

*திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் முதலிலேயே குறிப்பிடுகிறபொழுது சென்னை மாநகரத்தின் மிக முக்கியமான பிரச்னை என்று குறிப்பிட்டார்கள். அதனால் சென்னை மாநகராட்சியில் உறுப்பினர்களாக இருந்த என்போன்றவர்களுக்குக் கூடுதலாக இந்த பில் மீது பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று முதலிலேயே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களாலே கொண்டுவரப்பட்ட சென்னை மாநகராட்சி பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் 11/78 எண்ணுள்ள மசோதாவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியினுடைய கழிவு நீரை அகற்றுவதற்காகவும் குடிநீர் வழங்குவதற்கும் சென்னை மாநகராட்சியினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இதுகாறும் செயல்பட்டு வந்த இந்த பிரிவை தனியாக மாநகராட்சியிலேயிருந்து பிரித்து ஒரு வாரியமாக அமைப்பதை நான் முதலிலேயே வன்மையாகக் கண்டிக்கிறேன், எதிர்க்கின்றேன் என்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குக் காரணம் என்னவென்றால், இன்றைக்கு இந்திய உபகண்டத்திலே இருக்கின்ற ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கு சுயாட்சி தேவை, மாநிலத்தில் உள்ள மக்களுடைய முக்கியமான முழுத் தேவையைப் பூர்த்தி செய்ய அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்றும், மத்திய அரசிடம் இருக்கின்ற அதிகாரத்தை, மக்களுடைய நன்மைகளைக் கருதி விரிவுபடுத்த வேண்டுமென்றும் சுயாட்சி கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் மாநகராட்சிக்கு இருக்கின்ற சுயாட்சித் தன்மையைக்கூட பறிப்பது என்பது உண்மையிலேயே விரும்பத் தக்கது அல்ல, கண்டிக்கத் தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள்





வழியில் வருகிறோம், அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றுகின்ற ஆட்சி என்று சொல்கின்ற இன்றைய ஆட்சியாளர்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் இன்றைக்குச் சென்னை மாநகரத்தின் மக்களின் முழுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு என்ற அடிப்படையில் மாநகராட்சியில் இருக்கின்ற வடிகால் பிரிவையும், குடிநீர் பிரிவையும் தனியாகப் பிரிக்கத் திட்டமிட்ட நேரத்தில், சென்னை மாநகரத்தினுடைய மக்களை தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றம் இருக்கின்ற நேரத்தில் அவ்வாறு சொல்லப்பட்டதா என்றால் இல்லை. அல்லது தமிழக சட்ட மன்ற பிரதிநிதிகள் இருக்கின்ற நேரத்திலே சென்னை மாநகராட்சியின் கோரிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சொல்லப்பட்டதா? அல்லது அந்த மாநகராட்சி மன்றம் வேலைப்பளு இருக்கிறது என்றோ அல்லது பொருளாதார வசதி இல்லை என்றோ சொல்லி எங்களுக்கு அது இயலாத நிலை இருக்கிறது என்று சொல்லி தனி வாரியமாக வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்ததா? அல்லது தமிழக சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற நேரத்தில் சென்னை மாநகர நிதிநிலை போதாக் குறையாக இருக்கிறது, உலக வங்கியிலிருந்து நிதி பெற்று இதை செயல்படுத்த வேண்டுமென்ற வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட வாரியமா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை.

அப்படி இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், அந்த மாநகராட்சியிலே இருக்கின்ற திறமை படைத்த அதிகாரிகளாலே, மிகத் திறம்படைத்த அதிகாரிகளாலே சென்னை நகரத்திலேயிருக்கின்ற பல்வேறு அபிவிருத்திப் பிரச்னைகள் முன் வைக்கப்பட்டு இதை முழுமையாக ஆக்கவேண்டுமென்று சொல்லி அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்வடிவத்திற்கு வந்திருக்கிறதா என்று கேட்டாலும் இல்லை, தமிழ்நாட்டிலே மட்டுமல்லாமல் இந்திய உபகண்டத்திலே நடந்த ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ், சர்வாதிகாரப் பிடிப்பின்கீழ், அவசர கால நிலை இருந்த பொழுது மத்திய அரசாலே நியமிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட அதிகாரியால், அந்த அதிகாரியின் தன்மைக்கேற்ப இந்த மாநகராட்சியினுடைய அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரிலே உலக வங்கியிலேயிருந்து கடன் பெற்று, அப்படிப் பெறுகின்ற கடனைக்கூட முழுமையாகப் பெறுகிறார்களா என்று கேட்டால் இல்லை, இந்தத் திட்டத்திற்காக, இந்த வாரியத்திற்காக முழுத் தேவை எவ்வளவு தொகை என்று இந்த அறிவிப்பிலே இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. என்றாலும்கூட அந்த முழுத் தேவை எவ்வளவோ அதைக் கணக்கிட்டு, அந்த முழுத் தேவையில் 45 சதவீதத்தைத்தான் உலக வங்கி தருகிறேன் என்று சொல்கிற நேரத்தில், நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்கிறேன். அந்த 45 சதவீதத்தை அரசு மூலம் மானியமாகக் கொடுத்து நாராட்சியே இந்தத் திட்டத்தை செயல்படுத்தக்கூடாதா

[திரு. மு. அரங்கநாதன்] [1978 மார்ச் 31

என்று கேட்டால் அதுவும் இல்லை. அந்த 45 சதவீதத்தை, மொத்த முதலீட்டில் 45 சதவீதம் கடனாகக் கொடுக்கிறார்கள், அவர்கள் கடனாகக் கொடுக்கின்ற நேரத்தில் அந்த உலக வங்கி எந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும் அதனை 'கமர்ஷியல் பேசிஸ்' என்கிற அடிப்படையில் அவர்கள், அதிலே வியாபார நோக்கத்தோடுதான் 45 சதவீதம் கடனைக் கொடுக்கிறார்களே தவிர, சென்னை நகர மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற நோக்கத்தில் பெருந்தன்மையோடு நல்லெண்ணத்தில் கொடுக்கவில்லை யென்று திட்டவட்டமாக, வரையறுத்துத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதுகாறும் சென்னை மாநகராட்சியின் மூலமாக ஏழை-நடுத்தர மக்களுடைய தேவைக்காகக் கொடுக்கப்பட்ட வடிகால்-குடிநீர்த் துறை மூலம் பல்வேறு சலுகைகள் மாநகராட்சியின் மொத்த வரி விதிப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பல்வேறு சலுகைகள் இந்த வாரியத்தில் எடுக்கப்பட்டு விடும் என்ற வகையில் இந்த வாரியத்தாலே ஏழை மக்களுக்குப் பயன் இல்லை. கடந்த நான்காண்டுகளாக சென்னை நகரமக்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே, சென்னை மாநகராட்சியின் வரி விதிப்பில் ரூ. 100/— வரி வசூலிக்கப்பட்டு வந்தது. ஒரு வீட்டுக்கு 1973 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதே நிலை இருந்தது. அவசர காலத்தின் பொழுது ரென்டல் பேசிஸ் என்கின்ற வீட்டு வருமான அடிப்படையை மாற்றி, ஸ்கொயர் ஃபீட் என்கின்ற அடிப்படையில் வரி விதிப்பு முறை கையாளப்படுகிற காரணத்தால் ரூ. 100/— கட்டிக்கொண்டிருந்தவர்கள் நேற்றைய முன்தினத்திலே வரி விதிப்பு நோட்டீஸ் பெற்றிருக்கிறார்கள், ரூ. 400/— ரூ. 500/—க்கு உயர்த்தப்பட்டு நோட்டீஸ் வந்திருக்கிறது. இது ஒரு பெரும் சுமை. இந்த சுமையைத் தவிர்த்து, இப்பொழுது வாரியம் கொண்டு வரப் போவதாலே இந்த மாநகராட்சியினுடைய மொத்த வருவாய் 1973-74 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 43,97,13,700-வருவாயில் இந்த வடிகால் குடிநீர் அளிப்பதற்காக, மொத்த வருவாயில் 3 அல்லது $3\frac{1}{2}$ சதவீதம், அதாவது, ஏறத்தாழ ரூ. 3,98,57,000 இப்பொழுது வசூலிக்கப்படுகிற மொத்த வரியிலே சேர்த்து வசூலிக்கப்படுகிறது. இப்பொழுது அந்த வாரியம் தனியாகப் பிரிக்கப்படுகின்ற நேரத்தில், அந்த வரி விதிப்பை மொத்த வரி விதிப்பிலே இருந்து பிரித்து, வாரியத்திற்குக் கொடுக்கப்படுகிற நிலை உருவாகிறது.

அதுமட்டுமல்லாமல், ஏறத்தாழ சென்னை நகரத்தில் இப்பொழுது இருக்கிற ஜனத்தொகையின் அடிப்படையில், வீட்டு உரிமையாளர் கணக்கு அடிப்படையில் 1 லட்சத்திற்கு சில்லறை வீடுகளுக்கு குடிநீர் கொடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ லட்சம்



1978 மார்ச் 31] [திரு. மு. அரங்கநாதன்]

என்று வைத்துக்கொண்டாலும் அதில் 11,000 அல்லது 12,000 வீடுகளுக்கு மீட்டர் பொறுத்தப்பட்டிருக்கிறது. தனி மீட்டர்கள் பொறுத்தப்படுவதன் நோக்கமே சம்ப் கட்டி, மாநகராட்சி கொடுக்கும் இலவசத் தண்ணீருக்கு மேல் அதிகப்படியாகத் தண்ணீர் எடுக்கிற வசதிப் படைத்த பங்களாக்களுக்கு மீட்டர் பொறுத்தப் பட்டு தண்ணீர் எடுக்கின்ற அளவிற்குத் தக்க குடிநீர் வரி வசூலிக்கப்படுகிறது.

(மணியடிக்கப்பட்டது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இரண்டு நிமிடம்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> முக்கியமான பிரச்னை..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து அவைத் தலைவரோடு வாதம் வைத்துக் கொள்ள வேண்டாம். 2 நிமிடத்திலே முடித்துக்கொள்ளுங்கள். (திரு. மு. செல்வராஜ் : 5 நிமிடம் கொடுங்கள்). தயவு செய்து செல்வராஜ் அவர்கள் சொன்னால் நல்லதம்பி நேரத்தைக் கொடுக்கிறேன். அவர் நேரத்தை வேண்டுமானால் குறைத்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் நேரத்தை குறைத்துக்கொள்ள வேண்டும், பேசுகின்ற உறுப்பினர்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> நான் பேச்சு அலங்காரத்திற்காகப் பேசிவிட்டுச் செல்லவில்லை; தயவுசெய்து ரொம்ப வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த வாரியம் அமைப்பதனால் சென்னை நகரமக்கள் பாதிக்கப்படவிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவுசெய்து எல்லோருமே பிரச்னைகளைத்தான் பேசுகிறார்கள். திரு. அரங்கநாதன் தாங்கள் முயற்சிக்காதீர்கள், அலங்கார வார்த்தைகளுக்கு; பிரச்சினைக்கு வாருங்கள்.

<u>திரு. மு. அரங்கநாதன்:</u> பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் மாநகர உறுப்பினர் என்ற காரணத்தினால் இதிலே இருக்கிற நுட்பங்கள் எனக்கு அதிகமாகத் தெரிந்ததன் காரணமாக, மாநகர மக்களுக்கு இதனாலே இடர்ப்பாடுகள் இருக்கிற காரணத்தாலே, அதைத் தெளிவாகப் பேச மேலும் 5 நிமிடங்கள் அவகாசம் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இந்த நிலையில் இன்றைக்கு வரி விதிப்பைப் பார்க்கின்ற நேரத்தில், நான் ஏற்கனவே கொடுத்த கணக்கின் அடிப்படையில் மீட்டர்கள் பொறுத்தப்படுகிறது. இந்த வாரியம் அமைக்கப்படுவதாலே, 'வியாபார அடிப்படையில், ஏறத்தாழ சென்னை நகரத்தில் இருக்கிற அத்தனை வீடுகளும் மீட்டர்கள் பொறுத்தியே ஆகவேண்டுமென்ற நிலைக்கு ஆளாக்கப்படுகின்றன.

[திரு. மு. அரங்கநாதன்] [1978 மார்ச் 31

(முற்பகல் 10-50)

இதனால் நடுத்தர மக்கள், ஏழை மக்கள், குடிசைவாழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் வரிச்சுமை அதிகமாகும் என்ற காரணத்தால் அவர்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அது மட்டுமல்ல. இவர்கள் இதைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கிறார்களே, இந்த அறிக்கையிலே பக்கம் 6-லே, கொடுக்கப்பட்டிருக்கிறது. விவர அட்டவணை என்ற அடிப்படையில் ''சென்னை பெருநகர்ப் பகுதியின் வளர்ந்து வரும் தேவையைக் கவனிப்பதற்காகவென்றேயும், அவற்றின் திட்டமிட்ட வளர்ச்சிக்காகவும், அவற்றை உரியவாறு முறைப்படுத்தவும் குறிப்பாக பொதுசுகாதாரத்தைப் பாதுகாக்கவும் அதனுடன் தொடர்பான அல்லது இடைநிகழ்வான பொருள்கள் அனைத்திற்குமாகவும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்துவதற்கு வகை செய்யும் ஒரு மசோதா''. அனைத்திற்கும் என்று இங்கே குறிப்பிட்டு விட்டு 7 ஆம் பக்கத்தில் கொடுக்கிறார்கள். ''ஆனால் சாலைமீதுள்ள மழை நீரை வழிய செய்வதற்கென்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள மழை நீர் வடிகால் அல்லது சாலை ஓரத்தில் அமைக்கப்பட்டு பக்கத்திலுள்ள ஒரு வடிகாலுக்கு மழை நீரை கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட வடிகால் அதில் அடங்காது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். அனைத்திற்கும் என்று ஒரு பக்கத்திலே கொடுத்துவிட்டு மறுபக்கத்திலே மழை நீர்வடிகாலை மாநகராட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். இது எப்படிப் பொருந்தும்?

அண்மையில் சென்னையிலே பெருமழை பெய்தது. அப்படிப்பட்ட நேரத்தில் வீடுகளில் அடைப்பு ஏற்படுகிறது. சாலைகளில் தண்ணீர் குளம்போல தேங்கிவிடுகிறது. அந்த நேரத்தில் பொது மக்கள் நன்மையைக் கருத்தில் கொண்டு அந்த விதிகளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால் உடனடி பரிகாரம் காண முடியாது. எனவே, மாநகராட்சி அதிகாரிகள் அல்லது உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எந்தெந்த வட்டத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கே உள்ள வடிகாலில் ஒரு குத்து குத்தி தண்ணீரை உடனடியாக வெளியேற்ற வழி செய்கிறார்கள்.

ஆனால் இந்த வாரியம் அமைத்தால் இப்படி செய்கின்ற உரிமை அந்த மாநகராட்சிக்குக் கொடுக்கப்படுமா? இன்றைக்கு சென்னை நகரம் முழுவதிலும் இருக்கிற குடிசைப் பகுதிகளில் 95 சதவிகிதம் இந்த நிலையில்தான் இருக்கின்றன. இதனை எப்படி தடுக்கப் போகிறீர்கள்? இதனைத் தடுத்தால் குடிசைவாழ் மக்களின் கதி என்ன? குடிசை வாழ் பகுதிகளில் இந்த மழைநீர் வடிகாலை நம்பித்தான் கழிவுநீர் அகற்றச் செய்துக் கொண்டிருக்கிறார்கள்.



1978 மார்ச் 31] [திரு. மு. அரங்கநாதன்]

எனவே, இதை மாற்றியமைக்க வாரியத்தின் திட்டம் அமைந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதால்தான் இந்தத் திட்டம் ஒரு வியாபார நோக்கத்தின் அடிப்படையில் இருக்கிறது என்றும் மக்களின் தேவையைப் பார்த்து செய்யப்படவில்லை என்றும், மேலும் இன்றையதினம் சென்னையில் ஒவ்வொரு குடிமகனுக்கும் 25 காலனிலிருந்து 30 காலன் வரை தண்ணீர் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

ஆனால் இந்த வாரியம் அமைக்கப்பட்டால் இந்த இலவசத் தண்ணீர் நிச்சயமாக அகற்றப்படும். அப்படி அகற்றப்பட்டபின் (மணியடிக்கப்பட்டது) ஒவ்வொரு வீட்டிற்கும் மீட்டர் பொருத்தப்பட்டு குடிநீர் வரி என்ற வகையில் பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்பதே இந்த வாரியத்தின் நோக்கம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் (மணியடிக்கப்பட்டது).

சில விவரங்களைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்: 19 ஆம் பக்கத்தில் 16-வது செக்ஷனிலே வாரியத்தினுடைய இயக்குநர் பதவிக்காக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் இன்றைக்கு ஏறத்தாழ 2,000-லிருந்து 2,500ரூபாய் என்ற அளவுக்கு ஒரு அதிகாரிக்குச் சம்பளம் வழங்குகின்ற அதிகாரத்தை அந்த வாரியமே நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது உண்மையிலேயே சென்னை மாநிலத்திலே உள்ள மாநகராட்சிக்கோ அல்லது அரசுக்குக் கூட இல்லாத உரிமை என்று நான் கருதுகிறேன். இவ்வளவு பெரிய அதிகாரத்தை இந்த வாரியத்திற்கு வழங்க வேண்டிய அவசியம் என்ன என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாநில அரசுக்கே இல்லாத அதிகாரம் ஒரு வாரியத்திற்கு வழங்கும் கருத்து இதிலே வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முடித்துக் கொள்ளுங்கள். 15 நிமிடம் பேசிவிட்டீர்கள். எல்லாக் கட்சிகளுக்கும் உள்ள உரிமைகளை நான் பாதுகாக்க வேண்டும். நீங்கள் இன்னும் 5 நிமிடம் பேசினால், திரு. நல்லதம்பிக்கு நேரம் கிடைப்பது சந்தேகம்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> சீக்கிரம் முடித்து விடுகிறேன். பக்கம் 40-ல் செக்ஷன் 39-ல் வாரியத்திற்கு தணிக்கையாளர் நியமிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது கவர்ன்மென்ட் ஆப் இந்தியா ஆடிட் அண்டு அக்கௌன்ட்ஸ் மான்யுவல், என்ற அந்தச் சட்டம் இருக்கிறதே அந்தச் சட்டத்தின் விதிக்கு

மாறானதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். பக்கம் 40, செக்ஷன் 39-ல் தணிக்கையாளர் பதவியைப் பற்றிப் போட்டு இருக்கிறது. கவர்ன்மென்ட் ஆப் இந்தியா ஆடிட் அண்டு அகௌன்ட்ஸ் மான்யுவலுக்கு அந்தச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறானதாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, பக்கம் 37, செக்ஷன் 34-ஐ படிக்கிற போது, இந்த வாரியத்திற்கு வருவாய் பற்றிக் குறிப்பிடுகிற போது கழிவுநீர் என்கிறபோது 10% என்றும், தண்ணீருக்கு 20% என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த பர்சன்டேஜ் இப்போது செலுத்தப்படுகின்ற வரியை விட கூடுதலாக இருப்பதாலும் அதை நிச்சயமாக அகற்ற வேண்டும். அந்தத் தலைப்பிலே, நான் முன்னாலேயே சொன்னேன், ஏறத்தாழ 11,000 மீட்டர் பொருத்தப்பட்டு குடிநீர் வரி வசூலிக்கப்படுகிறது. சம்ப் கட்டி தண்ணீர் எடுத்துக்கொண்டு பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாக இப்போது வழங்கப்படுவதற்கு மேல் எடுக்கும் தண்ணீருக்குத்தான் வரிவிதிப்பு இருக்க வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. மாநகராட்சியில் தற்போது இருக்கும் நடைமுறையை அப்படியே அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, எந்த நிலைக்கு நாம் இப்போது போகிறோம். ஏற்கனவே இந்த சென்னை நகரத்தின் அபிவிருத்திக்காக் மாஸ்டர் பிளான் என்ற வகையில் ஒரு திட்டத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். உலக வங்கியிடமிருந்து இந்தக் கடனைப் பெற்றுச் செய்வதை உங்களுடைய நல்லெண்ணத்தின் பேரில் செய்கிறீர்கள் என்று நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் ஏற்கனவே திரு. கிருஷ்ணமூர்த்தி மேயராக இருந்த நேரத்தில் ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப் பட்டு இந்த அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மாநில அரசு ஏற்று நடைமுறைப்படுத்தியிருக்குமானால் ஒரு மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டு இருக்கும்.

ஆனால் இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தின் மூலமாக மாநகராட்சியின் பணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு, இரண்டு மாநகராட்சிகள்போல் அவை இயங்கும் தன்மையில் வந்து விடும். இதனால் பலவிதமான இடையூறுகள் ஏற்பட இருக்கிறது என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் கருத்தில்கொண்டு இன்றிருக்கும் நிலையில் இருப்பதை பிரிக்கக் கூடாது. இருப்பதைப் பிரித்து



வாரியத்திற்கு ஒப்படைத்தால் அந்த வடிகால்-குடிநீர் பிரிவில் இருக்கும் 30 கோடி ரூபாய் சொத்துக்கள் இருக்கிறதே அதை வாரியத்திற்கு ஒப்படைப்பதால், மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்தச் சொத்து மாற்றத்தால் மாநகராட்சிக்கு என்ன நன்மை என்று தெரியவில்லை. ஆகவே, இந்த நிலை தேவையற்ற ஒன்று. மக்களின் நலனைக் கருதி சென்னை வாழ் மக்களின் நன்மையைக் கருதி, இந்த வாரியம் தேவை அற்ற ஒன்று என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்தக் கருத்துக்கு மாறாக இதை ஆட்சியாளர்கள் நிறைவேற்றித்தான் தீரவேண்டும் என்றால், ஒரு யோசனை. கேபிடல் ஒர்க்ஸ் அனைத்தையும் அவர்கள் வைத்துக்கொண்டு, மெயின்டனன்ஸ் மற்றவற்றை மாநகராட்சியிடம் விட்டு விடலாம். மூலதனச் செலவுகள் அந்த வாரியத்தால் மேற்கொள்ளப்படும். மற்றவற்றை மாநகராட்சியின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப் படும். மாநகராட்சிக்கோ அல்லது மாநில அரசுக்கோ உள்ள பொதுவான ஊதியத்திற்கு மேற்பட்டு இந்த வாரியத்தில் இருப்பவர்களுக்கு ஊதியம் வைத்தால் மாநகராட்சி ஊழியர்களும், அரசு ஊழியர்களும் வாரியத்திற்குச் செல்ல வேண்டும் என்று விரும்புவார்களே தவிர, அதிகமான அளவிற்கு இங்கே வேலை செய்யவேண்டும் என்ற ஆர்வத்தில் கவனம் செலுத்தமாட்டார்கள் என்று சொல்லி, இந்த மசோதாவை வன்மையாகக் கண்டித்து, எதிர்த்து, இதை மாநகராட்சியின்கீழ் இயங்கச் செய்ய வழிவகை செய்யவேண்டும் என்று கூறி இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது. முடித்துவிடுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

இதிலே கொடுக்கப்பட்டிருப்பது 1978 ஏப்ரல் முதல் செயலுக்கு வரும் என்று. நான் குறிப்பிட்ட பல காரணங்களினாலே 1979 ஏப்ரல் வரை என்று வைத்து, இதைக் குழுவிற்கு விட்டு, இது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது 82-வது விதியின்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

## (9) அமைச்சரின் அறிக்கை.

### தென்னாற்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில சாலைகளை செப்பனிடும்பணி பற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த மன்றத்தில் நேற்றைய தினம் நிதி ஒதுக்க மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது, தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில சாலைகளைச் செப்பனிடும் பணி ஒப்படைக்கப்பட்டது குறித்து சில குற்றச்சாட்டுகளைக் கூறினார். அவர் பேசியதிலிருந்து, கீழ்க்கண்ட சாலைகள் அவரால் குறிப்பிடப்படுகிறது என்று தெரிகிறது.

1. அழகப்ப சமுத்திரத்திலிருந்து குள்ளஞ்சாவடி—காட்டு கூடலூர் வரையுள்ள சாலை.

2. சென்னை-கே. டி. ரோடிலிருந்து அழகப்பசமுத்திரம் வரையுள்ள சாலை.

3. சாத்திபட்டிலிருந்து முத்தரசங்குப்பம் வழியாக புதுப் பாளையம் வரையுள்ள சாலை.

மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சாலையைப் பொறுத்த வரையிலும், சாலைகளின் பணிகள் பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும், எல்லாப் பணிகளுமே ஒரே ஒப்பந்தக்காரருக்கு கொடுக்கப்பட்டிருப்பதன் மூலம் பணிகள் விரைவாக நடைபெற வேண்டுமென்ற வகையில் சாலைகள் பிரிக்கப்பட்டு செப்பனிடப்பட வேண்டுமென்ற நோக்கமே ஈடேறாமல் போய்விட்டது என்பதுதான் எதிர்க்கட்சித் தலைவர் சாட்டிய குற்றச்சாட்டின் சாராம்சம் ஆகும். இந்தக் குறிப்பிட்ட மூன்று சாலைப் பணிகளும் எந்த எந்த ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்ற பெயர் விவரங்களையும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். அவை பின்வருமாறு :—

1. வி. பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர்.
2. பூவராகமூர்த்தி, விஸ்வநாதன்.
3. வேணு.

இது குறித்து நான் விசாரித்தேன். மேற்குறிப்பிடப்பெற்ற ஒவ்வொரு சாலையைப் பொறுத்தவரையிலும், பிரிக்கப்பட்ட பல பணிகளும் ஒரே நபருக்குக் கொடுக்கப்படவில்லை. கீழ்க்கண்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.





### 1. குள்ளஞ்சாவடி-காட்டுகூடலூரிலிருந்து அழகப்ப சமுத்திரம் வரையுள்ள சாலை.

| பணியின் பிரிவு. | மதிப்பீட்டுத் தொகை. | ஒப்பந்தக்காரரின் பெயர். |
|---|---|---|
| 0/0 முதல் 1/0 வரை | ரூ. 36,000 .. | எஸ். டி. ராஜவேல், நடுக்குப்பம்<br>என். கலியபெருமாள், மாணடிக்குப்பம். |
| 1/0 முதல் 2/0 வரை | ரூ. 36,500 .. | கே. உக்கரவேல், சிறுதொண்டமாதேவி.<br>எம். அய்யாக்கண்ணு, சிறுதொண்டமாதேவி. |
| 2/0 முதல் 3/0 வரை | ரூ. 35,500 .. | கே. திருநாவுக்கரசு, சிறுதொண்டமாதேவி.<br>வி. தணிகாசலம், சிறுதொண்டமாதேவி, |
| 3/0 முதல் 4/0 வரை | ரூ. 35,000 .. | பி. காந்தி, அழகப்பசமுத்திரம்.<br>பக்கிரி, அழகப்பசமுத்திரம். |

### 2. சென்னை கே. டி. சாலை முதல் அழகப்பசமுத்திரம் வரையுள்ள சாலை.

| பணியின் பிரிவு. | மதிப்பீட்டுத் தொகை. | ஒப்பந்தக்காரரின் பெயர். |
|---|---|---|
| 0/0 முதல் 1/0 வரை | ரூ. 24,000 .. | எஸ். கனகசபை, கீழ்க்குப்பம்.<br>பி. பழனி, கீழ்க்குப்பம். |
| 1/0 முதல் 2/0 வரை | ரூ. 24,000 .. | டி. பூவராகமூர்த்தி, காடாம்புலியூர்.<br>பி. ஜி. விஸ்வநாதன், காடாம்புலியூர். |
| 2/0 முதல் 3/0 வரை | ரூ. 29,000 .. | கே. தனபதி, காட்டுப்பாளையம்.<br>ஆர். பரசுராமன், பாவகுளம். |
| 3/0 முதல் 4/0 வரை | ரூ. 33,500 .. | ஆர். மெய்யழகன், குறிஞ்சிப்பாடி.<br>என். ஆர். விஜயராகவன், குறிஞ்சிப்பாடி. |

3. சாத்திப்பட்டு முதல் முத்தரசங்குப்பம் வழியாக புதுப்பாளையம் வரையுள்ள சாலை.

| | | | |
|---|---|---|---|
| 0/0 முதல் 1/0 வரை | ரூ. 40,000 | .. | இ. பாலசுப்பிரமணியம், சாத்திப்பட்டு. |
| | | | பி. ஜெயகிருஷ்ணன், சாத்திப்பட்டு. |
| 1/0 முதல் 2/0 வரை | ரூ. 38,500 | .. | கே. ராமகிருஷ்ணன், சாத்திப்பட்டு. |
| | | | சி, ராஜவேலு, சாத்திப்பட்டு. |
| 2/0 முதல் 2/8 வரை | ரூ. 21,500 | .. | எஸ். ஜெயபாலன், முத்தரசன் குப்பம். |
| 2/8 முதல் 4/0 வரை | | | வேலை இல்லை. |
| 4/0 முதல் | ரூ. 37,500 | .. | எஸ். கனகசபை, கீழக்குப்பம். |
| 5/0 வரை | | | வி. பழனி, கீழக்குப்பம். |
| 5/0 முதல் 6/0 வரை | ரூ. 39,000 | .. | கே. நாராயணசாமி, காட்டாண்டிக்குப்பம். |
| | | | என். கலியபெருமாள், மாண்டிக் குப்பம், |
| 6/0 முதல் 6/5 வரை | ரூ. 19,000 | .. | கே. எஸ். வேணுகோபால், கீழக் குப்பம். |

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட மணப்பத்தூர் வி. பாலசுப்ரமணியத்திற்கு 4 பணிகளல்ல, ஒரு பணி கூட கொடுக்கப்படவில்லை. பூவராகமூர்த்தி, விசுவநாதன் என்போருக்கு ஒரே வேலை நான்கு பணிகளாகப் பிரிக்கப்பட்டு தரப்பட்டது என்பது ஆதாரமற்ற கூற்றாகும். மாறாக விதிகட்கு உட்பட்டு ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள ஒரே பணிதான் தரப் பட்டுள்ளது. வேணு என்ற நபருக்கு ரூ 25,000-க்கு வேலை தரப் படவில்லை. அது ஆதாரமற்ற கூற்று. கீழ்நிலையில் ஏதாவது முறைகேடுகளோ அல்லது தவறுகளோ ஏற்படுமாயின் அவைகளைக் கண்டுபிடித்திடத் தேவையான உதவியை எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களோ நல்கிட முன்வருவார்களானால், அவைகளைக் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், அவைகளை வரவேற்க அரசு தயாராக இருக்கிறது, ஆனால் அவையில், எந்த விதமான



ஆய்வும் செய்யாமல் குற்றச்சாட்டுகளை சுமத்துவது அவையின் உரிமைகளை தவறாகப் பயன்படுத்துவது மட்டுமல்ல, சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் குற்றச்சாட்டுகளை ஆதாரமில்லாமல் சுமத்தும் பொழுது, அதைக் குறித்து அரசும் நாளாவட்டத்தில் அக்கறை காட்டுவது கடினமாகி விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) உரிமைப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

### (இ) எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வர விரும்புகிறேன். அதற்கு என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்த குற்றச்சாட்டைப் பற்றி பொதுவாகப் பேசுகின்ற நேரத்தில் நான் உங்களிடம்........

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றைய சம்பவத்தைப்பற்றி உரிமைப்பிரச்சினை கிளப்பப்படும்பொழுது எழுத்து மூலமாகத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகவே எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தால் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அவையில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை..........

திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே அவைத் தலைவர் தெரிவித்த அந்த ஆணைக்கிணங்க முறைக்கிணங்க முதல் நாள் நடைபெற்ற பிரச்சினையை மறுநாள் உரிமைப் பிரச்சினையாக எழுப்பக் கூடாது. அப்படித் தருவதாக இருந்தால் அது எழுத்து மூலமாகத்தான் தரப்படவேண்டும் என்று தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த முறை பின்பற்றப்படும் என்று நம்புகிறேன்.

THE HON. THIRU G. R. EDMUND : I am also on a point of order. (குறுக்கீடு) Any member in the House can raise a point of order. There is no prohibition for a Minister.

பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் உரிமைப்பிரச்சினை

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1978 மார்ச் 31

எழுப்புவதாக இருந்தால்—நேற்றைய தினத்தின் நிகழ்ச்சியைப் பற்றி—எழுத்து மூலமாகத் தரப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே ஒரு கருத்தினை எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வருகிற உரிமைப் பிரச்சினை என்ன என்பதை நாம் முழுமையாகக் கேட்கவில்லை. அவர் இப்போதுதான் எழுப்ப ஆரம்பித்திருக்கிறார். அவர் எதைப்பற்றி உரிமைப் பிரச்சினை எழுப்பப் போகிறார் என்பதையே இன்னும் சொல்லவில்லை. அதற்குள்ளாக நாம் அவசரப்பட்டுவிடக் கூடாது. அவர் நேற்றையதினம் இந்த அவையிலே கொடுத்த தகவல் தவறானவை என்று சொல்வதன் அடிப்படையிலே உரிமைப்பிரச்சினை கொண்டு வருவதற்கு உரிமை உண்டு. அதை, நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லியதன் மீது கொண்டு வருகிறாரா அல்லது அதையும் இப்போது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற ஸ்டேட்மென்டையும் வைத்து இரண்டினையும் சேர்த்துப் பார்க்கின்ற வகையில் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறாரா என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். ஒரு அமைச்சர் அறிக்கை படித்தால் அதன்மீது உரிமைப் பிரச்சினை எழக்கூடாது. அது அவைக்குறிப்பிலே இருக்கின்றது. விதிகளிலும் இருக்கின்றது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர் நேற்றையதினம் எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து உரிமைப் பிரச்சினை எழுப்புவதாக இருந்தால் எழுத்து மூலமாகத்தான் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அதை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, நான் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதற்கு....

திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கேட்டுக்கொள்வது அந்த இரண்டு விதிகளையும் மீறி ஒரு பிரச்சினை அனுமதிக்கப்படலாமா என்பதுதான். அப்படி அனுமதிக் கப்படுமேயானால் எல்லோருக்கும் அவ்வாறு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே நடந்த விஷயமாக இருந்தால் கண்டிப்பாக 'ரிட்டன் நோட்டீஸ்' கொடுத்து விட்டுத்தான் எடுக்க முடியும். அது விதி. நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சி பற்றி உரிமைப்பிரச்சினை எழுப்புவது என்றால் நோட்டீஸ்



1978 மார்ச் 31] [பேரவைத் துணைத் தலைவர்]

கொடுத்துவிட்டு பிறகுதான் எழுப்ப முடியும். இன்று அவையில் இப்போது நடந்த நிகழ்ச்சி என்றால் without notice you can raise. அதோடு அமைச்சர் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மென்ட்மீது, அவர்கள் கொடுத்ததற்குப் பிறகு உடனடியாக எந்தவிதமான டிஸ்கஷன் அல்லது க்வஸ்டின்ஸ் கேட்க இந்த அவையில் உரிமை கிடையாது. அனுமதியும் கிடையாது. இப்போது நடந்தது என்றால் 'ரெயிஸ்' செய்யுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் இப்போது எழுந்துள்ள....

திரு. க. சுப்பு: ஏற்கனவே அவர்கள் சொல்லிவிட்டார்கள் ........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டுவிட்டுச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நான் எழுப்புகிற உரிமைப் பிரச்சினைமீது விளக்கம் சொல்வதற்கு ஆரம்பிப்பதற்கு முன்னரே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படுகிறது. நான் என்ன பேசப் போகிறேன் என்பதைக் கேட்க அனுமதிக்காமலே உள்ளே வருகிறார்கள். தயவுசெய்து நான் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கைமீது விவாதம் அல்லது அதன்மீது பிரச்னையை எழுப்ப நான் தயாரா யில்லை. இந்த அவையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றிய பிரச்னை குறித்து அவர்கள் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இந்த அவையிலே பல்வேறு தகவல்களை உறுப்பினர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படித் தகவல்கள் கொடுக்கிற நேரத்தில் இந்த அவையின் உரிமை பாதிக்கப்படுகிற வகையில் தவறுகள் ஏற்படுமானால் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நான் எந்த நேரத்திலும் உரிமைப் பிரச்னை எழுப்ப எனக்கு அனுமதி இருக்கிறது. அந்த வகையில் தான் இந்த உரிமைப் பிரச்னைக்கு அனுமதி கோரி பேச ஆரம்பித் திருக்கிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று நடந்த நிகழ்ச்சியாக இருந்தால் நோட்டீஸ் கொடுத்துவிட்டு உறுப்பினர் அவர்கள் 'ரெயிஸ்' செய்யலாம். இன்று நடந்ததாக இருந்தால், you can raise even now. எல்லோருக்கும் ஒரு முறைதான். மாற்றி மாற்றி நீங்கள் செய்தால் அவர்களும் செய்வார்கள். டைம்-க்கு டைம் ரூலை மாற்றிக்கொண்டிருக்க முடியுமா? நேற்றைய தினம் நடந்தது என்றால் ரிட்டனாக நோட்டீஸ் கொடுத்துவிட்டுப் பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் உரிமைமீறல் பிரச்னையை எழுப்புவதற்குள்ளே 'நேற்யைதினம்' என்று சொன்னால் 'நேற்று' 'நேற்று' என்று போகக் கூடாது என்றால் நான் நாளை என்றுதான் ஆரம்பிக்கவேண்டும். ஒரு வார்த்தை, நேற்றையதினம் என்றால் நேற்றைய தினத்திற்குப் போகக் கூடாது என்றால் நேற்றிருந்து தான் இன்றைக்கு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி வேறு, வேதாந்தம் வேறு. விதி பிரகாரம்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: நடைபெற்றிருக்கிற காரியங்களின் அடிப்படையில் உரிமை மீறல் பிரச்னை கொண்டுவருகிறேனே தவிர வேறு அல்ல. இங்கே தவறான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. மிகப் பெரிய ஊழல்கள், மிகப் பெரிய தவறுகள் நடந்திருப்பதாகக் கூறுகிறார்கள். பெரிய மோசடிகள் நடந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். என்னைப் போன்ற சாதாரண உறுப்பினர்களுக்கு என்ன நிலை ஏற்படுகிறது என்றால், ஏதோ என்னவோ என்று பயப்படுகிறோம். பெரிய தவறுகள், அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன, ஆதாரங்கள் இருக்கின்றன என்று சொல்லும் போது என்னைப்போன்ற சாதாரண உறுப்பினர்கள் உள்ளபடியே பெரிய ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றனவோ என்று நினைக்கக் கூடிய நிலை ஏற்படுகிறது. இன்று பத்திரிகைகளில்கூட கொட்டை எழுத்துக்களில் வந்திருக்கிறது. முரசொலியில்--- பத்திரிகைமீது கூட உரிமைப் பிரச்னை கொண்டுவரலாமா என்று நினைத்தேன், ஆனால் பத்திரிகைமீது கொண்டுவரவில்லை. 50,000 ரூபாய் — காண்டிராக்டில் ஊழல்–பண்ருட்டியில் லட்சக்கணக்கான

. . . . . .

திரு. க. அன்பழகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் உரிமைப் பிரச்னை என்னவென்று சொல்ல வேண்டுமே தவிர ஒரு விவாதம் நடத்துவது என்றால், அதற்காக விவாதத்திற்கு நேரம் ஒதுக்கி ஆரம்பித்தால் அதில் ஈடுபட நாங்களும் தயார். விவாதம் நடத்துகிற நேரமாயிருந்தால் தயவு செய்து அறிவித்துவிடுங்கள். உரிமைப் பிரச்னை என்றால் என்ன உரிமைப்பிரச்னை என்று தலைவர் அவர்கள் அறிவித்து விட்டு பிறகு பேச அனுமதியுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். நான் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு பேசுவதாக பேராசிரியர் அவர்கள் மிகுந்த வருத்தத்தோடு சொல்லுகிறார்கள். நான் விவாதத்திற்கு வரவில்லை. அதற்காக நான் அதை எழுப்பவும் இல்லை. இன்றைக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு ஏற்பட்ட சில உணர்வுகளின் காரணமாக சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய சில குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதைத் தான் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் சில தகவல்களை இப்போது கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தகவல்களைக் கேட்ட பின்னால்தான் நேற்று கூறியது தவறு என்று இப்போதுதான் தெரிகிறது என்று சொல்லி உங்கள் கருத்தை எழுப்புகிறீர்கள். அதோடு இதில் உரிமை மீறலும் இருக்கிறது என்று குறிப்பிடுகிறீர்கள். அப்படி நீங்கள் குறிப்பிடுவதாக இருந்தால் அவற்றை நீங்கள் எழுத்து மூலம் எழுதிக் கொடுங்கள். நாளைக்கு அதைப்பற்றிப் பேசலாம். இன்றைக்கு எழுதிக் கொடுங்கள், அதைப்பற்றி நாளைக்குப் பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா: இதில் உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதை தாங்கள்தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அதற்காகத்தான் சொன்னேன், இன்றைக்கு எழுதிக் கொடுங்கள் நாளைக்கு அதைப் பற்றி பேசி முடிவு சொல்லலாம்.

திரு. க. சுப்பு: நாளைக்கு இதை எழுப்புவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் அதுவரை அவர் இப்போது கூறியதெல்லாம் அவைக் குறிப்பேட்டில் இருக்கவேண்டுமா? எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டியதுதானே, நாளைக்கே மொத்தமாக Fresh-ஆக ஆரம்பித்துக் கொள்ளலாமே. இப்போது எதற்காக ரிக்கார்டில் இருக்க வேண்டும்.?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அதுதான் நான் சொல்லிவிட்டேனே, தனியாக எழுதிக் கொடுங்கள், நாளைக்குப் பேசலாம் என்று.

திரு. ஏ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ராதா அவர்கள் உரிமைப் பிரச்னை என்று ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசியும் இருக்கிறார். தாங்கள் இதற்குத் தீர்ப்பும் சொல்லியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் நேற்று என்னைப்பற்றி நான் கோஷன் பிளாக்கில் இருப்பதாக

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் ராதா அவர்கள் உரிமைப் பிரச்னை எழுப்பவில்லை. அவர் எதையோ பேசினார். ஆகவே அவர் உரிமைப் பிரச்னை எழுப்பினார் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் சொன்னதை-அவர் திராவிட முன்னேற்றக்கட்சி உறுப்பினராக இருந்தாலும்— அவர் சொன்னதை நான் மறுக்க விரும்புகிறேன்:

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்னைப்பற்றி பேசும்போது, 'அவர் எதையோ பேசினார், என்று சொன்னதற்கு நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். நீண்ட நாட்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்பு இருந்திருக்கின்ற நான் எதையோ பேசினேன் என்று அவர்கள் சொல்வது. அந்தக் கழகத்தையே அவமானப்படுத்துவது போலாகும். அண்ணா அவர்களிடத்தில் பயின்றவன் நான். நான் சொன்னதை நன்றாகத் தெரிந்து கொண்டு புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்பினேன். அந்த உணர்வில் தான் நான் பேசினேன். அதை நான் ஏதோ பேசினேன் என்று பேராசிரியர் சர்டிபிகேட் கொடுத்தால், உலகத்தில் இருக்கின்றவர்கள் என்னை மோசமாகவும் தவறாகவும் கருதுவார்கள். ஆகவே பேராசிரியர் அவர்கள் கொடுத்த சர்டிபிகேட்டை திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: நான் நண்பர் ராதா அவர்கள் பேசியதைக்குறை கூறுவதற்காக அவ்வாறு கூறவில்லை. அவர் என்ன பேசினார் என்பதை நானும் திரும்பச் சொல்வது என்பதுஇயலாது. அவர்களே சொன்னார்கள், அவர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளின் காரணமாகப் பேசுகிறேன் என்று. எனவே அவர்கள் அதன் அடிப்படையில்தான் பேசினாரே தவிர உரிமைப் பிரச்னை என்ற அளவில் எதையும் பேசவில்லை என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார் என்று சொன்னது தவறான கருத்து என்பதற்காக அதை மறுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நான் சொன்னேனே தவிர, வேறு நோக்கத்தால் அல்ல, என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராதா அவர்கள் உரிமைப் பிரச்னை என்று தான் ஆரம்பித்தார். பின்னால் நான் அதற்கு இன்றைக்கு நடந்ததைப்பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் 'வித் அவுட் நோட்டீஸ்' எழுப்புங்கள் என்றும் நேற்றைய சம்பவம் என்றால், 'பர்டிகுலராக' ஸ்பெசிபிக்-,காக 'ரிட்டனாக, எழுதிக்கொடுங்கள் என்றும் சொல்லிவிட்டேன். ஆகவே இப்போது இந்தப் பிரச்னை எழவில்லை.

திரு. க. சுப்பு: நாளைக்கு எழுதிக் கொடுங்கள் என்று நீங்கள் சொல்லுவதிலிருந்தே அவர் உரிமைப் பிரச்னையை எழுப்பினார் என்பது ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பிரச்னை அல்ல. அவர் அதைச் சொன்னதும், இன்றைக்கு எழுதிக் கொடுத்துவிட்டு நாளைக்குப் பேசுங்கள் என்று சொல்லியாய் விட்டது. வேறு ஒன்றுமில்லை.





திரு. எஸ். ஆர். இராதா: நான் உரிமைப் பிரச்னை என்று சொல்லி விட்டுத்தான் எழுந்தேன், ஆனால் நேற்றைய சம்பவம் என்றால் எழுதிக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள் என்று தாங்கள் சொல்லிவிட்டீர்கள். அந்த அடிப்படையில் நான் செய்கிறேன் என்று தலைவர் அவர்களுக்குச் சொல்லிவிட்டேன், அது திரு. சுப்பு அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

திரு. துரை முருகன்: பாயிண்ட் ஆப் ஆர்டர், நேற்றைய தினம் ஒரு விவாதம் நடைபெற்றது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு புதிதாக ஏதாவது பிரச்னையைக் கொண்டு வராதீர்கள் உட்காருங்கள்.

(மணியடிக்கப்பட்டது)

திரு. துரை முருகன்: நான் என்ன சொல்லிவிட்டேன், ஒன்றுமே சொல்ல ஆரம்பிக்கவில்லையே. நேற்றையதினம் ஒரு விவாதம் நடைபெற்றது என்று தான் ஆரம்பித்தேன். அதற்குள் கடகடவென்று மணியடித்து, உட்காருங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

(முற்பகல் 11-20)

THE HON. THIRU S. RAGAVANANDAM: Mr. Speaker, the Bill is being considered and much time is being consumed otherwise.

திரு. துரை முருகன்: பாயிண்ட் ஆப் ஆர்டர்; நாங்கள் உரிமைப் பிரச்னை எழுப்பினால் எழுதிக் கொடுங்கள்; நாளைக்குப் பரிசீலனை செய்கிறேன் என்று சொல்கிறீர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். நீங்கள் இப்போது பேச முடியாது. அவருக்கும் நான் இதையேதான் சொன்னேன், ஒழுங்குப் பிரச்னை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று எந்த விதியும் அனுமதிக்கவில்லை. உரிமைப் பிரச்னைக்கு அப்போதே தீர்ப்பு வழங்கியாகி விட்டது. அதைப்பற்றிப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை.

(திருவாளர்கள் சுப்பு, துரை முருகன், ரகுமான்கான் ஆகியோர் எழுந்திருந்தனர்—கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூன்று பேர்கள் எழுந்து நின்றால் என்ன செய்வது?. தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள்.

திரு. துரை முருகன்: அவர்களுக்கு இருக்கின்ற உரிமை எங்களுக்கும் உண்டு. ஆனால் ஆளும் கட்சிக்கு ஒரு விதத்திலும், எதிர்க் கட்சிக்கு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி ஒன்றும் நான் பாரபட்சமாக நடந்துகொள்ளவில்லை. ஆளும் கட்சி உறுப்பினரையும் எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்க வேண்டுமென்று தான் சொல்லியிருக்கிறேன். பாரபட்சமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், இப்போதே இதை அனுமதித்து இருப்பேன். அப்படிக் கிடையாது. இதன்மேல் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயவேலு.

(திரு எம். ஏ. ஜெயவேலு பேச எழுந்திருந்தார்)

திரு. மு. அம்பிகாபதி; இவ்வளவு நேரம் இந்த விவாதம் தேவைதானா? காலம் வீணாகிறதே?.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேவைதான். யார் யார் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை வெளியிலே உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா, எனவே இது தேவைதான். தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயவேலு,

## 7. (ஆ) 1978 ஆம் ஆண்டு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78)—(தொடர்ச்சி)

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவர் அவர்களே, இப்போது சென்னை மாநகரிலே கூவம் ஓடிக்கொண்டிருப்பதைப் பற்றி நம் மக்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டேன். பாவம் செய்தவர்கள்தான், கூவம் அருகில் வாழ்கிறார்கள் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எந்தப் பாவத்தையும் தெரிந்து செய்யவில்லை, இருந்த போதிலும் நாங்களும், இந்தச் சட்டமன்றப் பேரவையின் தலைவர் அவர்களும் கூவத்திற்கு அருகாமையிலேயே இருந்துகொண்டு, மிகக் கொடுமையான நாற்றங்களைச் சகித்துக் கொண்டு வருகிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தக் கூவத்தை மணக்க என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த கூவத்தை யொட்டி இணைந்த இன்னொரு ஆறும் இருக்கிறது. அது அடையாறு, இந்த அடையாறும் தற்போது எப்படி மணக்கிறது என்றால், கூவத்தைப் போல் மணக்க ஆரம்பித்திருக்கிறது. இதற்கும் ஒரு பழமொழி வைத்து விட்டார்கள். அடையாறுக்கு அருகில் வாழ்வார் 40 வயதை அடையார். அப்பேர்ப்பட்ட துர்நாற்றம் அடிப்பதால், அவர்கள் வியாதிக்கு உட்பட்டு இந்த 40 வயதிற்கு மேலே இவர்கள் இருக்கமாட்டார்கள் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.





நேற்றைய முன்தினம் நமது ஆளுநர் அவர்கள் ஒரு விருந்து கொடுத்தார்கள். அதற்குக் கடற்கரை சாலையிலே போகின்ற நேரத்திலே இந்த போர்-ஷோர் எஸ்டேட் இருக்கிறது. இங்கே சென்று கொண்டிருக்கின்ற நேரத்திலே திடீரென்று ஒரு நாற்றம் வெளிப்பட்டது. இதற்குப்பிறகு, அங்கேசிற்றுண்டியைச் சாப்பிட்டு விட்டுத் திரும்பி வருகிறபோது மீண்டும் இந்த நாற்றம் இங்கே வெளிப்பட்டு மூக்கைத் துளைத்து அங்கே சாப்பிட்டது வெளியே வருகின்ற அளவுக்கு இந்த நாற்றம் வீசுகின்றது. ஆகவே, இந்த அடையாற்றை நல்ல வகையிலே சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடையாறுக்கு அருகில் அமைச்சர்கள் வாழ்கிறார்கள். அதைச் சீர் செய்தால் மக்கள் ஏதாவது தவறாக எண்ணுவார்களோ என்று நினைக்காமல், இந்த அடையாறுக்கு அருகிலே பல ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள் என்ற காரணத்தால், அதையும் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், போர்-ஷோர் எஸ்டேட்டுக்கு அருகாமையிலேயே குப்பைக் கூளங்களை டம்ப் செய்திருக்கிறார்கள், இதிலேயிருந்தும் மிக பயங்கரமான துர்நாற்றம் வீசுகிறது.

மற்றும் பாதாளச் சாக்கடை சரிவர இயங்கவில்லை. அதன் காரணமாக மழைக்காலத்தில் ஏராளமான இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. பாதாளச் சாக்கடையைச் சீர் செய்கிற நேரத்தில் தொழிலாளர்கள் உள்ளே இறங்கினால் பாதாளத்திற்கே போகிறார்கள். நரகத்திற்கே போகிறார்கள். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாட்டில் காஸ் சேம்பர் இருக்கிறது. இங்கே நீதி மன்றம் தண்டனை கொடுக்கப்படாமலே வேலை செய்கிறவர்கள் அத்தகைய காஸ் சேம்பரில் இறந்துவிடும் நிலைமைகளைக் காண்கிறோம். ஆகையால் அத்தகைய நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆள் இறங்கி வேலை செய்வதற்கு முன்னதாக அதிலே இருக்கும் விஷ வாயுவைக் கண்டுபிடிக்கும் கருவியை வைத்துப் பார்க்க வேண்டும். ஆராய்ச்சி செய்கிறபோது குரங்குகளையோ மற்ற மிருகங்களையோ விட்டு ஆராய்ச்சி செய்வது போல் நாய், பூனை முதலியவற்றை முதலில் விட்டு பிறகு மனிதனை இறக்குவது நல்லது. அடிக்கடி இப்படிப் பாதாளச் சாக்கடையில் உள்ளே செல்லுகிற தொழிலாளர்கள் இறந்து விடும் நிலைமையைப் பார்க்கிறோம். அதைக் சீர் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைக்குப் பல பக்கங்களில் இருந்து தண்ணீர் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன. அந்த முயற்சியின் ஒரு பகுதி வீராணம் திட்டம். அதை வீணான திட்டம் என்று சொல்லுகிறார்கள். அந்த வீணான திட்டம் முற்றுப்பெறவில்லை என்றாலும் அதற்காகப் போடப்பட்ட குழாய்கள் சாலையில் போடப்பட்டிருக்கும் நேரத்தில் போக்குவரத்துக்குத் தடங்கலாக இருக்கிறது அது நமக்கெல்லாம் அவமானமாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து

வருகிறவர்கள் மகாபலிபுரம் போகிற வழியில் இந்தக் குழாய்களைப் பார்த்து என்னவென்று கேட்கிறார்கள். இது வீணான திட்டத்தின் பகுதி என்று சொல்லுகிறார்கள். நாலைந்து வருஷங்களாக ஏன் இப்படியே இருக்கின்றன என்று கேட்கிறார்கள். அந்தக் குழாய்களைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். அந்தத் திட்டத்திற்காக நிறையப் பணம் செலவு செய்யப்பட்டிருப்பதால் மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திற்குக் கிருஷ்ணா நதித் தண்ணீரையும் கொண்டு வரும் திட்டம் இருக்கிறது. அதனால் ஏராளமாகத் தண்ணீர் வருவதால் தண்ணீர் வெளியே போவதற்கு வசதியாக பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் சீர் திருத்துவது முக்கியமானது என்று தெரிவித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மலத்தை லாரிகளில் எடுத்துச் செல்லுகிறபோது திறந்த லாரிகளில் எடுத்துச் செல்லுகிறார்கள். இதனால் நல்ல சாலைகளிலே துர்நாற்றம் வீசுகிறது. இதைப் போக்க ஆவன செய்ய வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் நுழைகிறபோதே நாற்றம் அடிக்கிறது. தோல் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. பெங்களூரிலிருந்து வட ஆற்காடு மாவட்டத்திற்குச் செல்லும்போது ராணிப்பேட்டை வரை துர்நாற்றம் இருக்கிறது.

திரு. க. சுப்பு ; அவர் பேசுவதைத் தவறு என்று சொல்லவில்லை. இங்கு விவாதத்தில் இருக்கும் மசோதா சென்னைப் பெருநகர் பற்றிய மசோதா. இதிலே போய் ராணிப்பேட்டையில் வாடை அடிக்கிறது என்று பேச ஆரம்பித்தால் எப்படி நேரம் கிடைக்கும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினரும் இப்படித்தான் தொகுதிப் பிரச்சினையைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. ஜெயவேலு ; சென்னையிலே குடியேறியிருக்கின்ற நிலையில் சென்னையைப் பற்றிப் பேசினேன். என்னுடைய தொகுதிக்குச் சென்றால் எங்களைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களைச் சமாளிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.



குறிப்பாக பாட்டபில் வாட்டர் கொடுப்பது பற்றிய திட்டம் குடிதண்ணீர் வாரிய லிஸ்டில் இருக்கிறது. தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது—

"Potable water everywhere but not a drop to drink" பிரஷர் டாங்க் இருக்கிறது, மோட்டார் எங்கும் வேலை செய்வதில்லை. 75 சதவிகிதம் வேலை செய்வதில்லை. அதை காடகிரி 1-ல் சேர்க்க வேண்டும். ஆங்கிலப் புலவன் அதற்காகத்தான் சொன்னான்—

"water, water everywhere but not a drop to drink" கடலில் நிறையத் தண்ணீர் இருக்கிறது, ஆனால் குடிக்க முடியாது என்று சொன்னான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சென்னையைப் பற்றிப் பேசி முடித்துவிட்டீர்கள் என்றால், பேச்சை முடித்து விடுங்கள். தொகுதியைப் பற்றிப் பின்னால் பேசிக் கொள்ளலாம்.

[முற்பகல் 11-30]

திரு. எம். ஏ. ஜெயவேலு; ஆகவே அந்தத் திட்டத்தை காடகிரி ஒன்றிலே சேர்க்க வேண்டுமென்றும் குழாய்க் கிணறுகள் சரியான முறையிலே இயங்கவில்லை, அவைகளைச் சரியான முறையிலே இயங்கச் செய்ய வேண்டுமென்றும், இந்தத் திட்டத்தை எதிர்காலத்திலே மிகச் சிறப்பாகச் செய்யக்கூடிய முறையிலே கிருஷ்ணா நதியிலிருந்து நீரைக் கொண்டுவர இருக்கிறோம். வடிகால் வசதிகளைச் சிறப்பான முறையிலே செய்யவேண்டி இருக்கும், ஆகவே அதற்கெல்லாம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய மரபு, முன்கூட்டியே பேசவிரும்புகிற உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிட்டு அதன் பிறகு தான் பேசவேண்டுமென்று இல்லை. இதற்கு முன்பு இருந்த மரபு கையை யார் தூக்கினாலும் யார் பேச விரும்புகிறார்களோ அவரை அனுமதிப்பது தான் வழக்கம். புதிதாக எழுதிக் கொடுத்து தான் பேசவேண்டும் என்று சொல்வது மரபாக இருக்குமானால் அது சரியல்ல, ஏற்கனவே இருக்கிற மரபை மாற்றுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; திரு லத்தீப் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, எழுதிக்கொடுத்தால் தான் பேச வேண்டும் என்று யார் எப்போது சொன்னார்கள்? அப்படி நானோ தலைவரோ யாருமே சொல்லவில்லை, நேரம் இருக்குமானால் யார் கையைத் தூக்கிப்பேசவேண்டுமென்று சொன்னாலும் அவரைப் பேசச் சொல்வது என்பதுதான் வழக்கம். அதுதான் இப்போதும் பின்பற்றப் படுகிறது.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகருக்காக அதனுடைய தண்ணீர் தேவையை வடிகால் வசதியை அபிவிருத்தி செய்வதற்காக இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இப்போது அமைக்கப்பட இருக்கிற இந்த வாரியம் இனிமேல் செய்யவிருக்கிற காரியங்களை இதுநாள் வரையிலும் இந்த கார்ப்பரேஷன் செய்து வந்தது. தமிழ்நாட்டிலே எப்படி குடிநீர் வடிகால் வாரியம் ஏற்படுத்தப்பட்டதோ அதேமாதிரி இது ஒரு தனி அமைப்பாக இந்த மாநகரிலே செயல்பட்டால் ஒழுங்காகத் தண்ணீர் வசதியும் வடிகால் வசதியும் செய்யமுடியும் என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. இதைத் தனியாக ஒரு போர்டாக அமைப்பதாலே அதிக வசதிகள் செய்ய முடியும், நிதி வசதிகள் வெளியிலிருந்து பெறமுடியும் என்ற உண்மையை நான் மறுக்கவில்லை. ஏனென்றால் கார்ப்பரேஷன் என்றால் கடன்பெறுவது என்பது மாநில சர்க்காரிடமிருந்து மட்டும்தான் பெறமுடியும். தனியார்களிடமிருந்து பெற முடியாது. இம்மாதிரியாக தனியாக போர்டு அமைத்தால் வெளியிலிருந்து கடன் வசதி பெற்று இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற முறையிலே கிடைக்கும். அது சரியில்லை என்று அபிப்பிராயம் சொல்வதற்கில்லை. ஆனால் இம்மாதிரி போர்டு அமைப்பதன் மூலமாக போதிய நிதி வசதிகள் ஏற்படுவதற்கு அரசாங்கத்திற்கு வழி அளிக்கும். தண்ணீர் சப்ளை செய்கிறோம், ஆனால் தண்ணீரைப் பெறுவதற்கு என்ன வசதி செய்யப்படுகிறது. கோடை காலத்திலே சென்னை மாநகரத்திலே இப்போது இருக்கிற தண்ணீர் போதவில்லை, இந்த நிலை இருக்கிறபோது இப்படி போர்டு அமைத்து பல்வேறு பைப்புகளைப் பதித்து பணத்தைச் செலவழித்தாலும்கூட இருக்கிற தண்ணீரைத் தான் கொடுக்கமுடியும், புதிதாகத் தண்ணீர் வந்தால் தான் தண்ணீர் சப்ளை அதிகமாகக் கொடுக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. புதிதாகத் தண்ணீருக்கு என்ன வழி செய்திருக்கிறீர்கள். வீராணம் திட்டம்போட்டு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்தும் அந்தத் தண்ணீர் வருமா வராதா என்ற சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்த போர்டு அமைப்பதோடு சென்னை மாநகர மக்கள் தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப புதிய தண்ணீர் வசதிகளைக் கொண்டுவருவதற்குத் திட்டமிட வேண்டும். இப்போது கிருஷ்ணா நதித் தண்ணீர் கொண்டுவருவதற்கு ஆலோசனை கூறப்படுகிறது. வீராணம் அப்படியே இருக்கலாம். அதைப் பரிசீலனை செய்து தண்ணீர் வருகிறபோது வரட்டும், கிருஷ்ணா நதி நீரைக்கொண்டு வருவதற்கு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதற்கான திட்டத்தை இப்போதே தீட்டவில்லையென்றால் இந்த வாரியத்தை அமைப்பதால் எந்தப் பயனும் மக்களுக்குக் கிடைக்காது. வேண்டுமானால் நிறைய அதிகாரிகளைப் போடலாம்,



நிறைய ஆட்களைப் போடலாம், வேலைவாய்ப்புக் கொடுக்கலாம். இப்படி அதிகப்படியாகச் செலவழிக்கலாமே தவிர சாதாரண மக்களுக்குப் பெரும் வசதி கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்காது. ஆகவேதான், ‘சட்டியிலிருந்தால்தான் அகப்பையில் வரும்’ என்று கூறுவார்கள், அதைப்போல இந்தப் பெருநகரத்திட்டத்தில் போதிய தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசு ஆலோசிக்கின்ற பொழுது, ஆசைப்படுகின்றபொழுது, அதற்கான தண்ணீர் வசதியைக் கொண்டுவர நாம் முயற்சியை முதலில் எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன்.

இதில் அதிகப்படியான நிர்வாகச் செலவு ஆகிவிடாமல், ஆரம்பத்திலேயே அதிகப்படியான நிர்வாகிகளைப் போட்டு அதிகச் செலவு ஆகிவிடாமல், படிப்படியாக இந்தத்திட்டத்தை நாம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே ஆரம்பத்திலேயே, என்ன வேலை செய்யப் போகிறோம் என்பதைப்பற்றியெல்லாம் திட்டமிட்டு, படிப்படியாக அந்த நிர்வாக அமைப்பைப் பெருக்க வேண்டுமே தவிர, எடுத்தவுடன் அதிகப்படியான நிர்வாகிகளைப் போட்டு செயல்படுத்துவோமேயானால் அதிக நஷ்டத்தில் விட்டுவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே நிர்வாகச் செலவைக் கூடுமான வரையில் குறைக்க வேண்டும். இப்பொழுது தனியாகப் போர்டு அமைப்பதின் மூலம் மக்களின் செலவு அதிகரிக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கார்ப்பரேஷனுக்கு எந்த அளவிற்கு வரி கட்டுகிறார்களோ அதைவிட அதிகத் தொகையை இந்த வாரியத்திற்கு, வரி கட்ட வேண்டிய நிலைமை இந்தச் சென்னை மாநகர பொது மக்களுக்கு நிச்சயமாக ஏற்படும். அப்படிச் செலுத்தினாலும் இன்றைக்கிருக்கின்ற வசதியைவிட அதிக வசதியை இந்த வாரியம் செய்து கொடுக்க வேண்டும், அப்படியில்லாமல் இந்த வாரியத்தை அமைத்தால் அதிகச் செலவை வைத்து விட்டார்கள் என்று நினைக்கக் கூடிய நிலைமை வந்துவிடக் கூடாது.

இன்றையதினம் சென்னை மாநகரத்தில் டிரெயினேஜைப்பற்றி மிகவும் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். சென்னை நகரத்தின் உட்பகுதிகளில் போகும்பொழுது, டிரயினேஜ் சரியில்லாத காரணத்தினால் சுத்தமாக இல்லாமலும், நாற்றம் அடிக்கும் நிலையிலும் இருக்கிறது. எனவே, டிரயினேஜ் வசதியில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூவம் திட்டத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் இரண்டு கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவழித்தும் கூட அது சரியாகச் செயல்படாத காரணத்தினால் அந்த நாற்றம் இன்னும் போகவேயில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தை நன்றாகப் பரிசீலித்து நகரத்திலே நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது இந்தப் போர்டு சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும் கூட, 'தமிழ்நாடு வாட்டர் சப்ளை அண்ட் டிரெயினேஜ் போர்டு' செயல்படும் பொழுது பல்வேறு முனிசிபாலிட்டிகளிலே வடிகால் திட்டங்கள் சரியாகச் செயல்படுத்தப்படவில்லை, நிதி வசதி போதவில்லை. ஆகையினாலே, குறைந்தபட்சம் நகரப் பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி ஏரியாக்களை எடுத்துக் கொண்டு இந்த வடிகால் வசதியை அங்கே அதிகப்படுத்த வேண்டும். காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலே வடிகால் வெட்டியதை இன்னும் சரி செய்யவில்லை. இதற்கான முயற்சி எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன், வணக்கம்.

*திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் சென்னை மாநகரத்தைப்பற்றிப் பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூறினார்கள். ஆனால் ஆளுங்கட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தால் என் தொகுதி பற்றி....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் சொல்வது அல்ல, இன்றைக்கு வந்திருக்கின்ற பில்லே அதுதான்.

திரு. ரா. கு. பெருமாள்: ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தினால் பெரும்பாலும் பேச வாய்ப்பே கிடைக்கவில்லை. எனவே, என் தொகுதியைப் பற்றிக் கூறுவதற்கு இந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

''நீரின்றி அமையாது உலகம்'' என்று வள்ளுவர் பெருந்தகை கூறியதற்கேற்ப, பருவ மழையின்றி விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ''பிள்ளை பெற்றார் கெட்டதும் இல்லை, மழையைப் பெற்றார் தாழ்ந்ததும் இல்லை'' என்று சொல்வார்கள். ஆனால் இந்த ஆண்டு மழையால் ஏற்பட்ட சேதங்களைப் பார்த்தால் விவசாயப் பெருங்குடி மக்கள் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளுக்குக் கஷ்டங்களை அனுபவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

விளாத்திகுளம் பகுதியில் பல ஆண்டுகளாக மழையின்றி மக்கள் கஷ்டப்பட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைப் பார்க்கும்பொழுது என்னுடைய தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள ஒரு சில மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டு நிலவரிச் சட்டத்தின் மூலமாக விதிசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும் குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாக . மாற்ற வேண்டுமென்பதோடு மட்டுமல்லாமல், ரிசர்வ்வங்கி சொல்லும் வட்டியை மட்டும் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



(முற்பகல் 11-40)

' ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம்செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்' என்ற பாட்டைப் ாடிய எங்கள் திருநெல்வேலி மாவட்ட பாரதியின் கனவை நன ாக்கும் வகையில் எங்கள் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ம் அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள வெள்ளயாபுரத்தில் ரு கூட்டுறவு பஞ்சாலையும் ஏற்படுத்த வேண்டுகிறேன்.

வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுகள் சில குடியிருப்புகளில் டியிருந்து வருகிறார்கள். கட்டபொம்மனுக்கு கோட்டையைக் ட்டி, பல இலட்சம் ரூபாய் செலவில் விழா எடுத்தவர்கள் அம் க்களின் வறுமையைத் துடைக்க வேலை கொடுத்தார்களா ன்றால் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து பில் ல் பேசுங்கள், இல்லாவிட்டால் உட்காருங்கள்.

திரு. ரா.கு. பெருமாள் : என்னுடைய தொகுதியைப்பற்றி ன்றைய தினம் கூறுவது ? –

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொகுதியைப் பற்றி அந்தந்த 'டிமாண்டி'லே கூற வேண்டும்.

திரு. ரா. கு. பெருமாள் : மழை பெய்கின்ற காலங்களில் சில ஊருகளில் தண்ணீரைத் தேங்கவைத்து, அதைத்தான் அந்தப் பகுதி மக்கள் அருந்துகிறார்கள். ஆனால், அப்பகுதியில் போர் மூலமாகத் தண்ணீரை இறைத்து அதனைக் குடிக்க அனுப்பினால், அதை மழைத் தண்ணீர் என்று மக்கள் கூறுகிறார்கள். (மணியடிக்கப் பட்டது). ஆனால், மழை பெய்து ஓய்ந்தவுடன் அந்தத் தண்ணீ ரிலுள்ள கிருமிகளால் அங்கே நரம்பு நோய்கள் ஏற்பட்டு குழந் தைகள், பெரியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, பாதுகாக் கப்பட்ட குடிநீர் தேக்கத் தொட்டி மூலமாக குடிநீர் வழங்க வேண்டுமென்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

* திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த புறநகர் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல்பற்றிய மசோதாவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கடுமையாக எதிர்க்கிறேன். ஏனென்று சொன்னால், இது ஏற்கனவே இருந்து கொண்டிருக்கக்கூடிய புறநகர் என்று சொல்லும்போது, அர்பன் ஏரியா என்று சொல்லும்போது, மெட்ராஸ் கார்ப்பரேஷன், திருவொற்றியூர் முனிசிபாலிட்டி, ஆலந்தூர் முனிசிபாலிட்டி, பல்லாவரம் முனிசிபாலிட்டி, மாதவரம் டவுன்ஷிப், கத்திவாக்கம் டவுன்ஷிப், ஆவடி டவுன்ஷிப், அம்பத் தூர் டவுன்ஷிப், அப்புறம் செயின்ட் தாமஸ் மவுண்ட் கன்டோன் மென்ட், அதல்லாமல் 5 பேரூராட்சிகளும் இதற்குள் வருகின்றன. இவைகள்தான் ஏற்கெனவே குடிநீர் வழங்கல்

அல்லது கழிவு நீர் அகற்றுதல் இந்தப் பிரச்சினைகளில் ஈடுபட்டு, அதற்கென நிதி வசூலும் செலவினங்களும் நடத்திக் கொண்டு வந்தன.

இந்தப் புறநகரம், நான் மேலே சொன்ன பேரூராட்சிகள், நகராட்சிகளுக்கு இருக்கக் கூடிய உரிமைகளை இந்த மசோதா பறிக்கிறது.

ஜனநாயகம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் இதில் கிடையாது. இதில் செக்ஷன் 4 பிரகாரம், அதாவது பிரிவு 4 பிரகாரம் ஒரு போர்ட் அமைகிறது —— கான்ஸ்டிட்யூஷன் ஆப் தி போர்ட். அதில் 13 உறுப்பினர்கள் இருக்கிறார்கள், 13 பேர்களில் நான்-அஃபிஷியல்ஸ் என்று சொல்லத்தக்க 6 பேர்கள் இருந்தாலும் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல. அதிலே ஆண் உறுப்பினர், குவாலிஃபிகேஷன் கிடையாது—— ஆணாக இருந்தால் போதும். பெண் உறுப்பினர், அவருக்கும் குவாலிஃபிகேஷன் கிடையாது, பெண்ணாக இருந்தால் போதும். மற்ற 4 உறுப்பினர்களுக்கு குவாலிஃபிகேஷன் பினான்ஷியல் ரூல்ஸ் தெரிந்த ஆடிட்டராக இருக்க வேண்டும், அல்லது ஹெல்த் இன்ஜினீயராக இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறதே தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கக் கூடிய பிரதிநிதிகளுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைப் பறித்து, அதிகாரவர்க்கம் அடங்கிய போர்டுக்கு இது விடப்படுகிறது. ஆனால் இந்த மசோதாவை எவ்வளவு கடுமையாக எதிர்த்தாலும், இதர கட்சி உறுப்பினர்கள் எவ்வளவு கடுமையாகப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கூறினாலும், அது நிறைவேற்றப்பட வேண்டிய அளவுக்கு நிர்ப்பந்தம் இருக்கிறது.

இதிலே அவர்கள் சொல்லுகிறார்கள்——

''According to the time-schedule for the implementation of the programme to be financed by the world Bank, the statutory authority has to come into being on and from the 1st April 1978.'' விடிந்தால் கல்யாணம், பிடி பாக்கை என்று கூறப்படும் பழமொழி அடிப்படையிலே நாங்கள் எதை பேசினாலும், நாளைக் காலை இது சட்டமாக ஆக்கப்பட்டு அமலுக்கு வராவிட்டால் உலக வங்கியிலிருந்து கிடைக்கும் உதவி நமக்குக் கிடைக்காது என்கிறார்கள். இந்த நிதி உதவி எங்கிருந்து வருகிறது.? ஐ. நா. அபிவிருத்தி ஸ்தாபனம், உலக சுகாதார நிறுவனம், மத்திய அரசு இவை மூன்றும் சேர்ந்து கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்ட அடிப்படையில் இந்த மாநிலத்திலே இது திணிக்கப்படுகிறது என்று நான் கருதுகிறேன். அந்த ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்கள் என்ன ? எவ்வளவு நிதி கொடுக்கப்படுகிறது, ஐ நா. சபையிலிருந்தோ அல்லது உலக வங்கியிலிருந்தோ வாங்கக்கூடிய நிதிக்கு என்ன வட்டி, எவ்வளவு கொடுக்கப் போகிறோம், உரிய நிபந்தனை



என்ன என்பதைப்பற்றி எல்லாம் இந்த அவையிலே நாம் விவாதிப்பதற்கு அவகாசம் இல்லை என்ற நிலையில் நாளைக்கு இது சட்டமாக அமலுக்கு வரவேண்டும்.

இன்றைக்கு சம்பிரதாயத்திற்கு இது இந்த மன்றத்தில் வைக்கப்படுகிறது என்று கருதுகிறேன். மிக முக்கியமான இந்த மசோதாவை நம்முடைய தமிழக பொருளாதாரத்தை மட்டுமல்லாமல், மாநில சுயாட்சி என்று நாம் எல்லாம் கூறிக் கொண்டிருக்கிறோமே அந்த உரிமைகளைப் பாதிக்கின்ற அளவுக்கு அவ்வளவு அவசரம் அவசரமாக கடைசி நாளில் கொண்டு வந்து திணிக்கக்கூடிய நிலையில் வைத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் எதைப் பேசினாலும் இதை நீங்கள் சட்டமாக ஆக்கப் போகிறீர்கள், தெரியும் (குறுக்கீடு). என்ன செய்வது?, மெஜாரிட்டி இருக்கிறது. பணம் வருகிறது என்று அமைச்சர் சொன்னார்கள். அந்தப் பணம் எப்படி வருகிறது? நாம் எப்படி அடைக்கப் போகிறோம்?

அதுமட்டுமல்ல. இதிலே இருக்கக்கூடிய உரிமைகளை எல்லாம் போர்டுக்கு, அதிகாரவர்க்கத்தின் கீழ் இந்தப் பொறுப்பை அளிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு இதிலே உரிமை கிடையாது. இந்த அரசாங்கத்திற்கும் கிடையாது.

இன்னொன்று, கிளாஸ் 6 பற்றிய நோட்டு என்ன சொல்லுகிறது என்றால் ''This clause specifies the general powers of the Board .... என்ன அது? The powers include the power to raise resources by taxation or borrowings.'' என்று சொல்கிறது.

மேலும் மேலும் ஏற்கனவே இருந்த நிலைமையை விட அதிகமான வரிகளைப் போடுகின்ற அளவுக்கு அதிகாரமும் இந்த கிளாஸ் மூலம் புதிதாக அமையவிருக்கிற போர்டுக்குக் கிடைக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு இந்த உரிமை கிடையாது, அரசாங்கத்திற்கும் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், குறிப்பாக திரு. அரங்கநாதன் அவர்கள் கூறியமாதிரி இப்படிப்பட்ட வரிகள் இது சம்பந்தமாக அதிகமாக ஆகும் என்ற காரணத்திற்காகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒருவரும் இதிலே இல்லை என்ற காரணத்திற்காகவும், நான் எதிர்க்கிறேன்.

மேலும் குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் இவைகளில் செய்த பணிகளையும் இந்த மெட்ரோபாலிடன் வாட்டர் சப்ளை ஸ்கீம் எடுத்துக் கொள்ளுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த

பில்லையே நான்தான் பைலட் பண்ணுகிறேன். இந்த போர்டுக்கு நான்தானே அமைச்சராக இருப்பேன் என்று சொன்னாலும், அதை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய அதிகாரிகள் அதிலே இருப்பார்கள். அதிகாரிகள்தான் அதிலே இருப்பார்களே தவிர மக்கள் பிரதிநிதிகள் அல்ல.

இதிலே குறிப்பிடுவது என்னவென்றால், நிதி உதவி ஐ. நா. ஸ்தாபனம் கொடுக்கிறது. உலக வங்கியும் நிதி கொடுக்கிறது. என்ன நிபந்தனை என்றும் தெரியவில்லை.

போக்குவரத்துத் துறைக்கு நிதி உதவி கொடுப்பது சம்பந்தமாக ஒரு வேர்ல்டு பேங்க் டீம் வந்தது. அவர்கள் பல ஆலோசனைகளைக் கொடுத்தார்கள். பல நிபந்தனைகளைப் போட்டார்கள். நாங்கள் குறிப்பிடுகின்ற நேரங்களில் நீங்கள் வண்டிகளை விட்டால் தான் உங்களுக்கு நிதி உதவி கிடைக்கும் என்று சொன்னார்கள். போக்குவரத்து நிறுவனங்கள் அதேபோல் குறிப்பிட்ட நேரங்களில் வண்டிகளை விட ஆரம்பித்தார்கள்.

(முற்பகல் 11-50)

இது அரசாங்க அலுவலகங்களுக்கோ அல்லது ஊழியர்களுக்கோ, பள்ளிக்கூட மாணவர்களுக்கோ பொருத்தமான நேரம் இல்லை, உலக பாங்க் சொன்ன குறிப்பட்ட நேரங்கள். அதனால் என்ன ஆயிற்று? உலக வங்கி கொடுத்த நேரத்தின்படி அலுவலக நேரங்கள் மாற்றப்பட்டதால் என். ஜி. ஓ. போராட்டத்தில் கூட அவர்கள் ஆபீஸ் நேரம் மாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் நடத்திய போராட்டத்திற்குப் பிறகு மறுபடியும் நோக்கங்கள் இப்போது மாறுபட்டுள்ளன. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு மோசமான நிலையை, நம்முடைய பழக்கவழக்கத்தையே மாற்றும் அளவிற்கும் பொருளாதார நிலையையே மாற்றத் தக்க அளவிற்கும் அவர்கள் நிபந்தனை போடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, நாம் மாநில சுயாட்சி கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறபோது, இந்தப் பிரச்சினை இருக்கின்ற சுயாட்சியை மறுக்கும் சூழ்நிலை இருக்கிறது. இவர்கள் என்ன சொல்வார்கள், நாங்கள் சொல்லக்கூடிய நபர்களை அந்த போர்டில் வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். அந்த போர்டில் அவர்களுக்கு வேண்டியவர்களை நியமித்துக் கொள்ளலாம். அந்த அளவிற்கு தலையிடுகிற முறை, அந்த அளவிற்கு அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. இந்த போர்டில் 12 பேர் இருப்பார்கள். அதில் இரண்டு பேர் வியாபாரத் துறையில் இருப்பவர்கள் வருவார்கள். அப்படி வியாபாரத் துறையில் இருந்து வருபவர்கள் எப்படி இருப்பார்கள்? பெரிய முதலாளிகள்தான் வருவார்கள். நான்-அபிஷியல் மெம்பர்கள் 6 பேர் என்று வருகிறபோதும், அதிலும் அந்தத் துறைகளில் அனுபவம் பெற்றவர்கள்தான்



வருவார்கள். பொதுமக்கள் அந்த போர்டில் இடம் பெறுவதற்கு எந்தவிதமான நிலைமையும் இல்லை. நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், பணத்தைக் கொடுத்தால் கூட அதை நாம் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால் இது ஸ்தல சுய ஆட்சிக்கு இருக்கும் உரிமைகளையும் பாதிக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட காரணத்தால் நான் இதை கடுமையாக எதிர்க்கிறேன்.

இன்னொன்று, உலக வங்கியிடமிருந்து நிதி பெற்று இருக்கும் நாடுகள் எந்த கதிக்கு ஆளாகிக்கொண்டு இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். நான் உங்களிடத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், அது அரசாங்கத்தினுடைய அன்றாட அலுவலில் ஒன்றாகக் கருதப்படும். ஆனால் இன்றைய தினம் இந்த பில் பாஸாகிற நேரத்தில், பார்வையாளர் காலரியில் உலக வங்கியின் நிபுணர்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்றால் எந்த அளவிற்கு யார் யாருடைய கருத்து எப்படியிருக்கிறது என்பதை அவர்கள் உன்னிப்பாக மிக அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் இதிலே எத்தகைய அக்கறை அவர்களுக்கு இருக்கிறது என்பதை நிச்சயமாக நாம் புரிந்து கொள்ள முடியும். எனவே தான், இந்த பில் பாஸாவதில் உலக வங்கிக்கு அதிக அக்கறை இருக்கிறது, ஐக்கிய நாட்டு நிறுவனத்திற்கு அதிக அக்கறை இருக்கிறது. ஆனால் இந்த பில் நிறைவேற்றப்படுவதால் நமக்கு இருக்கும் உரிமைகள் பறிக்கப்பட்டு, நமக்கு இருக்கும் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, போய்விடும் என்பதைத் தெரிவித்து, அந்தக் காரணத்தால்தான் இந்த மசோதாவை கடுமையாக நான் எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றினால்தான் நாளைக்கு பணம் கொடுப்பார்கள் என்று சொன்னால், இன்னும் 6 மாதம் கழித்து நாம் பணம் பெற்றுக் கொள்ளலாம். மக்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகிற அளவிற்கு நிலைமைகள் இருக்கக் கூடாது. இந்த பில் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் இதை பொறுக்குக் குழுவிற்கு விடுங்கள். அதன் பிறகாவது நிறைவேற்றலாம். ஏற்கெனவே சென்னை மாநகராட்சி இந்தப் பிரச்சினைகளை கவனித்து வருகின்றது. அதன் உரிமைகளைப் பறிக்கக் கூடாது. நிதி வருகிறது என்ற காரணத்திற்காக இது ** ** பெற்றுக் கொள்கிற அளவிற்கு இல்லாமல் இருக்க வேண்டும், இதை நிறைவேற்றக் கூடாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : * * * * என்று சொன்னது — It does not speak well of the organisation or of the House. ஆகவே, அதை நீக்கிவிடும்படி கேட்டுக்கொள் கிறேன். That is most unsatisfactory or unfair.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்பதை நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் இதை கடுமையாக எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் ஏன் அப்படிக் கூறுகிறார்கள் என்பது வேடிக்கையாக இருக்கிறது. சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் இன்றையதினம் குடிநீர் வழங்குதலும் கழிவுநீர் அகற்று தலும் எப்படி நடக்கிறது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில், ஆங்காங்கு பாதாளச் சாக்கடை மூடப்படாமல் சாலையோரங்களில் திறந்திருக்கிறது. அந்தக் குழியிலே பலர் ஆங்காங்கே தடுக்கி விழுகின்ற நிலைமைகள் எல்லாம் ஏற்படுகிறது. குடிநீர் குழாய் உடைந்துவிட்டால் சாலை எல்லாம் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளால் மாநகராட்சியின் பணிப் பளு அதிகமாக இருப் பதால் சரிவரச் செயல்பட முடியாமல் அங்கே வாழ்கின்ற மக்களுக்குப் பெரிதும் இடையூறாக இருக்கிறது, அப்படி இருக்கிற பிரச்சனையை தனி வாரியம் அமைத்து, செம்மையான முறையில் செயலாற்ற அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே கழிவுநீர்ப் பிரச்சனை மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. கூவத்தைப் பொறுத்தமட்டில் அந்தப் பகுதியில் ஒரு மைலுக்கு அப்பாலே செல்லும்போது மணக்க ஆரம்பித்து விடுகிறது. அந்த மணம் சென்னை மாநகரம் பூராவும் பரவி விடுவதால் அதை சுத்தமாக்க அரசு ஒரு சிறிய முன்னேற்றத்தைச் செய்து, ஒரு

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திட்டத்தை அமைத்து, ஆங்காங்கே கூவம் ஆற்றின் இரு கரை களிலும் பூந்தோட்டங்களை அமைத்து அதிலிருந்து வருகின்ற நறுமணத்தால் கூவம் ஆற்றிலிருந்து வருகின்ற மணத்தை விரைவிலே போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்னை மாநகரில் ஆங்காங்கே கழிவு நீரை அகற்றும்போது சாலை மத்தியிலே, அங்கிருக்கிற கழிவுநீர் மூடியை மீண்டும் மூடாமல் அப்படியே போட்டுவிட்டுப் போகிறார்கள். அதனால் ஆபத்து ஏற்படுகிறது. அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் பற்றியது என்றாலும் குடிநீர்ப் பிரச்சனை பற்றிய ஒரு கருத்தை இங்கே கூறிக்கொள்ள விரும்பு கிறேன். வறட்சி காலத்தில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க அரசு திட்டம் தீட்டி செயலாற்றி வந்தது. அதன்கீழ் அரசு கிராமப் பகுதிகளை பலதரப்பட்டப் பிரிவாக முக்கியமாக மூன்று பிரிவுகளாகப் பிரித்தது. முதல் பிரிவு குடிநீர் இல்லாத கிராமம், இரண்டாவது பிரிவு குடிநீர் இருந்தும் பயன்படுத்த முடியாமல் இருக்கிற கிராமம், மூன்றாவது பிரிவு குடிநீர் இருந்தும் போதுமான அளவு இல்லாத கிராமம் என்ற வகையிலே பிரிக்கப்பட்டு, முதல் பிரிவுக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்தும், இரண்டாம் பிரிவை அதற்கடுத்தும், மூன்றாம் பிரிவை அதற்கடுத்தும் நிறைவேற்ற வேண்டுமென்று திட்டம் வகுத்து செயல்பட்டு வந்தார்கள்.

ஆனால் கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு தமிழகத்தில் பெய்த கடும் மழையால் ஆங்காங்கு இப்படிப்பட்ட பிரச்சனைகள் நீங்கியிருக்கிறது. ஆகவே, அந்த செயல்முறையை மாற்றியமைக்க பரிசீலனை செய்து, மாற்றியமைத்து கிராமத்திலே எந்த அளவுக்கு குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க முடியுமோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கேற்ற வகையில் திட்டம் தீட்டிச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முற்படுகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மசோதாவை நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கெனவே ஒரு அதாரிட்டி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் அதாரிட்டி இருக்கிறது; அதற்கு ஸ்டாச்சுட்டரி பவர்ஸ்' கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு

மட்டும்தான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை இந்த மசோதாவின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிற 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸில்' விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, ஜனதா கட்சித் தலைவர் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது ஏற்கெனவே இருக்கின்ற குடிநீர் வசதிகளோடு இதை ஒப்பிட்டுப் பேசினார். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இது சென்னை கார்ப்பரேஷனுக்கு மட்டும் தனியான ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்ற பகுதியை படித்து இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அதை விளக்கமாகப் படிக்கிறேன்.

'Accordingly, pending creation of a statutory authority, the Government created an ad hoc authority called the Madras Metropolitan Water Supply and Sewerage Board with a Special Officer, an Engineering Director and a Financial Director, to start with....'

ஏற்கனவே ஒரு அட்ஹாக் அதாரிட்டி இருக்கிறது. ஆக ஒரு நல்ல நோக்கத்தோடுதான் ஒரு விரிவான சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதிய அமைப்பு, இப்போது சட்டரீதியாக இந்த அமைப்பு அமைய இருக்கிறது. ஆகவேதான் இதில் ஏதாவது கோளாறுகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக நல்ல முறையில் பரிசிலனை செய்து நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு நிறைவேற்றப்படுமானல் நலமாக இருக்கும். ஆகவே இதனை பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். இருந்தாலும் இது உடனடியாக நிறைவேற்றப் படவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்ற காரணத்தினால் நான் கேட்டிருக்கிற திருத்தத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் அறிவேன் இருந்தாலும் கூட அமைய இருக்கின்ற அந்த போர்டு அமைக்கப்படும்போது சிலவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில் இங்கே இருக்கின்ற பெரும்பான்மையோரால் விரும்பத்தகாத முறையில் இருக்கும் கூவம் நதியானது நிச்சயமாக சீரமைக்கப்பட்டாக



வேண்டும். ஏற்கனவே இருந்த அரசு அந்த முயற்சியில் ஈடுபட்டு தோல்வி அடைந்ததை நான் நன்றாக அறிகிறேன். ஏறத்தாழ 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டும் முன்னால் அது இருந்த நிலையைவிட அதிகமான மாறுதல் எதுவும் அடையவில்லை என்பதை எண்ணுகிறபோது இதைச் செய்து முடிப்பதற்கு நல்லமுறையில் சரியான திட்டம் வகுக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அந்தக் கூவம் நதி இந்த நகரத்தின் மத்திய பகுதியெல்லாம் செல்கிறது. அனைத்து மக்களையும் பாதிக்கின்ற வகையில் அது இருக்கின்ற காரணத்தால் கூவம் நதியை சீர்படுத்துவதற்கான திட்டங்களை இந்த போர்டின் வழியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த போர்டு அமைப்பது பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செயல் பட்டுக்கொண்டிருக்கும்போது நாமினேட்டட் அங்கத்தினர்களைப் போடுவது ஜனநாயக அமைப்புக்கு மாறாக இருக்கிறது என்ற கருத்தினைக் கூறினார்கள். அதனை மறுக்க இயலாது. இருந்தாலும் கூட சென்னை கார்ப்பரேஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசால் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையில் பல்வேறு காரியங்களில் இம்மாதிரியான அமைப்புகள் வாயிலாக செயலாற்றி வருகிறபோது அதை நாம் எதிர்க்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், இம்மாதிரியான அமைப்புக்கள் ஏற்படுத்தியும் நல்ல முறையிலே செயலாற்ற வாய்ப்பு இருக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த போர்டை அமைக்கிறபோது அதற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது முக்கியமான பொறுப்பு அரசிடம் இருக்கிறது, ஆகவே அதற்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது அரசியல் நோக்கம் அதில் கலக்காமல் நல்ல நோக்கத்தோடு அனைத்து மக்களின் நன்மையைக் கருதி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உலக வங்கியிலிருந்து பெருமளவு நிதி பெறுகிறோம். இந்த நிதி வீணாகச் செலவு செய்யப்படாமல் ஜாக்கிரதையாகக் கவனிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஜனநாயக முறைப்படி பார்க்கிற போது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களால்தான் இம்மாதிரியான காரியங்கள் செய்யப்பட வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட இந்த அதிகாரங்கள் இம்மாதிரியான நாமினேட்டட் போர்டுக்கு கொடுக்கும்போது ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதோடு சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் மவுண்ட் ரோட் போன்ற முக்கியமான பகுதிகளில் மட்டும் அரசு பல்வேறு துறைகளில் அவற்றை மேம்பாடு அடையச் செய்வதற்கான

திட்டங்களை வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் புறநகரங்கள், எக்ஸ்டென்டட் ஏரியாஸ் என்று சொல்லக்கூடிய புறநகரங்களில் அவற்றின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலைதான் இருக்கிறது. ஒரு ஐந்து மைல் அந்தப் பக்கம் சென்று பார்க்கிறபோது அங்கு வசிக்கக்கூடிய மக்களுக்கு குறைந்த அளவு தேவைகள் கூட இதுவரை கொடுக்கப்படவில்லை. குறிப்பாக குடிநீர் வசதி, ரோடு வசதிகள், லைட் வசதிகள் போன்ற தேவைகள் கூட இதுவரை பூர்த்தி செய்யப்படாமல் அவர்கள் பெயரளவில் நகர வாசிகள் என்றிருக்கிறார்களே தவிர கிராமத்தில் வசிப்பதைவிட மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை மறுக்க இயலாது. ஆகவே அதையும் கருத்தில்கொண்டு முதல் கட்டமாக புறநகர்ப் பகுதிகளுக்கு இந்தத் தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செயல்பட இந்த போர்ட் முன்வர வேண்டுமென்று கூறி இம்மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவது அவசியமாயிருக்கும், அது நன்மை பயக்கும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு. மேலே வடிவத்தில் இதைப் பார்க்கிறபோது ரொம்ப அழகாக இருக்கிறது. சென்னை நகரத்தில் அனைவருக்கும் குடிநீர் கிடைக்கப் போகிறது, கழிவுநீர் எல்லாம் அகற்றப்பட போகிறது என்கிறமாதிரி இந்தச் சட்ட முன்வடிவின் மேல் வடிவம் தோற்றம் தருகிறது. உள்ளே பார்த்தால் அதன் எஸென்ஸ் சிக்கலானது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் திரு. கோவிந்தராசன் அவர்கள் குறிப்பிட்டமாதிரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

வளர்முக நாடுகளில் ஐ. நா. நிறுவனம் தன்னுடைய வலிவை உண்டாக்கிக் கொள்வதற்காக செய்கிற சதி என்று தான் நான் இதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். குறிப்பாக, சென்னை நகர குடிநீர் வடிகால் வாரியத்தை சீர்படுத்துகிறோம் என்ற நிலையில் நாளைக் காலையே இதை அமலாக்க வேண்டும் என்று இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு இந்தச் சபையில் வந்திருக்கிறது. இதை நான் எதிர்த்துப் பேசினாலும் இது நிறைவேறும் என்று எனக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் ஊதுகிற சங்கை ஊதி வைக்கிறோம். அது விடிகிறபோது விடியட்டும் என்று ஊதுகிற சங்கை நாங்கள் ஊதுவோம். அதைப்பற்றி கவலையில்லை.



இந்த மசோதா பிரகாரம் போர்ட்டு அமைக்க வேண்டும். அவர்கள் வரி விதிப்பார்கள், அவர்கள் வசூலிப்பார்கள். இப்படி பல போர்ட்கள் உள்ளன. காதிக்கு என்று ஒரு போர்ட் இருக்கிறது, டிரான்ஸ்போர்ட்டுக்கு என்று ஒரு போர்ட் இருக்கிறது. இப்போது இந்த போர்ட் வரயிருக்கிறது. இப்படிப்பட்ட போர்ட் என்ற அமைப்பே ஜனநாயகத்தன்மையற்றது, ஜனநாயகத்திற்கு உகந்ததான நிலையற்றது, இது ஜனநாயகத்திற்கு உகப்பானதல்ல. குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நிராகரித்து விட்டு இப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்குவது என்பது சரியல்ல என்று கூற ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இதை நிறைவேற்றுவதற்கான நிர்ப்பந்தத்தை உருவாக்கியிருக்கிறது மத்திய அரசு.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் இப்படிப்பட்ட வாரியங்கள் அமைப்பது தவறு என்று சொல்கிறார்கள். அது அவர்களது கட்சிக் கொள்கை என்ற அடிப்படையில்தான் பேசுவார்கள் என்று நினைக்கிறேன். இதேமாதிரி முறை கேரளாவிலும் அமுல்படுத்தப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். அவர்களது கட்சிக் கொள்கை அங்கே மாற்றப்படுகிறதா அல்லது அதுவும் இதுவும் ஒன்று என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: கேரளாவில் நடப்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆட்சி அல்ல என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சி தனித்து இயங்க கொஞ்சம் நாளாகும்.

(பிற்பகல் 12-10)

எனவே இந்த மசோதாவின் மீது குறிப்பாக உலக வங்கியினுடைய உதவியைப் பெற்று, ஐ. நா. நிறுவனத்தின் உதவியைப் பெற்று, மற்றும் பல சுகாதார நிறுவனங்களின் உதவியைப் பெற்று, மத்திய அரசு இதை ஒரு நிர்ப்பந்தத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள். மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இதை ஆதரிப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். நான் எழுந்த உடனேயே திரு. அம்பிகாபதி இதை எதிர்ப்பார் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். சென்னை மாநகரத்தில் 45 லட்சம் மக்கள் வாழக்கூடிய சென்னை மாநகரம், இன்னும் நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு 60 லட்சமாக மக்கள் தொகை வளரும். அவர்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்குவதற்கும், கழிவுநீரை அகற்றுவதற்கும் ஜனநாயக அமைப்புகள் தான் இருக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட போர்டுகள் இருக்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிலைமை என்ன? சென்னை நகர மக்கள் கூவத்தின் மணத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற காலத்தில் மக்களுக்கு என்ன சொல்லப்பட்டது? கூவம் மணக்கும், கோழி பறக்கும் என்றெல்லாம் கூறப்பட்டது. கூவம் பக்கத்தில் தான் நாங்கள் இன்றைக்கு இருக்கிறோம். இன்றைக்கு அங்கே வீசுவது நறுமணம்தானா? அது மட்டுமல்ல. சென்னை நகர மக்களுக்கு வீராணம் தண்ணீர் வரும், பைப்புகள் இதோ தயாராகி விட்டன, காவேரித்தாய் புறப்பட்டு விட்டாள், தயாராகி விட்டாள்; சைதாப்பேட்டையில் இதற்கென்று உருவத்தையும் அமைத்து வைத்து, குடத்தை தயாராக வைத்துக்கொள்ளுங்கள், தண்ணீர் இதோ, உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா குடத்தோடு வாருங்கள், தண்ணீர் கொட்டப் போகிறது, தலையை நீட்டினால், எவ்வளவு எண்ணெய் தேய்த்திருந்தாலும் எண்ணெய் எல்லாம் போய்விடும். தயாராக இருங்கள். புறப்பட்டாகி விட்டது, சிதம்பரத்திலிருந்து ரயிலில் புறப்பட்டாகிவிட்டது என்றெல்லாம்....

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் கூவத்தை காட்டினார்கள், தண்ணீரைக் காட்டினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அவசர காலத்தில் கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னை நகர மக்களுக்குக் கிடைக்கப் போகிறது என்று அன்றைக்கு அவசர காலத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு இவர்களும் தாளம் போட்டார்கள். இப்போது ஆட்சியில் இருக்கின்றவர்களும் தாளம் போட்டார்கள். அந்த கிருஷ்ணா நதி தண்ணீரை இதுவரை காணோம். கோதாவரி தண்ணீரையும் காணோம். அதை அங்கத்தினர் அவர்கள் விளக்குவார்களா?

திரு. மு. அம்பிகாபதி: அவசர நிலை பிரகடனம் செய்த போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதை ஆதரித்தது என்று சொல்கிறார்கள். அப்படியல்ல.

திரு. சி. ஆறுமுகம்: அவசர நிலை அறிவித்தவுடனேயே நீங்கள் அதை ஆதரித்து தீர்மானம் போட்டீர்கள்....

திரு. மு. அம்பிகாபதி: திராவிட முன்னேற்றக் கழகத்தை 1971-ம் ஆண்டு தேர்தலில் கூட ஆதரித்தோம். இல்லையென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட பின்பும் அதை ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஆறு மாத காலம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. சி. ஆறுமுகம்: 25-ம் தேதி இரவு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. 27-ம் தேதியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூடி, அதை எதிர்த்து தீர்மானம் போட்டோம்.

(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் சொல்ல விரும்புவது, அவசர நிலை காலத்தில், அதன் அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சிகளையும், எதிர்க் கட்சிப் பத்திரிகைகளையும் அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்து கொண்டு இருந்தது அப்போது இருந்த ஆட்சிதான்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்....

திரு. க. சுப்பு: கருத்தைச் சொல்லவில்லை....

திரு. எஸ். ஆர். இராதா: கருத்தைச் சொன்னார்களா இல்லையா என்பது வேறு விஷயம். (குறுக்கீடு) திரு. சுப்பு அவர்கள் அவதூறு சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். அவதூறா இல்லையா என்பதும் வேறு விஷயம். இங்கே திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. அரங்கநாதன் அவர்களும் கிருஷ்ணா நதித் தண்ணீர் எங்கே, கோதாவரித் தண்ணீர் எங்கே என்றும் கேட்டார்கள். இரண்டையும் சேர்த்து எப்போது வரும் என்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான இந்த மசோதாவை பரிசிலனை செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வேறு பிரச்னைகளைப் பேசிக் கொண்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. இந்த மசோதா மிக மிக முக்கியமான மசோதா. எந்தவிதத்தில் நம்மை இது பாதிக்கும் என்பதை நாம் தீவிரமாக ஆலோசித்துப் பார்த்து முடிவு எடுக்க வேண்டிய மசோதா. இதை நாம் ஏற்றுக்கொள்வதால், நாளடைவில் என்ன ஆகும் என்பதையெல்லாம் நாம் ஆலோசனை செய்ய வேண்டும் என்பதால் அங்கத்தினர்கள் இதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு, இதில் அரசியலைப் பேசாமல், அவற்றையெல்லாம் மாலை 6 மணிக்கு மேல் மேடையில் வைத்துக் கொள்ளலாம், இங்கு அது தேவையில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : இன்றைய தினம், அன்றைக்கு நாங்கள் அவசர கால நிலையை ஆதரித்தோம் என்று சொல்லப் பட்டது. 1971-ல் தி. மு. க. வையும் ஆதரித்தோம். அவசர கால நிலையை எதிர்த்து அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ராஜிநாமா செய்யவில்லை என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, இன்றையத் தினம் குறிப்பாக சென்னை மாநகரில் இருக்கக்கூடிய மக்கள் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. 60 லட்சத்தை நெருங்கிக் கொண்டு போகிறது. இங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட வேண்டும். காவேரியைக் காட்டி சென்னை மக்கள் ஏமாந்தார்கள். இப்போது கிருஷ்ணாவைக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு, குறிப்பாக........ (குறுக்கீடு) எனவே, குறிப்பாக இந்தச் சட்ட முன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கடனைப் பெற்று, வாங்கி, இந்த போர்டை அமைத்து, நிர்வாகம் அனைத்தையும் அவர்கள் கையிலே கொடுப்பது என்று சொன்னால், சென்னை மாநகர மக்களை கசக்கிப் பிழியக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று கூறி, இந்த மசோதாவை திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய நோக்கம் வரவேற்கக் கூடியது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். மிக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு மசோதா என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்நிலையில் பலவிதமான சமூக சட்டப் பிரச்னைகளை எழுப்புகின்ற இந்த மசோதா, சென்னை பெருநகரப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களை மட்டுமல்லாமல், சட்டபூர்வமாக உருவாக்கப் பட்டிருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்களையும், அவர்களுடைய அதிகாரங்களையும் பாதிக்கக் கூடிய வகையில் அமைக்கப் பட்டிருக்கிறது என்பதை, இதை படித்துப் பார்த்தால் தெரிகிறது. ஆகவே, இந்த மசோதா விரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பிறகுதான் நிறைவேற்றப் பட வேண்டும். அப்போதுதான் இந்த மசோதாவிலே இருக்கின்ற பல்வேறு ஷரத்துக்களை, அதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற விளைவுகளை நாம் நன்கு ஆய்வு செய்து அதை எடுத்துக் கொள்ள வேண்டும், எதை விட வேண்டுமோ, அதை விடுவதற்கு, இதை தீர்க்கமாக ஆலோசனைக்கு எடுத்துக் கொண்ட பிறகு, நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் இது பயனுள்ள சட்டமாக இருக்கும் என்ற காரணத்தால், இதை கூட்டாய்வுக் குழுவிற்கு விடவேண்டுமென்ற கோரிக்கை எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.



ஆனால், இன்றையதினமே இதை நிறைவேற்றி ஆக வேண்டும், இல்லாவிட்டால் நமக்குக் கிடைக்கக்கூடிய பணம் கிடைக்காமல் போகும், ஆகவே, இதை நிறைவேற்றியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்று அதற்குப் பதில் சொல்வார்களானால். அது ஒரு நல்ல பதிலாக இருக்காது. ஒருவேளை இந்த ஒரு காரணத்தைக் காட்டி, அதை அவசர காலத்தில் இவ்வளவு ஒரு முக்கியமான சட்டத்தை இவ்வாறு அமைத்து, சபை முன் வைத்து, இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கிறார்களே என்ற ஒரு ஐயப்பாட்டை ஏற்படுத்தி விடுவதாக இது அமைந்து விடும். ஆகவே, அதை ஒரு காரணமாகச் சொல்லி, உடனடியாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தயவு செய்து சொல்ல வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே நம்மிடத்திலே ஒரு குடிநீர் வடிகால் வாரியம் என்ற ஒரு வாரியம் இருந்து வருகிறது. அந்த வாரியத்திற்கு சட்டபூர்வமாக சில அதிகாரங்களை நாம் தந்தோம். அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவர்கள் நம்முடைய மாநிலம் முழுவதும் திட்டங்களை வகுத்தார்கள். அவைகளை சில இடங்களில் நிறைவேற்றி இருக்கிறார்கள். சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. வடிகால் திட்டங்களும் அப்படித்தான், ஆனால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் காரணமாக, இன்றைக்கு எவ்வளவு தொல்லைகள், பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வரையறை இல்லாத, வரையறுக்கப்படாத ஒரு அதிகாரத்தைக் கொடுத்த காரணத்தால், அவர்கள் இஷ்டப்படி எதை, எந்த அளவுக்கு விரும்பினார்களோ அந்த அளவுக்கு ஸ்தல ஸ்தாபனங்களை கலந்து கொள்ளாமல், அவர்கள் திட்டங்களை நிறைவேற்றிய காரணத்தால், பல திட்டங்கள் வரையறை இல்லாமல் இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்பட்ட காரணத்தால், சில ஸ்தல ஸ்தாபனங்கள் கடன் பட்டு, அந்த சில ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருகின்ற வருமானத்திலே கொடுக்க வேண்டிய கடனுக்கு வட்டி கொடுத்து விட்டு, இன்றைக்கு என்ன, நாளைக்கு என்ன, அடுத்த மாதம் வந்தால் என்ன செய்வது, பணியாளர்களுக்கு எப்படி சம்பளம் கொடுப்பது, ஆசிரியர்களுக்கு சம்பளம் வந்தால் அந்த ஆசிரியர்கள் சம்பளத்தை டைவர்ட் செய்து அதை நாம் இன்றைக்கு மினியல்சுக்குக் கொடுக்கலாம் என்ற வகையிலே ஒரு தலைப்புக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளத்தை இன்னொரு தலைப்புக்கு டைவர்ட் செய்து, இன்றைக்கு என்ன, நாளைக்கு என்ன, என்ற நிலைமைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20.)

ஸ்தல ஸ்தாபனங்கள் முறையாக இயங்குவதற்கு, அவர்களுடைய அதிகாரங்களை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு, உரிமைகளை நிலைநாட்டுவதற்கு ஏற்கெனவே இயங்கிய குடிநீர் வடிகால் வாரியம் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்காதது ஒரு காரணம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. அந்த அடிப்படையில் பார்க்கும்போது அது மிகப் பெரிய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அதிகாரத்தை புதிதாக குடிநீர் வடிகால் வாரியம் பெருநகர்ப் பகுதிகளில் ஏற்படுத்தப் போகிறது—இந்தச் சட்டத்தின் வாயிலாக அதிலே ஏற்படப் போகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

சபாநாயகர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். உட்கார வேண்டுமென்று சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன். இவ்வளவு பெரிய மசோதாவை, இவ்வளவு செக்ஷன்கள், கிளாஸ்கள் ஆகியவற்றைப் படித்துவிட்டு ஐந்து நிமிஷத்தில் என்னால் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு வார்த்தையும் ஆராயப்பட வேண்டிய வார்த்தை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் கெட்டிக்காரர். சுருக்கமாக விளக்கி, முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: கெட்டிக்காரர் என்று சொல்லுவதில் உள்ள 'இனன்டோ' எனக்கு என்ன என்று தெரியும்.

முதலில் போர்டு என்று போட்டிருக்கிறார்கள். போர்டா விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். முக்கியமாக ஒரு விஷயத்தை ஏற்றுக் கொண்டிருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறேன். 'டிரேட் எஃப்ளுவன்ட்' பற்றி ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். டிரேட் எப்ளுவன்ட் மட்டுமல்ல, சாதாரண வீடுகளில் இருந்து வருகிற அசுத்தமாக இருந்தாலும் அவைகளை எல்லாம் சுத்தப் படுத்தி வடிகாலுக்கு அனுப்பி அகற்றுகிற ஒரு பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், அரசாங்கத்திற்கும் உண்டு என்ற ஒரு உண்மையை ஏற்றுக் கொண்டிருப்பதற்காக, அதற்குச் சட்டத்தில் இடம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வியாபார ஸ்தலங்களில் இருந்து வருகிற கழிவு நீரை அகற்றும் பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உண்டு. ஸ்தல ஸ்தாபனங்கள் வியாபார நிறுவனங்களிடமிருந்து வருமானத்தை பெறுகின்றது, வரியைப் பெறுகின்றது. ஆகையால் அவர்களுக்கு ஒரு மாற்றுப் பயனை அளிக்க வேண்டும். அப்படி அளிப்பதுதான் வரியைப் பெறுவதற்கே நியாயம் என்ற



வகையில் இந்த ஷரத்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் எப்ளுவன்டை ரிமூவ் செய்கிற பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரும்போது இன்றைக்கு பெருநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய பல்லாவரம், குரோம்பேட்டை பகுதிகளில் எல்லாம் பல தோல் ஷாப்புகள் இருக்கின்றன. டிரேட் எப்ளுவன்ட் என்ற முறையில் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. லைசென்ஸ்களுக்கான கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். அவ்வாறு அவர்கள் கட்டணத்தைச் செலுத்துகிறபோது அதை ரிமூவ் செய்கிற ரெஸ்பான்சிபிலிடி—

"The entire responsibility of the removal of the excretions and effluents whatever that may be it lies on the shoulder of the statutory body whether it is Municipality or it may be a Board."

என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்தத் தத்துவத்தை மாநிலம் முழுவதும் எக்ஸ்டென்ட் செய்வதற்கு ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், போர்டுக்கும் இருக்கக்கூடிய அதிகார வரையறைகள், கடமைகள், உரிமைகள் என்ன என்பதைச் சொல்லும்போது கடைசியாகச் சொல்லுகிறார்கள்—

"any other matter which is supplemental, incidental or consequential to an of the above functions."
'supplemental', 'incidental', 'consequential',

என்று என்னென்ன சொல்லியிருக்கிறார்கள்? எல்லாவற்றையும் போட்டு அடக்கி வைத்து விட்டு மற்றதெல்லாம் அதிகாரம் எனக்குத்தான், என் கையில்தான் என்று செய்வதுமாதிரி ஸ்தல ஸ்தாபனங்கள் செய்வது நன்றாக இல்லை, விளக்கம் அளித்தால் நலமாக இருக்கும். அடுத்த கிளாசில் சொல்லுகிறார்கள்—

'The decision of the Government shall be final.'

அதிலே ஆர்பிட்ரேஷன் இல்லாமல் இருப்பதால் இன்றைக்கு நடைமுறைகள் எப்படி இருக்கின்றன என்று பார்த்து ஸ்தல ஸ்தாபனங்கள் தீர பரிசீலனை செய்த பிறகு போர்டுக்குப் போகிறது. அந்த போர்டு மறுபடியும் அதை ஆய்வு செய்து தீர்க்கமாகப் பரிசீலனை செய்கிறது. இப்படி ஸ்தல ஸ்தாபனங்களும், போர்டும் தீர்க்கமாகச் செய்ததற்குப் பிறகு அரசாங்கம் அவைகளை மாற்றலாம், அதுதான் பைனல் என்றால் அப்படிச் சொல்லக்கூடிய நிலைமை வந்தால், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அது சரியான நிலைமையை ஏற்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செக்ஷன் 6 (2) (xii)இல்
'to determine, levy and collect taxes, rates, fees, charges, surcharges rents and costs and expenses....''

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரேட்ஸ் என்று சொல்கிறார்கள் ஒத்துக் கொள்கிறேன், பீஸ் என்று சொல்கிறார்கள் ஒத்துக் கொள்கிறேன், சார்ஜஸ், சர்சார்ஜஸ் என்று சொல்கிறார்கள் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் 'and other costs' என்று சொன்னாலும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் 'collect tax' என்று சொல்வது எந்த வகையிலே சட்டப்பூர்வமாக நிலை நிறுத்தக் கூடியது என்று எனக்குத் தெரியவில்லை. ரேட் என்பதற்கும், சார்ஜ் என்பதற்கும், டாக்ஸ் என்பதற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. அடுத்து 34-வது கிளாஸிலேயும் டாக்ஸ் என்று சொல்கிறார்கள். டாக்ஸ் என்றால் என்ன? டாக்ஸ் என்றால் அதன்மூலமாக டாக்ஸ் பேயருக்கு கரஸ்பான்டிங் பெனிபிட் இருக்க வேண்டும். அப்படி கரஸ்பான்டிங் பெனிபிட் என்ன என்று அசஸ் செய்யமுடியாது இதிலே

There may be common benefits available to all tax payers, individual tax payers. There should be the quantum of benefit corresponding to the amount that he pays.

என்பது தான் டாக்ஸ். ஆனால் வாட்டர் டாக்ஸ் என்று சொல்கிறார்கள். வாட்டர் சார்ஜ் என்று இருக்கலாம். வாட்டர் காஸ்ட் என்று இருக்கலாம். வாட்டர் பீஸ் என்று இருக்கலாம். ஆனால் வாட்டர் டாக்ஸ் என்று எந்தச் சட்டத்திலே இருக்கிறதோ தெரியவில்லை.

I do not understand in what circumstances, in what implications and in what ideas, the Law Department has incorporated the word 'tax', which connotes a different meaning. There cannot be a correspondieg benefit to the tax payer. You can charge separately for the water that is supplied. You can say water fees. You are going against legal discipline.. You are going against the legal norms. Under legal discipline, there cannot be water tax; but there can only be water charge.

ஹவுஸ் டாக்ஸ் இருக்கிறது. அது ஆக்குபேஷன் என்ற முறையிலே வருகிறது.'

If this matter goes to the Court, there will be different meaning and different interpretation. There will be a lot of Scopo for the lawyers to argue either this way or that way. To that extent, I am thankful to the Hon. Minister for providing this lacuna in the law. This will enable the lawyers to have progonged litigation and to file petitions after petitions to get the bill nullified *ab initio*.



ஆகவே இதை ரிமூவ் பண்ணவேண்டும்.

If you provide this in the law, it will be prolonged in the Courts. You are giving room for litigations.

My argument is that it is not proper to have this provision which is against legal norms, which is against legal convention. This is a provision which is not known to the lawyers or legal luminaries.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, லிட்டிகேஷனுக்கு இடம் கொடுக்கிற முறையிலே நான் வரவேற்கிறேன் என்று சொன்ன பகுதி, அது சரியாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மினிஸ்டர் பேசும்போது பதில் சொல்வாரே.

திரு. எம். ஏ. லத்தீப்: வாட்டர் டாக்ஸ் என்று சொல்வது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. இதை ஏற்றுக் கொண்டால் முக்கியமான பொறுப்பிலே உள்ள இந்த அவை இந்த சட்டத்தைக் கொண்டுவரும்போது டாக்ஸுக்கு என்ன இம்பிளிகேஷன், சார்ஜுக்கு என்ன இம்ளிகேஷன், பீஸுக்கு என்ன இம்ளிகேஷன் என்று பார்க்காமல் நிறைவேற்றுவது சரியல்ல, வாட்டருக்கு எப்படி நீங்கள் டாக்ஸ் போடலாம்?

THE HON THIRU S. RAGHAVANANDAM. Is the hon. Member agreeable to levying tax based upon the quantum of water supplied, that is metered and supplied. Of course, from the affluent section of the Society?

திரு. எம். ஏ. லத்தீப்: அதனாலேதான் சார்ஜ் என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் மீனிங் டிபரன்ட் ஆகப் போகும். கிளாஸ் 34-இல் சொல்லப்பட்டிருப்பதை தயவு செய்து மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன், இந்த கிளாஸ் 27, சப்-கிளாஸ் 2 அண்ட் 3, அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால் 'existing works should be immediately taken over by the Board' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது கார்ப்பரேஷன் ஒரு வேலையை நடத்திக் கொண்டிருக்கிறது. நீங்கள் அந்தப் பாரத்தைச் சுமந்து கொள்கிறீர்கள்.

I am happy but at the same time you must also bear the assets and liabilities and the entire responsibilities...

கார்ப்பரேஷன் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறதோ அந்த வட்டியை நீங்கள்தான் எற்றுக் கொள்ள வேண்டும், அதைப்போல முனிசிபாலிட்டிகள், ஸ்தல ஸ்தாபனங்கள்—வட்டி கொடுக்கக்கூடிய முனிசிபாலிட்டிகள்—ஸ்தல ஸ்தாபனங்கள்—வட்டி கொடுக்க மாட்டார்கள். அதையெல்லாம் நீங்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டு செய்ய வேண்டும். மற்ற பகுதிகளையெல்லாம் பார்க்கும்பொழுது...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 15 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத்தலைவர் :</u> ரிக்கார்டைப் பாருங்கள். தயவு செய்து பேரவைத் தலைவரே தவருகச் சொல்கிருர் என்று சொல்லாதீர்கள். 12-15 மணிக்கு ஆரம்பித்தீர்கள், கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஆகவேதான் நான் முதலிலேயே வலியுறுத்திச் சொன்னேன், இன்னும் நிறைய மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்லும் பொழுது ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> நான் முடிக்கப் போகிறேன். முடித்துக் கொள்கிறேன். இது ரொம்பவும் பாரதூரமான விளைவு. ஒவ்வொரு செக்ஷனுக்கும் ஒரு மணி நேரம் போதாது. அவ்வளவு இம்ப்ளிகேஷன்கள் இருக்கின்றன. பல விஷயங்கள் இருக்கின்றன. சென்னை நகரத்தைப் பாதிக்கும் விஷயங்கள் பல இருக்கின்றன. சென்னை நகர மக்களின் சொத்துரிமை, சென்னை நகரத்திலேயிருக்கின்ற மக்களின் பிரஜா உரிமை, சென்னை நகர பக்கத்திலே இருக்கின்ற மக்களின் தனி சுதந்திரம், ஸ்தல ஸ்தாபனங்களுடைய சட்ட பூர்வமாக வரையறுக்கப்பட்ட உரிமைகளைப் பாதிக்கும் முறைகள் ஆகிய முறைகளிலே பல ஷரத்துக்கள் இருக்கின்றன.

ஆகவே, தயவு, செய்து அமைச்சரவர்கள் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட முடியுமா என்று பார்த்து, அவர் முடியாது என்று சொல்லிவிட்டார், ஆகையினுல் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் போகவில்லை என்ருல், அப்படி இல்லை என்ருல்,

This Bill is going to be torn into pieces by the Courts.

<u>திரு. தீ. சு. நல்லதம்பி:</u> சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் ஏறக்குறைய 40 லட்சம் மக்களுடைய தலையில் ஒரு பெரிய சுமையைத் தூக்கி வைக்கின்ற ஒரு பில்லைக் கொண்டு வந்து நமது அமைச்சரவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிருர்கள்;



இதில் அரசியல் கண்ணேட்டம் பார்க்காமல் நமது மக்களின் எதிர்காலத்தைச் சற்று சீர்தூக்கிப் பார்த்து, வருங்கால சந்ததிகள் நம்மைத் தூற்ருமல் இருப்பதற்காக இதில் ஒரு பரிகாரத்தை தேடிக் கொள்ள வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் இப்படிப்பட்ட வாரியம் அவசியம்தானு? இந்த வாரியம் இல்லாமல் நமது மக்களுக்குப் பணியாற்ற முடியாதா என்பதை நமது மாண்புமிகு அமைச்சரவை உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வாரியத்தை உருவாக்கியவர்கள், எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்டவர்களால் உருவாக்கப்பட்டது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தாழ்மையுடன் 40 இலட்சம் மக்களின் சார்பாக நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த வாரியத்தின் சார்பாக நீங்கள் அமைத்து விட்டீர்கள். ஆனல் உள்ளபடியே இந்தப் பிரச்னையில் என்னைப் பொறுத்த வரையில், எங்களைப் பொறுத்த வரையில் இதை மிகவும் கண்டிக்கிருேம், இது தேவையற்றது என்று சொல்கிருேம். அப்படிச் சொல்கிற நேரத்தில், இதை ஒரு கமிட்டிக்கு அனுப்புங்கள், செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள், அதன் பிறகு கலந்து பேசி இதில் ஒரு முடிவிற்கு வரலாம், எனவே இதை கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிருேம்.

இன்றையதினம் உலக வங்கியின் மூலம் கடன் பெற்று அதிலிருந்து பணியாற்றலாம் என்று நினைக்கிறீர்கள். உலக வங்கியின் மூலம் கடன் பெறுகின்ற காலத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் போன்றவர்களும், இன்னும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னுர்கள். ஒரு வேலையினுடைய குத்துமதிப்பை வைத்து, 45 சதவீதம் அவர்கள் கொடுக்கின்ற நேரத்தில் அதற்காக நாம் ஏன் இப்படி வாரியத்தை அமைக்க வேண்டும்? சென்னை நகர எல்லைக்குள்ளே இப்படிப்பட்ட வாரியங்கள் தேவையில்லை, சென்னை நகரத்தில் பலப்பல அத்தாரிட்டிகள் இருக்கக் கூடாது, ஒரேயொரு அத்தாரிட்டிதான் இருக்கவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட சென்னை நகரத்தினுடைய வசதிக்காக இருக்கும் சென்னை மாநகராட்சியினுடைய அதிகாரத்தை நீங்கள் போட்டி போட்டுக்கொண்டு பறித்து, வாரியத்திடம் கொடுத்து விடக்கூடாது என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றையதினம் இதை உருவாக்கியவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்பதை சென்ற மாதத்திலே டெல்லியில நடந்த ஒரு மாநாட்டில், ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைப் பற்றி, மிகவும் எந்த அளவு விமர்சிக்கப்பட்டது என்பதை நாளிதழிலே நீங்களெல்லாம் கண்டிருக்கக்கூடும். அப்பேர்ப்பட்ட ஐ. ஏ. எஸ்.

அதிகாரிகள் கூடி இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத சமயத்தில் இப்பேர்ப்பட்ட விசித்திரமான ஒன்றை உருவாக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இது தேவையில்லையென்ற கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

ஏன் தேவையில்லையென்று கூறுகிறேன் என்றால், இன்றைய தினம் 7½% சென்னை மாநகராட்சி வரியோடுசேர்த்து குடிநீர் மற்றும் வடிகாலுக்காகவசூலிக்கிறநேரத்தில் ஏறத்தாழ 1,28,000வீடுகளுக்கு சர்வீஸ் இணைப்புஇருக்கிறது. 11,000 மீட்டர்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. அப்படியிருந்தும் சென்னை நகரத்திலே முன்பு ஏறத்தாழ இரண்டு ஆண்டுக் காலம் மழை இல்லா விட்டாலும் எப்படி எப்படி சமாளித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் நன்றாக உணர்ந்திருப்பீர்கள். ஆனால், இப்பொழுது வாரியம் அமைத்த பிறகு என்ன பலன் ஏற்படும் என்றால் சென்னையிலே உள்ள மக்கள் ஏமாற்றப்படுவார்கள். ஏன் ஏமாற்றப்படுவார்கள் என்றால் இன்றைக்கு 7½% வட்டி மட்டுமல்ல, ஏறக்குறைய 30½% வாங்க முடிவாகியிருக்கிறது. ஏன் வாங்கலாம் என்று கேட்கக் கூடாது. அந்த வாரியம் நினைத்தால் செய்யலாம், வட்டி போடலாம். இந்தச் சபைக்குக் கூட கட்டுப்படாத நிலைமை அந்த வாரியத்திற்கு இருக்கிறது.

அதைவிட பெரிய விசித்திரம் அந்த வாரியத்திலே யார், யார் இருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரப் பிரதிநிதிகளுக்கு அதில் இடமில்லை. இதற்குமுன் உங்களுக்குத் தெரியும், சென்னை மாநகராட்சி மன்றத்தின் சார்பாக, பல்கலைக் கழகத்திற்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்; தியாகராஜா கல்லூரிக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். பச்சையப்பன் கல்லூரிக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். ஏன், இன்னும் சொல்லப்போனால், எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும், பேரறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராக இருப்பதற்கு ஓட்டு போட்டு அனுப்பிய அத்தகைய பொன்னான மன்றத்திற்கு எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இதில் கிடைக்கவில்லை. அதிகாரிகளைச் சேர்ப்பதற்காக இங்கே இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவேதான் சொல்கிறேன், இது பல உள் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது, என்று, இதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது அல்ல. ஏதோ ஒரு வகையிலே எந்தமாதிரி எண்ணத்திலே உருவாக்கப்பட்டது என்பதைவைத்து (மணியடிக்கப்பட்டது) இதிலே தயவு செய்து நமது பேரவைத் தலைவரவர்கள் நேரம் கொடுக்க வேண்டும். இது சென்னை நகரத்தைப் பற்றியது, அதிலே தங்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை....



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, உறுப்பினர் ப.உ. சண்முகம் அவர்களும் பேச இருக்கிறார்கள். ஆகவே, நேரம் இல்லை. 12-40—க்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. தீ. சு. நல்லதம்பி: இந்த வாரியம் அமைத்தால் பொது மக்களுடைய வரிப் பணத்தால் ஏறக்குறைய ரூ. 6/- ரூ. 7 கோடிக்கு மேல் அந்த வாரியத்திலே இருப்பவர்களுக்குச் சம்பளமாக கொடுக்கக் கூடிய சூழ்நிலை நாளைக்கு வந்துவிடும். அப்படிப்பட்ட நிலையில், ஒரு குட்டி கார்ப்பரேஷனாக, குட்டி ஸ்தல ஸ்தாபனமாக அங்கே வைத்துக்கொள்ளக் கூடாது.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சி மன்றத்தைத் தவிர வேறு எந்த ஒரு அமைப்பும் இருக்கக் கூடாது என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம். முதலமைச்சர்கூட டெல்லிக்குச் சென்று விட்டு வந்திருக்கிறார், மேற்கு வங்க முதலமைச்சரைச் சந்தித்துவிட்டு வந்தார். இது பற்றிப் பேச அவர் அழைத்திருக்கிறார், இவர் போகப் போகிறார். ஆனால், இந்த வாரியத்திலே பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு எந்தவித இடமும் இல்லை. ஆகவே, நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு கமிட்டிக்கு விடுங்கள். அந்த கமிட்டி மூலமாக, மாற்றுக் கட்சித் தலைவர்கள் பேசி ஒரு முடிவிற்கு வருவோம்.. இல்லையென்றால் இந்தச் சட்டத்திலே இருக்கின்ற ஷரத்துக்களை மாற்ற வேண்டும்.

பொது சாக்கடை, மற்றவற்றைப் பற்றிப் பார்க்கும் நேரத்தில் ரொம்ப சிக்கல் இருக்கிறது. அதாவது, ஒரு குடும்பத்தில் இரண்டு மாமியார் கையில் மாட்டிக் கொண்ட மருமகள் போல் ஆகிவிடும். ஆகவே, அந்த நிலை வரக் கூடாது. ஆகவே, இதை எதிர்த்து, எங்களுடைய துணைச் செயலாளர் பேசுவதனால், அவருக்கு விட்டு விட்டு நான் அமர்கிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே Statement of Objects and Reasons என்பதிலே, 'Accordingly, pending creation of a statutory authority, the Government created an ad hoc authority called the Madras Metropolitan Water Supply and Sewerage Board..' என்று சொல்லுகிறார்கள். ஆகவே அட்ஹாக் அத்தாரிட்டி போட்டிருக்கிறார்கள் ஆகவே இதை செலக்ட் கமிட்டிக்கு விட்டு, விரிவாக விளக்குவதற்கு வாய்ப்பு தர வேண்டும். அதோடு கூட இப்போது சொல்லப்படுகிற கருத்துக்களை, திருத்தங்களை இந்தச் சட்டத்தில் சேர்த்துக் கொண்டால் நலமாக இருக்கும். கார்ப்பரேஷன் மினிஸ்டர் இருக்கிறார், குறிப்பிட்ட அமைச்சரும் இருக்கிறார்கள்.

காலையிலேயிருந்து கூவத்தைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூவத்திலே இருக்கிற நாற்றத்தைப் போக்குவதற்காக குறிப்பாக மாநகராட்சியிலே இருக்கிற கழிவு நீரைப் பயன்படுத்தி மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை குத்தகைக்கு விடுகிறார்கள். அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி மாநகராட்சிக்கு அதிக வருமானம் வருகிறது.

அதேபோல கூவம் ஆற்றின் இரண்டு பக்கத்திலே இருக்கிற காலி இடங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அந்த நாற்றத்தைப் போக்க முடியும், வீணாக இருக்கக் கூடிய நிலங்களைப் பயன்படுத்தி மாநகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருக்கும். அதைப் பயன்படுத்தி பயிரிடுவதன் மூலமாக துப்புரவாக வைத்துக் கொள்ள முடியும். அசிங்கமான நிலைமைகளை உருவாக்காது அழகான நிலையாக வைக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே வைத்திருக்கிற மசோதாவில் செக்ஷன் 34-லே சொல்லுகிறார்கள். அங்கே, "The taxes mentioned in sub-section (1) shall be levied at such rates.." என்று சொல்லி 20%, 10% 'not more than twenty per cent and in the case of sewerage tax shall not be more than ten percent of the assessed annual value of the premises. என்று வைத்திருக்கிறார்கள். அது பாதகமான நிலையை உருவாக்கும். பயன்படுத்துகிற தண்ணீருக்கு ஏற்றாற்போல் வசூல் செய்வது சாலச் சிறந்த கருத்தாக இருக்கும். அதைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் செக்ஷன் 41-லே சொல்லியிருக்கிறார்கள். ரைட் ஆப் செய்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். 25 ரூபாய் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அரசினுடைய அங்கீகாரம் பெற்றுத்தான் ரைட் ஆப் செய்ய வேண்டும் என்ற விதி ஏற்கனவே இருக்கிறது. அதேபோல் செல்வாக்கு பெற்றவர்கள் இந்த விதியைப் பயன்படுத்திக் கொண்டு ரைட் ஆப் செய்கிறார்கள், என்று குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிறது. ஒரு தடவை ரைட் ஆப் செய்து விட்டால் அரசாங்கம் தலையிட்டு வாட்டர் கனக்ஷன் தராமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக செக்ஷன் 44-லே கோர்ட்டுகளுக்கு, வழக்கு மன்றங்களுக்குச் செல்லக் கூடாது என்ற உத்தரவை வைத்திருக்கிறார்கள். அது சில இடங்களில் துஷ்பிரயோகத்திற்கு வழி வகுக்கும். எனவே ஜெனுயின் கேசிலே அவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்லும் வாய்ப்பினை இந்த செக்ஷன் 44 வழி வகை செய்தால் சரியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



செக்ஷன் 48-லே 'wastage of water' செய்யக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். அதை எப்படி அசெஸ் செய்வது என்பதற்கும் நீங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் செக்ஷன் 49-லே, குறிப்பாக வாட்டர் கனெக்ஷன் யார் யாருக்குக் கொடுக்கக் கூடாது, எந்த விதத்திலே அதை கட் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறபோது செக்ஷன் 49(பி)-லே சொல்லுகிறார்கள்.

'Owner or occuper of the building can give, in writting, that he does not want water connection' எந்த நிலையிலே அதை கட் செய்து விடலாம் என்று ஒரு புரொவிஷன் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி வேண்டாத டெனன்ட்டுகள் இருந்தால் அவர்களைக் காலி செய்ய வேண்டும் என்றால் அதைப் பயன்படுத்தி அவர்களிடத்திலே வாட்டர் கனக்ஷன் வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டால் வாட்டர் கனெக்ஷனை sever செய்து விடுவார்கள். ஆனால் ரெண்ட் கண்ட்ரோல் ஆக்டிலே இருப்பது போல 'Restoration of amenities' ஒரு புரொவிஷனை இந்தச் சட்டத்தில் அவர்களுக்குப் பாதிப்பதிலிருந்து பாதுகாப்பு கொடுக்க வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இன்னும் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பேராபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். இன்னும் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இருப்பினும் முழுமையாகப் படித்துப் பார்த்து கருத்து சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் சொல்லவில்லை. இதையெல்லாம் காரணமாக வைத்து அட்ஹாக் ஸ்டாசுடரி கமிட்டி அமைத்தால் அதில் இதை அலசி ஆராய்ந்து பார்த்து முழுமையாக சட்டமாகக் கொண்டு வரமுடியும். இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன். காரணம்,

'efficient administration in the interest of the public' என்று சொல்கிற முறையில் வரவேற்கக்கூடியது. மேலும், இதிலே இருக்கும் சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மன்றத்தில் கொண்டு வரப்பட்டு இருக்கிற சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றல் சட்ட முன் வடிவின் மீது என் கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இம் மசோதா நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் முழுக்க முழுக்க ஒத்துக்கொள்கிறேன். நோக்கத்தைச் சந்தேகித்துப் பேசுவதாக நீங்கள் தயவுசெய்து தவறாகக் கருதத் தேவையில்லை. ஆனால் இந்த மசோதா நாளைக்

காலையில் இருந்து சட்டமாக வர வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக இவ்வளவு பெரிய மசோதாவை நாம் நிறைவேற்றுவது இந்த நேரத்தில் சரிதானா என்பதை அரசுத் தரப்பில் யோசிக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு, கூட்டாய்வுக் குழுவிற்கு விடவேண்டும் என்று ஏறக்குறைய எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும் கட்சிகளையெல்லாம் சேர்ந்தவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். உடனடியாக இந்த மசோதாவை நிறைவேற்றித் தீரவேண்டும் என்று எந்தவிதநிபந்தனையும் இருக்க நியாயம் இல்லை. நிறைவேற்றித்தான் ஆகவேண்டும் என்று உலக வங்கி வற்புறுத்துகிறது என்று சொன்னாலும் கூட அதற்கு ஒரு 4 மாதம் அவகாசம் வாங்குவதில் ஒரு தடங்கல், இடைஞ்சல் ஏற்பட்டு விடும் என்று நான் நினைக்கவில்லை.

உலக வங்கியில் கடன் வாங்குவது தவறு என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வளர்கின்ற நாடுகளுக்கு உலக வங்கி கடன் கொடுக்கிறார்கள். அவர்களுடைய பெரிய உள்ளத்தைப் பாராட்டி நாமும் கடன் வாங்குகிறோம். வாங்குகிற கடனை செலவழிக்கிற நேரத்தில் எப்படிச்செலவழிக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்த்து அதைப்பற்றி தீர ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நம் தமிழ் நாட்டிலே ஏராளமான வாரியங்களை உருவாக்கி இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். நான் சொல்லுவது சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான் சொல்கிறேன். இதுவரையில் உருவாக்கப்பட்ட பல்வேறு வாரியங்களுக்கும் வரி போடுகிற அதிகாரம் எந்த வாரியத்திற்கும் நாம் கொடுத்தது கிடையாது. வரிபோடும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத்தான் நாம் கொடுத்து இருக்கிறோமே தவிர இன்னொரு நியமிக்கப்பட்ட குழுவிற்கு அந்த அதிகாரத்தைக் கொடுப்பது என்பது சரிதானா என்பதை யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

ஒரு வாரியம் ஏறக்குறைய முழுக்க, முழுக்க அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும். மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கின்ற குடிநீர் சம்பந்தமான சொத்துக்களை அந்த வாரியம் அப்படியே ஏற்றுக்கொள்கிறது. மாநகராட்சிக்கு இதுவரையில் ஏராளமான அதிகாரம் இருந்தது. அதை வாரியம் எடுத்துக் கொள்கிறது. சுருங்கச் சொன்னால், உள்ளாட்சித் துறைக்கு இதுவரையில் இருந்த அதிகாரத்தை வாங்கி இந்த வாரியத்திடம் ஒப்படைக்கப் போகிறோம். உள்ளாட்சித் துறையிடம் நம்பிக்கை இல்லை என்பதால் இந்தக் காரியம் செய்யப் படுகிறது என்று சொல்ல மாட்டேன். உள்ளாட்சித் துறை இது வரையில் நிறைவேற்றி வந்த பொறுப்புகளை இப்போது வாரியத்



திடம் கொடுக்கிறார்கள். அப்படி ஏற்றுக் கொள்கிறபோது, மாநகராட்சியிடமிருந்து எடுத்துக் கொள்ளும் சொத்துக்களுக்கு இழப்புத் தொகை கொடுக்கப் போகிறீர்களா இல்லையா என்பது ஒரு பிரச்னை. நாங்கள் இழப்புத் தொகை கொடுக்கப் போவது இல்லை, இப்படியே ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்று சொன்னால், இன்றைக்கு மாநகராட்சியில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை, தனி அதிகாரி இருக்கிறார் என்ற காரணத்தால் நீதி மன்றத்தில் வழக்குப் போடாமல் இருக்கலாம். நாளைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே வருவார்களானால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இழப்புத் தொகை இல்லாமல் அந்தச் சொத்துக்களை எடுத்துக் கொண்டது தவறு என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிச் சொல்லி அதைப் பெறுகிற அதிகாரம் உண்டா என்பதை யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அப்படி இழப்பீட்டுத் தொகை கொடுக்காமல் எடுத்துக் கொள்வது தவறு. இங்கே தெரிவித்திருக்கிற விளக்கம் என்ன வென்றால் வரி போடுகின்ற அதிகாரம் இந்த வாரியத்திற்கு கொடுக்கப்பட்டு, அதை வசூல் செய்கிற அதிகாரம் மாநகராட்சிக் குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. வரி போடுகிற அதிகாரத்தை வாரியத்திற்குக் கொடுத்துவிட்டு வசூலிக்கின்ற வேலையை மாநகராட்சிக்குத் தருவது என்பது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்பதை கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது இருக்கிற வரி 3% அல்லது 3½% என்று நினைக்கிறேன். தண்ணீர் வரி, சொத்துவரி, எல்லாம் இருக்கிறது. சொத்துவரி 3% ஆக இருக்கிறது. இந்த வரியை நாளையதினம் 10 சதவீதம் அல்லது 5 சதவீதம் உயர்த்த வேண்டுமென்று ஒரு தீர்மானம் போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாநகராட்சியைச் சேர்ந்திருக்கிறது. இப்போது அங்கே தனி அதிகாரி இருப்பதால், அவர் உடனே நோட்டீஸ் கொடுப்பார், வரி கொடு என்று சொல்லி வசூல் செய்துவிட முடியும். ஆனால் நாளையதினம் தேர்தல் நடந்து, மக்களவையின் மூலம் மாநகராட்சி நடைபெறுவதாக இருந்தால் 5% அல்லது 6% உயர்த்தும் இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஒரு தீர்மானத்தைப் போட்டால் மாநகராட்சிக்கும் வாரியத்திற்கும் ஏற்படுகிற சர்ச்சையைத் தீர்ப்பது யார்? மாநகராட்சியைக் கலைப்போம் என்று சொல்வீர்களானால் அதை நம்பமாட்டோம். ஏனென்றால் அப்படி ஒரு முடிவை எடுப்பது நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதாக ஆகிவிடும். சட்டத்தை நிறைவேற்று வதற்கு முன்னால் இவைகளை எல்லாம் நாம் தீர யோசித்துப் பார்க்கவேண்டும்.

இப்போதே குடிநீர்-வடிகால் வாரியம் என்று ஒரு வாரியத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். ஏன், இப்போது மாநகராட்சியிலேயே ஒரு குடிநீர்-வடிகால் பிரிவு இருக்கிறது. இதையே அட்டானமஸ்

பாடியாக மாற்றி, மாநகராட்சியின்கீழ் கொண்டுவந்திருக்கலாமே. உலக வங்கி 1-4-78-க்குள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் தான் கடன் கொடுப்போம், இல்லாவிட்டால் கொடுக்கமாட்டோம் என்று சொல்லியிருந்தால் அதை எங்களால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் 'ஸ்டேட்மென்ட்ஸ் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்ற பகுதியில் 1-4-78 முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ''நோட்ஸ் ஆன் கிளாசஸ்' பகுதியில். 'This clause provides for the Government to notify the date on which the Act shall come into force..' என்றிருக்கிறது. இந்தச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது என்ற தேதியை அரசாங்கம் பின்னர் அறிவிக்கும் என்று இருக்கிறது. ஆகையால் 1-4-78-ல் நிச்சயமாக இந்தச் சட்டம் அமுலுக்கு வராது; வர முடியாது. இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்படும் சட்டத்திற்கு நாளைக் காலையே ''பிரசிடென்ட் அசென்ட்'' வழங்கினால் நாளையிலிருந்தே அமுலுக்கு வரலாம். அது நடக்கக்கூடிய காரியம் அல்ல. ஆகவே, முடியாத ஒரு காரியத்தை இவ்வளவு அவசரம் அவசரமாகக் கொண்டுவந்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பது புரியவில்லை. அதிலும் வரி போடுகிற ஒரு அதிகாரத்தை ஒரு நாமினேடட் பாடிக்குக் கொடுக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில் கட்சி வேறுபாடு இல்லை. சென்னை மாநகரில் இருக்கிற கழிவுநீரை அகற்றுவதில் அல்லது குடிநீர் வசதியைப் பெருக்குவதில் கட்சி வேறுபாடு இல்லை. அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இங்கே கருத்து வேறுபாடு இருக்குமானால் வரி விதிப்பில்தான் இருக்கும். தாம்பரம், குரோம்பேட்டை போன்ற பகுதிகளை எல்லாம் இதிலிணைத்திருக்கிறார்கள். நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் கூட தாம்பரம் நகராட்சித் தலைவராக இருந்திருக்கிறார்கள். அங்கே உள்ள நிலைமைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக தாம்பரம் நகராட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு போடும் அதே வரியை அந்த நகராட்சிகளுக்கும் போட்டால் அவர்களுக்குப் பல சங்கடங்கள் ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை. இப்படி நகராட்சிக்கு இருக்கிற அதிகாரத்தை எடுத்து அரசாங்கம் நியமிக்கும் ஒரு குழுவிற்குக் கொடுப்பது சரியல்ல. இது தேவைதானா என்பதைத் தீர முடிவு செய்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நாளைய தினம் எப்படியும் இந்தச் சட்டம் அமுலுக்கு வரமுடியாது. ஏனென்றால் பிரசிடென்ட் அசென்ட் நிச்சயமாக நாளைக் காலைக்குள் கிடைக்கப் போவதில்லை. ஒருவேளை ஏற்கெனவே அசென்ட் வாங்கிவிட்டார்களோ என்னவோ தெரியாது. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் ஏற்கெனவே கிடைத்திருந்தால் நாளையதினமே அமுலுக்கு கொண்டுவந்து விடலாம். இல்லையென்றால் முடியாது. நாளை



பொழுது விடிந்தால் 1-4-78. அதற்குள் அசென்ட் பெறமுடியாது. இந்த 'நோட்ஸ் ஆன் கிளாசஸ்' என்ற பகுதியில், 'The Government are also empowered to appoint different dates for different areas and for different provisions of this Act.' என்றிருக்கிறது. இந்தச் சட்டம் எந்தெந்தப் பகுதிக்கு எந்த எந்த தேதியில் இந்தச் சட்டத்தின் எந்த எந்தப் பிரிவுகள் அமுலுக்கு வரும் என்று நோட்டிபிகேஷன் செய்து அரசாங்கம் அறிவிக்கும் என்று இருக்கிறது. இவ்வளவு ஜாக்கிரதையாக அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் அரசாங்கம் வரி போடுகிற ஒரு பயங்கரமான அதிகாரத்தைக் கொண்டுபோய், அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு வாரியத்திற்குக் கொடுப்பது ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். ஆகையால் இதை நன்றாக ஆலோசனை செய்து, ஒரு முடிவுக்கு வர, இந்தச் சட்ட முன் வடிவை கூட்டாய்வுக் குழுவுக்கு அனுப்புங்கள்.

கூட்டு ஆய்வுக் குழுவிற்குச் சென்று திரும்பி வருவதற்கு இரண்டு மாத காலம் ஆகலாம். அல்லது ஒரு மாத காலத்திற்குள் முடியுங்கள் கவலை இல்லை. அப்படி முடிக்கப்பட்ட உடன் சட்டமன்றத்தை ஒரு இரண்டு மூன்று நாட்களுக்கு மட்டும் என்று கூட்டி இந்தச் சட்டத்தை நிறைவேற்றுங்கள், ஆட்சேபணை இல்லை. ஆனால் இவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியினர் எடுத்துச் சொல்கிற உண்மையைப் புறக்கணிப்புச் செய்துவிடக்கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறி இத்துடன் முடித்துக்கொண்டு அமருகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ், திரு. மாரிமுத்து ஆகிய ஓரிருவரைத் தவிர மற்ற அத்தனைபேரும் இப்படி ஒரு குழுமம் ஏற்படுகின்ற காரணத்தால் மாநகராட்சியின் அதிகாரம் குறைந்து விடுமோ என்றும், வரியை அதிகமாக உயர்த்திவிடுவார்களோ என்றும் மாநகராட்சிக்குள்ள அதிகாரம் போய்விட்டால் அது நல்லதா என்ற தங்களுடைய பயத்தையும் தெரிவித்தார்கள். அவர்கள் அப்படிப் பயப்படத் தேவையில்லை என்பதை சொன்னால் அத்தனை பேரும் இந்த மசோதாவை ஆதரிப்பார்கள் என்று எண்ணி என்னுடைய பதிலைச் சொல்ல விரும்புகிறேன்.

சந்தேகம் என்ற மேகம் ஏற்பட்டிருக்கிறது. When the cloud is cleared, they will support me. இதுதான் என்னுடைய எண்ணம். இந்த மசோதாவைப் பற்றி பொதுவாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் சந்தேகம் எழக்கூடியது நியாயம். அந்தச் சந்தேகங்களை எடுத்துச் சொன்னார்கள். சந்தேகங்களை நிவர்த்தி பண்ண முடியும் என்று நான் உறுதி[illegible] நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்

ஒவ்வொருவரும் பேசிய கருத்துக்களுக்கு நான் பதில் சொல்கிறேன். ஆனால் ஒவ்வொரு உறுப்பினர் பேசிய பேச்சுக்கும் பதில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு பேச்சுக்கும் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள் என்று சொல்லி நீங்கள் சொல்லச் சொன்னால் பதில் இங்கே இருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கார்ப்பரேஷனிடம் இருக்கிற ஒரு பகுதி பணியைத்தான் நாங்கள் ஏற்று இந்தக் குழுமமும் நடத்த இருக்கின்ற காரணத்தால் இழப்பீட்டுத் தொகை என்று கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். யாரோ சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சேர்ந்து திடீரென்று இதைச் செய்துவிட்டார்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்ன சொல்லி இருக்கிறார்கள் தெரியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அது அப்படி அல்ல என்று சொல்லி நான் ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே இப்படித்தான் சொல்லி இருக்கிறேன்.

''ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், உலக சுகாதார நிறுவனம், இந்திய அரசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி, சென்னை பெருநகர்ப்பகுதி முழுவதிலும் குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கு முன் ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அனுமதித்தது.'' நிறுவன அமைப்பு, நிர்வாகம், நிதி விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும் சென்னைப் பெருநகர்ப்பகுதிக்கான குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்றுவது குறித்த பெருந் திட்டமொன்றைத் தயாரிக்கவும் உலகச் சுகாதார நிறுவனம் சில தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமித்தது.

அந்தந் தொழில் நுட்ப ஆலோசகர்கள் கொடுத்த ஆலோசனையின் அடிப்படையில்தான் இது வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இது தனியாகக் கொடுக்கப்படக்கூடிய ஒன்று என்று அருள் கூர்ந்து யாரும் நினைத்துவிட வேண்டாம். இங்கே மெட்ராஸ் மெட்ராபாலிட்டன் ஸ்கீம், அதாவது சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டமாகக் கொண்டு வந்து அதற்காக ஒதுக்கப்படுகிற தொகையான 46 கோடி ரூபாயில் 9.5 கோடி ரூபாய்தான் இதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-00)

வரி விதிப்புப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள், டாக்ஸ்பற்றி திரு. லத்திப் அவர்கள் சொன்னார்கள். எனது மதிப்பிற்குரிய . .



திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் மெட்ரோபாலிட்டன் அத்தாரிட்டிமூலம் ஒதுக்கப்படுகிற தொகையில் ஐந்தில் ஒரு பங்கு, ஏறத்தாழ ஒன்பது கோடி ரூபாய் அளவிற்குத்தான் இதற்கு ஒதுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டம் தொடங்கியபின் விரிவடைந்து ஏறத்தாழ ரூ. 150, ரூ. 200 கோடி அளவுக்கு மேல்கூட செலவு உயர வேண்டிய அவசியம் வரும் என்று இந்த அரசு கருதுகிறதா அல்லது இந்த ஒன்பது கோடி ரூபாயிலேயே இந்தத் திட்டம் முடிவடையப் போகிறது என்று நம்புகிறதா?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sec. 99 (1) (b) of the Madras City Municipal Act of 1919, Tamil Nadu Act 4 of 1919, says as follows :—

"A water and drainage tax for the purpose of defraying expenses connected with the water and drainage system of the City should be levied."

மாண்புமிகு உறுப்பினர் சிறந்த வழக்கறிஞர். அவர்கள் டாக்ஸ் பற்றிச் சொன்னார்கள்.

THIRU M. A. LATHEEF: My plea is that whatever may be the provisions incorporated in other Acts, so far as my knowledge goes, according to legal parlance, if you say that a particular levy is a tax, then there should be corresponding benfit to be ensured. It should be quantamised. Then only it could be a tax. Otherwise you can call it a fee or charge. But when you say that it will be a tax, there should be corresponding benefit to the consumer. Otherwise the question of tax can never arise. It will be a great injustice to call it a tax, without ensuring a benefit which could be quantamised. Otherwise, it has no constitutional or statutory authority.......

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Let me finish. The hon. Member can speak at the end. பேரவைத் தலைவர் அவர்களே, வாட்டர் டாக்ஸ் என்று ஒன்று உண்டு என்பதற்காகத் தான் அதைச் சொன்னேன். வரி போடுவதே, to augment the resources, இருக்கக்கூடிய வருவாயை அதிகமாக்குவது அல்லது குறைந்தால் அதை ஈடு செய்வதற்காகப் போடுவது. பொதுவாக வருவாய் குறையுமானால்———ப.உ.ச. அவர்கள் முனிசிபல் சேர்மனாக இருந்திருக்கிறார்கள் மிகப் பெருமைப்படுகிறோம்.

அவர்களுக்கு நன்கு தெரியும்—இந்த சர்வீஸ் செய்து கொடுத்தால் தான் இந்த வரி போடுவது என்பதல்ல. When you feel the shortage of funds, பணம் தேவை என்று சொன்னால்—சட்டப் பிரச்சனைக்காகச் சொல்கிறேன்—வரி போடலாம் என்பதுதான் நிலைமை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று, இப்போது இந்த போர்டு தனியாக வரி விதிப்பதாக இல்லை என்பதையும் இப்போது இந்த போர்டு தனியாக வரி போடுவதில்லை என்றும் கார்ப்பரேஷன் போடுகிற வரியிலிருந்து, ஹௌஸ் டாக்ஸ், தண்ணீர் வரியும் இருக்கிற காரணத்தால் அதிலே உள்ள component of it—இதற்காகக் கிடைக்கவேண்டியது இங்கே கொடுக்கப்படும் என்பதையும் சில காலங்கள் இந்த நிலை நீடிக்கும் என்பதையும், அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய சூழ் நிலைகளுக்கேற்ப சட்டத்தை மாற்றியமைக்கக்கூடிய enabling measures have already been incorporated. அதற்குப் பின்னால் வந்து உங்களிடத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து தொல்லை கொடுக்கக்கூடாதென்பதற்காக—இப்போது வாட்டர் டாக்ஸ் உயராது. இப்போது உயர்த்துவதாக இல்லை. கார்ப்பரேஷன் போடுகிற வரியிலிருந்து water tax component இங்கே கொடுக்கப் பட்டுவிடும். இதுதான் நிலைமை. ஆனால், எதிர்காலத்தில் அதை மாற்றியமைக்கவேண்டுமென்று சொன்னால், சட்டத்தைத் திருத்து வதற்கு மறுபடியும் இங்கே வரவேண்டும் என்ற தொல்லை இருக்கக்கூடாது என்பதற்காக enabling measures, அவைகளுக்கு ப்ரொவிஷன் இப்போது ப்ரொவைட் செய்து வைத்திருக்கிறோமே தவிர இப்போதைக்கு இல்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் ஈல்டு செய்தால்தான் நீங்கள் இப்போது பேச முடியும், அமைச்சர் ஈல்டு பண்ணவில்லை, தயவுசெய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் எம்.எல்.சி. யாக இருந்தபோது 'கூவம் மணக்கிறது' என்ற புத்தகமெல்லாம் தரப்பட்டிருக்கிறது, அதை நேரிலும் போய் பார்த்திருக்கிறோம். இன்றைக்கு நிலைமை என்னவென்றால், கூவம் மணக்கவில்லை, நாறுகிறது. இதை மாற்றவேண்டும் என்றால், கூவத்தில் சேருகின்ற கழிவுநீரை வேறு வழிகளில் 'சுயேஜ் கனல்' வேறு வடிகால் அல்லது வாய்க்கால் அமைத்து, கழிவு நீர் அகற்றப்படுமானால் கூவத்தில் இப்போது இருக்கக்கூடிய நாற்றம் படிப்படியாக குறைக்கப்பட்டு இறுதியாக கூவத்தில் நாற்றமே இல்லாத அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு 'நிச்சயமாக முயற்சிகளை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அரங்கநாதன் அவர்கள் முடியாது என்று தலையை ஆட்டுகிறார்கள். தலையை ஆட்டாதீர்கள். உங்களால்தான் முடியவில்லையே. பின் ஏன் தலையை ஆட்டுகிறீர்கள்....





திரு. மு. அரங்கநாதன் ; நிச்சயமாக முடியாது என்று நான் சொல்கிறேன்...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மனிதன் நம்பிக்கையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். எல்லோருமே நம்பிக்கையிலேதான் வாழ வேண்டும். அதில் எந்தவித தவறு மில்லை....

திரு. ப. உ. சண்முகம் : குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். முடியாது என்பதல்ல. இப்போது இருக்கிற பல சாக்கடைகள், மாநகராட்சியின்கீழ் உள்ள பல சாக்கடை நீர்கள், அதிலுள்ள கழிவுநீர்கள் எல்லாம் கூவத்தில்தான் இணைக்கப்படுகின்றன. இதைத் தடுத்து விட்டால் இந்த நாற்றத்தை தடுக்க முடியும். உதாரணமாக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலுள்ள கழிவு நீர் எல்லாம் கூவத்தில்தான் விடப்படுகிறது. பல இடங்களிலுள்ள ஸ்டார்ம் வாட்டர் விடப்படுகிறது. இவற்றை வேறு வழியில் அப்புறப்படுத்தினால் நாற்றம் போகும் என்பதை நான் அறிவேன். அதற்கான வழிமுறைகள் ஏற்படுத்துவதில் அரசு முயற்சி எடுப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ப.உ.ச. அவர்கள், நிரம்ப விஷயம் தெரிந்தவர் என்ற முறையில் இதைச் சொன்னார்கள். கூவத்தில் கழிவு நீர் வராமல் பார்த்துக்கொண்டால், கூவம் ஓரளவுக்கு நாறாமல் இருக்கும் என்ற காரணத்தால் அதன் அடிப்படையில், அதற்கேற்றாற்போல் வாய்க்கால்கள், வடிகால்கள் அமைக்க முயற்சி எடுக்கப்படும் என்பதை—unstinted efforts will be taken. கொஞ்சம் கூடத் தயங்காமல் இதை செயல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, தண்ணீர் வழங்குவதைப்பற்றிச் சொன்னார்கள், முனிசிபாலிட்டியைப்பற்றிச் சொன்னார்கள். எந்த நகராட்சியும் தனக்கு குடிதண்ணீர் வேண்டும் என்று 'ட்வாடு' போர்டுக்கு—அதாவது குடிநீர் வாரியத்திற்கு எழுதினால், அதோடு இன்வெஸ்டிகேஷன் சார்ஜையும் அவர்கள் செலுத்திவிடுவார்களேயானால்—அதற்கு முன்பே இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் இவ்வளவு ஆகும் என்று சொல்லிவிடுகிறார்கள்—. இன்வெஸ்டிகேஷன் முடிந்த பின்னால் இதைச் செயல்படுத்துவதற்கு இவ்வளவு தொகை ஆகும் என்று தெரிவிக்கிறார்கள். பின்னால் அந்தத் தொகையை ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் நகராட்சியோ, ஊராட்சி மன்றமோ தீர்மானம் நிறைவேற்றி, அந்தப் பணத்தை தருகிறோம் என்று தெரிவித்தவுடன், அதற்கான பணத்தை கடன் வாங்குகிறோம், நகராட்சிகளும் இதை ஒப்புக்கொண்டு தவணை முறையில் திருப்பித் தருவதற்கும் ஒப்புக்கொள்ளவேண்டும். பிறகு மொத்தச் செலவில்

2/3 எல்.ஐ.ஸி.யும், 1/3 கெவர்ன்மென்டும் கொடுக்கிறார்கள். அதாவது மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்கு எல்.ஐ.ஸி. யிலிருந்தும், ஒரு பங்கை அரசிலிருந்தும் வாங்கி திட்டத்தை நிறைவேற்றுகிறோம். வேலை முடிந்த பின்னால் நகராட்சிக்கு ஒப்படைத்து விடுகிறோம். பின்னால் ஆண்டுதோறும் திரும்ப கடன் தருவது 'ஆன்வல்—மெயின்டனன்ஸ்' அவர்களுடைய வேலை. ஆனால் நடைமுறையில் சரிவர நடைபெறுவதில்லை. குடிதண்ணீர் தருபவர்கள் வேறு, பராமரிப்பவர்கள் வேறு என்கின்ற முறை இருப்பது சரியல்ல என்பதை ஆழமான அரசியல் அனுபவமுள்ள, பல யோசனைகளைச் சொல்லக்கூடிய காளிமுத்து அவர்கள், இதற்கான பராமரிப்பையும் முனிசிபாலிட்டிகளிடமிருந்து 'ட்வாடு' போர்டே அதாவது குடிநீர் வடிகால் வாரியமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து சிறந்ததொரு கருத்து. பஞ்சாயத்துக்களிடமிருந்து, நகராட்சிகளிடமிருந்து இந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்கின்ற விஷயத்தில், வேலைகளை முடித்து அவர்களிடம் கொடுத்துவிட்டு, அவர்களால் எந்த விதமான பராமரிப்பும் செய்ய முடியாமல் இருப்பது நல்லதல்ல என்ற முறையில் குடிநீர்-வடிகால் வாரியமே எடுத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை செய்து, as an experimental measure

(பிற்பகல் 1-10)

சோதனையாக, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் செய்வதென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படி வரும்போது, இங்கே தனியாக ஒரு நிறுவனத்தை அமைத்து அந்த நிறுவனத்தின் மூலமாகக் குடிதண்ணீர் கொடுப்பது, வடிகாலுக்கு தனியாக ஒரு பிரிவு வைப்பது, அதன்மூலம் நகராட்சியின் வேலைப்பளுவைக்குறைத்து, டீ-சென்ட்ரலைஸ் செய்வது என்பதாகும். அதிகாரங்கள் பரவலாக்குவதை எல்லோரும் வரவேற்பார்கள். அப்படி டீ—சென்ட்ரலைஸ் செய்து தனியாக போர்டிடம் கொடுத்து, அந்த போர்டிலே அதை ஒப்படைத்து விடுவது சிறந்ததாகும். அது இப்போது குடிநீர்—வடிகால் வாரியத்தின் ஆலோசனையில் இருக்கிறது; அதைச் செய்யப் போகிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே வரி உயரப் போகிறது, அதனால் கன்சம்ஷன் பாதிக்கும் என்று சொன்னார்கள். 12,000 மீட்டர்கள் இருக்கின்றன. இந்த 12,000 மீட்டர்களும் இப்போது வைத்ததில்லை. 30 ஆண்டு காலமாக இருந்தவைகள். அப்படியே இருக்கின்றன. அதோடுகூட இன்னும் 25,000 வைப்பது என்பது நீங்கள் சொல்வனதப்போல் எந்தவகையிலும் ஏழைகளைப் பாதிக்காது என்பதையும், டொமஸ்டிக் கன்சம்ஷனை அதிகமாகப் பாதிக்காது என்பதையும் இது இன்டஸ்ட்ரியல் ஹை கன்சம்ஷன் போன்றவைகளுக்குத்தான் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

இப்போது ஒரு ரூபாய் வீட்டு வரிக்கு 1000 லிட்டர் தண்ணீர் இனாம் என்று சொல்லி, அப்படி 30,000 லிட்டர் வரை தண்ணீர்



இனாமாகக்கொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாயகம்....I am sorry it is Minister's name Therefore the hon. Member must be all the more lucky. திரு. அரங்கநாதன் சொன்னதைப்போல் பயப்படத் தேவையில்லை. சென்னை மாநகராட்சியில் உறுப்பினராக அவர் இருந்திருக்கிறார். நானும் இந்த சென்னையிலே 17 ஆண்டுகளாக இருப்பவன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். எனவே, you need not have any apprehensions about it. இதைப்பற்றி எந்தவிதமான அச்ச உணர்வும், பயமும்-you need not entertain any fear about it வரவேண்டிய தேவையில்லை. நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திலே நாம் எல்லோரும் ஒரேவிதமான அக்கறை காட்டக் கூடியவர்களாக இருக்கிறோம். அவர் அவர்கள் கருத்தைச் சொல்வதிலே தவறில்லை. பல்வேறு கருத்துக்கள் இல்லை என்று சொன்னால் there is no charm in democracy—ஜனநாயகத்தில் கவர்ச்சி இல்லை.

எல்லோரும் ஒரே கட்சிக்கு வந்துவிட்டால் then it becomes a totalitarian government. எனவே நான் பல்வேறு கருத்துக்கள் சொன்னதை வரவேற்கிறேன். ஒவ்வொருவரும் அவரவர்கள் ஆங்கிளில், கோணத்திலே சொன்னார்கள். அரசின் கோணத்திலே நான் ஒரு உறுதிமொழி கூறுகிறேன். இது யாரையும் பாதிக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதற்காக, 7 பிளஸ் 6. ஆகமொத்தம் 13 பேர்கள் போடப்பட்டு, 7 அபிஷியல்ஸ், 6 நான்-அபிஷியல்ஸ் போடப்பட்டிருக்கிறார்கள். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு பெண்ணை நான்-அபிஷியலாகவும், பப்ளிக் இன்ட்ரஸ்டுக்காக, பொது மக்களுடைய நன்மைகளைக் கருதக்கூடிய ஒருவர், அக்கவுண்ட்ஸ் எக்ஸ்பர்ட் ஒருவர், பப்ளிக் ஹெல்த் டிபார்டுமெண்டு என்ஜினியர் ஒருவர், இண்டியன் காமர்ஸுக்கு ஒருவர், இண்டஸ்ட்ரியல் ஆர்கனைசேஷனுக்கு ஒருவர் என்று போடப்பட்டுள்ளது. 7 அபிஷியல்களில், மானேஜிங் டைரக்டர் ஆப் தி போர்டு, இன்ஜினியரிங் டைரக்டர் ஆப் தி போர்டு, பைனான்ஸ் டைரக்டர் ஆப் தி போர்டு இவர்கள் முழு நேரமாக இருப்பார்கள். சேர்மனாக, செக்ரட்டரி ஆப் தி ஆர். டி. எல். ஏ., டிபார்ட்மெண்டு இருப்பார். நீங்கள் சொன்னதெல்லாம் எங்களுக்கு ஒரே பயமாக இருக்கிறது. வரி ஏறி விடும், முனிசிபல், நகராட்சிகளின் அதிகாரங்கள் போய்விடும் என்று பயந்தீர்கள், அப்படி எதுவும் ஏற்படாது, யாருடைய அதிகாரத்தையும், யாரும் எடுத்துக்கொள்ளவில்லை.

தம்பி காளிமுத்து அவர்கள் அண்ணன் தோள்மீது சுமையை சுமத்துகிறார். அப்படிச் செய்தால் நன்மையாக இருக்கும் என்று நினைக்கிறாரே தவிர, it is a partition with willingness. இருவரும் சேர்ந்து, மற்ற அமைச்சர்களும் சேர்ந்து எடுத்த முடிவு இது.

டபிள்யூ. எச். ஒ. எக்ஸ்பர்டுகள் மிகவும் திறமைசாலிகள். அவர்கள் திறமையாக இதைச் செய்யலாம் என்று சொல்கின்ற அவர்கள் ஆலோசனையின் மீது நடக்கின்றது என்று சொல்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுப் பிரேரேபணைகளை, ஐ ஆம் சாரி, தங்களுடைய திருத்தங்களை யெல்லாம், அமெண்டுமெண்டுகளை எல்லாம் பின்வாங்கிக் கொண்டு இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. க. அன்பழகன் குறுக்கீடு)

I will yield afterwards. உங்களைக்கூட நான் பேச வேண்டாம் என்று சொல்வேன்...

திரு. ப. உ. சண்முகம் : உலக சுகாதார நிறுவனத்தின் வொர்ல்டு ஹெல்த் ஆர்கனேசேஷன் ஆலோசனையின் பேரில்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் பாராட்டுகிறேன், ஒத்துக்கொள்கிறேன். உலக சுகாதார நிறுவனம் இந்த மசோதாவை அப்படியே காப்பி பண்ணிக்கொடுக்கவில்லை. இதுபோன்ற முறையைச் செய்தால் நல்லது என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். மாநகராட்சி அதிகாரத்தைக் கொண்டு போய் தனி நிறுவனத்திடம் கொண்டுபோய் கொடுக்க வேண்டுமென்று சொல்ல உலக சுகாதார நிறுவனத்திற்கு அதிகாரம் இல்லை. அப்படிச் சொல்வார்களேயானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இது நாம் போடுகிற சட்டம். உலக சுகாதார நிறுவனம் கடன் கொடுக்கிறது, சில நிபந்தனைகளை விதிக்க முடியும், அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொடுத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதிகாரம் இருக்கக் கூடாது. அப்படி இருக்குமானால் அதை ஏற்று நம்மை நாமே விற்றுவிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி அல்ல. It is only a recommendatory thing or advisory thing. It is not a mandatory thing. இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் ஒன்றுமில்லை. they have given an indication.

திரு ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னார்கள். It is impossible to operate it from tomorrow. நாளைக்கே இதைக் கொண்டு வரமுடியாது என்பது தெரியும். மேலவைக்கு வேறு போக வேண்டும். அதற்குப் பின்னால் இரண்டு வார காலமாவது பிரசிடென்ட் அசென்ட் பெறுவதற்கு ஆகும்.



இது எந்தெந்தப் பகுதியில் எப்போது அமலுக்கு வரும் என்று அரசு தெரிவிக்கும். This is only a safety clause, safety valve. Nothing is imposed on us. எதுவும் நம்மீது திணிக்கப்படவில்லை. இது நல்லது. இன்னும் சொல்லப்போனால் சென்னையில் தேக்கி வைக்கப்பட்டுள்ள தண்ணீரில் 60 சதவிகிதம், எவாப்ரேஷன் ஆகிவிடுகிறது என்ற தகவல் வந்திருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு ஆதரவாகத்தான் பேசுகிறேன். 41 பர்சன்ட்தான் உபயோகமாகிறது. இதையெல்லாம் தனியாகக் கவனித்து எவாப்ரேஷனைக் குறைத்து சப்ளையை அதிகமாக்கவேண்டும். இதை மட்டும் வைத்து சிந்தித்தால் நாட்டு மக்களுக்கு அதிகமாகத் தண்ணீர் கொடுக்கப்படும். தண்ணீர் ஆதாரங்களை பல வகையில் கொண்டுவரவேண்டுமென்பதும் பரிசிலிக்கப்படும். அதற்காகவும் experts are on the job. தண்ணீர் ஆதாரம் இங்கேயா, அங்கேயா என்று பேசி கான்ட்ரவர்சியை கிரியேட் பண்ண விரும்பவில்லை. ஆதாரத்தை ஆராய்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாளைய தினமே சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரமுடியாது என்று சொன்னதை ஏற்றுக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். 1–4–78-ல் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வர முடியாது. பதினைந்து, இருபது நாட்கள் தள்ளிப் போட வேண்டியிருக்கும். பிரசிடென்ட் அசென்ட் கிடைக்க ஒரு மாதம் கூட ஆகலாம். அப்படி ஒரு மாத காலம் தள்ளிப்போகக் கூடிய சூழ்நிலை ஏற்படும்போது கூட்டாய்வுக் குழுவுக்கு அனுப்பி ஒரு மாத காலத்திற்குள்ளாகத் திரும்பப் பெற்று, இரண்டு மூன்று நாட்கள் சட்டமன்றத்தை இதற்காகவே தனியாகக் கூட்டி நிறைவேற்றுவதில் தவறு இல்லை. அதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். எனவே, அரசாங்கம் ஏன் அதற்கு முன்வரக்கூடாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் எந்தச் சூழ்நிலையில் இது கொண்டு வரப்பட்டது என்ற விளக்கத்தை ஏற்கனவே தெரிவித்தார்கள்.

திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இரண்டு பிரச்சினைகளை குறிப்பாக இங்கே எழுப்பினார்கள். ஒன்று, உலக சுகாதார நிறுவனத்தார் வற்புறுத்தி இதைக் கொண்டு வரச் செய்திருக்கிறதா என்பது. ஆகையால் நம்முடைய உரிமைகள் எல்லாம் அடகு வைக்கப்பட்டு விட்டனவா என்று கேட்டார்கள். நிச்சயமாக

உரிமைகள் அடகு வைக்கப்படவில்லை. மாநகராட்சிக்கு இருக்கிற அதிகாரத்தை நாம் எடுத்துக் கொள்ளலாமா என்றெல்லாம் கேட்டார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை ஒரு விசேஷப் பிரச்சினை, தனிப் பிரச்சினை குடி தண்ணீர்த் திட்டத்திற்கு ஏராளமான அளவுக்கு முதலீடு போட வேண்டியிருக்கிறது. அப்படி நாம் போடுகிற முதலீட்டுக்கு நிறைய கடன் மற்ற வசதிகள் பெற வேண்டியிருக்கிறது. போடப்படுகிற முதலீட்டினால் உருவாக்குகிற திட்டத்தின் மூலம் தண்ணீர் தரப் படுகிறபோது அதற்கான தண்ணீர் வரியை வசூலிக்க வேண்டியது கடமையாகிறது. மாநகராட்சி மன்றத்திற்கே அதை விட்டு விடலாம். தண்ணீர் வரியை உயர்த்துவது என்பது மாநகராட்சி மன்றத்திற்கு எவ்வளவு சிரமம் என்பதையும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் போதுமான அளவுக்கு தண்ணீர் வரியை உயர்த்துவது நடைமுறையில் இல்லை என்பதும் நாம் அறிந்த ஒன்று. ஆகையால் பெறுகிற பணத்திற்கு, நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப திட்டம் தொடர்ந்து செயல்படவும் சரியாக நிர்வகிக்கப்படவும் வேண்டிய அளவுக்காவது அந்த வரி வசூலைச் செய்யவேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 1-20)

மாநகராட்சி மன்றம் தயக்கம் காட்டுகிறது என்பது உண்மை. இன்னும் தண்ணீரைத் தருவதிலே கூட மற்ற மாநராட்சிகளைப் போல் அந்த அளவிற்கு மீட்டர்களை வைத்து சென்னையில் தண்ணீர் தருவதில்லை. இது நமக்கு இருக்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே தனி அமைப்பின் மூலம் நாம் எடுத்துக் கொள்வது எல்லாம், கஷ்டம் அரசாங்கத்திற்குத் தானே தவிர, மாநகராட்சிக்கு அல்ல. இதனால் ஏற்படுகிற சுமை, மாநகராட்சிக்கு ஒரு நன்மையே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, ஒரு நியமனம் செய்யப்பட்ட குழுவிற்கு வரி விதிக்கின்ற அதிகாரத்தைத் தரலாமா என்று திரு. ப.உ. சண்முகம் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே இருக்கிற விதியின்படி ஒரு உச்சவரம்பு நிர்ணயம் செய்து அதற்குள்ளாகத்தான் அவர்கள் வரியை விதிக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதே நேரத்திலே அரசாங்கத்திற்குத் தெரியாமலோ அல்லது அரசாங்கக் கருத்துக்களுக்கு மாறாக இந்த நிறுவனம் நடக்கும் என்று நம்புவதற்கு இல்லை. அப்படியே நடக்கிறது என்று வந்தாலும் கூட இந்தச் சட்டமன்றத்திற்கு இந்தச் சட்டத்தை எப்போதும் திருத்தி அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்கிற உரிமை உண்டு. இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ப. உ.



சண்முகம் அவர்கள் இதைக் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு விட்டு பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதை எவ்வளவு விரைவாக நிறைவேற்றுகிறோமோ அவ்வளவு விரைவாக சென்னை மாநகராட்சிக்கு குடிநீர் வசதிகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : தலைவர் அவர்களே, இதை கூட்டுக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டியதில்லை என்று அரசின் சார்பில் சொல்வதற்குக் காரணம் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்திய பின்னர் ஒரு ஆண்டுகாலத்தில் இது எப்படிச் செயல்படுகிறது என்று பார்த்து பின்னால் திருத்தம் வேண்டுமானால் கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Incidently, I want to inform the House that the Tamil Nadu Water Supply and Drainage Board Act of 1971 was not referred to a Select Committee.

<u>திரு. க. அன்பழகன்</u> : தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்திற்காக உருவாக்கப்பட்ட இந்த மசோதா கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்படவில்லை ; ஆகவே இதையும் அனுப்ப வேண்டியதில்லை என்று சொன்னார்கள்......

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : I said 'incidently' முதலிலே என்ன சொன்னேன் என்றால் இதைச் செயல்படுத்துவோம் ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலே திருத்தம் வேண்டுமானால் கொண்டுவரலாம் என்று கூறி பின்னர் இன்சிடண்டலாக சொன்னேன். That does not become a prime factor, இன்சிடன்டல் தான் அது.

<u>திரு. க. அன்பழகன்</u>: தலைவர் அவர்களே, இன்சிடண்டல் என்று சொன்னாலும் அந்தக் கருத்தின் அடிப்படையிலே இந்தக் கருத்தைச் சொல்லி, ஆகவே அனுப்பத் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இடையிலே அர்பன் லான்ட் சீலிங் ஆக்ட் வந்ததன் விளைவாக இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு எவ்வளவு சிக்கல்களுக்கு தொல்லைகளுக்கு ஆளாகியது, அந்த விளைவுகளை இரண்டு ஆண்டுகாலம் அனுபவித்து இருக்கிறோம். மெட்ரோ-பாலிட்டன் அதாரிட்டி ஏற்படுத்தப்பட்டு Madras Metropolitan Water Supply and Swerage Bill 1978 என்ற இந்த மசோதா கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இன்று ஏற்பட்டு இருக்கிறது. இருந்தாலும் நம்முடையப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து மேலும் ஆய்வுக்கு உரியதாக இருக்கிறது. ஏனென்றால் Madras Metropolitan Water Supply and

[திரு க. அன்பழகன்] [1978 மார்ச் 31

Sewerage Board வாரியம் அமைக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றாலும் அதற்காக நிதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிற சுமை, தாங்கும் நிலைமை, மாநகராட்சிக்குத்தான் ஏற்படுகிறது. கடன் வாங்கியாவது தான் இந்த போர்டு விதிக்கிற வரியை வசூலித்துத் தரவேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்குத்தான் இருக்கிறது. வரியை உயர்த்துகின்ற அதிகாரம் இந்த போர்டுக்குத்தான் இருக்கிறது. 3 அல்லது 3½ விழுக்காடு வீட்டு வரியோடு தண்ணீர் வரியாகச் சேர்த்து இருக்கிற நிலைமையை மாற்றி 10 விழுக்காடாக உயர்த்தியோ அல்லது கழிவு நீருக்காக 20 விழுக்காடு வரை உயர்த்தலாம் என்று உச்சவரம்பு வைத்திருப்பதால் மேலும் உயர்த்தியோ தீர்மானித்தால் அதற்குப் பிறகு அரசாங்கமே அதை ஏற்றுக்கொண்டு-மாநகராட்சியில் வாழ்கிறவர்கட்கு உயர்த்தப்படுமானால் அந்த வரியை வசூலித்துத் தரக்கூடிய பொறுப்பு பொதுமக்கள் பிரதிநிதிகள் இருக்கக்கூடிய மாநகராட்சிக்குத்தான் ஏற்படுகிறது.

அதுமட்டுமல்ல, பொது மக்களின் பிரதிநிதிகள் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள். இந்த வாரியம் போர்டு மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத இடத்தில் பாதுகாப்போடு இருக்கிறது. சில நேரங்களில் அது தேவையும்கூட. ஆனால் நடைமுறையிலே சிக்கலாக அமையும் என்பதால்தான் இந்த விதிமுறைகள் ஏதாவதொரு வகையில் பொது மக்களுக்குக் குறைபாட்டை உண்டாக்கக் கூடியதாகவோ அல்லது மாநகராட்சியை பெயருக்கு உள்ள அமைப்பாக மாற்றி விடக் கூடியதாகவோ, அன்றாட நிர்வாகச் சிக்கல்களை உண்டாக்கக் கூடியதாகவோ, அல்லது அதிகாரிகளுக்கு அளவு கடந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டதாகவோ ஆகிவிடக்கூடாது என்பதால்தான் இதைச் சொல்கிறேன்.

ஓராண்டு கழித்து திருத்தத்தோடு கொண்டு வரலாம் என்று சிலர் சொல்கிறபொழுது இந்த மாதத்திலேயே கொண்டு வர வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன், இந்த மாதத்திலே பத்து நாட்கள் உட்கார்ந்து கூட்டாய்வுக் குழுவிலே விளக்கமாகப் பரிசிலித்து நிறைவேற்ற முன்வர வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்;- தலைவரவர்களே, இதை கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்புவதை அரசு எதிர்க்கிறது என்று சொல்லி, இறுதியாக வசூல் செய்யும் அதிகாரம் இந்தக் குழுவிற்குத்தான் இருக்கிறது என்று சொல்கிறேன், அவர்கள்தான் வசூல் செய்யப் போகிறார்கள்.

இப்பொழுது கார்ப்பரேஷன் வசூல் செய்து கொடுக்கும் பிறகு இந்தக் குழு வசூல் செய்து கொள்ளும்.



1978 மார்ச் 31] [திரு. எஸ். இராகவானந்தம்]

அரசியல் சட்டத்திற்கு நாற்பதற்கும் மேற்பட்ட திருத்தங்கள் வந்திருக்கின்றன. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து let us give a fair trial to this for a year or two. Afterwards you can bring any amendments if you feel so. Otherwise you need not bring any amendment. நல்லவிதமாக நடக்கிறது என்று இருந்தால் திருத்தம் வராமலேகூட இருக்கக்கூடும் என்று சொல்லி இதை கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவை இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இரண்டு சந்தேகங்களை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒன்று; இந்த தண்ணீர் வரி என்று போடப்பட்டுள்ளது அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் காலத்தில் அதற்கு வேண்டிய செலவுகளுக்காக வசூலிக்கப்பட்டு பிறகு விட்டுவிடக்கூடியதா? அதாவது தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா?

இரண்டாவது, இந்தப் பொறுப்புகளை இந்தக் குழு ஏற்றுக்கொள்ளும்பொழுது ஸ்தல ஸ்தாபனங்கள் கட்ட வேண்டிய வட்டி, அவர்களுக்கு இருக்கின்ற லயபிலிட்டி, அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் இல்லாவிட்டால் பழத்தை எடுத்துக்கொண்டு காயை விட்டுவிடுவதைப்போல் இருக்கும். அது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தண்ணீர் கொடுப்பது அதிகமாகும்பொழுது வரி அதிகமாகும், It is quite natural. தொடர்புடைய ஒரு டிபார்ட்மெண்டிலிருந்து இன்னொரு டிபார்ட்மென்டுக்கு சேஞ்ச் ஆகி வருவதால். காம்பன்சேஷன் பற்றிய பிரச்னை எழவில்லை.

திரு. தி. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, உலக வங்கியிலிருந்து பணம் வருவதாகச் சொல்கிறார்கள். அதைவிட, இங்கேயே கடன் எழுப்பினால் அந்தக் கடன் பத்திரத்தைப் பூர்த்தி செய்வதற்கு பொதுமக்களும், தனவந்தர்களும் தயாராக இருக்கிறார்கள். அப்படியெழுப்புவதன் மூலம், மற்றவர்களிடத்தில் விடாமல் மாநகராட்சியின் எல்லைக்குட்பட்டதாக அந்த நிர்வாகத்தை வைத்துக் கொள்ளலாமே.

THE HON. THIRU. S. RAGHAVANANDAM: It is a matter of opinion.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவரவர்களே, I will try to remove the clowds, then the apprehensions will be cleared என்று சொன்னார்கள். அவர் கிளவுட்ஸை க்ளியர் செய்வதற்குப் பதில் மேலும் கிளவுட்ஸை உண்டு பண்ணியிருக்கிறார் என்பது என்னுடைய கருத்து. அவர் இப்பொழுது அடுத்தடுத்துக் கூறுவது....

THE HON THIRU S. RAGHAVANANDAM: If you get more clouds, you can have more rain. There will be no water difficulty.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே,..

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்பொழுது கோவிந்தராசன் அவர்கள் எழுந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குள் நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்?

திரு. எம் ஏ லத்தீப்; அதிலே ஒன்றும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் அப்படிச் சொல்கிறீர்கள், அவர் நின்று பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்கு அமைச்சர். பதில் சொல்கிறார்.

திரு. எம். ஏ. லத்தீப் : கோவிந்தராசன் என்று கூப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லத்தீப் அவர்கள் இப்படியெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் எழுந்து பேசியதற்காக நியாயம் கற்பிக்காதீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இப்பொழுது அப்படி நடந்து கொண்டிருக்கிறது. அது சரியல்ல என்று சொன்னால் எதிர்காலத்திலே வழி வகுத்துக்கொள்ளலாம்.

மாண்புமித பேரவைத் தலைவர்:— இனிமேல் லத்தீப் மீறிப் பேசினால் அதை நீக்க வேண்டியிருக்கும்.

திரு. சி. கோவிந்தராசன்: அமைச்சரவர்கள் அடுத்தடுத்து அழுத்தம் திருத்தமாகப் பேசுவது இப்பொழுது இந்த போர்டுக்கு வசூல் செய்ய அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: இந்த கிளாஸ் 6 போர்டுக்கு பூரணமாக அதிகாரம் அளிக்கிறது.

"The power includes power to raise resources by taxation.,, என்று குறிப்பிடப்படுகிறது. ஏற்கனவே உலக வங்கியினுடைய நிதி உதவியைப் பெற்றுத்தான் இந்தத் திட்டத்தை அமுலாக்குகிறோம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். . எல்லோருமே இனி சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டே போகலாம். ஆனால் முடிவு எப்பொழுது? தயவு செய்து ஒவ்வொருவரும் கேட்க வேண்டுமென்று நேரத்தை நீட்டித்தால் அதற்கு 5 நிமிடம் எடுத்துக்கொண்டு விளக்கம் கொடுத்து, அதற்குப் பதில் தேவை என்று உறுப்பினர் சொன்னால் எப்பொழுது முடிப்பது?

திரு. சி. கோவிந்தராசன்: ஆகையினால் வரி வசூலிக்கக்கூடிய அதிகாரம் கூட மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கூறும்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரி வசூல் திட்டம் இடட்டும் என்று சொன்னால் சில சிக்கல்கள் ஏற்படும். ஆகவே அந்தத் துறை எடுத்துக்கொள்ளட்டும் என்று சொன்னார்கள். அவர்கள் தான் செய்யப்போகிறார்கள், வரி போடப்போகிறார்கள் நிதி உதவியைப் பெற்று செய்யப்போகிறார்கள் என்றால் அதற்கு மறுபடியும் எதற்குத் திட்டம்? எனவே சந்தேகங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, இதை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றால் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நானும் வற்புறுத்துகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் மிகவும் வன்மையாக வலியுறுத்துகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைந் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன்: எனது திருத்தத்தை வலியுறுத்தி கடுமையாக எதிர்க்கிறேன். (ஆளுங்கட்சியினர் ஆரவாரம்) நீங்கள் புரியாமல் கைதட்டுகிறீர்கள், நான் எனது திருத்தத்தை வலியுறுத்தி அமைச்சர் கொண்டு வந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொன்னேன்.

திரு. மு. அரங்கநாதன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

''பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

''பிரிவு 3 முதல் 13 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன''.

பிரிவு 14.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :— ''பிரிவு 14 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்''.

The Hon. Thiru S. RAGHAVANANDAM:

Sir, I move that

In Clause 14,—

(a) in sub-clause (1) (e), for the words "a corporation", substitute the words "of a local authority or of a corporation";

(b) in sub-clause (3), for the words "or the incorporated company" in two places where they occur, substitute the words "or his partner of the incorporated company."

Thiru J. JAMES: Sir, I move the following amendment:-

"In Clause 14; In Item (*f*) of sub-clause (1) of clause 14, after the words, "for the Board; or" add the words "Government; or".

In item (g) of sub-clause (1) of clause 14, after the words, "for the Board" add the words, "or the Government."

The amendment was duly seconded.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதன் நோக்கம் ஏற்கனவே இருக்கிற மசோதாவில் இருக்கிற அந்த கமிட்டியிலே அங்கத்தினராக வருபவர்கள் போர்டு கமிட்டியில் தொடர்புள்ள எந்த கான்ட்



ராக்ட்டிலேயும் அவர்களுக்கு இன்டரஸ்ட் இருக்கக் கூடாது என்பதனை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தினை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே விளக்கமாக பேசியிருக்கிறீர்கள். சுருக்கமாகப் பேசினால் நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே, அவர்கள் வகிக்கின்ற பொறுப்பினை பயன்படுத்தி அவர்கள் சொந்த லாபம் தேடுவதற்கு இது அமையக்கூடாது என்று வலியுறுத்துவதற்காகத்தான் போர்டிலே அவர்களுக்கு இன்டரஸ்ட் மட்டுமல்ல, அரசில் இருக்கிற கான்ட்ராக்டிலே இன்டரஸ்ட் இருந்தாலும் அந்த கமிட்டியிலே, இடம் பெறக்கூடாது என்பதை வலியுறுத்துகின்ற முறையில் எனது திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்ற காரணத்தாலே அரசு இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அஷ்யூரன்ஸ் அவ்வளவு தூரத்திற்குப் பொருத்தமாக இல்லை என்றாலும் ஏதோ இதற்குப் பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்ற எண்ணத்தோடு நான் என்னுடைய கருத்தை வலியுறுத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 14 திருத்தியபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 15 முதல் 19 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 20.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி, ''பிரிவு 20 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்''.

THIRU J. JAMES : Sir, I move the following amendments:— In the proviso to item (b) of sub-clause (4) of clause 20, *delete* the words "except with the previous approval of the Government."

Delete sub-clause (8) ......

The amendments were duly seconded.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த அமைப்பில் ஏற்கனவே பல்வேறு அமைப்புகள் இருந்தாலும் மாற்றப்படுகின்ற ஊழியர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சில ஷரத்துக்கள் இருக்கின்றன. ஆனால் கிளாஸ் 20-லே ஒரு புரொவிசோ இருக்கிறது.

In clause 20 in the Proviso to sub-clause 4(b) "except with the previous approval of the Government" என்றிருக்கிறது. என்னுடைய திருத்தம் "except with the previous approval of the Government" என்ற வரிகள் தேவையில்லை. ஏன் என்று சொன்னால் அவர்கள் ஏற்கனவே எந்தெந்த பிரிவுகளில் பணியாற்றினார்களோ அந்தப் பிரிவுகளில்கூட அவர்களுக்குப் பாதுகாப்பு அந்தப் புரொவிசோவில் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, அவர்களுக்கு இந்தப் பிரிவில் ஏற்கனவே எந்தெந்தப் பாதுகாப்பு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டதோ அந்தப்பாதுகாப்பு அனைத்தும் இந்த போர்டில் அவர்களுக்கு அளிக்கப் படும். ஆகவே இந்த "except with the previous approval of the Government." அரசின் அனுமதிபெற்று அவர்களுக்கிருக்கிற தன்மையை அல்லது சலுகைகளை அகற்றப்படுகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1·40)

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Mr. Speaker, this is a usual service right and protection clause given when the autonomous Boards are formed. Therefore the amendment is opposed.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அரசு ஊழியர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கப் படும் என்ற உத்தரவாதத்தைக்கூட இங்கே கொடுக்காமல் பதில் கூறிய காரணத்தால் என் திருத்தங்களை வலியுறுத்துகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 20 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 21 முதல் 30 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.



Clause 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 31-இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Sir, I move that—In sub-clause (2) (i) of clause 31, for the words "in such scheduled bank", substitute the words "in any scheduled bank."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 31, திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 32 மற்றும் 33 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் பிரிவு 20-க்கு இரண்டு திருத்தம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டையும் முன் மொழிந்து விட்டீர்கள்.

Clause 34

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 34 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்."

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Sir, I move that—In sub-clause (4) of clause 34, for the words "the property tax and", substitute the words "the property tax or".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 34 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 35 முதல் 58 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

Clause 59

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 59 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கபபெறவேண்டும்."

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Sir, I move that—"In subclause (2) of clause 59, for the words and figures "and under sections 56 and 67", substitute the words and figures "or under section 56 or 57".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 59 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 60.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

பிரிவு 60 இச்சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Sir, I move—"that—In sub-clause (9) (b) of clause 60, for the word "the" substitute the word "it".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 60 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 61 முதல் 68 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

Clause 69.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 69 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்."

The Hon. Thiru S. RAGHAVANANDAM : Sir, I move that—In clause 69 (a), for the word "duties" substitute the words "duties imposed".



திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 69 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 70 முதல் 83 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 84.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 84 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்,"

THE Hon. Thiru S. RAGHAVANANDAM : Sir, I move that—In sub-clause (2) of clause 84,—

(a) for the words "no existing authority", substitute the words "any existing authority".

(b) for the words "notified date and shall", substitute the words, "notified date and shall not".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 84 திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 85.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 85 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்".

The Hon. Thiru S. RAGHAVANANDAM : Sir, I move that—"In sub-clause (1) (a) of clause 85, for the words "a municipality" and "a Township, substitute the words "a municipal council" and "a township committee" respectively."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 85 திருத்தியபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 86 முதல் 88 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

"முகப்புரை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

The Hon. Thiru S. RAGHAVANANDAM : Sir, I move that—" In the enacting formula, for the expression " Twenty eight Year ", substitute the expression " Twenty-ninth Year."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தியபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1. நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, "1978 ஆம் ஆண்டு. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) திருத்தியபடி, சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்." என முன்மொழிகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த முக்கியமான சட்டம் இந்த அவையிலே ஒரே மூச்சிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு இடையிலே வேறுவிதமான எந்த கருத்துக்கும் சிந்தனைக்கும் இடம் தராமல் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அரசாங்கத் தரப்பிலே இருந்து கொண்டுவரப்பட்ட சில திருத்தங்களைத் தவிர, எதிர்க்கட்சியினர் சார்பாகத் தரப்பட்ட எந்தத் திருத்தமும் கருத்தும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. இதிலிருந்து இந்த அரசை யாரும் திருத்த முடியாது, குறிப்பாக இந்த அமைச்சரையும் திருந்த முடியாது (சிரிப்பு) என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த சட்டம் ஒரு ஆளும் கட்சிக்காக உள்ள சட்டம் அல்ல. எல்லோருக்கும் நலம் பயக்கும் வழிமுறைகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு சட்டம். இன்னும் சொல்லப் போனால் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிற அமைப்புகளுக்கிடையே உள்ள நிலை வேறுபாடுகளுக்கு இச் சட்டம் இடந்தரக் கூடாது. மாநகராட்சியும் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட அமைப்பு, இந்த வாரியமும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்படுகிற ஒரு அமைப்பாக இருக்கிறது. எனவே, இப்படி பல்வேறு அமைப்புகளை நம்முடைய



அரசு உருவாக்கும் போது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்குகின்ற ஒரு அமைப்புக்கும் இப்படிப்பட்ட முறையிலே அதிகாரம் பெற்றிருக்கிற ஒரு அமைப்புக்கும் இடையே முரண்பாடு ஏற்பட இடந்தரக் கூடாது. இவை எல்லாம் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவை கூட்டு ஆய்வு குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரு திரும்பத் திரும்பச் சொன்னார்கள். என்றாலும் அமைச்சர்வர்கள் இந்தச் சட்டத்தை எப்படியும் இன்றே நிறைவேற்றி விடுவேன் என்று யாரிடத்திலோ சொல்லி விட்டு வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்; அதனால்தான், எப்படியோ ஒரு அவசரத்தோடு நிறைவேற்றி விட்டார்கள்.

(பிற்பகல் 1–50)

ஆனால் அதை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னால் நிறைவேற்றினார்களா? ஆனால் உங்களுடைய எண்ணம் எப்படியும் நிறைவேற்றி விட வேண்டும் என்பதே. நிறைவேற்றினீர்கள். அதுவல்ல. நிறைவேற்றினாலும் கூட ஏராளமான பிரச்சினைகள் இதைத் தொடர்ந்து வரக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தால் தொடர்ந்து இதைப் பரிசீலனையில் வைத்திருந்து வரக்கூடிய சிக்கல்கள் அதிகமாக ஆவதற்கு முன்னால், முன்கூட்டியே இந்த அவைக்குத் தெரிவித்துத் தேவையான திருத்தத்தை மறுபடியும் கொண்டு வருவதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் எதிர்க்கட்சியின் சார்பில் தரப்பட்ட திருத்தங்கள் எதையும் ஏற்றுக் கொள்ள வில்லை என்று குறை பட்டுக் கொண்டார்கள். அந்த அளவுக்கு அரசாங்கத்தின் தரப்பிலேயே ஒழுங்கான சட்ட முன்வடிவு வந்திருக்கிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறதே தவிர, அதிலே திருத்தங்கள் தர முடியவில்லை என்று நினைக்கிற போது உண்மையிலேயே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல் போதிய அவகாசம் இல்லாமல் கூட இருந்திருக்கும் என்று ஏற்றுக் கொள்கிறேன்.

இருந்தாலும் இது இந்த நிர்வாகத்திற்கு ஒரு சிறந்த சான்று. அரசு கொண்டு வந்த மசோதா எதிர்க் கட்சியினர் கொண்டு வருகின்ற திருத்தத்தின் பிரகாரம் திருத்தித்தான் தீரவேண்டும் என்ற நிலை அவையில் இல்லை என்பயையும் ஆகையால் அத்தகைய நற்சான்றை வழங்கியதற்காக எதிர்க் கட்சி துணைத் தலைவரவர்களுக்கு அரசாங்கம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையிலே

சிக்கல்கள் ஏற்படுமானால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் எப்போதும் திருத்தம் கொண்டு வருவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை உண்டு. ஆகவே, நாம் முதலிலேயே தவறாக ஆகிவிடும் என்று எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரைப் பற்றி ஒன்று சொன்னார்கள். ஆனால் அது அவர்களுடைய உண்மையான எண்ணமாக இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏனென்றால் இரண்டு தினங்களுக்கு முன்னால்தான் மாண்புமிகு தொழிலாளர் நலந்துறை அமைச்சர் இப்போது மிகச் சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிறார் என்று பேராசிரியர் அவர்கள் சான்று கொடுத்தார்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சரை அழைத்தும் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகையினால் இங்கே சொன்னது அவர்கள் தனிப் பட்ட முறையிலே தொழிலாளர் நலத்துறை அமைச்சரைப் புண் படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்க மாட்டார் என்று நான் கருதுகிறேன்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் சொல்கின்ற போது அந்தச் சட்டம் முறையாகக் கொண்டு வரப் பட்ட சட்டம் என்று சொன்னார்கள். ஆனால் இவர்கள் கொண்டு வந்த சட்டம் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்களுக்கு முன்னால் யாரோ அதை உருவாக்கி இருக்கவேண்டும். அவர்களுக்கு இவர்கள் இதை எப்படியாவது நிறைவேற்றி விடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அவர்கள் உருவாக்கிய சட்டத்தைத்தான் இவர்கள் இங்கே நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி—"1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்— கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78) திருத்தியபடி நிறைவேற்றப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு திருத்தியபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.



## (8) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள்

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 3—3—1978 ஆம் தேதியன்று கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பரிந்துரை ஏதுமின்றி ஏற்பளிக்கப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/78).
2. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/78).
3. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/78).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய லுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 ணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.55 மணிக்கு ஒத்தி வைக்கப் ற்றது.

## (10) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—

இல்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 195. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1978).

* 196. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1978).

* 197. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1978).

* 198. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1978).

* 199. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1978).

---

* 29—3—1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

——

## சனிக்கிழமை, 1978 ஏப்ரல் 1.

———

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*16 குறுகிய கால வினா—

### நீண்டகரை கிராமத்தில் உள்ள சாம்பகுளம்

திரு. எம். வின்சென்ட் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நாகர்கோவில் தொகுதி, நீண்டகரை கிராமத்தில் உள்ள சாம்பகுளம் எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது ?

(ஆ) சாம்பகுளத்தின் வடபாகம் திட்டையாக இருப்பதால் அதனை ஆக்கிரமிப்புச் செய்து பயிர் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) இதனால் சாம்பகுளத்தில் தேங்கவேண்டிய நீர் வீணாகக் கடலுக்குப் போகிறது என்பது பற்றி அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) விஸ்தீரணம் 13.60 ஏக்கர் ஆகும்.

(ஆ) சுமார் 2 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) கடந்த மூன்று வருட காலமாகப் பயிர் செய்யும் காலங்களில் தண்ணீர் வீணாகச் செல்லவில்லை.

திரு. எம். வின்சென்ட் — இந்த சாம்பகுளம் சுமார் 600 ஏக்கர் அளவிற்கு விவசாயமும் 30 ஊர் மக்களுக்கு குடிநீரும் இவற்றிற்காகப் பயன்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? மிகச் சிறிய விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த சாம்பக்குளத்தில் உள்ள சகல ஆக்கிரமிப்புகளையும் மாற்றி சாம்பகுளத்தில் போதுமான அளவிற்கு தண்ணீர் தேக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் குளத்தின்கீழ் 784 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது என்பது அரசுக்குத் தெரியும். ஆனால், அங்கே கண்ணீர் விடுவதாகத் தகவல் இல்லை. தண்ணீர் விடுவதாகத்தான் தகவல் இருக்கிறது. 1.28 ஏக்கர் நிலம் ஏரியின் முழு நீர் பிடிப்பு மட்டத்திற்கு மேல் உள்ளது. அதில் சிலபேர்கள் குடிசை போட்டிருக்கிறார்கள். ஆனால் .071 ஏக்கர் நீர் பிடிப்பு மட்டத்திற்கு கீழுள்ளது. இருப்பினும் இந்த இரண்டிலும் ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று அரசு சொல்லியுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த நிலை சாம்பகுளத்தில் மட்டுமல்ல அநேகமாக எல்லாக் குளங்களிலும் ஆக்கிரமிப்பாளர்கள் பெரும் பகுதியை ஆக்கிரமித்துவிடுவதால் தண்ணீரை அதிகமாகத் தேக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே. எல்லாக் குளங்களிலிருந்தும் அனைத்து ஆக்கிரமிப்பாளர்களையும் அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும், எந்த வகையில் வந்தாலும் அகற்றப்பட வேண்டியவர்களாவார்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : இந்த சாம்பக்குளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களை அகற்றுவது மட்டுமல்லாமல் அதில் மேடிட்டிருக்கிற பகுதிகளை ஆழப்படுத்த அரசு உடனயாக ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதலாவதாக இந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுகிற வேலை முடியட்டும், பின்னர் ஆழப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கலாம்.



*17. குறுகியகால வினா—

அருமனை உயர்நிலைப்பள்ளி

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அருமனை தனியார் உயர்நிலைப் பள்ளியில் 6 முதல் 11 வரை உள்ள வகுப்புகளில் தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் எத்தனை ? மலையாளத்தைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் எத்தனை ?

(ஆ) அங்கு பணியாற்றும் ஆசிரியர்களில் அரசினரால் சான்றிதழ் பெற்று தமிழில் பாடம் நடத்தும் ஆசிரியர் எத்தனை பேர் ? மலையாளத்தில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் எத்தனை பேர் ?

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு தேர்வுகளில் (எஸ். எஸ். எல். சி.) தமிழ் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விழுக்காடு எத்தனை ? மலையாள வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விழுக்காடு எத்தனை ?

(ஈ) தமிழ் வகுப்புகளில் தேர்வு பலன் குறைந்து இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் 16 ; மலையாளத்தைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் 6.

(ஆ) தமிழ் : 11—மலையாளம்: 11

(இ) தமிழ் மற்றும் மலையாளப் பிரிவுகளில் பள்ளிக்கல்வி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் விழுக்காடு பின்வருமாறு :

| ஆண்டு | தமிழ்ப் பிரிவு | மலையாளப் பிரிவு |
|---|---|---|
| 1975 | 39% | 63% |
| 1976 | 67% | 78% |
| 1977 | 39% | 52% |

(ஈ) தமிழ் வகுப்புகளில் கல்வி பயின்று வந்த மாணவர்களின் தரமே குறைந்த தேர்வு பலனுக்குக் காரணம். இது 1976 ஆம் ஆண்டு தேர்வு விழுக்காடை கருத்தில் கொள்ளும்பொழுது தெளிவாகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தமிழ் மாணவர்களின் தரம் குறைவு என்று அமைச்சா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விடையில், 16 தமிழ் வகுப்புகளுக்கு 11 தமிழ் ஆசிரியர்களும், ஆறு மலையாள வகுப்புகளுக்கு 11 ஆசிரியர்களும் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆக, தமிழ் வகுப்புகளை மலையாள ஆசிரியர்கள்தான் நடத்துகிறார்கள் என்பது இந்த விடையிலிருந்து தெளிவாகிறது. ஆகவே இந்த ரிசல்ட்ஸ் குறைவாகக் காணப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே இனிமேல் தமிழ் வகுப்புகளை தமிழ் ஆசிரியர்கள்தான் எடுக்க வேண்டும் என்ற விதிமுறையைக் கட்டாயமாக அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு அது குறித்து பரிசீலிக்கும்.

திரு. எம். வின்செண்ட்: கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அருமனை தனியார் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியரின் வீட்டுக்குப் போய்தான் ஆசிரியர்கள் சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த ஆசிரியர்களுக்குப் பள்ளிக்கூடத்திலே சம்பளம் கொடுக்க அரசு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் பள்ளியிலேதான் சம்பளம் வாங்குவார்கள்.

## நீரூற்றுகள் குறித்த ஆய்வு

* 749 வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விண்கூடுகள் எடுத்த புகைப்படங்களின் உதவியால் தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் நீரூற்றுகள் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விண்கூடுகளும், விமானங்களும் எடுத்த புகைப்படங்களின் உதவியால் தமிழகமெங்கும் நீரூற்றுகள் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவதாக வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் தர்மபுரி மாவட்டத்தில் நீரூற்றுகள் கண்டுபிடிப்பதற்காக தீவிர சோதனைகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



திரு. மா. மணிமாறன்: அவைத் தலைவர் அவர்களே, விண்கூடு எடுத்த படங்களில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் நீரூற்று இருப்பதாகத் தெரிய வருகிறது? அந்தத் தண்ணீரை எல்லாம் வெளியே கொண்டு வந்தால் வறட்சி நேரத்தில் பயன்படுத்தலாமே, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உலகைச் சுற்றி இந்த விண்கலங்கள் போகிறபோது, நம்முடைய நாட்டின் மேலாகச் செல்லுகிற நேரங்களில் இங்குள்ள பல இடங்களிலும் இந்தப் படங்களை எடுத்திருக்கிறார்கள். அந்தப் படங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. அதில் சில படங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. எல்லாப் படங்களும் வேண்டும் என்று நாம் முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் அவைகள் எல்லாம் Top Secret என்ற நிலையில் இருப்பதால் எல்லாம் நமக்கு கிடைக்கவில்லை. ஓரளவு கிடைத்திருக்கின்ற படங்களை நாம் ஆராய்ந்து கொண்டு வருகிறோம்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவுக்கு தண்ணீர் இருக்கிறது என்பதை நிலத்தடி நீர் துறை ஆராய்ந்து பார்த்ததில். காவிரியில் நீர் வந்தால் நிலத்தடி நீர் அதிகமாகக் கிடைக்கும் என்று கருதுகிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீர் கிடைப்பது காவேரியில் நீர் வருவதைப் பொறுத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவாகள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் வறட்சியான தர்மபுரி மாவட்டம் என்று தெரிவித்தார்கள். ஆண்டுதோறும் வறட்சி ஏற்படுகின்ற இராமனுதபுரம் மாவட்டத்தை விண்கூடு ஆராய்ச்சியின் மூலம் கீழேயுள்ள நீரூற்றை வெளியே கொண்டு வருவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமக்குக் கிடைத்திருக்கின்ற சில படங்களை வைத்துக்கொண்டுதான் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

To start with the drought prone Dharmapuri District has been taken up for intensive investigation by drilling. The ground water branch of Public Works Department has UNDP aerial photographs on 1,20 000 scale covering the Kottalaiyar-Araniar Basin, Palar Basin, Neyveli area and Cauvery Delta.

ஆகவே, நமக்குக் கிடைத்திருக்கின்ற படங்கள் தமிழகத்தின் வட பகுதியிலுள்ள மாவட்டங்களைப் பற்றித்தான் கிடைத்திருக்கின்றன. அதில் தர்மபுரி மாவட்டத்தை எடுத்து இப்போது ஆராய்கின்றோம்.

திரு. பொ. காளியப்பன் : தலைவர் அவர்களே, நிலத்தடிநீர் மழை காலங்களில அதிகமாக கிடைக்கின்றன, கோடை காலங்களில் வற்றி விடுகின்றது. ஆகவே எப்போதும் நிலத்தடி நீர் கிடைப்பதற்கு ஏதேனும் திட்டங்களை வகுத்து அபிவிருத்திச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதற்கு காலங்களைத் தான் மாற்ற வேண்டும். அது அரசாங்கத்தின் சக்திக்கு உட்பட்டது அல்ல. மழை பெய்யும் காலங்களில் நிலத்தடி தண்ணீர் கிடைக்கிறது. மழை பெய்யாத நேரங்களில் தண்ணீர் குறைந்து வறட்சி ஏற்படுகிறது. இது இயற்கை. இயற்கையை மாற்றி அமைக்கின்ற சக்தி எந்த அரசுக்கும் நிச்சயமாக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. பொ. காளியப்பன் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் வெறும் பொட்டைக்காடுகளாக இருக்கின்றன. அந்த இடங்களில் ஏரிகள் அமைத்தால், அதன் மூலம் பக்கத்தில் நீரூற்று வரும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதற்கான திட்டங்களை அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது நல்ல யோசனை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பரமக்குடி, முதுகளத்தூர் போன்ற இடங்களில் 500 அடி, 1000 அடி இவற்றுக்குக்கீழ் தண்ணீர் இருப்பதாக, அமெரிக்காவிலிருந்து அந்தப் பகுதியில் சுற்றுப்பயண செய்த ஒரு கத்தோலிக்க சாமியார் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இதன் அடிப்படையில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வருவதற்கு, தர்மபுரி மாவட்டத்தில் திட்டமிடுவதைப் போல் இங்கும் திட்டமிட அரசு முயற்சி எடுக்குமா எள்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச, இராமச்சந்திரன் : தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருக்கின்ற நிலத்தடி நீரைக் கண்டுபிடிப்பதற்கு சாட்டிலைட் மூலம் எடுக்கப்பட்ட படங்களை ஆராய்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் தண்ணீர் இருப்பதாக சாமியார் சொல்வதாகச் சொன்னார்கள். சாமியார் சொன்னதை வைத்துக் கொண்டு சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. போ. கோபாலன் : விண்கூடங்கள் மூலம் நிலத்தடிநீரைக் கண்டுபிடிக்க அதிகம் செலவாகும். தமிழ்நாட்டில் ஒருவர் மூக்கினால் முகர்ந்து நீர் இருக்கின்ற இடத்தைத் தெரிவிக்கின்றார். அவரை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைப் பொறுத்த வரையில், விஞ்ஞானத்தின் மூலம் தான் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை இந்தப் பகுத்தறிவு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. முதலில் மூக்கினால் முகர்ந்து பார்க்கின்றவர்களின் நிலையையே நம்மால் கணக்கிட முடியாது. இப்படிச் சொல்லுவதை வைத்துக் கொண்டு ஒரு அரசாங்கத்தினுடைய நிலையையோ அல்லது ஒரு நாட்டினுடைய நிலையையோ கணித்து விடமுடியாது.

[முற்பகல் 9–10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தடி நீரைக் கண்டுபிடிப்பதில் ஒருவிதமான குச்சியை வைத்துக்கொண்டு கண்டுபிடிப்பதாகச் சொல்கிறார்கள். அதிலும் நீர்மட்டம் இந்த இடத்தில் இப்படி இருக்கின்றது என்று கணக்கு சொல்லப்படுகின்றது. ஆனால் நம்முடைய பல்வேறு கூட்டுறவுத் துறையிலே கடன் வாங்குகின்றபோது, இந்த 600 அடி விகிதாசாரத்தை கணக்குக் காட்டி, ஒரு சில இடங்களை அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் இந்த நிபுணர்கள் இவ்வாறு சொல்கிறார்கள். நிபுணர்கள் சொல்கிறபடி செய்தால் நீர்வரும், கடன் வராது. இப்படிப்பட்ட சிக்கல்கள் இருப்பதை ஆராய்ந்து, அதைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது இந்த வாட்டர் டிவைனர்களைப் பற்றி. நானும் அவர்களையெல்லாம் சந்தித்து இருக்கிறேன். ஆனால் நிலத்துக்குக் கீழே எந்த அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்பதைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே கருத்து சொல்கிறார்கள். அதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், நிபுணர்களைக் கொண்டு விஞ்ஞான ரீதியிலே ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய நிலத்தடி நீர் துறையைப் பொறுத்த வரையில் மற்ற கிணறுகளிலே உள்ள நீர் மட்டத்தை வைத்துக் கொண்டு கணக்குப்போட்டு சில கிணறுகளை வெட்டுகிறோம். வாட்டர் டிவைனர்கள் ஒரு பிளவுபட்ட குச்சியை வைத்துக் கொண்டு கணக்கிடுவார்கள். என்ஜினியர்

களைக் கேட்டால் 600 அடி தள்ளிப் போடுங்கள் என்று சொல்வார்கள். ஆனால், இப்போது சாடிலைட் மூலமாக அவர்கள் எலெக்ட்ரோ மாக்னடைஸ் வேவ்-ஐ வைத்துக் கொண்டு பூமிக்கு கீழே 5,000, 10.000 அடிகளுக்கு கீழே என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்கிறார்கள். எனவே, நாம் பூமிக்கு கீழே என்ன இருக்கிறது என்று தெரியாமலேயே, பூமிக்கு மேலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

## அடையாற்றின் கரைகள்.

* 750 வினா— திரு. எஸ். கணேசன்— மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அடிக்கடி ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுக்கும் பொருட்டு அடையாற்றின் கரையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்,

(ஆ) பறங்கிமலை போரூர் பாலத்திலிருந்து அடையாறு பாலம் வரை அடையாற்றின் இருமருங்கிலும் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்துரு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அடையாறின் கரைகள் மிகவும் தாழ்வாகவும், வலுவு இல்லாததாகவும் இருப்பதால், மழை நேரத்தில் இந்தப் பகுதியிலே இருப்பவர்கள் பெரிதும் பீதிக்கு உள்ளாகின்ற நிலையிருக்கிறது. எனவே, இந்த அரசு இதை ஆராய்ந்து, இந்தத் திட்டத்தை மிகவும் விரைவாகச் செயல்படுத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த அடையாற்றிலே தண்ணீர் வருகிறபோதெல்லாம் கோட்டூர்புரம் பகுதி தண்ணீரில் மூழ்குகிறது என்பதைக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். நானும் அதைப் போய்ப் பார்த்தேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்தக் கோட்டூர்புரம் பகுதியிலே கட்டப்பட்ட வீடுகள், இந்த அடையாற்றினுடைய நடு மையத்திலே இருக்கின்றது என்பதையும், இந்த அடையாற்றில் தண்ணீர் வராத காரணத்தால், சாதாரண நிலம் என்று கருதி, அங்கே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. கரைகளை நாம் இருமருங்கிலும் கட்டினாலும், அதிலே இரண்டு அல்லது மூன்று பிளாக்குகள் இந்த அடையாற்றின் படுகையிலே இருப்பதால், வருகின்ற தண்ணீர் இயற்கையாகவே அதற்கான நீர்ப் பரப்பை அந்த இடத்திலே எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. தவறு எங்கே இருக்கிறதென்றால், தண்ணீர் வரக்கூடிய இடத்தில் வீடுகள் கட்டப்பட்டதாகும். எனவே, எவ்வளவு கரை போட்டாலும் ஆபத்து இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி விரிவாக ஆராய்ந்து பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி, பாசனத் துறை பொறியாளர்களை அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.



திரு. துரை கோவிந்தராசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு அடையாற்றிலே கரைகள் கட்டப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால், தஞ்சை மாவட்டம் எப்போதும் வெள்ளம் வருகின்ற நேரத்தில் பாதிக்கப்படுகின்றது. எனவே கல்லணையின் கரைகளை விரிவுபடுத்தி, வெள்ளம் வராத அளவிற்குச் செய்வதற்கான முயற்சி அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கல்லணை கட்டப்பட்டு, அதிலே உள்ள தண்ணீர் கொள்ளிடத்தில் விடப்படுகிறது,

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் ஆறுகளின் இரண்டு கரைகளிலும். .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் முந்திய கேள்விக்குப் பதில் சொன்னதன் விளைவு, அது போய்க் கொண்டே இருக்கிறது. திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைப் போட்டார்,

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : ஆறுகளின் இரண்டு பக்கங்களிலும் அந்தக் காலத்திலே கரைகள் போடப்பட்டு, ஆனால் பின்னர் அந்தக் கரைகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி, கரைகளை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா: திரு. துரை கோவிந்தராஜன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த அடிப்படையில் பேசுகிறீர்கள்?

திரு. எஸ். ஆர். இராதா: கேள்வியைப் பற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்கள் துரை கோவிந்தராஜன் அவர்கள் கேள்வியைக் கேட்கத் தெரியாமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொல்லவில்லை. துரை கோவிந்தராஜன் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்த காரணத்தால் மூலக் கேள்வியிலிருந்து துணைக்கேள்வி வேறுஎங்கோ செல்லுகிறது என்றுதான் நான் சொன்னேன். தாங்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை.

திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது கல்லணையில் மிகுதியாக உள்ள தண்ணீர் கொள்ளிடத்தில் விடப்படுவதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் அதற்கு மேல்புரத்தில் வென்ட்ராம்ப் இருந்தது. அது தற்போது செயல்படாத காரணத்தால் கிளிகூண்டில் உடைப்பு எடுத்தது. மீண்டும் திருத்தும் வகையில் 'வென்ட்' கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிஞ் திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

## கிருதமால் நதி சீரமைப்பு.

* 751 வினா—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வைகை ஆற்றில் கட்டப்பட்டிருக்கும் விரகனூர் மதகு அணையுடன் கிருதமால் நதியை இணைத்து கிருதமால் நதியைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) ஆம்.

(ஆ) கொந்தகை கண்மாயை விரகனூர் ரெகுலேட்டர் இருக்கும் இடத்தில் வைகை ஆற்றுடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் கொந்தகை கண்மாயில் இருந்து வரும் உபரித் தண்ணீரை கிருதமால் ஆற்றில் கலக்கும் இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 10 இலட்சம் ஆகும். இது வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.



திரு. ஒ, சுப்பிரமணியன் : விரகனூர் அணைக்கட்டிலிருந்து கொந்தகைக் கண்மாய்க்கு மட்டுந்தான் தண்ணீர் விடப்படுகிறது என்று சொன்னார்கள். கிருதமால் நதித் திட்டத்தை நிறைவேற்றினால் மிகவும் பின்தங்கிய முதுகளத்தூர், அருப்புக்கோட்டையில் சில பகுதிகள் வறட்சி நீங்கி விளைவு பெறும் வசதி ஏற்படும். எப்படியும் அந்தப் பகுதிக்குத் தண்ணீர் பாய்ச்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் கட்டமாக கொந்தகைக் கண்மாய்க்குத் தண்ணீர் வருகிற திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். அதற்குப் பிறகு இதிலே உபரித் தண்ணீர் இருக்குமானால் அது கிருதமால் நதியில் வருவதற்கான இரண்டாவது கட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : வைகைச் சீரமைப்புப் பணியில். துணைக் கால்வாய்கள் வெட்டும்போது ஆற்றுக்குள்ளே மண்ணால் கரைகள் அமைக்கப்பட்டிருந்தன. துணைக் கால்வாயில் வெள்ளம் வந்த நேரத்தில் அதை அரித்துவிட்டதாகத் தெரிகிறது. இதனால் அரசுக்குப் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? நிர்வாகப் பொறியாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டாரா? கான்ட்ராக்ட் எடுத்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிர்வாகப் பொறியாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது உண்மை. அதிலே சில புகார்கள் வந்திருக்கின்றன. அது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. சிவசாமி : இந்தக் கால்வாய்த் திட்டத்தின் அடிப்படையில் மானாமதுரை தாலுக்காவில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலமும், முதுகுளத்தூர் பகுதியில் எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலமும் பயன் பெறும்?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : முதல் கட்டமாக கொந்தகைக் கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டு வருவது திட்டம். அதற்குப் பிறகுதான் உபரித் தண்ணீர் இருந்தால் கிருதமால் நதிக்கு வரும். அதற்கான திட்டம் இனிமேல்தான் தயாரிக்கப்படும். அந்தத் திட்டம் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற விவரம் தரப்படும்.

திரு. டி. இராமசாமி : வைகை பாசன ஆயக்கட்டில் இராமநாதபுரத்தில் பெரிய கண்மாய் மட்டுந்தான் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்மாயின் மூலம் 3,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதே நேரத்தில் இராமநாதபுரத்தில் சக்கரைக் கோட்டை கண்மாய் என்ற பெரிய கண்மாய் இருக்கிறது. 5,000 ஏக்கருக்குப் பாசன வசதி தரும்; வைகைப் பாசனத்தோடு அதனைச் சேர்க்க அரசு முன்வருமா?

[1978 ஏப்ரல் 1

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அரசு பரிசீலிக்கும்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன் :</u> அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எங்கள் பகுதிக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். கிருதுமாலின் மூலம் முதுகளத்தூர் பகுதிக்குத். தண்ணீர் வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. கொந்த கைக் கண்மாய்த் திட்டத்தை நிறைவேற்றும்போதே முதுகளத் தூர் பகுதிக்கு பாசன வசதி செய்து தரும் வகையில் கிருதுமால் நதி மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-20)

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, கொந்தகை கண்மாய்க்குக் தண்ணீர் விடுவதாலே மாண்புமிகு உறுப்பினர்க்கு என்ன வேதனை என்று எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே வைகை ஆற்றுப் பாசன ஆயக்கட்டிலே, அந்த பேஸி னிலே இருக்கக்கூடிய கண்மாய் அது. அதற்குத் தண்ணீர் சரியாக வருவதில்லை என்ற குறை இருக்கிறது, ஆகவே தண்ணீர் எடுத் துக் கொள்கிறோம். அதற்கு மேல் தண்ணீர் அதிகமாக இருந் தால் கிருதுமால் நதிக்கு இணைக்க வேண்டுமென்று திரு. சுப்பிர மணியம் அவர்கள் தெரிவித்தார்கள், அதைப்பற்றி பரிசீலிக்க லாம் என்று தெரிவித்திருக்கிறேன். முதுகளத்தூர் பற்றி என் னிடம் தகவல் இப்போது இல்லை.

<u>திரு. என். லட்சுமிநாராயணன் :</u> தலைவரவர்களே, கொந்தகை கண்மாயிலே விட்டதுபோக கிருதுமால் நதிக்கு எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்? அந்த கொந்தகை கண்மாய் மூலமாக அபிராம் கண்மாய்க்குத் தண்ணீர் பயன்படுத்த வகை செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தனிக் கேள்வி போட் டால் விவரம் தரப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினாக்கள் 752-ம் 753-ம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

<u>நூக்குமர ஏற்றுமதி</u>

*754-வினா <u>திரு. எஸ். கணேசன் :</u> மாண்புமிகு உணவு-கூட்டு றவுத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976-77-ம் ஆண்டு நமது மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்குமரத்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு எடுத்திருக்கும் முயற்சி என்ன?



1978 ஏப்ரல் 1]

<u>மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :</u>

(அ) 1976-77 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திலுள்ள துறைமுகங்களிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்க மரத்தின் மதிப்பு ரூ. 8,92,228 ஆகும்.

(ஆ) தமிழகத்திலிருந்து நூக்க மர ஏற்றுமதியை அதிகப் படுத்தும் வாய்ப்பு இல்லை.

<u>திரு. எஸ். கணேசன் :</u> இந்த நூக்கு மரங்கள் தமிழகத்தில் எந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது? இப்படி ஏற்று மதி செய்யப்பட்ட நூக்கு மரத்தின் மூலமாக அரசுக்கு லாபம் வந்திருக்கிறதா? அரசுக்கு அதிக லாபம் வந்திருந்தால் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி மற்ற மாவட்டங்களிலும் நூக்குமரத்தை விளைவித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நூக்குமரங்கள் அதிகமாக மழை பெறும் காடுகளில் தான் விளைகின்றன. ஆகவே மழை அதிகம் பெறும் காடுகள் மாநிலத்தில் எந்த எந்த மாவட்டங்களில் இருக் கின்றதோ அந்த மாவட்டங்களில் எல்லாம் இந்த மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்படி விளைவிப்பதால் அரசுக்கு லாபம் ஏற்பட்டு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான விளக்கக் குறிப்பு என்னிடம் இல்லை.

<u>(2) ஒழுங்குப் பிரச்சினை.</u>

<u>வினாப்பட்டியலில் உள்ள வரிசை எண்களில் உள்ள மாற்றம் குறித்து.</u>

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டி ருக்கிற இந்த வினாப் பட்டியலிலே முதல் பக்கத்தில் 752-வது எண்ணுள்ள வினா இருக்கிறது. அதற்குப் பின்னால் 758-வது எண் ணுள்ள வினாதான் இருக்கிறது. இடையில் உள்ள கேள்விகள் எல்லாம் இல்லை......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சிறு தவறு நடந்திருக்கிறது. அதை ஒரு பெரிய தவறாக எடுத்துக் கொள்ளலாமா? பிரின்டிங் எர்ரர் என்பதைப் போல் அது சிலிப் எர்ரர்தான், பேப் பரிலே அதை இணைக்க மறந்திருக்கலாம். அதிலே ஒன்றும் ஒழுங் குப் பிரச்சினை இல்லை.

## கும்பகோணம் கூட்டுறவு வங்கி

*755வினா **திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1976-77 ஆண்டு Reserve Banks–ல் இருந்து நம் மாநில கூட்டுறவு வங்கிக்குக் கொடுத்த விவசாயக் கடன் எவ்வளவு?

(ஆ) இதில் கும்பகோணம் கூட்டுறவு வங்கிக்கு நம் மாநில வங்கி கொடுத்த விவசாயக் கடன் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :**

(அ) 1976-77 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியிலிருந்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் சார்பாக தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு ஒட்டு மொத்தமாக கடன் ரூ. 7575 லட்சங்கள் தரப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 1000 லட்சங்கள் கடனாகத் தந்துள்ளது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே மத்திய வங்கியிலே ஆண்டுக் கடன் வழங்கும்போது எவ்வளவு தொகை வழங்கவேண்டுமென்று குறியீடு நிர்ணயிப்பதால் பலவித தவறுகள் நடைபெறுகின்றன, எப்படியாவது குறியீட்டுத் தொகையை வழங்கி விடவேண்டுமென்ற முறையில் பலவிதமான தவறான கடன்கள் வழங்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது, இது போன்ற தவறு நடைபெறாமல் இருக்க குறியீடு நிர்ணயிக்காமல் அரசு கடன் வழங்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** பொதுவாகக் கடன்கள் வழங்கும்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, எந்தவிதமான குறியீடும் நிர்ணயிக்கப்படுவதில்லை, அதற்கான அவசியமும் இல்லை. காரணம், பொதுவாக எல்லா மாவட்டங்களிலேயும் தேவைக்கும் அதிகமான அளவிற்கு அதிகமான விவசாயிகள் கடன்களைப் பெறுவதற்கு விண்ணப்பங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவரவர்களே, ரிசர்வ் வங்கி அரசுக்குப் பணம் கொடுக்கும்பொழுது எத்தனை சதவிகித வட்டிக்குக் கொடுக்கிறார்கள்? அரசு கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கும்பொழுது எத்தனை சதவிகித வட்டிக்குக்கொடுக்கிறார்கள் இதனால் மொத்தத்தில் அரசுக்கு இலாபம் ஏற்படுகிறதா அல்லது நஷ்டம் ஏற்படுகிறதா? எல்லாக் கடன்களுக்கும் ஒரே விதமான வட்டிவீதம் இருக்கிறதா அல்லது ஒவ்வொரு கடனுக்கும் எத்தனை சதவீதம் என்று நிர்ணயிக்கப்படுகிறதா?



**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** பேரவைத் தலைவரவர்களே, வட்டி விகிதத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு காரியங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதங்களில் வித்தியாசம் இருக்கிறது. ஷார்ட் டெர்ம் லோன்களுக்குக் கொடுக்கப்படும் வட்டிக்கும், பிறகு அது கன்வர்ஷன் செய்யப்பட்டு மீடியம் டெர்ம் லோனாகும்பொழுது விதிக்கப்படும் வட்டிக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைப்போல நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்படும் லாங்க் டெர்ம் லோன் அதாவது நீண்ட காலக் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டிக்கும் வித்தியாசம் இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து ;** தலைவரவர்களே, சமீபத்தில் ரிசர்வ் வங்கியினர் வட்டி விகிதத்தைக் குறைத்து வெளியிட்டிருக்கிறார்கள்; அது இனிமேல் கொடுக்கப்படும் கடன்களுக்கு மட்டும் தானா? அல்லது பழைய கடன்களுக்கும் அது அமலாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் ;** பேரவைத் தலைவரவர்களே, அதற்கான புள்ளிவிவரத்தை நான் சேகரிக்கவில்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ரிசர்வ் வங்கியிலிருந்து நாம் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன்பெற்றால், புயல், அதனால் தள்ளுபடி செய்யுங்கள் என்றாலும் மாட்டோம், வெள்ளம், அதனால் தள்ளுபடி செய்யுங்கள் என்றாலும் மாட்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். இருபதாண்டு காலக்கடன் கொடுக்க வேண்டுமென்றாலும் முடியாது என்று ரிசர்வ் வங்கியினர் சொல்கிறார்கள். எனவே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தில் இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து ரிசர்வ் வங்கியின் போக்கைத் தட்டிக் கேட்கின்ற வகையில் நம்முடைய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தில் அரசின் சார்பில் கொண்டு வர வேண்டிய நியதி இல்லை, தனியாரும் தீர்மானங்களைக் கொண்டு வரலாம்.

**திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது நில்வள வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன்கள், என்னென்ன காரியங்களுக்கு, எந்தெந்த ஆண்டு, எவ்வளவு தொகை வழங்க வேண்டுமென்ற நியதிப்படி வழங்கப்படுகின்றது. இந்த முறையினால் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான கடனை வாங்க முடியவில்லை என்பதால் எந்தக் காரியத்திற்கும், எந்த நேரத்திலும், எந்த நிலவள வங்கியிலும் கடன் வாங்கும் வகையில் விவசாயிகளுக்கு வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் இன்றையதினம் சிறு விவசாயிகளுக்குக் கடன் தரப்படுகிறது. அதிலே இப்பொழுது மாடு அல்லது வண்டி வாங்குவதற்குக்கூட கடன் தருகிறார்கள். 10 அல்லது 11 கிராமங்கள் அடங்கியுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் 10 பேர் 5 பேர்களுக்குத்தான் தருகிறார்கள். அதனால் ஏகப்பட்ட தகராறுகள் வருகின்றன. எனவே, இப்படிப்பட்ட கடன் தொகைகளை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு உதவ அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, எந்தப் புதிய முறைகளை வகுத்து அவற்றைக் கடைப் பிடிப்பதாக இருந்தாலும் விவசாயிகளுக்கு அது உண்மையிலேயே நன்மை தரத்தக்க திட்டங்களாக இருக்குமேயானால் இந்த அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, சமீபத்தில் பீகார் மாநில அரசு விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான வட்டியை ரத்து செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலும் வெள்ளம், வறட்சியாலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு அந்தக் கடன்களுக்கான வட்டியை ரத்து செய்வதற்கு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அசலையோ அல்லது வட்டியையோ ரத்து செய்வதற்குண்டான அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள்.

## புதிய பல்கலைக் கழகங்கள்

*756 வினா—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையான 30 முதல் 40 கல்லூரிகளை மட்டும் கொண்ட பல்கலைக்கழகங்கள் இயங்க வேண்டுமென்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டதா?

(ஆ) ஆம் எனில் தமிழகத்தில் இன்னும் எத்தனை பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படும்?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) திருச்சி, மற்றும் கோவையில் உள்ள சென்னை பல்கலைக் கழக பட்ட மேற்படிப்பு மையங்களைப் பல்கலைக் கழகங்களாக மாற்றி அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இந்த கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையில் 30 முதல் 40 கல்லூரிகளை மட்டும் கொண்டிருக்கும் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மருத்துவக் கல்லூரிகளை ஒன்று சேர்த்து மருத்துவப் பல்கலைக் கழகம் என்று ஏற்படுத்த அரசு முன் வருமா? அதற்கான திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் தொடங்க இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நன்றி. அப்படித் திருச்சியிலே பல்கலைக் கழகத்தை உருவாக்குகின்ற நேரத்தில் திருச்சி நகரத்திலே உள்ள கல்லூரிகளை மட்டும் இணைக்காமல், திருச்சி, தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளையும் இணைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, திருச்சி பல்கலைக் கழகத்தில், திருச்சி, தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 37 கல்லூரிகளை இணைப்பதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் வள்ளல் அழகப்ப செட்டியார் அவர்கள் ஏராளமான கல்லூரிகளை அங்கே நிறுவிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். கட்டிடங்களையெல்லாம் அதற்காகவும் கட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். காரைக்குடி வட்டார மக்களும் அதைப் பல்கலைக்கழகமாக ஆக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாக அரசைக் கோரி வருகிறார்கள். ஆகவே அங்கு அப்படி பல்கலைக்கழகம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கான கருத்து இப்பொழுது பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். கோவை பல்கலைக் கழகத்தில் எந்தெந்த மாவட்டங்களிலிருக்கிற கல்லூரிகள் இணைக்கப்படும் என்று சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கோவை பல்கலைக் கழகத்தில், கோவை, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 44 கல்லூரிகளை இணைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தொடங்க இருக்கிற இரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் என்ன பெயர் வைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி முடிவு செய்யப்படவில்லையென்றால் திருச்சியிலே அமைக்கவிருக்கும் பல்கலைக் கழகத்திற்குப் பெரியார் பல்கலைக் கழகம் என்றும் கோவையிலே அமைக்கவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு அண்ணா பல்கலைக் கழகம் என்றும் பெயர் வைக்க இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பல்கலைக் கழகங்களை உருவாக்குவதற்கான நிலைமைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. அதற்குப் பிறகு, அதைப்பற்றி நாம் ஆலோசனை செய்யலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தென்னாட்டு 'கேம் பிரிட்ஜ்' என்று சொல்லப்படுகிற பாளையங்கோட்டையில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, திருச்சி, கோவை பல்கலைக் கழகங்களே இன்னும் முழு அளவில் உருப்பெறாமல் இருக்கும் நிலைமையில் பாளையங்கோட்டையைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதாக சில வருஷங்களுக்கு முன்னால் சொன்னார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் மருத்துவ கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





## பள்ளியிறுதித் தேர்வில் சிறப்பாகத் தேர்வு பெறுவோருக்குப் பரிசுகள்

* 757 வினா—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1975-76-ம் ஆண்டில், S.S.L.C.-யில் சிறப்பாகத் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு சன்மானத் தொகையும், சான்றிதழும் இன்றுவரை வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லோருக்கும் வழங்கப்படவில்லை என்பது உண்மை இல்லை. ஆனால் ஒரு சிலருக்குத்தான் வழங்கப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, 1975-76-ம் வருஷம் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்ற 150 மாணவர்கள் 'மெரிட் ஸ்காலர்ஷிப்' பெறுவதாக அரசு அறிவித்திருந்தும் நாளது வரையில் கார்த்தியாயினி, இராமநாதபுரம்; முரளி ப்ரீதம், இராயபுரம் போன்ற மாணவர்களுக்கு இன்று வரை ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை. பல தடவை எடுத்துச் சொல்லியும் முயற்சித்தும் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை விரைவில் எடுத்து அந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மெரிட் ஸ்காலர்ஷிப் வழங்க தகுந்த ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975-76 ஆம் ஆண்டிற்காக சான்றிதழ் பெற 177 மாணவர்களின் பெயர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. இவர்களில் 86 மாணவர்களது தகுதிச் சான்றிதழ்கள் முதல் தொகுதியில் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்று, அவர்களுக்குரிய சன்மானத் தொகையுடன் ஆகஸ்ட் 1977-லேயே கல்லூரி முதல்வர்கள் மூலம் அனுப்பப்பட்டு விட்டது. பிப்ரவரி 1978-ல் 19 சான்றிதழ்களும் மார்ச் 1978-ல் 49 சான்றிதழ்களும் ஆக மொத்தம் 68 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் கல்லூரி, வகுப்பு போன்ற விவரங்கள் கல்லூரி கல்வி இயக்குனரால் கோரப்பட்டுள்ளது, இந்த விவரங்கள் கிடைத்ததும் சன்மானத் தொகையுடன் அவர்களுக்குக் கல்லூரி கல்வி இயக்குன

ரால் அனுப்பி வைக்கப்படும் மீதமுள்ள 23 பேர்களுக்கான சான்றிதழ்களை விரைவில் அனுப்பி வைக்கும்படி மத்திய அரசுக்கு அடிக்கடி நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு வருகின்றது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, அடிக்கடி நினைவூட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டும் நாளது வரையில் அந்த மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. வெகு சீக்கிரத்திலே ஏற்பாடு செய்து இந்த ஆண்டிலேயே அவர்களுக்கு மெரிட் சர்டிபிகேட் கிடைக்கவும் மெரிட் ஸ்காலர்ஷிப் கிடைக்கவும், ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மைய அரசிடமிருந்து வந்தவுடன் அவர்களுக்குக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்படும்.

## விளையாட்டு வீரர்கள் ஊக்கத்திட்டம்.

*758 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(ஆ) உலக விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டிருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) விவரப் பட்டியல் * இணைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஸ்போர்ட்ஸ் மென்னைப்பற்றி கேட்டிருக்கிறேன் ஸ்போர்ட்ஸ் விமனுக்கும், பெண்களுக்கும் இந்தச் சலுகைகளை அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விளையாட்டு வீரர் என்ற அடிப்படையிலே பெண்களுக்கும் உண்டு.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால் : தலைவர் அவர்களே, இப்போது அர்ஜன்டினாவில் நடந்து கொண்டிருக்கும் உலக கோப்பை ஹாக்கி விளையாட்டிற்கு தமிழக கேப்டனாக பிலிப்சும், பாஸ்கரனும் நடுவராக முகமது கௌசு என்ற மூன்று நண்பர்களும் சென்றிருக்கிறார்கள். திரு. முனிர் சேட்டும் நடுவராகச் சென்றிருக்கிறார். அவருக்கு அரசாங்கம் 11,500 ரூபாய் மானியமாகக் கொடுத்திருக்கிறது. அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் கேப்டனாக சென்ற பிலிப்சுக்கும், விளையாட்டு வீரராகச் சென்ற பாஸ்கரனுக்கும் நடுவராகச் சென்ற முகமது கௌசுக்கும், நாங்கள் மனுக் கொடுத்தும், இது வரையில் ஊக்கமளிக்கும் வகையில் எந்தவிதமான மானியமும் கொடுக்கப்படவில்லை. இதற்காக நடவடிக்கையை இந்த அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[110ம்- பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. இருக்கிற நிதிநிலைமைக்கேற்ப அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. எம். வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓட்டப் பந்தய வீரனும், ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்றவனும், அகில இந்தியாவிலும் 5000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்றவனும், 5000 மீட்டர் பந்தயத்தை குறைந்த நேரத்தில் ஓடி சாதனை புரிந்தவனுமாகிய, நாகர்கோவிலைச் சேர்ந்த ஸ்காட் கிருத்துவக் கல்லூரி மாணவன் நீலசிவலிங்கசாமி என்பவனை ஊக்குவித்து உலக விளையாட்டுகளுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வீரனுடைய தகவல் இங்கே இல்லை. அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலிருந்து அகில இந்திய ரீதியிலே தமிழ்நாட்டு அளவிலே கிரிகெட் பந்தயங்களிலே நல்ல முறையிலே விளையாடுகின்ற விளையாட்டுக்காரர்கள் இன்று வேலையில்லாமல் அவதிப்படக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தருவதற்கு எவ்வளவோ முயற்சி செய்து வருகிறது. எனவே அரசாங்கம் முன் வந்து அதுமாதிரி உள்ள நல்ல விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசாங்கம் அப்படிப்பட்ட வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற திட்டமாக சிலவற்றைச் செய்து வருகிறது. அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க தனிப்பட்டவர்கள் கூட விருப்பம் தெரிவிக்கலாம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உலக விளையாட்டுகளிலே பங்கு பெறுவது நம் நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதாகும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இப்படிப்பட்ட உலகப் போட்டிகளுக்கு

அனுப்பி வைக்க அரசு முன்வருமா? உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல அமைச்சர்களிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இத்தகைய போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நல்லவேளையாக அத்தகைய போட்டிகளை நாமே நடத்தலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லவில்லை என்று மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இளமைப் பருவம் முழுவதும் விளையாட்டிலே செலவிடுகின்ற காரணத்தால் அவர்கள் வயது வந்த பின்னால் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அவர்களை ஊக்குவிக்க ஓய்வூதியம் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு இது குறித்துப் பரிசீலிக்கும்.

திரு. எம். வின்சென்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினரை விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்பலாமா என்று கேட்டார்கள். மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களை அனுப்ப அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவருக்கென்று திறமையைக் காட்டக்கூடிய போட்டி ஏதாவது இருந்தால் அவர்களை அனுப்ப அரசு தயாராக இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தங்கள் நாற்காலியிலே ஒரு தேள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன சொன்னீர்கள் தேளா, பரவாயில்லை. இன்று ஏப்ரல் முதல் தேதி என்று எனக்குத் தெரியும். (சிரிப்பு)

## தென் ஆற்காடு மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

* 759 வினா—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் அரிசன மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை வீடுகள் எங்கெங்கு கட்டிக் கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது ?





மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) 1977–78 ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ரூபாய் 40,44,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ)

| கிராமத்தின் பெயர். | | வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. மெட்டாத்தூர் | .. | 69 |
| 2. பனையபுரம் | .. | 40 |
| 3. கீழ்த்தாயனூர் | .. | 66 |
| 4. கல்யாணம்பூண்டி | .. | 50 |
| 5. முரட்டாண்டி | .. | 53 |
| 6. கட்டுநெமலி | .. | 51 |
| 7. விலங்கையாம்பாடி | .. | 87 |
| 8. கருவேப்பிலைப்பாளையம் | .. | 70 |
| 9. தடுத்தாட் கொண்டவூர் | .. | 57 |
| 10. மலியம்பட்டு | .. | 55 |
| 11. தாழம்பட்டு | .. | 32 |
| 12. அணைவாரி | .. | 44 |
| மொத்தம் | .. | 674 |

(முற்பகல் 9-40)

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் 1978-79-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. ஆனால் 1977-78-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை இன்னும் அங்கே அனுப்பப்பட்டு, ஆர்டர்கள் அனுப்பப்படாமல், வீடுகள் கட்டாமல் இருப்பதாக அறிகிறேன். ஏற்கெனவே கட்டப்படும் என்று தெரிவித்த வீடுகள் கூட இன்னும் கட்டித் தரப்படாமல் இருக்கின்றன. இந்த வீடுகள் கட்டப்படுவது தேவையின் அடிப்படையிலா அல்லது சிபார்சின் அடிப்படையிலா? இன்னும் என்னுடைய தொகுதியில் எந்தக் கிராமமும் சேர்க்கப்படவில்லை. ஆகவே எந்த அடிப்படையில் அது சேர்க்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, 1977-78-ம் ஆண்டுக்காக நிதி ஒதுக்கத்தின் பேரில் தான் அந்த வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன என்று சொன்னேன். எந்த

அடிப்படையில் என்று கேட்கிறார்கள். எந்தெந்த ஊரில் வீட்டு மனை ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு இருக்கிறதோ அந்த ஊரில் கட்டுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வீடுகளைக் கட்டுகிறது. தேவைக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும் என்றால், நிதி ஆதாரம் அரசிடம் இல்லை என்பதால் எல்லா ஊர்களுக்கும் இதுபோன்ற வீடுகள் கட்டித் தரும் சாத்தியக் கூறுகள் இல்லை. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டம் விரைவில் அமல்படுத்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கட்டியிருக்கும் வீடுகள் எந்தெந்த ஊர்களில் என்ற பட்டியலைப் படித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது கட்டிய வீட்டிற்கும் இப்போது கட்டப்பட்டு இருக்கும் வீட்டிற்கும் என்ன வித்தியாசம் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முன்பு கட்டப்பட்டிருந்த வீட்டின் சதுர அடி 207. இப்போது கட்டப்படுவது 237 சதுர அடி; முன்பு ஒதுக்கப்பட்ட தொகை வீடு ஒன்றுக்கு ரூ. 4,000. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 6,000. அது மட்டுமல்ல நடைமுறையிலுள்ள கட்டடத்தை விட ½ அடி அதிக ஆழமுள்ள கடகாலுடனும், ஆர். சி. சி. கூரையைப் பலப்படுத்தும் வகையில் கூடுதலாக 50 கிலோ இரும்புக் கம்பிகளுடனும், கூரை ஒழுகாதிருக்கத் தட்டோடு (ப்ளாட் டைல்ஸ் போடப்பட்டும், இவ் வீடுகள் கட்டப்படும் வராந்தாவையும் அறையாக உபயோகிக்கும் வகையில் செங்கல் ஜாலி முன்புறம் அமைக்கப்படும்,

திரு. வ, துலுக்காணம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வீடு கட்டும் திட்டம் பற்றிக் குறிப்பிட்டு எந்தெந்த கிராமங்களில் கட்டப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே ஏற்கெனவே கட்டுவதற்கு சாங்ஷன் ஆகி, அரைகுறையாகக் கட்டப் படாமல் இருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா? மேலும் உளுந்தூர்பேட்டை பகுதியில், திருநாவலூர் தொகுதியில் மட்டும் கிட்டதட்ட 4-5 கிராமங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. மற்ற தொகுதிகளில் கிராமங்கள் அறிவிக்கப்பட வில்லையே? ஏன் இந்த பாரபட்சம்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவருடைய தொகுதியில் கட்டப்படாமல் இருக்கும் வீடுகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே அதுபற்றி விசாரித்தேன். அப்படி அரைகுறையாக வீடுகள் கட்டப் படாமல் இல்லை. திருநாவலூர் தொகுதிக்கு அதிகமான இடங்கள் கொடுத்து இருக்கிறீர்கள் என்று கேள்வியை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அங்கே மனைகள் அதிகம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. எவ்விதமான பாரபட்சமும் காட்ட அரசு தயாராகவில்லை.



திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, வீட்டுமனைகள் கையகப்படுத்தப்பட்ட இடங்களில்தான் வீடுகள் கட்டப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நெல்லிக்குப்பம் தொகுதியில் வானமாதேவி ஊரில் மனைகள் கையகப்படுத்தப்பட்டு 4 ஆண்டுகளுக்குமேல் ஆகியும், வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை அடிக்கடி வந்தும் இதுவரை வீடுகள் கட்டப்படவில்லை. அங்கே உடனடியாக வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பரிசிலிக்கலாம்.

திரு. எஸ். முனிரத்தினம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக வந்தவாசி தொகுதியில் கட்டப்பட்ட வீடுகள் தி. மு. க. அரசால் கட்டப்பட்டவை. இப்போது அவை பழுதடைந்து இருக்கின்றன. நான் அமைச்சரவர்களிடம் ஏற்கனவே பழுதடைந்த வீடுகள் பற்றிய போட்டோக்களைத் தந்திருக்கிறேன். அந்த வீடுகளைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்து அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது.

திரு. மொ. பெரியசாமி: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மங்களூர் தொகுதியில் பின்தங்கிய அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அரசு இனிமேல்தான் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, இப்போது அமைச்சரவர்கள் அளித்த பதிலிலிருந்து சில இடங்களில் வீடுகள் கட்டப்பட்டும், சில இடங்களில் வீடுகளைக் கட்ட ஒதுக்கீடு செய்யப் பட்டும் இருப்பதாகத் தெரிகிறது. வர இருக்கிற காலத்தில் அமைச்சரவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு கிராமத் தைத் தேர்ந்தெடுத்து, கிராமத்திற்கு 50 வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் எல்லாத் தொகுதிகளிலும் வீடு கட்டும் வாய்ப்பு ஏற்படும். அதை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, நிதி ஆதாரத்திற்கேற்பதான் இதுபோன்ற வீடுகளைக் கட்டித் தர முடியும், இப்போது சட்டியில் இருப்பதைத்தான் அகப்பையிலே எடுத்து வைத்திருக்கிறேன்; கூடுதலாக வரும்போது அதிகமாகும்.

**திரு. வி. கொ. சின்னசாமி :** தலைவரவர்களே, பவானி சாகர் தொகுதியில் புஞ்சைப்புளியம்பட்டி கிராமத்தில் அரிசனக் குடியிருப்பு கட்டுகிறார்கள், வேறு எங்கும் இல்லை. அப்படிக் கட்டப்பட்டிருக்கிற இடத்தில்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி தென்னாற் காடு மாவட்டத்தைப் பற்றியது. நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு அமைச்சரவர்களிடம் பதில் இருக்காது. தயவுசெய்து உட் காருங்கள்.

## தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கல்

* 760 வினா—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சார்ந்த மாணவர்களின் உதவித் தொகையை புத்தகமாகக் கொடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு பண மாகக் கொடுக்க முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சார்ந்த மாணவர்களின் உதவித் தொகையை ரொக்கமாகத் தருவதற்குப் பதிலாகப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் கல்வியாண்டு 1977-78 முதல் செயல்படுத்தப்படுகிறது. டணமாக வழங்குவது தவிர்க்கப் பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. புத்தகமாகக் கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுவதைத் த்விர்க்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. மா. மணிமாறன் :** தலைவரவர்களே, புத்தகமாகக் கொடுக்கப்பட்டதில் இந்த ஆண்டு ஏற்பட்ட காலதாமதத்தை அமை ச்சரவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, தொடர்ந்து பணமாகக் கொடுத்து வந்தால் கால தாமதம் தவிர்க்கப்படுவதோடு, சில நேரங்களில் மிச்சப்படும் பணத்தைக் கொண்டு நோட்டு, புத்தகம் வாங்க உதவியாக இருக்கும். அதனால் அரசு உதவித் தொகையை ரொக்கமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர் களே, பணமாக வழங்குவதற்கு முறையாக மனு போட வேண்டும். ஒவ்வொரு கல்வியாண்டிலும் இந்த மனு சம்பந்தப்பட்ட அலு வலகத்திற்கு வருவதற்கு பாதி ஆண்டைத் தாண்டிவிடுகிறது. ஆகவே, பணமாக வழங்குவது ஆண்டு இறுதியில்தான் கொடுக்கப் படுகிறது என்ற குறை இருந்தது. புத்தகமாக வழங்க ஏற்பாடு



செய்தால் உடனுக்குடன் மாணவர்களுக்குக் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு, காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. ஆகவே, புத்தகமாக வழங்கும் முறை செயல்படுத்தப்படுகிறது.

**திரு. கே. பண்ணை சேதுராம் :** தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சேர்ந்த மாணவர் களுக்கு உதவித்தொகையைப் புத்தகமாகக் கொடுக்கும்போது எதிர் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பெயர் போட்டு, ''டாக்டர் கலைஞர் 48-வது, 50—வது ஆண்டு பிறந்தநாள் அன்பளிப்புப் புத்தங்கள்'' என்று அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் அவருடைய சொந்தப் பணத்திலிருந்து கொடுக்கப்பட்டதா அல்லது அரசாங்கப் பணத் தை விளம்பரத்திற்காகக் கொடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் அளிக்கப்படவில்லை)

(முற்பகல் 9-50)

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, மாண வர்களுக்குப் பணத்திற்குப் பதிலாக புத்தகங்களாகக் கொடுக்கப் படுகிறது. ஏனென்றால் பணமாகக் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதனால்தான் இவ்வாறு புத்தகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறி னார்கள். ஆனால் சென்ற ஆண்டு புததகங்கள் வழங்குவதில் கூட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. காலாண்டு பரீட்சை முடிந்த பின்னரும் கூட பல மாணவர்களுக்குப் புத்தகங்கள் போய்ச் சேர வில்லை. ஆகவே இந்த ஆண்டாவது எல்லாப் புத்தகங்களும் ஒரே சமயத்தில், ஒவ்வொரு புத்தமாகக் கொடுக்காமல் கல்வி யாண்டு ஆரம்பித்த உடனேயே கொடுப்பதற்கு அரசு உத்திர விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பேரவைத் தலைவரவர்களே, வருகிற கல்வியாண்டிலிருந்து எல்லாப் புத்த கங்களும் உரிய நேரத்தில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். அண்ணாமலை :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை புத்த கமாகக் கொடுப்பதிலும் பல பகுதிகளிலே கடைசி வரையிலே கூடப் போய்ச் சேராமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக 60 உயர்நிலைப்பள்ளிகளில் இறுதிவரையில் போய்ச் சேரவில்லை. ஆகவே, பணமாகக் கொடுக்கப்பட்டது, புத்தக மாகக் கொடுக்கப்படுகின்ற இந்த நிலையில் பல பகுதிகளில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதனைப் பள்ளி துவங்கும் முன்னமேயே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, பணம் கொடுக்கின்ற நேரத்திலேயும் சில சிக்கல் கள் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத் திற்கு வந்திருக்கிறது. ஆகவே புத்தகமாகக் கொடுக்க அரசு ஆணையிட்டிருக்கிறது. வருகின்ற நடப்பாண்டிலிருந்து எந்த விதமான குறைபாடுமின்றி ஆரம்பத்திலேயே எல்லாப் புத்தகங் களையும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திருமதி சுப்புலட்சுமி : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் புத்தகங்களை வசதி உள்ளவர்களிட மிருந்தோ அல்லது குடும்பத்தில் மூத்தவர்கள் யாராவது படித் தவர்கள் இருந்தால் அவர்களிடமிருந்தோ பெறுவ தற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே பழையபடி உதவித் தொகையை பணமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவர வர்களே, இந்த வினுவிற்கு ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன். மீண்டும் அரசு இதுபற்றி பரிசீலிப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, புத்தகங்கள் கால தாமதம் இன்றி பள்ளி ஆரம்பத்திலேயே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினுர்கள். திரும்பத் திரும்ப அதையே கூறுகிறுர்கள். ஆகவே என்ன நடவடிக்கை அரசு எடுத்துக்கொண்டுள்ளது என் பதை அமைச்சவரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. செளந்தரபாண்டியன் : தலைவரவர் களே, அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒரு நீண்ட பட்டியல். அதை இங்கே படிப்பதைவிட தனியாகக் கொடுப்பதே சிறந்தது என்று நினைக்கிறேன். ஆகையால் அதனைத் தனியாகக் கொடுத்து விடுகிறேன்.

கரும்பின் விலை

*761 வினு—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 1976-77, 1977-78 (இதுவரையில்) ஆகிய இரண்டு பருவ வருடங்களில் விவசாயிகளிடமிருந்து சப்ளை செய் யப்பட்ட கரும்பு எத்தனை டன்கள் ?



(ஆ) ஒவ்வொரு ஆலையும் ஒவ்வொரு ஆண்டும் விவசாயி களுக்கு டன் ஒன்றுக்கு என்ன விலைக்கு நிர்ணயம் செய்து கொடுக்கப்பட்டது ?

(இ) விலை நிர்ணயத்தில். ஆலைக்கு ஆலை வேறுபாடு உள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

அவைமுன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, ஒரு ஆலை யிலிருந்து இன்னெரு ஆலை வித்தியாசப்படுகிறது. ஆகவே இதை யெல்லாம் ஒரே சீராக ஆக்கி கரும்புக்கு இவ்வளவு விலைதான் என்று அதாவது ஒரு டன்னுக்கு 150 ரூபாய் அல்லது அதற்குக் கூடுதலாகவாவது நிர்ணயிப்பார்களேயாஞல் நான் அமைச்சரவர் களுக்குப் பெரிய மாலை கூடப் போடுவேன். ஆகவே ரூ. 150 என்ற அளவிலாவது நிர்ணயிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர் களே, கரும்பின் விலையைப் பொறுத்தவரையில், மத்திய அரசு மாநில அரசுக்கு ஒரு ஆணை பிறப்பித்திருக்கின்றது. அதிலே 'சுகர் ரெகவரி பேஸிஸ்'-இல் தான்—அதாவது 8·5 சதவீதம் 'சுகர் ரிகவரி கன்டென்ட்' இருந்தால்தான் அதைப் பொறுத்து இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, இந்த 'சுகர் ரிக்கவரி' தன்மையினை வைத்து விலை நிர்ணயம் செய்யப்படுவதால் இப்படி ஒரு ஆலைக்கும் இன்னெரு ஆலைக்கும் வித்தியாசம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலிருக்கும் பாலக்கோடு சர்க்கரை ஆலையிலே இந்த சுகர் கன்டென்ட் அதிகமாக இருந்தும் அவர்கள் போன ஆண்டு ரூ. 119-ம் இந்த ஆண்டு ரூ. 120-ம் என்ற அளவில் (டன் ஒன்றுக்கு) கொடுத்திருக்கிறுர்கள். அதனுல் அதனை அதிகமாக்கிக் கொடுப் பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர் களே, இந்த ஆண்டு மீண்டும் அதிகமாகக் கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஏனென்றுல் சர்க்கரையினுடைய விலை, வெளி மார்க்கெட்டிலே குறைந்து விட்டது. அப்படி வெளி மார்க் கெட்டிலே மட்டுமல்லாமல் உலக மார்க்கெட்டிலேகூட விலை குறைந்துவிட்டது! மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற கொள்கையின் மூலமும் இப்போது அதிகமாக சர்க்கரை வெளி

[* 1103-ம் பக்கத்தில் இணைப்பு 11 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. இதனால் இப்படிப்பட்ட தேக்க நிலை ஏற்பட்டு சர்க்கரையினுடைய விலை குறைந்து காணப் படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடம் கரும்புக்கு எக்கிரிமெண்ட் செய்யும்போது குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயம் செய்வதில்லை. காலம் கடந்து எடுத்துக் கொள்வதால் ஏற்படுகிற நஷ்டத்திற்கு விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அந்த உத்தேசம் அரசுக்கு இப்போது இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: இப்போது ஸீஸனலாக சர்க்கரை ஆலைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எடுத்துக் கொள்கிறார்கள். மற்றக் காலங்களில் அந்த ஆலைகள் அரைப்பு இல்லாமல் இருக் கிறது. ஆகவே ஏற்கெனவே எக்கிரிமென்ட் செய்யப்பட்டிருக்கிற கரும்பைத் தவிர்த்து மேற்கொண்டு எக்ரிமென்ட் செய்யாமல் இருக்கிறவர்களிடம்கூட கரும்பு சப்ளை செய்ய அவர்கள் தாமாக முன்வந்து விருப்பம் தெரிவித்தால் அதை எடுத்துக்கொள்ள அரசு ஆவனசெய்யுமா?ம், இப்போது விலைகுறைந்திருக்கிறது. வெல்லம், சர்க்கரை போன்றவைகளின் விலை குறைந்திருக்கிறது. ஆகவே கரும்பு விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கட்டுப்படி யாகக்கூடிய விலை அவர்களுக்குக் கிடைக்க ஏதாவது மாற்றுத் திட்டத்தை அமைத்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்கும் திட்ட முண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கரும்பைப் பொறுத்த வரையில் 'it is a seasonal one'. அது பருவத்தைப் பொறுத்த அளவில்தான் சர்க்கரை ஆலைகளில் அரைக்கப்பட்டு வருகிறது. ஆண்டு முழுவதும் ஆரைக்க வேண்டுமென்று சொன்னால் அதற் கேற்ற வகையில் ஆலைகளுக்கு போதுமான அளவு கரும்பு கிடைப்ப தில்லை. அதனால்தான் ஸீஸனுக்கு, ஆறு மாதம், ஏழு மாதம் தொடர்ச்சியாக சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரைக்கப்பட்டு வருகிறது. இப்போதுள்ள நிலை பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் கரும்புக்குக் கொடுக்கக்கூடிய விலையை—டன் ஒன்றுக்குக் கொடுக்கக்கூடிய விலையை சிறிது சேர்த்க் கொடுக்கவேண்டுமென்று மத்தியது அரசைப் பல தடவை கேட்டிருக்கிறோம். குறைந்தபட்சம் 8·5 சத ரெக்கவரியிருந்தாலும்கூட அதற்கு ரூ. 125 கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் சிபாரிசு செய்துள்ளோம். ஆனால் வட மாநிலங்களில் அங்கு விளையக்கூடிய கரும்புக்கு மத்திய அரசு அதிகமாகக் கொடுக்கிறது. தென் மாநிலங்களில் இருக்கக்



கூடிய இங்கே பயிர் செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மட்டும் டன்னுக்குக் கொடுக்கும் விலையைக் குறைவாகக் கொடுக் கிறார்கள் என்ற ஏற்றத்தாழ்வையெல்லாம் நாம் மத்திய அரசி னிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, லெவி சர்க்கரைக்குக் கொடுக்கக் கூடிய விலை, தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரைக்குக் கொடுக்கக்கூடியது ரூ. 178.23 என்று அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அது அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும். அதைச் சொல்லும்போது பீஹார் போன்ற மாநிலங்களில் அங்கு லெவி சர்க்கரைக்கு க்விண்டால் ஒன்றுக்கு ரூ. 274 கொடுக்கிறார்கள். இந்த ஏற்றத்தாழ்வு நிலைமை களையெல்லாம் நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக் கிறோம். இவைகளை யெல்லாம் அனுசரித்து மத்திய சர்க்கார் அவர்கள் ஆணைபிறப்பிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: கூட்டுறவுத் துறையில் பதிவு செய்யப் பட்ட கரும்பையாவது முழுமையாக, ஸீஸன் முடிந்துவிட்டது என்று சொல்லாமல் அவைகளை அரைத்துக்கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 'ஸீஸன்' முடிவதற் குள்ளாக, எவ்வளவு தூரம் 'எக்ரிமென்ட்' போடப்பட்ட கரும்புகளை ஆலைகள் எடுத்துக்கொள்வதற்கு உண்டான வழிவகைகளை அரசு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். முனிரத்தினம்: திருவள்ளூரில் ஒருசர்க்கரை ஆலை அமைக்கப்படுமா? திருவள்ளூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கரும்பை பயிர்செய்தால் அதை விற்க இடமில்லாமல் அவதிப்படுகிறார்கள். எனவே திருவள்ளூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தற்போது அரசுக்கு அந்த உத்தேசம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: விலை நிர்ணயம் செய்யும்போது ஷுகர் ரெக்கவரியை வைத்து கணக்கிடுவதாக அறிவித்திருக்கிறார் கள். இங்கு அறிவிக்கப்பட்ட ஆலைகளில் எந்த விழுக்காடு ஷுகர் ரெக்கவரி வருகிறது என்பதை அறிவிக்க வேண்டும்.

அடுத்து, கள்ளக்குறிச்சி ஆலையில்தான் மிகக் குறைவாக விலை தருகிறார்கள். அங்கே ஷுகர் ரெக்கவரி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 'ஷுகர் ரெகவரியைப் பொறுத்த அளவில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகின்றன. அதைத்தான் மத்திய அரசும், மாநில அரசை வற்புறுத்தி வருகிறது. கள்ளக்குறிச்சியில் கொடுக்கப்படுகிற விலை குறைவாக இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.

அந்த ரூ. 109-யை அதிகபட்சம் ரூ. 114 ஆகக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஷுகர் டைரக்டர் மூலமாகவும் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகள் மூலமாகவும் முயற்சி செய்யப்பட்டுள்ளதுடன் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு எங்களைச் சந்தித்தது. அதன் மூலமாக அந்த ரூ. 109 என்பதை அதிகமாக்கி ரூ. 114 கொடுக்கப்படவேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். உடனடியாக அந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன. மேலும் ரெக்கவரி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்றும் கேட்டார்கள். அது கரும்பு விளைகின்ற நிலத்தின் தன்மையைப் பொறுத்தது, போடுகின்ற உரத்தைப் பொறுத்தது, நிலத்தைப் பொறுத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தினை இன்னும் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

(முற்பகல் 10.00)

*762 வினா—

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலையில் கடந்த 77-ஆம் ஆண்டு வெட்டிய கரும்புக்கு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படாமல் இன்னும் ஏதேனும் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): உயிரிழந்த கரும்பு உற்பத்தியாளர் ஒருவருக்கு மாத்திரம் ரூ. 1,826·29 கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. சட்டப்படியான வாரிசு கேட்டால் கொடுக்கப்படும்.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இழந்த ஒருவருடைய பாக்கியைத் தவிர வேறு எந்தவிதமான பாக்கியும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிகவும் நன்றி. சட்ட மன்றத்தில் இதுபற்றி கேள்விகளை எழுப்பிய பிறகுதான் இப்படிப்பட்ட பாக்கிகளை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். மேலும், கட்டிங் ஆர்டர் கொடுக்கின்ற நேரத்திலும் பணம் கொடுப்பதில்லை. லாரிகளையும் உரிய நேரத்தில் வழங்குவதில்லை. தனியார் லாரிகளை வாடகைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு 250 ரூபாய் கேட்கிறார்கள். இவையெல்லாம் இல்லாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு பாக்கி எதுவும் இல்லை. தனியார் நிறுவனங்களைப்



பொறுத்தவரையில், ஒருசில ஆலைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குள்ள பாக்கியை சரிசெய்யாமல் இருக்கின்றன. அவைகளின் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்து, உடனடியாக பாக்கிகளை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்று உத்தரவும் பிறப்பித்து இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் 'கட்டிங்' ஆர்டர் சரியான நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். கட்டிங் ஆர்டர் கொடுப்பதைப் பொறுத்த விஷயத்தில் வரிசைப்படுத்தி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலுள்ள கணக்கையும் ஆலைகளில் அரவை செய்கின்ற தேதிகளையும் கணக்கில் எடுத்து 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர வேறு எங்காவது தாமதம் ஏற்படுவதாக இருந்தால்—குறிப்பாக இந்த இடங்களில் தாமதம் ஏற்படுகிறது என்பதை என்னிடம் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்வேன் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, லாரிகள் அனுப்புகின்ற விஷயத்தில் தாமதம் ஏற்படுகிறது. வெளியில், அதிகமான கட்டணம் கேட்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். இதையும் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கு தொடர்புடையதாகக் கேளுங்கள்.....

திரு. ஜே. ஜேம்ஸ் : முந்தின கேள்வி தொடர்புடையதாக இருந்தது, இதில் கேள்விகள் கேட்க எனக்கு இடம் கொடுக்கப்படவில்லை. அதனால் தான் இப்போது கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இதில் எப்படிக் கேட்க முடியும்? தயவு செய்து உட்காருங்கள்.

சோன நதியின் குறுக்கே பாலம்

*763 வினா—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் உள்ள மணலூர்பேட்டையிலிருந்து மேலந்தல் செல்லும் வழியில் உள்ள சோனா நதியின் குறுக்கே கரும்பு செஸ் நிதியிலிருந்து சிறுபாலம் அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஆம். சோனந்தி ஓடையின் குறுக்கே சிறுபாலம் அமைக்க பிரேரணை ஒன்று பரிசீலனையில் உள்ளது. ரூ. 5 இலட்ச மதிப்பீட்டில் சிறுபாலம் அமைக்க ஒரு பிரேரணை கிடைக்கப் பெற்று நடப்பு தேதியில் உள்ள விலைப்பட்டியல் விகிதப்படி மதிப்பீடு கேட்கப்பட்டுள்ளது. திருச்சி கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலை), (கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்) மதிப்பீட்டை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

திரு. கோ. ரகோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில்துறைப்பட்டிலிருந்து மணலூர்பேட்டை வரை பாலம் கட்டாமல் இருபுறமும் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவில் பாதைகளை அமைத்திருக்கிறார்கள். இதனால் எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாக அமைத்து, ஏழு லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சாலைகளை நல்லமுறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(விடை இல்லை)

திரு. த. வேணுகோபால் ; தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஆலையிலிருந்து—செஸ் நிதியிலிருந்து—தென்னாற்காடு மாவட்டத்திற்கு பெருவாரியான சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலையைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் சேர்ந்ததாக இருக்கிறது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பகுதிகளுக்கும் சேர்ந்து இந்த ஆலையின் செஸ் நிதியிலிருந்து சாலைகளை அமைக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(விடை இல்லை)

## கைத்தறித் துணி ஏற்றுமதிக்குப் பரிசு

*764 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கைத்தறித் துணிகளை பெருமளவில் ஏற்றுமதி செய்வோருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) பரிசு வழங்கும் திட்டம் 1-1-75 முதல் 31-12-77 முடிய மூன்று ஆண்டுகளுக்கு அமுல் நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது 1974, 1975, 1976 ஆண்டுகளில் அதிகமான அளவில் பருத்தித்துணிகள், பட்டுத்துணிகள், பருத்தி ரெடிமேட் ஆடைகள் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்தவர்களுக்கு ஒவ்வொரு ரகத்திற்கும் மூன்று பரிசுகள்—முதற்பரிசு ரூ. 1000, மதிப்புள்ள வெள்ளிக்கோப்பையும், இரண்டாவது பரிசு ரூ. 500, மதிப்புள்ள கேடயமும், மூன்றாவது பரிசு திறமை சான்றிதழுடன், ரூ. 200 ரொக்கப் பணமும் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசு கைத்தறித் துணிகளுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறதா ? பவர்லூம்களுக்கும் வழங்கப்படுகின்றதா ? அண்மைக் காலத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகக்கூடிய கைத்தறித் துணிகளின் மார்க்கெட்டு மந்தமாக இருக்கிறது. ஏனென்றால், கைத்தறித் துணியோடு, பவர்லூமின் போட்டி இருந்துகொண்டு வருகிறது. அதனால், பல்வேறு வகையான கைத்தறித் துணிகளுக்கு இப்படிப்பட்ட பரிசுகளை மேலும் அளிக்கின்ற வகையில், எல்லா வகைகளுக்கும் பரிசுகளை அதிகப்படுத்தி, அதிகப்படியான கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தப் பரிசு கைத்தறித் துணிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவை அதிகப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். துணிகளின் தரத்தையும், அதே நேரத்திலே வண்ணங்கள் மாறிவிடாத அளவிற்கு நவீன சாயங்களை அதோடு இணைத்து, நல்லவகையிலே இப்போது துணிகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக, கூட்டுறவுத் துறையிலே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நவீனமானதாகவும் தரமாகவும் துணிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் துணிகளின் தரத்தையும் பாதுகாக்கின்ற அளவிற்கு இப்போது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்த முதல் தரத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்ததாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால், இதுவரை அந்தப் பரிசுத்திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறதா ? அந்தப் பரிசுகள் வழங்கியது யார் யார் என்ற பட்டியலை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அது தனியார் துறைக்கு மாத்திரம் தானா அல்லது அரசாங்கத் துறைக்கும் அளிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை அதிகமான அளவிலே ஏற்றுமதி செய்பவர்களுக்கு பரிசு என்பதுதான் இந்தத் திட்டத்

தின் நோக்கம். எனவே, இதில் தனியார் துறையிலே இருக்கக் கூடியவர்கள் என்றாலும் யார் அதிகமான அளவிலே ஏற்றுமதி செய்கிறார்களோ, அவர்களுக்கு பரிசுகள் வழங்குவது என்று அரசு அறிவித்திருந்தது. அதன்படி, பருத்தி கைத்தறித் துணிகளுக்கு திருவாளர்கள் மேட்டூர் பியர்ட்சல் முதல் பரிசும், இந்தியக் கைவினை ஏற்றுமதிக்கழகம் இரண்டாவது பரிசும், திருவாளர்கள் கோவிந்தசாமி முதலியார் அண்டு சன்ஸ் மூன்றாவது பரிசும் பெற்றிருக்கிறார்கள். அதுபோல் பட்டு கைத்தறித் துணிகள் ஏற்றுமதியில் ராதா சில்க் எம்போரியம் முதற் பரிசு பெற்றிருக்கிறார்கள். இதுவரை பரிசு பெற்றுள்ளவர்கள் தனியார் துறைகளைச் சார்ந்தவர்கள். புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இப்போது அரசுத் துறையின் சார்பிலே இரண்டு கோடி ரூபாய்களுக்கான துணிகளை நாம் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி பெற்றிருக்கிறோம். ஒருவேளை இந்தத் திட்டம் விரிவாகக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால், அடுத்த ஆண்டு இந்தப் பரிசு நமக்குக் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் ஏற்றுமதித் துறையிலே தனியார்கள் அதிகமாக உள்ள செங்கற்பட்டு, ஆரணி, மாதரப்பாக்கம் ஆகிய பகுதிகளிலே உள்ள நெசவாளர்களுக்கு இந்தக் கொள்முதல் குறைத்தும், கூலியைக் குறைவாகக் கொடுக்கின்ற கோரிக்கை அரசுக்கு ஏதாவது வந்துள்ளதா? அப்படியானால், அது சம்பந்தமாக பரிசிலனை ஏதாவது செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கொள்முதல் குறைவாகவும், கூலி குறைவாகவும் கொடுக்கவேண்டும் என்று எந்தவிதமான யோசனையும் இதுவரை அரசுக்கு வரவில்லை. ஆனால், கூலி குறைவாகக் கொடுக்கிறார்கள் என்ற புகார்தான் வந்தது. அதன்மீது தனியார் துறையிலே உள்ள முதலாளிகளை அழைத்து எற்கனவே கொடுத்துவந்த கூலியை ஒழுங்காகக் கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டது. ஏற்றுமதி குறைவாக இருப்பதன் காரணமாக, அவர்களால் கிராமங்களிலே உள்ளவர்களுக்கு முன்போல் தொழில் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதுவும், உடனடியாக கொள்முதல் செய்வதற்கான திட்டங்களை இந்த அரசு உருவாக்கி அவர்களுக்கு உதவி செய்வதாக உறுதி அளித்ததின்பேரில், அநேகமாக அந்தக் குறையும் இருக்காது. அரசு அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

டாக்டர் கே. சமரசம் : கைத்தறித் துணியைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்கான பரிசுத் திட்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நவீன முறையில் மேலும் மெருகுபடக்



கூடிய முறையில் பலப் பல வண்ணங்களில் உருவாக்கக்கூடிய முறையில் கைத்தறித் துணிகளை மேலும் சிறப்புடையதாக்க அந்தப் பரிசுத் திட்டத்தை மாற்றியமைத்து இன்னும் பெருமளவில் பரிசளிக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆரம்ப காலத்தில் கைத்தறித் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் தனியார் துறையைச் சார்ந்தவர்கள் பெருமளவில் ஈடுபட வேண்டுமென்று மத்திய அரசு ஊக்க உதவித் திட்டத்தை அமல் செய்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ளவர்களையும் ஓரளவு உற்சாகப்படுத்த வேண்டுமென்றுதான் பரிசுத் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இவ்வாறு ஊக்குவிக்கும் திட்டத்திற்குப் பதிலாக ஏற்றுமதிக்காக புதிய ஒழுங்குபடுத்தும் திட்டத்தை வைத்து நல்ல தரமான துணிகளை ஏற்றுமதி செய்யும் சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தப் பரிசுத் திட்டம் இப்படியே தொடர்வது தேவைதானா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கும் காரணத்தால் இதை மேலும் அதிகப்படுத்துவதற்கு தற்போதைக்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : இன்றைக்குப் பத்திரிகையில் பார்த்தேன். சென்னை நகரில் நடைபெறுகிற கைத்தறி வார விழாவில் இதற்கு முன்பெல்லாம் ஒவ்வொரு தலைவர்களை வைத்து நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கம். இந்த ஆண்டு ஏதோ நாடகங்களை அறிமுகம் செய்திருக்கிறார்கள். என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர்களைப் பார்த்துப் பார்த்து மக்களுக்கு ஒருவேளை அலுப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே, கலையின் மூலமாக, நாடகங்களின் மூலமாக மேலும் நல்ல முறையில் பிரச்சாரம் செய்யலாம் என்ற முறையிலே சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கருத்த ராவுத்தர் கல்லூரி, உத்தமபாளையம்.

*765 வினு—திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி வக் போர்டின் நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) புதிதாக அந்தக் கல்லூரிக்கு நிர்வாகக்குழு ஏதேனும் அமைக்கப்பட்டு இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும். (ஆ): ஹாஜி கருத்த இராவுத்தர் ஹெளதியா கல்லூரியின் பழைய நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு புதிய நிர்வாகக் குழு ஒன்றை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் 1954-ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம் (மத்தியச்சட்டம் 29/1954) பிரிவு 43 (2)-ன் விதித்துறையின் கீழ் அமைத்துள்ளது.

(இ) புதிய நிர்வாகக் குழுவில் 11 உறுப்பினர்கள் அடங்கியுள்ளனர். இக்குழு 21-10-1977 அன்று பதவி ஏற்றுள்ளது. குழுவின் பதவிக்காலம் ஓராண்டாகும்.

திரு. ஏ. ரகுமான்கான் : மதுரை மாவட்டம் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹெளதியா கல்லூரியை வக்ஃபு போர்டின் நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே உறுதிமொழி கொடுத்தார்கள். ஏன் அது இன்னும் வக்ஃப் போர்டால் எடுத்துக் கொள்ளப்படவில்லை? புதிதாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தக் குழு பத்து மாத காலமாக அந்தக் கல்லூரியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. அது குறித்து என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? நீதி மன்றத் தீர்ப்பின்படி கல்லூரிச் சொத்து அதன் சுவாதீனத்திற்கு வந்து விட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹெளதியா கல்லூரியில் அதற்குத் தேவையான அல்லது அந்தக் கல்லூரிக்குச் சொந்தமான சொத்துகள், இதற்கு முன்பு அந்தச் சொத்துக்களை எழுதி வைத்தவர்கள் குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளின் பராமரிப்பிலும், மேற்பார்வையிலும் இருந்து வந்தது. அதைக் கல்லூரிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு 8-12-77-ல் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு கல்லூரியின் நிர்வாகக் குழுவில் உள்ளவர்கள் அந்தச் சொத்துக்களைக் கல்லூரியின் மேற்பார்வையில் கொண்டு வரவேண்டுமென்று பல்வேறு முயற்சிகளை சட்ட ரீதியான முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். இன்னும் சொத்துக்கள் முழுவதும் கல்லூரியின் நேரடியான நிர்வாகத்திற்கு வந்து சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வக்ஃப் வாரியம், கல்லூரியின் நிர்வாகத்தில் ஏதாவது தவறுகள், குறைபாடுகள் ஏற்படுமானால் தாற்காலிகமாக அந்த நிர்வாகக் குழுவை மாற்றியமைப்பதற்குத்தான் இதுவரை முயற்சி செய்து வந்திருக்கிறது. அந்த நிர்வாகத்தை முழுவதுமாக வக்ஃப் வாரியம் எடுத்துக் கொள்ள சட்ட விதிகளில் இடம் இல்லை. தவறு இருக்குமானால் தற்காலிகமாக நிர்வாகக் குழுவை மாற்றி அமைக்கத்தான் வக்ஃப் சட்டம் இடம் அளிக்கிறது. அந்த வகையில் தாற்காலிகமான நிர்வாகக் குழுவை அமைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர்கேடுகள் அல்லது குறைகள் காரணமாக உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியின் நிர்வாகக் குழுவின் மேல் தமிழக வக்ஃப் வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்றே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள இஸ்லாமியச் சமுதாயத்தினரால் நடத்தப்படுகிற கல்லூரிகளில் உள்ள குறைகள், அவைகளைப்பற்றிய குற்றச்சாட்டுகள் புதுக் கல்லூரி போன்ற கல்லூரிகளின் மேல் கூறப்படுகின்றன, ஆகவே இப்படிப்பட்ட கல்லூரிகள் பற்றியும் தமிழக வக்ஃப் வாரியம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல் தமிழ்நாடு வக்ஃப் வாரியம், 1954 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் மத்திய சட்டம் 29, பிரிவு 43 (2) ன்படி இப்படிப்பட்ட கல்லூரிகளில் உள்ள நிர்வாகத்திலே ஏதாவது தவறுகள், முறைகேடுகள் இருக்குமானால் அந்த நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு தாற்காலிகமாக ஒரு குழுவை நியமிக்க அதிகாரம் உடையதாய் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் மாநிலத்தில் உள்ள சிறுபான்மையோரால் நடத்தப்படுகிற கல்லூரிகளில் முறைகேடுகள் இருந்தால் அவைகளைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, அவைகள் பற்றியும் உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## (3) உரிமைப் பிரச்னை

### பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் தவறான குற்றச்சாட்டுகளை சாட்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். இராதா, திரு. கே. பண்ணை சேதுராம், டாக்டர் கே. சமரசம் ஆகியவர்கள் எதிர்க்கட்சி தலைவர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவரவேண்டுமென்று அனுமதி கேட்டு இருக்கிறார்கள். நான் அதற்கு அனுமதி அளிக்கிறேன். சுருக்கமாக அதைப்பற்றி திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 184-ன் கீழ் நான் உரிமை மீறல் பிரச்சினையைக் குறித்து அறிவிப்பைக் கொடுக்கிறேன். 30-3-78 ஆம் நாளன்று நிதி ஒதுக்க மசோதாவின் மீது பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரண வேலைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது அந்தப் பகுதியில் உள்ள மூன்று சாலைகளின் பெயர்களைச் சொல்லி அந்தச் சாலைகள் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டாலும் பல பகுதி சாலை களுக்கும் ஒரே ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டார் என்றும் அரசு ஆணையின்படி 50 ஆயிரம் என்று உச்ச வரம்பு இருந்தும் 1, 2, லட்சம் பெறும் வேறு வேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். நாமினேஷன் வேலை 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தரக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் இந்த பண்ருட்டி பஞ்சாயத்து யூனியனில் எப்படி இந்த உத்திரவில் சந்து பொந்துக்களிலே நுழைந்து பல பேர் மோசடி செய்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதேபோல் 4 கிலோ மீட்டர் நீளமுள்ள ரோடு, 50,000 ரூபாய்க்கு மேல் வந்துவிட்டால் ஆபத்து வந்துவிடும் என்று கருதி நான்காகப் பிரித்தார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். மேலும் குறிப்பிட்டார்கள். இந்த நான்கும் ஒருவருக்குத்தான் தரப் பட்டிருக்கிறது, இது ஒரு குற்றச்சாட்டு என்றும் திட்டவட்டமாகக் கூறினார்கள். ஆனால் 31-3-78 ஆம் நாளன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், விதி 82 இன் கீழ் இதுபற்றிய அறிக்கையை அவையிலே வைக்கும்போது மேற்கூறப் பட்ட வேலைகள் தனித்தனியே பிரிக்கப்பட்டது உண்மை என்று ஆனால் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு ஒப்பந்தக் காரர்களுக்குத் தான் தரப்பட்டிருக்கிறது என்றும் ஒரே ஒப்பந்தகாரர்களுக்குப் பல பகுதிகள் தரப்படவில்லை என்பதையும் எடுத்துக் காட்டினார்கள். மேலும் எந்த ஒப்பந்தகாரருக்கும் அரசு ஆணைக்குப் புறம்பாக 50 ஆயிரத்திற்கு மேல் தரப்படவில்லை என்று விளக்கினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் பேசுகின்றபோது அவர் ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் என்பதாலும் ஏற்கனவே முதல் அமைச்சராக இருந்தவர் என்ற காரணத்தாலும் அவரே தெரிவித்தபடி பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் என்ற காரணத்தாலும் அவர் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு அவருக்கு விவரங்கள் தெரியாதிருக்க நியாயம் இல்லை.

(முற்பகல் 10-20)

தகவல் தரப்பட்டவுடன் அதை ஆராய்ந்து பேசக்கூடியவர் என்று நான் மிக நன்றாக அறிவேன். அப்படியிருந்தும், உண் மைக்குப் புறம்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள்



வேண்டுமென்றே சில குற்றச்சாட்டுகளை இந்த அரசின்மீது எழுப்பியுள்ளார்கள். அதன் மூலம்இந்தப் பேரவைக்குத் தவறான தகவல்களை வேண்டுமென்றே தந்துள்ளார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, இது நிச்சயமாக திட்டமிட்டே, வேண்டுமென்றே உள் நோக்கத்தோடு கொண்டுவந்து இந்த மாமன்ற உறுப்பினர்களையும், அவையையும் திசை திருப்புகிற முறையில் இதைச் செய்திருக்கிறார்கள். எனவே, அவையின் உரிமையை மீறிய தாகும். அதுபற்றி முழுவதுமாக விசாரித்து இந்தப் பேரவையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றுவதுடன் தவறான தகவல்கள் இந்த அவைக்கு அடிக்கடி தரப்படுவதைத் தவிர்க்கவும் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்து உண்மையை அறிந்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, இந்தப் பிரச்சினையில் அவர் பேசிய பேச்சுக்கள் பல்வேறு பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களிலே வந்தது. அதிலும் குறிப்பாக முரசொலி பத்திரிகையிலே மிகப்பெரிய எழுத்தில், இந்த அரசிலே ஊழல்கள் நடந்து விட்டன என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளைக் கூறுவதன் மூலமாக இந்த அரசின்மீது ஒரு களங்கத்தை உண்டாக்கி, பொதுமக்களிடத்தில், சாதாரண ஏழை எளியவர்களிடத்தில், இது ஒரு தவறான அரசு என்று காட்ட வேண்டுமென்பதற்காக, இங்கே ஊழல் செய்பவர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தாலே வெளியிலே இருப்பவர்கள் என்ன கருதினாலும் சரி. அவையிலே இருக்கின்ற எங்களைப் போன்ற உறுப்பினர்கள், ஒரு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறுகிறார்கள் என்று சொல்கிற நேரத்தில், எங்களுக்கெல்லாம் கூட அதைக் கேட்கிற நேரத்திலே நாங்கள் மிகுந்த அச்சத்திற்கு ஆளானோம். ஆனால் மாண்புமிகு அமைச் சரவர்கள் விளக்கம் சொல்கின்ற நேரத்தில், அவரால் சொல்லப் பட்ட குற்றச்சாட்டுகள் தவறானவை என்று சொல்கிற நேரத்தில், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள்-நான் முன்பு தெரிவித்தது மாதிரி-விவரங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு' தவறான தகவலை இந்த அவையிலே கொடுத்து இந்த அரசின்மீது களங்கத்தை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்திலே செய்திருக்கிற காரணத்தால் இது பேரவையின் உரிமையை மீறியதாகும் என்று சுட்டிக்காட்டி இந்த அவையில் தீர்மானத்தை முன்மொழிவதற்கு என்னை நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:- எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிக்கவேண்டுமென்றால் தெரிவிக்கலாம்.

திரு. மு. கருணாநிதி:- மாண்புமிகு தலைவரவர்களே, நான் வரும்போது தங்களிடத்தில், சட்டமன்ற விதி 81-இன்படி ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு அனுமதியைப் பெற்றி

ருக்கிறேன். அதற்கிடையிலே நண்பர் இராதா அவர்கள் என்மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து, அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நீண்ட உரை ஒன்றினை ஆற்றியிருக்கிறார்கள். நான் இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து பதில் அளித்துவிட்டு, அதற்குப் பிறகு 81-வது விதியின்படி என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

நான் அன்றைக்கு எடுத்துச்சொன்ன விவகாரங்கள் சரியா அல்லவா, எந்த ஆதாரத்தோடு சொல்லப்பட்டன என்பதை அடுத்து நீங்கள் வாய்ப்பளித்து இருக்கின்ற 81-வது விதியின்கீழ் அளிக்கின்ற விளக்கத்தில் விளக்க இருக்கிறேன். அதற்கிடையில் இந்த உரிமை மீறல் பிரச்சினையைப் பற்றி தங்களுடைய கவனத்திற்கும், ஆய்விற்கும் ஒன்றை நினைவிபடுத்த விரும்புகிறேன்

சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை அவையிலே எடுத்து வைப்பதும், அந்தத் தகவல்கள் சரியானவைகளா அல்லவா என்பதை அமைச்சர்கள் விளக்குவதும் சட்டமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாக இருக்கிறது. உதாரணமாக, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் ஒரு தரப்பிலேயிருந்து, ஒருவர் போலீஸ் லாக்கப்பில் இறந்துவிடுகிறார் என்றால் லாக்கப்பில் அடித்துக் கொல்லப்பட்டு அவர் செத்து விட்டார் என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் பேசுவது இந்த அவையிலே நடைபெற்றிருக்கின்ற நிகழ்ச்சிகள், பிறகு தொடர்புடைய அமைச்சர் எழுந்து, அப்படி லாக்கப்பில் அடித்துக் கொல்லப்படவில்லை, தூக்குமாட்டிக்கொண்டு இறந்தார் என்ற தகவலைச் சொன்னதும் உடனடியாக ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் அப்படிச் சொன்னார் என்று அவர்மீது இதுவரையில் உரிமைப்பிரச்சினை கொண்டு வந்ததாக இந்த அவையின் வரலாற்றில் இடம் பெற்று இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, தகவல்களை வைத்து உறுப்பினர்கள் பேசுவதும், அதற்கு அமைச்சர்கள் விளக்கம் அளிப்பதும் வாடிக்கையாக நடைபெறும் ஒன்று. தகவல்கள் தரப்பட்டன, அமைச்சர் தன்னுடைய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். தகவலைத் தரும்பொழுதே நான் மிகக் கவனமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன், நடைபெற்றிருக்கின்ற முறைகேடுகளைப்பற்றித் தகவல் வந்திருக்கின்றது, இவைகளை முதலமைச்சரவர்கள், அமைச்சர்கள் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுத்து திருத்த வேண்டுமென்பதற்காகத்தான் இவைகளை இங்கே முன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்

இப்படி உறுப்பினர்கள் சொல்கின்ற எந்தப் பிரச்சினையும். அமைச்சர்களால் மறுக்கப்பட்டு விடுமானால் உடனே அந்த உறுப்பினர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட வேண்டுமென்ற நிலைமை இங்கே அனுமதிக்கப்படுமானால் எந்த உறுப்பினரும்



துணிந்து தாங்கள் எந்தக் கருத்துக்களையும் சொல்ல முன் வர மாட்டார்கள். எனவே, அந்த வகையில் ஆராய்ந்து தாங்கள் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதன்மீது எனது திர்ப்பு பின்னால் அறிவிக்கப்படும்.

## 4. தன்னிலை விளக்கம்.

**(அ) பண்ருட்டி ஒன்றியத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரணப்பணிகள் குறித்து தாம் சாட்டிய குற்றச்சாட்டுகள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அளித்த விளக்கம்.**

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, தங்களுடைய அனுமதி பெற்று, சட்டமன்ற விதி 81-ன் கீழ் சில விளக்கங்களைத் தர விரும்புகிறேன். நிதிநிலை ஒதுக்கீடு ஒப்புதலுக்கு நடைபெற்ற விவாதத்தின்பொழுது புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செலவழிக்கப்பட வேண்டிய பணம், புயலால் சிறிதளவும் பாதிக்கப்படாத பண்ருட்டி யூனியனிலே உள்ள சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு இலட்சக்கணக்கிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலையினை நான் சுட்டிக்காட்டி அது எவ்வாறு செலவழிக்கப்பட்டது, அதிலே எப்படி தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்கின்ற விளக்கங்களைச் சொன்னேன். நேற்றையதினம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே 82-வது விதியின்கீழ் வைத்த அறிக்கையில், ஆதாரம் இல்லாமல் சில குற்றச்சாட்டுகளை நான் கூறியதாக, அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அன்றைக்கு எடுத்து வைத்த எந்த கருத்தும் ஆதாரம் இல்லாமல் எடுத்து வைக்கப்பட்ட கருத்தல்ல என்பதை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

8-2-1978 தேதியில் மாலை 3 மணிக்கு பண்ருட்டி ஒன்றிய அலுவலகத்தில் டி. டி. ஓ. தலைமையில் யூனியன் கமிஷனர் ரங்கநாதன் அவர்களுடைய அழைப்பின் பேரில் மக்கள் குழு கூட்டப்பட்டிருக்கிறது. அந்த மக்கள் குழுவில் ஜனதா கட்சியின் சார்பில் ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருந்த டாக்டர் நந்தகோபாலகிருஷ்ணன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் லட்சுமிகாந்தன் பி. ஏ., பி. எல்., மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகராஜன், புதுப்பேட்டையைச் சேர்ந்த பசவலிங்கம்....

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> விவரம் தெரிந்ததனால் சொல்கிறேன், அவர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் அல்ல.

<u>திரு. மு. கருணாநிதி:</u> ஜனதா கட்சி சார்பிலே டாக்டர் நந்தகோபாலகிருஷ்ணன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் லட்சுமிகாந்தன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புதுப்பேட்டை பசவலிங்கம், மற்ற அதிகாரிகள் அந்த மக்கள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடைய கையெழுத்து இடப்பட்டு வழங்கிய, 'எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்'— என்ற தலைப்பில் 'நாமினேஷன்' வேலைகளைப் பற்றிய அறிக்கை, பஞ்சாயத்து யூனியன் பொறியாளரால் படிக்கப்பட்டு குழு உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட்ட அறிக்கை என்னிடத்திலே இருக்கிறது. ஜனதா கட்சி உறுப்பினர் நந்தகோபால கிருஷ்ணனுக்கு வழங்கப்பட்ட அறிக்கை என்னிடத்திலே இருக்கிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பருக்கு வழங்கப்பட்ட அறிக்கையும் என்னிடத்திலே தானிருக்கிறது. (மூன்று புத்தகங்களைக் காண்பித்தார்). இந்த மூன்று அறிக்கைகளும் என்னிடத்திலே இருக்கின்றன. இது அங்கே படித்துக் காட்டப்பட்டது.

படிக்கிற பொழுது அழகப்ப சமுத்திரம் டு குள்ளஞ்சாவடி - காட்டுக் கூடலூர் வரையில் உள்ள சாலை - நான் அன்றைக்குக் குறிப்பிட்டவாறு — அந்த அறிக்கையில் இருப்பது - பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர் என்பவருக்கே நான்காகப் பிரிக்கப்பட்டு நாமினேஷனில் தரப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதைத்தான் நான் படித்தேன். அப்படி ஒருவருக்கே நான்காகப் பிரித்தளிப்பதைப் பற்றி அந்த மக்கள் குழு கூட்டத்திலேயே ஜனதா கட்சி சார்பிலே நந்தகோபாலகிருஷ்ணன் மறுத்திருக்கிறார்.

அன்றைக்கு ரூ. 1, 06,000 ஆக அறிவிக்கப்பட்ட, நான்காகப் பிரித்து அளிக்கப்பட்ட வேலை, அமைச்சர் படித்த அறிக்கையில் ரூ. 1,43,000 ஆக மாறியிருக்கிறது. இந்த மாற்றம் எதுவும் மீண்டும் அந்தக் குழுவினருக்கு அறிவிக்கப்படவேயில்லை. குழு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட தகவலைத் தான் நாங்கள் சொல்ல முடியும். அதைத்தான் நான் ஆதாரமாகக் காட்டினேன். அதைத்தான் தங்களிடம் ஆதாரமாகக் காட்டிவிட்டுத்தான் இங்கே படித்தேன்.



அடுத்து, இன்னொரு வேலை, நான் குறிப்பிட்டது, அழகப்ப சமுத்திரம் ரோடு பிராஞ்சில் - பூவராகமூர்த்தி, விசுவநாதன் பார்ட்டிக்கு ஒரு வேலையை நான்காகப் பிரித்துத் தரப்படுவதாகவும் கமிஷனர் அறிக்கையிலே இருக்கிறது. அதன் மொத்த மதிப்பு ரூ. 1,37,500. ஆனால், நேற்று அமைச்சர் தந்த அறிக்கையில் அது ரூ. 1,05,000 ஆகக் குறைந்துள்ளது. நான் தந்த ஆதாரத்தில் கமிஷனர் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறார்.

மூன்றாவது வேலை - சாத்திப்பட்டு ரோடு டு புதுப்பாளையம் என்பதில், கமிஷனருடைய அறிக்கையில் ஏழாகப் பிரிக்கப்பட்டு, ஒருவருக்கே ரூ. 2,50,000-க்குத் தரப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வேலையை, கமிஷனருடைய அறிக்கையில் வேணுகோபால் அண்ட் பழனி என்ற பார்ட்டிக்கே தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

ஆனால் அமைச்சர் படித்த அறிக்கையில் 1,95,000 ரூபாய்க்கு ஆறு வேலையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏழாகப் பிரிக்கப்பட்டு பழனி, வேணுகோபால் என்பவருக்குத் தரப்பட்டதாகக் கமிஷனர் அறிக்கையில் சொல்லப்பட்ட வேலை ஆறாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக நேற்றையதினம் அறிவிக்கப்பட்டது. கமிஷனர் அறிக்கையின்படி அதே வேணுகோபால்—பழனி பார்ட்டிக்கு கே. கே. ரோடு—சொரத்தூர் வேலை என்ற வேறு வேலை 48,500 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நேற்று அளித்த அறிக்கையில் மணப்பத்தூர் பாலசுப்பிரமணியத்திற்கு ஒரு பணியும் தரப்படவில்லை என்று கூறியுள்ளார். நான் கமிஷனர் அறிக்கையில் உள்ளதைத்தான் எடுத்துக் காட்டினேன். ஒரு பணியும் தரப்படவில்லை என்றார் அமைச்சர்.

ஆனால் பாலசுப்பிரமணியத்திற்கு கொடுக்கப்பட்ட 'ஓர்க் ஆர்டரை' நான் கையிலே வைத்திருக்கிறேன். அதை அப்படியே படிக்கிறேன்.

(ந. க. எண். 10276/77-24 நாள் 28-12-77)

பொருள்: அரசு வேலை, அவசர புயல் வெள்ளப் பணி நிவாரண வேலை - பண்ருட்டி பஞ்சாயத்து ஒன்றியம்—சேமக்கோட்டை - மணப்புத்தூர்—பொன்னங்குப்பம் சாலை - கி. மீ. 0/0 - 0/8 விருப்ப ஒப்பந்தம்—ஒப்புதல் குறித்து:

பார்வை: உதவி கோட்டப் பொறியாளர், கடலூர், கடித எண். 4052/76 நாள் 25-12-77.

(இதன் வாசகம்)

உதவி கோட்டப் பொறியாளர், கடலூர் பார்வையில் குறிக்கப்பட்டுள்ள கடிதத்தில் சிபாரிசு செய்துள்ளபடி திரு. வி. பாலசுப்பிரமணியம் என்ற ஒப்பந்தக்காரரின் விருப்ப ஒப்பந்தம் மதிப்பீடு வேலைக்கு அனுமதிக்கப்படுகிறது.

(ஒ.ம்) வேதாசலம்,
கோட்டப்பொறியாளர், கடலூர்.

இது 11-2-1978-ல் கண்காணிப்பாளர் கையெழுத்திடப்பட்டது. அந்த 'ஓர்க் ஆர்டரையும்' நான் வைத்திருக்கிறேன். அதைத் தவிர வேணு என்ற நபருக்கு எந்தப் பணியும் தரப்படவில்லை என்று அமைச்சர் நேற்று அவையிலே அளித்த அறிக்கையிலே குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையிலேயே கே. எஸ். வேணுகோபால் கீழக்குப்பம் என்பவருக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். நான் பேசும்போது கூட வேணு என்று குறிப்பிடவில்லை. வேணுகோபால் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே இந்த வேணு, வேணுகோபால் என்பது இருவர் அல்ல, இருவரும் ஒருவர்தான். நந்தகோபால் மக்கள் குழுக் கூட்டத்தில் இந்தக் கேள்விகளை எழுப்பிய பிறகு இந்த வேலைகள் தனித்தனிப் பணிகளாக ஒருவேளை பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கலாம். என்ன நடந்தது என்று அதிலே ஆராய்ந்து செல்ல நான் விரும்பவில்லை. அதை ஆராய வேண்டும் என்பதற்காகவே அமைச்சரிடம் அந்தப் பொறுப்பை அன்று எதிர்க்கட்சி சார்பாகத் தந்தேன். அப்படி இந்த வேலைகள் மாற்றப்பட்டிருந்தால்கூட—மக்கள் குழு என்று ஒன்று அமைந்து அந்தக் குழுவின் கூட்டத்தில் படித்துக் காட்டப்பட்ட அறிக்கை மீண்டும் திருத்தப்பட்டிருக்கிறது என்றால் மீண்டும் அந்த மக்கள் குழுவிற்குத் திருத்தப்பட்ட அந்த அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.



பிரித்து அளிக்கப்பட்டதா யாருக்கு அளிக்கப்பட்டது? உறவினர்களுக்கு பிரித்தளிக்கப்பட்டது உண்மையா? அந்த உறவினர்கள் யார் யார்? யாருக்கு என்ன முறை? என்ன உறவு என்பதையெல்லாம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து விசாரித்தறிய வேண்டும் என்று, முதலமைச்சர் இங்கே இல்லாத காரணத்தால் போக்குவரத்துத் துறை அமைச்சர் மூலம் முதலமைச்சருக்கு இந்த வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் குழுவிற்கு கமிஷனர் அளித்த அறிக்கையின் ஆதாரத்தோடுதான் நான் இங்கே பேசியிருக்கிறேன். ஆகவே இதுபற்றித் தக்க விசாரணை நடத்தி--குழு உறுப்பினர்களிடமும் தகவல் அறிந்து அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

முதலில் இந்தப் பகுதிகள் புயல் .வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதா என்ற என்னுடைய கேள்விக்கு அமைச்சர் நேற்று தன் அறிக்கையில் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இன்னும்கூட ஒரு முறைகேடு நடைபெற்றிருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் இதைச் சிந்திப்பார், ஏற்ற நடவடிக்கை எடுப்பார் என்பதற்காகச் சொல்கிறேன்.

மருங்கூர் பகுதியில் 74,500 ரூபாய்க்கான வேலைகள் தரப்பட்டு கமிஷனர் அறிக்கையில் 'எர்த் ஒர்க் புரோக்ரஸ்' என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் திடீரென்று அந்த இரண்டு வேலைகளும் நிறுத்தப்பட்டு விட்டது. காரணம் என்னவென்றால் அந்த இரண்டு வேலைகளும் குமாரசாமி, தனபாலன் என்ற ஜனதா கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கு தரப்பட்டதால் அது நிறுத்தப்பட்டு விட்டதாகவும் எனக்குத் தகவல் அறிவிக்கப்படுகிறது.

ஆகவே, நான் பொறுப்போடுதான் எனக்குக்கிடைத்த ஆதாரங்களை ஆராய்ந்து, கமிஷனரின் கையெழுத்தோடு தரப்பட்ட ஆதாரங்களைத்தான் தங்களிடம் காட்டிவிட்டுத் தான் இந்த அவையில் படித்தேனே தவிர வேறு அல்ல. எனவே, இதைப் பற்றி ஒரு பொது விசாரணை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் துறை அதிகாரிகளைக்கொண்டோ அல்லது அவர்களேயோ நடத்துவார்களானால் நானும் ஒத்துழைத்து அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்பையும் பெற்று இதிலே மேலும் பல உண்மையான விவரங்கள் வெளிவர வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் சாட்டிய குற்றச்சாட்டுக்கள் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அளித்த விளக்கம்.**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர அவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மணப்பத்தூரைச் சேர்ந்த வி. பாலசுப்பிரமணியம் என்ற ஆளும் கட்சி உறுப்பினருக்கு அழகப்ப சமுத்திரம் ரோடில் உள்ள 5 பணிகளும் அவருக்கே பிரித்துக்கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது மிகவும் தவறு என்று தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து கமிஷனர் அவர்கள் மக்கள் குழுவிற்கு கையெழுத்திட்டு கொடுத்த ஸ்டேட்மென்டிலே இருந்து அந்த விவரங்களை அளித்ததாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு வேளை அவர் அந்த அறிக்கையைச் சரியாகப் படிக்கவில்லையோ என்று நான் அஞ்சுகிறேன். அதன் காரணமாகத் தான் இந்தக் குற்றச்சாட்டுகளை அவர் கூறுகிறார் என்று நான் அஞ்சுகிறேன்.

அழகப்பச் சமுத்திரம் ரோடிலிருந்து 1 கிலோ மீட்டர், 1-வது கிலோ மீட்டரில் இருந்து 2-வது கிலோமீட்டர்வரை, 2-வது கிலோ மீட்டரில் இருந்து 3-வது கிலோ மீட்டர் வரை, 3-வது கிலோ மீட்டரில் இருந்து 4-வது கிலோ மீட்டர் வரை உள்ள சாலை வி. பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர் என்பவருக்குக் கொடுக்கப்பட்டதாக எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்களோ அந்த ஆதாரம் கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காலம் 5-லே சேமக்கோட்டை-மணப்புத்தூர் டு புன்னக்குளம் வரை வி. பாலசுப்பிரமணியம், மணப்புத்தூர் என்பவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு 6, 7, 8, 9 கட்டங்களில் இரண்டு புள்ளிகள் இடப்பட்டு இருக்கிறன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பல ஆண்டுகாலம் பொறுப்பிலே இருந்தவர், அவருக்குத் தெளிவாகத் தெரியும், பொதுப் பணித்துறை அமைச்சராகவும் இருந்து இருக்கிறார். டாட்ஸ், புள்ளிகள் போட்டால் விவரம் இல்லை என்று பொருள். அங்கு இருக்கும் டாட்ஸ்க்கு பதிலாக இரண்டு கமா இருந்து இருந்தால் டிட்டோ என்று பொருள். ஆனால் அங்கு டிட்டோக்கள், இரண்டு கமாக்கள் இல்லை. இரண்டு புள்ளிகள் தான் இருக்கின்றன. எர்த் ஒர்க் ஈஸ் இன் பிராக்கிரஸ் என்பதற்குப் பிறகு இரண்டு டிட்டோக்கள், கமாக்கள் இருந்து இருக்குமானால் அந்த வேலைகள் வி. பாலசுப்பிரமணியம், மணப்புத்தூர் சார்ந்தவருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று பொருள். ஆனால் அங்கு புள்ளிகள் இட்டு குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.



ஆகவே, 6, 7, 8, 9 ஆகிய பணிகளும் அவருக்கே கொடுக்கப்பட்டு இருக்கும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கருதி இருக்க வாய்ப்பு இருக்குமானால் டிட்டோ என்பதற்கும் டாட்ஸ் என்பதற்கும் வித்தியாசம் புரிந்தும், புரியாமலே எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டி. டி. ஓ. கொடுத்துள்ள ஸ்டேட்மென்டின் ஆதாரத்தின் பேரில் தான் வி. பாலசுப்பிரமணியனுக்கு ஒரே பணி பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். இரண்டு புள்ளிகள் என்று இருந்தால் 'நோ இன்பர்மேஷன், தகவல் இல்லை, யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற தகவல் இல்லாமல் இருப்பதால் தான் புள்ளிகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் புரிந்தும், புரியாமலேயே அல்லது ஆதாரம் அற்ற முறையில் கூறுகிறார். வி. பாலசுப்பிரமணியம், மணப்புத்தூர் சார்ந்தவருக்குக் கொடுக்கப்படவில்லை. நடுக்குப்பத்தைச் சேர்ந்த ராஜவேல் என்பவருக்கும், மானடிக்குப்பம் கலியபெருமாள் என்பவருக்கும் 0-கிலோமீட்டர் முதல் 1 கிலோ மீட்டர் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) ஐ ஆம் நாட் யீல்டிங் – சிறுதொண்டமாதேவி உக்கரவேல் என்பவருக்கு 1-வது கிலோ மீட்டர் முதல் 2-வது கிலோ மீட்டர் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. சிறுதொண்டமாதேவி திருநாவுக்கரசு என்பவருக்கு 2-வது கிலோ மீட்டரிலிருந்து 3-வது கிலோமீட்டர் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அழகப்ப சமுத்திரம் பி. காந்தி என்பவருக்கு 3-வது கிலோமீட்டரில் இருந்து 4-வது கிலோ மீட்டர் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, மற்றொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையில சீப் இன்ஜினீர் (பிளட்) மேற்கொண்டு இருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள், தஸ்தாவேஜுகள் ஹைவேஸ் டிபார்ட்மென்டிடம் இருக்கிறது. முறைப்படி எப்படி கொடுக்கப்பட்டன என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவைகளைப் பார்த்து, பரிசிலித்து, அவர்கள் கூறிய கூற்றுக்கு ஆதாரம் இல்லை என்பதற்கான அடிப்படைகளை புரிந்து கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) - மன்னிக்கவும் - ஜஸ்ட் ஒன் மினிட்.

அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். சென்னை கே.டி சாலை முதல் அழகப்பசமுத்திரம் வரையில் உள்ளி 4 பணிகள் பூவராகமூர்த்திக்குக் கொடுக்கப்பட்டன, பி. டி. ஓ. அறிக்கையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எந்த பி. டி. ஓ. ஆதாரத்தை அவர்கள் நம்புகிறார்களோ அதிலே கூட அப்படி குறிப்பிடப்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன். டிட்டோவுக்கும், டாட்ஸ்க்கும் உள்ள மாறுபாட்டை அவர்கள் புரிந்து கொள்ளாமலேயே இந்தக் குற்றச்சாட்டைக் கூறுகிறார்களே என்று அச்சத்தோடு நான் பார்க்கறேன்.

இப்படி குற்றச்சாட்டைக் கூறிவிட்ட பிறகு முரசொலி போன்ற பத்திரிகைகளில், பெரிய ஊழல் என்ற அளவில் பிரசுரித்து விடுகிறார்கள். ஆனால், அரசாங்கம் விளக்கம் சொல்கிறபோது, அவற்றைப் பற்றி அந்தப் பத்திரிகைகள் பிரசுரிப்பது இல்லை. நான் தெளிவாகக் கூறுகிறேன். அழகப்பசமுத்திரம் சாலை வேலையில் பூவராகமூர்த்திக்கு கொடுத்தது—பி. டி. ஓ. ஸ்டேட்மென்டிலேயே இருக்கிறது—1-வது கிலோ மீட்டர் முதல் 2-வது கிலோ மீட்டர் வரை கொடுத்ததாகத்தான் போடப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 13, 14, 15 பணிகள் முறையே 1 முதல் 2 கிலோ மீட்டர், 2 முதல் 3 கிலோ மீட்டர், 3 முதல் 4 கிலே மீட்டர், அவருக்குக் கொடுத்ததாக அங்கே போடப்படவில்லை.

(முற்பகல் 10-40)

இரண்டு புள்ளிகள்—டாட்ஸ் போடப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு 'நோ இன்பர்மேஷன்' என்று பொருள்.

"No information, because the B.D.O. was not having the information then. So, he has not furnished the particulars there" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அழகப்பசமுத்திரம் சாலையிலே கனகசபை என்பவருக்கு ஒரு கிலோ மீட்டர் தூரம், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட பூவராகமூர்த்திக்கு ஒரே ஒரு கிலோ மீட்டர் தூரம் தரப்பட்டு, பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஹைவேஸ் டிப்பார்ட்மென்டில் அதற்கு ஆதாரம் இருக்கிறது. அதையும் படித்துப்பார்த்து புரிந்துகொள்ளலாம் என்று நம்புகிறேன்.

அடுத்து, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறியிருக்கிறார்கள், பாலசுப்ரமணியம் என்பவருக்கு ஒரு பணியும் கொடுக்கவில்லை என்று நான் பேசியதாகக் கூறினார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மணப்பத்தூரைச் சேர்ந்த வி. பாலசுப்பிரமணியத்திற்கு 5 பணிகள் அழகப்பசமுத்திரம் சாலையிலே கொடுக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அழகப்பசமுத்திரம் சாலையிலே ஒரு பணியும் கொடுக்கப்படவில்லை என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதையும் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.

பி.டி.ஓ. கொடுத்திருக்கிற ஸ்டேட்மென்டைக் காட்டி, அதையே ஆதாரமாகக் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறார்கள். அப்படி உணர்ச்சியசப்படும்போது உண்மைகள் உள்ளத்திற்கும் கண்ணுக்கும் தெரியாமல், சில வார்த்தைகள் புலப்படாமல் போய்விடும். பாலசுப்பிரமணியத்திற்கு எந்தப் பணியும் கொடுக்கவில்லை என்று தஸ்தாவேஜ் கூறுகிறது.



அடுத்து, வி. பழனி என்பவருக்கு—வேணு என்பவருக்கு எந்த விதமான பணியும் கொடுக்கவில்லை என்று கூறியதாகக் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வேணு என்பவருக்குப் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். சபைக் குறிப்பைப் பார்த்தால் தெரியும். குறிப்பிலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 7 கிலோ மீட்டர் தூரம் பகுதி வேலை ஒருவருக்கே தரப்பட்டிருக்கிறது, அவருடைய பெயர் வேணு என்று கூறியிருக்கிறார். சட்டசபைக் குறிப்பில் அது இருக்கிறது. அந்தக் குறிப்பை வைத்துதான் நான் பேசுகிறேன். எந்த ஒரு அமைப்பின் பெயரும் . . . (திரு. மு. கருணாநிதி எழுந்தார்) Excuse me Mr. Speaker, I am not yielding. I will give my answer first.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, அன்று நான் வேணு என்கின்ற ஒரு பெயரைச் சொல்லவே இல்லை. ஏனென்றால், அந்தக் கமிஷனர் கொடுத்திருக்கிற புத்தகத்திலேயே வேணுகோபால் என்றுதான் இருக்கிறது. குறிப்பு எடுத்தவர்கள் ஒருவேளை கோபால் என்பதை விட்டு விட்டு, வேணு என்று போட்டிருப்பார்கள். கோபால் விடுபட்டிருக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒருவேளை மறந்திருப்பார்கள். நான் கூட காதால் கேட்டேன். சட்டசபைக் குறிப்பில் இருக்கிறது. வேணு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குத் தெளிவாக ஆதாரம் இருக்கிறது. அந்த ஒருவருடைய பெயர் வேணு. அந்த அமைப்பின் பெயர் வேணுகோபால். வேணுகோபால் என்பது அந்த நிறுவனம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேணுகோபால் அண்டு பழனி என்று,

"There is neither a partnership nor a Company there"

வேணுகோபால் அண்டு பழனி என்ற ஒரு நிறுவனம் அங்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். வேணுகோபால் என்பவருக்கு தனியாக சாத்திப்பட்டு-முத்தரசன் சாலையில் எந்தப் பணியும் தந்ததாகப் பேசவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நேற்றைய தினம் கூறினார்கள். 5 பணிகள் அந்த நிறுவனத்திற்கு அல்லது வேணுகோபாலுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள்.

இந்த 5 பணிகளிலே 6 கிலோ மீட்டர் முதல் 6.5 கிலோ மீட்டர் வரை வேணுகோபால் என்பவருக்கும், 6.5 கிலோ மீட்டர் முதல் 7 கிலோ மீட்டர் வரை ஒரு தனி நபர் பழனி என்பவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த நிறுவனத்திற்கும் 5 பணிகள் கொடுக்கப்படவில்லை. கொடுத்ததற்கான ஆதாரம் இல்லை. நான் குறிப்பிட்டவைகளுக்கு தஸ்தாவேஜ் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இவ்வளவையும் படித்த நம் அமைச்சரவர்கள் அந்தக் கமிஷனர் கொடுத்த அறிக்கையிலே உள்ள 5-வது பக்கத்தையும் 6-வது பக்கத்தையும் கொஞ்சம் புரட்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 5-வது பக்கத்தில் ஐட்டம் எண் 28—ல் சாத்திப்பட்டு-புதுப் பாளையம் (முத்தரசங்குப்பம் வழி) என்பதில் ரூ. 36,000 என்று போடப்பட்டிருக்கிறது. அங்கே பெயர்கள் எதுவும் குறிப்பிடப் படவில்லை.

6-வது பக்கத்தில் இதே வேலை 1 கிலோ மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர் வரை என்று போடப்பட்டு 36,500 ரூபாய் என்று ஆரம்பிக்கிறார்கள். 2 கிலோ மீட்டரிலிருந்து 3 கிலோ மீட்டர் வரை 37,000 ரூபாய் என்றும் இப்படி வரிசையாகப் போகிறது. அதிலே யூனியன் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள், எஸ். வேணு கோபால்— வி. பழனி, கிழக்குப்பம என்று கையால் எழுதியிருக்கிறார்கள். இதை நீங்கள் விசாரித்தால் யாருடைய கையெழுத்து என்பதை ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்ளலாம். இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நேற்றைய தினம் அமைச்சரவர்கள் தந்த அறிக்கையில் வேணுகோபாலுக்கு 19,000 ரூபாய்க்குத் தந்ததாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், கமிஷனர் தந்த அறிக்கையிலே 36,500 ரூபாய் என்று இருக்கிறது.

ஆகவே, இந்த மன்றத்தில் இரண்டு பேரும் இப்படி எழுந்து எழுந்து பேசுவதின் மூலம் நானும் விளங்கிக் கொள்ள முடியாது, அமைச்சரவர்களும் விளங்கிக் கொள்ள முடியாது. யாருக்கும் இது விளங்காமல் சிக்கலைத் தான் அளிக்கின்றது. எனவே, தனியாக இது பற்றி ஒரு விசாரணை நடத்துவதின் மூலம் நிச்சயம் இதற்கு ஒரு முடிவு ஏற்படும். ஆகவே, இதற்கு ஒரு விசாரணை நடத்துவதே முறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, வேணுகோபால் என்பவருக்கு 19,000 ரூபாய்க்கு 6 கிலோ மீட்டரிலிருந்து 6.5 கிலோ மீட்டர் என்று நான் நேற்று கூறினேன். ஆனால், எதிர்க் கட்சித் தலைவரவர்களோ ஐந்து பணிகளும் இரண்டு, மூன்று பணிகளாகப் பிரிக்கப்பட்டு அந்த ஒருவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அது **உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இருப்பினும் இதுபற்றி முழு விசாரணை செய்வது பற்றிப் பரிசீலிக்கலாம். எல்லாவிதமான தஸ்தாவேஜுகளும் இருக்கின்றன. டி.டி.ஓ. இந்தப் பொறுப்புக்கு உரியவர் அல்ல. ஹைவேஸ் டிபார்ட்மென்ட் ஃப்ளட் சீஃப் இன்ஜினியர் தான் இதற்குப் பொறுப்பானவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, அவர்கள் 'டாட்ஸ்', அதாவது 'புள்ளிகள்' என்று குறிப்பிட்டார். புள்ளிகள் என்றால் 'நோ இன்ஃபர்மேஷன்' என்று தான் பொருளாகிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பேசும் போது ** என்று கூறப்பட்டதற்குப் பதிலாக உண்மைக்குப் புறம்பானது என்று மாற்றி சபைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ டிபேட் அண்டர் ரூல் 81. ஆகவே, விவாதத்திற்கு அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் அனுமதித்தால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை என்னுடைய பண்ருட்டி பகுதி சம்பந்தப்பட்டதாகையால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

(எதிர்க் கட்சியினர் வரிசையிலிருந்து பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற குரல் எழுப்பப்பட்டது.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்கள் அனுமதித்தால்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபற்றி ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் பேசும்போது உரிமைப்பிரச்சினை எழுப்பினார்கள். இருந்தாலும் ஒரு தகவலைச் சொன்னால் அது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதிச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்படி இந்தத் தகவல்கள் வந்தன என்பது எனக்குத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவரவர்கள், மக்கள் குழுக் கூட்டத்தில் டி.டி.ஓ. வைத்த அறிக்கையைக் காட்டிச் சொன்னார்கள். 8-2-1978 அன்று அந்தக் கூட்டம் நடைபெற்றது என்ற விவரத்தையும் அவர்கள் சொன்னார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

அவர் எப்படி இந்த விவரங்களைத் தந்த நந்தகோபாலனுடன் தொடர்பு கொண்டு பேசினார்களோ அதேபோல் என்னவென்று நானும் கேட்டேன். அதிலே நடந்தது என்னவென்றால் அந்த மக்கள் குழுவுக்கு ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த டி. டி. ஓ. அவர்கள் ஒரு 'டென்டேடிவ்' லிஸ்டைத் தந்திருக்கிறார்கள். அது ஒரு பரீட்சார்த்த பட்டியல்தான். அந்தப் பட்டியலிலே சில பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெயர்கள் இல்லாத இடங்களில் புள்ளி வைத்திருக்கிறார்கள். அதிலே புள்ளி வைத்திருக்கிறார்களா அல்லது கமா வைத்திருக்கிறார்களா என்று நான் பார்க்கவிலலை. சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றிற்குப் பெயரை எழுதி வைத்திருக்கிறார்கள். விவரங்கள் கிடைக்காத இடங்களில் புள்ளியைப் போட்டிருக்கிறார்கள். இதுதான் அதிலே நடந்திருக்கிறது.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இருந்தவர்கள். அதைத் தருவது நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறையில் டிவிஷனல் இன்ஜினியரைப் பொறுத்தவரையில் ரூ. 25,000 வரை தருவதற்கு அவருக்கு பவர்ஸ் இருக்கிறது. எஸ்.ஈ.-க்கு ரூ. 50,000 வரை தருவதற்கு பவர்ஸ் உண்டு. ஒரு ரோட்டைப் பிரிக்கும்போது 1, 2, 3 கிலோமீட்டர் என்று பிரிப்பது வழக்கம். ஒரு கிலோ மீட்டருக்கு அவர்கள் எஸ்டிமேட் போடும்போது ரூ. 25,000-க்கு மேலே போனால் இரண்டாகப் பிரித்து இரண்டு பேர்களுக்குக் கொடுப்பார்கள். இதுதான் வேறு என்று சொன்னார்கள். ஒவ்வொரு 'ரீச்'-ம் இரண்டு மூன்று பேர்களுக்கு வர அதுதான் காரணம்.

வேலைகள் தரப்படுவது நெடுஞ்சாலைத் துறையினரால். நெடுஞ்சாலைத் துறையினரால் தரப்படுகிறது என்றால் எல்லாவற்றையும் பார்த்துத் தருகிறார்கள். அப்படித் தரப்பட்ட விவரங்கள், சரியான விவரங்கள்—நான் ஏற்கனவே சொன்னேன், டென்டேட்டிவ் லிஸ்ட் என்று, அடுத்த லிஸ்ட் அடுத்த கூட்டத்தில் வரும். ஆனால், அடுத்த கூட்டம் நம் துரதிருஷ்ட வசமாகவோ என்னவோ, நடக்கவில்லை. அடுத்த கூட்டம் நடந்திருந்தால் அந்தப் புத்தகம் நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்திருக்குமானால் நிச்சயமாக இந்தப் பிரச்னையே வந்திருக்காது. இது தான் உண்மை.

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். நான் அதில் அனாவசியமாகத் தலையிட வேண்டாம் என்று எண்ணினேன். உறவினர்களுக்கெல்லாம் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எனக்கு யார் உறவினர்கள் (குறுக்கீடு.) நன்றி. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதுதான் நடந்தது. அங்கிருந்த எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அந்த விவரங்களை அவர்களுக்குத்



தந்திருக்கிறார்கள். அதுதானே தவிர இதைப்பற்றி நன்கு விசாரித்து—அவர்கள் கேட்டார்கள் பொது விசாரணை வேண்டுமென்று—பொது விசாரணை வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். இல்லை உரிமைக் குழு மூலம் விசாரிப்பது என்றால் அப்படி வைத்துக் கொள்ளுங்கள், நான் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முதலில் இங்கே ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு அதைத் தொடர்ந்து தன்னிலை விளக்கம் என்னும் முறையில் அதை யொட்டிய கருத்துக்கள் இங்கு பேசப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், உரிமைப் பிரச்னை வேறு. இங்கே முதலில் எழுப்பப்பட்டது உரிமைப் பிரச்னையா என்பதை முதலில் தாங்கள் முடிவு எடுக்க வேண்டும். அப்படித் தாங்கள் முடிவு எடுப்பதாகயிருந்தால் அதற்கான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், இப்போது தெரிவிக்க வேண்டும் என்று நான் கருதவில்லை. அதன் அடிப்படையில் நான் மாறுபடுகிறவன். உரிமைப்பிரச்னை எழுப்பக் கூடிய நியாயம் இருக்கிறதா என்ற அடிப்படையை ஆராய்ந்து அதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளலாமா என்பதை முடிவு செய்து பின்னர் மற்ற வகைகளில் இங்கு எழுந்த பிற பிரச்னைகளைத் தீர்க்கலாம், என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அவர்களும் கொண்டு வந்த உரிமைப் பிரச்னை........

Mr. SPEAKER: No point of order on this.

5. கவன ஈர்ப்பு.

உளுந்தூர்பேட்டை தாலூக்கா செங்குறிச்சி கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. வி. துலுக்கானம், திரு. துரை முத்துசாமி ஆகியோர் சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. துரைமுருகன்: நான் ஒரு உரிமைப் பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அறையில் வந்து கேளுங்கள்.

திரு. துரைமுருகன் : அவர்கள் கேட்டார்கள், நான் ஏன் கேட்கக் கூடாது? நான் ஒரு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் விருப்பம். திரு. துலுக்காணம்.

திரு. வி. துலுக்காணம்: தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலூக்கா, செங்குறிச்சி கிராமத்தில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் 50 வீடுகளும், உளுந்தூர்பேட்டை டவுனில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் 5 வீடுகளும் எரிந்து விட்டதில் ரூ. 15,000-க்கு மேல் சேதம் அடைந்துள்ளது பற்றியும் மேலும் அப்பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டால் கள்ளக்குறிச்சி, விருத்தாசலம், பண்ருட்டி, விழுப்புரம் ஆகிய இடங்களிலிருந்துதான் தீயணைப்பு வண்டி வரவேண்டிய நிலை இருப்பது பற்றியும்'' உள்ள அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை நகரில் 2-3-78 அன்று பகல் 2-15 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டு ஒரு குடிசையின் ஒரு பகுதி மட்டும் எரிந்தது. விருத்தாசலத்திலிருந்து தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். இந்த விபத்தினால் சேதம் ரூ. 500. இதனால் பாதிக்கப்பட்டவர் ஒரு உயர்நிலைப் பள்ளியில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றிக் கொண்டு மாதம் ரூ. 100—க்கு மேல் ஊதியம் பெற்றதால் அவர் மான்யத் தொகை ஏதும் பெற தகுதியில்லை.

11-3-78 அன்று பிற்பகல் 4 மணிக்கு உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்த செங்குறிச்சி கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு 24 வீடுகள் எரிந்து சாம்பலாயின. விழுப்புரம், விருத்தாசலம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களிலிருந்து தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. திருக்கோவிலூர் கோட்டாட்சியாளரும் கோட்ட வளர்ச்சி அதிகாரியும் தீ விபத்து ஏற்பட்ட இடத்தை 13-3-78 அன்று நேரில் பார்வையிட்டனர். மாநில அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக மான்யத் தொகையை உடனடியாகக் கொடுக்க இயலவில்லை. எனினும் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு ரூ. 1,680 நிவாரணத் தொகையாக 17-3-78 அன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த விபத்தினால் ரூ. 18,500 பொருட் சேதம் ஏற்பட்டதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு தீ விபத்துக்களிலும் உயிர்ச் சேதம் மற்றும் கால்நடைச் சேதம் எதுவுமில்லை. இவ்விரண்டு தீ விபத்துக்களும் தற்செயலாக ஏற்பட்டன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.



உளுந்தூர்ப்பேட்டையில் தற்போது தீயணைப்பு நிலையம் இல்லை. தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய முன்னுரிமைப் பட்டியலில் 41-வது இடத்தில் உளுந்தூர்பேட்டை இடம் வகிக்கிறது. அதனுடைய முறை வரும்பொழுது தீயணைப்பு நிலையம் அங்கு ஏற்படுத்தப்படும்.

திரு. வி. துலுக்காணம் : தலைவர் அவர்களே, உளுந்தூர்ப்பேட்டையைச் சுற்றி 10 மைல் அளவுக்கு சுமார் 200 கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களில் பல தடவை தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இளையூர் என்ற கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டு லட்சக் கணக்கான ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டது. ஆகவே, உளுந்தூர்ப்பேட்டையில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அங்கே தீயணைப்பு நிலையம் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்போது முன்னுரிமைப் பட்டியலில் 41-வது இடத்தில் இருப்பதை அவசர நடவடிக்கையாக எடுத்து உளுந்தூர்ப்பேட்டையில் உடனடியாகத் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதையொட்டி 52 இடங்களில் தீயணைப்புநிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கு முன்னுரிமைப் பட்டியலையும் தயாரித்து வைத்திருக்கிறார்கள். முறைப்படி இவற்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போது இருக்கின்ற 41-வது இடத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டையை முன்னுக்குக் கொண்டுவந்தால் முன்னால் இருக்கின்றவர்கள் இன்னொரு தீர்மானத்தை 41-வது விதியின்படி இங்கு தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. துலுக்காணம் : முதலில் திருக்கோவிலூர் தாலூகாவாக இருந்த போது 41-வது இடத்தில் இருந்தது. இப்போது உளுந்தூர்ப்பேட்டை தாலூக்கா தனியாக அமைக்கப்பட்ட பின்னால் இருக்கின்ற முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு அங்கு உடனடியாகத் தீயணைப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உளுந்தூர்ப்பேட்டை தாலூகா தலைநகரம் என்பதால் இந்தக் கோரிக்கை கவனிக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். கவனிக்கப்படும்.

## 6. அறிக்கை அளித்தல்

### பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக தமிழில் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை-இது வரையில் ஆங்கிலத்தில் இருந்து வந்தது—இப்போது தமிழில் இந்த அறிக்கைகளை இந்த அவைக்கு அளிப்பதற்கு நான் பெருமைப் படுகிறேன். இந்த அறிக்கையில் சில திருத்தங்கள் இருந்தாலும், அந்தத் திருத்தங்களை எல்லாம் அங்கத்தினர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்பி இந்த அறிக்கைகளை அவையில் தாக்கல் செய்கிறேன்.

(1) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கை துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து குழுவின் முதலாவது அறிக்கை.

(2) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான குழுவின் இரண்டாவது அறிக்கை.

(3) 1972-73 ஆம் ஆண்டிற்காக வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை.

## 7. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினை தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன் வடிவு,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு1978 -ம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/78).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மோட்டார் வரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

(முற்பகல் 11-00)

பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் வரி வருவாய் வாயில்களைத் திரட்டும் பொருட்டு, அரசு, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல் (தமிழ்நாடு சட்டம் 6/1939) சட்டத்தின்கீழ், பெட்ரோல் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு இருபத்தொரு காசிலிருந்து இருபத்து மூன்று காசு வரையிலும், டீசல் எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு பதினைந்து காசிலிருந்து பதினேழு காசு வரையிலும் உயர்த்துவதென்று முடிவு செய்துள்ளது.

இவ்வதிகரிப்புக்குப் பிறகும்கூட, தமிழ்நாட்டில் பெட்ரோல் விற்பனை விலை இதர தென் மாநிலங்களில் நிலவும் சில்லறை விற்பனை விலையைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும். மேலும் இம்மாநிலத்தில் டீசல் விற்பனை விலை மற்ற தென் மாநிலங்களில் நிலவும் விற்பனை விலைக்கு அனேகமாக சமமாக இருக்கும்; உண்மையில் கேரளா, கர்நாடகா மாநிலங்களில் நிலவும் விற்பனை விலைக்குக் குறைவாக இருக்கும்.

மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/1978) முகவுரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு ஆலோசனைக்காக பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது,

---

* 1978, மார்ச் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்தப் பிரேரணையை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே இது தொடர்புடைய மானியக் கோரிக்கையின்மீது பேசி இருக்கின்ற காரணத்தால், குறிப்பாக, சுருக்கமாக விளக்கினால், மற்ற மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும்.

* திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒட்டு மொத்தமாகச் சொல்கின்றபோது, கூடுதலான ரெவன்யூ வருவதற்காக, வருமானம் வருவதற்காகத்தான் இந்த வரியை விதிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதனாலேதான், இந்த பெட்ரோல், டீசல் ஆகியவற்றின்மீது வரி போடுகிறோம் என்றும் சொல்கிறார்கள். ஒரு சர்க்கார் வரி போட்டுத்தான், தன் வருமானத்தைப் பெருக்க முடியும் என்ற அந்த எண்ணத்தில் எனக்கு எவ்விதமான மாறுபாடும் இல்லை. வரி போட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதற்காக எதன்மீது, எப்படி, எப்பொழுது வரி போட வேண்டுமென்பதை இந்தச் சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது வெல்பேர் ஸ்டேட் என்று நாம் சொல்கிற நேரத்திலே, இந்த நாட்டிலே உள்ள மக்களின் நல்வாழ்விற்காக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன்மூலம் நன்மை செய்யப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அந்த மக்களை கீழ்நோக்கி போகக் கூடிய அளவிற்கு நாம் வரிகள் போடுவதாக இருக்கக் கூடாது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் நம் நோக்கம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை கீழ் நோக்கிக் கொண்டு போவது நம் நோக்கமல்ல,

அப்படிப் பார்க்கும்போது, இங்கே போடப் பட்டிருக்கின்ற வரி பெட்ரோலுக்கு 21' பைசாவிலிருந்து 23 பைசாவாக ஒரு லிட்டருக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த பெட்ரோலுக்கு லிட்டருக்கு 2 பைசா உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நிலைமையிலே இப்போது டாக்சிகள் ஓடுகின்றன. இதிலே பல பேர்கள் போகிறார்கள். பணக்காரர்கள் மட்டும் போகவில்லை. பல பேர்கள் போகிறார்கள். ஆபீசுக்குப் போகிறார்கள். மற்ற இடங்களுக்குப் போகிறார்கள். நடுத்தர மக்களும் போகிறார்கள். சில சமயங்களில் ஏழை மக்களும்கூட போகிறார்கள். இப்போது இந்த பெட்ரோல்மீது விதித்துள்ள வரி உயர்வினால்; மீட்டர் ரேட்டை ஏற்றப் போகிறார்கள். அப்போது டாக்சியிலே போகக் கூடியவர்கள் பஸ்ஸிலே போகக் கூயடிநிலைமை ஏற்படும். நீங்கள்





டீசலுக்கும் வரி போட்டுள்ளீர்கள். அதனால் பஸ்ஸிலே போகக் கூடியவர்கள், சைக்கிளிலே போகக் கூடும். அப்படி சைக்கிளிலே போகக் கூடியவர்களுக்கும், காற்றுக்கு நீங்கள் வரி போட்டு விட்டால், பின்னால் அவர்கள் நடந்து போகக் கூடிய நிலைமை ஏற்படும்.

ஆகவே, டாக்சியிலே போகக் கூடியவர்கள் பஸ்ஸிலும், பஸ்ஸிலே போகக் கூடியவர்கள் சைக்கிளிலும், பின்னர் நடந்து செல்வதும் என்பதெல்லாம் மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு பதில், மேலும் கீழே அவர்களை கையைப் பிடித்து இழுக்கின்ற இந்தப் பொருளாதார தத்துவம் இந்த நாட்டிற்கு ஏற்றதல்ல, பொருத்தமல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், அதே நேரத்திலே என்ன செய்கிறீர்கள். பெட்ரோலுக்கு வரி போடுகிறீர்கள். டீசலுக்கு வரி போடுகிறீர்கள். காரிலே செல்பவர்களுக்கு வரி போடுகிறீர்கள். விமானத்திலே செல்கின்றவர்களுக்கு, அந்த விமானத்துக்குப் போடும் பெட்ரோலுக்கு வரி போடவில்லை. அந்தப் பெட்ரோலுக்கு 21 பைசா என்பது 21 பைசாவாகவே இருக்கிறது. ஏன், விமானத்திலே செல்லுகின்ற பணக்காரர்களுக்கு வரி போடக் கூடாதா ? இதுதான் வெல்பேர் ஸ்டேட்டா? Tap the rich and pat the poor. அப்படிக் கொண்டு வந்தால், அது ஒழுங்கான திட்டமாக இருக்கும். எனவே, பணக்காரர்களுக்காக இந்த சர்க்கார் இருக்கிறது. அவர்களுக்கு இந்த 2 பைசா, 3 பைசா வரி போடுவது கைவிடப் பட்டிருக்கிறது.

[திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமை]

சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் பிரயாணம் செய்யக்கூடிய வண்டிகளுக்கான பெட்ரோலுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு கிராமப் பகுதிகளிலே பல பேர்கள் பஸ்களிலே போகிறார்கள். அந்த பஸ்களுக்கான பெட்ரோல், டீசலுக்கு வரி போடப் பட்டிருக்கிறது. ஏற்கனவே பஸ்சில் சீட் ஒன்றுக்கு ரூ. 150 என்று இருந்தது. எமர்ஜன்சி வந்த பிறகு இது ரூ. 215 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது, மேலும் அதற்கு 15 ரூபாய் உயர்த்தப்பட்டு, இப்போது ஒரு சீட்டுக்கு ரூ. 230 என்று ஆக்கியிருக்கிறீர்கள்.

இதைத் தவிர டவுன் பஸ்ஸுக்கு 25 ரூபாய் சீட் ஒன்றுக்கு உயர்த்தியிருக்கிறீர்கள். இப்படி சீட் ஒன்றுக்கு நீங்கள் அதிகமான வரியைப் போட்டியிருப்பதால், பஸ்களின் சொந்தக்காரர்கள் அதற்கான வரிகளை எப்படிக் கட்டுவது என்று தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

I am not advocating for the bus-owners. But at the same time we see what will happen to bus passengers.

இப்போது இருக்கின்ற நிலைமை என்ன? டீசலுக்கு வரி போட்ட காரணத்தினால், பஸ் சொந்தக்காரர்கள் அதற்கான சார்ஜை உயர்த்தப் போகிறார்கள், அதிலே சாதாரண மக்கள் தான் பிரயாணம் செய்கிறார்கள். எனவே அவர்கள்தான் பாதிக்கப்படப் போகிறார்கள். இப்படி 5 பைசா உயர்த்தினாலும் கூட, டாக்சியிலே போகக் கூடியவர்கள் பாதிக்கப்படப் போகிறார்கள். ஆனால், விமானத்திலே போகக் கூடியவர்கள் அப்படியல்ல. ஆக, பணக்காரர்களுக்கு பாதுகாவலர்களாக, ஏழைகளின் நிலைமையை வஞ்சிக்கின்ற, கஷ்டப்படுத்துகின்ற நிலைமைதான் இருக்கின்றது என்பதை என்னால் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது.

இன்னொன்றும் செய்யலாம். டாக்சி ஓனராக இருந்து டாக்சி ஓட்டுகின்ற தொழிலாளிகளுக்கு இந்த வரியில் இருந்து விதிவிலக்கு கொடுக்கலாம். கோவாப்பரேட்டிவ் மூலம் டாக்சி வாங்கி ஓட்டு பவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம். இன்றைக்கு அவன் தவணைப் பணம் கட்டவில்லை என்று டாக்சியை எடுத்துக் கொள்ளு கிறார்கள்; அவனுக்கு சவாரியும் கிடைக்கவில்லை. ஹாஸ்டலுக்கு இங்கிருந்து போக இரண்டு ரூபாய் என்றால் போய் விடலாம். அதையே இரண்டரை ரூபாய் ஆகும் என்று சொல்லும்போது பஸ்ஸிலேயே போய்விடலாம் என்று தோன்றுகிறது.

கார் வைத்திருப்பவர்கள்கூட பெரிய டாடாக்கள், பிர்லாக்கள் அல்ல. சாதாரணமாக இருப்பவர்கள்கூட வைத்திருக்கி றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கார் வைத்திருக்கி றார்கள். உங்களுக்கு பெட்ரோல் மேல் வரி போட வேண்டுமென்று நினைத்தால் விமானத்திற்குப் பயன்படுத்தும் பெட்ரோலுக்கு வரியை 21 பைசா போட்டிருப்பதை டபுள் ஆகப் போடுங்கள். அதற்கு கவர்னர் பர்மிஷன் வேண்டுமென்றெல்லாம் சொல்லலாம். கவர்னரிடம் பேசி எதை எதையோ சாதிக்கிறீர்கள்; கருத்து வேறுபாடு இல்லை, மோதல் இல்லை என்றெல்லாம் சொல்லு கிறீர்கள். விமானத்தில் செல்லுகிறவர்கள் 600 ரூபாய்க்கு 750 ரூபாய் கொடுத்துப் போகட்டுமே. அமைச்சர் என்ற முறையில் அவர்கள் போகலாம். இல்லையென்றால் அவரால் போக முடியாது. பணக்காரர்கள் பயணம் செய்கிற விமானத்திற்கு அதிகமாக பெட்ரோல் வரியை உயர்த்தலாம். அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். அமைச்ச ருக்குப் புரியாமல் இருந்தால் இப்போது தெளிவாகப் புரிந்திருப் பார்கள் என்று நினைக்கிறேன். தெளிவாக விளக்கிக் கொண்ட தற்குப் பிறகு இந்த மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, டீசல், பெட்ரோல் ஆகியவற்றின்மீது விதித்திருக்கக்கூடிய வரி விதிப்பின் காரணமாக தமிழகத்தில் இருக்கும் பெரும்பாலான



விவசாயிகள் மின் இணைப்புக் கிடைக்காத நிலையில் ஆயில் எஞ்சின் வைத்து உபயோகிப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, அந்தச் சிறு விவசாயிகளுக்காவது, உணவு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த விவசாயி களுக்காவது இந்த வரி உயர்விலிருந்து விலக்களிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இன்றையதினம் டாக்சி வைத்திருக்கக்கூடியவர்கள், ஸ்கூட்டர் வைத்திருக்கிற சிறு சிறு அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி சிறு அதிகாரிகளையும்; விவசாயிகளையும் பாதிக்கக் கூடிய இந்த வரி உயர்வைப் பற்றி மறு பரிசிலனை செய்து அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுத்து மற்ற முறையில் இதனை வசூல் செய்வதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. அந்த வகையில் அவர்களுக்கு இதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10.)

*திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விற்பனை வரி போடப்பட்டுள்ளது. சாதாரணப் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட் டிருக்கிறது. உதாரணமாக பெட்ரோலுக்கு வரி போடப் பட்டிருக்கிறது. விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஸ்ப்ரேயர் களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது போல சாதாரண ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு பெட்ரோல் பயன்படுத்தப்படுகிறது. அவைகளுக்கும், வரி விலக்கு அளிக்கவேண்டும்.

அடுத்து, டீஸலுக்கு 2 பைசா வரி விதிக்கப்பட்டிருக்கிறது. டீஸல் எஞ்சின்கள் அதிகமாக விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு ஆண்டுக்கு 30 ஆயிரம் பம்புசெட்டு களுக்குத்தான் கனக்ஷன் கொடுக்கப்படும் என்று சொல்லு கிறார்கள். கடந்த ஆண்டு 30 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கும், இந்த ஆண்டு 30 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கும்தான் கனக்ஷன் கொடுக்கப்படுகிறது.

மொத்தமாகப் பார்த்தால் இந்த நாட்டிலே உள்ள 15 லட்சத்திற்கும் மேல் உள்ள பம்புசெட்டுகளுக்கு கனக்ஷன் கொடுக்கக்கூடிய நிலைமை வருவதற்கு இன்னும் பல வருஷங்கள் ஆகும் என்ற நிலைமை இருக்கிறது. இப்படி மின்சாரம் கொடுக்கமுடியாத நிலைமை இருக்கும்போது டீஸல் எஞ்சினைத்தான் விவசாயிகள் பயன்படுத்தவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

அதோடு பொது விற்பனைவரி சம்பந்தமாக பலமுனை விற்பனைவரி போடப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் ஒரு முனைவிற்பனைவரியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல முனை விற்பனைவரிப் போடுவதன் காரணமாக நல்லபடியாக வியாபாரம் செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே ஒரு கட்டம், இரண்டாவது கட்டம். மூன்றாவது கட்டம் என்று வாங்கக்கூடியவர்கள் ரூபாய்க்கு 12 பைசா அளவிற்கு விற்பனைவரியை கொடுக்க வேண்டியிருக்கிறது......

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : இது விற்பனைவரி சம்பந்தப்பட்ட மசோதா அல்ல. குறிப்பாக இதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. செ. சிவசாமி : ஆகவே டீஸல் எஞ்சினை அதிகமாக விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள், ஆகவே அதற்குப் போடப்பட்டிருக்கிற விற்பனைவரியை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு தன்னுடைய நிதி வசதியைப் பெருக்கிக்கொள்ள சில வரிகளைப் போடுகிறார்கள். அதிலும் பெட்ரோல், டீசல் இவைகளுக்கு 2 பைசா உயர்த்துவதற்காக அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நம்முடைய நிதியைச் சரிக்கட்ட வேண்டுமென்று சொல்வது ஒரு பக்கம் இருந்தாலும் வரி போடுகின்றபோது அந்த வரியைத் தாங்கக் கூடிய சக்தி உள்ளவர்களுக்குத்தான் போடவேண்டும்.

இன்றைக்கு விவசாயிகள் எல்லா வகைகளிலும் வரி உயர்வினாலும் விளைச்சல் குறைவினாலும் பல்வேறு தொந்திரவுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் டீசலுக்கு வரி போடுவதன் மூலம் விவசாயிகளும் இந்த வரியைக் கொடுப்பதற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே எல்லா கிணறுகளுக்குமே மின்சார வசதி செய்துகொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அதற்கு இன்னும் எவ்வளவு நாள் ஆகுமென்று நம்மால் சொல்லமுடியாது. மின்சாரம் கொடுக்கப்படாவிட்டால் விவசாயிகள் இந்த ஆயில் எஞ்சினைத்தான் நம்பி இருக்கிறார்கள், இந்த வரியினால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே டீசலுக்கு வரிவிலக்கு அளிக்கவேண்டும். எப்படி அமலாக்குவது என்று பார்க்க வேண்டும். எந்த எந்த விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு டீசலைப் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு இந்த விதிவிலக்கைக் கொடுக்க வேண்டும். ஆகவே, தாழ்மையோடு அரசை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், டீசலுக்குப் போடுகின்ற வரியில், விவசாயப் பம்பு செட்டுகளுக்கு வாங்கக்கூடிய டீசலுக்கு வரி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அரசு தனது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றபொழுது எந்தெந்த முறையில் நிதியைத் திரட்டிக் கொள்வது என்று எண்ணும்பொழுது இலகுவாகப் பெட்ரோலும், டீசலும்தான் அரசின் கண்களில் தென்படுகின்றன. ஏற்கனவே பெட்ரோலின் விலை, சாதாரணமாக எவரும் கார் வைத்துக் கொள்ளக்கூடாத அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்திருக்கிறது என்பதில் நான் சந்தேகப்படவில்லை. இருந்தாலும், அரசுக்குப் பணம் தேவைப்படுகிறது, அப்படித் தேவைப்படுகின்றபொழுது வருவாயை அதிகரித்துக் கொள்வதற்காக வரிமுறைகளைக் கையாளுகின்ற வழக்கத்தை நிச்சயமாக நான் எதிர்க்க இயலாது. இருந்தாலும் எந்த முறையில் இதைச் செய்ய வேண்டுமென்பதில் அரசு அதிக அக்கறையோடு செய்திருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிமேல் பெட்ரோலின் விலையை ஏற்ற முடியாது என்ற நிலைமையில் விலை ஏறுகிற அளவிற்கு மேலும் வரியை ஏற்றுவது, கூட்டிக் கொள்வது நிச்சயமாக வரவேற்கத் தக்கது அல்ல. இப்பொழுது கார்களை வைத்திருப்பவர்கள் பெட்ரோல் வாங்க முடியாத நிலையில் டீசல் என்ஜின்களுக்கு மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். டீசல் என்ஜின்கள் அமைக்க வேண்டுமென்றாலும்கூட ஏறக்குறைய 24,000 ரூபாய் தேவைப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆக, இந்த நிலைமையில் இன்னும் பெட்ரோல் விலை ஏறக்கூடிய அளவிற்கு வரியை விதித்திருப்பது முறையாகாது.

அதிலும் குறிப்பாக டாக்சிகளை எடுத்துக்கொண்டால், டாக்சிகளை வசதி படைத்தவர்கள் சாதாரணமாகப் பயன்படுத்துவதில்லை. அது அடித்தளத்தில் இருக்கின்ற ஏழைகளுக்குக் கூட அத்தியாவசியமாக அமைந்திருக்கிறது. ஆனால் டாக்சிகளை ஓட்டுகிறவர்கள்கூட அல்லது டாக்சிகளை வைத்திருப்பவர்கள்கூட இப்பொழுது பெட்ரோலின் விலை ஏறியிருப்பதால் டாக்சிகள் வைத்திருப்பதற்கோ அல்லது டாக்சிகளை ஓட்டுவதற்கோ சூழ்நிலைகள் இல்லாத அளவிற்கு அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பெட்ரோலின் விலை ஏறுவதால் டாக்சிகளின் ரேட்கூட ஏறுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. அது ஏழை எளியவர்களைத்தான் பாதிக்கும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுபோல, எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னது போல், டீசல் விலை ஏறுவதால் விவசாயிகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள், அதனால் விவசாயிகள் எந்த அளவிற்குப்

பாதிக்கப்படக் கூடும் என்பதை இந்த அரசு நன்கு அறிந்திருக்கும் என்று நம்புகிறேன். ஆக, ஒட்டுமொத்தத்தில் பெட்ரோலுக்கும், டீசலுக்கும் வரியை ஏற்றியது வரவேற்கத் தக்கது அல்ல என்பதைச் சொல்லிக்கொண்டு, குறைந்தபட்சம் டாக்சிகளுக்காவது பெட்ரோல் விலை ஏறாமல் இருப்பதற்கான வழிமுறைகளை அரசு செய்வதோடு, விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் டீசலை கன்செஷன் விலையில் வழங்குவதற்கான ஏற்பாடு களையும் இந்த நிலையில் செய்ய அரசு முன்வருமேயானால் பொதுவாக இந்த மசோதாவில் வேறு ஆட்சேபம் இருக்க முடியாது என்று சுட்டிக்காட்டி, இதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மாரிமுத்து அவர்களும், ஜேம்ஸ் அவர்களும் கூறிய கருத்துக்களையொட்டி விவசாயிகள் பயன்படுத்துகின்ற அந்த டீசல் எஞ்சின்களுக்கு, அதாவது ஆயில் எஞ்சின்கள் வைத்துப் பயன்படுத்துகின்றவர்களுக்கு, டீசலைக் கன்செஷன் விலையில் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பணம் படைத்தவர்கள் பெட்ரோலி லிருந்து டீசலுக்கு மாற்றிவிடுகிறார்கள். ஆனால் என்னைப் போன்ற நடுத்தரத்திலே இருப்பவர்கள் பெட்ரோல் வாங்க முடியாமல், சிறு விலை கொடுத்து கார் வாங்கியிருந்தாலும் அதை ஓட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே பெட்ரோல் விலையை ஏற்றியிருப்பது அதிகம், அதைக் குறைத்தால் நலமாக இருக்கும். விவசாயிகளுக்குப் பிரத்யேகப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் இந்த டீசல் விலைகளைக் குறைத்துக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.20.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபொழுது பெட்ரோலைப் பயன்படுத்து கிறவர்கள் சாதாரண மக்கள் என்று குறிப்பிட்டார்கள். எதன் அடிப்படையில், பெட்ரோலைப் பயன்படுத்துகிறவர்கள் சாதாரணப் பொதுமக்கள் என்று குறிப்பிட்டார்கள் என்று புரியவில்லை. சாதாரண மக்கள் பெட்ரோலைப் பயன்படுத்துகிற காரணத்தால், பெட்ரோலுக்கு இந்த வரி உயர்வு கூடாது என்ற முறையில் கூறினார்கள். ஆனால், இந்த வரி உயர்வால், பஸ் கட்டணத்தில் உயர்வு இருக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்கள். பெட்ரோல், டீசலுக்கு வரி உயர்த்தப்படுகிற காரணத்தால், கண்டிப்பாக பஸ் கட்டண உயர்வு ஏற்படாது என்பதை மாண்புமிகு நிதியமைச்சரவர்களும், நானும் கூட ஏற்கனவே அறிவித்திருக் கிறோம். ஆகவே, கண்டிப்பாக உயர்த்தப்படமாட்டாது என்பதையும் மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.



ஏவியேஷன்ஃப்யூயல் பொறுத்த வரைக்கும் வரிஉயர்வு விதிக்கப் படவேண்டும். பணக்காரர்கள் செல்கிற காரணத்தால் ஏவியேஷன் ஃப்யூயலில் வரி உயர்வு செய்வதிலே தவறில்லையென்று குறிப் பிட்டார்கள். ஆனால், ஏவியேஷன் ஃப்யூயலுக்கு இப்பொழுது இருக்கிற வரி நிலையில் உயர்வு ஏற்படுமேயானால். கண்டிப்பாக விமானங்கள் அனைத்தும் அண்டை மாநிலங்களில் ஏவியேஷன் ஃப்யூயலை எடுத்துக்கொள்கிற வாய்ப்பிருக்கிற காரணத்தால் விற்பனை குறைந்து விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையறிந்து ஏவியேஷன் ஃப்யூயலுக்கு வரி உயர்வு வேண்டாமென்ற முடிவிற்கு நாங்கள் வந்துள்ளோம். காரணம், ஏவியேஷன் ஃப்யூயல் வரி நிலையைப் பொறுத்தவரையில் ஆந்திரப் பிரதேசத்தில் 10 சதவீதம், கேரளாவிலே 8 சதவீதம் கர்நாடகத் திலே 12 சதவீதம் ஆக இருக்கிற காரணத்தால் நமது மாநிலத்தில் வரி உயர்வு செய்கிற நேரத்தில், விமானங்கள் அண்டை மாநிலங்களிலே ஏவியேஷன் ஃப்யூயலை எடுத்துக் கொள்ளும் காரணத்தால், வருமானம் குறைகின்ற காரணத்தால், ஏவியேஷன் ஃப்யூயலுக்கு வரி உயர்வு செய்யவில்லை.

மற்றபடி, மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் 'சேல்ஸ் டாக்ஸ்' ரெவின்யூவைத்தான் நம்பியிருக்கிறது. விற்பனை வரி மூலம்தான் மாநில அரசு வருவாயைச் சரிகட்ட வேண்டியிருக்கிற காரணத்தால், வேறு வழியின்றி நிதிநிலை நட்டுப்பாட்டில் இருக்கிற அரசு கண்டிப்பாக, தவிர்க்கமுடியாத அளவுக்கு. குறைந்தபட்ச வரி உயர்வு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது,

அப்படி வரி உயர்வு ஏற்பட்டபோதிலும், பெட்ரோல் டீசலி னுடைய விற்பனை நிலை தமிழகத்தைவிட, அண்டை மாநிலங் களிலே எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். தமிழகத் திலே, ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ 3.42, பெங்களூரிலே ரூ. 3.65; வரி உயர்வுக்குப் பிறகும் தமிழகத்திலே ரூ.3.42 என்ற நிலையிருக்கிறது. கொச்சினிலே ரூ. 3.66 பைசாவாக இருக்கிறது. பாண்டிச்சேரியிலே ரூ. 3.45 பைசாவாக இருக்கிறது. ஐதராபாத்திலே ரூ. 3.65 பைசாவாக இருக்கிறது. வரி உயர்வு செய்தும்கூட, அண்டை மாநிலங்களைவிட, தமிழகத்திலே விலை குறைவாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டீசலைப் பொறுத்தவரை, தமிழகத்திலே ஒரு லிட்டர் டீசல் ரூ.1.39 காசாக இருக்கிறது விலை உயர்த்தப்பட்ட பிறகு, ஆனால், பெங்களூரையும், கொச்சினையும், ஐதராபாத்தையும் ஒப்பிட்டு பார்க்கின்றபொழுது, பெங்களூரில் ரூ. 1.42, கொச்சினிலே ரூ. 1.46; ஐதராபாத்திலே ரூ.1.39 ஆக இருக்கிறது. எனவே இந்த வரி உயர்வு பொதுமக்களை அதிகம் பாதிக்காது என்ற நிலையை நான் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் அண்டை மாநிலங்களை விட பெட்ரோல், டீசல் விலை தமிழகத்திலே மிகையாக இல்லை யென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவை ஏற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— "தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THIRU K. SUPPU : Sir, I am not moving my amendment.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, "தமிழ் நாடு, 1978 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/78) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(இ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு பொதுவிற்பனைவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு. எண். 13/1978)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

என முன்மொழிகிறேன்.

அரசின் நிதிவாயில்களைப் பெருக்கும் நோக்கத்துடன் 1978-79-ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் தங்கம், வெள்ளி அல்லது கலப்புத் தங்கம், வெள்ளி அதன் ரகங்களுக்கு ஒரு சதவிகிதத்தில் இருந்து 2 சதவிகிதத்திற்கும், கழிவு பருத்தி, பருத்தி நூல், கழிவு செயற்கைப் பட்டு நூல், நெட்டிலைப் பருத்தி நூல், ஜரிகை, ஏலக்காய், ஆகியவற்றிற்கு 3 சதவிகிதத்தில்

* 1978 மார்ச் 21ஆம் தேதிய தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



இருந்து 4 சதவிகிதத்திற்கும், கையால் தயாரிக்கப்படும் சோப்புகள் நீங்கலாக எல்லா வகை சோப்புகளுக்கும் 5½ சதவிகிதத்தில் இருந்து 6 சதவிகிதத்திற்கும், சிமிட்டி, கண்ணாடி, கண்ணாடிச் சாமான்கள், அழுத்தப்பட்ட திரவ வடிவில் அல்லது திட வடிவில் உள்ள வாயு (எரிவாயு நீங்கலாக) துருப்பிடிக்காத எஃகினால் செய்யப்பட்ட பொருள்கள், வண்ணங்கள், வண்ணக்கலவை, ஒட்டுப் பலகை (பிளைவுட்) ஆகியவற்றிற்கு 8 சதவிகிதத்தில் இருந்து 10 சதவிகிதத்திற்கும், பதப்படுத்தப்பட்ட தோலுக்கு 1½ சதவிகிதத்தில் இருந்து 2 சதவிகிதத்திற்கும், ஒரு முனை வரி வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது. வரி உயர்வு வீதங்கள் வரவு செலவு திட்ட அறிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாடு பொது விற்பனை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 59-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அறிவிப்பு வெளியிட்டு 21—2—1978 நாள் முதல் செயலுக்கு வந்துள்ளது.

மேற்சொன்ன சட்டத்தின் 59—வது பிரிவைச் சேர்ந்த 2 உட்பிரிவின் முதலாவது வரம்பு நிபந்தனையின் கிழ், தற்போது நடக்கும் சட்டமன்றக் கூட்ட தொடரில் மேற்சொன்ன அறிவிப்புக்குப் பதிலாக சட்டமுன்வடிவு ஒன்று கொண்டுவர வேண்டியுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்கண்ட நோக்கங்களை எய்த விழைகிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தின் ஒப்புதலுக்கு இந்த சட்ட முன்வடிவை வைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

பொதுவாக இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா, நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்ட வரி வீதங்களுக்கு சட்டபூர்வ அனுமதி கேட்கக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் விவாதத்தின்போது நான் சொல்லவிரும்புவது. வரி விதித்தபிறகு அந்த வரிவிதிப்பிற்கு ஆளான பொருள்கள், அந்த வரிவிதிப்பினால் ஏற்படக்கூடிய இம்பாக்ட், அடிக்கடி ரெவ்வியூ செய்யவேண்டும் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். வரிபோட்டுவிட்டு அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்காமல் இருக்கும் நேரத்தில் தொழில்துறையிலே மிகுந்த பாதகம் ஏற்படுகின்ற நிலைமை இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கடந்த 13—9—77-ல் இந்த பாலிதீன், பிளாஸ்டிக், செலபன் பாக்கிங் மெட்டீரியல் பேப்பருக்கு 15 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. அப்படி வரிவிதிப்பதனாலும், இந்த பேப்பர்களைப் பயன்படுத்தக்கூடிய ஆங்கி வியாபாரிகள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வியாபாரிகள் இந்த பேப்பர்களைப் பயன் படுத்துகிறார்கள். மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது

கர்நாடகத்திலே 4 சதவீதம், பாண்டிச்சேரியில் 5 சதவீதம், ஆந்திராவிலே 5½ சதவீதம் வரியாக இருக்கும்போது நம்முடைய மாநிலத்தில் மட்டும் 15 சதவீதம் வரி இருப்பதாலும் உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும், பக்கத்து மாநிலங்களிலே கொள்முதல் செய்கிற காலத்தில், நம்முடைய மாநிலத்தில் விற்பனை மிகவும் குறைவாகவும் வர வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான் குறிப்பிட விரும்புவது இப்படிப்பட்ட வரிகளை விதிக்கும்போது அந்த வரியால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களையும், தொழில் துறை வளர்ச்சி, வியாபாரிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற நிலை போன்ற பிரச்சினைகளை அரசாங்கம் கவனத்திலே கொள்ளவேண்டும். இந்த சட்டத்திலே கொண்டு வந்திருக்கின்ற பல்வேறு அயிட்டங்களை பொறுத்தவரையிலே நான் எந்தக் கருத்தையும் சொல்ல முன் வரவில்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றி நான் கொடுத்திருக்கிற திருத்தத்தைப்பற்றி மட்டும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே டிரஸ்டு ஹைட்ஸ் & ஸ்கின்ஸ்-க்கு ½ சதவீதம் என்பதிலிருந்து 2 சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். வரியை உயர்த்தியதற்கு நான் ஆட்சேபனை சொல்லவில்லை.

(முற்பகல் 11-30)

- நான் அப்போதுகூட தெரிவித்தேன். டிரஸ்டு ஹைட்ஸ் அண்டு ஸ்கின்ஸிலே கலர்ட் ஸ்கின்சும் சேரும் என்ற நிலையை நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இது பல்லாண்டு காலமாக இருந்து வரும் நிலைமையாகும். டிரஸ்ஸ்டு ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ் உள்பட என்ற முறையிலேதான் வரி விதிப்பு விதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்தப் பிரச்னை அதிகாரிகளாலே வழக்கு மன்றத்திற்குப் போகும் அளவிற்கு சென்று டிரிபியூனல் வரை சென்று, அவர்களும் கலர்ட் ஸ்கின்னுக்குப் இந்த 1½ சதவிகிதம் அப்ளிகபிள் ஆக இருக்கும் என்று தீர்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தாலும், இந்த விற்பனை வரிச் சட்டத்தில் இப்போது இருக்கும் நிலைமையைப் பார்த்தாலும், அந்த கலர்ட் ஸ்கின்னுக்கு ஏற்கனவே இருந்த 1½ சதவிகிதம் இப்போது உயர்த்தப்பட்டு இருக்கும் 2 சதவிகிதம் தான் விற்பனை வரியாக விதிக்க முடியும்.

ஆனால் இப்போது இருக்கும் நிலை என்னவென்றால்; சில அதிகாரிகள் 1½ சதவிகிதமாக இருப்பதை அதிகமாக 4 சதவிகிதம் என்ற அளவிற்கு வரி விதிப்பதால் ஒவ்வொரு வியாபாரியும் அப்பீல் செய்து, அசிஸ்டென்ட் கமிஷனர் அளவிற்கும், டிரிபியூனல் அளவிற்கும் சென்று மீண்டும் உத்தரவு வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், டிரிபியூனல் முடிவு அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தும்



1975-ம் ஆண்டில் டிரிபியூனல் முடிவு அளித்த பின்பும் மீண்டும் மீண்டும் வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கும் நிலை இருக்கிறது. அந்த நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன்.

அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட சேல்ஸ்டாக்ஸ் மானுயுவலில் கூட கலர் ஸ்கின்ஸ் உள்பட என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் சில மிஸ்கைடட் ஆபிசர்ஸ், ஓவர் ஜெலஸ் ஆபிசர்ஸ் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். நான் கொடுத்துள்ள தீர்மானத்தை பரிசீலிப்பதாக ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த அளவில் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இன்றையதினம் விற்பனை வரியிலே திருத்தங்கள் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்றையதினம் நாட்டு வெல்லத்திற்கு போடப்பட்டு இருக்கும் வரி மிகவும். கூடுதலாக இருக்கிறது. விவசாயிகளுக்கு இது பல்வேறு சங்கடத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இதை உடனடியாகக் குறைப்பதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் ஏழை எளிய விவசாயிகளுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்ய முடியும். அதோடு மட்டுமல்ல விற்பனை வரியில் சுமார் 25,000 ரூ. டர்ன் ஓவர் செய்கிறவர்களுக்கு விலக்கு அளித்து விட்டு, அதற்கு மேலும் உள்ள விற்பனைக்கு குறைவாக வரிவிதிப்பதின் மூலம் வெல்லத்தை உற்பத்தி செய்யும் மக்களுக்கு நன்மை செய்யமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஓட்டலில் இருக்கும் வரி விதிப்பானது ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு வகையான சங்கடங்களை ஏற்படுத்துகிறது. சாதாரணமாக காப்பி சாப்பிட்டால் கூட வரி போடுகிறார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது கூட இதே கோரிக்கையைக் கிளப்பினேன். அரசு சார்பில் உறுதி மொழி கொடுக்கப்பட்டது. ஆனால் அது இன்னும் குறைக்கப்படவில்லை, எடுக்கப்படவில்லை, தடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள் சோப் உபயோகிக்கிறார்கள். பல வகையான சோப்பு உபயோகிக்கிறார்கள். சோப் வகைகளில் வரி விதிக்கிறபோது ''எக்ஸ்குளுடிங் ஹேண்ட் மேட் சோப்'' என்று போட்டு இருக்கிறீர்கள். சாதாரணமாக இன்றைக்கு எல்லா மக்களுக்கும் சோப் தேவைப்படுகிறது. கிராமங்களில்

அழுக்கை நீக்க சீயக்காய் தேய்க்கப் போய் சோப்பு உபயோகிக்கும் வழக்கம் இருக்கிறது. ஆகவே, அது ஒரு லக்சுரி இல்லை. அழுக்கைப் போக்க மக்கள் சோப்பை உபயோகிப்பதால் அதற்குள்ள வரியை நீக்கவேண்டும்.

அடுத்ததாக, சிமெண்டிற்கு போட்டிருக்கும் வரி மிகவும் கூடுதலாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கிராமப் புறங்களில் வீடு கட்டும் ஏழை எளிய மக்கள் இன்றைக்கு சிமெண்ட் தான் பயன்படுத்துகிறார்கள். செங்கல், மண், வைத்து சுவர் எழுப்பும்நிலை மாறியிருக்கிறது. சிமெண்ட் வைத்து கட்டவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகியிருக்கிறது. ஆகவே, கிராமப்புறத்தில் வீடு கட்டும் முயற்சியை ஊக்குவிக்க கிராமப்புறங்களில் வாங்கும் சிமெண்டின் விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாயிகள் பம்புசெட்டுகள் கட்டுவதற்கும், வாய்க்கால்கள் அமைப்பதற்கும் சிமிண்ட் வாங்குகிறார்கள். வரி விதிப்பு சிமிண்டுக்கு அதிகமானால் அவர்கள் விவசாயக் காரியங் களுக்குப் பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படும். அதனால் நவீன விவசாய உத்திகளைக் கையாள முடியாமல் போய்விடும். ஆகவே விவசாயத் துறையில் பயன்படுத்த வாங்கப்படும் சிமிண்டுக்கு வரியைக் குறைக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த அளவுக்கு கூடுதலாக வரி விதிக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் முறையாக செயல்பட்டு, வசூலிக்க வேண்டிய வரியை ஒழுங்காக வசூல் செய்தால், மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் ஒழுங்காக வசூல் செய்தால் நிச்சயமாக இந்தமாதிரி கூடுதல் வரி விதிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்காது.

நகரில், குறிப்பாக மதுரையில் கீழமாசி வீதியில் வாங்கும் பொருட்களுக்கு கடைக்காரர்கள் பில் கொடுப்பதில்லை. அதற்கு மாறாக அதிகாரிகளுக்கு 'சைடு பாக்கெட்'டில் போகும் பணம் ஏராளம். அதன் காரணமாக வரி விதிப்பை ஒழுங்காகப் பார்க்காமல், விற்பனை செய்யும் பொருட்களுக்கு ஒழுங்காக பில் கொடுக்கிறார்களா என்று பார்க்காமல், லஞ்சம் என்று சொல்வதற்கு பதிலாக அன்பளிப்பு என்று சொல்ல கூடிய வகையில் வியாபாரிகளிடம் பணம் பெற்று, அரசாங்கத்திற்கு வருகின்ற வரிப் பணத்திற்கு இழப்பு ஏற்படுகிறது.

முன்பெல்லாம் ஏ.சி.டி.ஓ., டி.சி.டி.ஓ. போன்றவர்களுக்கு நல்ல மரியாதை இருந்தது. அந்தக் காலம் மாறி இன்றைக்கு அவர்கள் வருகிறார்கள் என்றால் வியாபாரிகள் எல்லாம் ஓடி ஒளிந்து கொள்கிறார்கள். பின்னால் 50, 100 ரூபாய் கொடுத்து சமாளித்துக் கொள்கிறார்கள்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் பொன்னமராவதிக்கு வந்தால் அங்கே இருக்கிற டி.பி—யில் தங்குவது கிடையாது. ஒரு தனியார் பங்களாவில் தங்குவார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : நீங்கள் பில்லைப் பற்றிச் சொல்லுங்கள். விரிவான முறையில், அதிகாரிகள், அலுவலங்கள் பற்றி எல்லாம் பேசினால், அதற்கு நேரம் போதாது. அது பொதுவிவாதம் மாதிரி ஆகிவிடும். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

<u>திரு. நா. சுந்தரராஜ்</u> ; வசூல் செய்கின்ற முறையைச் சொல்கிறேன். அங்கே உட்கார்ந்துகொண்டு வியாபாரிகளை அழைத்து, இங்கே வாருங்கள், இங்கே வாருங்கள் என்று சொல்லி, பில்லை பார்ப்பது கிடையாது; புத்தகங்களைப் பரிசீலனை செய்வதில்லை. மாறாக அவர்களுக்கு உரிய தொகையை வாங்கிக் கொண்டு செல்வதுதான் இன்றைய நிலைமையாக இருக்கிறது.

வரி விதிப்பைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்கள் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய முறையில் வரி விதிப்பு இருக்கக் கூடாது. அதேநேரத்தில் விதிக்கப்படுகின்ற வரிகள் முறையாக, ஒழுங்காக வசூல் செய்யப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணித்து நடவடிக்கை எடுத்தால்தான் பிரச்சினை நன்மை பயப்பதாக இருக்கும் என்பதை எடுத்துச்சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. என். பழனிவேல்:</u> தலைவரவர்களே, அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கக்கூடிய வகையிலே இன்றைய தினம் சில பொருட்களுக்கு வரியை விதித்திருக்கிறார்கள். அந்த வரி கூட பிப்ரிவரி 21-ந் தேதியிலிருந்து அமுலுக்கு வந்துவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

தங்கம், வெள்ளி போன்ற பொருட்களுக்கு வரி விதிக்கப் பட்டால் அதிலே ஆட்சேபனை இல்லை. ஆனால் பருத்தி, பருத்தி நூல், பருத்தி கழிவு போன்ற பொருட்களுக்கெல்லாம் கூட வரி விதித்திருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும் பாலும் ஏழை எளிய மக்களும் குறிப்பாக கைத்தறி நெசவாளர் களும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் கைத்தறித் துணி என்பது ஏற்கெனவே விற்பனை ஆகாமல் பல லட்சக்கணக்கான மீட்டர்கள் தேங்கிக் கிடப்பதாக அரசின் அறிக்கை கூறுகிறது. அதனால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இந்தப் பிரச்னையில் பருத்தி நூல், பருத்திக் கழிவு போன்றவைகளுக்கும் வரி விதித்தால் அது வாங்கி உபயோகிக்கும் ஏழை எளிய மக்களையும் பாதிக்கும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்தால் நல்லது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள் கிறேன்.

அதைப்போல கண்ணாடி சாமான்களுக்கு இன்றைய தினம் வரி விதித்திருக்கிறார்கள். கண்ணாடி சாமான்கள் என்பது இன்றைய தினம் ஏழை எளிய மக்கள் முகம் பார்க்கவும், வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் கிளாஸ் போன்றவைகளும் இருக்கின்றன. அவர்கள் எவர்சில்வர் வாங்கும் அளவுக்கு வசதி படைத்தவர்கள் அல்ல. இந்த வரி விதிப்பினால் அவர்கள் வாங்கக்கூடிய கண்ணாடி சாமான்களுக்கும் விலை உயர்வு ஏற்படும். ஆகையால் இதனாலும் ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இதையும் நீங்கள் மறுபரிசீலனை செய்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பதப்படுத்தப்பட்ட தோலுக்கு இன்றைய தினம் 1½ சதவீதம் வரியிலிருந்து 2 சதவீதம் என்ற அளவுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இதற்கு வரியை உயர்த்துவதன் மூலம் சாதாரண மக்கள் போடக்கூடிய செருப்பு விலை கூட உயரும். ஆகையால் இதிலும் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழைகள் தான். அதோடு அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும், பொருட்கள் விற்பனை ஆகாமல் தேக்கம் ஏற்பட்டால் பாதிக்கப்படுவார்கள். ஆக, தொழிலாளர்களுக்கு தொழில் குறையும், ஏழை மக்கள் வாங்கும் செருப்பு விலையும் உயரும். ஆகவே, எந்த வகையில் பார்த்தாலும் இதன் மூலம் சாதாரண ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இவைகளை கண்டிப்பாக மறுபரிசீலனை செய்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

சோப்புகளுக்கு வரி என்று கூறுகிறார்கள். கையால் செய்யப்படும் சோப்புக்கு வரி இல்லை. மற்ற ரகச் சோப்புக்கு வரி உண்டு என்று கூறுகிறார்கள். கையாலே செய்யப்படும் சோப்பை உபயோகிப்பவர்கள் இப்போது நாட்டிலே மிகமிகக் குறைந்த அளவிலே தான் இருக்கிறார்கள். அனேகமாக இன்றைக்கு சாதாரண விவசாயிகள் தொழிலாளர்கள் 1 ரூபாய் 1½ ரூபாய் என்று விலை கொடுத்து சோப்புக்களை வாங்கி உபயோகிக்கிறார்கள். அந்த சோப்பின் விலையும் இன்றையதினம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண ஏழை எளியவர்கள்தான். ஆகவே கையால் செய்த சோப்பு என்பதற்கு மட்டுமல்லாது எல்லாவித சோப்புக்களுக்கும் வரி விலக்கு அளிக்கக்கூடிய முறையிலே இந்த அரசு ஒரு நிலை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால். இந்தத் தங்கம், வெள்ளி போன்றவற்றிற்கு வரிகளை உயர்த்தி இருப்பது குறித்து எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி மசோதாவில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது பொதுவாக நம்முடைய அரசாங்கத்திற்கு அதிகமான வருமானத்தைத் தருவது இந்த பொது விற்பனை வரிதான். இதிலே நாம் மேலும் மேலும் வரியை உயர்த்திக் கொண்டே போகக்கூடாது. அவ்வாறு உயர்த்திக்கொண்டே போவதால் வரி கொடுக்க வேண்டியவர்கள் தங்களது கணக்கை குறைத்துக் காண்பிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வரியின் அளவு சாதாரணமாக ஆரம்பக் காலத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்ற அளவில் இருந்தது, அது உயர்ந்துகொண்டே போகிறது. வியாபாரிகள் தங்களுடைய வியாபாரம் நடக்கிறதோ இல்லையோ அதற்குச் சரியான கணக்கு வைத்துக்கொண்டு வரியைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், 4,5,6 என்று பத்து சதவீதம் வரையில் உயர்த்திக்கொண்டே போனால் ஒவ்வொருவரும் தங்களுடைய கணக்குகளில் எவ்வளவை ஒளித்துக் கொள்ளலாம், அதனால் அன்றாடம் கிடைக்கும் லாபம் எவ்வளவு என்று எண்ணி கணக்குகளை மறைக்கும் சூழ்நிலைவருகிறது. ஆகவே வரியினை அதிகமாக உயர்த்தொண்டே போகாமல் ஒரு சரியான நிலையில் வைத்திருந்தால் இந்த வருமானம் சாதாரணமாகக் கிடைப்பதை விட சற்று அதிகமாகவே கிடைக்கும் வாய்ப்புக்கள் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது குறிப்பாக போடப்பட்டிருக்கும் வரிகள் சாதாரண மக்களைத்தான் அதிகம் பாதிப்பதாக உள்ளது. பருத்தி, பருத்தி நூல், பட்டு, ஜரிகை ஆகியவற்றிற்குப் போடக்கூடிய வரிகள் எல்லாம் நெசவாளர்களையே பாதிக்கும். ஆகையால் அவர்கள் நல்ல ஜரிகை, பட்டு இவற்றை உபயோகிக்காமல் அதிலே தரக்குறைவானவற்றை உபயோகிக்கும் நிலை ஏற்படும். அதனால் நெசவுத் தொழிலும் பாதிக்கும். ஆகையால் இந்த வரி விதிப்பினை அதிகமாக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே மாதிரியாக ஏழை எளியவர்கள் தங்களது வீட்டிலேயே சின்னக்குழந்தைகளுக்கு என்று ஒரு நல்ல சோப்பை வாங்கி உபயோகிப்பது உண்டு. இந்தப் பழக்கம் படிபடியாக வந்துவிட்டது. ஆகவே இந்த சோப்பின் விலையை அதிகமாக்கினால் அங்கே அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழைகள்தான். ஆகவே சோப்பின் மீதும் அதிகமானவரிவிதிப்பு கூடாது என்றுதான் என்னாலே சொல்ல முடியும்.

அடுத்து சிமெண்ட். இதற்கு 5 சதவீதம், 6 சதவீதம், பிறகு 8 சதவீதம், அதிலிருந்து 10 சதவீதம் இப்படியே உயர்த்திக் கொண்டு போனால் சாதாரண மக்கள்தான் கஷ்டப்படக்கூடிய

சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி வரி உயர்வை ஏற்படுத்துகின்ற இந்த மசோதாவைக் கைவிட்டு, புதிதாக வரி எதுவும் விதிக்காமல் முன்பு போடப்பட்டிருக்கும் வரியினை ஒழுங்காக வசூல் செய்யவேண்டும்.

அடுத்து, இந்த பல முனை வரி. இதுவும் மிகவும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. பல முனை வரியில் 4 சதவீதம் என்று இருந்தாலும் இரண்டு, மூன்று, பேர் கை மாறிக்கொண்டே வரும் போது அது 12 சதவீதமாக உயர்ந்துவிடுகிறது. அதனால் கோவாப்ரேட்டிவ் சொஸைட்டீஸ், சிறப்பு சிற்றங்காடி போன்றவற்றை வைத்திருக்கிறவர்கள் நஷ்டமடைவதோடு ஒழுங்காக இவர்கள் வரியினைக் கட்டிவிடுவதால் மற்ற வியாபாரிகளோடு அவர்களால் போட்டி போட முடியாத சூழ்நிலை இருக்கிறது.

இன்று ஒரு பொருளை ரூ. 100க்கு வாங்கினால் வரி நான்கு ரூபாய் போகிறது. வாங்குவதற்கு ஒரு வரி, விற்பதற்கு ஒரு வரி என்று ரூ. 8 போய்விடுகிறது. ரூ. 200க்கு ஒரு பருப்பு மூட்டை வாங்கி அதை விற்கும்போது பில் போட்டு கொடுக்கும்போது அதன் விலை 32 ரூபாய் கூடுதலாகிறது. இந்த வரி காரணமாக பில் போட்டுத்தான் கூட்டுறவு சங்கங்களில் விற்க வேண்டியிருக்கிறது: சிறப்பங்காடிகளிலும் விற்கவேண்டியிருக்கிறது.

ஆனால் சில வியாபாரிகள், பணத்தை மட்டும் கருத்தில் கொண்டு வியாபாரம் செய்கிறவர்கள் பில் போடாமல் இருபது ரூபாய் குறைத்துக்கொண்டு ரூ. 12 லாபம் அடைகிறார்கள். பில் போடுவது என்றால் அதிகமாக ரூ. 32 போட வேண்டியிருக்கிறது. பில் போடாமல் வியாபாரம் செய்கிற வியாபாரிகள் ரூ. 20 குறைத்துக் கொடுத்தும் ரூ. 12 லாபம் அதிகமாகப் பெறமுடிகிறது. ஆகவே ஒரு வியாபாரி நாணயமாக, நியாயமாக, ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். அதிகாரிகளுக்கு கை கட்டி நிற்கவேண்டியதில்லை என்று நினைத்தால், சரியாக கணக்குகள் எழுதி ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டுமென்று நினைத்தால் தலைகுனிவு ஏற்படாமல் இருக்கவேண்டும், தர்ம நியாயப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைத்தால் அவர் நஷ்டமடைகிறார். இந்த விற்பனைவரி உயர்வு காரணமாக அவர்கள் வியாபாரத்தையே மூடவேண்டியநிலை ஏற்படுகிறது. தவறாக நடந்து கொள்ளக்கூடிய வியாபாரிகள் ரூ. 2000-க்கு வியாபாரம் செய்கிறார் என்றால் ரூ. 500க்குத்தான் வியாபாரம் நடந்ததாக கணக்கு காட்டுகிறார். அதனால் வரி கொடுக்கவேண்டியதும் குறைகிறது.

ஆகவே இந்த விற்பனை வரியை அதிகமாகப் போடுவதன் காரணமாக நாணயமாக நடக்க வேண்டும் என்று விரும்புகிற வியாபாரிகளைக்கூட நாணயமில்லாதவர்களாக மாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகிறீர்கள். இந்த விற்பனை வரி உயர்வு



நியாயமான முறையில் நடக்கக்கூடிய வியாபாரிகளுக்கு கூடுதல் பாதகத்தை ஏற்படுத்துகிறது. நாணயமாக வியாபாரம் செய்யாதவர்களுக்கு, வரி ஏய்ப்பவர்களுக்கு இது உதவி செய்கிறது. ஆகவே சமுதாயத்தில் வேறு பல தவறுகளைச் செய்ய இது வகை செய்கிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்வது, வரியைக் குறைக்கவேண்டும், கறாராக வசூல் செய்ய வேண்டும், பேர்பாதி வரியைக் குறைத்தாலும்கூட 4% என்றிருப்பதை 2% என்றாக்கினாலும் அல்லது 6% என்றிருப்பதை 3% என்றாக்கினாலும் வரியை கறாராக வசூல் செய்தால் இதே அளவு தொகை கிடைக்கும். அதோடு அவர்களும், வியாபாரிகளும் சரியாக கணக்குகள் எழுதிவைப்பார்கள்.

வேண்டுமானால் ஒரு நிபுணர் குழு போட்டு ஆராய்ச்சி செய்யுங்கள். ஒரு வியாபாரியைக் கூப்பிட்டுக் கேளுங்கள். ஒரு நாள் ரூ. 2,000க்கு வியாபாரம் நடந்தால் ரூ. 500 என்றுதான் கணக்கு காண்பிப்பார். ஆகவே, நான் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சொல்லிக்கொள்கிறேன், இந்த வரி உயர்வு சரியல்ல.

தங்கம் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு நாள் தங்கத்தை விற்கப் போனோம். தங்க நகைகளை அடகு வைத்திருக்கிறார்கள். கடனை திருப்பிக் கட்டமுடியவில்லை, ஆகவே நகைகளை விற்று கடனை அடைக்கலாம் என்று தங்கத்தை விற்கப் போனால் நம்மிடமே விற்பனை வரி கேட்கிறார்கள். நான்கு ப்ளஸ் நான்கு ரூபாய் எட்டு ரூபாய் கழித்துக்கொண்டு கொடுக்கிறார்கள்.

அவர்கள் தங்கத்தை விற்கப்போவதே கடனை அடைப்பதற்காகத்தான். அடகு வைத்திருப்பதை விற்று கடனை அடைக்கலாம் என்று தங்கத்தை விற்கச் சென்றால் விற்பனை வரி கேட்கிறார்கள் அதற்கும். ஆகவே, தங்கத்தின்மேல் போட்ட வரிகூட ஏழை மக்களைத்தான் பாதிக்கிறது.

வரிகளை அதிகமாகக் கூட்டியதே தவறு. இருக்கிற வரிகளைக் கறாராக வசூலிக்கவேண்டும். எல்லாவற்றையும் ஒருமுனை வரியாக்க வேண்டும். அப்படிச் செய்தால் வருமானம் கூட அதிகமாக வரும். இந்த மசோதா ஏழைமக்களைப் பாதிக்கக்கூடிய பல வரி உயர்வுகளைக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை கைவிடுவதுதான் சரியாக இருக்கும் என்ற என் ஆலோசனையைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவைத்தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதி வருவாயைக் கூட்டுவதற்காக, ஏற்கனவே ஏற்பட்டுள்ள டெபிஸிட்டை ஈடுகட்டுவதற்காக இன்று புது வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் மாநிலத்தில் மதுவிலக்கு அமல்செய்யப்படுவதால் ஏறத்தாழ ரூ. 160 கோடி நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே புது வரிகள் வழியாக இந்த நஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டுமென்று அறிவிப்புதான் நிதி நிலை அறிக்கையை இங்கே சமர்பித்தபோது கூறப்பட்டது.

(முற்பகல் 11-50)

மதுவிலக்கு இருப்பதின் காரணமாக நஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். இப்போது மத்திய அரசு கூட அதற்கு இசைவு தந்திருப்பதாக கேள்விபடுகிறேன். மதுவிலக்கினால் பாதிக்கப்படுகின்ற தொகையில் 50 சதவிகிதம் தொகையை மத்திய அரசு மாநில அரசுக்குத் தருவதாக மத்திய அரசு அறிவித்திருப்பதாக எண்ணுகிறேன். அந்த வகையில் 75 கோடி ரூபாய் மாநில அரசுக்கு வர இருக்கின்றது என்று சொன்னால் மேலும் வரிகளை சுமத்தி நமது வருவாயைப் பெருக்கிக் கொள்ளவேண்டியது அவசியமா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற விற்பனை வரி மசோதாவைப் பார்க்கின்ற நேரத்தில், இது அவசியமா என்று பார்க்கின்ற நேரத்தில் இது தேவையில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

விற்பனை வரி வசூல் செய்வதில் பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன என்று சாதாரணமாக கூறப்பட்டு வருகின்றது. ஊழலை அகற்றவேண்டும் என்று எந்த அளவுக்கு இந்த அரசு எண்ணியிருந்தாலும் விற்பனை வரி வசூல் செய்வதில் நிச்சயமாக ஊழல் அகற்றப்படவில்லை. இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். எந்த அளவுக்கு அரசுக்கு வருவாய் வருகிறதோ இல்லையோ, இந்த இலாகாவில் செயலாற்றுகின்ற பல்வேறு அதிகாரிகளுக்கு-நான் கூறுகின்றது அனைத்து அதிகாரிகளையும் சேர்த்துக் கூறவில்லை-பல்வேறு அதிகாரிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்ற குறை கூட ஆங்காங்கு கூறப்பட்டு வருகிறது. ஊழல் நிறைந்திருக்கிறது, அதை அகற்ற முடியாது என்கின்ற அளவில், இந்த பொது விற்பனை வரி முறையை அகற்றிவிட்டு, ஆயத்தீர்வையின் மூலம் மாநில அரசுகளுக்கு போதுமான வருவாய் வருகின்ற முறையில், விற்பனை வரி ஏய்ப்பையும் தவிர்க்கின்ற முறையில் கொண்டுவர மத்திய அரசு எண்ணியிருக்கிறது.

இதில் ஊழல் இல்லாமல் இருக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு விற்பனை வரி முறையை ரத்து செய்யவேண்டும் என்கின்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதை எல்லா மாநில அரசுகளும் ஒத்துக்கொண்டால் இதைச் செய்ய முடியும் என்றுள்ள கருத்தை மத்திய அரசு சொல்லியிருக்கிறது. மாநில அரசு இதற்கு இசைவு கொடுத்தால் இதிலுள்ள ஊழல்களை அகற்ற முடியும் என்பதைச் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். அதோடு நிச்சயமாக இந்த அரசுக்கு தேவைப்படும் வருவாயும் ஆயத்தீர்வை மூலம் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



இங்கு பல்வேறு பொருட்களுக்கு விற்பனை வரி சுமத்தப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக விற்பனை வரி என்று சொல்லும் போது, பொருட்களை கொண்டு செல்லுகின்றவர்கள் மீதும் இந்த வரி சுமத்தப்படுகின்றது என்ற எண்ணம் வரலாம். சேல்ஸ் டாக்ஸ் என்றும், பர்ச்சஸ் டாக்ஸ் என்றும் இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. விற்பனை வரி என்பது பொருட்களை வாங்குகின்றவர்களின் மீது போடப்படுகின்ற வரியாக இருந்து வந்தது. அப்படி வரும் போது, இன்றைக்கு தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், 60 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழே இருக்கின்றார்கள். இவர்கள் எல்லாம் சாதாரணமான அத்தியாவசியமான பண்டங்களை, பொருட்களை வாங்க நேரிடுகிறது. அப்படி வரும்போது, இப்பொருட்கள் மீது போடப்படுகின்ற வரி ஏழை எளிய மக்கள் மீது சுமத்தப்படுகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இங்கு தங்கம், வெள்ளியைப் பற்றி கூறப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுது, வசதி படைத்தவர்கள்தான் வாங்குவார்கள், விற்பார்கள் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கவேண்டியதில்லை. ஜனதா ஆட்சி ஏற்பட்டதும், எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக தங்கத்தின் விலை இன்றைக்கு குறைந்திருக்கிறது. இதன் காரணமாக நாட்டிலுள்ள பல ஏழை மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது. தங்கத்திற்கும் வெள்ளிக்கும் வரி சுமத்துவதினால், நிச்சயமாக இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல்தான் கழிவுப்பஞ்சு, சோப்பு, தோல் இதன் மீது எல்லாம் வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. ஒரு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகவும், எட்டு சதவிகிதத்திலிருந்து பத்து சதவிகிதமாகவும் ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக இது ஏழை எளிய மக்கள் மீதுதான் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பாக, தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் கூறிக்கொண்டு, இதையெல்லாம் மறுபரிசீலனை செய்து கொண்டு வந்தால் மக்கள் வரவேற்பார்கள் என்பதை கூறி அமருகின்றேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மசோதாவின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதனுடைய நோக்கங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்லும் போது, 'in order to augment the resources of the State' என்று சொல்லப்படுகிறது. அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக இந்த வரி உயர்வுகள், அதற்காக திருத்தச் சட்டம் என்று இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தி

னுடைய வருமானத்திற்கு மட்டும் வரி உயர்த்தப்படுமானால் வரிகள் விதிக்கப்படுமானால், அது ஒருகாரணமாகக் காட்டப்படுமானால், அந்த வரி விதிப்பினால் எந்த எந்தத் துறை, யார் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறியாமல், இந்தப் புதிய வரிகள், புதிய ஏற்றங்கள் யாரைப் பாதிக்கின்றது, இன்றைக்கு விதிக்கப்படுகின்ற இந்த வரி ஏற்றத்தினால் வரியை எங்கே வாங்குகிறார்கள், யார் கைக்கு அது மாற்றப்படுகின்றது என்பதையெல்லாம் ஆராயாமல், அரசாங்கம் வருமானத்தைப் பெருக்குவதற்காக வரி விதிக்கிறோம் என்று சொல்வது அவ்வளவு நல்ல முறையல்ல, அதை மாற்றியமைக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்கத்திற்கு வருமானம் தேவை. மேலும் உயர்ந்து வருகின்ற செலவினங்களுக்காக, அரசாங்கத்திற்கு வருமானம் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அரசாங்கம் செய்கின்ற செலவினங்கள் எல்லாம் யாருக்காகச் செய்கிறார்கள்: சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக, சமுதாய நன்மைக்காகத்தான் செய்கிறார்களே தவிர., அவர்கள் தங்களுடைய சொந்த நன்மைக்காக செய்யவில்லை. நாம் வரி விதிக்கின்றபோது, சமுதாயத்திலே எந்தத் துறையை, யாரை இது பாதிக்கின்றது என்பதைப் பார்க்காமல் வரியை உயர்த்தி, வருமானத்தைப் பெருக்க வேண்டாம். அதற்கு வரி என்று சொல்கின்ற முறை, இந்தச் சட்டத்திலே கூறப்பட்டுள்ள, ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்-இல் சொல்லப்படுகின்ற முறைக்கு அது நல்ல முறையாக இருக்காது. அதற்கு மாற்றம் தேவை என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது இங்கே விதிக்கப்படுகின்ற வரிகள் யாரைப் பாதிக்கின்றது என்பதைப் பார்க்கும்போது, மக்கள் சாதாரணமாகக் பயன்படுத்துகின்ற பொருட்களின் மீது வரி உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதுதான் இங்கே நம்முடைய கவனத்தை ஈர்க்ககூடியதாக இருக்கின்றது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

'காட்டன் யார்ன், காட்டன் வேஸ்ட் யார்ன், ஆர்டிபிஷியல் சில்க், ஸ்டேபிள் பைபர் யார்ன், போன்றவைகளுக்கு வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆர்டிபிஷியல் சில்கை யார் உடுத்திக் கொள்கிறார்கள்? பணக்காரர்களா உடுத்திக்கொள்கிறார்கள். பணக்காரர்கள் நல்ல பட்டாக உடுத்துகிறார்கள். நல்ல பட்டாடை வாங்குவதற்கான சக்தி அவர்களிடத்திலே இருக்கின்றது. எனவே இந்த ஆர்டிபிஷியல் சில்கை யார் வாங்குகிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலை கம்மி என்று ஏழைகள்தான் இதை வாங்குகிறார்கள். எனவே, ஏழைகள் தலையில் நீங்கள் கையை வைத்திருக்கிறீர்கள். வேண்டாம். நல்லதல்ல. இந்த ஆர்டிபிஷியல் சில்கை ஏழைகள் வாங்கி அதுவும் குப்பாயம் அல்லது கண்டங்கி சேலைகள்



இப்படி உடுத்திக் கொள்கிறார்கள்? அவர்கள் இத்தகைய பட்டைத்தான் திருமணங்களுக்கெல்லாம் கூட வாங்கி உடுத்திக் கொள்கிறார்கள். ஆகையால், இதனால் ஏழைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இது நல்லதல்ல.

காட்டன் வேஸ்ட் யார் உபயோகப்படுத்துகிறார்கள். எல்லோருமா உபயோகப்படுத்துகிறார்கள். சோபஸ்டிகேட்டட் பொருட்களை' மெத்தைகளை பணக்காரர்கள் வாங்குகிறார்கள். ஆனால், ஏழைகள் இந்த காட்டன் வேஸ்டைத் தான் வாங்கி, தலையணை தைக்கிறார்கள். இன்னும் சிலர் மெத்தை போன்றவற்றை தைக்கக்கூடியதை நாம் கிராமப்புறங்களிலே பார்க்கிறோம். அதற்கும்கூட வரி என்று சொன்னால், அதையும் மாற்றியமைக்க வேண்டும்.

மேற்கொண்டு, அதிகமாக சமுதாயத்திலே உள்ளவர்கள் உபயோகப்படுத்துவது சோப்பு. இந்த சோப்புக்கும் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இது நியாயம் அல்ல. அதிலும், முக்கியமாக பிரச்னை எப்படி வருகிறதென்றால், incidence of shiftability என்ன என்று பார்க்கவேண்டும். சும்மா, ஏதோ ஒரு ஐட்டத்தை எடுத்துக்கொண்டு, வருமானத்தைப் பெருக்குவதற்கு முன்பு, உங்களுடைய பைனான்ஸ் டிபார்டுமென்டிலே அல்லது பிஸ்கல் பாலிசியை முடிவு செய்வதற்கு முன்பு, நீங்கள் அப்பிரைஸ் செய்யும்போது incidence of shiftabilty என்ன என்பதை பற்றி 'பிராஸ்பெக்டிவ் அசெஸ்மெண்ட்' செய்யவேண்டும்.

சோப்பை யார் வாங்குகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏழைகள்தான் சோப்பை வாங்குகிறார்கள். அதை உற்பத்திசெய்கின்றவர்கள், வியாபாரிகளிடம் கொடுக்கின்றார்கள். வியாபாரிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், இந்த விலை ஏற்றத்தின் காரணமாக, நகரங்களிலேகூட ஒரு அளவுக்கு பரவாயில்லை. கிராமங்களிலே அவர்கள் இஷ்டத்திற்கு விலையை ஏற்றிவிடுகிறார்கள். இதனால் யார் பாதிக்கப்படுகின்றார்கள் என்றால், கடைசியிலே கன்ஸ்யூமர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் கன்ஸ்யூமர்கள் யார் என்றால், ஏழை மக்கள். அவர்கள்தான் இந்த சோப்பை வாங்குகிறார்கள்.

(நண்பகல் 12-00)

ஆகையால் இதற்கெல்லாம் அவசியமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். தோல் தொழிற்சாலை நாட்டில் எப்படி இருக்கிறது என்றால், பல்லாண்டு காலமாக நடந்து வரும் அந்தத் தொழில் இப்போது 'பார்மட்டிவ் ஸ்டேஜி'ல் இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் புதிய கொள்

கையின் அடிப்படையில் எல்லா தோல் ஷாப்புகளும் புதிய முறையில் அமைக்கப்பட வேண்டும். முழுமைப்படுத்தப்பட்ட தோல்களை உற்பத்தி செய்யவேண்டுமென்ற கட்டாயமான சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

இன்றைக்கு ஐந்து லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு தொழிலை நடத்திக் கொண்டிருப்பவர்கள் இனி ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாக இந்தத் தொழிலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காபிடல் தேவை, இன்வெஸ்ட் மென்ட் தேவை, கட்டிடங்கள் தேவை. இந்தச் சூழ்நிலையில் மேலும் மேலும் வரியை உயர்த்திக் கொண்டே போவார்களானால் அந்தத் தொழில் இருப்பதா போவதா என்ற முடிவுக்கு அரசாங்கம் வரவேண்டும். பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை செய்யக்கூடிய தொழில் மீது இவ்வளவு தூரம் பளுவை அதிகமாகச் சுமத்திக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை.

அண்மையில் கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்கள், உயர்ந்த பட்ச கூலி நிர்ணயித்திருக்கிறார்கள். 200 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். ஏழைகள், தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டியதுதான்.

காபிடல் பார்மேஷன் தேவைப்படுகிற நேரத்தில் அதிகமான லேபர் சார்ஜஸ், கட்டடங்கள் கட்டுவது, காபிடல் இன்வெஸ்ட்மென்ட், ரெகரிங் இன்வெஸ்ட்மென்ட், வங்கிகளில் வட்டிக்குக் கடன் வாங்கி வட்டியைச் செலுத்துவது என்ற நிலைமைகளில் அரசாங்கம் அந்தத் தொழிலை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, அழிந்து போகும் வகையில் வரியை ஏற்றுவது நல்லதல்ல. 'இன்சிடன்ஸ் ஆப் டாக்சேஷன்' பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய பாதகத்தை ஏற்படுத்தும். அது இப்போது தெரியாது. இப்போது வருமானம் கிடைக்கலாம்; இதனால் நாளைக்கு 100 ரூபாய் இழப்பு ஏற்படலாம். என்னைப் போன்ற சாதாரண மனிதன் இன்றைக்கு வருவாய் வருகிறது என்று ஒரு காரியத்தைச் செய்யலாம். அரசாங்கம் அப்படிச் செய்யக்கூடாது.

அரசாங்கம் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இத்தகைய வரிகளின் இம்பாக்ட் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் சாதாரண மக்களைப் பாதிக்கும் சட்டமாக, தொழிற் துறையின் அடிப்படைக்குப் பாதகம் ஏற்படுத்துகிற சட்டமாக, மேலும் தொழில் முன்னேற்றம் ஏற்பட தடங்கல்களும், முட்டுக் கட்டைகளும் ஏற்படுத்தும் சட்டமாகக் கொண்டு வருவது



அவ்வளவு விரும்பத்தக்கது அல்ல. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அரசாங்கம் மறு பரிசீலனை செய்யக்கூடிய சூழ்நிலையில் இல்லை---

The Bill itself is being pilcted by anctl er Hon. Minister and I do not think he will go to the extent of withdrawing the Bill, அது எனக்குத் தெரியும்.

கடைசியாக, எக்சைஸ் டியூட்டி பற்றி மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். சேல்ஸ் டாக்ஸ் மிக முக்கியமான வருமானம், மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ராஜாஜி அவர்கள் அதைக் கொண்டு வந்த போது 'காமதேனு' என்று சொன்னார்கள். அந்தக் காமதேனு என்ற பசுவை விட்டு விட்டு எக்சைஸ் டியூட்டி என்ற காளையைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். காளை உழுவதற்குத்தான் பயன்படும், பாலுக்குப் பயன்படாது. இதிலே அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று இதுவரை அறிவிக்கவில்லை, தெளிவாக்கவில்லை.---

'The Central Government insist upon switch-over to the Excise Duty'

என்று சொல்லுகிறார்கள். சேல்ஸ் டாக்சை விட்டு விடுங்கள் என்று அவர்கள் சொல்வது பற்றி உங்கள் கொள்கை இதுவரை தெளிவாக்கப்படவில்லை. அதை தெளிவாக்குவது நல்லதென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி உயர்வினால் மாநில அரசுக்கு பெட்ரோல் டீசல் மூலம் வருகிற 2.1 கோடி ரூபாய் நீங்கலாக மேற்கொண்டு 3.48 கோடி ரூபாய்—ஆகமொத்தம் 5.49 கோடி ரூபாய் வருவாய் வருகிறது. மாநில அரசைப் பொறுத்த வரை பொது விற்பனை வரி மூலம் வருகிற வருவாயைத் தான் மிகவும் நம்பியிருக்கும் சூழல் இருக்கும் காரணத்தால் மிகுந்த ஆய்வுக்குப் பிறகுதான் இந்த வரி விதிப்புகள் போடப்பட்டிருக்கின்றன.

இங்கு நமது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிடுகிறபோது தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மீது கூட இந்த வரி விதிப்பு இருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள்.

பழைய தங்கத்தை விற்கிறபோது அதற்கு வரி இருக்கிறது. அது ஏழைகளைப் பாதிக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அண்மையிலே, பழைய தங்கத்தை வாங்குகிறபோது போடப்படுகிற பர்ச்சேஸ் டாக்ஸை 4%லிருந்து 2% ஆகக் குறைத்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பருத்திக்கழிவு, பருத்தி நூல் கழிவு, செயற்கைப் பட்டுநூல், உறுதி நார் நூல் ஆகியவற்றின்மீது வரியை உயர்த்தியிருப்பதால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று திரு. பழனிவேலு அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கு அமலில் இல்லாத கர்நாடகம், கேரளா போன்ற மாநிங்களிலேகூட இந்த கழிவுப்பருத்தியின் மீது 6 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கேரளாவிலே 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் 1967 ஆம் ஆண்டில் 3 சதவீதமாக இருந்த நிலை 11 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மாற்றப்பட்டு 4 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நிலை கர்நாடகத்தில் உள்ள நிலையைவிட குறைவாகவும், கேரளாவிற்குச் சமமாகவும் இருக்கிறது. அந்த இரண்டு மாநிலங்களுக்கும் இருக்கிற மிகையான வருவாய், அங்கு மதுவிலக்கு அமலில் இல்லாத சூழலில்கூட, அந்த அளவிற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜரிகைக்கு போடப்பட்டுள்ளது ஏழைகளைப் பாதிப்பதாகும் என்று கூறினார்கள். அதற்கும் நான் அதே பதிலைத்தான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆந்திர மாநிலத்திலே அதற்கு 4 சதவீதமும் கர்நாடக மாநிலத்திலே 4 சதவீதமும், ஒரு முனை வரி ஜரிகைக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தமிழ்நாட்டிலேயும் இப்போது 4 சதவீதம் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிமிண்டுக்கு அதிக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது, அதுவும் ஏழைகளைப் பாதிக்கிறது என்று திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மதுவிலக்கு அமலில் இல்லாத மாநிலங்களில், கர்நாடக மாநிலத்தில் 10 சதவீதம் வரி இருக்கிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அழகர்சாமி அவர்களும், திரு. சுந்தரராஜ் அவர்களும் சோப்புக்கு வரி உயர்த்தியது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும், அது ஏழை எளிய மக்கள் பயன்படுத்துவது ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் இதிலும் அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்த்தால், கர்நாடகத்திலே 6 சதவீதமும் கேரளாவிலே 6 சதவீதமும் போடப்பட்டிருக்கிறது, ஆகவே வருவாய் குறைவாக இருக்கிற நம்முடைய மாநிலத்திலே தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் தான் இந்த வரி உயர்த்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. சாதிக் பாட்சா அவர்களும், திரு, லத்திப் அவர்களும் பதப்படுத்தப்பட்ட தோலுக்கு வரி உயர்வு செய்திருப்பது அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களைப் பாதிக்கும் என்று கூறினார்கள். 1967 ஆம் ஆண்டிலே 1½ சதவீதமாக



இருந்த இந்த வரி, 11 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் அது 2 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஆந்திராவிலே 4 சதவீதம், கர்நாடகத்திலே 2 சதவீதம் போடப்பட்டு இருக்கிறது. கேரளாவிலே 4 சதவீதம் இருக்கிறது. 11 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலே அரை சதவீதம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் அந்த அளவிற்கு அந்தத் தொழிலைப் பாதிக்காது என்று கருதுகிறேன். வேறு வழியில்லாத காரணத்தால் தான் இந்த வரி உயர்வு ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் சொல்லும் போது இந்த தோல் பதனிடும் தொழில் பார்மேடிவ் ஸ்டேஜில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஸ்டேஜில் இருப்பதால் தான் அண்டை மாநிலங்களில் இருப்பதைப் போல 4 சதவீதம் என்று போடாமல் 2 சதவீதமாகக் குறைத்துக் கொண்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அழகர்சாமி கூறுகிறபோது மாநில அரசின் வருவாயைப் பெருக்குவதற்கு வரி பாக்கிகளை வசூல் செய்தாலே போதும், புதிதாக வரிகள் தேவையில்லை, இருக்கின்ற வரிகளைக் கூட குறைக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். நடைமுறை சாத்தியம் எது என்பதைப் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்கு அமலில் இருக்கிறபோது விற்பனை வரியைக் குறைப்பது என்பது இயலாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் வரி பாக்கிகளை நல்லமுறையிலே வசூலிக்க தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. அந்த வகையிலேதான் திரு. கெய்வார் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு பொது விற்பனை வரி வசூலிலே உள்ள குறைபாடுகள், நடைமுறைப் படுத்துவதிலே உள்ள குறைபாடுகள், முறைகேடுகள் ஆகிய இவையெல்லாம் களைய அந்தக் குழு ஆய்ந்து வருகிறது. அந்தக் குழுவின் ஆய்வுக்குப் பிறகு பொது விற்பனை வரி சம்பந்தப்பட்ட முறைகேடுகள், குறைபாடுகள் ஆகியவைகளைக் களைய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது மது விலக்கை அமல் படுத்தும் தமிழகத்திற்கு மத்திய அரசு மானியமாக ஒரு தொகை தர இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு, மதுவிலக்கைக் கடைப்பிடிப்பதால் நிதி தர முன்வருமேயானல் அது வரவேற்கத் தக்கது, ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில், நான் பொறுப்பேற்றிருக்கின்ற சாலைப் போக்குவரத்துக்கு நான் ஏற்கெனவே கூறினேன்—ஏறக்குறைய 37,000 கிலோ மீட்டர்

[திரு. சி. பொன்னையன்] [1978 ஏப்ரல் 1

நீளமுள்ள சாலைகளைச் செப்பனிடவும், கல்வர்ட் போன்ற சிறு பாலங்களுக்கும் ஏறக்குறைய 60 கோடி ரூபாய் உடனடித் தேவையாக இருக்கிறது. 300 கோடி ரூபாய் நடப்பு மூன்றாண்டுகளுக்குத் தேவைப்படுகிறது. அப்படி மத்திய அரசு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களுக்கு உதவி தருமேயானால் அது மற்ற ஆக்கப்பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும். ஆனால் அதற்காக சேல்ஸ்டாக்ஸே போடக் கூடாது என்றால் மேலும் நல்ல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்ள வாய்ப்பில்லாமல் போய்விடும் என்று குறிப்பிட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:— தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

'In clause 3, the second schedule to the Principal Act in item (*b*) in Col. No. 2, after the words "Dressed hides and skins" add the words "including coloured skins".'

The amendment was duly seconded.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். $1\frac{1}{2}$ பர்செண்டை 2 பர்செண்டாகப் போடுவதில் வருத்தம் இல்லை. 'டிரஸ்ட் ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ்'-க்கு $1\frac{1}{2}$ பர்செண்டாக இருப்பதை 2 பர்செண்டாகப் போடுவதில் ஆட்சேபணை இல்லை,



1978 ஏப்ரல் 1] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

ஆனால் நான் சொல்வது இப்பொழுது, 'It includes coloured skins' என்ற முறையிலே வரி விதித்திருக்கிறார்கள். 'கலர்ட் ஸ்கின்ஸ்' இன்குளூட் செய்யப்பட்டு $1\frac{1}{2}$ பர்சென்டை 2 பர்செண்டாக ஆக்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் எனக்குள்ள குறைபாடு, இந்த கலர்ட் ஸ்கின்ஸ்-க்கு கமர்ஷியல் வேல்யூ இருக்கிறது என்று சொல்லி $1\frac{1}{2}$ பர்செண்ட் போடப்பட்டதை, சில அதிகாரிகள் 4 பர்செண்டாகப் போட்ட பிறகு அது சரியல்ல என்று சொல்லி ட்ரிபியூனலுக்குப் போய் அதில் வியாபாரிகளுக்குச் சாதமாக 75-இல் முடிவாகிவிட்டது. இப்பொழுது அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் மறுபடியும் பழையபடியே போட, அது 'அப்பலெட் அசிஸ்டன்ட் கமிஷனரு'க்குப் போய் பிறகு ட்ரிப்யூனல் வரை போகிறது. போர்ட் ஆஃப் ரெவின்யூவில், கமிஷனர் ஃபார் கமர்ஷியல் டாக்சஸ் என்று இருக்கிறார், ஒரு சர்க்குலர் போட்டு அவருக்கு வேறு வேலை இல்லை—இருக்கின்ற டிரிப்யூனலின் உத்தரவை ஒரு சர்க்குலரில் அனுப்பி ஏற்கெனவே முடிவாகி விட்டது என்று சொன்னால் போதும். சர்க்காரே ட்ரிப்யூனலின் முடிவை நடைமுறைக்குக் கொண்டுவராமல் இருப்பதுதான் கஷ்டம்.

இன்னொன்று, அந்த அதிகாரிகளுக்கு நடைமுறைக்காகக் கொடுக்கப்பட்ட Manual-இல் 'It includes coloured skins' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது கலர்ட் ஸ்கின்ஸைத் தனிமைப்படுத்துவது சரியல்ல என்பதுதான் என் கோரிக்கை, விருப்பம். கலர்ட் ஸ்கின்ஸ் இன்குளூட்ஸ் என்று திருத்தக்கூட வேண்டியதில்லை, அமைச்சரவர்கள் வாயைத் திறந்து சொல்லிவிட்டால் போதும், அதை அஷ்யூரன்ஸ்-ஆக ஏற்றுக் கொண்டு என்னுடைய திருத்தத்தைக் கூடத் திரும்பப் பெற்றுக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வரி விதிப்பு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல் நடைமுறையில் அதிகாரிகளால் ஏற்படுகின்ற குறைபாடுகள் கண்டிப்பாகக் களையப்பட வேண்டுமென்று நான் ஏற்றுக்கொள்கிறேன். அரசினுடைய எண்ணங்களைக் கடைப்பிடிக்கும்போது, சிக்கல்கள் ஏற்படுத்தாதவாறு, கண்டிப்பாக நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

"பிரிவு 1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்திருக்கிற —

> 'In clause 1, sub-clause (2), for the words and figures "21st February 1978," the words and figures "1st April 1978" shall be substituted.'

என்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அதிலே இருக்கிற கஷ்டம் பற்றி வியாபாரிகள் மகாநாட்டிலும் சொல்லி இருக்கிறார்கள். வியாபாரிகள் ஆண்டுக்கிடையிலே, அதாவது நிதி ஆண்டு முடிவிற்குள்ளாக, மாற்றம் செய்வதால் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு கவனித்து 1-4-1978—லேயிருந்து இந்தச் சட்டம் வருவதாகத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த ஆண்டு முடியவில்லையென்று சொன்னால், அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, அதிகாரிகள் மூலம் இனிமேல் இதுபோன்ற வரிவிதிப்பை 1.4-லே, ஆண்டு துவங்குகிறபொழுது வரி விதிப்புப் போட வேண்டுமென்று கேட்டு என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய திருத்தத்தை அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லையென்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே, அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிற விதிமுறைகளை மாற்றுவதற்கில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

)வாக்கெடுப்பின்போது திரு. துரை முருகன் தனது இருக்கையில் இல்லாமல், பக்கத்து பிளாக்கில் அமர்ந்திருந்தார்)



திரு. எஸ். ஆர். இராதா : பாய்ன்ட் ஆப் ஆர்டர். பேரவைத் துணைத் தலைவரவர்களே, குரல் வாக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. வாக்கெடுப்பின் போது ஒவ்வொருவரும் அவரவர்களுடைய இருக்கையிலே இருந்து அளிக்கும் வாக்கைக் குரல் மூலம் பதிவு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் இடம் மாறி உட்கார்ந்து கொண்டு, அவருடைய குரலைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அவருக்குப் பக்கத்திலே இரண்டு மூன்று நண்பர்கள், வின்சென்ட், மணிமாறன் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய இடம் அதுவல்ல. மாண்புமிகு இராதா முதலில் தன்னுடைய முதுகைப் பார்த்து விட்டுப் பேசவேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துரை முருகன் வேறு பககத்திலே உட்கார்ந்தார். ஆனால் இராதா உங்கள் பக்கத்திலே 4, 5 பேரை வைத்திருக்கிறீர்கள். (சிரிப்பு)

முகப்புரை, நீண்ட தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 'தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1978) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[பிற்பகல் 12-20]

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### ஆ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

## (8) அரசினர் சட்ட முன்வடிவுகள். தொடர்ச்சி

## (ஈ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள (திருத்த) சட்டமுன்வடிவு (ச. பே. சமு- எண் 9/78)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.'' என்று முன்மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இது மிக முக்கியமான ஒரு மானியம் என்பதை இந்த மன்றம் மிக நன்ருக அறியும். இந்த மசோதாவிற்குப் பின்ஞல்தான் நேரடியாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிற முறை இருக்கிறது, அதற்குப் பின்னலே மாநகராட்சிகளுக்கு வரும்.. ..

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஒன்றியத் தலைவர்களை நேரடியாக தேர்ந்தெடுக்கும் சட்டம் ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது.

திரு. க. சுப்பு : ஆகவே இது மிகவும் அடிப்படையான பிரச்சினை என்ற காரணத்தால் நேரடியாக தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டு வந்திருக்கிருர்கள். ஒன்று பாராளுமன்றத்தில் ஜனநாயக முறையில் இப்போது வைத்திருக்கிற முறையை ஒட்டியதாக இருக்க வேண்டும். அல்லது அமெரிக்காவில் இருக்கிற குடியரசுத் தலைவர் தேர்தலை ஒட்டியதாக இருக்க வேண்டும். இல்லை என்ருல் பிரான்சு நாட்டில் உள்ள முறையை ஒட்டியதாக இருக்க வேண்டும். அதை விட்டு திரிசங்கு சொர்க்கத்தை சமர்ப்பித்ததுபோல இந்தக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிருர்கள்.

நாங்கள் உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்றுதான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இங்கே தேர்தல்களே நடத்தப்படவில்லை. நீங்கள் பதவியேற்று 8 மாதங்கள் ஆகியும் ஊராட்சி ஒன்றியங்களிலே தலைவர் இல்லை, நகராட்சிகளிலே தலைவர் இல்லை. மாநகராட்சிகளிலே தலைவர் இல்லை. ஆனல் உள்ளாட்சித் துறை இருக்கிறது. அதற்கு ஒரு அமைச்சர் இருக்கிருர் என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. எனவே தான் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று கேட்பதே

'1978 சனவரி 9ஆம் தேதிய தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



துரிதமாக அதிகாரம் படைத்த அந்தத் தலைவர்கள் சுதந்திரமாக செயலாற்ற வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களை சுதந்திரமாக செயலாற்ற அனுமதிக்க வேண்டும். எனவே தேர்தலை துரிதமாக நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனல் இன்றைக்குக் கொண்டுவரக்கூடிய மசோதாவின் கருத்து உள்நோக்கம்—என்னவென்ருல், இதன் அடிப்படையிலே தேர்தல் நடக்குமானல், நகராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக செயல்பட முடியாது. ஒவ்வொரு கூட்டத்திலும் அரசாங்கத்தினுடைய ஆளுகைக்குட்பட்டுத்தான் அது இருக்கும். எதுவாக இருந்தாலும் அரசாங்கம் தனது அதிகாரத்தை இருக்குப்பிடியிலே் கொண்டு வந்து வைத்திருக்கும் தேர்தலை நடத்திஞல் தலைவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் ஆக்குவோம் என்ற முறையிலே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே கொண்டு வரப்படவில்லை.

உறுப்பினர்கள் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தலைவர் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதிலே தலைவர் பதவி பறிபோகும். அப்படிப் பறிபோனல் அவர் உறுப்பினராக இருக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்களை விட அந்தஸ்தில் குறைவா அவர். 2/3 மெஜாரிட்டி இருந்தால் அவரை ரிமூவ் பண்ணிவிடலாம். அல்லது அவர்மீது பல குற்றச்சாட்டுக்களை சொல்லி நீக்கலாம். நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி நீக்கலாம். ஆனல் அதுவும் அரசாங்கத்தின் ஒப்புதலோடுதான் நீக்கமுடியும். இந்தக் கூட்டத்திற்கு யார் தலைமை தாங்குவார்கள். ரீஜினல் இன்ஸ்பெக்டர் தான் தலைமை தாங்குவார். இவர் யாருடைய கன்ட்ரோல்? மக்களுடைய கன்ட்ரோலா, இல்லை கவுன்சில் கன்ட்ரோலா, அதுவும் மில்லை. இந்தக் கூட்டத்தில் சேர்மன் தலைமை தாங்க முடியாது, வேறு யாரும் தலைமை தாங்க முடியாது. ரீஜினல் இன்ஸ்பெக்டர்தான் தலைமை தாங்க முடியும். 2/3 நபர்கள் கருத்துக்களைச் சொல்லி, பதிவு செய்யப்பட்டு, நீக்குகிற தீர்மானம் கொண்டு வரப்படும். அந்தத் தீர்மானத்தை அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். அரசாங்கம் அவர் விலக்கப்பட்டதற்காக காரணம் கேட்கும். அந்தக் காரணம் அரசாங்கத்திற்கு திருப்தியாக இருக்குமானல் அவரே கன்டினியூ பண்ணலாம். அரசாங்கத்திற்கு திருப்தியாக இல்லை என்ருல் பதவி விலகலாம். அப்படிப்பட்ட நிலையில் அந்தத் தலைவர்கள் யாருடைய கான்பிடன்டை பெற வேண்டும் என்று சொன்ஞல், உறுப்பினர்கள் கான்பிடன்டை அல்ல. அரசாங்கத்தின் நம்பிக்கையைப் பெற்றவராக இருக்கவேண்டும். அவர்கள்தான் சேர்மஞக இருக்கமுடியுமே தவிர மற்றவர்கள் இருக்க முடியாது.

அரசாங்கத்தின் சொல்லுக்கு கட்டுப்படாத யாரையாவது மக்கள் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் தலைவராக நீடிக்கமாட்டார்கள். 3-ல் 2 பங்கு மெஜாரிட்டி உறுப்பினர்கள் அவர் பேரில் ஆட்சே

பகரமானகருத்துக்களை ரிகார்டு செய்யலாம். அவர்கள் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பலாம். அரசாங்கம் தற்காலிக தலைவர் போடலாம். அவர் 3 மாதம் பதவியில் இருக்கலாம். அந்த 3 மாத கால பதவியில் இருந்ததை அவர் பயன்படுத்தி பதவிக்கு வரலாம்.

ஆனால் ஒரு தலைவர் ரிமூவ் செய்யப்பட்டு விட்டால், அவர் கவுன்சிலராகக் கூட இருக்கமுடியாது. அவர் உறுப்பினராகக்கூட தகுதிபெற மாட்டார். சேர்மனாக இருந்தவர் என்னதான் நல்ல காரியம் செய்தாலும், அரசாங்கத்திற்கு விரோதமாக இருக்கிறார் என்றால், அரசாங்கத்தின் கடூரமான கருணைப் பார்வையில் இருந்து தப்ப முடியாது. அவரை நீக்கியே தீருவோம் என்று வைத்து இருக்கிறீர்கள்.

நான் கேட்க விரும்புவது எல்லாம், அவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதற்கான விளக்கங்களை எய்ம்ஸ் அண்ட் ஆப்ஜெக்ட்டில் போட்டிருக்கிறீர்கள், அதற்கு இது மிகவும் பொருத்தமற்ற முறையில் இருக்கிறது. The direct election of President of Panchayats has become popular ஆனால் it has become most unpopular. மேலும் என்ன சொல்கிறார்கள். The panchayats are functioning without any problem இதுதான் ப்ராப்ளம். இந்த மாதிரி பஞ்சாயத்துகளிலே நேரடியாக தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். அது பாப்புலராக இருக்கிறது. எங்கே இருக்கிறது ? பல பஞ்சாயத்துக்கள் இயங்கவில்லை. தலைவர்கள் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்கிறார்கள். கூட்டம் கூட்டுவது இல்லை. அதற்கு எந்தக் காரணத்தையும் காட்டுவதும் இல்லை. இதை பாபுலர் என்று சொன்னால், என்ன செய்வது. நீங்கள் இதிலே உள்ள குறைகளை ரிமூவ் செய்ய வேண்டும். ஸ்மூத் பங்ஷனிங் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதைவிட தவறான கருத்து வேறு என்ன இருக்கமுடியும். அடுத்து,

> 'it has eliminated the difficulties and evils of indirect election, such as corruption, lifting and kidnapping of members, harassment and frictions;

என்று சொல்லியிருக்கிறீர்கள். இது எல்லா இடத்திலும் நடக்கிறது. அசெம்பிளி எலெக்ஷனில் நடக்கிறது. எம். எல். ஏ. க்கள் கட்சி மாறுவது கிடையாதா ? மாற்றிக்கொண்டே இருக்கிறாகள். அதை வைத்துக் கொண்டு எலெக்ஷன் முறை மாற்றப்பட வேண்டும என்று சொல்ல முடியுமா ? அது எல்லாம் நல்ல கருத்தாக இருக்காது.

ஆகவே, இவற்றை நல்ல முறைய்ல் பரிசீலிக்க வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால், ரைட் டுரிகால் என்ற கொள்கையை நீங்கள் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். அவர் 5 ஆண்டு காலம் என்ன தவறு வேண்டுமானாலும் செய்யலாம்,



திரும்ப அழைக்கக்கூடாது என்பதற்கு பதிலாக அவர் செய்கிற தவறைச் சுட்டிக் காட்டி அவரைத் திரும்ப மக்கள் அழைக்கலாம் என்று முறை வைத்து இருக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தவறாக நடக்கிறார்கள் என்று கருதினால் அவர்களை ராசினாமா செய்யவேண்டும் என்று பேரணி நடத்தி பெயர் பெற்றவர்கள் நீங்கள், அப்படிப்பட்ட நல்ல அடிப்படையில் கொள்கை வைத்துள்ள நீங்கள், ரைட் டு ரிகால், இந்த தலைவர் பதவிகளுக்கும் வைத்தால் பொருத்தமாக இருக்கும். தலைவர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, 3-ல் 2 பங்கு உறுப்பினர்கள் அவரை ரிமூவ் செய்ய வேண்டும் என்று தீர்மானம் வந்த பிறகு அதை மக்கள் மத்தியில் வைத்து ரெபரேண்டம் எடுக்க வேண்டும். ஒரு முறை தான் கொண்டுவர முடியும் என்று வையுங்கள். அப்போதுதான் இன்னொரு முறை கொண்டு வர முடியாது என்பதால் கவனமாக இருப்பார்கள். அந்த ரெபரென்டத்தில் மக்கள் அந்த உறுப்பினர்கள் செய்தது சரி என்று ஏற்றுக்கொண்டால், அவர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்படலாம். ஆனால் அந்த தலைவரை நீக்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாது.

ஒரு அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாதத்தில் மக்கள் செல்வாக்கை இழந்து விடுகிறது. இப்போது எலெக்ஷன் வைத்தால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்படமாட்டீர்கள். ஒரு அரசாங்கத்திற்கே 6 மாதம் கழிந்த பிறகு செல்வாக்கு போய்விடுகிறது என்று சொன்னால், அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது நகராட்சித் தலைவரை நீக்குவதற்கு, இன்றுள்ள சூழ்நிலையில் தேர்தல் வைத்தால் நிச்சயமாக வரமுடியாது என்பது உங்களுக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். ஆகவே, உங்களுக்கு என்ன அதிகாாம் இருக்கிறது, நகராட்சித் தலைவரை நீக்குவதற்கு? ரெபரென்டம் வையுங்கள். முனிசிபல் சேர்மனாக வர வேண்டும் என்றால் நல்ல மக்கள் பலம் பெற்று இருக்கவேண்டும் என்று வையுங்கள். 50% ஓட்டு வாங்கியிருக்கவேண்டும் என்று வையுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் எம். எல். ஏ. க்கள் மாறிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தன்னைப் பற்றி அவர் கருதிக்கொண்டு இங்கே பேசுகிறார்களா ? நான் வேண்டுமானால், என் தொகுதியில் மறுபடியும் நிற்கிறேன், அவர் மறுபடியும் அவர் தொகுதியில் நிற்கட்டும், யார் ஜெயிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

திரு. க. சுப்பு : என்னைப் பற்றி அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு இராமசந்திரன், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் கட்சிமாறி வந்து இருக்கிறார்கள் என்று சொல்லி அவமானப்படுத்த வேண்டாம். ஒரு கட்சியைக் கலைத்து விட்டு இன்னொரு கட்சிக்குச் செல்கிறவர்கள் கூட இருக்கிறார்கள்.

(திரு. துரை கோவிந்தராசன் எழுந்தார்)

நான் உங்களையும் சேர்த்து சொல்ல வேண்டுமா ?

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இருக்கும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கட்சி மாறி வந்திருப்பதைச் சொன்னார்கள். திராவிட இயக்கத்தின் உண்மையான திராவிட முன்னேற்றக் கழகம், பேரறிஞர் அண்ணா அவர்களால் துவங்கப்பட்ட முன்னேற்றக் கழகத்தில் தான் இப்போது எல்லோரும் இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சட்டமுன்வடிவை விளக்கிப் பேசுவதில் வல்லவர். ஆகையால் சட்ட மசோதாவை விளக்கி பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என்னைப்பற்றிச் சொன்ன காரணத்தால் சொல்கிறேன். நான் வெளியேற்றப்பட்டவனே தவிர வெளியேறியவன் அல்ல.

திரு. க. சுப்பு : நீங்களும் சொல்லலாம். நானும் சொல்லலாம், இப்படி எல்லோரும் சொல்லலாம். இது திராவிட இயக்கம் என்று சொன்னார்கள். அது இந்தியா பூராவும் விரிந்துவிட்டதே. இன்றைக்கு இந்தியா முழுக்க நீங்கள் விரித்து விட்டீர்கள். உலகம் பூராவும் விரித்தாலும் விரித்து விடுவீர்கள். அதற்கும் உங்களுக்கு ஆள் இருக்கும். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை.

ஒரு அரசாங்கத்தை அமைக்கும்போது, ஜனதா அரசு இன்றைக்கு வந்திருக்கிறது. காங்கிரஸ் அரசு இருந்தது. காங்கிரஸ் இன்றைக்கு காங்கிரஸ், காங்கிரஸ்-ஐ என்று போயிருக்கிறது, இன்னும் எத்தனையாகப் போகும் என்பது யாருக்கும் தெரியாது. நான் அந்த விவகாரங்களுக்குள் போகவில்லை ; அதைப்பற்றிக் குற்றமும் சொல்லவில்லை. அது வேறு பிரச்சினை. ஆனால் அப்படிப் போவது ஒரு நல்ல நிலைமை அல்ல. எந்த சர்க்காரிலும் குறைபாடு இருக்கும். அதைப்பற்றியும் நான் ஒன்றும் சொல்லவில்லை.

இந்த உள்ளாட்சித் துறையில் நாம் எடுத்து வைக்கின்ற அடி சரியானதுதானா என்பதைப் பார்க்க வேண்டும். அதிகமான அதிகாரத்தை அதிகாரிகளிடம் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தால் இந்த நிர்வாகம் செம்மையாக இயங்க முடியாது. சேர்மென் மேல் நம்பிக்கை இல்லாவிட்டாலும் அரசாங்கம் நினைத்தால் அவரை பதவியில் வைத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அவர் என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று நினைக்கிறாரோ அதை எடுத்துக்கொள்ளலாம்.



அரசாங்கம் அவரை விரும்பினால் வைத்துக் கொள்ளலாம், விரும்பாவிட்டால் போகச் சொல்லலாம் என்ற நிலைமை வந்தால், அவர் அரசாங்கம் என்ன சொல்கிறதோ அதைத்தான் செய்வார், அப்படியானால் அவர் மக்கள் பிரதிநிதியாக அங்கே செயல்பட முடியாது. அவர் கவுன்சிலுக்கு விரோதமாக நடக்கிறார் என்றால், நாம் எந்த அடிப்படையில் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று விரும்புகிறோமோ அது இல்லை.

ஒரு சேர்மென் தவறு செய்கிறார், விரோதமாகப் போகிறார் என்று தெரிந்தால் அவரைப் பதவியிலிருந்து நீக்கும் அதே நேரத்தில் மறுபடியும் தேர்தல் வையுங்கள் ; தேர்தல் வைத்து எலக்ஷன் மூலம் ஒருவரை தேர்ந்தெடுத்து சேர்மெனை நியமிக்கலாம். எலெக்ஷனில் 50 சதவிகிதத்திற்கு மேல் ஓட்டு வாங்கக்கூடிய ஒருவரை சேர்மெனை வைத்துக்கொள்ளலாம். 'சீரியஸ் லாப்ஸ்' இருக்குமானால் 2/3 மெஜாரிட்டி கொண்டுவரலாம். அப்படி 2/3 மெஜாரிட்டி என்று வந்த பிறகு அரசாங்கம் பரிசிலனை செய்வது என்பது நியாயம்தானா ? அதைப் பரிசிலிக்க அரசாங்கம் அல்லது அரசாங்க அதிகாரிகள் வேண்டாம். ஒரு நீதிபதியைப் போடுங்கள். 'ஜுடியஷியரி ஆபீசர்ஸ்' போடப்பட்டதால்தான் ஓரளவு நியாயம் கிடைக்கும். நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். No power on earth is above law. லா படித்தவர்கள் யார் என்பதை மறந்துவிட்டார்கள். நேற்று சொல்லியிருக்கிறார்கள். No power on earth is above law என்று சட்டத்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 2/3 மெஜாரிட்டி என்ற பிறகு அதைப் பரிசிலிக்க ஜுடிஷியல் அதாரிட்டிக்கு அனுப்புங்கள். அதிலே ஏதாவது கஷ்டம் இருந்தால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். சுருக்கமாகச் சொல்லப் போனால் அவசரகோலத்தில் அள்ளித் தெளித்தது போல ஒரு ஜனநாயக அமைப்புக்கு விரோதமாக இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டியதில்லை.

நீங்கள் எலக்ஷன் நடத்தப்போவதில்லை. அது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அதற்கு உண்டான காரியங்கள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இந்த மசோதாவிலே நீங்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால் சேர்மென் பதவி போன பின்னால் எங்கே போவார் ? தெருவுக்குத்தான் போவார். ஏனென்றால் அதன் பிறகு அவருக்கு கவுன்சிலில் இடம் இல்லை, ஏனென்றால் அவர் கவுன்சில் மெம்பர் அல்ல. ஒரு முனிசிபல் ஏரியாவில் அதிகமாக ஓட்டு வாங்கி, வரக்கூடிய சேர்மெனுக்கு கவுன்சிலில் இடமில்லை. இப்படி ஒரு சட்டம் வந்தால் அவர்கள் கதி என்ன என்று எண்ணிப்பார்க்க வேண்டாமா ? இது கோர்ட்டுக்குப் போனால் நிற்காது. ஒருவேளை நீங்கள் அங்கேயும் நிற்க வைப்பீர்கள். அதனால் கோர்ட்டுக்குப்

போகவேண்டாம். ஜுடியஷியல் அதிகாரியை, ஒரு நீதிபதியைப் போட்டு, விசாரித்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருது கிறேன்.

மொத்தத்தில் இதைப் பற்றி தீர யோசித்து, நல்ல முறையில் கொண்வரவேண்டுமென்றால் இந்த மசோதாவை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இப்போதைய நிலையில் இது ஒரு படுபயங்கரமான மசோதா, பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு மசோதா, ஜனநாயக உணர்வுகளுக்கு இடம் இல்லாத ஒரு மசோதாவாக இருக்கிறது. இது ஜனநாயகத்தையே குழிதோண்டி புதைக்கும் மசோதா, இந்த மசோதாவை நிறைவேற்றுவது சரியல்ல என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இன்றைய தினம் மாநகராட்சியினுடைய சட்ட மசோதாவை ஆதரித்து வரவேற்று பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மசோதாவிலே நல்ல பல அம்சங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வரவேற்றுக் கூறியதை நாம் அறிவோம். ஆனால் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சுப்பு அவர்கள் இந்த மசோதாவைப்பற்றி தன்னுடையக் கருத்துக் களைச் சொல்லும் போது ஜனநாயகத்தைப் படுகொலை செய்யக் கூடிய மாதிரி இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நேரடித் தேர்தலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கருத்து ஜனநாய கத்தைப் படுகொலை செய்கின்ற கருத்து என்று நினைக்கும் போது ஜனநாயகத்தை அவர் எந்த அளவுக்கு விமர்சனம் செய்கிறார் என்பதை நான் புரிந்து கொள்ளுகின்ற நேரத்தில் உண்மையாகவே தான் வேதனை அடைகிறேன். நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப் படும் இந்த முறை வேண்டாம் என்று அவர் விவாதித்தால் உண்மையிலேயே நான் சொல்கிறேன், சர்வாதிகாரத்தோடு இருக்கின்ற ஒரு நிலையினைத்தான் அவர் உருவாக்க விரும்புகிறார் என்பதை நான் அவரிடம் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவருடைய வாதத் திறமையால் பல நல்ல கருத்துக்களை எடுத்து வைப்பார் என்று கருதினேன். நான் கூட அச்சப்பட்டேன். நல்ல பல கருத்துக்களை அதாவது நான் சொல்ல முடியாததை எல்லாம் சுப்பு போன்றவர்கள் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அந்தக் கருத்துக்களை சொல்ல ஏனோ சுப்பு அவர்கள் மறுத்து விட்டார்கள் கடந்த காலத்திலே நடைபெற்ற தேர்தல்களில் பலர் கடத்திக் கொண்டு போகப்பட்டதை எல்லாம் நாடு நன்றாக அறியும். மேலும்



நகராட்சி மன்றத் தலைவராக தேர்தெடுக்கப்பட வேண்டும் என்று யாராவது நினைத்தால் அவர்கள் பெரிய பணக்காரர்களாக இருந்தால்தான் முடியும் என்ற அந்த நிலை உருவாகி இருந்தது. செல்வம் படைத்தவர்களுக்குத்தான் நகராட்சியிலே இடம் உண்டு என்ற நிலை இருந்தது. குச்சு வீடுகளிலே இருப்பவர்கள் தலைவராக வர முடியாது என்ற நிலைமை இருந்தது. அதையெல்லாம் நாம் மறந்து விடக்கூடாது.

இன்றைய தினம் இந்த மசோதா குச்சு வீடு, கூரை வீடு களிலேயெல்லாம் இருப்பவர்கள் கூட தலைவராக ஆக முடியும் என்று மாற்றி இருப்பது ஜனநாயகத்தின் முதற்படி என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால் தலைவர் பதவிக்கு நிற்பவர்களை எல்லாம் கடத்திக்கொண்டு போனார்கள். அவர்களைத் தூக்கிக் கொண்டு போய் குற்றாலம், ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளிலே கொண்டு வைத்துக்கொண்டு அவர்களிடம் வெள்ளைப் பேப்பரிலே கையெழுத்து வாங்கினார்கள். வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்துப்போட்டவர்கள் இன்று கோர்ட்டுக்குச் செல்லும் நிலையினை எல்லாம் நாம் பார்க்கின்றோம். இது போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் முன்பு நாட்டிலே நடைபெற்றது. இந்த மாதிரி செயல்களை எல்லாம் மாற்றுவதற்காகவே இந்த நேரடித் தேர்தல்.

இதனை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதை ஜனநாயக முறை இல்லை என்று சொன்னால் நீங்கள் இதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நினைக்கத் தோன்று கிறது. வெள்ளைப் பேப்பரிலே கையெழுத்துப்போட்டு இன்றைய தினம் வழக்கு மன்றங்களிலே வழக்குகளை நடத்திக்கொண்டிருக் கிறார்கள். பணம் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டுப் போட மறுத்த காரணத்தால் இன்றையதினம் எத்தனைப் பேர் ஐ. பி. கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட நிலைகளை எல்லாம் மாற்றி ஜனநாயகத்தை வளர்ப்பதற்குத் தான் இந்த மசோதா வழி செய்கிறது என்பதை நினைக்கின்ற நேரத்தில் உள்ளபடியே நாம் பெருமகிழ்ச்சி கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முறையின் அடிப்படை எங்கே இருந்து வருகிறது என்பதை எல்லாம் நாம் நினைத்துப் பார்க்கின்ற நேரத்தில் உலக நாடுகளிலே, ஏன் அமெரிக்காவிலே கூட ஜனாதிபதி இப்படித்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படி நேரடித் தேர்தல் ஒவ்வொரு நாட்டிலேயும் வரவேண்டும் என்பதுதான் எல்லோருடைய எண்ணமுமாகும். இது பஞ்சாயத்துத் தேர்தல்களிலே இருந்தது. இன்றைய தினம் நகராட்சி, மாநகராட்சி தேர்தலுக்கு வந்திருக்கிறது. இது படிப்படியாக உயரவேண்டும்.

(திரு. கே. பண்ணை சேதுராம்) [1978 ஏப்ரல் 1

நகராட்சித் தேர்தலில் மட்டும் இது இருந்துவிடக்கூடாது, என்பதுதான் என்னுடைய எண்ணம். இன்னும் சொல்லப்போனால் இந்தி"த் துணைக் கண்டத்திலே இருக்கும் ஜனாதிபதி கூட ஒப்படித் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதலமைச்சராக தேர்ந்தெடுக் கப் படக்கூடியவர்கள் கூட நேரடித் தேர்தல் மூலமாகத் தேர்ந் தெடுக்கப்படுவதாக இருந்தால் நிச்சயமாக அது நல்ல ஜனநாயக மாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

அடுத்து இந்த மசோதாவில் ஹரிஜனங்களுக்குச் சரியான முறையில் இடம் ஒதுக்கப்படவில்லை என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. ஹரிஜனங்களுக்கென்று இந்த கான்ஸ்டிட்யூஷனில் கொடுக்கப்பட்ட பிரகாரம் தொகுதிகள் எல்லாம் மாநகராட்சி தேர்தலிலும், நகராட்சித் தேர்தலிலும் அவர்களுக்கென்று தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும்.

(பிற்பகல் 12-40)

துணைத் தலைவர் யாராக இருக்கவேண்டும் என்பது பற்றிய ஷரத்துக்கள் மசோதாவில் சரியாக இல்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் கவனத்தில் கொண்டு அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் வருகிறபோது, எப்படி தூக்கி யெறியப்படுவார்கள் என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அச்சத்தைப் பற்றி தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தூக்கியெறியப்படுவார்கள் நம்பிக்கையில்லாவிட்டால் என்பதற்கு மூன்று கட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

முதல் கட்டத்தில் இதிலே மூன்றில் ஒரு பங்கு பேர்கள் கையெழுத்து இடவேண்டும். இரண்டாவது கட்டத்தில் மூன்றில் இரண்டு பங்குபேர்கள் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். அப்படி நிறைவேற்றியவுடன் அதை நிறைவேற்றாமல் அரசுக்கு வந்த பிறகு அரசு ஆணை மூலமாக நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்துக்கள் எல்லாம் வரவேற்கத்தக்கவை என்று கூறி இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கட்சித் தலைவர் களும் பேச வேண்டுமென்று இருப்பதால் — இன்னும் இரண்டு பில்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது — சுருக்கமாகப் பேசுங் கள். திரு. கிருஷ்ணன்.



1978 ஏப்ரல் 1]

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, முனிசிபல் தேர்தல்களில் கவுன்சிலர்களைக் கொண்டு தேர்தல் நடத்துவதில் பல்வேறு தில்லுமுல்லுகள் நடந்துள்ளன என்று ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில் குறிப்பிட்டிருப்பது உண்மை தான். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது இன்று ஜனநாயகத்தை விரிவுபடுத்துகிற முறையில், இந்த முறையில் தேர்தல் நடத்துகிற முறையை நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்தில் நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்பு கிறேன். எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் கூறியது போல் தேர்தலில் எம். எல். ஏ.க்கள், எம். பி. க்கள் இவர்களுக்கு ரிசர்வேஷன் கொடுக்கிற அடிப்படையில் இந்த முனிசிபல் தேர்தல் களில் அப்படிப்பட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இதுபற்றி இந்தச் சட்டமன்றத்தில் பல்வேறு நேரங்களில் பேசுகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பரிசீலனையில் உள்ளது என்று சொன்னார்கள். ஆனால் இங்கே அதைப்பற்றி எந்த ஒரு வார்த்தை யும் கூறப்படவில்லை.

ஆனால் இப்போதும் நேரம் போய்விடவில்லை. 100 முனிசிப் பாலிட்டிகள் இருக்கிறன. அதில் 18 முனிசிபாலிட்டிகளில் தாழ்த் தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைத்தான் அங்கே தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்று நோட்டிபிகேஷன் கொடுத்தால் போதுமானதாக இருக்கும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதோடு தேர்தல்களில் நிற்க வேண்டியவர்கள் பற்றிய டிஸ்க் வாலிபிக்கேஷன்ஸ் என்ன என்பது பற்றி — ஏற்கனவே பஞ்சாயத்து தேர்தல்களில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் — இந்திய குடியுரிமைச் சட்டத்தின்கீழ் — தண்டிக்கப்படுகிறவர்கள் தேர்தல் களில் நிற்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த முனிசிபல் தேர்தல்களிலும், சேர்மன் அல்லது கவுன்சிலர்களாக நிற்க வேண்டியவர்கள் இந்த அடிப்படையில் டிஸ்க்வாலிபை செய்யப்படுவார்களா என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு சுப்பு அவர்கள் சொன்னபடி, இந்த முறையில் அரசுக்கு 'டிஸ்க்ரீஷன்' கடைசியில் போய்விடுகிறது. அந்தச் சூழ்நிலையில் ஜனநாயகம் எந்தளவிற்கு பறிக்கப்படும் என்ற அச்சம் எழுகிறது.

Clause 13, sub-clause (6) —இல்

"... due to non-cooperation of the councillors with the Chairman, the municipal council is not able to function, the State Government may, by notification, authorise the Chairman to perform, subject to the control of the State Government or any officer authorised by the State Government in this behalf, such of the duties imposed....

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே, அரசாங்கத்தின்கீழ் முழு அதிகாரத்தையும் கொண்டு போவது ஜனநாயக முறைதானு என்று கேட்க விரும்புகிறேன். கவுன்சிலர்கள் மூன்றில் ஒரு பங்கு கையெழுத்திட்டு தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று கொடுக்கிறபோது அதைக் கொடுக்க வேண்டியவர் ரீஜனல் இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிப்பாலிட்டீஸ். அப்படிக் கொடுக்கிறபோது அவர் எவ்வளவு நாட்களுக்குள் அந்தக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்ற டைம் லிமிட் இல்லை. கூட்டத்தை நடத்துவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக அத்தனை உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என்று மட்டும் இருக்கிறதே தவிர கொடுக்கப்பட்ட எவ்வளவு நாட்களுக்குள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. அதில் நிச்சயமாக சில குழப்பங்கள் எல்லாம் ஏற்படும்.

அதோடு கௌன்சில்கள் கூட்டப்பட்ட பிறகு என்ன ஏற்படும் என்பதைப்பற்றியும் சொல்லப்பட்டது. மினிட்ஸ் வைக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. மினிட்ஸ் காப்பியை எல்லா கௌன்சிலர்களுக்கும் கொடுக்கின்ற வகையில் இருக்கவேண்டும். போலீஸ் ஸ்டேஷனிலும் எஃப். ஐ. ஆர். காப்பியும் கோருகின்றவர்களுக்கு 'கொடுக்கவேண்டும். அதைப்போன்று 'காப்பி ஆப் தி மினிட்ஸ் எல்லா கௌன்சிலர்களுக்கும் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு செக்ஷன் 40—பி-9—ல் சொல்லப்பட்டிருப்பதில் கடைசியாக . . . .

The State Government shall, after considering-the views of the Council in this regard, by notice in writing require the Chairman to offer within a specified date of his explanation with respect to his acts of omission or commission mentioned in the notice. If the explanation is received within the specified date and State Government consider that the explanation is satisfatory they may drop further action with respect to the notice . . . .

ஆகவே இந்தக் கௌன்சிலால் முடிவு செய்யப்பட்டு, அதன் நகலை அரசாங்கத்திற்கு அனுப்பி, அரசாங்கம் சேர்மெனிடமிருந்து எக்ஸ்ப்ளனேஷன் கேட்கின்ற வகையில் இது அமைந்திருக்கிறது. பின்னல் அரசாங்கம் இதன் மீது முடிவு எடுக்கும். மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மென்னிடம் எக்ஸ்ப்ளனேஷன் கேட்கப்பட்டு, அதன் மீது அரசாங்கம் முடிவு செய்யும் என்பது ஜனநாயகத்தில் எந்த அளவுக்கு பயன்படும், எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, செக்ஷன் 7 க்ளாஸ் 2 பி அதில் இந்த பிரவிஸோ இருக்கிறது . . அதில் . . .



Provided further that if the Chairman has been continuously absent from jurisdiction for more than three months, the State Government shall in the manner prescribed appoint a person to perform the functions of the Chaiman

அதில் மூன்று மாதங்கள் (absence from jurisdiction / for more than
three months ) என்று மொட்டையாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.
மூன்று மாதங்கள் என்பது, தவிர்க்கப்பட முடியாத சில காரணங்
களால் ' ஆப்ஸென்ட்' ஆகலாம். சமீப காலத்தில் எத்தனையோ
பேர்கள் மிசா-வில் கைது செய்யப்பட்டார்கள். அப்படிப்பட்ட
சூழ்நிலையில் மூன்று மாதங்கள் ஆப்ஸெண்ட் என்று இருந்தால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர் பின்னல் கௌசிலுக்கு வர முடியாது
ஆகவே அந்த இடத்தில் . . .

absence / from jurisdictoin for more than three months என்று
இருக்கின்ற இடத்தில் without val d reason என்று பொருத்தப்
பட்டால் நன்ருக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டது போல், ரிசர்வேஷனைப் பொறுத்தவரையில், இருக்கின்ற
முனிசிபால்டிகளில் 20 சதவிகிதம் பேர்கள் தாழ்த்தப்பட்ட சமுதா
யத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று
சொல்லும்போது. இன்னின்ன இடங்களில் இந்த 2் சதவிகிதம்
பேர்கள்-தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுள்ளவர்கள் தேர்ந்தெடுக்
கப் படவேண்டும் என்று உத்தரவு போட வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நகராட்சி
மசோதாவின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல
விரும்புகிறேன்.

இந்த சமயத்தில் நேரிடையாக தலைவரை தேர்ந்தெடுக்க்
வேண்டும் என்ற முறையை கொண்டுவரவேண்டும் என்று நீண்ட
நாளாக தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் நினைத்
தார்கள். அதை இப்போது கொண்டுவந்தற்கு என்னுடைய
பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த நகராட்சி மன்ற தேர்தலில் ஒட்டுரிமை
21 வயதானவர்களுக்கு மட்டும் என்றிருப்பதை 18 வயதானவர்
களுக்கும் உண்டு என்று குறைத்தால் நன்ருக இருக்கும். ஏனெனி
ருல் அண்டை மாநிலத்தில் 18 ஆக குறைத்திருக்கிருர்கள்.

இந்த தேர்தலைப் பொறுத்தவரையில்—நீண்டகாலமாக நக
ராட்சி மன்றங்களில் தனி அதிகாரிகள் இருந்ததின் காரணமாக
பலவிதமான கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே சீக்கிர
மாக இந்தத் தேர்தலை கொண்டு வரவேண்டும் என்று இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் என்னென்ன நடந்தது என்பதையெல்லாம் சொல்லவேண்டியதில்லை. எவ்வளவோ பலாத்காரமான முறையில், தலைவர் தேர்தலின் போது அதிகமான பணங்கள், லஞ்சம், இப்படி முறைகேடான காரியங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அதோடு தங்கள் இஷ்டம்போல் தலைவரை தேர்ந்தெடுக்க முடியாமல்—தடுத்து நிறுத்தி வலுக்கட்டாயமாக தலைவர்களை தேர்ந்தெடுக்கவேண்டிய நிலைமையெல்லாம் இருந்தது.

(பிற்பகல் 12.50)

அந்த முறை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அதை மாற்ற வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் அப்படி கொண்டு வந்திருப்பதற்காக வரவேற்கிறேன்.

இன்னொரு விஷயம், மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொன்னார்கள். அதை பரிசீலனை செய்யவேண்டும். இன்றைக்கு ஒரு தலைவரைப் பதவியிலே இருந்து நீக்க வேண்டுமென்றால், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே அரசாங்கம் பரிசீலனை செய்து நீக்கக்கூடியதற்குப் பதிலாக, மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டுவரும் சந்தர்ப்பத்தில், அதை அந்த மக்களிடத்திலேயே திரும்பவும் ஒரு பரிசீலனைக்காக, மக்கள் யாரைத் தேர்ந்தெடுத்தார்களோ, அப்படி தேர்ந்தெடுத்த மக்களிடத்திலேயே அந்தத் தீர்மானத்தை வைத்து. நம்பிக்கை உண்டா, இல்லையா என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அந்த ஏற்பாடு மிகவும் நல்லமுறை, ஜனநாயக அடிப்படையில் அந்த மக்களைத் திருப்திபடுத்துவதாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவில் இருக்கின்ற மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதை வரவேற்பதோடு, அண்டை மாநிலத்திலே கேரளாவிலே செய்திருப்பதைப்போல் வயது வரம்பை 18 ஆக ஆக்கவேண்டுமென்றும், சீக்கிரமாக தேர்தலைக் கொண்டுவந்து, இந்த ஸ்பெஷல் ஆபீசர்களுக்குப் பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக ஆட்சி நடக்க வேண்டுமென்ற என் கருத்தைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை வரவேற்று, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உள்ளாட்சித்துறையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகர சபை அனைத்திற்கும் தலைவர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் இந்த மசோதாவானது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றது



இதுவரையில் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து, நகரசபை அங்கத்தினர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நேரங்களில் என்னென்ன குறைபாடுகள் இருந்தன என்பதைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இப்படி நேரடித் தேர்தல் இல்லை என்று சொன்னால், பணக்காரர்கள் மட்டும்தான் தலைவர்களாக வரக்கூடிய நிலைமைக்குப் பதிலாக, மக்களிடையே அதிக செல்வாக்கைப் பெற்றவர்களும் தலைவர்களாக வரக்கூடிய ஒரு வாய்ப்பை இந்த மசோதா வாயிலாக அமைகின்றது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே, உள்ளாட்சித் துறையிலே நடைபெறாமல் இருக்கின்ற அனைத்துத் தேர்தல்களும் நடைபெறுவதற்கான வழிகளைச் செய்யப் போவதாக அரசு பொறுப்பிலே இருக்கின்றவர்கள் ஏற்கனவே உறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால், மாதக்கணக்கில் பல்வேறு காரணங்களைக் காட்டி, தள்ளி வைத்துக்கொண்டே போகிறார்கள் என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் இந்த இலாகா அமைச்சர் அவர்கள் அழைத்து சில மாதங்களுக்கு முன்பாக, உடனடியாகத் தேர்தல்களை நடத்தவேண்டும், அதற்கான வழிமுறை அத்தனையும் முடிவு செய்யப் போவதாக, அந்தக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்திலே கூட சொன்னார்கள். ஓட்டுப் பேப்பர்கள் அதாவது வாக்குச் சீட்டுகள் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது போகின்ற போக்கைப் பார்க்கின்றபோது, எல்லா அமைப்புகளும் நாமினேட் பாடீஸ் போட்டுக்கொண்டு வரப்படுகின்றது. அது மட்டுமல்ல பஞ்சாயத்துக்களை பைபர்கேட் பண்ணித்தான், அதற்கு பிறகுதான் தேர்தல்கள் நடத்த முடியும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால், நிச்சயம் இந்த தேர்தல் நாம் எதிர் பார்க்கின்ற நேரத்தில் நடைபெறக் கூடிய சூழ்நிலை இல்லை என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

அப்படித் தள்ளிக்கொண்டு போவது நிச்சயமாக ஜனநாயகத்தை விரும்பி செயல்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம், இப்போதெல்லாம் உள்ளாட்சித் துறை, பஞ்சாயத்துக்களுக்கும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அதிகாரம் டில்லியில் குவிந்திருப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'டிபஃபர்கேஷன் ஆப் ப்வர்ஸ்' என்ற கொள்கையை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் வகையில்

அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள்; நம் மாநில முதலமைச்சர் அவர்கள் கூட குழுவில் அங்கத்தினராக இருக்கிறார்கள் என்பதை அறிவோம்.

அந்தக் குழுவின் கடமை என்னவென்றால் பல்வேறு மாநிலங்களில் இருக்கிற பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்துக்கள், நகரசபைகள் போன்றவை எவ்வாறு செயல்படுகின்றன, என்னென்ன மாறுதல்களை நாம் செய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அந்தக் குழு எதைப் பார்த்து அறிக்கை சமர்ப்பிக்க முடியும்? இங்கு எந்தப் பஞ்சாயத்துக்களும், நகரசபைகளும் செயல்படவில்லை, நெருக்கடி காலத்தில் அனைத்துப் பஞ்சாயத்துக்களும், நகரசபைகளும் கலைக்கப்பட்டு விட்டன. ஆகவே, அசோக் மேத்தா கமிட்டி நமது மாநிலத்தைப் பொறுத்தவரை எதுவும் சொல்ல வாய்ப்பு இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று எண்ணுகிறது என்றால், தேசத்தில் திட்டங்கள் ஏற்படுத்தி அமுலாக்கும்போது பொருளாதார முடிவுகளை எடுக்கிற அதிகாரங்கள் கூட பஞ்சாயத்துகளுக்கும் நகரசபைகளுக்கும் வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அந்த கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. நாம் தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போவது உண்மையில் சரியல்ல. அரசு உடனடியாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நகரசபைகளுக்கும் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்று அதற்கான சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் டெவலப்மென்ட் கவுன்சிலைக் பார்த்தால் அதிலே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இல்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தலைவராக இல்லை. மாறாக மாவட்ட கலெக்டர் தலைமை வகிக்கிறார். அது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. அதிலே மாற்றம் செய்ய அரசு முன்வரவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் அங்கம் வகிக்கின்ற அந்தக் குழுவில் தலைவர் அரசாங்க ஊழியர் என்றால் அது ஜனநாயக அமைப்புக்கு ஒத்ததாக இல்லை. ஆகவே, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் தலைமை வகிப்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அல்லது பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவராகத்தான் இருக்க வேண்டுமென்ற கொள்கை எடுத்து அதற்கான சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



கிளாஸ் 7-ல் நகரசபைத் தலைவர் பதவி காலியாகி இருக்குமென்று சொன்னால் உடனடியாக அரசு ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நகர சபைத் தலைவர் இடம் காலியானால் துணைத் தலைவர் அங்கே இருக்கிறார், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைவர், மற்ற அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அந்த நிலையில் அரசால்தலைவர் நியமிக்கப்படவேண்டிய அவசியம் என்ன? அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். தலைவர் இடம் காலியானால் துணைத் தலைவர் அந்தத் தலைவர் பொறுப்பை ஏற்றுச் செயலாற்றுவதுதான் முறை; அதற்குப் பதிலாக அரசு தன்னிச்சையாக நியமனம் செய்வது முறையாகாது என்று கூறி இந்த மசோதாவை வரவேற்று அமைகிறேன்.

(பிற்பகல் 1-00)

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய சீரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். பொதுவாகவே, அனைத்து உறுப்பினர்களும் என்று கூடச் சொல்லாம் என்று கருதுகிறேன், நேரடியாக நகர் மன்றத் தலைவர்களைத்தேர்ந்தெடுக்க வகைசெய்கிற இந்த சட்ட முன்வடிவை வரவேற்றிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒட்டுமொத்தமாகத் தாக்குதலைத் தொடுத்தாலுங்கூட அவர்களுக்கும் நான் ஒன்றை நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆளுநர் உரையிலே ஒன்றியங்களுக்கும் நகர்மன்றங்களுக்கும் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று அறிவித்தபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்த ஆளுநர் உரை விவாதத்தில் பேசுகின்றபோது அதை வரவேற்றிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்......

<u>திரு. க. சுப்பு:</u> பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதை நானும் வரவேற்கிறேன். ஆனால் நான் சொன்னது அவர்களை ரிமூவ் பண்ணவேண்டுமென்று வருகிறபோது அரசாங்கமே அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறது, அதைப் பற்றிச் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:</u> பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக அந்தத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலே மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை என்று அறிவித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த முறையின் மூலமாக எவ்வளவு பயன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் திரு. பண்ணைசேதுராம் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏழை

எளியோர் இத்தகைய தேர்தல்களில் நிற்பதற்கு வாய்ப்பு ஏற் பட்டிருக்கிறது. உறுப்பினர்களைக் கடத்துதல், அல்லது பணத் தைப் பயன்படுத்துதல் என்ற முறைகள் எல்லாம் இதன் மூலம் ஒரு முடிவுக்குக்கொண்டுவர பட்டிருக்கிறது என்ற கருத்தை அவர் கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுப்பு அவர்கள் பேசுகின்ற நேரத்திலே இந்தச் சட்டமுன்வடிவிலே என்ன என்ன குறைபாடு கள் இருக்கின்றன என்ற வகையிலே சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் குறிப்பிட்டது, இதை முடிவு செய் கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருப்பது தவறு என்று சொன் னார்கள். இதை முடிவு செய்கின்ற அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், மக்களால் தேர்ந் தெடுக்கப்படுகிற ஒரு தலைவர், தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர் களின் மனமாச்சரியத்தால், கசப்பால், காழ்ப்புணர்ச்சியால், அந்தத் தலைவருக்குத் தொல்லைகள் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவானால், அந்தத் தலைவருக்குத், மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட அந்தத் தலைவருக்கு, பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே தான் அரசாங்கம் அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு இருக்கிறது. தனக்குப் பிடிக்காத தலைவருக்கு எதிராக ஒரு ஆயுதமாக அரசு இதைப் பயன்படுத்தும் என்று யாரும் கருதவேணடாம் என்று கேட்டுக்கொள்கிறேன்,

இதிலே என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன; இதை நடை முறைப்படுத்துவதிலே என்ன என்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் நாம் இப்போது முடிவு செய்துவிட முடி யாது, எவ்வளவு தான் சிறந்த வழக்கறிஞர்களாக இருந்தாலும் சட்டங்கள் நடைமுறைக்கு வருகிற நேரத்திலேதான் அதிலே உள்ள சிக்கல்கள் என்ன என்ன என்பதையும் எந்த எந்த வகை யிலே அதைத் தவிர்க்கமுடியும் என்பதையும் கண்டறிய முடியும் தண்ணீரிலே இறங்காமல் நீச்சல் பழக முடியாது. ஆகவே நடைமுறைக்கு வருகிறபோது சிற்சில குறைபாடுகள் தோன்று மானால் அவைகளைத் திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது

ஏற்கெனவே ஊராட்சித் மன்றங்கள் அளவிலே இதை சோதனை செய்து பார்த்ததில் வெற்றிகண்டிருகிறது என்பதைத் தெ வித்துக் கொள்கிறேன். ஊாாட்சி மன்றங்களுக்கு எப்படி நேரடி யாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறோமோ அதைப்போன்று ஒன்றியங்களுக்கும் நகரமன்றங்களுக்கும் கொண்டுவருகிறோம் இதைப் முழுக்க முழுக்க அந்த மக்களுக்கே மீண்டும் அந்த அதி காரத்தைக் கொடுக்கலாம் என்ற நிலைமை வருமானால், ஒ நகர்மன்றத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிற போது மீண்டும் அந்த மக்களே அதைப்பற்றி முடிவுசெய்யவேண் மென்றால், ஆண்டு முழுவதும் தேர்தல்கள் தான் நடந்துகொண் டிருக்கும், நம்பிக்கையில்லாத்தீர்மானங்கள் கொண்டு வருவது



பிறகு தேர்தல்கள் நடத்துவது என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. அரசாங்கமே அந்த அதிகாரத்தை வைத்திருப்பதற்குக் காரணம் உள்ளாட்சித்துறையை ஒட்டுமொத்தமாக நிர்வகிக்கிற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஆங்காங்கே, அவரவர்கள் விருப்பு வெறுப்புக்கு நடக்கட்டும் என்று விட்டுவிட்டால் தமிழ கத்திலே தனித்தனிப் பாளையங்கள் ஏற்படுகிற முறையிலே உள் ளாட்சித் துறை செயல்படவேண்டிய நிலைமை வந்துவிடும்.

ஆகவே, தயவுசெய்து நீங்கள் அரசாங்கத்தை நம்பவேண்டும், தவறான முறையால், தனக்குப் பிடிக்காதவர்களை, வேறு கட்சி யைச் சேர்ந்தவர்களை நகர்மன்றத் தலைவர்களைப் பழிவாங்கும் முறையிலே அரசு செயல்படாது.

அரிசனப் பெருமக்களுக்கு ரிசர்வேஷன் என்ற கருத்தை இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிச்சயமாக அதை ஆராய்ந்து அதற்குரிய வழிவகைகள் கண்டறிவதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். தேர்தல்கள் தள்ளிவைக்கப்படு கின்றன, வெவ்வேறு காரணங்களைச் சொல்லி தேர்தல்களைத் தள்ளி வைத்துக்கொண்டே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பல முறைகள் இந்த மாமன்றத்திலே இத்தகைய கருத்துக்கள் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன. நான் ஏற்கனவே குறிப்பிட் டேன், வாக்காளர் பட்டியல் எடுக்கிற வேலை நடந்துகொண்டி ருக்கிறது. அது முடிந்ததற்குப் பிறகு தேர்தல்கள் நடத்துவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்து இருக் கிறேன். இப்போதே தேர்தலுக்கான ஆயத்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஊராட்சிகளைப் பிரிக்கின்ற முயற்சிகள் இருப்பதால் தேர்தல்கள் தள்ளிப் பாகும் சூழ்நிலை உருவாகும் என்று அவர்கள் சொன்னார்கள். ஊராட்சிகளைப் பிரிப்பது அல்லது வார்டுகளைச் சீர்திருத்தி அமைப்பதற்கு மார்ச் 1 ஆம் தேதி இறுதி நாள் என்று ஏற்கனவே முடிவு கட்டப்பட்டுவிட்டது. அந்த முடிவிற்குப் பிறகு இப்பொழுது தேர்தலுக்குரிய ஆயத்தங்கள்தான் நடந்துகொண்டிருக்குகின்றன.

இந்தச் சட்டத்திலே ஏதாவது சிக்கல்கள் இருக்கின்றன என்று நீங்கள் கருதினால் இது நடைமுறைக்கு வந்தபிறகு இப்படிப்பட்ட சிக்கல்கள், இந்தச் சட்டம் சீராக இயங்க முடியாமல் சிக்கல்கள் இருந்தால் அவைகளைக் களைவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்கள் இப்பொழுது துணைநிற்கும் என்று சொல்லி இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. க. சுப்பு; தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறபொழுது, மக்கள் மத்தியிலே வைப்பது என்றால் அடிக்கடி இப்படி வருமே என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையை வைக்க வேண்டியதில்லை. இங்கேகூட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றால், ஆறு மாதங்களுக்கு ஒருமுறைதான் கொண்டு வரமுடியும். அப்படி அதற்கு ஒரு கால வரம்பை நிர்ணயித்துக்கொள்ளலாம். அப்படி நிர்ணயித்து மக்களிடம் அந்த அதிகாரம் போவது சிறப்பாக அமையும். அரசாங்கத்தின் மீது நம்பிக்கையிருக்கிறதா என்றால் ஆரம்பத்திலேயிருந்தே இல்லை, இருக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு அரசாங்கத்தின மீது நம்பிக்கையிருக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஜுடிஷியல் டிஸ்கிரிஷனுக்கு விட்டு, நீதிபதி கொண்ட கமிட்டி பரிசீலித்துப் பார்த்து ரெஃபராண்டத்திற்கு விட வேண்டும். அரசாங்கமே இப்படி செய்யலாம் என்றால் என்னவாகும்? ஏற்கனவே எமர்ஜென்சி காலத்தில் பஞ்சாயத்துக்களைக் கலைத்தார்கள். வேலூரில் கலைத்தது தவறு என்று தீர்மானம் கூடப் போட்டார்கள், காரணம் காட்டாதது தவறு என்று போட்டார்கள். இருந்தாலும் கலைக்கவில்லையா? எனவே, நான் சொல்கின்ற 'அடிப்படையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கத்தினர்களைக் கடத்துவது மோசமானது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அது தவறுதான். ஆனால், இருக்கின்ற தலைவரை அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை என்றால் அங்கத்தினர்களை அரசாங்கமே கடத்துகின்ற நிலை உருவாகிவிடும். ஆளுங்கட்சிக்குப் பிடிக்கவில்லையென்றால் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கை தூக்கிக்கொண்டு வந்து உங்களுக்கு அனுப்புவார்கள். இப்படி அரசாங்கம் கடத்தல் தொழிலைச் செய்கின்ற நிலைமையை உண்டாக்குவது சரியானதுதானா, அந்த நிலைமை வேண்டாமென்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; தலைவரவர்களே, ஒட்டு மொத்தமாக அரசாங்கத்தின்மீது குறைபாடுகளைக் கூறுவதற்கு இதை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைக் கொண்டுவந்து அனுப்புகின்ற நேரத்தில் அதன் தன்மைகளைப் பார்ப்பதற்காகத்தான் அரசாங்கம் என்ற அமைப்பே இருக்கிறது அந்த வேலை இல்லை என்றால் அரசாங்கத்திற்கே வேலையில்லாத் திண்டாட்டம் வந்து விடும். இந்தப் பணியைச் செய்வதற்குத்தான் அரசு என்ற அமைப்பேயிருக்கிறது. ஆகவே, இதில் சந்தேகப்பட வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகரசபைகள் இவைகளுக்கான தேர்தல்கள் விரைவில் நடைபெறுமா? இந்தத் தேர்தல்களை எப்பொழுது நடத்துவதாக உத்தேசம்? எப்பொழுது நடக்கும் என்ற உறுதியை அமைச்சரவர்கள் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; தலைவரவர்களே, தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆயத்தங்கள் முடிந்து விட்டால் நிச்சயமாக உறுதியாகத் தேர்தல் நடக்கும்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஊராட்சி ஒன்றியங்களினுடைய தலைவர்கள், நகராட்சி மன்றங்களினுடைய தலைவர்கள் நேரடியாக மக்களாலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற விதத்தில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள், அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள், 'ரைட்டு டு ரீகால்' என்று, அதாவது தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளை அவர்களே திரும்பிப் பெறுவதற்கான உரிமை வேண்டும், அதுதான் நாங்கள் கூறுகின்ற மக்கள் சுயாட்சி என்று சொல்லியிருந்தார்கள். இந்தக் கருத்தை எதிர்க்கட்சியினர் எந்த அளவிற்கு ஒத்துக்கொள்கிறார்கள் என்பது வேறு விஷயம். அது எங்களைக் கேட்டுக்கொண்டு அறிவிக்கப்பட்ட கருத்து அல்ல. காலமெல்லாம் நீங்கள் அந்தக் கருத்தை அறிவித்திருக்கிறீர்கள். 'ரைட் டு ரீ கால்' என்பதற்கான சட்டம் கொண்டு வரப்படுமா? அதற்கான தீர்மானம் கொண்டுவரப்படுமா? அதைக் கொண்டுவருவதற்கு ஏன் காலதாமதம் ஆகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மட்டுமல்ல, ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற சான்றோர்கள் அறிவித்த தத்துவம் அது. அரசியல் சட்டத்தில் அந்தத் தத்துவம் இடம் பெற்ற பிறகு, படிப்படியாக அந்தத் தத்துவம் ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்திற்கும் கொண்டு வருவதற்கான வழி பிறக்க வேண்டுமென்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

**பிரிவுகள் 2 முதல் 23 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன,**

முகப்புரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: ''முகப்புரை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

**The Hon. Thiru K. Kalimuthu:** Mr Speaker, Sir I move that In the enacting formula, for the expression "Twenty eighth Year," substitute the expression "Twenty ninth Year."

மாண்புமிகு அமைச்சரவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தியபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே ''தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 9/78) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1.10)

## (உ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ''1978-ம் ஆண்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கோருகின்றேன்.

இந்தச் சட்டத்தை முன்மொழிகின்றபொழுது, மூன்றாவது பிரிவில் ஒரு முக்கியமான திருத்தத்தை அரசாங்கத்தின் சார்பில் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் திருத்தம் கரண்டுக்கான பில்கள் தரப்பட்டவுடன் இந்த பில்களிலே உள்ள தொகை சரியில்லையென்று மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்கள் கருதுவார்களானால் மேற்கொண்டு அதுகுறித்து அவர்கள் அப்பீல் செய்யலாம்.

*1978 மார்ச் 27-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



அப்படி அப்பீல் செய்து அதிலேயும் அவர்களுக்குச் சரியான தீர்ப்பு கிடைக்காவிட்டால் அதற்குப் பிறகுதான் அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று மேலும் ஒரு வகையில் கன்ஸ்யூமர்களுக்கு வாய்ப்பு தரவேண்டுமென்று திருத்தம் சேர்த்து வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களை இரண்டிலுமாகச் சேர்த்துச் சொல்ல வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் விதி 77 (1)-ன் கீழ் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தனது திருத்தம் முன்மொழிய எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

THIRU S. J. SADIQ PASHA: Mr. Speaker, Sir, I move that—

"That the Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Bill, 1978 (L.A. Bill, No 14 of 1978) be referred to a Select Committee."

The amend ment was duly seconded.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு மின் வாரியம் நிலுவைகள் வசூல் மசோதா நம்முடைய அமைச்சரால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதா மிக முக்கியமான ஒரு மசோதாவாகும். பொதுவாக, மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய எல்லோரையும் பாதுகாக்கக் கூடிய ஒரு மசோதாவாகும். விவசாயிகள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள் அத்தனை பேரையும் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமான மசோதாவாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்து நான் கருத்து சொல்லும்போது இந்தச் சட்ட முன்வடிவு அவசியமற்றது, தேவையற்றது, ஆபத்தானது, அச்சம் விளைவிக்கக்கூடியது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவின் மூலமாக ஒரு முக்கியமான அதிகாரத்தை நாம் மின்சார வாரியத்திற்கு வழங்கியிருக்கிறோம். என்ன அதிகாரம் என்று சொன்னால், ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் மூலமாக மின்சார வாரியத்திற்கு வர வேண்டிய நிலுவைகளை வசூலிக்கின்ற அதிகாரத்தை இப்பொழுது நாம் இந்த மசோதாவின் மூலமாகக் கொடுக்க இருக்கிறோம். நான் இந்த மசோதா அச்சம் விளைவிக்கக்கூடியது என்று சொன்னதற்குக் காரணம், இப்பொழுது விவசாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள். விவசாயிகள் மின்சாரக் கட்டணம் செலுத்துவதிலே உள்ள கஷ்டங்களை உணர்ந்து, அரசாங்கம் அதுபற்றி ஆராய ஒரு குழு நியமித்திருக்கிறது.

அந்தக் குழு விவசாயிகளது மின்சாரக் கட்டணம் பற்றிய பிரச்னைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மின்சாரக் கட்டண நிலுவைகளை வசூலிக்கப் பல வழிகளை மின்சார வாரியம் கடைபிடித்து வருகிறது.

மின்சார வாரியத்திடமிருந்து இணைப்பு வந்தபிறகு 3 மாதம் டெப்பாசிட் வாங்கிய காலம் இருந்தது. அதை 4 மாதமாக மாற்றி இருக்கிறோம். ஓராண்டு சராசரி கட்டணத்தை எடுத்து, அதில் 4 மாதங்களுக்கு ஏற்படக்கூடிய கட்டணத்தை முன் கூட்டியே மின்சார வாரியம் வாங்கிக் கொள்கிறது. மின்சார வாரியத்திற்குப் பாக்கி செலுத்தத் தவறினால் உடனடியாக மின்சார வாரியம் தண்டிக்க வாய்ப்பிருக்கிறது. இப்படி எல்லாம் இருக்கும்போது மின் வாரியத்திற்கு எந்த அளவிலே இந்த அதிகாரத்தை அளிக்கவேண்டுமென்ற கருத்தை அமைச்சரவர்கள் தெரிவிக்கவில்லை. அமைச்சர் கொடுத்த அறிவிப்பைப் பார்க்கும்போது வழக்கு மன்றங்களுக்குச் செல்ல வழியிருக்கிறது: வழக்குமன்றங்களுக்குச் சென்றால் காலதாமதம் ஆகிறது என்ற நிலைமையை சொல்லித்தான் இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். இது பன்னெடுங்காலமாக இருக்கிற நிலை.

மின்சார வாரியம் ஏற்படுத்துவதற்கு முன்னால் அரசாங்கத்தால் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் மூலமாக, பாக்கியை வசூலிக்கின்ற நிலைமை இருந்தது. மின்சார வாரியம் ஏற்பட்ட பிறகு' அதுவுமன்றி, கமர்ஷியல் கன்சர்ன், வியாபார நோக்கோடு அது ஏற்பட்ட பிறகு, இந்த அதிகாரத்தை அன்றைக்கு அரசு திரும்பப் பெற்றுக்கொண்டது. இன்றைக்கு மீண்டும் அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடாக இது நடைபெறுவதைப் பார்க்கும்போது, மின்சார வாரியத்தால் ஏற்படக்கூடிய காலதாமதங்களுக்கு, மின்சார வாரிய அதிகாரிகளால் ஏற்படக்கூடிய தவறுகளுக்குப் பொதுமக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில்தான் இந்த அதிகாரத்தை வழங்குகிறார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான்கு மாதங்களுக்கு டெப்பாசிட் வாங்கப்படுகிறது. அது மாத்திரம் அல்ல. மின்சார கட்டண பில்களை காலாகாலத்தில் அனுப்பினால் கன்சூமர்கள் பணம் கட்டத்தயாராக இருக்கிறார்கள். இங்கே கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையிலே ஒரு மீட்டர் ரீடிங் எடுக்கப்பட்டது மீட்டர் ரீடிங் எடுக்கப்பட்ட தேதி ஜனவரி மாதம் 4-ந்தேதி. பட்டியல் தயாரித்த தேதி மார்ச்சு 8, நடப்புக் கட்டணம் கட்ட கடைசிநாள் ஏப்ரல் 6, ஜனவரி மாதக் கட்டணத்தை மார்ச்சிலே பட்டியல் தயாரித்து ஏப்ரலில் கட்டுவதற்கு காலதாமதம் ஆகிறது. 3,4 மாதங்கள் ஆகின்றன. இந்தக் காலதாமதத்தை தவிர்த்து ஜனவரி மாதக் கட்டணத்தை பிப்ரவரியில் பட்டியல் தயாரித்து கொடுப்பார்



களானால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோருகிற இந்த அதிகாரம் தேவையில்லாதது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது உள்ள Revenue Recovery Act என்ற அதிகாரத்தை மின்சாரவாரியத்திற்குக் கொடுத்தோமானால் எந்த எந்த காரியங்களுக்கு டீயுஸ் என்று சொல்லும்போது "Consumption of electrical energy remuneration rent, hire charges and other charges" என்றெல்லாம் விளக்கம் சொல்லுகிறார்கள். மின்சாரக் கட்டணத்தை செலுத்தத் தவறினாலும், இந்த மின்சாரத்தை, துண்டிக்கின்ற முறையை கைவிட்டு Revenue Recovery Act-லே ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி எல்லாம் நடக்காது என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் தருகிறார்கள். அதேமாதிரியாக விவசாயத்திற்குக் கொடுக்கக் கூடிய கடன் வசூலாகாவிட்டால் ஜப்தி செய்யக்கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்த மன்றத்திலே. இருந்தாலும் கூட பல இடங்களிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுப்பதை நாம் பார்க்கிறோம். எனவே வாக்குறுதி கொடுத்த பிறகு, இம்மாதிரி ஆபத்தான நிலைமைகள் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சட்டம் கூட "Comprehensive Legislation" கொண்டு வந்திருக்கலாம். நான் சொல்லுகிறேன், நம்முடைய அமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கு மிகவும் அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மின்சார வாரியம் கொடுக்க வேண்டிய பணம் இருக்கிறதே For services rendered, for the goods supplied என்ன காலகட்டம் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே நான் சொல்வது இந்த மசோதா போலவே

Tamil Nadu Electricity recovery of dues Act

பதிலாக

"Tamil Nadu Electricity Board Recovery and payment of dues Act"

என்ற ஆக்டை கொண்டு வந்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய பணத்திற்கு ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட், ஆனால் அவர்கள் கொடுக்கவேண்டிய பணத்திற்கு எப்போது கொடுப்பார்களோ அப்போது கொடுக்கிற நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல இதிலே அதிகாரம் யாருக்கு கொடுக்கப்படும் என்று Prescribed Authority விதி முறைகளின் மூலமாக நிர்ணயிக்கப்படும் என்று சொல்கிறார்கள். நான் சொல்வது, இந்த அதிகாரத்தைக் கொடுக்கும் போது அது

காரிகள் தவறு செய்யாத நிலைமையை நாம் கண்காணிக்க வேண்டும். சில வேளைகளிலே இப்படி ஒரு பில் தயாரித்துக் கொடுத்து அதைப் பற்றி சொன்னால் கவனிக்காமல் இருக்கிற நிலைமையை நாம் மறந்துவிடக்கூடாது. Such prescribed authorities shall not be below the rank of a Superintending Engineer எனவே அப்படி ஒரு அதிகாரத்தைக் கொடுப்பதில் கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல, இந்த மசோதாவில் முதலிலேயே இந்த பிரிஸ்கிரைபிடு அதாரிடியின் தகுதியை நிர்ணயித்துவிட்டால் அதற்கு அப்பீலே கிடையாது என்ற நிலைமை இருந்தது. ஆனால் நல்லவேளையாக நான் கொண்டு வந்த திருத்தத்தை அமைச்சர் ஏற்றுக் கொண்டு அப்பீல் செய்ய கோர்ட்டுக்குப் போகலாம் என்று திருத்தியிருப்பதை வரவேற்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, கோர்ட்டுக்குப் போகலாம் என்று வழி இருக்கிறது. அதிலே என்ன குறைபாடு இருக்கிறது என்றால், இந்த பிரஸ்கிரைபிடு அதாரிடி சொல்கிற தொகை அல்லது அதற்கு மேலே அப்பீலில் சொல்கிற தொகை ஆகியவற்றில் அக்கிரகேட் தொகையைக் கட்டவேண்டும் என்று முறையை வகுத்து இருக்கிறார்கள். நான் சொல்வது, மின்சார வாரியம் ரூ. 100 என்று சொல்லலாம், கன்சியூமர்கள் சுமார் ரூ. 80 பாக்கி என்று சொல்லலாம். அப்பீலுக்குப் போன பிறகு அப்பீலில் குறைந்தாலும் குறையலாம், குறையாமலும் இருக்கலாம். ஆனால் கோர்ட்டுக்குப் போகிறபோது அந்த கன்சியூமர் என்ன தொகை செலுத்தவேண்டும் என்று சொல்கிறாரோ அட்மிடட் அமௌன்ட் – கட்டி விட்டு அக்கிரகேட் அமௌன்ட் என்பதற்கு பதிலாக அட்மிடட்அமௌன்ட் கோர்ட்டில் தாவா தொடர்ந்து கோர்ட்டிலே அதுபற்றி, இன்டரிம் ஆர்டர் முடிவு செய்த பிறகு பாக்கி தொகைக்கு செக்யூரிட்டி கட்ட வேண்டும் என்ற நிலைமை இருந்தால் போதுமானது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி டெபாசிட் செய்து முடிக்கப்பட்டபின் மேற்கொண்டு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகளுக்கு எல்லாம் இப்படி அதிகாரங்கள் கொடுக்கிறபோது சில அதிகாரிகள் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் காரணமாகவும், அல்லது மற்றவர்களின் தலையீடு காரணமாகவும், வரம்பு மீறி நடக்கும் நிகழ்ச்சிகளையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தென்காசி தாலுக்காவில், கீழப்பாவூர் கிராமம், ராமசாமி நாயுடு மகன் பி.ஆர். சிவன் அவர்களுக்கு சர்வே நெம்பர் 661/662 ல் 2.32 சென்ட்



நிலம் இருக்கிறது. அங்கே விவசாயிகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கோருகிறபோது அங்கே மின் இணைப்பு கொடுக்கிறபோது சர்விஸ் நெம்பர் 165-ல் இருந்து கொடுக்கப்படுகிறது. அந்த மின் இணைப்பு பி.ஆர்.எஸ்.தென்னந்தோப்பு வழியாக கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன் காரணமாக பி.ஆர். சிவன் அந்தத் தென்னந்தோப்பு இரண்டாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்து, அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிறார். அதிகாரிகள் மட்டத்தில் ஒரு நல்ல முடிவு அறிவிக்காததால், சிவில் கோர்ட்டில் தாவா தொடர்கிறார். மார்ச் மாதம் 7-ம் தேதி கோர்ட்டில் தாக்கல் செய்கிறார் மனுவை. அப்போது ஸ்ட்ரைக் நடந்து கொண்டு இருந்ததால், அது உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. தாவா தொடர்ந்து இருப்பதாகவும், லைன் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்றும் கோரி தந்தி மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிறார். 7-ம் தேதிக்குப் பிறகு ஸ்ட்ரைக் முடிந்த பிறகு 16-ம் தேதி அவர்களுக்கு கோர்ட்டில் இன்டரிம் இன்ஜங்ஷன் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அவசர அவசரமாக அந்த அதிகாரிகள் 15-ம் தேதி மின்சாரம் வழங்க கம்பியை இழுத்துவிட்டு இருக்கிறார்கள். நல்லவேளை இன்னும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களுக்கு அது குறித்து விவரம் தருகிறேன். விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த மசோதாவைப் பற்றி மிகுந்த ஆழமாகச் சிந்திக்கவேண்டும். அந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினால் பொருத்தமானது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மின்சார வாரிய திருத்த மசோதா மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாகவே நாட்டிலே திட்டமிட்டு செய்யும் தவறுகளை நிகழாமல் பார்க்க வழிமுறைகளை ஏற்படுத்தும் திருத்தங்களை இந்த அவையின் மூலம் நாம் கொண்டுவந்து நிறைவேற்றிட முனைகிறோம். ஆனால் அப்படிப்பட்ட சட்ட திருத்தங்கள் வருகிறபோது, இந்த மின்துறை மீது மட்டுமல்லாமல், எல்லாத்துறைகளிலுமே சட்டத் திருத்தங்கள் வருகிறபோது எதிர்க்கட்சிகள் என்றால் எதிர்த்துத்தான் தீரவேண்டும் என்ற முறையில் அவர்கள் எதிர்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்க விஷயம் ஆகும். ''கதை கட்ட ஒருவன் பிறந்து விட்டால், சண்டைக்கும் களங்கம் உண்டாம்'' என்று சொல்வார்கள். அதைப்போல், இத்தகைய முறைகள், ஜனநாயகத்தை வளர்க்க வழிவகுக்காது என்பதை என்னுடைய தாழ்மையான கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே ஓர் அமைப்பு முறை நல்ல முறையிலே நடைமுறைப்படுத்தப்பட்டு, வருகின்ற நேரத்தில், அது முறை கேடான ஒரு

சமூக சிக்கலை உருவாக்குமானால் அதைத் திருத்தி சீரமைப்பதன் மூலம் தான் சரியான ஒரு நிலைமையை ஏற்படுத்த முடியுமானால் அதைச் செய்வதுதான் சரியான ஜனநாயக வழிமுறையாகும். ஏற்கனவே இருந்த அமைப்பு முறைகள், சட்ட முறைகள் சமூகத்தில் பல பல வகைகளிலே ஸ்தாபன துணைக் கொண்டு பாதுகாப்புத் தர வலுவிழந்து விட்டன என்பதை உணர்த்தும் வகையிலே இன்றைய தினம் இந்த சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்திருப்பது சாலச் சிறந்தது.

ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு சட்ட திருத்தத்தை இங்கே சொன்னார்கள். ஒருவர் ஒரு கட்டணம் செலுத்திருக்கக் கூடிய பில் மீது உடனடியாக அங்கே அப்பீல் செய்யலாம்; தவறினால் மேலே இருக்கிற டிபார்ட்மெண்டுக்குத் தெரிவிக்கலாம்; அதுவும் திருப்தியில்லை என்றால் கோர்ட்டுக்குச் செல்லலாம். அதுதான் ஜனநாயகம். ஆனால் கோர்ட்டுக்கே செல்லக்கூடாது, அல்லது டிபார்ட்மெண்டுக்குச் செல்லக்கூடாது, செல்கின்ற உரிமை கிடையாது என்ற முறையிலே மேல் முறையீடுகளுக்கு வழியில்லாமல் செய்து விடுவது என்பது உண்மையில் ஒரு நாட்டை நடத்திச்செல்லக் கூடிய அரசின் ஏற்ற கருத்து அல்ல.

கடந்தகால நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, அனுபவித்து விட்டவர்கள் அதற்கேற்ற கட்டணங்களைச் செலுத்தாது சட்டங்களைக் கொண்டு தப்பித்து வருவது வருந்தக்கூடிய ஒரு விஷயமே தவிர வரவேற்கக்கூடிய விஷயம் அல்ல. ஆகவே, தேவையை யார், எந்தத் தரப்பிலே இருந்து சொன்னாலும் அதை நிச்சயமாக சரிக்கட்டியாக வேண்டும்; கேட்டாக வேண்டும். அதுதான் நல்ல மரபு. அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல மரபினை ஏற்கக்கூடிய வகையில் அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய விஷயம்.

பல்வேறு வகைகளிலே கடந்த அரசு பணத்தைப் பாழாக்கி சீரழித்திருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது. இப்படிப்பட்ட இந்த நேரத்தில் இதுபோன்ற அரசின் சட்ட திருத்த மசோதா மூலம்தான் அரசு வளர்ச்சிப்பணிகளைச் செய்ய பொது மக்களிடமிருந்தோ அல்லது ஒரு வங்கியிடமிருந்தோ கடன் வாங்கி செலவிடுகிறதோ அந்த இலாகா தன்னிறைவு பெறாவிட்டால் கூட இழக்கும் நிலையைப் பெறாமல் பாதுகாக்க முடியும். ஆகவே, இன்றையதினம் மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கிற பெரும் நஷ்டம் நீக்கப்பட்டு, பாதுகாப்புத் தர இந்தச் சட்ட திருத்தம் மிக மிகத்தேவை என்று கூறி, ஆதரித்து வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஓ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் இந்த நாட்டிலே நியாயமற்றது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.





மின்சார போர்டு என்பது ஒரு 'குவாஸி கவர்ன்மென்ட்' அமைப்பு. அது ஒரு முழு அரசு ஸ்தாபனம் அல்ல. ஆகையால் அதற்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் பெற, ரெவின்யூ ரெக்கவரி ஆக்டை விஸ்தரிப்பது நியாயமற்றது, முறையற்றது, தர்மமற்றது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏனெனில் ஆர்.ஆர்.ஆக்ட் என்பது 1864 ஆம் ஆண்டு வெள்ளையனால் இயற்றப்பட்டது. மக்களிடமிருந்து எந்த வகையிலேனும் வரிப்பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்ற ஒரே கருத்தைக் கொண்டிருந்த, இந்நாட்டு மக்கள் எந்தக் கஷ்டம் அடைந்தாலும் பாதகமடைந்தாலும் தனக்குச்சேரவேண்டிய வரிப் பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆண்டுகொண்டிருந்த வெள்ளையர்கள் விவசாயிகளை அதட்டி மிரட்டி நடவடிக்கை எடுக்க உபயோகப்படுத்திய அதே சட்டத்தை 114 வருடங்களுக்குப் பிறகு துணைக்கொள்வது மிகவும் பத்தாம்பசலித்தனம் எனக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு கூடுதல் கட்டணம் வசூல் செய்வது நியாயமில்லை என்ற கோரிக்கையை வலியுறுத்த சில சமயங்களில் பணம் கட்டுவதை நிறுத்துகிறார்கள் என்பதை முறியடிப்பதற்காக இவ்வளவு பெரிய ஆயுதத்தை எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு கொடுப்பது மிகப் பெரிய அபாயம். ஏனெனில் பணம் கட்டாதவர்கள் சில நடவடிக்கைகள் மூலம் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். உரிய நாளில் பணம் கட்டாவிட்டால் அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும் கட்டாவிட்டால் ஃபியூஸ் எடுக்கப்படுகிறது. மேலும் பல நாட்கள் கட்டா விட்டால் 'டிஸ்கனெக்ட்' செய்துவிடுகிறார்கள். அதிலும் கட்டாதவர்கள் மீதுதான் போர்ட் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவர்கள் பணம் கட்டாத காரணத்தால் மிகப் பெரும்பான்மையோரையும் தண்டனைக்கும் சர்வாதிகார நடவடிக்கைக்கும் உட்படுத்துவது நியாயமல்ல.

இச்சட்டத்தில் போர்டுக்கு வரவேண்டிய பாக்கியை வசூல் செய்ய மட்டும் கடுமையாக சட்டம் செய்யப்படும்போது போர்டு திருப்பிக் கொடுக்க வேண்டிய டிப்பாசிட் போன்ற பணத்தை எவ்வளவு காலத்திற்குள் கொடுக்கிறார்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

<u>திரு. ஓ. சுப்பிரமணியன்</u>: பிரஸ்கிரைப்டு அதாரிட்டி என்பது வரையறுத்துச் சொல்லப்படவில்லை. அது உயர்தர அதிகாரியாக இருக்க வேண்டும். கிளாஸ் 3, சப்செக்ஷன் 2-ல் குறிப்பிட்ட தவணைக்குள் ......

[பிற்பகல் 1-30]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இதை இன்றையதினமே முடிக்க வேண்டும் என்று இல்லை. நேரம் 1· மணி ஆகி விட்டது. நேரம் கழித்துப் போனால் உறுப்பினர்கள் விடுதியில் உணவு கிடைக்காது. ஆகவே இதை நாளைக்கு வேண்டும் என்றாலும் ஒரு நாள் கூட்டிக்கொள்ளலாம். ஆகவே இத்துடன் சபையை முடித்துக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் அரைமணி நேரத்திற்குள் முடித்து விடலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை இன்றையதினமே நிறைவேற்றியாக வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. அங்கத்தினர்கள் சோர்வாக இருக்கிறார்கள் அமைச்சரவர்களும் சோர்வாக இருக்கிறார்கள். ஆகவே நாளை தினம் கூட இதை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். சோர்வு ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. அதுவும் பதிலளிக்க வேண்டிய நேரம் வந்தால் சோர்வெல்லாம் போய் விடுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் வேண்டுமானால் நீட்டிக்கலாம். இன்றைக்கே முடித்துவிட வேண்டும் என்றாலும் முடித்து விடலாம். நாளையதினம் வேண்டுமானாலும் நீட்டிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைப் பொறுத்தவரையில் இன்றைக்கே முடிக்கவேண்டும் என்பது. ஆகவே அரைமணி நேரத்தில் முடித்து விடலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: குறிப்பிட்ட தவணைக்குள் கட்டாதவர்களுக்கு அபராதமும் சேர்க்கப்படுகிறது. அதையும் சேர்த்து பாக்கியாகக் கணக்கிட்டு வசூல் செய்யப்படும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. உடனடியாக ஜப்தி நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய வசதி செய்து கொள்ளும்போது அபராதம் விதிக்க என்ன அவசியம் இருக்கிறது.

சர்க்காருக்கு வேறு வகையில் வசூலாக வேண்டிய தொகைகளுக்கெல்லாம் அபராதம் விதிக்க வேண்டிய நிலையில்லாத போது இதற்கு மட்டும் அவசியம் என்ன? ரிஜிஸ்டர் தபாலில் கோர்ட்டு பீஸ் அனுப்பினால் போதும் எனச் சொல்லப்படுகிறது அதை நேரில் சார்பு செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை இது தவறு.



கிளாஸ் 5 போர்டு கோரியிருக்கும் பாக்கிகள் தவறாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதைப்பற்றி வாதிட வேண்டுமானால் முழுத் தொகையை ப்ரெஸ்க்ரைப்டு அத்தாரிட்டியிடம் கட்டிய பின் தான் வழக்குப் போட வேண்டும் என்பது நியாயமில்லை. ஏனெனில் போர்டில் கட்டிய பணம் திரும்பி வருவதில்லை. ஆகையால் பணம் கட்டாமலேயே வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து தமிழ்நாடு மின் வாரியம் ஏற்படுவதற்கு முன் ஆர். ஆர். ஆக்டின்படி வசூல் செய்ய வசதி இருந்ததாகவும் மின்வாரியம் ஏற்பட்ட பின் வாபஸ் பெறப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. காரணம் பாக்கிகள் சர்க்காருக்கல்ல என்பதால், இப்பொழுது மட்டும் சர்க்காராகிவிட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியன்: இப்போது சர்க்கார் பணம் வசூல் செய்ய கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறதென்றும், மிகவும் தாமதம் ஆகிறதென்றும் சொத்துக்களை ஏலத்திற்கு கொண்டுவர தாமதமாகிறதென்றும், கன்ஸ்யூமர்கள் அப்பீலுக்கும் செல்கிறார்கள் என்றும் காரணம் சொல்லப்படுகிறது. இந்தக் காரணங்கள் எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை. மின்வாரியம் சொல்லுவது நியாயம் என்று நாம் ஏற்றுக்கொள்வோமேயானால் நாளை போலீஸ் துறையினர், ஒரு கொலைக் கேஸ் அல்லது கிரிமினல் கேஸ்கள் நடந்து முடிய பல நாட்கள் ஆகிறது (மேலும் குற்றவாளி அப்பீலுக்குச் செல்வதால் உடனடியாகப் பைசலாகவில்லை) இந்த காரணத்திற்காக யாரோ ஒரு அதிகாரியை நியமித்து அவர் தான் இறுதி அதிகாரி. அவர் சொல்வது தான் வேதம். வேறு அப்பீல் கிடையாது என்று சொல்வது போல் இருக்கிறது இச்சட்டம் வழங்குகிற அதிகாரம்.

மின்வாரியம் ஒரு தொழிற்கழகம். லாபத்திற்காகவும் நடைபெறுகிறது. ஆகையால் அதை தனி நிறுவனமாகக் கருத வேண்டும். ரெவின்யூ ரெக்கவரி ஆக்டை நிலவரியை வசூல் செய்வதற்குப் பயன்படுத்துவதைத் தடை செய்து அந்தச் சட்டத்தையே நீக்க வேண்டிய காலத்தில் இதன் அதிகார வரம்பை மேலும் நீட்டிப்பது மக்களை வெள்ளையர் பாவித்தது போல் அடிமைகளாகக் கருதி என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதை விரிவாக ஆலோசனை செய்ய செலக்ட் கமிட்டிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவரவர்களே, இந்தச் சட்டம் ஒன்றும் புதிய சட்டம் அல்ல. இதற்கு முன்பு இருந்த ஆர். ஆர். ஆக்ட் முறைதான் இது. அது தனியாக மின்சார வாரியம் ஏற்படுவதற்கு முன்பு இருந்தது. மின்சார வாரியம் தனியாக

ஏற்பட்டதற்குப் பிறகு அந்த முறை மாற்றப்பட்டது. இதைப் போலவே அரசாங்கம் ஆர். ஆர். சட்டத்தின் படி வசூல் செய்கிறார்கள். இதை ஏன் எதிர்க்கிறார்கள் என்று புரியவில்லை.

அது மட்டுமல்லாமல் இந்தச்சட்டத்திலே 3 மாதம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று மாத தவணை கொடுத்து அந்த மூன்று மாதத்திற்குள் கொடுத்து விடவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. கட்டுவதற்குக் காலதாமதம் ஏற்படுகின்ற போது டிமான்ட் நோட்டீசை கொடுப்பவர்கள், அதைச் சார்வு செய்கின்ற நேரத்தில் தவறு செய்கிறார்கள். இப்படி கடன் பட்டவர்கள் தப்பித்துக்கொள்ள வழி வகைகளும் உண்டு.

இங்கே அட்மிட்டட் அமௌண்ட் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். மொத்தமாகக் கட்டி விட்டு கொடுக்கவேண்டியது போக மீதியை வட்டியோடு திருப்பிக் கொடுத்து விடலாம். செக்யூரிட்டி கொடுத்தால் போதும் என்று சொல்லப்படுகிறது. அது தேவை இல்லை. திருப்பி கொடுக்கிறபோது வட்டியோடு திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியம் செயல்படுகிற நேரத்தில் சில சமூக விரோத சக்திகளின் கோரிக்கையையேற்று விவசாயிகளிடம் கட்டாதே, கட்டாதே என்று சொல்கிறார்கள்.

பொதுமக்களின் ஆதரவைப் பெற்றவர்கள், மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் வெட்டாதே, பொன்முட்டையிடும் வாத்தை வெட்டாதே என்று சொல்கிறார்கள். ஆகவே, சமூக விரோத சக்திகளுக்கு மக்கள் இரையாகாதிருக்க இந்த அரசு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மின்சார வாரியத்தில் மின்சாரத் திருட்டு நடக்கிறது, விவசாயிகளாலும் மற்றவர்களாலும். சட்டத்தில் 'லூப்ஹோல்ஸ்' இருப்பதால் பலர் வழக்குகள் போட்டாலும் தப்பித்து விடுகிறார்கள். பல வழக்குகள் நடக்கின்றன. ஆகவே இந்த லூப் ஹோல்ஸை அடைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் டிமான்ட் நோட்டீஸ் என்று போட்டிருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு உறுதுணையாக இருப்பார்கள். ஆகவே எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. கிருஷ்ணன்</u>: தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு எலக்ட்ரிஸிட்டி போர்டு (ரெக்கவரி ஆப் ட்யூஸ்) பில்லை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. காரணம் மின்சாரத்தைப் பெரும்பகுதி பயன்படுத்துகிற பெரும் தொழிற் அதிபர்கள் இன்றைக்குப் பல்வேறு தொழிற்சாலைகளில் லட்ச கணக்கான ரூபாய் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றுள்ள முறை, ஏதாவது மின்சார பாக்கி இருந்தால் ப்யூஸ் எடுப்பது என்பது நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இன்று பார்க்கிறோம், சாதாரணமாக பம்ப்செட்டுகளைப் பயன்படுத்துகிற



ஒரு விவசாயி மின்சார பாக்கியை கட்டாமலிருந்தால் உடனடியாக எந்தவிதமான தங்குதடையுமின்றி ப்யூஸ் எடுக்கப்படுகிறது. வீடுகளில் மின் கட்டணம் செலுத்தவில்லை என்றால் வீடு இருட்டாகக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அதேநேரத்தில் தொழில் அதிபர்கள் லட்சக்கணக்கான ரூபாய், ஏன் கோடிக் கணக்கான ரூபாய் அளவில் செலுத்தாமல் இருந்தால்கூட அந்த நடைமுறையைப் பயன்படுத்தமுடியாத இந்த மின்சாரபோர்டிடம் இந்த ரெவின்யூ ரெக்கவரி ஆக்டை அவர்கள் பொறுப்பில் கொடுத்தால் நிச்சயமாக அதைத் துஷ்பிரயோகம் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக இன்றைக்கு தொழில் அதிபர்கள்.....

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>சோ. அழகர்சாமி</u>: நாங்கள், பசிக்கிறது போகவேண்டும் என்று சொன்னோம். தலைவர் அவர்கள் இப்பொழுது சாப்பிடப் போயாகி விட்டது. உதவித் தலைவர் அவர்கள் சாப்பிட்டுவிட்டு வந்தாகி விட்டது. ஆகவே இப்போது ஒத்திவைத்து மீண்டும் 4 மணிக்குக்கூடலாம். நேரமானால் ஹோட்டலில் சாப்பாடு இருக்காது

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>; நான் இன்னும் சாப்பிடவில்லை, பேரவைத் தலைவர் அவர்கள் சாப்பிட போகவில்லை. அவர்கள் போனாலும் அங்கு உட்கார்ந்துகொண்டு தான் இருப்பார்கள், 2.30 மணிக்கு நீங்கள் சாப்பிடுகிறபோது தான் அவர்களும் சாப்பிடுவார்கள். திரு. கிருஷ்ணன் அவர்கள் பேசி விட்டு, இன்னும் நான்கு பேர்கள் இருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசி முடித்ததும் அதோடு அவையை ஒத்திவைத்துவிட்டு பிறகு திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம்.

[பிற்பகல் 1-40]

திரு. <u>ரா. கிருஷ்ணன்</u> : தலைவர் அவர்களே, ஏற்கனவே மின்சார பம்புசெட்டுகளுக்கு 12 காசு வீதம் செலுத்தப்பட்டு வருகிறது. வீடுகளுக்கு 15 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. கடைகளுக்கு 60, 65 காசு கொடுக்கப்பட்டு வருகிறது, இந்த நிலையில், இரண்டு காசு, மூன்று காசு என்று தொழில் அதிபர்களுக்கு சலுகை வழங்கப்பட்டாலும் கூட, கோடிக்கணக்கான ரூபாய் அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படாமல் இருக்கின்றது. இவ்விதம் அவர்களிடமிருந்து வசூல் செய்ய முடியாமல் இருப்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. கோர்ட்டுகள் மூலம் போனால் நிச்சயமாக அவர்களிடமிருந்து வசூல் செய்ய முடியும். மின்சார வாரியத்திற்கு அந்த அக்கறை இல்லை என்று தெரிகிறது.

ஏற்கனவே மால்கோ விஷயத்தில் கோடிக்கணக்கான ரூபாயை வசூல் செய்கின்ற விஷயத்தில் கட்டாயப்படுத்தவில்லை. உயர்நீதி மன்றத்தில் முறையாக இந்த வழக்கு நடத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இப்போது மின்சார வாரியத்திற்கு ஸ்டான்டிங் கௌன்ஸில் கிடையாது. எமெர்ஜென்ஸி காலத்தில் ஆறு பேர்களை போட்டு ஸ்டான்டிங் கௌன்ஸில் என்று வைத்திருந்தார்கள். ஜனதா சர்க்கார் ஏற்பட்டதும் அதைக் கான்ஸெல் செய்துவிட்டார்கள். இப்போது எந்த ஸ்டான்டிங் கௌன்ஸிலும் கிடையாது. இப்போது நிலை என்ன என்றால், வசதி படைத்தவர்களைப் பொறுத்த வரையில் பாக்கிகளை வசூல் செய்கின்ற நடவடிக்கைகள் எதுவும் இல்லை. ஆகவே ரெவின்யூ ரெக்கவரி என்ற முறையில் இந்தச் சட்டத்தை போடுவதை நாம் அனுமதிக்க முடியாது. இந்தச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்றால், கிராமங்களில், சாதாரணமாக ஏழை மக்களிடம் இருக்கும் தட்டுமுட்டு சாமான்களை. பண்டபாத்திரங்களை தெருவழியாக தூக்கிக்கொண்டு போய், சாதாரண ஏழை மக்களை கேவலப்படுத்தக்கூடிய அளவுக்குத்தான் இது பயன்படுகிறது. கூட்டுறவு கடன்களைப்பொறுத்த வரையில் இதுதான் நடைபெறுகிறது. இப்போதுள்ள நிலையைப் பார்த்தால் போர்டு ஸ்டான்டிங் ஆர்டருக்கு எதிராகத்தான் இது செயல்படுத்தப்படுகிறது. மின்சார வாரியத்தில் ஒரு பம்பு செட்டுக்கு கனெக்ஷன் வேண்டுமென்றால், அல்லது இதுபோன்ற ஏதாவது காரியங்கள் நடைபெற வேண்டுமென்றால் ஏதாவது சில்லறை கொடுத்தால்தான் நடக்கும் என்பது உண்மை. இந்த நிலையில் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய சாதாரண விவசாயிகளுக்கு மட்டும்தான் இந்த ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் பயன்படுத்தப்படும். பெரியவர்களை இது ஒன்றும் செய்ய முடியாது என்ற சூழ்நிலையில் இது தேவை இல்லை. மேலும் நோட்டீஸ் அனுப்பினாலே போதும் என்று செக்ஷன் 4-ல் சொல்லியிருப்பது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. ரெஜிஸ்டர்டு போஸ்டில் அனுப்பினால் கூட யார் வேண்டுமென்றாலும் பெற்றுக் கொள்ளலாம்: ஆக இதைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருக்கும் போது, Service of notice என்றிருப்பது எப்படி சரியாக இருக்கும்? மேலும் செக்ஷன் 6-ல் டெப்பாஸிட்டைப் பொறுத்தவரையில், சேர்மெனுக்கு 'டிஸ்க்ரீஷனரி பவர்' கொடுக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 6-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்......

Clause 6 (1) ; "If the aggregate amount of the various dues, penalty and costs mentioned in the notice of demand served under Section 4 is not deposited with the prescribed authority within three months of the date of such service or such extended period as the Chairman of the Board may from time to time allow...."



ஆக 'சேர்மென் ஆஃப் தி போர்டு'-க்கு டிஸ்க்ரீஷன் பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக பம்புசெட்டை எடுத்துக்கொண்டால் சாதாரண விவசாயிக்கு ஒரு மாதம் 100 ரூபாய் அல்லது 50, 60 ரூபாய் வரும். இதற்கெல்லாம் சேர்மென்-ஐப் போய்ப் பார்க்க முடியாது. ஆகவே இதிலுள்ள பலாபலன்கள் எல்லாம் பெரும்பெரும் முதலாளிகளுக்குத்தான் போய்ச்சேரும். இந்த மாதிரியான டிஸ்க்ரீஷன் பவர் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்வதற்கு, இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இந்தச் சட்ட முன்வடிவின் மீதுள்ள விவாதம் தொடர்ந்து 3-4-1978 திங்கட் கிழமை நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 3-4-1978 திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–45-க்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

இல்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*200. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1978).

*201. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1978).

202. 27-8-1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 31-3-1977 ஆம் தேதி அன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப்பெற்றன.

1. திரு. சோ. அழகர்சாமி.
2. திரு. வீ. சின்னையா.
3. திரு. ரா. கு. பெருமாள்.

203. 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத்தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக்கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை (ஆறுவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்.)

204. 1972-73-ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கைமீதான, பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை (ஆறுவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்).

205. 1972-73 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் மூன்றுவது அறிக்கை (ஆறுவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்).

* 30-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன



இணைப்பு I.

(996-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 758-க்கான விடையைக் காண்க.

விவரப் பட்டியல்.

உலக விளையாட்டுப் போட்டிகளில் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த கீழ்க்கண்ட வீரர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

கிரிக்கெட்:

1. திரு. வெங்கட்ராகவன்.
2. திரு. பாரத் ரெட்டி.

மகளிர் கிரிக்கெட்:

1. செல்வி. பௌசிக் கல்வி.
2. செல்வி சூசன் இட்டிசெர்யா.
3. செல்வி சுதாஷா

ஹாக்கி:

1. திரு. பிலிப்ஸ் (இந்திய அணியின் தலைவர்)
2. திரு. பிரபாகர்.
3. திரு. பாஸ்கரன்.
4. திரு. தாமஸ்.
5. திரு. முனீர் சேட் (இவர் மாநில விளையாட்டு மன்றத்தின் நிதி உதவியுடன் அர்ஜென்டைனவில் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பை பந்தயத்துக்கு நடுவருள் ஒருவராக செல்லவிருக்கிறார்).

டென்னிஸ்:

1. திரு. விஜய் அமிர்தராஜ்
2. திரு. ஆனந்த் அமிர்தராஜ்.
3. செல்வன் ரமேஷ்கிருஷ்ணன்.
4. செல்வன் அசோக் அமிர்தராஜ்.

கால்பந்து:

1. திரு. குணபாண்டியன்.

கூடைப்பந்து:

1. திரு. விஜயகுமார்.
2. திரு. தட்சிணாமூர்த்தி.

டேபிள் டென்னிஸ்:

1. திரு. ஹரி
2. திரு. சேகர்.
3. திரு. சந்திரசேகர்.

சதுரங்கம்:

1. திரு. மானுவேல் ஆரோன்.
2. திரு. ரவிசேகர்.

பளு தூக்குதல்:

1. திரு. பாலமுருகானந்தம்.

விளையாட்டுத் துறை:

1. செல்வி அனுசுயாபாய்.
2. திரு. ஞானசேகரன்.



## இணைப்பு II

[1005-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 761-க்கான விடையைக் காண்க.]

(அ) அண்டு (ஆ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 1976–77 மற்றும் 1977-78 (28-2-78 வரை) பருவங்களில் அரைக்கப்பட்ட கரும்பின் அளவும், கரும்பின் விலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள். | 1976-77 | | 1977-78 (28-2-78 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம். அரைத்த கரும்பு. (டன்னில்) | ஒரு டன்னுக்கான கரும்பின் விலை ரூ. | மொத்தம் அரைத்த கரும்பு. (டன்னில்) | ஒரு டன்னுக்கான கரும்பின் விலை ரூ. |
| 1. | ஆம்பூர் | 2,53,204 | 177.00 | 1,03,564 | 127.00 |
| 2. | மதுராந்தகம் | 1,21,616 | 115.00 | 1,11,653 | 115.00 |
| 3. | அமராவதி | 1,64,945 | 110.00 | 1,23,262 | 125.00 |
| 4. | சேலம் | 2,74,670 | 110.00 | 1,99,050 | 125.00 |
| 5. | கள்ளக்குறிச்சி | 2,05,205 | 109.00 | 90,461 | 109.00 |
| 6. | நேஷனல் | 1,86,050 | 116.00 | 87,130 | 116.00 |
| 7. | தர்மபுரி | 2,18,006 | 119.00 | 1,30,883 | 120.00 * |
| 8. | வேலூர் | 15,118 | 117.00 | 70,560 | 127.00 * |
| 9. | திருப்பத்தூர் | 41,405 | 117.00 | 1,02,744 | 127.00 |

*அரசின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

(இ) அண்டு (ஈ) விலை நிர்ணயத்தில் ஆலைக்கு ஆலை வேறுபாடு உள்ளது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு ;

" கரும்பின் கட்டுமான (Sugar recovery) சதவிதம், இருக்கக்கூடிய மொத்த கரும்பின் அளவு அந்தந்த ஆலைகளின் நிதிநிலைத்தகுதி போன்ற காரணங்களை அடிப்படையாக எடுத்துக்கொண்டு கூட்டுறவு ஆலைகள் அரசின் ஒப்புதலைப் பெற்று கரும்பின்விலையை அறிவிக்கின்றன."

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-600 008.
2. The City Book Company, Madras-600 004.
3. Higginbothams (Private) Limited, Madras-600 002.
4. P. Varadachary and Company, Madras-600 001.
5. C. Subbiah Chetty and Company, Madras-600 005.
6. The Universal Book House Moore Market, Madras-600 003.
7. C. Sitaraman and Company, Madras-600 014.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-600 005.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvelly) Limited, Madras-600 001.
11. The Sangam Publishers, No. 11, Sungurama Chetty Street, Madras-600 001.
12. New Century Book House (Private) Limited, Madras-600 002.
13. Kalaivani Book Centre, No. 1, Ponnjamman Koil Street, Egmore, Madras-600 008.

### IN MUFASSAL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Vellore (Norh Arcot District)-632 001.
2. Bharathamatha Book Depot, Thanjavur.
3. P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai Tirunelveli Junction.
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores' Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jaganathan Book House, P.B. No. 327, No. 35, Nanthi Koil Street, Tiruchirappalli-2
12. Ganesh Stores South Car Street Sivakasi.
13. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-636 001.
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
16. Meenakshi Pathippagam Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, No. 6-A Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidhya Book Shop, No. 63, Tennure High Road, Tiruchirappalli-2
26. Sri Rama Vilas Book Shop, No. 90, Amman Sannathi, Madurai-1.
27. Sarvothaya Ilakkiya Pannai, No. 32/1, West Velli Street, Madurai-1.
28. Vijaya Book House, No. 93, Cherry Road, Salem-636 001.

### IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publication, Hyderabad.
5. Puthagathalayam Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon Hariyana.
7. K. P. Bagchi and Company No. 286, B.B. Ganguli Street, Calcutta-12.

R.F. 2773

3582

R.F. 2933

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery.